வைணவ உரைவளம்

டாக்டர்

தெ. ஞானசுந்தரம்

எம்.ஏ., பிஎச்.டி., டிப். வடமொழி

வைணவ உரைவளம்

டாக்டர் தெ. ஞானசுந்தரம், எம்.ஏ., பிஎச்.டி.,
டிப். வடமொழி.,
தமிழ்த்துறைத் தலைவர்
கந்தசாமி நாயுடு கல்லூரி
சென்னை-600 102

விற்பனை உரிமை
தாயம்மை பதிப்பகம்
149, அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம்
சென்னை-600 101

முதற்பதிப்பு : ஜூன், 1989

இந்நூல் தமிழக அரசின்
நிதி உதவியால் வெளிவருகிறது

விலை : ரூ. 75-00

அச்சிட்டோர்
மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ்ரோடு
சென்னை-600 014.

15-4

அணிந்துரை

உ
முருகன் துணை

கி. வா. ஜகந்நாதன்

'காந்தமலை'
2, நார்ட்டன் முதல் தெரு,
சென்னை-600028.
23-5-1982

வைணவர்கள் திவ்யப் பிரபந்தத்தை வேதமாகவே போற்றியும் பாராயணம் செய்தும் வருகிறார்கள். வேதத்தில் தெளிவுபடாத இடங்களுக்குத் திவ்யப் பிரபந்தம் தெளிவு பெறும்படி செய்கிறது என்பர். "தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே" என்று கூறுவதனால் இது புலனாகும்.

திவ்யப் பிரபந்தத்துக்குப் பலவகை வியாக்கியானங்கள் உள்ளன. திவ்யப் பிரபந்தத்தை மட்டும் கற்றால் அறியப்படாத அரிய கருத்துக்களை அந்த வியாக்கியானங்களில் காணலாம். தமிழ்ப் பாட்டுக்கு வடமொழி விளக்கிட்டுக் காட்டும்படி உரைகாரர்கள் எழுதியுள்ளார்கள்.

திவ்யப் பிரபந்த உரைகள் பெருங்கடலைப் போல விரிந்துள்ளன. அவற்றில் உள்ளத்தைச் செலுத்தினால் பல அரிய சமயச் செய்திகளும் தமிழ் வடமொழி மரபுகளும் தெரிந்துகொள்ளலாம்.

அன்பர் திரு. தெ. ஞானசுந்தரம் அவர்கள் தம்முடைய டாக்டர் பட்டத்துக்குரிய ஆராய்ச்சியாகத் திவ்யப் பிரபந்த உரைகளை ஆய்வு செய்துள்ளார்.

இந்த ஆய்வுக்கட்டுரையில் அவர் வகுத்துக் கொண்ட முறை, அவற்றை விளக்கும் முறை, ஏனைய உரைகளுக்கும் இவற்றிற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் காட்டும் தகைமை முதலியன மிகவும் பாராட்டும் வகையில் அமைந்திருக்கின்றன.

வைணவ உரைகளில் ஆழங்காற்பட்ட வைணவர்களே கண்டு மூக்கில் கைவைக்கும்படி எழுதியிருக்கிறார். தமிழ்ப் புலமையும் திவ்யப் பிரபந்த உரைகளை வல்லார் வாய்க்கேட்டு உணர்ந்த அறிவும் துணையாக நிற்க இந்த ஆய்வுக் கட்டுரையை எழுதியுள்ளார்.

இந்த ஆராய்ச்சியில் அவர் அறிந்தவை பலப்பல. அவற்றில் சிலவற்றையே தொகுத்து இதை எழுதியுள்ளார். பரந்து விரிந்துகிடக்கும் பாற்கடலில் நீந்தி அதன்கண்ணே முக்குளித்துச் சுவையுணர்வதுபோல இவர் வியாக்கியானங்களில் மூழ்கி மூழ்கிச் சுவைத்திருக்கிறார் என்பது இந்த ஆய்வுக் கட்டுரையால் தெரிய வரும்.

புலமை, உழைப்பு, ஆய்வுத்திறன் என்ற மூன்றும் உடையவராதலின் இவரால் இதைச் சாதிக்க முடிந்தது. இவருடைய ஆராய்ச்சி பின்னும் விரிந்து நூல் வடிவில் வரவேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

கி. வா. ஜகந்நாதன்

முன்னுரை

காசில் கொற்றத்து இராமன் கதையினை ஆசை பற்றி அறையலுற்றதாகச் சொல்கிறார் கம்பநாடர். இவ் ஆய்வும் அத்தகைய தொரு முயற்சியே. 1980 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் முனைவர் பட்டத்திற்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்பெற்ற ஆய்வேடு இது.

முதன்முறையாக 1965ஆம் ஆண்டில் ஒருநாள் மாலை வேலூரில் திருமாலைக்குப் பெரியவாச்சான் பிள்ளை எழுதியுள்ள உரையினைக் 'கல்விக்கடல்' எஸ்.கே. இராமராசனார் அவர்கள் இல்லத்தில் பொழுதுபோக்காகப் படித்தபோது அவ்வுரை என்னுள் பெருமாற்றத்தை விளைத்தது. சங்க இலக்கியம், சிலம்பு, மணிமேகலை ஆகியவையே தமிழ் என்று கருதிவந்த மயக்கம் தீர்ந்தது. அவ்வுரையில் வடசொற்களுக்கிடையே கலந்து கிடந்த கன்னித் தமிழ்ச் சொற்களும் உரை நயங்களும் என் கருத்தைக் கவர்ந்தன. 1967இல் சென்னையில் பணியாற்றும் வாய்ப்புக் கிட்டியவுடன் உயர்திரு உ. வே. வேளுக்குடி வரதாசார்ய சுவாமிகளின் திருவடிகளில் திருப்பல்லாண்டு, கண்ணிநுண் சிறுத்தாம்பு, திருப்பாவை ஆகியவற்றையும் திருவாய்மொழி, ஶ்ரீவசனபூஷணம் ஆகியவற்றில் சில பகுதிகளை யும் பயிலும் பேறு பெற்றேன். அப்பொழுது வைணவ உரை உலகத்தின் பல்வண்ணக் காட்சிகள் அறிவுக்கு விருந்தாக அமைந்தன. இவ்வுரைகளை நன்கு உணர்ந்துகொள்ள வடமொழி யறிவு ஓரளவுக்கேனும் தேவை என்பதனை உணர்ந்து பல்கலைக் கழக மாலை நேர வகுப்புகளில் 1970ஆம் ஆண்டு சேர்ந்து இரண்டாண்டுகள் வடமொழிக் கல்வி பெற்றேன்.

பேராசிரியர் டாக்டர் ரா. சீனிவாசன் அவர்களிடம் ஆய்வு செய்யும் வாய்ப்புக் கிட்டியபோது என் விருப்பத்தினைத் தெரிவிக்க அவரும் மேலெழுத்திட்டார். ஆய்வாளர்கள் காணாக் கண்ணிட்டிருக்கும் வைணவ உரைகளை ஆராயும் பணி தொடங்கிற்று. இவ்வுரைகள் பற்றிய ஆய்வு ஏதும் இதற்கு

முன்பு நிகழவில்லை என்பதும் இதுவே முதல் முயற்சி என்பதும் என் பணிவான கருத்து.

'வைணவ உரைவளம்' என்னும் இத்தலைப்பின் கீழ்த் திருவாய்மொழிக்கு அமைந்த ஆறாயிரப்படி, ஒன்பதினாயிரப்படி பன்னீராயிரப்படி, இருபத்து நாலாயிரப்படி, ஈடு என்னும் முப்பத்தாறாயிரப்படி ஆகிய ஐந்து உரைகளும், ஏனைய திவ்வியப் பிரபந்தங்களுக்குப் பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, பெரிய வாச்சான் பிள்ளை, அழகிய மணவாளப் பெருமாள் நாயனார், மணவாள மாமுனிகள் ஆகியோர் எழுதியுள்ள உரைகளும் ஆராயப்பட்டுள்ளன.

இவ்வுரைகளிலிருந்து திரட்டப் பெற்ற அரிய செய்திகள் பல வகைப்படுத்தப்பட்டுப் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளன. அவற்றுள் அருந்தமிழ்ச் சொற்களின் அகரவரிசையும் ஒன்று. திரு. பார்த்தஸாரதி அய்யங்கார், திரு. வித்வான் டி. இராம கிருஷ்ண அய்யங்கார் ஆகியோர் திவ்ய ப்ரபந்த அகராதிகள் பதிப்பித்துள்ளனர். முன்னவர் உருவாக்கியுள்ள அகராதி அரிய முயற்சியெனினும் இன்றியமையாத இடங்கள் 'அனுபந்தம் பார்' என்று குறித்து விடப்பட்டுள்ளன. அனுபந்தம் வெளிவரவில்லை. மேலும் செறிவு, மரபு தொடர்கள் என்னும் கருத்தின்றிக் கலந்த கட்டியாக அமைந்துள்ளது. பின்னவர் தொகுத்த அகராதியில் பல சொற்களுக்குப் பொருள் இல்லை;பல சொற்கள் வருமிடங் களும் சுட்டப்பெறவில்லை. இங்கு இணைக்கப்பட்டுள்ள அகர வரிசையில் அந்நூல்களில் விளக்கப்படாத சொற்கள் பல இடம் பெற்றுள்ளன. எல்லாச் சொற்களுக்கும் வருமிடங்கள் குறிக்கப் பட்டுள்ளன. தமிழில் இதுவரை செறிவுத் தொடர்களையும் மரபு தொடர்களையும் தொகுக்கும் முயற்சி மேற்கொள்ளப் பெற வில்லை. வைணவ உரைகளில் அத்தகு தொடர்கள் பல நிறைந் துள்ளன. தமிழுக்கு அவை வளஞ்சேர்ப்பன என்னும் நோக்கில் தனியே பிரித்து விளக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொடருக்கும் எடுத்துக்காட்டுத் தரப்பட்டுள்ளது. அவ்வெடுத்துக் காட்டுகளின் கருத்துகள் உரைகளில் வருவன. தொடர் அமைப்பு ஆய்வாளரால் அமைக்கப்பட்டது. இவற்றில் உடுக்குறி இடப் பட்டவை பலகால் பயின்று வருவன.

இவ் ஆய்வு நிகழ்த்தப் பெருமக்கள் சிலர் உறுதுணையாய் அமைந்தனர். இத் தலைப்பில் ஆய்வு செய்யும் பேற்றினை வழங்கி நெறிப்படுத்தியவர் சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த் துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் டாக்டர்

ரா. சீனிவாசன். அவர் என் ஆய்வுக்கு மட்டுமன்றி வாழ்வுக்கும் வழிகாட்டிய பெருந்தகை. பச்சையப்பன் கல்லூரியில் ஆய்வாளனாகச் சேர்வதற்கு இசைவு தந்தவர் முன்னாள் கல்லூரி முதல்வர் டாக்டர் சுப. சண்முகநாதன். அவ்வப்பொழுது அன்போடு ஆர்வ உரை வழங்கித் தூண்டியவர் யான் பணிபுரியும் கந்தசாமி நாயுடு கல்லூரியின் முன்னாள் முதல்வர் பேராசிரியர் தி. சபாபதி. திருவாளர்கள் வேலூர் எஸ்.கே. இராமராசன் கடலூர் தி.கி. நாராயணசாமி நாயுடு, அமரர் வி. புதூர் கி. வேங்கடசாமி ரெட்டியார், கோவை என்.வி. நாயுடு ஆகியோர் நூல்கள் சிலவற்றைத் தந்தும், அமரர் கி.வா.ஜ., டாக்டர் இரா. குமரவேலன், டாக்டர் தா.வே. வீராசாமி அமரர் டாக்டர் ந. சஞ்சீவி ஆகியோர் ஆய்வு குறித்துக் கருத்துகள் வழங்கியும் உதவினர். இந்நூல் வெளிவர நிதி உதவி புரிந்தது தமிழக அரசு. அதனைப் பெறுவதில் உதவியவர் தமிழ் வளர்ச்சி இயக்குநர் டாக்டர் சு. செல்லப்பன். இவர்களுக்கெல்லாம் நன்றி என்று ஒரு சொல் கூறி இவர்களை எனக்கு அயலவர்களாக்கிக் கொள்ள விழையவில்லை. ஆதலின் வணங்கி மகிழ்கிறேன்.

ஆய்வுக் குறிப்புகளைப் படியெடுப்பதில் உதவியவர்கள் என் மாணவர் திரு சு. செல்லபாண்டியன் எம்.ஏ., என் வாழ்க்கைத் துணைவி திருமதி. புலவர் தி. மணிமேகலை எம்.ஏ.,பி.எட். ஆகியோர். இந்நூலின் அச்சுப்படிகளைத் திருத்தும் பணியில் படித்து உதவியவன் என் அருமைச் செல்வன் திரு. அருண்மொழி. இவர்களுக்கு என் வாழ்த்துகள். இந்நூலை அழகிய முறையில் அச்சிட்டு உதவிய மாருதி அச்சகத்தார்க்கு என் ஆழ்ந்த நன்றி.

இந்நூல் தட்டச்சுப் படியாக இருந்தபோது 'வாகீச கலாநிதி' கி வா.ஜ. அவர்களிடம் காட்டி ஓர் அணிந்துரை தர வேண்டி னேன். அவர்களும் அன்போடு தந்தார்கள். நூல் வெளி வருவதற்கு முன்னே அவர் அமரர் ஆகிவிடுவார் என்று யான் சிறிதும் எண்ணவில்லை. அத்தமிழ்த் தெய்வத்தின் திருவடிக் கமலங்களுக்குக் கண்ணும் கண்ண நீருமாய் வணக்கத்தைப் பணிமாறி நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

வைணவ நூல்களை வெளியிட்டு வைணவத்தை வளர்ப்பதே பணியாய்க்கொண்ட புத்தூர் உயர்திரு எஸ். கிருஷ்ண ஸ்வாமி ஐயங்கார், என் நெஞ்சில் வைணவ ஆர்வத்திற்கு வித்திட்ட 'கல்விக் கடல்' வேலூர் எஸ்.கே. இராமராசனார், அவ்ஆர்வத் திற்கு அருளிச்செயல் உரைகளைச் சொல்லி விளைநீர் அடைத்த உயர்திரு 'சொல்லமுதக் கொண்டல்' வேளுக்குடி வரதாசார்ய

ஸ்வாமிகள் ஆகியோர் பொன்னடிகளுக்கு இந்நூலினைப் பணி வுடன் பச்சைஇட்டு - காணிக்கையாக்கி - மகிழ்கிறேன்.

மயர்வு மனிதனுக்குச் சொந்தம்; உடன்வந்தி. இந்நூலில் காணும் பிழைகளைப் பெரியோர்கள் தெரிவிப்பின் திருத்திக் கொள்வேன். என் இந்த முயற்சியைத் தமிழுலகும் வைணவ உலகும் ஏற்றுக் கொண்டாடும் என்னும் நம்பிக்கையுடையேன். இத்துறையில், 'போதரே என்று சொல்லிப் புந்தியிற் புகுந்து தன்பால் ஆதரம் பெருக வைத்த அழகன்' கழலிணைகளை வழுத்தி வணங்குகிறேன்.

இராமானுசர் இணையடிகள் போற்றி.

"கலையகம்"
149, அண்ணாநகர்
மேற்கு விரிவாக்கம்,
சென்னை-600 101.

அன்பன்,
தெ. ஞானசுந்தரம்

பொருளடக்கம்

பக்கம்

1. வைணவ உரை முன்னோடிகள் 1 - 66

வைணவத்தை வளர்த்த பெருமக்கள்—ஆசாரியர்களின் பெருமை—ஆசாரிய மரபு—வைணவ உரை முன்னோடிகள்—நாத முனிகள்—தேடிச் சேர்த்த செல்வம்—நாதமுனிகளின் இசைப் புலமை—பக்தி பெருவாழ்வு—நாதமுனிகளின் காலம்—பெரிய முதலியார் யார்?—ஆளவந்தார்—பிறப்பு — ஆக்கியாழ்வானை வென்றது—மணக்கால் நம்பி சந்திப்பு—குருகைக் காவலப்பன் சந்திப்பு—ஆளவந்தார் மக்கள்—ஆளவந்தார் பண்புகள்—உரைத்தொண்டு—சந்தை கூறல்—உள்ளுறை (சுபாவதேசம்) கூறல்—ஆழ்ந்து உரைகாணல்—இராமாயணத்தை இணைத்து உரை கூறல்—சமய உண்மைகளைப் பாட்டில் காட்டுதல்—இராமானுசர்— இராமானுச தரிசனம்—இளமைக் காலம்—இராமானுசரும் ஆளவந்தாரும்—துறவறம் மேற்கொள்ளல்—தலைமைப் பதவி ஏற்றல்—சமயக் கல்வி பெறல்—ஆளவந்தாரின் விருப்பங்களை நிறைவேற்றல்—சோழ மன்னன் பகைமை—திருவரங்கத்துக்குத் திரும்புதல்—நிறைவாழ்வு—இராமானுசரின் பண்புகள்—திவ்வியப் பிரபந்த ஈடுபாடு—நூல்கள்—இராமானுசரின் உரைத்தொண்டு—நுட்பவுரை காணல்—ஆளவந்தார் உரைக்கு மாறாகப் புதிய விளக்கம் கூறல்—திவ்வியப் பிரபந்த விளக்கம் எழுதாமைக்குக் காரணம்—எம்பார்—வாழ்க்கை—தோற்றப்பொலிவு—பண்பு நலன்கள்—இராமானுசரிடம் கொண்ட பெருமதிப்பு—ஆடற்கலை அறிந்தவர்—திவ்வியப்பிரபந்த விளக்கச் சொற்பொழிவாளர்—உரைத்தொண்டு—கூரத்தாழ்வான்—வாழ்க்கை—பண்பு நலன்கள் — கல்விக்கடல்—ஈர நெஞ்சம்—பிறரை மதிக்கும் சால்பு—சீர்சால் வாழ்வு—பணிவின் எல்லை—இறை, ஆசாரிய, சமயப் பற்றுகள்

—நூல்கள்—உரைத்தொண்டு—இலக்கண நுட்பம் தோன்ற உரைவகுத்தல்—தம் காலத்துச் சான்றோர்களை எடுத்துக்காட்டாகத் தந்து உரைவகுத்தல்—இராமாயணப் பாத்திரங்களை எடுத்துக்காட்டி உரை வகுத்தல்—திருவரங்கத்தமுதனார்—வாழ்க்கைக் குறிப்பு—உரைத்தொண்டு—நயவுரை—நுணுக்குக் கூறல்—அனந்தாழ்வான்—வாழ்க்கைக் குறிப்பு—உரைத்தொண்டு அம்மங்கியம்மாள் வாழ்க்கைக் குறிப்பு—உரைத்தொண்டு—சொற்றொடர்களுக்கு இயைபு காட்டல்—உலகியல் காட்டி உரைகூறல்—அரசியல் உவமை கூறல்—பிள்ளை திருநறையூரரையர்—வாழ்க்கைக் குறிப்பு—உரைத் தொண்டு—சிறிய அளவில் உரைத்தொண்டு புரிந்தோர்—திருக்கோட்டியூர் நம்பி—திருமலை நம்பி—கிடாம்பியாச்சான்—பிள்ளை உறங்காவில்லி தாசர்—வங்கிபுரத்து நம்பி—பிள்ளைப் பிள்ளையாழ்வான்—உய்ந்த பிள்ளை—சிற்றாட்கொண்டான்—அரையர்கள் — சிறியாத்தான் — கோயிலாய்த்தான் — தமிழ்ப்புலவர்கள்.

2. வைணவ உரையாசிரியர்கள் 67 - 125

எழுத்து வடிவில் உரைகள்—திருக்குருகைப்பிரான் பிள்ளான்—வாழ்க்கைக் குறிப்பு—இறுதி நேரம்—ஆறாயிரப்படி உரை காணல்—திவ்வியப் பிரபந்த விளக்கச் சொற்பொழிவாளர்—சொற்பொழிவுகளில் கூறிய சிறப்புரைகள்—ஆறாயிரப் படியில் காணப்படாத உரை விளக்கங்கள்—இருவகை விளக்கங்கள்—எழுத்திலும் சொற்பொழிவிலும் இடம்பெற்ற உரை விளக்கங்கள்—பட்டர்—தோற்றம்—கல்வி—அரங்கன்மீது ஆராக் காதல்—திவ்வியப் பிரபந்த ஈடுபாடு—சொல்லாற்றல்—குட்டிக்கதைகள் சொல்லல்—கூர்த்த அறிவு—பட்டர் காலத்திய பெருமக்கள்—சில வாழ்க்கைக் குறிப்புகள்—இராமானுசர் பட்டரிடம்கொண்ட பரிவு—பட்டர் மறைவு—குறை வாழ்வினரா?—பட்டர் நவின்ற உரை விளக்கங்கள்—நயவுரைகள்—புதிய புலமை விளக்கங்கள்—நஞ்சீயர்—இறையன்பு—பட்டரின் பாராட்டு—மாணாக்கர்கள்—பிற செய்திகள்—இறுதிக் காலம்—உரைத்தொண்டு—விளக்கச் சொற்பொழிவுகள்—கூற்றுகள்—உரை விளக்கங்கள்—இயல்பாகப் பொருள் கூறல்—

நயவுரைகள்—வினாவும் விடையும்—எழுத்திலும் சொற்பொழிவிலும் இடம்பெற்ற விளக்கங்கள்—நம்பிள்ளை—தோற்றம்—நம்பிள்ளையெனப் பெயர் பெறுதல்—லோகாசாரியர் என்னும் பெயர் பெறுதல்—பேரறிவாளர்—ஆசிரியர் கொண்டாடிய மாணாக்கர்—ஐய மறுத்தல்—விரைந்து விடைகூறும் ஆற்றல்—மாணாக்கர்கள்—சொற்பொழிவில் சிந்திய கருத்துகள்—ஈடு வந்த வரலாறு—பெரியவாச்சான்பிள்ளை—பிறப்பு—சிறப்பு—மாணாக்கர்கள்—நூல்கள்—இருவரா? ஒருவரா?—இருபத்து நாலாயிரப்படி பிறந்த வரலாறு—வாதிகேசரி அழகிய மணவாள சீயர்—வாழ்க்கைக் குறிப்பு—நூல்கள்—பெரிய போதம்—அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்—வாழ்க்கைக் குறிப்பு—நூல்கள்—இறுதி—மணவாள மாமுனிகள்—வாழ்க்கைக் குறிப்பு—சொற்பொழிவாளர்—நூல்கள்.

3. வைணவ உரைப் போக்கு 126 - 202

தனிப்போக்குகள்—திருக்குருகைப்பிரான் பிள்ளான் உரை—நஞ்சீயர் உரை—வாதிகேசரி அழகிய மணவாள சீயருரை—பெரியவாச்சான்பிள்ளையுரை — நம்பிள்ளையுரை—சிறப்புப் போக்குகள்—வடமொழி தமிழ்மொழி மறைகளை இணைத்தல் — சொல்லும் முறையில் ஒற்றுமை—கருத்தொப்புமை — வடமொழிப் போக்கில் சொற்றொடர்களைப் பகுத்துக் காட்டுதல்—கற்பனை நயம்பட உரைவகுத்தல்—உரையாடற் போக்கில் உரை வரைதல்—உணர்ச்சி நயம் தோன்ற விளக்கல்—நயம் பாராட்டல்—கருத்து விளக்க உரைகள்—அன்மைநிலை புணர்த்திப் பொருள் விளக்கம் தருதல்—சொல்திறம் காட்டல்—சொற்பெய்து விரித்தல் — பெயர் சுட்டி விளக்கம் தருதல்—பெயர் குறிக்காது 'பொருள்' என்னும் கருத்துப்படும் சொற்களைச் சுட்டாக அமைத்தல் —அடைமொழிக்குச் சிறம்புப் பொருள் தருதல்—அடுக்கிவரும் அடைமொழிகளுக்கு விளக்கம் தருதல்—அடுக்கு அடைகளைப் பிரித்துத் தனித்தனியே சேர்த்துப் பொருள்காணுதல் — அடைகளையும் சொற்களையும் வெவ்வேறு வகையில் இயைத்துப் பொருள்கூறல்—சொற்களை இரட்டுறப் பிரித்துப் பொருள்கூறல்—இடைச்சொற்களுக்குப் பொருள் நயம் காணல்—பன்மை விகுதி—வேற்றுமை உருபு—உம்மை—ஏகாரம்—சுட்டு

களுக்குப் பொருட் சிறப்புக் காட்டுதல்—தான் என்னும் படர்க்கைச் சுட்டு—அடுக்குத் தொடர்களுக்குப் பொருள் காட்டுதல் — சொற்பொருள் விளக்கம் தருதல்—சொல்லின் பொருட்பிழிவு தருதல் (பதசாரம் கூறுதல்) —தொடர் அமைப்புகளுக்கு விளக்கம் கூறுதல்—நுட்பவுரை, கருத்துரை, விளக்கவுரைகள் வரைதல்—தடை விடை தந்து விளக்கல்—உரைக்கு உரை தருதல் —பாட்டின் பொருளைத் தெளிவு தோன்ற வகுத்துக் காட்டுதல்—பாட்டில் வரும் உவமை உருவகங்களை விளக்குதல்—உரையாசிரியர்கள் தரும் உவமைகள்—பல்வகைப் பொருள் கூறல்—மதிப்பீடு செய்தல்—மேற்கோள் காட்டுதல்—மேற்கோள் விளக்கங்கள்—வடமொழி மேற்கோள்—திவ்வியப் பிரபந்த மேற்கோள் —இதிகாசச் செய்திகள் இடம் பெறல்—சுவைக்கூற்றுகள் (ரசோக்திகள்) அமைத்து எழுதுதல்—நியாயங்களைச் சுட்டிக் காட்டுதல்—பாட வேறுபாடு காட்டுதல் —பொருந்தா உரை தருதல்—உரை வேறுபாடுகள்.

4. மொழிநடை 203 - 253

மணிப்பிரவாள நடையின் அமைப்பு—வைணவ மணிப்பிரவாளத்தின் தனி இயல்புகள்—புதுமைவழக்குகள்—புதிய சொற்கள்—கல்வெட்டுச் சொற்கள்—அரிய தமிழ்ச் சொற்கள்—புதிய பொருளில் சில சொற்கள் —அழகிய சொல்லமைப்புகள்—செறிவுத் தொடர்கள் —மரபு வழக்குகள்—முற்றுத் தொடர்கள்—பேச்சு வழக்குகள் — உயிரெழுத்துகள் — மெய்யெழுத்துகள்—சகரமாதல்—தகரமாதல்—றகரமாதல் — டகரமாதல்—நகரமாதல்—மகரமாதல் — வகரமாதல்—ழகரமாதல்—ளகரமாதல் சமய மரபு வழக்குகள்—இலக்கண மரபு மீறல்கள்—மூவிடப் பெயர்கள்—இருதிணைப் பொதுப் பெயர்—முற்றுகரச் சுட்டுப் பெயர்கள்—பிற பெயர்கள் —வேற்றுமை ஏற்றல்—புதிய ஆறாம்வேற்றுமைச் சொல்லுருபு — வியப்புணர்ச்சியைப் புலப்படுத்தல் — இடைநிலைகள்—இருவகை வழக்கு—ஒற்று மிகுத்து எழுதுதல் —மரியாதை முன்னிலைப் பன்மை—வினையாலணையும் பெயர்களின் புதுமை வடிவங்கள்—வினைமுற்றுகளின் புதுமை வடிவங்கள்—தமிழ்க்கூறுகள் கொண்ட வடசொற்கள்—தமிழ் வேற்றுமை உருபு சேர்ந்த வடசொற்கள் — பெயரெச்சங்கள் — வினையெச்சங்கள்

—வினைமுற்றுகள்—ஏவல் வினைமுற்று — வினைமுற்று —மணிப்பிரவாள நடை வரலாறு—வைணவ உரைகளின் மணிப்பிரவாளம்—மணிப்பிரவாள நடையை மேற்கொண்ட காரணம் — தொடரமைப்பு — உருவக நடை—பாசுரத் தொடர்கள் விரவிய நடை—பழமொழி விரவிய நடை—வினா நடை—வண்ணனை நடை—வழுவமைந்த நடை.

5. உரைகள் காட்டும் சமுதாய நிலை 254 - 280

வரலாற்றுக் குறிப்புகள்—கோனாட்சி — மக்கள் வாழ்க்கை—பெண்டிர் நிலை—சமய நிலை—அறச் செயல்கள்—சாதி நிலை—கல்வி முறை—தொழில்கள்—வாணிபம்—மருத்துவம்— நீதிமுறை — அணிகலன்கள்—கவின் கலைகள்—பொழுதுபோக்குகள் — பழக்க வழக்கங்கள்.

6. உரைகள் உணர்த்தும் வைணவ சமயக் கருத்துகள் 281 - 316

வைணவ தத்துவம்—மூவகைக் காரணங்கள்—முப்பொருள்— உடல் உயிர்க் கொள்கை (சரீர சரீரி பாவம்) —ஐவகைப் பொருட் பிரிவு (அர்த்த பஞ்சகம்)—இறையியல்—இறையிலக்கணம்—தனி முதலின் சிறப்பு அடையாளங்கள்—இறைப்பண்புகள்—ஐந்து வடிவங்கள் —விண்ணாட்டு நிலை (பரத்வம்)—அணிவகுப்பு நிலை (வியூகம்)—பிறப்புநிலை—(விபவம்)—உள்ளுறை நிலை (அந்தர்யாமித்வம்) — வழிபடுநிலை (அர்ச்சை)—திருப்பெயர்கள்—மந்திரங்கள் — திருமந்திரம்—துவயம் —சரம சுலோகம்—உயிரியல் — உயிரின் இலக்கணம்—மூவகை உயிர்கள் — நிலைபெற்றவர் (நித்யர்) — வீடுற்றவர் (முக்தர்)—கட்டுற்றவர் (பத்தர்)—பேற்றியல் —பொருட்பேறு—உயிர்ப்பேறு—இறைப்பேறு ஆற்றியல் —செயல் நெறி—அறிவு நெறி—அன்புநெறி—அடைக்கல நெறி (ப்ரபத்தி)—ஆசிரியப் பற்று—சந்தி (புருஷகாரம்) —பகையியல்—இயற்பகை (ஸ்வரூப விரோதி)—சார்புப் பகை (ஆச்ரயண விரோதி)—நெறிப்பகை (ஸாதந விரோதி)—பேற்றுப் பகை (ஸாத்ய விரோதி)—துய்ப்புப் பகை (போக விரோதி).

முடிவுரை 317 - 320

பின்னிணைப்புகள் 321 - 544

1. சிறந்த உவமைகளின் தொகுப்பு 321—335
2. அணிகளில் அடங்கும் செய்திகள் 336—337
3. தமிழ் இலக்கிய இலக்கண மேற்கோள்கள் 338—340
4. நிகண்டு மேற்கோள் 341—342
5. மேற்கோளாக எடுத்து விளக்கப்பெறும் பாசுரங்கள் 343—346
6. சுவைக்கூற்றுகள் (ரசோக்திகள்) 347—353
7. பாடவேறுபாடு 354—359
8. மரபு வழக்குகளும் செறிவுத் தொடர்களும் 360—433
9. பழமொழிகள் 434—435
10. அருந்தமிழ்ச் சொற்களின் அகரவரிசை 436—543

பிழைதிருத்தம் 544

குறுக்க விளக்கம்

எண்கள் பாட்டினைக் குறிக்கும் இடங்கள் தவிர அனைத்து இடங்களிலும் அவற்றின் உரையினையே குறிக்கும்.

'0' என்பது இடங்களுக்கேற்ப நூல், பாட்டு ஆகியவற்றின் தோற்றுவாயினைக் குறிக்கும்.

திருவாய்மொழிக்கு வெறும் எண்கள் மட்டும் தரப் பட்டுள்ளன. அவ்வெண்களின் பின்னே, ஆறாயிரப்படி, ஒன்பதினாயிரப்படி, பன்னீராயிரப்படி, இருபத்து நாலாயிரப்படி, ஈடு ஆகியவற்றைக் குறிக்க 6, 9, 12, 24, 36 என்று எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

திருப்பாவையில் பாட்டின் பின்னே தரப்பட்டுள்ள 3, 6 எண் கள் முறையே மூவாயிரப்படி ஆறாயிரப்படியினைக் குறிக்கும்.

அமலனாதிபிரான், கண்ணிநுண் சிறுத் தாம்பு ஆகிய உரைகளின் பின்னே அவ்வுரைகளின் ஆசிரியர் பெயர்கள் தரப்பட்டுள்ளன.

'அழகு' என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரையும் 'பெரி' என்பது பெரியவாச்சான் பிள்ளையையும் குறிக்கும்.

அம.	...	அமலனாதிபிரானுரை
இ.தி.	...	இரண்டாந் திருவந்தாதியுரை
க.நு.சி.	...	கண்ணிநுண் சிறுத்தாம்புரை
சி.மடல்	...	சிறிய திருமடலுரை
தி.கு.தா.	...	திருக்குறுந்தாண்டக உரை
தி.ச.வி.	...	திருச்சந்த விருத்தவுரை
தி.நெ.தா.	...	திருநெடுந்தாண்டகவுரை
தி.பல்.	...	திருப்பல்லாண்டுரை

தி.ப.	...	திருப்பள்ளியெழுச்சியுரை
தி.மா.	...	திருமாலையுரை
திருவா.	...	திருவாசிரியவுரை
தி.வி.	...	திருவிருத்தவுரை
திருவெழு.	...	திருவெழுகூற்றிருக்கையுரை
நா.தி.	...	நாச்சியார் திருமொழி யுரை
நான்.தி.	...	நான்முகன் திருவந்தாதியுரை
பாவை	...	திருப்பாவையுரை
பெ.மடல்	...	பெரிய திருமடலுரை
பெ.தி.	...	பெரிய திருமொழியுரை
பெ.திருவந்.	...	பெரிய திருவந்தாதியுரை
பெரி.தி.	...	பெரியாழ்வார் திருமொழியுரை
பெரு.தி.	...	பெருமாள் திருமொழியுரை
மு.தி.	...	முதல் திருவந்தாதியுரை
மூ.தி.	...	மூன்றாந் திருவந்தாதியுரை
வா.மாலை	...	வார்த்தா மாலை

1. வைணவ உரை முன்னோடிகள்

வைணவத்தை வளர்த்த பெருமக்கள்

தமிழ் மண்ணில் திருமால் நெறியினை வளர்த்த பெருமை, ஆழ்வார்களையும் ஆசாரியர்களையும் சாரும். ஆழ்வார்கள் பாசுரங்களால், முல்லை நிலத் தெய்வமாகிய திருமால் பரம்பொருளாக—முதற்பொருளாகப்—பலராலும் போற்றப் பெறும் நிலை உறுதியாயிற்று. ஆழ்வார்களுக்குப் பின்னே வந்த ஆசாரியர்கள் வைணவ தத்துவங்களையும் சமய உண்மைகளையும் நெறிப்படுத்தினர். ஆழ்வார்களின் பாசுரங்களை விளக்கினர். வடமொழி வேதங்களும் திராவிட வேதமாகிய திவ்வியப் பிரபந்தங்களும் இறைநெறியில் உயிர்களை இட்டுச் செல்லும் இரு முடிபுகள் என்னும் உபய வேதாந்தக் கொள்கையினை உருவாக்கினர். அவர்கள் பணியினால் வைணவம் முழுமையடைந்தது. இறைவன் அருளிய மதிநலத்தால் தீதில் நன்னெறியாகிய ஞானச்சுடர் ஏற்றி வைத்தவர்கள் ஆழ்வார்கள் என்றும், தங்கள் தத்துவச் செறிவுமிக்க வடமொழி நூல்களாலும், அறிவு நுட்பங் கனிந்த உரைவிளக்கங்களாலும், தூய்மை இழைந்த வாழ்க்கை நெறிகளாலும் அச் சுடரினைக் கொழுந்துவிட்டு ஒளிரச் செய்தவர்கள் ஆசாரியர்கள் என்றும் கூறலாம்.

ஆசாரியர்கள் பெருமை

ஆழ்வார்களை நிகர்த்த பெருமைக்குரியவர்களாகத் திகழ்ந்தமையாலேயே வைணவ உலகம் ஆசாரியர்களை நம்பி என்றும் பிள்ளை என்றும் மதிப்போடும் அன்போடும் போற்றுகிறது. நம்பி, பிள்ளை என்பன இயற்பெயர்கள் அல்ல; அவை முறையே மரியாதையினையும் அன்பினையும் தெரிவிக்கும் சொற்களாகும். இதனை, "ஆசார்யர்களை நம்பி என்கைக்கும் அவர்கள் அழைத்தால் அடியேனென்கைக்கும் ஹேது (அடி) ஸ்ரீமதுர கவிகள் வாஸநையாய்த்து"[1] என்று வரும் உரைக்குறிப்பாலும்,

---

1. க.நு.சி. 5, நம்பிள்ளை; பெரி.

பட்டர் தமிழன் ஒருவனை, "பிள்ளை! சொல்லிலக்கணம் அறிய மாட்டாயோ? பிள்ளை! இயலறிவுக்குப் போந்திருந்ததில்லையீ!"[2] என்று விளித்து வினவினார் என்று வரும் ஈட்டுரையாலும் அறியலாம்.

ஆசாரிய மரபு

வைணவ ஆசாரியர்கள் சமயப் பணிகளைத் தங்களுக்குள் வகுத்துக்கொண்டு ஒற்றுமையோடு தங்கள் சமயத்தின் பல்வேறு துறைகளை வளர்த்தனர். இவ்வுண்மையினை, த்ரிம்சத் ப்ரச்நோத்ரம் என்னும் மணிப்பிரவாள நடையில் அமைந்த வைணவ வரலாற்று நூலால் உணரலாம். "குருபரம்பரைதான் (ஆசிரிய மரபுதான்) ஆச்ரயண பரம்பரையும் (சார்பு வழியும்) க்ரந்த பரம்பரையுமாக (நூல்வழியுமாக) இரண்டு வகைப்பட்டிருக்கும். அதில் க்ரந்த பரம்பரை ஸ்ரீபாஷ்யாதி பரம்பரையும், திவ்யப்ரபந்த வியாக்யான பரம்பரையும், ரஹஸ்ய க்ரந்த பரம்பரையுமாக மூன்று வகைப்பட்டிருக்கும்"[3] என்பது மேற்குறித்த நூல் தரும் செய்தி. இங்ஙனம் குழுக்களாகப் பிரிந்து ஒவ்வொரு குழுவினரும் தமக்குரிய துறையினை வளர்த்து வந்தனர் எனினும் மற்றத் துறைகளை மறந்துவிடாமல் அவற்றிலும் நிறைந்த அறிவும் ஆர்வமும் வாய்ந்தவர்களாக விளங்கினர். பொதுவான சார்புவழி ஒன்று உண்டு.

ஆசாரிய மரபு நாராயணனாகிய பரம்பொருளை முதலாகக் கொண்டு தொடங்குவது. அதனை, "குருபரம்பராக்ரமமிருக்கிறபடி யெங்ஙனே யென்னில் எம்பெருமான், பெரிய பிராட்டியார், ஸேனை முதலியார், நம்மாழ்வார், நாதமுனிகள், உய்யக் கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார், பெரிய நம்பி, உடையவர், எம்பார், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்குத் திருவீதிப் பிள்ளை, பிள்ளை லோகாசார்யர், திருவாய்மொழிப் பிள்ளை, மணவாள மாமுனிகள். இது ப்ரசுரமான (நன்கு தெரிந்த) ஆச்ரயண ஸம்ப்ரதாய பரம்பரை (சார்பு வழி). இதில் எம்பார் ஸ்தாநே (இடத்தில்) ஆழ்வானை யனுஸந்திப்பதுமுண்டு (கருதுவதுமுண்டு)" என்று விளக்குகிறது த்ரிம்சத் ப்ரச்நோத்ரம்.[4]

---

2. 2.5.10-36.
3. அண்ணா அய்யங்கார் ஸ்வாமி, த்ரிம்சத் ப்ரச்நோத்ரம், சென்னை ஸ்டார் ஆப் இந்தியா அச்சுக்கூடம், 1891, பக். 10.
4. மேற்படி நூல், பக். 10.

இவர்களுள் முதல் மூவரும் மனித இனத்தைச் சேர்ந்தவரல்லர். நான்காமவராகிய நம்மாழ்வாரோ ஆழ்வார்களுக்குத் தலைவர். ஆதலால், ஆசாரிய பரம்பரை நாத முனிகளை முதலாகக் கொண்டு தொடங்குகிறது என்பதே பொருத்தம்.

வைணவ உரை முன்னோடிகள்

ஆசாரிய பெருமக்களுள் உடையவர் என்று குறிக்கப்பெறும் இராமானுசர் காலத்தில்தான் முதன்முதலாகத் திவ்வியப் பிரபந்தங்களுக்கு எழுத்து வடிவில் உரை முகிழ்த்தது. அவர் காலம் வரை அவற்றிற்கு விளக்கங்கள் கூறுவது மட்டுமே நிகழ்ந்தது. அவ்விளக்கங்கள் பலருக்கும் சொல்லப்படாமல் "ஓர் ஆசிரியர் ஒரு மாணாக்கருக்குச் சொல்வது" என்னும் ஓராண் வழியடைவாகவே சொல்லப்பட்டு வந்தன என்பர்.[5] இதற்கு மாறாக ஆளவந்தார் சிலரைக் கொண்ட திரளில் விளக்கம் செய்துள்ள குறிப்புக் காணப்படுகிறது.[6] எனினும், பாசுரப் பொருள்களைச் சிலருக்கே விரித்துரைக்கும் நிலையே இருந்தது. இதனை மாற்றிய பெருமை இராமானுசருக்கே உரியது. அவரால் சிலர்தம் தனியுடைமையாக இருந்த திவ்வியப் பிரபந்தங்கள் பொதுவுடைமையாயின. அவர் திருவாய் மொழியின் பொருளை எல்லோருக்கும் விளக்க வேண்டுமென்று பணித்தார். அதன் விளைவாக, நாலாயிர திவ்வியப் பிரபந்தங்களுக்கு உரைகள் எழுத்து வடிவில் தோன்றலாயின. இவ்வுரையாசிரியர்களுக்குக் காலத்தால் முற்பட்ட பெரியோர்களும், சம காலத்துச் சான்றோர்களும் உரைத்துச் சென்ற விளக்கங்கள் உரை வரைவதில் பெருந்துணையாய் அமைந்தன. அவ்விளக்கங்கள் தந்தவர்களை 'வைணவ உரை முன்னோடிகள்' அல்லது 'அங்கீகாரம் பெறாத உரைகாரர்கள்' எனலாம். அவர்கள் வருமாறு :

1. நாத முனிகள்
2. ஆளவந்தார்
3. இராமானுசர்
4. எம்பார்
5. கூரத்தாழ்வான்
6. திருவரங்கத்தமுதனார்
7. அனந்தாழ்வான்
8. முதலியாண்டான்
9. அம்மங்கியம்மாள்
10. பிள்ளை திருநறையூரரையர்

இவர்களேயன்றிச் சிற்சில விளக்கங்கள் கூறிய சிலரும் உண்டு.

---

5. ஸ்ரீ காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி, 'நித்யாது ஸந்தானம்', பிற்பகுதி, சென்னை ரத்தினம் (கிளை) அச்சகம், 1964, பக். 19.

6. 4.3.8-36; 6.7.0-36; நாச்சியார் திருமொழி, 10.5.

1. நாத முனிகள்

பிறப்பு

இவரே ஆசாரிய மரபில் முதல்வர்; வீர நாராயணபுர மென்னும் காட்டுமன்னார் கோயிலில் வாழ்ந்தவர்; ஈசுவர முனிகளுக்குத் திருமகனார். நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தினை அரும்பாடுபட்டுத் தொகுத்தவர் இவரே.

தேடிச் சேர்த்த செல்வம்

நாத முனிகள் ஒருநாள் திருநாராயணபுரத்தைச் சேர்ந்த வைணவர்கள் சிலர் காட்டுமன்னார் திருமுன்பு 'ஆராவமுதே' என்னும் திருவாய்மொழியைப் பாடக் கேட்டார். அதன் இறுதியில் 'குழலில் மலியச் சொன்ன ஓராயிரத்துள் இப்பத்தும்' என்று வருவதனைக் கொண்டு திருவாய்மொழி ஆயிரம் பாசுரங் களைக் கொண்டது என்று உணர்ந்து, அதனைத் தேடி ஆழ்வார் பிறந்த ஊரான திருக்குருகூருக்குச் சென்றார். அங்கு மதுர கவிகளின் வழியினரான பராங்குசதாசர் என்பவரைச் சந்தித்துக் 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்னும் நூலினைப் பெற்று அதனை நம்மாழ்வார் எழுந்தருளியிருந்த திருப்புளியாழ்வார் அடியில் (புளியமரத்தடியில்) முறையோடு பன்னீராயிரம் உருச்சொல்லி நிறைவு செய்தார். நம்மாழ்வார் இவருக்கு ஞானக்கண் வழங்கிச் சமய நுண்பொருள்களையும் யோக நுட்பங்களையும் உணர்த்தித் திவ்வியப் பிரபந்தங்களையும் தந்தருளினார்.[7]

குருபரம்பரை கூறும் இவ் வரலாற்றால் திவ்வியப் பிரபந்தங் களைத் தொகுத்தவர் நாதமுனிகள் என்பது தெளிவாகிறது. பெரியோர்கள் வரலாறுகளைத் தீட்டும் பிற்காலத்தவர் அவர்கள் வாழ்க்கை வரலாற்றில் இயற்கை இறந்த நிகழ்ச்சிகளை விரவி எழுதுவது வழக்கம். அம்முறையில் நாத முனிகள் அரிதின் முயன்று தம் பக்திப் பெருக்கினைத் திருக்குருகூரில் வாழ்ந்த பராங் குசதாசரும் மற்றவரும் உணருமாறு செய்து நாலாயிரத்தையும் திரட்டினார் என்பதனையே கண்ணிநுண் சிறுத்தாம்பினைப் பன்னீராயிரம் உருச் சொல்லி நம்மாழ்வார் அருளால் அவற்றைப் பெற்றார் என்று கூறுவதாகக் கொள்வது வரலாற்று நெறிக்கு இசைவதாகும்.

---

7. எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் (பதி.), பின்பழகிய பெருமாள் ஜீயர் அருளிய ஆறாயிரப்படி 'குருபரம்பராப்ர பாவம்', ஸ்ரீநிவாஸம் அச்சகம், திருச்சி, 1968, பக். 101-108.

நாதமுனிகளின் இசைப் புலமை

இவர் இசையில் வல்லவராக விளங்கினார் என்பதனை "இசைகாரர் இயலுக்கு இசைய இசையிட வல்லவர்கள். ஸ்ரீமதுர கவிகளையும் நாதமுனிகளையும் போலேயிருக்குமவர்கள்" என்னும் உரைப்பகுதி தெரிவிக்கிறது.[8] இதனை உறுதிப் படுத்தும் நிகழ்ச்சி ஒன்று அவர் வரலாற்றில் காணப்படுகிறது.

சோழன் அவையில் பெண்கள் இருவர் பாடினர். அவர்களுள் மனித கானம் பாடியவள் போற்றப்பெற்றுத் தேவகானம் பாடியவள் புறக்கணிக்கப்பட்டாள். புறக்கணிக்கப்பட்ட அவள் ஒருநாள் காட்டுமன்னார் திருமுன்பு நின்று தேவகானம் இசைத் தாள். அதனைக் கேட்டு மகிழ்ந்த நாதமுனிகள் அவளுக்குத் துழாய் நீரும், திருப்பரியட்டமும் அருளிப் பாராட்டினார். அவள் அரசன்பாற் சென்று தன் தேவகானத்தை அறிந்து போற்றும் ஒருவர் காட்டு மன்னார் கோயிலில் இருக்கிறார் என்று பெருமிதத்தோடு புகன்றாள். சோழமன்னன் மீண்டும் அவை யினைக் கூட்டினான். நாத முனிகளை அழைத்தான். பெண்கள் இருவரும் பாடினர். அவர்கள் பாடலைக் கேட்ட நாத முனிகள் மன்னனால் மனித கானம் பாடுகிறவள் இசையினை மட்டுமே உணர முடியுமென்றும், தேவகானம் பாடுகிறவள் சிறப்பினைத் தேவர்களே உணர முடியுமென்றும் உரைத்தார். அதுபோழ்து மன்னன், மனிதராகிய நாத முனிகளால் எவ்வாறு தேவ கானத்தை உணர முடிந்தது என்று வினவினான். இதனால் நாத முனிகளுக்குத் தம் இசைப்புலமையினை நிறுவ வேண்டிய நெருக்கடி நேர்ந்தது. அவர் நாற்பது நூறு தாளங்களை ஒருசேர ஒற்றச் சொல்லி அவற்றின் ஓசை வேறுபாடுகளைக்கொண்டு ஒவ்வொன்றின் எடையினையும் கூறினார். அவற்றைத் தனித் தனியே நிறுத்துப் பார்த்த மன்னன் அவர் கூறியது முற்றிலும் சரியாக இருந்தது கண்டு அவரைப் போற்றினான்.[9]

ஈட்டில் வரும் குறிப்பும் அதனை உறுதிப்படுத்தும் மேற்கூறிய நிகழ்ச்சியும் நாலாயிரத்தையும் திரட்டிய நாத முனிகளே அவற்றிற்கு இசை வகுத்து ஒழுங்குபடுத்துவதற்கு வேண்டிய இசைத் தகுதியினையும் உடையவராய்த் திகழ்ந்தார் என்பதனை உறுதிப்படுத்துகின்றன. இவ்விசை வகுக்கும் முயற்சியில், அவர்

---

8. 1.5.11-36.
9. எஸ்.கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் (பதி.), முன்குறித்த நூல், பக். 104-105.

தம் மருமக்களான கீழையகத்தாழ்வாரும் மேலையகத் தாழ்வாரும் துணைபுரிந்துள்ளனர்.[10]

பக்திப் பெருவாழ்வு

நாத முனிகள் இறைவன்மீது கொண்டிருந்த எல்லையற்ற பக்தியினையும் உணர்வு மயமான அவரது வாழ்க்கையினையும் உரைக்குறிப்பால் உணர முடிகின்றது. ஒருநாள் அரசன் ஒருவன் சாமந்தன் (படைத்தலைவன்) தலையிலே அடியையிட்டு யானைக் கழுத்தில் புக்கபடியைக் கண்டு, தேவாதி தேவனாகிய திருமால், பிரமன் முதலானோர் தலையிலே இப்படியல்லவா அடியிட்டுப் பெரிய திருவடியின்மேல் ஏறியருளுகிறான் என்று எண்ணிச் சிந்தை மயங்கினார் என்கிறது ஈடு.[11] இத்தகைய உணர்வுநிலையில் வாழ்ந்தவர், சோழமன்னன் துணையோடு வேட்டைக்கு வந்து திரும்புங்கால் அவர் இல்லம் வந்து வினவிச் சென்றதை ஒரு குரங்கும் இரண்டு வில்லிகளும் ஒரு பெண் பிள்ளையுமாக வந்து தேடிச் சென்றார்கள் என்று தம் பெண்கள் சொன்ன அளவில் வந்தவர்கள் இராமலக்குவர்களும் பிராட்டியும் என்று கருதி அவர்களைத் தேடிக்கொண்டு கங்கைகொண்ட சோழபுரம் கீழ் வாசல்வரை சென்றார் என்பதும், அங்கிருந்தோர் தாங்கள் அப்படி எவரையும் பார்க்கவில்லை என்றபோழ்து ஏங்கி விழுந்து உயிர்விட்டார் என்பதும்,[12] அவர்தம் இயல்புக்குச் சேர்ந்தனவாகவே அமைகின்றன.

நாதமுனிகள் காலம்

(1) நாத முனிகள் கி.பி. 10ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பதினோராம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர் என்கிறார் மா. இராசமாணிக்கனார்.[13]

(2) நாத முனிகள் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் கி.பி. பத்தாம் நூற்றாண்டின் பெரும் பகுதியிலும் வாழ்ந்திருக்கலாம் என்றும், பத்தாம் நூற்றாண்டின் இடைப்

---

10. மேற்படி நூல், பக். 103.

11. 4.4.8-36.

12. எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் (பதி.), முன்குறித்த நூல், பக். 107-108.

13. மயிலை மாதவதாஸன், 'நாலாயிர திவ்வியப் பிரபந்தம்', கபீர் அச்சகம், சென்னை, 1962, பக். 32.

பகுதியைச் சார்ந்த இரண்டாம் பராந்தகன் காலத்திய அன்பில் செப்பேட்டில் குறிக்கப்பெறும் ஸ்ரீநாதர் என்னும் ஆசாரியர் அவராகவே இருக்கலாம் என்றும் கருதுகிறார் டி. ஏ. கோபிநாத ராவ்.[14]

(3) நாத முனிகள் கி.பி. *823*இல் தோன்றிக் கி.பி. *918*இல் மறைந்தார்; அவர் தொண்ணூற்றைந்தாண்டு வாழ்ந்தவர் என்பது மு. இராகவ ஐயங்கார் முடிபு.[15]

மா. இராசமாணிக்கனார் கருத்துக்குச் சான்றாக அமைவது நாதமுனிகள் கங்கைகொண்ட சோழபுரத்தில் இறந்தார் என்பதாகும். அந்நகரம் இராசேந்திரன் வடபுல வெற்றியின் நினைவாக எடுக்கப்பெற்ற புதிய தலைநகரம். அவன் வடபுல வெற்றி கி.பி. *1024*இல் நிகழ்ந்தமையால் அதற்குப் பின்பே அந்நகரம் உருவாயிற்று எனலாம். எனவே அங்கு மறைந்த நாதமுனிகள் கி.பி. *1024*ஆம் ஆண்டிற்குப் பின்னரே மறைந்திருக்கவேண்டும் என்பர். இக்கருத்தினை ஏற்றுக்கொள்ள முடியாதவாறு பெருந் தடையாக இருப்பது இராமானுசர் கி.பி. 1017இல் பிறந்தார் என்பதாகும். இஃது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து. நாத முனிகளுக்குப் பின்னே உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார் ஆகியோர் வைணவ சமயத் தலைவர்களாக விளங்கியுள்ளனர். மேலும் நாத முனிகள் இறந்த பின்னரே ஆளவந்தார் பிறந்தார் என்பது குருபரம்பரைச் செய்தி.

இதற்கு மாறாக, 'சம்பிரதாய பரிசுத்தி' என்னும் தேசிகன் நூலில் காணப்படும் குறிப்பொன்று நாத முனிகள் காலத்திலேயே ஆளவந்தார் அவதரித்துவிட்டதாகத் தெரிவிக்கிறது.[16]

மா. இராசமாணிக்கனார் கருத்தினை ஒப்புக்கொண்டால் நாத முனிகள் காலத்திலேயே இராமானுசர் பிறந்தார் என்று ஆகும்; இடையிலுள்ள ஆசிரியர்களுக்கு வரலாற்றில் இடமில்லாமற் போய்விடும். எனவே இக்கருத்தினை ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

---

14. Gopinatha Rao. T. A., 'History of Sri Vaishnavas', *1923*, p. *20*.

15. மு. இராகவய்யங்கார், 'ஆழ்வார்கள் காலநிலை', பக். *20*.

16. வி. ஆர். ராமஸ்வாமி ஐயங்கார் (பதி.), 'ஸ்ரீதேசிகன் அருளிய சில்லறை ரஹஸ்யங்கள் முதற்பாகம், தஞ்சாவூர், *1972*, பக். *4*.

டி.ஏ. கோபிநாத ராவ், கங்கைகொண்ட சோழபுரத்திற்கு நாத முனிகள் இறந்த காலத்தில் அப்பெயரில்லை என்றும், பிற்காலக் குரு பரம்பரை ஆசிரியர்கள் தங்கள் காலத்தில் வழங்கிய அப்பெயரால் அதனைச் சுட்டியுள்ளனர் என்றும் கூறிக் கங்கைகொண்ட சோழபுரத்தில் இறந்தார் என்பதனால் கி.பி. 1024ஆம் ஆண்டுக்குப் பின் மறைந்தார் என்பது சரியாகாது என்று விளக்கியுள்ளார். இக்கருத்தினை ஏற்றுக்கொள்வதில் பெருந் தொல்லை ஏதுமில்லை. இங்ஙனமாயின், கி.பி. 1024ஆம் ஆண்டுக்கு முன்பே அந்நகரமும் அங்கு அரச குடும்பத்தினர் வாழும் அரண்மனையும் இருந்தன என்றும், இராசேந்திரன் தன் வடபுல வெற்றிக்குப் பின் அந்நகரினை விரிவுபடுத்திக் கங்கைகொண்ட சோழபுரம் என்று மறுபெயரிட்டு வழங்கினான் என்றும் கொள்ளவேண்டும். இவர் கருத்துப்படி நாத முனிகள் கி.பி. பத்தாம் நூற்றாண்டின் பெரும்பகுதியில் வாழ்ந்தவராகக்கொண்டாலும் அவருக்கும் இராமானுசருக்கும் இடைப்பட்ட சமயத் தலைவர்களுக்குப் போதிய ஆண்டுகள் இல்லாமற் போகின்றன.

இந்நிலையில், திரு. மு. இராகவ ஐயங்கார் குறிப்பிடும் காலமே மற்ற ஆசாரிய பரம்பரைகட்கு மிகவும் இயைந்து வருவதால் பொருத்தமாகத் தோன்றுகிறது. எனவே, நாத முனிகள் கி.பி. 823இல் தோன்றிக் கி.பி. 918இல் மறைந்தார் என்று கொள்வதே தக்கதாகும். அஃதாவது ஒன்பதாம் நூற்றாண்டின் பெரும்பகுதியிலும் பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவராவர்.

பெரிய முதலியார் யார்?

ஈடு, திருவாய்மொழிக்கு ஆசாரியப் பெருமக்கள் சொன்ன நயவுரைகளையும் பொருள் கொண்ட முறைகளையும் ஆட்சிகள் (நிர்வாஹங்கள்) என்று அவர்கள் பெயர் சுட்டியும் சுட்டாமலும் எடுத்துக்காட்டிச் செல்கின்றது. அவற்றுள் நாத முனிகள் ஆட்சியாக யாதும் காணப்படவில்லை. ஆனால் 'என்னுடை பந்துங் கழலும் தந்து போகு நம்பீ' என்பதன் விளக்கவுரையில் "கண்ட காட்சி புல்லெழுந்து போன படியிறே இவள் இங்ஙன் சொல்லுகிறது என்று பெரிய முதலியார் வார்த்தை" என்னும் குறிப்பு வருகின்றது.[17] இதில் சுட்டப்பெறும் பெரிய முதலியார் யார்

17. 6.2.1-36.

என்பது குறித்து அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது. அறிஞர் பு.ரா. புருஷோத்தம நாயடு "பெரிய முதலியார் என்றது ஸ்ரீமந் நாத முனிகளை" என்று குறித்துள்ளார்.[18] "பெரிய முதலியார்—ஆளவந்தார்" என்று சியர் அரும்பதம் குறித்துள்ளது.[19] இவற்றால் பெரிய முதலியார் யார் என்னும் வினா எழுகிறது.

பெரியவாச்சான் பிள்ளை 'குணபால மதயானாய்' என்னும் திருநெடுந்தாண்டகத் தொடர் உரையில் இருவருள் எவரை வேண்டுமானாலும் குறிப்பதாகக் கருதத்தக்க வகையிலும்,[20] 'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே யென்னும்' என்னும் திருவாய்மொழித் தொடர் உரையில் நாத முனிகளைக் குறிக்கும் வகையிலும், பெரிய முதலியார் என்பதனை ஆண்டுள்ளார்.[21] அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் கண்ணிநுண் சிறுத்தாம்பு முன்னுரையில் ஆளவந்தாரையும்[22] 'நாயகனாய் நின்ற' என்னும் திருப்பாவை உரையில் நாத முனிகளையும்[23] பெரிய முதலியார் என்று குறித்துள்ளார்.

இவ்வுரைப் பகுதிகளை நோக்குமிடத்து, நாத முனிகள், ஆளவந்தார் இருவரையும் 'பெரிய முதலியார்' என்று குறிக்கும் வழக்கம் இருந்துள்ளமை புலனாகிறது. இவ்விருவரும் இராமானுசருக்கு முன்னர் வாழ்ந்த பெருஞ் சிறப்புக்குரிய தலைவர்களாதலின் இருவரையுமே பின்வந்தோர் 'பெரிய முதலியார்' என்று குறித்தனர் என்பதே ஏற்புடைத்தாகும். நாத முனிகள் ஆட்சி வேறு ஏதும் எங்கும் காணப்படாத நிலையில் இஃதொன்றனை மட்டும் அவரது விளக்கமாகக் கூறுதல் இயலாது. ஆதலால், இதனை ஆளவந்தார் விளக்கமாகக் குறிப்பிடும் சீயர் அரும்பதக் கருத்தே வலுவுடையதாக அமைகின்றது. இதனை நாத முனிகளுடைய விளக்கமாகக் கொள்ளின் அவரே திருவாய்மொழியின் முதல் உரையாசிரியர் ஆவார்.

---

18. பு. ரா. புருஷோத்தம நாயுடு, 'திருவாய்மொழி-பகுதி 6', ஆறாம் பத்து, ஈட்டின் தமிழாக்கம், சென்னை சர்வகலா சாலை, இரண்டாம் பதிப்பு, 1966, பக். 95, அடிக்குறிப்பு.
19. சே. கிருஷ்ணமாச்சாரியர், 'ஸ்ரீபகவத் விஷயம்', ஆறாம் பத்து, நோபில் அச்சுக்கூடம், திருவல்லிக்கேணி, 1927, பக். 80.
20. தி. நெ. தா. 10.
21. 4. 4. 8-24, 36.
22. க. நு. சி. 0-அழகு.
23. பாவை 16-6.

2. ஆளவந்தார்

பிறப்பு

திவ்வியப் பிரபந்தங்களைத் திரட்டித் தந்த நாத முனிகளுக்கும் அவற்றைச் செவிலித்தாய் போல இருந்து வளர்த்த இராமானுசருக்கும் இடைப்பட்ட காலத்தில் ஒரு பெருந் தலைவராக ஒளிர்ந்தவர் ஆளவந்தார். இவர் நாத முனிகளுக்குப் பேரர்; ஈசுவர முனிகளின் மைந்தர். யமுனைத்துறைவர், யாமுனாசார்யர், யாமுநேயர் என்னும் பெயர்களும் இவருக் குண்டு.

ஆக்கியாழ்வானை வென்றது

இவர் பிள்ளைப் பருவத்திலேயே பேரறிவோடு திகழ்ந்தார். தம் ஆசிரியர் பொருட்டுச் சோழன் அவைக்களப் புலவன் ஆக்கியாழ்வானோடு சொற்போர் புரிய வேண்டிய நிலை இவருக்கு நேர்ந்தது. சோழன் அரண்மனையில் புலவர்கள் முன்னிலையில் சொற்போர் தொடங்கியது.

ஆக்கியாழ்வான் இவரை நோக்கிச் "சாத்திரங்களில் சொற்போர் புரிவதற்கு முன்னே உலகியலில் சிறிது சொற்போர் நிகழ்த்தலாம்; நீர் 'இல்லை' என்பதனை நான் 'உண்டு' என்பேன்; நீர் 'உண்டு' என்பதனை நான் 'இல்லை' என்பேன்; போட்டியில் தோற்றவர் தலையில் வென்றவர் குட்டுதற்குரியவர்" என்றான். இவர் "உன்தாய் மலடியல்லள்; இவ் அரசன் மண்ணுலகம் முழுவதும் ஆள்பவன்; இவ் அரசி கற்புடையவள்" என்று மூன்றனைக் கூறி மறுத்துரைக்கச் சொன்னார். ஆக்கியாழ் வான் வாய்மூடித் தலைகுனிந்தான். தொடர்ந்து நடந்த சாத்திரப்போரிலும் அவன் தோல்வி கண்டான். அவனை வென்ற யமுனைத் துறைவர் அவன் தலையில் குட்டாமல் வயதுக்கு மதிப்பளித்து விடுத்தார். புலவர்கள் யமுனைத் துறைவரைச் சிவிகையில் ஏற்றிச் சிறப்புச் செய்தனர். அப்பொழுது அரசி 'என்னை ஆளவந்தீரோ?' என்று கூறியவாறு இவரை எடுத்தணைத்துத் தன் கொழுநனுடன் அரண்மனைக்குள் புகுந்தாள். இவர் அன்றுமுதல் ஆளவந்தார் என்று அழைக்கப் பெற்றார்.[24] "இவர்கள் வ்யாபாரம் (செயல்) இவர்க்கு வல்லரா டினாப் போலே யிருக்கை... ஆளவந்தார் நடையை ராஜா கொண்டாடினாப் போலேயும் இவர் கொண்டாடுகிறபடி" என்று

---

24. எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், முன்குறித்த நூல், பக். 112-114.

அருளிச்செய்வர்[25] என்னும் உரைக்குறிப்பு அதனைக் குறிப்பாகச் சுட்டுகிறது.

மணக்கால் நம்பி சந்திப்பு

அரண்மனையில் வாழத் தொடங்கிய ஆளவந்தாரைச் சந்திக்கப் பெருமுயற்சி செய்தார், உய்யக் கொண்டாரின் சீடரான மணக்கால் நம்பி. அம்முயற்சியில், ஆளவந்தாருக்குப் பிடித்தமான தூதுவளைக் கீரையினைத் தொடர்ந்து ஆறு திங்கள் கொண்டு சென்று அரண்மனைச் சமையற்காரனிடம் கொடுத்து வந்தார். அப்படியும் இவரைச் சந்திக்க இயலாமல் போயிற்று; மனம் சோர்ந்து கீரை கொடுப்பதனைத் தவிர்ந்தார். உணவில் தூதுவளை இல்லாதது கண்டு காரணம் வினவினார் ஆளவந்தார். சமையற்காரனிடமிருந்து செய்தியறிந்தார். சில நாள்களுக்குப் பின் மீண்டும் அரண்மனைக்குக் கீரையோடு சென்றபோது ஆளவந்தாரைச் சந்திக்கும் வாய்ப்பு மணக்கால் நம்பிக்குக் கிட்டிற்று. மணக்கால் நம்பி அவர்தம் முன்னோர்கள் தமக்கு உரைத்த மெய்ப்பொருள்களை அவருக்கு உணர்த்துவதற்காகவே அவரைச் சந்திக்க முயன்றதாகத் தெரிவித்தார். அன்றுமுதல் கீதையின் உட்பொருள் முதலானவற்றை விளக்கினார். ஆளவந்தார் உலக வாழ்வில் பிடிப்பற்று இறைவன்பால் நாட்டம் மிக்கவராக மாறினார். மணக்கால் நம்பி இவரைத் திருவரங்கத்திற்கு அழைத்துச் சென்று, அரங்கம் மேய அண்ணல் முன்பு நிறுத்தி, "இது காணும் உம் முன்னோர்கள் தேடிவைத்த பெருஞ்செல்வம்" என்றார். ஆளவந்தார் அன்றுமுதல் துறவியாகித் தென்னரங்கமே பதியாகக் கொண்டு வாழ்ந்தார்.[26]

இவ்வரலாற்றினை, "ஆளவந்தார்க்குப் பச்சையிட்ட மணக்கால் நம்பியையும் போலே இருந்ததீ யுங்கள்படி" என்றும்,[27] "இரந்து சொல்லுகைக்கு மணக்கால் நம்பியோடொப்பர் காணும்"[28] என்றும் வரும் உரைப்பகுதிகள் சுட்டுகின்றன.

---

25. 5. 2. 5-24. 36.

26. எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், முன் குறித்த நூல் பக். 116.

27. 6.8. 1-36.
28. 9.3. 5-36.

குருகைக் காவலப்பன் சந்திப்பு

ஆளவந்தார், மணக்கால் நம்பியிடமிருந்து தாம் குருகைக் காவலப்பனிடம் கேட்டறிய வேண்டிய மறைபொருள் ஒன்று இருப்பதாக அறிந்தார். கங்கை கொண்ட சோழபுரத்துக்குச் சென்றார். அதுபோழ்து குருகைக் காவலப்பன் ஒரு குட்டிச்சுடர் அருகில் யோகநிலையில் இருந்தார். அதனை உணர்ந்து சுவருக்கு அப்பால் பின்புறத்தில் சென்று நின்றார் ஆளவந்தார். எனினும் யோக நிலையிலிருந்த குருகைக் காவலப்பன் திரும்பிப் பார்த்து, "இங்குச் சொட்டைக் குலத்தைச் சேர்ந்தவர் யாரேனும் வந்துள்ளாரா?" என்று வினவினார். ஆளவந்தார் அவரை வணங்கி, "நாங்கள் பின்னே யல்லவா மறைந்து நின்றோம். தாங்கள் எவ்வாறு அறிந்தீர்கள்?" என்று கேட்டார். "நானும் தானுமாகப் பரிமாறா நின்றால், பெரிய பிராட்டியார் திருமுலைத் தடத்தாலே நெருக்கியணைத்தாலும் அவள் முகங்கூடப் பாராத பெருமான், என் கழுத்தை யமுக்கி நாலு மூன்று தரம் அங்கே எட்டிப் பார்த்தான்; இப்படி அவன் பார்க்கும்போது சொட்டைக் குலத்திலிருந்து சிலர் வந்திருக்க வேண்டுமென்று அறிந்தேன்" என்று விடையிறுத்தார் குருகைக் காவலப்பன்.[29] ஈட்டில் விளக்கமாகவும் இருபத்து நாலாயிரப்படி யில் குறிப்பாகவும் இடம் பெற்றுள்ள இந்நிகழ்ச்சியினால் நாத முனிகள் சொட்டைக் குலத்தவர் என்பதும், ஆளவந்தார் குருகைக் காவலப்பனிடம் யோக நுட்பங்களை உணர முயன்றார் என்பதும் தெரிய வருகின்றன.

ஆளவந்தார் மக்கள்

ஆளவந்தாருக்குத் திருவரங்கப் பெருமாளரையர், தெய்வத்துக்கரசு நம்பி, பிள்ளைக்கரசு, சொட்டைநம்பி என்னும் மைந்தர் நால்வர் இருந்தனர் என்பர்.[30] இவர்களுள் சொட்டை நம்பியைப் பற்றிய குறிப்புத் திருவிருத்த உரையில் காணப் படுகின்றது.

ஆளவந்தார் மகனார் சொட்டை நம்பியின் கடைசி நேரத்தில் அடியார்கள் எல்லோரும் சென்று அவரைக் கண்டு அவர்தம்

---

29. 2. 6. 2-36.
30. எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், 'ஸ்ரீரங்கம் பாரதீய பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ ஸபையின் பொன்விழாமலர்', ஸ்ரீநிவாஸம் பிரஸ், திருச்சி, 1978, பக். 133.

இறுதி நினைவு குறித்து வினவினரென்றும், அதற்கு அவர் திருநாட்டுக்குச் சென்று, அங்கு உறையும் பெருமான் முகம் திருவரங்கச் செல்வன் முகம்போலக் குளிர்ந்து இருக்கவில்லை என்று கண்டால் உடன் முறித்துக்கொண்டு திருவரங்கத்துக்கு வந்துவிட எண்ணியிருப்பதாகக் கூறினார் என்றும் திருவிருத்த உரையில் ஒரு குறிப்புக் காணப்படுகிறது.[31] சொட்டை நம்பியின் ஆட்சி ஒன்றும் ஈட்டில் வந்துள்ளது.[32]

ஆளவந்தார் பண்புகள்

ஆளவந்தார் சொல்லாற்றல் மிக்கவர். "உதார வாக்குக் களாகிறார்—திருமங்கையாழ்வாரும், ஆளவந்தாரும், ஆழ்வானும், பட்டரும்" என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் உரைக்குறிப்பு.[33] பெரிய முதலியார் என்று போற்றிக் கூறப்பட்ட பெருமையும் இவருக்கு உண்டு. இவர் சமய நூல்களே யன்றி 'மாலதி மாதவ நாடகம்' போன்ற இலக்கிய நூல்களையும் அறிந்தவர்.[34] இவர் ஆத்மசித்தி, ஈச்வரசித்தி, சம்வித் சித்தி, ஆகமப்ராமாண்யம், கீதார்த்த சங்கிரகம், தோத்திர ரத்தினம், சதுச்சுலோகி, மாயாவாத கண்டனம் என்னும் எட்டு நூல்களை வட மொழியில் எழுதியுள்ளார். முதல் மூன்று நூல்களையும் 'சித்தித் திரையம்' என்பர். தமிழில் இவரது நூல் ஏதுமில்லை. இவர்தம் நூல்களிலிருந்து உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டிச் செல்வது இவர்பால் அவர்களுக்கு இருந்த மதிப்பினைக் காட்டும்.[35]

இவர் இறையருட் பேற்றினை விரைந்து பெறவேண்டும் என்னும் துடிப்பால் எப்போதும் 'அறுக்கும் வினையாயின' என்னும் திருவாய்மொழியினைச் சிந்தித்தவாறே இருப்பாராம். அதனால் அத்திருவாய்மொழி பெரிய முதலியார் திருவாய்மொழி என்றே குறிக்கப்பட்டுள்ளது.[36]

உரைத்தொண்டு

இவர் தம் மாணாக்கர்களுக்கு நாலாயிரத்தின் அரும்பொருளை விளக்கியுள்ளார். அவர்களுக்கு எழுந்த

31. தி. வி. 44.
32. 4. 5. 7-36.
33. பாவை 20-6, பக். 280.
34. 4. 7. 8-36.
35. க. நு. சி. 0-அழகு; பக். 26; க.நு.சி. 2, பெரி. பக். 86; அழகு, பக். 93; பாவை 21-6, பக். 287.
36. 9.8. 0-36.

ஐயங்களைக் களைந்துள்ளார்.[37] அவர்களுள் திருமாலையாண்டான் குறிப்பிடத்தக்கவர். ஆளவந்தார் ஆட்சிகளாகவும், ஆளவந்தார் ஆட்சிகளாகத் திருமாலையாண்டான் குறிப்பிட்டுச் செல்வனவுமான இவருடைய ஆட்சிகள் பல உரைகளில் எழுதி வைக்கப்பட்டுள்ளன. ஆளவந்தார் விளக்கங்கள் பலவற்றை இராமானுசர் உடன்படாமல் தாம் வேறு வகையாக விளக்கிச் சென்றுள்ளார். இவருடைய விளக்கங்களில் இராமானுசரால் தள்ளப்படாமல் தழுவிக் கொள்ளப்பட்டவை வகைப்படுத்தப் பட்டுக் கீழே தரப்படுகின்றன.

1. சந்தை கூறுதல்

அ) திருவாய்மொழி முதற் பாசுரத்தில் உள்ள 'உடையவன்' என்பதற்கு, 'ஸ்வாபாவிக அநவதிகாதிசய அஸங்க்யேய கல்யாண குணகண:" (இயற்கையான, எல்லையற்ற, மிகுந்த, எண்ணற்ற உயர் பண்புகளின் தொகுதியையுடையவன்) என்றும்,[38]

ஆ) 'உருகுமால்' என்னும் திருவாய்மொழிக்கு, அப்ரீதிகர்ப்ப குணாநுஸந்தாநம்' (அன்பின்மையை உட்கொண்ட தன்மைகளை நினைவுகூர்தல்) என்றும்,[39]

இ) 'வைகுந்தா' என்னும் திருவாய்மொழிக்கு, ப்ரணயிப்ரீத்யநுஸந்தாநம்' (காதலன் மகிழ்ச்சியை நினைவுகூர்தல்).[40] என்றும் சந்தை அருளிச்செய்துள்ளார்.

2. உள்ளுறை (சுவாபதேசம்) கூறுதல்

துறவறத்தை 'மடல்' என்று சொல்லுவார் என்னும் செய்தி பெரிய திருமடலில்[41] காணப்படுகின்றது.

3. ஆழ்ந்து உரைகாணுதல்

"சோலைத் திருக்கடித் தானத் துறைதிரு
மாலை மதிள்குரு கூர்ச்சட கோபன்சொல்
பாலோ டமுதன்ன ஆயிரத் திப்பத்தும்
மேலைவை குந்தத் திருத்தும் வியந்தே"

---

37. நா. தி. 10. 5; 7. 5. 3-36; 4. 8. 8-36.
38. 1. 1. 1-24, 36.
39. 9. 6. 0-36.
40. 2. 6. 0-24, 36.
41. பெ. மடல் 0, பக். 10.

என்னும் பாசுரத்தில் வரும் 'பால்' சோலைத் திருக்கடித்தானத் துறை திருமாலையும், 'அமுது' சடகோபன் சொல் என்னும் வாசகத்தையும் குறிக்கும் என்று உரைப்பர்.[42]

''எங்கே காண்கேன் ஈன்துழாய்
அம்மான் றன்னையான் என்றென்று
அங்கே தாழ்ந்த சொற்களால்
அந்தண் குருகூர்ச் சடகோபன்
செங்கேழ் சொன்ன வாயிரத்துள்''

என்பதில் 'அந்தண் குருகூர்ச் சடகோபன்' என்பதற்குப் பாடலின் முற்பகுதியில் உள்ள உணர்ச்சியினை மனத்துட்கொண்டு 'இவ்வாற்றாமைக்கெல்லாம் ஆடல் கொடுத்த ஆழ்வார்' என்று விளக்கம் தந்துள்ளார்.[43]

மேற்காட்டிய பகுதிகளில் ஆழ்ந்து பொருள் கூறியிருத்தல் வெளிப்படை.

4. இராமாயணத்தை இணைத்து உரைகூறுதல்

''பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும்
இந்நின்ற நீர்மை இனியா முறாமை''

என்னும் திருவிருத்தத்தில் 'இந்நின்ற நீர்மை' என்பதற்கு, 'ஏஹி பச்ய சரீராணி' (வாராய் எங்கள் உடல்களைப் பாராய்) என்று ஸ்ரீதண்ட காரண்யத்தில் ருஷிகள் (இருடிகள்) பெருமாளுக்கு ராக்ஷஸர் (அரக்கர்) தின்ற உடம்பைக் காட்டினாற் போலே ப்ரக்ருதி (பிரகிருதி) தின்ற ஆத்மாவைக் காட்டுகிறார்'' என்று இராமாயணத்திலிருந்து உவமை காட்டி விளக்குகிறார்.[44]

பின்வந்த உரைகளில் இராமாயண பாரத இதிகாசச் செய்திகள் மிகவும் இடம்பெற்றுள்ளன. அவ்வாறு இதிகாசங்களை இணைத்து உரைகாணும் முறை இவர் காலத்திலேயே தோன்றியுள்ளது என்பது புலனாகிறது.

5. சமய உண்மைகளைப் பாட்டில் காட்டுதல்

''எம்மனாஎன் குலதெய்வமே யென்னுடை நாயகனே
நின்னுளேனாய்ப் பெற்றநன்மை இவ்வுலகினில்
ஆர்பெறுவார்''

---

42. 8.6. 11-36.
43. 8.5. 11-24, 36.
44. தி.வி. 1.

என்பது பெரியாழ்வார் திருமொழி. இதற்கு "எம்மனா, என் குலதெய்வமே என்னுடைய நாயகனே என்கிற இம்மூன்றாலும் ஜ்ஞாநவிரோதியும் (அறிவுப் பகையும்), ஆச்ரயண விரோதியும் (சார்புப்பகையும்), மோக்ஷ விரோதியும் (வீடு பேற்றுப் பகையும்) போனபடி" என்று உரைவகுத்துச் சமய உண்மை களைப் பொருத்திக் காட்டுகிறார்.[45] இப்போக்கு, பின்வந்த உரைகாரர்களிடம் நல்ல செல்வாக்குப் பெற்றது.

ஆளவந்தார் விளக்கங்கள் பின்வந்த உரைகளின் செழுமைக்கு வித்துகளாக அமைந்தன; ஆழ்வார் பாசுரங்களைக் கூர்ந்து நோக்கி உரைவகுக்க வழிகாட்டிகளாய் விளங்கின; உரைப்போக்கு களுள் சில உருவாவதற்கு வழிகோலின. மேலே கூறப்பட்டவை தவிர இன்னும் சில ஆளவந்தார் விளக்கங்களும் உள்ளன.[46]

3. இராமானுசர்

இராமானுச தரிசனம்

வைணவ சமயத் தலைவர்களிடையே நாயகக் கல் போல ஒளிர்பவர் இராமானுசர். அச்சமயம் 'எம்பெருமானார் தரிசனம்' என்று வழங்கப்படுவது இவரது பெருமையைக் காட்டும். "நம்குடி என்னாதே 'தன்குடி' என்றாளாயிற்று, எம்பெருமானார் தர்சநம் என்னுமாபோலே"[47] என்பது பெரிய திருமொழி உரை.

இராமானுசரது பிறப்பால் இறைவனைப் பற்றிய மறை பொருள்கள் எல்லாரும் அறியும் நிலை உருவாயிற்று.

"செவிதாழ்த்தார்க்கெல்லாம் வார்த்தை சொல்லிப் போந் தார், உடையவர்; ருசியைப் (சுவையை) பிறப்பித்து வார்த்தை சொல்லிப் போந்தான், கீதோபநிஷ தாசார்யன்" என்று திருநெடுந்தாண்டகத்திலும்,[48] "முன்புத்தை ஆசார்யர்கள் பகவத் விஷயஞ் சொல்லும்போது நாலிரண்டு பேருக்காயிற்றுச் சொல்லுவது; அதுதானும் அவர்கள் படியறிந்தால் சொல்லுவது; அங்ஙனன்றிக்கே 'ருசியுடையார்' என்று தோற்றின அளவிலே

---

45. பெரி.தி. 5.3.3.
46. 4. 3. 8-24, 36; 6.7.0-36; 8.1.0-36; நா.தி. 10.5.
47. பெ.தி. 2.7.6.
48. தி.நெ.தா. 11.

சொல்லுவர் எம்பெருமானார்'' என்று சிறிய திருமடலிலும்[49] வரும் குறிப்புகள் இதனை வலியுறுத்தும்.

இளமைக் காலம்

இவர் பிறந்த ஊர் ஸ்ரீபெரும்பூதூர். தந்தையார் சோமயாஜியார்; தாயார் பெரிய திருமலை நம்பியின் சகோதரி களுள் ஒருவரான காந்திமதி. இராமானுசருக்குப் பெரிய திருமலை நம்பி வைத்த பெயர் இளையாழ்வார்; பெரிய நம்பி இட்டது இராமானுசன்; பெரிய பெருமாள் சூட்டியது உடையவர்; திருக்கோட்டியூர் நம்பி தந்தது எம்பெருமானார்; குடிக்கொடுத்த நாச்சியார் சாற்றியது கோயிலண்ணன்; தம் பெருமையினால் நூற்றாண்டு விழாக் கண்டருளிப் பெற்றது எதிராசன்.[50] இவர் தொடக்கத்தில் காஞ்சி யாதவப் பிரகாசரிடம் பயின்றார். இவருக்குப் பதினாறாம் அகவையில் திருமணம் நடந்தது. மனைவி பெயர் தஞ்சம்மாள். ஆசிரியரினும் தாம் அறிவுத்திறம் மிக்கவராய் இருந்தமையால் இவரது கல்வி சில காலமே நீடித்தது. பின்னர் வரதராசப் பெருமானுக்குத் தொண்டு புரிவதில் ஈடுபட்டார்.

இராமானுசரும் ஆளவந்தாரும்

இராமானுசருக்கு வணிக குலத்தினரும் ஆளவந்தார் மாணாக்கருமான திருக்கச்சி நம்பி தொடர்பு கிடைத்தது. ஆளவந்தார் ஒருமுறை காஞ்சிக்கு வந்தார். அப்பொழுது இவரைத் தொலைவிலிருந்து கண்டு மகிழ்ந்து தமக்குப்பின் வைணவ சமயத்தின் தலைவராகத் திகழ்வார் என்று கூறிச் சென்றார். இதனைத் "திருப்புற்றுக்குக் கிழக்கே கரிய மாணிக்காழ்வார் திருமுன்பின் ஸோபாநத்திலே (படிக்கட்டிலே) ஆளவந்தார் எழுந்தருளியிருக்க, உடையவர் திருப்புற்றுக்குக் கிழக்காக எழுந்தருளி நிற்கிறவரைக் கண்டு 'ஆமுதல்வனிவன்' என்று அருளிச்செய்தாராம்'' என்று ஈடு[51] குறித்துள்ளது.

ஆளவந்தார் தம் இறுதி நாளில் இராமானுசரைக் காண விழைந்தார். பெரிய நம்பி என்பவர் காஞ்சி சென்று இராமானு சரைத் திருவரங்கத்திற்கு அழைத்துவந்தார். ஆனால் அவர் கள் திருவரங்கம் சேர்வதற்குள்ளாக ஆளவந்தார் உலக

49. சி. மடல், கண்ணி, 19,20, பக். 45.
50. பழநடை விளக்கம், பக். 14; கோயிலொழுகு, பக். 58.
51. 7.9. 3-36.

வாழ்வை நீத்தார். அவர்தம் மூன்று விருப்பங்களைப் பிறர் வாயிலாக அறிந்து அவற்றைத் தாம் நிறைவேற்றுவதாக உறுதி கூறிப் பெரியபெருமாளையும் தொழாது பெருவருத்தத்தோடு காஞ்சிக்குத் திரும்பினார். காஞ்சி வரதராசனுக்குத் தொண்டு புரிவதில் மீண்டும் ஈடுபட்டார்.

இராமானுசர் வரதராசப் பெருமாளுக்கு நெடுநாள் திருமஞ்சனத் தொண்டு புரிந்து பின்னரே திருவரங்கம் சென்றார் என்பது, "உடையவர் பெருமாளுக்கு நெடுநாள் திருமஞ்ஜநமெடுத்து அவரை ஆச்ரயமாகப் (சார்பாக) பற்றிப் பின்பிறே கோயிலிலே வந்தது" என்னும் பெரிய திருமொழி உரையால்[52] விளங்குகிறது.

துறவறம் மேற்கொள்ளல்

திருவரங்கத்துப் பெரியோர்கள், இராமானுசரைத் தங்கள் சமயத் தலைவராக்க விழைந்தனர். அதன்படி இராமானுசரைத் திருவரங்கத்துக்கு அழைத்துவரப் பெரியநம்பி காஞ்சிக்குப் பயணமானார். அதே நேரத்தில் பெரியநம்பியின் திருவடிகளைச் சார்வதற்காக இராமானுசரும் திருவரங்கம் நோக்கிச் சென்றார். வழியில் மதுராந்தகத்தில் இருவரும் சந்தித்தனர். இராமானுசரது ஆதரத்தின் கனத்தைக் கண்டு அங்கேயே சங்கு சக்கரப் பொறி ஒற்றுதல் முதலிய ஐந்தீக்கைகளைச் செய்து அவரைப் பெரிய நம்பி ஆட்கொண்டார். இருவரும் காஞ்சிக்கு வந்து ஒரே இல்லத்தில் தங்கியிருந்தனர். இருவரின் மனைவியரிடையே விளைந்த பூசலால் பெரியநம்பி திருவரங்கத்துக்குக் குடும்பத்தோடு புறப்பட்டார். அதனை அறிந்து முன்னரே தம் மனைவியின் செயல்களால் மனங் கன்றியிருந்த இராமானுசர் துறவியானார்.

தலைமைப்பதவி ஏற்றல்

திருவரங்கப் பெருநகர் சமயத் தலைவரின்றிப் பொலிவற்றுக் கிடந்தது. அந்நிலையினை மாற்றத் திருவரங்கப் பெருமாள் அரையர் காஞ்சிக்குச் சென்றார். தம் இசையினிமையால் தேவப்பிரானை உகப்பித்து இராமானுசரைப் பரிசாகப் பெற்றுத் திருவரங்கத்துக்கு அழைத்துச் சென்றார். இராமானுசருக்கு 'உடையவர்' என்னும் பெயர் சூட்டப்பெற்றது. அவர் சமயத் தலைவரானார். தம் மாணாக்கர் கூரத்தாழ்வானைக்கொண்டு

52. பெ.தி. 8.2.8, பக். 1443.

அமுதனாரைத் திருத்திப் பணிகொண்டு நம் பெருமாள் திருமுற்றத்துத் திறவுகோலைப் பெற்றார்.[53]

சமயக்கல்வி பெறுதல்

இராமானுசர் ஐந்து ஆசிரியர்களின் திருவடிகளில் சமயக் கல்வி பயின்றார். அவர்களுள் பெரிய நம்பி ஐந்தீக்கையிட்டுச் சமய வாழ்க்கையினைத் தொடங்கி வைத்தார்; திருக்கோட்டியூர் நம்பி மறைபொருள்களைக் (ரஹஸ்யார்த்தங்கள்) கற்பித்தார்; திருமாலையாண்டான் திருவாய்மொழியினைப் பயிற்றுவித்தார்; திருவரங்கப் பெருமாளரையர் இசையோடு திருவாய்மொழியும் தோத்திரங்களும் நல்வார்த்தைகளும் சொல்லிக்கொடுத்தார்; திருமலை நம்பி இராமாயணத்தை விளக்கியருளினார்.[54] இவ்வாறு பலதுறை அறிவும் பெற்றுத் தகுதிகளைப் பெருக்கிக் கொண்டு பெருந்தலைவராகத் திகழ்ந்தார் இராமானுசர்.

ஆளவந்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுதல்

தம் மாணக்கரான கூரத்தாழ்வானோடு காஷ்மீரம் சென்று, சாரதா பீடத்திலிருந்த போதாயனரின் பிரமசூத்திர விளக்கவுரையினைப் படித்துவந்து 'ஸ்ரீபாஷ்யம்' என்னும் பிரமசூத்திர மாபாடியத்தை வரைந்தார். திருக்குருகைப்பிரான்பிள்ளானைக் கொண்டு திருவாய்மொழிக்கு உரை கண்டார். கூரத்தாழ்வான் மைந்தர் இருவர்க்கும் பராசர பட்டரென்றும், வேத வியாச பட்டரென்றும் பெயர் சூட்டினார். ஆளவந்தார் விருப்பங்கள் மூன்றும் நிறைவேறின.

சோழ மன்னன் பகைமை

இவர் இங்ஙனம் வைணவத்தைப் போற்றிப் புரந்துவருங் காலத்தில் சோழ மன்னன் குலோத்துங்கன் பகை உண்டாயிற்று. சோழ மன்னன் இராமானுசரைத் தன் அவைக்கு அழைத்துவர நாலூரான் என்னும் அமைச்சன் தூண்டுதலால் பணியாளர்களை விடுத்தான். அரசனது நோக்கத்தை உணர்ந்த கூரத்தாழ்வான் இராமானுசரின் காவியுடையினைத் தாம் அணிந்து அரசனை நோக்கிப் புறப்பட்டார். இராமானுசர் சோழன் கொடுமை

53. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி (பதி.), 'கோயிலொழுகு', ஸ்ரீநிவாஸம் பிரஸ், புத்தூர், 1976, பக். 42.
54. அண்ணங்கராசாரியர், 'பூர்வாசார்ய வைபவம்', சென்னை ரத்னம் ப்ராஞ்சு அச்சுக்கூடம், 1970, பக். 29.

யினின்றும் தப்பும்பொருட்டு நீலகிரி மலை வழியாக மைசூரை அடைந்தார். அங்குத் தங்கியிருக்குங் காலத்தில் அந்நாட்டு மன்னன் விட்டல தேவன் இவருக்கு அடியவனானான். திருநாராயணபுரத்தில் தம் பெயரால் யதிராஜ மடம் என்னும் ஒரு மடமும், தொண்ணூர் என்னும் தொண்டனூரில் ஓர் ஏரியினையும் அமைத்தார். தில்லி சென்று அரசன் மகளிடம் இருந்த செல்வப் பிள்ளையார் விக்கிரகத்தை மீட்டுவந்து திருநாராயணப் பெருமாளுடன் சேர்த்தார்.[55]

திருவரங்கத்துக்குத் திரும்புதல்

மைசூரில் சற்றொப்பப் பன்னிரண்டு ஆண்டுகள் தங்கியிருந்து முதலாம் குலோத்துங்கன் மறைவுக்குப் பின் திருவரங்கத்திற்குத் திரும்பி வந்தார். மைசூரிலிருந்து திரும்பும்போது திருப்பதிக்குச் சென்று தில்லைநகர்ச் சித்திரகூடத்து எம்பெருமானை அங்குக் கால்கோள் செய்தார். அதன் பின்னர் அழகர் மலைக்குச் சென்று ஆண்டாள் சொல்லியபடி நூறுகுடம் அக்கார அடிசில் அமுது செய்வித்து ஸ்ரீவில்லிபுத்தூரை அடைந்தார். அங்கு நங்கோயி லண்ணன் என்னும் பெயரைப் பெற்றார். ''பெண்பிள்ளை ப்ரார்த்தித்துச் சொல்லிவைத்தாள்; கொடுத்தாளாகச் சொல்லக் கேட்டிலோம்; ப்ரார்த்தித்தவற்றை (சொல்லி வைத்தவற்றை) இறுக்கை அஸ்ஸந்தாந ஜாதர்க்கு (அம்மரபில் வந்தவர்க்கு) பரமிறே (கடனன்றோ) என்று தாம் அமுது செய்வித்தருளினா ராம்'' என்னும் நாச்சியார் திருமொழி உரைக்குறிப்பு இதனைத் தெரிவிக்கின்றது.[56]

நிறைவாழ்வு

திருவரங்கத்துக்குத் திரும்பிய இராமானுசருக்கு வயது நூறுக்கு மேலாகிவிட்டது. வைணவ சமய வளர்ச்சியை மனத்துட் கொண்டு எழுபத்து நான்கு ஆசாரியர்களைத் தேர்ந்தெடுத்துச் சிம்மாசனாதிபதிகள் என்று பட்டஞ் சூட்டினார். இவ்வாறு தம் அயரா உழைப்பினால் திருமால் நெறியினைக் குன்றின் மேலிட்ட விளக்காக ஒளிரச் செய்த இராமானுசர் கி.பி.1137ஆம் ஆண்டு உலகவாழ்வை நீத்தார். ''எம்பெருமானாரைப் போலே நூறாண்டு ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயோடேயிருந்து, பின்பு தாய்நிழலிலே

55. பி.ஸ்ரீ., 'ஸ்ரீராமாநுஜர்', பாரி நிலையம், சென்னை, 1973, பக். 253, 258.

56. நா.தி. 9.6.

ஒதுங்குவாரைப் போலே அவன் திருவடிகளிலே புகப்பெறுவர்'' என்று வரும் ஈட்டுரை[57] இராமானுசரின் நெடிய வாழ்வினைக் குறிப்பிடுதல் காணலாம். அவரது வாழ்வு முதலாம் இராசேந்திரன் ஆட்சிக்காலத்தில் தொடங்கி, இரண்டாம் குலோத்துங்கன் ஆட்சிக்காலம் வரை நீண்டு சென்றுள்ளது.

இராமானுசர் பண்புகள்

அருளும் இறையன்பும் நிறைந்த நெஞ்சம்

இராமானுசர் அருள்நிறைந்த பெருமகனார். "இவர்தாம் எம்பெருமானாரோபாதியும் (எம்பெருமானாரைப் போலேயும்) க்ருபையுடையவர் காணும்''[58] என்பது நம்பிள்ளை உரைக்குறிப்பு. இவர் குழந்தைகளிடத்தும், வண்ணானிடத்துங்கூடக் கனிவோடு பழகியுள்ளார்.[59] தம்முடைய திருவாராதனத்திற்கு உரியவனாக வெண்ணெய்க்காடும் பிள்ளையைக் கொண்டிருந்தபோதிலும் இராமபிரானிடத்து ஈடுபாடு மிக்கவர்.[60]

திருவரங்கப் பெருமானிடத்தில் அவதார மூர்த்தியின் செயல் களைக் காண ஏங்கிய இறையன்பு கரைபுரண்ட நெஞ்சினர்.[61] தம்மைச் சார்ந்தவர்களைப் பிற தெய்வங்களை ஒரு பொருளாக மதியாது எல்லாம் பெருமாளே என்று உறுதியாகப் பற்றுமாறு செய்யும் ஆற்றல் படைத்தவர்.[62]

திவ்வியப் பிரபந்த ஈடுபாடு

இவர் ஆழ்வார்கள் பாசுரங்களைச் சிந்தித்தவாறே இருந்தார் என்பதற்குச் சான்றுகள் உரைகளில் காணப்படுகின்றன.

1) தெற்கேயுள்ள திவ்விய தேசங்களை வழிபடச் சென்ற போது எதிரே வந்த பெண்ணொருத்தியைப் பார்த்து அவள் எங்கிருந்து வருகிறாள் என்று கேட்க, அவள் தான் திருக்கோளூரிலிருந்து வருவதாகத் தெரிவித்தாள். அதனைக் கேட்டு 'அவ்வூரில் புக்க பெண்களும் வெளியே செல்ல ஆற்றல் உள்ளவர்களாக இருப்பார்களோ?' என்றார்.[63] இதனால் திருக்கோளூரில் அவருக்கிருந்த ஈடுபாடும் அவர் நினைவில்

---

57. 5.1.11-36.
58. 10.5. 0-36.
59. மு.தி. 44; 4.3.5-36.
60. 3.6. 8-36.
61. தி.வி. 99.
62. 4.10. 0-24; க.நு.சி.0பெரி.
63. 6.7. 1-36.

'திண்ணம் என் இளமான் புகும் ஊர் திருக்கோளூரே' என்னும் திருவாய்மொழி இருந்தமையும் வெளிப்படுகின்றன.

2) ஒருநாள் உலாவச் சென்றவர் பாதியிலேயே திரும்பி விட்டார். திருமடத்தில் இருந்த எம்பார் கதவைத் திறந்தவாறே 'திருமாலிருஞ்சோலை மலைத் திருவாய்மொழி திருவுள்ளத்தில் ஓடுகிறது போலும்?' என்று வினவ, இவரும் 'ஆம் அப்படியே' என்று கூறினார்.[64]

3) அவர் திருமலைக்குப் போவதாக முடிவு செய்தமை கேட்டுத் தம்அகத்திற்குப் போய்க் கதவைத் தாழிட்டுக்கிடந்து 'காண்கின்றனகளும்' என்னும் பாட்டை வாய்விட்டுச் சொல்லிக் கொண்டிருந்தார், பிள்ளை உறங்காவில்லிதாசர். இராமானுசர் அவர் நிலையினைக் கண்டுவர ஒருவனை விடுத்தார். அவன் திரும்பி வந்து 'காண்கின்றனகளும்' என்னும் பாட்டைச்சொல்லிச் சோகித்துக் கிடக்கிறார் என்றான். அவனை நோக்கி, 'வண்பூ மணிவல்லி யாரே பிரிபவர்தாம்?' என்று சொல்லிவர உன்னால் முடியாமற் போயிற்றோ?'' என்று கூறினார்.[65] தாம்அவரைப் பிரியாதிருக்க நினைத்திருந்ததனைத் திருவிருத்தத் தொடர் கொண்டு நயமாகச் சொல்லிய திறம் சிந்தனைக்குரியது.

4) திருநாவாய் நோக்கிச் செல்லும்போது, எதிர்வருபவரிடம் திருநாவாய் எவ்வளவு தொலைவு என்று கேட்க, அவர்கள் 'குறுக்கும்' என்று சொல்லக் கேட்டு அவர்களது பேச்சுமொழியில் 'குறுக்கும் வகையுண்டுகொலோ' என்று ஆழ்வார் பாசுரம் புனைந்துள்ள தன்மையினை எண்ணி வியந்தார்.[66]

5) தம் நெஞ்சுகந்த மாணாக்கர் கூரத்தாழ்வான் மறைந்த போது துயரந் தாங்காமல் பெரியாழ்வார் பாசுரத் தொடர்களைச் சொல்லிச் சொல்லிக் கதறினாராம். "ஆழ்வான் திருநாட்டுக் கெழுந்தருளினபோது, உடையவர் விச்லேஷம் (பிரிவு) பொறுக்க மாட்டாமல் "ஒருமகள் தன்னையுடையேன்" என்றும், "உலகம் நிறைந்த புகழால் திருமகள் போல வளர்த்தேன்" என்றும், "செங்கண்மால் தான்கொண்டு போனான்" என்றும் அருளிச்செய்தார் என்று ப்ரஸித்தமிறே" என்பது மணவாள மாமுனிகள் உரைக்குறிப்பு.[67]

இராமானுசர் திவ்வியப் பிரபந்தத்தில் மூழ்கிக் கிடந்த திறத்தை, "பகலெல்லாம் பாஷ்யத்திலே அந்யபரராயிருப்பர். இரவமுது செய்து (பால் அருந்தி) பள்ளிக் கட்டிலிலே ஏறியருளி

---

64. 10.8. 3-36.
65. தி.வி. 9.
66. 9.8 1-24, 36.
67. பெரி.தி. 3. 8. 4.

னால் 'சந்தை சொல்ல வாராயோ?' என்றழைப்பர். முந்துறச் சந்தை சொன்னால் புளகிதகாதராவர், இரண்டாஞ் சந்தைக்குச் சிதலராவரென்று; எங்கேனு மொருகால் புக்காராகில் நாலிரண்டு ஒலியல் (மேலாடை) கொண்டு பரிமாற வேண்டும்படியாயிற்று கண்ணநீர் வெள்ளமிடும்படி" என்று வரும் திருவிருத்த உரையால் உணரலாம்.[68] மேற்காட்டிய பகுதியினை வடுக நம்பியின் கூற்றாக அரும்பத உரை குறிப்பிட்டுள்ளது.

நூல்கள்

இராமானுசர் வடமொழியில் வேதாந்த சங்கிரகம், ஸ்ரீபாஷ்யம், வேதாந்த தீபிகை, வேதாந்த சாரம், நித்யம், பகவத் கீதாபாஷ்யம், கத்தியத்திரையம் ஆகிய நூல்களைப் படைத்துள்ளார். இவை கருத்துகளை இயைபுபடுத்தி ஒழுங்குறத் தரும் இராமானுசரின் அறிவு நுட்பத்திற்குச் சான்றுகளாக உள்ளன என்பர் அறிஞர் ந. சுப்பு ரெட்டியார்.[69] இந்நூல்களுள் ஸ்ரீபாஷ்யம், கத்யம், நித்யம், பகவத் கீதா பாஷ்யம் ஆகியவற்றைப் பற்றிய குறிப்புகள் உரைகளில் வருகின்றன.[70]

இராமானுசரின் உரைத்தொண்டு

வடமொழியில் பல நூல்களை எழுதிய அவர் தமிழ்நூல்களுள் எதற்கும் விளக்கவுரை எழுதவில்லை. இதனால் அவருக்குத் தமிழ்ப்புலமை குறைவாக இருக்குமோ என்று கருதுபவரும் உண்டு.[71] திருப்பாவையில் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டினால் பெற்ற (1) திருப்பாவை ஜீயர் என்னும் பட்டமும், (2) அவரது வாழ்க்கை முறையினைப் பற்றிக் காணப்படும் உரைக்குறிப்புகளும், (3) அவர் வாழ்ந்த காலத்திலேயே வாழ்ந்து அவர்மேல் இராமானுச நூற்றந்தாதி பாடிய திருவரங்கத் தமுதனார் தம் நூலில்,

---

68. தி.வி. 99.
69. N. Subbu Reddiar, 'Religion and Philosophy of Nalayiram with special reference to Nammalvar, pp. 725-727.
70. பெ.தி. 1.10.1; பாவை 8-6; 6.10.7-36.
71. மு. அருணாசலம், 'தமிழ் இலக்கிய வரலாறு - 13ஆம் நூற்றாண்டு', காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம்பலம், பக். 306.

"சொல்லார் தமிழொரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லை
இல்லா அறநெறி யாவும் தெரிந்தவன்"[72]

"உணர்ந்தமெய்ஞ் ஞானியர் யோகந் தொறும்திரு வாய்மொழியின்
மணந்தரும் இன்னிசை மன்னும் இடந்தொறும் மாமலராள்
புணர்ந்தபொன் மார்பன் பொருந்தும் பதிதொறும் புக்குநிற்கும்
குணந்திகழ் கொண்டல் இராமானுசன்"[73]

"கலிமிக்க செந்நெல் கழனிக் குறையல் கலைப்பெருமான்
ஒலிமிக்க பாடலை உண்டுதன் னுள்ளம் தடித்து, அதனால்
வலிமிக்க சீயம் இராமா னுசன்"[74]

என்று போற்றிச் செல்வதும், (4) இராமானுசர் உரை நயங்களாகவும் ஆட்சிகளாகவும் ஈட்டில் பல குறிப்புகள் இருப்பதும், அவர்தம் பழுத்த தமிழ்ப்புலமைக்குச் சான்றுகளாகும்.

நுட்பவுரை காணல்

1) நம்மாழ்வார், தென்காட்கரையில் கோயில் கொண்டுள்ள தெய்வவாரி என்னும் பெருமானுக்குத் தம் உயிர் பட்ட பாட்டினைப்போன்று யார் உயிர் தாம் பட்டது? என்கிறார். "ஆர் உயிர் பட்டது, எனது உயிர் பட்டது?" என்பது அவர்தம் வினா. இதனை, இங்கு எனது உயிர் பட்டது, அங்கு யார் உயிர் பட்டது? என்று இங்கு, அங்கு என்னும் சொற்களைக் கூட்டியமைத்து நம்மாழ்வார் வானுலகில் உள்ள நித்திய சூரிகளும் தாம் பட்ட பாட்டினைப் படவில்லை என்கிறார் என்று விளக்குகிறார், இராமானுசர்.[75]

2) "தெளிவிசும்பு திருநாடாத் தீவினையேன் மனத்துறையும்
துளிவார்கட் குழலார்க்கு என் தூதுரைத்தல் செப்புமினே"

என்கிறாள் தலைமகள். இதற்குப் பரமபதத்தில் பண்ணும் ஆசையைத் தன் நெஞ்சிலே பண்ணி உறைகின்றான் என்று தலைமகள் கூறுவதாக உரை கூறுவர்.[76]

---

72. திருவரங்கத்தமுதனார், இராமாநுச நூற்றந்தாதி பாட்டு 44.
73. மேற்படி நூல், பாட்டு 60.
74. மேற்படி நூல், பாட்டு 88.
75. 9.6.9-24, 36.
76. 9.7.5-24,36.

இவ்வாறு அவர் கண்டுரைத்த நயமும் நுட்பமும் உடைய உரைகள் வேறு பலவும் உண்டு.[77]

தமக்கு முன்னே வாழ்ந்த பெருமக்கள் கண்ட உரைகளினும் நுட்பமான உரைகள் வகுத்த பெருமையும் அவருக்கு உண்டு.

1) இறைவன் திருவடிகளைத் 'துயரறு சுடரடி' என்கிறார் நம்மாழ்வார். இதற்கு முன்னையோர் 'துயர் அறுக்கும்' திருவடிகள் என்று பொருள் கூற, இராமானுசர் துயர் அறும் திருவடிகள், அஃதாவது உயிர் துயரறத் துயர் நீங்கும் திருவடிகள் என்று விளக்கினார். மேலும், தமது உரைக்கு இராமாயணத்தி லிருந்து மேற்கோள் காட்டினார்.[78]

2) "அடியடை யாதாள் போலிவள் அணுகி
அடைந்தனள் முகில்வண்ணன் அடியே"

என்பதற்குத் தலைவி வாழ்வாரைப் போலேயிருந்து முடிந்து கொடு நின்றாள் என்று முன்னையோர் பொருள் கூறினர். அவ்வாறு நடந்தால் நூல் மேல் நடவாது என்று திருவடிகளைக் கிட்டாதாரைப்போலே யிருந்து பின்னர்க் காலப்போக்கில் கிட்டிக்கொண்டு நின்றாள் என்று தக்க காரணம் காட்டிப் பிறிதோர் உரை கூறினார். ஈட்டில் பெயரின்றி வரும் இவ்விளக்கம் இராமானுசர் தந்தது என்னும் உண்மை இருபத்து நாலாயிரப் படியால் தெரிகின்றது.[79]

3) "அருள்பெறுவார் அடியார்தம் அடியனேற்கு ஆழியான்
அருள்தருவான் அமைகின்றான் அதுநமது விதிவகையே"

என்பதில் 'விதிவகையே' என்பதற்குப் புண்ணியம் என்று பொருள் கூறி, பெருமான் அருள் செய்யுமிடத்து 'நான் சொன்ன படி செய்வதற்குச் சமைந்துள்ளான். அது நமது புண்ணியத் திற்குத் தகுதியாம் அன்றோ?' என்கிறார் என்று முன்னையோர் பொருள் செய்தனர். அப்பொருள் திருவாய்மொழியில் மேல் ஓடுகின்ற சுவைக்குப் பொருந்தாது என்று விடுத்து, விதிவகையே என்பதற்கு விதித்தபடியே என்று பொருள்கொண்டு, பெருமான் அருள் செய்யுமிடத்து நாம் விதித்தபடியே செய்பவனாய் இருந்தான் என்கிறார் என்று புதிய விளக்கம் தந்தார்.[80]

---

77. 2.1.7-36; 4.10.9-36; 9.9.8-24.
78. 1.1.1-36.
79. 7.2.10-24,36.
80. 10.6.1-24, 36.

ஆளவந்தார், திருமாலையாண்டான் ஆகியோர் உரைகளைச் சில இடங்களில் இராமானுசர் உடன்படாது வேறு உரை செய்துள்ளார். திருமாலையாண்டானிடம் திருவாய்மொழி விளக்கங் கேட்கும்போது, இராமானுசர் சில இடங்களில் ஆளவந்தார் கருத்துக்கு வேறாகச் சிலவற்றைச் சொன்னா ரென்றும், அதனால் மனங்கன்றிய திருமாலையாண்டான் அவருக்குத் திருவாய்மொழி சொல்வதனையே சிலநாள் நிறுத்தி விட்டார் என்றும், திருக்கோட்டியூர் நம்பி தலையிட்டு மீண்டும் நடைபெறச் செய்தார் என்றும் குருபரம்பரை நூல்கள் தெரிவிக் கின்றன.[81] இதனைப் பற்றிய உறுதிப்படுத்தும் குறிப்பு 'விட்டிலங்கு செஞ்சோதி'த் திருவாய்மொழி உரையில் காணப்படு கின்றது. அக்குறிப்பு வருமாறு :

திருமாலையாண்டானிடம் இராமானுசர் திருவாய்மொழி கேட்டருளுகிற நாளில், பாட்டுத்தோறும் சில சொற்களைக் கூறி, இப்படிப் பொருள் கூறக் கூடாதோ? என்பார். அதற்குத் திருமாலையாண்டான், "இது விசுவாமித்திரப் படைப்பு; ஆளவந்தார் இப்படி அருளிச்செய்யக் கேட்டறியேன்" என்று கூறுவார். இப்பாட்டுக்கு உரை கூறும்போது, திருமாலை யாண்டான் அவரை நோக்கி, இப்பாட்டுக்கு விசுவாமித்திரப் படைப்பாக ஏதும் பொருள் சொல்லவில்லையே என்று கிண்டலாக வினவினார். உடனே அவர், இப்பாட்டால் தன் உடலுறுப்புகளின் அழகினாலே என்னைத் தனக்காக்கினான் என்றார்" என்று அருளிச்செய்தார்.[82]

ஆளவந்தார் உரைகளுக்கு மாறாகப் புதிய விளக்கம் கூறுதல்

1) "தானும் யானும் எல்லாம் தன்னுள்ளே
கலந்தொழிந்தோம்
தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுதும் ஒத்தே"

என்னும் திருவாய்மொழிக்கு, "ஒரு சாதிப் பொருள்கள் தம்மில் ஒன்றோடொன்று கலந்தது போன்று கலந்தோம்" என்று ஆளவந்தார் பொருள் உரைத்தார். அஃதாவது தேனும் தேனும் கலந்தாற் போலவும், பாலும் பாலும் கலந்தாற் போலவும், நெய்யும் நெய்யும் கலந்தாற் போலவும், கன்னலும் கன்னலும் கலந்தாற் போலவும், அமுதும் அமுதும் கலந்தாற் போலவும் ஆழ்வாரும் பெருமானும் கலந்தனர் என்பதாகும். தேன், பால்

81. அண்ணங்கராசார்யர், 'பூர்வாசார்ய வைபவம்' சென்னை ரத்னம் பிராஞ்சு அச்சுக்கூடம், 1970, பக். 33.
82. 2.7.5-36.

முதலியவற்றைச் சுவையுடைப் பொருள்களுக்கெல்லாம் உப லட்சணமாக்கிப் பெருமானும் ஆழ்வாருமான கலவிக்குள்ளே எல்லாச் சுவைகளும் பிறக்கும்படி அவர்கள் கலந்தனர் என்பது இராமானுசரது புதிய விளக்கம்.[83]

2) "அம்தாமத்து அன்புசெய்துஎன் ஆவிசேர் அம்மானுக்கு
அம்தாமம் வாழ்முடி சங்கு ஆழி நூல் ஆரம் உள"

என்பதற்கு "அடியார்கள் குழாங்களை உடன்கூடுவது என்று கொலோ" என்று அவர் ஆசைப்பட்டபடியே நித்தியசூரிகளோடு வந்து கலந்தான் என்று கூறி ஆழி, நூல், ஆரம் என்று நித்திய சூரிகளைக் கூறுவதற்குக் காரணம் அவர்கள் அறிவுடையோராக இருந்தாலும், அவனுக்குகந்தவாறு தொண்டு செய்தலாகிய பேற்றினைப் பெறுவதற்காகத் தங்களை அப்பொருள்களாக அமைத்துக்கொள்கின்றனர் என்று விளக்கமும் தந்தார் ஆளவந்தார். இராமானுசர் இத்துணை இடர்ப்படாமல், ஆழ்வாரோடு கலப்பதற்கு முன்பு இறைவனைப் போன்றே ஆழி, நூல், ஆரம் முதலியனவும் ஒளியிழந்தனவாய் இருந்தும் இல்லாத பொருளுக்கு ஒப்பாக (சத்தையற்ற பொருளுக்குச் சமமாய்) இருந்தன. ஆழ்வாரோடு கலந்த பின்பு ஒளிப்பொருளாகி உளதாந்தன்மை (சத்தை) பெற்றன. அதனையே இங்கு ஆழ்வார் தெரிவிக்கிறார் என்று விளக்கினார்.[84]

3) தலைமகள் வண்டுகளிடம் திருவண்வண்டூர்ப் பெருமான்பால் 'என்னையும் உளள் என்மின்களே' என்கிறாள். இதற்கு அப்பெருமான் என்பால் உளதாந்தன்மை (சத்தை) இல்லை என்று எண்ணிக் கொண்டிருப்பார்; அவரிடத்தில் அவளும் இருக்கின்றாள் என்று கூறுங்கள் என்கிறாள் என்று ஆளவந்தார் பொருள் கூறினார். தலைமகளும் பெருமானும் ஒருவரை இன்றி மற்றொருவர் வாழாப் பேரன்பினர். அத்தன்மைக்கு இவ்வுரை பொருந்தாது என்று ஒதுக்கி, பெண் பிறந்தார்க்குச் செய்ய வேண்டுவன எல்லாம் செய்தோம் என்று தம்மை நினைத்துக் கொண்டிருக்கும் பெருமானிடம் காத்தற் குரிய தொகுதியிலே யானும் ஒருத்தி உண்டு என்று சொல்லுங்கள் என்கிறாள் என்று உணர வகுத்தார்.[85]

தலைமகனும் தலைமகளும் ஒருவர் இன்றி மற்றொருவர் வாழாத் தன்மையினராய் இருத்தலை இன்றியமையாமை என்று

---

83. 2.3.1-24,36.
84. 2.5.1-36.
85. 6.1.10-24, 36.

கூறுவது தமிழ்நூற் கொள்கை. அதனை இங்கு இராமானுசர் குறிப்பிட்டுள்ளது கருதத் தக்கது.

இவ்வாறு ஆளவந்தாருக்கு வேறுபட்டு இராமானுசர் சொன்ன விளக்கங்கள் இன்னும் சில உள.[86]

திருமாலையாண்டான் கருத்தினை ஏற்காமல் புதிய உரைகள் கண்ட இடங்களும் உண்டு.[87] திருமாலையாண்டான் ஆளவந்தார் கருத்துகளுக்கு மாறாக எதனையும் கூறாமல் அவர் சொன்னவற்றையெல்லாம் அப்படியே போற்றி வந்துள்ளார். ஆதலால் அவற்றையும் ஆளவந்தார் கருத்துகளாகவே கொள்வது ஏற்புடைத்து.

திவ்வியப் பிரபந்த விளக்கம் எழுதாமைக்குக் காரணம்

இராமானுசர் தந்துள்ள விளக்கங்கள் அவர் தமிழறிவினைப் பறையடிக்கின்றன. இத்துணைப் பேரறிவாளர் திவ்வியப் பிரபந்தத்திற்கு உரை எழுதாமைக்குக் காரணம் பிரம்ம சூத்திரத்திற்கு விளக்கம் எழுதுவதில் ஈடுபட்டமையும், தலைவராகிய தாம் எழுதினால் அவ்வுரை வரம்பாக அமைந்து வேறு சிந்தனைகள் பிறக்க வாய்ப்பின்றிப் போகும் என்று கருதியதுமேயாகும். அவர் காலத்தில் நாலாயிரத்திற்கு விளக்கம் கூறும் பணி வேகமாக நடைபெற்று வந்தது என்பதனை அவர் காலத்தவரான எம்பார், கூரத்தாழ்வான், திருவரங்கத்தமுதனார், அம்மங்கியம்மாள், திருவரங்கப் பெருமாளரையர், சிற்றாட்கொண்டான், வங்கிபுரத்து நம்பி, பிள்ளான், அகளங்க நாட்டாழ்வான், அவர்தம் மனைவி திரிபுராதேவி ஆகியோர் ஆட்சிகளாகவோ கூற்றுகளாகவோ வருவனவற்றால் தெளியலாம்.

இராமானுசர் பாசுரங்களைத் தனித்தனியாகப் பார்க்காமல் பதிகங்களின் ஒரு பகுதியாகக்கொண்டு பதிகத்தின் பொதுப் போக்கிற்கேற்ப உரைகாணும் முறையினையும் ஆழ்ந்து சிந்தித்து உரைகூறும் போக்கினையும் உணர்த்தியவர் எனலாம்.

4. எம்பார்

வாழ்க்கை

இராமானுசருக்குப் பின்னே சமயத் தலைவராக விளங்கிய இவர், அவர்தம் சிறிய தாயாரான பெரிய பிராட்டியாருக்கும்

---

86. 1.2.0-36; 2.3.3-36; 2.9.8-24,36; 2.10.0-36; 3.3.6-24,36; 5.1.9-24,36; 5.2.0-24,36; 7.9.1-36; 8.9.3-24,36; 9.4.3-36; 9.9.0-24,36; 10.4.1-36.

87. 1.4.3-36; 5.2.6-24,36; 8.7.3-24,36.

மழலை மங்கலத்தில் வாழ்ந்த கமலநயன பட்டருக்கும் மகனாய்ப் பிறந்தவர். இவருக்குக் கோவிந்த பட்டர் என்னும் பெயரும் வழங்கியது. எம்பெருமானார் யாதவப் பிரகாசரிடம் பயின்ற போது ஒருசாலை மாணாக்கராய் இருந்தவர். திருக்காளத்தியில் சிவத்தொண்டில் ஈடுபட்டிருந்த இவரைப் பெரிய திருமலை நம்பி திருத்தித் திருமால் நெறியினராக்கினார். இராமானுசர் பெரிய திருமலை நம்பியிடம் இராமாயணம் கேட்டுத் திரும்பும்போது இவரைப் பரிசிலாக வேண்டிப் பெற்று வந்தார். இவரது வைராக்கியத்தைக் கண்டு துறவுக்கோலம் தந்து எம்பார் என்னும் பெயரினைச் சூட்டினார்.

தோற்றப் பொலிவு

இவர் சிறிய உருவினர். பெரிய திருமொழியில் 'சிறுவண்டே' என்பதற்குக் "காரிய வாய்ப்புப் பெருத்து எம்பார் திருமேனி போலே வடிவு சிறுத்திரா நின்றனவாயிற்று" என்று பெரியவாச்சான் பிள்ளை உரை கூறி இவர் தோற்றப் பொலிவினைப் புலப்படுத்தியுள்ளார்.[88]

பண்பு நலன்கள்

இவர் இறைவனுடைய மேன்மையையும் எளிமையையும் கேட்டு அப்பெரியவன் தாழ்ச்சியை நினைத்துக் கண்ணுங் கண்ணீருமாய் இருக்கும் இயல்பினர்.[89] திருவரங்கச் சோலையினைப் பெருமாளும் பெரிய பிராட்டியாரும் தாமே கைதொட்டு ஆக்குகின்றனர் என்னும் கருத்துடையவர்.[90]

இராமானுசரிடம் கொண்ட பெருமதிப்பு

இவர் இராமானுசர்மாட்டுக் கொண்டிருந்த மதிப்பு எல்லையற்றது; வியப்புக்குரியது. இவரிடம் 'சாயை போலப் பாடவல்லார் தாமும் அணுக்கர்களே' என்னும் பெரியாழ்வார் திருமொழிக்குச் சிலர் பொருள் சொல்ல வேண்டினர். அதற்கு இவர், "இதனை யான் உடையவர் திருவடிகளிலே கேட்டறியேன். நீங்கள் கேட்பதற்குத் 'தெரியாது' என்று கூறுவது தகாது. இப்பொழுதே அவரைக் கேட்டுச் சொல்லலாம் என்றாலோ அவர் திருக்கோட்டியர் நம்பியைக் காணச்

---

88. பெ.தி. 3.6.2.
89. நா.தி. 11.6.
90. 10.2.2-36; 5.9.1-36.

சென்றுள்ளார். எனினும் உங்களுக்கு இப்பொழுதே சொல்லு கிறேன்'' என்றார். இராமானுசரின் திருவடி நிலைகளை—மிதியடிகளை—எடுத்துத் தம் தலையிலே வைத்திக்கொண்டு அத்திருமொழித் தொடரைப் பாடவல்லார்—சாயைபோல—தாமும் அணுக்கர்களே' என்று கூட்டிப் பொருள் உரைத்தார்.[91] இக்குறிப்பு இவர்தம் பணிவுக்குச் சான்றாகத் திகழ்கின்றது.

இவர் இராமானுசரிடத்து மட்டுமன்றி மற்றப் பெரியோர் களிடத்தும் மதிப்பும் பணிவும் காட்டி வந்தவர். ஒருவரை அவர் ஆண்டான் திருவடிகளைச் சார்பாகப் பற்றியவர் என்பதனை அறியாமல் ஏற்று இறைத் தொடர்பு பண்ணியருளினார். பின்னரே அவர் ஆண்டான் திருவடிகளைச் சார்ந்தவர் என்பது தெரிய வந்தது. அதனையறிந்து பெரிதும் அஞ்சினார். அதனை யறிந்த ஆண்டான் "ஒரு கிணற்றிலே விழுந்தவன் ஒருவனுக்கு இரண்டுபேர் கைகொடுத்தால் எடுப்பவர்களுக்கும் எளிதாய், ஏறுபவனுக்கும் எளிதாய் இருக்குமன்றோ? அப்படியே ஆகின்றது இதுவும்'' என்று கூறித் தெருட்டினார் என்பர்.[92]

ஆடற்கலை அறிந்தவர்

இவர் பாட்டுகளின் கருத்திற்கும் உணர்ச்சிக்கும் ஏற்ப மெய்ப்பாடு பிடிப்பதில் வல்லவர்.

"என்னை வருக எனக் குறித்திட்டு
இனமலர் முல்லையின் பந்தர்நீழல்,
மன்னியவளைப் புணரப் புக்கு
மற்றென்னைக் கண்டுழறா நெகிழ்ந்தாய்,
பொன்னிற ஆடையைக் கையில்தாங்கிப்
பொய்யச்சங் காட்டிநீ போதியேலும்
இன்னமென் கையகத்து ஈங்குஒருநாள்
வருதியேல் என்சினம் தீர்வன்நானே''

என்னும் பெருமாள் திருமொழி தலைமகளின் ஊடலைத் தெரிவிக் கும் பாசுரம். இதன் ஈற்றடிக்கு உய்ந்த பிள்ளை தலைமகள் பெருமானைக் காலாலே உதைப்பதாகவும் கையாலே தள்ளுவ தாகவும் மெய்ப்பாடு பிடித்தார் (அபிநயித்துக் காட்டினார்). அதனைப் பார்த்து இவர், "கெடுவாய்! அப்படித் தலைமகள் செய்தாளாகில் அவனுக்குப் பொல்லாதவையாகுமோ? அவன்

---

91. பெரி. தி. 5.4.11. 92. 2.9.2-36.

நெடுநாள் வேண்டிக் கிடந்தவையல்லவா அவை? அவனுக்கு அவையன்றோ தேட்டமானவை!" என்று சொல்லி அதற்கு எப்படி ஆடவேண்டுமென்பதனைத் தம் கையையிட்டு முகத்தை மறைத்துத் திரிய வைத்துக் காட்டினாராம்.[93]

"மெச்சூது சங்கம் இடத்தான்நல் வேயூதி
பொய்ச்சூதில் தோற்ற பொறையுடை மன்னர்க்காய்,
பத்தூர் பெறாதன்று பாரதம் கைசெய்த,
அத்தூதன் அப்பூச்சி காட்டுகின்றான்
அம்மனே! அப்பூச்சி காட்டுகின்றான்"

என்னும் பெரியாழ்வார் திருமொழிப் பாசுரத்தை உய்ந்த பிள்ளை (உஞ்சப் பிள்ளை) மெய்ப்பாடு தோன்ற ஆடிக் காட்டினார். 'அத்தூதன்' என்று பெருமாளைக் காட்டியும், 'அப்பூச்சி' என்று கண்ணை இறுத்துக்கொண்டு வருவதுமாய் ஆடினார். அங்கு இராமானுசருக்குப் பின்னே அமர்ந்திருந்த இவர் அப்பூச்சி என்பதற்குத் திருக்கைகளைத் திருத்தோளோடு சேர்த்துத் திருவாழி திருச்சங்கு என்ற பாவனையில் ஆடவேண்டும் என்று குறிப்புக் காட்டினார். உய்ந்த பிள்ளை இவரது குறிப்பினை ஏற்றுத் தம் ஆட்டத்தை மாற்றிக்கொண்டார். இம்மாற்றத்தினைக் கண்ட இராமானுசர் அதன் காரணத்தை அறியச் சுற்றிலும் பார்த்து, அங்கு இவர் இருத்தலைக் கண்டு, "ஸ்ரீகோவிந்தப் பெருமாள்! இருந்தீரோ?" என்று கூறினாராம்.[94]

திவ்வியப் பிரபந்த விளக்கச் சொற்பொழிவாளர்

இவர் திவ்வியப் பிரபந்தத்திற்குப் பலகால் விளக்கம் அருளிச் செய்துள்ளார். 'எம்மாவீடு' திருவாய்மொழியைச் சொல்லத் தொடங்குவதற்குமுன் அங்கிருப்பவர்களை யார் யார் என்று தெரிந்துகொண்டு கதவுகளை மூடி வைத்து மறைவாகச் சொல்வாராம்.[95] "வேதங்களைக் கற்றும் பரம்பொருள் எது என்று அறியாமல் பலர் தடுமாறுகின்றனர். ஆனால் எம்பெருமானார் தரிசனத்தில் சிறிதும் கல்வியறிவில்லாத பெண்களும் மற்றைத் தெய்வங்களை அடுப்பிடு கல்லைப் போன்று நினைத்திருக்கிறது இந்தத் திருவாய்மொழி உண்டாகையாலன்றோ?" என்று 'ஒண்ணுந் தேவும்' திருவாய்மொழியைக்

93. 6-2.2-36; இக்குறிப்புப் பெரு.தி.6.8 உரையிலும் காணப்படுகிறது.
94. பெரி.தி. 2.1.1.
95. 2.9.0-36.

கொண்டாடுவாராம்.[96] 'கேசவன் தமர்' திருவாய்மொழி சொல்லத் தொடங்கினால், 'ஆழ்வார் ஸ்ரீவைஷ்ணவனானேன் என்கிறார்' என்பாராம்.[97] துறவியான இவர் 'மின்னிடை மடவார்' திருவாய்மொழியைக் காதலில் அதிகச் தேர்ச்சியுடையாரினும் சிறப்பாக விளக்கியுரைப்பாராம்.[98] 'வீற்றிருந்து ஏழுலகு' என்னும் திருவாய்மொழியை அடுத்துத் தீர்ப்பாரை யாம் இனி' என்னும் திருவாய்மொழி அமைந்திருத்தற்குத் தம்மால் இயைபு கூறமுடியாதென்றும், இயைபின்மையே அவற்றிடையே இயைபு என்றும் கூறுவாராம்.[99] 'போகு நம்பீ' என்று தலைமகள் ஊடிப் பேசும் பேச்சுக் குறித்து, இறைவன் முன்னே வந்து நின்றாலும் 'வா' என்பாரையும் காணமுடியாத மண்ணுலகில் அவன் சிறிது தாழ்த்தான் என்று 'போ' என்பாரைப் பெறுவதே! என்று வியப்படைவாராம்.[100] நம்மாழ்வார் இறையனுபவம் ஒருபடிப்படுவதற்காக இறைவனைப் பாடி வந்தவர் உலகிலுள்ள பொருள்களின்மேல் கண்வைத்துக் குவளைப் பூக்களைக் 'கடமா யினகள்' என்று பாடத் தொடங்க, அவையும் அவனை நினைவூட்டி நலிவு செய்தன. இவ்விடத்தில் நம்மை உலக வாழ்க்கையினின்றும் வேத வாழ்க்கையில் மூட்டுவது எவ்வளவு அருமையானதோ அவ்வளவு அருமையானது ஆழ்வார்களை வேத வாழ்க்கையினின்றும் உலக வாழ்க்கையிலே மூட்டுவது என்றும், நம்மை மண்ணுலக வாழ்வின் விருப்பத்தினைத் தவிர்த்து இறைவன்பால் விருப்புக்கொள்ளச் செய்தல் எவ்வளவு அருமையானதோ அவ்வளவு அருமையானது ஆழ்வார்களை இறைவிருப்பினைத் தவிர்த்து மண்ணுலக வாழ்வில் விருப்புடையவராக்குவது என்றும் கூறுவராம்.[101]

இவர் நகைச்சுவை தோன்றத் தம் விளக்கவுரைகளை நிகழ்த்தியுள்ளார்.

"இறையோ இரக்கினும் ஈங்கோர் பெண்பால் எனவும்
இரங்காது
அறையோ எனநின்று அதிரும் கருங்கடல் ஈங்குஇவள்தன்
நிறையோ இனியுன் திருவருளால் அன்றிக் காப்பரிதால்
முறையோ, அரவணைமேல் பள்ளிகொண்ட
முகில்வண்ணனே"

என்பது திருவிருத்தம்.

---

96. 4.10.0-36.
97. 2.7.0-36.
98. 6.2.2-36.
99. 4.6.0-36.
100. 6.2.2-36.
101. தி.வி. 38.

இப்பாட்டினைத் தம் அருகிலிருந்து இயல் படிப்போர் சொல்ல, இவர் அவரைப் பார்த்துத் தலைமகன் இவ்வளவு துன்பப்படுங் காலத்திலும் வந்து முகங் காட்டாமல் இரந்து வேண்டும்படி இருப்பவர் பெரிய மனிதராகத்தான் இருக்க வேண்டும். அவரை 'முகில்வண்ணன்' என்று மரியாதையின்றி ஒருமையில் சொன்னால் பிரம்பால் அடித்தாலும் அடிப்பார்; ஆதலால் 'முகில்வண்ணர்' என்று 'அர்' விகுதி சேர்த்துப் பன்மையில் சொல்வீர் என்றாராம்.[102]

உரைத்தொண்டு

1) 'நின்றனர் இருந்தனர்' என்னும் பாசுரம் தொழில் செய்வதற்கும், தொழில் செய்யாதிருத்தற்கும் இறைவன் திருவருள் வேண்டுமென்று குறிக்கின்றது. "தொழிற்படுவதற்கு அவன் அருள்வேண்டும் என்பது பொருந்தும்; ஆனால் தொழிற்படாதிருத்தற்கு அவன் அருள்வேண்டும் என்பது எங்ஙனம் பொருந்தும்?" என்னும் ஐயம் அடியார் கூட்டத்துள் எழுந்தது. இதனைத் துறக்கத்திலிருந்து வீழும் திரிசங்கு வீழாதிருத்தற்கு—வீழ்தலாகிய தொழில் நிகழாமைக்கு—ஒரு வல்லவனான விசுவாமித்திரன் சொல்ல வேண்டியிருந்ததல்லவா? அப்படியே தொழிற்படாமைக்கும் இறையருள் வேண்டும் என்று விளக்கினார்.[103]

2) "ஒடுங்க அவன்கண் ஒடுங்கலும் எல்லாம்
விடும் பின்னும் ஆக்கை விடும்பொழுது எண்ணே"

என்னும் இப் பாசுரத்திற்கு, "இறைவனிடத்துச் சேரவே, அறிவின்மை தொடக்கமான எல்லாம் தாமே நீங்கும். அதற்குப் பின், உயிரானது உடலைவிட்டு நீங்கும் காலத்தை எண்ணி இரு" என்பது பொருள். இப்பொருளில், எண்ணே என்பதில் உள்ள ஏகாரம் அசையாகவும், எண் என்பது ஏவல் ஒருமை வினை முற்றாகவும் கொள்ளப்படும். இப்பாசுரத்தில் உள்ள 'பின்னும் ஆக்கை, விடும்பொழுது எண்ணே' என்பதற்கு இப்படி, உடல் தோற்றத்திற்குரிய காரணம் கழிந்தபோதே அதன் காரியமான உடலும்தானே நீங்கும். இனி எண்ணுவதற்குப் பொருளுண்டோ?' என்று ஒருகால் விளக்கந் தந்தார் என்கிறது ஈடு.[104] இப்பொருளில் எண்ணே என்பதில் உள்ள ஏகாரம் வினாப் பொருளில் வருவதாகக்கொள்ளப்படும்.

---

102. தி.வி. 62.
103. 1.1.6-24,36.
104. 1.2.9-24,36.

3) "தலைப்பெய் காலம் நமன்தமர் பாசம் விட்டால்
அலைப்பூண் உண்ணும் அவ்அல்லல் எல்லாம் அகலக்
கலைப்பல் ஞானத்துஎன் கண்ணனைக் கண்டு கொண்டு
நிலைப்பெற்று என்நெஞ்சம் பெற்றது நீடு உயிரே"

இப்பாசுரத்தில் 'அலைப்பூண் உண்ணும் அவ்அல்லல்' என்பதற்குக் கூற்றுவன் தமர்களால் வரும் துன்பங்களெல்லாம் கடக்க நிற்க, அவற்றோடொத்ததான துன்பம் என்று உரை கூறியுள்ளார்.[105] வைணவரிடத்து நமன்தமர் சாதுவராய் நடப்பர் என்பது திருமழிசைப்பிரான் கூற்று. ஆகையால் வைணவர்களுக்குக் கூற்றுவனால் துன்பம் வருவதாகச் சொல்வது மாறுபாடாகும் என்று கொண்டு இப்படி உரை கண்டுள்ளார்.

4) கோதை நாச்சியார், "மேல் தோன்றிப் பூக்களே! நீங்கள் பரமபதத்தில் வீற்றிருக்கும் வேதமுதல்வன் சக்கரப்படை போலச் சுடாமல், என்னை 'மாற்றோலைப் பட்டவர்' கூட்டத்தில் கொண்டு சேர்க்க வல்லீர்களோ?" என்று வினவுகின்றாள். இதில் வரும் 'மாற்றோலைப்பட்டவர்' என்பதற்குத் திருமலை நம்பி 'கேவலர் திரள்' என்று பொருள் கண்டார். அப்பொருளைக் கேவலர்கள் இறைவனைக் கூட்டமாய் அனுபவிப்பரல்லர்; தனித் தனியே அனுபவிப்பர் என்று காரணங்கூறி ஒதுக்கி, 'அடியார் குழாங்கள்' என்று உரை வகுத்துள்ளார்.[106]

5) பிள்ளை திருநறையூரரையர் முதலானோர் இவரையடுத்துத் தம் ஐயமகற்றிக் கொண்டுள்ளது இவர்தம் நுண்ணறிவுக்குச் சான்று.

"எனக்கே ஆட்செய்எக் காலத்தும் என்றுஎன்
மனக்கே வந்து இடைவீடு இன்றி மன்னித்
தனக்கே யாக எனைக்கொள்ளும் ஈதே
எனக்கே கண்ணனை யான்கொள் சிறப்பே"

இப்பாட்டில் வரும் செய்தி குறித்துப் பிள்ளை திருநறையூரரையருக்கு ஓர் ஐயம் எழுந்தது. இறைவன் தன் திருவுள்ளப்படி செய்கிறான் என்று அமையாமல், 'தனக்கேயாக எனைக் கொள்ளும் ஈதே' என்று வேண்டுகிறாரே, அஃது ஏன்? என்பதே ஐயம். அவர் அதனை இவரிடம் கேட்டபோது, பிராட்டி பெருமாள் திருமார்பிலேயே இருக்கிறாள்; அவள் அம்மார்பினை விட்டுப் பிரிந்தறியாதவள்; பிரியும் வாய்ப்பும் இல்லாதவள். அங்ஙனமிருந்தும் 'அகலகில்லேன், அகலகில்லேன்' என்கிறாள். அவளைப்

105. 3.2.10-36. 106. நா.தி. 10.2.

பெருமானது தன்மை அப்படிச் சொல்ல வைக்கின்றது. அது போலவே பேற்றிலுள்ள சுவை ஆழ்வாரைப் பெருமானிடம் இங்ஙனம் வேண்டச் செய்கின்றது என்று தெளிவு செய்தார்.[107] இவ்வாறு இவர் உரைத்துள்ள நுட்பமும் நயமும் பொருந்திய உரைகள் பலவாகும்.[108]

இவர் கருத்தாக ஓரிடத்தில் குறிக்கப்பெறுவது பிறிதோரிடத்தில் பிறரொருவர் கருத்தாகக் குறிக்கப்பட்டுள்ளது. "என தவள வண்ணர் தகவுகளே"[109] "என் ஆகியே, தப்புதல் இன்றித் தனைக்கவி தான்சொல்லி"[110] "புலம்பரந்து பொன் விளைக்கும் பொய்கைவேலிப் பூங்கோவலூர்"[111] ஆகியவற்றிற்கு இவர் கூறியுள்ள விளக்கங்கள் முறையே பிள்ளான்,[112] இராமானுசர்,[113] பட்டர்[114] ஆகியோருடையனவாகத் தெரிகின்றன. இதனால் இவர் கருத்துகளைப் பிறரும் பிறர் கருத்துகளை இவரும் எடுத்துக் கூறியுள்ளனர் என்பது புலனாகின்றது.

வைணவ உரைகளின் செழுமைக்குத் தம் நுட்ப விளக்கங்களால் வழிகாட்டியாக அமைந்தவர் எம்பார் எனலாம்.

5. கூரத்தாழ்வான்

வாழ்க்கைக் குறிப்பு

திருமால் நெறியென்னும் தரிசனத்துக்காகத் தரிசனத்தை (கண்களை) இழந்தவர் என்னும் பெருமைக்குரிய கூரத்தாழ்வான் காஞ்சியை அடுத்த கூரத்தில் மறந்தும் பிற சமய நூல்களைக் கேளாத கூரத்தாழ்வார் என்பவருக்கு மகனாய்த் தோன்றினார். இவர்தம் இயற்பெயர் திருமறுமார்பன் என்பது.

இவர் தம் செல்வமனைத்தையும் துறந்து, மனைவி ஆண்டாளோடு இராமானுசரின் திருவடிகளைச் சார்ந்தவர். இவருடைய மனைவியும் பேரறிவோடு விளங்கினார். வைணவ உலகத்தில் நீங்காத இடம் பெற்ற பட்டரும், சீராமப்பிள்ளையும் இவர்தம்

---

107. 2.9.4-36
108. 1.1.1-36; 2.3.2-36; 2.4.5-36; 3.2.1-36; 3.2,8-36; 7.9.4-36; 9.6.2-36; 9.9.9-36; பெரி.தி. 4.4.9; நா.தி. 4.11; தி.வி.36; பாவை 14-6; தி.நெ.தா.6; வடமொழிப் பாக்களுக்கு உரை-பெ.தி.6.9.0; நா.தி.6.7; 5.1.1-36.
109. 2.4.5-36.
110. 7.9.4-36.
111. தி.நெ.தா.6.
112. 2.4.5-24.
113. 7.9.1-36.
114. 6.8.3-36; தி.வி.30.

வழித்தோன்றல்களாவர். இவருக்கு இவ்விருவரேயன்றிப் பெண் மக்களும் இருந்துள்ளனர். தம் பெண்களுள் வீராணத்தில் மணம்செய்து கொடுத்திருந்தவளை இவர் மடியில் வைத்துக் கொண்டு சந்தை சொல்லிக் கொடுத்தபோது அப்பெண்ணின் கணவன் அவளை அழைத்துப்போக வருதல் கண்டு, மேல் சந்தை யிடாது மயங்கி விழுந்தார் என்னும் குறிப்புத் திருவிருத்தத்தில் உள்ளது.[115] இவர் இராமானுசருக்கு உசாத் துணையாக இருந்தவர்; அவர் பிரம்ம சூத்திரத்திற்கு உரைவரைவதில் உதவியவர். இராமானுசரைக் காத்தற்காக அவரது உடையினை அணிந்து சோழன் அவைக்குச் சென்று அங்குச் 'சிவத்துக்குமேல் பதக்கு உண்டு' என்று எழுதி, மன்னன் கொடுமையால் தம் கண்களை இழந்தவர். இராமானுசருக்கு முன்னே மறைந்தவர்.

பண்புநலன்கள்

கல்விக்கடல்

நான்மறைகளைக் கற்றுத் துறைபோகியவர். "நன்மையால் மிக்க நான்மறையாளர்க்கு" எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர்.[116] "ச்ருதி (வேதம்), ஸ்ம்ருதி (அறநூல்கள்), இதிகாசங்கள், புராணங் கள் ஆகியவற்றில் நிலைநின்றவர்களாய் வேதத்தின் உட்பொருள் கைப்பட்டவர்கள்; அவர்களாகிறார் கூரத்தாழ்வான் போல்வ ரன்றோ" என்னும் திருமாலை உரையால்[117] இதனை அறியலாம்.

ஈரநெஞ்சம்

ஆழ்வார் பாசுரங்களில் தோய்ந்து உருகும் நெஞ்சினர் இவர். இவர்பால் திருவாய்மொழிப்பொருள் கேட்டவருள் ஒருவர் கிடாம்பியாச்சான். அவர் ஒருநாள் காலங்கழித்து வருதலைக் கண்டு அதன் காரணத்தை வினவினார், இராமானுசர். அதற்குக் கிடாம்பியாச்சான், "ஆழ்வானிடத்தில் திருவாய்மொழி கேட்டு வந்தேன்" என்றார். "இன்று என்ன திருவாய்மொழி நடந்தது?" என்றார் இராமானுசர். ஆச்சான், 'பிறந்தவாறு' திருவாய் மொழி என்று தெரிவித்தார். அதற்கு "என்ன விளக்கம் சொன்னான்?" என்று மேலும் வினவினார் இராமானுசர். ஆச்சான், பொருள் சொல்லத் தொடங்கிப் பாட்டைப் படித்தார்; கண்ணுங் கண்ணீருமாய் "இவ் ஆழ்வாரும் ஒருவரே! இவர்க்கு ஓடுகிற பாவ வ்ருத்தியை (அன்பினை) நம்மால் சொல்ல

115. தி.வி.99.
116. க.நு.சி.4, நஞ்சீயர், நம்பிள்ளை, பெரி.
117. தி.மா.7.

முடியுமோ?'' என்றான். பின்பு, ''இன்றைக்கு இவ்வளவோடு நிறுத்திக் கொள்ளலாகாதோ?'' என்று விடுத்தான் என்றார். அதனைக் கேட்ட இராமானுசர் 'என்ன பரமசேதனனோ?' என்று வியந்தார். இது திருவிருத்த உரையில் காணப்படும் குறிப்பு.[118]

ஒருமுறை பாம்பின் வாயில் அகப்பட்ட தவளையின் துயரக் குரல் கேட்டு "இது ஆரறிந்து விடுவிக்கக் கூப்பிடுகிறது" என்று கூறி மயங்கினாராம்.[119]

இவர்தம் பெருங்கருணை வெளிப்படும் நிகழ்ச்சியொன்று அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் உரையில் காணக் கிடக்கின்றது. கூரத்தாழ்வான் கண்களை இழத்தற்குக் காரண மாக இருந்தவன் அமைச்சன் நாலூரான் என்னும் கொடியவன் ஆவான். ''நம் முதலிகள் குழுவில் நாலூரான் என்றாற்போலே ரிஷிகள் குழுவில் க்ஷத்திரபந்து என்றால் செவி புதைக்கும் படியாயிற்று இருப்பது" என்று திருமாலை உரை அவன் கொடுமை யினைச் சுட்டுகின்றது.[120] இப்பெருங் கொடியவனிடத்திலுங் கூடப் பகைமை பாராட்டாமல் ''நாலூரானும் நான்புக்க லோகம் (நான் அடையும் வீட்டுலகம்) புகவேண்டும்" என்று வேண்டிக் கொண்டுள்ளார் என்பதே அந்நிகழ்ச்சி.[121]

பிறரை மதிக்கும் சால்பு

இவர் ஆழ்வார் பாசுரங்களுக்குப் பலமுறை விளக்கங்கள் கூறியுள்ளார். 'ஆழ்வான் ஒருருவிலே பணித்தானாம்'[122] 'என்னுமாம் ஆழ்வான் ஒருருவிலே'[123] என்று வருவன இதனை நிறுவும். இதனால் இவருக்கு ஏடு படிப்போர் சிலர் இருந்தனர். அவர்களுள் ஒருவருக்கு ஒரு நூலினைப் படித்தறிய வேண்டி யிருந்தது. அவர்கள் இவரோடு திருவரங்கத்தில் திருமுடிக்குறை என்னுமிடத்தில் அதனைப் படித்து வந்தனர். அப்பொழுது திருவரங்கப் பெருமாளரையர் அங்கு வந்தார். அவர் வருவதனைக் கண்ட இவர் அந் நூலினை வாங்கித் தம் கையில் வைத்துப் படித்தாராம்.[124]

சீர்சால் வாழ்வு

இராசேந்திர சோழன் என்னும் ஊரில் இருந்த பிராமணன் ஒருவன் மகன் புத்த சமயத்தினரோடு தொடர்புகொண்டு பூண்

---

118. தி.வி.99.
119. தி.மா.41; 4.9.0-36.
120. தி.மா. 4.
121. க.நு.சி. 3, அழகு.
122. 2.10.4-36.
123. 1.5.11-24.
124. பெ.தி. 7.5.2.

நூலையும் (முப்புரி நூலையும்) குடுமியையும் அறுத்துப் போட்டான். சில நாள்களுக்குப் பின் ஒருநாள் அவன் குடுமியும் பூணூலும் விளங்க வீடு திரும்பினான். அவனைக் கண்ட அவன் தந்தை 'கூரத்தாழ்வானைச் சந்தித்தாயோ?' என்று வினவினான். அங்கிருந்தோர் அவனுடைய பிள்ளை கூரத்தாழ்வானைச் சந்தித்ததை அவன் யாங்ஙனம் தெரிந்து கொண்டான் என்று கேட்டனர். அதற்கு அப்பிராமணன் ''ஆழ்வான் திருமுன்பு தாமத குணத்தினரும் சத்துவ குணத்தவராவர் காண்'' என்றானாம். பெரிய திருமொழிஉரையில் இடம்பெற்றுள்ள இந்நிகழ்ச்சி[125] ஆழ்வான் சிறப்பினையும் சமய வொழுக்கத்தினையும் தெற்றென விளக்குகின்றது.

பணிவின் எல்லை

இத்தகு புலமையும் சிறப்பும் பெற்றிருந்த இவர் அவற்றிற்குப் பெருமை சேர்க்கும் வகையில் பணிவின் எல்லையில் நின்றார். சோழ மன்னர்களுக்கும் ஆசாரியப் பெருமக்களுக்கு மிடையே நல்லுறவு குலைந்திருந்த காலம் அது. அப்பொழுது அவர்களால் திருவரங்கத்திற்கு நலிவு வந்தால் என்செய்வது என்று இராமானுசர் சிந்தித்து, ''இவ்விடத்தை இதுகாறும் விடாமல் கட்டிக்காத்து விட்டோம். இதற்கு அழிவுநேரும்படி அரக்கர்கள் முற்பட்டு நிற்கிறார்கள்; இனி என்ன செய்வது?'' என்று பெரிய நம்பியைப் பார்த்து வினவினார். அப்பொழுது அவர் பெருமாளு டைய திருவெல்லையினை ஒருமுறை வலம் வருதற்குத் தமக்குத் துணையாக அவர்தம் சீடர்களிலே ஒருவரை உடன்வர விடுக்குமாறு வேண்டினார். அவரிடம் அதற்கு ஏற்றவரைச் சொல்லுமாறு இராமானுசர் பணித்தார். பெரியநம்பி, தம் பின்னே வந்தால் 'ஒருவன் பின்னே போகிறேனே' என்று நினைக்காமல் நிழல்போலப் பின் தொடர்பவனாக இருப்பவனே தமக்கு வேண்டும் என்றார். இராமானுசர் அத்தகையவரைச் சொல்லுமாறு மீண்டும் பணிக்கப் பெரியநம்பி 'ஆழ்வானை அனுப்பலாகாதோ?' என்றாராம்.[126]

இறை ஆசாரிய சமயப் பற்றுகள்

ஆழ்வானுடைய இறைப்பற்று, ஆசாரியப்பற்று, வைணவ சமயப்பற்று ஆகியவை அழுத்தமானவை. தம் பிள்ளைகள் திருமணத்தைக்கூடத் திருவரங்கனிடம் விண்ணப்பம் செய்து அவனருளாலே நடைபெறச் செய்தார்.[127] இராமானுசரோடு

---

125. பெ.தி. 8.1.0.
126. 7.10 5-36.
127. 5.5.7.24,36; 7.2.0-36.

தொடர்புடையவர்களைக் கோயிலின் உள்ளே புகவிடாத காலத்தில் 'இவருக்கு ஒருவருடனும் பகைமையில்லை' என்று கூறி, 'உள்ளே புகலாம்' என்று தமக்கு அனுமதி வழங்கப்பட்டபோது இராமானுசரோடு உறவை அறுத்துக்கொண்டு உள்ளுப் புகுவதினும் போகாமல் இருத்தலே நன்றென்று திரும்பினார்.[128] ஆயிரத்தளியில் தம் மடியில் தலைவைத்துப் பெரியதம்பி உயிர் விட்ட சமயத்தில் ஒருவரும் இல்லாதாரைக் காணக் (ப்ரதிபத்தி பண்ணக்) கடவோம்' என்று வந்தோர் சிலர் ஆழ்வான் இருக்கக் கண்டு, 'ஒருவன் இருக்கிறான்' என்று சொன்னபோது, அவர்களை நோக்கிச் சற்றுக் கோபத்தோடு "வாருங்கள், ஐயன்மீர்! நீங்கள் வைணவனுமாய்த் துணையில்லான் ஒருவனைத் தேடிக் கண்டறியப் (ப்ரதிபத்தி பண்ணப்) போகிறீர்களா? இறைவனும் அவன் உடைமைகளும் வைணவனுக்கு அமைந்திருக்க வைணவனுமாய் அறவையுமாய் இருப்பான் ஒருவனை எங்கே தேடிப் பிடிப்பீர்கள்?" என்றாராம்.[129] மேலும், "ஒரு வைணவர் திருவடி சார்ந்தார்" என்று சொல்லக் கேட்டு, இறைத் தொண்டே வாழ்க்கையாய் இருந்தவரை அப்படிச் சொல்லல் ஆகாது; 'திருநாட்டுக்குப் போனார்' என்று சொல்லவேண்டும் என்று திருத்தினார், என்பது பெரிய திருமொழி உரை.[130] மேற் கூறிய நிகழ்ச்சிகள் இவர்தம் இறைப்பற்று, ஆசாரியப் பற்று, சமயப் பற்று ஆகியனவற்றுக்குச் சான்றுகளாகும். இத்தகைய நற்பண்புகளின் உறைவிடமான ஆழ்வானுக்குப் பரமபதத்தைக் கொடுக்கும் ஆற்றலிருந்ததாக அருளாளப் பெருமாள் எம்பெருமானார் நம்பியதில் வியப்பில்லை.[131]

நூல்கள்

இவர் வரதராஜஸ்தவம், சுந்தரபாஹுஸ்தவம், ஸ்ரீவைகுண்ட ஸ்தவம், அதிமாநுஷ ஸ்தவம், யமக ரத்நாகரம், கத்ய த்ரய வியாக்யானம் ஆகிய நூல்களை வடமொழியில் யாத்துள்ளார். தமிழில் நூல் யாதும் எழுதவில்லை. இவற்றுள் வரதராஜஸ்தவத்தைப் பற்றிய குறிப்பு ஈட்டில் காணப்படு கின்றது. "ஆழ்வான் பணித்த வரதராஜ ஸ்தவத்திலே ஒரு சுலோகத்தைக் கேட்டு எம்பெருமானார் இப்பாசுரம் கேட்டால் பெருமாள் இரங்காமையில்லை. ஆழ்வான்! உன் முகத்தைக் காட்டிக் காணாய் என்று பார்த்தருளினார்" என்பதே அது.[132]

128. க.நு.சி. 3. நம்பிள்ளை, பெரி; பாவை 15-3.
129. 3.4.7-36.
130. பெ.தி. 4.4.7.
131. 6.8.1-36.
132. 4.7.5-36.

உரைகாரர்கள் ஆழ்வான் நூல்களிலிருந்து மேற்கோள் காட்டியிருத்தலால் அவற்றின் சிறப்பு விளங்கும்.[133]

இத்தகு பெருமைக்குரிய இவர் மறைந்த காலத்தில் எம்பெருமானார் துயரந் தாங்காமல் கதறினார் என்னும் குறிப்பு மணவாள மாமுனிகள் உரையில் காணப்படுகின்றது. வைணவ உலகில் மறைந்ததும் மறையாத சுடராகத் திகழ்பவர் கூரத்தாழ்வான் எனல் பொருந்தும்.

உரைத்தொண்டு

திருவாய்மொழியில் 'உளனெனில் உளன்', 'முனியே நான்முகனே' என்னும் இரு பாசுரங்களுக்கு இவர் கண்ட உரையினையே முறையே ஒன்பதினாயிரப்படியும், இருபத்து நாலாயிரப்படியும் தம் உரைகளாக ஏற்றுக்கொண்டுள்ளன. இதனை "இப்பாட்டு ஆழ்வான் யோஜித்தபடி" என்றும்,[134] "இப்பாட்டில் பதயோஜநதை ஆழ்வான்படி" என்றும்[135] அவ்வுரைகளில் வரும் குறிப்புகளால் அறியலாம்.

1) இலக்கண நுட்பம் தோன்ற உரைவகுத்தல்

"அல்லும் நன்பகலும் இடைவீடின்றி
நல்கி என்னை விடான் நம்பி நம்பியே"

என்பது திருவாய்மொழி. இதில் நம்பியே என்பதில் உள்ள ஏகாரத்தை அசைநிலையாகக் கொள்ளாமல் பிரிநிலையாக்கி உரைவகுத்த சிறப்பு இவரையே சாரும். "ஆழ்வான், 'நம்பியே' என்று ஸ்வத: (இயல்பாகவே) இவனையே பூர்ணனென்பது என்பர்" என்பது பெரியவாச்சான் பிள்ளை உரை.[136]

"கருமவன் பாசம் கழித்துஉழன்று உய்யவே...
திருமலை யதுவே அடைவது திறமே"

என்பதில் வரும் உய்யவே என்பதிலுள்ள ஏகாரத்தை எம்பெருமானாரைப் போலே அசையாகக் கொண்டு கருமவன்பாசம் கழிகைக்காகவும், உழன்று உய்கைக்காகவும் என்று பொருள் கூறாமல், வினா ஏகாரமாகக் கொண்டு 'இது நம்மாற் செய்து முடிக்க முடியுமோ, திருமலையைச் சாரும் அது ஒழிய?' என்று ஒருருவில் கூறினாராம்.[137]

இவை இலக்கண அறிவோடு உரை கூறியவர் இவர் என்பதற்குச் சான்றுகள் எனலாம்.

---

133. பெரி.தி. 4.1.4; 4.2.2; 4.2.5.
134. 1.1.9-9.
135. 10.10.1-24.
136. 1.10.8-24.
137. 2.10.4-36.

தம் காலத்துச் சான்றோர்களை எடுத்துக்காட்டாகத் தந்து உரைவகுத்தல்

1) பெருமக்களைச் சான்றாகக் காட்டி உரைவகுக்கும் இயல்பு ஆளவந்தாரிடம் இருந்தது என்பது அவர் 'பாலேய் தமிழர் இசைகாரர் பத்தர் பரவும்' என்னும் திருவாய்மொழித் தொடரை, ''பாலேய் தமிழரென்கிறது முதலாழ்வார்களை, இசைகாரரென்கிறது திருப்பாணாழ்வாரை; பத்தரென்கிறது பெரியாழ்வாரை'' என்று விளக்குவதால் தெரிகின்றது. அதனை மேலும் வளர்த்த பெருமை இவரைச் சாரும். அன்றித் தம் காலத்துச் சான்றோர்களையே எடுத்துக்காட்டாகக் குறிப்பிடுவது ஒரு புதுமையாகும். மேற்குறிப்பிட்டுள்ள தொடரினை இவர், ''ஸ்ரீபராங்குச நம்பியைப் பாலேய் தமிழரென்கிறது; இசைகாரரென்கிறது ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையரை; பத்தரென்கிறது பிள்ளையுறங்காவில்லிதாசரை'' என்று விளக்கியுள்ளார்.[138]

2) தம் மைந்தர் பட்டர், 'சிறுமா மனிசராய் என்னை ஆண்டார் இங்கே திரியவே' என்னும் நம்மாழ்வார் பாசுரத்தில் சிறுமை பெருமை ஆகிய இரு மாறுபட்ட பண்புகள் ஒருசேர வருவது எவ்வாறு பொருந்தும் என்று கேட்டபோது, நம்மைப் போல உயிர் நிலைப்பதற்காக உண்பதும் பருகுவதும் மேற்கொண்டாரேனும் இறை ஈடுபாட்டினைப் பார்த்தால் நித்திய சூரிகளை நிகர்த்தவர்களாய் இருக்கும் ஆண்டான், அருளாளப் பெருமாள், ஸ்ரீகோவிந்தப் பெருமாள் இவர்கள் காண் சிறுமா மனிசர்களாய் இருக்கிறார்கள் என்ற விளக்கம் கூறியுள்ளார்.[139]

இராமாயணப் பாத்திரங்களை எடுத்துக்காட்டி உரைவகுத்தல்

இராமாயணப் பாத்திரங்களை உரைகள் எடுத்துக் காட்டாகத் தந்து பாசுரங்களை விளக்குகின்றன. ஈட்டிலும் பெரியவாச்சான் பிள்ளையுரையிலும் பெருவழக்காய் இருக்கும் இப்போக்கினை உருவாக்கியவர் இக்கூரத்தாழ்வானே ஆவர். 'சயமே யடிமை தலைநின்றார்,' 'நீக்கமில்லா அடியார்,' 'கோதில் அடியார்' ஆகிய மூன்று திருவாய்மொழித் தொடர்களையும் இராமாயணப் பாத்திரங்களை எடுத்துக்காட்டாகத் தந்து, 'சயமே அடிமை தலைநின்றார் என்றது ஸ்ரீபரதாழ்வான் போல்வாரை; நீக்கமில்லா வடியார் என்றது, இளைய பெருமாள்

---

138. 1.5.11-36. *139. 8.10.3-24,36.*

போல்வாரை; கோதில் அடியார் என்றது ஸ்ரீசத்ருக்கநாழ்வான் போல்வாரைக் காணும்'' என்று விளக்கியுள்ளார்.[140]

இவையே யன்றி இவர்தம் கூற்றாகவும், கருத்துகளாகவும் பல உள்ளன.[141] இலக்கண நுட்பம் தோன்ற உரைவகுத்தல், எடுத்துக்காட்டுத் தந்து உரைவகுத்தல் இவ்விரு போக்குகளும் இவரிடத்தில் காணப்படும் சிறப்பான போக்குகளாகும்.

6. திருவரங்கத்தமுதனார்

வாழ்க்கைக் குறிப்பு

'இராமானுச நூற்றந்தாதி' பாடிய இப்பெரும் புலமையாளர் தொடக்கத்தில் இராமானுசரிடத்தில் பகைமை கொண்டு அவரை மதியாமல் இருந்து, கூரத்தாழ்வானால் திருத்தப் பெற்று, இராமானுசரின் அடியார் கூட்டத்துள் ஒருவரானவர். 'பெரியகோயில் நம்பி' என்று அழைக்கப்பெற்ற இவர்தம் சொல்லாற்றலைக் கண்டு இராமானுசர் இவருக்குச் சூட்டிய பெயர் அமுதன் என்பது. இவரிடமிருந்து திருவரங்கக் கோயில் ஆட்சியுரிமை கூரத்தாழ்வானால் தானமாக ஏற்கப்பெற்று இராமானுசரிடம் அளிக்கப்பட்டதென்றும், இவர் தம் உரிமைகள் அனைத்தையும் தானம் செய்துவிட்டுக் கோயிலோடு தொடர்பின்றி இருந்தது கண்டு இவருக்கு இயற்பாவைச் சேவிக்கும் உரிமையை இராமானுசர் வழங்கினார் என்றும், சில நாள்களுக்குப் பின் இவர் இராமானுசர் மீது அந்தாதி பாடினார் என்றும் 'கோயிலொழுகு' தெரிவிக்கின்றது.[142] இவரது வாழ்வு பற்றிய குறிப்பு எதுவும் உரைகளில் காணப்படவில்லை.

உரைத்தொண்டு

இவர்தம் புலமைத் திறத்தால் கூறிய புதிய விளக்கங்கள் சில.

---

140. 9.1.0-36.
141. 4.9.0-36; 5.3.7-36; 5.10.10-36; 7.5.0-24,36; 8.9.0-24,36; 10.10.1-36; பாவை 1-6; 2-6; 9-6; பெ.தி. 3.8.1.
142. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி, 'கோயிலொழுகு', ஸ்ரீநிவாஸம் பிரஸ், திருச்சி, 1976, பக். 41, 42, 46, 47.

1) "நினைந்த எல்லாப் பொருள்கட்கும் வித்தாய்" என்னும் தொடருக்கு 'சத்' என்ற நிலையுள்ளதாய்த் தன்னுடனே கூடிக் கிடக்கிற எல்லாப் பொருள்கட்கும் காரண மாய் என்பது இவர் கண்ட பொருள்.[143]

2) "சாமாறும் கெடுமாறும் தமர்உற்றார் தலைத்தலைப்
பெய்து
ஏமாறிக் கிடந்துஅலற்றும் இவைஎன்ன உலகியற்கை"

என்னும் பாடலில் வரும் 'ஏமாறி' என்பதற்கு, ஏ என்பது தெளிவு; மாறுகை என்பது அழிகை; அதாவது தெளிவு அழிகை என்று உரை கூறியுள்ளார்.[144]

3) "ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து எங்கள்
குழாம்புகுந்து
கூடு மனமுடை யீர்கள் வரம்பொழி வந்துஒல்லைக்
கூடுமினோ"

என்னும் திருப்பல்லாண்டில் உள்ள ஏடு என்பதற்குப் 'பொல்லாங்கு' என்று பொருள் சொல்லி, ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் என்பதனை "உங்களைப் பொல்லா நிலத்திலே இடுவதற்கு முன்னம்" என்று விளக்கியுள்ளார்.[145]

4) "என்நலம் ஐந்தும் முன் கொண்டுபோன,
குவளைமலர் நிறவண்ணர் மன்னு குறுங்குடிக்கே
என்னை உய்த்திடுமின்"

என்பது தலைமகள் வேண்டுகோள். இதில் 'என்நலம் ஐந்தும்' என்பது, 'என்நலனும், என்நிறைவும், என் சிந்தையும், என்வளை யும் கொண்டென்னை ஆளுங்கொண்டு' என்று திருநெடுந் தாண்டகத்தில் சொல்லப்படுவனவற்றைக் குறிக்கிறது என்பர். "என் நலமைந்தும்' என்கிற விது-ச்ரோத்ராதிகளால் (கேட்டல் முதலியவற்றால்) வருமறிவையென்னுதல்; அன்றிக்கே, என் நலனும்-என் நிறைவும் என்கிறத்தை என்றமுதனார்" என்பது பெரிய திருமொழி உரை.[146] நலன் என்பது நிறைவைக் குறிக்கும் என்பது அமுதனார் கருத்து.

நயவுரை

சில இடங்களுக்கு நயமான உரையினையும் வரைந்துள்ளார்:

1) பெற்ற தாயோடு கிடந்த தலைமகளைப் பெருமான் அவள் அறியாதவாறு அழைத்துக்கொண்டு போய்விட்டான்.

---

143. 1.5.2-36.
144. 4.9.2-36.
145. தி.பல். 4.
146. பெ.தி. 9.5.1.

அவர்கள் திருவாலியிலே சென்று புகுவார்களோ என்று வினவு கிறாள் தாய்.

"கள்வன்கொல் யானறியேன் கரியான்ஒரு காளைவந்து
வள்ளிமருங்குல் என்றன் மடமானினைப் போதவென்று
வெள்ளி வளைக்கை பற்றப் பெற்ற தாயரை விட்டுஅகன்று
அள்ளல்அம் பூங்கழனி அணியாலி புகுவர்கொலோ?"

என்பது பாசுரம். இதனை விளக்குங்கால், "கூடு கிடக்க வாளை உருவிக்கொண்டு போவாரைப் போலே, தாயார் அணைத்துக் கொடுகிடக்கக் கொண்டு போனான்" என்று குறிப்பிடு வாராம்.[147]

2) "கட்டேறு நீள்சோலைக் காண்டவத்தைத் தீமூட்டி
விட்டானை மெய்யம் அமர்ந்த பெருமானை
மட்டேறு கற்பகத்தை மாதர்க்காய் வண்துவரை
நட்டானை நாடி நறையூரில் கண்டேனே"

என்னும் பாசுரத்துக்குப் பொருள்கூறும் போது, "தான் (இந்திரன்) சொப்பனக் (நன்றாக) குடியேறுவதற்கு முன்னே தன்னைக் குடியிருத்தினவன் (கண்ணன்) தன் புழைக்கடையிலே ஒரு குப்பை மேனியைப் (கற்பகத்தரு) பிடுங்கினான் என்று வஜ்ரத்தைக் கொண்டு துடருவதே!" என்பாராம்.[148]

துணுக்குக் கூறுதல்

வைணவ உரைகளில் பாசுர விளக்கங்களிடையே சில துணுக்குகள் காணப்படுகின்றன. அவை விளக்கவுரை நிகழ்த்து வோரால் சொல்லப்பட்டவை. அத்தகைய துணுக்கு ஒன்று இவர் உரையில் வருவதனால் துணுக்குகள் சொல்லும் முறையினைத் தோற்றுவித்தவர் இவ் அமுதனாரே எனலாம்.

இரவு வருத்திக் கொண்டிருக்க, அதனைத் தொடர்ந்து வந்தது நிலவு. தலைமகள் தப்பிப் பிழைக்க இயலாத நிலை. இதனை ஒரு துணுக்கினைச் சொல்லி விளக்குகிறார். ஓர் எளிய அந்தணன் காட்டில் தனிவழியே சென்றான். ஒரு பசு அவனைத் துரத்தியது. அவன் 'நம்மைப் பசுவிடமிருந்து யார் காப்பாற்றுவார்?' என்று அஞ்சினான். அச்சமயம் ஒரு புலி தோன்றிப் பசுவைத் கொன்றது; அதன் குருதியைக் குடித்தது; அவன் முன்னே வந்து தண்டையைச் (வாலை) சுழற்றி நின்றது. அவன் "பசுவிடமிருந்தாவது ஒருவாறு தப்பிப் பிழைத்திருக்கலாம். இப் புலியினிடமிருந்து

147. பெ.தி. 3.7.1. 148. பெ.தி. 6.8.7.

எவ்வாறு தப்பிப் பிழைப்பது?" என்று நடுக்கங் கொண்டானாம்.[149] அவ் அந்தணனைப் போலத் தலைமகள் இரவை விழுங்கிவரும் நிலவைக் கண்டு பிழைக்கும் வகையறியாது நடுங்கினாளாம். இவ்வாறு அமுதனார் மேலும் சில விளக்கங்கள் தந்துள்ளார்.[150] துணுக்குச் சொல்லும் மரபுக்கு வித்திட்டவராகவும், கற்பனையும் நயமும் நிறைந்த உரை கூறியவராகவும் அமுதனாரைக் கருதலாம்.

பிள்ளை அமுதனார் வேறு. திருவரங்கத்தமுதனார் வேறு என்று கருதுவோரும் உண்டு.[151] அமுதனார் என்பது இராமானுசர் இட்ட சிறப்புப் பெயர்; பிள்ளை என்பது மரியாதையைக் காட்டும் முன்னொட்டு. எனவே திருவரங்கத்தமுதனாரின் பிள்ளை அமுதனார் வேறானவர் என்பது பொருத்தமாகத் தெரியவில்லை.

7. அனந்தாழ்வான்

வாழ்க்கைக் குறிப்பு

இராமானுசர் பணித்தவாறு அருளாளப் பெருமாள் எம்பெருமானார் திருவடிகளைச் சார்பாகக் கொண்ட அனந்தாழ்வான் திருமலையில் இராமானுசன் என்னும் பெயரில் ஒரு பூஞ்சோலை அமைத்தவர். 'திருவேங்கட முடையான்' என்னும் பெயரில் ஈடுபாடு மிகக் கொண்டவர். ''அநந்தாழ்வான் 'திருவேங்கடமுடையான்' என்றால் திருநாமம் நிறம் பெறுமா போலே'' என்னும் உரைக்குறிப்பால்[152] இது விளங்குகின்றது. இவர் தம் மகளுக்கு 'என் திருமகள்' என்று பெயர் சூட்டியிருந்தார்[153] திருக்கோளூரிலிருந்து வாழ்வுக்காகச் சோழ குலாந்தகனுக்குக் குடியேறிய வைணவனை நோக்கி, 'அவ்வூரில் கழுதையை மேய்த்து வாழக்கூடவா உன்னால் முடியாது போயிற்று?' என்று கேட்டார் என்னும் செய்தி இவர் திருக்கோளூரில் கொண்டிருந்த மதிப்பினை உணர்த்துகின்றது.[154]

அமர்யாத: என்னும் ஆளவந்தார் சுலோகத்தின் செய்தியைக் கருதி, 'அஃது ஆளவந்தார் அருளிச் செய்ததே யாகிலும் என் வாயால் சொல்ல மாட்டேன்' என்று கூறுவார் என்பதனால்,

---

149. தி.வி.72.
150. 6.8.1-36; பெ.தி. 9.5.1.
151. திவ்யப் பிரபந்த அகராதி, பக். 644.
152. 6.5.7-36; பெ.தி.5.5.1; தி.நெ.தா. 27.
153. 7.2.9-36. 154. 6.7.1-36.

தீயவற்றை நினைக்கவும் விரும்பாத இவரது உள்ளம் தெளிவாகத் தெரிகின்றது.[155]

இவர் எம்பெருமானாரைக் காண்பதற்குத் திருவரங்கம் நோக்கிச் சென்று கொண்டிருக்கும்போது, அவர் திருநாட்டுக்கு எழுந்தருளிவிட்டார் என்கிறது நாச்சியார் திருமொழி உரை.[156] இவர் பட்டர் விரும்பிய பெயர் 'அழகிய மணவாளன்' என்பது என்றறிந்து அத் திருப்பெயரைச் சொன்னவாறே திருநாட்டுக்கு எழுந்தருளினாராம்.[157]

உரைத்தொண்டு

1) வேங்கடமுடையானுக்கு வணக்கம் செய்பவர்கள் 'தங்கள் தங்கட்கு நல்லனவே செய்வார்' என்கிறார் நம்மாழ்வார். இதில் 'தங்கள் தங்கட்கு' என்பதனை அதிகாரியின் தனித்தன்மையும் செயலின் தனித்தன்மையும் தோன்றும்படி ஊன்றிச் சொல்வாராம்.[158]

2) "திருமகளும் மண்மகளும் ஆய்மகளும் சேர்ந்தால்
திருமகட்கே தீர்ந்தவாறு என்கொல்-திருமகள்மேல்
பாலோதம் சிந்தப் படநா கணைக்கிடந்த
மாலோத வண்ணர் மனம்"

என்னும் முதல் திருவந்தாதிப் பாட்டினை, "திருமகட்கே தீர்ந்தவாறென்கொல், மண்மகட்கே தீர்ந்தவாறென்கொல், ஆய்மகட்கே தீர்ந்தவாறென்கொல்" என்று பிரித்துக்கூட்டி விளக்குவராம்.[159]

3) 'எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனுமாவேனே' என்பது குலசேகரர் வேட்கையுரை. இதற்குத் 'திருவேங்கடமுடையான் தானாகவும் அமையும்' என்று உரைப்பாராம்.[160] அடியார் திரளுக்குப் புறம்பான இறைவனாயினும் அமையும் என்பது இதற்குக் கருத்தாகும்.

4) 'பொன்னுலகாளீரோ' பாசுரத்தில் பறவைகளை நோக்கித் தன்னிலை உரைத்தால் அவற்றிற்கு விண்ணையும் மண்ணையும் தருவதாகத் தலைமகள் இயம்புகிறாள். இப்படி இரண்டனையும் தந்த பின் அவன் வந்தால் தானும் அவனும்

---

155. 3.3.4-36.
156. நா.தி.12.5.
157. பெரி.தி. 4.4.1.
158. 3.3.6-36.
159. மு.தி. 42.
160. பெரு.தி. 4.10.

எங்கேயிருப்பது என்னும் வினா எழுகின்றது. இதற்கு 'இக்குருவி காட்டின இடத்தே' என்று நயவுரை கூறுவாராம்.[161]

5) 'இரைக்குங் கருங்கடல் வண்ணன் கண்ணபிரான் தன்னை' என்பதில் உள்ள 'இரைக்குங் கருங்கடல்' என்பதற்கு, அதற்கு முன்னேயுள்ள பாட்டில் 'யாம் மடல் ஊர்ந்தும்' என்று வருவதனைக் கருத்தில் கொண்டு "வில்லைக் கொண்டு வா, ஆசி என்னும் விடத்திற்கு ஒத்த அம்புகளையும் கொண்டுவா" என்ற போது கடல் கீழ்மண்கொண்டு மேல்மண் எறிந்தாற்போலே யாயிற்று 'இவள் மடலூர்வன்' என்ற துணிவைக் கேட்டு அவனது எல்லாவற்றையும் ஆளுந்தன்மை கலங்கினபடி என்று உரை விரித்துள்ளார்.[162]

அனந்தாழ்வான் கூறியுள்ள உரைகளில் புதுமைப்போக்கு யாதுமில்லை எனினும் நயங்காண்பதும் இராமாயணத்தை இணைந்து உரை கூறுவதுமாகிய இவ்விரண்டும் தொடர்ந்து பின்பற்றப்பட்டுள்ளன.

8. முதலியாண்டான்

வாழ்க்கைக் குறிப்பு

இராமானுசரின் உடன்பிறந்தவளான பூமிதேவிக்கும் புருடமங்கலம் அனந்த தீட்சதருக்கும் மைந்தராய்த் தோன்றி, இராமானுசர் திருவடிகளைப் பற்றி, எழுபத்து நான்கு சிம்மாசனாதிபதிகளுள் ஒருவராய் விளங்கியவர். தாசரதி என்னும் இயற்பெயரினர். வைணவதாசர் என்னும் பெயரும் இவருக்கு இருந்துள்ளது. இவர்தம் திருவடிகளைப் பற்றியவராக 'இளையபெருமாள்' என்பவர் குறிக்கப்பெறுகிறார்.[163]

உரைத்தொண்டு

1) திருவாய்மொழியில் 'நின்ற ஒன்றை உணர்ந்தேனுக்கு' என்னும் பாசுரந் தொடங்கி நான்கு பாசுரங்கள் கேவல ஆத்மாவின் தன்மையைச் சொல்கின்றன என்னும் எம்பாரினும் வேறுபட்டு, இறைவனுக்கு உடலாக இருக்கும் தன்மையினைச் சொல்கின்றன என்று கருதியுள்ளார்.[164]

---

161. 6.8.1-36.

162. 5.3.11-24,36.

163. 5.6.7-36.

164. 8.8.5-36.

2) "நமன்தமர் பாசம்விட்டால் அலைப்பூண் உண்ணும்அவ் அல்லல் எல்லாம் அகல"க் கண்ணனைக் கண்டுகொண்டு தம் நெஞ்சம் நிலைபெற உயிரும் நிலைத்தது என்கிறார் நம்மாழ்வார். இதில் 'அவ்வல்லல்' இயமதூதர்கள் செய்யும் துன்பத்தினை யொத்த துன்பம் என்கிறார் எம்பார். இவர் அதனின்றும் வேறுபட்டு, இறையருள் கிட்டாத பின்புவரும் இயமனுக்கு வயப்பட்டிருக்கும் தன்மையாகிய துன்பம் என்று உரை கண்டுள்ளார்.[165]

3) 'நெஞ்சினால் நினைப்பான் எவன்அவன் ஆகும் நீள்கடல் வண்ணனே' என்பதற்குப் பரமபத நாதனுக்கு முதன்மை தோன்ற 'நீங்கள் நெஞ்சினால் நினைக்கும் வடிவு எதுவோ அதனையே தனக்கு வடிவமாகக்கொண்டிருப்பான் தேவதேவன் என்று உரை கூறுவர். இவர், குணப்பெருமை அர்ச்சாவதாரத்தி லேயே என்பதனாலும், பொருளுக்கு ஏற்றம் குணப்பெருமையி லேயே என்பதனாலும், அர்ச்சாவதாரத்துக்கு முதன்மை தோன்ற உரைப்பர். இவர், நெஞ்சினால் நினைப்பான் எவன் அவனே நீள்கடல் வண்ணன் என்று ஏகாரத்தைப் பிரித்துக் கூட்டி "அங்குத்தைக்கு (திருநாட்டிற்கு) உகந்தருளின விடத்தை விபூதி யாக (உடைமையாக) நினையாதே, இங்குத்தைக்கு (அர்ச்சா வதாரத்திற்கு) அவ்விடத்தை விபூதியாக நினையுங்கோள்" என்று பணித்துள்ளார்.[166]

4) "உற்றார்களை அழிப்பேனும் யானே என்னும்" என்பது தலைமகளைப் பற்றிய தாயார் முறையீடு. தன்னை அடைந்தவர்களுக்கு வேறு பயன்களில் நோக்கமிருந்தால் அவற்றைத் தந்து என்பக்கல் நின்றும் அகற்றுவேன் என்று இதற்குப் பொருள் கூறுவர். அவ்வாறன்றி, அவர்களை அழகு தொடக்கமானவற்றால் அழிப்பேன் என்று இவர் உரை கூறி யுள்ளார். ஆண்டான் உரையாக இதனை இளையபெருமாள் தெரிவித்துள்ளார்.[167]

5) "நலத்தால் மிக்க குடந்தைக் கிடந்தாய்! உன்னைக் காண்பான்நான்
அலப்பாய் ஆகா சத்தை நோக்கி அழுவன் தொழுவனே"

என்பது திருவாய்மொழி.

---

165. 3.2.10-24,36. *167. 5.6.7-36.*
166. 3.6.9-24,36.

இதில் 'ஆகாசத்தை நோக்கி அழுவன்' என்பதற்கு நினைத்த பரிமாற்றம் பெறாமையாலே வானைப் பார்த்து அழுவேன் என்கிறாள் என்று உரை கூறுவர். இவர் அவ்வாறன்றி, "தன்னுடைய பற்றுக்கோடின்மையைப் பார்த்து அழுவன் என்கிறாள்" என்று பொருள் கொண்டுள்ளார்.

இவர் ஏகாரத்தைப் பிரித்துக் கூட்டிப் பொருள் கூறியுள்ள முறை கருத்தில் கொள்ளத்தக்கது. எம்பாரின் கருத்துக்கு வேறாக வும் சிந்தித்து உரை கண்டுள்ள செயல் இவரது அறிவுமதுகையைக் காட்டுகின்றது.[168]

9. அம்மங்கியம்மாள்

வாழ்க்கைக் குறிப்பு

தாயைப் போலப் பரிவு மிக்கவராக விளங்கியதனால் 'அம்மாள்' என்று போற்றப்பெற்ற இவர் இராமானுசர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர். அருளாளப் பெருமாள் எம்பெருமா னாரின் மாணாக்கர். நஞ்சீயர் காலத்தில் உலக வாழ்வை நீத்தவர். இவர் தம் வாழ்வின் இறுதிப்பகுதியில் பெருந்துன்பப் பட்டுள்ளார். அப்பொழுது இவரைச் சென்று கண்ட நஞ்சீயர், "இவ்வுலகில் ஆசாரியத் தொண்டு செய்தும், இறைவன் குணங் களைக் கருதிப் பொழுதுபோக்கியும் தாங்கள் காலங் கழித் திருக்க, அல்லாதாரைப்போலே இப்படித் துன்பப்பட நேர்ந் துள்ளதே!" என்று வருத்தத்தோடு கூறினார். அதனைக் கேட்ட இவர், "நீ யாள வளையாள மாட்டோமே' என்பதல்லவா ஆழ்வார் பாசுரம். இறைவனால் பரிக்ரஹமானால் (கைப்பற்றப் பட்டால்) துன்பப்பட்டே போமித்தனை காணும்" என்று பதிலிறுத்தார். அங்கிருந்து புறப்பட்ட பின்பு நஞ்சீயர் பிள்ளை யைப் (நம்பிள்ளை) பார்த்து, முடிகிற இவ்வளவிலேயும் இச் சொற்கள் சொல்வது விச்வாஸத்தின் கனமான பாவபந்தத்தில் (துணிவின் ஆழ்ந்த அன்பில்) ஊற்றமிறே" என்று கூறினார் என்னும் குறிப்புப் பெரிய திருமொழியில் இடம்பெற்றுள்ளது.[169]

உரைத் தொண்டு

1) சொற்றொடர்களுக்கு இயைபு காட்டுதல்

உரைகளில் பெருவழக்காகக் காணப்படும் சொற்றொடர் களுக் கிடையே இயைபு காட்டும் போக்கு இவரிடத்தில் இருந் துள்ளது.

---

168. 5.8.4-24,36.

169. பெ.தி. 3.6.9.

"ஆற்றல் மிக்கு ஆளும் அம்மானை வெம்மா பிளந்தான் தனை'' என்னும் நம்மாழ்வார் பாசுரப் பகுதியில் இரு சொற்றொடர்கள் உள்ளன. ஒன்று, ஆற்றல் மிக்கு ஆளும் அம்மான் என்பது. பிறிதொன்று, வெம்மா பிளந்தான் என்பது. வெம்மா பிளந்தான் என்பதற்கு, "ஆற்றல் மிக்காளும் அம்மான் ஆர் என்றால், இன்னான் என்கிறது'' என்று கூறி இரண்டிற்கும் இடையே உள்ள இயைபு காட்டுகிறார்.[170]

2) உலகியல்பு காட்டி உரைகூறுதல்

''தொழுது ஆடித் தூமணி வண்ணனுக்கு ஆட்செய்து நோய்தீர்ந்த
வழுவாத தொல்புகழ் வண்குருகூர்ச் சடகோபன் சொல்''

என்பதற்கு ''மயங்கியவள் சிறிது தெளித்தவாறே, மோர்க் குழம்பு குடித்தாள், தரித்தாள், கண்விழித்தாள், பேசினாள் என்பார்களன்றோ? அதுபோன்று காணும் ஆழ்வார் தம் நோய் தீரத் தொடங்கியவுடனேயே தொழுது ஆடித் தூமணி வண்ணனுக்கு ஆட்செய்ததாகத் தம்மைப்பற்றிச் சொல்லிக் கொள்கிறார்'' என்று அழகிய விளக்கம் தந்துள்ளார்.[171]

''பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கும் அழுக்குடம்பும்
இந்நின்ற நீர்மை இனியாம் உறாமை''

என்னும் திருவிருத்தத்தில் 'இந்நின்ற நீர்மை' என்பதற்கு 'உதிரக் கூறை காட்டுகிறார்' என்று பொருள் சொல்லியுள்ளார். அஃதாவது அடிபட்டவன் குருதி படிந்த ஆடையைக் காட்டுவது போன்று காட்டுகிறார் என்கிறார்.[172]

3) அரசியல் உவமை கூறுதல்

"போர்கடா அரசன் புறக்கிட மாடமீமிசைக் கஞ்சனைத் தகர்த்த'' என்னும் திருவாய்மொழித் தொடருக்கு, அரசத்துரோகி களைக் கொல்லும்போது அரச சின்னங்களை வாங்கிக் கொல்லுமாபோலே, தான் கொடுத்த முடியை வாங்கிக்காண் கொன்றது என்று இவர் பணிப்பர் என்னும் குறிப்பு ஈட்டிலும் இருபத்து நாலாயிரப்படியிலும் காணப்படுகின்றது.[173] இவ்

170. 4.5.1-36.
171. 4.6.11-36.
172. தி.வி.1.
173. 8.4.1-24,36.

விளக்கம் இவரால் விஷ்ணுபுராணச் சுலோகம் ஒன்றனுக்குத் தரப்பட்டதாகும்.[174]

இப்படி இவர் தந்துள்ள விளக்கங்கள் பல. ஈரிடங்களுக்கு இவர் சொல்லிய பொருளினைக் கொள்ளாமல் வேறு உரை கூறியுள்ளார் பட்டர். இவரிடம் அரும்பு நிலையில் காணப்படும் சொற்றொடர்களுக்கு இயைபு காட்டும் பண்பு பின்னால் நன்கு வளர்ந்துள்ளது என்று கருதலாம்.

10. பிள்ளை திருநறையூரரையர்

வாழ்க்கைக் குறிப்பு

பிள்ளை திருநறையூரரையர், பட்டர் காலத்தில் வாழ்ந்த பெருமகனாராவர். இவர் பட்டரின் விளக்கங்களைப் போற்றிக் கேட்டவர்; அவர்பால் ஈடுபாடு மிக்கவர்.[175]

இவர் சத்துவ குணம் நிறைந்தவர். ''பிள்ளை திருநறையூரரையரைப் போலே ஸத்வ ப்ரசுரனாயிருந்தானாகில், அவன் நிந்தையே நோயாக முடித்து போவது'' என்று வரும் திருமாலை உரைக்குறிப்பு இவருடைய பண்புநலனையும் இவர் இறைவனுக்கு வந்த இகழ்ச்சியால் துன்பத்திற்கு ஆளாகி இறந்துள்ளார் என்பதனையும் தெரிவிக்கின்றது.[176] ஸ்ரீவசன பூஷணவுரை இந் நிகழ்ச்சியை விளக்கமாகக் கூறியுள்ளது. பிள்ளை திருநறையூர் அரையர் குடும்பத்தோடு திருநாராயணபுரத்தில் வேத நாராயணப் பெருமாளைச் சேவிக்கச் சென்றார். அப்போது வேறு சமயத்தார் அந்தக் கோயிலுக்குத் தீயிட்டனர். உள்ளே நின்றவர் எல்லாரும் வெளியே ஓடிவிட்டனர். பெருமான் திருமேனிக்கு அழிவு வருவது கண்டு இவர் மட்டும் பொறுக்கமாட்டாத அன்பின் மிகுதியாலே தாமும் ஒக்க முடிவதாக உறுதி கொண்டார். இவர் நிற்கையாலே, பிள்ளைகளும் 'இவரை விட்டுப் போகமாட்டோம்' என்று நின்றனர். இவரும் தம் பிள்ளைகளும் அங்கேயே நின்று திருமேனி விட்டனர்.[177] இவரும் பட்டரும் கோயிலுக்குச் சென்றால், திருமாளிகைகளையும், திருக்கோபுரங்களையும் கண்களாலே பருகுவாரைப் போலே பார்த்துச் செல்வார்களாம்.[178]

---

174. 7.6.10-36.
175. தி.வி.53.
176. தி.மா.8.
177. ஸ்ரீவசனபூஷணம் சூ. 84 உரை.
178. 10.2.2-36.

நஞ்சீயர் இவரிடம் சில விளக்கங்கள் கேட்டறிந்துள்ளார். பெரிய திருவந்தாதி எட்டாம் பாடல் உரையில், "இது சீயர் பிள்ளை திருநறையூரரையர் பக்கல் கேட்டதாக நம்பிள்ளை அருளிச்செய்தார்" என்று பெரியவாச்சான் பிள்ளை குறிப்பிடுவதும், "நஞ்சீயர், பிள்ளை திருநறையூரரையரோடே மூன்று திருவாய்மொழி கேட்டேன், அதில் எனக்கொரு வார்த்தைகளும் போகாது (விளங்கவில்லை); ஒரு திருவாய்மொழியை ப்ரஸ்தாவியா (சொல்லத் தொடங்கி) அவர் சிதிலராய்க் கண்ணுங் கண்ணீருமாய் இருக்கும் இருப்பை நினைத்திருப்பன்" என்று அருளிச்செய்தார் என்று ஈட்டில்[179] வருவதும் இதனை வலியுறுத்தும்.

உரைத்தொண்டு

1) "ஒரு குருவி பிணைத்த பிணை ஒருவரால் அவிழ்க்கப் போகிறதில்லை; ஸர்வ சக்தி (எல்லா ஆற்றலுமுடையவன்) கர்மாநுகுணமாகப் (வினைக்குத் தக்கவாறு) பிணைத்த பிணையை அவனையே கால்கட்டி அவிழ்த்துக் கொள்ளும் இத்தனைகாண்" என்பது இவரது புகழ்மிக்க கூற்று.[180]

2) 'உண்ணிலாவிய' திருவாய்மொழியின் எல்லாப் பாக்களிலும் முன் அடிகள் இரண்டும், புலியின் வாயிலே அகப்பட்ட குழந்தை தாய் முகத்திலே விழித்துக்கொண்டு புலியின் வாயிலே கிடந்து நோவுபடுமா போலேயாய் இருக்கின்றன என்பது இவரது கருத்து.[181]

3) "பொருள் கையுண்டாய்ச் செல்லக் காணில் போற்றி
என்று ஏற்று எழுவர்
இருள்கொள் துன்பத்து இன்மை காணில் என்னே
என்பாரு மில்லை"

என்பது நம்மாழ்வார் துணிபு. இப்பாட்டில் வரும் 'என்னே என்பாரு மில்லை' என்பதற்கு, இரந்து வந்தவர்களுக்கு இட்டே ஒருவன் இல்லாதவன் ஆகின்றான். அவனால் வளமடைந்தவன் இவ்வறுமை யுற்றவனை 'என்' என்னுதல் இவன் வீட்டில் வந்து ஒருநாள் கால்கழுவிப் போதல் செய்ய, அவ்வளவாலே 'இன்னான் இன்னானுக்கு உறவு அல்லனோ' என்று பிறர் அறிவர். அதுகொண்டு வாழலாமாய் இருந்தால் அதனைக்கூடச் செய்வாரில்லை என்று நுட்ப உரை கூறியுள்ளார்.[182]

---

179. 6.7.1-36.
180. 1.1.0 முதல் ச்ரிய: பதி; 4.9.8-36; 5.1.6-24,36 பெரு.தி. 5.1; பெ.தி.11.8.2.
181. 7.1.0-36. 182. 9.1.3-24,36.

4) தலைமகன், தலைமகளையும் அவளோடு இருக்கும் பெண்களையும் நோக்கி, "பெண்களே, புனமோ, புனத்தயலே வழிபோகும் அருவினையேன் மனமோ? நும் காவல்?" என்று வினவுகிறான். இதில் வரும் 'அருவினையேன்' என்னும் சொல்லின் சாரத்தை, "உகந்தருளின தேசமெல்லாம் கிடக்கத் திருநகரி யருகே போக வேண்டும் பாவம் உண்டாவதே" என்கிறான் என்று விளக்கியுள்ளார்.[183]

5) இவர் தமது அரிய விளக்கத்தால் பிறர்க்கெழுந்த ஐயங்களையும் களைந்துள்ளார்.

"அமலன் ஆதிபிரான் அடியார்க்கு என்னை ஆட்படுத்த
விமலன் விண்ணவர்கோன் விரையார்பொழில் வேங்கடவன்"

என்று திருவரங்க நாதனைப் பாடத் தொடங்கித் திருவேங்கடமுடையான் பாடே செல்கிறார் திருப்பாணாழ்வார். அதற்குக் காரணம் என்ன என்று சிலர் இவரைக் கேட்டபோது, ஆற்றிலே அமிழ்ந்து போகிறவன் ஒருகாலைத் தரையிலே ஊன்றினால் பிழைக்கலாமோ என்று கால் தாழ்க்குமாபோலே இவரும் பெரிய பெருமாள் அழகிலே அழுந்துகிறவராகையாலே திருமலையிலே கால்தாழ்ந்தார்; அது மடுவாகிறது அறிகிறிலர்" என்றார். வேறு சிலர் இதே வினாவினைத் தொடுத்தபோது, ஒருவனைக் கவிபாடும்போது அவனுடைய வரத்துச் சொல்லியன்றோ கவிபாடுவது; பரமபதத்திலே நின்றும் ஸ்ரீமதுரையிலே தங்கித் திருவாய்ப்பாடிக்கு வந்தாற்போலே ஸ்ரீவைகுண்டத்தினின்றும் திருமலையிலே தங்கிக்காண் வந்தது என்று விடை கூறினார்.[184]

இவர் உரைக்குறிப்புகள் பல.[185] அவற்றால் இவர்தம் நுட்ப அறிவு புலனாகின்றது. பட்டரைப் பெரிதும் மதித்துப் போற்றும் இவர் அவரது உரைக்கு வேறாகப் பொருள் கூறியுள்ள இடமும் உண்டு. 'வகைசேர்ந்த நன்னெஞ்சம்' என்னும் பெரிய திருவந்தாதிப் பாட்டுக்குப் பட்டர் ஒருவகையாகவும் இவர் ஒருவகையாவும் உரை சொல்லியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.[186] இதனால் இவருடைய அறிவுத்திறமும் சுதந்திரச் சிந்தனையும் தெரிய வருகின்றன.

இத்தகைய பெருமக்களோடு சிறு அளவில் உரைகளின் வளர்ச்சிக்குத் தொண்டு புரிந்தவர்கள் சிலரும் இருக்கிறார்கள்.

---

183. தி.வி.23.
184. அம.1, அழகு.
185. 2.4.3-36; 2.8.2-24; 3.3.4.36; 5.10.0-24; 7.4.0-24,36; தி.வி.75; பெரு.தி. 5.1.
186. பெ.திருவந். 44.

சிறிய அளவில் உரைத்தொண்டு புரிந்தோர்

(அ) திருக்கோட்டியூர் நம்பி

திருக்கோட்டியூர் நம்பி இராமானுசரின் ஆசிரியர்களுள் ஒருவர். அவர் ஆட்சியாக ஒன்று பெரியாழ்வார் திருமொழி உரையில் பெரியவாச்சான் பிள்ளையால் குறிக்கப் பெற்றுள்ளது.

> "நம்மன்போலே வீழ்த்தமுக்கும்
> நாட்டிலுள்ள பாவமெல்லாம்
> சும்மெனாதே கைவிட்டோடித்
> தூறுகள் பாய்ந்தனவே"

இதில் "தூறுகள் என்கிறது ஸம்ஸாரிகளை" என்று அவர் பொருள் கூறியுள்ளார்.[187] தூறுகள் என்பதற்குக் காடுகள் என்று பொருள் கொள்வதே பொருத்தம். உலகில் வாழ்வோர் என்பது செயற்கையான உரையாகத் தோன்றுகிறது.

(ஆ) திருமலை நம்பி

திருமலை நம்பி என்னும் பெயரில் இருவர் இருந்துள்ளனர். அவருள் ஒருவர் இராமானுசருக்கு இராமாயணத்தை அருளிச் செய்தவரும் அவருடைய தாய்மாமனும் ஆவார். இவரைப் பெரிய திருமலை நம்பி என்றும் குறிப்பர். மற்றொருவர் இவரின் மகனார். இவரையும் திருமலை நம்பி என்றே குறித்துச் சென்றுள்ளனர்.[188] திருமலைநம்பி, கணியனூர்ச் சிறியாத்தானைப் பட்டர் தமக்குத் தஞ்சமாக நினைத்திருக்கும் திருநாமம் யாது என்று கேட்டு 'அழகிய மணவாளப் பெருமாள்' என்பது அறிந்து அதனைச் சொன்னவாறே உயிர்விட்டார் என்னும் குறிப்பு திருவிருத்த உரையில் வருகின்றது.[189] இராமானுசரின் ஆசிரியராக இருந்த பெரிய திருமலை நம்பி, பட்டர் ஆசாரியராக விளங்கிய காலம் வரை வாழ்ந்தார் என்றால், இராமானுசரினும் நீண்ட வயது வாழ்ந்தவராவர். அது கூடாமையின் இக்குறிப்பு அவர்தம் மகனாரான திருமலை நம்பியைப் பற்றியதாகக் கொள்ளுவதே சாலும். திருமலை நம்பியின் உரைகளாக ஐந்து இடங்கள் வருகின்றன. அவற்றுள் எம்பாரால் ஏற்றுக் கொள்ளப்படாமல் அவர் வேறு உரைகாணும் இடங்களில் வரும் உரைகள் பெரிய

---

187. பெரி.தி. 5.4.3.
188. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், எஸ். (பதி), ஸ்ரீரங்கம் பாரதீய பூர்வசிக ஸ்ரீவைஷ்ண ஸபையின் பொன்விழா மலர், 1978, பக். 165.
189. தி.வி.44.

திருமலை நம்பியின் உரைகளாகலாம். எம்பார் கருத்தினை ஒதுக்கித் திருமலை நம்பி வேறு வகை விளக்கம் தரும் இடங்களில் வருபவை, அவர் மைந்தர் திருமலை நம்பியின் உரைகளாகலாம். ஏனெனில், இவ்விருவருக்கும் இடைப்பட்ட காலத்தவராக எம்பார் இருக்கிறார்.

"எம்மை, மாற்றோலைப்பட்டவர் கூட்டத்து வைத்துக்கொள் கிற்றிரே" என்னும் நாச்சியார் திருமொழியில் 'மாற்றோலைப் பட்டவர் கூட்டம்' என்பதற்குக் 'கேவலர் திரள்' என்று கூறப்பட் டுள்ளது பெரிய திருமலை நம்பியின் உரையாகும்.[190]

"திருமலை நம்பி இவ்விரண்டு பாட்டையும் (மழையே மழையே, கடலே கடலே) ஆதரித்துப் போருவராய், அவ்வழி யாலே நம்முடையவர்களெல்லாரும் ஆதரித்துப் போருவார்கள்; இப்பாட்டையும் மேலிற்பாட்டையும் அநுஸந்தித்து, (நினைந்து) கண்ணும் கண்ணீருமாய் ஒருவார்த்தையும் சொல்லாதே வித்தரா யிருப்பராம்" என்னும் செய்தியும் அவரைப் பற்றியதாகும்.[191]

'கோவை வாயாள்' திருவாய்மொழியில், நம்மாழ்வார் விருப்பத்தை இறைவன் செய்வதாகத் தலைதுலுக்க, அவர் மேல் உண்டான வருத்தமெல்லாம் மறந்து எல்லாம் பெற்றாராய் மகிழ்கிறார் என்னும் விளக்கமும், "செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்" என்பதற்குத் தத்துவத்தில் நிற்கும் துறவிகள் என்று கூறப்பட்டுள்ள பொருளும்,[192] "இலங்கைக் குழாம் நெடு மாடம், இடித்த பிரானார் கொடுமைகளே" என்னும் திருவிருத்தத் திற்கு, "இதுவும் அழகியதொன்று உண்டாய் இருக்கலாகாது என்று அஸூயையாலே (பொறாமையாலே) அழித்தான் அத்தனைகாண், ஒருத்திக்காக உதவினவனல்லன்காண்" என்று வரும் நயவுரையும்[193] பெரிய திருமலை நம்பியின் மைந்தர் திருமலை நம்பி உரைத்தனவாகும்.

(இ) கிடாம்பியாச்சான்

இவர் பெரிய திருமலை நம்பிக்கு மருமகன். உடையவருக்கு மடைப்பள்ளித் தொண்டு செய்தவர். எழுபத்து நான்கு சிம்மாசனாதிபதிகளுள் ஒருவர். நஞ்சீயர் காலம்வரை வாழ்ந்தவர்.[194]

திருமாலிருஞ்சோலையில் உறையும் அழகர், 'இவரை யாதேனும் ஒன்று விண்ணப்பம் செய்க' என்று பணிக்க, இவர்

---

190. நா.தி 10.2.
191. நா.தி. 10.8.
192. பாவை 14-6.
193. தி.வி. 36.
194. நா.தி. 9.8.

'அபராத ஸஹஸ்ர பாஜநம்' என்று தொடங்கி, 'அகதிம்' (கதியற்றவன்) என்று சொன்னாராம். அப்பொழுது அழகர் நம் இராமானுசனை உடையையாய் இருந்து வைத்தும் 'அகதிம்' என்று சொல்லலாமா என்றாராம். இக்குறிப்புத் திருப்பாவை உரையில் வருகின்றது.[195] இவரும் முதலியாண்டானும் திருப்பேர் (கோயிலடி) என்னும் திவ்விய தேசத்தின் பக்கம் சென்றபோது அதனைக் கடந்து செல்ல மாட்டாமலும், உள்ளே சென்று திருவடி தொழமாட்டாமலும் கோயிலையே பார்த்துக் கொண் டிருந்தனராம்.[196]

பெரியவாச்சான் பிள்ளை,

"மராமரம் எய்த மாயவன் என்னுள்
இரானெனில் பின்னை யான் ஒட்டுவேனோ?"

என்பதில் வரும் 'பின்னையான் ஒட்டுவேனோ' என்பதற்குப் 'பின்னை நான் தொங்குவேனோ?' என்று பொருள் கூறுவர் என்று குறித்துள்ளார்.[197] இதனை எம்பார் கூற்றாகக் காட்டுகிறது ஈடு.

"அஞ்சுவன் வெஞ்சொல் நங்காய் அரக்கர்குலப் பாவை
தன்னை
வெஞ்சின மூக்கரிந்த விறலோன் திறம் கேட்கில்"

என்பது குறித்து ஒரு தடையினைச் சிலர் இவரிடம் வினவினர். ஒரு பெண்ணினுடைய உறுப்பினைக் குறைத்தவனுடைய திறம் கேட்கில் அஞ்சுவன் என்பதனால், இத்தலைக்குக் குணக்கேடாய்த் தோன்றுகிறது. இஃது ஆழ்வார் அருளிச்செய்ய இயலாது. இஃது எப்படிப் பொருந்தும் என்றனர். அதனை இவர் கேட்டுத் "துடுப்பிருக்கக் கை வேக வேணுமோ, எம்பெருமானார் தாமே அருளிச்செய்து வைத்தாரன்றோ?" என்று சொன்னார். அவர் அருளிச் செய்தது யாது என்று கேட்க, முன்பு ஒரு புணர்ந்துடன் போக்கிலே பிறந்த ப்ரமாதத்தைக் (கவனக்குறை வினைக்) கேட்டு அதனை நினைத்து இப்போது அஞ்சுகிறாள் என்று அருளிச்செய்தார் என்றார்.[198]

"காலை எழுந்திருந்து கரிய குருவிக் கணங்கள்
மாலின் வரவு சொல்லி மருள்பாடுதல் மெய்ம்மைகொலோ?"

என்கிறார் கோதை நாச்சியார். அதற்கு ஆச்சான் பணித்த தாகச் சீயர் கீழ்வரும் கருத்தினைத் தெரிவித்துள்ளார். "இவள்

195. பாவை 23-3,6.
196. 6.7.5-36.
197. 1.7.6-36.
198. பெ.தி. 3.7.3.

பிறந்த ஊரில் விலங்குகளுக்குத்தான் வேறு பொழுதுபோக்கு உண்டோ? கண்ணுறக்கந்தான் உண்டோ?'' என்று.[199]

(ஈ) பிள்ளை உறங்காவில்லிதாசர்

இவர் சோழ மன்னன் அகளங்கனின் பணியாளராய் இருந்தவர். இவ் அகளங்கன் இராமானுசரை வழிபட்டுப் போற்றியவன்.[200] உறங்காவில்லிதாசர் திருவெள்ளறையில் தோன்றியவர். வேடர் குலத்தைச் சேர்ந்தவர். இவர்தம் மனைவி பொன்னாச்சியார் என்பவர். இராமானுசரால் அரங்கனுடைய கண்கள் தம் மனைவியின் கண்களினும் அழகு மிக்கிருத்தலைத் தெளிந்து தம் மனைவியோடு அவர் திருவடிகளைச் சார்ந்தவர். பெருமாள் எழுந்தருளுங்கால் வாளின் பிடியிலே கைவைத்தவாறு, சிறு சலனம் நிகழ்ந்தாலும் தம்மை முடித்துக்கொள்ளக் கருதியிருப்பாராம். இதனால் இவரை 'மகாமதிகள்' என்றழைத்தனர்.[201] இவர் முதலியாண்டான் திருவடிகளை வணங்கிச் சீடன் இலக்கணத்தையும், கூரத்தாழ்வான் திருவடிகளை வணங்கி ஆசாரியன் இலக்கணத்தையும் வினவி அறிந்துகொண்டாராம்.[202] ஆழ்வான் கூறும் விளக்கங்களைக் கேட்கத் தொடங்கினால் இவர் கண்ணும் கண்ணீருமாய்ச் சில சொற்கள் கூறி உருகுவாராம். ஆழ்வான் இவரது இத்தன்மையினைக் கண்டு, மாபாடியம் கற்றுக் கருத்துகளை விளக்கும் தங்களைப் போலல்லாமல் இறைவன் குணத்தைப் பேசப்புக்கால் உருகும்படி பிறந்த இவரது பிறப்பே பிறப்பென்று போற்றியுள்ளார்.[203] பெரிய திருநாளில் புனிதநீர் வழங்கிப் பெருமாள் எழுந்தருளுகிறபோது எம்பெருமானார் தாமும் நீராடி வணங்கி எழுந்தருளுபவர் பிள்ளை உறங்காவில்லிதாசர் திருக்கை கொடுத்துவர வந்தாராம்.[204] எம்பார் சொற்பொழிவுகளையும் இவர் கேட்டுள்ளார்.[205]

ஒரு சமயம் சிலர் அரையனுக்குப் போகும் பாலைக் களவு செய்தான் என்று இடையன் ஒருவனைக் கட்டியடித்தல் கண்டு, இவர் பரவசமுற்று, அதனால் வருவனவற்றிற்கெல்லாம் தாமே பொறுப்பு என்று கூறி, அவனை விடுவித்தாராம்.[206] இதனால் இடையன் அடியுண்ட நிகழ்ச்சியினைக் கண்டு கிருட்டினன்

---

199. நா.தி. 9.8.
200. வா. மாலை, வா. 190
201. 7.4.1-36; பெ.தி. 2.6.1.
202. வா. மாலை, வா.167,168.
203. தி.வி. 99.
204. வா. மாலை, வா.326.
205. 6.2.2-36.
206. தி.வி. 98.

களவுகண்டு அடியுண்டதனை நினைத்து நெகிழ்ந்த இவரது நீர்மை விளங்குகின்றது.

நம்மாழ்வார்,

"வேண்டித் தேவர் இரக்க வந்து பிறந்ததும் வீங்கிருள்வாய்ப்
பூண்டு அன்று அன்னை புலம்பப்போய் அங்கோர்
ஆய்க்குலம் புக்கதும்"

என்று கண்ணன் பிறந்தவாற்றைப் பாடுகிறார். இதில் வரும் 'வீங்கிருள்' என்பதற்குக் கண்ணனைக் கம்சனிடமிருந்து காத்தது இருள் என்பதனால், "இருளாலேயிறே நாம் பிழைத்தது! இனி இவ்விருளைச் சரணம் புகுமித்தனையிறே" என்று கூறுவாராம்.[207] "கஞ்சன் வலைவைத்த அன்று காரிருள் எல்லில் பிழைத்து" என்னும் நாச்சியார் திருமொழி விளக்கத்திலும் இக்குறிப்பு இடம் பெற்றுள்ளது.[208]

"மண்ணுண்டும் பேய்ச்சி முலையுண்டும் ஆற்றாதாய்
வெண்ணெய் விழுங்க வெகுண்டு ஆய்ச்சி-கண்ணிக்
கயிற்றினால் கட்டத்தான் கட்டுண் டிருந்தான்
வயிற்றினோ டாற்றா மகன்"

என்பது பேயாழ்வார் பாசுரம். இதற்கு எவ்வளவு இட்டாலும் நிறையாத வண்ணான் தாழி போன்றது போலும் அவன் வயிறு என்னும் கருத்தில் 'வயிற்றை வண்ணானுக் கிட்டாலோ' என்பராம்.[209]

"அன்னை முனிவதும் அன்றிலின் குரலீர்வதும்
மன்னு மறிகடல் ஆர்ப்பதும் வளைசோர்வதும்
பொன்னம் கலையல்குல் அன்னம் மென்னடைப் பூங்குழல்
பின்னை மணாளர் திறத்தம் ஆயின பின்னையே"

என்னும் பாட்டில், தலைமகள் "பின்னை மணாளனைச் சார்ந்த பின்பன்றோ இத்துன்பங்கள் நேரிடுகின்றன. அவனோடு ஒரு தொடர்பு சொல்லி வருத்தும் இவற்றை மகிழ்வோடு ஏற்றுக் கொள்வேன்" என்று கூறுவதாக இவர் நயங் கூறியுள்ளார். இதனை, அத்திருமொழியில் முன்னும் பின்னும் உள்ள பாக்களின் போக்கிற்கு மாறுபட்டு அமைவதாகக் காரணங் கூறி மறுத்துள்ளார் பெரியவாச்சான் பிள்ளை.[210]

"அம்பன்ன கண்ணாள் அசோதை" என்பதற்குத் "தாயின் முகம் அமைந்த பிள்ளை பேறுபெற்றவன்" (தந்யோ மாத்ரு

207. 6.4.5-36.
208. நா.தி. 3.9.
209. மூ.தி. 91.
210. பெ.தி. 11.2.5

முகஸ்ஸுத:) என்பதனையொட்டிப் "பிள்ளைக்குத் தாய்வழி யாகாதே கண்" என்று கூறுவராம்.[211]

இவர் கூறியுள்ள உரைகளை நோக்கின், இவர் முறையாகப் பாசுரங்களுக்கு விளக்கம் சொன்னவராகத் தோன்றவில்லை. மற்றவர் விளக்கங்களைக் கேட்டபோது இடையிடையே தம் உள்ளத்தெழுந்த கருத்துகளைக் கூறியுள்ளார் என்றே எண்ண வேண்டியுள்ளது.

(உ) வங்கிபுரத்து நம்பி

இவர் இராமானுசர் மாணாக்கருள் ஒருவர். வங்கிபுரத் தாச்சி என்பவரின் மைந்தர்.[212] பெருமானது அருள் ஆய்ச்சி யரிடையே பள்ளமடையாய் இருக்கும் என்று கருதி அவர்கள் பக்கல் நின்று பெருமானை 'விஜயஸ்வ, விஜயீபவ' என்று வடமொழியால் வணங்கினார் என்று வரும் குறிப்பு இவர் தம் வடமொழிப் புலமையினை உணர்த்தும்.[213]

இவர் தந்த மூன்று விளக்கங்கள் உரைகளில் காணப்படு கின்றன.

1) நம்மாழ்வார் "மேகலையில் குறைவில்லா மெலிவுற்ற அகலல்குல் போகமகள்" என்று உஷையைக் குறிப்பிடுகிறார். இங்கு "மற்றையோர் ஆடையில்லாமல் இருக்கிறார்களோ? இவளை மேகலையால் குறைவில்லா என்று குறிப்பது ஏன்?" என்னும் ஐயம் எழலாம். அதனை உட்கொண்டு, "உஷைக்குக் கூறை உடை அழகியதாய் இருக்கும்போலே காண்" என்று கூறுவராம்.[214]

2) "பால துன்பங்கள் இன்பங்கள் படைத்தாய்" என்னும் பாட்டு, தலைமகளின் துயரப் பேச்சினை மட்டும் சொல்லித் தாயாரது முடிவுரை ஏதுமின்றி முடிகின்றது. அதற்கு "இப் பாசுரத்தில் ஒரு தலைக்கட்டு (முடிவு) இன்றிக்கே இருப்பதற்குக் கருத்துத் தலைமகள், நீக்க முடியாதவாறு துயர முற்றாள்; நாம் இவர்க்குச் சொல்வது என்? என்று தன்னிலே நோவுபடுகிறாள்" என்று விளக்கம் கூறியுள்ளார்.[215]

3) "விளரிக் குரல் அன்றில் மென்பெடை மேகின்ற முன்றில் பெண்ணை" என்பது திருவிருத்தம். இதனை விளக்கும்போது முற்றத்தில் பனை நடலாமா என்று சிலர் வினவினர். "அதுவோ

---

211. பெ.தி. 6.8.6.
212. பெரிய திருமுடியடைவு, பக். 26.
213. 9.2.8-36.
214. 4.8.9-36.
215. 7.2.7-24,36.

இவர் காரியம் தளிரும் முறியுமாய்ச் செல்லுகிறது" என்று துயரம் மிக்கதாயிற்று என்பதனை வஞ்சப் புகழ்ச்சியாக அருளிச்செய் தாராம்.[216]

இவர் சுவையான விளக்கங்கள் தந்தவர் என்று தெரிகின்றது.

(ஊ) பிள்ளைப் பிள்ளையாழ்வான்

கூரத்தாழ்வான் மாணாக்கர். கூரத்தாழ்வான் சீடரான வீர சுந்தர பிரமராயன் ஒரு மதில் கட்டும்போது இவருடைய திருமாளிகைக்கு இடையூறு செய்தான். அதனால் மனவருத்தம் கொண்டு பட்டர் திருக்கோட்டியூருக்கு எழுந்தருளினார் என்பர்.[217] கூரத்தாழ்வான் இவர் மடியில் முடியை வைத்துக் கொண்டு திருநாட்டுக்கு எழுந்தருளினர்.[218]

"புள்ளும் சிலம்பின காண்" என்னும் திருப்பாவைத் தொடர்,[219] "சிரீதரன் தொல்புகழ்பாடி...உழலாதார் தம் பிறப்பால் பயன் என்னே சாது சனங்களிடையே?" என்னும் திருவாய் மொழி[220] ஆகியவற்றிற்கு இவர் உரை கூறியுள்ளார்.

"கண்ணும் செந்தாமரை கையும் அவை அடியோ அவையே
வண்ணம் கரியதோர் மால்வரை போன்று..."

எம்பிரானது எழில் என்பது திருவிருத்தம். இதில் பேற்றின் எல்லையான திருவடிகளைச் சொல்லிப் பின்னர்த் திருமேனியைச் சொல்கிறாரே, இஃது ஏன் என்னும் வினா எழக்கூடும். இதனை மனத்தில் கொண்டு "ப்ரஜை (குழந்தை) முலையிலே வாய் வைத்துத் தாய்முகத்தைப் பார்க்குமாபோலே" என்று உவமை காட்டி விளக்குகிறார்.[221] இவ்வுவமை "வாயிலே முலையிருக்க என் முகத்தே எழில்கொள் நின்திருக் கண்ணிணை நோக்கந் தன்னையும் இழந்தேன் இழந்தேனே" என்னும் பெருமாள் திருமொழியை[222] யொட்டி அமைந்துள்ளது.

(எ) உய்ந்த பிள்ளை

இவரை 'உஞ்ச பிள்ளை' என்று குறிப்பிடுகிறது பெரியாழ்வார் திருமொழி உரை.[223] இராமானுசர் காலத்தவர். 'திருவாய்

216. தி.வி. 83.
217. வா. மாலை, வா. 400
218. அண்ணங்கராசார்யர், 'பூர்வாசார்ய வைபவம்', சென்னை ரத்தனம் ப்ராஞ்சு அச்சுக்கூடம், 1970, பக். 64.
219. பாவை 6-3.
220. 3.5.4-36.
221. தி.வி. 44.
222. பெரு.தி. 7.7.
223. பெரி.தி. 2.1.1.

மொழிக்கு மெய்ப்பாடு தோன்ற ஆடிக்காட்டியவர். இவர் நஞ்சீயர் காலத்தவர் என்று 'ஸ்ரீ பகவத் விஷயம்' என்னும் நூல் குறித்துள்ளது.[224] இவர் உடையவர் காலத்தில் தோன்றி நஞ்சீயர் காலம்வரை வாழ்ந்த முதியவர் என்பது பொருத்தம்.

"பச்சிலை நீள்கமுகும் பலவும் தெங்கும் வாழைகளும்
மச்சணி மாடங்கள் மீதணவும் தண் திருவல்லவாழ்"

என்பதில் உள்ள 'பச்சிலை நீள்' என்னும் அடையினைப் 'பல'வோடு மட்டுமன்றிப் பிறவற்றோடும் கூட்டி இவர் விளக்குவர் என்பது சீயர் கூற்று.[225]

(ஏ) சிற்றாட் கொண்டான்

இவரைச் 'சிற்றாட்கொண்டார்' என்று குறிப்பிடுகிறது ஈடு.[226] "உன் சுடர்ச்சோதி மறையாதே."[227] 'அடியேனைப் பண்டே போல் கருதாதுன் அடிக்கே கூய்ப் பணிகொள்ளே"[228] ஆகிய திருவாய்மொழித் தொடர்கள் குறித்து இவர் தந்துள்ள சிந்தனைகள் உரைகளில் இடம்பெற்றுள்ளன; அவை உரையாக அமைந்தவை அல்ல. "தெளிவிசும்பு திருநாடாத் தீவினையேன் மனத்துறையும் துளிவார் கள் குழலார்க்கு" என்பதற்கு இவர் தந்துள்ள "பரமபதம் இடமாயிருக்க அதனைக் காற்கடை கொண்டு என் நெஞ்சிலே நிலையாக வாழ்பவன்" என்னும் பொருளை ஈடு "ஒவ்வொரு சமயங்களில் சொல்லிப்போம் கருத்து" என்று கூறி உடன்படவில்லை யெனினும் குறித்துச் செல்லுகின்றது.[229]

(ஐ) அரையர்கள்

திவ்வியப் பிரபந்தங்களின் பாசுரங்களை இசையோடு பெருமான்முன் விண்ணப்பம் செய்யும் தம்பிரான்மார்கள் அரையர்கள் என்று குறிக்கப் பெறுவர். அவர்களுள் ஒருவர் ஆப்பான் திருவழுந்தூரரையர். இவர் பட்டரின் விளக்கங்களைக் கேட்டவர். ஆப்பான் திருவழுந்தூர் அரையர் ஆச்ரயித்ததும் (சார்ந்ததும்) திருவாய்மொழி கேட்டதும் ஆழ்வானோடேயிறே"

224. அரங்கநாத முதலியார், ஆ., 'ஸ்ரீபகவத் விஷயம்', சுவர்ண விலாஸ், திருவல்லிக்கேணி, 1939, பக். 339.
225. 5.9.4-36.
226. 4.9.3-36.
227. 3.1.9-24,36.
228. 4.9.3-36.
229. 9.7.5-24,36.

என்று வரும் ஈட்டுரையால் இவர் கூரத்தாழ்வான் மாணாக்கர் என்பது விளங்குகின்றது.[230] பெருமானின் எளிவந்த திறம் பேசும் "வந்தருளி என் நெஞ்சிடம் கொண்ட வானவர் கொழுந்தே" என்னும் தொடரை முற்றும் சொல்ல முடியாமல் 'வந்தருளி' 'வந்தருளி' என்று சொல்லி மயங்குவராம்.[231]

"சங்கு சக்கரங்கள் என்று கைகூப்பும்" என்பதில் 'சங்கு சக்கரங்கள்' என்பதற்குப் பதிலாகச் 'சங்கு சக்கரம்' என்றிருந்தால் சரியாக இருக்கும் என்று கருதிய பிள்ளை திருநறையூரரையருக்கு, இசையிலே தூக்கினவிடத்து இரண்டும் இசைந்து கிடக்கையாலே 'சங்கு சக்கரங்கள்' என்று சொல்வது அமையும் என்று விளக்கந் தந்துள்ளார்.[232]

"திரியும் கலியுகம் நீங்கித் தேவர்கள் தாமும் புகுந்து
பெரிய கிதயுகம் பற்றிப் பேரின்ப வெள்ளம் பெருக"

என்பதில் உள்ள 'பெரிய கிதயுகம் பற்றி' என்பதனைத் தேவர்களுக்கு அடையாக்காமல், கிடந்தவாறே கொண்டு பெரிய கிருதயுகம் தொடங்கி என்று பொருளுரைத்துச் செல்கிறார்.[233]

"ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்
உனக்கோர்கைம்
மாறுநான் ஒன்றிலேன் எனதாவியும் உனதே"

என்னும் திருவாய்மொழியினை, "சரண் ஆறாக எனக்குத் தந்தொழிந்தாய்; நின் பாதமே, எனது ஆவியும் உனதே" என்று கூட்டி 'நின் பாதமே' என்பதனைச் சூளுரையாக்கிப் பொருள் கூறுகிறார்.[234]

"எம்மை, மாற்றோலைப் பட்டவர் கூட்டத்து வைத்துக்கொள்கிற்றீரே" என்னும் நாச்சியார் திருமொழியில் 'மாற்றோலைப் பட்டவர்' என்பதற்குத் திருமலை நம்பி, எம்பார் ஆகியவர்கள் கூறிய பொருளிலும் வேறாக, இறைவனால் நமக்குப் பகைவர் என்று ஓலை எழுதப்பெற்றவர் என்று உரை கூறியுள்ளார்.[235] இதனை இவர் ஆழ்வானிடம் கேட்டிருக்கலாம் என்பர் பெரிய வாச்சான் பிள்ளை.

இவரேயன்றி வேறு அரையர் இருவரும் உரை வளர்ச்சிக்குத் தொண்டாற்றியுள்ளார்.

---

230. 9.1.0-36.
231. 5.7.7-36
232. 7.2.1-24.
233. 5.2.3-36.
234. 5.7.10-36.
235. நா.தி. 10.2.

அவர்களுள் பட்டர் காலத்தைச் சேர்ந்த பிள்ளை அழகிய மணவாளர் அரையர் என்பவர் தாம் பட்டரிடம் கேட்டறிந்ததாக மூன்று விளக்கங்களைத் தெரிவித்துள்ளார்; ஆனால் தாம் எவ்வகை விளக்கமும் செய்யவில்லை.[236] ஐயன் திருக்குருகைப் பெருமாளரையர் என்பவர் "உணங்கல் கெடக் கழுதை உதடாட்டம் கண்டு என்பயன்?" என்பதற்குத் தலைமகன் இளைப்புக் கெடப் பேய்க்கு ஆடும் கள்ளும் (அவன் சுற்றத்தார்) கொடுக்க, அப்பேய் அவற்றை உண்ணும்போது அதன் உதடுகள் அசைதலைப் பார்த்துக்கொண்டிருத்தலால் என்ன பயன் என்று உரை கூறியுள்ளார்.[237]

(ஓ) சிறியாத்தான்

இவர் பட்டர் காலத்தில் வாழ்ந்தவர். வங்கிபுரத்து நம்பிகள் திருவடி பற்றியவர். "சிறியாத்தானைப் போலே பசும்புல் சாவ மிதியாதவர்", "சிறியாத்தானைப் போலே பரம தார்மிகராயிரே யிருப்பது", "ப்ரணாமம் பண்ணினபடி தோற்ற உடம்பெல்லாம் தழும்பாக, சிறியாத்தானைப்போலே" என்று வரும் குறிப்புகள்[238] இவர்தம் பண்புகளைத் தெரிவிக்கின்றன.

"தூவிரிய மலருழக்கித் துணையோடும் பிரியாதே" என்னும் பெரிய திருமொழித் தொடருக்கு,"துணையென்றால் த்விநிஷ்ட்ட மன்று காண் (இருவரைப் பற்றியதன்றுகாண்) ஏகாச்ரயத்திலே (ஓரிடத்திலே) கிடக்கும்" என்று கூறுவராம்.[239]

இவர், "நால்வேதங் கண்டான்" என்பதற்குப் பட்டர், "இது கர்த்திரியன்று, கர்மணி கிடாய்" (செய்வினை அன்று, செயப்பாட்டு வினை) என்று கூறியதாகச் சொல்வராம். அதாவது நால்வேதங்களைக் கண்டவன் என்பது பொருளன்று; நால் வேதங்களால் காணப்பட்டவன் என்பது பொருள்[240] என்பது பட்டரது கருத்தாகும்.

(ஔ) கோயிலாய்த்தான் (கோயிலாச்சான்)

பட்டர் திருக்கூட்டத்துள் ஒருவர். இவர் 'கோயிலாச்சான்' என்றும் குறிக்கப் பெறுகிறார்.[241] இவரைப் பற்றிய நிகழ்ச்சி

---

236. பெ.தி. 1.3.5; பெ.தி. 2.3.5. நா.தி. 4.1.
237. 4.6.7-36.
238. பாவை 1-3,6; நா.தி. 13.6; பெரு.தி. 2.5.
239. பெ.தி. 3.6.1.
240. பெ.தி.8.10.1
241. க.நு.சி. 3, நம்பிள்ளை.

ஒன்று நம்பிள்ளையால் கண்ணிநுண் சிறுத்தாம்பு உரையில் குறிக்கப்பட்டுள்ளது. அதே நிகழ்ச்சியைக் குறிக்கும் பெரியவாச்சான் பிள்ளை கோயிலாச்சான் என்பதற்குப் பதிலாக 'பிள்ளையாத்தான்' என்று குறிப்பதால் இவருக்கு அப்படியொரு பெயரும் இருந்தது தெரிகின்றது.[242]

இவர் நம்பிள்ளையிடம் திருவாய்மொழி கேட்டார்; முதலில் அவரை வணங்குவதற்குத் தயக்கங் காட்டிய இவர் ''நாதனை, ஞாலமும் வானமும் ஏத்த'' என்னும் பாசுரங் கேட்ட பின் தம் செயலுக்கு வருந்தி நஞ்சீயரைக் கொண்டு நம்பிள்ளையைத் தம் வணக்கத்தினை ஏற்க இசைவித்து வணங்கினார் என்பது ஈடு தரும் செய்தி.[243] இவர்,

''விண்ணோர் முனிவர்க் கென்றுங் காண்பரியாயை
நண்ணா தொழியேன் என்றும்நான் அழைப்பேனே''

என்பதில் 'நண்ணாதொழியேன்' என்பதற்கு 'அவனைக் கிட்டா தொழியில் நான் தரியேன்' என்று உரை கூறுவராம்.[244]

(ஔ) தமிழ்ப் புலவர்கள்

இவ்வுரைகளில் தமிழர் சொன்ன உரைகள் இருபத்து மூன்று இடங்களில் வருகின்றன.[245] தமிழர் கூறிய உரைகள் சில பெயரின்றி இவ்வுரைகளில் கலந்து கிடக்கின்றன.

''சாய்கொண்ட இம்மையும் சாதித்து வானவர் நாட்டையும்
நீ கண்டு கொள்ளென்று வீடுந்தரும் நின்று நின்றே''

என்பதில் 'நின்று நின்றே' என்பதற்குத் "தருமிடத்தே அடைவடைவே தரும் என்றுமாம்" என்று நஞ்சீயர் எழுதியுள்ள உரை தமிழர் கூறியது என்பது பெரியவாச்சான் பிள்ளையும் நம்பிள்ளையும் எழுதியுள்ள உரைகளிலிருந்து தெரிய

---

242. க.நு.சி. *3*, பெரி.

243. *3.7.3-36*

244. *9.4.2-24,36.*

245. *(1) 3.9.2-24; (2) 3.9.7-24,36; (3) 3.9.9-36; (4) 4.2.5-24; (5) 4.5.6-24,36; (6) 4.6.2-24,36; (7) 4.6.5-24; (8) 4.8.2-24,36; (9) 41.10.1-24; (10) 5.4.6-24,36; (11) 5.4.7-36 (12) 5.9.7-24; (13) 5.10.1-24; (14) 6.6.5-24; (15) 7.3.2-36; (16) 7.5.8-24; (17) 7.7.2-24; (18) 7.7.6-36; (19) 8.2.2.24,36; (20) 9.6.6-36; (21)* தி.ச.வி.*81; (22)* பெ.தி. *2.7.1; (23)* பெ.தி. *2.7.2.*

வருகின்றது.[246] ''ஒன்றும் தேவும்'' என்பதற்கு நஞ்சீயரும் நம்பிள்ளையும் வகுத்துள்ள உரை தமிழர் கூறியது என்பது இருபத்து நாலாயிரப்படியால் வெளிப்படுகின்றது.[247]

சில இடங்களில் தமிழர் கண்ட உரையே பொருத்தமாக அமைந்துள்ளது. ''குளனார் கழனிசூழ் கண்ணன் குறுங்குடி'' என்பதில் உள்ள கண்ணன் என்பதற்கு எம்பெருமான் என்று உரை கூறியுள்ளனர், நஞ்சீயரும், பெரியவாச்சான் பிள்ளையும், நம்பிள்ளையும். தமிழன் உரையாகக் காட்டப்படுவதனைப் பின்னவர் இருவரும் இரண்டாவதாகக் குறித்துச் சென்றுள்ளனர். ஆனால் பன்னீராயிரப்படிகாரர் கண் நல் குறுங்குடி எனப் பிரித்துத் தமிழன் கூறிய ''இடமுடைத்தாய் நன்றான குறுங்குடி'' என்பதனையே உரையாகச் சுட்டியுள்ளார் என்பது கருதத் தக்கது.[248]

தமிழ்ப்புலவர்கள் 'இல்' என்பதனை ஆசாரியப் பெருமக்களைப்போல ஏழாம் வேற்றுமை உருபாகக் கொள்ளாமல் 'இல்லை' என்பதன் வேற்று வடிவமாகக் கொண்டு ஈரிடங்களில் உரை எழுதிச் சென்றுள்ளனர். ''பாரிலோர் பற்றை'' என்பதை மற்றவர்கள் பாரில் ஓர் பற்றை என்று பிரித்துப் பூமியிலே தூறுபோலே பயனின்றி இருப்பதொரு பொருளை என்று உரைவகுக்க, இவர்கள் பார் இல் ஓர் பற்றை என்று பிரித்துக் குடிப்பற்று இன்றிக்கே கைப்பட்டதை இறுகப் பிடித்து ஒருவர்க்கு ஒன்று ஈயாதவனை என்று உரை கூறியுள்ளனர்.[249]

இதுபோலவே ''வேண்டிச் சென்றொன்று பெறுகிற் பாரில் என்னுடைத் தோழியர் நுங்கட்கு'' என்பதில் 'பெறுகிற்பாரில்' என்பதனை ஏழாம் வேற்றுமை உருவு 'இல்' சேர்ந்த பெயராகக் கொண்டு ஆசாரியர்கள் வெவ்வேறு உரை எழுதிச் செல்லத், தமிழன் ஒருவன் ''வேண்டிச் சென்று ஒன்று பெறுகிற்பார் இல்'' என்று வேறு வகையாகப் பிரித்து 'இல்' என்பதனை 'இல்லை' என்பதன் வேறு வடிவமாகக்கொண்டு, பெருமானை வேண்டிச் சென்றாரில் ஒன்றும் பெற்றாரில்லை என்று உரை வகுத்துள்ளான்.[250]

''கரிய மேனி மிசை வெளிய நீறு சிறிதே யிடும்'' என்பதனைக் ''கரி அம் மேனிமிசை வெளிய நீறு சிறிதேயிடும்'' என்று பிரித்துக் ''குவலயாபீடமானது அழகிய திருமேனியிலே சீற, அதனைப்

246. 3.9.9-9,24,36.
247. 4.10.1-24.
248. 3.9.2-9,12,24,36.
249. 3.9-7-36.
250. 8.2.2-36.

பொடியாக்கும்" என்று கூறியுள்ள உரை தமிழன் கண்ட செயற்கை உரையாகத் தோற்றுகிறது.[251]

தமிழை மட்டும் நன்கு அறிந்த ஆசாரியரல்லாத இவர்கள் சொன்ன விளக்கங்களும் உரைவளர்ச்சிக்கு உதவியாய் அமைந்தன.

இவ்வாறு பல்வேறு பெருமக்களின் சிந்தனைகளும் கலக்கப் பெற்றதால் செழுமை மிக்க உரைகள் எழுத்து வடிவில் வருவது எளிமையாயிற்று. இச்சொல்லேர் உழவர்கள் பதப்படுத்தி வைத்த கருத்து வயல்களிலிருந்து எழுத்துருவ உரைப்பயிர்கள் முளைத்துத் தழைத்து வளர்ந்தன எனலாம்.

முடிபுகள்

வைணவ உரைகளில் ஆசாரியர்களைப் பற்றிய சில புதிய குறிப்புகள் கிடைக்கின்றன. ஆசாரியர்கள் தந்த விள்க்கங்கள் புதிய உரைப்போக்குகள் சில உருவாவதற்கும் வளமான எழுத்துரைகள் எழுவதற்கும் அடியாய் அமைந்தன.

---

251. 4.5.6-24,36.

2. வைணவ உரையாசிரியர்கள்

எழுத்து வடிவில் உரைகள்

இராமானுசர் காலம்வரை திருவாய்மொழிக்கு விளக்கங்கள் சொல்லப்பட்டு வந்தனவே தவிர, எழுதப்படவில்லை. இராமானுசரின் கட்டளையையொட்டி முதன்முதலாகத் திருவாய்மொழிக்குத் திருக்குருகைப்பிரான் பிள்ளான் உரை எழுதிப் புதிய வரலாறு தோற்றுவித்தார்.[1] அவரைத் தொடர்ந்து பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை, வாதிகேசரி அழகிய மணவாள சீயர், அழகிய மணவாளப் பெருமாள் நாயனார், மணவாள மாமுனிகள் ஆகியோர் திவ்வியப் பிரபந்தங்களுக்கு உரை எழுதினர். அவர்தம் வரலாறும் உரைப்பணியும் உரைகளில் காணும் குறிப்புகள், மரபுவழிச் செய்திகள் ஆகியவற்றின் துணைகொண்டு ஒழுங்குபடுத்தி வரையப்படுகின்றன.

1. திருக்குருகைப்பிரான் பிள்ளான்

வாழ்க்கைக் குறிப்பு

திருப்பதியில் பெரிய திருமலைநம்பியின் மகனாகத் தோன்றிய இவர் இராமானுசரின் அறிவுப் பிள்ளையாகவும் (ஞானபுத்திரராக), மாணாக்கராகவும் விளங்கினார். பிள்ளான் என்பது இவர்தம் இயற்பெயர். இவருக்கு நம்மாழ்வாரின் நினைவாகத் திருக்குருகைப்பிரான் பிள்ளான் என்று இராமானுசர் பெயர் சூட்டினார். இவர் திருவரங்கத்தையே தம் வாழ்பதியாகக் கொண்டவர். எழுபத்து நான்கு சிம்மாசனாதிபதிகளுள் ஒருவராய் விளங்கியவர். இராமானுசர், எம்பார் ஆகியோர் காலத்துக்குப் பின்னும் வாழ்ந்தவர். நஞ்சீயர் ஒருநாள் கோயிலுக்குச் செல்லும் வழியில் இவரைக் கண்டு, இறைவனுக்கு ஸ்வருப வ்யாப்தி (தன்னில் நிறைந்திருத்தல்) மட்டும்தானா, விக்ரஹவ்யாப்தியும் (விக்கிரகத்தில் நிறைந்திருத்தல்) உண்டோ

---

1. உபதேச ரத்தின மாலை 36; 40.

என்று கேட்டாரென்றும், அதற்கு இவர் இராமானுசர் ஸ்வரூபவ்யாப்தியாய்த் தோற்ற அருளிச்செய்தார் எனினும், எம்பார் ஒருநாள் உபாஸகாநுக்ரஹார்த்தமாக (வழிபாட்டிற்குப் பாங்காயிருத்தற்பொருட்டு) அடியாருடைய நெஞ்சிலே விக்கிரஹத்தோடு நிறைந்திருக்கும் என்று சொன்னார் என்றும் ஈட்டில் வருவது இதனை உறுதிப்படுத்தும்.[2]

இவரது இறுதி நேரத்தில் நஞ்சீயர் இவரைச் சென்று கண்ட நிகழ்ச்சி ஈட்டில் குறிக்கப்பட்டுள்ளது. அப்பொழுது இவர் "கூவிக் கொள்ளுங் காலம் இன்னங் குறுகாதோ?" என்று பலகால் கூறக் கேட்டு, நஞ்சியர் அழுதார். அதனைக் கண்ட இவர், "சீயரே! நீர் ஏன் கிடந்து அழுகிறீர்? அங்குப் போய்ப் பெறும் பேறு இதனினும் தாழ்வானதாகத் தோற்றி இருந்ததோ?" என்றாராம்.[3] இதனால் இவரது தெளிந்த சிந்தையினை உணரலாம்.

ஆறாயிரப்படி உரைகாணல்

ஆசாரியர்கள் எல்லாரும் ஒன்றுகூடித் திருக்குருகைப்பிரானை அடைந்து, ஆழ்வார்களின் பாசுரங்களுக்கு அனைவரும் பொருள் உணரத்தக்க முறையில் உரையொன்று காணவேண்டும் என்று இராமானுசரிடம் தெரிவிக்கக் கோரினர். இராமானுசர் திருவோலக்கத்தில் இருக்கும்போது, பிள்ளான் அவர்பால் "வேத வியாசர் அருளிச்செய்த பிரமசூத்திரத்தின் மெய்ப்பொருளை உலகம் அறியுமாறு மாபாடியம் செய்ததுபோலத் திருவாய்மொழி முதலான நூல்களுக்கும் உரை செய்தருள வேண்டும்" என்று பணிவோடு தெரிவித்தார். அவர் அதனைக் கேட்டு ஆழ்ந்து சிந்தித்து, "நாம் அருளிச்செயலுக்கு உரை எழுதினால், குறையறிவினர் 'இதற்கு இவ்வளவே பொருள்' என்று கருதுவர். அங்ஙனம் நினைத்தால் அது பெரும்பிழையாகும். ஆழ்வார் பாசுரங்களுக்குப் பொருள் அவரவர் அறிவுக்கும் பக்திக்கும் தக்கவாறு சுரக்கும். ஆகையால் நாம் செய்யின் அருளிச்செயலுக்கு வரம்பு கட்டியது போன்றாகும். நீரே திருவாய்மொழிக்கு ஒருபடி உரை செய்யும்" என்று பணித்தார். பிள்ளானும் அவர் பணித்தவாறு திருவாய்மொழிக்கு ஆறாயிரப்படி உரை கண்டார்.[4]

---

2. 7.3.1-36; 5.5.7-36　　3. 6.9.9-36.
4. கோயில் கந்தாடை அண்ணா அப்பங்கார் ஸ்வாமி, பழநடை விளக்கம், சென்னை, 1891, பக்.35.

இவ்வுரைத் தோற்றம் குறித்து வேறுவகையாகக் கூறுவாரும் உண்டு. ஒருநாள் இரவு, உண்டபின் இராமானுசர் தம் இருப்பிடத்தில் "எனது ஆவியுள் கலந்த பெருநல் உதவிக் கைம்மாறு" என்னும் திருவாய்மொழிப் பாசுரத்திற்கு மெய்ப்பாடு காட்டியவாறு நடந்து கொண்டிருந்தார். அப்பொழுது கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த திருக்குருகைப்பிரான்பிள்ளான் அதனைக் கண்டு, "'எனது ஆவியுள் கலந்த பெருநல் உதவிக் கைம்மாறு' பாசுரம் திருவுள்ளத்தில் ஓடுகிறது போலும்" என்றார். பிள்ளான் கூறியதைக் கேட்டுப் பெரிதும் மகிழ்ந்த இராமானுசர் அவரைத் தழுவிக்கொண்டு, "திருவாய்மொழிக்கு ஓர் உரை காணவேண்டும் என்பது என் நெடுநாள் விழைவு. எனக்கு அது நேராமற் போயிற்று. என் உள்ளமும் நும் உள்ளமும் ஒன்றாக இருத்தலை உணர்கின்றேன். ஆதலின் நீர் என்பொருட்டு உரைகாண வேண்டும்" என்றார். எம்பெருமானார் விருப்பத்திற்கு இசைந்து பிள்ளான் ஆறாயிரப்படி உரை வரைந்தார் என்பர்.[5]

திவ்வியப் பிரபந்த விளக்கச் சொற்பொழிவாளர்

ஆறாயிரப்படி உரை எழுதுவதற்கு முன்னரும், எழுதிய பின்னரும் திவ்வியப் பிரபந்தங்களுக்கு விளக்கச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். திருவாய்மொழி, திருவிருத்தம், பெரிய திருமொழி, பெரியாழ்வார் திருமொழி ஆகியவற்றின் உரைகளில் இவருடைய ஆட்சிகள் இடம்பெற்றுள்ளன. இவர்தம் ஆட்சிகளாக ஈட்டிலும் இருபத்து நாலாயிரப் படியிலும் வருவனவற்றுள் பல இவரது உரையிற் காணப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

சொற்பொழிவுகளில் கூறிய சிறப்புரைகள் : ஆறாயிரப்படியில் காணப்படாத உரைவிளக்கங்கள்

இவரால் சொற்பொழிவுகளில் கூறப்பெற்றனவாக ஈட்டிலும் இருபத்து நாலாயிரப்படியிலும் கீழ்க்கண்ட உரைகள் குறிக்கப் படுகின்றன.

1) "மத்துறு கடைவெண்ணெய் களவினில் உரவிடை யாப்புண்டு,
எத்திறம் உரலினோ டிணைந்திருந் தேங்கிய எளிவே"

---

5. இவ்வரலாறு கர்ணபரம்பரைச் செய்தி என்று சொல்லி இதனை இக்கட்டுரையாளனுக்குத் தெரிவித்தவர் மயிலைத் தேசிக பவனத்தில் உறைந்த அமரர் ஸ்ரீமத் இராஜகோபால சுவாமியாவார்.

என்னும் திருவாய்மொழியில் 'கடைவெண்ணெய்' என்பது முக்காலத்திலும் உள்ள வெண்ணெயைக் காட்டும் வகையில் வினைத்தொகையாய் அமைந்துள்ளது. இதனை நிகழ்காலத்தில் "கடைகின்ற வெண்ணெய்" என்று பொருள் விரித்துக்கூறுதல் சிறப்புடைத்து என்று கூறிக் "கடையாநிற்கச் செய்தே, பசியரா யிருக்குமவர்கள் சோறு சமையப் பற்றாமல் வெந்தது கொத்தை யாக வாயிலிடுமாபோலே, கடையப் பற்றாமல் நடுவே அள்ளி அமுதுசெய்யும்படியைச் சொல்லுகிறது" என்று விளக்குவார் என்று ஈடும், "கடைகின்ற பராக்கிலே ஒதுங்கிச் சாபலாதிசயத் தாலே (மிகுந்த ஆசையாலே) அள்ளி அமுதுசெய்யும் போலே காண்" என்று பணிப்பர் என்று இருபத்து நாலாயிரப்படியும் குறிப்பிடுகின்றன.[6] ஆறாயிரப்படியில் "மத்துறு கடைவெண்ணெய் களவினில்" என்ற பாசுரத் தொடரே அமைந்துள்ளதன்றி விள்க்கம் யாதுமில்லை.

2) தலைமகள், "ஆடி ஆடி அகம் கரைந்து, இசை பாடிப் பாடிக் கண்ணீர் மல்கி" வாடுகிறாள் என்று வருந்துகிறாள் திருத்தாயார். இதில் "கண்ணீர் மல்கி" என்பதற்கு "ஆரைச் சேதநராகக் கொண்டு?" என்பதனை உரையாகக் கூறுவாராம்.[7] அஃதாவது பெருமாள் அருகில் இல்லாதிருக்க இக்கண்ணீருக்குப் பயன் ஏதுமில்லை என்னும் கருத்தில் யாருடைய இன்பத்திற் காகக் கண்ணீர் வடிக்கிறாள் என்று வினவுகிறார். இதற்கு "ஆநந்தாச்ருவுக்கு யோக்யமான (இன்பக்கண்ணீர் வடித்தற் குரிய) கண்களாலே சோ'காச்ரு (துயரக்கண்ணீர்) ப்ரவஹிக்கிறது (மல்குவது) ஆர்குடி வேரற" என்று பட்டர் கூறியுள்ள விளக்கத்தினை விடுத்துப் பிள்ளான் விளக்கத்தினையே நம்பிள்ளை விளக்கிச்செல்வது பிள்ளானது விளக்கத்தின் சிறப்பினை உணர்த்தும்.

3) "வதுவை வார்த்தையுள் ஏறு பாய்ந்ததும் மாய மாவினை
வாய்பிளந்ததும்
மதுவைவார் குழலார் குரவைபிணைந்த குழகும்
அதுஇது உதுஎன்னல் ஆவன அல்ல என்னையுன்
செய்கை நைவிக்கும்"

என்பதில் வரும் "அது இது உது" என்னும் சுட்டுகளுக்கு "இத்தால் சொல்லிற்றாயிற்று - இப் பாட்டில் மூன்றர்த்தம் (மூன்று பொருள்) சொல்லாநின்றது, அதாவது - அநுகூல ஸம்ச்லேஷமும் (பாங்கானார் கலவியும்), ப்ரதிகூல நிரஸநமும் (பகையானார்

6. 1.3.1-36, 24. 7. 2.4.1-36.

அழிவும்), மத்யஸ்த்த ரக்ஷணமுமான (இடைப்பட்டவர் காப்பு மான) இவற்றை-அது இது உது என்கிறது" என்று பிள்ளான் பணிப்பராம்.[8] நப்பின்னை போன்று நெருக்கமானாரோடு கலத்தலையும், கேசி போன்று பகையானாரை அழித்தலையும், இவ்விருவரையும் போலன்றி இருக்கும் மதுவார் குழலாரைக் காத்தலையும் சொல்கிறது என்பது பிள்ளான் கருத்து. இவ்வாறு விளக்கம் ஏதுமின்றி "எல்லா சேஷ்டிதங்களும்" (எல்லாச் செயல் களும்) என்பதே ஆறாயிரப்படியில் உள்ளது.

4) பெருமானுடைய மாயச் செயல்களையே "காணும் நெஞ்சுடையேன், எனக்கு இனி என்ன கலக்கம் உண்டே?" என்று வினவுகிறார் நம்மாழ்வார். இதில் "காணும் நெஞ்சுடை யேன்" என்று வருகிறதே இஃது எப்படிப் பொருந்தும்? காண்பது கண்ணின் செயலன்றோ? என்னும் ஐயந் தோன்றும். அதனையுட் கொண்டு "முடியானேயிற் கரணங்களையுடைய ஆழ்வாராகை யாலே, நெஞ்சு தானே நினைக்கவும் வற்றாய்க் காணவும் வற்றாயிருக்கும்" என்று விளக்குவாராம்.[9] 'முடியானே'யில் ஆழ்வார் தம் பொறிகள் ஒவ்வொன்றும் பிற பொறிகளால் நுகரக்கூடிய பொருள்களை ஆசைப்பட்டு நின்ற அன்பின் மிகுதி யைச் சொல்கிறார். அதனை நினைவிற்கொண்டு இவ்விளக்கம் தரப்பட்டுள்ளது. ஆனால், ஆறாயிரப்படியில் "அநுஸந்திக்கும் (நினைக்கும்) நெஞ்சுடையேனான எனக்கு" என்பது மட்டுமே காணப்படுகிறது.

5) பெருமான் தன் திருமுடியின் அழகைக் காட்டித் தம்மை நலிவிக்கிறான் என்கிறார் நம்மாழ்வார். "துயரங்கள் செய்யுங் கண்ணா சுடர் நீண்முடியாய்!" என்பது அவரது வாக்கு. இதனை முந்தைய திருவாய்மொழியோடு இயைபுபடுத்தி, "'முற்றஇம் மூவுலகும் விரிகின்ற சுடர்முடிக்கே ஒற்றுமை கொண்டது' என்கிறது பின்னாட்டுகிறது" என்று விள்க்கம் கூறுவராம்.[10] இக்குறிப்பு உரையில் இல்லை. "உன்னுடைய திருவபிஷேகத்தில் அழகாலே நலியும் க்ருஷ்ணனே, அப்படியே விபூதியினுடைய ஆச்சர்யத்தாலேயும் நலிவுபடாமே தெளிவிக்க வேணும்" என்பதே ஆறாயிரப்படி உரை.

இருவகை விளக்கங்கள்

சிலவற்றிற்குத் தாம் நிகழ்த்திய சொற்பொழிவில் ஒருவகை யாகவும் எழுதிய உரையில் ஒருவகையாகவும் விளக்கம் தந்துள்ளார்.

---

8. 5.10.2-36.
9. 6.4.8-36, 24.
10. 7.8.7-36.

1) தலைமகள் "கிளிகளே! பெருமானைக் கண்டு 'மெய்யமர் காதல் சொல்லி' விரைந்தோடி வந்து என் கையிலிருந்து நெய்யமர் இன்னடிசில் ஏற்று வாழுங்கள்" என்கிறாள். இதில் மெய்யமர் காதல் என்பதற்குத் "தம்மைப் போலே பொய்யாய் நிலையில்லாத காதலன்று எங்களது என்று சொல்லுங்கோள்" என்கிறாள் தலைமகள் என்று கூறுவராம்.[11] ஆறாயிரப்படியில் "அவளுக்கு உன் பக்கலுள்ள ஸ்நேஹம் மெய்யான ஸ்நேஹ மென்று அவனுக்குச் சொல்லி" என்பதே இதற்கு உரையாக வரையப் பட்டுள்ளது.

2) "அவன்கைய தேஎன தாருயிர் அன்றில் பேடைகாள்
எவம்சொல்லி நீர்குடைந் தாடு திர்புடை சூழவே?
தவம்செய் தில்லா வினையாட்டி யேனுயிர் இங்குண்டோ
எவம்சொல்லி நிற்றும்நும் ஏங்கு கூக்குரல் கேட்டுமே"

என்பது பராங்குச நாயகி அன்றில் பறவைகளை நோக்கிப் பேசும் பேச்சு. இதில் தலைமகள் தன்னைத் 'தவம் செய்தில்லா வினை யாட்டியேன்" என்று குறிப்பிடுகிறாள். இதற்குப் பிள்ளான் தம் ஆறாயிரப்படி உரையில், "எம்பெருமானோடு கலந்து பரிமாறுகைக்கு பாக்யஹீநையான (பாக்கியம் இல்லாதவளான) என்னுயிர்" என்று பொருள் கூறியுள்ளார். ஆனால், "அவனைப் போலே பிரிவுக்குச் சினையாதபடி பாக்யத்தைப் பண்ணப் பெற்றிலேன்" என்று வேறு வகையாகக் கூறுவர் என்று ஈடும் இருபத்து நாலாயிரப்படியும் தெரிவிக்கின்றன.[12]

3) 'பிறந்தவாறும்' திருவாய்மொழி விளக்கத்தில், ஆழ்வார், "ஸர்வேச்வரன் க்ருஷ்ணனாய் வந்து திருஅவதாரம் பண்ணித் திருவாய்ப்பாடியிலே வளர்ந்தருளாநின்றான் என்று கேட்டு அங்கே யதா மநோரதம் (விழைந்தவாறு) 'நமக்குக் கலந்து பரிமாறலாம்' என்று தெற்குத் திருவாசலிலே சென்று புக, 'இப்போது இங்ஙனே வடக்கில் திருவாசலிலே புறப்பட்டுத் தன்னுடைச் சோதியேற எழுந்தருளினான்' என்று கேட்டு விழுந்து கிடந்து கூப்பிடுகிறார்" நம்மாழ்வார் என்பாராம் பிள்ளான்.[13] ஆறாயிரப்படியில் இவ்விளக்கம் இடம்பெறாதது மட்டுமன்றி இதற்கு ஆழ்வான் தரும் வேறு விளக்கமே உரையாக அமைந்துள்ளது. சிரீவரமங்கலநகர், திருக்குடந்தை திருவல்ல வாழ்களில் எம்பெருமானோடு தாம் விரும்பியவாறு கூடிக் களிக்கப் பெறாமையால் மயங்கி, ஆழ்வார் பெருமான் மதுரை

11. 6.8.2-36, 24.
12. 9.5.3-36, 24.
13. 5.10.0-36.

யில் வசுதேவர் மகனாய்ப் பிறந்தருளின படியையும், வளர்ந்த படியையும் மீன் முதலான பிறப்பெடுத்துச் செய்த திருவிளையாடல்களையும் காணப் பெறாமையால் நினைக்கத் தொடங்கி நிலை குலைந்தார். அந் நிலைகுலைவைப் போக்கி நினைக்க வல்லராம்படி பண்ணியருளவேணும் என்று எம்பெருமானைத் தஞ்சமாகப் பற்றி முடிக்கிறார் என்பதே பிள்ளான் தம் உரையில் தந்துள்ள வேறு விளக்கம்.

பிற நயவுரைகள்

திருவாய்மொழியேயன்றி வேறு சில நூல்களுக்கும் இவர் கண்ட சிறப்பான உரைநயங்கள் உண்டு.

1) "பாரளந்த,
பேரர சே! எம் விசும்பர சே! எம்மை நீத்துவஞ்சித்த
ஓரர சே! அரு ளாய்இரு ளாய்வந் துறுகின்றதே"

என்பது திருவிருத்தம். இதில் "எம்மைநீத்து வஞ்சித்த ஓரரசே" என்பதற்கு "உபய விபூதிக்கும் (மண்ணாடு விண்ணாடு என்னும் இரண்டு உலகங்களுக்கும்) தனித்தனியே கடவனாய் இருப்பது போல, என்னை அகற்றி முடிக்கைக்கும் தனிமுடி சூடியிருக்கின்றவனே!" என்பது இவர் கண்ட நயவுரை.[14]

2) பெரிய திருமொழியில் தலைமகளைக் குறித்து இடவெந்தைப் பெருமானிடம் முறையிடும் திருத்தாயார், அவள் நம் குடிக்கு ஏதும் தக்கவா நினையாதவளாய் இருக்கிறாள் என்று சொல்வதற்கு மாறாகத் தன் குடிக்கு ஏதும் தக்கவா நினையாதவளாய் இருக்கிறாள் என்று கூறுகிறாள். இது வைணவ சமயத்தை எம்பெருமானார் தரிசனம் என்பது போன்றது என்று விளக்குகிறார் உரைகாரர். இங்கு எம்பெருமானாருக்கு முன்புள்ளாரும் பின்புள்ளாரும் இருக்க இவரையிட்டுக் கூறுவதற்கு யாது காரணம் என்னும் எண்ணம் எழும். அதற்கு விடையாக, "பெருவிலையனான ரத்நத்தை நடுவே இட்டுக் கோத்தால் முன்னும் பின்னும் ஒக்க விலை போமா போலேகாண்" என்னும் பிள்ளான் கூற்றுக் காட்டப்பட்டுள்ளது.[15]

3) "எந்தை தந்தை தம்மான் என்றென் றெமர்ஏழ் ஏழளவும்
வந்து நின்ற தொண்ட ரோர்க்கே வாசி வல்லீரால்,
சிந்தை தன்னுள் முந்தி நிற்றிர் சிறிதும் திருமேனி
இந்த வண்ணம் என்று காட்டீர் இந்த ளூரீரே"

---

14. தி.வி.80 உரை. 15. பெ.தி.2.7.6.

இப்பாசுரத்தில் திருவிந்தளூர்ப் பெருமானை நோக்கி, "யாங்கள் தேவரீரை எங்கள் குலத்துக்குத் தலைவன் என்று சொல்லிக்கொண்டு ஏழு தலைமுறையாகத் தங்கள் திருவடிகளில் அடிமை செய்தலொழியச் செல்லாதே வந்து நிற்கிறோம். நீரோ எங்களுக்கு நேராகக் கணக்கிட வல்லராகாமல் வேறாக நிற்பவராக உள்ளீர். எனினும் 'சிந்தை தன்னுள் முந்தி நிற்றிர்' என்கிறார் திருமங்கை மன்னன். இதற்கு 'அணைக்கைக்கு ஈடாகக் கைக்கு எட்டாதே இருக்கிற நீர் இதனை மிகவும் வளர்க்கிறது என்?" என்று பொருள் விரிப்பராம் பிள்ளான்.[16]

இங்குக் காட்டப்பட்டவை தவிர, "அருளாத திருமாலார்க்கு",[17] "அவன் என்றே கிடக்கும்",[18] "சூடுமலர்க் குழலீர்",[19] "மானேய் நோக்கு நல்லீர்",[20] 'நல்குரவு' திருவாய்மொழித் தோற்றுவாய்,[21] 'பொன்னுலகு' திருவாய்மொழித் தோற்றுவாய்,[22] "தன்னை உறப்பல இன்கவி சொன்ன,"[23] 'சார்வே' திருவாய்மொழித் தோற்றுவாய்[24] ஆகிய இடங்களில் இவர் கூறியுள்ள விளக்கங்கள் ஆறாயிரப்படி உரையில் காணப்படவில்லை.

எழுத்திலும் சொற்பொழிவிலும் இடம்பெற்ற உரைவிளக்கங்கள்

"திண்ணன் வீடு" தோற்றுவாய்,[25] "மலமறு மதிசேர் மாலிருஞ் சோலை",[26] "நின்ற குன்றத்தினை நோக்கி நெடுமாலே வாவென்று கூவும்"[27] "ஆறு எனக்கு நின் பாதமே சரண்",[28] "எண்ணிலாப் பெருமாயனே",[29] "பால துன்பங்கள் இன்பங்கள் படைத்தாய்",[30] "மங்கிய அருவாம் நேர்ப்பமும் நீயே",[31] "நன்னாட்டு அலமந்தால்",[32] "பலநாள் அழைத்தேற்கு",[33] "அருளாது ஒழிவாய்" என்னும் பாசுரம்[34] ஆகியவற்றிற்கு இவர் கூறியுள்ள உரைநயங்களாக வருபவை ஆறாயிரப்படியிலும் சிற்சில சொல்மாற்றங்களோடு காணப்படுகின்றன.

---

16. பெ.தி.4.9.9.
17. 1.4.7-36.
18. 5.3.5-36, 24.
19. 5.9.3-36, 24.
20. 5.9.1-36.
21. 6.3.0-36.
22. 6.8.0-36, 24.
23. 7.9.9-36, 24.
24. 10.4.0-36, 24.
25. 2.2.1-36.
26. 2.10.7, 36-24.
27. 4.4.4-36, 24.
28. 5.7.10-36, 24.
29. 7.1.1-36, 24.
30. 7.2.7-36.
31. 8.1.6-36, 24.
32. 8.5.2-36.
33. 8.7.1-36, 24.
34. 9.8.8-36.

இவர் ஆட்சிகளில் காணப்படும் சில நுட்பங்களும் நயங்களும் இவரது எழுதப்பட்ட உரையில் இடம்பெறாமை சிந்தனைக்குரியது. சுருக்கமாக உரைவகுத்த காரணத்தால் அவை இடம்பெறவில்லை போலும்! அன்றிச் சில நுட்பங்கள் உரைவகுத்த பின்னர் நிகழ்த்திய விரிவுரைகளில் சொல்லப் பெற்றனவும் ஆகலாம். எவ்வாறாயினும் அவ்விடங்களில் இவரது நுண்ணறிவு புலப்படுகின்றது. இவரது அறிவுத்திறங் கண்டே இராமாநுசர் இவரை ஆறாயிரப்படி உரை எழுதப் பணித்திருக்கவேண்டும் என்பது அவற்றால் விளங்குகின்றது.

2. பட்டர்

தோற்றம்

திருநெடுந்தாண்டகத்தில் "மைவண்ண நறுங்குஞ்சி" என்னும் ஒரு பாசுரத்திற்கு மட்டும் ஒப்பற்ற விளக்கம் எழுத்துருவில் தந்து உரையாசிரியருள் ஒருவராகத் திகழும் இப்பெருந்தகை கூரத்தாழ்வானுக்கும் அவர்தம் தேவியான ஆண்டாளுக்கும் மகனாகத் தோன்றியவர். இவருக்கு வேதவியாச பட்டர் என்னும் தம்பி ஒருவரும் இருந்தார். இவ்விரட்டைப் பிள்ளை களும் திருவரங்கச் செல்வன் விடுத்த அக்கார அடிசில் திரளை உண்டதனால் சாலிசகம் 1045 (கி. பி. 1122)இல் பிறந்தனர். இவருக்கும் இவர் தம்பியாருக்கும் முறையே பராசர பட்டர், வேதவியாச பட்டர் என்னும் பெயரினை இராமானுசர் சூட்டினார். பராசர பட்டர் பெரிய பட்டர் என்றும், பட்டர் என்றும் குறிக்கப்பெறுவர். வேதவியாச பட்டருக்குச் சீராமப் பிள்ளை என்று ஒரு பெயரும் நிலவியது. பட்டருக்குச் சகோதரியர் இருந்தனர் என்பது திருவிருத்த உரையால் தெரிய வருகின்றது.[35]

திருவாசிரியம் முதற்பாட்டு உரையில் வரும் குறிப்பு இவருக்கு முன்னே இவர் தாயாருக்கு ஒரு பிள்ளை பிறந்து இறந்ததாகத் தெரிவிக்கிறது. "அனந்தாழ்வான் திருக்கோட்டி யூருக்கு நடந்த இடத்திலே பட்டரைக் கண்டு அவர் திருமேனி யிலே இப்படிச் செய்தானாம். ஆண்டாளுக்கு முந்துற ஒரு பிள்ளை உண்டாய் அவனை இழக்க, அங்ஙனே செய்ய வொண்ணாது, இவன் ஜீவிக்க வேணும் என்று எம்பெருமானார் பெரியபிராட்டியாருக்கு நீராட்டி மஞ்சள்நீர் குடித்த பிள்ளை யாக வளர்க்கவேணும் என்று காட்டிக் கொடுத்தருளினாரா யிற்று. அந்த வாசனையாலே பெரிய பிராட்டியார் மகன்

35. தி.வி.99 உரை.

என்றுதான் பட்டரை அனந்தாழ்வான் சொல்லுவது" என்பதே அக்குறிப்பு.

கல்வி

பட்டரைத் திருவரங்கநாதன் தன் மகனாக ஏற்றுக்கொண்டதால் 'அரங்கநாத புத்திரர்' என்னும் பெயரும் இவருக்கு வழங்கலாயிற்று. எம்பார் இக்குழந்தைகளை இராமானுசரிடம் காட்டுவதற்கு எடுத்துக்கொண்டு வரும்போதே துவயமந்திரத்தைச் சாற்றியருளியதனால் அவரே முதல் ஆசிரியரானார். இவர்க்குத் திருவாய்மொழி கற்பித்து மந்திரப்பொருளை உரைத்ததனால் கூரத்தாழ்வான் தந்தையாக மட்டுமன்றி ஆசிரியராகவும் விளங்கினார். பட்டர் இவ்விருவரையும் தம் ஆசிரியராகத் தம் நூல்களில் போற்றி வணங்கியுள்ளார்.[36]

அரங்கன்மீது ஆராக்காதல்

இவர் எம்பாருக்குப் பின்னே ஆசிரியராகப் பதவி ஏற்றார். அரங்கன்மீது ஆராக்காதல் கொண்டிருந்தார். அவனைக் கண்ணனாகவே கருதி வழிபட்டார்.

"மாயவனை மதுசூதனனை மாதவனை மறையோர்கள் ஏத்தும்
ஆயர்கள் ஏற்றினை அச்சுதனை அரங்கத் தரவணைப்
பள்ளி யானை"

என்பதில் வரும் 'மறையோர்கள்' என்பதற்குப் "பெரிய பெருமாளை க்ருஷ்ணாவதாரமாகவிறே நம் பூர்வாசார்யர்கள் அநுஸந்திப்பது (எண்ணுவது)...ஆகையால் இவ்விடத்தில் மறையோர்கள் என்கிறது-திருப்பாணாழ்வார், பட்டர்போல் வாரானவர்களை" என்று மணவாள மாமுனிகள் குறித்துச் செல்வதனால் இது தெரிய வருகின்றது.[37] 'அழகிய மணவாளப் பெருமாள்' என்று அவன் திருப்பெயரை இவர் சொல்லும்போது அதில் பாவபந்தம் (அன்பு) நிறைந்திருக்கும் என்பர்.[38] இவர் திருவரங்கக் கோயிலை வலம்வருங்கால் இட்ட அடி மாறியிடாதே கண்களாலே பருகுவாரைப் போலே பார்த்துச் செல்வராம்.[39]

---

36. சகஸ்ரநாம பாஷ்யம் 1; ஸ்ரீரங்கராஜஸ்தவம்.
37. பெரி.தி. 4.10.10 ம. உரை.
38. பெ.தி. 5.5.1; 6.5.7-36; தி.நெ. தா.27.
39. 2.10.8-36; 6.7.5-36; பெரி.தி. 4.9.4. பெரி. உரை; பெ.தி. 2.6.6.

திவ்வியப் பிரபந்த ஈடுபாடு

இராமானுசரைப் போல இவரும் ஆழ்வார் பாசுரங்களில் தோய்ந்து உருகும் இயல்பினர். இதனைத் தெரிவிக்கும் இரு நிகழ்ச்சிகள் ஈட்டுரையில் இடம்பெற்றுள்ளன. புட்பயாகம் என்பது பெரிய திருநாள் முடிவில் நடைபெறும் ஒரு வேள்வியாகும். அவ்வேள்வி நெருங்கிவரும் காலத்தில் இவர் நஞ்சீயரைத் திருவாய்மொழி படிக்கச் சொல்வது வழக்கம். ஒரு கோடையில் திருவாய்மொழி படித்துக் கொண்டிருந்தபோது நஞ்சீயர் "வந்தருளி என் நெஞ்சிடம் கொண்ட வானவர் கொழுந்தே" என்னும் பாசுரத்தைப் படிக்கக் கேட்டு அதனைச் சிந்தித்தவாறு இருந்து, பின்பு தாமும் ஒருமுறை அதனைப் படித்தாராம். அதன் பின்னர், இயமம், நியமம் முதலியவற்றை அடைவே பயின்று தியானம் செய்யத்தக்க பெருமானை மனனம் செய்து மற்றவற்றில் உள்ள பராக்கை (கவனத்தை) அறுத்து நினைக்கப் புகுந்தாலும் சுக்கான் பரல் போன்று இருக்கக்கூடிய நெஞ்சுகளைப் பதம் செய்யும்படி அறவோராய் இருப்போர் இவை சில ஈரச்சொற்களைச் சொல்லிச் செல்வதே! என்று நெகிழ்ந்தாராம்.[40]

ஒருமுறை, பெருமாள் திருமுன்பு கைசிக புராண சுலோகங்களுக்குப் பொருள் கூறுவதற்குத் தகுதியான திருவாய்மொழிப் பாசுரங்களைத் திரட்டுவதற்காக, நஞ்சீயரை அழைத்துத் திருவாய்மொழி படிக்கச் சொன்னார். அப்பொழுது பட்டர் அமுதுசெய்தவாறு அதனைக் கேட்டுக் கொண்டிருந்தார். நஞ்சீயர், "என் திருமகள்சேர் மார்பனே! என்னும், என்னுடை ஆவியே! என்னும்" என்ற திருவாய்மொழிப் பகுதியைப் படிக்கும்போது, "என் திருமகள் சேர் மார்பனே என்னும்" என்று நிறுத்தாமல், "என் திருமகள் சேர் மார்பனே என்னும் என்னுடை ஆவியே! என்னும்" என்று சேர்த்துப் படித்தார். அதனைக் கேட்டுக் கையை உதறி 'ஸ்ரீரங்கநாத' என்று கூறியவாறு அணையில் சாய்ந்தருளினாராம் பட்டர். இந் நிகழ்ச்சியினைச் சீயர் தெரிவிக்கும்போது, "அப்போது திருமேனியிலே பிறந்த வேறுபாட்டினைக் கண்டு, இவர்க்கு இறைவனை அடைவது அணித்தாகிறதோ என்று அஞ்சியிருந்தேன்" என்பாராம்.[41] இது பட்டரின் இறுதிக் காலத்தில் நடந்த நிகழ்ச்சியாகத் தோன்றுகிறது.

---

40. 5.7.7-36. 41. 7.2.9-36.

சொல்லாற்றல்

திருமங்கை மன்னன், ஆளவந்தார், ஆழ்வான் ஆகியோரைப் போல இவரும் சொல்லாற்றல் மிக்கவராய்த் திகழ்ந்துள்ளார்.[42] இவரது வாக்கு வன்மை பலரால் பெரிதும் போற்றப்பட்டுள்ளது. ஒருநாள் பட்டர் இனிதாகப் படித்ததைக் கேட்டருளி எம்பார் எழுந்துநின்று கண்ணீர் விழவிட்டு, நெஞ்சுருகியவராய்ப் பட்டரைக் காட்டி, "ஜநகாநாம் குலே கீர்த்தி மாஹரிஷ்யதி மேஸுதா" (என்மகள் சனக குலத்தில் புகழை உண்டாக்கப் போகிறான்) என்று கூறினாராம்.[43] "மூவாமைக் காப்பதோர் மன்னு மருந்தறிவீரில்லையே" என்னும் பெரிய திருமடல் தொடருக்குப் பட்டர் கூறிய விளக்கம் கேட்டுப் பிள்ளை திருநறையூரரையர் உள்ளிட்டார் நாலைந்து நாழிகைப்போது வேறொரு செயலுக்கும் இடங்கொடாது கொண்டாடினார்கள்" என்று சீயர் சொல்லுவாராம்.[44] கிடாம்பியம்மாள், சிறியாண்டான் பெருமாள் பணித்தானாகப் பலகாலும் கீழ்வருவதனைச் சொல்லுவராம். "நான் சொல்லுகிற வாச்ய வாசகங்களேயன்றோ (சொல்லும் பொருள்களையும் சொற்களையுமன்றோ) பட்டரும் வ்யவஹரிக்கிறது (விளக்குகிறது) என்று இருக்க வொண்ணாது, அங்குத்தைக்கு ஏற்றமுண்டு; முன்னே நின்ற தூணை நான் 'தூண்' என்றவாறே சிராயாய்த் (விறகு கட்டையாய்) தோற்றும்; அவர் சொன்னவாறே தளிரும் முறியுமாய்த் தோற்றும்" என்று.[45]

குட்டிக் கதைகள் சொல்லுதல்

இவர் தம் விளக்கச் சொற்பொழிவுகளில் சிறுசிறு நயமான குட்டிக் கதைகள் சொல்லிக் கருத்துகளை விளக்கும் இயல்பினர். 'வேங்கடங்கள் மெய்ம்மேல்' என்னும் பாசுரத்தில் அத்தகைய கதைகளுள் ஒன்றனைக் கூறியுள்ளார். முன்பு தலைமயிர் இல்லாதான் ஒருவன் நெல் அளந்துகொண்டிருந்தான். அங்கு வந்த வழிப்போக்கன் அவனை நோக்கி நின்று, "ஐயா, தாங்கள் தங்கள் தலைமயிரைக்கூட முடிந்துகொள்ளாமல் தன்னந்தனியே எவ்வளவு கருத்தாக நெல்லை அளந்து கொண்டிருக்கிறீர்கள்!" என்று பொய்யான பாராட்டினை உதிர்த்தான். அதனைக் கேட்ட மொட்டைத் தலையன், "அது சரி, நீ எதற்காக இங்கு வந்துள்ளாய்?" என்று வினவினான். வழிப்போக்கன், "ஒன்று

---

42. பாவை, 20.6.
43. பெ.தி.2.7.6.
44. தி.வி.53.
45. பெ.தி.6.3.4.

மில்லை, தங்களைக் கண்டு போகலாம் என்று வந்தேன்" என்றான். அவன் பேச்சால் மனம் மகிழ்ந்த மொட்டைத் தலையன், "அப்படியா? இந்த ஒரு கோட்டை நெல்லை உனக்குத் தருகிறேன்; எடுத்துச் செல்" என்று கூறி, ஒரு கோட்டை நெல்லை அவன் தலையில் தூக்கிவிட்டான். அவன் அதனைச் சுமந்து செல்லும் போது எதிரே வந்த ஒருவன் "இந்நெல் எங்கே பெற்றாய்?" என்று கேட்க, உன்னைப் போலும் மொட்டைத் தலையன் ஒருவன் தந்தான்" என்று சொல்லிச் சென்றான். அந்த மூன்றாவது ஆள் விரைந்து சென்று நெல் கொடுத்தவனிடம், "நீ யாருக்கு நெல் கொடுத்தாயோ அவன் உன்னை மொட்டைத் தலையன் என்று வைது செல்கின்றான்" என்று கூறினான். அதனைக் கேட்ட அவன் ஆத்திரம் உற்றான். "அடே, என் நெல்லையும் வாங்கிக்கொண்டு என்னையும் வைது சென்றாயா?" என்று கூறியவாறு அவனைப் பின்தொடர்ந்து ஓடிவந்தான். நெல் பெற்றுச் செல்பவன் அவன் ஓடிவருவதன் காரணத்தை உய்த்து உணர்ந்தான். உடனே தன்னைத் துரத்திப் பிடிக்க ஓடி வருப வனைக் கனிவு தோன்றப் பார்த்து, "ஐயா ஏன் இப்படிக் குழல்கள் அலைய அலைய ஓடி வருகின்றீர்கள்?" என்றான். அச்சொற் களைக் கேட்ட மொட்டைத் தலையன் மீண்டும் போலிப் பாராட்டுக்கு மயங்கினான். அவனை நோக்கி, "ஒன்றுமில்லை, இன்னும் ஒரு கோட்டை கொண்டுபோகச் சொல்ல வந்தேன்" என்றானாம்.

இக்கதையில் வரும் மொட்டைத் தலையன் போலக் கடலரசனை வருவிப்பதற்காகச் சீற்றத்தோடு வில்லெடுத்து நின்ற இராமபிரான் அவன் வந்து முகங்காட்டினவுடன், "உனக்கு அம்பு தொடுத்தோமே" என்று நாணி, "உன் பகைவர்களைச் சொல்; இதனை அவர்கள்பால் செலுத்துகிறேன்" என்றான் என்று விளக்கந் தந்துள்ளார்.[46] இதுபோலவே "கைகலந்து உண்டான்" என்னும் தொடர் விளக்கத்தில் "ஓர் இளிம்பனும் ஒரு சதுரனும் களவு கண்ட கதை"யினையும்,[47] "அடங்கெழில் சம்பத்து" என்னும் பாசுர விளக்கத்தில் "தந்தையும் மகனும் படகோட்டின கதை" யினையும்[48] சொல்வாராம்.

கூர்த்த அறிவு

பாட்டின் பொருளை ஐயமகற்றிச் சிக்கறுத்துத் தெளிவிப் பதில் பட்டருக்கு நிகர் பட்டரே எனலாம். இவரையடுத்துத்

---

46. 3.3.6-36, 24.
47. 1.8.5-24.
48. 1.2.7-36, 24.

தங்கள் ஐயங்களைக் கூறித் தெளிவு பெற்றோர் பலராவர். நஞ்சீயர்,[49] பிள்ளை விழுப்பரையர்,[50] ஆப்பான் திருவழுந்தூரரையர்[51] (இவர் ஆப்பான் என்றும் சுட்டப்பெறுகிறார். பிள்ளை விழுப்பரையரோடு சேர்த்துச் சில இடங்களில் சுட்டப்பெறும் இவர் ஓரிடத்தில்[52] ஆப்பான் என்றும், மற்றோரிடத்தில்[53] ஆப்பான் திருவழுந்தூரரையர் என்றும் சுட்டப்பெறுவதால் இது விளங்கும்), பிள்ளை திருநறையூரரையர்[54] (இவர் ஆழ்வார் திருநறையூரரையர் என்றும் குறிக்கப்பெறுகிறார்; ஆப்பான் திருவழுந்தூரரையரோடு வாழ்ந்தவர்), அனந்தாழ்வான்,[55] வண்டுவரைப் பெருமாள்,[56] ஆலவாயுடையான்,[57] பட்டரின் திருத்தம்பியார் சீராமப்பிள்ளை,[58] நிலாத்துக்குறிபகவர்,[59] தமிழ்ப்புலவர்கள்,[60] பண்டிதர் என்று குறிக்கப்பெற்றவர்[61] ஆகியோர் இவரிடம் தங்கள் ஐயங்களை வினவித் தீர்த்துக் கொண்டுள்ளமை இவரது கூர்த்த அறிவுக்குச் சான்றாகும்.

சான்றாகத் திவ்வியப் பிரபந்தங்களில் பல இடங்களுக்கு இவர் தந்த விளக்கங்களுள் சிலவற்றைக் காணலாம்:

1) "பரிவதில் ஈசனைப் பாடி விரிவது மேவல் உறுவீர்
பிரிவகை இன்றிநன் னீர்தூய்ப் புரிவது வும்புகை பூவே"

என்னும் பாட்டிற்குப் பொருள் விரிக்குங்கால், "செதுகை யிட்டுப் புகைக்கவும் அமையும்; கண்டகாலியிடவும் அமையும்" என்றார் பட்டர். இதனைக் கேட்ட நஞ்சீயர், "இறைவனுக்குக் கண்டங்கத்தரிப் பூவை அருச்சித்தல் கூடாது" என்று சாத்திரங்கள் விதிக்கின்றனவே! தங்கள் கருத்து

---

49. 2.2.3-36; 10.2.0-36; 10.2.5-36; 10.8.9-36, 24; தி.நெ.நா.3; பெ.தி.1.4.10; 3.8,10; 5.10.7; 6.3.4; நா.தி.6.5; 13.1; சி. மடல், கண்ணி 32; தி.வி. 60; வடநூல் விளக்கங்கள் 3.4.6-36; பெரி.தி.4.9.6; தி.மா. 9; நா.தி.4.9.
50. பெ.தி.3.8.6; வடநூல் விளக்கம் 4.10. 7-36.
51. பெ.தி.3.8.6; 4.4.6; 8.2.6; வடநூல் விளக்கம் 4.10.7-36.
52. பெ.தி.3.8.6.
53. 4.10.7-36.
54. பெ.தி.8.2.6; மு.தி.24; பெ.தி.8.2.6.
55. 3.7.2-36; அமலன் 7 பெரி, அழகு உரைகள்.
56. 6.4.9-36.
57. பெ.தி.5.1.2.
58. 3.2.0-36.
59. 2.7.2-36.
60. 2.5.10-36; 10.2.5-36.
61. 4.10.2-36.

எப்படிப் பொருந்தும்?'' என்று ஐயவினா எழுப்பினார். அதற்குப் பட்டர், ''இறைவனுக்குத் தக்கதன்று என்பதாலன்று; பறிக்கும் அடியார் கையில் முள்பாயும் என்பதற்காகத் தவிர்த் தான்காண்'' என்று அருமையான விளக்கம் தந்து சாத்திரக் கருத்தும் திருவாய்மொழிக் கருத்தும் முரண்படாமையைத் தெளிவுபடுத்தினார்.[62]

2) ஒருமுறை பட்டரிடம், ''கிருட்டினாவதாரம் என்றால் ஆழ்வார்கள் எல்லாரும் ஒருசேரப் பரிவுகாட்டுபவர்களாக இருக் கிறார்களே, காரணம் யாது?'' என்று சீயர் கேட்டார். அதற்கு அவர், ''இராமாவதாரத்தில் பிள்ளைகள் மிடுக்கர்கள் (ஆண்புலிகள்); குணம் நிறைந்தவர்கள்; தந்தை சம்பரனைக் கொன்றவன்; அமைச்சர்கள் வசிட்டர் தொடக்கமானவர்கள்; ஊர் அயோத்தி; காலம் நல்ல காலம்; ஆதலால் அதில் ஓர் அச்ச முமில்லை. ஆனால் கிருட்டினாவதாரத்திலோ வந்துபிறந்த இடம் பகைவன் இல்லம்; கம்சன் இடம்பார்த்து நலியும் தீயவர்களை வரவிடுக்கும் கொடியவன்; தகப்பன் இடையன்; ஊர் இடைச்சேரி; பிள்ளைகள் தீம்பர்கள்; காலம் கலிகாலத்திற்குத் தோள் தீண்டியாய் அமைந்த காலம். ஆகையாலே என்வருகிறதோ! என்று பரிவு காட்டுவதற்கு ஆழ்வார்களல்லது இல்லைகாணும்!'' என்று கூறினாராம்.[63]

3) ''பள்ளி கமலத் திடைப்பட்ட பகுவாய் அலவன் முகம்நோக்கி
நள்ளி ஊடும் வயல்சூழ்ந்த நறையூர் நின்ற நம்பியே''

என்பது திருமங்கை மன்னன் வாக்கு.

இதற்குத் தாமரைப் பூவில் சிறைப்பட்டு விடிந்தவாறே வந்த அலவனை இரவு வாராது வேறு எங்கோ தங்கினபடியாலும் உடம்பில் சுவடு இருந்தபடியாலும் பெண் நண்டு தவறாக எண்ணி முகம் மாறிக் கதவை அடைத்து உள்ளே போய்ப்புக்கது என்று விளக்கம் கூறினார் பட்டர். அப்போது அங்கிருந்த பிள்ளை திருநறையூரரையர் ''ஆராய்ந்து குற்றம் இருந்தா லன்றோ தண்டிப்பது'' என்று பட்டரிடம் தெரிவித்தார். அதற்கு அவர், ''என்செய்வோம்! கேள்வி இல்லாதபடி பெண்ணரசு நாடாய்த்து'' என்று திருநறையூரில் நாச்சியாருக்கு முதன்மை இருத்தலை உட்கொண்டு விளக்கம் தந்தாராம்.[64]

62. 1.6.1-36, 24.
63. தி.பல்.10; 5.10.0-36.
64. பெ.தி.6.7.6.

4) "கண்ணார் கரும்பின்கழைதின்று வைகிக்
கழுநீரில் மூழ்கிச் செழுநீர்த் தடத்து
மண்ணேந் திளமேதி கள்வைகு நாங்கூர்
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே!''

என்னும் பெரிய திருமொழிப் பாடலில் இரண்டிடங்களில் 'வைகி' என்னும் சொல் வருகின்றது. இவ்விடத்தைப் பிள்ளை விழுப்பரை யும் ஆப்பானும் சேர்ந்து சிந்தித்து, "இரண்டு இடங்களில் 'வைகி' என்று வருகின்றது; இது பொருந்தும்படி என்?'' என்று பட்டரை வினவினர். அவர் ''ஸௌகுமார்யத்தாலே (மென்மை யாலே) இரண்டிடத்திலும் (மேதி) கிடந்தது'' என்று விடை கூறினாராம்.[65]

5) நம்மாழ்வார் இறைவனை ''ஆண் அல்லன் பெண் அல்லன், அல்லா அலியும் அல்லன்'' என்று குறிப்பிடுகின்றார். இதனைப் பட்டர் மறைமொழிகளையும் பாரதப் பகுதியினையும் மேற்கோள் காட்டி விளக்கினார். அப்போது ஒரு தமிழ்ப் புலவர், "சீயரே, நாட்டில் காண்கின்ற மூன்றின் தன்மையும் அல்லனாகில், சொல்லும் பொருள் இல்லாத ஒன்றோ?'' என்று கேட்டார். பட்டர் அவரை நோக்கி, "பிள்ளை, சொல் இலக்கணம் அறிந்தாய் இல்லையோ? ஆணல்லன், பெண் அல்லள், அல்லா அலியும் அல்லது என்று சொல்லவில்லையே. 'அல்லன், அல்லன்' என்கையாலே, புருடோத்தமன் என்ற சொல் தானே தோற்றுவிக்கின்றது அன்றோ?'' என்று கூறி அவரது தடையினைக் களைந்தார்.[66]

திவ்வியப் பிரபந்தங்களுக்கேயன்றி வடமொழி நூல்களில் எழுந்த ஐயங்களுக்கும் விளக்கந் தந்துள்ளார். அத்தகைய விளக் கங்களுள் ஒன்று வருமாறு :

பிள்ளை விழுப்பரையரும், ஆப்பான் திருவழுந்தூரரையரும் பட்டரை நாடி, யயாதி வரலாறு எவ்வுண்மையினை விளக்கு கிறது என்று கேட்டனர். அதற்கு, ''இழிந்த தேவர்கள் தம்மைச் சார்ந்து உயர்வு பெற்றாலும் பிறர் பக்கல் அதனைக் கண்டால் அது பொறுக்க மாட்டார்கள் என்றும் பெருமானே 'பிறர் வாழ்வு நம் வாழ்வு' என்று நினைத்திருப்பான் என்றும் சொல்லித் திருமாலே பரம்பொருள் என்னும் செம்பொருளைத் தெரிவிக்கின்றது'' என்று தெளிவு தந்தாராம்.[67]

65. பெ.தி.3.8.6.
66. 2.5.10.36.
67. 4.10.7-36.

ஈட்டில் சுருக்கமாக வரும் இதன் விளக்கம் திருமாலையுரையில் காணப்படுகின்றது. அஃதாவது, யயாதி இந்திரனோடு ஓர் இருக்கையில் இருந்தான். ''கர்மபூமியில் (மண்ணுலகில்) புண்ணியம் செய்தவர்களாய் இருப்பவர் யார்?'' என்றான் இந்திரன். யயாதி பொய் சொல்லக்கூடாது என்னும் நினைவாலே, ''நான் வாழும் நாளில் என்னைச் சொல்வார்கள்'' என்றான். ஒரே இருக்கையில் தன்னோடு இருத்தல் கண்டு பொறாமையாலே இந்திரன், ''தற்புகழ்ச்சி பண்ணினாய்'' என்று காரணங் காட்டி அவனைத் தலைகீழ்ப்படத் தள்ளினான். பட்டரிடம், ''வேத விளக்கமாகச் செய்யப்பட்ட மாபாரதத்தில் இஃது எவ்வுண்மையினைச் சொல்லுகிறது?'' என்று கேட்க, ''அவனே சார்தற்குரியவன் என்னும் பொருளினைச் சொல்லுகிறது'' என்றார்.[68] இதில் வினாவைத் தொடுத்தவர் நஞ்சீயர் என்கிறது திருமாலை அரும்பதவுரை. மேலே காட்டப்பட்டுள்ள ஈட்டுரையில் பிள்ளை விழுப்பரையரும் ஆப்பான் திருவழுந்தூரரையரும் கேட்டனர் என்று வருவதனால் இதனை நஞ்சீயர் கேட்டார் என்பது சரியன்று.

பட்டர் காலத்திய பெருமக்கள்

பட்டரிடம் விளக்கங்கள் கேட்டறிந்த இவர்களேயன்றிப் பிள்ளையழகிய மணவாள அரையர், அம்முணியாழ்வார், பெரிய தேவப்பிள்ளை, நம்பி ஸ்ரீகோவர்த்தனதாசர், பரிஞையப்பர், நம்பிள்ளை ஆகியோர் அக்காலத்து வாழ்ந்த வைணவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுள் பிள்ளையழகிய மணவாள அரையர்க்குத் துவய மந்திரத்தைப் பட்டர் அருளிச் செய்தார்.[69] அம்முணியாழ்வான் போசள நாட்டிலிருந்து வந்தவர்; அவரைப் பட்டர் நெடுமாற்கடிமை என்னும் திருவாய்மொழியைக் கேட்கப் பணித்தார்.[70] பெரிய தேவப் பிள்ளை என்பவர் தம் அகத்திலுள்ளாரை அடர்த்துப் பேசி வந்தவரும், அடியார் கூட்டத்துள் ஒருவருமாவார்.[71] பரிஞையப்பரும்[72] நம்பிள்ளையும்[73] நம்பி ஸ்ரீகோவர்த்தன தாசரும்[74] பட்டர் விளக்கங்களைக் கேட்டு மகிழ்ந்தவர்கள். சோழசிகாமணி பல்லவராயர்,[75] பிள்ளை அகளங்கப் பிரமராயர்[76] என்னும் அக்

---

68. தி.மா.9.
69. 6.10.10-36.
70. 8.10.0-36.
71. நா.தி.10.5.
72. 10.2.9-36.
73. பெ.தி.4.10.8; 4.8.8-36.
74. தி.மா.11.
75. தி.மா.11.
76. 7.2.0-36; 9.4.19-36.

கால அரசர் இருவர் இவர் திருவடிகளைச் சார்ந்து வாழ்ந்துள் ளனர்; பட்டர், வாணவதரையன் என்பவனைக் காண ஸ்ரீதேவி மங்கலத்திற்குச் சென்றுள்ளார்.[77] திருபுவன வீர தேவராயன் என்னும் அரசன் பட்டரைத் தன் அரண்மனைக்கு அழைக்க, "நம்பெருமாள் அஞ்சல் என்ற கைமறிந்தாலும் அவர் வாசல் ஒழிய வேறொரு போக்கிடம் உண்டோ எமக்கு?" என்று சொல்லி மறுத்துவிட்டார் என்பர்.[78] பட்டர் காலத்தில் வாழ்ந்து அவர் காலத்திலேயே உலக வாழ்வு நீத்தவர் நம்பியேறு திருவுடையான் தாசர்,[79] ஆச்சிமகன்,[80] தொண்டனூர் நம்பி,[81] தொலைவிலிருந்து தன்னாடு விட்டு வந்து பட்டர் திருவடிகளைப் பற்றியவரான நல்லான்[82] ஆகியோராவர்.

சில வாழ்க்கைக் குறிப்புகள்

பட்டர் ஒரு திருவேட்டையில் திருவூற்றங்கரையில் பேரோ லக்கமாக இருந்தது,[83] பிராட்டிக்குச் சீதனமாக வந்தவராகத் தம்மைப் பெருமாள் கொள்ளவேண்டும் என்று வேண்டியது,[84] பட்டர் திருவடி கழுவி அத் தூய நீரை அவர் தாயார் ஆண்டாள் அருந்தியது[85] ஆகிய செய்திகள் உரையிடைக் கிடக்கின்றன. பட்டர் வெற்றிலை பாக்குப் போடும் இயல்பினர் என்னும் குறிப்பு ஆச்சான் திருவாலிநாடுதாசர் அவர்க்கு நல்ல சில சுரவன் பாக்கு களைக் கொண்டுவந்து கொடுத்தார் என்றும் அப்பொழுது அவர் "திருவருள் கமுகினின்றும் வந்தவையோ?" என்று நயமாகக் குறிப்பிட்டார் என்றும் வரும் உரைப்பகுதியால் தெரிய வரு கின்றது.[86]

இராமானுசர் பட்டரிடம் கொண்ட பரிவு

இவரிடம் இராமானுசர் மிகுந்த அன்புடையவராய் இருந் தார் என்பது கிடாம்பியாச்சான் கூற்றால் இனிது விளங்குகிறது. இளையாழ்வான் என்னும் கிடாம்பியாச்சான் மாணாக்கர் ஒருமுறை தம் ஆசிரியரான கிடாம்பியாச்சானைப் பார்த்து, பட்டரிடம் மற்றவர்களைக்காட்டிலும் மிகுந்த அன்புடைய வராக அவர் இருப்பதன் காரணத்தைக் கேட்டார். அதற்குக்

---

77. நா.தி.10.0.
78. அண்ணங்கராசார்யர், பூர்வாசார்ய வைபவம், சென்னை, 1970, பக். 68.
79. 1.4.5-36.
80. தி.வி.44; 4.6.2-36.
81. பாவை, 9-6.
82. 5.9.1-39.
83. 10.2.1-36.
84. 7.2.9-6.
85. பாவை, 1-6.
86. 10.2.2-36.

கிடாம்பியாச்சான், "நீ அன்று கண்டிலைகாண். எம்பெருமானார், பட்டர் கையிலே புத்தகத்தைக் கொடுத்துத் திருமுன்பே ஒரு சுலோகத்தை விண்ணப்பஞ் செய்வித்துத் திருப்பிரம்புக்குப் புறம்பாகக்கொண்டு புறப்பட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தருளி, நம்முடையார் அடங்கலும் நம்மை நினைத்திருக்குமாறு போலே இவனை நினைத்திருங்கோள் என்று அருளிச் செய்தார்" என்றாராம்.[87]

பட்டர் மறைவு

பட்டர் தம் திருமாளிகையில் திருநெடுந்தாண்டகத்திற்கு விளக்கம் சொல்லும்போது, ''அஞ்சிறைப்புள் தனிப்பாகன்'' என்னும் இடத்தில், ''பறவையேறு பரமபுருடா'' என்னும் பெரியாழ்வார் திருமொழித் தொடரை இருமுறை கூறி அஞ்சலி செய்து அணையில் சாயத் தலை ஓடு (கபாலம்) வெடித்துத் திருநாட்டுக்கு எழுந்தருளினார் என்று கூறுவர்.[88] நாச்சியார் திருமொழி யுரையில், ''பட்டர் முதுகில் புண்ணாலே நொந்து கிடந்தார்; பெருமாள் அவரைத் திருமுன்பு வருமாறு பணித்து, 'வாராய் அஞ்சினாயோ' என்று கேட்டருளினார். அதற்கு அவர், 'ஐயனே, எனக்குச் செய்து தந்தருளாத உதவியில்லை. யான் இங்கே இருக்கச்செய்தேயும் பரமபதம் என் சிறுமுறிப்படி செல்லும்படி பண்ணியருளிற்று; அதில் ஒரு குறையுமில்லை. இங்கே குளிர்ந்த முகத்தையும் திருநாமத் தழும்பையும் முறுவலையும் இழக்க என்றால் அடியேன் அஞ்சேனோ? என்றார்''[89] என்று வரும் குறிப்பினைப் பார்த்தால், அவர் முதுகில் பிளவை உண்டாகித் துன்புற்று மறைந்திருக்க வேண்டும் என்று எண்ண வேண்டியுள்ளது.

குறை வாழ்வினரா?

பட்டர் இளமைக் காலத்திலேயே மறைந்தார் என்றும் அவர் இருபத்தெட்டு ஆண்டுகளே மண்ணுலகில் வாழ்ந்தார் என்றும், ஆறாயிரப்படி குரு பரம்பரை வரலாறு குறிப்பிடுகிறது.[90]

---

87. 10.6.1-36.
88. எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் (பதி.), ஸ்ரீரங்கம், பாரதீய பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ ஸபையின் பொன்விழா மலர், திருச்சி, 1978, பக். 223.
89. நா.தி.11.5.
90. எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் (பதி.), பின்பழகிய பெருமாள் ஜீயர் அருளிய ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம், திருச்சி, 1968, பக். 341-343.

உய்வுபாயம் மற்றின்மைப் பாசுர இறுதியில், நஞ்சீயர் விளக்க மொன்று காட்டப்பட்டு, அதன் பின்னர், ''பால்யத்திலே பட்டரைப் பறிகொடுத்தாரிறே அவர் (நஞ்சீயர்)''[91] என்னும் குறிப்பும் தரப்பட்டுள்ளது.

திரு.டி.ஏ. கோபிநாதராவ், பட்டர் ஆசாரியபதவிக்கு வந்து இருபத்தெட்டாண்டுகளுக்குப்பின் மறைந்திருக்கலாம் என்றும், கூரத்தாழ்வான் சோழனால் துன்புறுத்தப்பட்ட கி.பி. 1078ஆம் ஆண்டுக்கு முன் பட்டர் பிறந்தார் என்று கொண்டால் கூரத் தாழ்வான் மறைந்தபொழுது பட்டருக்கு வயது குறைந்தது அறுபது இருக்க வேண்டும் என்றும் கூறுகிறார்.[92]

பட்டர் கி.பி. 1122இல் தோன்றிக் கி.பி. 1174இல் திருநாடு அலங்கரித்தார் என்பது திரு. எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் கருத்து.[93] மேலும் அவர் நூற்றுப் பதினெட்டு ஆண்டுகள் வாழ்ந்த கூரத்தாழ்வானுக்கு நூற்றுப் பதின்மூன்றாம் ஆண்டில் பட்டர் பிறந்திருக்கலாம் என்றும் கருதுகிறார்.[94] இதனை ஏற்றுக் கொண்டால் பட்டர் பிறந்த ஐந்தாமாண்டில் அவர் தகப்பனார் திருநாடு எழுந்தருளினார் என்று ஆகும். மேலும் ஐந்தாண்டு நிரம்பாத குழந்தைக்கு ஆழ்வான் திருமந்திரப் பொருளைப் புகட்டினார் என்றும், திருமணம் முடித்து வைத்தார் என்றும் கூறுவது உலக நடைக்குப் பொருந்தாமற் போகின்றன.

இராமானுசர் முதலாம் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்தில், அரசனின் கொடுமையினின்றும் தப்புவதற்காக மைசூருக்குச் சென்றார் என்றும், அச்சமயத்திலேயே கூரத்தாழ்வான் சோழன் கொடுமையால் கண்களை இழக்க நேரிட்டது என்றும் வைணவ வரலாறுகள் தெரிவிக்கின்றன. இராமானுசர் கி.பி. 1096இல் மைசூருக்குச் சென்றார் என்பர் ஆராய்ச்சியாளர்.[95]

கூரத்தாழ்வான் கண்ணை இழப்பதற்கு முன்பே பட்டருக்குத் திருமணமாகி இருத்தல் வேண்டும். அத் திருமணம் கோயில்

---

91. 4.3.11-36.
92. T.A. Gopinatha Rau, History of Sri Vaishnavas, 192?, P. 40.
93. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் (பதி.), ஸ்ரீரங்கம் ஸ்ரீபாரதீய பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ ஸபையின் பொன்விழா மலர், திருச்சி, 1978, பக். 295.
94. மேற்படி நூல், பக்.296.
95. பி.ஸ்ரீ., ஸ்ரீராமானுசர் (இரண்டாம் பதிப்பு), சென்னை, 1973, பக். 329.

சென்று கூரத்தாழ்வான் வேண்ட இறைவன் திருவருளால் நடைபெற்றதாக ஈடு தெரிவிக்கின்றது.[96] இராமானுசர் மைசூருக்குச் சென்றபின் கூரத்தாழ்வான் கோயிலுக்குச் சென்றிருப்பார் என்று எண்ணுவதற்கில்லை. பண்டைக்காலத்தில் ஆடவர்க்குப் பெரும்பாலும் பதினாறாம் வயதில் திருமணம் நடைபெற்று வந்தமையால் கி.பி. 1096இல் பட்டருக்குப் பதினாறு வயதிற்குமேல் ஆகி இருக்கலாம். அங்ஙனமாயின் இராமானுசர் கி.பி. 1137இல் மறைந்தபோது பட்டருக்கு ஐம்பத்தேழு வயது என்று ஆகிறது. இராமானுசருக்குப் பின் எம்பார் சில ஆண்டுகள் ஆசாரியராக இருந்துள்ளார். அதன் பின்னரே பட்டர் ஆசாரியப் பதவி ஏற்றார். எனவே பட்டர் குறைந்தது அறுபது வயதுக்குமேல் வாழ்ந்தவராதல் வேண்டும். அறுபது ஆண்டு வாழ்வு குறைந்த வாழ்வன்று. ஆனால் பட்டர் குறைந்த வயதில் மறைந்தவர் என்று சொல்லப்படுகிறார். இதில் தெளிவு நல்கும் வகையில் உரையிடையே வரும் ஒரு குறிப்பு அமைந்துள்ளது. பட்டர் திருக்கூட்டத்து அடியாருள் ஒருவராகிய கோயிலாய்த்தான் என்பவருக்கு ஒரு பிள்ளையிருந்தான். அவனுக்குப் பட்டரின் பெயரினைச் சூட்டியிருந்தார். அவன் சிறு வயதில் இறந்தான். அவர் பட்டரிடம் வந்து வருத்தப்பட, "நீ நம்முடைய திருப்பெயர் சூட்டின பிள்ளை இறந்தான் என்றல்லவா துன்பப்படுகிறாய். அதற்குத் துயரப்பட வேண்டா; அந்தப் பெயரையுடைய நாம் இருந்தோமே" என்று கூறித் தம்மைப்போலே ஒரு சிலையை ஏறியருளப்பண்ணி அவருக்குக் கொடுத்தருளினார் என்பதே அக்குறிப்பு.[97] கோயிலாய்த்தான் பிள்ளையாகிய பட்டர் சிறுவயதில் மறைந்ததனைப் பிற்காலத்தவர் மாறாடிப் பராசர பட்டராகிய இவரைக் குறித்த செய்தியாகக் கொண்டுள்ளனர் என்று தோன்றுகிறது.

பட்டர் நவின்ற உரைவிளக்கங்கள்

இவர் உரையுலகத்திற்குத் தம் விளக்கச் சொற்பொழிவுகளால் அருந்தொண்டு புரிந்துள்ளார்.

"பொரு மா நீள்படை" என்னும் திருவாய்மொழியை, "பட்டர் தம்முடைய வைபவமெல்லாம் காட்டும் திருவாய்மொழியாயிற்று இது" என்று குறிக்கின்றது இருபத்துநாலாயிரப்படி.[98] "கங்குலும் பகலும்" திருவாய்மொழி அருளிச்செய்யும் போதெல்லாம்

---

96. 5.5.7-36.
97. 9.3.1-36.
98. 1.10.0-24.

ஆழ்வார்க்கு ஓடுகிற தசையறியாதே அவருடைய பாவ வ்ருத்தியு மின்றிக்கே (அன்புப் பெருக்கும் இல்லாமல்) இருக்கிற நாம் என் சொல்லுகிறோம்?'' என்று திருமுடியிலே கையை வைத்துக் கொண்டிருப்பாராம்.[99] நான்முகன் திருவந்தாதி 73,74 ஆகிய இரு பாசுரங்களுக்கும் பட்டர் பொருள் சொல்லத் தாம் அறிந்த தாகப் பெரியவாச்சான் பிள்ளை குறித்துள்ளார்.[100]

பட்டரின் ஆட்சிகளாக உரைகளில் பலப்பல காணப்படு கின்றன. அவை விரிப்பிற் பெருகும் என்பதால் அவர்தம் இலக்கிய நெஞ்சினையும் பெரும்புலமையினையும் காட்டும் சிலவற்றை மட்டும் காணலாம்.

நயவுரைகள்

1) ''வங்கக் கடல்கடைந்த'' என்னும் திருப்பாவை இறுதிப் பாட்டினைக் குறித்துக் ''கன்றிழந்த தலைநாகு தோற்கன்றுக்கும் இரங்குமாபோலே இப்பாசுரங்கொண்டு புக நமக்குப் பலிக்கும்'' என்றும்,[101]

2) பராங்குச நாயகி, பறவைகளைத் தூதுவிடுவது குறித்து விளக்கும்போது, ''சக்கரவர்த்தி திருமகன் பிறந்தருளி வானரக் கூட்டம் வீறு பெற்றாற் போலேகாண் ஆழ்வார்கள் பிறந்தருளிப் பறவைக்கூட்டம் வீறு பெற்றபடி'' என்றும்,[102]

3) ''எங்கும், நாடிநாடி நரசிங்கா என்று, வாடி வாடும் இவ் வாணுதலே'' என்பதில் வரும் 'நாடி நாடி' என்னும் அடுக்குத் தொடருக்குத் ''தன் கொய்சகம் உட்படப் பாராநின்றாள்'' என்றும்,[103]

4) ''ஆயர் கொழுந்தாய் அவரால் புடையுண்ணும், மாயப் பிரானை'' என்பதில் அவர் என்று பலர்பால் வருதற்குத் திருவாய்ப்பாடியிலே ஐந்து லட்சம் குடியிலும் இவனை நியமிக்க (ஆட்டுவிக்க) உரியரல்லாதார் இல்லை என்று பொருள்கொண்டு, ''மத்தாலே ஓர் அடி அடிப்பார்கள் போலே காணும்'' என்றும்,[104]

5) யானையும் அதன் காலைக் கவ்வியிழுத்த முதலையும் முறையே வீடுபேறும், சாபவீடும் பெற்றன. இதனை, ''இராச புத்திரனைச் சிறையிலே இட்டுவைத்தால், கைக்குட்டனுக்கும்

99. 7.2.0-36.
100. நான். திரு. 73.
101. பாவை, 30-3.
102. 1.4.0-36, 24.
103. 2.4.1-36.
104. 1.7.3-36.

(காவற்காரன்) பாலுஞ் சோறும் இடுவாரைப்போலே காண்" என்று உவமை காட்டியும்[105] நயம்பட விளக்கியுள்ளார்.

புதிய புலமை விளக்கங்கள்

1) "அவட்கு (சூர்ப்பணகைக்கு) மூத்தோனை, வெந்நரகம் சேரா வகையே சிலைகுனித்தான்" என்னும் சிறிய திருமடல் அடிகளுக்குப் பட்டர் கண்ட உரை மிகச் சிறப்பானது. "வளைந்த வில்லுங் கையுமாய் முஷ்டியிலே நின்ற (போர்முகத்தில் நின்ற) பெருமாளைக் கண்ட கரன், மேலே போய் ஒரு நரகாநுபவம் பண்ணவேண்டா என்னும்படி வயிறு எரித்தலோடே எல்லா அநுபவமும் இங்கே அநுபவிக்கும்படி பண்ணினான்" என்று உரை கூறினாராம். நஞ்சீயர் பட்டரால் திருத்திப் பணிகொள்ளப் பெறுதற்கு முன்னர், "பட்டர். திருமடல் அருளிச் செய்கிறபோது இவ்விடத்துக்கு இவ்வார்த்தை அருளிச்செய்தார்" என்று சொல்லக் கேட்டு, "இவ்வார்த்தை அருளிச்செய்தவரைக் காண வேண்டும் என்றே பின்பு பட்டர் திருவடிகளில் சார்ந்தார்" என்று பெரியவாச்சான்பிள்ளை குறித்துச் செல்வது இவ்விளக்கத்தின் அருமையினைத் தெரிவிக்கும்.[106]

2) "மயர்வற மதிநலம் அருளினன்" என்பதில் 'மதிநலம்' என்பதற்கு மதியும் நலனும் என்று பிறரெல்லாம் உம்மைத் தொகையாய்க் கொண்டு உரைகூறிச் செல்ல, இவர் 'நலமாகிய மதி' என்று கூட்டிப் பண்புத் தொகையாக்கி, "பக்தியின் உருவத்தை அடைந்த ஞானம்" என்று பொருள் கண்டார்.[107]

3) "பணிமின் திருவருள் என்னும்அஞ் சீதப்பைம் பூம்பள்ளி
அணிமென் குழலார் இன்பக் கலவி அமுதுண்டார்"

என்பதில் உள்ள "பணிமின் திருவருள் என்னும்" என்பதனைக் குழலாரோடு கூட்டிப் பொருள் கூறினர் முன்னையவர்கள். ஆனால், இவர் "இன்பக் கலவி அமுதுண்டார்" என்பதனோடு கூட்டி நயவுரை கூறுகிறார்.[108] "'தங்கள் உள்ளத்தில் நினைத்திருப்பது யாது? அருளிச்செய்யலாகாதோ?' என்று தொழுது நிற்கும் குளிர்ந்த பூம்படுக்கையிலே இருக்கும் அழகிய குழலையுடைய பெண்களோடுகூடி இன்பம் நுகர்ந்த அரசர்கள்" என்பது முன்னையவர்கள் கூறிய பொருள். "படுக்கையிலே பெண்களை இருக்கச் செய்து, தாம் தாழ நின்று 'தங்கள் உள்ளத்தில் நினைத்

105. 7.10.8-36; திருவெழு. அடி. 13.
106. சி. மடல், கண்ணி.40.
107. 1.1.1-36, 24. 108. 4.1.5-36.

திருப்பது யாது? சொல்லக் கூடாதோ?' என்று தாம் பெண்களைத் தொழுது இன்பச் சுவையமுது உண்ட அரசர்கள்'' என்பது பட்டர் கண்ட நயவுரை.

4) இறைவன் தன்மைகளைப் பேசும் நம்மாழ்வார் முதலில் "மனனுணர்வு, அளவிலன், பொறியுணர்வு அவையிலன்'' என்று இறைவன் அறிவுடைப்பொருள் அறிவில் பொருள்களின் தன்மையினின்றும் வேறுபட்டு ஒப்பற்றவனாய் இருத்தலைப் பேசிப் பின்னும் "இனன் இலன்'' என்கிறார். இவ்வாறு பின்னும் ''ஒப்பு இல்லாதவன்'' என்று கூறுவதற்குத் "திரள (முழுவதும்) ஒப்பு இல்லையாகிலும் ஒருவகையாலேதான் ஒப்பு உண்டோ என்னில் அதுவுமில்லை என்கிறார்''என்று மற்றவர் உரைகூறிச் சென்றனர். இவர் இதற்கு வேறு வகையாக உரை கண்டார். ஒப்புமை காட்டுவது இருவகை. ஒத்த தன்மையுடைய பொருளினை உவமை காட்டுவது ஒருவகை. அகத்தியரைப் போன்று தொல்காப்பியனாரும் இலக்கணம் செய்தார் என்பது ஒத்த தன்மையுடைய பொருளினை உவமை காட்டுவதாகும். வேறுபட்ட தன்மையுடைய பொருளினை உவமை காட்டுவது மற்றொரு வகை. சிறந்த வீரர்கள் திருடர்களைப் போன்று வஞ்சனையாக நடக்க மாட்டார்கள் என்று சொல்வது இவ்வகையைச் சாரும். இதில் வீரர்கள் திருடர்களோடு ஒப்பிட்டுக் காட்டப்பட்டாலும் இருவரும் வேறுபட்ட தன்மையினராய் இருத்தல் வெளிப்படை. பட்டர் இவ்விரு வகையாலும் இறைவன் ஒப்புச்சொல்ல முடியாதவனாக இருத்தலை இங்கு ஆழ்வார் பேசுவதாக விளக்குகிறார். ''சாதர்மிய திருட்டாந்தம் (ஒத்த பொருளில் உவமை) இல்லை என்றது முன்பு; வைதர்மிய திருட்டாந்தம் (வேறுபட்ட பொருளில் உவமை) இல்லை என்கிறது இங்கு'' என்பது பட்டர் கூற்று.[109]

5) பெருமானை நினைவூட்டும் பொருள்களால் தலைமகள் தளர்ந்தாள். அவள் கூட்டமாக இருந்த நாரைகளை நோக்கி, ''நாரைகளே! நாமும் இவ்வுலகை விட்டுப் புறப்பட்டு வான நாடனோடு பொருந்தினோம்; நீங்கள் என்னை முடிப்பதற்குக் கூடிச் சிந்தித்தல் இனி என்ன பயனைத் தரும்? என் உடலும் பையவே பசையற்றது; உலகனைத்தும் இன்பத்தோடு வாழ்வதாக''- ''தழைநல்ல இன்பந் தலைப்பெய்து எங்குந் தழைக்கவே''- என்கிறாள். இப்படித் தலைமகள் உலகை வாழ்த்துவதற்கு மூன்று வகையாக விளக்கங் கூறப்பட்டுள்ளது. ''தாம்தாம் முடிய

109. 1.1.2-36.

நினைப்பார் 'நாடு வாழ்க' என்பாரைப் போலே சொல்லு கிறாள்'' என்றார் ஆளவந்தார். ''தான் பட்ட பாடு நாடு படாது ஒழிய வேணும் என்கிறாள்'' என்பது எம்பெருமானாரது விளக்கம். பட்டர் இவ்வாறு கூறாமல், ''நான் முடிய என் ஆர்த்தி கண்டு (என் துயரங் கண்டு) நோவுபடாதே, லோகம் அடங்கப் (உலகெல்லாம்) பிழைக்கும் ஆகாதே? (பிழைக்குமோ) என்கிறாள்'' என்று விளக்கியுள்ளார்.[110] இவரது விளக்கம் பெருமானை அடைய முடியாது தளரும் தலைமகளின் ஆற்றாமை கலந்த வெறுப்புணர்ச்சிமைப் புலப்படுத்தும் முறையில் அமைந்து பொருத்தமாக உள்ளது.

6) ''அழைக்கும் கருங்கடல் வெண்திரைக் கைக்கொண்டு
போய்அலர்வாய்
மழைக்கண் மடந்தை அரவணை ஏற, மண்
மாதர்விண்வாய்
அழைத்துப் புலம்பி முலைமலை மேல்நின்றும்
ஆறுகளாய்
மழைக்கண்ண நீர், திரு மால்கொடி யான்என்று
வார்கின்றதே''

என்பது கால மயக்குத் துறையில் அமைந்த திருவிருத்தப் பாசுரம். திருமகள் பெருமானை அலைகளின் வழியாக அழைத்துக் கொண்டுபோய் அரவணை மேல் ஏறினாள். அவ்வளவில் மண்மகள் ''அவன் கொடியவன்'' என்று ஆற்றாது புலம்பினாள் என்பது பாட்டின் கருத்து. இங்கு இறைவனைக் குறித்து மாற்றாள் போராட்டம் (ஸாபத்ந்யம்) அவர்களிடையே உண்டாவதாகச் சொல்வது எவ்வாறு பொருந்தும் என்னும் ஐயம் எழுகின்றது. இதற்கு ஆளவந்தாருக்கு முன்புள்ள முதலிகள் தானும் அவளுமான போகத்துக்கு நாம் ஸ்ரக்சந்தநாதிகளோபாதி வரவிருக்க (மாலையும் சந்தனமும் போலே உடன்வர இருக்க) என்னை அநாதரித்துப் (புறக்கணித்துப்) போவதே என்று இன்னாதாய் அழுகிறாள் என்று அமைதி கூறினர். இதனை ஆளவந்தார் கேட்டு மாற்றாள் போராட்டமாகக் கொள்ளாமல், வடிவு இணைஇல்லா மலர்மகளை இந்நீர் நடுக்க நடுங்கும்படி கடலிலே கொண்டு போவதே படுக்கையாக நான் கிடக்கச் செய்தே என்று ஸ்ரீபூமிப் பிராட்டி அழுகிறாள்காண்'' என்றுவேறுவகை விளக்கம் தந்தார். இவற்றைப் பட்டர் கேட்டு, ''இதெல்லாம் (இவையெல்லாம்)

---

110. 9.5.10-36.

வேண்டாகாண்; அநுபபந்நமாய் (தகாததாய்) இருப்பது ஒரு அர்த்தத்தைச் சொல்லவே 'இது எங்ஙனே கூடும்படி' என்று தலைமகள் நெஞ்சிலே படும்; அவள் விசாரித்து நிர்ணயிக்குங் காட்டில் (ஆராய்ந்து அறுதியிடுவதற்குள்) அவன் வந்துகொடு நிற்கும்'' என்னும் விஸ்ரம்பத்திலே (நம்பிக்கையிலே) சொன்னார் களாக அமையும்காண்'' என்று விளக்கினார்.[111] இதனால் பட்டர் எதனையும் எளிதில் சிக்கறுத்துத் தெளிவிக்க வல்லவர் என்பது போதரும்.

இத்துணைப் பேராற்றல் மிக்க பட்டர் யாது காரணத் தாலேயோ திவ்வியப் பிரபந்தங்கள் அனைத்திற்கும் உரை வரைய முயலவில்லை. இவர் 'மைவண்ண நறுங்குஞ்சி' என்னும் திருநெடுந்தாண்டகப் பாசுரத்திற்கு மட்டுமே உரை வரைந் துள்ளார். அஃது இவர்தம் புலமை வீறுகாட்டித் திகழ்கின்றது.

3. நஞ்சீயர்

தோற்றம்

மேல்நாடு என்று வைணவர்களால் குறிக்கப்பெறும் மைசூர் மாநிலத்தில் திருநாராயணபுரம் என்னும் ஊரில் நஞ்சீயர் தோன்றினார். இவர்தம் இயற்பெயர் மாதவசூரி. இவருக்கு மனைவியர் இருவர். அத்வைதத்தில் துறைபோய அறிஞராய் ஆறு சமயங்களுக்கும் ஆறு இருக்கை இட்டுக்கொண்டு 'வேதாந்தி' என்னும் புகழோடு திகழ்ந்தார்.

வைணவராதல்

இராமானுசர் பட்டருக்கு நஞ்சீயரை வெற்றிகொண்டு வைணவ சமயத் தலைவராக்க வேண்டும் என்று கட்டளை யிட்டிருந்தார். ஒரு தீர்த்தவாசிப் பிராமணன் துணையினால் திருநெடுந்தாண்டகத்தில் வல்லவரான பட்டர் இவரை வென்று திருத்திப் பணிகொண்டார். பட்டர் இவரைச் சொற்போரில் வென்றபோது, ''உம்மை மனிதர் என்றிருந்தேன்; உம்மோடு நம்பெருமாளோடு வேற்றுமையில்லை; உறங்கும் பெருமாள் அவர்; உலாவும் பெருமாள் நீர்'' என்று பல கூறிப் போற்றி இவர் பட்டர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். அத் தீர்த்தவாசிப் பிராமணனும் திருமால் நெறியினைப் பற்றித் திருமழிசைதாசர் என்னும் பெயர் தாங்கினான்.[112]

---

111. தி.வி.52.   112. மேற்படி நூல் 99.

துறவுக்கோலம்

சில காலம் சென்றபின் நஞ்சீயருக்கு இல்லறத்தில் வெறுப்பு உண்டாயிற்று. தம் செல்வத்தை மூன்று பகுதியாகப் பிரித்துத் தம் மனைவியர் இருவருக்கும் இரு பகுதிகளைக் கொடுத்துவிட்டு மற்றொரு பகுதியைப் பட்டருக்கு வழங்குவதற்கு எடுத்துக் கொண்டு திருவரங்கம் சேர்ந்தார். பட்டர் திருவடிகளில் செல்வத்தைப் படைத்து 'யான்', 'எனது' என்னும் செருக்கற்று நின்றார். அவரும் இவரை வாரி அணைத்துக்கொண்டு "நம் சீயர் வந்தார்" என்று கூறி அன்று முதல் தம் அருகிலேயே வைத்துக் கொண்டார். மாதவசூரியும் நஞ்சீயர் என்னும் பெயரோடு துறவி யானார்.

நஞ்சீயர் துறவுக்கோலம் ஏற்றபொழுது அனந்தாழ்வான் திருவரங்கத்தில் இருந்துள்ளார். அவருக்குப் பட்டரின் முன்னைய செல்வ வாழ்வு தெரியும். அதனால் "ஒரு பூவைச்சூடி வெற்றிலையைத் தின்று சந்தனத்தைப்பூசி வாழ்ந்துகொண்டே 'எம்பெருமானே காப்பு' என்று இருந்தால் பரமபதத்தில் நின்றும் இழியத் தள்ளிவிடுவார்களோ? இவர் இப்படிச் செய்தது முறை ஆகாது" என்று மிகவும் வெறுத்துரைத்தார். அப்பொழுது அருகில் இருந்தவர்களும், "இவர் (நஞ்சீயர்) இப்படிச் செய்ய லாமா?" என்றனர். அனந்தாழ்வான், "இனி என்ன செய்வது? துறவுக்கோலம் ஏற்றாயிற்று" என்று வெறுப்பது விடுத்து, "திருமந்திரத்திலே பிற..." என்று தொடங்கிச் செல்லமாட்டாமல் மூன்று முறை சொல்லிப் பின் "திருமந்திரத்திலே பிறந்து துவயத்திலே வளர்ந்து துவயத்தையே பற்றி நிற்பவனாய்த் (த்வயைக நிஷ்டனாம்படியாய்) தலைக்கட்டுவது உன் கடமை" என்று மொழிந்தாராம்.[113]

பட்டரிடம் அருளிச்செயல் விளக்கம் கேட்டல்

இவர் பட்டரிடம் அருளிச்செயல் விளக்கங்களைக் கேட்டுள்ளார். அதுபற்றிய குறிப்பொன்று திருவிருத்த உரையில் இடம்பெற்றுள்ளது. நஞ்சீயரும் திருமழிசைதாசரும் ஒருமுறை பகலிருக்கையில் போயிருந்து திருவாய்மொழி ஓதிக்கொண்டிருந் தனர். அப்போது அங்கு வந்த கந்தாடையாண்டான், அவர்கள் சடுபாட்டுக்கு ஊறு நேரக்கூடாது என்று பின்னிட்டுச் சென்றார். அவரைக்கண்ட சீயர் எழத்தொடங்க, அவர் 'வேண்டா, என்பதற்கு அடையாளமாகக் கைகவித்துக்கொண்டு வந்து,

---

113. நா.தி.7.2.

"நீங்கள் கோயிற் கூழைத்தனம் அடிக்கிறபடி இதுவோதான்?" என்றார். அஃதாவது கோயில் பரிசாரகம் (தொண்டு) செய்யும் வ்யாபாரம் (செயல்முறை) இதுவோ என்பதனைக் கோயில்லாமையால் வந்த கூழைத்தனச் செயல்புரிகிறீர்களோ என்னும் குறிப்புப் பொருள்படக் கூறினாராம். அதற்குத் திருமழிசைதாசர், பட்டர் திருமுன்பு கற்ற திருவாய்மொழியைத் தாங்கள் இருவரும் அங்கு மனனம் பண்ணிக்கொண்டிருப்பதாகத் தெரிவித்தாராம்.[114]

வைணவ சமயப்பற்று

"அடைமொழிகளில் கருத்தின்றிக்கே (விசேஷணங்களில் தாத்பர்யமின்றிக்கே) அடைகொளியிலே (விசேஷ்யத்திலே) ஊன்றாநின்றது; என் நெஞ்சுக்கு மாயாவாத ருசியுண்டோ? அறிகிலேன்'' என்பர் சீயர் என்னும் பெரியவாச்சான் பிள்ளை உரைப்பகுதி,[115] இவர் அத்வைதியாக இருந்த முன்னைய நிலையைச் சுட்டுகிறது. சமயம் மாறியவர்களே தாங்கள் சார்ந்திருந்த முன்னைய சமயத்தை வன்மையாகக் கண்டிப்பது பொதுவான வழக்கம். இவரும் அங்கங்கே மாயாவாதத்தைச் சாடிச் சென்றுள்ளார். "'திருவுடம்பு வான்சுடர்' என்னப் பெறுவதே! 'ஈச்வரனுக்கு விக்கிரகமில்லை; குணமில்லை' என்கிறவர்கள் பண்ணி வைக்கமாட்டாத பாவமில்லை. அவர்களை (வழிபட்டு) அநுவர்த்தித்து அது கேட்க இராதபடி பெருமாள் நமக்குப் பண்ணின உபகாரம் என்! என்று அருளிச்செய்வர் சீயர்'' என்பது ஈட்டுரை.[116] "பச்சைமாமலை" என்னும் பாட்டு உரையிலும் இவர் அத்வைதிகளை இகழ்ந்துள்ளார்.[117] இப்படிப் பிற சமயத்தைக் கண்டிக்கும் இவர், "மதித்தான் ஒரு வைணவன் திருவடியிலே தலைப்படத் தண்டனிட்ட அன்று எனக்கு உண்டு பசி கெட்டாப் போலே இருக்கும்" என்று அருளிச்செய்வர்.[118] இதனால் இவரது வைணவ சமயப் பற்றினை நன்கு அறியலாம்.

இறையன்பு

இறைவனுடைய எளிமைக் குணத்தினை எண்ணி நெகிழும் நெஞ்சினராய் இருந்துள்ளார். ஒருமுறை வராகபுராணம் படித்த போது, ஸ்ரீவராக நாயனார்க்கு முத்தக்காசை (கோரைக்

---

114. தி.வி.99.
115. 5.3.5-24.
116. 2.5.2-36.
117. தி.மா.2.
118. 6.1.2-36.

கிழங்கினை) அமுதுசெய்விப்பது (உணவாகப் படைப்பது) என்று வந்தது கண்டு, "இது என்ன மெய்ப்பாடுதான்!" என்று பெருமான் தாழ்ந்த பொருளினையும் ஏற்றுக்கொள்ளும் எளிமையினை எண்ணி ஈடுபட்டாராம்.[119]

பட்டரின் பாராட்டு

பட்டரால் அருளிச்செயல் கற்பிக்கப்பட்ட இவர் அவரால் பாராட்டப்பெறும் வகையில் விளக்கம் சொன்னார் என்பது இவரது நுண்ணறிவுக்குச் சான்று. பட்டர் ஒருநாள், "மைப்படி மேனியும் செந்தாமரைக் கண்ணும் வைதிகரே" என்னும் திருவிருத்தத்தை விளக்கிக் கொண்டிருந்தார். அங்கு இருந்த பிள்ளை விழுப்பரையரும், ஆப்பான் திருவழுந்தூரரையரும் அத்தொடருக்கு "நினைத்தவர் நெஞ்சிலே இருள்படியும்படியான திருமேனியும்" என்று பொருள் விரிந்தனர். அங்கிருந்த நஞ்சீயர், "இன்னார் என்று அறியேன் என்னப் பண்ணிற்று" என்றார். பட்டர் அதனைக்கேட்டு, "இப்படிக் கூறியவர் யார்?" என்று வினவினார். பிள்ளை விழுப்பரையரும் ஆப்பான் திருவழுந்தூர் அரையரும் 'சீயர்' என்று கூறினர். அதுகேட்டு மகிழ்ந்த பட்டர் "நூற்றுப்பதின் காதத்திற்கு அப்பால் பிறந்து இவ்வளவும் வந்து இன்று நமக்கு இதனைச் சொல்லி உதவியருள்வதே!" என்று சீயரைக் கொண்டாடினாராம்.[120]

மாணாக்கர்கள்

இவர்தம் மாணாக்கர்களுள் முதன்மையானவர் நம்பிள்ளை. இவரே ஒன்பதினாயிரப்படியினைப் பட்டோலை செய்தருளினவர். வீரப்பிள்ளை, பாலிகை வாளிப்பிள்ளை என்போரும் இவர் மாணாக்கராய் இருந்துள்ளனர். இவ்விருவர்க்குமிடையே மன வேறுபாட்டைச் சீயர் தீர்த்து வைத்துள்ளார்.[121] கல்பிரமதேசத்தில் அக்காலத்தில் ஊர் நடப்புகளைக் கவனித்துவந்த கரிகால் சோழ பிரமராயன் என்பவன் திருவாய்மொழிக்கு ஒரு விளக்கவுரை செய்துவந்து நஞ்சீயரிடம் காட்டியுள்ளான்.[122]

பிற செய்திகள்

இராமானுசர் காலத்தில் திருவாய்மொழி முதலான நூல்களின் பாசுரங்களுக்கு மெய்ப்பாடு தோன்ற ஆடியும் பாடியும்

---

119. 1.6.1-36; பெரி.தி.4.8.8 உரை.
120. தி.வி. 94.
121. 3.7.3-36.
122. 3.9.2-36, 24.

காட்டிய உய்ந்த பிள்ளையின் பாடலை இவரும் கேட்டுள்ளார்.[123] இதனால் உய்ந்த பிள்ளை இவர் காலம் வரை வாழ்ந்தவர் என்பது தெரிகின்றது. அம்மங்கியம்மாள் இவர் காலத்தில் உலகவாழ்வு நீத்துள்ளார்.[124] இவர் தம் காலத்தில் வாழ்ந்த பாண்டிய அரசன் சுந்தர பாண்டியனைச் சந்தித்து உரையாடியுள்ளார். அப்பொழுது, "குணைர் தசரதோபம :" (குணங்களுக்குத் தசரதன் உவமை யாவான்) என்னும் தொடருக்கு, "பரமபதத்தில் உள்ள ஸ்வாபாவிக (இயற்கைக்) குணங்களும் அவதரித்து ஆர்ஜித்த (பிறந்து ஈட்டிய) குணங்களும் கூடினால் சக்கரவர்த்தியோடு (தசரதனோடு) மார்மட்டமாய் நிற்குமித்தனை" என்று விளக்கங் கூறினார். அஃதாவது சக்கரவர்த்தி திருமகன் என்று சொன்னாலே போதும், அவன் குணச்சிறப்பு விளங்கும் என்னும் கருத்தினைத் தெரிவித்தார். அதற்குச் சுந்தரபாண்டிய தேவர், "பரமபுருஷனுக்கு ஓரிடத்தே பிறந்து ஒருகுணம் தேட வேணுமோ?" என்றாராம். உடனே நஞ்சீயர், நாமோடுகிற நரம்பு இவன் அறிந்திலன் (நம் எண்ணப் போக்கினை இவன் அறிந்திலன்) என்று அதனைக் குறித்துச் சர்ச்சை செய்வதனை விட்டுப் "பரமபுருஷன் என்ற போதை அழகிருந்தபடி என்!" (தாங்கள் பரமபுருடன் என்று எவ்வளவு அழகாகக் கூறினீர்கள்) என்று பேச்சை மாற்றி அவனைக் கொண்டாடினாராம்.[125]

இறுதிக் காலம்

இவர் நோய்வாய்ப்பட்டுக் கிடந்ததறிந்து பெற்றி என்பவர் காணச் சென்றார். அப்பொழுது பெற்றி இவருக்கு யாது தேவை என்று வினவினார். அதற்கு நஞ்சீயர், "தூவிரிய மலருழக்கிப் பாட்டுக் கேட்கவும், பெருமாள் எழுந்தருளப் பின்னும் முன்னும் சுற்றும் வந்து திருவடி தொழவும் விரும்புகிறேன்" என்றார். அவர் உடனே வரந்தரும் பெருமாளரையரை அழைத்துவந்து பாடச் செய்தார். அரையர் பாடும்போது, "ஓர் மீனாய கொடி நெடுவேள் வலிசெய்ய மெலிவேனோ?" என்று பாடுங்கால், "காமசரங்களால் ஏவுண்பதற்கு முன்பே வாராவிட்டாலும் பட்ட புண் ஆற்றுவிக்கவாகிலும் வந்தால் ஆகாதோ?" என்றாராம்.[126] இது நஞ்சீயர் இறுதிக்காலத்தில் நிகழ்ந்ததாகக் கருதலாம்.

---

123. 7.2.5-36.
124. பெ.தி.3.6.9.
125. பெ.தி.10.4.1; நா.தி.9.3.
126. பெ.தி.3.6.0.

உரைத்தொண்டு

நஞ்சீயர் திருவாய்மொழிக்கு ஒன்பதினாயிரப்படி விளக்கத்தோடு திருப்பாவைக்கு ஈராயிரப்படி உரையும், திருவந்தாதிகள், அமலனாதிபிரான், கண்ணிநுண்சிறுத்தாம்பு, திருப்பல்லாண்டு ஆகியவற்றிற்கும் உரை எழுதியுள்ளார் என்பர்.[127] திருவாய்மொழி (ஒன்பதினாயிரப்படி), கண்ணிநுண்சிறுத்தாம்பு, திருப்பள்ளியெழுச்சி ஆகியவற்றிற்கு இவர் எழுதியுள்ள உரையே இப்பொழுது வழக்கிலுள்ளன. இவர் வடமொழியில் சரணாகதி கத்ய வியாக்யானம், ஸ்ரீஸூக்த பாஷ்யம் என்னும் நூல்களை ஆக்கினார் என்பர்.[128] ஆனால் இவர் வடமொழியில் ஒரு நூலும் எழுதாமல் அருளிச்செயல் விளக்கவுரைகள் மட்டுமே அருளினார் என்பர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார்.[129]

விளக்கச் சொற்பொழிவுகள்

நஞ்சீயர் திருவாய்மொழிக்கு நூறுமுறை விள்க்கங் கூறிய பெருமைக்கு உரியவர். இவர் உரையில் இடம்பெறாமல் சொற்பொழிவுகளில் தெரிவித்தனவாக நம்பிள்ளையும் பெரியவாச்சான் பிள்ளையும் தம் உரைகளில் காட்டிச் செல்லும் கூற்றுகளும் நயவுரைகளும் பலவாம்.

கூற்றுகள்

1) வைணவன் யார் என்பதற்கு, ''ஒருவனுக்கு வைணவத்துவம் உண்டு, இல்லை என்னுமிடம் தனக்கே தெரியுங்காண்! பிறர் துன்பங்கண்டால் ஐயோ! என்று இருந்தானாகில், 'நமக்கு இறைவன் தொடர்பு உண்டு' என்று இருக்க அடுக்கும்; இத்தனையும் அவனுக்கு வேண்டும் என்றிருந்தானாகில், 'நமக்கு இறைவன் தொடர்பு இல்லை' என்று இருக்க அடுக்கும்'' என்று தந்துள்ள விளக்கம் விரிந்து பரந்தது; ஒப்பற்றது.[130]

2) ''தாயைக் குடல்விளக்கஞ் செய்த தாமோதரனை'' என்னும் திருப்பாவைத் தொடரில் வரும் தாமோதரன்

---

127. ஆ. ரங்கநாத முதலியார் (பதி.), ஸ்ரீவைஷ்ணவம், திருவல்லிக்கேணி, 1937, பக். 240.
128. மேற்படி நூல், பக்.240.
129. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் (பதி.), ஸ்ரீரங்கம் பாரதீய பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ ஸபையின் பொன்விழா மலர், திருச்சி, 1978, பக். 226.
130. 1.2.0-36; 6.10.4-36; பெ.தி.1.1.8.

என்பதற்கு உரை கூறுமிடத்து, "பணைகளிலே (பரண்களிலே) தாவினவாறே உடை நழுவத் தழும்பைக் கண்டு இடைச்சிகள் சிரித்தார்கள்; அத்தழும்பு தோன்றாமைக்கிறே நம் பெருமாள் கணையம் மேல்சாத்து(ச்) சாத்துகிறது" என்பது சீயர் கூற்றாகக் காட்டப்படுகிறது.[131]

3) தலைமகள் அன்னங்களை நோக்கி,

"என்திரு மார்வற்கென்னை இன்னவாறிவள் காண்மினென்று
மந்திரத் தொன்றுணர்த்தி உரையீர்மறு மாற்றங்களே"

என்கிறாள். தலைமகள், "இன்னவாறு இவள் காண்மின்" என்று உணர்த்துமாறு கூறுவதற்கு, "இவளுடைய நிற வேறுபாட்டைத் தங்களுடம்பாலே ஏறிட்டுக் காட்டவல்ல போல காணுமிவை" என்று நகைச்சுவை இழையோடக் கூறுவராம்.[132]

"கற்புடைய மடக்கன்னி காவல் பூண்ட
கடிபொழில்சூழ் நெடுமறுகில் கமல வேலி,
பொற்புடைய மலையரையன் பணிய நின்ற
பூங்கோவ லூர்தொழுதும் போது நெஞ்சே!"

என்பது திருநெடுந்தாண்டகம். இதில், "கற்புடைய மடக்கன்னி" என்று வருவதற்குப் பொருள் கூறுமிடத்துப் பல்லாண்டு பாடுபவள் (காப்பவள்) என்னுங் கருத்தில், "தம்பி வளைக்காரி யன்றோ" என்று குறிப்பராம்.[133] இவைபோன்று நஞ்சீயர் கூற்று களாக வருபவை பல.[134]

உரை விளக்கங்கள்

இயல்பாகப் பொருள்கூறுதல்

இவர் நயங்காண வேண்டும் என்பதற்காக வலிந்து பொருள் கூறாமல் இயல்பாகப் பொருள்சொல்லி நயங்காட்டுவர் என்பதனைக் கீழ்வரும் இரு எடுத்துக்காட்டுகளால் உணரலாம்.

தலைமகள் தன் கிளியை நோக்கி, "'என் பிழையே நினைந் தருளி அருளாத திருமாலார்க்கு' இவள் என் பிழைத்தாள்

131. பாவை, 5-6. 132. 6.8.10-24.
133. தி.நெ.தா.7.
134. 3.7.10-36; 4.2.0-24,36; 4.5.0-36; 4.8.2-24,36; 5.2.1-36; 5.6.9-36; 5.6.10; 6.1.0-36; 6.3.9-36; 6.8.2-24; 7.10.10-36; 9.3.5-36; 6.3.5-36; க.நு.சி.1 பெரி; க.நு.சி.2 அழகு; பெ.தி.1.3.1; பாவை 24-3; தி.நெ.தா.21 பெரி.

திருவடியின் தகவினுக்கு என்று ஒரு சொல் கேள்'' என்கிறாள். இதில், "அருளாத திருமாலார்க்கு'' என்று வருதற்கு, ''நான் இப்படி நோவுபட வேண்டுகிறது - அவனுக்கு அவள் (திருமகள்) முகங்கொடுத்து அங்கே துவக்குகையிறே என்று இன்னாது ஆகிறாள்'' என்று பிராட்டியின் மீது தலைமகள் வருத்தங் கொள்வதாகப் பிள்ளான் உரை கூறுவராம். ஆனால் நஞ்சியரோ ''நகச்சிந் நாபராத்யதி (குற்றஞ்செய்யாதவர் ஒருவரும் இலர்) என்பாரும் அருகேயிருக்க எங்கள் குற்றம் பார்த்து அவள்பக்கல் முகம்பெற (அன்பு பெற) இருக்கிறாரே!'' என்று பிராட்டியின்மீது வெறுப்புக்கு மாறாக மதிப்போடு தலைமகள் பேசுவதாக உரை கூறுகிறார்.[135]

''பொருள் கைஉண்டாய்ச் செல்லக் காணில் போற்றுஎன்
ஏற்றெழுவர்
இருள்கொள் துன்பத்தின்மை காணில் என்னேஎன்
பாருமில்லை''

என்னும் திருவாய்மொழியில் ''என்னே என்பாருமில்லை'' என்பதற்குப் பிள்ளை திருநறையூரரையர், ''ஒருவன் பிறருக்குக் கொடுத்தே வறுமையடைகிறான். இவனால் செழிப்புற்றவன், முன்பு வாரிக் கொடுத்து வறுமைநிலையில் இன்று இருப்பவனை என் என்னுதல், இவன் வீட்டிலே வந்தொருநாள் கால் கழுவிப் போதல் செய்ய அவ்வளவாலே இன்னான் இன்னானுக்கு உறவன்றோ என்று இவ்வளவு கொண்டு வாழக்கூடிய நிலையிருந் தால் அவ்வளவும் செய்வாரில்லை'' என்று நயவுரை கூறியுள்ளார். ஆனால் இவரோ ''என்னே என்பாருமில்லை - ஐயோ! என்னக் கடவாருமில்லை'' என்று உரை சொல்கிறார்.[136] ஈடு இவரது விளக்கத்தைத் தன்மயமாக்கிக் கொண்டுள்ளது.

நயவுரைகள்

நம்மாழ்வார், "நோவ ஆய்ச்சி உரலோடு ஆர்க்க இரங்கிற்று'' என்று கண்ணன் யசோதையால் உரலிடைப் பிணைக்கப்பட்ட செயலைப் பாடுகிறார். இப்பாட்டினைப் படிக்கத் தொடங்கினால், "நோவ என்றருளிச் செய்யும் அழகு காணும்; நோவ என்கிறார் காணும் ஆழ்வார் தம் திருமேனியிலே கயிறு உறுத்தினாப்போலே'' என்று சொல்நயத்தில் திளைப்பார்.[137]

135. 1.4.7-36.
136. 9.1.3-24.
137. 6.4.4-36.

"உற்றான்என் றுள்ளத்து வைத்தருள் செய்கண்டாய்
கற்றார்சேர் கண்ண புரத்துறை அம்மானே!"

என்பதில் 'கற்றார்' என்பதற்கு, "நீ வாழும் ஊரில் உள்ளாரில் பழையதாய்க் கழித்த ஏடு எடுத்து இனிப் படித்தறிய வேண்டுவார் உண்டோ? அறிவுடையவர்களுக்கு எல்லாம் தெரியவேண்டும் அல்லவா? அவர்களைக் கேட்டாகிலும் வேறு புகலற்று வந்தவனைக் கைக்கொள்வது தகுதியா? கைவிடுவது தகுதியா? என்பதனைத் தெரிந்துகொள்" என்னும் பொருள் தருமாறு, "நீ வர்த்திக்கிற ஊரில் உள்ளார் விழுந்த ஏடு எடுத்து வாசித்தறிவார் உண்டோ? அறிவுடையார்க்கு எல்லாம் படவேண்டாவோ? 'ஆர்யேண கருணம் கார்யம்' (பெரியோனால் கருணை காட்டப் படுதற்குரியது) என்னக் கடவதிறே" என்று விளக்கம் கூறுவர்.[138]

தலைமகளின் தாய் பெருமானிடத்தில், "வட்ட வாய்நுதி நேமியீர்! உம்மைப் பிரிந்து நிரந்தரமாக நோவுபடுகிற இவ் ஏழைப் பெண்ணின் திறத்தில் என் செய்ய நினைத்துள்ளாய்" என்கிறாள். இதில் "வட்டவாய் நுதி நேமியீர்" என்று பெருமானை விளித்தற்கு, "உகப்பாரை அவ்வழகைக் காட்டி (கையுந் திருவாழியுமான சேர்த்தியழகு) அவ்வழகைக் கொண்டு அகல நின்று முடிக்கும், உகவாதாரைக் கிட்டிநின்று அத்திருவாழியாலே அழியச்செய்து முடிக்கும்" என்று உரை கூறுவராம்.[139]

"பால துன்பங்கள்" என்னும் பாசுரத்தில் முன்னேயும் பின்னேயும் உள்ள பாசுரங்களில் 'திருவரங்கத்தாய்' என்று பெருமானை விளித்துக் கூறுவது போன்று கூறாமல் "இருக்கும்; என்னுடைக் கோமளக் கொழுந்தே" என்று தலைவியின் நிலையினைமட்டும் கூறுகிறாள் தலைமகளின் தாய். இதற்குத் "தசை முறுகினால் (நோய் அதிகமானால்) வைத்தியர்கள் முகம் பாராதாப் போலே மகள் நிலையினைக் கண்டு தளர்ந்து பெரிய பெருமாள் முகம் பாராதே வார்த்தை சொல்லுகிறாள்" என்று இவர் விளக்கம் தருவராம். இது சீயர் தரும் விளக்கம் என்பது திரு.பு.ரா. புருஷோத்தம நாயடு அவர்கள் குறிப்பு.[140]

"பண்டிவரைக் கண்டறிவ தெவ்வூரில் யாம்என்றே
பயில்கின் றாளால்"

---

138. பெ.தி.8.10.5. 139. 2.4.9-24.
140. பு.ரா. புருஷாத்தம நாயடு, ஈட்டின் தமிழாக்கம் (இரண்டாம் பதிப்பு), சென்னைப் பல்கலைக் கழகம், 1971, 7.2.7-36.

என்பது தாயார் கூற்றாக அமைந்துள்ள திருமங்கை மன்னன் பாசுரப்பகுதி. இது, "முன்பு இவரை எங்கோ பார்த்திருப்பது போல இருக்கிறது; எங்கே பார்த்திருப்போம் என்று சிந்திக்கிறாள்" என்றும், "பண்டு இவரை எவ்வூரில் கண்டறிவது? எவ்வூரிலும் கண்டறிந்ததில்லை; இன்றுதான் முதன்முதலாகக் காண்கின்றோம் என்கிறாள்" என்றும் இருவகையாகப் பொருள்கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. ஒரே தொடர் ஒன்றற்கொன்று நேர்மாறான இருபொருள்களைத் தருவதாகக் கொள்ளலாமா என்னும் ஐயம் எழுகின்றது. இதனைப் 'பயில்கின்றாளால்' என்று வருவதால் பலகால் சொல்கிறாள் என்பது விளங்கும். முதல் தடவை சொல்லும்போது ஒரு பொருளும், அடுத்தமுறை சொல்லும்போது மற்றொரு பொருளும் தோன்றும் என்று கூறி அகற்றுகிறார்.[141] இங்குக் காட்டப் பட்டவையேயன்றி நஞ்சீயர் ஆட்சிகள் இன்னும் பல உள்ளன.[142]

வினாவும் விடையும்

ஆப்பான் திருவழுந்தூரரையரும், நம்பிள்ளையும் எழுப்பிய பல ஐய வினாக்களைத் தம் அழகிய விளக்கத்தால் களைந்துள்ளார் நஞ்சீயர்.

நஞ்சீயர், "பிணங்கி யாவையும்" என்னும் திருவாய்மொழிப் பாசுரத்திற்கு, "தலைமகன் கிட்டிநின்று தலைமகளோடு சோலையில் இருந்த பெண்களிடம் சில வம்புகள் செய்யத் தொடங்கினான். 'இங்கே இருந்தாலன்றோ இவன் இவற்றைச் செய்வது' என்று நினைத்து, ஒருவர் ஒருவராகப் போகத் தொடங்கினர். பூஞ்சோலையாகையால் வழி ஒற்றையடிப் பாதையாக இருந்தது. 'இதுவோ நீங்கள் நினைத்தபடி' என்று கூறி வழியில் சென்று பெருவிலங்கு போலக் (யானைபோல) கிடந்தான்" என்று முன்னுரை கூறினார். அங்கிருந்த ஆப்பான், "இவர்கள் இவனைத் தாண்டிச் சென்றார்களானால் இவன் என் செய்வான்?" என்று வினவினார். அதற்கு, "அப்படிச் செய்தால் அது யாருக்கு உகப்பான செயல்? 'நாம் தடுத்தால், ஒன்று நம்மால் தடுக்கப் பட்டு நிற்றல் அல்லது நம்மைத் தீண்டிக் கடந்து செல்லுதல் இரண்டில் ஒன்று நிறைவேறும்' என்றல்லவா அவன்தான் கிடக்கிறது" என்று பதிலிறுத்தார்.[143]

---

141. பெ.தி. 8.1.9.
142. பெ.தி. 1.1.2; 10.10-7; 11.8.3.
143. 6.2.8-36, 24.

நம்பிள்ளை எழுப்பிய வினாக்களும் அவற்றிற்கு நஞ்சீயர் தந்த விளக்கங்களும் சிறப்பானவை.

1) தோழி அன்னையரிடம், "தலைமகளுக்கு, 'மாயப்போர்த் தேர்ப்பாகனால்' உண்டான நோய் அணங்காடுதல் தவிர்த்து 'மணியின் அணிநிற மாயன் தமர் அடி நீறுகொண்டு அணிய முயலின்' நீங்கும்" என்கிறாள். திருக்கொட்டாரத்தின் (தானியக் கிடங்கின்) அருகே கைந்நிரை கட்டிக்கொண்டிருந்த நாளில் இத் திருவாய்மொழியினைச் சீயர் அருளிச்செய்து கொண்டிருந் தார். அப்பொழுது, 'தேர்ப்பாகனார்க்கு' என்று நோய்க்குக் காரணம் அவனாகச் சொல்லப்பெறும்போது அத்தேர்ப்பாகனை கொண்டல்லவா நீக்கிக்கொள்ள வேண்டும். அவனை விடுத்து "மாயன் தமர் நீறு கொண்டு" நீக்கலாம் என்று, நோய்க்குக் காரணம் ஒன்றும், அதற்கு மாற்று ஒன்றுமாகவோ இருப்பது என்று வினவினார். அதற்கு நஞ்சீயர், "மோர்க்குழம்பு தொண்டையில் இழியாதே (இறங்காமல்) மயங்கிக் கிடக்கும் சமயத்தில் சுக்கு இட்டு ஊதிப் பின்பு மோர்க்குழம்பு கொடுத்து மயக்கந் தீர்ப்பாரைப்போலே, 'தேர்ப்பாகனார்க்கு' என்ற போதே அவரைக் கொண்டுவந்து காட்டப்பெறாமையாலே, முற்பட இவ்வழியாலே தேற்றிப் பின்னை அவரைக் கொண்டு வந்து காட்டுவதாகக் கொள்ளவேண்டும்" என்று விடை யளித்தார்.[144]

2) நம்பிள்ளையின் வினாவிற்கு அழகிய உவமை காட்டி, மிகச் சிறந்த முறையில் நஞ்சீயர் தந்த விளக்கமொன்று பெரிய திருமொழியுரையிலும் இருபத்துநாலாயிரப்படி, ஈடு ஆகிய வற்றிலும் இடம்பெற்றுள்ளது.

"ஆருயிர் பட்டது எனதுயிர் பட்டது?" என்பது நம்மாழ்வார் வினா. "இதற்கு விண்ணுலகில் யார் உயிர் பட்டது, மண்ணுலகில் எனது உயிர்பட்டது?" என்று எம்பெருமானார் உரைகண்டார். அஃதாவது, "அரியவர்களான நித்திய சூரிகளில் திருவடி, திருவனந்தாழ்வான் போல்வார்தாம் பட்டார்களோ? நான் பட்டபடி" என்கிறார். இவ் எம்பெருமானார் விள்க்கத்தைச் சீயர் கூறினார். நம்பிள்ளை அவரை நோக்கி, "கருடாழ்வான், திருவனந்தாழ்வான் போல்வாருடைய அனுபவத்தையன்றோ அடைதற்குரியதாகவும், ஆசைப்படுவதாகவும் சொல்வது. அங்ஙனமிருக்க, அவர்களுக்கும் மேலான ஓர் ஏற்றம் தமக்குள்ள தாக ஆழ்வார் சொல்வது எதற்காக?" என்றார். நஞ்சீயர்

144. 4.6.6-36,24.

அதற்குப் "புதுமணப் பெண்ணுக்குக் கணவனுடைய கைகள் தன்மேல் பட்டவாறே வேர்ப்பது விடுவதாமாறு போலே, இவர் அனுபவத்தில் புதியவராகையாலே படுகிற அலமாப்புக் காணும்" என்று விடையிறுத்தார்.[145]

3) நாச்சியார் திருமொழியில் "மன்னு பெரும் புகழ்"த் திருமொழியின் நான்காம் பாசுரத்தில், "துன்பக் கடல்புக்கு வைகுந்தன் என்பதோர் தோணி பெறாது" உழல்வதாகச் சொல்லும் நாச்சியார் அடுத்த பாடலில்,

"மென்னடை அன்னம் பரந்து விளையாடும் வில்லிபுத்
தூருறை வான்தன்
பொன்னடி காண்பதோர் ஆசையினால்என் பொருகயல்
கண்ணிணை துஞ்சா"

என்கிறாள்.

நம்பிள்ளை, "வைகுந்தம் தொலைவில் இருப்பதால் வைகுந்தனைப் பெறாது வருந்துவதாகக் கூறியது பொருந்தும். ஆனால் ஆண்டாள் பிறந்து வளர்ந்த ஊர் வில்லிபுத்தூர். அப்படியிருக்க வில்லித்தூர் உறைவானைக் காண முடியாமல் கண்கள் விடாய்த்தன என்பது எப்படிப் பொருந்தும்?" என்று வினவினார். அவ்வினாவினைக் கேட்டு மகிழ்ந்த நஞ்சீயர், "நீர் கேட்டது அழகியதே; கோயிலின் உள்ளே சென்று வந்தால் நம்மைப் போலே நெஞ்சுருக்கமின்றித் திரும்பி வருபவளல்லள் ஆண்டாள். பரதாழ்வானைப் போலே பெருமான் குணத்தில் ஆழங்காற்பட்டு மயங்குபவள் அவள். அவளைக் கோயிலுக்கு அழைத்துக்கொண்டு போனால் அவன் சீல குணத்தைக் கண்டவுடனே மயங்கி வீழ்வாள் என்பதனை உணர்ந்திருக்கும் அவள் உறவினர்கள் அவளை இழக்கவொண்ணாது என்று கோயிலுக்கு அழைத்துச் செல்வதே இல்லை. அதனால் அவள் அவ்வாறு கூறுவது பொருந்தும்" என்றார்.[146]

4) நாச்சியார் திருமாலிருஞ்சோலை நம்பிக்கு,

"நூறு தடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து பராவிவைத்தேன்
நூறு தடா நிறைந்த அக்கார அடிசில்சொன்னேன்"

என்கிறார்.

145. பெ.தி. 9.3.1; 9.7.9-24,36.
146. நா.தி. 5.5.

இதுகுறித்து நம்பிள்ளை, "'அந்யத் பூர்ணாதபாம் கும்பாதி அந்யத் பாதாவநேஜநாத்' (முழுமையான தண்ணீர் நிறைந்த குடத்தைத் தனக்குக் காட்டுவது தவிர வேறொன்றை இறைவன் விரும்புவதில்லை) என்கிற பரம்பொருளுக்கு நூறு தடா நிறைந்த என்று இங்ஙனே அதிகமாகச் சொல்லுவானேன்?" என்று நஞ்சீயரிடம் வினவினார். இதற்கு அவர், திருவாய்ப்பாடியில் உள்ள செல்வத்திற்கு இவையனைத்தும் கூடினாலும் ஒரு குடம் அத்தனையே ஆகும் என்று விடை கூறினார்.[147]

5) இராமாயணத்தில் வரும் சீதையின் செயல் குறித்து நம்பிள்ளை வினாவியதற்கு இவர் அளித்த பதில் ஆழமும் அழகு முடையது.

இராவணன், இராமன் தலையறுப்புண்டு தொலைந்தான் என்று தோற்றும்படி ஒரு மாயத் தலையினைக் கொண்டுவந்து பிராட்டிக்குக் காட்டினான். அப்பொழுது அவள் அல்லாத பெண்டிரைப் போலே சிறிது கண்ணீர் விழவிட்டிருந்தாளே யன்றி உயிர் போகப் பெற்றிலள். மெய்யான அன்புடையாளாக இருந்தாளாகில் உயிர் தொலைந்திருக்குமே? அவள் உயிர் தாங்கி யிருந்தாளே அதற்கு அடியென்?" என்று வினவினார் நம்பிள்ளை. அதற்கு நஞ்சீயர், "அவதாரத்தில் மெய்ப்பாட்டாலே மெய் என்றே துயருறுகிறாள். இவள் உயிர் இருத்தற்குக் காரணம் கணவனைப் பற்றிய அறிவன்று; கணவன் உயிரோடு இருத்தலே யாகும். அவர் உளராகையாலே இவளும் இருந்தாள் காணும்" என்று விடை தந்தார்.[148] அஃதாவது கணவன் உயிரோடு இருக்கும்போது அவனது இருப்பே காரணமாகத் தலைமகளின் உயிரும் குறையற்றிருக்கும். உண்மைக்கு மாறாக யாரேனும் இறந்தான் என்று அவளிடம் சொல்ல அதனை அவள் நம்ப நேர்ந்தாலும் துயரம் உண்டாகும் அவ்வளவல்லது இறப்பு நேராது. இராமன் உண்மையில், ஊறின்றி இருத்தலினால், பிராட்டி இராவணன் மாயத் தலையினைக் காட்டி மருட்டிய போது வருத்தப்பட நேர்ந்தாலும் உயிருக்கு அழிவின்றி இருந்தாள் என்று விளக்கினார்.

எழுத்திலும் சொற்பொழிவிலும் இடம்பெற்ற விளக்கங்கள்

நஞ்சீயர் கூறிய விளக்கங்களாகப் பிற உரையாசிரியர்களால் சுட்டப் பெறுவனவற்றுள் சில அவரது ஒன்பதினாயிரப்படி உரையிலும் காணப்படுகின்றன.

---

147. நா.தி. 9.6.

148. 4.6.0-36; நா.தி;1.5; 5.6.

"நாடாத மலர்நாடி",[149] "ஊனொட்டி நின்று என் உயிரில் கலந்து",[150] "நின்ற குன்றத்தினை நோக்கி நெடுமாலே! வாவென்று கூவும்",[151] "வையம் மன்னி வீற்றிருந்து",[152] "நிற்பனவும் திரிவனவும் ஆங்குயிர்கள்",[153] பாதங்கள் மேலணி பூத்தொழக் கூடுங்கொல்",[154] "சரணமாகிய நான்மறை நூல்களும்",[155] 'உருகுமால்' திருவாய்மொழித் தோற்றுவாய்,[156] "இவை பத்துமவற்றின் சார்வே"[157] ஆகிய இடங்களில் காணப்படும் விளக்கங்கள் இத்தகையனவாம்.

இவற்றுள், "நின்ற குன்றத்தினை நோக்கி நெடுமாலே! வாவென்று கூவும்" என்பதற்குச் சீயர் விளக்கமாக ஈட்டில் வருவது ஒன்பதினாயிரப்படியில் இரண்டாவது பொருளாகக் காட்டப்படுகிறது. ஈட்டுரை, "இவை பத்தும் அவற்றின் சார்வே" என்பதற்கு 'அவை' என்கிறது கீழில்திருவாய்மொழிகளையாய், "அவற்றின் அருகே இதுவும் ஒரு திருவாய்மொழியே!" என்று ஆச்சர்யத்திலே ஆக்கியாய்த்து(ச்) சீயர் அருளிச்செய்ததும் வ்யாக்யாநம் பண்ணிற்றும்" என்று குறித்துச் செல்கிறது.

4. நம்பிள்ளை

தோற்றம்

திருவாய்மொழிக்கு 'முப்பத்தாறாயிரப்படி' என்றும், ஈடு என்றும் வழங்கப்பெறும் சிறந்த உரையினைத் தந்தருளின நஞ்சீயரின் மாணாக்கரான இப்பெருந்தகை சோழநாட்டில் காவிரித் தென்கரையில் உள்ள நம்பூர் என்னும் சிற்றூரில் தோன்றினார். இவருக்குச் சீரங்க நாச்சியார், ஆண்டாள் என்னும் தேவியர் இருவரும் இராமானுசாசார்யர் என்னும் மைந்தர் ஒருவரும் இருந்துள்ளனர். இவருடைய வழிபடுதெய்வம் வயலாளி மணவாளர். இவர் பிள்ளையமுதனார் சொற்பொழிவுகளைத் தம் இளமைக் காலத்தில் கேட்டுள்ளார்.[158]

நம்பிள்ளையெனப் பெயர் பெறுதல்

இவரது கையெழுத்து முத்துப் போல அமைந்திருத்தல் கண்டு நஞ்சீயர் தமது ஒன்பதினாயிரப்படி உரையினை இவரிடம் தந்து

---

149. 1.4.9-36.
150. 1.7.7-36
151. 4.4.4-36.
152. 4.3.11-36.
153. 4.9.5-24.
154. 5.9.7-24.
155. 8.3.2-36.
156. 9.6.0-36
157. 10.3.11-36.
158. பெ.தி. 8.1.8.

பட்டோலை செய்து (எழுதித்) தருமாறு பணித்தார். அதனை எடுத்துக்கொண்டு தம் இல்லத்திற்கு வரும் வழியில் காவிரியை நீந்திக் கடக்க வேண்டி நேரிட்டது. நீந்தும்போது, காவிரிநீர் ஒன்பதினாயிரப்படி ஏட்டினை அடித்துச் சென்றுவிட்டது. பெரு வருத்தத்தோடு இல்லம் சேர்ந்த இவர் தம் அறிவாற்றலினால் தாம் கேட்டிருந்த நஞ்சீயர் உரையினை மீட்டும் நினைவிற்குக் கொண்டுவந்து தப்பாமல் எழுதி முடித்தார். அப்படி எழுதுங்கால் தம் தமிழ்ப்புலமையினால் தமக்குத் தோன்றிய சில அரிய விளக்கங்களையும் அதில் சேர்த்திருந்தார். அதனை நஞ்சீயரிடம் எடுத்துச் சென்று நல்கியபோது, அவர் தாம் எழுதியவற்றோடு சில சிறப்புப் பொருள்களும் இருப்பதனைக் கண்டு காரணம் வினவினார். நம்பூர் வரதர் நடந்ததைச் சொன்னார். அது கேட்டு மகிழ்ந்த நஞ்சீயர் இவரை வாரியெடுத்து அணைத்துக் கொண்டார். "இவர் நம்முடைய பிள்ளை திருக்கலிகன்றிதாசர்" என்று திருநாமஞ் சார்த்தித் தம்மோடு வைத்துக்கொண்டார். அன்று முதல் நம்பூர் வரதர் நம்பிள்ளை என்று அழைக்கப் பெற்றார்.[159]

உலகாரியர் என்னும் பெயர் பெறுதல்

முதலியாண்டானுடைய பேரனாரும், கந்தாடையாண்டான் மகனாருமான கந்தாடை தோழப்பர் நம்பிள்ளையின் பெருமை கண்டு பொறாமை அடைந்தார். ஒருநாள் நம்பிள்ளையைக் கோயிலில் கண்டு கடுஞ்சொற்கள் கூறி இகழ்ந்தார். நம்பிள்ளை பெருவருத்தமும் நடுக்கமுங் கொண்டவராய்த் தம் இல்லம் சேர்ந்தார். அதனை அறிந்த தோழப்பரின் மனைவி தம் கணவரின் தவற்றினைச் சுட்டிக் காட்டினார். தம் மனைவியார் துணையோடு நம்பிள்ளை வீட்டிற்குச் சென்று மன்னிப்புக் கேட்கப் புறப்பட்டார் தோழப்பர். தம் இல்லத்தின் வாசலுக்கு வந்தவுடன் நம்பிள்ளை முட்டாக்கிட்டுக்கொண்டு கிடத்தல் கண்டார். அவரது எண்ணத்தை அறியாமல், "நான் இகழ்ந்த தற்குப் பழிவாங்கக் கிடக்கிறீரோ?" என்று வினவினார். அது கேட்ட நம்பிள்ளை, "அங்ஙனன்று. பெரியபெருமாள் திருமுன்பு முதலியாண்டான் திருப்பேரரான தாங்கள் திருவுள்ளங் கலங்கும் படி நடந்துகொண்ட மாபாவியான அடியேனுக்குத் தேவரீர்

---

159. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் (பதி.), பின்பழகிய பெருமாள் ஜீயர் அருளிய ஆறாயிரப்படி குருபரம்பரா ப்ரபாவம், திருச்சி, 1968, பக். 347-348.

திருமாளிகை வாசல் அல்லது புகல் இல்லையாகையாலே கிடக்கிறேன்'' என்றார். இதைக்கேட்ட தோழப்பர் உளம் நெகிழ்ந்தார். நம்பிள்ளையை வாரி எடுத்து அணைத்துக் கொண்டார். "இதுகாறும் உம்மைச் சிலருக்கே ஆசாரியராகக் கருதியிருந்தேன்; இப்போது உலகுக்கெல்லாம் நீரே ஆசாரியராவ தற்குத் தக்கவரென்று உணர்ந்தேன். இனி உம்மை உலகம் 'லோகாசார்யர்' (உலகாரியர்) என்றே அழைக்கட்டும்" என்றார். தாமும் தம் மனைவியும் நம்பிள்ளைக்கு மாணாக்கரா யினர்.

"துன்னுபுகழ்க் கந்தாடைத் தோழப்பர் தம்உகப்பால்
என்னஉல காரியனோ என்றுரைக்க—பின்னை
உலகா ரியன்எனும்பேர் நம்பிள்ளைக் கோங்கி
விலகாமல் நின்றதென்றும் மேல்''

என்பது உபதேச ரத்தினமாலை.[160]

பேரறிவாளர்

"ஓது வாய்மையும் உவனியப் பிறப்பும்
உனக்கு முன்தந்த அந்தணன் ஒருவன்''

என்னும் பெரிய திருமொழிக்குப் பெரியவாச்சான் பிள்ளை வரைந்துள்ள உரையில், "முற்பட த்வயத்தைக் கேட்டு இதிகாச புராணங்களையும் அதிகரித்துப் (பயின்று) பரபக்ஷ ப்ரதிக்ஷேபத் துக்கு (எதிரிகளை வெல்வதற்கு) உடலாக ந்யாய மீமாம்ஸை களையும் அதிகரித்துப் போதுபோக்கும் அருளிச் செயலிலேயாம், நம்பிள்ளையைப் போலே[161] என்று குறித்துள்ளது இவர்தம் அறிவாற்றலை விளக்கும்.

ஆசிரியர் கொண்டாடிய மாணாக்கர்

இவரது அறிவுத்திறங் கண்டு நஞ்சீயரே வியப்பும் மகிழ்வுங் கொண்டார். "இவரை ஒருநாள் தம் திருக்கூட்டத்தில் வைத்து மிகவும் கொண்டாடித் 'தன் சீடனைத் தான் கொண்டாடா நின்றான்' என்று கருதாதீர்கள். 'கணபுரங் கைதொழும் பிள்ளையைப் பிள்ளையென்று எண்ணப் பெறுவரே' என்று பண்டு

---

160. உபதேச ரத்தின மாலை, 51.
161. பெ.தி. 5.8.7.

சொன்னாரும் உண்டுகிடிகோள் என்று அருளிச்செய்தார்" என்கிறது ஈட்டுரை.[162]

இவர் கூறிய உரைகளை நஞ்சீயரே ஏற்றுப் போற்றினார் என்பது இவர் அப்பாராட்டுக்குத் தகுந்தவராகவும் நுண்ணறிவின ராகவுந் திகழ்ந்தார் என்பதனை நிறுவும்.

1) "அரக்கர் ஆடழைப் பாரில்லை நாங்கள்
அஞ்சி னோந்தடம் பொங்கத்தம் பொங்கோ!"

என்னும் பெரிய திருமொழிக்குப் பெரியவாச்சான் பிள்ளை எழுதியுள்ள உரையில் கீழ்வருஞ் செய்தி காணப்படுகின்றது. "'அரக்கரில் இனி ஆடுபோலே கூப்பிடக் கடவார் இல்லை' என்று பட்டர் அருளிச்செய்தார் என்று நஞ்சீயர் அருளிச்செய்வர். இது சரியான பொருளாக இராமையாலே, 'இங்ஙனே இது சொன்னாலோ?' என்று நான் (நம்பிள்ளை) கேட்டேன்; 'சொல்லலாகாதோ' என்ன; 'ஆடு என்று வெற்றி; இந்த (அரக்கரினத்தில்) வெற்றி சொல்லக் கடவார் இல்லை என்கிறது' என்ன; 'இதுவேயிறே பொருள்' என்று அருளிச்செய்தார்" என்று பிள்ளை அருளிச்செய்வர்.[163]

2) "கரிய மாமுகில் படலங்கள் கிடந்தவை முழங்கிடக்
களிறென்று
பெரிய மாசுணம் வரைஎனப் பெயர்தரு பிருதி"

என்பதற்கு நஞ்சீயர், பாம்புகள் மேகங்களை யானையாகக் கருதி அவற்றிற்கு அஞ்சிப் புற்றில் அடையும் என்று பொருள் கூறினார். இதில் பெயர்தரும் என்பதற்குப் புற்றினை நோக்கிச் செல்லும் என்பது பொருளாகும். இதனைக் கேட்ட நம்பிள்ளை, "இதுவோ இதுக்கு அருளிச்செய்யும்படி?" என்று கேட்டார். நஞ்சீயர் அவரை நோக்கி, "நீர் இப்படிக் கேட்கும்போது ஒன்றை நினைத்தல்லது கேளீர்; அதனைச் சொல்லும்" என்றார். நம்பிள்ளை, "பெயருகை என்பது போதல் வருதல் இரண்டனையுங் குறிக்கும்; மேலும் மலைக்குச் சிறப்புக் கூறுவோர், 'மலைப் பாம்புகள் ஆனையை விழுங்கும்' என்றே சொல்வர். ஆகையால் கரிய மாமுகில் படலங்கள் கிடந்து முழங்குகின்றவற்றைப் பெரிய மாசுணமானது ஆனையாக நினைத்து உண்பதற்காக மலைபேர்ந்தாற் போலே கால்வாங்கி வந்து (நகர்ந்து வந்து) கிட்டி நிற்கும் ஆயிற்று என்று சொல்லலாமோ?" என்றார்.

162. 6.7.9-36. 163. பெ.தி. 10.2.1.

அதனைக் கேட்ட நஞ்சீயர் "அதுவேயன்றோ பொருள்" என்று சொல்லி மிகவும் போற்றினாராம். இதனை நம்பிள்ளையே தெரிவித்தார் என்பது பெரியவாச்சான் பிள்ளை குறிப்பு.[164]

3) "'ஆவியே! அமுதே!' எனநினைந் துருகி
அவரவர் பணைமுலை துணையா,
பாவியேன் உணரா தெத்தனை பகலும்
பழுதுபோய் ஒழிந்தன நாள்கள்"

என்று தம் முன்னைய வாழ்வுக்கு இரங்குகிறார் திருமங்கை யாழ்வார். இதில் "ஆவியே! அமுதே! என நினைந்துருகி" என்பதற்கு, "ஆவி என்றும் அமுது என்றும் இவ்வகையில் பலவற்றை நினைத்துக்கொண்டு உருகி" என்று உரைகண்டார் நஞ்சீயர். அவருரையில் 'என' என்னும் செயவென் வாய்பாட்டு வினையெச்சம் 'என்று' என்னும் செய்தென் வாய்பாட்டு வினையெச்சமாகக் கொள்ளப்படுகின்றது. இதற்கு நம்பிள்ளை வினையெச்சத்தைத் திரிக்காமலே, "ஆவியே அமுதே என்று சொல்ல நினைந்தவாறே அதையும் வாய்விட்டுச் சொல்ல மாட்டாமல் உடைகுலைப்பட்டு" என்று உரைசொன்னார். நஞ்சீயர் கேட்டு, "நீர் இவரினும் (திருமங்கையாழ்வாரினும்) பக்தராய் (உருகுபவராய்) இருந்தீர்" என்றாராம்.[165]

4) "என்கண்ணன் கள்வம் எனக்குச்செம் மாய்நிற்கும்,
அங்கண்ணன் உண்டஎன் ஆருயிர்க் கோதிது;
புன்கண்மை எய்திப் புலம்பி இராப்பகல்
என்கண்ணன் என்றவன் காட்கரை ஏத்துமே"

இப்பாசுரத்தில் "புன்கண்மை எய்தி" என்பதற்கு "மீளவும் உயிரைப் பெய்து" என்று பொருள் கண்டனர். இப்பொருள் "புன்கண்மை எய்தி" என்னும் சொற்களோடு பொருந்தி அமையவில்லை. இப்பொருளைச் சொற்களோடு பொருந்தத் தக்க வகையில் எவ்வாறு வழங்குவது என்பது குறித்து நஞ்சீயர் குழாத்தில் ஆராய்ச்சி நிகழ்ந்தது. நம்பிள்ளை, கோதான இது (உயிர்) மீளவும் புன்கண்மை எய்தும்போது, அதாவது வருந்தும் போது மீளவும் உயிரைப் பெய்தது ஆக வேண்டுமன்றோ, ஆதலால், பொருளின் தன்மையாலே தன்னடையே வரும் என்றார். இதனைக் கேட்ட நஞ்சீயர் மிகவும் மகிழ்ந்தாராம்.[166]

---

164. பெ.தி. 1.2.10
165. பெ.தி. 1.1.2.
166. 9.6.6-36.

2) "மற்றுமோர் தெய்வம் உளதென் றிருப்பாரோடு
உற்றிலேன் உற்றதும் உன்னடி யார்க்கடிமை"

என்னும் பாசுரத்தில் திருங்கையாழ்வார் கண்ணபுரத்துறை அம்மானைப் பார்த்து, "யான் உன்னளவில் நிற்றலன்றிக்கே உன் அடியார் அளவு நிற்பவனானேன்" என்கிறார். இது குறித்து நஞ்சீயர், "உன்னளவில் நின்றவன் அல்வேன்" என்றபோது அவன் திருவுள்ளம் என்படுகிறதோ என்று வினவினார். நம்பிள்ளை, "அல்லிக் கமலக்கண்ணன் ஆகிறான்" (அதாவது வருத்தப்படாமல் மகிழ்ச்சி அடைவான்) என்று பதில் கூறினார்.[167]

6) "பின்துரக்கும் காற்றிழந்த சூல்கொண்டல்
பேர்ந்தும்போய்
வன்திரைக்கண் வந்தணைந்த வாய்மைத்தே—அன்று
திருச்செய்ய நேமியான் தீயரக்கி மூக்கும்
பருச்செவியும் ஈர்ந்த பரன்"

என்னும் பெரிய திருவந்தாதி சற்றுக் கடினமான பாட்டு. இதற்கு 'வாய்மைத்து' என்னும் படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்றைப் 'பரன்' என்பதற்கேற்ப வாய்மையன் என்று படர்க்கை ஆண்பால் வினைமுற்றாகத் திரித்துப் 'பரன்...வாய்மையன்' என்று ஒருவகையாகவும், பரன்படி என்று 'படி' என்னுஞ் சொல்லைப் பரன் என்பதனோடு கூட்டிப் 'பரன்படி...வாய்மைத்து' என்று மற்றொரு வகையாகவும் பொருள் கூறினர். நம்பிள்ளை "இவ்விரண்டு மிறுக்குமின்றி உவமையையும் பொருளையும் மாற்றாமல் நேரே பொருள் கூறலாம்" என்று சீயருக்குத் தெரிவித்தாராம். நம்பிள்ளை, பாட்டினைப் "பின்துரக்கும் காற்றிழந்த சூல்கொண்டல், அன்று திருச்செய்ய நேமியான் தீயரக்கி மூக்கும் பருச்செவியும் ஈர்ந்த பரன் பேர்ந்தும்போய், வன்திரைக்கண் வந்தணைந்த வாய்மைத்து" என்று கூட்டிப் "பின்துரக்குங் காற்றிழந்த சூல்கொண்டலானது பெருமாள் இராவணனை வென்று, திரியட்டும் திருப்பாற்கடலிலே போய்க் கண்வளர்ந்தாற்போலே இருந்தது" என்று பொருள் கண்டுள்ளார்.[168]

இவ்வாறே இராமாயணப் பகுதிக்கு நம்பிள்ளை கூறிய விளக்கத்தை நஞ்சீயர் "அழகிதாகச் சொல்லிற்று" என்று ஏற்றுக் கொண்டுள்ளார்.[169]

---

167. பெ.தி. 8.10.3.
168. பெ.திருவந். 63.
169. பெ.தி. 1.9.2.

ஐயமறுத்தல்

நம்பிள்ளை பிறர்தம் ஐயங்களைக் களைவதிலும் வல்லவர். கண்ணனைப் பற்றுக்கோடாகக் கொண்டிருந்த யாதவர்கள் ஒருவரை ஒருவர் கொன்று முடிந்தனர். அவர்களுக்கும் பேற்றினை அடைவதில் தடை ஏற்பட்டதே என்று சிலர் ஐயம் எழுப்பினர். அதற்கு நஞ்சீயர், "அவர்கள் பெருமானை உடல் தொடர்பு கொண்டு விரும்பினர்; ஆதலால் உடலே எல்லையாய் விட்டது. நாம் இறைவனுடைய சொரூப ஞானத்தாலே (தன்மை பற்றிய அறிவாலே) என்றும் உள்ள ஆன்மாவுக்கு (உயிர்க்கு) வகுத்த பேறு பெறவேண்டும் என்று பற்றுகையாலே பேறும் உயிருள்ள வரையிலும் இருக்கும்" என்று விளக்கம் தந்தார்.[170]

வேல்வெட்டி நம்பியார் என்பவர் நம்பிள்ளையைப் பார்த்து, "பெருமாள் கடலைச் சரணம் புகுங் காலத்தில் கிழக்கிருத்தல் முதலிய சில விதிமுறைகளோடு சரணம் புக்கார்; ஆதலின் இந்தச் சரணாகதியாகிய நெறிக்கும், பிற நெறிகளைப் போன்று சில விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டுமோ?" என்று கேட்டார். "'அரசரான இராகவர் கடலைச் சரணம் அடைவதற்குத் தக்கவர்' என்று பெருமாளுக்கு அறிவுரை கூறினான் வீடணன். அவன்தான் பெருமாளைச் சரணம் புகுகின்ற இடத்தில் 'கடலில் ஒரு முழுக்கிட்டு வந்தான்' என்றில்லை. ஆக, இதனால் சொல்லிற்றாயிற்று என் என்னில், பெருமாள் இட்சுவாகு குலத்தராய் ஒழுக்கத்தில் மேம்பட்டவராகையாலே சில முறைகளோடு சரணம் புக்கார்; வீடணன் அரக்கர் குலத்தவனாகையாலே நின்ற நிலையிலே சரணம் புக்கான்; தகுதியுடையவனுக்குத் தகுதியின்மையைத் தேட வேண்டா; தகுதியற்றவனுக்குத் தகுதி தேட வேண்டா; ஆகையாலே எல்லார்க்கும் உரியது இந்நெறி" என்று விளக்கினார் என்னும் குறிப்புச் சில இடங்களில் போற்றிக் கொள்ளப்பட்டுள்ளது.[171]

பெற்றி என்பவரும் தமக்கு விளங்காத பாசுரங்களுக்கு இவரை நாடிப் பொருள்கேட்டுத் தம் ஐயங்களைத் தீர்த்துக் கொண்டு சென்றுள்ளார்.

"பூவை பைங்கிளிகள் பந்து தூதைபூம் புட்டில்கள்
யாவையும் திருமால் திருநாமங் களேகூவி எழும்என்
பாவை"

---

170. 4.10.7-36.
171. 1.10.2-36; பெ.தி. 1.1.1; 5.8.6.

என்று தன் மகளின் நிலையினைப் பேசுகிறாள் தாய். இதற்குப் பொருள் காண்பதறியாது பெற்றி நம்பிள்ளையிடம் வந்து, "இதற்கு நஞ்சீயர் எவ்வாறு பொருள் கூறுவார்?" என்று வினவினார். இதனை நம்பிள்ளை, "பூவை தொடக்கமான விளையாட்டுப் பொருள்களால் பிறக்கும் உவகையெல்லாம் திருமால் திருநாமங்களைச் சொல்வதனால் உண்டாகும்படி வாழும் என் பாவை" என்று விளக்கினார். பெற்றி, "'ஊரும் நாடும் உலகமும் தன்னைப்போல்' என்கிறபடியே, இவைதாம் திருநாமத்தைச் சொல்லின என்றால் ஆகாதோ?" என்று வினவினார். "அவ்வாறு சொன்னால், பந்து, தூதை, புட்டில் ஆகியவை திருநாமத்தை எவ்வாறு சொல்லின என்னும் தடை பிறக்கும்" என்று நம்பிள்ளை கூறப் பெற்றி அதனை உடன்பட்டுச் சென்றார்.[172]

விரைந்து விடை கூறும் ஆற்றல்

நம்பிள்ளை காலத்தில் யாதவராயன் என்னும் அரசியல் தலைவன் ஒருவன் திருவையாற்றுக்கு வந்திருந்தான். நஞ்சீயர் அவனிடம் இறையிலி நிலம் பெறுவதற்காகச் சில வைணவர்களோடு நம்பிள்ளையை விடுத்தார். அவரும் அங்குச் சென்று அவனைக் காண்பதற்குச் செவ்வி நோக்கியிருந்தார். அப்பொழுது பலரும் வந்து நம்பிள்ளையை வணங்கினர். அங்கிருந்த மகாமகேச்வரன் என்பவன் அதனைக் கண்டு அவரை நாடித் "தாங்கள் பாடல்களுக்குப் பொருள் சொல்வதில் வல்லவர் என்று அறிகிறேன்; எங்கள் சமய நூலில் 'அரியல்லால் தேவியில்லை' (இது திருநாவுக்கரசர் தேவாரம்) என்று வருகிறதே, அதற்கு யாது பொருள்?" என்று வினவினான். நம்பிள்ளை, "இதற்குப் பொருள்சொல்லும் தகுதியுடையேன் ஒருவன் அல்லேன்" என்று கூறி ஒதுங்கப் பார்த்தார். எனினும் அவன் விடாமல், "உமக்கு எல்லாம் தெரியாதோ?" என்று வினவி வற்புறுத்தினான். உடனே நம்பிள்ளை, "நீதான் சிவனுக்கு ஓர் உயர்வினையும் திருமாலுக்கு ஒரு தாழ்வினையும் நினைத்துக் கேட்கிறாயாகில் புராணங்கள் அவனைப் புருடோத்தமன் என்று சொல்கின்றன; அங்ஙனமிருந்தும் அவன் தன்னை அடைந்தார் பொருட்டு அழிய மாறினான் என்றால் அஃது அவனுக்குக் குணமாகுமேயன்றிக் குற்றமாகாது. இனி, ஆண்பிள்ளையான சோறாள்வியைப் (சமையற்காரன்) பெண் என்று தொடர்ந்து திரிவாரைப் போலே சிவன் தொடர்ந்து திரிந்தான் என்று உன் தெய்வமான சிவனை

172. 6.7.3-36.

அறிவற்றவன் ஆக்குவதனைக் காட்டிலும், இது சொன்னவன் நம்புதற்குரியவன் அல்லன்; அறிவற்றவன் என்று இருத்தற்கு அமையாதோ?'' என்று கூறினார்.[173] இதனால் நம்பிள்ளையின் கூர்த்த மதியும் விரைந்து விடைகூறும் ஆற்றலும் விளங்குகின்றன.

மாணாக்கர்கள்

இத்தகு அறிவாற்றலும் சொல்வன்மையும் மிக்கவராய்த் திகழ்தல் கண்டு நஞ்சீயர் காலத்திலேயே பெரியவாச்சான் பிள்ளை, வடக்குத் திருவீதிப் பிள்ளை, பின்பழகிய பெருமாள் சீயர், ஈயுண்ணி மாதவப் பெருமாள் முதலான அறிஞர்கள் இவர் திருவடிகளைச் சார்ந்து வாழ்ந்தார்கள்.

சொற்பொழிவில் சிந்திய கருத்துகள்

நம்பிள்ளை தம் அருளிச்செயல் விளக்கச் சொற்பொழிவுகளில் தெரிவித்த மணியான கருத்துகள் ஈட்டில் "என்று நம்பிள்ளை அருளிச்செய்வர்'' என்பது போன்ற குறிப்புகளோடு காட்டப் பட்டுள்ளன.

1) ''மயர்வற மதிநலம் அருளினன்" என்பதில் 'மயர்வு' என்பதற்கு இவர் சொல்லிச் சென்றுள்ள விளக்கம் புலமைத்திறங் காட்டுவது. ஒன்றுந் தெரியாமையாகிய பேதைமையை (ஜ்ஞாநாநுதயம்), பண்பியை உணர்ந்து பண்பினைத் தவறாக உணர்தலாகிய புல்லறிவு (அந்யதா ஜ்ஞாநம்), ஒன்றை மற்றொன்றாக உணரும் திரிபுணர்ச்சி (விபரீத ஜ்ஞாநம்) என்னும் மூன்றனையும் மயர்வின் பகுதிகளாகக் காட்டுகிறார். மேலும் இறைவனைப் பற்றிய அறிவில் எழும் இம்மூன்று மயர்வுப் பகுதி களும் யாவை என்பதனை, ''பேதைமையாவது உடலைத் தவிர வேறொன்று இல்லை என்று கருதி அதனைப் போற்றுவது; புல்லறிவாவது பரம்பொருள் உண்டென்று உணர்ந்தபோதிலும் திருமாலை விடுத்து வேறு ஒரு தெய்வத்திற்கு அடிமை என்று நினைத்திருப்பது; திரிபுணர்ச்சியாவது தன்னைக் கட்டற்ற வனாகவும் தன்னையே அனுபவத்திற்கு உரியவனாகவும் (ஸ்வபோக்யமாகவும்) நினைத்திருக்கும் கேவலனுடைய அறிவு'' என்று விளக்கிக் கூறுகிறார்.[174]

2) ''திருவல்ல வாழ்நாதனின் திருவடிகளிலே நாளும் தொழ வல்லோமோ?'' என்கிறாள் தலைமகள். ''பாதங்கள் மேலணி பூத்தொழக் கூடுங்கொல்?'' என்பது பாட்டுத் தொடர்.

---

173. பெ.தி. 2.6.1.

174. 1.1.1-36.

இதற்குத் "திருவடிகளின் மேலே மலர்களை அணிந்து நமக்குத் தொழக்கூட முடியுமோ?" என்பது ஈட்டுரை. இயற்கையான அழகுக்கு மேலே அழகிதாகக் கோலஞ் செய்யப்பட்ட திருவடி களைக் கூட முடியுமோ? (கூடவற்றே?) என்பது நம்பிள்ளை சொற்பொழிவில் கூறிய பொருள் என்கிறது இருபத்து நாலாயிரப்படி.[175]

3) பெருமாள் திருவுலகளந்தருளினபோது, ஆழி சங்கு வில் தொடக்கமானவை "அவ்விடத்தில் என்ன தீங்கு வருகிறதோ?" என்று ஒக்க எழுந்தன என்கிறார், 'ஆழிஎழ' என்னும் பாசுரத்தில். இதற்கு, "ஆயிரக்காதம் பறப்பதன் குட்டி ஐஞ்ஞூற்றுக் காதம் சிறகடிக்கொள்ளும்" என்று நயவுரை கூறுவர் என்கிறார் பெரிய வாச்சான் பிள்ளை.[176]

4) "மறைவல்லவர்...தீத்தொழில் பயிலும் நாங்கூர்" என்பதில் 'தீத்தொழில்' என்பது தீயதொழில் என்னும் பொருளில் வரவில்லை; அது தொனிப்பொருள் தோன்றச் சொல்லப் பட்டுள்ளது. வேள்வி செய்யும் என்பதே பொருள் என்பர்.[177]

5) "ஒன்றினொடு நான்குமோர் ஐந்தும் வல்லார்
ஒலிகடல்சூழ் உலகாளும் உம்பர் தாமே"

என்பதில்'உலகாள்வர்' என்று வருவதற்குத் திருமங்கையாழ்வார் தாம் அடியார்க்குத் தொண்டு செய்தற்கு உடலாயிருக்கை யினாலே (இடந்தருவதனாலே) செல்வத்தையும் விரும்பி யருளுவர் என்று அமைதி கூறுவர்.[178]

6) நம்பிள்ளை உள்ள பாடத்திற்கு உரைகாண முயன்றார் என்பதும் பாடத்தைத் திருத்த முயன்றார் அல்லர் என்பதும் ஒரு குறிப்பால் தெரிகின்றது.

"தவம்புரிந் துயர்ந்த
மாமுனி கொணர்ந்த கங்கையின் கரைமேல்
வதரிடாச் சிரமத்துள் ளானே"

என்னும் பெரிய திருமொழியில் உள்ள 'கொணர்ந்த' என்பதற்குப் பதிலாகப் 'புகன்ற' என்னும் பாடவேறுபாட்டைச் செய்து, "கங்கையினுடைய பெருமையைப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொண்டு போந்தானன்றோ? அதனைச் சொல்லியதாகக்

---

175. 5.9.7-24.
176. 7.4.1-24.
177. பெ.தி. 4.5.3.
178. பெ.தி. 7.8.10.

கொள்ளலாமே" என்று ஸ்ரீபராங்குசதாசர் என்பார் சொல்ல, "அதற்கு நமக்குப் பலம் போதாது (ஆற்றல் இல்லை)" என்று நம்பிள்ளை கூறினாராம்.[179]

ஈடு வந்த வரலாறு

திருவாய்மொழிக்கு அமைந்த உரைகளில் தலைமைச் சிறப்பு உடையது ஈடேயாகும்.

ஈடு என்னும் சொல்லுக்குத் தகுதி[180] என்று பொருள் கூறியுள்ளார் அழகிய மணவாள சீயர். அதற்கு ஒப்பு, இணை என்னும் பொருள்கள் உள்ளதனை, "தன்னை அவர்களுக்கு ஈடாக அமைத்துப் பரிமாறும் என்னும் அவ்வழியாலே இவனுடைய ஆர்ஜவ குணம் சொல்லுகிறார்" என்னும் ஈட்டுரை யால்[181] உணரலாம். "ஈடும் வலியும் உடைய இந்நம்பி" என்பதற்கு, "கனமுடைமையும் மிடுக்கும் உடைய இப்பிள்ளை" என்று வரையப்பட்டிருக்கும் உரையும்[182] "முன்னிலும் இப்பொழுது இவர் ஈடாக உள்ளார்" என்னும் பேச்சு வழக்கும் கனம் என்னும் பிறிதொரு பொருள் அதற்கு இருத்தலைக் காட்டு கின்றன. எனவே, தகுதி வாய்ந்திருத்தலினாலும், திருவாய் மொழிக்கு இணையாக இருத்தலினாலும் கருத்துவளத்தால் கனமாக இருத்தலினாலும் இப்பெயர் பெற்றது எனலாம்.

நம்பிள்ளையின் திருவாய்மொழி விளக்கச் சொற்பொழி வினைக் கேட்டு அவரது இசைவு பெறாமலே வடக்குத் திருவீதிப் பிள்ளை எழுதிவைத்த உரையே ஈடு ஆகும். வடக்குத் திருவீதிப் பிள்ளை தாம் எழுதியவற்றை நம்பிள்ளையிடம் காட்டினார். அவர் அதனைப் பார்த்து மிகச் சுருக்கமுமின்றி மிக விரிவுமின்றி யானை கோலஞ் செய்து புறப்பட்டாற்போன்று கம்பீர நடையழகோடு இருப்பது கண்டு மகிழ்ந்தார். ஆனால், தம் ஒப்புதலின்றி எழுதப்பட்டதனால் அதனை வாங்கிக் கட்டி வைத்துவிட்டார். நம்பிள்ளையின் சீடருள் ஒருவரான ஈயுண்ணி மாதவப் பெருமாள் திருவரங்கச் செல்வனிடம் ஈடு முப்பத்தாறா யிரப் படியினைத் தமக்குக் கொடுக்கும்படி நம்பிள்ளையைப் பணிக்குமாறு வேண்டிக்கொண்டார். அவனும் அதனை ஏற்று, நம்பிள்ளையிடம் ஈயுண்ணி மாதவருக்கு ஈட்டினைக் கொடுக்கு மாறு கட்டளையிட்டான். ஈடு வெளியாயிற்று. அவர் அதனைத் தம் மைந்தர் பத்மநாபருக்குக் கொடுத்தார்; அப்பத்மநாபர்

179. பெ.தி. 1.4.8.
180. 1.6.2-12.
181. 1.8.0-36.
182. பெ.தி. 10.7.9.

அதனை நாலூர்ப் பிள்ளைக்குக் கொடுத்தார்; அவர் தம் மைந்தர் நாலூராச்சான் பிள்ளைக்குக் கொடுக்க அவர் மேலுள்ளவர்களுக்குக் கொடுத்தருளினார்.[183] இவ்வுரை பின்வந்த மணவாள மாமுனிகள் அருந்தொண்டால் விரைவாகப் பரவத் தொடங்கியது.

நம்பிள்ளை வைணவ உரையாசிரியர்களில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுபவர். ஈடு வடக்குத் திருவீதிப் பிள்ளையால் எழுதப்பட்டதெனினும் அதில் அடங்கியுள்ள கருத்துகள் நம்பிள்ளை சொன்னவையாக இருத்தலினால் அதனை "நம்பிள்ளை ஈடு" என்றே வைணவ உலகம் குறித்துக் கொண்டாடுகிறது.

5. பெரியவாச்சான் பிள்ளை

பிறப்பு

உரைவேந்தர் - வியாக்கியான சக்கரவர்த்தி - என்று வைணவ உலகங் கொண்டாடும் சிறப்பினை ஈட்டியவரும், நாலாயிரத்திற்கும் உரை கண்ட பேரறிஞருமான பெரியவாச்சான் பிள்ளை சோழ நாட்டிலுள்ள திருவெள்ளியங்குடிக்கு அணித்தான சங்கநல்லூரில் யாமுன தேசிகருக்கும் நாச்சியாருக்கும் திருமகனாய்த் தோன்றினார். கிருட்டினர் என்பது இவரது இயற்பெயர். அபய ப்ரத ராசர் என்னும் பெயரும் இவருக்கு வழங்கியது. வைணவ உலகம் ஒரு மிடறாக இவருக்குச் சூட்டிய பெயர்கள் பரம காருணிகர், அபார கருணாம்ருத சாகரர் என்பன.

சிறப்பு

நம்பிள்ளையின் நெஞ்சுகந்த இவ்அருமை மாணாக்கர் சமய மறைகள் (ரகசியங்கள்), திவ்வியப் பிரபந்தங்கள், இராமாயணம் ஆகிய வைணவக் கொள்கை விளக்கத்திற்கு இன்றியமையாதனவாய் இலங்கும் மூன்றின் நுண்பொருள்களையும் பலர்க்கும் விளக்கிக் கூறியவர். அவற்றிற்கு உரை வகுத்துச் சென்ற பெருமைக்கும் உரியவர். பெரிய பெருமாள், பெரியாழ்வார், பெரியவாச்சான் பிள்ளை, பெரிய சீயர் என்று சொல்லப்பட்ட நால்வரும் அவரவர் பெருமையால் 'பெரிய' என்னும் பட்டம் அடைந்தனர்.

---

183. அண்ணங்கராசாரியார் ஸ்வாமி, நித்யாநுஸந்தாநம் (பிற்பகுதி), சென்னை, 1964, பக். 26.

சங்கநல்லூரில் இவரைப்பற்றி வழங்கும் செய்திகளாக எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் கூறுவன வருமாறு: "சங்கநல்லூரில் இவரைப் பற்றிய சரித்திரம் அதிகமாக வழங்க வில்லை. குடும்பத்தோடு திருமலையாத்ரை எழுந்தருளினார் என்றும், அங்குத் திருமலை ஸ்ரீநிவாஸனிடம் திருவேங்கட முடையான் விக்ரஹமொன்றைப் பெற்றார் என்றும், அவ் விக்ரஹத்தைச் சங்கநல்லூரில் ப்ரதிஷ்டை செய்தார் என்றும் அவ்வூரில் வரலாறு வழங்குகிறது. பெருமாளைக் கைப்பிடித்த பின்பு மிதிலைக்குச் சென்றறியாத ஸீதாப் பிராட்டியைப்போலே தம்முடைய தாய் தந்தையார்க்குச் சரம கைங்கரியம் (இறுதிக் கடன்) செய்துவிட்டுத் திருவரங்கத்துக்கு வந்து, நம்பிள்ளை திருவடிகளை ஆச்ரயித்த பின்பு "தெரித்தெழுதி வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது" என்று திருமழிசைப்பிரான் அருளிச் செய்த ரீதியிலே, நம்பிள்ளை திருவடிகளிலே ஸகலார்த்தங்களையும் கேட்பதிலும், அவருடைய நியமனம் பெற்று அவைகளை வ்யாக்யானங்களாக வடித்தெழுது வதிலும் அவர் பரமபதித்த பின்பு வடக்குத் திருவீதிப்பிள்ளை முதலான ஸப்ரஹ்மசாரிகளையும் (ஒரு சாலை மாணாக்கர்களை யும்) கூட்டிக்கொண்டு ஸ்ரீரங்கத்தில் தரிசநம் நிர்வஹிப்பதிலுமே (சமயத்தைக் காப்பதிலுமே) இவருடைய காலமெல்லாம் கழிந்துவந்தபடியால், இவர் சங்கநல்லூருக்குத் திரும்பினதே இல்லை என்று கொள்ளலாம்."[184]

மாணாக்கர்கள்

இவர்தம் மாணாக்கர்களுள் குறிப்பிடத்தக்கவர் திருவாய் மொழிக்குப் பன்னீராயிரப்படி உரை எழுதிய வாதிகேசரி சீயராவர். பின்பழகிய பெருமாள் சீயரும் நம்பிள்ளை காலத் திற்குப் பின் இவரைச் சார்ந்து வாழ்ந்தார்.[185]

நூல்கள்

இவர் நாலாயிரத்துக்கும் விளக்கவுரை எழுதியதோடு பரந்த ரஹஸ்ய விவரணம், நவரத்ந மாலை, மாணிக்க மாலை, சகல ப்ரமாண தாத்பர்யம், உபகார ரத்நம், கத்ய த்ரய வ்யாக்யாநம், ஆளவந்தார் ஸ்தோத்ர வ்யாக்யாநம், அபய

184. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் (பதி.), ஸ்ரீரங்கம் பாரதீய பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ ஸபையின் பொன்விழா மலர், திருச்சி, 1978, பக். 247.
185. மேற்படி நூல், பக். 248.

ப்ரதாந வ்யாக்யாநம், ஸரமக்ரீ பரம்பரை, அநுஸந்தாந ரஹஸ்யம், நியமனப்படி ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்,

இருவரா? ஒருவரா?

பெரியவாச்சான்பிள்ளை வேறு; ஆச்சான்பிள்ளை வேறு என்றும், பரந்த ரகசியம் முதலிய மறைநூல்களை எழுதிப் புகழ் பெற்றவர் ஆச்சான்பிள்ளையே என்றும், பெரியவாச்சான் பிள்ளை காலத்தவர் சிலர் அவரை ஆச்சான்பிள்ளை என்று குறித்திருந்தாலும் பிற்பட்டவர்களான மணவாள மாமுனிகள் போல்வார் அவரை ஆச்சான்பிள்ளை என்று ஓரிடத்திலும் குறிக்கவில்லை என்றும் காஞ்சிப் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய சுவாமிகள் கூறுவர். அதற்கு அவர் காட்டும் காரணங்கள் : (1) மணவாள மாமுனிகள் உபதேச ரத்தின மாலையில் பெரியவாச்சான் பிள்ளையைத் திவ்வியப் பிரபந்தங்களுக்கு உரை எழுதியவர் என்று சிறப்புறக் கூறுகிறார்; ரகசிய நூல்கள் குறித்துப் பெரியவாச்சான் பிள்ளைமீது ஒரு பாட்டும் அருளிச்செய்யவில்லை. ஆனால் அது பற்றி அவர் உலகாரியர் மேல் ஏழு பாட்டுகள் புனைந்திருக்கிறார். எனவே அவ்வுலகாரியர் பிற்பட்டவர் என்பதும் அவரே பரந்த ரகசியம் முதலிய நூல்கள் எழுதியவர் என்பதும் போதரும். (2) பெரிய வாச்சான் பிள்ளையே பரந்த ரகசியம் முதலியவற்றை அருளிச் செய்திருந்தால் அவருடைய நூல்களை விடுத்துப் பிள்ளை உலகாரியர் நூல்களைப் பின்பற்றி இருக்கமாட்டார்கள். (3) ஆச்சான்பிள்ளை மரபினராகத் தங்களைச் சொல்லிக் கொள்பவர்கள்கூட இன்றும் பரந்த ரகசியம் முதலிய வற்றின் பெயரினையும் அறியாதவர்களாக உள்ளனர். (4) பெரியவாச்சான்பிள்ளை கருத்துகளை மேற்கோள் காட்டும் வேதாந்த குரவர் அவருக்குப் பிற்பட்டவர் என்பது வெளிப்படை. அவ்வேதாந்த குரவர் உக்திகளுக்கு (தடைகளுக்கு) விடை கூறுகின்ற பரந்த ரகசியங்களை அருளிச்செய்தவர் பெரியவாச்சான்பிள்ளை ஆகார்; பிறிதொருவரே ஆவார்.

இப்பெரியாரது கருத்துச் சிந்தனைக்குரியது. ஆச்சான், ஆண்டான், நம்பி என்று முடியும் பெயரினர் பலர் இருந்துள்ளமை உரைகளாலும் வைணவ வரலாறுகளாலும் தெரிகின்றது. இதனால் ஆச்சான் என்று முடிவதனையொட்டி இருவரையும் ஒருவராக எண்ணி மயங்கினரோ என்று எண்ண வேண்டி யுள்ளது.

இருபத்து நாலாயிரப்படி பிறந்த வரலாறு

நம்பிள்ளை, கூரத்தாழ்வானுடைய திருப்பேரரான நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டருக்குத் திருவாய்மொழி உரையினை ஒருமுறை அருளிச்செய்தார். அவர் ஒவ்வொரு நாளும் தாம் கேட்டவற்றை இரவில் எழுதிவந்தார். நம்பிள்ளையின் விளக்க வுரை முடிந்தபின் தாம் எழுதிவந்த உரையினை எடுத்துச் சென்று அவரிடம் காட்டினார். அவர் அது மகாபாரதத்தின் அளவில் பெரியதாக இருத்தலைக் கண்டார். நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டரை நோக்கி, "உடையவர் காலத்தில் பிள்ளான் திருவாய்மொழிக்கு விஷ்ணு புராணத்தின் தொகை யளவில் ஓர் உரை செய்ய அவர் இசைவினைப் பெறுவதற்குச் செய்த முயற்சிக்கு அளவில்லை. அவ்வாறிருக்க நம்முடைய காலத்தில், நம்மையுங் கேளாமல் இலட்சத்து இருபத்தையாயிரம் கிரந்தத்தில் இவ்வாறு பரக்க உரை எழுதினால் அஃது ஆசிரிய மாணாக்க முறைமையினைக் கெடுத்துவிடும் என்று கூறி அதன்மேல் நீரைத் தெளித்துக் கறையானுக்குக் கொடுத்தார். பின்னர்த் தம் விருப்பத்திற்குகந்த மாணாக்கராய்த் தம்மிடம் அனைத்து நூல்களையும் அலகு அலகாகக் கற்ற பெரியவாச்சான் பிள்ளையைப் பார்த்து, "நீர் திருவாய்மொழிக்கு ஓர் உரை எழுதும்" என்று சொல்லப் பெரியவாச்சான்பிள்ளை தமது இருபத்து நாலாயிரப்படி உரையினை எழுதினார்.[186] பின்னர் மற்றத் திவ்வியப் பிரபந்தங்களுக்கும் காலப்போக்கில் உரை எழுதினார். இவரது தொண்டினை,

"பெரியவாச் சான்பிள்ளை பின்புள்ள வைக்கும்
தெரிய வியாக்கியைகள் செய்வால்—அரிய
அருளிச் செயற்பொருளை ஆரியர்கட் கிப்போது
அருளிச் செயலாய்த் தறிந்து"[187]

என்று நன்றியோடு போற்றிக் கூறுகிறார் மணவாள மாமுனிகள்.

6. வாதிகேசரி அழகிய மணவாள சீயர்

வாழ்க்கைக் குறிப்பு

திருவாய்மொழிக்குப் பன்னீராயிரப்படி என்னும் உரைகண்ட இவர் மன்னார்கோயிலில் தோன்றியவர். பெரியவாச்சான் பிள்ளையிடமும் பின்னர் நயினாராச்சான் பிள்ளையிடமும் மாணாக்கராய் இருந்தவர். இவர் தொடக்கத்தில் பெரிய

---

186. உபதேச ரத்தின மாலை, 43.
187. மேற்படி நூல், 46.

வாச்சான்பிள்ளைக்குத் திருமடைப் பள்ளித்தொண்டு (சமையல் வேலை) செய்துவந்தார்.

அதுபோழ்து நடந்த ஒரு நிகழ்ச்சியே இவரது வாழ்வில் பெருமாற்றத்தை விளைத்தது. ஒருநாள் ஓரிடத்தில் இளைஞர் சிலர் சேர்ந்து படித்தனர். "நீங்கள் என்ன புத்தகம் படிக்கிறீர் கள்?" என்று வினவினார். இவர் கல்வியறிவு அற்றவர் என்பதனை அறிந்த அவர்கள், "முசலகிசலம் படிக்கிறோம்" என்று கூறிச் சிரித்தனர். அவர்கள் சொற்களை உண்மை என்று நம்பித் தம் ஆசிரியரிடம் சென்று, "முசலகிசலம் என்னும் நூலினை யாத்தவர் யார்?" என்று வினவினார். பெரியவாச்சான்பிள்ளை உண்மையினை உணர்ந்து, "அப்படி ஒரு நூலுமில்லை; உன் அறிவு உலக்கைக் கொழுந்து போன்றுள்ளது என்று நகையாடியுள்ளனர்" என்றார். இவர் நாணத்தால் குறுகிப் போனார். பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளைப் பற்றிக்கொண்டு "என்னை எவ்வாறேனும் புலவனாக ஆக்கவேண்டும்" என்று இரந்தார். அன்றுமுதல் பாடம் தொடங்கியது. அப்பொழுது இவருக்கு வயது முப்பத் திரண்டு. விரைந்து நூல்களைக் கற்றுப் பெரும்புலமை பெற்றார். 'முசலகிசலம்' என்னும் காவியம் பாடித் தம்மை இகழ்ந்தவர்களை நாணச் செய்தார்.

இவர் தமிழ்ப்புலமை மிக்கவர் என்பதற்கு இவரது உரையில் சான்றுகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு திருவாய்மொழி இறுதிப் பாட்டிலும் அத் திருவாய்மொழியின் யாப்பு என்ன என்பதனைத் தெரிவித்துச் செல்வது இவரது செய்யுளிலக்கணப் புலமையினை நிலைநிறுத்துகின்றது. திருமாலையாண்டான் மரபில் வந்த யாமுனாசார்யர் இவர்தம் மாணாக்கராவார்.

இவருக்கு வரதராசர், சுந்தர ஜாமாத்ருமுனி என்னும் வேறு பெயர்களும் வழங்கியுள்ளன. 'வாதிகேசரி' என்பது இவர் பிற சமயத்தினரை வாதில் வென்றதனால் ஈட்டிய சிறப்புப்பெயர். இவர் துறவு வாழ்க்கையை மேற்கொண்டு பற்றற்றவராய் வாழ்ந்தார்.

நூல்கள்

இவர் பன்னீராயிரப்படி உரையே யன்றி, வேறு சில நூல்களும் இயற்றியுள்ளார். அவை, தீபப் பிரகாசிகை, தீப சங்கிரகம், தத்துவ நிருபணம், தத்துவ தீபம், தத்துவ பூஷணம், தத்துவ தீப சங்கிரகம், கீதாசாரம், தமிழ்க்கவி பிரபந்தம், இரகசிய விவரண மாலை, இருபத்து நாலாயிரப்படி பிரமாணத் திரட்டு, சுலோக

ருபத்தில் திருவாய்மொழி சங்கதி, பகவத் கீதை வெண்பா முதலியன. இவற்றுள் சில இன்று கிடைக்கவில்லை. இவரது திருவாய்மொழியுரை அளவில் ஸ்ரீபாகவதத்தை ஒத்தது.

பெரிய போதம்

இவர் தமது திருவாய்மொழி உரையில் மற்ற ஆசிரியர்கள் கருத்துக்கு மாறுபட்டுச் சில இடங்களில் உரை வரைந்துள்ளார். அவை முன்னோர் கருத்துகளுக்கு வேறானவையாக இருந்த போதிலும் வைணவ மரபுக்கு முரணானவை அல்ல. இவ்வுரை பற்றி உபதேச ரத்தின மாலை,

"அன்போ டழகிய மணவாளச் சீயர்
பின்போரும் கற்றறிந்து பேசுகைக்கா - தம்பெரிய
போதமுடன் மாறன் மறையின் பொருளுரைத்தது
ஏதமில்பன் னீரா யிரம்"[188]

என்று கூறுகின்றது. இதன் விளக்கத்தில், "இவர் பூர்வாசாரிய நெறிக்கு மாறாக, ஸ்வதந்திரமாகச் சில அர்த்தங்களை எழுதியிருப்பது கொண்டு மனங்கன்றித் 'தம்பெரிய போதமுடன்' என்று கூறி, இப்பெரியாரைக் குறை சொல்லியதாக இருக்கக் கூடாதென்று 'ஏதமில்' பன்னீராயிரம் என மணவாள மாமுனிகள் அடைகொடுத்துக் கூறினார்" என்று பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் சுவாமிகள் கூறியுள்ளார்.[189]

இவர் பேரறிவாளராகத் திகழ்ந்தவர் என்பது உரையால் விளங்குகின்றது. இவர் மற்றவர்களுக்கு வேறுபட்டுத் தெரிவிக்கும் உரைகள் மாறாகச் சொல்ல வேண்டும் என்பதற்காக எழுதப் பட்டவை அல்ல. சில இடங்களில் இவர் உரை சிறப்பாகவே அமைந்துள்ளது.[190]

7. அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்

வாழ்க்கைக் குறிப்பு

இவர் நம்பிள்ளையின் சொற்பொழிவினைப் பட்டோலை செய்த (ஓலையில் எழுதிய) வடக்குத் திருவீதிப் பிள்ளையின்

---

188. உபதேச ரத்தின மாலை, 46.
189. அண்ணங்கராசாரியார் ஸ்வாமி, நித்யாநுஸந்தாநம் (பிற்பகுதி), சென்னை, 1964, பக். 23.
190. இவ் ஆய்வேட்டின் மூன்றாம் பிரிவில் 'உரைவேறுபாடு' என்னும் தலைப்பு.

மைந்தர்; பிள்ளை லோகாசாரியரின் தம்பியார்; இவர்தம் தாயார் சிரங்க நாச்சியார்.

இவர் தம் தந்தையாராகிய வடக்குத் திருவீதிப் பிள்ளை, நம்பிள்ளை, தமையனார் பிள்ளை லோகாசாரியர் ஆகிய மூவரிடத்தும் கல்வி பெற்றுள்ளார். இவரும் இவர் தமையனாரும் இறுதிவரை திருமணஞ்செய்து கொள்ளாமல் பிரம்மசரிய ஒழுக்கத்தில் உறுதியுடன் நின்றவராவர்.

நூல்கள்

இவர் திருப்பாவை, அமலனாதிபிரான், கண்ணிநுண் சிறுத்தாம்பு முதலியவற்றிற்கு உரை வகுத்துள்ளார். இவரது திருப்பாவை உரை ஆறாயிரப்படி என்று வழங்கப்பெறுகிறது. இவரது தலைசிறந்த நூல் நம்மாழ்வாரைப் பற்றிய ஆசார்ய ஹிருதயம் என்பதாகும்.

இறுதி

இவரது வாழ்நாள் எல்லை குறித்து இருவகைக் கருத்துக் காணப்படுகின்றது. பட்டரைப் போன்று இப்பெரியாரும் இப் பூவுலகில் நீண்ட காலம் வாழ்ந்திருக்கவில்லை; இளமையிலேயே அந்தமில் இன்பத்தழிவில் வீட்டினை அடைந்தார் என்பர் புருடோத்தம நாயடு.[191] பிள்ளை லோகாசாரியருக்கு இரண்டு மூன்று ஆண்டுகள் இளையவரான இவர் நூறு ஆண்டுகள் வாழ்ந்து அவருக்கு முன்னே மறைந்தார் என்பர் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார்.[192] இவ் இரு கருத்துகளில் எது பொருத்தமானது என்று ஆராய்ந்துரைக்கப் போதிய சான்று களில்லை.

இவர் மறைந்த போது இவர் தமையனார் இரங்கிப் பாடிய கையறுநிலைப் பாட்டு வைணவத்தில் சிறப்பாகப் போற்றப் பெறும் மூன்று மந்திரங்களின் பொருள்களை விரித்துரைப்பதில் வல்லவராக இவர் விளங்கினார் என்பதனைக் குறிப்பிடுகின்றது.

---

191. பி.ஆர். புருஷோத்தம நாயடு, ஆசாரிய ஹிருதய மூலம் மணவாள மாமுனிகள் அருளிச்செய்த வியாக்யானத்தின் தமிழாக்கம், சென்னைப் பல்கலைக் கழகம். 1965, பக். 5.

192. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் (பதி.), ஸ்ரீரங்கம் பாரதீய பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ சபையின் பொன்விழா மலர், திருச்சி, 1978, பக். 258.

"மாமுடும்பை மன்னு மணவாள அண்ணலொடு
சேமமுடன் வைகுந்தம் சென்றக்கால் - மாமென்று
தொட்டுரைத்த சொல்லும் துயந்தன்னில் ஆழ்பொருளும்
எட்டெழுத்தும் இங்குரைப்பார் ஆர்"

என்பதே அவ் இரங்கற்பா.[193]

8. மணவாள மாமுனிகள்

வாழ்க்கைக் குறிப்பு

ஆசாரிய மரபில் கடைக்குட்டியான மணவாள மாமுனிகள் கி.பி. 1370இல் திருக்குருகூர் என்னும் ஆழ்வார் திருநகரியில் திகழக் கிடந்தான் திருநாவீறுடைய பிரான் தாதரண்ணர்க்கும் சீரங்க நாச்சியாருக்கும் மகனாய்த் தோன்றியவர். அழகிய மணவாளன் என்னும் பெயர் தாங்கியவர். இவருக்குச் சிக்கல் கிடாரத்தில் திருமணம் நடைபெற்றது. இவர் திருவாய்மொழிப் பிள்ளையின் திருவடிகளைச் சார்ந்து சமய நுண்பொருள்களைக் கற்றார்.

திருவரங்க வாழ்க்கை

திருவாய்மொழிப் பிள்ளை தாம் மறைவதற்கு முன்னே, இவரிடம் தமக்கும் எம்பெருமானாருக்கும் மிகவும் விருப்பமான திருவாய்மொழி முதலான பாசுரங்களை ஆராய்ந்தவண்ணம் கோயிலிலே (திருவரங்கத்திலே) நிலையாக வாழ வேண்டும் என்று பணித்தார் என்கிறது பழநடை விளக்கம்.[194]

திருவரங்கத்தை நண்ணி ஆசாரியராகத் திகழ்ந்தார். பின்பு துறவு வாழ்க்கை மேற்கொண்டார். வழியிலுள்ள உகந்தருளின நிலங்களைப் போற்றிப் பாடியவாறு இருமுறை திருவேங்கடத்திற்குச் சென்று மீண்டதோடன்றித் தென்னாட்டுத் திருப்பதிகள் மற்றவற்றையும் சென்று வழிபட்டுள்ளார். பல திருக்கோயில்களைப் புதுப்பித்துள்ளார். காஞ்சியில் வாழ்ந்த கிடாம்பி நாயனாரிடம் ஸ்ரீபாஷ்யம் கேட்டறிந்தார். இராமானுசரிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.

---

193. பி.ஆர். புருஷோத்தம நாயடு, ஆசாரிய ஹிருதய மூலம் மணவாள மாமுனிகள் அருளிச்செய்த வியாக்யானத்தின் தமிழாக்கம், சென்னைப் பல்கலைக்கழகம், 1965, பக். 5.

194. கோயில் கந்தாடை அண்ணா அப்பங்கார் ஸ்வாமி, பழநடை விளக்கம், சென்னை, 1891, பக். 69.

சொற்பொழிவாளர்

இவர் திருவரங்கத்தில் ஓராண்டு முழுவதும் திருவாய்மொழி ஈடு முப்பத்தாறாயிரப்படியை விளக்கிச் சொற்பொழிவு நிகழ்த்தினார். அதனால் ஈடு முப்பத்தாறாயிரப் பெருக்கர் என்று போற்றப்பெற்றார். இவரது திருவாய்மொழி ஈடு விளக்கச் சொற்பொழிவின் நிறைவு நாளில் நம்பெருமாளே ஒரு சிறுவன் வடிவில் வந்து இவர்மேல் ஒரு தனியன் சொல்லி மறைந்தார் என்பர்.[195] இவர் திருமெய்யத்தில் இருபத்துநாலாயிரப்படியை விளக்கிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார்.[196] இவரை வைணவர்கள் பெரிய சீயர், யதீந்திரப் பிரவணர் (இராமானுசரிடம் ஈடுபாடு மிக்கவர்) என்று கொண்டாடுவர்.

நூல்கள்

இராமானுசரின் அவதாரமாகக் கொண்டாடப் பெற்ற இவர் கவிஞராகவும் உரையாசிரியராகவும் திகழ்ந்தார். பிள்ளை லோகாசாரியர் நூல்களான முமுட்சுப்படி, தத்வ த்ரயம், ஸ்ரீவசனபூஷணம், அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரது ஆசார்ய ஹிருதயம் ஆகிய மறைபொருள் நூல்களுக்கும், இராமாநுச நூற்றந்தாதி, ஞான சாரம், பிரமேய சாரம் ஆகிய நூல்களுக்கும் விளக்கம் எழுதியுள்ளார். உபதேச ரத்தின மாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, ஆர்த்தி ஆகியவை இவர் ஆக்கியுள்ள செய்யுள் நூல்கள். எம்பெருமானாரின் நித்யம் என்னும் நூலைத் தழுவிப் பகவதாராதன க்ரமம் என்னும் சுருக்க நூலைத் தந்துள்ளார். தத்வ த்ரய ப்ரமாணத் திரட்டு, ஈட்டு ப்ரமாணத் திரட்டு ஆகிய இரண்டும் இவர்தம் தொகுப்பு நூல்கள். எதிராஜ விம்சதி என்னும் வடமொழி நூலையும் இயற்றியுள்ளார். பெரியவாச்சான் பிள்ளை உரை கிடைக்காமற் போன முதல் நான்கு பத்துகளுக்கும் உரை எழுதினார். இம் முயற்சியில் தமிழ்விரகரான திருப்பாணாழ்வார் தாதர் நாயனார் என்பவரையும் தமக்கு உதவியாக அமைத்துக் கொண்டுள்ளார். இவரது விளக்க வுரையினையும், பெரியாழ்வார் திருமொழியில் எஞ்சிய நாற்பது பாட்டிற்கு அமைந்திருந்த பெரியவாச்சான் பிள்ளை விளக்கவுரையினையும் படித்துப் பார்த்த இளைஞரான கந்தாடை நாயன், சீயர் விளக்கத்தை மிகவும் கொண்டாடி, "இந்த நாற்பது பாட்டுக்கும் பெரியவாச்சான் பிள்ளை உரை கிடைக்காமற் போயிருக்கக் கூடாதா?" என்றாராம்.[197]

---

195. மேற்படி நூல், பக். 75. 197. மேற்படிநூல் பக். 80.
196. " பக். 67.

இவர் இறப்பதற்கு நான்கு நாள் முன்பாக நாலாயிர திவ்வியப் பிரபந்தம் முழுவதையும் பெரிய திருவோலக்கமாகச் சேவிக்கக் கேட்டு மகிழ்ந்தார் என்னும் குறிப்பு இவரது திவ்வியப் பிரபந்தக் காதலைக் காட்டும்.[198]

முடிவுகள்

இவ்வுரைகாரர்கள் தங்கள் வாழ்வினையே சமயப் பணிக்காகச் செலவிட்டுள்ளனர். நாதமுனிகள் தொடங்கி மணவாள மாமுனிகள் வரை வாழ்ந்த அறிஞர்களின் அயராத முயற்சியாலும் தளராத ஆர்வத்தாலும் மலர்ந்தனவே இவ்விளக்கவுரைகள். இவை, பல தலைமுறையினரின் நெஞ்சில் கிடந்து ஊறி ஊறிப் பிறந்த விளக்கங்களாகையால் பல தனிச் சிறப்புகளோடு தமக்கெனத் தனியிடம் பெற்றுத் திகழ்கின்றன. பாசுரங்கள் பலகால் சொற்பொழிவுகளில் விளக்கப்பட்ட பின் வரையப்பட்ட உரைகளாதலின் தெளிவும் நயமும் உடையனவாய் உள்ளன.

---

198. மேற்படி நூல் பக். 82.

3. வைணவ உரைப்போக்கு

வைணவ உரைப்போக்கு என்னும் இப்பிரிவில் ஒவ்வோர் ஆசிரியர் உரையிலும் காணப்படும் தனிப் போக்குகளும், இவ்வுரைகள் அனைத்திலும் காணப்படும் பொதுவான போக்குகளாகவும் பிற தமிழ் உரைகளில் பெரிதும் காணப்படாதனவாகவும் உள்ள சிறப்புப் போக்குகளும் தெரிவிக்கப்படுகின்றன.

தனிப்போக்குகள்

பெரும்பாலும் ஆறாயிரப்படி கருத்து குறிப்பு உரைகளாகவும், ஒன்பதினாயிரப்படி பொழிப்புரையாகவும், பன்னீராயிரப்படி பதவுரையாகவும், இருபத்து நாலாயிரப்படி, ஈடு, திருவாய்மொழி நீங்கலான மற்ற நூல்களுக்குப் பெரியவாச்சான்பிள்ளையும் பிறரும் வரைந்துள்ள உரைகள் முதலியவை அகல உரைகளாகவும் அமைந்துள்ளன.[1]

திருக்குருகைப்பிரான் பிள்ளான் உரை

பெரும்பாலும் (1) பாசுரங்களின் திரண்ட கருத்தினை விளக்கிச் செல்லல்,[2] (2) பாட்டினும் சுருக்கமாக உரை வகுத்தல்,[3]

---

1. இப் பொதுவிதிக்கு மாறாக ஒன்பதினாயிரப் படியில் 1.8.6, 1.8.8, 2.7.9, 4.2.9, 5.6.6, 6.4.8, 7.4.3, 9.6.4, 9.7.3, 10.2.10 ஆகிய பாடல்களும் பெரிய திருமடல் 113ஆம் கண்ணிக்குப் பின் வரும் கண்ணிகளும், இரண்டாம் திருவந்தாதி 24ஆம் பாட்டும், மூன்றும் திருவந்தாதி 97ஆம் பாட்டும், நான்முகன் திருவந்தாதி 37ஆம் பாட்டும், பெரிய திருமொழி 11.6.10ஆம் பாட்டும் குறிப்புரைகளைப் பெற்றுள்ளன.

2. "மின்னின் நிலையில,—மன்னுயிர் ஆக்கைகள்,
என்னும் இடத்து, இறை—உன்னுமின் நீரே"
என்பதற்குச் "சிரகால வாஸிதமான விஷயங்களை விடமுடியுமோ? என்னில் இவ் ஆத்ம ஸம்பந்தியான சரீராதி ப்ராக்ருத விஷயங்களுடைய அஸ்த்திரத்வாதி தோஷங்களை நீங்களே ஆராய்ந்து உணருங்கோள். உணரவே எளிதாக விடலாம் என்கிறார்." (1.2.2-6)

3. "அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்து" என்னும் பாடல் உரை - "தம்திறத்தில் எம்பெருமான் செய்தருளின நன்மைகளைப் பேசுகிறார்." (2.3.3.6)

(3) பாட்டினை உரைநடையாக்கி எழுதிச் செல்லல்,[4] (4) சமயக் கருத்துகளை விளக்கும்போது விரிந்த உரை எழுதிச் செல்லல்,[5] (5) பாட்டின் சில தொடர்களை விடுத்துச் சில தொடர்களுக்கு விரிந்த உரை கூறல்,[6] (6) இராமானுசரின் கத்ய த்ரயத் தொடர்கள் விரவி எழுதல்[7] ஆகியவை ஆறாயிரப் படியில் காணப்படும் இயல்புகளாகும்.

---

4. 5.2.2-6 5. 1.1.7, 4.10.1 உரை காண்க.

6. 1.3.1-6 உரையில் "மலர்மகள் விரும்பும் நம் அரும்பெறலடிகள்" என்பதற்கும் 1.4.5-6 உரையில் "கண்டக்கால் மல்குநீர்ப்புனல் படப்பை இரைதேர் வண்சிறு குருகே" என்பதற்கும் உரையில்லை. 3.8.1-6 உரையில் 'முடியானே' என்பதற்கும், 4.4.11-6 உரையில் "வல்வினை தீர்க்கும் கண்ணனை" என்பதற்கும் நீண்ட விளக்கம் தரப்பட்டுள்ளன.

7. அ) "சேஷசேஷாசந கருட ப்ரமுக நானா விதானந்த பரிஜந பரிசாரிகா பரிசரித சரணயுகள"-சரணாகதி கத்யத் தொடர். (எம்பெருமானார், ஸ்ரீகத்யத்ரயம், எம். எஸ். ராஜகோபாலாசார்யர் (மொ. வெ.) ஸ்ரீ விசிஷ்டாத்வைத ப்ரசாரிணி ஸபா, சென்னை, 1976, பக். 9.) "லக்ஷ்மி பூமி நீளா நாயகனாய், சேஷ சேஷாஷநகருட ப்ரமுக நாநாவித அநந்த பரிஜந பரிசாரிகா பரிசரித சரணயுகளனாய்...இருந்த உன்னைக் காணுமாறு அருளாய் என்கிறார்." (8 1.1-6)

ஆ) "நித்ய நிரவத்ய நிரதிசயௌஜ்வல்ய ஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாத்யநந்த குணநிதி திவ்யரூப" (ஸ்ரீ கத்யத்ரயம், பக்.5). "நிரவதிக ஸௌந்தர்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாதி அநந்த குணநிதியாய்" (8.3.9-6.) "ஸௌந்தர்ய ஸௌகந்திய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாத் அபரிமித குணவிசிஷ்ட நீலமேகநிப திவ்யரூபனாய் இருந்த நாராயணனே" (9.3.1-6).

இ) "அநாலோசித விசேஷ அசேஷ லோக சரண்ய" (ஸ்ரீகத்யம், பக். 14), "லோகவிக்ராந்த சரணௌ" (ஸ்ரீகத்யம், பக்.16).
"அநாலோசித விசேஷ அசேஷ லோக சரண்யமாய், லோகவிக்ராந்தமாய் இருந்த உன் திருவடி மலர்களின் கீழே....கூவிப்பணிகொள்ளாய் என்கிறார்" (8.5.7-6).

ஈ) "க்லேச கர்மாதி அசேஷ தோஷாஸம்ஸ்ப்ருஷ்டம், ஸ்வாபாவிக அநவதிகாதிசய ஜ்ஞாந பல ஐச்வர்ய வீர்யசக்தி தேஜ: ப்ரப்ருதி அஸங்க்யேய கல்யாண குணகணௌக மஹார்ணவம்" (ஸ்ரீ கத்யம், ப. 36,37). "அசேஷ தோஷப்ரத்யநீகமாய்...ஆநந்தாத் அஸங்க்யேய கல்யாண குணமஹோததியாய்" (1.1.1-6).

நஞ்சீயர் உரை

இருபத்து நாலாயிரப்படி, ஈடு ஆகிய இரண்டு உரைகளின் வளர்ச்சிக்கு அடிப்படையாகப் பெரிதும் அமைந்தது இவ்வுரையாகவே தோன்றுகின்றது. இவருக்கு முன் பிள்ளான் திருவாய்மொழிக்கு உரை எழுதியிருந்தாலும், நுட்பமும் நயமுங் காட்டி விளக்கும் முறை இவரிடத்திலேயே தொடங்கியுள்ளது. இஃது இருவர் உரையினையும் ஒப்புநோக்கின் தெரியவரும்.

''வீடுமின் முற்றவும்'' என்னும் பாசுரத்திற்குப் பிள்ளான் உரை வெறும் பொழிப்பாகவே உள்ளது; விளக்கம் எதுவுமில்லை. ஆனால் நஞ்சியர் இப்பாட்டில் ''வீடுமின் முற்றவும்'' என்று கூறி மீண்டும் "வீடு செய்து" என்று பின்மொழிந்துள்ள தன் காரணத்தை விளக்கியுள்ளார். இப்படி மீண்டும் கூறுவது, பற்றியதை விடுவதே பயனாகிறதெனினும் அதற்கு மேலும் ஒரு நன்மை கூறுவதற்காகவே என்பதைத் தெரிவிக்கிறது என்கிறார். இந்நஞ்சியர் விளக்கத்தினையே பெரியவாச்சான் பிள்ளையும் நம்பிள்ளையும் உவமை காட்டி மேலும் விளக்குகின்றனர்.[8]

''ஒருத்தி, மதியெல்லாம் உள் கலங்கி மயங்குமால் என்னீரே'' என்பது ''அஞ்சிறைய மடநாராய்''த் திருவாய்மொழியின் மூன்றாம் பாட்டுத் தொடர். இதற்கு "ஒருத்தி மதியெல்லாம் உள்கலங்கி அறிவிழந்தாளென்று'' சொற்பொருளை மட்டும் விரித்துச் செல்கிறது ஆறாயிரப்படி. ஒன்பதினாயிரப்படி இத்தொடர்ப் பொருளை, "பகவத் ப்ரஸாதத்தாலே (இறையருளாலே) மயர்வறும்படி பெற்ற ஜ்ஞாநப் பரப்பெல்லாம் (அறிவு அடங்கலும்) நிச்சேஷமாகக் (முற்றிலுமாக) கலங்கி மயங்கா நின்றாள் என்று அறிவியுங்கோள்'' என்று விளக்குவதோடு தலைமகள் தன் பெயர் கூறாது ஒருத்தி என்று கூறுவதற்கு நயமுங் காட்டுகின்றது. "ஒருத்தியென்னவே, தானே 'இன்னாள்' என்று அறிகிறானிறே'' என்பதே அந்த நயம். இதனையே பிற்பட்டவர்களும் தழுவி உரை கூறியுள்ளனர்.[9]

வாதிகேசரி அழகிய மணவாள சீயர் உரை

இவரது பன்னிராயிரப்படி உரை, திருவாய்மொழிக்கு அமைந்த உரைகளுள் பின்னே தோன்றியது. இவ்வுரை ஒரே போக்கில் திருத்தமாக அமைந்துள்ளது.

---

8. 1.2.1-6,9,24,36. 9. 1.4.3.9.

ஆறாயிரப்படி நீங்கலாக, ஏனைய நான்கு உரைகளும் பாட்டின் திரண்ட கருத்தினை முன்னுரையாக அமைத்துச் செல்கின்றன. இவற்றுள் பெரும்பாலும் நஞ்சீயர், பெரிய வாச்சான் பிள்ளை, நம்பிள்ளை ஆகியோர் ஒரே வகையான முன்னுரை எழுதிச் செல்வர். ஆனால் இவரோ சில இடங்களில் அவர்கள் கருத்தையே வேறு வகையில் சொல்நடை மாற்றி எழுதிச் செல்வர். சில இடங்களில் தம் சொந்தக் கருத்துகளை யும் சொல்வதுண்டு. அப்படிச் சொன்னாலும் அக்கருத்துகள் பாட்டில் இருக்கும். சான்றாக, "நம்பியைத் தென்குறுங்குடி நின்ற" என்னும் பாட்டிற்கமைந்த முன்னுரைகளைக் காணலாம்.[10]

"அவன் விடாதொழிந்தால் நீர் அந்யபரராய் (பிறிதொன்றில் கருத்துடையராய்)அவனை மறந்தாலோ வென்னில்—திருக்குறுங் குடியிலே நின்றருளின நம்பியைக் கண்டுவைத்து மறக்க உபாய முண்டோ? (விரகுண்டோ?) என்கிறார்"—ஒன்பதினாயிரப்படி.

"அவன் விடாதொழிந்தால் நீர் அந்யபரராய் அவனை மறந்தாலாகாதோ? என்னில்—அவன் படிகளைக் கண்டு வைத்து மறக்கப்போமோ? என்கிறார்"—இருபத்து நாலாயிரப்படி.

"நீர்தாம் இங்ஙனே கிடந்துபடாநில்லாதே, அவ்விஷயத்தை மறந்து ஸம்ஸாரிகளோபாதி உண்டு உடுத்துத் திரிய மாட்டீரோ? என்ன; நான் எத்தைச் சொல்லி அவனை மறப்பது என்கிறார்"—ஈடு.

இவை ஒருவகையில் அமைந்துள்ளன. ஆனால், பன்னீரா யிரப்படி இதற்குச் சற்று மாறுபட்டு, "அவனுடைய உபகாரத்வம் (உதவும் தன்மை) மறக்கப்போமோ? என்கிறார்" என்று முன்னுரை கூறியுள்ளது.

இவர் பதிகந்தோறும் அமைக்கும் முன்னுரையில் ஒன்பது, இருபத்துநான்கு, முப்பத்தாறாயிரப்படிகள் போன்று பதிகத் தொடர்புடைய வேறு செய்திகளைக் கூறாமல், தவறாமல் அப்பதிகப் பாசுரங்களின் கருத்துகளையே சற்று வடமொழி மிகுதிமாக விரவிய நடையில் எழுதிச் செல்வது குறிப்பிடத் தக்கது. மற்ற உரைகளில் இல்லாமலும் இவர் உரையில் மட்டும் இடம் பெற்றிருப்பதுமான ஒரு போக்கு ஒவ்வொரு திருவாய்

10. 1.10.9-9,24,36,12.

மொழியின் இறுதியிலும் அத்திருவாய்மொழிப் பாசுரங்களின் யாப்பினைக்குறித்துச் செல்வதாகும்.

பெரியவாச்சான் பிள்ளை உரை

இவரது திருவாய்மொழியுரை பொதுவமைப்பில் ஈட்டுரையினையொட்டியதாகவே உள்ளது. சில பாக்களுக்கு உரை இரண்டிலும் ஒன்றாகவே அமைந்துள்ளது.[11] என்னும் ஈட்டினும் இவ்வுரை (1) சில இடங்களில் விரிவாகவும்,[12] (2) சில இடங்களில் நயமாகவும்,[13] (3) சில இடங்களில் நிகழ்ச்சிகளைச் சுட்டும்பொழுது குறிப்பாகவும்[14] அமைந்துள்ளது.

திருவாய்மொழியுரையில் மட்டும் இவர் தாம் மேற்கோள் காட்டும் பாரத இராமாயண சுலோகங்களை விரிவுரை கூறி விளக்குவதில்லை. மற்ற உரைகளில் தாம் காட்டும் மேற்கோள்களை விளக்கிச் செல்கிறார். இவரது மற்ற உரைகள் ஈடு போலவே எல்லா விளக்கங்களையும் கொண்டுள்ளன.

நம்பிள்ளையுரை

நம்பிள்ளையுரையில் காணப்படும் சிறப்புகள் அனைத்தும் பெரியவாச்சான் பிள்ளையின் பிற உரைகள், அழகிய மணவாளப் பெருமாள் நாயனார், மணவாள மாமுனிகள் ஆகிய பின்வந்தோர் உரைகள் ஆகியவற்றிலும் காணப்படுகின்றன. அவை வைணவ உரைகளின் தனிப்போக்குகளாக அடுத்துக் குறிக்கப்படுகின்றன.

---

11. 8.6.8-24,36; 8.6.9-24,36; 8.3.7-24,36.

12. 8.6.7-24 உரையில் "அந்தர்க்கு வைத்த இறையிலியில் கண்ணுடையார்க்கு ப்ராப்தியில்லையிறே" என்று வருவது ஈட்டில் இல்லை.

    7.3.11இல் "ஆழிநீர் வண்ணனை அச்சுதனை" என்பதற்கு ஈடு இரு பொருளும் இருபத்துநாலாயிரப்படி மூன்று பொருளும் கூறியுள்ளன.

13. 2.3.3இல் வரும் 'அடியேன்' என்பதற்கும், 1.8.6இல் வரும் "மாணாய், நிலம் கொண்டானே" என்பதற்கும் ஈட்டினும் இருபத்து நாலாயிரப் படியில் நயமான விளக்கம் கூறப்பட்டுள்ளது.

14. 4.3.5-24இல் "ஸ்ரீவைஷ்ணவ வண்ணாத்தான் வார்த்தை" என்றும், 4.4.9-24இல் "ராஜேந்திர சோழனிலே திருவாய்க் குலததாழ்வார் வயல் பார்த்த வார்த்தை" என்றும் நிகழ்ச்சிகள் குறிப்பாகச் சுட்டப்பட்டுள்ளன.

திருவாய்மொழிக்கு அமைந்த ஐந்து உரைகளுள் நூலாசிரியர், நூல், நுவலும் பொருள் ஆகியவற்றின் ஏற்றங்களைப் புலப்படுத்தும் விரிந்த முன்னுரை அமைத்தல் ஆறாயிரப்படியில் மட்டுங் காணப்படவில்லை; பிறவற்றில் உள்ளன. சில பதிகங்களுக்குச் சிறு முன்னுரை கூட ஆறாயிரப்படியில் இல்லை.[15]

ஒவ்வொரு திருவாய்மொழியின் இறுதியிலும் அதில் அடங்கிய பாக்களின் கருத்துகளைத் தொகுத்தளிக்கும் முறை ஒன்பதினாயிரப்படியில் முதல் பத்து முதல் திருவாய்மொழியிலும், இருபத்து நாலாயிரப்படியில் ஏழாம் பத்து ஐந்தாம் திருவாய்மொழியிலும் மட்டுமே காணப்படுகின்றது. இம்முறை ஈட்டிலும் இறுதிவரை பின்பற்றப்படவில்லை. அதில் மூன்றாம் பத்து நான்காம் திருவாய்மொழி வரையிலுமே முறையாக அமைந்துள்ளது. அதன் பிறகு காணப்படவில்லை. ஒன்பதாம் பத்து இரண்டாம் திருவாய்மொழியில் தொகுப்புக் காணப்பட்டாலும் சில பாக்களின் கருத்துகளே அதில் உள்ளன. பத்தாம் பத்து ஐந்தாம் திருவாய்மொழி முன்னுரையில் சில பாக்களின் கருத்துகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. ஈட்டில் மட்டும் முதல் இரு பத்துகளின் இறுதியில் (நூறு பாடல்களின் இறுதியில்) அவற்றின் கருத்துரைகள் தொகுத்து வரையப்பட்டுள்ளன; பிறவற்றில் எழுதப்படவில்லை.

சிறப்புப் போக்குகள்

வைணவ உரைகளை மற்ற உரைகளினின்றும் வேறுபடுத்திக் காட்டும் வகையில் சில போக்குகள் சிறப்பும் முதன்மையும் கொண்டனவாக அமைந்துள்ளன. அவற்றை இனிக் காணலாம்.

(1) வடமொழி தமிழ்மொழி மறைகளை இணைத்தல்

இவ்வுரைகளில் வடமொழி வேத உபநிடதக் கருத்துகள் விரவி எழுதப்படுகின்றன. இந்த நோக்கத்தினோடுதான் வைணவப் பெருமக்கள் உரை எழுதினர். இது மீக்கூறலாகாது. இதற்குத் தக்க காரணம் உண்டு.

வைணவ சமயக் கொள்கைகள் செம்மையாக உருப்பெற்று வேருன்றத் தொடங்கிய காலம் இவ்வுரைகள் தோன்றிய காலம். பல கிளைகளாகப் பிரிந்து பரந்து கிடக்கும் வேதங்களின் பொருள்களை விளக்குவதில் சிக்கல்களைச் சந்தித்த காலப்பகுதி அது. "உண்மைப் பொருள் ஒன்றே; இரண்டல்ல" என்னும்

---

15. 1.3; 1.7; 1.9.

அத்வைதக் கொள்கையினை வற்புறுத்தும் தொடர்களும் வேதங்களில் உள்ளன. ''உயிரும் பரம்பொருளும் ஒன்றல்ல, இரண்டே'' என்னும் துவைதக் கொள்கையினைக் கூறும் தொடர்களும் அதில் காணப்படுகின்றன. அத்வைதக் கொள்கையினை இயம்பும் தொடர்களை அபேத சுருதி என்றும், துவைதக் கொள்கையினை மொழியும் தொடர்களைப் பேத சுருதி என்றும் கூறுவர். இவ்விரு தொடர்களையும் இணைத்து ஒற்றுமைப்படுத்தும் தொடர்களும் வேதங்களில் இல்லாமல் இல்லை. அத்தகைய தொடர்களைக் 'கடக சுருதி' என்பர். கடகம் என்பது பொருந்தவைப்பது என்று பொருள்படும். இப்படி வேறுபட்டுக் கிடக்கும் வேதக் கருத்துகளை—அபேத, பேத சுருதிகளைக்—கடக சுருதிகளால் ஒன்றுபடுத்திக் காட்டுவதே விசிட்டாத்வைதம். இப்பணியில் முனைந்துநின்ற ஆசாரியர்களுக்கு வழிகாட்டியாகவும் துணையாகவும் ஆழ்வார்கள் பாசுரங்கள் அமைந்தன.[16]

இக்காரணத்தினால் வேதங்களே ஆழ்வார்கள் பாசுரங்களாகப் புதிய பிறப்பெடுத்துள்ளன என்று இவ்வுரைகாரர்கள் நம்பினர். ''சடகோபன் முந்தையாயிரத்துள்'' என்பதற்கு ஸர்வேச்வரன் இதர ஸஜாதீயனாய் அவதரித்தாப் போலே (தேவதேவன் பிற இனத்தில் இணைவனாய் வந்து பிறந்தாற் போலே) வேதமும் தமிழாய் வந்து இவர் பக்கலிலே அவதரித்தபடி''[17] என்று ஈடும் இருபத்து நாலாயிரப்படியும் பொருள் கூறுதல் கருதத்தக்கது.

மேலும் வேதங்களைக் காட்டிலும் ஆழ்வார்களின் பாசுரங்கள் தெளிவுடையவை என்று கண்டனர். இக்கருத்தினைப் ''பெண்ணாகி இன்னமுதம் வஞ்சித்தானை'' என்னும் பெரிய திருமொழி உரையின் தோற்றுவாயில் பெரியவாச்சான் பிள்ளை வெளிப்படையாகக் குறிப்பிடுகிறார். அதில் பட்டர் தெரிவிக்கும் கருத்துகளாகக் கீழ்வருபவை தெரிவிக்கப்பட்டுள்ளன. தேவதேவனாகிய திருமால் தன்னைச் சார்ந்தார்க்குத் தன்னோடொத்த வரிசையைக் கொடுப்பவன். அவனுடைய அந்த நீர்மையென்னும் பண்பினைச் சொல்வதற்காக வேதம் முதலிய அளவைகள் பிறதெய்வங்களுக்கும் உயர்வு சொல்லுகின்றன. அவர்களும் புழுக்குறித்ததுஎழுத்தாமாறுபோலத் தற்செயலாய்த் தாங்களும் சிலவற்றைச் செய்து தங்கள் ஆற்றலைத் தோற்றச்

16. அழகிய மணவாள ராமாநுஜ ஏகாங்கி ஸ்வாமிகள், ஸ்ரீவைஷ்ணவ தீபிகை, பண்ணுருட்டி, 1968, பக் 29.

17. 6.5.11-24, 36.

செய்வர். அவற்றைக் கண்டு "இவர்கள் பக்கலிலும் ஆற்றல் மிக உண்டு" என்று நாட்டார் மயங்குவதற்கு இடமிருக்கிறது. இந் நிலையில் இறைவனைப் பற்றிக் கூறும் அளவை நூல்களோ அறிதற்கு அரியவை; மனிதர்களோ குறையறிவினர். இவற்றை உளங்கொண்டு அவ்வேதம் முதலியவற்றின் கருத்துகளையே ஆழ்வார்கள் புரியும் வகையில் தங்கள் சொற்களால் புலப்படுத்தி யுள்ளனர். ஆழ்வார்கள் இல்லையெனில் மனிதர்கள் உலக வாழ்க்கைக் கடலில் சிக்கி அமிழ்ந்தன்றோ போயிருப்பார்கள்! என்று பட்டர் அருளிச் செய்வாராம்.[18]

வேதாந்த தேசிகர்,

"செய்யதமிழ் மாலைகள்நாம் தெளிய ஓதித்
தெளியாத மறைநிலங்கள் தெளிகின் றோமே"[19]

என்னும் அதிகார சங்கிரகப் பாசுரத்தில் ஆழ்வார்கள் பாக்களைத் தெளிய ஓதினால் புரியாத வேதப் பகுதிகளுக்குத் தெளிவு உண்டாவதாகக் குறித்துள்ளார். இதனையே, "ஸஹ்யத்திலே (மலையிலே) கலங்கின நீரானது ஒரோ (ஒவ்வொரு) ப்ரதேசங் களிலே (இடங்களிலே) வந்து தெளிந்து உபயோகயோக்யமாமா போலே (பயன்படுதற்குத் தகுதியாமாறு போலே) அதிக்ருதாதி காரமாய்க் (ஒரு சிலரே ஓதத்தக்கதாய்) கூளமும் பலாப்பிசினும் போலே ஒன்றை நிஷ்கரித்துப் (அறுதியிட்டு) பிரிக்கவொண்ணாத படியாய் இருக்கிற வேதார்த்தமானது ஸர்வாதிகாரமாய் (எல்லோரும் படிக்கத் தகுந்ததாய்) ஸர்வ சம்சயங்களுந் (எல்லா ஐயங்களும்) தீர்ந்து தெளிந்தது இவர் பக்கலிலே (நம்மாழ்வார் பக்கலிலே) வந்தவாறே" என்று ஈட்டுரை[20] குறித்துச் செல்கிறது.

இத்தகைய பின்னணியில் திவ்வியப் பிரபந்தங்களுக்கு விளக்கம் எழுதத் தொடங்கிய உரையாசிரியர்கள் ஆழ்வார்கள் கருத்துகளைச் சொல்லும் முறையும் வடமொழி மறைநூல்கள் கருத்துகளைச் சொல்லும் முறையும் ஒத்திருப்பதாகவும் மறைமுடிபுகளும் ஆழ்வார்கள் சிந்தனைகளும் பல இடங்களில் இசைந்து கைகோத்துச் செல்வதாகவும் விளக்கிச் சென்றமை இயல்பேயாகும்.

---

18. பெ.தி. 2,5.8, 19. தேசிகப் பிரபந்தம், 40.

சொல்லும் முறையில் ஒற்றுமை

1) முதல் திருவாய்மொழி மறைகள் சொல்லும் முறையிலேயே—சுருதி சாயையிலேயே—இறைவனது மேன்மைத் தன்மையைச் சொல்கின்றது என்பர்.[21]

2) ''பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச் சாபம்'' என்று மும்முறை அடுக்கி அடியார் செழுமைக்குப் பல்லாண்டு பாடுகிறார் நம்மாழ்வார். வேதம் மும்முறை சாந்தி: சாந்தி: சாந்தி: என்று கூறும் போக்கினையொட்டி ஆழ்வார்கள் அப்படிக் கூறியுள்ளனர் என்பர். ''த்ரிராவ்ருத்தி—'சாந்தி: சாந்தி: சாந்தி:' என்கிற ச்ருதிசாயையிலே'' என்பது பன்னீராயிரபடி.[22]

3) திருமங்கை மன்னன், ''திருவடிவில் கருநெடுமால் சேயனென்றும் திரேதைக்கண் வளையுருவாய்த் திகழ்ந்தானென்றும்'' என்று பெருமானது சிவந்த வடிவை முதலில் குறிக்கிறார் திருநெடுந்தாண்டகத்தில். அதனைச் ''சிவந்த வடிவை ப்ரதமத்திலே (முதலிலே) சொல்லிற்று—'லோஹித சுக்லக்ருஷ்ணாம்' என்கிற ச்ருதிசாயையிலே அருளிச்செய்கிறார் என்னுமிடந்தோற்ற'' என்று விளக்குகிறார் பெரியவாச்சான் பிள்ளை.[23]

4) ''பூநி லாய வைந்து மாய்பு னற்க ணின்ற நான்கும்மாய்...
நீநி லாய வண்ண நின்னை யார்நி னைக்க வல்லரே''

என்று அண்டத்துக்கு மஹத் அஹங்காரங்களும் காரணமாயிருக்கப் பூதங்கள் ஐந்தையும் காரணங்களாகச் சொல்கிறது திருச்சந்த விருத்தம். இஃது ''இந்தப் பரமாத்மாவிடமிருந்து வானம் முதலிய ஐம்பெரும்பூதங்களும் உண்டாயிற்று'' என்கிற சுருதி சாயையிலே அருளிச்செய்யப்பட்டதாகக் கூறுவர்.[24]

5) இறைவன்,

''திடவிசும்பு எரிவளி நீர்நிலம் இவைமிசை
படர்பொருள் முழுவதும் ஆய்அவை அவைதொறும்
உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்''

என்கிறார் நம்மாழ்வார். இதில் ''படர்பொருள் முழுவதுமாய்'' என்பதில் உள்ள 'ஆய்' என்பதற்கு 'ஆகி' என்று பொருள்

---

20. 7.5.11-36.
21. 1.1.1-24, 36,
22. 5.2.1.12.
23. தி.நெ.தா. 3.
24. தி.ச.வி.1.

கூறாமல் 'ஆக்கி' என்று பொருள் கூறுவர். நம்மாழ்வார் மறை முடிபினையொட்டி 'ஆக்கி' என்னும் பொருளில் 'ஆய்' என்னும் வினையெச்சத்தினைப் பெய்துள்ளார் என்பது அவர்தம் துணிபு. 'பஹுஸ்யாம்'—'பல பொருளாக விரிகின்றேன்' என்னும் மறை மொழியால் இறைவனது மலர்ச்சியே உலகம் என்பது விளங்கும். இறைவனின் வேறாகாது அவனுடைய மலர்ச்சியே உலகமாய் அமைதலின் அவனை விட்டு உலகினை வேறு பிரித்து 'ஆக்கி' என்று கூறாமல் 'ஆகி' என்று கூறினார் என்று காரணம் புகல்வர்.[25] "உடலாழிப் பிறப்பு வீடு முதலா முற்றுமாய்",[26] "தன்னில் மூவர் முதலாய வானோர் பலரும் முனிவரும் மற்றும் மற்றும் முற்றுமாய்"[27] ஆகியவற்றிலுள்ள 'ஆய்' என்பதற்கும் இவ்வாறே விளக்கம் தரப்படுகின்றது. "நக்க பிரானோடு அயனும் இந்திரனும் முதலாக, ஒக்கவும் தோற்றிய ஈசன்" என்பதில் வரும் 'தோற்றிய' என்பதற்கும், "தோற்றியவென்கிறது 'பஹுஸ்யாம்' என்றாப் போலே" என்று உரை கூறியுள்ளார் பெரியவாச்சான் பிள்ளை.[28]

கருத்தொப்புமை

1) நம்மாழ்வார்,

"தகும் கோலத் தாமரைக் கண்ணன் எம்மான்
மிகும் சோதி மேல் அறிவார் எவரே"

என்று இறைவனை 'மிகும்சோதி'யாகப் போற்றுகிறார். உபநிடதங்களும் நாராயணனை மேலான ஒளிவடிவினனாகவே சொல்கின்றன. அவ்வுபநிடதத் தொடர்கள் 'மிகும்சோதி' என்பதற்குப் பொருள் விரிக்குமிடத்துக்[29] காட்டப்படுகின்றன.

"மிகுஞ்சோதி—'பரஞ்ஜ்யோதிர் உபஸம்பத்ய' 'நாராயண பரோஜ்யோதி:' என்று நாராயணாநுவாக ஸித்தமான பரதத்வம்" என்பது இருபத்து நாலாயிரப்படி.

"மிகுஞ்சோதி—'பரஞ்ஜ்யோதிர் உபஸம்பத்ய', 'நாராயண பரோஜ்யோதி:' என்று, நாராயணாநுவாகாதிகளிலே இவனே பரஞ்ஜ்யோதிஸ்ஸென்று ஓதப்படுகிறான்" என்பது ஈடு.

2) "யதோ வாசோ நிவர்த்தந்தே" என்பது தைத்திரீய உபநிடதத்தில் ஆனந்தவல்லியில் வரும் தொடர். "எதனின்றும்

---

25. 1.1.7-36.
26. 1.4.10.
27. 1.5.4.
28. 1.9.5-24.
29. 2.2.5-24, 36.

வாய்ச்சொற்கள் எட்டிப்பிடிக்க முடியாமல் திரும்புகின்றனவோ" என்பது இதன் சொற்பொருள். இறைவன் வாக்கிற்கு அப்பாற் பட்டவன் என்பது இதன் கருத்து. இத்தொடர், "தன்முடிவொன் றில்லாத தண்துழாய் மாலையனை", "நாமருவி நன்கேத்தி", "எத்திறம் உரலினோடிணைந்திருந்து ஏங்கிய எளிவே", "வைப்பாம் மருந்தாம்" ஆகியவற்றின் விளக்கத்தில்[30] இடம் பெற்றுள்ளது.

3) "கண்ணா வான்என்றும் மண்ணோர் விண்ணோர்க்குத்
தண்ணார் வேங்கட விண்ணோர் வெற்பனே"

என்பதன்கண் வரும் 'கண்ணாவான்' என்னும் சொல், "சக்ஷுர்த் தேவாநாமுதமர்த்யாநாம்" (விண்ணோர்க்கும் மண்ணோர்க்கும் அவனே கண்) என்னும் யஜுர் வேதக் கருத்தினைக் கூறுவதாகக் காட்டுவர்.[31]

4) "பிறப்பில் பல்பிறவிப் பெருமான்" என்பது அஜாயமாநோ பஹுதா விஜாயதே தஸ்ய தீரா : பரிஜாநந்தியோநிம்" (கர்மம் காரணமான பிறப்பு இல்லாமல் இருக்கிற சர்வேச்வரன் இச்சை யடியாகப் பலவிதமாக அவதரிக்கிறான்; அதன் காரணத்தைப் பெரியோர்கள் அறிவார்கள்) என்னும் யஜுர் வேதக் கருத்தினைக் கூறுவதாகக் குறிப்பர்.[32]

5) "எனக்கே ஆட்செய்" என்னும் பாசுரத்தில், உபநிடதத்தின் மறைபொருளாகவுள்ள பாரதந்த்ர்யத்தை (அவன் வயமா யிருத்தலை) அறுதியிட்டு அவர் ஆசைப்படுவதாக உரைப்பர்.[33]

இவ்வாறு வருமிடங்கள் பலவாகும்.

2. வடமொழிப் போக்கில் சொற்றொடர்களைப் பகுத்துக் காட்டுதல்

வடமொழியில் சொற்றொடர்களைப் பகுத்துக் காட்டுவது போலத் தமிழ்த் தொடர்களைப் பகுத்துக் காட்டிச் செல்வது இவர்தம் தனியியல்புகளுள் ஒன்று.

வடமொழியில் சொற்றொடர்களில் தொக்கும் விரிந்தும் வரும் வேற்றுமை உருபுகள், உவம உருபுகள் முதலியவற்றைப் பிரித்துக் காட்டும் முறையில் தமிழ்த் தொடர்களையும் பிரித்துக்

---

30. 2.5.8-36; 2.6.3-36; 1.3.1-36; 1.7.2-36.
31. 1.8.3-36.
32. 2.9.5-36.
33. 2.9.4-24, 36.

காட்டிச் செல்கின்றனர். 'தர்மவ்ருத்தேஷு' என்பது தருமத்தினால் முதிர்ந்தவர்களிடத்து என்று பொருள்தரும் ஒரு தொடர். இதில் 'தர்மவ்ருத்தா:' என்பதனோடு வடமொழி ஏழாம் வேற்றுமை உருபு விரிந்து வருகின்றது. இதனை, "தர்மேண வ்ருத்தா: தர்மவ்ருத்தா: தேஷு"[34] (தருமத்தினால் முதிர்ந்தவர்கள் உண்டு; தரும முதியவர்கள்; அவர்களிடத்தில்) என்று வேற்றுமையுருபு வெளிப்படப் பிரித்துக் காட்டலாம். வடநூற்கு எல்லை தேர்ந்த வைணவ உரையாசிரியர்கள் இப்போக்கினைப் பின்பற்றிப் பல இடங்களில் சொற்றொடர்களைப் பிரித்து எழுதிச் செல்கின்றனர். அவர்களுடைய உரைத் தொடர்கள் முதலிலும், தமிழில் இயல்பாக அவை எவ்வாறு அமையும் என்பது அடைப்புக்குள்ளும் தரப்படுகின்றன:

அ) படிவானம் இறந்த - "தன் திருமேனிக்கு வானமுண்டு - மேகம், அது ஒப்பாகாதபடி"[35] (தன் திருமேனிக்கு மேகம் ஒப்பாகாதபடி).

ஆ) செஞ்சாலி விளைவயலுள் - "செஞ்சாலியுண்டு - செந்நெல்; அது விளைகிற வயலிலே"[36] (செந்நெல் விளைகிற வயலிலே).

இ) முள்ளும் இல்லாச் சுள்ளி எரிமடுத்து - "முள்ளுமின்றிக்கே இருக்கிற சுள்ளியுண்டு - இளவிறகு, அத்தை அக்நியிலே யிட்டு"[37] (முள்ளுமின்றிக்கே இருக்கிற இளவிறகை அக்நியிலேயிட்டு).

ஈ) அடங்காரை - "அடங்காருண்டு சத்ருக்கள்; அவர்களை"[38] (சத்துருக்களை).

உ) விரைந்தார் இரியச் செருவில் முனிந்து - "விரைந்தவருண்டு - பெரிய கிளர்த்தியோடே 'காட்டு, காட்டு' என்று தூசியேறி வருகிறவர்கள், அவர்களோடே"[39] (தூசியேறி வருகிறவர்களோடே).

ஊ) அவா ஒருக்கா வினையோடும் - "பகவத் விஷயத்தில் அபிநிவேசத்தை அங்குநின்றும் மீட்டு இதர விஷயங்களிலே மடைமாற ஒட்டாத வினையுண்டு - பக்தி, அத்தோடும்"[40] (மடைமாற்ற வொட்டாத பக்தியோடும்).

34. காளிதாசன், குமாரசம்பவம், 5ஆம் ஸர்க்கம், லிப்கோ, சென்னை, பக். 25.
35. 2.3.9-36.
36. பெ.தி. 2.10.1.
37. நா.தி. 1.2
38. 4.8.8-36.
39. பெ.தி. 2.9.4.
40. தி.வி.64.

எ) பாரணங்காளன் - ''பாரணங்கு உண்டு - ஸ்ரீபூமிப்பிராட்டி; அவளுக்கு நிர்வாஹகன்''[41] (ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு நிர்வாஹகன்).

ஏ) அமரர்குலமுதல் - ''நித்யஸூரிகள் குலமுண்டு - திரள்; அதுக்கு நிர்வாஹகனை''[42] (நித்யஸூரிகள் திரளுக்கு நிர்வாஹகனை).

ஐ) வேற்றோன் அகலம் - ''வேற்றோனுண்டு - சத்ருவான ஹிரண்யன்; அவனுடைய மார்வை''[43] (சத்ருவான ஹிரண்யனுடைய மார்வை).

ஒ) வெம்மா வாய்கீண்ட - ''வெவ்விதமான மாவுண்டு - கேசி, அதனுடைய வாயைக் கிழித்த''[44] (வெவ்விதமான கேசியினுடைய வாயைக் கிழித்த).

ஓ) செருவில் செந்நெற் கூழை - ''செறுக்களுண்டு - செய்கள், அவற்றிலுண்டான செந்நெற் கூழை''[45] (செய்களிலுண்டான செந்நெற் கூழை).

ஔ) மாமாயப் பிறவியுள் ''மாமாயமுண்டு - சப்தாதி விஷயங்கள், அவற்றிலே''[46] (சப்தாதி விஷயங்களிலே).

க) அந்தி போலும் நிறத்தார்வயல்-''அந்தியுண்டு - ஸந்தியை; அதுபோலேயிருண்ட நிறத்தையுடைத்தான வயல்'[47] (ஸந்த்யை போலே இருண்ட நிறத்தையுடைத்தான வயல்).

இவ் எடுத்துக்காட்டுகளில் வேற்றுமை உருபுகளும், உவமவுருபும் புணர்ந்துவரும் சொற்கள் தனியாகவும் அவற்றோடு சேர்ந்து வரும் உருபுகள் அது, அவர்கள், அவள், அவை ஆகியவற்றோடு கூட்டித் தனியாகவும் பிரித்துக் காட்டப்படுதல் காணலாம்.

3. கற்பனை நயம்பட உரைவகுத்தல்

கவியரசர் தம் பாக்கள் படிப்பவர் நெஞ்சிலும் அவர்பெற்ற அனுபவத்தினைத் தோற்றுவிக்க வல்லவனவாகும். உயர்ந்த கவிஞர்களின் சொற்களுக்கு அத்தகைய ஆற்றல் இருந்தாலும் கவிதை நெஞ்சங்களால் மட்டுமே அச்சொற்களின் வாயிலாகக்

---

41. 10.5.2-36.
42. 3.6.9-24,36.
43. பெ.தி. 8.8.4.
44. 1.8.2-24,36.
45. பெ.தி. 3.5.3.
46. திருவா. 6.
47. பெ.தி. 5.4.1.

கவிஞர்கள் பெற்ற அனுபவங்களைத் தாங்களும் பெறமுடியும். அத்தகைய கவிதை நெஞ்சம் இயல்பாகவே வாய்க்கப்பெற்றவர்கள் இவ்வுரைகாரர்கள்.

திவ்வியப் பிரபந்தப் பாசுரங்கள் ஆழ்வார்கள் அனுபவங்களைத் தம் நெஞ்சில் ஓவியங்களாகத் தீட்டிக் காட்ட, உரையாசிரியர்கள் அவ்வோவியக் காட்சிகளைக் கற்போர்க்குக் காட்டிட முயல்வதனை இவ்வுரைகளில் காணலாம்.

அ) "பொருசிறைப் புள்ளுவந்தேறும் பூமகளார் தனிக்கேள்வன்" என்னும் பாசுரத் தொடர் நம்பிள்ளை நெஞ்சில் ஒரு காட்சியினைத் தீட்டுகின்றது. பெருமான் கருடன்மேல் ஏறிச் செல்ல நினைக்கின்றான். அங்கே நிற்கும் அதனைப் பார்த்து, 'வா' என்கிறான். அவன் அழைப்பு அதற்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. சிந்தையின் மகிழ்ச்சி சிறகுகளில் அலைஅலையாய்ப் பரவப் பெருமாள் முன்னே போய் நிற்கிறது அவன் வாகனமான பெரிய திருவடி. இதனை வாகனமாகப் பெற்றோமே என்று அவனுக்கும் உள்ளத்தில் நிறைவு உண்டாகிறது. அந்நிறைவோடு அதன் மேலே ஏறியருளுகிறான். இது வானவர் நாட்டில் அன்றாடம் நடைபெறும் ஒரு நிகழ்ச்சி. 'பொருசிறைப்புள்', 'உவந்து ஏறும்' என்னும் சொற்கள் இந்நிகழ்ச்சியினை நம்பிள்ளைக்கு ஒரு காட்சியாக்கி அவர் நெஞ்சில் பதிக்கின்றன. அதனை நம்பிள்ளை கீழ்வருமாறு எழுதிப் படிப்பவர் நெஞ்சில் நிறுத்த முயல்கிறார்.

"ஸர்வேச்வரன் பெரிய திருவடியை மேற்கொள்வதாக நினைத்து 'வா' என்றழைத்தால், அவனுடைய அங்கீகாரத்தாலுண்டான ஹர்ஷத்தாலே பெருக்காறு சுழித்தாப் போலே சுழித்துத் தன்னில் தான் பொரா நின்றுள்ள சிறகையுடையனாய்க் கொண்டாயிற்று தோற்றுவது. அவனும் 'நாம் இவனை மேற்கொள்ளப் பெற்றோமே' என்று திருவுள்ளத்தில் ப்ரீதியோடே யாயிற்று மேற்கொள்ளுவது."[48]

ஆ) கண்ணபிரான் வெண்ணெய் திருடி உண்ட செய்தியினை,

"தாரார் தடந்தோள்கள் உள்ளளவுங் கைநீட்டி
ஆராத வெண்ணெய் விழுங்கி - அருகிருந்த
மோரார் குடமுருட்டி முன்கிடந்த தானத்தே
ஓராதவன்போல் கிடந்தானை"

என்று பாடுகிறது சிறிய திருமடல்.

---

48. 1.9.3-36.

கண்ணன், வெண்ணெய் களவு கண்டு மோர்க்குடத்தை உருட்டிவிட்டான். யாராவது காணப் போகிறார்கள் என்று பதறிவிழுந்தான். விழுந்த இடம் முன்பு படுத்திருந்த படுக்கை யாயிற்று. களவு கண்டான் என்று சொல்லினும் படுக்கை யோடேயோ எழுந்திருந்து களவு கண்டது" என்னும்படி கால்போட்ட இடத்தே கால்போட்டுக் கைபோட்ட இடத்தே கைபோட்டுக் கிடந்தான். அப்போது தானுருட்டின மோர் படுக்கையிலே வந்து பாய்ந்து நனைக்கச் செய்தேயும் அறியாத வனாய்க் கிடந்தான் என்று ஓவியமாய்த் தீட்டுகிறார் பெரியவாச்சான்பிள்ளை. "மோரார் குடமுருட்டி" "ஓராதவன் போல் கிடந்தான்" ஆகிய சொற்றொடர்களின் துணையால் மோர்வந்து அவன் படுக்கையை நனைக்கும் காட்சியினையும் காண்கிறார்.[49]

இ) "பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப" என்று வயல்வளம் பாடுகின்றாள் ஆண்டாள். இவ் அழகிய தொடர் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் உள்ளத்தில் ஆண் வண்டும் பெண் வண்டும் உறங்கி உணர்ந்தெழும் காட்சி யினைக் கொண்டுவந்து நிறுத்துகிறது. "மது அருந்தியதாலும், புல்லிக்கிடந்த கலவியாலும் பிறந்த புகரடைய வடிவிலே தொடை கொள்ளலாம்படி இருக்கிற வண்டுகள், தன்னில் தானொன்றாம் ஆதரத்தைப் பாரித்துக்கொண்டு புக்கு, மலரின் ஊற்றின்பத்தாலே 'நஞ்சுண்டாரைப்போலே கிடந்துறங்கி யுணர்ந்து எழுந்திருக்கும்போது, 'என்னை நீ எழுப்பிற்றிலை, என்னை நீ எழுப்பிற்றிலை' என்று ஒன்றுக்கொன்று 'சிறுபாறு' என்னா நிற்கும்" என்று அதனை அவர் எழுத்தில் வடித்துச் செல்கிறார்.[50]

ஈ) "வாயுந் திரையுகளும் கானல் மடநாராய்" என்னும் கவிதைத் தொடர் பேரலைகள் பொங்கியெழுந்து ஓடிவந்து கரையை மோதும் கடற்கரையினையும் அங்கு உறுமீன் வருமளவும் வாடியிருக்கும் நாரையினையும் உரையாசிரியரின் நெஞ்சில் தீட்டுகின்றது. அக்காட்சியில் தோய்ந்து உரை கூறுவதால் 'வாயுந் திரையுகளும்' என்பதற்கு வந்து கிட்டும் அலைகள் தாவிப்போகும் என்று உயிரற்ற உரை வகுக்காமல், "பெரிய மலைபோலே வந்து கிட்டுகிற திரைகள் மேலே தாவிப் போகாநின்றாலும்" என்றும், 'மடநாராய்' என்பதற்கு மடப்பத்தையுடைய நாராய் என்று வேற்றுமை உருவினை

49. சி.மடல், கண்ணி 30-32. 50. பாவை 3.6.

விரிந்துரைக்காமல் "நினைத்தது கைபுகுமளவும் சலியாதே இருக்கும்" நாரை என்றும் ஓவிய உரை தீட்டுகின்றார்.[51]

இவ் இடங்களில் உரை மூலத்திலிருந்து நெடுந்தொலைவு சென்றுவிட்டது போலத் தோன்றினாலும் அதனைவிட்டு அகலாமல் அதனையே சுற்றிச் சுழல்கின்றது. தாயின் மடியில் விளையாடும் குழந்தை சில வேலைகளில் விலகிச்சென்று விளையாடினாலும் அவள் பார்வை வட்டத்திலிருந்து விலகி அப்பாற் செல்வதில்லை. அதுபோல இப்பகுதிகளும் மூலத்தின் பொருள் வளைவுக்குள்ளேயே அடங்குகின்றன.

4. உரையாடற் போக்கில் உரைவரைதல்

திவ்வியப் பிரபந்தங்களை அரையர்கள் மெய்ப்பாடு தோன்ற நடிக்கக் கண்டவர்கள் இவ் ஆசிரியப் பெருமக்கள். இத்தகையவர்கள் பாசுரங்களை நாடகக் காட்சிகளாக்கி உரையாடற் போக்கில் உரை தீட்டிச் செல்வது வியப்புக்குரியதன்று. மிகச் சுருக்கமாக உரை கூறிச் செல்லும் ஆறாயிரப்படி,

> மின்னிடை மடவார்கள் நின்னருள் குடுவார் முன்புநான்
> அது அஞ்சுவன்
> மன்னுடை இலங்கை அரண் காய்ந்த மாயவனே!
> உன்னுடைய சுண்டாயம் நானறிவன்; இனி
> அதுகொண்டு செய்வதென்?
> என்னுடைய பந்தும் கழலும் தந்து போகு நம்பீ!

என்னும் பாசுரத்திற்கு மிக விரிவாக உரையாடற் போக்கில் உரை வரைந்துள்ளது.[52] அதில் ஆசிரியர் கூற்றாக உள்ளதனை அடைப்புக் குறியுள் காட்டித் தலைமகன் தலைமகள் உரையாடல் கீழே தரப்பட்டுள்ளது:

தலைமகள் : நிரவதிக ஸௌந்தர்ய குணயுக்தைகளாய் உன்னருள் சூடப் பிறந்தவர்களுடைய பந்தும் கழலுமல்ல காண் இவை; என்னுடைய பந்துங் கழலும் (என்ன)

தலைமகன் : ஆனாலென்? (என்ன)

தலைமகள் : என்னுடைய பந்துங் கழலும் எடுத்துவிளையாடுகிற இத்தை அவர்கள் காணில் செய்வதென்? (என்ன)

---

51. 2.1.1-36. 52. 6.2.1-6.

தலைமகன் : அஸந்நிஹிதையாயிருக்கச் செய்தே நீ அவர் களோடே கலந்து பரிமாறிற்று எல்லாம் எங்ஙனே கண்டபடி, அப்படியே அவர்களும் காணுவார்களிறே (என்ன)

தலைமகன் : கண்டால்தான் வருவதென்? (என்ன)

தலைமகள் : தங்கள் கடாக்ஷதாரகனாயிருந்த உன்னை உபேக்ஷிப்பாரென்று பார்த்து நான் அஞ்சாநின்றேன் (என்ன)

தலைமகன் : உனக்கு என்னோடு உறவில்லையாகில் வருகிற தென்? (என்ன)

தலைமகள் : என்னுடைய க்ருபையாலே உனக்கு அநிஷ்டம் வருகிறது என்றஞ்சுகிறேன் அத்தனை; உறவினாலல்ல (என்றிவள் சொல்ல)

தலைமகன்: இப்படி அஸம்பாவிதங்களை ஆசங்கிக்கிறதென்? அந்யோத்தேசேந வருகைக்கு ப்ரஸங்கமுண்டோ? உன் பக்கலுள்ள ப்ரேமாதிசயத்தாலே உன்னைப் பிரிந்து தரிக்க மாட்டாமையாலே வந்தேன் அத்தனை (என்று அருளிச் செய்ய)

தலைமகள் : என் பக்கலுனக்கு ஸ்நேஹமானது பொய்யிறே (என்ன)

தலைமகன் : நானாரேனும் ஒருவரோடே பரிமாறினால் அவர்கள் பக்கல் பொய்யான ஸ்நேஹத்தைப் பண்ணு மவனோ? (என்றருளிச் செய்ய)

தலைமகள் : உனக்காரேனும் ஒருவர் திறத்திலே மெய்யான ஸ்நேஹமுண்டாகில் அவர்களை 'இன்னார்' என்று சொல்லிக்காண் (என்ன)

தலைமகன் : அஸோகவநிகையிலேயிருந்த ஸ்ரீஜநகராஜர்தநயை திறத்து நான் பண்ணின ஸ்நேஹம் மெய்யன்றோ? (என்றருளிச் செய்ய)

தலைமகள் : அதுவும் பொய்யே (என்றிவள் சொல்ல)

தலைமகன் : அவள் பக்கலுள்ள ஸ்நேஹம் பொய்யாகில் அவளுக்காக லங்கையை அழிக்கக் கூடுமோ? (என்றருளிச் செய்ய)

தலைமகள் : அது என்னை அகப்படுத்துகைக்குச் செய்த வஞ்சனையென்னுமிடம் அறியேனோ? ஆதலால் என்னுடைய பந்துங் கழலும் தந்து அங்கே போகு நம்பீ! (என்று சொல்லுகிறாள்).

"மற்றோர் தெய்வம் எண்ணேன் உன்னைஎன்
மனத்துவைத்துப்
பெற்றேன் பெற்றதுவும் பிறவாமை எம்பெருமான்,
வற்றா நீள்கடல்சூழ் இலங்கை இராவணனைச்
செற்றாய் கொற்றவனே! திருவிண்ணகரானே!"

என்னும் பெரிய திருமொழிப் பாசுர உரை[53] உரையாடற் போக்கில் அமைந்துள்ளது.

திருமங்கை யாழ்வார் : ஒருவராலழிக்க வொண்ணாத அரணை முறித்துப்புக்கு, "நான் இவ்வூருக்கு நிர்வாஹக னல்லேனோ?" என்று அபிமாநித்திருக்கிற ராவணனைக் கிழங்கெடுத்தவனே! அரியன செய்யுமிடத்தில் வருத்தமறச் செய்ய வல்லவனன்றோ நீ. பெருமிடுக்கனான ராவணனை அழியச்செய்த வருத்தமுண்டோ என்னுடைய ப்ரதிபந்தகத்தைப் போக்கிச் சேரவிட்டுக் கொள்ளுகைக்கு?

சர்வேச்வரன் : நாம் லங்கையை யழியச் செய்தது கடற்கரை வெளியிலே எடுத்துவிட்டு நின்று; உம்முடைய ப்ரதிபந்தகத்தைப் போக்கிற்று எங்கே வந்துநின்று? (என்ன)

திருமங்கையாழ்வார் : எனக்காக வந்து நிற்கிற இடம் திருவிண்ணகர் (என்கிறார்)

இவ்வாறு முழுவதும் உரையாடலாக அமையாவிட்டாலும் இடையிடையே உரையாடற் போக்கில் அமைந்த உரைகள் சிற்சில பாடல்களுக்கு அமைந்துள்ளன.[54]

5. உணர்ச்சி நயம்தோன்ற விளக்குதல்

இவ்வுரையாசிரியர்கள் பாட்டின் சொற்களுக்கு நேரான பொருளைத் தெரிவித்துச் செல்லும் எளிய முறையினை மேற்கொண்டிலர். இவர்கள் சொற்களை இதயத்தின் ஆழத்தில்

---

53. பெ.தி. 6.3.5.
54. 2.6.7-36; 2.9.1-24,36; 2.9.2-24,36; 5.7.8-24, 36; 6.2.1-24,36; 10.3.8-24,36. பெ. திருவந். 12; பெரி.தி.2.9.8; நா.தி.3 (முழுவதும்).

புதைந்து கிடக்கும் உணர்ச்சிகளைப் புலப்படுத்தும் குறியீடுகளாகவும், இன்பம் துன்பம் போன்ற உணர்ச்சிகளைச் சுமந்துவரும் வாகனங்களாகவும் எண்ணினர். அதனால் ஆழ்வார்கள் சொற்களில் புதைந்திருக்கும் உணர்ச்சிகளைப் புலப்படுத்தி உரை வரைந்தனர். "என்னுடைய பந்துங் கழலும் தந்து போகு நம்பி!" என்னும் பாசுரத்தில், சொல்லுக்குப் பொருள் சொல்லுகையன்றிக்கே, மாற்றமும் மறுமாற்றமுமாக வருவனவற்றாலே நினைவைச் சொல்லுகிற இதுவிறே இத்திருவாய்மொழிக்குக் கருத்து என்று பெரியவாச்சான் பிள்ளை குறித்துச் செல்வது[55] ஒருவகையில் வைணவ உரையாசிரியர்கள் உரைப்போக்கினைச் சுட்டுவதாகவே அமைந்துள்ளது.

(அ) "நாடி நாடி நரசிங்கா என்று
வாடி வாடும் இவ்வாள் நுதலே"

என்பதில் 'நரசிங்காவென்று' என்பதற்கு, "தமப்பன் பகையானாலோ உதவலாவது? நீர் பகையானால் உதவலாகாதோ? ஜ்ஞாநநிஷ்ட்டர்க்கோ (ஞானத்தில் நிற்பவர்க்கோ) உதவலாவது? பக்தி நிஷ்ட்டர்க்கு உதவலாகாதோ? ஆண்களுக்கோ உதவலாவது? பெண்களுக்கு உதவலாகாதோ? சேராத வடிவு சேர்த்து உதவிலோ உதவலாவது? இருந்தபடியே உதவலாவார்க்கு உதவலாகாதோ? ஒரு அதிகாரி நியதி, ஒரு காலநியதி ஒரு அங்கநியதி என்கிற நிர்ப்பந்தம் வேணுமோ இவளுக்கு? இவளுடைய ரக்ஷணத்துக்கும் (பாதுகாப்புக்கும்) ஏதேனும் முகம்பண்ண வேணுமோ?" என்று தாய் கருதுவதாக உரை கூறப்பட்டுள்ளது.[56] இதில் 'நரசிங்கா' என்னும் ஒரு சொல்லைக் கொண்டு தாயின் நினைவலைகளை வெளிப்படுத்தல் காணலாம்.

(ஆ) "நின்
செம்மா பாதபற்புத் தலைசேர்த்து; ஒல்லைக்
கைம்மா துன்பம் கடிந்த பிரானே!"

என்பது நம்மாழ்வார் வேண்டுகோள். இதில் கயேந்திரனது வீடு பேற்றினைக் கூறும் ஆழ்வார் எண்ணங்களாகக் கீழ்வருவனவற்றைப் புலப்படுத்துகிறார் நம்பிள்ளை: "அங்கு முதலை யொன்று, எனக்கு முதலை ஐந்து; அங்கு ஆயிரம் தேவஸம்வத்ஸரம் (தேவயாண்டு), இங்கு அநாதிகாலம்; அங்கு ஒரு சிறுகுழி, இங்கு(ப்) பிறவியென்னும் பெருங்கடல்; அதுக்கு சரீரநாசம் (உடலழிவு), எனக்கு ஆத்மநாசம் (உயிரழிவு); ஆனையின் காலை

55. 6.2.1-24. 56. 2.4.1-36.

யாயிற்று, முதலை பற்றிற்று, இங்கு என்னுடைய நெஞ்சையா யிற்று அருவித்தின்றிடுகிறது; ஆனால் அதுக்கும் இதுக்குமுள்ள வாசி பாராய்."[57] இதே போன்ற விளக்கம் "இருந்தான் கண்டு"[58] "பெண்ணுலாம் சடையினானும்"[59] ஆகிய பாசுரங்களின் உரையிலும் காணப்படுகின்றது.

(இ) சில இடங்களில்[60] சொற்களில் புதைந்திருக்கும் உணர்ச்சிகளைத் தக்க சிறு உவமைகள் காட்டி விளக்குவர்.

வாழி கனையிருளே - இதில் 'வாழி' என்பது "காதுகரை (கொலைகாரரை) உடன்பிறந்தீர் என்னுமாபோலே" என்றும்,

மணியே - "விடாயர் முகத்தே குளிர்வெள்ளத்தை வெட்டி விட்டாப்போலே ச்ரமஹரமான (வருத்தம் போக்குவதான) வடிவையுடையவனே!" என்றும்,

இன்குரல் - "கூரியவேல் என்னுமாபோலே" என்றும்,

வாழாட்பட்டு நின்றீருள்ளீரேல் என்பதில் 'பட்டு' என்பது "உவர்க்கடலில் முத்துப்பட்டது என்னுமாபோலே" என்றும் உவமை காட்டி உணர்ச்சியினை விளக்கிச் செல்வது காணலாம்.

6. நயம்பாராட்டுதல்

சொற்களுக்கும் சொற்றொடர்களுக்கும் இனிய முறையில் விளக்கங் கூறிச் செல்வர். இதனை நயம் பாராட்டல் எனலாம். சில சான்றுகள் வருமாறு :[61]

அ) பூமகளார் - "பரிமளம் ஒரு வடிவு கொண்டாற் போலே யிருக்கும்படியான போக்யதையுடையவள்".

ஆ) அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே - "நினைத்த நெஞ்சும் தித்தித்து, சொன்ன நாக்கும் தித்தித்து வாரா நின்றது".

இ) பச்சைமாமலைபோல் மேனி - "காணப் புக்கால் கண்ணும் குளிர்ந்து நெஞ்சும் குளிரும்படி ச்லாக்யமாயாய்த் திருப்பது".

---

57. 2.9.1-36.
58. 8.7.2-36.
59. தி.மா.44
60. 2.1.7-36; 8.1.1-36; 9.5.6-24, 36. தி.பல்.3.
61. (அ) 1.9.3-24; (ஆ) க.நு.சி. 1 (அழகு); (இ) தி.மா.2, (ஈ) பெரி.தி. 2.6.6.

ஈ) நீலக் கடலுள் நெடுங்காலம் கண்வளர்ந்தான் - "க்ஷீரமாகையாலே (பாலாகையாலே) வெளுத்த நிறமாயிருக்கச் செய்தேயும், திருமேனியின் நிழலீட்டாலே நீலமான நிறத்தை யுடைத்தாயிருக்கிற கடலிலே, ப்ரளயாவதியாகக் (ஊழி முடிவுவரை) கண்வளர்ந்தருளினவன்''.

7. கருத்து விளக்க உரைகள்

பொருள் நன்கு புலப்படும் சொற்களுக்கு அவற்றின் பொருளை மூலத்திலேயே கண்டுகொள்ளுமாறு செய்து, அவற்றிற்கு நேரான பொருள் கூறாமல், அவ்விடத்திற்குத் தேவையான வேறு செய்திகளை உரைத்துச் செல்வது அங்கங்கே காணப்படுகிறது. இதனைக் கருத்து விளக்க உரை எனக் கூறலாம். பின்வருவன இதற்குச் சான்றாக அமையும்.[62]

அ) அருள் அருளாத இந்நாள் - ''தாய் முலைப்பால் மறுத்த இந்நாள்''

ஆ) தொல்நீர் - ''அவதாரத்துக்கு நாற்றங்கால்''.

இ) தனஞ்சயனை - ''ஊர்வசியைத் 'தாய்' எண்ண வல்லவன்''.

ஈ) திருமால் - ''அடிக்கழஞ்சு பெற்ற பிச்சு'', ''வேண்டுவதெல்லாம் பெறுகைக்கடி''.

உ) செங்கண் - ''வாத்ஸல்யம் தோற்றுகை''

ஊ) மலராள் மைந்தன் - ''நித்யஸூரிகள் ஜீவநமிருக்கிறபடி''.

எ) திருவருள் மூழ்கினள் - ''கடல்கொண்ட வஸ்துவையன்றோ நீங்கள் மீட்கப் பார்க்கிறது?''

ஏ) மதிள் குடந்தை - ''திருமழிசைப் பிரானுக்குகந்த இடம்''.

ஐ) அம்ம வம்ம - ''பூசல் பூசல்!''

ஒ) செங்கயல் - ''இளமையாலே''.

---

62. (அ) தி.வி. 41; (ஆ) பெ.மடல் கண்ணி 119; (இ) பெ.மடல் கண்ணி 56; (ஈ) தி.வி.88; மு.தி.52; (உ) மு.தி. 16; (ஊ) 1.5.9-24; (எ) 8.9.5 - 24; (ஏ) இ.தி. 70; (ஐ) 9.9.9.-36; (ஒ) 7.2.1-24; (ஓ) பாவை 9-6; (ஔ) அம. 4 (அழகு).

ஓ) கண்வளரும் - "பகவத் விஷயத்தில் அவகாஹித்தால் (இழிந்தால்) கௌரவ்யதை (பெருமை) தோற்றச் சொல்லவேணுமிறே".

ஔ) இலங்கை - "குளவிக் கூடு போலே பிறரை நலிந்து புக்கு ஒதுங்குமிடம்".

8. அன்மைநிலை புணர்த்திப் பொருள் விளக்கம் தருதல்

இஃது இவ்வுரைகளில் காணப்படும் ஒரு புதுமையான பொருள் வெளிப்பாட்டு முறையாகும். பெருமாள் பண்புகளையும் பிறவற்றையும் விளக்கும் சொற்களுக்குப் பொருள் கூறுங்கால் வேறு குறையோ தடையோ இருந்ததென்றாலும் அதுகுறித்து விடவொண்ணாத வகையில் அப்பண்புகளும் பிறவும் அமைந்துள்ளனவென்று வற்புறுத்தி எழுதிச்செல்கின்றனர். இதனை 'அன்மை நிலை புணர்த்திப் பொருள் விளக்கம் தருதல்' எனக் கூறலாம். சான்றாகப் பின்வருவனவற்றைக் காட்டலாம்.[63]

அ) நிறங்கரியான் - குணங்களில்லை யென்னிலும் விடவொண்ணாத வடிவழகை உடையவன்.

ஆ) காரோத வண்ணன் - நோக்காதே அழிக்கிலும் விடவொண்ணாத வடிவு.

இ) மூவுலகுக்கும் நாதனே - குணக்கேடனானாலும் விடவொண்ணாத சம்பந்தத்தைச் சொல்லுகிறது.

ஈ) கண்ணன் - விரூபனானாலும் (அழகற்றவனானாலும்) விடவொண்ணாத ஸௌலப்யத்தை (எளிமை) யுடையவன்.

உ) கார்மேனி - தாயும் தமப்பனும் ஒளித்து வைத்தாலும் விடவொண்ணாத வடிவழகு.

ஊ) மணிவண்ணன் - கொள்ளும் பயனுமின்றிக்கே ஐச்வரியமுமின்றிக்கே யொழிந்தாலும் விடவொண்ணாதபடியாயிற்று வடிவழகு.

---

63. (அ) பெரிய திருவந். 68; (ஆ) மு.தி. 7; (இ) 2.6.10-24; (ஈ) பெரி.தி. 2.5.2; (உ) பாவை 1-6; (ஊ) 3.9.5-36; (எ) 7.3.11-36; (ஏ) பெரி.தி. 5.1.6; (ஐ) திருவா. 1; (ஒ) மு.தி-100; (ஓ) பெ.தி.9.9.9; (ஔ) பெ.தி. 5.9.4.

எ) ஆழிநீர்வண்ணன் - நோக்காதே படுகொலை யடிக்கிலும் விடவொண்ணாத வடிவு.

ஏ) கரியாய் - காரணத்வமும் (அடியாயிருக்குந் தன்மையும்) ஸௌலப்யமுமின்றிக்கே (எளிமையுமின்றிக்கே) துர்லபனானாலும் (அடைய முடியாதவனானாலும்) விடவொண்ணாத வடிவழகு.

ஐ) சேவடியோயே - இழந்த இழவை மீட்டு ரக்ஷியாதே காதுகனானானேயாகிலும் விடவொண்ணாத படியாயிற்று(த்) திருவடிகளின் போக்யதை யிருக்கிறபடி.

ஒ) தண்டுழாய் மாலைசேர் மாயவனை - ஸுலபனுமன்றிக்கே (எளியவனுமன்றிக்கே) விரோதியைப் போக்கு மவனுமன்றிக்கே இருக்கிலும் விடவொண்ணாத போக்யனான மாயவனையே.

ஓ) புலம்புரி நூலவனை - ரக்ஷித்திலனே யாகிலும் விடவொண்ணாதபடி கண்டாரிந்த்ரியங்கள் தன் பக்கலிலே துவக்கைக்கீடான திருயக்ஞோபவீதத்தை யுடையவனை.

ஔ) வானவர் தலைவன் நாமம் - விநாசத்தை பலிக்கிலும் விடவொண்ணாத திருநாமமாய்த்து.

9. சொல்திறம் காட்டுதல்

தக்க சொல்லைத் தக்க இடத்தில் அமைத்து எழுதுவதே கவிதைத் திறம் ஆகும். ஆழ்வார்கள் அத்திறம் மிக்கவர்களாய் இருத்தலை உரையாசிரியர்கள் அங்கங்கே சொற்களின் தகுதியினையும் பொருத்தத்தினையும் விளக்கிக் கூறுவதால் புலப்படுத்திச் செல்கின்றனர்.

அ) நம்மாழ்வார் இறைவனை நோக்கி,

''நின், பன்மாமாயப் பல்பிறவியில் படிகின்றயான்...
நின் மாதாள் சேர்ந்து நிற்பது எஞ்ஞான்று கொலோ?''

என்று வினவுகிறார். இத்தொடரில் உள்ள 'படிகின்ற' என்னும் சொல்லின் தகுதியினை, 'விழுகின்ற' என்னாதே 'படிகின்ற' என்கிறது இவ்வனர்த்தத்திலே (இத்துன்பத்திலே) வெறுப்பின்றிக்கே பொருத்தியிருக்கை'' என்று உரை கூறி நிறுவுவர்.[64]

---

64. 3.2.2-24,36;

ஆ) "நற்பால் அயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும்
நற்பாலுக்கு உய்த்தனன் நான்முகனார் பெற்ற
நாட்டுளே"

என்பதில் உள்ள வாழும் என்னும் சொல்லின் தகுதி கீழ்வருமாறு காட்டப்படுகின்றது: "வர்த்திக்கு மென்னாதே (இருக்கு மென்னாதே) வாழுமென்கிறது அத்தேச வாஸமும், வாழ்வு மென்று இரண்டில்லாமையாலே, 'வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்கள்' என்றும், 'நல்லார்கள் வாழும் நளிர் அரங்கம்' என்றும் சொல்லுகிறபடியே"[65]

இ) "ஆட்கொள்ளத் தோன்றிய ஆயர்தம் கோவினை" என்னும் பெரியாழ்வார் திருமொழித் தொடரில் வரும் 'தோன்றிய' என்னும் சொல்லின் தகுதியினை, "பிறந்து என்னாதே தோன்றிய என்கிறது "தேவகீ பூர்வஸந்த்யாயா மாவிர்ப்பூதம்" என்கிறபடியே கர்ப்பவாஸ தோஷமற (கருவில் இருந்து பிறக்கும் குற்றமற) வந்து அவதரித்தமை தோற்றுகைக் காக" என்று விளக்குவர்.[66] "தேவகி நங்கைக்குச் சொப்படத் தோன்றி" என்பதில் வரும் 'தோன்றி' என்பதற்கும் மேற்கூறிய விளக்கமே தரப்பட்டுள்ளது.[67]

ஈ) பெருமானை 'மதுரவாறே' என்று ஆறாக உருவகித்துப் போற்றுகிறார் தொண்டரடிப்பொடி யாழ்வார். இறைவனை 'ஆறு' என்று உருவகப் படுத்தியதன் பொருத்தத்தினை, "மதுரவாறே-ஸமுத்ரம் (கடல்) என்னாதே 'ஆறு' என்பானென் னென்னில், கடலானால் விநியோக யோக்ய மன்றிக்கே (பயன் பாடின்றிக்கே) இருக்கும்; இது விடாய்த்தார்க்குக் குளித்தல், முகத்திலே இறட்டிக் கொள்ளுதல், பாநம் பண்ணுதல் (பருகுதல்) செய்யலாயிருக்கும்; விடாயில்லாதபோதும் அழுக்கைக் கழற்றிக் கொள்ளலாயிருக்கும். கடலானால் இவனிருந்த இடத்தில் ஓடாது; இது இவனிருந்த இடத்தே வருகையாலும், கிண்ணக மெடுத்தால் நடுவுள்ள அணைகளை முறித்துக்கொண்டு வருமாப் போலே இவ் ஆறும் அயோக்யதாநுஸந்தாநத்தாலே (தகுதி யின்மையென்னும் நினைப்பால்) இட்ட அணைகளையும் முறித்துக்கொண்டு வருமாய்த்து."[68]

உ) "எண்ணும் திருநாமம் திண்ணம் நாரணனே" என்பது திருவாய்மொழி. இதில் திருநாமம் என்று வருவதற்கு, "மந்த்ரமென்னாதே திருநாம மென்கிறது-அதிகாரி நியதியாதல்,

---

65. 7.5.1-24, 36.
66. பெரி.தி. 1.6.11.
67. பெரி.தி. 2.1.6.
68. தி.மா. 36.

அங்க நியதியாதல் வேண்டாவென்கைக்காக. மாத்ரு நாமக்ர ஹணத்துக்கு (தாயின் பெயரைச் சொல்வதற்கு) அதிகாரமும் (தகுதியும்) வேண்டாதே ஸரஸமுமாயிருப்பது (சுவை மிக்கதாயும் இருப்பது)'' என்று விளக்கங் கூறி அதன் தகுதியினை நிறுவுவர்.[69] இத்தகைய விளக்கம் ''மூன்றெழுத்துடைய பேர்'' என்னும் திருமாலைத் தொடரில் வரும் பேர் என்பதற்கும் வரையப் பட்டுள்ளது.

ஊ) திருநெடுந்தாண்டகத்தில், ''பனி நெடுங் கண் நீர் ததும்பப் பள்ளி கொள்ளாள்'' என்று தலைமகளின் நிலையினைத் தாயார் கூறுகிறாள். இதில் 'உறங்காள்' என்று சொன்னாலே போதுமானதாக இருக்கப் 'பள்ளி கொள்ளாள்' என்று சொல்வதற்கான காரணத்தைத் ''தன் வயிற்றில் பிறந்த இவள் உறங்காளென்ன ப்ராப்தமாயிருக்க, பள்ளிகொள்ளாள் என்பா னென்னென்னில், வயிற்றிற் பிறந்தவளே யாகிலும் ராஜமஹிஷி யாகப் பட்டங்கட்டினால் 'ஆழ்வார்' என்றிறே சொல்லுவது'' என்று விளக்குவர்.[70]

10. சொற்பெய்து விரித்தல்

சில இடங்களில் அவ்விடங்களுக்குத் தேவையான சொற் களைப் பெய்து உரைவரைந்து செல்வது இவர்கள் இயல்புகளுள் ஒன்று.

அ) "அன்னையாய் அத்தனாய் என்னை ஆண்டிடும்
தன்மையான்"

என்பதற்கு ''ப்ரியமே (விரும்பியதையே) செய்யக்கடவ தாய் செய்வதும், ஹிதமே (நன்மையே) செய்யக்கடவ பிதா செய்வதும், ஸ்வரூபாநுரூபமாக (சொரூபத்திற்குத் தக்கவாறு) அடிமைகொள்ளும் நாயகன் செய்வதும் செய்யுமவர்''[71] என்று அன்னை, தந்தை, நாயகன் தன்மைகளைப் புலப்படுத்தி உரைவகுப்பர்.

ஆ) "அமரரும் முனிவரும்" என்பதற்குக் ''கைங்கர்யதாரக ரான (தொண்டினால் உயிர்தாங்கி நிற்பவரான) அமரரும் அதுக்கும் க்ஷமரன்றிக்கே (தகுதியின்றிக்கே) பகவத் குணங்களிலே ஈடுபட்டிருக்கும் ஸ்வபாவரான (தன்மையினரான) முனிவரும்''[72] என்று சொற்பெய்து விளக்குவர்.

---

69. 10.5.1-24.
70. தி.நெ.தா. 11.
71. க.நு.சி. 4 (நம்பிள்ளை, நஞ்சீயர், பெரி.) 2.3.2-36; 2.6.10-36 ஆகியனவும் காண்க.
72. 10.9.9-9.

இ) "கடலும் மலையும் விசும்பும் துழாய்" என்னும் திருவாய் மொழித்தொடர் விளக்கத்தில் "அபரிச்சிந்நமான (அளவுபடாத) கடல், நிர்விவரமான (செறிந்த) மலை, அவகாசப்ரதாநம் பண்ணுகிற ஆகாசம் (இட வெளிதரும் வானம்) அன்றியே அச்சமான வானம்"[73] என்றும், "மண்ணும் மலையும் கடலும்" என்னும் பெரியாழ்வார் திருமொழித் தொடருக்கு "ஸர்வாதார மான (எல்லாவற்றிற்கும் அடிநிலையான) பூமியும், பூமிக்கு ஆதாரமான பர்வதங்களும், பூமிக்கு ரக்ஷகமான (பாதுகாப்பான) ஸமுத்ரங்களும்" என்றும்[74] கடல், மலை, விசும்பு, மண் ஆகியவற்றின் தன்மைகளை அவற்றோடு சேர்த்து எழுதுவர்.

ஈ) "இராப் பகல்" என்பதற்கு "உறங்கக் கண்ட இராவோடு விழித்திருக்கக் கண்ட பகலோடு" என்று[75] இரவுபகல் அமைப்புக்கு விளக்கந் தந்தும், "அந்திப் பொழுதத்து" என்பதற்கு "அஸுரர்க்குப் பலம்வர்த்திக்கும் (வளரும்) காலத்திலே"[76] என்று அசுரர் இயல்பு காட்டியும் உரை கூறுவர்.

உ) "பட்டங் கட்டிப் பொற்றோடுபெய்து இவள் பாடகமும் சிலம்பும்
இட்ட மாக வளர்த்தெடுத் தேனுக்கு"

என்பதற்கு, "லலாட பூஷணமான (நெற்றியணியான) பட்டத்தைக் கட்டி, கர்ண பூஷணமான (காதணியான) பொன்னின் தோட்டையிட்டு, பாதபூஷணமான (காலணியான) பாடகத்தையும் சிலம்பையுமிட்டு" என்று பட்டம், தோடு, பாடகம், சிலம்பு ஆகியவை எவ்வெவ் வுறுப்புகளுக்குரிய அணி என்பதனைச் சுட்டிக்காட்டி உரை எழுதுவர்.[77]

ஊ) "வேந்தராய் விண்ணவராய்" என்னும் நான்முகம் திருவந்தாதித் தொடரை, "சிறியத்தைப் பெரியது தின்னாதபடி நோக்கும் ராஜாக்களாய், பூமியிலுள்ளார்க்கு வர்ஷத்தாலே (மழையாலே) உபகரிக்கும் (உதவும்) தேவர்களாய்" என்று வேந்தர் விண்ணவர் செயல் காட்டி உரை விரிப்பர்.[78]

எ) "விலங்கும் கயலும் வேலும் ஒண்காவியும் வென்ற கண்" என்பதற்கு, "கண்ணினுடைய மௌக்த்யத்துக்கு (மடப்பத்துக்கு) மானும், துள்ளுதலுக்குக் கயலும், கூர்மைக்கு வேலும், சிவப்புக்குக் காவியும் போலேயாய், பின்னையும் இவற்றைத்

---

73. 2.1. 4-36.
74. பெரி.தி. 1.2.18.
75. 2.1.3-24.
76. மூ.தி.65.
77. பெரி.தி. 3.7.6
78. நான்.தி. 83.

தோற்பித்த கண்ணையுடையராய்' என்று கண்ணின் தன்மைகளைச் சொற்பெய்து விளக்கி எழுதிச் செல்வர்.[79]

11. பெயர்சுட்டி விளக்கம் தருதல்

சிலவற்றை இயற்பெயரால் குறிக்காமல் பொதுப் பெயரால் சுட்டிச் செல்வது நூலாசிரியர் தம் இயல்பு. அவற்றை விளங்குமாறு இயற்பெயர் சுட்டி எழுதிச் செல்வது உரையாசிரியரது கடமை. அக்கடமையினை வைணவ உரையாசிரியர்கள் செவ்வனே செய்துள்ளனர் என்பதனைக் கீழ்வரும் சான்றுகளால்[80] அறியலாம்:

அ) வல்லானை கொன்றானை - ஆனை - குவலயாபீடம்.

ஆ) துரகத்தை வாய்பிளந்தான் - துரகம் - கேசி.

இ) சாடுதைத்த வொண்மலர்ச்சேவடி-சாடு - சகடாஸுரன்.

ஈ) மா மாயவளை மாய - மாயவள் - பூதனை.

உ) மல்லர்களோடு பொருது-மல்லர்கள்-சாணூரமுஷ்டிகர்.

ஊ) புள்ளின்வாய் கீண்டானை - புள் - பகாஸுரன்.

எ) பேருளான் பெருமை பேசி ஏசினார் - ஏசினார். சிசுபாலதிகள்.

ஏ) ஒன்னாவசுரர் துளங்க - அசுரர் - நமுசிப்ரப்ருதிகள்.

ஐ) இகழ்ந்தாய் இருவரையும் வீய-இருவர்-மதுகைடபர்கள்.

ஒ) மலைகொண்டு மத்தா அரவாற் சுழற்றிய - அரவு - வாஸுகி.

ஓ) அடுத்த கடும்பகைஞற்கு ஆற்றேன் என்றோடிப் படுத்த பெரும்பாழி சூழ்ந்த-விடத்துஅரவை - விடத்து அரவு- ஸுமுகன்.

---

79. பெ.தி. 6.4.5.

80. (அ) பாவை 15-3; (ஆ) மூ.தி.98; (இ) மு.தி.100; (ஈ) பெரிய.திருவந்.5; (உ) பெரி.தி.2.7.6; (ஊ) பாவை 13-3; (எ) தி.கு.தா.17; (ஏ) பெ.மடல் கண்ணி 112: (ஐ) நான்.தி.24; (ஒ) தி.வி.51; (ஓ) மு.தி.80; (ஔ) பெரி.தி.3.9.2; (க) பெரி.தி.3.10.6; (ங) பெரி.தி. 4.1.4; (ச) பெரி.தி.2.1.2; (ஞ) பெரி.தி.1.9.9; (ட) மூ.தி. 87; (ண) இ.தி.93; (த) பெ.மடல் கண்ணி 63; (ந) பெரி.தி.4.8.3.

ஔ) முன்வில் வலித்து முதுபெண் உயிர் உண்டான்- முதுபெண் - தாடகை.

க) சித்திர கூடத்திருப்பச் சிறுகாக்கை முலைதீண்ட - சிறுகாக்கை - ஜயந்தன்.

ங) ஆயர் மடமகள் பின்னைக்காகி - ஆயர் - கோபரான ஸ்ரீகும்பர்.

ச) பார்த்தன் சிலை வளைய - சிலை - காண்டீவம்.

ஞ) கற்பகக் காவு கருதிய காதலிக்கு - காதலி - ஸத்யபாமை.

ட) கலந்து மணிஇமைக்கும் கண்ணா - மணி - ஸ்ரீகௌஸ்துபமணி.

ண) வடிசங்கம் கொண்டானை - வடிசங்கம் - ஸ்ரீபாஞ்சஜந்யம்.

த) மன்னவன்தன் காதலனை மாயத்தால் கொண்டுபோய்க் கன்னிதன் பால்வைக்க - காதலன் - அநிருத்தாழ்வான்; கன்னி - உஷை.

ந) மருமகன்தன் சந்ததியை உயிர்மீட்டு - மருமகன்தன் சந்ததி - மருமகனான அபிமந்யுவினுடைய புத்ரனான பரீக்ஷித்து.

12. பெயர் குறிக்காது 'பொருள்' என்னும் கருத்துப்படும் சொற்களைச் சுட்டாக அமைத்தல்

தாமரை, நாய், பேய், மரம், பெண், முதலை, இழிந்த விலங்குகள் ஆகியவற்றின் பெயரைச் சுட்டிக் குறிப்பிடாமல் 'பதார்த்தம்'[81] (பொருள்) என்றோ, 'க்ஷுத்ர பதார்த்தம்'

---

81. "எல்லாவற்றிற்கும் பாங்கான தென்றலானது ஒரு பதார்த்தத்திலே வந்தால் வாடச் செய்வதாகா நின்றதிறே" (தி.மா.20); "திறந்து கிடந்த வாசல்கள் தோறும் நுழைந்து திரியும் பதார்த்தம் போலே" (1.2.2-36; பெ.தி.11.8.4); "ஒரு விடக்கைப் பற்றி இரண்டு பதார்த்தம் விவாதம் பண்ணுமாபோலே" (தி.மா.4); "முளைக்கும்போதே வயிரம் பற்றி முளைக்கும் பதார்த்தம் போலே" (1.1.1-36); "ஒரு க்ஷுத்ரவிஷயத்திலே நாலு நாள் வாசனை பண்ணினார்கள் போர விதக்தராய் இராநின்றார்கள், அவ்வளவு அல்லவிறே ஸமஸ்த கல்யாண குணாத்மகனோடே நெடுநாள் பண்ணினார்க்கு இருக்கும்படி" (6.2.2-36).

அல்லது 'க்ஷுத்ர விஷயம்'[82] (தண்மையான பொருள்) என்றோ குறிப்பர். எலி, பெருச்சாளி ஆகியவற்றையும், மீன், நண்டு முதலியவற்றையும் 'சில பதார்த்தங்கள்'[83] என்று எழுதிச் செல்வர். நார், ஓலை போன்றவற்றைச் 'சில அசித் பதார்த்தங்கள்'[84] (சில அறிவற்ற பொருள்கள்) என்று சுட்டுவர். காதற்குரியவளை 'அபிமத விஷயம்'[85] (அன்புக்குரிய பொருள்) என்று பேசுவர்.

இவற்றுள் நாயினை இவ்வாறு 'ஒரு பொருள்' என்று குறிக்காமல் பெயர் சுட்டியும் இரண்டு இடங்களில்[86] எழுதியுள்ளனர்.

13. அடைமொழிக்குச் சிறப்புப் பொருள் தருதல்

அடைமொழிக்குச் சிறப்பாகப் பொருள் கூறுவது இவ்வுரைகாரர்களின் இயல்புகளுள் குறிக்கத்தக்கவொன்றாகும். எங்கும் அடைமொழிக்குச் சொற்பொருள் மட்டும் காட்டிச்

---

82. "திறந்து கிடந்த வாசல்கள்தோறும் நுழையும் க்ஷுத்ர பதார்த்தம் போலே" (5.1.6-24); "தன்னிலமல்லாத பொய்கையிலே ஒரு க்ஷுத்ரபதார்த்தத்தின் கையிலே யகப்பட்டு ப்ரதிக்ரியை யின்றிக்கே யிருக்கும்படியான ஆபத்துப்போக" (9.2.5-24); "இரண்டு தலையும் நெருப்புப் பற்றி எரியா நிற்க நடுவே அகப்பட்டு நோவுபடுகிற க்ஷுத்ரபதார்த்தம்போலே" (பெ.தி.11.8.4); "க்ஷுத்ர பதார்த்தங்களை அகப்படுத்தப் புகைக்குமா போலே" (நான்.தி.38).
83. "சில பதார்த்தங்களை வறைநாற்றத்தைக் காட்டி முடிக்குமாபோலே, சப்தாதிகளிலே மூட்டி நசிப்பிக்கை யாலே இந்த்ரியங்களை 'பொறி' என்கிறது." 2.8.4-24, 36).
"சில பதார்த்தங்களை உயிர்போகாதபடி ஒன்றிலே கோத்திட்டு வைக்குமாப்போலே" (7.8.0-36.)
84. "சில அசித் பதார்த்தங்களை வகிர் செய்யுமாபோலே" (பெ.தி. 1.7.1).
85. "அபிமத விஷயத்தின் பாடுபோவார் ஆபரணம் பூண்டிறே போவது" (க.நு.சி.3-அழகு); "அபிமத விஷயத்தை அணைத்தாற்போலே ஆச்ரயணந்தான் இனிதா யிருக்கை யாலே 'புல்கு' என்கிறார்" (1.2.4-9).
86. "திறந்து கிடந்த வாசலிலே நாய் புகுருமாபோலே" (தி.மா. 11; பெ. மடல் கண்ணி 98).

செல்வதனைக் காண்பது அரிது. சான்றாகச் சிலவற்றைக் குறிப்பிடலாம்.[87]

அ) அம்தோழி - "அந்தோழி" என்றத்தால் பெற்றது என்னென்னில், தந்தாம் (தம்தம்) ப்ரயோஜநமும் (பயனும்) இத்தலையில் ப்ரயோஜநமும் வேண்டியிருப்பாரும் உண்டு; ஸ்வப்ரயோஜநத்தைப் (தனக்கு உண்டாகும் பயனைப்) பாராதே இத்தலையில் ப்ரயோஜநமே ப்ரயோஜநமாய் இருக்கை "அம்' என்கிற விசேஷணத்தால்."

ஆ) அருவினை - "கர்ம பரம்பரையாலே (வினைத் தொடர்ச்சியாலே) மேன்மேலன அதுதன்னை வர்த்திப்பித்துப் பூண் கட்டுமதாய்இருக்கை."

இ) ஒண்குறவர் - "திருவேடுவர்க்கு ஒண்மையாவது 'இவர்கள் பாட்டன் பாட்டனிலே ஒருத்தன் பூமியிலே இறங்கினான்' என்னும் பழியின்றிக்கே இருக்கை". இது வேங்கடமலையில் வாழும் குறவர்களைப் பற்றிய விளக்கம்.

ஈ) ஓரரி - "நாட்டில் நடையாடும் ஸிம்ஹமன்று. தன்னுடைய இச்சையாலே பிறந்த ஸிம்ஹம் என்றுமாம்."

உ) ஓர்குறள் - "நாட்டில் வாமநர்கள் இவன் வளர்ந்தருளின இடத்தோடு ஒக்கும்."

ஊ) திண்கழல் - "ஆச்ரிதரை (அடியாரை) ஒருகாலும் விடாதே ரக்ஷிக்கும் ஸ்வபாவமான (காக்கும் தன்மையுடைய) திருவடிகள்."

எ) நல்ல என் தோழி - "என்னிலும் என்னிழவுக்கு நொந்திருப்பாய் நீயேயிறே."

ஏ) நல்வேயூதி - "குழலுக்கு நன்மையாவது 'நன்னரம்புடைய தும்புருவோடு நாரதனும் தந்தம் வீணை மறந்து', 'மரங்கள் நின்று மதுதாரைகள் பாயும்' - இத்யாதிப்படியே தன்னுடைய த்வநியாலே (ஓசையாலே) சேதநஅசேதந

---

87. (அ) தி.வி. 26; (ஆ) தி.வி. 100; (இ) மு.தி. 38; (ஈ) மு.தி. 90; (உ) மு.தி. 20; (ஊ) 1.2.10-9; (எ) நா.தி. 10.10; (ஏ) பெரி.தி. 2.1.1; (ஐ) தி.பல்.-8; (ஒ) தி.ச.வி. 30; (ஓ) பெ.திருவந்.1; (ஔ) 1.9.11-24; (க) 1.10.1-36; (ங) க.நு.சி. 7 அழகு; 1.5,10-24; (ச) பெரி.தி. 5.2.8; (ஞ) அம. 2 பெரி. (ட) 2.6.7-24.

விபாகம் அற (அறிவுடைய பொருள் அறிவில்லாப் பொருள் என்னும் வேற்றுமை அற) ஈடுபடுத்தவற்றாகை.''

ஐ) நல்லதோர் சோறு - ''சோற்றுக்கு நன்மையாவது, இட்டவன் 'இட்டோம்' என்று இருத்தல், உண்டவன் 'இதுக்கு என் செய்வோம்?' என்று இருத்தல் செய்யாத சோறு, அதாவது தாய் இட, புத்ரன்உண்ணும் சோற்றுக்கு இவ்விரண்டும் இல்லையிறே.''

ஒ) நன்மாலை - ''அவயவ சோபையிற் காட்டில் (உறுப்பழகைக் காட்டில்) ஆகர்ஷகமாய்இருக்கும் (கவரத்தக்கதாயிருக்கும்) மாலை என்னுதல். ரக்ஷணத்துக்கு (காப்பதற்கு) இட்ட தனிமாலை யாகையாலே விலக்ஷணம் என்னுதல் (மேலான அழகுடைத்து என்னுதல்).''

ஓ) நற்பூவைப்பூ - ''உபமாநம் (உவமை) உபமேயத்துக்குப் (பொருளுக்கு; இங்குப் பெருமான் வண்ணத்திற்கு) போராமையாலே உபமாநத்தையும் சிக்ஷிக்கிறது (செம்மைப் படுத்துகிறது).''

ஔ) நீள்கழல் - ''ஆசாலேசம் உடையார் (விழைவு சிறிது உடையார்) இருந்த இடம் எல்லையாக வளரும் திருவடிகள்.''

க) நீள்படை - ''ஆயிரக்காதம் பறப்பதின் குட்டி ஐந்நூறு காதம் சிறகடிக் கொள்ளும் என்னுமாபோலே, ஸர்வேச்வரன் அதிகரித்த (மேற்கொண்ட) கார்யத்திலே அவன் தன்னிலும் முற்பட்டிருக்கை.''

ங) வல்வினை(1) - ''சர்வபூதஸுஹ்ருத்தான (எல்லார்க்கும் நண்பனான) ஈச்வரன் ஸௌஹார்த்தத்தைப் (நட்பினைப்) போகட்டு 'க்ஷிபாமி' (வெறுத்தொதுக்குகிறேன்) என்னும் படியான பாபம்.''
வல்வினை(2) - ''ஸர்வசத்தியானவனும் அநுஸந்தித்தால் (நினைத்தால்) நெஞ்சு உளுக்க வேண்டும்படி இருக்கை.''

ச) வன்னெஞ்சம் - ''வன்மை அந்தர்யாமியையும் (உள்ளிருப்பவனையும்) அறிய ஒட்டாத வலிமை.''

ஞ) வெங்கணை - ''விடும்போது அம்பாய், படும்போது காலாக்நி (ஊழித்தீ) போலே இருக்கை.''

ட) வெந்நரகம் - (இங்கு உலக வாழ்வு வெந்நரகம் என்று சுட்டப்படுகின்றது) ''நரகம் என்று புத்தி பிறக்கும்அதில், தண்மை தோற்றாத நரகம் இது.

14. அடுக்கிவரும் அடைமொழிகளுக்கு விளக்கம் தருதல்

இஃது ஒரு புதுமையான அழகிய உரைப்போக்கு. ஒன்றுக்கு மேற்பட்ட அடைமொழி வரும்போது முதலில் அடைகொளிக்குப் பொருளும், அதன்பின் ஓர் அடைமொழியை அதனோடு சேர்த்து மற்றொரு பொருளும், அதன்பின் இன்னுமோர் அடைமொழியினைச் சேர்த்துப் பிறிதொரு பொருளுமாக மூன்று பொருள் சொல்வது இதில் அமைந்துள்ளது.

அ) நம்மாழ்வார், இறைவன் தம்மோடு கலந்தான் என்றும், அதற்குக் கைம்மாறாகத் தம் உயிரை அவனுக்குத் தந்ததாகவும் பேசுகிறார்.

"எனதாவியுள் கலந்தபெரு நல்லுதவிக் கைம்மாறு
எனதாவி தந்தொழிந்தேன்"

என்பது அவர் கூற்று. இதில்வரும் 'பெருநல்லுதவி' என்பதனை உதவி, நல்லுதவி, பெரு நல்லுதவி என்று அமைத்து, "உதவியாவது உபகரிக்கை; நல்லுதவியாவது பச்சைகொள்ளாதே உபகரிக்கை; பெருநல்லுதவியாவது தன்பேறாக உபகரிக்கை" என்று உரைவகுப்பர்.[88]

ஆ) நம்மாழ்வார் இறைவன் தன் திருவடிகளைத் தம் தலையில் சேர்ப்பதனை விரும்புவதாகவும், எவ்வளவு சிறந்த வீடுபேற்றிலும் தமக்கு விருப்பமில்லை என்பதாகவும் பாடுகிறார். "எம்மா வீட்டுத் திறமும் செப்பம்" (எத்தகைய பெரிய மோட்சத்தின் தன்மையைப் பற்றியும் பேசோம்) என்பது அவரது வாக்கு. இதில் பயிலும் எம்மா வீடு என்பதனைப் பெரியவாச்சான் பிள்ளை வீடு, மாவீடு, எம்மாவீடு என்று கூட்டி, "வீடு-மோக்ஷம், மாவீடு-உத்க்ருஷ்டமான (உயர்வான) மோக்ஷம். அவித்யா நிவ்ருத்திமாத்ரம்அன்று (அவிச்சை நீக்கம் மட்டும்அன்று). எம்மாவீடு-எல்லா ப்ரகாரத்தாலும் (வகையாலும்) உத்க்ருஷ்டமான (உயர்வான) மோக்ஷம்" என்று விளக்குவர்.[89]

இ) திருமங்கை மன்னன் தமக்கு இறைவன், "ஒருநற் சுற்றம் எனக்கு உயிர் ஒண்பொருள் வருநல் தொல்கதி ஆகிய மைந்தன்" ஆக அமைந்தான் என்று கூறுகிறார். இதில் வரும் 'ஒருநல் சுற்றம்' என்பதனைச் சுற்றம், நல்சுற்றம், ஒருநல்சுற்றம் என்று முறையே சேர்த்து, "சுற்றம் - சுற்றம் அல்லாதாரை வ்யாவர்த்திக்கிறது (வேறு பிரிக்கிறது). நல்சுற்றம் - ஸ்வப்ரயோஜநபரரை

88. 2.3.4-36.   89. 2.9.1-24.

ஸ்யாவர்த்திக்கிறது (தனக்குப் பயன்கருதுவோரை வேறு பிரிக்கிறது). ஒருநல்சுற்றம்-ஒரோ ப்ராப்தியே அன்றிக்கே (ஒவ்வோர் உரிமை அன்றிக்கே) எல்லா ப்ராப்தியும் (எல்லா உரிமையும் ஏகாச்ரயத்திலேயாய் (ஓரிடத்திலேயாய்) இருக்கிறபடி. மாத்ருத்வம் (தாய்மை) பிதாவுக்குஇல்லை; பித்ருத்வம் (தந்தையாந்தன்மை) மாதாவுக்கு இல்லையிறே'' என்று உரை கூறுவர்.[90]

ஈ) ''சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துஉன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்!''

என்று கண்ணனிடம் வேண்டுகின்றனர் பாவை நோன்பு நோற்கும் இடைப்பெண்கள். அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் 'சிற்றஞ் சிறுகாலே' என்பதனைக் காலை, சிறுகாலை, சிற்றஞ்சிறு காலை என்று மூவகையாகக்கொண்டு, '''செங்கல் பொடிக்கூறை' என்று தாமஸரும் உணரும்படியான அளவு-காலையாவது; 'ஆய்ச்சியர் மத்தினாலோசைப்படுத்த' என்று இடைச்சிகள் உணர்ந்து ஸ்வக்ருத்யத்தில் (தம் வேலையில்) அதிகரிக்கும்படியான (முனையும் படியான) அளவு-சிறுகாலையாவது;... 'முனிவர்களும் யோகிகளும்' உணருங் காலம்-சிற்றஞ்சிறுகாலையாவது'' என்று விளக்குகிறார்.[91]

உ) ''நீலார் தண்ணந் துழாய்கொண்டென் நெறிமென் குழல் மேல் சூட்டீரே'' என்கிறார் கோதை நாச்சியார். இதில் 'நீலார் தண்ணந் துழாய்' என்பதன் விளக்கத்தில் பெரியாழ்வாரை 'மிக்கசீர்த் தொண்டர்' என்று குறிக்குமிடத்து, தொண்டர், சீர்த் தொண்டர், மிக்கசீர்த் தொண்டர் என்று மூவகையாக்கி, ''தொண்டராகிறார்-சூழாட்பட்டவர்கள்; சீர்த்தொண்டரா கிறார்-உபாஸகர்; மிக்கசீர்த் தொண்டராவார்-பெரியாழ்வார் போல்வர்'' என்று விளக்குகிறார் பெரியவாச்சான் பிள்ளை.[92]

இவ்வாறே 'எனக்கே ஆட்செய்', 'ஏதமொன்றும் இல்லாத' ஆகிய தொடர்களையும் முறையே ஆட்செய், எனக்கு ஆட்செய், எனக்கே ஆட்செய் என்றும், ஏதம், ஏதுமின்றிக்கே யிருக்கை, ஏதமொன்றுமின்றிக்கேயிருக்கை என்றும் ஒன்றன்மேல் ஒன்றாகக் கூட்டி விளக்குவர்.[93]

---

90. பெ.தி.10.1.1.
91. பாவை 29.6.
92. நா.தி.13.2.
93. 2.9.4-36; பெரி.தி.4.4.6.

15. அடுக்கு அடைகளைப் பிரித்துத் தனித்தனியே சேர்த்துப் பொருள் காணுதல்.

அ) தம்பால் இறைவன் பண்ணின திருவருளால் தம் சுற்றத்தினரும், "விடியா வெந்நரகத்து என்றும் சேர்தல் மாறினரே" என்கிறார் நம்மாழ்வார். இதில் உலக வாழ்க்கை விடியா வெந்நகரமாகக் குறிக்கப்படுகின்றது. விடியா வெந்நரகம் என்பதில் வரும் அடைமொழிகளை விடியா நரகம் என்றும், வெந்நரகம் என்றும் தனித்தனியே கூட்டி, விடியா நரகம் என்பதற்கு "ஒருநாள் வரையிலே கர்மக்ஷயம் பிறந்தவாறே (பாவம் கழிந்தவாறே) விடியுமதிறே யமன்தண்டல். இது (உலக வாழ்வு) விடியா வெந்நரகமிறே" என்றும், வெந்நரகம் என்பதற்கு, "நரகம் என்று புத்தி பிறக்கும் அதில், தண்மை (இழிவு) தோற்றாத நரகம் இது" என்றும் விளக்கம் செய்துள்ளனர்.[94]

ஆ) நம்மாழ்வார் "முதல்தனி வித்தேயோ முழு மூவுலகு ஆதிக்கு எல்லாம்" என்று பெருமானை விளிக்கிறார். "முதல் தனிவித்து" என்னும் சொற்றொடரில் உள்ள முதல், தனி என்னும் அடைமொழிகளை வித்து என்பதனோடு தனித்தனியே கூட்டி, முதல் வித்து, தனிவித்து, வித்து என்று கொண்டு, "முதல் - நிமித்த காரணம் (வினை முதற் காரணம்), தனி-ஸஹகாரி காரணம் (துணைக் காரணம்), வித்து-உபாதாந காரணம் (முதற்காரணம்)" என்று நுண்பொருள் காட்டுவர்.[95]

16. அடைகளையும் சொற்களையும் வெவ்வேறு வகையில் இயைத்துப் பொருள் கூறுதல்

அ) "வளவேழ் உலகின் முதலாய வானோர் இறையை,
அருவினையேன்
களவேழ் வெண்ணெய் தொடுவுண்ட கள்வா என்பன்"

என்பது திருவாய்மொழி. இப்பகுதிக்கு உரைவரையுமிடத்து 'வளமை' (வள்) என்னும் அடையினை உலகு, வானோர், இறை ஆகியவற்றோடு கூட்டி முறையே "வளவிதான ஏழுலகு" என்றும், "வளவியராய் ஏழுலகுக்கும் முதலாயிருக்கிற வானோர் என்றும், "வளவியனாய் ஏழுலகுக்கும் முதலாய், வானோர் இறையாய் இருக்குமவனை" என்றும் மூவகைப் பொருள் கூறுவர்.[96]

---

94. 2.6.7-36.
95. 10.10.9-36.
96. 1.5.1-36.

ஆ) "மின்னார் மணிமுடி விண்ணவர் தாதையைப்
பாடினால்
தன்னாக வேகொண்டு சன்மம்செய் யாமையும்
கொள்ளுமே"

என்னும் பாசுரத்தில் உள்ள "மின்னார் மணிமுடி" என்பதனை விண்ணவர்க்கு அடையாக்கி, "ஒளிமிக்க மணிகளையுடைய முடியுடை வானவரிறே" என்றும், தாதைக்கு அடையாக்கி, "கவிபாடினார்க்குக் கொடுக்கச் சூடின முடி என்கை" என்றும் இருவகைப் பொருள் எழுதுவர்.[97]

இ) "பெய்யும் பூங்குழல் பேய்முலை உண்ட பிள்ளைத் தோற்றமும்" என்பதில் வரும் 'பெய்யும் பூங்குழல்' என்னும் அடைமொழிகளைப் 'பெய்யும் பூங்குழல் பிள்ளை' என்று பிள்ளையோடு கூட்டி, "திருமஞ்சனம் பண்ணி (நீராட்டி) ஒப்பித்து முலைகொடுத்து வளர்த்தி வைத்த பிள்ளை" என்றும், "பெய்யும் பூங்குழல் பேய்" என்று பேயோடு கூட்டி, "தன்னை அறியவொண்ணாதபடி, இவன் சோம்பாதபடி எப்போதும் ஒப்பித்திருக்கும் யசோதைப் பிராட்டியைப்போலே ஒப்பித்து வந்த பூதநை" என்றும் விளக்கம் தருவர்.[98]

ஈ) "வாயுந் திரையுகளும் கானல் மடநாராய்!" என்று நாரைகளை விளித்துப் பேசுகிறாள் தலைமகள். இதில் வரும் "வாயுந் திரையுகளும்" என்னும் சொற்களை "மடநாராய்" என்பதனோடு கூட்டி, "பெரிய மலை போலே வந்து கிட்டுகிற திரைகள் மேலே தாவிப் போகா நின்றாலும் நினைத்தது கைப்புகும் அளவும் சலியாதே இருக்கும் ஆயிற்று' என்றும், கானல் என்பதனோடு கூட்டி, "வந்து கிட்டுகிற திரை உகளா நின்றுள்ள கானலிலே - நெய்தல் நிலத்திலே" என்றும் உரைப்பர்.[99]

உ) "செழும்பொன்னி வளம்கொழிக்கும் சோழன் சேர்ந்த
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே"

என்பதில் செழும்பொன்னி வளம்கொழிக்கும் என்பதனைத் திருநறையூர்க்கு அடையாகவும் சோழனுக்கு அடையாகவும் கொள்ளலாம் என்பர்.[100] மேற்காட்டப்பட்டுள்ள எடுத்துக் காட்டுகளில் அடைமொழியினையும் சொற்களையும் வெவ்வேறு வகையில் கூட்டிப் பொருள் விளக்கம் செய்தல் காணலாம்.

---

97. 3.9.4-36.
98. 5.10.3-24.
99. 2.1.1-36.

17. சொற்களை இரட்டுறப் பிரித்துப் பொருள் கூறுதல்

சில பாசுரங்களில் சில தொடர்கள் வெவ்வேறு வகையிற் பிரித்தற்கு இடங்கொடுக்கும். அத்தகைய இடங்களில் வெவ்வேறு வகையிற் பிரித்து உரை கூறிச் செல்வர். சான்றாகச் சில இடங் களைக் காணலாம் :

அ) "செய்குந் தாவருந் தீமைஉன் அடியார்க்குத் தீர்த்து" என்னும் தொடரினை, "செய் குந்தா வரும் தீமை" என்றும், "செய்கும் தாவரும் தீமை" என்றும் பிரிப்பர். அவற்றிற்கு முறையே, செய்யப்பட்டுக் குந்தாவாய் - தப்பாவாய் - இருக்கும் தீமை என்றும், செய்யப்பட்டுக் கடக்க அரிதான தீமை என்றும் பொருள் வரைவர்.[101]

ஆ) "ஒரு பேய்ச்சி விடநஞ்ச முலைசுவைத்த மிகுஞானச் சிறுகுழவி" என்பதனை, "ஒரு பேய்ச்சி விடநஞ்ச முலை" என்று பிரித்து, "விட நஞ்சம்" என்பதற்கு, "விடம் என்றும் நஞ்சம் என்றும் மீமிசையாய் (ஒரு பொருட் பன்மொழியாய்) நாட்டில் விடங்கள் எல்லாம் அமுதமாம்படியான விடம்" என்றும், "ஒரு பேய்ச்சிவிட, நஞ்சமுலை சுவைத்த" என்று பிரித்து, "பேய்ச்சி யானவள் உயிரை விடும்படி நஞ்சமுலை சுவைத்த" என்றும் எழுதிச்செல்வர்.[102]

இ) "வினையேனை உனக்கடிமை அறக்கொண்டாய் இனியென்னா ரமுதே" என்பதனை, "இனி என் ஆரமுதே" என்று பிரித்து, "அடிமை கொண்ட பின்பு எனக்கு எல்லையற்ற இன்பமானவனே" என்றும், "இனி என்? ஆரமுதே" என்று பிரித்துப் பாட்டின் முற்பகுதியை யொட்டி, "உலகினர் ஒருபடி யாலும் பேற்றில் கருத்து வைக்காதவர் ஆயினர்; பின்பு, நான் அவர்கள் துன்பம் குறித்துக் கரைந்து உருகுவதற்குப் பயன் என்? அதனை விடலாகாதோ? என்னை முதலில் உன் திருவடிகளில் அழைத்துக் கொண்டருள வேணும்" என்றும் பொருள் உரைப்பர்.[103]

ஈ) "ஆயர் குலத்தினில் தோன்று மணிவிளக்கை" என்னும் திருப்பாவைத் தொடரினை, "ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை" என்றும், "ஆயர் குலத்தினில் தோன்றும் மணிவிளக்கை" என்றும் பிரித்து உரைவகுப்பர் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்.[104]

---

100. பெ.தி. 6.6.2.
101. 2.6.1-24, 36.
102. 4.8.3-36, 24.
103. 4.9.6-36, 24.
104. பாவை 5-6.

உ) "கண்ணன் முற்றம் கலந்தள றாயிற்றே" என்பதில் "கண்ணன் முற்றம்" என்பதனைக் கண்ணன் முற்றம், கண் நல் முற்றம் என்று இருவகையிற் பிரித்து உரை கூறுவர்.[105]

18. இடைச் சொற்களுக்குப் பொருள்நயம் காணுதல்

பன்மை விகுதி, வேற்றுமை உருபு, உம்மை, ஏகாரம் ஆகிய இடைச் சொற்களுக்கும், சுட்டு, அடுக்கு ஆகிய இலக்கண அமைப்புகளுக்கும் கூர்த்த அறிவினால் நுண்பொருள் காட்டுவர்.

1) பன்மை விகுதி

இறைவனை "அயர்வறும் அமரர்கள் அதிபதி" என்கிறது திருவாய்மொழி. இதில் அமரர்கள் என்பதில் 'அர்' என்பதே பன்மையைச் சுட்டி நிற்க, 'கள்' என்பது விகுதிமேல் விகுதியாக வந்துள்ளது. இதற்கு, அவர்கள் தங்களுக்கு எண்ணில்லை என்பதனைச் சொல்வதற்காக வந்தது என்றும், சத்தியலோகம் முடிவாக உள்ள இவ்வுலகங்கள் எல்லாம் காற் பங்காகவும், வீட்டுலகம் முக்காற் பங்காகவும் உள்ள பெருமையினைச் (த்ரி பாத் விபூதியோகத்தை) சொல்வதற்காக வந்தது என்றும் உரைவகுத்துச் செல்வர்.[106] "மன்னுயிர் ஆக்கைகள்" என்பதில் உயிர் என்று ஒருமையும் ஆக்கைகள் என்று பன்மையும் வருவதற்கு, ஓர் ஆத்மாவே வினைக்குத்தக்கவாறு பல உடல்களிலே நலிவுபடும் என்று தோற்றுகைக்காக வந்தது என்பர்.[107] "நம்பினேன் மடவாரையும்" என்பதில் 'மடவார்' என்பதற்கு, மடவார் என்கிற பன்மையாலே ஒன்றில் நிறைவு உண்டாகாமையாலே கண்ட இட மெங்கும் நுழையும்படி சொல்லுகிறது என்பர்.[108] "மின்னிடை மடவார்கள்" என்பதில் 'மடவார்கள்' என்னும் பன்மையாலே தலைமகன் ஒருவர்க்கு உற்றானாய் இராத பரபரப்பைச் சொல்லுகிறாள் என்பர்.[109] இவ்வாறே "இழந்த எம் மாமைத் திறத்துப்போன என் நெஞ்சினாரும் அங்கே ஒழிந்தார்" என்றும், என்னுடை ஆருயிரார் எங்ஙனேகொல் வந்து எய்துவரே" என்றும் வரும் இடங்களில்[110] 'நெஞ்சினார்', 'ஆருயிரார்' என்று உயர்வுப் பன்மையிட்டுக் கூறுவதற்கும் இனிய விளக்கம் தந்துள்ளனர்.

2) வேற்றுமை உருபு

"மாலுக்கு வையம் அளந்த மணாளற்கு
நீலக் கருநிற மேக நியாயற்கு

---

105. பெரி.தி.1.1.1.
106. 1.1.1-9, 24, 36.
107. 1.2.2-9, 24, 36.
108. க.நு.சி.5, நஞ்சீயர்.
109. 6.2.1-24, 36.
110. 7.3.4-36; 7.6.5-24.

> கோலச்செந் தாமரைக் கண்ணற்கு என்கொங்கலர்
> ஏலக் குழலி இழந்தது சங்கே"

என்பதில் ஓரிடத்தில் அவனுக்கு என்று சொல்வதோடு நிறுத்திக் கொள்ளலாம். அவ்வாறன்றி இடந்தோறும் நான்காம் வேற்றுமை கொடுத்துள்ளதற்குத் தனித்தனியே அகப்பட்ட துறைகளை எண்ணுகிறாள் என்பர்.[111]

3) உம்மை

> "நம்பினேன் பிறர் நன்பொருள் தன்னையும்
> நம்பி னேன்மட வாரையும் முன்னெலாம்"

என்பதில் வரும் உம்மைகளுக்கு, "இவ்வும்மைகளாலே இவை ஒவ்வொன்றே போதும் தீங்கு உண்டாவதற்கு; அப்படியிருக்க இவையெல்லாவற்றையும் மேற்கொண்டு போந்தேன்" என்கிறார் என்றும்,[112] "வேதநூல் பிராயம் நூறு மனிசர்தாம் புகுவ ரேலும்" என்பதில் வரும் உம்மைக்கு, "முதலிலே புகுவாரில்லை; கருப்பத்திலே முடிதல், பிறவாநிற்க முடிதல், பிறந்து முடிதல், நாலு நாள் இருந்து முடிதல், பிள்ளைமைப் பருவத்திலே முடிதல், செருக்கித் திரியும் இளமையிலே முடிதல், முதுமையிலே முடிதலாய் இறப்பு முடிவுசெய்ய அரிதாம்படியிறே இருப்பது" என்றும்[113] விளக்கம் தந்து செல்வர்.

4) ஏகாரம்

> "மெய்யர்க்கே மெய்யன் ஆகும் விதியிலா என்னைப் போலப்
> பொய்யர்க்கே பொய்யன் ஆகும் புட்கொடி உடைய கோமான்"

என்னும் திருமாலையில் மெய்யர்க்கே என்பதன் ஏகாரம், "அத்வேஷமாத்ரத்தையே (வெறுப்பின்மையை மட்டுமே) சொல்லுகிறது" என்றும், பொய்யர்க்கே என்பதன் ஏகாரம் "மெய்க்குப் ப்ரஸங்கமில்லாத (பேச்சில்லாத) பொய்யரைச் சொல்கிறது" என்றும் நுட்பங் காட்டுவர்.[114] "நீதி யால்வ ணங்கு கின்ற நீர்மை நின்கண் நின்றதே" என்பதன் ஏகாரம் வேறு பற்றத் தக்கவரில்லை என்பதைக் காட்டுவதாகக் கருதுவர்.[115] "கடிய வினையே முயலும் ஆண்திறல் மீளி மொய்ம்பில் அரக்கன்" என்பதில் ஏகாரம் நல்லொழுக்க வாசனை (பயிற்சி) இல்லாதவன் என்பதனைக் காட்டுவதாகக் குறிப்பர்.[116] "நாகணை மிசை

---

111. 6.6.1-36, 24.
112. க.நு.சி.5, அழகு.
113. தி.மா. 3.
114. தி. மா. 15.
115. தி.ச.வி.9.
116. 7.6.9.24.

நம்பிரான் சரணே சரண்'' என்பதில் ஏகாரம் இறைவனுடைய உபாயநைரபேக்ஷ்யம் (வேறுவழி வேண்டாமையைச்) சொல்கிறது என்பர்.[117]

5) சுட்டுகளுக்குப் பொருட்சிறப்புக் காட்டுதல்

இறைவனுக்குப் பல்லாண்டு பாடும் பெரியாழ்வார் ''படைபோர்புக்கு முழங்கும் அப்பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே'' என்று முன்னிலையில் பெருமான் காட்சிதரப் படர்க்கையில் வைத்து அப்பாஞ்ச சன்னியமும் என்று கூறுகிறார். இவ் அகரப் புறச் சுட்டிற்குப் பிள்ளையை அலங்கரித்த தாய், ''தன் கண்படினும் கண்ணெச்சிலாம்'' என்று பார்க்கக் கூசுமாப்போலே, திருப்பல்லாண்டு பாடுகிற தம்முடைய கண்களையும் செறித்து முகத்தை மாற வைத்துச் சொல்லுகிறார் என்று நயமான விளக்கம் நல்குவர்.[118] சிறிய திருமடலில் தலைமகள், ''இவ்வுடலைத் தண்வாடை, சோரா மறுக்கும்'' என்று இகரச் சுட்டால் குறிப்பிடுகிறாள். இச்சுட்டிற்கு, ''பண்டே தொட்டார் மேலே குற்றமாம்படி விரகத்தால் மெலிந்திருக்கும் உடலை என்னுதல்'' என்று அழகிய விளக்கம் தரப்பட்டுள்ளது.[119] ''நின்று நின்று பல நாள் உய்க்கும் இவ்வுடல் நீங்கி'' என்னும் நம்மாழ்வார் வாக்கில் 'இவ்வுடல்' என்று இகரச்சுட்டு வருவதற்குத் த்ருஷ்டி விஷம் போலே (திட்டிவிடம் என்னும் ஒருவகைப் பாம்பு) பயஸ்தாநம் (பயத்திற்கு இடமாய்) இருக்கிறபடி என்றும், கூற்றங் கண்டாற் போலே பயாவஹமாய் (பயம் எழுதற்குரியதாய்) இருக்கிறபடி என்றும், முறையே இருபத்து நாலாயிரப் படியும் ஈடும் உரை கூறுகின்றன.[120] இவ்வாறே 'அவ்வூர்த் திருநாமம்'[121] என்பதில் வரும் அகரச் சுட்டிற்கும் அரிய விளக்கந் தருவர்.

தான் என்னும் படர்க்கைச் சுட்டு

''தாமோதரன் தாங்கு தடவரைதான்......கோவர்த்தநம்'' என்பதிலும் ''சிசுபாலன் தன்னை அலைவலைமை தவிர்த்த அழகன்'' என்பதிலும் 'தான்' என்பது இடைச்சொற் பொருளில் வந்துள்ளது. அதற்கு நுண்பொருள் காட்டுவர். '' 'தான்' என்று அதின் (மலையின்) கனத்தையும், அதின் மேலுண்டான மரங்களையும், விலங்கு வகைகளையும், அந்நிலத்துக்கடைத்த மனிதரையும் எல்லாம் நினைக்கிறது.''[122] ''இவன் (சிசுபாலன்) செய்து திரிந்த

---

117. 5.10.11-24, 36.
118. தி.பல்.2.
119. சி.மடல் கண்ணி, 56.
120. 3.9.10-24, 36.
121. 6.5.9-24, 36.
122. பெரி.தி. 3.5.7.

கொடுமையை நினைத்திறே 'சிசுபாலன்' என்னாதே 'தன்னை' என்று இவர் ஊன்றி அருளிச்செய்தது."[123]

6) அடுக்குத் தொடர்களுக்குப் பொருள் காட்டுதல்

"உணர்ந்துணர்ந் திழிந்தகன் றுயர்ந்துரு வியந்தஇந் நிலைமை
உணர்ந்துணர்ந் துணரினும் இறைநிலை யுணர்வரி துயிர்காள்"

என்னும் நம்மாழ்வார் கூற்றில், "உணர்ந்து உணர்ந்து" என்று அடுக்கி வருவது கொண்டு, "அசுவுயிருக்கு ஜ்ஞாத்ருத்வம் (அறியுந் தன்மை) வந்தேறியன்று இயல்பான நிலைத்த பண்பு என்கிறது" என்றும்,[124] "கைகளால் ஆரத் தொழுது தொழுதுன்னை" என்னும் பாசுரத்தில், "தொழுது தொழுது" என்று வரும் அடுக்குத் தொடருக்கு, "வீப்ஸையாலே (அடுக்காலே) தொழுகைதானே பயன் என்கை" என்றும்,[125] "கோவல னாய்க்குழல் ஊதி ஊதிக் கன்றுகள் மேய்த்து" என்னும் பெரியாழ்வார் திருமொழியில் "ஊதி ஊதி" என்று அடுக்கி வருவதற்கு "அடுக்கினாலே பலகாலம் ஊதும் என்னும் இடம் சொல்லுகிறது. அஃதாவது கன்றுகள் மேய்க்கைக்கும், கைகழியப் போகாதபடி மறிக்கைக்கும், ஊரை நோக்கி மீளுகைக்கும் உடலாகப் பலகாலும் ஊதுமிறே" என்றும்[126] விள்க்கம் தருவர்.

19. சொற்பொருள் விளக்கம் தருதல்

பாட்டில் சில சொற்களுக்கு அமைந்துள்ள உரை வரையறை போலத் திகழ்கின்றது. அவை இவ்வுரையாசிரியர் தம் அறிவு நுட்பங்காட்டும் சுவைப்பகுதிகளாகும்.[127]

அ) சுருதி - "ஒருத்தரால் பண்ணப்பட்டது அன்றிக்கே என்றுங் கேட்டே வருமது."

ஆ) மறை - "நாத்திகனாய் இருப்பார்க்குத் தன் பொருளை மறைக்கையாலே இத்தை மறை என்கிறது."

இ) சீலம் - "பெரியவன் சிறியவனோடே வந்து கலக்கும் இடத்தில் தன் பெருமையும் இவன் சிறுமையும் தோற்றாதபடி புரையறக் கலக்கையிறே."

---

123. பெரி.தி.4.3.5.
124. 1.3.6-9.
125. 3.8.4-24.
126. பெரி.தி. 3.4.4.
127. (அ) 1.1.7-24: (ஆ) பெரி.தி. 4.10.7; (இ) 10.7.1-36;

ஈ) ஸ்த்ரீத்வமாவது (பெண்மையாவது) - "நாண் மடம் அச்சம் பயிர்ப்பு என்கிற ஆத்மகுண யோகம்" (உயிர்க் குணங்களின் கூட்டம்).

உ) மடப்பம் - "பற்றிற்று விடாதொழிகை; பற்றிற்று விடாதே நின்று அதனையே நினைக்கை."

ஊ) நிறை - "நிறையாகிறது மநஸ்ஸில் (மனத்தில்) ஓடுகிறது ஒருவர்க்கும் தெரியாதபடி இருக்கை."

எ) நிறைவு - "அடக்கம். அதாவது தன் அகவாயிலே ஓடுகிறது பிறர்க்குத் தெரியாதபடி இருக்கும் ஸ்த்ரீத்வம்."

ஏ) நீர்மை - "தாழநின்று பரிமாறுகையும் அதுக்கு அடியான சீலமும்."

ஐ) கள்வம் - "நினைவு ஒன்றும் செயல் ஒன்றுமாய் இருக்கை."

ஒ) கூத்து - "சிலருடைய செயலை வேறே சிலர் அனுகரிக்கை" (பின்பற்றிச் செய்கை).

ஓ) சதிர் - "சிறுமுயற்சியால் பெரும்பயன் பெறுமது."

ஔ) இளிம்பு - "பெருமுயற்சி பண்ணிப் பயன்தருங் காலத்தில் ஒன்றுமின்றிக்கே ஒழிகை."

க) சூது - "பச்யதோஹரத்வம்" (கண்ணெதிரே களவு கொள்ளல்).

ங) பாவம் - "பரிக்ரஹித்த சரீரத்தாலே (எடுத்த உடலாலே) பண்ணின நிஷித்தாநுஷ்டாநம்" (தண்ணிய செயல்).

ச) வள்ளல் - "சிலர்க்கு உபகரித்ததாக (உதவியதாக) இருக்கையன்றிக்கே தன் கார்யம் (செயல்) செய்ததாக உபகரிக்கை."

ஞ) பாலகன் - "தீம்புகள் செய்தாலும் பொடிய ஒண்ணாத பருவம்."

ட) பேதை - "திருநாமம் சொல்லுகைக்குத் தகுதியின்றிக்கே தன்னுடைய நலம் தீங்குகள் தாயினுடைய அறிவு இட்ட வழக்காய் இருக்கும் மிகுந்த குழந்தைத்தனம்."

(ஈ) பெரி.தி. *3.7.6*; (உ) *2.1.1-36*; *4.2.1-24*; (ஊ) *5.3.2-9*; (எ) *4.8.3-36*; (ஏ) *9.6.3-24*; (ஐ) *10.3.4-24*; (ஒ) *5.1.2-36*; (ஓ) *9.1.4-24*; (ஔ) *9.1.4-24*; (க) தி.மா. *16*; (ங) மு.தி. *59*; (ச) பாவை *3-3*; (ஞ) தி.மா. *3*; (ட) தி.மா. *3*;

ண) ஏழை - "நல்லது கண்டால் விடமாட்டாத சபலை."

த) நங்கை - "ரூப குணத்தாலும் (உருவப் பண்பாலும்) ஆத்ம குணத்தாலும் (உயிர்ப் பண்பாலும்) பூர்ணையானவள்" (நிறைந்தவள்).

ந) பிரான் - "நிலா, தென்றல், சந்தனம் பிறர்க்கேயாய் இருக்குமாபோலே தன் படிகளை அடையப் பிறர்க்காக்கி வைக்குமவன்."

ப) தனம் "ஆபத்துக்கு உதவுவதாய், உண்டு என்ன உயிர் நிற்கும்படியாய் எல்லாவற்றையும் நுகரத்தக்கதாய் இருப்பது."

ம) கோட்டை - "கோட்டையாவது புறம்புள்ளாரால் புகுர வொண்ணாததுமாய், உள்ளுள்ளாரால் புறப்படவும் ஒண்ணாதே, புக்க இடமும் புறப்பட்ட இடமும், தெரியாதாய் இருக்குமது இறே."

இவை தவிர (அ) குற்றேவல், (ஆ) வழிபாடு, (இ) தளர்நடை, (ஈ) பிறந்த இடம், (உ) ராஜதானி, (ஊ) இளமான், (எ) குறள், (ஏ) கற்கை, (ஐ) கேட்கை, (ஒ) அப்பூச்சி (ஓ) செங்கீரை, (ஔ) குடக்கூத்து ஆகியவற்றிற்கும்[128] நல்ல விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

20. சொல்லின் பொருட்பிழிவு தருதல் (பதசாரம் கூறுதல்)

சொற்களின் சாரத்தை வடித்துக் கூறுவதே 'பதசாரம்' எனப்படும். கனியின் சாற்றைப் பிழிந்தெடுப்பது போலச் சொற்களின் உயிர்ப்பான பொருளை வடித்துத் தரும் முயற்சியே பதசாரம் கூறுவது. "பதசாரம் கூறுவதில் இவ் ஈட்டின் ஆசிரியருக்கு ஒத்தாரும் மிக்காரும் இத் தமிழ்நாட்டில் இலர்; பிற நாட்டிலும் இலர் என்று கூறலாம்" என்பர்

(ண) பெரி.தி. 3.7.4; (த) தி.ச.வி. 57; (ந) 1.7.6-36; (ப) தி.நெ.தா. 10; (ம) 4.9.8-36.

128. (அ) நா.தி. 13.9; (ஆ) தி.ப. 6. பெரி. (இ) தி.ச.வி. 57; (ஈ) பாவை 5-6; (உ) பெரி.தி. 5.2.1; (ஊ) 6.7.10-24; (எ) 6.9.2-36; (ஏ) 7.5.3-24; (ஐ) 7.5.3-24; (ஒ) பெரி.தி.2.1.1; (ஓ) பெரி.தி. 1.5.1; (ஔ) பெரி.தி. 2.7.6.

பு.ரா. புருஷோத்தம நாயுடு[129] அவர்கள். இது நம்பிள்ளைக்கு மட்டுமன்றிப் பிற வைணவ உரையாசிரியர்களுக்கும் பொருந்தும்.

அ) "கொம்பனார்க்கெல்லாம் கொழுந்தே" என்பதில், 'கொழுந்தே' என்பதற்கு, "பெண்களுக்கு ஒரு குறைவரில் உன்முகமன்றோ வாடுவது?" என்றும்[130] "ஒண்சுடர் ஆயர் கொழுந்தே" என்பதில் 'கொழுந்தே' என்பதற்கு, "வேரிலே வெக்கை தட்டினால் கொழுந்து முற்பட வாடுமாபோலே, இடையருக்கு ஒரு வருத்தம் வரில் முந்துற உன்முகம் வாடும்படி அவர்களுக்குத் தலைவனானவனே" என்றும்[131] உரைவகுப்பர்.

ஆ) திருமழிசைப்பிரான் தம்மை 'நாயினேன்' என்று குறிப்பிடுகிறார். அப்பதத்தின் பிழிவாக, "அநாதிகாலம் திறந்து கிடந்த வாசல் எல்லாம் நுழைந்து, எல்லோராலும் பரிபூதனான (இகழப்பட்ட) நான்; உகந்து தொட்டாலும் எதிர்த்தலைக்கு அசுத்தியை (தூய்மையின்மையை) விளைப்பிக்கும் நிஹீநதயை (தண்மையை) யுடைய நான்" என்று உரை கூறுவர்.[132]

இ) "புலனைந்து மேயும் பொறியைந்து நீங்கி" என்பதில், 'பொறி' என்பதற்கு, "சில பொருள்களை (எலி, பெருச்சாளி முதலியவற்றை) வறை நாற்றத்தை (தீய நாற்றத்தை)க் காட்டி முடிக்குமாபோலே ஓசை முதலிய புலன்களிலே மூட்டி நசிப்பிக்கையாலே இந்திரியங்களைப் 'பொறி' என்கிறது" என்றும்,[133] "பொறியில் வாழ்நரகம்" என்னும் திருமாலையில் வரும் அச்சொற்கு இவ்வாறே, "எல்லா நிலைகளிலும் தப்பாதபடி தன் பக்கலிலே அகப்படுத்திக்கொள்ள வற்றாகையாலே 'பொறி' என்று இந்த்ரியங்களைச் சொல்லுகிறது" என்றும்[134] பதசாரம் கூறுவர். இவ்வாறே "புலன்களைந்து பொறிகளால்",[135] "புலன்களைந்தும் வென்றிலேன் பொறியிலேன்"[136] ஆகியவற்றில் வரும் 'பொறி' என்பதற்கும் உரை செய்யப்பட்டுள்ளது.

ஈ) "வேலின்நேர் தடங்கண்ணி" என்பதற்கு, "போக்தாக்கள் (அனுபவிப்போர்) அளவல்லாதபடி பரப்பையுடைத்தாய்,

---

129. பு.ரா. புருஷோத்தம நாயுடு, திருவாய்மொழி, பகுதி 1 (முதற் பத்து), ஈட்டின் தமிழாக்கம், சென்னை சர்வகலாசாலை, 1957, பக். 46.

130. பாவை 17.3, 6.
131. பெரி.தி. 2.3.3.
132. தி.ச.வி. 46,110.
133. 2.3.4-24.
134. தி.மா. 13.
135. பெரி. தி. 4.4.6.
136. தி.ச.வி. 90.

ஓராளும் ஒரு நோக்கும் நேரான கண்ணை உடையவராய் இருக்கை" என்றும்,[137]

உ) "படமுடை அரவிற் பள்ளி பயின்றவன் பாதங்காண" என்பதில் 'பயின்ற' என்னும் சொல்லுக்குப் ''பயின்ற என்று வீசி வில்லிட்டு எழுப்பிலும் எழுப்ப ஒண்ணாதபடியிறே படுக்கை வாய்ப்பு இருப்பது" என்றும்,[138]

ஊ) "பொன்திகழ் புன்னைமகிழ் புதுமாதவிமீது அணவித் தென்றல் மணங்கமழும் திருவல்லவாழ்" என்பதில் 'அணவி' என்பதற்கு, "ஆழ இழியில் பூவில் வெக்கை தட்டும்" என்று மேலே ஸ்பர்சித்து (தொட்டு), அங்குள்ளதெல்லாம் கொண்டு போந்து கமழாநின்றது" என்றும்[139] சார உரை கூறுவர்.

எ) "எரியணை அரக்கும் மெழுகும் ஒக்கும் இவள்." "ஒரு மகள் தன்னையுடையேன்" ஆகியவற்றிற்குக் கண்டுள்ள உரை இவர்கள் பதசாரம் கூறும் திறனுக்கு நல்ல சான்றுகள் எனலாம். அவ்வுரைப் பகுதிகள் வருமாறு:[140] "அரக்கும் மெழுகும், நெருப்பினுள் புகில் கரிந்துபோம்; கடக்க இருக்கில் வலிக்கும் (வலிதேயிருக்கும்); நெருப்பினைச் சார்ந்து நின்றுழி உருகுமன்றோ? அதுபோல முடிந்து பிழைக்கவும் பெறாதே, ஆற்றியிருக்கவும் பெறாதே நோவுபடும்படி பண்ணுவீரே!" ''ஒருமகள் என்கையாலே ஏகபுத்ரி என்னுமிடமும், 'தன்னை' என்கையாலே அழகு முதலியவற்றால் உண்டான இவளுடைய மதிப்பும், 'உடையேன்' என்கையாலே இவளை மகளாக உடையளாகையால் உண்டான தன்னுடைய ஏற்றமும் சொல்லுகிறது."

21. தொடர் அமைப்புகளுக்கு விளக்கம் கூறுதல்

பாசுரங்களில் அடுத்தடுத்து வரும் சொற்றொடர்களிடையே தொடர்பு காட்டி விளக்கம் வரைதல் இவர்தம் இயல்பு.

அ) "ஆயர் கொழுந்தாய் அவரால் புடையுண்ணும்
மாயப் பிரானையென் மாணிக்கச் சோதியை"

என்னும் பாடற்பகுதியில், "ஆயர் கொழுந்தாய் அவரால் புடையுண்ணும் மாயப்பிரான்" என்பது முன்னுள்ள தொடர். ''என் மாணிக்கச் சோதியை" என்பது பின்னுள்ள தொடர். இவற்றில் பின்னுள்ள தொடருக்கு "ஆச்ரிதர் (அடியவர்) கட்டியடிக்க அடிக்க, களங்கமறக் கடையுண்ட மாணிக்கம்போலே திருமேனி

137. 6.2.4-36.
138. 10.2.8-24.
139. 5.9.2.-36.
140. 2.4.3-36; பெரி.தி.3.8.4.

புகர்பெற்று வருகிறபடி'' என்று முன்னுள்ள தொடரையொட்டி, உரைகூறுதல் காணலாம்.[141]

ஆ) ''திசைக ளெல்லாந் திருவடியால்
தாயோன், எல்லா எவ்வுயிர்க்கும்
தாயோன் தானோர் உருவனே''

இதில், ''திசைகளெல்லாம் திருவடியால் தாயோன்'' என்றும், ''எல்லா எவ்வுயிர்க்கும் தாயோன்'' என்றும் இருதொடர்கள் உள்ளன. இதில் முதல் தொடரை அடுத்து, ''எல்லா எவ்வுயிர்க்கும் தாயோன்'' என்பது அமைந்திருத்தற்கு, ''குணாகுண நிருபணம் பண்ணாதே (நன்மை தீமை பாராதே) எல்லார் தலையிலும் திருவடிகளைக் கொடுவந்து வைக்கைக்கு நிபந்தம் என்என்னில் (காரணம் என்என்னில்) எல்லா எவ்வுயிர்க்குந் தாயோன்-ஸகல ப்ராணிகளுக்கும் (உயிர்களுக்கும்) தாய்போலே பரிவனாகை'' என்று விளக்கம் கூறுவர்.[142]

இ) ''மலர்க்கண்ணன் விண்ணோர் பெருமான்தனை'' என்பதில், 'மலர்க்கண்ணன்' என்பதற்கு ''இயல்பான மகிழ்ச்சி யுடையவன் என்னுமிடம் திருக்கண்கள் தானே கோள்சொல்லிக் கொடுக்கும்'' என்றும், அதனைச் சார்ந்து, ''விண்ணோர் பெருமானை'' என்று வருவதற்கு, ''இக்கண்ணழகுக்குத் தோற்று 'ஜிதம்' என்பாரை ஒரு நாடாக உடையவனை'' என்றும் தொடர் அமைப்பினையொட்டி விளக்குவர்.[143]

ஈ) ''அசுரரைச் செற்ற,
மாவியம் புள்வல்ல மாதவன் கோவிந்தன் வேங்கடம்சேர்
தூவியம் பேடையன் னாள்கண்க ளாய துணைமலரே''

என்னும் திருவிருத்தத் தொடரில் முதலில், ''மாவியம்புள் வல்ல'' என்பதற்குப் பெரிய திருவடியைக் கருத்தறிந்து நடத்த வல்லவன் என்று கூறி, அதனைத் தொடர்ந்து, 'மாதவன்' என்று வருவதற்கு, ''கருடவாகனனான ஏற்றத்துக்கு மேலே திருமகள் கேள்வன் என்னும் ஏற்றத்தை யுடையவன்'' என்றும், அதனைத் தொடர்ந்து, 'கோவிந்தன்' என்று வருவதற்கு, ''அவளோட்டைக் கலவியாலே அடியார்க்கு எளியனாய், அந்த எளிமைதான் பரத்வம் (மேன்மை) என்னும்படி திருமலையிலே வந்து எளியனானவன்'' என்றும் தொடர் அமைப்பினையொட்டி விளக்கம் செய்வர்.[144]

---

141. 1.7.3-36.
142. 1.5.3-39.
143. 4.5.3-36.
144. தி.வி. 67.

22. நுட்பவுரை, கருத்துரை, விளக்கவுரைகள் வரைதல்

நுட்பவுரை

பாசுரங்களின் அமைப்பினைக் கூர்ந்து நோக்கி அதற்கு நுட்ப விளக்கம் தருவர்.

அ) "மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்
செவ்வடி செவ்வி திருக்காப்பு"

என்பது திருப்பல்லாண்டு முதற்பாட்டு. இது முடிக்கும் வினைச் சொல்லின்றிக் குறைந்து கிடத்தற்கு மூன்று வகையாக அமைதி கூறப்படுகின்றது. (1) தாழ்ந்தவர்களை, "காப்பு உண்டாயிடுக" என்றும், ஒத்தவரையும் அளவான உயர்வுடையவர்களையும் "காப்பு உண்டாக வேணும்" என்றும் சொல்லல் வேண்டும். இறைவனுக்கும் தமக்குமிடையே உள்ள எல்லையற்ற உயர்வு தாழ்வுகளை நோக்கும்போது முடித்தற்குத் தகுந்த சொல்லின்மையால் குறைந்து கிடக்கிறது. (2) இறைவனை வாழ்த்தத் தொடங்கினவர்க்கு வாழ்த்தினோம் என்று மீளவொண்ணாத தீரா வேட்கையினைக் குறிக்கும் வகையில் முற்றுப்பெறாமல் உள்ளது. (3) எல்லாப் பாட்டுக்கும் இதுதான் முகவுரை போலே உள்ளது.[145]

ஆ) "வாமனன், என்மரகத வண்ணன், தாமரைக்
கண்ணினன்
காமனைப் பயந்தாய்! என்றென்றுன் கழல்பாடி
யேபணிந்து"

என்னும் இதில் வாமனன் முதலான படர்க்கைக்கு நடுவே, "காமனைப் பயந்தாய்" என்னும் முன்னிலை விளியும் விரவி வருவதற்கு, "அநுஸந்தாநத்திலே (நினைப்பிலே) ஒரு வைசத்யம் (தெளிவு) பிறந்தவாறே முன்னிலை போலே தோற்றும், அப்படியுஞ் சொல்லிக் கூப்பிடுவர்; அதுக்குமேலே சில பரிமாற்றங் களை ஆசைப்பட்டு அது கிடையாமையாலே படர்க்கையாகவுஞ் சொல்லிக் கூப்பிடுவர்; இவை இரண்டுக்கும் அடி அபிநிவேசம் (அன்பின் பெருக்கு)" என்பர்.[146]

இ) 'எம்மா வீடு' திருவாய்மொழியில் முதல் மூன்று பாசுரங் களில், 'அம்மா' என்றும் 'நின்கழல்' என்றும் பெருமாளை முன்னிலையில் குறிக்கும் ஆழ்வார் நான்காம் பாட்டில் 'தனக்கே யாக எனைக் கொள்ளுமீதே" என்று படர்க்கையில் குறிக்கிறார். இதற்குப் பேற்றினை அறுதியிடும் காலத்தில் திருமுகத்தைப்

145. தி.பல். 1. 146. 2.7.8.24, 36.

பார்க்கில் உறுதி குலையும் என்று கவிழ்ந்திருந்து கையோலை செய்து கொடுக்கிறார் என்பர்.[147]

ஈ) 'வேய்மருதோள்' திருவாய்மொழியில் 'அடிச்சியோம்', 'தொழுத்தையோம்' என்று ஆய்ச்சியர் பலர் பேசுவது போலவும், 'ஆடுமென்னாருயிர்' 'என்சொற்கொள்' என்று ஒருத்தி பேசுவது போலவும் வருகின்றன. இதற்கு "ஸபை (அவை) போலே எல்லாரும் திரண்டு வார்த்தை சொன்னால் செவிப்படாது" என்று பார்த்து, அவனுக்கு மறுக்க ஒண்ணாதபடி நப்பின்னைப் பிராட்டியுடைய தரமுடையாள் ஒருத்தி எல்லார் சார்பாகவும் பேசுவதாகக் கூறிப் பன்மைகளும் ஒருமைகளும் சேரக் கிடத்தற்குக் காரணம் காட்டுவர்.[148]

உ) "கிடக்கில் தொட்டில் கிழிய உதைத்திடும்
எடுத்துக் கொள்ளில் மருங்கை இறுத்திடும்
ஒடுக்கிப் புல்கில் உதரத்தே பாய்ந்திடும்
மிடுக்கி லாமையால் நான்மெலிந் தேன்நங்காய்!"

என்பதில், "மிடுக்கிலாமையால் நான் மெலிந்தேன்" என்பதற்குக் குழந்தையின் செயல்களைத் தாங்கும் ஆற்றலில்லாமையால் நான் மெலிந்தேன் என்று எல்லாரும் காணக்கூடிய பொருளைக் கூறாமல், இறைவனுக்குப் பல்லாண்டு பாடும் (மங்களாசாசனபரரான) பெரியாழ்வார் உளப்பாங்கிற்குச் சேர, "இச்செயல்களை எல்லாம் பொறுக்கவல்ல ஆற்றல் பிள்ளைக்குப் போதாது என்று போர (மிகவும்) இளைத்தேன் என்கிறாள்" என்று உரைவகுப்பர் மணவாள மாமுனிகள்.[149]

கருத்துரை

ஒரு தொடர் அல்லது ஒரு பாட்டின் விளக்கத்திற்குப் பின் கருத்தினைத் தெளிவு கருதிச் சுருக்கிக் கூறுவர். சான்றாகக் கீழ் வருவனவற்றைக் காட்டலாம்.

அ) "துண்டவெண் பிறையன் துயர் தீர்த்தவன்" என்பதற்குப் பொருள்விரித்து இறுதியில், "இத்தால் ஒரு தேவதையை ஆபரணமாக உடையனாகையால் வந்த மதிப்பும், போகப்ரதாநன் என்னுமிடமும், முமுக்ஷுவல்லன் (வீடு பேற்றில் விருப்பம் உடையவன் அல்லன்) என்னுமிடமும் சொல்லு கிறது."[150]

---

147. 2.9.4-36.
148. 10.3.11-24, 36.
149. பெரி.தி. 1.2.4.
150. அம.6, அழகு.

ஆ) ''அறிவொன்றும் இல்லாத ஆய்க்குலத்து'' என்பதில், ''அறிவொன்றும் இல்லாத'' என்பதனை விளக்கிக் கூறி, முடிவில், ''ஆக இத்தால்-கர்மஜ்ஞான பக்திகளில்லை என்கை''[151] என்பர்.

இ) பாட்டின் இறுதியில் கருத்துரை கூறிச் செல்வதற்கு,

"நாளுநின் றடுநம பழமையங் கொடுவினை யுடனே
மாளும்ஓர் குறைவிலை மனனக மலமறக் கழுவி
நாளுநந் திருவுடை யடிகள்தம் நலங்கழல் வணங்கி
மாளுமோர் இடத்திலும் வணக்கொடு மாள்வது வலமே."

என்னும் பாட்டின் இறுதியில், ''இத்தால் ஜன்மப்ரப்ருதி (பிறப்பே தொடங்கி) ஆச்ரயித்தாலும் (சார்ந்தாலும்) பலமில்லை பகவத் வ்யதிரிக்தர்பக்கல் (பெருமானுக்குப் புறப்பானவர் பக்கல்); ஆச்ர யணத்திலே உபக்ரமித்து (தொடங்கி) முடிந்தாலும் பலம் தப்பாது பகவத் விஷயத்தில் என்கை'' என்று எழுதியிருத்தலைச் சான்றாகக் கொள்ளலாம்.[152]

விளக்கவுரை

மூவகை மனிதர், மூவகைத் தொண்டர் பற்றிய அரிய விளக்கம் திருப்பாவை, திருப்பல்லாண்டு உரைகளில் காணப் படுகின்றது.

அ) பிறரைத் துன்புறுத்தித் தன் வயிற்றை வளர்க்க வேணும் என்று இருக்குமவன் அதமன் (கடையவன்); பிறரும் வாழவேணும் நானும் வாழவேணும் என்று இருக்குமவன் மத்யமன் (இடைப் பட்டவன்); தன்னை அழிய மாறியாகிலும் பிறர் வாழவேணும் என்னுமவன் உத்தமன் (உயர்ந்தவன்).[153]

ஆ) தலைவன் ஏவிய செயலைக் குறையச் செய்பவன் தாழ்ந்தவன்; அதனைக் குறையாமல் நிறைவேற்றுபவன் இடைப் பட்டவன்; அதற்கு மாறுபாடில்லாத செயல்களையும் ஆராய்ந்து செய்து முடிப்பவன் உயர்ந்தவன்.[154]

இ) சில இடங்களில் சில கருத்துகளை விளக்கிச் செல்வர். "அமைவுடை நாரணன் மாயையை அறிபவர் யாரே?" என்கிறார் நம்மாழ்வார். நாரணன் மாயையை ஒருவரும் அறியமாட்டார் என்பதனை, ''நித்தியசூரிகள் இறையனுபவத்தில் தம்மை மறந்திருப்பவர்களாதலின் அறிய மாட்டார்கள்; உலக மக்கள்

151. பாவை, 28-3.
152. 1.3.8-36.
153. பாவை, 3-3.
154. தி.பல். 9.

இறைநம்பிக்கை இல்லாதவர்களாகையாலே அறியமாட்டார்கள்; பிரமன் முதலியோர் தத்தமது அறிவாலே அறிய இருக்கிறவர்களாகையாலே அறியமாட்டார்கள்; மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள் 'எத்திறம்' என்று மயங்கிக் கிடப்பவர்களாதலின் அறியமாட்டார்கள்; தனக்குத் தானே முற்றறிவினனாகிய இறைவனும் 'என்னுடைய பிறப்பும் செயலும் மேலானவை' என்று கூறித் தானும் அறியமாட்டாதவனாய் இருத்தலைக் கூறுகிறான். ஆகையாலே ஒருவர்க்கும் நிலமல்ல என்கிறார்'' என்று விளக்குதல் காணலாம்.[155]

ஈ) ''திங்கள் மும்மாரி பெய்ய'' என்பதற்கு மாதத்திற்கு மூன்று மழை பெய்ய என்பது நேர்ப்பொருள். அம்மூன்று மழையும் எப்படிப் பெய்யவேண்டும் என்பதனை, ஒன்பது நாள் வெயிலும் ஒருநாள் மழையுமாய்ச் செல்லவேண்டும் என்று விளக்குவர்.

23. தடைவிடை தந்து விளக்குதல்

கருத்துகளைத் தெளிவுபடுத்தும் முறைகளுள் ஒன்று தடைவிடை கூறல். இவ்வுத்தியினால் முரண்பாடு போலத் தோற்றுபவை முரணின்றி இருத்தல் காட்டப்படுகிறது. இவ்வாறு அமைந்த பகுதிகள் மிகப் பல. சில சான்றுகள் வருமாறு:

அ) ''கள்வா! எம்மையும் ஏழுல கும்நின்
உள்ளே தோற்றிய இறைவ! என்று,
வெள்ளேறன் நான்முகன் இந்திரன் வானவர்
புள்ளூர்தி கழல் பணிந்தேத் துவரே''

என்னும் திருவாய்மொழியில் சிவன், நான்முகன், இந்திரன் முதலியோர் பெருமானை வணங்குவது குறிக்கப்படுகின்றது. இதில் சிவன் 'வெள்ளேறன்' என்று அவனது வாகனத்தோடு சுட்டப் பெறுகிறான். இப்படி வாகனத்தோடு வருவதாகக் கூறுவது பொருந்துமா என்னும் ஐயம் தோன்றும். இதனை, ''கடவுளை வணங்குவோர் வாகனத்தோடு வருதல் பொருந்துமா?'' என்று வினாவாக்கி, ''அரசசேவை செய்வார், தத்தம் அடையாளங்களோடு சட்டையும் பிரம்புமாய்ச் சேவிக்குமாறு போன்று இவர்களும் தத்தம் அடையாளங்களோடே வந்து சேவிக்கின்றனர்'' என்று உலகியல் காட்டியும், ''இரவியர் மணிநெடுந் தேரோடும்'' என்னும் தொண்டரடிப்

155. 1.3.3-36. 156. பாவை, 3-3.

பொடியாழ்வார் பாசுரத்தைச் சான்றாகக் காட்டியும் விடை கூறிக் களைகிறார்.[157]

> "நமனுமுற் கலனும் பேச
> நரகில்நின் றார்கள் கேட்க,
> நரகமே சுவர்க்கம் ஆகும்
> நாமங்கள் உடைய நம்பி"

இதற்குத் தீவினையின் பயனை நுகரும் சமயத்தில் பேச்சு வாக்கில் திருநாமம் செவிப்பட அதனால் நரகமே சொர்க்கமாக மாறிற்று என்பது பொருள். அவ்வாறெனில், தீவினை செய்யும் வேளையில் பேச்சுவாக்கில் (ப்ராஸங்கிகமாக) ஒருவர் திருநாமம் சொல்லுவார் இல்லையோ, அப்போது கேளாது ஒழிவானென்? என்னும் வினா எழும். இத்தடையினை எழுப்பி, அப்போது சிற்றின்ப ஈடுபாட்டால் வந்த செருக்கினால் செவிப்படாது; இப்போது துக்க அனுபவம் பண்ணுகிற அளவில், "ஆரொரு நல்வார்த்தை சொல்வார்" என்னும் நிலையாகையாலே செவிப் படும் என்று விடை நல்குவர்.[158]

இ) திருப்பாணாழ்வார் திருவரங்கநாதனை, "அடியார்க்கு என்னையாட் படுத்த விமலன்" என்று போற்றுகிறார். இப்படிப் போற்றும்போது அவர் உலோக சாரங்க முனிவரின் தோளின்மீது இருந்தார் என்பது மரபு. அடியவரான முனிவரின் தோளில் இருப்பவர் தம்மை அடியார்க்கு ஆட்பட்டவராகக் கூறுவது எப்படிப் பொருந்தும் என்னும் ஐயம் எழுகிறது. இதனைத் திருத்துழாய் பெருமானது திருமுடியிலே இருந்ததெனினும் அடிமைத்தன்மை குலையாதன்றோ? என்று எடுத்துக்காட்டுத் தந்து அதுபோல என்று கூறிக் களைவர்.[159]

இவ்வாறு தடையினை வெளிப்படுத்தி விடை கூறுவதோடு தடைகளை உட்கொண்டும் விளக்கம் எழுதிச் செல்கின்றனர். படிப்பவர் ஆழ்ந்து நோக்கின், அவ்வுரைப் பகுதிகள் அவ்விடங் களில் தோன்றக் கூடிய ஐயத்திற்கு விடையாக இருத்தல் புலனாகும்.

அ) "கல்லும் கனைகடலும் வைகுந்த வானாடும்
புல்லென் றொழிந்தனகொல் ஏபாவம்-வெல்ல
நெடியான் நிறங்கரியான் உள்புகுந்து நீங்கான்
அடியேன துள்ளத் தகம்"

---

157. 2.2.10-24, 36.
158. தி.மா. 12.
159. அம. 1, அழகு.

இதன் உரையில், "'திருமலையைக் கல்' என்றும், திருவனந்தாழ்வானை, 'பாம்பு' என்றும், தன்னை, 'மாணியாய் மண்ணளந்தாய்' என்றும் சொல்லாம்படி உறவுடைமை இருக்கிற படி" என்பது காணப்படுகிறது. இது திருமலையைக் கல்லென்று சொல்லலாமோ என்பதற்கு விடையாக அமைந்திருத்தல் கூர்ந்து நோக்கின் விளங்கும். அப்படிச் சொல்ல உறவுடைமையே அடி என்கிறார்.[160]

ஆ) "வளர்த்ததனால் பயன்பெற்றேன் வருக என்று
மடக்கிளியைக் கைகூப்பி வணங்கி னாளே"

என்பதில் 'வருக' என்பதற்கு, "வருக என்று முன்கை முப்பதின் காதமாய் இருக்கிறபடி" என்று உரை கூறப்பட்டுள்ளது. அருகில் இருக்கும் கிளியை வருக என்று அழைத்தல் எதற்காக என்னும் ஐயம் உண்டாகும். இதனைக் கருத்தில்கொண்டு, "முன்கை முப்பதின் காதமாய் இருக்கிறபடி" என்று உரை வகுக்கப்பட்டுள்ளது. அவளுக்கு முன் கை யில் உள்ள கிளி தொலைதூரத்தில் உள்ளதாகத் தோற்றுகிறது என்பது கருத்து.[161]

இ) "நற்பால் அயோத்தியில் வாழும் சாரசரம் முற்றவும்,
நற்பாலுக் குய்த்தனன் நான்முக னார்பெற்ற நாட்டுளே"

என்று நம்மாழ்வார் அயோத்தியில் வாழுவதைப் பேறாகக் கூறுகிறார். இதனை நோக்கும்போது, பரமபதத்தில் வாழுவதன்றோ பேறு; ஆனால் ஆழ்வார் இதனைப் பேறாகக் கூறுகிறாரே என்னும் தடை எழும். இதனைக் கருத்திற்கொண்டு, நிலையாக அடைதற்குரிய பொருளன்றோ இங்கு எம்பொழுதும் காட்சி தருகிறது என்று உரை வரைந்துள்ளார் நம்பிள்ளை.[162]

24. உரைக்கு உரை தருதல்

சில இடங்களில் முதலில் பாடற்குப் பொருள் கூறித் தாம் கூறிய அப்பொருளினையே தெளிவுகருதி மேலும் விளக்குவர்.

அ) "எழுதிசைமுகன் படைத்த நல்லுலகம்" என்னும் தொடருக்கு, "எழுச்சியையுடைய திசைமுகன் படைத்த உலகம்" என்று முற்படப் பொருள் கூறி, "எழுச்சியாவது பதினான்கு உலகிற்கும் ஆட்சியாளனாகிய அளவுடைமை" என்று தாம் கூறிய எழுச்சியினை மேலும் விளக்குவர்.[163]

---

160. பெ.திருவந். 68.
161. திரு.நெ.தா. 14.
162. 7.5.1-36.
163. 1.3.9.36.

ஆ) ''கீழ்மையினால் அங்கோர் கீழ்மகன் இட்ட முழவின்கீழ்
நாழ்மை பலசொல்லி நீர் அணங் காடும்பொய்
காண்கிலேன்"

என்பதில் கீழ்மை என்பதற்குத் தண்மை என்று பொருள் வரைந்து, பின்னர், ''இவர்களுக்குத் தண்மையாவது ரஜோ தமோ குணங்களாலே மறைக்கப்பட்டவராதல்'' என்பர்.[164]

இ) ''நிற்பதுமோர் வெற்பகத்து'' என்பதற்கு, ''அத்விதீயமான திருமலையிலே நிற்பதுவும்'' என்று உரை கூறி, ''திருமலைக்கு அத்விதீயத்வம் 'கானகமும் வானரமும் வேடுமுடை வேங்கடம்' என்கிறபடியே தாழ்ந்தார்க்கு முகங்கொடுக்கும் நீர்மைக்கு எல்லை நிலமாயிருக்கை'' என்று மேலும் விளக்கம் தருவர்.[165]

ஈ) ''பெரிய வாய கண்கள் என்னைப் பேதைமை செய் தனவே'' என்னும் அமலனாதிபிரான் உரையில், ''கீழ்ப் பாட்டிலே என்னைச் சிந்தை கவர்ந்ததுவே'' என்று அறிவு விளங்கும் வழியைக் கவர்ந்தபடியைச் சொல்லிற்று; இங்கு அறிவைக் கவர்ந்தபடியைச் சொல்லிற்று என்று எழுதி, ''அறிவைக் கவர்தலாவது அழகிலே அலமருகை'' என்று மேலும் விளக்குவர்.[166]

25. பாட்டின் பொருளைத் தெளிவு தோன்ற வகுத்துக் காட்டுதல்

பாட்டுக் கருத்தினைத் தெளிவுக்காக வகுத்துக்காட்டுவது ஒருமுறை. தங்கட்கு முக்கியமாகத் தோன்றுமிடங்களில் பாட்டின் பொருளை வகுத்துரைப்பர்.

அ) ''நாடீர் நாள்தோறும் வாடாமலர் கொண்டு
பாடீர் அவன்நாமம் வீடே பெறலாமே''

என்பதனை, ''நாடீரென்கையாலே நெஞ்சின் தொழில் சொல்லிற்று; வாடா மலர் கொண்டென்கையாலே உடலால் செய்வதைச் சொல்லிற்று, பாடீர் என்கையாலே வாயால் செய்வதைச் சொல்லிற்று'' என்று மனம், வாக்கு, காயம் ஆகிய முத்திற வழிபாட்டைத் தெரிவிக்கிறது என்று உரைப்பர்.[167]

ஆ) ''சீலமில்லாச் சிறியன் ஏலும்
செய்வினை யோபெரிதால்

164. 4.6.9-24, 36.
165. தி.ச.வி. 65.
166. அம. 8, அழகு.
167. 10.5.5-36.

ஞாலம் உண்டாய் ஞான மூர்த்தீ
நாராய ணாஎன்றென்று
காலந் தோறும் யான்இருந்து
கைதலை பூசலிட்டால்
கோல மேனி காண வாராய்
கூவியும் கொள்ளாயே''

என்னும் பாட்டில் சமய ஐம்பொருள்கள் (அர்த்த பஞ்சகம்) போதிந்திருத்தலை, ''நாராயணன் என் கையாலே இறைநிலை சொல்லிற்று; சிறியன் என்கையாலே ப்ரத்யகாத்ம ஸ்வரூபம் (உயிர்நிலை) சொல்லிற்று; வாராய் என்கையாலே உபாயம் (ஆறு) சொல்லிற்று; காண என்கையாலே பலம் (பேறு) சொல்லிற்று; செய்வினையோ பெரிது என்கையாலே விரோதி (தடை) சொல்லிற்று; ஆக, அர்த்த பஞ்சகமும் (ஐந்து பொருள் களும்) இதிலே சொல்லிற்று'' என்பர்.[168] பெரும்பாலும் சமய உண்மைகளை இவ்வாறு பல இடங்களில் வகுத்துக் காட்டிச் செல்வர்.[169]

26. பாட்டில் வரும் உவமை உருவகங்களை விளக்குதல்

ஆழ்வார்கள் காட்டிச் செல்லும் உவமைகளை விளக்கியும், பொருளோடு பொருத்திக் காட்டியும் செல்வதோடு, உவமத் தொகைகளையும் உருவகங்களையும் விளக்கிச் செல்வர்.

அ) "உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்" என்பது திருவாய்மொழியில் வரும் ஓர் உவமை. உடலில் உயிர் போலே இறைவன் எங்கும் மறைந்து நிறைந்திருக்கிறான் என்பது இதன் பொருள். இவ்வுவமையினை, "இச்சரீரத்துக்கு ஆத்மா தாரகனாய் (வாழ்முதலாய்) நியாமகனாய் (இயக்குபவனாய்) சேஷியாய் (தலைவனாய்) இருக்குமாபோலே இச்சரீர ஆத்மாக் களுக்கு இறைவன் தாரகனாய் நியாமகனாய் சேஷியாய் இருக் கிறான் என்று உயிருக்கும் இறைவனுக்குமிடையே உள்ள பொதுத்தன்மையினை வெளிப்படுத்தி விளக்குவர்.[170]

ஆ) "மாநீர் வெள்ளி மலைதன்மேல் வண்கார் நீல
முகில்போலத்
தூநீர்க் கடலுள் துயில்வானே"

168. 4.7.1-36.

169. 1.10.11-36; 5.6.1-36; 4.7.1-36; 6.9.3-36; 6.9.9-36; தி.பல். 1,2; தி.மா. 38; தி.வி. 1.

170. 1.1.7-36.

இதில் உவமையில் "வெள்ளி மலை" என்று வருவதற்கேற்பத் திருவனந்தாழ்வான் என்று பொருளில் வருவித்துக்கொள்ள வேண்டும் என்று குறிப்புத் தருவர்.[171]

இ) "பொன்னைக் கொண்டு உரைகல்மீதே
நிறம்எழ உரைத்தாப்போல்
உன்னைக் கொண்டென் நாவகம்பால்
மாற்றின்று உரைத்துக் கொண்டேன்"

என்னும் உவமையினை, "பொன் என்கிறது ஈச்வரனை; கல் என்கிறது நாக்கை" என்று பொருளொடு பொருத்திக் காட்டுவர்.[172]

ஈ) "பின்னைநெடும் பணைத்தோள்"[173], "காம்பணை தோள் பின்னை",[174] "வேய்மரு தோளிணை",[175] ஆகிய இடங்களில் நப்பின்னை தோள்கள் மூங்கிலோடு உவமிக்கப்படுகின்றன. இவ்விடங்களில் பசுமை, சுற்றுடைமை, செவ்வை ஆகிய பொதுப் பண்புகளால் மூங்கில் தோள்களுக்கு உவமையாயிற்று என்பர். "செந்தாமரைக் கண்",[176] "தாமரைக் கண்ணன்",[177] "தாமரைக் கண்ணதோர் அஞ்சன நீலமே",[178] என்னும் உவமத் தொகைகளை விரித்துக் காட்டி, விகாஸம் (மலர்ச்சி), செவ்வி, குளிர்த்தி, நாற்றம் ஆகிய தன்மைகளாலே தாமரை கண்ணுக்கு ஒப்பாக உள்ளதாகக் காட்டுவர்.

உ) திருமங்கை மன்னன், 'என்னானாய்' என்று இறைவனை யானையாக உருவகப்படுத்திக் கூறுகிறார். இவ்வுருவகத்தினை, "ஆனையானது ஒருநாள் கண்டோம் என்று இருக்க ஒண்ணாத படி நாளும் ஆசைப்படத் தக்கதாய் இருக்கையும், பெரிய செருக்கையுடைத்தாய் இருக்கையும், தான் நினைத்தபோது கைக்கு எட்டினாரை எடுத்துக் கழுத்திலே வைத்துக்கொள்ளக் கட்வதாய் இருக்கையும், தாந்தாமே ஏறவேண்டி இருப்பார்க்குப் படிந்து கொடுக்கக் கடவதாய் இருக்கையும் தான் உகவாதாரைக் கீண்டு பொகட்டால் ஆராய்ச்சியின்றிக்கே இருக்கையும், தன்னைக் கட்டக் கயிறு தானே கொடுக்கக் கடவதுமாயிறே இருப்பது. அப்படியே நாளும் விரும்பத் தக்கதாய் இருக்கிற வடிவழகும், செருக்கால்

---

171. 8.5.4-24, 36.
172. பெரி.தி 5.4.5.
173. 1.7.8-36.
174. 2.5.7-36.
175. 10.3.1-24, 36.
176. 6.5.5-24.
177. 8.2.2-24.
178. 3.8.8-36.

வந்த ஒப்புயர்வற்ற தன்மையும், ஒரு சம்சாரி தன்பக்கல் தன்னை ஒப்படைத்தமை காரணமாகத் தன்னைக் கொடுத்தால் கேட்பாரின்றிக்கே இருக்கும்படியான தனக்குத் தானே தலைவனாய் இருக்கும் தன்மையும் (ஸ்வாதந்தர்யம்) பிறவழிகளை மேற்கொண்டவர்களுக்கு நேதாவாய் (நடத்திக் கொடுப்பவனாய்) இருக்கிற நீர்மையும் அடியார்தம் பகைவர்களை அழியச் செய்தால் கேட்பார் இல்லாதபடியான பகை அழிக்கும் பண்பும் இன்பத்திற்குக் கருவியான பக்தியைத் தானே கொடுக்க கடவதான விருப்பூட்டும் தன்மையும் உடையவன் இறைவன் என்று விளக்குவர்.[179] இதனைப் போலவே திருநாமத்திற்கும் அன்னத்திற்கும் (உணவுக்கும்) இடையே உள்ள பொதுத் தன்மையும் சிறப்பாகக் காட்டப்படுகின்றது.[180]

27. உரையாசிரியர்கள் தரும் உவமைகள்

திவ்வியப் பிரபந்த உரைகாரர்கள் கல்விப் பெருமையும் பட்டறிவும் மிக்கோராவர். இவர்கள் உரைகளில் பயிலும் உவமைகளே இதனை மெய்ப்பிக்கும். இவர்கள் பலதுறை அறிவும் உவமைகளால் புலனாகின்றது. பின்வரும் துறைகளிலிருந்து இவர்கள் பற்பல உவமைகளை உருவாக்கிக் கொண்டுள்ளனர்.

(1) அரச வாழ்க்கை, (2) பயிர்த்தொழில், (3) வெள்ளம், (4) பஞ்சம், (5) வழிப்பறி, (6) ஆறு, குளம் முதலான நீர்நிலைகள், (7) தாய்-சேய் உறவு, (8) குழந்தை, சிறுவர் இயல்பு, (9) மருத்துவம், (10) மக்கள் வாழ்க்கை, (11) ஆசாரியார்கள் பற்றிய செய்திகள், (12) இறைவனைப் பற்றிய செய்திகள், (13) இராமாயண, பாரத பாகவத மாந்தர்கள், நிகழ்ச்சிகள், (14) சமய உண்மைகள், (15) இயற்கை.

இவையேயன்றி, இல்பொருள் உவமைகளாகவும், எடுத்துக்காட்டு உவமையிலோ, ஒட்டணியிலோ அடங்கக் கூடியனவாகவும் பல செய்திகள் இடம் பெற்றுள்ளன (பின்னிணைப்புப் பார்க்க.)

சோழப் பேரரசு மேலோங்கிச் சோழ மன்னர்கள் செல்வாக்கோடு திகழ்ந்த காலத்தில் இவ்வுரைகள் எழுந்தமையால், அரசியல் வாழ்வு பற்றிய உவமைகள் மிகுந்து காணப்படுகின்றன. இராமானுசர் தம் நெடிய வாழ்வில் எட்டுச் சோழ மன்னர்களின் ஆட்சியினைக் கண்டுள்ளாரென்பது கருதத் தக்கது.

---

179. தி.நே.தா. 10. 180. தி.நெ.தா. 13.

தமிழகத்தின் முதன்மைத் தொழிலாக உழவு அமைந்தமையால் அது பற்றிய உவமைகளும் பலவாக இடம் பெற்றுள்ளன. வெள்ளமும் பஞ்சமும் அலைக்கழித்த காலத்தின் தாக்கம் உவமைகளில் வெளிப்படுகின்றது. இவர்கள் தாய்மையைப் போற்றுபவர்களாகத் திகழ்ந்தமையால் தாய்மையின் உயர்வு காட்டும் பல உவமைகளை அமைத்தனர். நூலறிவு, பக்தி யுணர்வு, கூர்த்த நோக்கம் ஆகியவை முறையே இதிகாசச் செய்திகள், சமய உண்மைகள், மக்கள் வாழ்க்கைமுறை ஆகியவற்றிலிருந்து உவமைகளை உருவாக்கக் காரணங்க ளாயின.

28. பல்வகைப் பொருள் கூறுதல்

ஒரு பாசுரத்திற்கு எத்தனை வகைப் பொருள் சொல்ல முடியுமோ அத்தனை வகைப் பொருளையும் சொல்லித் தீர்த்துவிடவேண்டும் என்னும் தணியா வேட்கையுடையவர்கள் இவ்வுரையாசிரியர்கள். சான்றாகச் சிலவற்றைக் காட்டலாம்:

அ) "பண்கள் தலைக்கொள்ளப் பாடிப் பறந்துங் குனித்துழ லாதார்

மண்கொள் உலகிற் பிறப்பார் வல்வினை மோத மலைந்தே".

என்கிறார் நம்மாழ்வார். இதில், "பண்கள் தலைக்கொள்ளப் பாடி" என்பதற்கு ஐந்து பொருள்கள் கூறப்படுகின்றன.[181]

1) பண்கள், "என்னைக்கொள், என்னைக்கொள்" என்று வந்து தலைக்காட்டப் பாடி (தலைக்கொள்ள - முகங் காட்ட.)

2) பண்சுமக்கப் பாடி (தலைக்கொள்ள - சுமக்க, மிக.)

3) பண்கள் தலைமை பெறும்படி பாடி (தலைக்கொள்ள - தலைமைபெற.)

4) தலையான பண்ணிலே பாடி (தலைக்கொள் பண்கள் - மேலான பண்கள்.)

5) மகிழ்ச்சியாலே அடைவுகெட்டு, ஒருபண்ணிலே எல்லாப் பண்ணும் வந்து மெய்க்காட்டு இடும்படி பாடி (தலைக்கொள்ள - மெய்க்காட்ட, கலக்க.)

---

181. 3.5.2-36.

ஆ) "நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறும் நினைப் பரியன" என்னும் திருவாய்மொழித் தொடரை ஏழுவகையாக விளக்கும் சிறப்பு எண்ணி மகிழ்தற்குரியது.[182]

1) இராமாயணத்தை யொட்டி, இலங்கை முகப்பிலே கையும் வில்லுமாய் நின்ற நிலை அல்லது வாலி வதம் பண்ணிக் கையும் வில்லுமாய் நின்ற நிலை, பர்ணசாலையில் எழுந்தருளி யிருந்த இருப்பு, கடற்கரையில் ஒரு கடலோடு ஒருகடல் பொறாமை கொண்டு கிடந்தாற்போலே கிடந்த கிடை என்றும்,

2) கிருட்டினாவதாரத்தை யொட்டி, கோவர்த்தன மலையை எடுத்து நின்ற நிலை, திருக்குரவைக்கு முற்சாமமாகப் பெண்களோடே கழகம் (ஓலக்கம்) இருந்த இருப்பு, ஓரொருத்தர் மடியிலே சாய்ந்துகிடந்த கிடை என்றும்,

3) ஆழ்வார் பாசுரங்களை யொட்டி, திருமலையிலே நின்றபடியும், பரமபதத்திலே இருந்தபடியும், திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளினபடியும் என்றும்,

4) தம் திருவுள்ளத்தில் நின்றபடியும், இருந்தபடியும், கிடந்தபடியும் என்றும்,

5) திருவரங்கத்திலே நின்றபடியும், திருப்பாடகத்திலே இருந்தபடியும், திருவெஃகாவிலே கிடந்தபடியும் என்றும்,

6) எம்பெருமானார் தந்த விளக்கமாகத் தொட்டிற் பழுவைப் பிடித்துக்கொண்டு நிற்கும்படியும், ஊன்றிநிற்க மாட்டாமை விழுந்திருக்கும்படியும், அதுதான் பொறுக்க மாட்டாமை சாய்ந்து கிடக்கும்படியும் என்றும்,

7) வெண்ணெய் களவு கண்ட நிகழ்ச்சியினைத் திருமங்கை யாழ்வார் சிறிய திருமடலில் சித்திரித்தலையொட்டி, போரார் வேற்கண் மடவாள் போந்தனையும் பொய்யுறங்கி, அவள் போனவாறே எழுந்திருந்து நின்றவாறும், அடியோசைப் பட்டவாறே வந்திருந்தபடியும், நிழலாடினவாறே முன்கிடந்த தானத்தே ஒராதவன்போல் கிடந்தவாறும் என்றும் விளக்குவர்.

இ) 'போதரிக்கண்ணி' என்னும் திருப்பாவைத் தொடரினை[183] (1) பூவும் மானும் போன்ற கண், (2) பூவில் படிந்த வண்டு போன்ற கண், (3) பூவோடு சீறுபாறு என்ற கண், (4) உலாவுகின்ற மான்போலே இருக்கிற கண் என்று 'அரி' என்பதனை மானாகவும், வண்டாகவும், சீறுதலாக

---

182. 5.10.6-36. 183. பாவை. 13-6.

வும் கொண்டும், 'போது' என்பதனை பூவாகவும், உலாவுதலாக வும் கொண்டும் நான்கு வகையாகப் பொருள் விரித்துரைப்பர்.

இவ்வாறே திருவாய்மொழித் தொடர்களான "அறியும் செந்தீயைத் தழுவி அச்சுதன் என்னும் மெய்வேவாள்,"[184] "என்னாகி ஒழிந்தான்,"[185] "உரைகொள் இன்மொழியாளை,"[186] "மெய்யமர் காதல்,"[187] "கோளிழைத் தாமரை,"[188] "கொண்ட பெண்டிர்,"[189] ஆகியவற்றிற்கும், திருநெடுந்தாண்டகத் தொடர் களான "அலம்புரிந்த நெடுந்தடக்கை,"[190] "சிலையே துணை யாக,"[191] "இருவராய் வந்தார்"[192] ஆகியவற்றிற்கும் பல்வேறு பொருள்கள் கூறப்பட்டுள்ளன. பட்டர் "இருவராய் வந்தார்" என்பதற்கு இருபது வகை அரிய விளக்கங்கள் தந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

29. மதிப்பீடு செய்தல்

திறனாய்வுப் போக்கில் சில பாசுரங்களையும் பதிகங்களை யும் மதிப்பிட்டுக் கூறுவர்.

அ) "உயர்வற உயர்நலம்" என்னும் முதற்பாசுரம் திருவாய்மொழிக்கெல்லாம் சுருக்கமாகவும்[193] "பொருமா நீள்படை" என்னும் பாட்டு அத் திருவாய்மொழியின் சுருக்கமாக வும்,[194] "எனக்கே ஆட்செய்" என்றும் பாட்டு "எம்மா வீட்டில்" எம்மா வீடாய் அமைந்திருப்பதாகவும்,[195] "அகலகில்லேன்" என்னும் பாசுரம் வேதாந்தங்களுக்குக் கிழங்காய் ஆசாரியர்கள் எல்லாரும் ஒக்க ஆதரித்துச் செல்லும் ஒரு சிறந்த பொருளைக் கூறுவதாகவும்,[196] "இன்னுயிர்" திருவாய்மொழியின் ஒன்பதாம் பாட்டாகிய "எழ நண்ணி" என்பது மிகுந்த துன்பமுடையதாக வும்,[197] "தாம் உளரே",[198] "நாவாயில் உண்டே"[199] என்னும் இருபாசுரங்களும் திருநாமம் சொல்லுகைக்குத் தகுதியான நாக்குப் படைத்தவர் சொல்லுவதற்குரியனவாகவும்,[200] "மேம்

184. 4.4.3-36.
185. 5.1.2-36.
186. 6.5.3-36.
187. 6.8.2-36.
188. 7.7.8-36, 24.
189. 9.1.1-36.
190. தி.நெ.தா. 6.
191. தி.நெ.தா. 21 பட்டர்.
192. தி.நெ.தா. 21 பட்டர்.
193. 1.0.0-24.
194. 1.10.1-24.
195. 2.9.4-36.
196. 6.10.10-36.
197. 9.5.11-9, 24, 36.
198. இ.தி. 21.
199. மு.தி. 95.
200. தி.மா. 12.

பொருள் போகவிட்டு'' என்னும் திருமாலைப் பாட்டு மகாபாரதத் துக்குச் சரம சுலோகம் போலே அந்நூலுக்குச் சிறப்பான தாகவும்,[201] ''முரியும் வெண்டிரை'' என்னும் பெரிய திருமொழிப் பாடல் அரிய பாடலாகவும்[202] குறிக்கப் பெறுகின்றன.

ஆ) சில திருவாய்மொழிகளில், அவற்றில் உள்ள பாசுரங் களுள் ஒன்றனை முதன்மையான பாடலாக (நிதானப் பாடலாக)க் குறித்துச் செல்வர்.

திருவாய்மொழி	நிதானப் பாட்டு
''அஞ் சிறைய''	''என்பிழை கோப்பது''[203]
''செய்ய தாமரை''	''தஞ்சமாகிய தந்தை''[204]
''பொன்னுல காளீரோ''	''என்மின்னு நூல் மார்வன்''[205]
''மாயா! வாமனனே!''	''பாசங்கள் நீக்கி''[206]

இ) இவையேயன்றிச் சிலரோடு சில பாக்கள் தொடர்பு படுத்திக் கூறப்படுகின்றன. ''உந்து மத களிற்றன்'' என்னும் திருப்பாவைப் பாட்டு எம்பெருமானார் சிறப்பாக உகந்த பாட்டு என்பர்.[207] ''வழிநின்று நின்னைத் தொழுவார்'' என்னும் பாட்டு எம்பார் விடியலில் சொல்லும் பாட்டாகக் குறிக்கப் பெறு கின்றது.[208]

''மின்னிடை மடவார்'' திருவாய்மொழி நம்மாழ்வார் இறைவனிடத்து நின்ற ஊற்றமெல்லாம் தோற்ற வன்மை யுடைத்தாய் இருக்குமென்றும், ''காதில் கடிப்பு'' திருமங்கை யாழ்வார்தம் மென்மையெல்லாம் தோற்ற மென்மையுடைய தாக இருப்பதாகவும், ''ஏலமலர்ப் பூங்குழல்'' குலசேகரருடைய ராஜ குலமெல்லாம் தோற்ற இருப்பதாகவும் கூறுவர்.[209] திருக்கோட்டியூர் குறித்துப் பெரியாழ்வாரும் திருமங்கை யாழ்வாரும் மட்டுமே ஒவ்வொரு திருமொழிகள் அருளிச் செய் துள்ளனர் என்பது பெரியாழ்வார் திருமொழியில் காணப்படும் குறிப்பு.[210]

---

201. தி.மா. 38.
202. பெ.மடல், கண்ணி 125, 126.
203. 1.4.7-24,36.
204. 3.6.9-24, 36.
205. 6 8.6-36.
206. 7.8.5-36.
207. பாவை. 18-3.
208. மு.தி. 76.
209. பெரு.தி. 6.0.
210. பெரி.தி. 4.4.0.

"அறுக்கும் வினை" திருவாய்மொழி ஆளவந்தார் உகந்த திருவாய்மொழி எனவும்,[211] "தூவிரிய மலருழக்கி" திருமொழி நஞ்சீயர் கேட்க விழைந்த திருமொழி எனவும்,[212] குறிக்கப் பட்டுள்ளன. "கங்குலும் பகலும்" திருவாய்மொழி "நம்முடைய கோயில் திருவாய்மொழி" என்று போற்றப்பட்டுள்ளது.[213]

திருப்பாவை, திருமாலை ஆகியவற்றின் முன்னுரைகளிலும் திருநெடுந்தாண்டகம் முதற்பாட்டிலும் இருடிகளினும் ஆழ்வார்கள் மேம்பட்டிருத்தலும், ஒவ்வோர் ஆழ்வார்களின் தனிச் சிறப்பும் மதிப்பீடு செய்யப்படுகின்றன. சான்றாகத் திருநெடுந் தாண்டகத்தில் வருங் குறிப்புக் கீழே தரப்படுகின்றது:

"சுகர் முதலானோர்களும் முதலாழ்வார்களும் பரத்வத்திலே (திருநாட்டு நிலையிலே) ஊன்றி இருப்பார்கள்; சனகர் முதலானோர்களும் திருமழிசைப்பிரானும் உள்ளுளே இருக்கும் நிலை (அந்தராத்மதையிலே) ஊன்றி இருப்பார்கள்; வால்மீகி முதலானோர்களும் குலசேகரப் பெருமாளும் இராமாவதாரத்திலே ஊன்றி இருப்பார்கள்; பராசரர் முதலானோர்களும், நம்மாழ்வாரும், பெரியாழ்வாரும், ஆண்டாளும் கிருஷ்ணாவதாரத்திலே ஊன்றி இருப்பார்கள்; நாரதர் முதலானோர்களும் ஸ்ரீதொண்டரடிப்பொடி யாழ்வாரும், திருப்பாணாழ்வாரும் கோயிலிலே (திருவரங்கத்திலே) ஊன்றி இருப்பார்கள்; ஸ்ரீசௌநக பகவானும் இவரும் (திருமங்கையாழ்வாரும்) அர்ச்சாவதாரத்திலே ஊன்றி இருப்பார்கள்."[214]

ஒரே கருத்தினை விளக்கும் இரு திருவாய்மொழிகளிடையே உள்ள நுட்பமான வேறுபாட்டை விளக்குவர். "அஞ்சிறைய மடநாராய்", "வாயுந் திரையுகளும்" ஆகிய இரண்டும் பிரிந்து வாடும் தலைமகளது நிலையினைச் சித்திரிப்பன. "உயர்வற உயர்நலம்", "திண்ணன் வீடு" என்னும் இரு திருவாய்மொழிகளும் இறைவனின் மேன்மையைப் (பரத்வம்) பேசுவன. "அந்தாமத் தன்பு"ம் "முடிச் சோதியா"யும் இறைவனது அழகினைப் பாடுவன. இப்பதிகங்களிடையில் நிலவும் நுட்பமான வேறுபாடுகளை ஆராய்ந்து விளக்குவர்.

சான்றாக "உயர்வற உயர்நலம்" "திண்ணன் வீடு" ஆகியவற்றிடையே நிலவும் நுட்ப வேறுபாடுகளாகக் காட்டுவன வற்றைக் காணலாம்: (1) முன்னதில் ஆழ்வார் தமது அனுபவத்

---

211. 9.8.0-24, 36.
212. பெ.தி. 3.6.0.
213. பெ.தி. 2.7.0.
214. தி.நெ.தா. 1.

தைக் கூறுகிறார்; பின்னதில் பிறர்க்கு அறிவுரை கூறுகிறார். (2) முன்னது உடன்பாட்டு முகத்தாலும் பின்னது உடன்பாடு எதிர்மறை ஆகிய இருவகையாலும் அமைந்துள்ளன. (3) முன்னது மறைமுடிவு சாயையாலே மேன்மை கூறுகிறது; பின்னது இதிகாச புராணங்கள் வழி மேன்மை கூறுகிறது. (4) முன்னது இறைவனின் ஐவகைவடிவத்தில் பரத்துவத்தில் மேன்மை பேசுகிறது; பின்னது அவதாரத்தில் மேன்மை பேசுகிறது.[215]

30. மேற்கோள் காட்டுதல்

இவ்வுரைகாரர்கள் பிற தமிழ் நூல்களையும் அறிந்திருந்தனர். குறுந்தொகை, திருக்குறள், நாலடியார், பழமொழிநானூறு முத்தொள்ளாயிரம், கம்பராமாயணம், தமிழ் இலக்கண நூல்கள், நிகண்டு ஆகியவற்றிலிருந்து மேற்கோள் காட்டியுள்ளனர். ''பல்லுக்குத் தோற்ற பனிமுல்லை'' என்னும் யாப்பருங்கல விருத்தி மேற்கோளும்,

"கடலன்ன காமத்த ராகிலும் மாதர்
மடலூரார் மற்றையார் மேல்"

என்னும் தொல்காப்பிய அகத்திணை இயல் உரை மேற்கோளும் இவ்வுரைகளில் காணப்படுகின்றன.

"அலர் எழில் ஆருயிர்'' என்னும் குறளில் "அலர்எழில்" என்பதற்கு மாறாக "அலர் எழ" என்னும் பாடம் காணப் படுகிறது.[216] முப்பாலில் இன்பத்துப்பால் பாக்களே மிகுதியும் மேற்கோள்களாக ஆளப்பட்டுள்ளன. "செந்தீத் தின்று தேக்கிடு கின்றது" என்னும் கம்பர் தொடர்,[217] ''செந்தீயுண்டு தேக்கிட்டதே" என்று சிறிது மாற்றி யாளப்பட்டுள்ளது.[218] "கருணையங் கடல் துயின்றனன் கருங்கடல் நோக்கி" என்னும் தொடர் ஓரிடத்தில் மாறாமலும்[219] பிறிதோரிடத்தில் "கருணை யென்னும் கடல் கருங்கடலை நோக்கிக் கிடந்ததே என்றானிறே" என்று உரைநடைப்படுத்தப்பட்டும்[220] வழங்கப்பட்டுள்ளது. ''பித்தர் சொன்னவும்'' என்னும் கம்பர் அவையடக்கப் பாடல்

---

215. 2.2.0-36.
216. 5.3.1-24, 36; 6.7.9-36; 7.3.10-36.
217. கம்பராமாயணம், சுந்தரகாண்டம், (வை. மு. கோ. பதிப்பு) பா. 46.
218. 2.1.3-36.
219. 6.9.3-36.
220. 5.10.6-36.

''சொல்லிற்றும்'' என்னும் பாட வேறுபாட்டோடு ஆளப்பட்டுள்ளது.[221]

தமிழ் இலக்கணங்களைத் தேவையான இடங்களில் சுட்டிச் செல்கின்றனர். நீட்டல் விகாரம்,[222] குறுக்கல் விகாரம்[223] என்று இலக்கணத்திற்குரிய தனிச்சொற்களால் சுட்டாமல், "நீட்டிக் கிடக்கிறது." "குறைத்துக் கிடக்கிறது" என்று தெரிவித்துச் செல்வர். இடவாகு பெயரைக் குறிப்பிடும்போது தவறாமல், "கட்டில் கத்துகிறது என்பது போல" (மஞ்சா: க்ரோசந்தி போல) என்று எழுதிச் செல்வது காணலாம்.[224]

எழுத்து, சொல் இலக்கணங்களோடு பொருளிலக்கணச் செய்திகளையும் விரவி எழுதியுள்ளனர். ஐவகை நிலங்களையும் அவற்றிற்குரிய ஒழுக்கங்களையும் சொல்வதோடு ஒவ்வொரு நிலத்திற்குரிய பூதத்தினையும் சுட்டிச் செல்வது புதுமையாக உள்ளது. ''கூடுமிடம் குறிஞ்சி; அதுக்கு பூதம் ஆகாசம்; பிரியுமிடம் பாலை; அதுக்குப் பூதம் தேஜஸ்ஸு (நெருப்பு); ஊடலுக்கு ஸ்த்தாநம் (இடம்) மருதம்; அதுக்கு பூதம் வாயு; பிரிந்தார் இரங்குமிடம் நெய்தல்; அதுக்கு பூதம் ஜலம்'' என்பது ஈடு.[225] இஃது அரிய செய்தியாகும்.

(அ) பூத்தரு புணர்ச்சி, புனல்தரு புணர்ச்சி, களிறுதரு புணர்ச்சி ஆகியனவும்,[226] (ஆ) இயற்கைப் புணர்ச்சி, (இ) மடல் ஆகியனவும்[227] விளக்கப்பட்டுள்ளன. ''போருக்கும் வெற்றிக்கும் தகுதியாகச் சூடும் தும்பை வாகை முதலான அழகிய மாலையை உடைய அர்ச்சுனனுக்கு'' என்று வரும் உரைப்பகுதியில் புறப்பொருளிலக்கணம் காணப்படுகின்றது.[228]

யாப்பைப் பற்றியும் அணியைப் பற்றியும் வழங்கிவந்த இலக்கண மரபுகளை இவர்கள் அறிந்தவர்கள் என்பது

221. பாவை, 28-6.
222. 1.7.6-24, 36 'விராய்' என்பதன் குறிப்பு; 1.10.3-24,36 'அராவு' என்பதன் குறிப்பு.
223. 10.2.2-36 'மன்று' என்பதன் குறிபபு.
224. 2.9.9-24, 36; 5.1.9-24, 36; 2.9.9-24, 36; 3.1.2-36; 5.7.5-24; 6.4.8.36; 10.9.2-24.
225. 1.4.0-36.
226. 4.4.6-36, 24; 5.3.8-36.
227. 5.3.9-24; தி.நெ.தா. 11.
228. பெரி.தி. 1.8.6.

புலனாகின்றது. "எழுத்தசை சீர் பந்தமடி தொடை பாவினம்" என்று கவிக்கு அவயவமாய் இருப்பன சிலவுண்டு''[229] என்றும், "வண்ணமாகிறது தூங்கலோசை என்றும், வண்ணவோசை என்றும் சொல்லக் கடவது''[230] என்றும் வருவனவற்றாலும், ''இருள்விரி நீலக் கருநாயிறு சுடர்கால்வது போல்'' என்பதனையும்[231] "கார்வண்ணத் திருமேனி கண்ணும் வாயும் கைத்தலமும் அடியிணையும் கமல வண்ணம்'' என்பதனையும்[232] அபூதோபமை (இல்பொருளுவமை) என்றும், "முற்றுவமை என்றொரு இலக்கணம் இருக்கிறபடி உவமை புக்கவிடத்தே பொருளும் வரக்கடவது. 'தாவி வைபங்கொண்ட தடந் தாமரைகள்;' என்னா நின்றதிறே'' என்றும்[233] வருவனவற்றாலும் புலனாகின்றது.

திவாகரம் முதலிய நிகண்டுகளில் இவர்களுக்கு இருந்த பயிற்சியும் உரைகளால் அறியப்படுகின்றது. ''தழை தொங்கல் கலாபம் பிச்சம் குளிரி பீலிக் குஞ்சமாகும்'' என்று தழையென்றும், தொங்கலென்றும், கலாபமென்றும், பிச்சமென்றும், குளிரி யென்றும், பீலிக் குடைக்குப் பேராகச் சொன்னானிறே திவாகரன் என்பது மணவாள மாமுனிகள் உரைப்பகுதி.[234] ஆனால் திவாகரத்தில்,

"கலாபம் தழையே தொங்கல் என்றிவை
கலாபப் பீலியில் கட்டிய கவிகை''

''தொங்கல் கவிகை சத்திரம் பிச்சம்
இங்கிவை வெண்குடைப் பெயர வாகும்''[235]

என்றே வருகின்றது.

"உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே'' என்னும் திவாகர நிகண்டுப்பகுதி[236] சில இடங்களில் மேற்கோள்ாகச் சுட்டப் படுகின்றது.[237] "மாதர் காதல்...விருப்பின் பொருட்கட்டுரையே'' என்பது திவாகரம்.[238] ''மாதர் காதல்'' என்பது தொல் காப்பியம்.[239] இவற்றையொட்டி, "மாதரென்று காதலாய்

229. 1.2.1-36.
230. 5.1.11-24.
231. தி.வி. 17.
232. தி.நெ.தா. 18.
233. 5.8.11-36.
234. பெரி.தி. 3.4.1.
235. சேந்தன், திவாகரம், கழகம், பக். 158.
236. மேற்படி நூல், பக். 37.
237. 6.3.8-36; தி.வி. 11; 6.9.7-36; 10.9.2-36.
238. சேந்தன், திவாகரம், கழகம், பக். 177.
239. தொல். உயிரியியல், 32.

சிநேகத்தை உடையவள் என்னுதல்''[240] என்று ஈட்டில் உரை அமைந்துள்ளது. "தடவும் கயவும் நளியும் பெருமை''[241] "கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள''[242] என்னும் தொல்காப்பிய நூற்பாக்கள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.[243] "கண்கால் புறம்அகம்''[244] என்னும் நிகண்டுப்பகுதி அவ்வாறே மணவாள மாமுனிகள் உரையில் எடுத்தாளப்பட்டுள்ளது.[245] சில நிகண்டுப் பகுதிகள் சில சொல் மாற்றங்களோடு இடம் பெற்றுள்ளன; சில மேற்கோள்கள் எந்நூலில் உள்ளன என்று அறிய முடியவில்லை. (பின்னிணைப்புப் பார்க்க) சில நூற்பாக்கள் திவாகரத்தில் காணப்படவில்லை. ஒன்று அவர்கள் அவற்றை மாற்றி எழுதி இருக்க வேண்டும்; அல்லது வேறு பிற நிகண்டுகளைப் பின்பற்றி எழுதி இருக்கவேண்டும்.

31. மேற்கோள் விளக்கங்கள்

வடமொழி மேற்கோள்

இவ்வுரையாசிரியர்கள் தாம் காட்டும் மேற்கோள்களில் பெரும்பாலானவற்றை விரித்துக் கூறி விளக்குகின்றனர். இம் முறையில் உபநிடதம், இதிகாசம், ஆசாரியர்களின் நூல்கள் ஆகியன விளக்கம் செய்யப்படுகின்றன. இதற்குச் சான்றாக, மேற்கோளாக இடம்பெற்றுள்ள இரண்டு இராமாயணப் பாவினையும் அதற்கு எழுதப்பட்டுள்ள விளக்கவுரையினையும் காணலாம்:

தலைமகள் மதியைப் பார்த்து, "நீ இந்நாள் நைவாய் எம்மே போல்'' என்றும் "மாழாந்து தேம்புகின்றாய்'' என்றும் கூறு கின்றாள். இதன் விளக்கத்தில் சீதை நைந்திருந்த நிலையைச் சொல்லும் இராமாயணச் செய்யுள் மேற்கோளாக எடுத்து விரித்துரைக்கப்படுகின்றன.

"ஸபங்காம் அநலங்காராம் விபத்மாம் இவ பத்மிநீம்
வ்ரீளிதாம் துக்கஸந்தப்தாம் பரிம்லாநாம் தபஸ்விநீம்''

என்பது ஒரு சுலோகம். புழுதி படிந்தவளாய் அலங்காரமில்லாதவளாய், தாமரையில்லாத தாமரைப் பொய்கை போன்றவளாய்

240. 4.2.6-36.
241. தொல். உரியியல், 24.
242. தொல். உரியியல், 76.
243. 8.9.9-24; பெரி.தி. 4.8.3.
244. சேந்தன், திவாகரம், கழகம், பக். 121.
245. பெரி.தி. 1.8.1.

நாணமடைந்தவளாய், துக்கத்தால் எரியுண்டு வாட்டமடைந்த வளாய்த் தவம்புரிபவளைக்'' கண்டான் அனுமன் என்பதே இதன் பொருள்.

அவ்யக்தலேகாம்இவ சந்த்ரலேகாம்இவ
பரம்ஸு ப்ரதிக்தாம்இவ ஹேமலேகாம்
க்ஷதப்ரரூடாம்இவ பாணலேகாம்இவ வாயு
ப்ரபக்நாம்இவ மேகலேகாம்

என்பது பிறிதொரு சுலோகம். இதன் பொருள், ''ஒளியில்லாமல் இருக்கும் சந்திர கலையைப் போன்றவளும், தூசியினால் அழுக் குடையதாகப் பண்ணப்பட்ட பொற்சித்திரம் போன்றவளும், காயம்பட்ட இடத்தில் தசை வளர்ந்து மேற்புறம் மூடிப்போன அம்பு பாய்ந்து கீறிய வழியைப் போன்றவளும், பெருங் காற்றால் கலைக்கப்பட்ட மேக வரிசை போன்றவளுமான சீதையைக் கண்டான்'' (அனுமன்) என்பதாகும்.

இவ்விரு சுலோகங்களும் அசோகவனத்தில் இருந்த சீதையின் நிலையினைச் சித்திரிப்பனவாகும். இவற்றைக் கீழ்வருமாறு விளக்குகிறது ஈடு:

''ஸபங்காம் - பூமியில் நின்றும் தோற்றினபோது போலே யிருந்தாள். அநலங்காராம் - அத்தையழித்து ஒப்பிக்குமவர் அஸந்நிதியாலே (இல்லாமையாலே) ஒப்பனை யழிந்தாள். விபத்மாமிவ பத்மிநீம் - பெருமாள் வந்தாலும் இவ் வாச்ரயத்தை (உருவத்தை) யுண்டாக்க வொண்ணாது என்னும்படி முதலிலே தாமரை குடிபோன பொய்கை போலே யிருந்தாள். அவ்யக்தலே காமிவ சந்த்ரலேகாம்-போய்த் தேய்ந்தற்றபடிக்கும் வைவர்ணயத் துக்கும் (நிற வேறுபாட்டிற்கும்) நிதர்சநமாக (காட்டாக)ச் சொல்லுகிறது. பரம்ஸுப்ரதிக்தாமிவ ஹேமலேகாம்-நற்சரக்குக்கு வந்த அழுக்கு என்று தோற்ற இருந்தாள். க்ஷதப்ரரூடாமிவ ஹேமலேகாம்- அம்புவாய் உள்ளே கிடக்கப் புறம்பே ஸமாதாநம் பண்ணினாப் போலே (பேணினாற் போலே) 'அகவாயில் இழவு பெரிது' என்று தோற்ற இருந்தாள். வாயுப்ரபக்நாமிவ மேகலேகாம்—பெருங்காற்றாலே சிதற அடியுண்ட மேகசகலம் போலே யிருந்தாள்.''[246]

வைணவ சமயச் சார்பான வடநூல்களேயன்றி, மாலதி மாதவ நாடகம்,[247] ரகுவம்சம்,[248] மேக சந்தேசம்,[249]

---

246. 2.1.6-36.
247. 4.7.8-36; தி:வி. 15.
248. 4.7.5-36.
249. 8.5.8.

சாகுந்தலம்[250] ஆகியவற்றிலிருந்தும் ஓரிரு மேற்கோள்கள் எடுக்கப்பட்டுள்ளன.

திவ்வியப் பிரபந்த மேற்கோள்

ஒரு பாசுர விளக்கத்தில் மேற்கோளாக மற்றொரு பாசுரத்தையோ, பாசுரப் பகுதியையோ காட்டி அதனை விளக்கிச் செல்வர். சான்றாக 'இன்கவி பாடும்' திருவாய் மொழிப் பாசுர வுரையில்,

“பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று
இருகண் இளமூங்கில் வாங்கி—அருகிருந்த
தேன்கலந்து நீட்டும் திருவேங்கடம் கண்டீர்
வான்கலந்த வண்ணன் வரை”

என்னும் இரண்டாந் திருவந்தாதிப் பாடல் முழுமையாக எடுக்கப் பெற்று விரித்துரைக்கப்படுகின்றது.

“பெருகு மித்யாதி - ஆற்றுப் பெருக்குப் போலே பெருகா நின்றுள்ள மதத்தையுடைய ஆனையானது; மாப்பிடிக்கு முன்னின்று - மதித்து முன்னடி தோற்றாதே வருகிற இத்தையும் தனக்குக் கையாளாக்கிக் கொள்ளவற்றாயாயிற்று. இதினுடைய ச்லாக்யதை (உயர்வு) யிருக்கிறபடி; முன்னின்று - “நான் இங்குத்தைக்குச் செய்ய வேண்டுவதென்?” என்று ஏவிற்றுச் செய்கைக்கு அவஸர ப்ரதீக்ஷமாய் (காலம் பார்த்திருப்பதாய்) நிற்குமாயிற்று. இருகணிள மூங்கில் வாங்கி - இரண்டு கண்ணேறி அதுக்குத்தக்க முற்றினவுமின்றிக்கேயிருக்கிற மூங்கிற் குருத்தை வாங்கித்தான் மதித்து முன்னடி தோற்றாதே திரியச் செய்தேயும் பிடியின் பக்கலுண்டான ஆதராதிசயத்தாலே (அன்பின் மிகுதியாலே) அவதாநத்தோடே (குறிக்கோளோடே) ஸாதரமாக (அன்பாக) வாங்கி, அருகிருந்த தேன்கலந்து - திருமஞ்சனத்துக்கு உபகரணங்கள் (வேண்டுவன) சமைந்திருக்குமாப் போலே, அருகே மலை முழைஞ்சுகளிலே நிரம்பியிருக்கிற தேன்களிலே வாங்கித் தோய்த்து மூங்கிற் குருத்தையும் த்ரவத்ரவ்யத்தோபாதியாக (நீர்ப்பண்டம் போன்றதாக) அருளிச்செய்கிறார். நீட்டும் - இதுதான் இரந்து கொடா நிற்க, அத்தை “உனக்கு வேண்டுவார்க்குக் கொடாய்' என்று நிற்குமாயிற்று. வான்கலந்த இத்யாதி - மூங்கிற் குருத்தும் தேனும் கலந்தாப்போலே யாயிற்று, மேகமும் அவன் திருநிறமுங் கலந்திருக்கும்படி.”[251] இதற்கு

250. க.நு.சி.0-நப்பிள்ளை. 251. 7.9.6-36.

இரண்டாந் திருவந்தாதி உரையில் பெரியவாச்சான் பிள்ளை கூறும் விளக்கம் இதே போன்றதெனினும் சொல்நடை வேறாகச் சில மாற்றங்களோடு இருத்தல் கருதத்தக்கது. (பிற்சேர்க்கை காண்க)

32. இதிகாசச் செய்திகள் இடம்பெறல்

வேதம், இதிகாசங்கள், புராணங்கள், திருவாய்மொழி ஆகியன ஒரு கருத்தினை வெவ்வேறு வகையில் விளக்குவன என்பது இவர்தம் உட்கோள். இதனை, இவற்றை இறைவனுடைய வெவ்வேறு வடிவங்களோடு, "பரத்வம் போலே வேதம் அவதாரம் போலே இதிகாச புராணங்கள், அர்ச்சாவதாரம் போலே திருவாய்மொழி" என்று ஈடு ஒப்பிட்டுச் சொல்வதால் அறியலாம்.[252] இவ் இதிகாசங்களிலும் இராமாயணத்தில் இவர்களுக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. பெரியவாச்சான் பிள்ளை தமது உரையில், "இராமாயணம் அவிழ்த்துக் கட்டாத இடம் நாடல்ல, கொடுவினைத் தூறு" என்றும்,[253] "அவ் வடமொழியை" என்னும் பெருமாள் திருமொழித் தொடருக்கு, "ஸ்ரீராமாயணம் போலே இனியவனை" என்றும்[254] வடமொழியை என்னும் பெரிய திருமடல் தொடருக்கு, "ஸ்ரீராமாயணாதிகள்" என்றும்[255] எழுதிச் செல்வது இதனை வலியுறுத்தும். விக்கிரம சோழன் கூற்றாக, "ஒரு மதிளை வாங்குங் காட்டில் அத்தரிசனம் (சமயம்) குலைந்ததோ, திருவாய்மொழியென்றும் ஸ்ரீராமாயணமென்றும் வலியன இரண்டு பெருநூல்கள் உண்டாயிருக்க" என்று ஈட்டில் வருங் குறிப்பும்[256] இராமாயணம் வைணவத்திற்குத் தூண் போன்றிருத்தலைக் காட்டுகின்றது. சான்றாகச் சில காணலாம்:

அ) "கள்வன்கொல் யானறியேன்
கரியான்ஒரு காளை வந்து
வள்ளிமருங்குல் என்றன்
மடமானினைப் போத என்று"

என்பதில் "வள்ளி மருங்குல் என்றன் மடமானினை" என்பதற்கு "அவனைக் கொடுவந்த விச்வாமித்ரனைச் சொல்லுகிறது. இவளுடைய அழகாயிற்று அவனை அழைப்பித்தது" என்று பெரிய திருமொழியில் உரை வரையப்பட்டுள்ளது. இதில் இராமனை விசுவாமித்திரன் மிதிலைக்கு அழைத்துச் சென்ற நிகழ்ச்சி நயமாக இணைக்கப்பட்டிருத்தல் காணலாம்.[257]

---

252. 5.7.11-36.
253. 7.5.2-24.
254. பெரு.தி. 1.4.
255. பெ.மடல், கண்ணி 131.
256. 10.7.5-36.
257. பெ.தி. 3.7.1.

ஆ) "உன் பொன்னடிச் சேர்த்து ஒல்லை" என்பதில் 'பொன்னடி' என்பதற்கு, "கல்லுக்கும் சைதந்யம் (உயிர்) கொடுக்கவல்ல அடியன்றோ" என்றும்,[258]

இ) "பூத்த நீள் கடம்பு" என்னும் நாச்சியார் திருமொழிக்கு, (விடத்தால் எரிந்து போன) "கடம்பு, திருவடிகள் பட்டவாறே பூத்தது. கல்லுப் பெண்ணானால் கடம்பு பூக்கச் சொல்ல வேணுமோ?" என்றும் வரையப்பட்டுள்ள உரைகளில் இராமன் திருவடித் துகள் பட்டு அகலிகை உயிர்பெற்ற வரலாறு சுட்டப்படுகின்றது.[259]

ஈ) தலைமகள் வண்டினை நோக்கி, "என் நிலைமை உரையாயே" என்று வேண்டுகிறாள். இதில் 'உரையாயே' என்பதன் உரையில், "ஒரு கந்தர்வன் துர்யோதநனைக் கட்டிக் கொண்டு போகா நிற்கச் செய்தே தர்மபுத்ரன் பேரைச் சொல்லிக் கூப்பிட, அவனைப் பின்னை ஆந்ருசம்ஸ்யத்தாலே (இரக்கத்தாலே) மீட்டான் என்னா நின்றது; அங்ஙனன்றிக்கே தன்னை ஆசைப்பட்டுப் பிரிந்திருந்து நோவுபடுகிறபடியைக் கேட்டால் உதவாத ஸ்வபாவனோ (தன்மையனோ) என்கிறாள்" என்று பாரத நிகழ்ச்சி எடுத்துக்காட்டப்படுகின்றது.[260]

உ) "நாளும் நாளும் நாடுவன் அடியேன் ஞாலத்தே" என்னும் பாடலில் 'ஞாலத்தே' என்பதற்குப் "பரமபதத்திலேயிருந்து அஸ்த்தாநேபயசங்கை (அஞ்ச வேண்டாததற்கு அஞ்சுதல்) பண்ணுகிறேனோ? ப்ரஹ்மாஸ்த்ர ப்ரயோகம் பண்ணுவார், நாகபாசத்தையிட்டுக் கட்டுவார், அழைத்து வைத்து மல்லரையிட்டு வஞ்சிக்கத் தேடுவார், பொய்யாசநம் இடுவாராகிற தேசத்திலே வர்த்தியாநின்றால் (வாழாநின்றால்) நான் அஞ்சாதே செய்வதென்?" என்று இராமாயண பாரத நிகழ்ச்சிகள் விரவி எழுதப்பட்டுள்ளது காணலாம்.[261]

ஊ) திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய் மொழி ஆகியவற்றில் புலப்படும் நம்மாழ்வார் உள நிலைகளைப் பரதனின் வெவ்வேறு உளநிலைகளோடு ஒப்பிட்டுக் காட்டுவர்.[262]

எ) பெரியோர் சொல்வழி நடத்தல் என்னும் பொது அறத்தை இராமனும், இறைவனுக்குத் தொண்டு செய்தல், இறைவனுக்கு அவன் உகந்தவாறு தொண்டு செய்தல், இறை

---

258. 2.9.10-36.
259. நா.தி. 4.4.
260. பெ.தி. 3.6.1.
261. 8.3.3-36.
262. ஈடு, மஹாப்ரவேசம்-மூன்றாம் ச்ரிய:பதி.

யடியார்க்கு அவர் உகந்தவாறு தொண்டு செய்தல் ஆகிய சிறப்பு அறத்தை முறையே இலக்குவன், பரதன், சத்துருக்கனன் ஆகியோரும் உணர்த்துவதாகக் காட்டுவர்.[263] மேலும் பிராட்டியை வெறுத்துப் பெருமானை விரும்பிய சூர்ப்பணகை உறுப்புகளை இழந்ததனையும், பிராட்டியைத் தவறான எண்ணத்தோடு விரும்பின இராவணன் உயிர் மாய்ந்ததனையும் காட்டி, எவ்வுலகத்திற்கும் தாயும் தந்தையுமான இரட்டையை (பிராட்டியும் பெருமாளுமான மிதுனத்தை) முறைகெட விரும்புவார் பெறும் நிலை யாது என்னுமிடத்தை விளக்குவதாகக் கூறுவர்.[264]

33. சுவைக் கூற்றுகள் (ரசோக்திகள்) அமைத்து எழுதுதல்

உரையின் இடையே சிற்சில தொடர்களை இருபொருள் படவும், நயமாகவும் அமைத்துச் செல்வர். அத்தொடர்கள் "ரசோக்திகள்" எனப்படும்.

அ) தலைமகன், தலைமகளையும் தோழியையும் "குலாகின்ற வெஞ்சிலை வாண்முகத்தீர்!" என்று விளித்துச் பேசுகிறான். இத் திருவிருத்தத் தொடருக்கு "முகம் பழகின வில்லுக் காணும் இவனை நலிகிறது" என்று உரை கூறுகிறார். இதில் முகம் பழகின என்பது முகத்திலே உண்டான, நன்கு பழக்கமுடைய என்னும் இருபொருள் தரும் வகையில் ஆளப்பட்டுள்ளது.[265]

ஆ) இறைவன் திருப்பெயரைக் கற்ற ஆவலிப்பினால் நமன்தமர் தலைகளின்மீது தாமும் தம்மோடு சேர்ந்தவர்களும் கூத்தாடுவதாகக் கூறுகிறார் தொண்டரடிப்பொடி யாழ்வார்.

"காவலிற் புலனை வைத்துக்
    கலிதன்னைக் கடக்கப் பாய்ந்து
நாவலிட் டுழிதர் கின்றோம்
    நமன்தமர் தலைகள் மீதே
மூவுல குண்டு மிழ்ந்த
    முதல்வ! நின் நாமம் கற்ற
ஆவலிப் புடைமை கண்டாய்
    அரங்கமா நகரு ளானே!"

இப்பாடலுரையில், "நலிந்துபோன எமபடரை ஒரு பேரை யிட்டுத் துகைக்கிறார் காணும்" என்று சுவைபட எழுதுகிறார்

---

263. க.நு.சி.0-நம்பிள்ளை. 264. பெரி.தி. 4.7.1-பெரி.
265. தி.வி.75.

பெரியவாச்சான் பிள்ளை. இதில் ஒரு பேர் என்பது ஓர் ஆள் என்றும் ஒரு பெயர் என்றும் இருபொருள் தந்து நிற்கின்றது.[266]

இ) ''எம் மாயக் குறளர்க்கு'' என்பதன் உரையில் மாவலி மூவடி மண் நீர்வார்த்துக் கொடுக்க வாமனன் திரிவிக்கிரமனாக வளர்ந்த வரலாறு சுட்டப்படுகிறது. இதனை ''அடியிலே நீர் வார்த்துக் கொடுத்தவாறே வளர்ந்தபடி'' என்று சுவைபடக் குறிக்கிறது ஈடு. இதில் அடி என்பது முதலில் என்றும் திருவடியில் என்றும் இருபொருள் படுகின்றது.[267]

மற்ற நூல்களின் உரையில் பல சுவைக் கூற்றுகளைப் பெய்து எழுதும் பெரியவாச்சான் பிள்ளை தமது திருவாய்மொழி உரையில் ஓரிரு சுவைக் கூற்றுகளே அமைத்துள்ளார். நம் பிள்ளையே மிகப்பல சுவைக் கூற்றுகள் அமைத்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது (பின்னிணைப்புப் பார்க்க).

34. நியாயங்களைச் சுட்டிக் காட்டுதல்

இவ்வுரைகாரர்கள் வடமொழி நியாய சூத்திரங்களில் புலமையுடையவர்கள். இவர்களால் சுட்டப்படுகின்ற நியாயங்கள்[268] வருமாறு:

(அ) கிம்புநர் ந்யாயம், (ஆ) பாவி ப்ரதிஸந்தாந ந்யாயம், (இ) தக்தபட ந்யாயம், (ஈ) ஸுப்த ப்ரபுத்த ந்யாயம், (உ) ப்ராங் ந்யாயம், (ஊ) ஸிம்ஹாவலோகந ந்யாயம், (எ) தத்க்ரது ந்யாயம், (ஏ) கோபலீவர்த்த ந்யாயம், (ஐ) துல்ய ந்யாயம், (ஒ) ஹோளாதிகரண ந்யாயம், (ஓ) ஏக விஜ்ஞாந ந்யாயம், (ஔ) ப்ரத்யாஹார ந்யாயம், (க) கதி சாமான்ய ந்யாயம்.

வடை கோத்து வைத்த கொம்பே காணாமற் போய்விட்டது என்றால் வடையும் காணாமற் போய்விட்டது என்பது தன்னடையே விளங்கும். அது குறித்த பேச்சுக்கே இடமில்லை.

---

266. தி.மா. 1. 267. 6.6.9-36.

268. (அ) 1.0.0-24; 1.1.2-24; 5.7.0-9; 6.10.0-36; 7.10.8-36; (ஆ) 1.1.7-36; (இ) 1.10.11-36; 2.1.0-36; (ஈ) 5.6.2-24; 6.6.5-36; பெ.மடல் கண்ணி 4; (உ) 5.7.3-24; தி.ச.வி.61; 7.6.3-24; (ஊ) 6.5.0-36; (எ) 9.10.0-24,36; (ஏ) பெரி.தி.2.1.2; (ஐ) பெரி.தி.4.4-3; (ஒ) பாவை 0-3; (ஓ) நா.தி.4.9; (ஔ) தி.நெ.தா.4. (க) 4.10.0-24.

இப்படி முதலே இல்லை என்னும்போது அதன் பகுதி இருக்கிறதா என்னும் பேச்சுக்கே இடமில்லை என்பது கிம்புநர் ந்யாயம். இதனைக் கைமுதிக ந்யாயம் என்றும் கூறுவர்.

பின் வருவதனை உளத்திற்கொண்டு அதற்கேற்ப முன் உள்ளதனை அமைத்துக்கொள்வது பாவி ப்ரதிஸந்தாந ந்யாயம். (பாவி - வருவது; ப்ரதிஸந்தாநம் - நினைப்பது).

தக்த படம் என்பதற்கு எரிந்த துணி என்று பொருள். அது பார்ப்பதற்கு உண்டையும் பாவும் ஒத்துக்கிடக்கும். காற்றடித்த வாறே பறந்துபோகும். உடுத்த முடியாது. அதுபோலக் காட்சிக்கு நன்றாகத் தோற்றினாலும் பயனில்லாதது என்பது தக்த பட ந்யாயம்.

உறங்கி உணர்ந்தவன் பாடம் சொல்கிறான். உறக்கத்தால் அவனுக்குக் கற்ற கல்வி மறந்துபோவதில்லை. அதுபோலச் சில காலம் கழித்துப் பின்பு முன்பு செய்ததனையே செய்வது ஸுப்த ப்ரபுத்த ந்யாயம். ஸுப்த என்பது உறங்கிய என்றும் ப்ரபுத்த என்பது உணர்ந்த (விழித்த) என்றும் பொருள்படும்.

ப்ராக் - முன்னர். முன்னர்க் கூறியதுபோலப் பின்னர் உள்ளதனைக் கொள்வது ப்ராங் ந்யாயம்.

ஸிம்ஹம் - அரிமா. அவலோகநம் - நோக்கு. அரிமாநோக்குப் போலக் கீழ்ச் சொன்னவற்றைத் திரும்பி நோக்குவது ஸிம்ஹாவலோகந ந்யாயம்.

இம்மை செய்த நல்வினைக்கேற்ப அம்மைப் பயன். எப்படி வழிபாடோ அப்படிப் பயன் என்பது தத் க்ரது ந்யாயம்.

முன்னர் "மாட்டைக் கொண்டு வா" என்று கூறிப் பின்னர்க் "காளை மாட்டையும் கொண்டு வா" என்றால் முன்னர்ச் சொன்ன மாடு என்னும் பொதுமொழி காளையை யொழித்துப் பசுவைக் குறிக்கும். அதுபோல ஒரு பொதுச்சொல்லின் பொருளைக் குறுக்கிக்கொள்வது கோ பலீவர்த்த ந்யாயம் (கோ - விலங்கு; பலிவர்த்தம் - காளை).

நஞ்சுண்டான் சாவான் என்றால் நஞ்சுண்டவளும் சாவாள் என்பது தானே கிடைக்கும். அதுபோல ஒன்றற்குச் சொன்னது பிறிதொன்றற்கும் ஒத்து வருவது துல்ய ந்யாயம். இறைவன் வீடு பேறு கொடுப்பவன் என்றால் செல்வத்தையும் கொடுப்பவன் என்பது தெளிவு.

ஹோளா என்பது ஒரு திருநாள். அது பற்றிய குறிப்புச் சாத்திரத்தில் இல்லை. ஆனால் பெரியோர் மேற்கொள்வதால்

அது கொள்ளப்படுகிறது. அதுபோலச் சாத்திரத்தில் குறிக்கப்பட வில்லை என்றாலும் 'மேலோர் ஒழுக்கத்தில் கண்டுகொள்வது ஹோளாதிகரண ந்யாயம்.

யானையைப் பற்றித் தெரிந்துகொள்ளும் ஒருவன் அதனோடு தொடர்புடைய அங்குசத்தைப் பற்றியும் தெரிந்து கொள்கிறான். அதுபோல ஒன்றனை அறிந்துகொள்ளும்போது அதனோடு தொடர்புடைய மற்றவற்றையும் அறிந்துகொள்வது ஏகவிஜ்ஞாந ந்யாயம்.

முதலையும் முடிவையும் சொன்னால் நடுவில் உள்ளதையும் கொள்வது ப்ரத்யாஹார ந்யாயம். 'தீர:' என்றால் தீமதாம் அக்ரேசர: (அறிவாளிகளுக்குள்ளே முன்னே நடக்கிறவன்) என்பது பொருள். 'எ.டு' என்றால் எடுத்துக்காட்டு என்று அறிவது இதன்பாற்படும்.

'சத்' என்பது பிரமன், நாராயணன் ஆகிய பலவற்றைக் குறிக்கும். 'சத்' என்பதற்கு உள்ளது என்று பொருள். பிரம்மா என்றால் பெரியது. அதில் பெரியதாக உள்ள எல்லாம் அடங்கும். ஆத்மா அறிவுள்ளதனைக் குறிக்கும். அதனுள் அறிவுள்ளவை அனைத்தும் அடங்கும். சிவன் என்பது ஒரு தெய்வம், சுத்தம், தூய்மை, நன்மை ஆகிய பலவற்றைக் குறிக்கிறது. இங்ஙனமன்றி நாராயண என்னும் சொல் ஒருவனையே குறிக்கிறது. இவை நாராயண என்பதில் ஒதுங்குகின்றன. இதனைக் கதி சாமான்ய ந்யாயம் என்பர்.

35. பாட வேறுபாடு காட்டுதல்

இவ்வுரையாசிரியர் காலத்திலேயே பாசுரங்களுக்குப் பாட வேறுபாடுகள் (பாட பேதங்கள்) நில்வியுள்ளன. அவ் வேறுபாடுகளை அவர்கள் தம் உரைகளில் குறித்துச் செல்லத் வதறினாரல்லர். சான்றாகச் சில கீழே தரப்படுகின்றன:

1) "மதுவார் தண்ணந் துழாயான்
முதுவே தமுதல் வனுக்கு
எதுவே தென்பணி என்னாது
அதுவே யாட்செய்யு மீடே"

என்பதில் 'மதுவார்' என்பதற்கு 'வதுவார்' என்னும் மற்றொரு பாடம் நிலவியது ஈட்டுரையால் தெரிகின்றது.[269] அப் பாடம்

---

269. 1.6.2.

முன்பாட்டுப் 'பூவே' என்று முடிவதால் அந்தாதித் தொடைக்குப் பொருத்தமாகவும் அமைகின்றது.

2) "பாமருவி நிற்கத் தந்த பான்மையே வள்ளலே" என்பதில் "பான்மையே வள்ளலே" என்பதற்குப் "பான்மையேய் வள்ளலே" என்று பிறிதொரு பாடம் இருந்தமை தெரிகின்றது.[270] இவ்விரண்டாவது பாடத்தினையே பன்னீராயிரப்படி கொண் டுள்ளது. நல்ல பாடமாகவும் தெரிகின்றது.

3) "நினைப்பன் திருமாலை நீண்டதோள் காண
நினைப்பார் பிறப்பொன்றும் நேரார்"

என்பது இரண்டாந் திருவந்தாதி. இதில் "பிறப்பொன்றும்" என்பதற்கு மாறாகப் "பிறப்பு என்றும்" என்னும் பாடம் இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. உரையில் "ஸம்ஸாரத்தை ஒருநாளும் கிட்டார்கள்" என்று வருவதும் அப்பிள்ளை இப் பாடத்தையும் குறித்துச் செல்வதும் இதனை வலிவுடையதாக்குகின்றன.[271]

36. பொருந்தா உரை தருதல்

சில இடங்களில் இவர்கள் கண்டுள்ள உரை வலிந்து சொல்லப் பட்டதுபோலக் காணப்படுகிறது. இவர்கள் எழுதியுள்ள உரை பிழையற்றது என்றாலும் செயற்கையாக உள்ளது.

1) "ஈடும் எடுப்புமில் ஈசன்" என்கிறார் நம்மாழ்வார். இதில் 'ஈடு' என்பது ஒப்பு என்றும், 'எடுப்பு' என்பது 'உயர்வு' என்றும் பொருள் தரும் வகையில் உள்ளன. எனவே இதற்கு, "ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஈசன்" என்று பொருள் கொள்ள வாம். ஆனால் இவ்வுரைகாரர்கள் இதனை விடுத்து 'ஈடு' என்பதற்கு 'விடுதல்' என்றும், 'எடுப்பு' என்பதற்குப் 'பற்றுதல்' என்றும் பொருள் கொண்டு "சாதி முதலிய உயர்வு தாழ்வு காரணமாக விடுதல் பற்றுதல் செய்யாதவன்" என்று ஏனோ உரை காண்கின்றனர்.[272]

2) "தரும வரும் பயனாய திருமகளார்" என்பதற்குத் தருமத்தின் மேலான பயனாகிய திருமகளார் என்பதே நேரான பொருள். "தரும் அவ் அரும் பயனாய திருமகளார்" எனப் பிரித்து, "தரும்-இப்பொருளில் ஐயமில்லை; அவ் அரும்பயனாய-

270. 2.6.3-12.
271. இ.தி.42.
272. 1.6.3.

பெறுதற்கரிய சாத்திரங்களிலே பெரிதும் பேசப்படுகின்ற பயன் வடிவானவற்றை" என்று வலிந்து பொருள் காண்பர்.[273] இதனையே நஞ்சீயரும், நம்பிள்ளையும், பெரியவாச்சான் பிள்ளையும் தாம் காட்டும் இரண்டு உரைகளில் முதலாம் உரையாகவும் தெரிவித்துள்ளனர்.

3) "மலருலகில், தொழும்பாயார்க் களித்தால் உன் சுடர்ச் சோதி மறையாதே" என்பதில் மலருலகு என்பதனை வினைத் தொகையாகக் கொண்டு மலர்ந்த உலகில் என்று பொருள் கொள்வதே நேரிது. ஆனால், "மலருலகில்" என்பதற்குத் "திருநாபீகமலத்தை அடியாக உடைத்தான ஸம்ஸாரத்தில்" என்று நஞ்சீயரும் பெரியவாச்சான்பிள்ளையும் நம்பிள்ளையும் உரை கண்டுள்ளனர்.[274]

4) "கமலத் தடங்கண்ணன்"[275] என்பதற்குத் தாமரை போன்ற பெரிய கண்களையுடையவன் என்பது இயல்பான பொருள். 'தட' என்பது பெரிய என்று பொருள்தரும் உரிச்சொல். ஆனால் நஞ்சீயரும் நம்பிள்ளையும் மலர்ந்த தாமரை பூத்த தடாகம் போன்ற கண்களை யுடையவன் என்று பொருள் கண்டனர். இருபத்து நாலாயிரப்படியில் பொருள் கூறப்பட வில்லை. ஆனால் இதனினும் முற்காட்டப்பட்டுள்ளதே சரியென்ப தால் பன்னீராயிரப்படிகாரர் அதனையே கொண்டுள்ளார். இவ்வாறே "உன் தாமரைத் தடங்கண் விழிகளின்"[276] என்ப தற்கும் தடாகம் போன்ற கண் என்றே பன்னீராயிரப்படி தவிரப் பிற உரைகள்பொருள் கண்டுள்ளன.

5) "நம்பினேன் பிறர் நன்பொருள் தன்னையும்
நம்பினேன் மடவாரையும் முன்னெலாம்"

என்பதில் "பிறர் நன்பொருள்" என்பதற்குப் பிறருடைய நல்ல செல்வங்கள் என்பதே நேரான பொருள். அதனை விடுத்து, "சர்வேச்வரனுடைய நன்பொருளாகிய ஆத்மா (உயிர்)" என்று பொருள் கூறப்பட்டுள்ளது. இது சிறப்புடையது எனினும் வலிந்து கொள்ளப்பட்டதாக உள்ளது.[277]

6) "தென் இலங்கை" என்பதற்குத் 'தென்' என்று அழகாய், கட்டளைப்பட்டிருக்கையைச் சொல்லுகிறது" என்று கூறப்பட்

---

273. 1.6.9.
275. 5.1.11-9,36.
274. 3.1.9-9,24,36.
276. 6.2.9-9,24,36.
277. க.நு.சி. 5, நஞ்சீயர், நம்பிள்ளை, பெரி, அழகு.

டுள்ள உரையினும்[278] தெற்கே உள்ள இலங்கை என்பதே இயல்பான பொருளாகும்.

7) "தறுகண் வேழம்" என்பதற்குச் செருக்கு மிக்க யானை என்பதே நேரான பொருள். "வட்டணிந்த கண்ணையுடைத்தா யிருக்கிற குவலயாபீடம்" என்பது செயற்கையுரை.[279]

8) "பரனே பஞ்சவன் பௌழியன் சோழன்
பார்மன்னர் மன்னர்தாம் பணிந்தேத்தும்"

என்பதன் உரையில் 'பஞ்சவன்' என்றும் 'பௌழியன்' என்றும் சோழர்கள் பேர் என்று வருகிறது.[280] இஃது ஏடெழுதுவோரால் நேர்ந்த பிழைபோலும். பஞ்சவன், பௌழியன் என்பன பாண்டியர்களின் பெயரேயன்றிச் சோழர்தம் பெயர்களல்ல.

37. உரை வேறுபாடுகள்

ஒரே தொடருக்கு உரைகாண்போர் நுட்ப அறிவுக்கேற்ப வேறுவேறு பொருள்கள் காண்பதற்கு இடமிருக்கிறது. முன்னே வந்தவர் கருத்துகளுக்கு வேறான கருத்துகளைத் தெரிவிக்கும் போது கடுமையாக எதிர்க்காமல் நயத்தக்க நாகரிகத்தோடு அவற்றைக் காட்டி, "என்று பணிப்பர்" என்று சொல்லித் தமது கருத்துகளைத் தெரிவிப்பர்; சில இடங்களில் சில காரணங் களினால் பொருந்தாது என்று சொல்லித் தமது விளக்கத்தினைத் தருவர். உரை வேறுபாடுகள் பல காணப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றைக் காணலாம்:

1) "அமரர்கள் தொழுதெழ அலைகடல் கடைந்தவன்"[281] என்பதற்கு மற்ற நான்கு உரைகளும் தேவர்கள் அனுபவித்து வாழும்வண்ணம் கடலைக் கடைந்தவன் என்று உரை கூற, ஆறாயிரப்படி வேறுவகையில் சிறப்பான உரை வகுக்கிறது. அடியார்கள் பற்றுதற்குப் பாங்காக அண்டத்தில் தோன்றினான்; அப்படித் தோன்றியவன் தன் மேன்மையோடு இருந்துவிடாமல் அடிமைத் திறத்தை ஈட்டிக் கொடுக்கும் அமுது எடுத்தலாகிய செயலைச் செய்தான் என்று தேவர்கள் வருத்தம் தீரப் பிறந்ததனை ஓர் ஏற்றமாகவும், பிறந்த இடத்தில் தன் மேன்மையோடு இருந்துவிடாமல் பாற்கடல் கடைந்ததனைப் பிறிதோர் ஏற்றமாகவும் காட்டி உரைசெய்கிறது ஆறாயிரப்படி.

2) "அருள்கொண் டாடும் அடியவர் இன்புற
அருளி னான்அவ் அருமறை யின்பொருள்

---

278. பெரி.தி. 2.6.9. 280. பெ.தி.7.7.4.
279. பெ.தி.6.10.3. 281. 1.3.11.

அருள்கொண் டாயிரம் இன்தமிழ் பாடினான்
அருள்கண் டீர் இவ் உலகினில் மிக்கதே''

என்பது கண்ணிநுண் சிறுத்தாம்பு எட்டாம் பாட்டு.

இதற்கு, இறையருளைக் கொண்டாடும் அடியவர்கள் இன்புறுமாறு அரிய மறையின் பொருளை அருளிச் செய்தார் நம்மாழ்வார். இவர்தம் அறிவாலே அருளிச் செய்தாரோ எனில், இறைவன் தந்த மயர்வற்ற மதிநலத்தாலே ஆயிரமாகப் பாடினார்; இறைவனும் கைவிட்ட உயிர்களை அவற்றின் இழிநிலைகண்டு திருத்த முற்பட்ட இவரது அருள் உலகில் மிக்கு விளங்குவதன்றோ? என்று நம்பிள்ளை, பெரிய வாச்சான் பிள்ளை, அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் ஆகிய மூவரும் பொருள் கண்டனர். ஆனால் நஞ்சீயர், தன்பால் அருள்கொண்டாடும் அடியவர்கள் வாழும்படி கீதாசாரியனாய் நின்று வேதங்கள் மறைத்த பொருளை வெளியிட்டான் பெருமான். அப்பெருமான் அருள் கொண்டு ஆயிரம் பாசுரங்களை வெளியிட்டார் நம்மாழ்வார். ஓர் எல்லைக்குட்பட்டுச் சிலருக்கே உரித்தாயிருக்கும் நூல் தந்த பெருமானுடைய அருளினும், எல்லைக்குட்படாது எல்லார்க்கும் உரிய நூல் தந்த நம்மாழ்வார் அருள் பெரிது என்று பொருள் கண்டார். மற்றவர்கள், அருள் கொண்டாடும் அடியவர் இன்புற அருளினவன் நம்மாழ்வார் என்று கொண்டனர்; நஞ்சீயரோ அப்படி அருளினவன் கீதாசாரியன் என்றார். இதுவே வேறுபாடு.

3) மற்ற உரைகளினின்று அதிகமாகத் தம் பெரிய போதத்தால் வேறுபடுவர் வாதிகேசரி அழகிய மணவாள சீயர். அவர் கூறும் வேறுபாடுகளுள் மூன்று மட்டும் இங்குக் காணலாம் :

''மின்னின் நிலையில, மன்னுயிர் ஆக்கைகள்
என்னும் இடத்திறை, உன்னுமின் நீரே''

என்னும் பாட்டில் வரும் 'இறை' என்பதற்கு மற்றவர்கள் சிறிது என்று பொருள் கண்டனர்; இவர் 'சுவாமி' என்று பொருள் கூறி, இதற்குச் சிறிது என்று பொருள்கொண்டு நிலையாமையைச் சிறிது நினையுங்கள் எனக் கூறுதல் முன் பின் பாட்டுகள் சொல்லு கின்ற இறைவனைப்பற்றுங்கள் என்னும் பொருளுக்கு மாறாகும்'' என்று விளக்கந் தந்துள்ளார்.[282]

282. 1.2.2-12.

"தான நகர்கள் தலைசிறந் தெங்கெங்கும்
வானிந் நிலம்கடல் முற்றுமெம் மாயற்கே
ஆன இடத்துமென் நெஞ்சும் திருக்கடித்
தான நகரும் தனதாயப் பதியே"

என்னும் பாட்டில் "வான், இந்நிலம், கடல்" என்பவற்றிற்கு மேலுலகம், நிலவுலகம், கடல் என்று பொருள் கூறியுள்ளனர் மற்ற உரையாசிரியர்கள். ஆனால் இவர் பரமபதம், பூமி, க்ஷீராப்தி (பாற்கடல்) என்று பொருள் செய்துள்ளார்.[283] இதில் 'வான்' என்பதற்குப் பரமபதம் என்று பொருள் கூறியது வேறு பட்டுச் சிறப்பாக உள்ளது.

"மாண்பமை கோலத்தெம் மாயக் குறளற்கு,
சேண்சுடர்க் குன்றன்ன செஞ்சுடர் மூர்த்திக்கு,
காண்பெருந் தோற்றத்தெங் காகுத்த நம்பிக்குஎன்
பூண்புனை மென்முலை தோற்றது பொற்பே"

என்னும் பாசுரத்தில் வரும், "சேண்சுடர்க் குன்றன்ன செஞ்சுடர் மூர்த்தி" என்பது திரிவிக்கிரமாவதாரத்தைக் குறிக்கிறதென்று கொண்டு, இப்பாட்டு முறையே வாமன திரிவிக்கிரம இராமாவதாரங்களைக் குறிப்பதாக ஈடுள்ளிட்ட மற்ற உரைகள் கூறும். பன்னீராயிரப்படி, "சேண்சுடர்க் குன்றன்ன செஞ்சுடர் மூர்த்தி" என்பதனைப் பின்வரும் இராமபிரானுக்கு அடைமொழியாகக் கொண்டு வாமன இராமாவதாரங்களாகிய இரண்டனை மட்டும் குறிப்பதாகக் கொள்கிறது.[284]

முடிவுகள்

வைணவ உரைகளில் புதிய சில உரை கூறும் உத்திகள் அமைந்துள்ளன; சில உத்திகள் நன்கு வளர்ந்து நிலை கொண்டுள்ளன.

283. 8.6.8-12. 284. 6.6.9-12.

4. மொழி நடை

மணிப்பிரவாள நடையின் அமைப்பு

வைணவ உரைகளின் தனித்தன்மைகளுள் ஒன்று அவற்றின் மொழிநடை. இம் மொழிநடையினை மணிப்பிரவாளம் என்பர். இந் நடை 'பெரும்பான்மையும் வடசொற்களும் 'வடமொழித் தொடர்களும் நிறைந்து சிறுபான்மைத் தமிழிடைச் சொற்களும் எச்சங்களும் முற்றுகளும் விரவி' ச் செல்லும்.[1]

வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியார் மணிப்பிரவாளம் என்பதற்கு மூவகை விள்க்கங்கள் நிலவியதாகத் தெரிவிக்கிறார்.[2]

1) மாணிக்கமும் பவளமும் ஒரு கோவையாகக் கோக்கப் பட்ட மாலையில் அவ்விரண்டும் செந்நிற முடையவாதலின் சேய்மை நோக்கில் ஒன்றுபட்டிருந்தும் நெருங்கி நோக்குமிடத்து வேறுபாடு காட்டுதல் போலத் தென்மொழியும் வடமொழியும் விரவி மேற்போக்கில் பார்க்குமிடத்து அவை ஒன்றுபட்டன போலத் தோன்றினும் ஊன்றிப் பார்க்குமிடத்து வேறுபட்டுத் தோன்றுவதால் இந்நடை மணிப்பிரவாளம் என்று வழங்கப் பெற்றது.

2) முத்தும் பவள்மும் விரவிக் கோத்த மாலை வண்ண வேறுபாட்டால் காட்சிக்கின்பம் பயத்தல் போல வடமொழியும் தென்மொழியும் கலந்த இந்நடை செவிக்கின்பம் பயத்தலால் இப் பெயர் பெற்றது.

3) நீலமணியும் பவளமும் கலந்து கோக்கப்பட்ட மாலை போலச் செந்தமிழும் வடமொழியும் கலந்து இயன்றதால் இப் பெயர் வந்தது.

---

1. தி.செல்வக்கேசவராய முதலியார், 'தமிழ் வியாசங்கள்', சென்னை, 1945, பக். 74.
2. வை.மு.கோபாலகிருஷ்ணமாசார்யர், 'மணிப்பிரவாளம்', செந்தமிழ், பன்னிரண்டாந் தொகுதி, மதுரை, 1913-1914, பக். 484, 486.

சுருக்கமாக, வடமொழியும் தமிழும் கலந்த நடையே மணிப்பிரவாளம் எனலாம். இதனை விரவியல் நடை என்பர் வீரசோழியமுடையார்.

வைணவ மணிப்பிரவாளத்தின் தனி இயல்புகள்

மணிப்பிரவாள நடை பல்லவர் காலத்தில் தோற்றுவிக்கப் பட்டது என்பர்.[3] தமிழில் வழங்கும் பிற மணிப்பிரவாள நூல்களின் நடையோடு வைணவ உரைகளின் நடையை ஒப்பிட்டுக் காணும்போது சில தனி இயல்புகளோடு வைணவ உரை நடை அமைந்திருத்தல் காணலாம். அவை வருமாறு: (1) புதுமை வழக்குகள், (2) புதிய சொற்கள், (3) கல்வெட்டுச் சொற்கள், (4) அரிய தமிழ்ச் சொற்கள், (5) புதிய பொருளில் சில சொற்கள், (6) அழகிய சொல்லமைப்புகள் (expressions), (7) செறிவுத் தொடர்கள் (phrases), (8) மரபு வழக்குகள் (idioms), (9) முற்றுத் தொடர்கள், (10) பேச்சு வழக்குகள், (11) சமய மரபு வழக்குகள், (12) இலக்கண மரபு மீறல்கள், (13) தமிழ்க் கூறுகள் கொண்ட வடசொற்கள்.

1. புதுமை வழக்குகள்

இவ்வுரைகளில் காணப்படும் புதுமை வழக்குகள் வருமாறு:

1) அப்பால், இப்பால் என்னும் பொருளில் (அ) அவ்வருகு, (ஆ) இவ்வருகு ஆகிய சொற்கள்[4] வருகின்றன.

2) அவ்விடம், இவ்விடம், எவ்விடம் என்னும் பொருளில் (அ) அங்குத்தை, (ஆ) இங்குத்தை, (இ) எங்குத்தை என்னும் சொற்கள் ஆளப்பட்டுள்ளன.[5] இவ்வாறே முன்பு, பின்பு, புறம்பு, கிழக்கு என்பனவும் முறையே (அ) முன்புத்தை, (ஆ) பின்புத்தை, (இ) புறம்புத்தை, (ஈ) கிழக்குத்தை என்று குறிக்கப்பட்டுள்ளன.[6] (அ) அங்குற்றை, (ஆ) இங்குற்றை, (இ) முன்புற்றை, (ஈ) பின்புற்றை, (உ) புறம்புற்றை, (ஊ) மேலுற்றை என்னும் வழக்குகள்

---

3. மு.வை. அரவிந்தன், 'உரையாசிரியர்கள்', சென்னை, 1977, பக். 537.
4. (அ) 1.3.1-24; (ஆ) 2.3.1-24.
5. (அ) பெ.தி.1.7.7; (ஆ) 6.10.2-36; (இ) பாவை,30-6.
6. (அ) 1.4.9-24; (ஆ) பெரி.தி.4.4.10; (இ) பெ.தி.1.9.1; (ஈ) 7.10.5-36.

சில இடங்களில் இடம்பெற்றுள்ளன.[7] இவற்றைக் கொண்டு மேலே குறிப்பிடப்படுபவை பல்லினமாதல் என்னும் விதியின்படி திரிந்த இவற்றின் வேறு வடிவங்கள் ஆகும்.

3) (அ) அப்படியிருக்க என்னும் பொருளில் 'ஆயிருக்க' என்பதும், (ஆ) ஆகையால் என்னும் பொருளில் 'ஆயிட்டு' என்பதும், (இ) ஆனவெல்லாம் என்னும் பொருளில் 'ஆவுதெல் லாம்' என்பதும் வருகின்றன.[8] மேலும் (அ) என்னம்பு (என்ன), (ஆ) என்னம்புது (என்ன), (இ) என்னென்பின (என்னென்ன), (ஈ) இவன்தனை (இவனளவு), (உ) என்றனை (என்னளவு), (ஊ) என்றிய (எதற்காக), (எ) என்றேய (எப்படி), (ஏ) எத்தனைவர் (எத்தனைபேர்) ஆகியவையும் காணப்படுகின்றன.[9] அவற்றுடனே என்பதன் சிதைந்த வடிவாக 'அவைத்துடனே' என்பது இடம் பெற்றுள்ளது.[10] இது பல்லினமாதல் என்னும் விதியின்படி அமைந்தது என்பர் மொழி நூலார். உம்முடைய என்பது 'உந்தாமுடைய' என்றும், தம்தம் என்பது 'தந்தாம்' என்றும் வழங்கப்பட்டுள்ளன.[11]

4) 'அது கிடக்கிடாய்', 'அது கிடக்கிடீர்' என்பவை[12] அது கிடக்கட்டும் கண்டாய், அது கிடக்கட்டும் கண்டீர் என்னும் பொருள் பயந்து முறையே முன்னிலை ஒருமையிலும், பன்மை யிலும் இடம்பெற்றுள்ளன. அது கிடக்கட்டும் என்னும் பொருளில் 'அது கிடக்கிடும்' என்பதும்[13] ஆளப்பட்டுள்ளது.

5) காட்டில் என்னும் சொல், காலத்தை உணர்த்தும் வழக்காறாக வினைச்சொற்களோடு சேர்த்துப் பயன்படுத்தப் பட்டுள்ளது. 'ஒருகால் ஒன்று சொல்லப்புக்கால் அது தலைக் கட்டுங் காட்டில் நடுவே பதின்கால் பட்டைப பொதிசோறு அவிழ்க்க வேணுங் காணும்' எனவும்,[14] 'ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே என்னுங்காட்டில் நித்ய விபூதியோகத்தைச் சொல்லிற்றாமோ?' எனவும்[15] வருதல் காணலாம்.

---

7. (அ) தி.வி.28; (ஆ) தி.வி.23; (இ) திருவா.7; (ஈ) தி.வ.49; (உ) பெ.தி.7.2.3; (ஊ) 5.7.3-36.
8. (அ) பெரி.தி.4.4.5; (ஆ) 3.6.3-36; (இ) பெ.தி.11.8.5.
9. (அ) பெரி.தி.2.3.4; (ஆ) பெ.தி.8.2.4; (இ) பெரி.தி. 3.8.10; (ஈ) 3.9.2-36, (உ) பெ.தி.3.5.0; (ஊ) பாவை 16-6; (எ) தி.வி.30; (ஏ) 10.3.8-36.
10. பெரி.தி.4.2.0.
11. 4.10.9-36, 5.1.9-36.
12. 6.2.4-24; 8.1.3-36.
13. பெ.தி. 8.2.7.
14. 3.8.10-36.
15. 4.9.10-36.

6) இவ்வுரையின் சொற்றொடர்கள் பெரும்பாலும் (அ) ஆய்த்து, (ஆ) இறே, (இ) காண், (ஈ) கிடாய், (உ) கிடீர், (ஊ) கிடிகொள், (எ) கோள் என்னும் சொற்களுள் ஒன்றனை இறுதியில் பெற்று முடிகின்றன.[16] இவ்வீற்றுச் சொற்கள் இவ்வுரையின் நடையினை மற்ற உரைகளினின்றும் வேறுபடுத்துகின்றன. 'ஆய்த்து' என்பது ஆயிற்று என்பதன் கொச்சை வடிவமாகக் கொள்ளலாம். கிடாய், கிடீர், கிடிகோள் ஆகியவை முறையே காண், கண்டீர், கண்டீர்கள் என்னும் பொருளைத் தருவன. கோள் என்பது 'கள்' விகுதியின் திரிபாகும். இஃது இதழொலியாதல் என்னும் விதியின்படி அகரம் ஒகரமாகி நீண்டதாகும்.

7) 'போல' என்னும் உவம உருபு சேர்த்து எழுதிச் செல்லுமிடங்களில் 'உதவினாற் போலே' போன்ற முழுவடிவங்கள்[17] வழங்குதலே யன்றி, ஒருப்படுமாபோலே (ஒருப்படுமாறு போலே) கூப்பிட்டாப் போலே (கூப்பிட்டாற் போலே) என்று ஈறு சிதைந்த வடிவங்களும்[18] இடம்பெற்றுள்ளன.

2. புதிய சொற்கள்

(அ) சிறுக்கன், (ஆ) தமப்பன், (இ) கண்ணநீர், (ஈ) சிலவர், (உ) நாயன் என்னும் புதிய சொற்கள் பல இடங்களில்[19] காணப்படுகின்றன. கண்ணநீர், கண்ணீர் என்பதன் வேறு வடிவம். ஓர் இடத்தில் கண்ணீர் என்பதும் வந்துள்ளது.[20] சிலர் என்பதே சிலவர் என்று குறிக்கப்படுகின்றது. நாயன் என்னும் சொல் தலைவன் என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளதால் அதனை நாயகன் என்பதன் மற்றொரு வடிவமாகக் கருதலாம். சிறுவனைச் சிறுக்கனென்றும், தகப்பனைத் தமப்பன் என்றும் எழுதிச் சென்றுள்ளனர். தகப்பன் என்னும் சொல்லும் முதல் திருவந்தாதி 46ஆம் பாட்டின் உரையில் காணப்படுகின்றது.

இவ்வுரைகளில் 'பாடு' என்னும் விகுதி பெற்ற தொழிற் பெயர்கள் பல[21] இடம்பெற்றுள்ளன. (அ) அடிப்பாடு (வழி, வரலாறு), (ஆ) ஆசைப்பாடு (ஆசைப்படுதல்), (இ) ஈரப்பாடு

---

16. (அ) தி.ச.வி. 87; (ஆ) 1.4.1-24; (இ) பெ.தி.11.5.4; (ஈ) 7.1.10-6; (உ) 8.6.2-9; (ஊ) 9.1.6-24; (எ) 4.1.6-9
17. 2.4.10-12. 18. 2.1.10-9; 2.0.0-36.
19. (அ) 4.4.1-24; (ஆ) பெ.தி. 5.8.2; (இ) மு.தி. 55; (ஈ) 9.4.4-36; (உ) பெரி.தி.3.9.4.
20. 10.3.3-24.
21. (அ) பெ.தி. 1.9.4; (ஆ) 4.7.6-12; (இ) 6.7.8-12

(ஈரத்தோடு இருத்தல்), (ஈ) உறுதிப்பாடு (திண்மை), (உ)கனப்பாடு (கனமாய் இருத்தல்), (ஊ) கார்யப்பாடு (செயல்), (எ) கிடைப்பாடு (கிடத்தல்), (ஏ) கோட்பாடு (கொள்கை), (ஐ) சிற்றடிப்பாடு (சிறுபாதை), (ஒ) செய்திப்பாடு (செயல்), (ஓ) செவிப்பாடு (செவிக்கு இனிதாய் இருத்தல்), (ஔ) செவ்வைப்பாடு (நேர்மை, (க) சேவகப்பாடு (வீரம்), (ங) தலை நீர்ப்பாடு (முதலில் நீர்பாயுமிடம்), (ச) நேர்பாடு (நேர்தல், வாய்ப்பு), (ஞ) நோவுபாடு (துன்பம்), (ட) பிற்பாடு (தாமதம்), (ண) பிறவிப்பாடு (பிறத்தல்), (த) மண்பாடு (மண்ணில்படுதல்), (ந) மயிர்ப்பாடு (மயிரைப் பெற்றிருத்தல்), (ப) முற்பாடு (முதலில் வருதல்), (ம) மெய்ப்பாடு (உண்மையாய் இருத்தல்), (ய) வார்த்தைப்பாடு (பேசப்படுதல்), (ர) வீரப்பாடு (வீரம்), (ல) வேண்டற்பாடு (வேண்டப்படுதல், இன்றியமையாமை) என்பவை அத்தகைய தொழிற்பெயர்களாகும். இவற்றுள் பல இவர்கள் படைத்துக் கொண்டனவாகத் தோன்றுகின்றன.

3. கல்வெட்டுச் சொற்கள்

கல்வெட்டுகளில் காணப்படும் இறையிலி, முற்றூட்டு என்னும் சொற்கள் அவற்றிற்குரிய பொருளிலேயே "தமக்கு அவ் அழகை இறையிலியாக்கின உபகாரத்தைக் கொண்டாடுகிறார்" எனவும், "இவ் வடிவழகை எனக்கு முற்றூட்டாக்கித் தந்தவனே" எனவும் இனிது பயன்படுத்தப் பெற்றுள்ளன.[22] (அ) அகம்படி, (ஆ) விலையோலை, (இ) பரிவட்டம், (ஈ) காணியாட்சி, (உ) மெய்க் காட்டு (நேரில் வந்திருத்தல்) ஆகிய சொற்களும்[23] இடம் பெற்றுள்ளன.

(ஈ) க.நு.சி. 2; (உ) பெரி.தி. 3.5.0; (ஊ) பாவை 23-3; (எ) தி.நெ.தா. 21-பட்டர்; (ஏ) பெ.தி. 2.4.6; (ஐ) பெரி.தி. 3.2.6; (ஒ) 6.7.9-12; (ஓ) பெ.தி. 3.1.1; (ஔ) பெரி.தி. 3.5.6; (க) பெ.தி. 10.3.7; (ங) தி.ச. வி. 24; (ச) 4.9.10-9; (ஞ) திருவெழு. அடி 12; (ட) 1.5. 0-36; (ண) 10.3.4-36; (த) 4.9.11-24; (ந) தி.மா. 23; (ப) தி.நெ.தா. 21; பட்டர், (ம) 1.8.8-36; (ய) 4.8.9-36; (ர) 2.4.0-12; (ல) 5.7.1-9.

22. தி.வி. 43; 3.2.8-24.

23. (அ) 6.8.2-36; (ஆ) தி.பல். 8; (இ) 5.3.7-36; (ஈ)தி.மா. 29; (உ) பாவை 11-6.

4. அரிய தமிழ்ச் சொற்கள்

எண்ணிலடங்கா வடசொற்களைத் தம்மகத்தே கொண்டுள்ள இவ்வுரைகளில் நல்ல தமிழ்ச் சொற்களும் இல்லாமல் இல்லை. இவ்வுரைகளில் பலகால் பயின்று வரும் அரிய தமிழ்ச்சொற்கள் வருமாறு:[24]

(அ) அகவாய் (நெஞ்சம்), (ஆ) அங்காடி (கடைத்தெரு), (இ) அறவை (அனாதை), (ஈ) ஆனைத்தாள் (சன்னல்), (உ) இடையாட்டம் (நிலை), (ஊ) இயற்றி (ஆற்றல்), (எ) ஊற்றம் (உறைப்பு), (ஏ) கட்டளை (ஒழுங்கு), (ஐ) கண்ணழிவு (குறைவு), (ஒ) கருநிலம் (பாழ்நிலம்), (ஓ) கிண்ணகம் (பெரு வெள்ளம்), (ஔ) குவால் (மிகுதி), (க) கோள்வாய் (புதுப்புண்), (ங) சிறுபேர் (செல்லப் பெயர்) (ச) செயலறுதி (செயல் அற்ற நிலை), (ஞ) திருநாள் (விழா), (ட) தேட்டம் (விருப்பம்), (ண) தற்கொலை (ஒரே முறையில் கொல்லல்), (த) உயிர்க்கொலை (சித்திரவதை), (ந) நெடும்பாடு (பெருங்குறை), (ப) பச்சை (காணிக்கை), (ம) பற்றாசு (காரணம்), (ய) பாழ்ந்தாறு (படுகுழி), (ர) புதுக்கணிப்பு (புத்தழகு), (ல) வளையம் (கண்ணி), (வ) விரகு (வழி), (ழ) வெக்காயம் (வெப்பம்,) (ள) வெஞ்சோறு (சுடுசோறு), (ற) வெளிச்செறிப்பு (அறிவுத் தெளிவு), (ன) வேண்டற்பாடு (பெருமை). பின்னிணைப்புப் பார்க்க.

5. புதிய பொருளில் சில சொற்கள்

(அ) தண்மை, (ஆ) புடைவை, (இ) விழுக்காடு ஆகிய சொற்கள்[25] பொதுவாக வழங்கும் பொருளிலன்றிப் புதிய

---

24. (அ) அம. 2; (ஆ) தி.நெ.தா. 16; (இ) 3.5.7-36; (ஈ) இ.தி. 67; (உ) 1.3.4-36; (ஊ) 4.9.3-24; (எ) 5.4.3-36; (ஏ) 7.9.5-36; (ஐ) 1.7.6-36; (ஒ) 10.10.9-36; (ஓ) தி.வி. 2; (ஔ) 2.7.3-36; (க) 6.2.0-36; (ங) 1.2.9-36; (ச) 4.4.1-9; (ஞ) 6.5.2-9; (ட) 1.4.9-24; (ண) பெ.தி. 11.1.2; (த) ஸ.தி. (ந) பாவை 30-6; (ப) க.நு.சி.4, நஞ்சியர்; (ம) க.நு.சி. 4, அழ்கு; (ய) க.நு.சி. 4, பெரி; (ர) 1.5.10-36; (ல) 3.1.6-36; (வ) 1.2.0-24; (ழ) 1.2.1-36; (ள) 9.5.8.36; (ற) சி. மடல், கண்ணி, 24 (ன) 5.7.1-9.

25. (அ)2.5.8-36; (ஆ) 10.9.4-36;)இ) க.நு.சி. 0, பெரி; 10.2.1-6; 3.1.2-234; தி.பல். 1; 4.10.9-9.

பொருளில் ஆளப்பட்டுள்ளன. தண்மை குளிர்ச்சியைக் குறிக்காமல் தாழ்வினையும், புடைவை பெண்களின் சேலையைக் குறிக்காமல் ஆண்கள் உடையினையும், விழுக்காடு சதவிகிதத்தைக் குறிக்காமல் தற்செயல், விளைவு, விழுதல், பொருள், தன்மை ஆகியவற்றையும் குறிக்கின்றன.

6. அழகிய சொல்லமைப்புகள் (Expressions)

இவ்வுரைகளில் (அ) நிறக்கேடு, (ஆ) போக்குவீடு, (இ) தோள்தீண்டி, (ஈ) குழைச் சரக்கு, (உ) இருகரையர், (ஊ) வாய்கரையர், (எ) கழனிமிண்டர், (ஏ) மடிதடவினவன் முதலான அழகிய சொல்லமைப்புகள்[26] நிறைந்துள்ளன. இயற்கைத் தன்மையின் (சொரூபத்தின்) அழிவினை நிறக்கேடு என்பர். இன்ப துன்ப உணர்ச்சிகள் மீதூர்ந்தவழி அவற்றைச் சில செயல்களின் வாயிலாக வெளிப்படுத்துகிறோம். அவ்வாயிலைப் போக்குவீடு (Outlet) என்பர்; அஃதாவது உணர்ச்சிகளுக்கு வெட்டப்பட்ட கால்வாயே போக்குவீடு எனலாம். அண்மையில் உள்ள ஒன்றையோ நெருக்கமான ஒன்றையோ தோள்தீண்டி (Contemporary) என்னும் சொல்லால் குறிப்பர். பையிலிட்டுப் பாதுகாப்பாக வைத்திருக்கும் பொருளைக் குழைச்சரக்கு என்பர். தம்மை ஒரு குழுவின் சார்பினராகச் சொல்லிக் கொண்டு உண்மையில் பிறிதொரு குழுவினராய் இருப்பாரை இருகரையர் என்று குறித்துள்ளனர். ஆழ்ந்த அறிவின்றி மேலெழுந்தவாரியான அறிவுடையோரை வாய்கரையர் என்று பொருத்தமாகச் சுட்டுவர். நன்றி கொன்றவர்களைக் கழனி மிண்டர் எனவும், ஒருவன் கைப்பொருள் கவர்ந்தவனை மடிதடவினவன் (Pick pocket) எனவும் சொல்லிச் செல்வதைக் காணலாம். இச் சொல்லமைப்புகள் இவ்வுரையின் இலக்கியத் தகுதியினை உயர்த்துவனவாய் அமைந்துள்ளன.

7. செறிவுத் தொடர்கள்

இவ்வுரைகளில் சில அழகான செறிவுத் தொடர்கள் (Phrases) இடையிடையே பளிச்சிடுகின்றன. அவை வைணவ உலகம் தமிழுக்குத் தந்த நன்கொடைகளாகும்.

1) அரைகுலையத் தலைகுலைய வருதல் (விரைந்தோடி வருதல்): பொய்கையில் முதலையால் பற்றப்பட்ட யானையைக்

---

26. (அ) சி. மடல், 0; (ஆ) பெ.மடல், கண்ணி, 1; (இ) தி.பல். 10; (ஈ) தி.ப. 4 பெரி; (உ) தி.பல். 3; (ஊ) தி.மா.40; (எ) சி. மடல், கண்ணி, 36; (ஏ) சி.மடல், கண்ணி, 28.

காப்பாற்றப் பெருமான் விரைந்தோடி வந்தான். இதனை "அதுவகப்பட்ட (யானை அகப்பட்ட) மடுவின் கரையிலே அரை குலையத் தலைகுலைய வந்து விழுந்து" என்னும் தொடரால் குறிப்பர்.[27]

2) சீறுபாறென்று வருதல் (கோபத்தோடு வருதல்): இராமனை அடைவதற்கு இடைச்சுவராக இருப்பவள் பிராட்டி எனக்கொண்டு அவள்மேல் சீற்றங்கொண்டாள் அரக்கி சூர்ப்பணகை. கட்டுவிச்சியின் கூற்றாக வரும் இச் சிறிய திருமடல் பகுதிக்குப் "பெற்ற தாயோடே சீறுபாறென்று வந்தவள் என்று பிணந்தின்னி என்கிறாள் காணுமிவள்" என்று பெரியவாச்சான் பிள்ளை உரை வரைந்துள்ளார்.[28]

3) அளாய் குளாய்ப் போருவது (களிப்பது): பெருமானை யொழியப் பிறிதொன்றனைப் பாதுகாப்பாகக் கருதிப் பற்றினவர்கள் பண்டு நின்ற நிலையும் கெட்டுத் துன்புறுவர் என்கிறார் நம்மாழ்வார். இதனைத் "தண்ணிதான முறைமையாலே வாழக்கடவ வாழ்வு உண்டு-ஸம்ஸாரத்திலே பசலுங் குட்டியுமாய் அளாய் குளாய்ப் போருமது; அதுவுங்கூடக் கெடுமித்தனை" என்று குறிக்கிறது ஈடு.[29]

4) தொடை கொள்ளலாம்படி இருத்தல் (அறியலாம்படி இருத்தல்): சிறு வண்டுகள் மலருழக்கி மதுவருந்தித் துணையோடு கூடித் திரிகின்றன. பெரியவாச்சான் பிள்ளை அவ்வண்டுகளின் செழுமையைக் கூறுங்கால் "ஸம்ச்லேஷத்தால் (கலவியால்) வந்த புகரடங்கலும் வடிவிலே தொடைகொள்ளலாம்படி யிருக்கை" என்கிறார்.[30]

5) போரப் பொலிய (சிறப்பாக): கண்ணன் எளிமையாகத் திருவடிகளை நிமிர்க்கச் சகடாசுரன் மாண்டான். அதனை நம்மாழ்வார் 'ஊர் சகடமிறச் சாடியதும்' என்று அழகுறச் சொல்கிறார். அதனை விளக்குமிடத்து, "எளிமையாக (அநாயாஸேந) திருவடிகளை நிமிர்க்கச் செய்தேயும், ஒரு பிள்ளையினுடைய (முக்தனுடைய) செயலாகையாலே (வ்யாபாரயாகையாலே) போரப்பொலியச் சொல்லுகிறார்" என்று குறிக்கிறார் நம்பிள்ளை.[31] பின்னிணைப்புப் பார்க்க.

27. சி.மடல், கண்ணி, 48.
28. சி.மடல், கண்ணி, 39.
29. 9.1.9-36
30. பெ.தி.3.6.1.
31. 6.4.4-36.

8. மரபு வழக்குகள்

இவ்வுரைகளில் பொதிந்து கிடக்கும் மரபு வழக்குகள் நயமானவை; புதுமையானவை.

1) அம்மான்பொடி (கவரும் அழகு): கள்வர் குழந்தைகளைக் கவருவதற்காக அவர்கள் மேலே அம்மான் என்று சொல்லி ஒருவகைப் பொடியைத் தூவினால் அந்தப் பிள்ளைகள் மயங்கி அவர்கள் பின்னே 'அம்மான், அம்மான்' என்று சொல்லிக் கொண்டு போவார்கள்: அதனை அம்மான்பொடி என்பர். அது போல மயக்கவல்ல பொருள் இறைவன் திருமுகம். இதனை "'உன்முகம் மாயமந்திரந்தான்கொலோ' என்று அவனுடைய அம்மான்பொடி பலரும் அறிந்த ஒன்றன்றோ (ப்ரஸித்தமிறே)" என்று குறிக்கிறார் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்.[32]

2) ஆனைக்குக் குதிரை வைத்தல் (பிடி கொடுப்பது போல இருந்து பிடி கொடாதிருத்தல்) யானையின் வேகத்தை ஆராய்பவர்கள், குதிரையை முன் நடத்தி யானையைப் பின் நடத்துவார்கள்; யானையும் துதிக்கையாலே குதிரையைத் தொடும்படி நெருங்கிச் சென்று பின்னையும் தொடமாட்டாதே ஒழியும். பெருமான், திருமகள் தனக்கு ஈடுகொடுக்காமல் பின்னிடும்படி கலவியில் மேம்பட்டு நிற்பவனாம். இதனைப் "ப்ரணயதாரையில் (கலவி இன்பத்தில்) அவளுக்கு ஆனைக்குக் குதிரை வைக்கவல்ல ஜ்ஞாநாதிக்யத்தை (அறிவு மேம்பாட்டை)யுடையவன்" என்று குறிக்கிறது இருபத்து நாலாயிரப்படி.[33]

3) ஓவ்வோக் குழியிடாதே இருத்தல் (ஒன்றுமறியாதிருத்தல்): ஓ, ஓ என்று மணலில் குழிகுழியாக எழுதி, அதில் பிள்ளைகள் விரலால் எழுதிப் பழகுவது பண்டை வழக்கம். கற்கத் தொடங்குவதனை அது காட்டும். அதனை ஒவ்வோக் குழியிடல் என்பர். தலைமகள் மற்றவர்களை நோக்கி, "இறைவனைக் குறித்து (பகவத் விஷயத்தில்) ஒவ்வோக் குழியிடாதேயிருக்கிற உங்களுக்கு நான் எத்தைச் சொல்வது?" என்கிறாள் என்று குறிக்கிறது ஈடு.[34]

4) கருமாரி பாய்தல் (அருஞ்செயல் செய்தல்): காஞ்சி மாநகரத்தின் நடுவே குளத்திலே நட்டிருக்குமிரண்டு இரும்புக் கம்பி நடுவே உயரவிருந்து குதித்தல் அக்காலத்தில் இருந்து உள்ளது. அது மிகவும் இடர்ப்பாடான அருஞ்செயலாகக் கருதப்

32. பாவை 9-6.
33. 3.10.8-24.
34. 5.6.2-36.

பட்டுள்ளது. நப்பின்னைப் பிராட்டி எத்தகைய அருஞ்செயல் செய்தாயினும் அடையத்தக்க அழகோடு திகழ்ந்தாள். இதனைக் "கருமாரி பாய்ந்தாலாகாதோ என்னும்படியிறே அவளுடைய போக்யதை'' என்கிறது ஈடு.[35]

பண்டு இச்செயல் நிகழ்ந்தது என்பதனைக் கந்தபுராணமும் தெரிவிக்கிறது. சிங்கமுகன் போரில் மாண்ட செய்தி கேட்டுச் சூரபன்மன் வருத்தம் மிகுதியால் கண்ணீர்க் கடலில் வீழ்ந்தான். அதனைக் காஞ்சி மாநகரில் காமாட்சி கோயிலில் உள்ள நேமித் தடத்திடை விழ்பவர்போல் வீழ்ந்தான் என்கிறார் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள்.

"வண்ணச் சிகரம் வழுவுற்றுக் கீழ்த்தலத்தில்
கண்ணிற் பொழிந்த கடலினிடை வீழ்ந்தனனால்
ஒண்ணுற்ற காஞ்சி உமையவள்கோட் டத்தினின்றும்
தண்ணுற்ற நேமித் தடத்திடையே வீழ்பவர்போல்.''[36]

5) தண்ணீர்த்துரும்பான (தடையான): தண்ணீரில் கிடக்கும் துரும்பு அதனைப் பருகத் தடையாய் இருக்கிறது. ஒரு செயலுக்கு ஏதேனும் ஒன்று தடையாக இருக்குமானால் அதனை அச்செய லாகிய தண்ணீருக்குத் துரும்பு எனலாம். நம்மாழ்வார் தம்மீது அருள்பொழிந்தார் என்றும், அதற்குத் தடையாகத் தம்முடைய வல்வினைகள் இருந்தனவென்றும், அதனைத் தம் பார்வை யாலே போக்கினார் என்றும் சொல்கிறார் மதுரகவிகள். இக் கருத்தினை விளக்குமிடத்து, அழகிய மணவாளப் பெருமாள் நாயனார், ''அதுக்குத் தண்ணீர்த் துரும்பான பழவினைகளை (அநாதி கர்மங்களை) ஆழ்வார் தம்முடைய பார்வையாலே பாறவடித்தபடி'' என்று குறிக்கிறார்.[37]

இத்தகைய மொழி மரபு சொற்றொடர்கள் இவ்வுரை களுக்குப் பொலிவூட்டி நிற்கின்றன. (பின்னிணைப்புப் பார்க்க)

9. முற்றுத் தொடர்கள்

நெஞ்சில் நிற்கும் எழில்மிகு முற்றுத்தொடர்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன.

1) கறவைக் கணங்கள் பின்செல்லும் அறிவொன்றுமில்லா ஆயர்குலக்கொழுந்து கண்ணன். காட்டிலே பசுக்களின் பின்னே

---

35. 5.10.2-36.
36. கந்தபுராணம், சிங்கமுகாசுரன் வதைப்படலம், பாட்டு, 464.
37. க.நு.சி. 9 அழகு.

திரியும் இடையர்களுக்கு அடிகொதித்தால் வாடுவது கண்ணனின் முகம். இதனை விளக்கிவரும் ஈட்டின் ஆசிரியர் முத்தாய்ப்பு வைத்தாற்போல, ''வேரிலே வெக்கை தட்டினால் கொழுந்திறே முற்பட வாடுவது'' என்று முடித்துள்ளார்.[38]

2) தாமான தன்மையழிந்து தலைமகள் நிலையெய்திப் பரிவின் மிகுதியால் பிரிவின் கொடுந்துயராற்றாது பெருமானிடம் மடநாரையைத் தூது செல்ல வேண்டுகிறார் நம்மாழ்வார். அதனிடம், "என் தூதாகச் சென்றக்கால் உன்னைத் தன் புறக்கணிப்பு என்னும் வன்சிறையில் அவன் வைப்பானானால் அதனை என்பொருட்டுப் பொறுக்கலாகாதோ?" என்கிறார். அதனை விளக்கியபின் இறுதியாகப் "பிறர்க்காகச் சிறையிருக்கை பெரிய கோன்மை யென்று கருத்து" என்று எழுதியுள்ளார் அழகிய மணவாள சீயர் தம் பன்னீராயிரப் படியில்.[39]

3) கட்டுவிச்சியின் சொல் தலைமகளின் தாய்க்குக் கேட்க இனிக்கிறதாம். அவ்வினிமைச் சுவையினைத் ''தென்றலும் சிறு துளியும் பட்டாற்போலே இருக்கிறது காணும் தனக்கிருந்தபடி" என்று விள்க்குகிறார் பெரியவாச்சான்பிள்ளை.[40]

4) மால் கண்டு மால்கொண்டாள் மங்கை. தாய்கண்டு இரக்கத்தோடு அருகே வந்தாள். அத்தாய் கிளிக் கிளவி யுடையவள். இதனைக் "கிளியின் பேச்சுப் பேய்ப்பாட்டு என்னும்படி காணும் இவள் பேச்சினிமை" என்று அழகுற விளக்கி யுள்ளார்.[41]

இவையே யன்றிக் கீழ்வரும் நயமான தொடர்களும்[42] காணக் கிடக்கின்றன. ''ஒருவனை ஒருவனுகந்தானாவது அவனுகந்தாரை யும் உகக்கை யாய்த்து" என்றும், "குறைவாளரைக் குறையறுக் கையிறே ஒருவன் பூர்த்திக்கு மேலெல்லை" என்றும், "பால் கைக்கும் புளிக்கும் என்னிலன்றோ பிணங்க வேண்டுவது அதுதான் வேண்டா என்பாரைச் செய்யலாவதில்லையே" என்றும் தொடர்கள் நயமுற அமைந்துள்ளன.

10. பேச்சு வழக்குகள்

திவ்வியப் பிரபந்த விளக்கச் சொற்பொழிவுகளைக் கேட்பதிலும் நிகழ்த்துவதிலும் தங்கள் பெரும்பொழுதினைச்

---

38. 1.7.3-36.
39. 1.3.4-12.
40. சி. மடல், கண்ணி, 52.
41. சி.மடல், கண்ணி, 16.
42. க.நு.சி. 3, அழகு; க.நு.சி. 9, அழகு; தி.மா. 2.

செலவிட்ட இப்பெருமக்கள் பேச்சு வழக்குகள் கலந்த நடையிலேயே தம் சொற்பொழிவுகளைச் செய்தனர். அவ்வாறு தாம் கேட்டவற்றையும் நிகழ்த்தியவற்றையுமே உரையாக வடித்தனர். இதனால் இவர்தம் உரைகளில் அன்றாட வாழ்க்கையில் பெரு வழக்காக இருக்கும் கொச்சை மொழிகள் குறிப்பிடத்தக்க அளவுக்குக் கலந்துள்ளன. பேச்சு நடையிலே இலக்கியம் படைத்தல் பயன்பாடு மிக்கதென்னும் கொள்கையினராக இவர்கள் இருந்தனர் எனக் கொள்ளலாம்.

இவ்வுரைகளில் இடம்பெற்றுள்ள பேச்சு வழக்குகளும் அவை இலக்கிய வழக்கிலிருந்து எவ்வாறு திரிந்துள்ளன என்பதும் கீழே காட்டப்படுகின்றன.

உயிரெழுத்துகள்[43]

அ) அ - ஐ : பயல் - பையல்.

ஆ) ஆ - ஓ : ஆம் - ஓம் அப்படியே; ஓம் அதுதானுண்டோ? ஓம்காண்.

இ) இ - உ : விழிக்க - முழிக்க; புதிது - புதுசு; அணிமை - அணுமை.

ஈ) இ - எ : விடிவிளக்கு - வெடிவிளக்கு.

உ) உ - ஒ : குலைக்க - கொலைக்க; கொலையாத; கொலைந்து.

ஊ) ஐ - அ : புடைவை - புடவை; உடைமை - உடமை.

எ) ஒ - உ : தொடக்கமான - துடக்கமான; துடங்கி, துடங்கின, துடங்கினார், துடை, துடைகுத்த.

மெய்யெழுத்துகள்

சகரமாதல் : ககரம், தகரம், றகரம், யகரம், ழகரம் ஆகியவை சகரமாகின்றன. இவற்றுள் க, த, ற என்னும் வல்லின எழுத்துகளேயன்றி இடையின

---

43. (அ) தி.கு.தா.14. (ஆ) 10.7. 2-36; 10.8.9-36; 7.3.1-36. (இ) பாவை, 4-6; பெ.தி.11-6-6; பெ.தி.4.6.3. (ஈ) பெ.தி. 8.1.1. (உ) பெ.தி,5.6.2; பெ.தி. 5.2.7; பெரி.தி.3.6.10. (ஊ) பெ.தி.10.8.1; தி.கு.தா.4. (எ) பெ.தி.2.6.1; பெ.தி. 4.10.3; பெ.தி.3.9.6; பெ.தி.8.2.5; தி.நெ.தா.1; பெ. திருவந். 59.

எழுத்துகளாகிய ய, ழக்கள் சகரமாதல் குறிப்பிடத்தக்கது.[44]

அ) க் - ச் : இகலி - இசலி.

ஆ) த் - ச் : புதிது - புதிசு; புதிது - புதுசு; அழித்த தலை - அழிச்ச தலை; அடித்துப் பறிக்கும் - அடிச்சுப் பறிக்கும்; தைத்து - தைச்சு; நீந்தி - நீஞ்சி; அழிந்துபோகாதபடி - அழிஞ்சு போகாதபடி; பாய்ந்து - பாஞ்சு (இதில் யகரம் கெட்டது). கலந்து - கலசி.

இ) ற் - ச் : போயிற்று - போச்சுது.

ஈ) ய் - ச் : அயல் - அசல்; பியல் - பிசல்; குயவன் - குசவன்.

உ) ழ் - ச் : இழுக்க - இசிக்க; இழுத்துக்கொள்ள - இசித்துக் கொள்ள.

தகரமாதல் : ககரமும் சகரமும் றகரமும் தகரமாகி வருகின்றன.[45]

அ) க் - த் : சேர்க்கை - சேர்த்தி.

ஆ) ச் - த் : அதிர்ச்சி - அதிர்த்தி; உணர்ச்சி - உணர்த்தி; உயர்ச்சி - உயர்த்தி; கிளர்ச்சி - கிளர்த்தி; குளிர்ச்சி - குளிர்த்தி; தளர்ச்சி - தளர்த்தி; வளர்ச்சி - வளர்த்தி.

இ) ற் - த் : அடியொற்றி - அடியொத்தி; இரண்டற்று - இரண்டத்து; எங்குற்றான் - எங்குத்தான்; ஏற்றம் - ஏத்தம்; கொற்றை - கொத்தை; சுவடொற்றி - சுவடொத்தி; விற்றுப்போய் - வித்துப்போய்.

---

44. (அ) பெ.தி. *3.9.1.* (ஆ) பெ.தி. *2.8.10*; பெ.தி. *11.6.6*; *6.2.4-36*; பெரி.தி. *3.2.2*; பெ.தி. *1.4.1*; தி.வி. *48*; பெ.தி. *11.4.1*; பெ.தி. *10.7.12*; *1.3.8-36*. (இ) பெரி.தி. *4.5.1.* (ஈ) பெரி.தி. *2.8.6*; *6.4.6-12*; திருவா *7*. (உ) அம. *4*, அழகு; அம. *10*, அழகு.

45. (அ) *1.3.1-36*. (ஆ) பெரி.தி.*2.10.3*; *3.1.9-36*; பெ.திருவந்.*6*; *10.3.5-36*; பெ.தி. *2.1.5*; *6.2.11-6*; *6.1.8.12*. (இ) *5.6.1-36*; *1.8.0-9*; *5.3.3-36*; பெ.தி. *10.4.7*; *4.6.8-36*; பெ.தி.*1.7.6*; பெ.தி.*11.7.6*.

றகரமாதல் : சகரம் றகரமாகின்றது.[46] இது றகரம் சகரமாக மாறுவதற்கு நேர்மாறான மாற்றம். இதில் சகரம் தகரமாகி றகரமாகின்றது எனலாம் (ச்-த்-ற்).

ச் - ற் : கிளர்ச்சி - கிளற்றி; அழற்சி - அழற்றி.

டகரமாதல் : வல்லின எழுத்துகளில் ஒன்று டகரமாகி வாராமல் இடையின எழுத்துகளாகிய ழகரமும் யகரமும் டகரமாகி வருகின்றன[47] என்பது கருதத்தக்கது.

அ) ழ் - ட் : அவிழ்க்கும் - அவிட்கும்.

ஆ) ய் - ட் : ஆராய்ச்சி - ஆராட்சி.

நகரமாதல் : ஞகரம் - நகரமாகிறது.[48]

ஞ் - ந் : ஞாயிறு - நாயிறு.

மகரமாதல் : இடையின எழுத்தாகிய வகரம் மகரமாகி வருகிறது.[49]

வ் - ம் : விழிக்க - முழிக்க.

ரகரமாதல் : வல்லின எழுத்தாகிய ககரம் ரகமாகிறது.[50]

க - ர் : போக - போர.

வகரமாதல் : வல்லின எழுத்தாகிய பகரம் வகரமாகி வருகின்றது.[51]

ப் - வ் : மார்பு - மார்வு.

ழகரமாதல் : ரகரமும் ளகரமும் ழகரமாகின்றன.[52]

அ) ர் - ழ் : நகர்ந்து - நகழ்ந்து.

ஆ) ள் - ழ் : கேள்வி - கேழ்வி; சொற்றாள்வி - சொற்றாழ்வி (சொற்றாள்வி என்பது சோற்றாள்வி என்பதன் சிதைவு).

ளகரமாதல் : லகரமும் ழகரமும் ளகரமாகின்றன.[53]

---

46. பெ.தி. 10.6.3; பெ.தி.9.4.6.
47. (அ) பெ.தி.11.8.1; (ஆ) பெரி. தி. 10.8.1.
48. பாவை 3-3.
49. பாவை 4-6.
50. பெரி.தி.3.10.0.
51. 10.2.1-36.
52. (அ) பெ.தி3.8.4; (ஆ) பெ.தி.2.5.9.
53. (அ) 4.10.4-24; (ஆ) பெ.தி.7.5.6.

அ) ல் - ள் : மதில் - மதிள்.

ஆ) ழ் - ள் : இதழ் - இதள்.

இவையே யன்றி, நான்கு என்பது நாலு என்றும்,[54] வேண்டும் என்பது வேணும் என்றும் வருகின்றன.[55] (வேண்டும் என்பதில் டகரம் கெட்டு உகரம் ணகரத்தில் ஏறியது). வெண்ணெய் என்பதன் பேச்சு வடிவமாகிய வெண்ணை என்பதும்[56] காணப்படுகின்றது. மேற்காட்டியவற்றுள் சிலவற்றின் சிதையாத வடிவங்களும் இவ்வுரைகளில் இடம் பெற்றுள்ளன. தொடக்கமான,[57] தொடக்கமானார்,[58] தொடர்ந்து,[59] தொடருகிறார்,[60] மார்பு,[61] சொற்றை[62] ஆகியன அத்தகைய சொற்களாகும்.

சில சொற்கள் இருவகையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. நகர னகரங்களும், ரகர றகரங்களும் தம்முள் மாறாடி வருகின்றன.

திருவநந்தாழ்வான்[63] - திருவனந்தாழ்வான்.[64]
திருவநந்தபுரம்[65] - திருவனந்தபுரம்.[66]
தரை[67] - தறை.[68]

மேலே கண்ட பேச்சு வழக்குகளில் ஒரே வகையாக மாற்றங்கள் நிகழவில்லை. ஒன்றுக்கு மற்றொன்று வேற்று வடிவமாக வழங்கியுள்ளது.

பிடாகை, கிணறு என்பவை, படாகை, கணறு என்பவற்றின் பேச்சு வழக்குகள் என்பது பெரியவாச்சான் பிள்ளை கருத்து.[69] 'கடிறு பலதிரி' என்பதன் விளக்கத்தில், ''கருடனைக் 'கருளன்' என்று டகரத்துக்கு ளகரமாகச் சொல்லுகிறாப்போலே, களிற்றை ''கடிறு'' என்று ளகரத்துக்கு டகரமாகச் சொல்லுகிறது'' என்று[70] மணவாள மாமுனிகள் உரைவகுத்துச் செல்லுவது ஓர்

---

54. 5.8.7-12.
55. 1.10.11-36.
56. க.நு.சி.1, பெரி.
57. பெரி.தி.4.3.2.
58. பெரி.தி. 3.9.6.
59. பெரி.தி.3.2.6.
60. பெரி.தி.4.2.8.
61. 1.9.7-36.
62. மூ.தி.78.
63. 2.8.1-36.
64. 1.3.1-36.
65. 10.2..9.
66. 10.2.0-24.
67. 4.6.10-36.
68. 7.2.7-36.
69. பெ.தி.10.5.3.
70. பெரி.தி.3.2.6.

எழுத்துக்கு மற்றோர் எழுத்து மாறி வருவதை இவர்கள் அறிந்திருந்தனர் என்பதனைக் காட்டுகிறது.

11. சமய மரபு வழக்குகள்

வைணவ மரபினையொட்டிச் சில வழக்குகள் பயின்று வருகின்றன.

1) மதிப்பிற்கும் வணக்கத்திற்குமுரிய பொருள்களைக் குறிக்கும் போதெல்லாம் திரு, திவ்ய, ஸ்ரீ ஆகிய அடைமொழி களுள் ஒன்றனை அவற்றின் முன்னர்ச் சேர்த்தே வழங்கு கின்றனர்.

இறைவனுடைய உடலுறுப்புகள், ஆடை அணிகலன்கள், ஆயுதங்கள், இறைவனோடு தொடர்புடைய பிற பொருள்கள், இடங்கள், பிராட்டியின் உடலுறுப்புகள், தலைமகளின் சுற்றத் தினர், அவதார மூர்த்தியோடு தொடர்புடையவர்கள் ஆகியோரைக் குறிக்குமிடங்களில் திரு என்னும் அடையினைச் சேர்த்து எழுதிச் செல்கின்றனர். சான்றாக (அ) திருவடி, (ஆ) திருவணிகலன்கள், (இ) திருக்குற்றுடைவாள், (ஈ) திருத்தேர், (உ) திருஅட்டபுயகரம், (ஊ) திருமுலைத்தடம், (எ) திருத் தம்பியார், (ஏ) திருத்தோழன்மார் என வருதல் காணலாம்.[71]

கீழே வருவன 'திவ்ய' என்னும் அடைபெற்றுவரும் சொற் களாகும்:[72] (அ) திவ்யசிஹ்நங்கள், (ஆ) திவ்ய சேஷ்டிதம், (இ) திவ்ய ஜ்ஞாநம், (ஈ) திவ்ய நகரம், (உ) திவ்ய நகரி, (ஊ) திவ்யாந்த: புரம், (எ) திவ்யபர்யங்கம், (ஏ) திவ்யபூஷணங்கள், (ஐ) திவ்யலோகம், (ஒ) திவ்யவிக்ரஹம், (ஓ) திவ்யஸ்த்தாநம், (ஔ) திவ்யஸிம்ஹாஸநம், (க) திவ்யாபரணங்கள், (ங) திவ்யா யுதங்கள், (ச) திவ்யாவதாரங்கள், (ஞ) திவ்யாவயவங்கள், (ட) திவ்யாஸ்யம்.

ஸ்ரீ என்னும் அடைமொழியை ஆள்களின் பெயர்கள், கீதை, இராமாயணம் முதலிய புனித நூல்கள், பெருமானுடைய படைக்

---

71. (அ) 1.10.1-24; (ஆ) 3.1.1-6; (இ) பெரி.தி.3.4.2; (ஈ) 4.6.1-9; (உ) பெ.தி.1.8.5; (ஊ) 2.6.2-36; (எ) பெரி.தி.3.10.0; (ஏ) பெரி.தி.3.4.7.

72. (அ) 6.5.1-6; (ஆ) 1.8.8-6; (இ) 3.2.4-6; (ஈ) 4.5.0-24; (உ) பெரி.தி.4.8.1; (ஊ) பெரி.தி.2 1.9; (எ) 4.5.0-9; (ஏ) 3.8.0-9; (ஐ) 4.5.0-9; (ஒ) 9.4.1-36; (ஓ) 9.2.4-9; (ஔ) மூ.தி.53; (க) 3.1.1-12; (ங) 4.8.7-24; (ச) 1.3.4-9; (ஞ) 3.1.1-9; (ட) 5.3.8-9.

கருவிகளின் பெயர்கள், பெருமானது செயல், பெருமானோடு தொடர்புடைய இடங்கள், கோயிலில் உள்ள களஞ்சியம் ஆகிய வற்றோடு சேர்த்து வழங்கியுள்ளனர். சான்றாக (அ) ஸ்ரீ கண்டா கர்ணன், (ஆ) ஸ்ரீ கீதை, (இ) ஸ்ரீசார்ங்கம், (ஈ) ஸ்ரீதூது, (உ) ஸ்ரீ பத்ரிகாச்ரமம், (ஊ) ஸ்ரீ பண்டாரம் என வருதலைக் காட்ட லாம்.[73]

'திரு' என்னும் அடையின்றி, (அ) 'உகிர்', (ஆ)'வாய்' ஆகிய இரு சொற்களும்,[74] 'ஸ்ரீ' என்னும் அடையின்றி (அ) க்ருஷ்ணன், (ஆ) தண்டகாரண்யம், (இ) ப்ரஹ்லாதன், (ஈ) வாமநன், (உ) வஸிஷ்ட பகவான், (ஊ) விச்வாமித்ரன், (எ) வைஷ்ணவர்கள், (ஏ) ஸேனை முதலியார் ஆகிய எட்டுச் சொற்களும்[75] சில இடங்களில் வருகின்றன. மிகப் பல இடங்களில் அடைகளோடு வரும் இவை சிலவிடங்களில் மட்டும் அடைகளின்றி வருவதனை நோக்கும்போது அவ்விடங்களில் ஏடெழுதுவோரால் அவை விடப்பட்டிருக்கலாம் என்றே துணிய வேண்டியுள்ளது.

இவ்வடைகளில் 'திரு' என்பது பெரும்பாலும் தமிழ்ச்சொற் களோடும், 'திவ்ய' என்பது வடசொற்களோடும், ஸ்ரீ என்பது ஆள்களின் பெயர்களோடும் வழங்கற்பாடு பற்றிக் குறிக்கப் பட்டுள்ளன என்பது கூர்ந்து நோக்கின் புலனாகும்.

2) திருவரங்கம் (அ) கோயில் என்றும், (ஆ) பெரிய கோயில் என்றும் குறிக்கப்படுகின்றது.[76]

3) திருவேங்கடம், திருமாலிருஞ்சோலைமலை இரண்டும் பொதுவாகத் ''திருமலை'' என்று சுட்டப்படுகின்றன.[77] திருவேங்கடத்தை (அ) 'வடக்குத் திருமலை', (ஆ) 'பெரிய திருமலை' என்றும்[78] திருமாலிருஞ்சோலையினைத் 'தெற்குத் திருமலை' என்றும்[79] சுட்டும் வழக்கம் இருந்துள்ளது.

---

73. *(அ) 2.7.0-24; (ஆ) 2.10.10-6; (இ) 7.4.1-12; (ஈ) பெரி.தி.2.1.1; (உ) பெ.தி.1.4.1; (ஊ) 3.9.9-36.*
74. *(அ) மு.தி.36; நான்.தி.5; (ஆ) 10.1.9-9; 10.3.4-24.*
75. *(அ) 3.2.9-9; (ஆ) பெரி.தி. 4.9.1; (இ) 3.2.5-36; (ஈ) 6.9.2-9; (உ) க.நு.சி.0; (ஊ) நம்பிள்ளை; தி.நெ.தா.12; (எ) 4.6.8-9; (ஏ) 3.9.9-12.*
76. *(அ) தி.ச.வி.49; தி.ச.வி.93; (ஆ) அம.1, பெரி.*
77. *3.3 7-6; 2.10.9-9.*
78. *(அ) பெ.மடல், கண்ணி, 6; (ஆ) இ.தி.54.*
79. *இ.தி.54.*

4) நம்மாழ்வார் பிறந்த திருக்குருகூரைத் திருநகரி என்று சிறப்பித்துச் சொல்லியுள்ளனர்.[80] பிற்காலத்தில் 'ஆழ்வார் திருநகரி' என்று அவ்வூர் பெயர்மாற்றம் பெற இவ்வழக்கமே அடியாய் அமைந்தது எனலாம்.

5) பெருமான் திருக்கையில் இருக்கும் சங்கு சக்கரங்கள் ஆழ்வார்களாகக் குறிக்கப் பெறுகின்றன.[81] சக்கரத்தை (அ) ஆழ்வான், (ஆ) திருவாழியாழ்வான் என்றும்,[82] சங்கை ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வான் என்றும்[83] குறிப்பர். பெருமானுக்குரிய துளசியுங்கூடத் திருத்துழாயாழ்வாராக மதிப்போடு பேசப் படுகின்றது.[84] திருவரங்கமும், திருவேங்கடமும் முறையே 'கோயிலாழ்வா'ராகவும், 'திருமலை யாழ்வா'ராகவும் குறிக்கப் பெறுகின்றன.[85] பாம்பாகிய ஆதிசேடன் 'திருவனந்தாழ்வான்' என்றும்,[86] பெருமானால் முதலையிடமிருந்து காப்பாற்றப்பட்ட யானையாகிய கஜேந்திரன் 'ஸ்ரீ கஜேந்திராழ்வான்' என்றும்[87] போற்றப் பெறுகின்றன. இவையனைத்தும் இறைவன் குணங்களில் ஈடுபடுவனவாகக் கருதப்படுவதால் ஆழ்வாராகக் குறிக்கப் பெறுகின்றன. இறையேயன்றிப் பெருமானின் குணங்களில் ஈடுபட்டுத் தோய்ந்துநின்ற சிலரும் 'ஆழ்வான்' என்று போற்றப் பெறுகின்றனர். அவர்கள்[88] வருமாறு: (அ) அநிருத்தன் - அநிருத்தாழ்வான் (ஆ) சேனை முதலியார் - ஸ்ரீ ஸேநாதிபதி யாழ்வான் (இ) சத்ருக்கனன் - ஸ்ரீ சத்ருக்நாழ்வான் (ஈ) பரசுராமன் - ஸ்ரீ பரசுராமாழ்வான் (உ) பரதன் - ஸ்ரீபரதாழ் வான் (ஊ) பிரகலாதன் - ஸ்ரீபிரகலாதாழ்வான் (எ) வீடணன் - ஸ்ரீ விபீஷணாழ்வான் (ஏ) ஸாத்விதி - ஸாத்விதியாழ்வார்.

6) பெருமானுக்குக் கொடியாகவும் வாகனமாகவும் இருப்பது கருடன் என்னும் பறவை. அதனைத் திருவடி என்றும்,[89] பெரிய திருவடி என்றும்[90] குறிப்பிடுவர். இவற்றுள் திருவடி என்பது அனுமனைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.[91]

---

80. 4.1.11-36.
81. 8.2.10-24; 3.4.3-24.
82. (அ) தி.பல். 2; (ஆ) 4.5.4-9.
83. பெ.மடல், கண்ணி, 3.
84. தி.வி.4.
85. பாவை, 23-6; 3.8.7-36.
86. நான்.தி.66.
87. 9.2.5-9.
88. (அ) 3.10.4 36; (ஆ) 3.3.2-36; (இ) 3.7.0-36; (ஈ) .தி.பல். 0; (உ) க.நு,சி. 0; (ஊ) 3.9.1-24; (எ) பெரி.தி. 4.9.1; (ஏ) பெரி.தி. 4.9.5.
89. தி.வி. 41.
90. 9.2.5-24.
91. 2.2.5.36.

7) திருமகளானவள் பிராட்டி,[92] பெரிய பிராட்டி[93] ஆகிய இருவகையாகச் சுட்டப்பெறுகிறாள். இவற்றுள் பிராட்டி என்பது திருமகளை மட்டுமன்றித் தலைமகளையும்[94] சீதையையும்[95] குறித்தற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

8) திருவரங்கச் செல்வனைப் ''பெரிய பெருமாள்'' என்றும்[96] ''நம்பெருமாள்'' என்றும்[97] குறித்துள்ளனர்.

9) இராமாயணப் பாத்திரங்களுக்கு வேறு சில பெயர்களை இட்டு வழங்கியுள்ளனர். வைணவப் பெருமக்களிடையே அப்பெயர்கள் பெருவழக்கில் இருந்துள்ளன.

இராமாயணப் பாத்திரம்		வைணவர் தந்த பெயர்
அங்கதன்	-	அங்கதப் பெருமாள்[98]
அனுமன்	-	திருவடி[99]
	-	ஐந்த்ர வ்யாகரண பண்டிதன்[100]
இராமன்	-	பெருமாள்[101]
	-	சக்ரவர்த்தி திருமகன்[102]
	-	சக்ரவர்த்தித் திருமகன்[103]
இலக்குவன்	-	இளைய பெருமாள்[104]
குகன்	-	ஸ்ரீகுஹப் பெருமாள்[105]
கைகேயி	-	நடுவிலாய்ச்சி[106]
சடாயு	-	பெரியவுடையார்[107]
சீதை	-	பிராட்டி,[108] மைதிலி[109]
	-	ஸ்ரீஜநகராஜன் திருமகள்[110]

---

92. 2.6.2-24.
93. 1.9.4-36.
94. 2.0.0-6.
95. 2.8.1-36.
96. தி.மா. 0.
97. தி.ச.வி. 49.
98. பெ.தி. 2.6.4.
99. 1.4.4-36.
100. பெ.தி. 3.6.1.
101. 1.5.0-9.
102. 1.6.7-36.
103. 7.6.9-12.
104. பெரி.தி. 1.1.2.
105. பெரி.தி. 3.10.4.
106. 10.8.6-36.
107. தி.பல். 1.
108. பெ.தி. 1.2.3.
109. 2.6.0-36.
110. க.நு.சி. 4 நம்பிள்ளை.

சுக்கிரீவன் - மஹாராஜர்,[111] குரங்கு[112]

சூர்ப்பணகை - மூக்கறைச்சி[113]

தசரதன் - சக்கரவர்த்தி[114]

இராவணனை இயற்பெயரால் சுட்டுவதன்றி, வெறுப்பும் இகழ்ச்சியும் தோன்றப் பயல்,[115] பையல்[116] ஆகிய சொற்களாலும், அரக்கர்களையும்[117] துரியோதனன் படையினரையும்[118] அவ்வாறே 'பையல்கள்' என்றும் குறிப்பர்.

10) பாரதப் பாத்திரங்களைக் கீழ்வருமாறு குறிப்பர்.

அருச்சுனன் - தனஞ்சயன்[119]

கண்ணன் - ஸ்ரீ வஸுதேவர் திருமகன்[120]
ஸ்ரீ நந்தகோபர் திருமகன்[121]
தேவகிபுத்ர ரத்நம்[122]

பலராமன் - நம்பிமூத்தபிரான்[123]

11) இவையே யன்றிப் பெரியோர்கள் வாழும் இல்லத்தைத் திருமாளிகை என்றும், மதிய உணவு, இரவு உணவு (பால்), கறி, நெய், வெற்றிலைபாக்கு ஆகியவற்றை முறையே பகலமுது,[124] இரவமுது,[125] கறியமுது,[126] நெய்யமுது,[127] இலையமுது[128] என்றும் குறித்துச் செல்கின்றனர்.

12) பற்களைத் 'திருமுத்து'[129] என்று குறிப்பதும் இவர்கள் வழக்கம்.

12. இலக்கண மரபு மீறல்கள்

தமிழிலக்கண விதிகளுக்கு மாறாகச் சில அமைப்புகள் காணப்படுகின்றன.

---

111. 9.7.6-24.
112. 1.3.1-36.
113. 10.3.9-36.
114. தி.பல். 0.
115. தி.கு.தா. 15.
116. பெ.தி. 2.2.1.
117. 3.01.1-24.
118. 3.6.10-36.
119. பெரி.தி. 5.3.8.
120. 8.6.0-9.
121. பெரி.தி. 1.1.2.
122. க.நு.சி 3, அழகு.
123. பாவை, 17-3.
124. தி.மா. 27.
125. தி.வி. 99.
126. தி.வி. 99.
127. தி.வி. 99.
128. தி.வி. 51.
129. மு.தி. 93.

1) மூவிடப் பெயர்கள்

யான், நாம், நீர், தான், தாம் என்னும் மூவிடப் பெயர்கள் 'அது' என்னும் ஆறாம் வேற்றுமை உருபு ஏற்கும்போது குறுகி நின்று ஒற்று இரட்டாது வரும்.

(எ.டு) எனது, நமது, உமது, தனது, தமது.

ஆனால், இதற்கு மாறாக, என்னது,[130] நம்மது,[131] உம்மது,[132] தன்னது,[133] தம்மது[134] என்று வருகின்றன.

2) இருதிணைப் பொதுப்பெயர்

'எல்லாம்' என்னும் இருதிணைப் பொதுப்பெயர் அஃறிணையில் வரும்போது அற்றுச்சாரியை பெறும். (எ.டு) எல்லாவற்றுக்கும்.

இதற்கு மாறாக, 'எல்லாத்துக்கும்'[135] என்று அத்துச்சாரியை பெற்று வருகின்றது.

3) முற்றுகரச் சுட்டுப் பெயர்கள்

அது, இது என்னும் முற்றுகரச் சுட்டுப் பெயர்களின்முன் உயிர்முதல் சொற்கள் வருமிடத்து வகர உடம்படுமெய் பெற்று வரும்.

(எ.டு) அது + அன்று = அதுவன்று; இது + இடர்ப்பட்ட = இதுவிடர்ப்பட்ட.

இதற்கு மாறாக இவை உகரங் கெட்டு உயிரேற இடங் கொடுக்கின்றன.

அதடியாக[136] (அது + அடியாக).
அதாயிருக்க[137] (அது + ஆயிருக்க).
அதிடர்ப்பட்ட[138] (அது + இடர்ப்பட்ட).
அதெல்லாம்[139] (அது + எல்லாம்).
அதொழிய[140] (அது + ஒழிய).

---

130. பெரி.தி. 1.3.2.
131. தி.ச.வி. 89.
132. தி.ச.வி. 91.
133. பெரி.தி. 5.3.1.
134. 2.6.6-24.
135. தி.ச.வி. 117.
136. 1.2.9-24.
137. பெ.தி. 2.3.6.
138. பெ.தி. 2.3.0.
139. பெ.தி. 4.9.3.
140. தி.ச.வி. 94.

இதடைய[141] (இது+அடைய).
இதாயிற்று[142] (இது+ஆயிற்று).
இதில்லாதாரும்[143] (இது+இல்லாதாரும்).
இதுண்டாமித்தனை[144] (இது+உண்டாமித்தனை).
இதென்னாய்[145] (இது+என்னாய்).
இதொரு[146] (இது+ஒரு).

4) சுட்டுப் பெயர்களும் பிற பெயர்களும் வேற்றுமை ஏற்றல்

அ) அது, இது என்னும் சுட்டுப் பெயர்களும் ஏனைய சில பெயர்களும் இரண்டு மூன்றாம் வேற்றுமையுருபுகளை ஏற்கும் போது சாரியை பெற்றும் பெறாமலும் வரும். அவ்வாறு வரும் போது தகரம் இரட்டிப்பது இல்லை. (எ.டு)

அது+ஐ=அதனை, அதை. அது+ஆல்=அதனால்.
இது+ஐ=இதனை, இதை. இது+ஆல்=இதனால்.
எது+ஐ=எதனை; எதை. எது+ஆல்=எதனால்.
உகந்தது+ஐ=உகந்ததனை; உகந்ததை.
நல்லது+ஐ=நல்லதனை, நல்லதை.
பெற்றது+ஆல்=பெற்றதனால்.

இதற்கு மாறாக,

அது+ஐ=அத்தை.[147]
அது+ஆல்=அத்தால்.[148]
இது+ஐ=இத்தை.[149]
இது+ஆல்=இத்தால்.[150]
எது+ஐ=எத்தை.[151]
எது+ஆல்=எத்தால்.[152]
உகந்தது+ஐ=உகந்தத்தை.[153]
என்னும்+ஐ=என்னுமத்தை.[154]
என்கிறது+ஆல்=என்கிறத்தால்.[155]
பெற்றது+ஆல்=பெற்றத்தால்.[156]

---

141. பெ.தி. 10.4.3.
142. பெ.தி. 11.3.3.
143. 3.3.0-36.
144. பெ.தி. 2.6.2.
145. தி.வி. 33.
146. பெரி.தி. 3.5.10.
147. 1.2.4-6.
148. 1.7.9-36.
149. 1-7-4-9.
150. 1.2.10-36.
151. 5.6.1-36.
152. 3.2.6-24.
153. பெ.தி. 4.9.8.
154. சி. மடல், கண்ணி, 45.
155. பாவை, 29-6.
156. பெ.தி. 7.6.1.

ஆ) இப்பெயர்கள் நான்காம் வேற்றுமை உருபு ஏற்கும் போது சாரியை பெற்று வரும்.

அது + கு = அதற்கு; அதனுக்கு.
இது + கு = இதற்கு; இதனுக்கு.
எது + கு = எதற்கு; எதனுக்கு.
கண்டது + கு = கண்டதற்கு; கண்டதனுக்கு.

இதற்கு மாறாக,

அது + கு = அதுக்கு.[157]
இது + கு = இதுக்கு.[158]
எது + கு = எதுக்கு.[159]
கண்டது + கு = கண்டதுக்கு.[160]

என்று சாரியை பெறாமலேயே வருகின்றன.

இ) அது, இது என்னும் சுட்டுப் பெயர்கள் 'அன்' சாரியை பெற்று வருவதற்கு மாறாக 'இன்' சாரியை பெற்று வருகின்றன.

அதின்கையிலே.[161]	இதின்காலை.[164]
அதின்கட்டி.[162]	இதின்தண்மை.[165]
அதின்மேலே.[163]	இதின்மேலே.[166]

5) புதிய ஆறாம் வேற்றுமைச் சொல்லுருபு

'ஓட்டை' என்பது ஆறாம் வேற்றுமைச் சொல்லுருபாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. என்னோட்டைக் கலவியாலே,[167] திருமேனியோட்டை ஸ்பர்சத்தாலே,[168] திவ்யாயுதங்களோட்டைச் சேர்த்தி,[169] எம்பெருமானோட்டை ஸ்பர்சத்தாலே.[170]

6) வியப்புணர்ச்சியைப் புலப்படுத்தல்

வியப்புணர்ச்சியைப் புலப்படுத்த ஈகாரம் சொற்களில் இடம் பெறுகின்றது. அவ்வாறு வரும் சொற்களாவன:[171] (அ) அல்லவீ, (ஆ) அறப்பட்டதீ, (இ) இருந்ததீ, (ஈ) இருந்

157. 161-24.
158. 1.1.11.
159. 1.0.0-24.
160. 5.4.7-36.
161. 3.5.1-36.
162. 3.5.6-12.
163. பெ.தி. 4.10.9.
164. பெ.தி. 2.3.9.
165. 3.2.3-36.
166. பெ.தி. 9.6.3.
167. 3.3.4-24.
168. 3.10.2-36.
169. 3.10.1-24.
170. நான்.தி. 94.
171. (அ) பாவை, 6-3; (ஆ) க.நு.சி. 2, அழகு; (இ) 6.1.6-36;

தாயி), (உ) இல்லையீ, (ஊ) ஏகினாயீ, (எ) கண்டறியோமீ, (ஏ) கண்டிலோமீ, (ஐ) கட்டிற்றீ, (ஒ) கேட்டிலையீ, (ஓ) கேட்கிறாயீ, (ஔ) சொன்னாயீ, (க) சொன்னார்களீ, (ங) நடந்ததீ, (ச) நின்றிகோளீ, (ஞ) நின்றதீ, (ட) பொருளில்லையீ, (ண) மறந்தாயீ, (த) விட்டிலேனீ.

7) இடை நிலைகள்

பன்மையிலும் எதிர்மறையிலும் 'கின்று' என்னும் இடைநிலைக்கு மாறாக 'கிறு' மட்டும் இடம் பெறுகிறது.

பன்மையில் 'கிறு' இடைநிலை: கிடக்கிறன,[172] சொல்லுகிறன.[173] எதிர்மறைச் சொற்களில் 'கிறு' இடைநிலை : அறிகிறிலேன்,[174] அறிகிறிலோம்,[175] அகற்றுகிறிலை,[176] ஆகிறிலீர்,[177] இகலுகிறிலன்,[178] அலங்கரிக்கிறிலள்,[179] இரங்கிறிலர்,[180] அறிகிறனவில்லை.[181]

இவ்வுரைகளில் (செய்யா + நின்று) செய்யாநின்று என்பது ஒருசொல் நீர்மையாக வழங்குகின்றது. 'செய்யாநில்' என்பதே இதன் பகுதியாகும்.[182] 'செய்யா' என்பதன் முன் நிற்றல் என்னும் சொல் துணைவினையாக இயங்கி வழக்காறு பெற்றது என்பது தெரிகின்றது. பொதுவாகச் 'செய்யாநின்று' என்பதே பெருவழக்கினது. அதனையொட்டியே 'ஆநின்று' என்பதனைத் தனி விகுதியாகக் கண்டனர் போலும். 'செய்யாநிற்கும்' என்பதும் சில இடங்களில் வந்துள்ளது.

அலையாநின்றால்,[183] அறிவியாநின்று,[184] ஆகாநின்றது,[185] ஆராயாநின்றன.[186]—இவற்றில் 'ஆநின்று' இடைநிலை.

(ஈ) 4.10.7-36; (உ) பெ.தி. 2.8.2; (ஊ) தி.வி. 99; (எ) 6.2.3-24; (ஏ) 1.6.0-36; (ஐ) தி.நெ.தா. 8; (ஒ) பாவை 2:-6; (ஓ) பாவை 26-6; (ஔ) க.நு.சி 4, அழகு; (க) 4.9.6-36; (ங) 3.3.6-36; (ச) 2.10.1-36; (ஞ) 2.1.7-24; (ட) 1.6.0-36; (ண) பாவை, 29-6; (த) 7.1.6-36.

172. க.நு.சி. 1, நம்பிள்ளை.
173. 3.8.9-36.
174. 4.4.5-9.
175. 1.4.6-36.
176. 2.1.6-24.
177. 2.4.2-9.
178. 1.9.7-9.
179. பெ.தி. 2.7.2.
180. பெ. திருவந். 50.
181. பெ.தி. 3.8.9.
182. நன்னூல் நூற்பா, 143.
183. பாவை 30.6.
184. 4.4.1-9.
185. பெ.தி. 6.1.8.
186. 3.8.3-12.

அலமாவாநிற்கும்,[187] ஆதரியாநிற்பர்கள்,[188] உடாநிற்கும்.[189] —இவற்றில் 'ஆநில்' இடைநிலை. இங்ஙனமன்றி, 'செய்யாநில்' என்பதனைப் பகுதியாகக் கொள்வதே பொருந்தும்.

8) இருவகை வழக்கு

'ஒருகால்' என்னும் சொல்வழக்கு ஒற்று மிக்கும் மிகாமலும் வழங்குகின்றது.

ஒருகால்[190] - ஒருக்கால்[191]

9) ஒற்றுமிகுத்து எழுதுதல்

சிறு + கை = சிறுக்கை.[192]
சிறு + தேவி = சிறுத்தேவி.[193]
சிறு + பவளம் = சிறுப்பவளம்.[194]
சிறு + பிள்ளை = சிறுப்பிள்ளை.[195]
சிறு + பெண்கள் = சிறுப்பெண்கள்.[196]

பெரியாழ்வார் திருமொழி உரையில் மட்டும் ஓரிடத்தில் 'சிறு பிள்ளைகள்'[197] என்று ஒற்று மிகாமல் வருகின்றது. பெரியாழ்வார் 'சிறுக்கன்று'[198] என்று எழுதிச்செல்வது இவர்கட்கு முன்மாதிரியாக அமைந்தது போலும்.

10) மரியாதை முன்னிலைப் பன்மை

தேவர் என்னும் சொல்வழக்கு மரியாதை முன்னிலைப் பன்மையில் வழங்குகின்றது.

தேவர்க்கு உறுப்பாமிதுவே வேண்டுவதென்கிறார்.[199]
தேவர் நெகிழ்க்கிலும் நெகிழாதபடி பற்றினேன்.[200]
அவளை அநுபவிப்பிக்கிற தேவரும்கூட எனக்கருளிச் செய்ய வேணும்.[201]

---

187. பெரி.தி. 4.5.9.
188. 3.4.11-36.
189. பெரி.தி. 3.7.8.
190. பெரி.தி. 1.8.7; 1.9.7-9.
191. பெரி.தி. 5.1.10; பாவை 24-6.
192. பெரி.தி. 1.4.2.
193. பெரி.தி. 3.10.4.
194. பெரி.தி. 1.5.10.
195. பெரி.தி. 3.3.5.
196. 6.7.6-12.
197. பெரி.தி. 2.9.9.
198. பெரி.தி. 2.6.3.
199. 2.9.5-36.
200. 2.6.1-24.
201. 3.1.1-24.

11) வினையாலணையும் பெயர்களின் புதுமை வடிவங்கள்

'செய்யும்' என்னும் பெயரெச்சத்தோடு சுட்டு, இடப்பெயர்கள் சேர்ந்து ஒரு சொல் நீர்மைபெற்று வினையாலணையும் பெயர்களாகி வழங்குகின்றன.

இருக்கும்	+	அது	=	இருக்குமது.[202]
என்னும்	+	அது	=	என்னுமது.[203]
செய்யும்	+	அது	=	செய்யுமது.[204]
படும்	+	அது	=	படுமது.[205]
விடும்	+	அது	=	விடுமது.[206]
உதவும்	+	அவன்	=	உதவுமவன்.[207]
பண்ணும்	+	அவன்	=	பண்ணுமவன்.[208]
வரும்	+	அவன்	=	வருமவன்.[209]
அறியும்	+	அவர்கள்	=	அறியுமவர்கள்.[210]
இருக்கும்	+	அவர்கள்	=	இருக்குமவர்கள்.[211]
சொல்லும்	+	அவர்கள்	=	சொல்லுமவர்கள்.[212]

12) வினைமுற்றுகளின் புதுமை வடிவங்கள்

அ) ஒன்றன்பால் வினைமுற்றுகளோடு, அன் அல்லது இன் என்னும் சாரியையினையும் அகர விகுதியினையும் சேர்த்துப் பலவின்பால் வினைமுற்றுகளை உருவாக்கிக் கொண்டுள்ளனர்.

உண்டாயிற்றன[213]	=	உண்டாயிற்று	+அன்+அ
போயிற்றன[214]	=	போயிற்று	+அன்+அ
முகங்காட்டிற்றின[215]	=	முகங்காட்டிற்று	+இன்+அ
நீங்கிற்றின[216]	=	நீங்கிற்று	+இன்+அ
விதேயமாயிற்றின[217]	=	விதேயமாயிற்று	+இன்+அ
ஆய்த்தின[218]	=	(ஆயிற்று) ஆய்த்து	+இன்+அ
போய்த்தின[219]	=	(போயிற்று) போய்த்து	+இன்+அ

202. 4.9.9-6.
203. பெ.தி. 1.1.8.
204. பெ.தி. 1.2.6.
205. தி.வி. 57.
206. பெ.தி. 1.1.8.
207. பெ.தி. 5.10.1.
208. 5.9.3-12.
209. பெரி.தி. 3.1.1.
210. 6.2.7-24.
211. பெ.தி. 8.1.1.
212. 6.2.11-12.
213. 4.5.3-12.
214. பெ.தி. 11.6.6.
215. 1.4.4-36.
216. 10.4.9-9.
217. 1.9.9-24.
218. பெரி.தி. 4.9.5.
219. 10.4.9-36.

ஆ) 'வல்லது' என்னும் பொருளில் 'வற்று' என்னும் குறிப்பு வினைமுற்றுப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அவனருள் கூடவற்றே யென்கிறாள்.[220]

ரக்ஷகனைப் பெறாமையால் வரும் தாபத்தையும் தீர்க்கவற்றாயிருக்கை.[221]

பேசவற்றாயிருக்கை.[222]

இ) எதிர்காலத் தன்மைப் பன்மை வினைமுற்றுகள் உகரச் சாரியையும் தகர ஒற்றாகிய எழுத்துப் பேறும் 'ஓம்' என்னும் விகுதியும் பெற்று வழங்குகின்றன.

அறிவுதோம்.[223] = அறி + வ் + உ + த் + ஓம் (அறி-பகுதி; வ்-இடைநிலை; உ-சாரியை; த்-எழுத்துப்பேறு; ஓம்-விகுதி).

ஆவுதோம்[224]- ஆகு(ஆ) + வ் + உ + த் + ஓம் (ஆ-ஆகு என்னும் பகுதியின் திரிபு; வ்-இடைநிலை; உ-சாரியை; த்-எழுத்துப்பேறு; ஓம்-விகுதி).

பிறப்புதோம்[225] = பிற + ப் + ப் + உ + த் + ஓம் (பிற-பகுதி; ப்-சந்தி; ப்-இடைநிலை; உ-சாரியை; த்-எழுத்துப்பேறு; ஓம்-விகுதி).

ஈ) எதிர்கால முன்னிலை ஒருமை வினைமுற்றுகள் உகரச் சாரியையும் தகர ஒற்றாகிய எழுத்துப்பேறு பெற்ற இகர விகுதியும்(தி) பெற்று வருகின்றன.

அருளுவுதி[226] = அருளு + வ் + உ + த் + இ (அருளு-பகுதி; வ்-இடைநிலை; உ-சாரியை; த்-எழுத்துப்பேறு; இ-விகுதி).

படுவுதி[227] = படு + வ் + உ + த் + இ (படு-பகுதி; வ்-இடைநிலை; உ-சாரியை; த்-எழுத்துப்பேறு; இ-விகுதி).

துடிப்புதி[228] = துடி + ப் + ப் + உ + த் + இ (துடி-பகுதி; ப்-சந்தி ப்-இடைநிலை; உ-சாரியை; த்-எழுத்துப்பேறு; இ-விகுதி).

---

220. 5.9.9-9.
221. 1.8.3-24.
222. 2.2.11-24. (ஈட்டில் வல்லதாயிருக்கை என வருதல் கருதுதற்குரியது.)
223. பெ.தி. 9.2.7.
224. பெ.தி. 4.9.5.
225. 1.3.0-36.
226. பெ.தி. 6.1.2.
227. 7.2.1-36.
228. 6.2.1-24.

உ) எதிர்கால முன்னிலைப் பன்மை வினைமுற்றுகள் உகரச் சாரியையும் தகர ஒற்றாகிய எழுத்துப்பேறு பெற்ற இர்(திர்) அல்லது ஈர் (தீர்) விகுதியும் கொண்டு நிற்கின்றன.

இருப்புதிர்[229] = இரு+ப்+ப்+உ+த்+இர் (இரு-பகுதி; ப்-சந்தி; ப்-இடைநிலை; உ-சாரியை; த்-எழுத்துப்பேறு; இர்-விகுதி).

ஆவுதீர்[230] = ஆகு(ஆ)+வ்+உ+த்+ஈர் (ஆ-ஆகு என்னும் பகுதியின் திரிபு; வ்-இடைநிலை; உ-சாரியை; த்-எழுத்துப்பேறு; ஈர்-விகுதி).

ஊ) 'இர்' என்னும் விகுதி ரகரம் கெட்டுநிற்க அதன்மேல் 'கோள்' என்பதனை விகுதிமேல் விகுதியாகப் பெற்றுப் பல முன்னிலை வினைமுற்றுகள் வந்துள்ளன.

அல்லிகோள்[231] = அல்+இ(ர்)+கோள் (அல்-பகுதி; இ(ர்)-விகுதி; கோள்-விகுதி மேல் விகுதி).

உகந்திகோள்[232] = உக+ந்+த்+இ(ர்)+கோள் (உக-பகுதி; ந்-சந்தி; த்-இடைநிலை; இ(ர்)-விகுதி; கோள்-விகுதி மேல் விகுதி).

காண்கிறிகோள்[233] = காண்+கிறு+இ(ர்)+கோள் (காண்-பகுதி; கிறு-இடைநிலை; இ(ர்)-விகுதி; கோள்-விகுதி மேல் விகுதி).

எ) 'இர்' விகுதி கெடாமல் நிற்க அதன்மேல் கோள் என்பதனை விகுதிமேல் விகுதியாகப் பெற்றுச் சில முன்னிலை வினைமுற்றுகள் வந்துள்ளன.

இழந்திர்கோள்[234] = இழ+ந்+த்+இர்+கோள் (இழ-பகுதி; ந்-சந்தி; த்-இடைநிலை; இர்-விகுதி; கோள்-விகுதிமேல் விகுதி).

புக்கிர்கோள்[235] = புகு+இர்+கோள் (புகு-பகுதி, புக்கு என்று இரட்டித்தது; இர்-விகுதி; கோள்-விகுதிமேல் விகுதி).

ஏ) இகர விகுதியோடு கூடிய முன்னிலை ஒருமை வினை முற்றுகள் 'கோள்' என்னும் பிறிதோர் விகுதியைப் பெற்றுப் பன்மைகளாக மாறி வழங்குகின்றன. ஒருமை விகுதிமேல் பன்மை விகுதி சேர்வது புதுமையானதாகும்.

---

229. 6.2.2-24.
230. தி.வி. 33.
231. தி.மா.6.
232. 7.3.2-36.
233. 6.1.7-36.
234. 6.5.2-6.
235. 6.5.2-6.

செப்புதிகோள்[236] = செப்பு + த் + இ + கோள் (செப்பு-பகுதி; த்-எழுத்துப் பேறு; இ-விகுதி; கோள்-விகுதிமேல் விகுதி).

ஐ) மேற்கூறியவாறு ஒருமை விகுதிமேல் பிறிதொரு பன்மை விகுதியைப் பெற்றுப் பன்மைகளாக மாறிவரும் வினைமுற்று களுள் பல உகரச் சாரியையோடும் காணப்படுகின்றன.

இருப்புதிகோள்[237] = இரு + ப் + ப் + உ + த் + இ + கோள் (இரு-பகுதி; ப்-சந்தி; ப்-இடைநிலை; உ-சாரியை; த்-எழுத்துப்பேறு; இ-விகுதி; கோள்-விகுதிமேல் விகுதி).

கிட்டுவுதிகோள்[238] = கிட்டு + வ் + உ + த் + இ + கோள் (கிட்டு-பகுதி; வ்-இடைநிலை; உ-சாரியை; த்-எழுத்துப்பேறு; இ-ஒருமை விகுதி; கோள்- விகுதிமேல் விகுதி).

புகுவுதிகோள்[239] = புகு + வ் + உ + த் + இ + கோள் (புகு-பகுதி; வ்-இடைநிலை; உ-சாரியை; த்-எழுத்துப் பேறு; இ-விகுதி; கோள்-விகுதிமேல் விகுதி).

வருவுதிகோள்[240] = வா + வ் + உ + த் + இ + கோள் (வரு-வா என்னும் பகுதியின் திரிபு; வ்-இடைநிலை; உ-சாரியை; த்-எழுத்துப் பேறு; இ-ஒருமை விகுதி; கோள்-விகுதிமேல் விகுதி).

ஓ) 'உம்' என்னும் விகுதியோடு கோள் என்பதனை விகுதிமேல் விகுதியாகக் கொண்டு வழங்கப்பெறும் ஏவற் பன்மை வினைமுற்றுகளே மிகுதியாகக் காணப்படுகின்றன.

கோள் என்பது 'கள்' விகுதியின் திரிந்த வடிவமாகும். 'கள்' விகுதியும் சில இடங்களில் வருகின்றன.

அறிவியுங்கோள்[241] = அறிவியும் + கோள்.
எழுப்புங்கோள்[242] = எழுப்பும் + கோள்.
சூட்டுங்கோள்[243] = சூட்டும் + கோள்.
ஏத்துங்கள்[244] = ஏத்தும் + கள்.
ஆச்ரயியுங்கள்[245] = ஆச்ரயியும் + கள்.

வினைமுற்றுகளில் இவ்வாறு பல்வேறு புதிய அமைப்புகள் காணப்படுகின்றன.

---

236. 9.7.6-37.
237. பாவை 8-6.
238. 10.2.3-36.
239. 10.2.3-9.
240. பாவை, 9-6.
241. 1.4.3-9.
242. பாவை, 0-3.
243. பெ.தி. 7.4.10.
244. 3.5.10-6.
245. 3.6.8-6.

12. தமிழ்க் கூறுகள் கொண்ட வடசொற்கள்

தமிழ் வேற்றுமை உருபு சேர்ந்த வடசொற்கள்

வடமொழிப் பெயர்ச்சொற்கள் பலவற்றை அப்படியே எடுத்தாள்வதோடு தமிழ் வேற்றுமை உருபுகளை அவற்றோடு சேர்த்துப் பயன்படுத்தியுள்ளனர்.

அநிஷ்டநிவ்ருத்தியை.[246]
ஔசித்யத்தாலே.[247]
கர்மஜ்ஞான ஸம்ஸ்க்ருதாந்த: கரணனுக்கு.[248]
கார்ய காரணோபயாவஸ்துவிற் காட்டில்.[249]
வஸ்துவினுடைய.[250]
இஜ்ஜகத்தில்.[251]

ஆகிய எடுத்துக் காட்டுகளில் முறையே ஐ, ஆல், கு, இன், உடைய, இல் என்னும் தமிழ் வேற்றுமை உருபுகள் வடசொற்களோடு சேர்ந்து வழங்கப்படுதல் காணலாம்.

வடமொழி வேற்றுமை உருபுகள் சேர்ந்த வடசொற்களையும் அங்கங்கே பயன்படுத்தியுள்ளனர்.

ஹேயப்ரத்யநீகதயா[252] (குற்றங்கள் தட்டாமல் இருக்கும் தன்மையால்), அநாயாஸேந[253] (எளிமையோடு).

இவற்றில் ஹேயப்ரத்யநீகம், அநாயாஸ என்னும் சொற்கள் மூன்றாம் வேற்றுமை உருபு ஏற்று வந்துள்ளன.

தோஷாய ஆகாநிற்கும்[254] (குற்றத்திற்கு உரித்தாகா நிற்கும்).
ஆச்ரிதார்த்தமாக[255] (அடியார் பொருட்டாக).

தோஷ, ஆச்ரித: என்னும் சொற்கள் நான்காம் வேற்றுமை உருபோடு வருகின்றன.

ஸம்ஸாராத் உத்தீர்ணனாகாதவன்[256] (உலக வாழ்விலிருந்து மேலெழாதவன்). இதில் ஸம்சாரம் என்னும் சொல் ஐந்தாம் வேற்றுமை உருபு ஏற்று நிற்கிறது.

---

246. 1.0.0-12.
247. 1.1.11-6.
248. 1.2.0-36.
249. 1.1.7-6.
250. 1.2.4-12.
251. 1.0.0-24.
252. 1.1.2-6.
253. 5.3.8-36.
254. பாவை 3-6.
255. 1.8.0-12.
256. 1.0.0-24.

இவள் நாரீணாம் உத்தமையாய் இருக்கும்[257] (இவள் பெண் களுக்குள்ளே உத்தமியாய் இருக்கும்) இதில் நாரீ என்னும் சொல் ஆறாம் வேற்றுமை உருபு பெற்று வருகிறது. இது நிர்த்தாரணே ஷஷ்டி என்று குறிக்கப்படும்.

அண்டமத்யே[258] (அண்டத்தின் நடுவில்).
அபர்வணி[259] (பருவமல்லாக் காலத்தில்).

இவற்றில் அண்ட மத்ய, அபர்வன் என்னும் சொற்கள் ஏழாம் வேற்றுமை உருபு பெற்று வருகின்றன.

தமிழ் வேற்றுமை உருபுகளோடு வரும் வடசொற்களே மிகுதியாகும். வடமொழி இரண்டாம் வேற்றுமை உருபேற்ற வடசொற்கள் 'ராமம்' 'ரமாம்' என்று மகரவொற்றினை ஈற்றில் பெறுவதால் அவ்வுருபேற்ற வடசொற்களைத் தமிழோடு இணைத்து எழுத இயலவில்லை. ஆகவே வடமொழி இரண்டாம் வேற்றுமை உருபு சேர்ந்த வடசொற்கள் இவ்வுரைகளில் இடம் பெறவில்லை.

பெயரெச்சங்கள்

வடசொற்களோடு 'ஆன' என்னும் தமிழ் வினைச்சொல்லை இணைத்துப் பெயரெச்சங்களை ஆக்கிக்கொண்டுள்ளனர். சான்றுகள் வருமாறு:

ஜநிதமான அபிநிவேசாதிசயம்[260] (உண்டான அன்புப் பெருக்கம்).

லப்தமான திவ்யசக்ஷுஸ்ஸு[261] (அடையப்பெற்ற அருட்கண்).

நிர்த்திச்யமான ஸமஸ்தவஸ்துக்கள்[262] (காட்டப்படுகிற அனைத்துப் பொருள்கள்).

வினையெச்சங்கள்

வடமொழிச் சொற்களோடு ஆக, ஆய், ஆம்படி என்னும் தமிழ் வினைகளையோ, அகர உகர விகுதிகளுள் ஒன்றனையோ ஏற்றவாறு சேர்த்து வினையெச்சங்களை அமைத்துக் கொண்டுள்ளனர்.

---

257. 5.3.2-36.
258. 1.3.11-6.
259. 1.3.8-36.
260. 1.0.0-12.
261. 1.0.0-24.
262. 1.1.4-6.

நிர்ஹேதுகமாக[263] (காரணமின்றி), ததர்த்தமாக[264] (அதன் பொருட்டாக) - இவற்றில் 'ஆக' இடம்பெற்றுள்ளது.

பாதகமாய்[265] (இடையூறாய்), ஸஞ்சிதமாய்[266] (சேர்க்கப் பட்டதாய்) - இவற்றில் 'ஆய்' இடம்பெற்றுள்ளது.

அநுபவ யோக்யமாம்படி[267] (நுகரத்தக்கதாக) - இதில் 'ஆம்படி' உள்ளது.

ஹிம்ஸிக்க[268] (வருத்த) - அகரவிகுதி இடம்பெற்றுள்ளது.

அபேக்ஷித்து[269] (விரும்பி),-வ்யாபித்து[270] (பரந்து) - இவற்றில் உகர விகுதி இடம்பெற்றுள்ளது.

வடமொழிப் பகுதிகளைச் 'செய்யா' என்னும் வாய்பாட்டில் அமைத்து, 'நில்' என்னும் பகுதியடியாகப் பிறக்கும் வினைச் சொற்களைத் துணைவினையாகச் சேர்த்துக் கூட்டுவினையாக அமைத்துள்ளனர்.

அநுபவியாநிற்க.[271]
அநுநயியா நின்று.[272]

வினைமுற்றுகள்

வடமொழிப் பகுதிகளோடு தமிழ் விகுதிகளையும் இடைநிலைகளையும் சேர்த்து வினைமுற்றுகளைப் படைத்துக் கொண்டுள்ளனர்.

ஏவல் வினைமுற்று

'அநுபூயா:', 'ஆச்ரய' என்று வரும் வடமொழி ஏவல் ஒருமை வினைமுற்றுகளைத் தமிழில் வழங்கும் போது 'அநுபவி'[273] என்றும், 'ஆச்ரயி'[274] என்றும் இகர விகுதி சேர்த்து அமைத்துக் கொண்டுள்ளனர்.

---

263. 1.1.1-6.
264. 1.0.0-24.
265. 1.3.8-6.
266. 1.3.8-6.
267. 1.1.1-24.
268. 1.3.8-36.
269. 1.0.0-12.
270. 1.3.6-9.
271. அம. 10, அழகு.
272. 5.9.0-6.
273. 1.10.3-12.
274. 1.2.10-9.

வினைமுற்று

'ஆச்ரயிக்கலாம்',[275] 'உஜ்ஜீவிப்போம்'[276] - இவ்வாறு வடமொழிப் பகுதிகளோடு தமிழ்க் கூறுகளைச் சேர்த்து அமைத்துக் கொண்டுள்ள வினைமுற்றுகளிலும் இவர்கள் பயன் படுத்தியுள்ள தமிழ் வினைமுற்றுகளில் காணப்படும் புதுமைகள் இடம்பெற்றுள்ளன.

(1) வர்த்திக்கிறன,[277] வர்த்திக்கிறிலை[278] இப்படிக் 'கின்று' இடைநிலைக்கு மாறாகக் 'கிறு' இடை நிலை வருதல்.

(2) அநர்த்தப்படுகிறிகோள்,[279] அநுஷ்டிக்கமாட்டி கோள்[280] இப்படி முன்னிலைப் பன்மையில் 'கின்று' இடைநிலைக்கு மாறாகக் கிறு இடைநிலைபெற்றும், 'இர்' என்னும் விகுதி ரகரம் கெட்டுநிற்க அதன் மேல் 'கோள்' என்னும் விகுதிமேல் விகுதிபெற்றும் வருதல்.

(3) அநுபவியுங்கோள்,[281] அவஹாஹியுங்கோள்[282] இப்படிக் 'கள்' விகுதி 'கோள்' விகுதியாதல்.

(4) ப்ரகாசிப்பிப்புதோம்,[283] இப்படி எதிர்காலத் தன்மைப் பன்மை வினைமுற்று 'ஓம்' விகுதிபெறல்.

இதுகாறும் கண்டவற்றால் வைணவ உரைகளில் காணப்படும் மணிப்பிரவாள நடை தமிழ்ச் சொற்களும் வடசொற்களும் மட்டும் விரவி வரும் நடையன்று என்பதும் அவற்றில் பல்வேறு பிற கூறுகளும் இடம்பெற்றுள்ளன என்பதும் தெளிவாகும்.

மணிப்பிரவாள நடையின் வரலாறு

மணிப்பிரவாள நடை கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்குப் பின் பல்லவர்கள் ஆட்சிக்காலத்தில் தோன்றியது. சமணத் துறவிகள் சமயத்தைப் பரப்புவதற்காகத் தமக்குத் தெரிந்த வடமொழியையும் தமிழையும் கலந்து உருவாக்கிக் கொண்ட நடை இஃது என்று கருதப்படுகின்றது. ஆனால் இதனை

---

275. 1.2.7-9.
276. 1.1.1-9.
277. பெ.தி. 2.8.9.
278. 10.3.10-24.
279. 3.9.0-12.
280. 3.9.1-9.
281. 3.5.9-9.
282. 2.8.4-24.
283. அம. 3, அழகு.

வலியுறுத்தத் தக்க சான்றுகள் இருப்பதாகத் தெரியவில்லை. இந்நடையின் வரலாறு குறித்து அறிஞர் எஸ். வையாபுரிப் பிள்ளை ஸ்ரீபுராணத்திற்குத் தாம் எழுதியுள்ள ஆங்கில முன்னுரையில் கீழ்வரும் கருத்துகளைத் தெரிவித்துள்ளார்:

மணிப்பிரவாள நடை கி.பி. 13 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 17 ஆம் நூற்றாண்டு வரை சமண வைணவ சைவ சமயநூல் உரைகாரர்களிடம் வழக்கிலிருந்தது. தமிழ் உரைநடை வரலாற்றில் ஒரு முக்கியமான காலகட்டத்தை இந்நடை ஏற்படுத்தியது. கி.பி. 11ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வீர சோழிய நூல் இந்நடை பற்றிக் குறிப்பிட்டுள்ளது. முதலாம் இராசராசனது மூன்றாம் ஆண்டில் பொறிக்கப்பட்ட செம்பியன் மாதேவிக் கல்வெட்டில் வரும் செய்யுளொன்று இந்நடையில் அமைந்துள்ளது. எனவே இந்நடை கி.பி. 10ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்று கருதுவது பொருத்தமுடைத்து. இந்நடையின் பயனாகத் தமிழில் சமய தத்துவச் சொற்கள் குறிப்பிடத் தக்க வகையில் பெருகின; நடை பற்றிய எண்ணம் எழலாயிற்று.[284]

நாதமுனிகளுக்குப் பின்னே பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த அவர்தம் பேரர் ஆளவந்தார், ஆழ்வார் பாசுரங்களுக்கு விளக்கங்கள் நிகழ்த்தியுள்ளார் என்பது உரைகள் தெரிவிக்கும் தெளிவான செய்தி. அவ்வுரை விளக்கங்களை அவர் தனித்தமிழில் சொல்லியிருக்க முடியாது என்பதால் அக்காலத்திலேயே மணிப்பிரவாள நடை இருந்திருத்தல் வேண்டும் என்பது தேற்றம். மேலும் கி.பி. எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டிலேயே மணிப்பிரவாள நடை வழக்கிலிருந்தமைக்கான சான்று கிடைக்கின்றது. பெருந்தேவனார் என்பவர் தமிழில் இயன்ற பாக்களும், மணிப்பிரவாளத்தில் அமைந்த உரைப்பகுதிகளும் கொண்ட பாரத வெண்பா என்னும் நூலினை யாத்துள்ளார். அவரது காலம் கி.பி. எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டு என்பது அறிஞர் முடிபு.[285] ஆதலால் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்கும் ஒன்பதாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றியது இந்நடை எனலாம்.

---

284. வேங்கடராஜுலு ரெட்டியார், வே. (பதி.), ஸ்ரீபுராணம், சென்னைப் பல்கலைக் கழகம், 1946, ப. xii.
285. தஞ்சை ஸ்ரீநிவாசன், 'தமிழ் வரலாறு' (பிற்பாகம்), 1922, பக். 210.

வைணவ உரைகள் அனைத்தும் மணிப்பிரவாள நடையில் அமைந்தன. இவ்வுரைகள் கி.பி. பதினோராம் நூற்றாண்டு தொடங்கித் தோன்றலாயின.

கி.பி. பதினான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த ஸ்ரீசிவாக்ரயோகிகள் சிவஞான சித்தியாருக்கு இந் நடையில் ஓர் உரை வரைந்தார்.[286] இதே காலத்தில், ஸ்ரீபுராணம் என்னும் சமண நூலும் இந்நடையில் எழுதப் பட்டது.

இக்காலத்திற்குப்பின் இந்நடை செல்வாக்கினை இழந்து விட்டதாகத் தெரிகின்றது.

வைணவ உரைகளின் மணிப்பிரவாளம்

வைணவ உரைகள் எழுதப்பட்டுள்ள நடை தமிழும் வடமொழியும் மட்டும் கலந்த மணிப்பிரவாளமாக இல்லாமல் பல்வேறு புதுமைகள் நிறைந்ததாக அமைந்துள்ளது. இதனால் இவ்வுரைகளுக்கு முன்னே நிலவிய மணிப்பிரவாள நடையினை இவர்கள் அறிந்திருந்தனரா என்னும் ஐயம் எழுகின்றது. இவ்வுரை களில் காணப்படும் புதுமை வழக்குகள், புதிய சொற்கள், கல்வெட்டுச் சொற்கள், பேச்சு வழக்குகள், சமய மரபு வழக்குகள் முதலானவற்றைப் பார்க்கும்போது இந்நடையினை இவர்களே உருவாக்கிக் கொண்டுள்ளனர் என்னும் முடிவுக்கு வரவேண்டி யுள்ளது. மேலும், இவ்வுரைகள் எழுவதற்கு முன்னே நிலவிய மணிப்பிரவாள நடையின் தாக்கம் இவற்றில் காணப்படாதது போன்று இவற்றின் பின்னே வந்த பிற சமய மணிப்பிரவாள நூல்களிலும் இவற்றின் தாக்கம் காணப்படவில்லை. இதனை, இவ்வுரைகளுக்கு முற்பட்ட பாரத வெண்பா, இவ்வுரைகாரர் களுள் கடைசியில் வந்தவரான மணவாள மாமுனிகள் காலத்தில் வாழ்ந்த ஸ்ரீசிவாக்ர யோகிகள் எழுதியுள்ள சிவஞான சித்தியார் உரை, பிற்பட்ட ஸ்ரீபுராணம் ஆகியவற்றோடு ஒப்பு நோக்கின் நன்கு உணரலாம்.

"இவ்வகை பேசிய அசரீரியாய ஆதித்திய பகவானும் அந்தர்த் தானஞ் செய்த பின்பு கன்னனுடைய தியாக சக்தியின் மகாநு பாவங் கண்டு தேவசாதிகளுமாச்சரியப்பட்டுப் புஷ்ப வருஷம்

---

286. ஸ்ரீசிவாக்ர யோகிகள், 'சிவஞான சித்தியார் சுபக்கம்', திருவாவடுதுறை ஆதீனம், 1965, பக். 25-26.

பொழிந்தார்; அப்பொழுது, பிராமணனும் எல்லையில்லாத தோர் பிரியமெய்தி யிருந்தவிடத்துக் கன்னன் தன் காதிற் கவச குண்டலங்களைத் தானே வாங்குமளவில் தெய்வத்தினா லவை குழை நெகிழ, வாங்கித் தேவேந்திரன் ஸ்ரீஹஸ்தங் கீழ்ப்படத் தன் கை மேற்பட அகமலர்ந் தின்சொலுடன் கொடுப்பத் தேவேந்திரனும் வாங்கி மகாப் பிரியஸ்தனாய் 'நின்னையொக்குந் தியாகபர ரில்லை' என்று சொல்லிச் சுவாகதஞ் சொல்லி, மற்றந்தக் கன்னனை விட்டு நீங்கி மீண்டு போந்து, சாரங்கபாணி சக்கரமேந்தி பஞ்சாயுதன் பவித்திரமூர்த்தி ஸ்ரீவாசுதேவன் பக்கல்போய்த் திருவடி தொழுது கவச குண்டலங்காட்டி, கன்னனைக் கொண்டவாறுங் கவச குண்டலங் கொண்டவாறும் விண்ணப்பஞ் செய்து, தேவலோகத்துக்குப் போவானாக விடை வேண்டினான்." - இது பெருந்தேவனார் பாரதம் என்னும் பாரத வெண்பாவில் வரும் பகுதி.[287]

ஸ்ரீசிவாக்ர யோகிகளது சிவஞான சித்தியார் உரையி லிருந்து ஒரு பகுதி வருமாறு :

" 'பந்தநாத் பாசமுச்யதே' என்னும் வசனத்தினால், ஆன்மாக்களுடைய விபுத்துவ சர்வஞ்ஞதையை அநாதியே பந்தித்திருக்கையால் ஆணவாதிகளைப் பாசம் என்றது. ஆணவாதி என்றது, ஆணவம் காமியம் மாயை என்பதாம்.

பந்தம் ஒன்றினாலென்னாமல் மூன்றைச் சொன்னது கற்பனா கௌரவம் எனின்? அற்றன்று. உபசர்க்க வசத்தினால் அர்த்த பேதமுண்டு. அஃது எப்படி என்னில் ஆணவம் ஆத்மாவினது சர்வஞ்ஞதையைத் தகைகையாலே பிரதிபந்தம். காமியம் பிரவாகாநாதியாக ஆன்மாவைப் பின்பற்றிக்கொண்டு ஆன்மாவினுடைய புத்தியை, முத்தியில் இச்சை செல்லவிடாமல், போகத்தில் பிரவர்த்திப்பிக்கையினால் அனுபந்தம். மாயை ஆன்மாவின் விபுத்துவத்தை ஆவரித்து ஏகதேச விருத்தியாகப் பண்ணுகையால் சம்பந்தம். இந்தப் பந்தங்கள் சம்யோகம் என்று இப்படிப் பேதமாக அறியப்படும்."[288]

கிரந்த எழுத்துகள் வருமிடங்களில் அவற்றிற்குப் பதில் தமிழ் எழுத்துகள் அமைந்த, ஸ்ரீபுராணத்திலிருந்து ஒரு பகுதி கீழே தரப்படுகின்றது.

---

287. அ. கோபாலையயன், (பதி.), 'பெருந்தேவனார் பாரதம்', 1925, பக். 81-82.

288. ஸ்ரீசிவாக்ரயோகிகள், 'சிவஞானசித்தியார் சுபக்கம்', திருவாவடுதுறை ஆதீனம், 1965, பக். 107-108.

"மற்றொரு நாள் ஆஸ்த்தாந மண்டபத்திலிருந்து நரபதி குபேர ப்ரியனை ப்ரஸம்ஸித்து, ஹேயோபாதேய தத்வங்களை வினவ, அவனும் யுக்தி மார்க்கத்தால் அவற்றின் ஸ்வருபங்களை ப்ரதிபாதித்தனன். அதனைக் கேட்ட நரபதி ஸந்துஷ்டனாகி, 'உனக்கு வேண்டுவது என்?' என்று வினவ, 'என்னால் ஜநந மரண க்ஷயம் பண்ண வேண்டாநின்றது. அதனைத் தந்தருள் வாயாக' என்ன, நரபதியும், 'அது, என்னாற் தருவதற்கு சக்யமன்று' என்ன, 'யான் அதனை ஸாதிக்க வல்லேன்; அவ்வண்ணந் திருவுள்ளமா யருள்வாயாக' என்று சொல்ல, அதனைக் கேட்ட நரபதியும் 'இப்பொழுது உம்முடனே யானும் ஸம்ஸார பரித்யாகம் பண்ணுவேன்; பாலராகிய புத்ரர்கட்கு ரக்ஷையாம் உபாயம் என்கொலோ? என்று சிந்தியாநின்ற பொழுது விழுந்துடைந்த முட்டையினின்று புறப்பட்டதொரு பல்லிக்குட்டி குறுகியதொரு மக்ஷிகையினைப் பிடித்து பக்ஷித்தது. அதனைக் கண்டு, இவ்வண்ணம் ஜீவன்கள் பரோபதேசமின்றியே ஜீவநோபாயங்களை அறிவர்; நம்மால் சிந்திக்கப்படுவ தொன்றின்று' என நிச்சயித்து, வஜ்ரபாலன் என்னும் பாலபுத்ர னுக்கு ராஜ்ய பதத்தினையுங் கொடுத்துச் ச்ரேஷ்மியோடும் நரபதிகள் பலரோடுங்கூடத் தபோதநர் ஸமீபத்தே தீக்ஷித்தனன்."[289]

மேலே தரப்பட்டுள்ள எடுத்துக்காட்டுகளில், பாரத வெண்பாப் பகுதியில் கர்ணன், சக்தி ஆகிய சொற்கள் முறையே கன்னன், சத்தி என்றும், சிவஞான சித்தியார் உரையில் ஆத்மா, காம்யம் ஆகியவை ஆன்மா, காமியம் என்றும், தமிழ் மயக்கவிதி களுக்கேற்பத் திருத்தி எழுதப்பட்டுள்ளன. இம்முறை வைணவ உரைகளில் காணப்படவில்லை. வைணவ உரைகளில் காணப்படும் கொச்சை வழக்குகள் பாரத வெண்பா, சித்தியார் உரை, ஸ்ரீபுராணம் ஆகியவற்றில் இடம்பெறவில்லை. "சாகாக்ரத்தையும் சந்திரனையும் ஒருக்காலே கண்டோம்" என்னும்[290] சித்தியார் உரையில் ஒருகால் என்பது மட்டும் 'ஒருக்கால்' என்று ஒற்று மிகுத்து எழுதப்பட்டுள்ளது. இதனை நோக்கின், அக்காலத்தில் இலக்கணப் புலமை மிக்கோர் சிலர் இவ்வாறு எழுதிச் சென்றனர் போலும் என்று எண்ணத் தோன்றுகிறது. வைணவ உரைகள் நீங்கலான பிற மணிப்பிரவாள

---

289. வேங்கடராஜுலு ரெட்டியார், வே. (பதி.), 'ஸ்ரீபுராணம்', சென்னைப் பல்கலைக் கழகம், 1946, பக். 166.

290. ஸ்ரீசிவாக்ர யோகிகள், 'சிவஞானசித்தியார் சுபக்கம்' திருவாவடுதுறை ஆதீனம், 1965, பக். 346.

நூல்களில் தமிழ் வடமொழி இலக்கிய வழக்குகளே இடம் பெற்றுள்ளன; வைணவ உரைகளில் காணப்படும் பிற நடைக் கூறுகள் அவற்றில் காணுமாறில்லை.

"சைவர்களும் இந்நடையைப் பின்பற்றினர். ஆனால் அவர்களது மணிப்ரவாளம் மிகவும் எளிமைப்படுத்தப்பட்ட தாகும்" என்று தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் கூறி யுள்ளது கருதத்தக்கது.[291]

இதனால் வைணவ உரைகளில் காணப்படும் மணிப்பிரவாள நடை தனித்தன்மைகள் கொண்டது என்பது தெளிவாகின்றது.

முதன்முதலாகத் தோன்றிய திருக்குருகைப்பிரான் பிள்ளான் உரையினை நோக்கின், இம்மணிப்பிரவாள நடை தொடக்க நிலையிலும் அறுதியான வடிவம் பெறாத நிலையிலும் அமைந் திருந்த தன்மை புலனாகின்றது. அதனையடுத்து வந்த நஞ்சீயர், பெரியவாச்சான் பிள்ளை, நம்பிள்ளை முதலானோர் உரையில் இது வளர்ந்து முழுமை பெற்றுள்ளதனைக் காணலாம்.

திருக்குருகைப்பிரான் பிள்ளான் சில பாசுரத்திற்கு முற்றிலும் தமிழிலும், சிலவற்றிற்கு முற்றிலும் வடமொழியிலும், சில வற்றிற்குத் தமிழும் வடமொழியும் சமஅளவில் கலந்தும் எழுதிச் செல்வது இவ்வாறு எண்ணச் செய்கின்றது.

"இருடீகேசன் எம்பிரான்" என்னும் பாசுரத்திற்குத் "தன்னழ காலும் செயலாலும் என்னை அடிமை கொண்டவன், அயர்வறு மமரர்களதிபதி யென்றென்று அவனை ஏத்தி நினைந்து வணங்கு; இத்தை அழகியதாகக் கைக்கொள்ளக் கொண்டு, மறந்தும் நம்பி பற்பநாபனை விடாதேகிடாய் நெஞ்சே! என்று கொண்டு தம்முடைய நெஞ்சைக் குறைகொள்ளுகிறார்"[292] என்று முழுதும் தமிழ்ச் சொற்களாலும், "துயரில் சுடரொளி" என்னும் பாசுரத் திற்கு, "ஸமஸ்தஹேயப்ரத்யநீக நிரதிசய தேஜோவிசிஷ்ட ஸ்வாஸாதாரண திவ்ய ரூபத்தோடே கூட, ஸமஸ்தஹேயாஸ்பத மநுஷ்ய ஸஜாதியதயா அவதீர்ணனாய், ஸகலமநுஜநயந விஷய தாங்கதனாய், அசேஷஜனமநோநயநஹாரி திவ்ய சேஷ்டிதாநி குர்வாணனாய்க் கொண்டு தன்னுடைய ஐச்வரமான ஸ்வபா வத்தை இந்த லோகத்திலே ஆவிஷ்கரித்தருளும் ஸ்வபாவனாய்,

---

291. தெ.பொ. மீனாட்சிசுந்தரம், 'தமிழ் மொழி வரலாறு', ச. செயப்பிரகாசம் (மொ. பெ.), சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1977, பக். 245.

292. 2.7.10-6.

ஆச்சர்யபூதனாய், ஹேயப்ரத்யநீக கல்யாணகுண விசிஷ்டனான கண்ணன் புகழ்துற்ற யான் ஓர் துன்பமிலேன் என்கிறார்''[293] என்று இணைப்புக்காக அங்கங்கே ஓரிரு தமிழ்ச் சொற்களை அமைத்து வடமொழி மயமாகவும், ''அஞ்சிறைய மட நாராய்'' என்னும் பாசுரத்திற்கு, ''எம்பெருமானோடு கலந்து பிரிந்தாளொரு பிராட்டி, தன்முன்னே ஸம்ச்லேஷித்து வர்த்திக்கிற நாரைகளைக் கண்டு, தான் வ்யஸநாதிசயத்தாலே அறிவிழந்திருக்கையால், 'தன் வார்த்தைகளை அறியா' என்னும் இடத்தை விவேகிக்க மாட்டாதே, அவற்றினுடைய ஸம்ச்லேஷ ஸ்வபாவத்தைக் காண்கையாலே தன்னோபாதி அளவுடைய வாகக் கொண்டு அவற்றைக் குறித்து, தன்னளவிலே வார்த்தை சொல்லுகிற இடத்தில் சேவலைக் குறித்துச் சொல்லுகை ஈடல்லாமையாலே அத்தைக் குறித்துச் சொல்லுகிற வார்த்தை யையும், ஔசித்யத்தாலே பேடையை நோக்கி, 'நினைத்த இடத்திலே நினைத்தபோதே செல்லுகைக்கீடான உபகரணங் களை உடையையாய் ஸம்ச்லேஷத்தையே தாரகமாகவுடையை யாய் து:க்காஸஹிஷ்ணுவுமாயிருந்த நீ, என் பக்கலிலே க்ருபை பண்ணி, ஆச்ரிதருடைய ஸமஸ்த து:க்க நிரஸந ஸ்வபாவனான பெரிய திருவடியை திவ்யவாஹநமாகவுடைய எம்பெருமானுக்கு என் விடுதூதாய்ச் சென்று என்திறத்தைச் சொல்ல வேணும்' என்று அபேக்ஷித்து, பின்னையும் அவை போகாதிருந்தவாறே, 'சொன்ன வார்த்தையை அவன் அங்கீகரியாதொழியில் செய்வ தென்? என்று போகாதிருந்தனவாகக் கொண்டு, இப்படி ஆச்ரித வத்ஸலனானவன் அங்கீகரியாது ஒழியுமோ? அவன் என் வார்த்தையை அங்கீகரியாதொழிகையாகிற வன்சிறையில் அவன் உங்களை வைக்கில் அத்தனையும் எனக்காகப் பட்டால் ஆகாதோ? என்றே செய்ய வேணுமென்று சொல்லுகிறாள்''[294] என்று செம்பாகமாகத் தமிழ் வடமொழி ஆகியவற்றைக் கலந்தும் எழுதிச் செல்வதும் மணிப்பிரவாள நடையின் வளர் நிலையினைக் காட்டுகின்றன.

இம்மூவகை நடை, இதன் பின்வந்த உரைகளில் காணப் படாமல் தமிழும் வடமொழியும் சம அளவில் கலந்த மணிப் பிரவாளமே காணப்படுதல் இந்நடையின் முழுமையான நிலை யினைக் காட்டுவதாக உள்ளது.

இவ்வாறு வைணவ உரைகாரர்களால் தங்களுக்கென்று தாங்களே உருவாக்கிக் கொண்ட ஒரு கலவை நடையே இம் மணிப்பிரவாளம் ஆகும்.

---

293. 3.10.6-6. 294. 1.4.1-6.

மணிப்பிரவாள நடையை மேற்கொண்ட காரணம்

இவ்வுரைகாரர்கள் இம்மணிப்பிரவாளீ நடையினை மேற்கொண்டதற்கான காரணத்தை விளங்கிக் கொள்வதற்குத் தமிழ்மொழி பற்றிய இவர்கள் கருத்து யாது என்பதனைத் தெரிந்துகொள்வது இன்றியமையாதது.

இவர்கள் தமிழைத் திராவிடம் என்று குறித்துள்ளனர். "ஸர்வாதிகாரமான த்ராவிடமாயிருந்துள்ள பத்துப்பாட்டையும்"[295] என்பது மணவாள மாமுனிகள் உரைத்தொடர்.

"ஆரியத்தைச் சொல்லி அதினுடைய சிதைவாகையாலே பின்னைத் தமிழைச் சொல்ல ப்ராப்தமாயிருக்க இத்தை ப்ரதமத்திலே உபாதாநம் பண்ணிற்று—இது ஸர்வாதிகாரமாகையாலும் ஸ்வார்த்தத்தைச் செவ்வே ப்ரகாசிப்பிக்கக் கடவதாயிருக்கையாலும், தம் பாழியாகையாலும், இன்னமும் அத்தோபாதி இதுவும் ப்ரமாணமென்கைக்காக முற்பட அருளிச் செய்கிறார்" என்று "செந்திறத்த தமிழோசை வடசொல்லாகி" என்னும் வைப்பு முறைக்கு விளககம் தருகிறார் பெரியவாச்சான் பிள்ளை.[296] இதனால் இவர் தமிழை ஆரியத்திலிருந்து தோன்றிய மொழியாகக் கொண்டுள்ளார் என்பதும், வடமொழியை முதலில் சொல்வதே தக்கது என்பது இவர்தம் கருத்து என்பதும் விளங்கும். இவர் வடமொழியை மதிப்பவராயினும், தமிழ் எல்லோராலும் உணரத்தக்கதாய் இருப்பதோடு, கருத்துகளைத் தெளிவாக விளக்கும் திறமிக்கது என்பதனை உணர்ந்துள்ளார். இப்படி வடமொழியை மதிக்கின்ற இவரே, "குடதிசை முடியை வைத்து" என்னும் பாட்டு விளக்கத்தில், "வடக்கு திக்கு ஆர்ய பூமியாகையாலே ஸம்ஸ்க்ருத முரணராய், ஆழ்வார்கள் ஈரச் சொல்லும் நடையாடாத தேசமாகையாலே அத்திக்கைத் திருத்தும்போது பின்னழகெல்லாம் வேணுமென்று இருந்தார்"[297] என்று குறிப்பிட்டுள்ளார். இதனால் இவருக்கு ஆழ்வார்களின் பாசுரங்களை நோக்குங்கால், வடமொழி வன்மொழியாகத் தோன்றுவது துலங்குகிறது. ஆனால் இவரே, "அன்னநடையார் அலர் ஏச ஆடவர்மேல் மன்னு மடலூரார் என்பதோர் வாசகமும் தென்னுரையிற் கேட்டறிவதுண்டு" என்னும் பெரிய திருமடற் பகுதியின் உரையில், "தென்னுரை - ம்லேச்ச ஜாதி பிதற்றும் தமிழ்"[298] என்று குறிப்பிட்டுள்ளார். இப்பகுதிக்கு "மடலெடுப்பதி

---

295. பெரி.தி. 2.6.10.
296. தி.நெ.தா. 4.
297. தி.மா. 19.
298. பெ.மடல், கண்ணி, 39.

லுள்ள உத்வேகத்தாலே தமிழையும், தமிழர் பண்பாட்டையும் இகழ்கிறாரே யொழிய உண்மையில் தமிழின்மேல் ஆழ்வார் துவேஷம் உடையவர் அல்லர்'' எனத் தெளிவு தருகிறார் எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்.[299] ஆழ்வார் 'தென்னுரை' என்று மட்டும் குறித்துச் செல்ல அதனை மிலேச்சர் பிதற்றும் மொழியென்று பெரியவாச்சான் பிள்ளை விளக்கிச் செல்வதை நோக்கின் ஆழ்வார் பாசுரங்கள் நீங்கலான தமிழை இவர்கள் மதிப்பார்களா என்பது ஐயத்திற்குரியதே. திருவாய்மொழி முன்னுரையில் நஞ்சீயர், நம்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை ஆகியோர் வைதிகக் குழுவில் அறிவுக்கேடர் சிலர் விலக்கப்பட்ட மொழியாகிய தமிழில் அமைந்துள்ள திவ்வியப் பிரபந்தங்கள் அளவையாக மாட்டா என்று சொல்ல அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர்.[300] அம்மறுப்பில் தமிழின் மேம்பாட்டை வற்புறுத்திச் சொல்லாமல், இறைவன் நீங்கலான பிற பொருள் களைப் பேசுமிடத்திலேயே மொழிவிலக்குச் (பாஷா நிஷேதம்) செய்தற்குரியது; இறைவனைப் பற்றிய செய்திகளைக் கூறும் போது மொழிவிலக்குச் செய்தற்குரியதன்று என்று எழுதிச் செல்வதும் மேலே கூறியுள்ள கருத்தினை நிலைநிறுத்தும்.

வைணவ உரைகள் இந்நடையில் அமைந்திருத்தற்கு, ''மதச் சார்பான விஷயங்களை வடமொழியில் நின்றும் தமிழில் கொணர்ந்து கூட்டினவராதலின் இவர்களுடைய வசனப்பாங்கு இங்ஙனம் மணிப்ரவாளம் ஆயிற்று'' எனக் காரணம் கூறுகிறார் திருமணம் செல்வக்கேசவராய முதலியார்.[301]

திவ்ய ப்ரபந்தங்களின் கருத்தைப் பரக்க உபந்நியஸிக்கும் போது சுருதி ஸ்மிருதி இதிகாஸ புராணங்களையெல்லாம் மேற்கோள் காட்டிச் செல்ல வந்தது; அன்றியும், அவ்வாறு பொருள் விரிக்குமிடத்து, கூடலிழைத்தல், மடலூர்தல், பல்லாண்டு பாடுதல், செங்கீரையாடுதல், உந்தி பறத்தல் முதலிய சொற்றொடர்கட்கு ஏற்ற எளிய வடசொற்கள் கிடைப்பது அருமையாதல் போலவே உபாயோபேய பாவம், கார்ய காரண பாவம், ஸாமாநாதிகரண்யம், த்ரிவ்ருத்காரணம், புருஷகாரம் முதலிய வடசொற்களுக்கு ஏற்ற வழக்காற்றிலுள்ள தென்மொழி

---

299. எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், பெ. மடல் வ்யாக்யானம், ஸ்ரீநிவாஸம் பிரஸ், புத்தூர், 1959, பக்.54.
300. 1.0.0-9,24,36.
301. தி. செல்வக்கேசவராய முதலியார், 'தமிழ் வியாசங்கள்', சென்னை, 1945, பக். 73.

கள் கிடைப்பதும் அரிதாயிருத்தலைக் கண்டனர். காணவே, மணிப்ரவாள மென்ற இந்நடையினை ஏற்றுக் கொள்வதன்றி அவர்கள் வேறு யாது செய்வார்கள்?" என்கிறார் அறிஞர் வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியார்.[302]

இவர்கள் பயன்படுத்தியுள்ள தமிழ்ச் சொற்களையும், தொடர்களையும், அவற்றின் தரத்தினையும் நோக்கினால் வேறு வகையாக எண்ண வேண்டியுள்ளது (இவை இக்கட்டுரையின் முற்பகுதியில் இடம் பெற்றுள்ளன).

இவையே யன்றி, வடசொற்களுக்கு நிகராகக் கையாண்டுள்ள தமிழ்ச் சொற்கள்[303] மொழிபெயர்ப்பாளர்களுக்கு முன்மாதிரி களாக இலங்குவன.

(அ) அடி (நிபந்தநம்), (ஆ) அடைவு (க்ரமம்), (இ) அறுதி (நிச்சயம்), (ஈ) ஆக்கன் (ஸ்ருஷ்டிக்கப்பட்டவன்), (உ) இரட்டை (த்விபடி), (ஊ) இழவு (நஷ்டம்), (எ) ஓரம் (பக்ஷபாதம்), (ஏ) கண்காட்டி (நிர்வாஹகன்), (ஐ) கலவி (ஸம்ச்லேஷம்), (ஒ) கவி பாட்டுண்கிறவன் (ப்ரதிபாத்யன்), (ஓ) சான்று (சாக்ஷி), (ஔ) செம்பால் (இரத்தம்), (க) செவ்வைப் பூசல் (தர்மயுத்தம்), (ங) சுவடு (ரஸம்), (ச) சுவடர் (ரஸிகர்), (ஞ) தண்மை (நைச்யம்), (ட) தரவு (அனுமதி), (ண) திரள் (கோஷ்டி), (த) திருமுன்பு (சந்நிதி), (ந) நவிகை (பாதிக்கை), (ப) பகைத் தொடை (பரபாகம்), (ம) படுக்கைப்பற்று (ஸ்திரீ தநம்), (ய) பரவை வழக்கம் (கர்ண பரம்பரையான விஷயம்), (ர) பரிமாற்றம் (அநுபவம்), (ல) பழையவர்கள் (பூர்வர்), (வ) பாங்கு (பவ்யம்), (ழ) பிரிவு (விச்லேஷம்), (ள) பிற்பாடு

---

302. வை. மு. கோபால க்ருஷ்ணமாசாரியார், 'மணி ப்ரவாளம்', 'செந்தமிழ்' பன்னிரண்டாம் தொகுதி, மதுரை, 1913-14. பக். 485.

303. (அ) பெ. தி. 1.1.4; (ஆ) 3.0.0-24; (இ) 5.4.11-12; (ஈ) 3.1.8-12; (உ) தி.பல்.9; (ஊ) தி.வி. 89; (எ) 5.10.1-24; (ஏ) பெ.தி. 1.2.8; (ஐ) 2.6.8-9; (ஒ) 1.6.11-9; (ஓ) பெ. தி. 9.3.4; (ஔ) பெரி.தி. 2.2.5; (க) 4.3.1-36; (ங) 2.6.5-36; (ச) தி.பல். 9; (ஞ) 2.5.8-36; (ட) 4.9.0-36; (ண) 5.5.10-24; (த) 2.4.0-24; (ந) 5.4.8-36; (ப) 4.3.6-9; (ம) 4.5.10-36; (ய) பெரி.தி. 2.8.6; (ர) 1.9.3-36; (ல) தி.வி. 24; (வ) 1.8.0-24; (ழ) பாவை

(தாமதம்), (ற) புகர் (பௌஷ்கல்யம்), (ன) போதுபோக்கு (காலக்ஷேபம்), (கா) மறுமாற்றம் (ப்ரதிவசநம்), (ஙா) மனைக்கை (ஸ்ருஷ்டிக்கை), (சா) மூதலிக்கிறார் (நிரூபிக்கிறார்), (ஞா) விடாயன் (தாபார்த்தன்).

இவையே யன்றிச் சமய மரபு சொற்களாகத் திகழும் வடசொற்களுக்கு இணையான தூய சொற்களையும்[304] பயன் படுத்தியுள்ளனர்.

(அ) அடிமைச் சுவடு (கைங்கர்ய ரஸம்), (ஆ) உகந்தருளின இடம் (திவ்ய தேசங்கள்), (இ) உடன்வந்தி (ஸ்வாபாவிகம்), (ஈ) திருநாடு (பரமபதம்), (உ) நீர்மை (ஸௌலப்யம்), (ஊ) புகலறுதி (அநந்ய கதித்வம்) (எ) புறத்தொழில் (பகிரங்கவ்ருத்தி), (ஏ) பெரியதிருநாள் (திருவத்யயனோத்ஸவம்), (ஐ) பெறாப்பேறு (அலப்யலாபம்), (ஒ) பேறு (ப்ராப்யம்), (ஓ) மேன்மை (பரத்வம்), (ஔ) வடிவழகு (சௌந்தர்யம்), (க) வந்தேறி (ஆகந்துகம்), (ங) விலக்கடிகள் (நிஷேதங்கள்), (ச) வெறுமை (ஆகிஞ்சந்யம்).

இவற்றை நோக்கும்பொழுது இவர்கள் பழுத்த தமிழ்ப் புலமை பெற்றவர்கள் என்பதும், தனித்தமிழில் உரையெழுத எண்ணங்கொண்டு செயற்பட்டிருந்தால் பெருவெற்றியினை ஈட்டியிருப்பர் என்பதும் தெளிவாகின்றன. அவ்வாறு செய்யாமல் வடமொழி கலந்து எழுதிச் சென்றுள்ளமைக்குக் காரணம் இவர்கள் வடமொழிப் பற்றேயாகும். வடமொழியறிவு நிறைந்த குடும்பத்தில் பிறந்த இவர்கள் வடமொழியை மனமார விரும்பிப் போற்றினர் என்றும், வைணவ சமயக் கருத்துகளை வேதம் போலன்றித் தெளிவாகவும் நயமாகவும் ஆழ்வார்கள் பாசுரங்கள் விளக்குவதால் அந்தத் தமிழுக்கு அடிமையாயினர் என்றும், அதனாலேயே தமிழை ஒதுக்க முடியாமல் போற்ற வேண்டிய நிலையினராயினர் என்றும் கொள்ள வேண்டியுள்ளது.

19-6; (ள) 1.5.0-36; (ற) பெ.தி. 3.6.1; (ன) பெ.தி. 4.7.2; (கா) 1.4.5-24; (ஙா) 2.2.10-36; (சா) பெரி.தி. 5.3.9; (ஞா) 5.10.7-24.

304. (அ) பெ.தி. 4.9.7; (ஆ) 3.6.9-9; (இ) 4.7.11-36; (ஈ) பெரி.தி. 4.4.1; (உ) 3.7.1-24; (ஊ) தி.மா. 28; (எ) 1.6.5-24; (ஏ) சி. மடல், கண்ணி, 28; (ஐ) 9.8.5-24; (ஒ) 2.6.6-24; (ஓ) தி.மா. 2; (ஔ) தி.ச.வி. 119; (க) 3.8.9-36; (ங) பெ.தி. 9.7.0; (ச) பெ.தி. 1.10.1.

தொடரமைப்பு

தொடரமைப்பில் தனிப்போக்கு யாதுங் காணப்படவில்லை. எழுவாய், செயப்படுபொருள், பயனிலை முறையிலேயே தொடர்கள் அமைந்துள்ளன. எதுகையும் மோனையும் அமைய எழுதுவதிலும் இவர்கள் நாட்டங் கொள்ளவில்லை. எனினும் எதுகையமைந்த தொடர்கள் அருகிக் காணப்படுகின்றன. "பேய்த்தாயை முடித்து ஆய்த்தாய்க்கு பவ்யனாயிருந்தபடி சொல்லுகிறது"[305] "அத்தோளைத் தொழுவார் தாளைத் தொழுமித்தனை என்கிறார்",[306] "இவளுடைய அதரசோபையும் மதுர பாஷணமும் திருத்தாயாருக்கு ஆகர்ஷகமாயிருக்கிறது காணும்"[307] என வருதல் காணலாம்.

சிறு சிறு தொடர்களைக் கொண்ட எளிய நடையும் சிற்சில இடங்களில் காணப்படுகின்றது: "ஒருவன் ஒரு க்ருஹத்துக்குக் கடவனாயிருக்கும்; ஒருவன் ஒரு க்ராமத்துக்குக் கடவனாயிருக்கும்; ஒருவன் ஒரு ஜநபதத்துக்குக் கடவனாயிருக்கும்; ஒருவன் த்ரைலோக்யத்துக்குக் கடவனாயிருக்கும்; ஒருவன் சதுர்த்தச புவநத்துக்குக் கடவனாயிருக்கும்; ஆக, சதுர்த்தச புவனத்துக்குக் கடவனானவனோடு, ஒரு க்ருஹத்துக்குக் கடவனானவனோடு வாசியற அவர்கள் ரக்ஷகராகிறதும், இவை ரக்ஷ்யமாய் உபகாரங் கொண்டதாகிறதும் ஸர்வேச்வரன் அந்தராத்மாவாய் நின்ற நடத்துகையாலே"[308] என வருதலைச் சான்றாகக் கொள்ளலாம்.

இவ்வுரைகாரர்கள் தங்கள் நடையினைப் பல்வேறு நலன்கள் பொருந்த எழுதிச் சுவை மிக்கதாக ஆக்கியுள்ளனர்.

உருவக நடை

கவிதை நெஞ்சமுடைய இவ்வுரையாசிரியர்கள் தங்கள் உரைகளில் சில இடங்களை உருவக அணி அமைத்து எழுதிச் சென்றுள்ளனர். அப்பகுதிகள் இவர்தம் கற்பனைத் திறத்தினை வெளிப்படுத்துவன.

இளங்கொங்கைகளைச் சொல்வதைக் கேளாத பிள்ளைகளாகவும், கண்களை வயிறும் விடாயுமுடைய மனிதனாகவும் முறையே மணவாள மாமுனிகளும் பெரியவாச்சான் பிள்ளையும்

---

305. பெரி.தி. 3.5.9.
306. இ.தி. 43.
307. பெரி.தி. 3.7.7.
308. 1.1.5-36.

உருவகித்துள்ளனர். "இளங்கொங்கை - சொல்கேளா ப்ரஜைகளாய்த்து,"[309] "நெடுங்காலம் பட்டினிவிட்ட கண்கள் வயிறு நிரம்பும்படி,"[310] "விடாய்க்கும் கண்கள்"[311] ஆகியவை அவர்தம் உரைத்தொடர்கள்.

"பெரிய பெருமாள் அர்ச்சா ரூபமாயிருக்கச் செய்தேயும் தம்முடைய ஸௌந்தர்யத்தை ஆவிஷ்கரிக்க அந்த ஸௌந்தர்ய ஸாகரத்தை லாவண்யமாகிற மரக்கலத்தாலே எங்குமொக்க அநுபவிக்கிறார்"[312] என்று பெருமானது வடிவழகைக் கடலாகவும் லாவண்யத்தை மரக்கலமாகவும் உருவகப்படுத்திச் செல்வது நயமாக உள்ளது.

தடங்கண்ணைக் கடலாக உருவகித்து, "இக்கடலைக் கரை கண்டாலிறே அவன் நம்மைப் பார்ப்பது"[313] என்று உரை எழுதிச் செல்கிறார் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்.

பெருமாள், பிராட்டியார் ஆகியோர் அருள்நோக்கத்தால் பொழில்கள் நாள்தோறும் செழித்து வளருகின்றனவாம். இதனை, "நம்பியும் நாச்சிமாரும் கடாக்ஷித்த அக்கடாக்ஷமே விளைநீராக வளருகிற பொழிலாகையாலே நாள்தோறும் வர்த்தித்து வரக் கடவதிறே" என்று அருள்நோக்கத்தை விளைநீராக உருவகப்படுத்தி அழகுற எழுதிச் செல்கிறது[314] திருநெடுந்தாண்டக உரை.

பாசுரத் தொடர்கள் விரவிய நடை .

திவ்வியப் பிரபந்தங்களின் சிந்தனையிலேயே இருந்த இவ்வுரையாசிரியப் பெருமக்கள் தங்கள் உரைகளில் அவற்றில் வரும் தீஞ்சொற்களை இடையிடையே தொடுத்து எழுதிச் செல்வது வியப்புக்குரியதன்று; ஆனால் நடைக்கு நயம் சேர்ப்பது. சான்றுகளாகச் சில கீழே தரப்படுகின்றன:

பெரியாழ்வார் திருமொழியில், "மாதரார் கயற்கண் என்னும் வலையில் பட்ட இவரை மீட்டது வடிவழகென்கிறார்" என்று வரும் தொடரில்[315] "மாதரார் கயற்கண் என்னும் வலை"[316] என்னும் திருமாலைத் தொடர் இடம்பெற்று நடையை இனிமையுடைத்தாக்குகின்றது. "நின்றாடு கணமயில்போல் நிறமுடைய

309. பெரி.தி. 3.6.1.
310. பெ.மடல், கண்ணி, 74.
311. 5.10.7-24.
312. அம. 0, அழகு.
313. பாவை, 19-6.
314. தி.நெ.தா. 16.
315. பெரி.தி. 5.2.8.
316. தி.மா. 16.

நெடுமாலுக்கு ஸ்மாரகமாய் நலிகிறபடி" என்னும் நாச்சியார் திருமொழியுரையில்[317] "நின்றாடு கணமயில் போல் நிறமுடைய நெடுமால்"[318] என்னும் பெரியாழ்வார் சொற்றொடர் பளிச்சிடு கின்றது.

அமலனாதிபிரான் உரையில், "திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி திரைக்கையா லடிவருடப் பள்ளி கொள்ளும் கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டு, மணத்தூணே பற்றி நின்று வாயார வாழ்த்துகிற ப்ரபந்த மாகையாலே எல்லா ப்ரபந்தங்களிலும் இப்ரபந்தத்துக்கு வைலக்ஷண்யமுண்டு"[319] என்று வரும் பகுதியில்,

"திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி
திரைக்கையா லடிவருடப் பள்ளி கொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டு"[320]

"மணத்தூணே பற்றி நின்று, வாயார..."[321]

என்னும் பெருமாள் திருமொழியின் கவிதைத் தொடர்கள் இடம் பிடித்துக் கொண்டிருத்தலைக் காணலாம்.

"வரும் புயல்வண்ண னாரை மருவி" என்னும் திருக்குறுந் தாண்டகத் தொடரில் வரும் 'மருவி' என்பதற்கு "மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும்" என்னும்[322] குலசேகரர் தீஞ்சொற்களை விரவி "மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கு மற்றவை போலே"[323] என்று உரை வகுக்கப்பட்டுள்ளது.

அமலனாதிபிரான் உரையில் பெரியவாச்சான் பிள்ளை "தாழ்ச்சி மற்றெங்கும் தவிர்ந்து கடைத்தலையிருந்து வாழும் சோம்பராயிருக்கிற லோக ஸாரங்க மஹாமுநிகளை அருள்பாடிட்டு"[324] என்று எழுதிச் செல்கிறார். இப்பகுதியில் "கடைத்தலை இருந்து வாழும் சோம்பர்"[325] என்னும் திருமாலைத் தொடர் விரவி வருகின்றது.

பழமொழி விரவிய நடை

இவ்வுரையின் நடைச்சிறப்புகளுள் ஒன்று பழமொழிகளை விரவி எழுதுவதாகும். "ஆயிரக்காதம் பறப்பதன் குட்டி ஐந்நூறு

---

317. நா.தி. 10.6.
318. பெரி.தி. 4.8.7.
319. அம.0, பெரி.
320. பெரு.தி. 1.1.
321. பெரு.தி. 1.2.
322. பெரு.தி. 5.7.
323. தி.கு.தா. 5.
324. அம.0, பெரி.
325. தி.மா. 38.

காதம் சிறகடிக் கொள்ளும்",[326] "உப்பறியா மூழை",[327] "ஓலை பாதி, தூது பாதி",[328] "முள்ளாலே முள்ளைக் களையுமா போலே"[329] ஆகியவற்றைச் சான்றாகக் காட்டலாம்.

சில பழமொழிகளை வடமொழியாக்கிக் கையாண்டுள்ளது குறிக்கத்தக்கது. அங்கை நெல்லிக்கனி ("கரதலாமலகம் போலே"[330]) பசுத்தோல் போர்த்த புலி ("கோமுக வ்யாக்ரம்"[331]) ஆகியன அவ்வாறு அமைந்த பழமொழிகளாகும்.

சில பழமொழிகள் சிதைந்து காணப்படுகின்றன. அவை சிதைந்த வடிவங்கள் என்பது இவ்வுரைகளாலேயே வெளிப்படுகின்றது.

அ) "ஆனைப் பிணங்களைக் குதிரை சுமக்கவற்றோ"[332] என்று திருவாய்மொழி உரையில் காணப்படுவது "ஆனைப் பண்ணைக் குதிரை சுமக்கவற்றோ"[333] என்பதன் சிதைவு என்பது நாச்சியார் திருமொழி உரையால் தெரிகின்றது. முன்னதில் சிறப்பு ஏதுமில்லை. ஆனால் ஆனைக்குப் போடும் அம்பாரியைக் குதிரைசுமக்க முடியாது என்னும் கருத்தினைத் தெரிவிக்கும் பின்னது சிறப்பாக உள்ளது. ஆதலால் ஏடெழுதுவோரால் தவறாக எழுதப்பட்டது முன்னைய வடிவம் எனக் கொள்ளலாம்.

ஆ) "வெண்பிறையன் துயர்" என்னும் அமலனாதிபிரான் தொடருக்கு அழகிய மணவாளர் உரையாகத் "தனக்குத் தக்க வாதமிறே"[334] என்பது வருகின்றது. "மாபாவம் விட அரற்குப் பிச்சை பெய் கோபாலக் கோளரி" என்னும் திருவாய்மொழித் தொடருக்கு "ஆனைக்கும் தனக்குத் தக்கவாதமிறே"[335] என்று ஈடு எழுதிச் சென்றுள்ளதனால் முன்னதில் 'ஆனை' என்னும் சொல் விடுபட்டிருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது. (பின்னிணைப்புப் பார்க்க)

வினா நடை

பாசுரங்களில் ஓடும் உணர்ச்சியினைப் புலப்படுத்தும் உரைப் பகுதிகள் வினாத்தொடர்கள் பலவற்றைக் கொண்டனவாக

326. 1.10.1-36.
327. பெரி.தி. 3.7.4.
328. தி.வி. 29.
329. பெரி.தி. 2.5.5.
330. 6.9.11-9.
331. தி.வி. 27.
332. 8.4.10-24.
333. நா.தி. 8.3.
334. அம. 6, அழகு.
335. 2.2.2-36.

அமைந்துள்ளன. வினாவின்மேல் வினாவாக அடுக்கிச் செல்லும் அப்பகுதிகள்[336] கற்பார்தம் கருத்தினை ஈர்த்து நிற்பனவாகும்.

''கல்லெடுத்துக் கன்மாரி காத்தாய்'' என்று தலைமகள் கூற்றாக வரும் திருநெடுந்தாண்டகத் தொடரில் உட்பொதிந்து உள்ள உணர்ச்சியினைப் புலப்படுத்தும் உரைப்பகுதி வருமாறு: ''பிறரால் வந்த ஆபத்திலோ ரக்ஷிக்கலாவது? உன்னால் வந்த ஆபத்தில் ரக்ஷிக்கலாகாதோ? கல்வர்ஷத்தில் அகப்பட்டாரையோ ரக்ஷிக்கலாவது?...து:கவர்ஷத்தில் அகப்பட்டாரை ரக்ஷிக்க லாகாதோ? ஒருவூராரகப்பட நோவுபட்டாலோ ரக்ஷிக்கலாவது? அவ்வூராகப்பட்ட நோவை ஒருத்தி பட்டால் ரக்ஷிக்கலாகாதோ? என்னுடைய ரக்ஷணத்துக்கும் மலையை எடுக்க வேணுமோ? மலையை எடுத்த தோளைக் காட்ட அமையாதோ?''[337]

''ஒருமுறை யீரடி மூவுலகளந்தனை'' என்னும் திருவெழு கூற்றிருக்கைத் தொடருக்கு, ''ஆசையில்லாதார் தலைமேலேயும் வைக்கும் திருவடிகளை ஆசையுடைய என் தலையிலேயும் வைக்க லாகாதோ? இந்த்ரனைப் போலே கழஞ்சு மண் பெறுதல், மஹாபலியைப் போலே ஔதார்யங் கொண்டாடுதல் செய்ய இருக்கிறேனோ நான்? 'உன்னைப் பெறவேண்டும்' என்றன்றோ நான் அர்த்திக்கிறது? ''உன்னை வைத்து வேறு ஒன்றை இரந்தார்க்கோ நீ இரப்பாளனாய்க் கார்யஞ் செய்வது? உன்னையே இரந்தார் கார்யம் செய்யலாகாதோ?'' என்று[338] வினாக்களை அடுக்கி உரைவகுத்துள்ளார் பெரியவாச்சான் பிள்ளை.

''பரிச்சேதிக்க வல்லாரார்? வேதங்களாலே பரிச்சேதிக்க லாமோ? ஜ்ஞாநாதிகரான வைதிகரால்தான் பரிச்சேதிக்க லாமோ? அம்மேன்மையைப் பரிச்சேதிக்கவோ? அந்நீர்மையைப் பரிச்சேதிக்கவோ? எத்தை யார் பரிச்சேதிக்கவல்லார்?''-இது ''மண்கடந்த வண்ண! நின்னை யார் மதிக்க வல்லரே''[339] என்னும் திருச்சந்த விருத்தத் தொடருக்கு வரையப்பட்டுள்ள வினா நடை உரையாகும்.

---

336. 1.2.1-36; 1.5.6-36; தி.நெ.தா. 13; தி.நெ.தா. 16; தி.நெ.தா. 24; பாவை, 10-6; தி.மடல், கண்ணி, 62; அம. 10, அழகு; திருவெழு. அடி, 9.

337. தி.நெ.தா.13.

338. திருவெழு. அடி, 9.

339. தி.ச.வி. 27.

வண்ணனை நடை

கற்போர் நெஞ்சில் காட்சிகள் ஓவியங்களாக நிற்கத் தக்க வகையில் உரைவகுப்பதிலும் இவ்வுரையாசிரியர்கள் வல்லவர்கள். இதற்குச் சான்றாக, வாளெயிற்றுச் சீயமாய் வந்த தோற்றத்தினை மணவாள மாமுனிகளும், இரணியனது அழிவினை நம்பிள்ளையும், கோவிந்தனின் திருக்கோலத்தினை அழகிய மணவாள நாயனாரும், தலைமகன் வேட்டைக்கு வந்த அழகினைப் பட்டரும் வரைந்து செல்வதனைச் சுட்டலாம்.

"அங்காந்த வாயும் மோறாந்த முகமும் நாமடிக் கொண்ட உதடும் குத்த முறுக்கின கையும் அதிர்ந்த அட்டஹாஸமுமாய் (ஆரவாரமுமாய்) இருக்கிற இருப்பிறே இவர்க்கு அழகிதாய்த் தோற்றுகிறது."[340]

"அதிர்த்துக்கொண்டு புறப்பட்ட போதை அட்டஹாஸமும், நாமடிக் கொண்ட உதடும், நெற்றியது கண்ணும், உச்சியது புருவமுமாய்க் கொண்டு தோற்றினபோது பொசுக்கின பன்றி போலே உருகினானாயிற்று பொன்னனாகையாலே."[341]

"கடையாவும் கழிகோலும் கையிலே பிடித்த சுண்ணிக் கயிறும், கற்றுத் தூளியாலே தூஸரிதமான திருக்குழலும், மறித்துத் திரிகிறபோது திருவடிகளிலே கிடந்து ஆரவாரிக்கிற கழல்கள் சதங்கைகளும் குளிர்முத்தின் கோடாலமுமாய் நிற்கிற உபாய வேஷத்தைக் கோவிந்தா என்கிறார்கள்."[342]

"...வேட்டை வித்யாதரனாக எடுத்துக் கட்டின மயிரும், பிடரியிலே தழைந்தலைகிற குழலும், இறுக்கின சாணமும், கட்டின கச்சும், முன்னேயுடுத்த வுடைத்தோலும், இடக்கையிலே கட்டின கச்சும், வலத் தோளிலே இட்ட மெத்தையும், பெரு விரலிலே பூட்டின சரடும், இடக்கையிலே நடுக்கொடுத்துப் பிடித்த வில்லும், வலக்கையிலே தெரிந்து பெருக்கின அம்பும், முதுகிலே கட்டின அம்பறாத்தூணியுமாய்க்கொண்டு வேட்டைக்கென்று புறப்பட்டு இவள் பூக்கொய்கிற உபவநத்தே செல்ல."[343]

வழுவமைந்த நடை

இலக்கணப் பிழையற்ற நடையினை எழுத வேண்டுமென்ற எண்ணம் இவர்கள்பால் காணப்பட்டிலது. ஒற்றுப் பிழைகளும்,

340. பெரி.தி. 4.8.8.
341. 2.8.9-36.
342. பாவை, 28-6.
343. தி.நெ.தா. 21, பட்டர்.

தொடர்ப் பிழைகளும் அங்கங்கே காணப்படுகின்றன. இவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

1) வல்லொற்று மிகும் இடங்களில் மிகுத்து எழுதாது விடுத்து உள்ளனர். "அங்கு கலக்குவாருமில்லை...இங்கு கலக்கு வாருமுண்டு",[344] "அப்படி செய்தாயோதான்",[345] "இப்படி சேராச் சேர்த்தியான", "இனி தேவர் பதறுகிறதென்"[346] இவற்றில் அங்கு, இங்கு, அப்படி, இப்படி, இனி ஆகிய சொற்களின் முன்னே ஒற்றினை மிகுத்தெழுதாது விடுத்துள்ளமை காணலாம்.

அறிவுக்கேடர், வழிப்பறி ஆகிய இரண்டனையும்[347] எல்லா இடங்களிலும் ஒற்றுமிகாமல் எழுதிச் சென்றுள்ளனர்.

இரண்டு, நான்கு ஆகிய வேற்றுமையுருபுகள் விரிந்து வரும்போது ஒற்று இல்லாமல் எழுதியுள்ளனர். "இவனை கட்டிற்று",[348] "இவர்களுக்கு செலவு",[349] "உனக்கு படுக்கை."[350]

ஒற்று மிக வேண்டிய வினையெச்சங்களின் முன்னும் அஃது இல்லாமல் தொடர்கள் அமைந்துள்ளன. "அகல புக்க",[351] "பெண்களுக்குள் தொழிய தனியே",[352] "கூசி பிடிக்கும்",[353] "எழுந்தருளி திருப்பள்ளி",[354] "கேட்டு துணுக்கென்று",[355] "அழகு மிக்கிருப்பதாய் செம்பொன்னான."[356]

2) ஒருமை பன்மை மயக்கங்களும் பால் மயக்கங்களும் தொடர்களில் வருகின்றன. "பக்திமான்களும் பாதகரு மொக்க வாழ்ந்துபோய்த்து",[357] "இவை பார்த்தால் பொல்லாதாயிருக்கு மாபோல",[358] "அதெல்லாங் கிடக்க",[359] "ஒரோவிடங்களிலே",[360] "இவையுமெல்லாம் ஐச்வர்யஸூசகமாயிருக்கிறது"[361] "அவனை ஜயித்த பின்பிறே உஷை அநிருத்தனுக்கு சேஷமாய்த்து".[362]

---

344. அம.1, பெரி.
345. பெரி.தி. 3.3.8.
346. பெரி.தி. 5.4.0.
347. 1.0 0, மஹாப்ரவேசம்; சி. மடல், கண்ணி, 68.
348. க.நு.சி. 1, அழகு.
349. பாவை, 25-6.
350. பாவை, 9-3.
351. தி.மா. 35.
352. பாவை, 15-3.
353. பாவை, 24-6.
354. தி.வி. 21.
355. பாவை, 10-6.
356. தி.மா. 21.
357. அம. 2, பெரி.
358. பெரி.தி. 3.8.2.
359. தி.ச.வி. 45.
360. 5.2.4-36.
361. பெ.தி. 10.5.10.
362. பெரி.தி. 4.3.4.

"திருமங்கையாழ்வாரும் பெரிய திருமொழியில் திருமலையி லெழுந்தருளி நிற்கிற நிலையை அநுபவித்த அநந்தரம், திருகோட்டியூரில் எழுந்தருளி நிற்கிற நிலையையிறே அநுப வித்தது."[363] இப்பிழைகள் ஏடெழுதுவோரால் நிகழ்ந்திருத் தற்கும் இடம் இருக்கிறது.

முடிபுகள்

வைணவ உரைகளின் நடை பற்றிய விளக்கமான ஆராய்ச்சி, அவற்றின் நடையில் காணப்படும் தனித்தன்மைகளைக் காட்டு கின்றது; உரையாசிரியர்கள் மொழிக் கொள்கையினைத் தெரிவிக் கின்றது; அவற்றில் காணப்படும் நடைநலன்கள் யாவை என்பதனைப் புலப்படுத்துகின்றது.

363. பெரி.தி. 4.4.0.

5. உரைகள் காட்டும் சமுதாய நிலை

இலக்கியம் காலங் காட்டும் கண்ணாடி. வைணவ உரைகள் பிற்காலச் சோழர் காலத்துத் தமிழக நிலையினை அறியப் பெருந்துணையாய் அமைகின்றன.

வரலாற்றுக் குறிப்புகள்

தமிழகத்தின் வடக்கெல்லையாக வேங்கடம் இருந்தது.[1] வேங்கடத்திற்கு வடபால் வாழ்ந்தவர்கள் வடுகர்கள். அவர்கள் மொழி தமிழர்க்கு எளிதில் விளங்கவில்லை. ''வடுகர் வார்த்தை போலே தெரிகிறதில்லை'' என்பது இரண்டாந் திருவந்தாதி உரையில் வரும் செய்தி.[2] தமிழகத்தின் தென்பகுதி ஆரியர்களால் (வைதிகர்களால்) மிலேச்சர் பூமி யென்று இகழப்பட்டது.[3]

சோழமன்னர்களுள் முதற் குலோத்துங்கன், அவன் மைந்தன் விக்கிரம சோழன் ஆகிய இருவர் பற்றிய குறிப்பு ஈட்டுரையில் வருகின்றது. முதற் குலோத்துங்கன் வைணவத்திற்குத் தீங்கிழைத்தான் என்றும், அவன் மகன் அவ்வாறு தீங்கிழைக்கப் பட்டதற்கு வருந்தினான் என்றும் குறிக்கப்பட்டுள்ளன.[4] இவ் விக்கிரம சோழதேவன் ''மின்னிலங்கு திருவுருவம்'' என்னும் பாட்டைக் கேட்டுப் பாராட்டிய குறிப்புத் திருநெடுந் தாண்ட கத்தில் காணப்படுகிறது.[5] இராமானுசரின் மாணாக்கருள் ஒருவரான உறங்காவில்லிதாசர், கல்வெட்டுகளில் உறங்காவில்லி தாசனான மஹாபலி வாணாதராயர் என்று குறிப்பிடப்பட்டுள் ளார். இவர் முதற் குலோத்துங்கன் காலத்தவர் என்பது நெல்லூர்த் திருவரங்க நாயகர் கோயிலில் உள்ள கல்வெட்டினால் தெரிய வருகின்றது. மதுரை மண்டலத்து முட்ட நாட்டுத் திடியனான திருவரங்க நல்லூரைத் திருவரங்க நாதனுக்குக் கொடையாக அளித்தார் என்கிறது திருவில்லிபுத்தூர்க் கோயிற்

1. அம. 3, பெரி. பெரி.தி. 4.9.11; தி.நெ.தா. 4.
2. இ.தி. 9.
3. பெ.மடல், கண்ணி, 6; பெ.தி. 1.8.5; சி.மடல், கண்ணி, 73.
4. 10.7.5-36. 5. தி.நெ.தா. 25.

சாசனம். இவர் அகளங்கனுடைய (முதற் குலோத்துங்கன்) அரசியல் அதிகாரி ஆவார். வீரசுந்தர பிரமராயன் என்னும் ஒருவனைப் பற்றிய குறிப்புத் திருவிருத்தம் திருமாலை உரைகளில் காணப்படுகின்றது. அவனுக்கும் ஆசாரியர்களுக்கும் இடையே நல்லுறவு நிலவவில்லை என்பதும், அவன் எம்பார் காலத்தில் இருந்தவன் என்பதும் திருவிருத்த உரையால் தெரிகின்றன.[6] அவன் சோழக்குடி என்னும் ஊரைச் சேர்ந்தவன் என்றும், அங்கு அவன் எடுத்த மதிளே அவனது அழிவுக்குக் காரணமாய் அமைந்தது என்றும் திருமாலையுரை தெரிவிக்கின்றது. ''வீரஸுந்தர ப்ரஹ்மராயன் சோழக்குடியிலிட்ட மதிள் போலேயிறே இவன்தான் பண்ணிக் கொள்ளுமரண் விநாசபர்யந்தமாய் முடியும்படி'' என்பது திருமாலையுரைப்பகுதி.[7] அவன் கூரத்தாழ்வான் மாணாக்கன் என்பதும், அவ்வாழ்வான் மாணாக்கராகிய பிள்ளைப் பிள்ளை யாழ்வானது மாளிகைக்கு இடையூறு செய்து மதிள் கட்டினான் என்பதும், அதனால் பட்டர் வருத்தமுற்றுத் திருக்கோட்டியூருக்கு எழுந்தருளினார் என்பதும் வார்த்தாமாலையால் தெரியவருகின்றன.[8] இவனைப் பற்றிய செய்தி ஏதும் வரலாற்று நூல்களில் காணப்படவில்லை. எம்பார் கி.பி. 1140 வரை வாழ்ந்தவர் என்பதால் அக்காலத்தைச் சார்ந்தவன் இவனாவான்.

குணமலைப்பாடியுடையார் காங்கேயர் தெற்கே படையெடுத்தபோது கோயிலாச்சான் உதவிய நிகழ்ச்சி கண்ணி நுண் சிறுத்தாம்பு மூன்றாம் பாட்டின் உரையில் நம்பிள்ளையாலும் பெரியவாச்சான் பிள்ளையாலும் சுட்டப் பெறுகின்றது.[9] கோயிலாச்சான் பட்டரின் மாணாக்கராகையால் அவன் பட்டர் காலத்தவனாவான். இரண்டாம் இராசாதிராச சோழ மன்னன் அதிகாரிகளுள் குணமலைப்பாடியுடையான் ஆட்கொண்டான் கங்கை கொண்டானாகிய பொத்தப்பிச் சோழன் என்று ஒருவன் இருந்தான் என்றும், அவன் சோழ மண்டலத்தில் சுத்தமல்லி வளநாட்டில் வெண்ணிக் கூற்றத்தைச் சார்ந்தவன் என்றும் வரலாறு தெரிவிக்கின்றது.[10] வைணவ உரைகளில் சுட்டப் பெறுபவனும் அவனேயாவான். அவன்

---

6. தி.வி. 28.
7. தி.மா. 6.
8. வா. மாலை. வா. 400.
9. க.நு.சி. 3, நம்பிள்ளை; பெரி.
10. டி.வி. சதாசிவ பண்டாரத்தார், 'பிற்காலச் சோழர் சரித்திரம்', பகுதி 2, அண்ணாமலை நகர், 1967, பக். 144.

தெற்கே படையெடுத்துச் சென்றுள்ளான் என்பது உரை தரும் புதிய செய்தியாகும்.

நஞ்சியர் காலத்தில் திருவையாற்றில் வந்து தங்கிய யாதவராயனை இறையிலி நிலம் பெறுவது குறித்து நம்பிள்ளை சென்று கண்டார் என்கிறது பெரிய திருமொழி.[11] இவன் நஞ்சீயர் காலத்தவனான மூன்றாங் குலோத்துங்க சோழன் அரசியல் தலைவர்களுள் ஒருவனாவான். இவனைப் பற்றி வரலாற்றில் ஏதும் காணப்படவில்லை.

நஞ்சியர் மாறவர்மன் சுந்தர பாண்டியனைச் சந்தித்துள்ளார். வால்மீகி இராமாயணப் பாட்டொன்றற்கு நஞ்சீயர் அவன் முன்பு விளக்கம் சொன்ன குறிப்புப் பெரிய திருமொழி, நாச்சியார் திருமொழி உரைகளில் காணப்படுகின்றது.[12] அதில் 'சுந்தரபாண்டிய தேவர்' என்று அவன் குறிக்கப் பெறுகிறான். அவன் கி.பி. 1219இல் இரண்டாம் முறையாகப் படையெடுத்து மூன்றம் இராசராச சோழனை வென்று முடிகொண்ட சோழ புரத்தில் வெற்றி விழாவும் வீர விழாவும் கொண்டாடினான். அவனை ஸ்ரீசுந்தர பாண்டிய தேவர் என்று கல்வெட்டுகள் குறிக்கின்றன என்பர் வரலாற்றாசிரியர்.[13] நஞ்சீயர் கி.பி. 1208இல் மறைந்தார் என்று கருதப் பெறுவதால் அவர்கள் சந்திப்பு அதற்கு முன்பு நிகழ்ந்தது எனலாம்.

சோழ மன்னர் ஒருமுறை பகை மன்னரைச் சென்று கண்டு மகிழ்ந்துள்ளனர். அந்நிகழ்ச்சி, "காண வந்த சோழரோபாதி" என்று உவமையாகச் சில இடங்களில் சுட்டப்படுகின்றது.[14]

இவ்வுரைகளில் வெள்ளம், பஞ்சம் பற்றிய செய்திகள் பல இடங்களில் உவமைகளாக வருகின்றன. விக்கிரம சோழன் ஆட்சியில் கி.பி. 1125இல் தொண்டை நாடு, நடுநாடு ஆகியவற்றில் பெருவெள்ளங் காரணமாகப் பஞ்சமும், கி.பி. 1130இல் எக்காரணத்தாலோ சோழ நாட்டில் அத்தகைய தொரு பஞ்சமும் ஏற்பட்டுள்ளன. மூன்றாங் குலோத்துங்கன் ஆட்சியில் கி.பி. 1190இல் மழையால் பஞ்சமும், கி.பி. 1201இல்

---

11. பெ.தி. 2.6.1.
12. பெ.தி. 10.4.1; நா.தி. 9.3.
13. டி.வி. சதாசிவ பண்டாரத்தார், 'பிற்காலச் சோழர் சரித்திரம்', பகுதி 2, அண்ணாமலை நகர், 1967, பக். 191.
14. தி.வி. 6; பெ.தி. 3.1.9; க.நு.சி. 11, நஞ்சீயர்; பெரி.தி. 4.9.9.

மழையின்மையால் பெரும்பஞ்சமும் ஏற்பட்டுள்ளன.[15] அக்காலத்தில் வாழ்ந்த இவ்வுரைகாரர்களின் வாழ்க்கை அனுபவமே உரைகளில் அவை பற்றிய உவமைகளாக நிழலிடுகின்றன எனலாம்.

திருவரங்கத்தில் வாழ்ந்தோர் கலக காலங்களில் அடைய வளைந்தான் மதிளுக்குள்ளே புகுந்து தங்கினர்.[16] இடையூறுகளும் தொல்லைகளும் மிகுந்த காலங்களில் அச்சமிக்கோர் தங்குவதற்கு 'அஞ்சினான் புகலிடம்' என்னும் புகலிடங்கள் இருந்தன.[17] அக்காலத்தில் பள்ளிகள் கலகம் விளைத்தனர் என்னும் குறிப்புப் ''பள்ளிக் கலகங்கள் போலே'' என்னும் உவமையால் தெரிகின்றது.[18]

கடல்மல்லை துறைமுகமாக விளங்கியது; அங்கு வந்து இறங்கிய பொருள்கள் காஞ்சியில் விலையாயின.[19] "அணைக்கு அவ்வருகுபட்ட நீரோபாதி" என்னும் உவமை காவிரிக்குக் குறுக்கே கல்லணை இருந்ததனைக் குறிப்பாகப் புலப்படுத்துகின்றது.[20]

கோனாட்சி

நாட்டை மன்னர்கள் ஆண்டனர்; அவர்களுக்குப் பின் அவர்தம் பிள்ளைகள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றனர். அரசன் வழித்தோன்ற லின்றி மறைந்தால் யானையைக் கண்ணைக் கட்டிவிட்டு அது தேர்ந்தெடுப்பவரை மன்னனாக்குவது வழக்கம்.[21] புதிதாகப் பதவி ஏற்ற மன்னரைக் கண்டால் மக்கள் சில காலம் நடுக்கத்தோடு இருந்தனர்.[22] சிற்சில காலங்களில் நாடு அரசனின்றித் துன்பத்திற்கும் ஆளாகியுள்ளது. அக்காலங்களில் குறும்பு செய்தவர், அரசன் ஒருவன் அமைந்து ஆட்சி நிலைபெற்றவுடன் தண்டிக்கப்பட்டனர்.[23]

---

15. டி.வி. சதாசிவபண்டாரத்தார், 'பிற்காலச் சோழர் சரித்திரம்', பகுதி 2, அண்ணாமலை நகர், 1967, பக். 75, 76, 170.
16. 7.4.4-36.
17. தி.வி. 92; 6.4.5-24,36; தி.நெ.தா. 21, பட்டர்; பெ.தி. 2.10.4; பெ.தி. 11.1.4.
18. 7.1.2-36; பெ. திருவந்., 51.
19. தி.நெ.தா. 9.
20. பெ.தி. 1.1.2.
21. தி.வி. 1.
22. தி.வி. 13.
23. தி.மா. 1.

நாட்டினைக் காக்கும் உரிமை அரசனைச் சார்ந்திருந்தது. அரசனுக்கடங்கிய சிற்றரசர்களும், ஊர்களைக் காக்கும் அதிகாரிகளும் இருந்தனர். கிராமணிகள் என்னும் ஊர் அதிகாரிகள் கொடுமைக்காரர்களாக இருந்துள்ளனர்.[24] ஊர்காப்போர் 'கூறு செய்வார்' எனவும், 'பாடிகாப்போர்' எனவும் சுட்டப்படுகின்றனர்.[25] அரசர்கள் நகர மக்கள் கருத்தினை அறிவதற்கு மாறுவேட மிட்டுச் சென்றனர். அவர்களுக்குத் தேவை நேரிடும் போது உதவுதற்குக் காவலர்களும் பிரிந்து அங்கங்கே திரிந்தனர்.[26] அரசர்கள் சில மண்டபங்களில் இருந்து சிலவற்றைத் தெரிவித்தால் அவை பின்னர் அவர்களாலும் தவிர்க்க வொண்ணாத உறுதியுடையனவாக அமைந்தன.[27] அரசனைக் காணச் செல்வோர் தங்கட்குரிய சட்டை, பிரம்பு, மயிற்கட்டு ஆகிய தரத்தோடு சென்றனர்.[28] அரசர்கள் நாட்டுக் கணக்கைப் பார்த்து முடித்த பின்பே அந்தப்புரம் சென்றனர்.[29] தங்கள் கட்டளையை ஏற்காத நாட்டின்மேல் அரசர்கள் படையெடுத்தனர்.[30] அவர்கள் மழைக் காலத்தில் போர் எதனையும் மேற்கொள்ளாது தம் நகரில் உறைந்தனர்.[31] பிறர் கோட்டைகளை முற்றுகையிடும்போது "இன்ன கோட்டை அழிந்தாலன்றி வெற்றிலை போடோம், பால் குடியோம்" என்பது போன்ற வஞ்சினங்களை உரைத்தனர்.[32]

அரசர்கள் பகைநகரங்களைக் கைப்பற்றின் இன்ன படைவீட்டைக் கொண்டான் என்று சிறப்பாகக் குறிக்கப் பெற்றனர்.[33] (கங்கை கொண்டான், கடாரங் கொண்டான் என்று இராசேந்திர சோழன் வரலாற்றில் குறிக்கப் பெற்றிருத்தல் கருதத்தக்கது.)

அரசர்கள் வாழ்ந்த அரண்மனைகளில் கூனரும் குறளரும் பணிபுரிந்தனர்.[34] செருக்கராயிருந்த அரசர்கள் தம் காதலியரோடு இன்பம் நுகரத் தனியிடங்களில் மாளிகைகளைச் சமைத்தனர்.[35] அரசர்கள் தம் பட்டத்தரசியருக்குத் தம்மையும்

24. 2.1.1-24, 36; 4.9.6-24, 36.
25. 5.2.8-36; 5.3.3-24, 36.
26. 1.8.9-24, 36; 2.10.8-24.
27. தி.மா 1; பாவை, 23-6.
28. 2.2.10-24, 36.
29, 2.6.2-36.
30. தி மா. 0.
31. பாவை, 23-3.
32. தி.வி. 44.
33. 1.8.7-24, 36.
34. 1.8.1-24, 36; தி.நெ.தா. 6; மு.தி. 53.
35. நா.தி. 14.1.

தம் உடைமையினையும் அவரிட்ட வழக்காக்கி வைத்தனர்,[36] அரசமாதேவியர் தம் குழந்தைகளைத் தாமே வளர்க்காமல் மற்றவர்களைக் கொண்டு வளர்த்தனர்.[37] அரசர்களும் அவர் தம் தேவியரும் சேர்ந்து இன்பத்திற்காகச் சில தோட்டங்களை அமைத்து நீர்வார்த்து மகிழ்ந்தனர்.[38] அரசர்கள் வெளியூருக்குச் செல்லுங்கால் பாதைகள் செப்பனிடப்பட்டன.[39] அவர்கள் நீர் விளையாட்டுக்குச் செல்வதும் உண்டு. அப்பொழுது அவர் களோடு நீர் நிலைகளில் மேடுபள்ளம் கண்டறியும் 'மேகர்' என்போர் துணைசென்றனர்.[40]

அரசர்களுக்கு, ஆடைகளைத் தம் அரையில் உடுத்துத் தகுதியாம்படி செய்து உடுத்தக் கொடுக்கும் இரட்டை பிடித்துக் கொடுப்போரும்.[41] வெற்றிலை மடித்துக் கொடுப்போரும்,[42] அவ்வக்காலங்களில் பூக்களையிடும் பூவேளைக்காரரும்[43] இருந்தனர். அரசர் விரும்பும் பொருள்களை எடுத்துச் செல்வோர் அவற்றைப் பிறர் கண்படாதபடி கட்டி முத்திரையிட்டு எடுத்துச் சென்றனர்.[44]

அரசனைப் போலவே, அரச குமரரும் செல்வ வாழ்வில் மிதந்தனர். அவர்களைக் காணும்போது அரசரோடு தொடர் புடையோர் மரியாதை செலுத்தினர்.[45] அவர்கள் கண்டார் மயங்கும் கடைச்செறி இடைச்செறிகளைக் கையில் அணிந்தனர்.[46] பூவைப் புழுகு நெய்யிலே தோய்த்துச் சூடினர்.[47] மதுவருந்தி மகிழ்ந்தனர்.[48] சிலர் இழிந்த பெண்களின் காற்கடையில் துவண்டு கிடந்தனர்.[49] தம் கால்களைப் பணியாளர் பிடித்துவிட - துடைகுத்த - உறங்கினர்.[50] அவர்களுக்குக் 'கைக்கூட்டன்' எனப்படும் காவலர் இருந்தனர்.[51]

அரசனுக்கு நெருக்கமான அமைச்சர் முதலானோர் மாளிகைகள் அரண்மனையை அடுத்து அமைந்திருந்தன.[52] முதிய அமைச்சர்கள், அரசன் மறைந்தபின் இளவரசனை அரசனாக்கி

---

36. 10.6.1-24, 36.
37. பெரு.தி. 7.6.
38. 1.1.3-36.
39. பாவை, 28-6.
40. நா.தி. 8.2.
41. தி.பல். 9.
42. 1.4.1-36.
43. 5.1.9-24,36.
44. பெரி.தி. 3.10.5.
45. 10.9.1-36.
46. தி.வி. 12; 6.1.1-24, 36.
47. தி.வி. 40.
48. பாவை 3-6.
49. 10.7.4-36.
50. பெ.தி. 1.2.4.
51. திருவெழு. அடி, 13.
52. மு.தி. 33,

வைத்துத் தாங்களே ஆட்சியைக் கவனித்தனர்.[53] வயது முதிர்ந்த அமைச்சர்களிடம் அரசர்கள் பணிவோடு நடந்தனர்.[54] தங்கட்குப் பெருஞ்செல்வம் இருந்தபோதிலும் அரண்மனையில் செம்பாலே பெறும் நாழியரிசியைச் சிறப்பாகக் கருதினர்.[55]

அரண்மனையில் ஆயுதச்சாலை இருந்தது. அங்குச் சொட்டை, சுரிகை முதலிய கருவிகள் இருந்தன.[56] படைக் கருவிகளை நெய்பூசிப் பாதுகாத்தனர்.[57] படைக் கருவிகளுக்கு நஞ்சூட்டுதலும் இருந்தது.[58] படைக் கருவிகளின் உறை 'கருவிப்பை' எனப்பட்டது.[59]

கோட்டையைச் சுற்றிக் காவற்காடு இருந்தது. அதில் கொடிய விலங்குகள் இரையிட்டு வளர்க்கப்பட்டன.[60]

மக்கள் வாழ்க்கை

செல்வரும் வறியவரும், கொடுப்போரும் கொள்வோரும், நல்லாரும் பொல்லாரும் நிறைந்தது அக்காலச் சமுதாயம்.

செல்வர்கள் பிடிதோறும் நெய் சேர்த்து உண்டனர்.[61] பால், பழம், கண்டசர்க்கரை ஆகியவற்றைச் சேர்த்து அயின்று மகிழ்ந்தனர்.[62] கையில் பனிநீர்க்குப்பி ஏந்திக் களித்தனர்.[63] சந்தனம் பூசுவதிலும் புழுகுநெய் பூசுவது உயர்வு என்பது அவர்தம் கொள்கை.[64] அவர்தம் மாளிகைகளில் வம்சாவளி சொல்லித் துயிலுணர்த்தும் ஏத்தாளிகள் இருந்தனர்.[65] சிலர் செல்வம் பெருகினால் மேலும் மேலும் பெண்டிரை மணந்து இன்பம் துய்த்தனர்.[66] இதற்கு முற்றிலும் மாறான நிலையில் சிலர் வயல்களில் சிந்திக் கிடக்கும் கதிர்களைப் பொறுக்கியும் இரந்தும் உயிர் வாழ்ந்தனர்.[67] கையில் மாடுகளைப் பிடித்துக் கொண்டு சென்று பிச்சை எடுப்போரும்[68] குழந்தைகளைக் காட்டிக் கையேந்தி

---

53. பெ.தி. 1.2.6; பெரி.தி. 3.6.2.
54. 10.6.1-36.
55. 1.3.9-24, 36.
56. தி.நெ.தா. 21, பட்டர்.
57. சி.மடல், கண்ணி 11.
58. சி.மடல், கண்ணி 56; 9.9.1-36.
59. மு.தி. 18.
60. பெ.தி. 1.2.4; 4.8.7-36.
61. 1.5.11-36.
62. அம. 10, அழகு.
63. நா.தி. 7.4.
64. 5.9.9-36.
65. பாவை, 7-6.
66. தி.நெ.தா. 16.
67. அம. 1, பெரி; தி.நெ.தா. 8; பாவை, 13-6; தி.வி. 17.
68. மு.தி. 5.

யோரும்[69] இருந்தனர். "சீமானே! என் பசியைப் போக்க வேணும்" என்பது பசித்தவர் வேண்டுகோளாக இருந்தது.[70] தம் உடைமைகள் எல்லாவற்றையும் கொடுத்தோரும் பாடுவார்க்குப் பரிசில் நல்கியோரும் காவணம் இட்டுத் தந்தோருமாக வள்ளல்கள் சிலர் வாழ்ந்தனர்.[71] இருந்த கிழிச் சீரையோடு இரத்தினத்தைக் கொடுத்தோரும் உண்டு.[72] பொருளுக்காக இல்லாத சொல்லிக் கவிபாடும் புலவர் சிலரும் வாழ்ந்தனர்.[73] "கோட் சொல்லி ப்ரஸித்தராமாப் போலே" என்னும் உவமை ஒருவர் சொன்னதை மற்றவரிடம் சொல்லிப் பெரிய மனிதரானோரும் இருந்தனர் என்பதனைத் தெரிவிக்கின்றது.[74] சிலர் தங்களைப் பிறருக்கு அடிமைகள் என்று ஓலை எழுதிக் கொடுத்தனர். "என்னை எழுதிக் கொண்டவனே" என்று பல இடங்களில் வருவதும்,[75] "அடிமை விலையோலை எழுதும் போதும் 'மண்ணுக்கும் மணத்துக்கும் உரியனாக வேணும்' என்றிறே எழுதுவது" என்று வருவதும்[76] இதனைத் தெரிவிக்கும்.

சிலர் மலையை நாடிச் சென்று பிழைப்பு நடத்தினர்.[77] மலைப்பகுதியில் வாழ்ந்தோர் பல நாள் உணவினை ஒருகால் உண்ணவும், பல நாள் பட்டினி கிடக்கவும் கூடியவராய் இருந்தனர்.[78] மக்களுள் சிலர் புதையல் கண்டெடுத்தனர்.[79] கடன் வாங்கி வாழ்வதும் இருந்தது. கடன்கொடுத்தவர் கடன் பெற்றவரிடம் ஈட்டுப்பொருள் (பணயம்) பெற்றனர்.[80] உரிய காலத்தில் கடனைத் திருப்பித் தாராதவர்களைக் "கடனைக் கொடுத்தே தாண்டிப் போகவேண்டும்" என்று கூறிக் கோடு கிழித்து அதில் நிறுத்தும் நிலை இருந்துள்ளது.[81] அவ்வாறு கோடு கிழிப்பவர் 'வளைப்பார்' என்று சுட்டப்பெறுகின்றனர்.

தந்தையர், தக்க வயதடைந்த பிள்ளைகளுக்கு நல்ல இடங்களில் பெண்பார்த்துத் திருமணம் செய்தனர்.[82] பிராமணர் இளமையில் பிரமசரியம் காத்துப் பின்பு இல்லறத்தை

69. தி.ப. 1, நஞ்சீயர். 70. தி.மா. 36.
71. தி.நெ.தா. 25; பெ.தி. 3.8.1.
72. தி.மா. 10. 74. மு.தி. 28.
73. திருவா. 6; பெ.தி. 6.2.1.
75. 4.7.10-9, 24, 36; 4.3.2-24, 36.
76. தி.பல். 3. 77. பாவை, 19-3,6.
78. தி.நெ.தா. 1; தி.நெ.தா. 13.
79. மு.தி. 20. 81. சி.மடல், கண்ணி, 46.
80, பெ.தி. 8.2.6. 82. 7.6.7-36.

மேற்கொண்டனர்.[83] சிலர் பற்றற்றுத் துறவு நிலையினை (வாநப்ரஸ்தாச்ரமம்) மேற்கொண்டு காட்டில் உறைந்தனர்.[84] மடங்கள் சிலவும் அங்கங்கே இருந்தன.[85] ஓர் இனத்தில் ஒருவன் சிறக்கக் கண்டால் உறவினர் அனைவரும் அவனை நாடிச் சென்றனர்.[86] வெளிநாடு சென்று மீண்டவர்களைக் காண உறவினர்கள் விரும்பி வந்தனர்.[87] மக்கள் ஊர்ப்பயணம் போகும்போது நீரும் நிழலும் மிக்க பாதையினைப் பற்றிச் சென்றதோடு[88] கட்டுச் சோறும் எடுத்துச் சென்றனர்.[89]

தானியங்களை அரைக்கும் திரிகை, நிலைவிளக்கு, கைவிளக்கு, பீங்கான் பாத்திரங்கள், பன்னீர்க் குப்பிகள் ஆகியன அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட சில பொருள்களாகும்.[90] இரும்பு, வெண்கலம், பொன், ஈயம் ஆகிய உலோகங்கள் பெரிதும் புழக்கத்திலிருந்தன.[91] மஞ்சாடி, முந்திரிகை, கழஞ்சு, உழக்கு, பதக்கு ஆகிய அளவைகள் அக்காலத்தில் வழங்கின.[92] வீசம் என்பதும் ஓர் அளவை.[93] நேரத்தைக் கணக்கிட்டறிய நாழிகை வட்டில்கள் இருந்தன.[94] தூரத்தைக் காதம் என்னும் அளவால் குறித்தனர்.[95]

பெண்டிர் நிலை

குலமகளிரும் விலைமகளிரும் இருந்தனர். கணவன் வீட்டிலில்லாது பிற இடத்திற்குச் சென்றிருக்கும் காலத்தில் மனைவி குளித்தற்குத் தயங்கினாள் (இறாய்த்தாள்).[96] கன்னியர் வீட்டுக்கு வெளியே வாராதவராய் வளர்ந்தனர்.[97]

கணவனை இழந்த பெண்டிர்பால் இரக்கங்காட்டினர்.[98] புதிதாக விதவையானோர் பொழுது விடிவதற்கு முன்பே மனிதர் முகத்தில் விழியாமல் இடம்பெயர்ந்து சென்றனர்.[99]

---

83. பெரிதி. 3.2.0.
84. பாவை, 28.3.
85. பாவை, 4-6.
86. 7.4.1-36.
87. தி.நெ தா. 15.
88. தி.நெ.தா. 6.
89. பெ.தி. 3.6.5; 6.4.1-36.
90. தி.வி. 51; 10.9.4-36; 9.7 5-24; பெ.மடல், கண்ணி, 2; 7.2.1-36; அம. 10, பெரி.
91. 2.7 4-12; 7.2.4-24; 4.7.9; தி.மா. 0.
92. 7.8.1-12; 4.1.1-36; இ.தி. 38; அம. 7, அழகு; தி.நெ.தா. 17.
93. பெ.தி. 1.3.7.
94. பாவை, 6-6.
95. நா.தி. 12.6.
96. பாவை, 2-6.
97. 5.5.9-12.
98. பெ.தி. 5.1.7.
99. தி.வி. 23.

விலைமகளிர் நெஞ்சிற் கொடுமையும் வெளியே இனிமையும் உடையராய் இருந்தனர்.[100]

சமயநிலை

சமயங்கள் காழ்ப்புணர்ச்சிகளுக்கிடையே வளர்ந்து வந்த நிலையே உரைகளில் காணப்படுகின்றது. ஆத்திகத்தோடு நாத்திகமும் இருந்தது. ''நாஸ்திக்ய ப்ரசுரரானவர்களுக்கும் ஆச்ரயணீய னாகைக்கிறே (சார்தற்குரியவன்) மேலை ஸமுத்ரக் கரையிலே நித்யவாஸம் பண்ணுகிறது'' என்பது திருநெடுந் தாண்டக உரைப்பகுதி.[101]

சமணம் முதலான பிற சமயங்கள் இருந்தபோதிலும், சைவ வைணவங்களுக்கிடையிலேயே போராட்டம் நிகழ்ந்துள்ளது எனலாம். விழா நாளில், திருவரங்கச் செல்வன் உலாப் புறப்பட்டால், அதுகண்டு நான்று கொள்வாரும், 'கொம்பூதிற்று' என்று முட்டிக் கொள்வாருமாய்ச் சைவர்கள் இருந்தனர்.[102] சிவனையும் முருகனையும் முறையே ''ப்ரஜையை அறுத்துத் தா'' (சிறுத்தொண்ட நாயனார் வரலாறு), ''ஆட்டை அறுத்துத் தா'' (முருகனுக்கு ஆட்டினைப் பலியிடும் வழக்கம்) என்று கேட்கும் வழிபாட்டிற்குத் தகுதியற்ற தேவதைகள் என்று வைணவர்கள் இகழ்ந்தனர்.[103]

ஐயனார் முதலான சிறு தெய்வங்களுக்குக் கோயில்கள் இருந்துள்ளன. அக்கோயில்களுக்கு முன்னே மண்ணாலாகிய யானைகள் அமைக்கப்பட்டிருந்தன என்பது ''அய்யன் பாழியில் ஆனை போர்க்குரித்தாமன்றாயிற்று அவ்வோ தேவதா மாத்ரங் களுக்கு பல ப்ரதாந சக்தியுள்ளது'' என்னும் உரைத்தொடரால் தெரிய வருகின்றது.[104]

இவ்வுரைகள் வைணவ சமய நிலையினையே பெரிதும் எடுத்துக் காட்டுகின்றன. திருவரங்கம் பெருஞ் சிறப்போடு திகழ்ந்தது. அங்கு உறைவது பெரும்பேறாகக் கருதப்பட்டது.[105] திருவேங்கடமும் அவ்வாறே சிறப்புற்றிருந்தது. திருவேங்கடத் திற்குச் செல்வதே ஒரு பெரும் பயனாகக் கருதப்பட்டது.[106] வட நாட்டார் (திருவரங்கத்திற்கு வடக்கேயிருந்த பகுதிகளை

---

100. தி.மா. 16.
101. தி.நெ.தா. 10.
102. தி.மா. 8.
103. 1.1.5-36.
104. 1.1.5-36.
105. தி.வி. 66; பெ.தி. 3.6.3; பாவை, 2-3.
106. பாவை, 8-3.

யெல்லாம் வடநாடு என்று குறித்தல் வைணவ மரபு) பெரிய பெருமாளை வணங்கத் திருவரங்கச் செலவு மேற்கொண்டனர்.[107]

திருவரங்கத்தில் நடக்கும் விழாக்களுள் சிறப்பானது பெரிய திருநாள் விழாவாகும். அது போழ்து வைணவர்கள் அனைவரும் அங்குக் குழுமினர். "'நம் பெருமாள் திருநாள்' என்று ஒரு பேரையிட்டு, ஸ்ரீவைஷ்ணவர்களைத் திரட்டிக் காணுமாபோலே" என்று பெரியவாச்சான் பிள்ளை உவமை காட்டிச் செல்வது கருதத் தக்கது.[108] பெரிய திருநாள் விழாவுக்கு எல்லாத் திக்குகளிலிருந்தும் மக்கள் வந்து திரண்டனர்.[109] "பெரிய திருநாளில் போலே உலாவித் திரியலாயிருக்க,"[110] "பெரிய திருநாளுக்குப் பின்பு கார்யம் செய்கிறோ மென்னுமா போலே"[111] என வரும் உவமைகள் அதன் சிறப்பினை உணர்த்தும். முற்காலத்தில் பெரிய திருநாளில் வழிபாடு செய்த பெரியோர்கள் தாங்கள் அப்பொழுது அணிந்திருந்த ஆடையினைப் 'பெரிய திருநாள் சேவித்த ஆடை'யென்று போற்றி அடுத்த திருநாள் வருமளவும் மடித்துக் கொடியிலிட்டு வைத்துப் பார்த்து மகிழ்ந்தனராம்.[112] அவ் இரட்டைகள் அழுக்கானாலும் மடிகுலையாது வைத்துப் போற்றுவராம்.[113] இரவில் நடைபெறும் விழாக்களும் இருந்தன.[114]

திருவரங்கப் பெருமானுக்கு ராஜமகேந்த்ரம்படி, சேர பாண்டியன் தம்பிரான் என்னும் அணிகலன்கள் இருந்தன;[115] உலா வருவதற்கு ஆறுகால் சிவிகை இருந்தது.[116]

திருக்கோயில்களில் திவ்வியப் பிரபந்தங்களை விண்ணப்பஞ் செய்வோர் இருந்தனர்.[117] அவர்கள் 'தம்பிரான்மார்' என்றும் குறிக்கப் பெற்றனர்.[118] அவர்கள் பட்டினி கிடந்தும், தம் மிடற்றுக்கு எண்ணெயிட்டும் குரலைப் பக்குவமாக வைத்திருந்தனர்.[119]

வைணவக் கோயில்களில் இறைவன் திருவடி நிலைகளை இறையடியார் தலையில் வைக்கும் முறை அக்காலத்திலேயே

107. தி.நெ.தா. 14.
108. பாவை, 27-3.
109. 4.10.2-36; 10.4.10-36.
110. பெ.மடல், கண்ணி, 18.
111. தி.நெ.தா. 3.
112. சி.மடல், கண்ணி, 28.
113. 5.9.3-36.
114. பாவை, 1-6.
115. 4.3.3-24; 4 3.3-36.
116. திருவா.1.
117. 2.6.11-36.
118. க.நு.சி. 10, அழகு.
119. நா.தி. 12.9.

இருந்துள்ளது. அத்திருவடி நிலைகளைச் 'சடகோபன்' 'சடாரி' என்னும் பெயர்களால் சுட்டுவர். ''ஸ்ரீ சடகோபனைத் தலையிலே கொண்டிருந்தும் பொய் சொல்லுவாருண்டோ?'' என்று வரும் உரைத்தொடரால் அதனை அறியலாம்.[120]

சமயநெறியில் நின்றோர் ஒரு திங்கள் அளவுவரை கூட உண்ணாநோன்பு மேற்கொண்டுள்ளனர். ''மாஸோபவாஸி களுக்குப் பாற் குழம்பு கொடுப்பாரைப் போலே''[121] ''மாஸோபவாஸி சோற்றை விரும்புமாபோலே''[122] என வரும் உவமைகள் அதனைத் தெரிவிக்கின்றன. சமயச் சொற்பொழிவு கள் அங்கங்கே பலரால் நிகழ்த்தப் பெற்றன. மக்களிடையே வைணவ சமயக் கருத்துகள் விரைந்து பரவி வந்த காலம் உரையாசிரியர்கள் காலமாகும்.

அறச் செயல்கள்

கோயில்களுக்கு நிலங்களைக் கொடையாக அரசர்களும் செல்வர்களும் அளித்தனர். தெய்வங்களுக்குத் தரப்பட்ட கொடை 'தேவதானம்' எனப்பட்டது. "இவனுடம்பு தேவதாநமும் திருவிடையாட்டமுமாயிறே யிருப்பது'' என்னும் உரைத்தொடர் இதனைக் குறித்தல் காணலாம்.[123] கொடை வழங்கியோர் அதனைச் செப்பேடுகளிலும் கல்வெட்டுகளிலும் பொறித்தனர்.[124]

நெடுஞ்சாலைகளில் தண்ணீர்ப்பந்தல் வைத்தல் சிறந்த அறமாகக் கருதப்பட்டது. ''ஒரு வாய்ச்சொல்லே தண்ணீர்ப் பந்தல்போலே'',[125] ''நாட்டுக்குத் தண்ணீர்ப்பந்தல் போலே'',[126] ''தர்மத்துக்குத் தண்ணீர் வார்க்கை'',[127] ''விடாயன் தண்ணீர்ப் பந்தலிலே வரக்கொள்ளச் சால் உருண்டு கிடந்தாற் போலே''[128] என்பவை போல வரும் பகுதிகள் இதனைத் தெரிவிக்கின்றன. தண்ணீர்ப்பந்தல் இருத்தல் விடாயர்க்குத் தெரிதற்காகக் கொடி யும் தோரணமும் அங்கு நட்டு வைத்தனர்.[129]

---

120. க.நு.சி. 2, அழகு.
122. பெரி.தி. 5.3.7.
121. தி.நெ.தா. 21, பட்டர்.
123. பெரி.தி. 4.4.8.
124. திருவெழு. 1; நான். தி.1; தி.நெ.தா. 9.
125. நா.தி. 5.7.
126. சி.மடல், கண்ணி, 41.
127. பெ.மடல், கண்ணி, 134.
128. 1.4.4-36.
129. பாவை,16-6.

"குருடர்க்கு வைத்த அறச்சாலையிலே மீளிர்கண்ணர் புகுரலாமோ?" என்னும் உரைத்தொடரால்[130] பார்வையற்றவர்களுக்கு அறச்சாலைகள் அமைந்திருந்தமை புலனாகின்றது.

அறம் பிழைத்தார்கள் கழுவாய் தேடுவது அக்காலத்து இருந்தது. ஒவ்வொரு பிழைக்கும் தனித்தனியே கழுவாய் தேடுதல் வேண்டும் என்பது "ப்ரஹ்மஹத்யைக்கு (அந்தணனைக் கொல்லல்) ப்ராயச்சித்தம் பண்ணினால் கோஹத்யைக்குத் (ஆன்கொலை) தனித்துப் ப்ராயச்சித்தம் பண்ண வேண்டி வருமிறே" என்பதால் தெரிய வருகிறது.[131]

பெண்களுக்குக் கொடை வழங்குதல் இல்லை. அவர்கள் கொடை பெறும் உரிமை யற்றவர்கள் என்பது அக்காலக் கொள்கை. "நாட்டில் பெண்களுக்கு(த்) தானம் கொடுப்பாரில்லை. தானங் கொள்ளுகைக்கு அதிகாரிகளல்லாமை யாலே" என்பது திருப்பாவை உரை.[132]

ஆலயங்கள் எடுக்கும் திருப்பணிகளும் நிகழ்ந்தன. கோயில் கோபுரத்தின்மேல் முகப்புக்கல் ஏற்றுவது அரிய செயலாகும். "முகவணைக்கல் லேற்றுவாரைப் போலே அருமைப் பட்டேற்றின படி" என்பது சிறிய திருமடல் உரையில் வரும் ஓர் உவமை.[133] கோயில் கட்டி இறைவனைக் கால்கோள் செய்தவர்களினும் அக்கோயிலைப் பழுதுபார்த்துப் புதுப்பிக்கிறவர்கள் முதன்மையான வர்களாகக் கருதப்பட்டனர்.[134]

சாதி நிலை

சாதிப்பிரிவும், தீண்டாமை உணர்வும் மேலோங்கி இருந்தன. பார்ப்பனர் மேலோராகவும் பறையர் கீழோராகவும் கருதப் பட்டனர். பார்ப்பனருக்கு வேதம் ஓதுதலும், அந்தித் தொழுதலும் (சந்தியாவந்தனம்) பிறப்புரிமைகளாக அமைந் தன.[135] "ப்ராஹ்மணர் பிச்சேறினாலும் ஓத்துச் சொல்லுமா போலே" என்னும் உவமை எத்துணை ஆர்வத்தோடு அவர்களால் வேதம் ஓதப்பட்டது என்பதனைக் காட்டும்.[136] அவர்கள் அந்தித்

130. அம. 3, பெரி, அழகு; 9.10.3-36.
131. 9.6.1-36.
132. பாவை, 17-3,6.
133. சி.மடல், கண்ணி, 30.
134. பாவை, 25-6.
135. பெ.மடல், கண்ணி, 41; மூ.தி. 42.
136. 1.4.2-36; பெ.தி. 3.6.9; தி.வி. 3.

தொழுகைக்காக வைகறையில் துயிலெழுந்தனர்.[137] பெரிய திருநாள் விழாக் காலத்திலும் முட்டாமல் அதனை நிகழ்த்தினர்.[138] செல்வப் பெருக்குக் காரணமாக யாரும் அந்தித் தொழுகையினை ஆளிட்டு நிகழ்த்தினாரல்லர்.[139] ''ஆளிட்டந்தி தொழாதே'' என்னும் உரைப் பகுதி, நோய் முதலியவற்றால் அந்தித் தொழுகை நிகழ்த்த இயலாதவர்கள் தமக்குப் பதிலாக வேறொருவரை அமைத்து அதனை நிகழ்த்தினர் என்று ஊகிக்க இடம் தருகின்றது.[140] அந்தணர் செல்வம் பெருகினால் யாகங்கள் செய்தனர்.[141] ஓர் அந்தணர் குடும்பத்தில் வேத வேள்விகள் மூன்று தலைமுறைகள் நிகழாமற் போனால், அக்குடும்பத்தில் பிறந்தவர்க்குப் பார்ப்பனத்தன்மை (பிராமணத்துவம்) இல்லாது கழியும் என்னும் கொள்கை நிலவியது.[142]

பிள்ளை, முதலியார், கோனார், தொண்டமானார் ஆகியோர் சமுதாயத்தின் மேல்மட்டத்தில் பெருமையோடு விளங்கினர். வறியவன் ஒருவன் செல்வனாக மாறிச் சிறக்க வாழத் தொடங்கினால், பிறர் அவனைப் 'பிள்ளை', 'முதலியார்' என்று போற்றத் தொடங்கினர்.[143] அவனும் தன்னை அவ்வாறு கூறிக் கொள்வதில் பெருமையுற்றான்.[144] 'கூத்தன்', 'சாத்தன்' என்னும் பெயர்களோடு எளியவராய் இருந்தோர் செல்வம் மிக்கவாறே 'சோழக் கோனார்', 'தொண்டமானார்' என்னும் பட்டப்பெயர் பெற்றனராம்.[145]

இவ்வுரைகளில் இடையர் வாழ்வு பற்றிய செய்திகள் அங்கங்கே தெரிவிக்கப்பட்டுள்ளன.

இடையர்களில் மூத்தவராய் இருப்போர் ஆநிரைகளோடு மேய்ச்சல் நிலம் நோக்கிச் செல்வர்; பசுக்களை அடக்கி வைக்காமல் அவற்றின் பின்னே சென்று அவை மேய்ந்து வயிறு நிறைந்தாலல்லது மீளார்.[146] அவர்கள் மேய்ச்சல் நிலங்களிலே நான்கு மூங்கிலைக் கொண்டுபோய் வளைத்துத் தற்காலிகக் குடிசையமைத்துத் தங்குவதுமுண்டு.[147] நிரை மேய்க்கச் செல்லும் போது உறியும் பழுவும் தடியும் எடுத்துச் செல்வர்.[148]

---

137. பெரி.தி. 3.8.9.
138. க.நு.சி. 2, அழகு.
139. சி.மடல், கண்ணி, 29.
140. நான்.தி. 88.
141. பெரி.தி. 2.7.7; தி.நெ.தா. 16.
142. தி.பல். 6.
143. 4.9.3-24.
144. 4.1.7-36.
145. 5.4.3-36.
146. பெரி.தி. 3.1.9.
147. 1.5.6-36.
148. பாவை, 28-6.

இடையர்க்குத் தடியே ஆயுதமாக விளங்கியது.[149] அவர்கள் தலையிருக்க உடம்பு கழுவியும், உடம்பிருக்கத் தலை கழுவியும் செல்வர்.[150] காட்டில் உள்ள மரங்களின் வாசனை அவர்களுக்கு உகப்பானதாகும்.[151] தங்களை அலங்கரித்துக்கொண்டு இடைச்சியர் விடியற் காலத்தில் எழுந்து தயிர் கடைவர்.[152]

இடையர்க்குச் செல்வம் பெருகினாலும் இடைச்சியர் மோர் விற்பதனையே தங்களுக்குத் தகுதியான வாழ்வாகக் கருதினர்.[153] அவர்கள் பொன், மாணிக்கம் ஆகியவற்றைவிட வெள்ளி வளையல்களையே உகந்து பூண்டனர்.[154] குளிக்கும்போது ஆடைகளையும் அணிகலன்களையும் களைந்து வைத்துக் குளிப்பது அவர்தம் இயல்பாகும்.[155] இடையர் பொதுவாக நாகரிகமற்ற சாதியினராகக் கருதப்பட்டனர்.

தாழ்ந்த சாதியின் உட்பிரிவுகளாகக் கள்ளரும் பள்ளிகளும் வலையரும் கருதப்பட்டனர்.[156] விலங்குகளை அலைத்தல், அச்சுறுத்தல், கொல்லுதல் ஆகியவை அவர்தம் பிறப்பியல்பு களாக இருந்தன.[157] அவர்கள் நல்லோர் உடைமைகளைக் கொள்ளையடித்தனர்; ஒருவர்கீழ் அடங்காமல் இருந்தனர்.[158]

தண்ணிய சாதியான வேடரையும் மறக்குலத்திலுள்ளாரை யும்போலே பறையர்கள் தீண்டத் தகாதவர்களாக ஒதுக்கப்பட் டிருந்தனர். வேடர், மறவர் ஆகியோரும் மேற்கூறப் பெற்றவர் களைப்போலத் தாழ்ந்த சாதியின் உட்பிரிவினராகவே கொள்ளப் பட்டனர். '''கள்ளர், பள்ளிகள்' என்னுமாபோலே, 'வேடர் மறவர்' என்கிறதும்—தண்ணிய ஜாதியில் அவாந்தர பேதம்'' என்பது மணவாள மாமுனிகள் உரை.[159] அவர்கள் உறைவிடம் 'பறைச்சேரி' என்று குறிக்கப்பட்டது. 'நீசர்' என்பதற்கு ''அறிவிலோரும் பறையரும்'' என்று வரையப்பட்டுள்ள உரை[160] அவர்கள் சமுதாயத்தில் எந்நிலையில் வைக்கப்பட்டிருந்தனர் என்பதனைக் காட்டும். சண்டாளர் இருப்பிடத்தை அந்தணர்க்கு ஆக்கும்போது அங்குள்ளவற்றுள் சிலவற்றைக் கொள்வதும்

---

149. 6.2.7-24.
150. பாவை, 5-6.
151. மூ.தி. 75.
152. பெரி.தி. 3.8.9; பெ.தி. 3.8.7; பெ.தி. 10.5.1.
153. பெரி.தி. 3.1.9.
154. பெ.தி. 3.7.1.
155. பெரி.தி. 2.10.1.
156. தி.பல். 1; பெரி.தி. 3.8.6.
157. பெரி.தி. 4.2.1.
158. பெரி.தி. 4.9.7.
159. பெரி.தி. 3.8.6.
160. தி.ச.வி. 66.

சிலவற்றைக் கழிப்பதும் செய்யாமல் முற்றிலும் அழிப்பர் என்று வருவது,[161] தீண்டாமை உச்ச நிலையில் இருந்தது என்பதற்குத் தக்க சான்றாகும். ''பறைச்சேரி பறைச்சேரி என்பாரைப் போலே அத்திக்கும் (இராவணன் இருந்த தென்திசையும்) அஸஹ்ய மானபடி'' (ஒட்டற்றபடி),[162] "பறைச்சேரியில் அடியிடுமா போலே ஸ்வர்க்கத்தில் (துறக்கத்தில்) அடியிடுகை வேண்டேன் என் கிறார்''[163] என்று வரும் உவமைகள் இதனை மேலும் தெளிவு படுத்துகின்றன. பொற்கிண்டியில் உள்ள தண்ணீர் வசிட்டனும் சண்டாளனும் வேற்றுமையின்றிப் பயன்படுத்திக் கொள்ளலாம். அது பொற்கிண்டியாய் இருத்தலினால் தீட்டு இல்லையாம். தாழ்ந்த சாதியார் தொட்ட பாத்திரத்தை உயர்ந்த சாதியார் தொடாத அளவுக்கு வேற்றுமையுணர்வு இருந்தது.[164] இறைவன் தொடர்புண்டானால் தாழ்ந்தவனும் உயர்ந்தவனாகக் கொள்ளப் பட்டான். எனினும் அவனுக்குப் பெண்கொடுத்தல், கொள்ளுதல் செய்தாரல்லர். அதற்கு ஜாதி நிபந்தநமே (சாதிக் கட்டுப்பாடே) காரணமாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஜாதி நிபந்தநம் என்பதனைப் பிராமண சாதியில் பிறந்தவன் அதிலே கொடுத்துக் கொள்ளக் கடவனென்று உடல் தொடர்புக்குச் சொன்ன சாத்திரக் கட்டுப்பாடு என்று விளக்குகிறது அடிக்குறிப்பு.[165]

கல்விமுறை

குருகுல வாழ்க்கைக் கல்வி முறையே அக்காலக் கல்விமுறை யாக இருந்தது.[166] 'சந்தையிட்டுக் கற்றல்' கற்கும் முறைகளுள் ஒன்றாகும்.[167] உருச்செய்ய வேண்டுவனவற்றின் ஒவ்வொரு பகுதி யினையும் ஒருவர் முன்னே சொல்ல மற்றவர் பின்னே தொடர்ந்து சொல்வதற்குச் 'சந்தை சொல்லல்' என்பது பெயர். மாணாக்கர் களுள் படிப்பில் வல்லவனாக இருந்தவன் அவர்களுக்குத் தலைவனானான்.[168] ஆசிரியர்கள் பிரம்புகொண்டு மாணாக்கர் களை அடித்தனர். அவரது கையிற் கசையினைக் கண்டால் சிறுவர் கள் அச்சமுற்றுக் காலில் விழுந்தனர்.[169] மேலும் அவர் கசை கொண்டு வரச்சொன்னால், அவர் முகமலர்ச்சிக்காக எல்லாப் பிள்ளைகளும் சேர்ந்து அதனை எடுத்துவந்தனர்.[170]

---

161. 1.2.1-24, 36.
162. பாவை, 12-6.
163. பெ. திருவந். 79.
164. பெ.தி. 5.8.9.
165. பெ.தி. 1.1.9.
166. மு.தி. 58.
167. மு.தி. 58; 7.9.2-36.
168. பாவை, 10-6.
169. தி.மா. 11.
170. தி.மா. 27.

வேதக் கல்வியும் வழங்கப் பெற்றது. வேதம் ஓதுமிடத்தைக் 'கிடை' என்று குறித்தனர். வேதம் ஓதும் உரிமை அந்தணர், அரசர், வணிகர் ஆகிய மூவர்க்கு மட்டுமே இருந்தது.[171] தாழ்ந்தவன் வேதம் ஓதுவது இகழ்ச்சிக் குரியதாக அமைந்தது.[172] பெண்டிர்க்கும் வேதம் ஓதும் உரிமையில்லை. ஆனால் ஆசிரியர் வீட்டுப் பெண்பிள்ளைகள் அவர் வீட்டில் நடக்கும் பாடம் கேட்க நேரிடுவதால் வேதம் அறிந்திருந்தனர். ''உபாத்யாயர்கள் பெண்பிள்ளைகளுக்குச் செவியேற்றாலே ஒத்துப் போயிருக்குமா போலே'' என்னும் உவமையால் இதனை அறியலாம்.[173] செல்வர் தம் பிள்ளைகளுக்குத் தேவை கருதிக் கல்வி தந்தனர்.[174] அரச குடும்பப் பிள்ளைகள் தாம் அரச குடும்பத்தினர் என்னும் நினைப்பின்றிக் கற்றனர்; ஆனால் ஆசிரியர்கள் அவர்தம் எண்ணப் போக்கினையுணர்ந்து தன்மையாகக் கற்பித்தனர்.[175] இவ்வுரைகளை நோக்கும்போது அக்காலத்தில் சிலரே கற்றவர்களாக இருந்தனர் என்பது தெரிகின்றது.

தொழில்கள்

உழவு அன்றைய தமிழகத்தின் முதன்மையான தொழில். மக்கள் பயிர்த்தொழிலில் அறிவு மிக்கவராய் இருந்தனர். உவர்த்தரையின் உவர் கழிவதற்கு நீரை நிறைத்து நிறுத்தி வைத்தல் உழவன் கையாண்ட முறையாகும்.[176] மூன்று களையெடுத்தால் பயிர்செழித்து வளரும் என்று கண்டனர்.[177] பயிர்கள் செழிக்க அடியுரமிடுதலும், நீர் பாய்ச்சுதலும் மட்டும் போதா; மழையும் தேவை. மழை இல்லாவிட்டால் பயிர்கள் தலைகுளிர்ந்து இரா என்பது அவர்கள் கண்ட உழவியல் உண்மை.[178]

உழவர்கள் கருத்தோடு பயிர்த்தொழில் செய்தனர். செய்த்தலையிலேயே குடிசை கட்டித் தங்கியிருந்து பயிரைப் பாதுகாத்தனர்.[179] மடைத் தலையில் தங்கியிருந்து நீர் பாய்ச்சினர்.[180] நீர் ஏறா மேட்டு நிலங்களுக்கு ஏற்றம் முதலியவற்றால் நீரேற்றினர்.[181] புன்செய்ப் பயிர்களைப் பரணிலிருந்து காத்துள்ளனர்.[182] நீர்ப்பாசனங்களுள் குளத்துப் பாசனம்

171. தி.ச.வி. 90.
172. தி.மா. 34.
173. 6.10.4-36.
174. மு.தி. 33.
175. இ.தி. 58.
176. திருவா. 4.
177. 4.2.0-24, 36.
178. 5.3.4-36.
179. 4.3.3-36; தி.வி. 75; பெரி.தி. 4.10.8.
180. தி.நெ.தா. 29.
181. 1.8.0-36.
182. தி.வி. 62.

குறிப்பிடத்தக்க அளவு இருந்தது என்பது, ''ஓடை-குளம், துடவை-விளைநிலம், விளைநிலத்துக்கு ஹேதுவிறே குளம்'' என வரும் உரைப்பகுதியால் விளங்குகிறது.[183]

''வெள்ளத்தைக் கள்ள மடையாலே பள்ளத்தே விடுவாரைப் போலே" என்னும் உவமை அக்காலத்தில் திருட்டுத்தனமாக நீர்பாய்ச்சும் நிலை இருந்தமையைக் காட்டுகிறது.[184] குத்தகைக் காரர்கள் பொய்க்கணக்குக் காட்டி விளையவில்லை என்று கூறுவது அன்றும் இருந்தது. இதனை ''நாடு பிடித்தார்க்கு ஒழுகைக் காட்டி(க்) குட்டமும் திடரும் மணலும் மடையுமாக எழுதி வெறும் பாழாக்கிக் காட்டுவாரைப் போலே'' என்னும் திருமாலை உரை தெரிவிக்கின்றது.[185]

மரத்தைக் கொத்திப் பெருங் காயத்தை உண்டாக்கி வைத்தால் அது பட்டுப்போகும் என்பர்.[186] முற்றூட்டு, இறையிலி நிலங்கள் இருந்தமையும் ''செய்த பயிருக்குக் கடமையிறுக்குமா போலே'' என்னும் உவமையும் உழவர்களிடம் வரி பெறப்பட்டது என்பதனைத் தெரிவிக்கின்றன.[187]

வாணிபம்

உள்நாட்டு வாணிபத்திலும் கடல் வாணிபத்திலும் சிலர் ஈடுபட்டிருந்தனர். தெருக்களில் பண்டங்களைக் கூவி விற்பதும் இருந்தது. ஏலம் முதலிய பொருள்கள் கலந்த தண்ணீரை 'ஏலக்குழம்பு' என்று கூவி விற்றுள்ளனர்.[188] பண்டங்களை விற்பதற்கு அங்காடிகளும் அமைந்திருந்தன.[189]

''கெடுமரக்கலம் கரைசேர்ந்தாற் போலே,''[190] ''மரக்கலம் ஏற்றுமவன் மீண்டு வருமளவும் ஜீவநம் (உணவு) ஏற்றிக் கொண்டு போமா போலே''[191] என வரும் உவமைகள் கடல் வாணிபம் நடந்ததனைச் சுட்டுகின்றன. வேறு தீவுகளுக்குச் சரக்கு எடுத்துச் செல்லும்போது வாங்குவோர் பாதி வழிவந்து பெற்றுச் செல்வதோ அன்றி ஒரு பகுதியினைத் தாங்கள் எடுத்துச்

---

183. பெரி.தி. 5.4.5.
184. அம. 1, அழகு.
185. தி.மா. 3.
186. தி.மா. 38.
187. 1.7.3-36; 3.2.8-24; பெ.தி. 2.6.0; பெ.தி. 4.9.5; 5.2.8-36.
188. தி.வி. 32.
189. தி.நெ.தா. 16.
190. 10.8.10-24, 36.
191. பாவை, 7-6.

செல்வதோ வழக்கமாக இருந்துள்ளது.[192] ஈழம் பிரம்புக்குப் பெயர் பெற்றிருந்தது.[193] "திருத்தண்காவில் மரகதத்தை" என்பதற்கு "அருமணவன் ஆனை என்னுமாபோலே" என்றும், "இன்ன தீவிலே பட்ட ஆனையென்றால் விலக்ஷணமாயிருக்குமா போலே (மேம்பட்டதாயிருத்தல்) திருத்தண்காவில் கண்வளர்ந் தருளுகிறவனுடைய வடிவென்றால் விலக்ஷணமாயிருக்கிறபடி" என்றும் எழுதப்பட்டுள்ள உரைகள் அருமணவன் என்னும் தீவில் பிடிக்கப்பட்ட யானைகள் சிறப்பாகக் கருதப்பட்டன என்று தெரிவிக்கின்றன.[194] 'கழஞ்சு' 'வீசம்' ஆகிய நாணயங்கள் புழக்கத்திலிருந்துள்ளன.[195]

சிலர் முத்துக் குளிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தனர்.[196] முத்துப்பட்ட துறையைக் காவலிடுமவன் அயல் துறையினையும் காத்தல் இயல்பாக இருந்தது.[197] மணியை ஆராய்ந்து கண்டறிய வல்லாரும் இருந்தனர்.[198] ஓடமோட்டுவோரும்,[199] செருப்புத் தைப்போரும்,[200] கூலிக்கு வேலை செய்வோரும்[201] இருந்தனர். செருப்புத் தைத்தல் இழிவாகக் கருதப்பட்டது.[202]

மருத்துவம்

மருந்தும் (வேரும்) மந்திரமும் நோய் நீக்கும் முறைகளாக இருந்துள்ளன.[203] உடலில் உண்டாகும் நோய்க்கும், பாம்பு முதலியவற்றின் கடிக்கும் மருந்துகள் இருந்தன. நோயாளியின் உடல் நிலையையும் மருந்தின் இயல்பினையும் அறிந்து மருந்து கொடுக்கும் அனுபவம் மிக்க மருத்துவர்கள் இருந்தனர்.[204] அவர் கள் நோயாளியின் உடல் வாயு உடலா, பித்த உடலா என்று அறிந்து மருந்து கொடுத்தனர்.[205] நோயினையும் நோயின் காரணத்தையும் மருந்து தருவதற்கு முன்னர் ஆராய்ந்து கண்டனர்.[206]

---

192. அம. 1, பெரி, அழகு.
193. 6.1.11-24, 36.
194. தி.நெ.தா. 14.
195. பெ.தி. 5.8.3; பெ.தி. 1.3.7.
196. பாவை, 3-6.
197. தி.பல். 10.
198. இ.தி. 44.
199. 7.10.11-36.
200. தி.மா. 9.
201. அம. 5, பெரி, அழகு.
202. தி.மா. 9.
203. தி.நெ.தா. 11.
204. நான்.தி. 22.
205. பெ.தி. 11.8.2.
206. சி.மடல், கண்ணி, 19.

மருந்துகளில் சில உட்கொள்ளுவதற்குரியனவாகவும், சில மேலே பூசுதற்குரியனவாகவும் இருந்தன. உள் வேதனையைப் போக்கத் தரப்படும் மருந்து 'விசல்யகரணி' என்றும், மேலே சரிசெய்து உறுப்புகளைப் பொருந்தப் பண்ணும் மருந்து 'ஸந்தாநகரணி' என்றும் குறிக்கப்பெற்றன.[207] நோய் நீக்கத்திற்குக் குடிநீர் அருந்தும் (கஷாயபாநம்) முறை இருந்துள்ளது.[208] வேப்பங்குடிநீர் சில நோய்க்கு மருந்தாக அமைந்தது.[209] பால் இனிய உணவாக மட்டுமல்லாமல் நல்ல மருந்தாகவும் இருத்தலைக் கண்டனர்.[210] பால் குடிக்க நோய் நீங்கும் என்னும் செய்தி பல இடங்களில் தெரிவிக்கப் பட்டுள்ளது.[211] பித்தத்திற்கு நல்ல மருந்தாகப் பால் இருத்தலைக் கண்டனர்.[212] பித்தத்திற்குச் சந்தனக் குழம்பு மருந்தாக இருத்தல், "பித்தோபஹதர் சந்தந பங்கத்தினின்றும் கைவாங்க மாட்டாதாப் போலே" என்னும் உவமையால் தெரிகின்றது.[213] ஊமத்தங்காய் தின்றால் பித்தம் பிடிக்கும் என்று அறிந்திருந்தனர்.[214] பாலோடு ஏலம் முதலியவற்றைச் சேர்த்தும் பருகுதல் உண்டு. அதனைப் 'சேர்ப் பால்' என்று குறித்தனர்.[215] கற்பூர நிகரம், களைப்புற்றார் தம் களைப்பு நீங்க வாயிலிட்டுக் கொள்ளும் மருந்தாகும்.[216] விடாய் நீங்க வாசனைத் திரவியங்கள் சேர்த்துக் குளிரவைத்த தண்ணீரைப் பருகினர்.[217] காயத்தின் மேல் ஈரத்துணி கட்டும் வழக்கம் இருந்துள்ளது.[218]

குழந்தையின் நோய் நீக்கத்திற்குத் தாய் குடிநீர் குடித்தாள்.[219] பிள்ளைகள் அலையாதிருத்தற்காக மருந்திட்டு வைத்தலும் இருந்துள்ளது.[220]

மகப்பேற்றுக் காலம் நெருக்கத்திலிருக்கும்போது, கருவுற்ற பெண்களை மயிரைப் பிடித்திழுத்தால், அதுவே காரணமாகப் பிள்ளைப்பேறு நிகழும் என்று அறிந்திருந்தனர்.[221]

---

207. நா.தி. 13.4. 209. 1.10.4-36.
208. பாவை, 5-6; தி.மா.26.
210. 4.6.3-12; தி. மா.26; பாவை, 5-6.
211. பெ. தி. 5.2.10; பெ.தி. 5.8.10; பெ.தி. 5.9.4.
212. பாவை, 5-3; தி.நெ.தா. 10.
213. 10.6.9-36; 4.4.1-24,36.
214. தி.நெ.தா.19. 215. பாவை, 5-3.
216. தி.நெ.தா.22; தி.மா.14.
217. சி.மடல், கண்ணி, 76. 218. 4.6.10-36.
219. பெ.தி.1.4.1; பெ.தி.7.1.5.
220. சி.மடல், கண்ணி, 28. 221. தி.நெ.தா.6.

நோய்க்கேயன்றி நரைதிரை மூப்புகளற்று ஊட்டத்தோடிருக்க மருந்துண்ணும் பழக்கமும் இருந்துள்ளது.[222] மருந்துண்டு பெண்டிரால் சுகங்கள் துய்த்தற்குத் தினவு பெற்றோர் சிலரும் இருந்தனர் என்பது "'விஷய ப்ராவண்யம் போராது' என்று ஔஷத சேவை பண்ணியிருப்பார்களிறே" என்னும் உரைக் குறிப்பால் தெரிய வருகின்றது.[223] பாம்பின் நஞ்சினையும் முறிக்கக்கூடிய மருந்து உண்டு தங்கள் உடலைப் பண்படுத்திக் கொண்டோர் சிலரும் இருந்துள்ளனர்.[224]

விடந்தீர்க்கும் மருத்துவர்கள் சிலர் அந்நாளில் வாழ்ந்துள்ளனர். அவர்கள் வாயிலில் எப்பொழுதும் பெருங்கூட்டம் நிறைந்திருந்தது.[225] பாம்பு தீண்டியவரது நெற்றியில் கொத்திப் பார்த்துப் பசையிருந்தால் உயிர் இருக்கிறது என்றும், இல்லையென்றால் நீங்கிற்று என்றும் கண்டனர்.[226] விடத்தினைப் போக்குவதற்கு, விடந்தீண்டப் பெற்றவர் வாயிலே மருந்து கலந்த தம் வாய் எச்சிலை மருத்துவர் உமிழும் முறையும் இருந்துள்ளது.[227]

மருந்தேயன்றி, விடம் தீர்க்க மந்திரமும் பயன்பட்டது என்பதனை "விஷஹரண மந்த்ரம் போலே" என்னும் உரைப்பகுதி தெரிவிக்கின்றது.[228]

நோய்போக்கும் மருந்தோடு பிறரைக் கவர்ந்து ஈர்க்கவல்ல வசிய மருந்துகளும் இருந்தன. அதனைக் கையிற் கொண்டு திரிந்தாரும் உண்டு.[229]

நீதிமுறை

தந்தையின் உடைமை அவனுக்குப் பின் பிள்ளையைச் சாரும் முறை இருந்தது.[230] மக்கட்பேறு இல்லாதவர்களால் தம் மகனாகக் கூட்டிக் கொள்ளப்பட்ட பிறருடைய பிள்ளைக்கு இரண்டிடத்திலும் (அம்சம்) பங்கு இருந்தது.[231] ஒருவருக்குச்

---

222. தி.நெ.தா.11; தி.நெ.தா.16; தி.ம.1; தி.வி.37; க.நு.சி.2, நஞ்சீயர்.
223. பெ.தி. 1.1.8.
224. மு.தி. 18.
225. நா.தி. 12.3.
226. தி.மா.15.
227. நா. தி. 13.4.
228. 1.10.8-24, 36.
229. 1.8.9-36.
230. 9.3.11-24; பெ.மடல், கண்ணி, 10; பெரி.தி. 5.3.1.
231. நா.தி. 6.1.

சொந்தமான நிலம் பிறர்க்கு விற்கப்பட்டுப் பத்தெட்டுக் கைமாறிச் சென்றுவிடுமானால் பின்பு அதனை மீட்பதற்கு இயலாது.[232]

எல்லாக் காலங்களிலும் நிகழ்வது போலவே அன்றும் களவு, கொள்ளை, கொலை ஆகிய குற்றங்கள் நிகழ்ந்தன.

விறகு, வைக்கோல் ஆகியவற்றை எடுத்துச்செல்லும் சிறு திருட்டு முதல் உயர்ந்த இரத்தினம் முதலான பொருள்களைக் களவு செய்யும் பெருந்திருட்டு வரை நிகழ்ந்துள்ளன.[233] சூத்திரன் செல்வத்தைக் களவாடியவனைக் காட்டிலும் பார்ப்பனன் செல்வத்தைக் களவாடியவனுக்குப் பாவம் அதிகம் என்னும் கருத்து நிலவியது.[234] தன்னை நம்பிப் பக்கத்தில் படுத்துக் கிடந்தவன் மடிதடவினவர்களும் இருந்தனர்.[235] வாயில் துணியை அடைத்துக் கொல்வது,[236] கொன்று கிழிச்சீரை அறுத்துக் கொண்டுபோவது[237] ஆகிய கடுங்குற்றங்களும் செய்யப்பட்டுள்ளன.

வழிப்பறிக் கொள்ளை அதிகமாக நிகழ்ந்துள்ளது. "வழிபறியுண்கிற தசையிலே தாய்முகத்திலே விழித்தாற் போலே",[238] "வழிபறிப்பாரை உடன்பிறந்தீர்! நூறு பிராயம் புகுவீர் என்னுமா போலே",[239] "வழியடிக்காரரைத் தண்ணீர் வேண்டுமா போலே",[240] "வழிபறிக்காரர் நடுவே நின்றால் அவர்கள் துணையாகாரிறே"[241] என்று வரும் குறிப்புகளால் அதனை உணரலாம்.

குற்றங்கள் நிகழாவண்ணம் காக்கும் பொறுப்பு அரசனைச் சார்ந்திருந்ததென்பது, "எங்கேனும் ஒரு காட்டிலே ரத்நங்கள் பறியுண்டாலும், நாட்டிலே ராஜாவின் வாசலிலே அவன்பேர் சொல்லியிறே கூப்பிடுவது" என்பதனால் தெரிகின்றது.[242]

குற்றவாளிகளைப் பிடிக்கும் முயற்சியும் மேற்கொள்ளப் பட்டுள்ளது. "ஒருவனைப் பிடிக்க நினைத்து ஊரை வளைப்

---

232. அம.1, பெரி.
233. க.நு.சி.5, பெரி; திருவா.6.
234. பெ.தி. 1.1.5.
235. திருவா. 6; 7.9.1-36; 10.8.2-36; சி.மடல், கண்ணி,28.
236. 9.9.1-36.
237. பெ. தி.9.3.1.
238. தி.நெ.தா. 27.
239. தி.வி. 16.
240. தி.வி. 40.
241. 2.3.5-24.
242. 2.4.1-36; பாவை, 22-6.

பாரைப் போலே",[243] "ஊரை வளைத்து ஒருவனைப் பிடிக்குமா போலே"[244] என்று வருவனவற்றால் இது புலனாகும். குற்றம் புரிந்தோர் சிறையில் அடைக்கப்பட்டனர்.[245] அவர்களை மொட்டையடித்தலும் இருந்தது.[246] தொழுவில் அடைத்தல் தண்டனை வகைகளுள் ஒன்று.[247] கழுவேற்றல்,[248] யானைக் காலிலிட்டுத் துகைப்பித்துக் கொல்லுதல்[249] ஆகிய தண்டனைகளும் வழங்கப்பட்டன. "அரிகண்டமிட்டாப் போலே, அவர் சாத்துகிற ஆபரணத்தைப் பூட்டினிகோள்" என்னும் உரைத் தொடர் அரிகண்டமிடுதல் என்னும் தண்டனை முறையினைத் தெரிவிக்கின்றது.[250] ஒருவனை நிற்கவைத்து அவனைச் சுற்றிலும் அங்குமிங்கும் அசைய முடியாதவாறு வாள், ஈட்டி முதலிய ஆயுதங்களை வைப்பது 'அரிகண்டமிடுதல்' எனப்படும். தம் வாழ்நாளையே சிறையில் கழித்தோரும் உண்டு.[251]

அரசத் துரோகிகளைத் தண்டிக்கும்போது, அரசன் அவர்கட்கு வழங்கிய சிறப்புகளைத் திரும்ப வாங்கிக்கொண்டு, அதன் பின்னரே தண்டித்தான்.[252]

தாங்கள் கூறுவதனை உண்மையென்று மூதலிக்கக் காய்ச்சிய மழுவைக் கையில் ஏந்துவதும்,[253] குற்றம் புரியவில்லை என்பதனைக் காட்டக் கொதிக்கும் நெய்யில் கையிடுவதும்[254] அக்கால நடைமுறைகளாக இருந்தன.

அணிகலன்கள்

அழகிய தோற்றத்துடன் விளங்க மணப்பொருள்கள், அணிகலன்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தியுள்ளனர்.

ஒப்பனைப் பொருள்களுள் ஒன்று புழுகு நெய். இதனைச் சிலர் தம் காதலியைக் காணச் செல்லும்போது மேலே பூசிக் கொண்டு சென்றனர்.[255] பல வண்ண மலர்களால் தொடுக்கப் பட்ட கலம்பகன் மாலையினை விரும்பிச் சூடினர்.[256] தனிப்பூச்

---

243. 1.5.10-36.
244. 3.24-12.
245. தி.வி. 41.
246. தி.மா. 38.
247. பெரி. தி. 5.2.3.
248. 4.9.5-36; பெ.தி.8.2.1.
249. பெ.தி. 8.2.1.
250. 4.6.2-36.
251. பெரி. தி. 5.4.4.
252. 8.4.1-36.
253. தி.மா.7.
254. 6.1.5-36.
255. 1.9.7-24; தி.நெ.தா.23.
256. அம.9,அழகு; சி.மடல், கண்ணி, 2.

சூடுதலும் உண்டு.[257] தாழை மடலைச் சூடிக்கொள்வதும் இருந்தது.[258] அகிற்புகையும் கருமுகைப் பூவும் சிறப்பானவை யாகக் கருதப்பட்டன.[259] சுவடர் (ரசிகர்) பூச்சூடும்போது புழுகிலே தோய்த்துச் சூடினர்.[260] தங்கள் கைகளில் மருத்தோன்றி முதலியவற்றை இட்டுச் சிவப்பு வண்ணம் ஏற்றிக்கொள்ளும் வழக்கமும் இருந்துள்ளது. இதனை "இப்போது மேன்மை இடு சிவப்பு, வாத்ஸல்யமே (பரிவே) உனக்குப் ப்ரகிருதி (இயற்கை) யென்று நிலையிட்டோங்காண்" என்னும் குறிப்பினால் அறியலாம்.[261] பெண்கள் 'இளநீர்க் குழம்பு' எனப்படும் தென்னையிலிருந்து ஆக்கிய மையினைக் கண்ணுக்கிட்டு அழகு படுத்திக் கொண்டனர்.[262]

பொன்னாலும் மணியாலும் செய்யப்பட்ட அணிகளைத் தாங்கள் அணிந்து மகிழ்ந்ததோடு இறைவனுக்கும் சூட்டி மகிழ்ந் தனர். பொன்னரி மாலை,[263] முத்துவடம், இரத்தினத்தால் இழைத்த ஒற்றை வடமாலை (ஏகாவலி),[264] ஐந்துவடம், மூன்று வடம் கொண்ட சங்கிலிகள்[265] ஆகியவை இருந்தன. தண்டிகைக் கொம்பு போலே வளைந்து பிடரியிலே (முதுகிலே) தொங்கும் பிறகுவாளி என்னும் அணியும் இருந்துள்ளது,[266] காறை என்பது ஒருவகைக் கழுத்தணி.[267] மீன், மயில், அன்னம் ஆகியவற்றின் வடிவத்தில் காதணிகள் இருந்தன.[268] மோதிரம் 'அறுகாழி' என்று குறிக்கப்பட்டது.[269] இடைச்சரி, கடைச்சரி என்னும் அணிகலன்களும் இருந்தன.[270] மரத்தாலாகிய காலடி என்னும் காலணிகளைப் பயன்படுத்தினர்.[271]

வாளினை அழகுக்காக இடையில் கட்டிக்கொள்வதும் இருந்தது என்பதனை "அழகுக்குப் பத்திரம் கட்டுவாரைப் போலே" என்னும் உவமை தெரிவிக்கின்றது.[272]

---

257. அம. 9, அழகு.
258. திருவா. 7.
259. 1.6.1-24,36.
260. தி. பல். 9.
261. பாவை, 26-6.
262. பெரி. தி. 1.5.8.
263. தி.நெ.தா.21, பட்டர்.
264. பாவை, 30-3,6.
265. பெ.தி.1.1.5; பெ.தி.3.6.5; அம.9; அழகு.
266. தி.நெ.தா. 21, பட்டர்.
267. பெரி. தி. 3.7.8.
268. தி.நெ.தா. 21, பட்டர்.
269. தி. நெ. தா. 25.
270. பெ.தி. 8.1.1.
271. தி.நெ.தா. 21, பட்டர்.
272. பெ. தி. 5.9.5.

முகம் பார்க்கும் கண்ணாடி அக்காலத்தில் இருந்தது. "உன்னைக் கண்ணாடிப் புறத்தில் கண்டறியாயோ?" என்னும் உரைத்தொடரால் இதனை அறிய முடிகின்றது.[273]

கவின்கலைகள்

இசை, நடனம், நாடகம் ஆகிய நுண்கலைகள் அக்காலத்தில் சிறந்த நிலையில் இருந்துள்ளன. இசைக் கருவிகளுள் யாழ் பயன் படுத்தப்பட்டுள்ளது.[274] பரத சாத்திரம் கற்றறிந்தவர் வாழ்ந்தனர்.[275] குருகுல வாழ்க்கை மேற்கொண்டு ஆடற்கலை யினைப் பயின்றனர்.[276] கூத்தாடுபவர்கள் நன்கு ஆடினால் அவையோர் தம் முகமலர்ச்சியால் கொண்டாடினர்.[277] பாட்டுக் கேற்ப நடனமாடினர் என்பது "சிந்துக்காடுவாரைப் போலே" என்னும் உவமையால் விளங்கும்.[278] நடிகர்கள் வேடம் புனைந்து ஒப்பனை எழுதி இழையணிகள் பூண்டு நாடகமாடினர்.[279]

பொழுதுபோக்குகள்

பெருமக்கள் நூல்களைக் கற்பதனையே பொழுதுபோக் காகக் கொண்டனர்.[280] பொதுமக்கள் பொழுதுபோக்காக ஆனைக் குப்பு என்னும் காயாட்டம் அமைந்தது. "ஆனைக்குப்பு ஆடுவாரைப் போலே" என்னும் உவமை பல இடங்களில் வருவது கருதுதற்குரியது.[281] சூதும் சதுரங்கமும் போதுபோக்குகளாக இருந்தன.[282] மக்கள் கூத்து நிகழ்ச்சிகளைக் கண்டு சிரித்து மகிழ்ந்தனர்.[283] நீர்விளையாடிப் பொழுது கழித்தற்குரிய தடாகங்கள் இருந்தன.[284] அரசர்கள் வேட்டையாடச் சென்றனர். காட்டில் பன்றிகளை வேட்டையாடுவதன் பொருட்டு ஊட்டி வளர்த்தனர்.[285] வேட்டைக்குத் துணைபுரியும் நாய்களும் இருந்தன.[286]

---

273. தி.நெ தா 23; 2.4.2-24; 7.2.1-36; தி.பல்.1.
274. பாவை, 15-6.
275. நா.தி. 10.6.
276. பெ.தி. 10.9.2.
277. பெ.தி. 1.5.9.
278. அம.4, அழகு.
279. 5.6.10-24, 36.
280. பெரு.தி. 5.1.
281. 10.7.10-36; 10.3.9-24, 36; தி.மா.10; பெ.தி. 6.2.7; பாவை, 26-3.
282. பெ.தி. 4.9.1.
283. பாவை, 24-6.
284. பெ.மடல், கண்ணி, 14.
285. சி.மடல், கண்ணி, 43; பெ.தி.1.2.4.
286. அம. 2, பெரி.

பழக்க வழக்கங்கள்

மக்கள் பிறந்த நாளை நீராடிச் சிறப்பாகக் கொண்டாடினர். "ஒருநாளும் நீராடாதாரும் பிறந்த நாளில் நீராடாதாரில் லையிறே" என்கிறார் மணவாள மாமுனிகள்.[287] மகிழ்ச்சிப் பெருக்குக்குப் போக்குவீடாக எண்ணெய் தேய்த்துக் குளித்தனர்.[288]

கணவனும் மனைவியும் ஒரு கலத்தில் உண்பது அன்பினால் உருவாகிய ஒரு பழக்கமாக இருந்தது.[289] இரவில் வீடுகளில் விடிவிளக்கு வைத்திருந்தனர்.[290] இடைச்சிகளும் நுளைச்சிகளும் தங்களை ஒப்பனை செய்துகொண்டு பின்னரே முறையே தயிர் கடைவதும், முத்து விற்கப்போவதும் புரிவராம்.[291] குளித்துப் பின்பு பூச்சூடுதல் வழக்கம்.[292]

விருந்தினரை ஓம்பும் வழக்கம் மக்களிடையே நிலவியதனை "ப்ரஜைகள் (குழந்தைகள்) பசித்திருக்க விருந்தினரைப் பேணுமா போலே" என்னும் திருவிருத்த உரையால் அறியலாம்.[293] உயர்ந்தோர், வேலைக்காரர்களையும் 'அண்ணா' என்றும், 'ஆச்சி' என்றும் மரியாதையோடு குறித்தனர்.[294]

தென்னை மரத்தில் குலை திருட்டுப் போகாமலிருக்க முள்கட்டி வைத்தனர்.[295] மதங்கொண்ட யானையின் ஓட்டத்தை அறிவிக்கத் தலைப்பறை யடித்தனர்.[296] சோழர்கள் வெற்றிலையைச் சிலரிடத் தின்னாமல் தாங்களே யெடுத்துத் தின்னும் இயல்பினர்.[297]

நம்பிக்கைகள்

மக்களிடையே சில நம்பிக்கைகள் நிலவின. மனிதர்களுக்கு வரும் நன்மை தீமைகளை அறிகைக்கு ஈடான இயக்கமுடையன விண்மீன்கள் என்று வரும் உரைப்பகுதி அவர்தம் சோதிட நம்பிக்கையினை உணர்த்துகின்றது.[298] பருவமல்லாத காலங்களில் கடல் தீண்டக்கூடாது என்று கருதினர்.[299] ஒவ்வொரு

---

287. பெரி. தி. 2.4.8.
288. பாவை, 4-3.
289. தி.நெ.தா. 26.
290. பெ.தி. 9.4.9.
291. பெ.தி. 3.8.7.
292. 10.3.5-36.
293. தி.வி. 2.
294. பெ.தி. 5.8.1.
295. பெ.தி. 6.7.3.
296. சி. மடல், கண்ணி, 12.
297. பெ.தி. 1.3.1.
298. 7.8.2-36.
299. 1.3.8-24; 2.8.4-36.

மனையிலும் (வீட்டினும்) ஒரு பாம்பு இருப்பதாக எண்ணினர்.[300] அழகிய பொருள்களுக்குச் சிலரது தீய பார்வையால் தீங்குண்டாகும் என்னும் நம்பிக்கை வலுவாக இருந்தது. கண்ணெச்சில் படாமைக்காக ஆலத்தி எடுக்கும் வழக்கம் இருந்தது.[301]

மந்திரம், மாயம் ஆகியவற்றிலும் பெருநம்பிக்கை இருந்தது. வீரச் செயல்கள் புரியச் செல்லும் பிள்ளைகளின் தலையில் அவர்கள் நலங்கருதி மந்திரித்த நீரைத் தெளித்தனர்.[302] குறும்பு செய்யும் பிள்ளைகள் நல்லவர்களாக மாற வேண்டும் என்று நீர் தெளித்தலும் இருந்தது.[303] பாம்புக்குத் தடையிடும் மந்திரம் அறிந்திருந்தனர்.[304]

ஒருவர் நோயை மற்றவர் பெற்றுக் கொள்ள முடியும் என்று கருதினர். பணத்திற்காகச் செல்வர்களுடைய நோய்த் துன்பத்தைத் தாரையேற்றுப் பெற்றுச் சிலர் அனுபவித்தனர் என்னும் குறிப்புக் காணப்படுகின்றது.[305]

மலையாள நாட்டிலுள்ள மூ (மு) க்கோட்டை என்னும் ஊரை நினைத்தால் பாவலர்களுக்குப் பாட்டு ஊற்றெடுக்கும் என்னும் நம்பிக்கை நிலவியுள்ளது.[306] அவ்வூர் மூகாம்பிகையின் தலமாகவும் விநாயக தலமாகவும் குறிக்கப்படுகின்றது.[307]

முடிவுகள்

சோழர் காலத் தமிழகம் பல்வேறு சிறப்புகளும், சில குறைகளும் நிறைந்ததாக இருந்துள்ளது. இவ்வுரைகள் அக்காலப் பல்வேறு நிலைகளை அறியத் துணையாக அமையவல்லன. உழவு, மருத்துவம் பற்றிய பல அரிய செய்திகள் காணப்படுகின்றன.

---

300. தி.வி. 71.
301. தி.நெ.தா.12; பெ.மடல், கண்ணி,76.
302. நான். தி. 9.
303. திருவா. 5.
304. பெரி. தி. 5.3.6.
305. நான். தி. 52.
306. பெ.தி.8.10.9; 4.5.2-36.
307. "முக்கோட்டை - எல்லார்க்கும் கவி தோற்றுவிக்கும் விநாயகஸ்தலம்." 4.5 2-36, ஜீயர் அரும்பதவுரை. "மூகாம்பிகா க்ஷேத்ரம்" - பார்த்தஸாரதி அய்யங்கார் (பதி.), 'திவ்வியப் பிரபந்த அகராதி', திருச்சி, 1963, பக். 728." "முக்கோட்டை - மூகாம்பிகை," 10.7.5-36, ஜீயர் அரும்பதவுரை.

6. உரைகள் உணர்த்தும் வைணவ சமயக் கருத்துகள்

வைணவ சமயக் கருத்துகளை நாடெங்கும் பரப்பும் முயற்சியில் முனைந்து நின்றவர்கள் ஆசாரியர்கள். விசிட்டாத்வைத நெறியினை எல்லோரும் ஏற்றுக்கொள்ளத் தக்க வகையில் செம்மைப்படுத்திய பெருமை இராமானுசரையே சாரும்.[1] ஆசாரியர்களும், உரைவிளக்கங் கண்ட பெருமக்களும் தம் சொற்பொழிவுகளிலும் எழுத்து வடிவில் வரைந்த உரைகளிலும் ஆழ்வார்கள் பாசுரங்களில் பொதிந்து கிடக்கும் தத்துவங்களையும் சமய உண்மைகளையும் வெளிப்படுத்தினர்.

வைணவ சமயக் கருத்துகளைத் தத்துவம், சமயம் என்று இரு வகைப்படுத்திக் கூறலாம். தத்துவ ஞானம் வேறு; சமயம் வேறு என்று தெளிவுபடுத்துவர் அறிஞர் கி. லக்ஷ்மணன். அவர் இவ்வண்டத்தின் இயல்பையும் அதன் மூலத்தையும் ஆராய்வது தத்துவ ஞானம் என்றும், ஒரு குறிக்கோளையும் அதனை அடையும் வழிகளையும் நல்குவது சமயம் என்றும், இவ்விரு துறைகளையும் ஒன்றுபடுத்தித் தத்துவ ஆராய்ச்சியின் முடிவாகிய மூலப்பொருளும் சமயிகள் பேசும் முழுமுதற் பொருளும் ஒன்றே என்று காட்ட விழையும் அறிஞர்களுள் முன்னணியில் நிற்பவர் இராமானுசராவர் என்றும் தெரிவித்துள்ளார்.[2]

---

1. ...it is verily Sri Ramanuja that contributed to recognition and establishment of a distinct school of thought which has come to be known as Visishtadvaita." V.V. Srinivasa Aiyangar, 'Visistadvaita - A Proem' "Visistadvaita Philosophy and Religion", A symposium by Twenty four erudite scholars, Ramanuja Research Society, Madras-17, 1974, p.6.
2. லக்ஷ்மணன், கி., 'இந்திய தத்துவ ஞானம்' பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1970, பக். 324.

வைணவ தத்துவம்

உலகப் படைப்புக் குறித்துப் பேசுவோர் அதற்குக் காரணங் களாக இருப்பவற்றைத் தத்துவங்கள் எனக் குறிப்பர்.

சைவர்கள் உலகம் முப்பத்தாறு தத்துவங்களால் ஆகியது என்பர்.[3] உலகம் இருபத்து நான்கு தத்துவங்களால் ஆகியது என்பது வைணவர் கருத்து. மேலும் இருபத்தைந்தாவது தத்துவம் உயிர் (ஆன்மா) என்பதும், இருபத்தாறாவது தத்துவம் இறைவன் என்பதும் இவர்தம் முடிவு. "சதுர்விம்சதி தத்வாத்மிகை யாய் இருக்கும் ப்ரக்ருதி, பஞ்ச விம்சகன் ஆத்மா, ஷட் விம்சகன் ஈச்வரன்..." என்னும் பெரிய திருமொழி உரைப் பகுதியால் இதனை அறியலாம்.[4]

சில பாசுரங்களின் உரைகளில் அத் தத்துவங்கள் யாவை என்று விளக்கியுள்ளனர்.[5] அவ்விடங்களில் காட்டப்பட்டுள்ள இருபத்து நான்கு தத்துவங்கள் கீழே தரப்படுகின்றன:

ஐந்து பருப்பொருள்கள் (பஞ்ச பூதங்கள்): நிலம், நீர், தீ, காற்று, வானம்.

ஐந்து அறிகருவிகள் (ஞானேந்திரியங்கள்): மெய், வாய், கண், மூக்கு, செவி.

ஐந்து தொழிற்கருவிகள் (கன்மேந்திரியங்கள்): வாய் (வாக்), கை (பாணி), கால் (பாதம்), எருவாய் (பாயு), கருவாய் (உபத்தம்).

ஐந்து நுண்ணிய பொருள்கள் (தன்மாத்திரைகள்): சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.

இவற்றோடு மனம் ஒன்று. முனைப்பு (அகங்காரம்), மான் (மஹான்), விளக்கமில் பகுதி (அவ்யக்தம்) என்னும் மூன்று.

இவற்றுள் மூலப்பகுதி, தோற்றுவிக்கப்பட்ட பொருட் கூட்டம் அனைத்தும் (கார்யஜாதம்) அழிந்தாலும் அழியாமை யால் வலிவுடையதாகவும் அளவுபடாததாகவும், மான் முதலிய விளைவுகளுக்கெல்லாம் (கார்யங்களுக்கெல்லாம்) முதலாகை யாலே (காரணமாகையாலே) மேலானதாகவும், தன்னுடைய ஒரு பகுதியிலே பொருட் கூட்டத்தைப் (கார்யவர்க்கத்தை) பிறப்பிக்க வல்ல ஆற்றலை யுடையதாகவும், வியக்கத்தக்க

---

3. மேற்படி நூல், பக். 401. 4. பெ.தி. 9.9.6.
5. 2.9.5-36; 3.3.1-36; 10.7.10-9,24,36; தி.ச.வி.3.

வளர்ச்சியினை யுடையதாகவும் (பரிணாமினியாய்) உயிர்களுக்கு இன்பத்தினையும் (போகம்) வீட்டினையும் விளைப்பதாகவும் ஒப்பற்றதாகவும் (அத்விதீயம்) இருப்பதாகும்.[6]

இறைவன் இவையனைத்திற்கும் உயிராய் நின்று இவற்றின் இருப்பினை நோக்குகிறான்.[7] காரண நிலையில் கண்ணுக்குப் புலப்படாதபடி நிறைந்து நின்று தன்மேல் ஏறிட்டுக்கொண்டும், காரியமாகும் அளவில் அவ்யக்தம், மகான், முனைப்பு (அஹங்காரம்) என்னும் இவற்றின்கண்ணும் நுண்ணியதாய் நிறைந்தும் இவற்றைப் பாதுகாக்கிறான்.[8]

இப் பொருள்களைக் கொண்டு இறைவன் உலகத்தைப் படைப்பதன் நோக்கம், கருவியும் உடலும் இழந்து, துய்ப்பும் வீடுபேறுமின்றி அறிவில்லாப் பொருள்களினின்றும் வேற்றுமை யற்றுக் கிடக்கும் உயிர்கள் கருவியும் உடலும் பெற்றுத் தன் திருவடிகளைப் பற்றி வீடு எய்தற்கு ஆகும்.[9]

உலகினைப் படைக்கும் முறை

பெருமான் எவ்வாறு உலகினைப் படைக்கிறான் என்பதனை உரையாசிரியர்கள் கீழ்வருமாறு விளக்குகின்றனர்:

பெருமான் முதலில் ஐம்பொருள்களையும் ஒன்றிலிருந்து ஒன்றாகப் படைத்துக்கொள்கிறான். குயவன் மண்ணும் நீரும் செதுகும் (கூளம்) கூட்டிச் சேரத் துகைத்துக் குடம் முதலிய வற்றை உருவாக்குவது போல, முதலில் நீரையுண்டாக்கி, அது நீர்ப்பண்டமாகையாலே (திரவம்) வன்மையான பொருளை அதனோடு கூட்டினான். பின்னும் நெகிழ்ந்திருக்கையால் அதனைச் சிறிது வலிக்கைக்காக ஒளிப்பொருளை யுண்டாக்கினான். அதுதான் மிகைத்துத் தீயத் தொடங்கியவாறே அதனை ஆற்றுகைக்காகக் காற்றையுண்டாக்கினான். அது திரிதற்கு இடம்கொடுக்கும் வானத்தைப் படைத்தான். இவ்வளவும் தன் நினைவாலே படைத்தான். பின்னர் ஞாயிற்றையும் திங்களையும் அமைத்தான். அதன் பின்னர் இவ் அண்டத்துக்குள்ளேயே வாழ்ந்துகொண்டு, மனைதலையும் அழித்தலையும் முறையே செய்யும் நான்முகனையும் சிவனையும் உண்டாக்கினான்.[10]

---

6. 10.1.7-24, 36; 10.10.4-24, 36.
7. தி.ச.வி. 77.
8. 1.1.8-36.
9. பெரி. தி. 4.10.5.
10. 6.9.1-24,36.

இப் படைப்பினை இரு வகையாகப் பிரித்துக் காட்டுவர். படைப்பு, தொகுதிப் படைப்பு (ஸமஷ்டி ஸ்ருஷ்டி), பகுதிப் படைப்பு (வ்யஷ்டி ஸ்ருஷ்டி) என இரு வகைப்படும். கட்டுநிலை உயிர்கள், பருப்பொருள்களில் (பூதங்களில்) கூடியிருக்கும் நிலை தொகுதிப் படைப்பு என்றும், நான்முகன்பக்கல் நின்றும் பல கூறாய்ப் பிரிந்து நிற்கும் பருப்பொருள்களில் கட்டுநிலை உயிர்கள் கூடியிருக்கும் நிலை பகுதிப்படைப்பு என்றும் விளக்கப்படு கின்றன.[11]

மூவகைக் காரணங்கள்

பொருளின் தோற்றத்திற்கு வினைமுதல் (நிமித்த காரணம்), முதற்காரணம் (உபாதான காரணம்), துணைக்காரணம் (ஸஹகாரி காரணம்) என்று மூன்று காரணங்கள் வேண்டும். குடம் தோன்றுவதற்குக் குயவனாகிய வினைமுதலும், மண்ணாகிய முதற்காரணமும், சக்கரம், நீர் முதலிய துணைக் காரணமும் தேவைப்படுகின்றன. உலகத் தோற்றத்திற்குக் காரணங்கள் யாவை என்பது குறித்துச் சமயக் கணக்கரிடையே கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன.

பரமாணுக்களே முதற் காரணம் என்பர் வைசேடிகர்.

மூலப்பகுதியே (பிரதானமே) முதற்காரணம். அறிவுள்ள பொருள், அறிவில்லாப் பொருள் ஆகியவற்றின் கூட்டத்தால் அமைவதே உலகநடப்பு (ஜகந்நிர்வாஹம்) என்பது சாங்கியர் முடிபு.

வினைமுதலுக்கும் முதற் காரணத்திற்குமிடையே வேறுபாடு காண்பர் சைவர். அவர்கள் நிமித்தோபாதாந பேதவாதிகள். அவர்களிடையே முதற்காரணமாகப் பரமாணுக்களை கூறுவாரும் மூலப் பகுதியினை கூறுவாருமாக இருதிறத்தினர் உண்டு. அவ்விரு திறத்தினரும் இறைவன் வினைமுதல் என்று கூறி முதற்காரணம் வேறு என்கின்றனர்.

அறிவுள்ள பொருள், அறிவில்லாப் பொருள், இறைவன் ஆகிய முப்பொருளும் முழுமுதலின் (பிரமம்) வளர்ச்சி என்பது வேற்றுமை ஒற்றுமைக் கொள்கையர் (பேதாபேதிகள்) கருத்து.[12]

இம் மூன்று காரணங்களாகவும் இருப்பவன் இறைவனே என்பது வைணவ சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளுள் ஒன்றாகும்.

---

11. தி.நெ.தா. 2. 12. தி.ச.வி. 1.

"த்ரிவித காரணமுந் தானேயாய்"[13]
"ஜகத்துக்கு த்ரிவித காரணமும் தானேயாய்"[14]
"நிமித்தோ பாதாந ஸஹகாரிகளும் தானே யென்கை"[15]

என்று உரைகளுள் குறிக்கப்படுதல் காணலாம். "தானோருருவே தனிவித்தாய்", "முதல் தனிவித்தேயோ" ஆகியவற்றின் உரையில் இறைவன் இம்மூன்று காரணங்களாய் இருத்தல் அழகுற விளக்கப் பட்டுள்ளது. அவ்வுரைப் பகுதிகள் வருமாறு:

"'தான்' என்கிற இத்தால் உபாதாநாந்தரமில்லை (வேறு முதற் காரணமில்லை) யென்கை; 'ஓர்' என்கிற இத்தால் ஸஹகார்யந்தரமில்லை (வேறு துணைக்காரணமில்லை); 'தனி' என்கிற இத்தால் நிமித்தாந்தரம் (வேறுவினைமுதல்) இல்லை யென்கை."[16]

"முதல் தனி வித்தேயோ - முதல் - நிமித்த காரணம்; தனி - ஸஹகாரி காரணம்; வித்து - உபாதாந காரணம்."[17]

நுண்மை நிலையில் அறிவுள்ள பொருள்களோடும், அறிவில்லாப் பொருள்களோடும் கூடியிருக்கும் பரம்பொருளே முதற்காரணம் என்று விளக்குகிறது திருச்சந்த விருத்த உரை.[18] இவ்வுலகத்தைப் படைத்தற்கேற்ற அறிவு ஆற்றல்களோடு கூடிய பரம்பொருளே துணைக்காரணம் என்றும், தன்னில் வேறாகப் பிரிந்திராத அறிவுள்ள பொருள் அறிவில்லாப் பொருள்களை விசேடணமாக வுடைய நினைவோடு (சங்கற்பத்தோடு) கூடிய பரம்பொருளே வினைமுதல் என்றும் கூறுவர்.[19]

முப்பொருள்

இவ் இருபத்தாறு தத்துவங்களை முப்பொருளாக வகைப் படுத்திக் காட்டுவதும் உண்டு. அவை அறிவுள்ள பொருள் (சித்) அறிவில்லாப் பொருள் (அசித்), இறைவன் (ஈச்வரன்) என்பவை யாகும். "நான் பண்ணின பாவம் சிதசிதீச்வர தத்த்வ த்ரயத்திலும் பெரிது"[20] என்றும், "தத்த்வ த்ரயத்தையும் விளாக்குலை

---

13. 2.8.10-36.
14. 10.1.5-9.
15. திருவா. 1.
16. 1.5.4-36.
17. 10.10.9-36.
18. தி.ச.வி. 10.
19. அழகிய மணவாள ராமாநுஜ ஏகாங்கி ஸ்வாமிகள், 'ஸ்ரீ வைஷ்ணவ தீபிகை', ரத்னம் பிரஸ், சென்னை, 1968. பக். 16.
20. 4.7.1-24.

கொண்டு அவை குளப்படியாம்படி பெரிதான என்னுடைய அபிநிவேசத்தை" என்றும்[21] வரும் உரைத்தொடர்கள் இம் முப்பொருள்களைச் சுட்டிச் செல்வது காணலாம். இருபத்து நான்கு தத்துவங்களும் அவற்றாலாகிய பகுதியும் (ப்ரகிருதி) அறிவில்லாப் பொருளாகும். இருபத்தைந்தாவது தத்துவமாகிய உயிர், அறிவுள்ள பொருளாகும்; இருபத்தாறாவது தத்துவம் இவற்றைப் படைத்தும் காத்தும் கரந்தும் விளையாடும் இறைவனாகும்.

இம்மூன்றும் நிலையானவை. இறைவன் நிலையானவன்; அறிவுள்ள பொருளான உயிரும் நிலையானது; அறிவில்லாப் பொருளான மூலப்பகுதியும் நிலையானது. உயிருக்கு அறிவில்லாப் பொருளோடு உள்ள உறவும் என்று தோன்றியதென்று காணவியலாத் தொன்மையானது[22] என்பார் பெரியவாச்சான் பிள்ளை.

உடல்-உயிர்க் கொள்கை (சரீர சரீரி பாவம்)

முப்பொருள்களுள் இறைவனுக்கும் மற்ற இருபொருள்களுக்குமிடையே உள்ள உறவு முறையினை அறிவிப்பதில் விசிட்டாத்வைதத்தின் உயிர்நிலையே இருக்கிறது எனலாம். இதனை விளக்குவதே உடல்-உயிர்க் கொள்கை ஆகும். இக்கொள்கையினை விசிட்டாத்வைதத்தின் அடிப்படைக் கொள்கைகளுள் ஒன்று என்றும், இதனைப் பிருகதாரணிய உபநிடதமும், சுபாலோபநிடதமும் அறிவுள்ள பொருள், அறிவில்லாப் பொருள் ஆகிய இரண்டன் உயிராகவும் பரம்பொருள் இருக்கிறான் என்று சுட்டுகின்றன என்றும் தெரிவிப்பர் அறிஞர் ஏ. சீனிவாசராகவன்.[23]

அறிவுள்ள பொருள், அறிவில்லாப் பொருள், இறைவன் ஆகிய முதற்பொருள்கள் மூன்றுள் 'அறிவுள்ள பொருளும், அறிவில்லாப் பொருளும் இறைவனுக்கு உடலாகின்றன. இறைவன் அவற்றைத் தனக்கு உடலாகக் கொண்டு உறைகின்றான். மற்ற இரண்டும் இறைவனுக்குப் பண்புகள் (ப்ரகாரம்); இறைவன் அவற்றையுடைய பண்பி (ப்ரகாரி). அறிவுள்ள பொருளும் அறிவில்லாப் பொருளும் இறைவனுக்கு அடைகள் (விசேஷணம்); இறைவன் அடைகொளி (விசேஷ்யம்). அவன்

---

21. *10.10.10-36.* 22. க.நு.சி. 5, பெரி.

23. A. Srinivasaraghavan, 'Visistadvaita Philosophy and Religion', A Symposium by twenty four erudite scholars, Ramanuja Research Society, Madras, 1974, p.*132*.

உடையவன்; அவை உடைமைகள். நமது உடலை உடலாக நாமாகிய உயிர் கொள்ளுவது போல உடலையும் உயிரையும் தனக்கு உடலாகக் கொண்டுள்ளான் இறைவன்.

இறைவனை யொழிய உலகிற்குத் தனியிருப்பும், தனிச் சார்பும் இல்லை.[24] இவ்வாறு இறைவன் எல்லாப் பொருள் களுக்கும் உள்ளுறைபவனாய் இருந்தாலும் அவற்றின் குற்றங்கள் தன்னைத் தட்டாதவனாக இருக்கிறான்; இதனை "ஏக வஸ்து என்னலாம்படி கலக்கச் செய்தே தத்கததோஷ ஸ்பர்சமில்லாத ஆச்சர்யபூதன்" என்றும், ஜகதாகாரனாய்க் கொண்டு இவர் களோடு பிரித்து ப்ரதிபத்தி பண்ண வொண்ணாதபடி நிற்கச் செய்தே அசித்தினுடைய பரிணாமமாதல், சித்தினுடைய ஸுகித்வ து:க்கித்வங்களாதல் தட்டாதபடி நிற்கை" என்றும்[25] உரைகள் விளக்கிச் செல்வது காணலாம். இதுவே உடல்-உயிர் கொள்கை யாகும்.

இதனை அறிஞர் கி. லக்ஷ்மணன், "உயிர்கள் அனைத்தும் உலகமும் இறைவனது சரீரம். இறைவன் சரீரி. அதாவது அச் சரீரத்தை உடையவன். உயிரைச் சார்ந்தது உடல். உயிருக்குரிய சுதந்திரம் உடலுக்குக் கிடையாது. எனவே உபநிடதங்கள், 'உள்ளவை பல அல்ல; உள்ளது ஒன்றுதான்' என்பதன் கருத்து, ஒன்றுதான் சுதந்திரமுடைய பொருள் என்பதாகுமேயன்றி, உள்ளது ஒன்றுதான்; ஏனை யாவும் பொய் என்பதாகாது" என்று விளக்குவர்.[26]

இக்கொள்கையினை யொட்டியே வைணவக் கோட் பாட்டினை 'விசிட்டாத்வைதம்' என்று குறிக்கின்றனர். விசிட்டா த்வைதம் என்பது விசிஷ்டஸ்ய அத்வைதம் என விரியும். இதற்கு "அறிவுள்ள பொருள், அறிவில்லாப் பொருள் ஆகியவற்றை உடலாக உடைய பொருளின் இரண்டில்லாமை" என்பது பொரு ளாகும். அஃதாவது அறிவுள்ள பொருள், அறிவில்லாப் பொருள், இறைவன் என்னும் முப்பொருளின் சேர்க்கையினாலாகிய கூட்டுப் பொருள் ஒன்றாகையால் இறைவன் ஒருவன் எனப்படுவான் என்பதே கருத்தாகும்.[27]

---

24. நான். தி. 20. 25. 6.8.7-36; தி.ச.வி. 1.
26. கி. லக்ஷ்மணன், 'இந்திய தத்துவ ஞானம்' பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1970, பக். 330.
27. ஆ. ரங்கநாத முதலியார் (பதி), 'ஸ்ரீவைஷ்ணவம்', சுவர்ண விலாஸ், திருவல்லிக்கேணி, 1937, பக். 300.

இக்கொள்கையினை உரைகள் அங்கங்கே ஒல்லும் இடங்களி லெல்லாம் சுட்டிச் செல்கின்றன. சான்றாக,

''சரிரி பூர்ண னானவாறே சரீரமும் புதுக்கணிக்குமிறே; ஜகச் சரிரியிறே அவன்.''[28]

''இந்த லோகத்தில் ஸ்த்தாவர ஜங்கமாத்மகமான ஸர்வ பதார்த்தங்களும், 'நீ' என்கிற சொல்லுக்குள்ளேயாம்படி ப்ரகாரமாயற்று, நீ யொருவனுமே ப்ரகாரியாய்.''[29]

''அவனுக்கு ப்ரகாரமாயல்லது ஸ்வதந்த்ரமா யிருப்பதொரு தேவதையில்லை.''[30]

''நடுவே புக்கு ஒரு பதார்த்தமும் ஸ்வதந்த்ரமாயிருப்ப தில்லை; அடைய ப்ரகாரமாய்த் தான் ப்ரகாரியாயிருக்கும்.''[31]

''ப்ரகாரத்திலேயிறே நாநாத்வமுள்ளது; ப்ரகாரி ஒருவனே யிறே.''[32]

''இங்குச் சொல்லுகிற தாதாத்ம்யம் (ஒன்றாயிருக்கும் தன்மை) ஸ்வரூபேண ஐக்யம் (தன்மையால் ஒன்றாயிருக்கும் தன்மை) சொல்லுகிறதல்ல; சரீராத்ம பாவத்தாலே சொல்லு கிறது.''[33]

''...பதார்த்தங்களடையத் தனக்குச் சரீரதயா ப்ரகாரமாய், தானொருவனுமே ப்ரகாரி யாய்இருக்கையாலே ஸர்வஸ்மாத்பர னானவன்.''[34]—ஆகியவற்றைக் காட்டலாம்.

மேலும், இக்கொள்கை ஆழ்வார் பாசுரங்களில் சிலவற்றைச் சிக்கறுத்து விளக்குவதற்கும் துணையாக அமைந்துள்ளது. 'ஒளிமணிவண்ணன்', 'பேசநின்ற சிவனுக்கும்', 'நீராய் நிலனாய்' 'என் திருமார்பன் தன்னை', 'அவாவறச் சூழ்', 'அரன் நாரணன் நாமம்' ஆகிய பாடல்களில்[35] திருமாலைச் சிவனாகவும், நான் முகனாகவும் ஆழ்வார்கள் குறித்துச் சென்றுள்ளனர். இவ் இடங் களிலெல்லாம் சிவனும் நான்முகனும் திருமாலுக்கு உடலென்றும், அவன் அவர்களுக்கு உயிராகக் கரந்துறைகிறான் என்றும் விளக்கம் கூறிக் குழப்பமின்மையைக் காட்டுவர். வடமொழி வேதத்தில் முரண்பாடு போலக் காணப்படும் இடங்களுக்கு

---

28. 4.3.8-36.
29. 4.9.7-36.
30. 5.2.7-36.
31. 8.4.9-36.
32. 9.4.6-36.
33. 10.5.3-36.
34. பெ.தி. 3.1.2.
35. 3.4.8; 4.10.4; 6.9.1; 7.6.7; 10.10.11; மு.தி.5.

அமைதி காண்பதற்கே யன்றி ஆழ்வார் பாசுரங்களில் சில வற்றிற்குச் செம்பொருள் காண்பதற்கும் இக்கொள்கை துணை யாய் அமைந்தது குறிப்பிடத்தக்கது.

ஐவகைப் பொருட்பிரிவு (அர்த்த பஞ்சகம்)

வைணவ சமய உண்மைகளை ஐவகைப் பொருட்பிரிவில் வகுத்துக் காட்டுவர். அவை (1) இறையியல், (2) உயிரியல், (3) பேற்றியல், (4) ஆற்றியியல், (5) தடையியல் என்பன. திருவாய்மொழி இவ்வைந்து பொருள்களையே விளக்குகிறது என்பர் பட்டர்.

''மிக்க இறைநிலையும் மெய்யாம் உயிர்நிலையும்
தக்க நெறியும் தடையாகித்-தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன்
யாழிசை வேதத் தியல்''[36]

என்பது அவரது கூற்று.

வைணவ உரைகளும் இவ்வகையிலேயே சமயக் கருத்துகளை விளக்கிச் செல்கின்றன. சில பாடல்களில் இவ்வைந்தும் எவ்வாறு பொருந்தியுள்ளன என்றும் காட்டிச் செல்கின்றன.

இறையியல்

இறையிலக்கணம்

நாராயணனே எல்லார்க்கும் தலைவன் (ஸர்வஸ்வாமி); எல்லாரையும் இயக்குபவன் (ஸர்வநியந்தா);[37] எல்லோரையும் இயக்குவதை இயல்பாகக் கொண்டவன் (ஸர்வேச்வரன்);[38] தனக்கு மேல் ஒருவன் இல்லாதவன் (ஸ்வதந்த்ரன்);[39] குறை யொன்றுமில்லா நிறைவாளன் (அவாப்த ஸமஸ்த காமன்); எல்லா நற்குணங்களும் உடையவன் (ஸமஸ்த கல்யாண குணாத்மகன்); எல்லோர்க்கும் காப்பாளன்;[40] எக்குற்றமும் தட்டாதவன் (அகிலஹேய ப்ரத்யநீகன்); எல்லோராலும் விரும்பப்படுபவன் (ஸர்வைஸ் ஸ்ப்ருஹணீயன்);[41] மேலான அழகு வாய்ந்த வடிவுடையவன் (விலக்ஷண விக்ரஹோபேதம்);[42] எல்லாவித

36. திருவாய்மொழி, பட்டர் தனியன்.
37. தி.பல்.0.
38. அம. 2, பெரி.
39. தி.ச.வி. 84.
40. பெரி.தி. 1.1.0.
41. 1.2.0-9.
42. தி.மா. 29.

உறவாகவும் இருப்பவன்;[43] தன் அறிவால் காண முயல்வார்க்கு எல்லை காண வொண்ணாதவன்;[44] ஆறாகவும் பேறாகவும் இருப்பவன்.[45]

தனிமுதலின் சிறப்பு அடையாளங்கள்

திருமாலே தேவதேவனாகவும் எல்லோர்க்கும் மேம்பட்டவனாகவும் இருக்கிறான் என்பதனைத் தெரிவிக்கும் அடையாளங்கள் சில அவன்பால் அமைந்துள்ளன.

திருமகளைத் தனக்கென்று பெற்றிருத்தல்,[46] சங்கு சக்கரங்களைக் கைக்கொண்டிருத்தல்,[47] திருமார்பில் திருத்துழாய் மாலை அணிந்திருத்தல்,[48] பெரிய திருவடியை (கருடனை) ஊர்தியாகப் பெற்றிருத்தல்,[49] திருவனந்தாழ்வானைப் படுக்கையாகப் பெற்றிருத்தல்[50] ஆகியவை அவ்வடையாளங்களாகும். அவன் தலையில் அணிந்திருக்கும் முடி மேலான அரசினையுடையவன் (ஆதிராஜ்யம்) என்பதனைத் தெரிவிக்கின்றது.[51]

பெருமான் திருமகள் கேள்வனாய் இருத்தல் பெரிதும் உயர்வாகக் குறிக்கப்பெறுகின்றது. "ஆழ்வார் பரிஸரத்தில் (சூழலில்) லக்ஷ்மீ ஸம்பந்த மொழிய ப்ரஹ்மசாரி எம்பெருமானைப் பற்றுவார் இல்லாமையாலே, ஸ்ரீமந் நாராயணன் என்று யாத்ருச்சிகமாகச் சொன்னார்கள்" என்னும் ஈட்டுரை எண்ணத்தக்கது.[52]

இறைவனும் (சொரூபம்), அவனுடைய திருமேனியும் (ரூபம்), அவனுடைய பண்புகளும் (குணங்கள்), செல்வமும் (விபூதி) ஆகிய அனைத்தும் அவளைக் கொண்டு நிறுவ வேண்டும்படி அமைந்துள்ளன.[53]

மாணிக்கம் ஒளியாலும் பூமணத்தாலும் பெருவிலையனாதல் போலப் பெருமானும் அவளாலே முதன்மை பெறுகின்றான்,[54] பெருமானுக்கு மண்மகள், ஆயர் மடமகள் என்று மற்றும் இருதேவியர் இருந்தாலும் திருமகளே முதல் தேவியாகவும் பட்டதுக்குரியவளாகவும் குறிக்கப் பெறுகிறாள்.[55]

---

43. 10.1.0-9.
44. பெ.தி. 11.5.5.
45. பெரி.தி. 5.3.8.
46. தி.மா. 10.
47. பெ.தி. 11.2.6.
48. 2.5.8-24, 36; 2.8.6-24,36.
49. தி.வி. 6.
50. 5.10. 11-36.
51. பெ.தி. 2.9.8.
52. 1.10.8-24.
53. பெரி. தி. 4.9.2.
54. தி.பல்.2; 6.10.1-36.
55. 1.9.4-36.

இறைப்பண்புகள்

இறைவன் பண்புகளோடு கூடியவன் என்பது வைணத்தின் அடிப்படைக் கொள்கைகளுள் ஒன்றாகும். இறைவனையே, "ஸௌலப்யமும் (எளிமையும்) மதிப்பும் அழகுங் கூடின பசுங்கூட்டு—பகவத் தத்துவம்"[56] என்றும், "மேன்மையும் நீர்மையும் வடிவழகும் கூடின பசுங்கூட்டமாயிற்று—பரத்த்வம் இருப்பது"[57] என்றும் பண்புகளின் கூட்டமாகக் குறிப்பிடுதல் கருதத்தக்கது.

இறைவனுடைய பண்புகள், மேன்மைக்குத் துணையான பண்புகள் (பரத்வ ஸாதனமான குணங்கள்) உலகத் தோற்றத்திற்குத் துணையான பண்புகள் (ஜகத் காரணத்வ ஸாதனமான குணங்கள்) அடியார் பொருட்டமைந்த பண்புகள் (ஆச்ரிதார்த்தமான குணங்கள்) என்று பலவகைப்படும் என்பர்.[58]

இறைவனுக்கு, ஸௌசீல்யம், வாத்ஸல்யம், மார்த்தவம், ஆர்ஜவம், ஸௌஹார்த்தம், ஸாம்யம், காருண்யம், மாதுர்யம், காம்பீர்யம், ஔதார்யம், சாதுர்யம், ஸ்தைர்யம், தைர்யம், சௌர்யம், பராக்ரமம், ஸத்யகாமத்வம், ஸத்ய ஸங்கல்பத்வம், க்ருதித்வம், க்ருதஜ்ஞத்வம் என்னும் பத்தொன்பது குணங்கள் உண்டு என்றும், இவையனைத்தும் ஜ்ஞானம், பலம், ஐச்வர்யம், வீர்யம், சக்தி, தேஜஸ் ஆகிய ஆறிலிருந்து தோன்றுபவை என்றும் கூறுவர்.[59]

உரையில் எளிமை (ஸௌலப்யம்), நீர்மை (ஸௌசீல்யம்), செம்மை (ஆர்ஜவம்) ஆகிய பண்புகளுக்கு மட்டும் விளக்கம் காணப்படுகின்றது.

"ஸௌலப்யமாவது ஸ்ரீவைகுண்டம் கலவிருக்கையாக உடையவன், அங்கு நின்றும் ஸம்ஸாரி சேதநர் நின்ற இடத்தே வந்து அவதரித்து எளியனாகை." "ஸௌசீல்யமாவது இப்படி(த்) தாழவிட்டால், 'சிறியாரளவில் நம்மைத் தாழவிட்டோமே' என்று தன் திருவுள்ளத்திலு மின்றிக்கே யிருக்கை. இனி ஆர்ஜவ குணமாவது இப்படி(ப்)பொருந்தினால், நினைவும் சொலவும் (சொல்லும்) செயலும் ஒருபடிப்பட்டிராதே பலவகைப்பட்ட சேதநரோடு தான் பரிமாறுமிடத்தில், அவர்கள் போன வழி

---

56. *1.10.11-24.*
57. *தி.மா. 2.*
58. *தி.ச.வி. 11.*
59. *அரங்க சீனிவாசன், 'கடவுள் வரலாறு' திருவள்ளுவர் பதிப்பகம், திருச்சி, 1980, பக். 138-139.*

தனக்கு வழியாம்படி தான் அவர்களுக்குச் செவ்வியனாய்ப் பரிமாறுகை" என்பது ஈட்டுரை.[60] "ஸௌலப்யமாவது - உயர்ந் தாரோடு தாழ்ந்தாரோடு வாசியற ஸர்வ ஸுலபமான அர்ச்சக பராதீநத்வம்."[61]

ஐந்து வடிவங்கள்

பெருமானுக்கு ஐவகை வடிவங்கள் உண்டு. அவை விண்ணாட்டு நிலை (பரத்வம்), அணிவகுப்புநிலை (வியூகம்), பிறப்புநிலை (விபவம்), உள்ளுறை நிலை (அந்தர்யாமித்வம்), வழிபடுநிலை (அர்ச்சை) என்பனவாகும். "பர வ்யூஹ விபவ அந்தர்யாமித்வ அர்ச்சாவதாரங்களான இடங்களில் எழுந்தருளி நின்றது-சேதநரைத் திருத்துகைக்கும், திருந்தினாரை அடிமை கொள்கைக்குமிறே"[62] என்னும் மணவாள மாமுனிகள் உரையில் இவ்வைந்து நிலையும் சுட்டப்படுதல் காணலாம்.

விண்ணாட்டு நிலை (பரத்வம்)

பரமபதம் காலம் நடையாடாத உலகமாகும்;[63] தானாகத் தோன்றியது;[64] செயற்கை கடந்தது;[65] (அப்ராக்ருதம்); ஒருநாளும் அழிவில்லாதது;[66] ஒளிமயமானது;[67] பெருமானுக்குக் கலவிருக்கையாக-கொலுச்சாவடியாக-இருப்பது; துயரச் சுவடறி யாதது;[68] மனமும் வாக்கும் நிலமன்று என்று மீளும் இடம் அது.[69] 'அயோத்யை' (தகர்க்க முடியாதது) என்றும், 'அபராஜிதை' (வெல்ல முடியாதது) என்றும் சொல்லப்படும் திருநகரத்தையும், மகிழ்ச்சியே வடிவான தெய்வத்தன்மை பொருந்திய அவை யினையும் (சபை) கட்டிலையுமுடையது. அங்குப் பெருமான் எல்லா நற்பண்புகளும் உடையவனாய், எல்லாப் படைகளையும் கொண்டவனாய்ப் பெரிய பிராட்டியாரோடு வீற்றிருக்கிறான்.[70] பிறப்பில்லாதவர்களாகிய நித்தியசூரிகள் அவனுக்குப் பல்லாண்டு பாடிக் கொண்டிருக்க, அவன் மிகவும் அண்ணியராய் இருப்பார்க்கு (பரமஸாம்யாபந்நர்க்கு) முகங்கொடுத்துக் கொண்டிருக்கிறான்.[71] இதுவே விண்ணாட்டு நிலையாகும்.

---

60. 1.9.0-36.
61. 6.10.10-36.
62. பெரி.தி. 5.4.0.
63. 3.6.3-24, 36.
64. பாவை, 21-3.
65. பெரி. தி. 4.7.9.
66. 2 2.1-24.
67. பெரி. தி. 4.8 2.
68. பெ.தி 9.3.10.
69. பாவை, 5-6.
70. 4.5.0-9, 24.
71. பெரி. தி.2.2.6.

அணிவகுப்பு நிலை (வியூகம்)

இறைவன் பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் நிலை அணிவகுப்பு நிலையாகும். பாற்கடல் பதிநான்கு நூறாயிரக் காதப் பரப்பினது என்பர் பெரியவாச்சான் பிள்ளை.[72] பாற்கடல் அவதாரத்திற்கு நாற்றங் காலாய்த் திகழ்கின்றது.[73] அங்குப் பெருமான் வாசுதேவன், சங்கருடணன், பிரத்யும்நன், அநிருத்தன் ஆகியோர் உருவத்தில் நான்கு வகைப்பட்டிருக்கும் பெரிய வடிவுகளை யுடையவனாய் இருக்கிறான்.[74] நான்முகன் முதலானோர் விழைந்து கூப்பிடுங்கால் தொலைவிலிருப்பவனாகக் கூடாது என்பதற்காகவும், தன்னை ஏற்பவர்களுக்கு மண்ணில் தோன்றிச் சார்தற்குரிய நற்பொருளாதல் வேண்டும் என்பதற் காகவும் இந்நிலை அமைந்தது.[75] சுவேதத் தீபத்திலே வசிக்கிறவர் கள் பற்றுவதற்கும், மதுகைடபர் முதலாயினாரை அழிப்பதற்கும், பிரமன் முதலாயினோர் பரிகைக்கும் என்னும் மூன்று காரணத் திற்காகப் பெருமான் பாற்கடலில் பள்ளி கொண்டான் என்கின்றன இருபத்து நாலாயிரப்படியும் ஈட்டுரையும்.[76]

பிறப்புநிலை (விபவம்)

இறைவன் தேவர், மனிதர், விலங்கு, தாவரம் முதலிய உருவத்தைத் தன் விருப்பினால் ஏற்றுக்கொண்டு வருவது பிறப்பு நிலையாகும். அவன் சில நோக்கங்களுக்காக மண்ணுலகில் தோன்றுகிறான். அவற்றை உரைகள் அங்கங்கே சுட்டிச் செல்கின்றன.

இறைவன் பிறப்பெடுப்பதன் நோக்கம், மண்ணுலக மக்களைத் திருத்தி அடிமை கொள்ளுகையென்றும்,[77] உலகினர்க்கு விருப்பமே தொடங்கி மிக்க மேலான இறையன்பு (பரமபக்தி) வரை எல்லா நிலைகளையும் உண்டாக்கி அவர்களை உலகியல் வெக்காயம் நீங்கினவராக்குகை (முத்தராக்குகை) என்றும்,[78] வீடு நல்குகை (மோக்ஷப்ரதத்வம்) என்றும்,[79] நல்லவர்களைக் காத்தலும் தீயவர்களை அழித்தலும் என்றும்[80] தெரிவிக்கப்பட் டுள்ளன.

---

72. தி.நெ.தா. 3.
73. பெ.மடல், கண்ணி, 119.
74. பெரி.தி. 4.3.11.
75. தி.ச.வி. 28,48.
76. 8.4.6-24, 36.
77. பெரி.தி. 1.6.1.
78. தி.ச.வி. 86.
79. 1.3.2-36.
80. மு.தி. 39; தி.ச.வி. 38; தி.நெ.தா.6.

இறைவன் எடுத்த பிறப்புகள் பல. சிவன் நான்முகன் ஆகிய இருவர்க்கும் நடுவே விட்டுணு என்னும் பெயரோடு இருத்தல் முதற் பிறப்பு என்று குறிக்கப்படுகின்றது.[81] புத்த முனியாய் வந்தவனும் அவனே என்பர்.[82]

இறைவன் பிறப்புகளுள் பத்தினைச் சிறப்பாகக் குறித்தல் மரபு. மீன், ஆமை, பன்றி, நரசிங்கம், குறளன், பரசுராமன், இராமன், பலராமன், கிருட்டினன், கல்கி என்பன அப்பத்துப் பிறப்புகளாகும்.

"மீனோ டாமை கேழலரி
குறளாய் முன்னு மிராமனாய்த்
தானாய்ப் பின்னு மிராமனாய்த்
தாமோ தரனாய்க் கற்கியும்
ஆனான் றன்னை, கண்ணபுரத்
தடியன் கலிய னொலிசெய்த,
தேனா ரின்சொல் தமிழ்மாலை
செப்பப் பாவம் நில்லாவே"

என்பது திருமங்கை மன்னன் பாசுரம்.[83] இவற்றுள் கல்கியாகப் பிறத்தல் இன்னும் நிகழவில்லை. இதனை, "மேல்வரும் விரோதத்தைப் போக்குகைக்கு இன்னமும் கற்கியாக இருந்தான்" என்னும் உரைத்தொடர் அறிவிக்கின்றது.[84] இவற்றுள் மீன், பன்றி ஆகிய பிறப்புகள் 'வித்யாவதாரங்கள்' (அறிவுரை வழக்கும் பிறப்புகள்) எனப்படும்.[85] அஃதாவது சாத்திரங்களுக்குக் காரணமாக அமைந்தவையாகும். இராமன், கிருட்டினன் முதலான பிறப்புகள் 'அநுஷ்ட்டே யார்த்த ப்ரகாசகமான அவதாரங்கள்' எனப்படும்.[86] அஃதாவது ஒழுக்கத்தைக் கடைப் பிடித்துக் காட்ட வந்தவையாகும்.

இப்பிறப்புகளைக் கண்கூடாக வந்த பிறப்புகள் (சாட்சாத் அவதாரம்) என்றும், மற்றோர் உயிரின்மேல் ஏறிநின்ற பிறப்புகள் (ஆவேசாவதாரம்) என்றும் இருவகையாகப் பகுத்துக் காட்டுதலும் உண்டு.[87] மீன், ஆமை, பன்றி, குறளன், இராமன்,

---

81. நான். தி. 54.
82. 5.7.5-24, 36.
83. பெ.தி. 8.8.10, பாரதம், பதினெட்டாம் போர்ச் சருக்கம் 1.
84. 5.1.10-24, 36.
85. 1.8.8-36; 2.8 5-36
86. 2.8.5-36.
87. அழகிய மணவாள ராமாநுஜ ஏகாங்கி ஸ்வாமிகள், 'ஸ்ரீ வைஷ்ணவ தீபிகை', ரத்னம் பிரஸ், சென்னை, 1968, பக்.19.

கிருட்டினன், ஆகியவை கண்கூடாக வந்த பிறப்புகள். பரசுராமன், பலராமன் ஆகியவை ஏறிநின்ற பிறப்புகள். இவற்றுள் கண்கூடாக வரும் பிறப்பு, ஏறி நிற்கும் பிறப்பினும் சிறப்புக்குரியது என்று கருதுவர். "ஸ்வருபாவேசத்திலும் ஸாக்ஷாத் அவதாரம் ப்ரபலமாகையாலே" என்பது மணவாள மாமுனிகள் உரைத்தொடர்.[88]

இப்பிறப்புகள் சிலவற்றால் விளங்கும் இறைவனின் உயரியல்புகளாகச் சில தெரிவிக்கப்பட்டுள்ளன. பன்றி, ஆமை, மீன் முதலிய பிறப்புகள் செயற்கை கடந்த தன் நிலையை அழிய மாறி, விலங்குக்கு நிகராக்கிக் கொண்டு, உலகைக் காத்த நீர்மையைக் காட்டுகின்றன என்றும்,[89] குறளனாய் எல்லை நடந்து மாவலியிடமிருந்து மண்ணை மீட்டது, தன்னுடைமை யைப் பெறுதற்குத் தானே இரப்பாளனாய் வருபவன் என்பதனைப் புலப்படுத்துகிறது என்றும்,[90] திரிவிக்கிரமத் தோற்றம் ஆண்டவன் - அடிமை உறவினைத் தெரிவிக்கின்றது என்றும்,[91] இராமனாய்த் தோன்றி இராவணனை அழித்து அவனாலே நெருக்குண்ட உயிரினங்களைக் காத்தது இவ்வுலகிற்கு அவனே காப்பாளன் என்பதனை அறிவிக்கின்றது என்றும்,[92] கிருட்டினன் தூது நடந்தது அவன் அடியார்க்கு வயப்பட்டிருத்த லாகிய பண்பினை விளக்குகின்றது என்றும்[93] குறிக்கப்படுகின்றன.

இராமாவதாரத்தில் மெய்யும் கிருட்டினாவதாரத்தில் பொய்யும் அடியார்க்குத் தஞ்சமாக அமைகின்றன என்பர். "ராமாவதாரத்தில் மெய்யும் க்ருஷ்ணாவதாரத்தில் பொய்யு மிறே ஆச்ரிதர்க்குத் தஞ்சம்" என்கிறது ஈடு.[94] மேலும் வடிவழகாலும், வரையாதே தீண்டும்படியாலும், மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்ட செயல்களைப் புரிவதாலும், அடியார்க்குத் தாழ்ந்து பணிவுகாட்டும் படியாலும் கிருட்டினா வதாரமும் வாமனாவதாரமும் ஒத்தனவாக அமைந்திருத்தலைக் கண்டு தெரிவிக்கின்றனர்.[95]

இறைவன் இப்படிப் பல பிறப்புகளை எடுப்பதால் அவனுக்குக் குறையுண்டாவதில்லை; மாறாகப் பெருமையே சேர்கின்றது. "இந்நிலத்தை விட விட இவனுக்குப் புகழுண்டாமாபோலே,

---

88. பெரி.தி. 3.9.2.
89. பெரி.தி. 3.3.6.
90. தி.ச.வி. 28.
91. தி.நெ.தா. 5.
92. பெரி. தி. 4.8.5.
93. பெரி.தி. 2.6.5.
94. 2.1.6-36.
95. பெ.தி.11.5.9; பாவை, 3-6.

அந்நிலத்தை விட விட அவனுக்குப் புகழுண்டாகும்,"[96] என்றும், "நம்பிறவி நம்மையும் அவனையும் அகற்றுகைக் குடலாயிருக்கும்; அவன் பிறவி இருவரு மணுகுகைக்கு உடலாயிருக்கும்"[97] என்றும் இதனை விளக்கிச் செல்வர். இவ்வாறு பிறப்பு அவனுக்குப் புகழ் சேர்த்தற்குக் காரணம் அவனுக்கு அது வினையடியாகவோ, தன் பொருட்டாகவோ அமையாமல் தன் விருப்பத்தினால் பிறர்நலங் குறித்து அமைவதேயாகும்.[98] விண்ணாட்டு நிலையினைக் காட்டிலும் பிறப்பு நிலையில் அழகு மிக்கிருப்பதாகச் சுட்டுவர்.[99]

பிறப்பு நிலையில் பெருமான் உலகினர்க்கு இணையான திருமேனியோடு தோன்றி, வழிபடுவோர்க்கு நற்சார்பாகவும் (சுபாச்ரயம்) தன்னை வழியாகப் பற்றினோரைப் பிற பயன் களினின்றும் மீட்டு அவர்களுக்கு இன்பப் பொருளாகவும் (போக்யமாய்) மேலான இறையன்பு (பரபக்தி) யுடையார்க்கு எல்லாவித இன்பமுமாகவும் இருக்கிறான்.[100]

உள்ளுறை நிலை (அந்தர்யாமித்வம்)

பொருள்கள்தோறும் உயிர்க்குள் உயிராய்க் கரந்து நிறைந் திருக்கும் நிலையே 'உள்ளுறை நிலை' யாகும். அஃது எல்லா நிலைகளிலும் எல்லா உயிர்க்கும் துணையாய் எப்போதும் விடாதே, உள்ளே பதிகிடந்து உயிர்களின் உளதாம் தன்மையை (சத்தையை) நோக்கிக் கொண்டிருக்கும் தான் நிறைந்திருத்தல் (சொரூப வியாப்தி), அடியாரின் உள்ளக் கமலத்தில் பெருவிரல் அளவில் அழகிய திருவுருவுடன் அகவழி பாட்டிற்கு (தியானத் திற்கு)ப் பொருளாவதன் பொருட்டும் அறிவு முதலியவற்றை ஏவல் கொள்பவனாய் (நியாமகனாய்) இருந்து காப்பதன் பொருட்டும், திருமகளோடு எழுந்தருளியிருக்கும் 'உருவில் நிறைந்திருத்தல்' (விக்ரஹ வியாப்தி) என இருவகைப்படும்.[101]

வழிபடுநிலை (அர்ச்சை)

இறைவன் பிறப்பெடுத்த காலத்தில் அவனது நுகர்ச்சியைப் பெறாமல் பிற்பாடரானவர்க்கு இழவு தீர உகந்தருளின இடங்களில் வந்து இருக்கும் நிலை வழிபடுநிலை ஆகும். அஃதாவது அடியவன் தான் உகப்பது ஏதேனும் ஒரு பொருளைத்

---

96. 10.2.11-36.
97. பாவை, 25-3.
98. பெரி.தி. 4.9.9.
99. 1.8.2-24.
100. தி.ச.வி. 2.
101. 5.5.7-36.

திருமேனியாகக் கோலினால் அதனையே தனக்குத் திருமேனி யாகக்கொண்டு அதன்பால் சிறப்பான வடிவத்தில் பண்ணத்தக்க பற்றினைப் பண்ணி முகங்கொடுக்கும்படி இருக்கும் நிலை. இந்நிலையில் தன்னையொழிந்த மற்ற எல்லாப் பொருள்களின் இயல்பு, இருப்பு, இயக்கம், இயக்க மின்மைகள் அடையத் தான் இட்ட வழக்காய் இருப்பவன். தன்னுடைய இயல்பு, இருப்புத் தொடக்கமானவை அடியாரிட்ட வழக்காய் அவர்களுக்கு வீடு வயல்கள் போன்று கூறுகொள்ளலாம்படி நிற்கிறான். இவ் இறை வடிவம், மனிதனுக்கு விருப்பம் பிறந்தபோது மற்றோர் இடத்துக்குச் செல்ல வேண்டாது இங்கேயே நுகரத் தக்கதாகவும், இவ்வுடல் தொடக்கற்றுத் திருநாட்டிற்குச் சென்று வேறோர் உடலைப் பெற்றுச் செய்தற்குரிய அடிமைகளைச் சிற்றின்ப ஈடுபாட்டிற்கு உறுப்பான இவ்வுடம்போடு செய்யக் கூடியதாகவும் அமைந்துள்ளது. இதில், பெருமான் தன்னை விடுத்து மனிதன் வேறொன்றிலே நோக்குடையவனான காலத்திலும் அவன் கையையே பார்த்திருக்கிறான். அவன் பசித்த போது உண்ணும் பொருளைத் தன்னை 'அமுது செய்யவேண்டும்' என்று வேண்டினால் அப்பொழுது அமுது செய்கிறான். மேலும் தன் இருக்கை, கிடக்கை, ஒப்பனைகளெல்லாம் அவனிட்ட வழக்காக்கு கிறான். திருமகள் கேள்வனாய், குறையொன்றுமில்லாத நிறைவாளனாய் இருப்பவன், அடியார்க்கு வயப்பட்டவனாய்த் தன்னை அமைத்துக்கொண்டு நிற்கும் இடம் இஃது ஆகும்.[102]

இந்நிலையில் அவனது நீர்மைப்பண்பு துய்க்கக் கூடியதாய் அமைகின்றது;[103] அவன் மிக்க ஒளியோடு திகழ்கிறான். அவனது பண்பு திருநாட்டில் பகல்விளக்குப் போலவும், இங்கு இருட்டில் வைத்த விளக்குப் போலவும் இருக்கின்றது.[104] இவ்வடிவத்தில் அவன் குணங்களுக்கு நிறைவு உண்டாகின்றது. திருநாட்டில் அவன் குணங்களுக்கு உளதாம் தன்மை மட்டுமே இருக்கிறது என்றும் இவ்வழிபாட்டு நிலையில் அவை நிறைவுபெற்று விளங்கு கின்றன என்றும் தெரிவிப்பர்.[105]

மனிதன் பற்றுவதற்குத் தக்க இடமாகவும் இதுவே அமைந் துள்ளது. விண்ணாட்டுநிலை அவனுக்கு விருப்பம் பிறந்தபோது பற்ற வொண்ணாதபடி தொலைவில் அமைந்துள்ளது. அணி வகுப்பு நிலை சிவன், நான்முகன் முதலான தேவர்களுக்கே அடையத்தக்கதாய், மனிதனால் அடைய முடியாததாய்

---

102. 3.6.0-36.
103. அம.3, பெரி.
104. தி.மா.37.
105. 1.10.9-24,36.

விண்ணாட்டு நிலை போலவே உள்ளது. பிறப்புகள் நல்லூழ் மிக்கவர்களாய் அக்காலத்தில் உதவினார்க்கு ஒழியப் பிற்பாடர்க்கு உதவாமையால் காலத்தாலே கழிந்தனவாய் இருக்கின்றன. உள்ளுறைநிலை இக்கண்ணாலே காணவியலாது அமைந்துள்ளது. இவற்றைப்போல இடத்தாலும் காலத்தாலும் கருவியாலும் தொலைவாக இருக்கும் குற்றங்கள் இல்லாமல் இருப்பது வழிபடுநிலையேயாகும்.[106]

விண்ணாட்டு நிலை பிறவாதார்க்கும் (நித்யர்க்கும்); வீடுற்றோர்க்கும் (முக்தர்க்கும்); அணிவகுப்பு நிலை வீடுற்றோர் நிலையினையடைந்த சனகர் தொடக்கமானோர்க்கும் பிரமன் முதலானோர்க்கும்; பிறப்புகள் அக்காலத்தில் வாழ்ந்த பேறு மிக்கவர்களுக்கு; கோயில் நிலை (திருவரங்கத்தில் வழிபடு நிலையில் இருப்பது) இடத்தாலும் காலத்தாலும் பிற்பாடரான பேறற்றவர்களுக்கு முகங்கொடுத்தற்கு என்று திருமாலையுரை தெரிவிப்பதும் கருதத்தக்கது.[107]

உகந்தருளின இடத்திலே இருக்கும் இறைவன் திருமேனி எப்பொருளால் ஆகியது என்று ஆராய்தல் அடாது. அவ் அராய்ச்சி தாயின் கருவழியை ஆராய்தலோடு ஒக்கும் என்று கடுமையாகக் குறிக்கின்றனர்.[108]

திருப்பெயர்கள்

இறைவனுக்குத் திருப்பெயர்கள் பல உள்ளன. அவை அவனுடைய மேன்மை, நீர்மை, வடிவழகு ஆகியவற்றைக் காட்டுவனவாகத் திகழ்கின்றன.[109] இறைவனைக் காட்டிலும் அவன் பெயர் சிறப்புடையது. "கட்டிப்பொன் போலே அவன்; பணிப்பொன் போலே திருநாமம்" என்பர்.[110]

அச்சுதன் - அடியாரை ஒருகாலும் நழுவ விடாதவன்;[111] தானும் நழுவாதவன்.[112]

இராமன் - தன் வடிவழகாலே எல்லாரையும் மகிழ்விக்க வல்லவன்.[113]

106. 6.10.10-36.
107. தி.மா.4; பெ.தி. 8.1.1.
108. பெ.தி.8.1.1.
109. தி.ச.வி. 103.
110. பாவை, 3-3.
111. பெரி.தி. 4.10.10.
112. தி.மா.2.
113. பெரி.தி. 4.1.2.

இருடீகேசன் - இந்திரியங்களை நடத்துபவன்.[114]

கேசவன் - இப்பெயர்க்கு வரையப்பட்டுள்ள உரைகளைத் தொகுத்துக் காணுங்கால் இதற்கு நான்கு பொருள்கள் அமைந்திருத்தல் புலனாகின்றது. அவை (1) கேசியை அழித்தவன்;[115] (2) பிரம உருத்திரர்களுக்குக் காரண மாக இருப்பவன்;[116] (3) உயர்ந்த மயிர்முடியை (ப்ரசஸ்த கேசம்) உடையவன்;[117] (4) கவலையை அழித்தருளுபவன்[118] என்பன.

கோவிந்தன் - திருநாட்டில் உள்ள செல்வம் போலன்றிக்கே பிறந்து படைத்த செல்வமான ஆநிரை வளத்தினை யுடையவன்.[119]

கோவலன் - சார்ந்தாரைக் காக்குமிடத்துத் தாழ வந்து பிறந்து காப்பவன்.[120]

சிரீதரன் - பெரிய பிராட்டியாரைத் திருமார்பிலே யுடைவன்.[121]

தாமோதரன் - பெற்ற தாய்க்குக் கட்டி வைக்காம்படி பணிவுடையனாய் இருந்தவன்.[122]

திரிவிக்கிரமன் - மூன்றடியாலே எல்லா உலகங்களையும் தன் காற்கீழே இட்டுக்கொண்டவன்.[123]

நாரணன் (நாராயணன்) - எல்லா உயிர்களோடும் ஒழிக்க ஒழியாத உறவையுடையவன்;[124] திருப்பெயர்களுள் இஃது அவனைக் குறித்துக் காட்டுவதாகவும் (நிருபக மாய்) ஏனைய பெயர்கள் அப்படி நிலைநாட்டப்பட்ட பொருளுக்கு அடைமொழிகளாவும் இருப்பனவாகும்.[125] இதனைச் சொன்னாலேயே பிற பெயர்களையும் சொன்னதாக அமையும்.[126] மேலும் இப்பெயர்

---

114. 2.7.10-36.
115. மு.தி.100; 10.6.2-36.
116. பெரி.தி. 3.3.7.
117. 2.7.1-36; பெரி.தி. 1.7.10.
118. தி.ச.வி 61.
119. 2.7.4-24.
120. 10.1.6-36.
121. 2.7.9-36.
122. பெரி.தி.3.5.9.
123. 2.7.7-36.
124. பெரி.தி.2.4.8.
125. 1.4 5-24; பெரி.தி. 4.4.3.
126. பெரி.தி. 4.10.6.

இறைவன் தன்னை ஒழிந்ததடையப் பண்புகளாகக் கொண்டு (ப்ரகாரமாய்க் கொண்டு) தான் பண்பியாய் (ப்ரகாரியாய்) இருப்பானொருவன் என்பதனைக் காட்டு வதாகும்.[127]

பற்பநாபன் - உலகிற்கு வேர்ப்பற்றானவன்;[128] எல்லா உலகங் களும் உண்டாவதற்குக் காரணமான திருநாபிக் கமலத்தையுடையவன்.[129]

மணிவண்ணன் - பெருவிலையனான இரத்தினம் போலே இருக்கும் உருவத்தை உடையவன்.[130]

மதுசூதனன் - மது என்னும் அசுரனை அழித்தவன்.[131]

மாதவன் - திருமகளோடு கூடியவன் (லக்ஷ்மீஸநாதம்).[132]

வாமனன் - அழகிய வடிவை யுடைவன்; நன்மையைத் தருபவன்.[133]

விட்டுணு - எங்கும் பரவியிருப்பவன் (வ்யாப்தியை யுடையவன்).[134]

மந்திரங்கள்

வைணவ சமய உண்மைகளை உட்கொண்ட மந்திரங்களாக மூன்று குறிக்கப்படுகின்றன. அவை திருமந்திரம், துவயம், சரமசுலோகம் என்பன.

திருமந்திரம்

திருமந்திரம் எல்லா மறைகளின் சாரமாக இருப்பதாகும்.[135] எல்லாப் பொருளையும் திரளச் சொல்லும் மந்திரம் இதுவே என்கிறது திருநெடுந்தாண்டக உரை.[136] இதனை இறைவன் நரனாகவும் நாராயணனாகவும் நின்று வெளியிட்டருளினான்.[137] ''ஓம் நமோ நாராயணாய'' என்பதே இம்மந்திரம். இதில், 'ஓம்' என்பது பிரணவம் என்று குறிக்கப்படுகின்றது. இதனை மந்திரப் பொருளின் சுருக்கமாகவும், 'நமோ நாராயணாய'

---

127. 1.3.7-36.
128. பெரி.தி. 2.3.11.
129. 2.7.10-36.
130. 2.7.13-36.
131. 2.7.6-36.
132. பாவை, 30-3.
133. 2.7.8-36.
134. 2.7.4-24,36.
135. பெரி.தி. 4.3.11.
136. தி.நெ.தா. 4.
137. பெரி.தி. 4.7.9.

என்பதன் விளக்கமாகவும் கொள்வர். 'ஓம்' என்பதில் அ, உ, ம என்னும் மூன்றெழுத்துகள் உள்ளன. இவற்றுள் அகாரத்தில் இறைவனுடைய காரணமாயிருக்கும் தன்மை, காக்குந் தன்மை, தலைமைத் தன்மை முதலியன வெளிப்படையாகவும், திருமகள் கேள்வனாம் தன்மை உட்பொருளாகவும் விளக்கப்படுகின்றன. உகரத்தால் அவ்வடிமைத்தன்மையானது பிறர்க்குத் தகுதியின்றி அவனுக்கே உரியதாயிருக்கும் தன்மை குறிக்கப்படுகின்றது. மகரத்தால் அவனொருவனுக்கே தகுதியாக இருக்கும் தன்மைக் குப் பற்றுக்கோடான உயிரினது உடல் கடந்த தன்மை தொடக்க மானவை விளக்கப்படுகின்றன. 'ஓம்' 'நம:', 'நாராயணாய' என்னும் மூன்று சொற்களும் முறையே பிறிதொன்றற் கன்றி அவனுக்கே அடிமைப் பட்டிருக்கும் தன்மை (அநந்யார்ஹ சேஷத்வம்), பிறிதொன்றன்றி அவனையே தஞ்சமாகக் கொண்டி ருக்கும் தன்மை (அநந்ய சரணத்வம்) பிறிதொன்றன்றி அவனே இன்பமாய் இருக்கும் தன்மை (அநந்ய போக்யத்வம்) ஆகிய முப்பொருள்களையும் தெரிவிக்கின்றன.[138]

இங்கு, "ஆக-திருமந்த்ரத்தால் எம்பெருமானுக்கே உரியனான நான், எனக்கு உரியனன்றிக்கே யொழிய வேணும், ஸர்வசேஷியான நாராயணனுக்கே எல்லா அடிமைகளும் செய்யப் பெறுவேனாக வேணும் என்றதாயிற்று" என்னும் முமுட்சுப்படி நூற்பா ஒப்பிட்டுக் காணத்தக்கது.[139]

துவயம்

ஆசாரியர்களால் பெரிதும் விழையப்பட்ட மந்திரமாக இது காணப்படுகின்றது. "நம்மாசார்யர்கள் வ்யாபக மந்த்ரங்கள் மூன்றிலும் த்வயத்தையே ஆதரிக்குமாபோலே"[140] என்றும், "நம் முதலிகள் ஓரோ ஸந்தாநங்களாக 'சிறியார், பெரியார்' என்னாதே த்வயத்தை அப்யஸிப்பித்து (பயிற்றுவித்து) வைக்குமா போலே"[141] என்றும் வரும் குறிப்புகள் இக் கருத்தினை அரண்செய்யும் வகையில் அமைந்துள்ளன.

ஸ்ரீமந் நாராயணாய சரணௌ சரணம் ப்ரபத்யே
ஸ்ரீமதே நாராயணாய நம:"

என்பதே துவயம் என்னும் மந்திரமாகும்.

---

138. பெரி.தி. 4.7.10.
139. முமுட்சுப்படி, நூற்பா, 115.
140. 6.1.10-36. 141. 6.8.6-36.

இதில் முதலடி திருமகள் கேள்வனே ஆறு (உபாயம்) என்பதனையும் இரண்டாமடி அவனுக்குத் தொண்டு செய்வதே பேறு (உபேயம்) என்பதனையும் குறிக்கின்றன. இம்மந்திரத்தின் இரண்டாமடி இருவர்க்கு (பெருமான்,பிராட்டி ஆகியவர்களுக்கு) ஒருவர் அடிமை செய்வதனைத் தெரிவிக்கின்றது என்கிறது திருப்பாவை உரை.[142] இதன் முன்னடியின் பொருள்வழி ஒழுகுவோர்க்கு இட்ட அடி மாறியிட உரிமையில்லை; தன்மீட்பு அவனாலே என்றிருந்த சிதையைப் போலே இருத்தற்குரியவர் என்றும், பின்னடியின் பொருள்வழி ஒழுகுவோர்க்கு "எல்லாம் யானே செய்வேன்" என்று வாழ்ந்த இளையபெருமாள் போலே கண்ணுறங்க நேரமில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளன.[143] இதே கருத்தினை ஈடு, "பூர்வார்த்தத்தை அநுஸந்தித்தால் இத் தலையால் ஒரு துரும்பு நறுக்கவும் ப்ராப்தி இல்லாதபடியாய் இருக்கும்; உத்தரார்த்தத்தை அநுஸந்தித்தால் இளைய பெருமாளைப் போலே கண்ணுறங்கவும் விரகில்லையாய் இருக்கும்" என்று வேறு சொற்களில் குறித்துச் செல்கிறது.[144]

திருவாய்மொழியின் முதல் மூன்று பத்துகளும் துவய மந்திரத்தின் பின்னடியின் பொருளையும், அடுத்த மூன்று பத்து களும் அதன் முன்னடியின் பொருளையும் விளக்குகின்றன என்பது உரையாசிரியர் தம் கருத்து.[145]

சரம சுலோகம்

"ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாம்ஏகம் சரணம் வ்ரஜ
அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷ யிஷ்யாமி
மாசுச:"

என்பது சரம சுலோகம்.[146] இதன் பொருளை "உன்னுடைய ஸர்வபரங்களையும் நம்தலையிலே (நம்மிடத்திலே) பொகட்டு, நாமே கடவோமென்றிரு; உன்னுடைய விரோதி வர்க்கத்தை யடைய நாமே போக்கித் தருகிறோம்" என்று தெரிவிக்கிறது ஈடு.[147] கர்ம, ஞான, பக்தி, பிரபத்தி என்னும் நான்கு நெறிகளில் இறுதி நெறியினைக் (சரம உபாயம்) கூறுவதால் இதற்கு இப் பெயர் அமைந்தது.[148] இதனைப் பாரதப்போர் நடுவே

---

142. பாவை, 19-6.
143. நா.தி. 9.6.
144. 4.6.11-36.
145. 4.0.0-24,36.
146. கீதை, அத்யாயம், 18, சுலோகம், 66.
147. 9.1.0-36.
148. ஆ.ரங்கநாத முதலியார் (பதி.), 'ஸ்ரீவைஷ்ணவம்', சுவர்ண விலாஸ், திருவல்லிக்கேணி, 1937, பக்.5.

திருத்தேர்த்தட்டில் அருச்சுனனுக்குக் கண்ணபெருமான் புகட்டினான். "திருத்தேர்த்தட்டிலே அர்ஜுநன் சரமச்லோகங் கேட்டது; இவர் (நம்மாழ்வார்) வெண்ணெய் களவு காணப்புக்க இடத்தே யாயிற்று(க்) கேட்டது" என்பது இருபத்து நாலாயிரப்படி உரை.[149]

சரம சுலோகம் சரணாகதியை விதிக்கிறது. அதில் விருப்புடையார் நினைவு கூர்தற்குரியது துவயம் என்பர்.[150] சில பாக்களோடு இம் மந்திரத்தை இணைத்துப் பொருள் விளக்கம் செய்துள்ளனர்.[151]

உயிரியல்

உயிரின் இலக்கணம்

இறைவனைப் போலவே என்றும் உள்ள பொருள் உயிராகும்.[152] அதனை வெட்டவோ எரிக்கவோ முடியாது.[153] இவற்றோடு நனைக்க முடியாது, உலர்த்த முடியாது என்ற கிதையில் குறிக்கப் பெறுவதும் கருதத்தக்கது.[154] அஃது இறைவனுக்கு உடலாய் அமைவது.[155] அஃது அறிவு, இன்பம் ஆகிய இலக்கணங்களை (ஜ்ஞாநாநந்த லக்ஷணமாய்) யுடையது.[156] உயிர் பண்பி அறிவாகவும் (தர்மிஜ்ஞாநம்), பண்பறிவு (தர்மபூதஞானம்) உடையதாகவும் இருப்பதாகும். உயிர் அறிவாய் இருக்கிறது. அது பண்பி அறிவாகும்; உயிர் அறிவினை இயல்பாய் உடையது. அது பண்பு அறிவு ஆகும்.[157] அதற்கு அறிவற்ற பொருள்களின் சேர்க்கையால் அறியாமை தொடக்கமானவை வந்து சேர்கின்றன.[158] அவை உயிர்க்கு இயற்கையாக உள்ளவையல்ல; வந்தேறிகள் (ஆகந்துகம்). அரச குமரன் வேடன் கையிலே அகப்பட்டுத் தன்னை வேடனாக மயங்குமாறு போல வினையடியாய் உண்டாகும் அறிவற்ற பொருள்களின் கூட்டுறவால் உயிரும் தன்னை அறிவற்ற பொருளோடு ஒப்பக் கருதுகிறது.[159] அதற்குப் பிறப்பும் இறப்பு

---

149. 2.3.8-24.
150. தி.மா.38.
151. பாவை, 26-6; 5.10.11-36; 4.1.4-36.
152. க.நு.சி.5, நம்பிள்ளை.
153. 5.10.1-36; 3.2.10-36.
154. கிதை, அத்யாயம், 2, சுலோகம், 24.
155. அம.6, அழகு.
156. 1.1.10-36; தி.வி.95.
157. பெரி.தி.5.2.1
158. மு.தி.59.
159. பெ.தி.1.9.6; தி.வி.95.

மில்லை.[160] இப்படிப் பிறப்பும் இறப்புமின்றி அழிவில்லாதிருக்கும் உயிர் நுண்ணிய உடலோடு பருவுடலில் நுழைவதே பிறப்பு என்று குறிக்கப்படுகின்றது.[161] இவ்வுடம்பு, பேற்றினை அடைவதற்குத் துணையாகப் படைக்கப்பட்டதாகும்.[162] உயிர்க்கு நல்வினை (புண்யம்) தீவினை (பாவம்) களுக்கேற்ப வெவ்வேறு பிறப்புகள் அமைகின்றன. நல்வினை தேவ உடம்பிலே புகவிட்டு நலியும்; தீவினை விலங்கு தாவரங்களிலே புகவிடும்; நல்வினை தீவினை இரண்டும் மனித உடம்பிலே புகவிடும்.[163] உடல் தொடர்பு நீங்கப்பெற்ற உயிர் இறைவனுக்குக் கௌத்துவ மணி போல உகப்பான பொருளாகின்றது.[164] இறைவனுக்கு அடிமையாய் இருக்கும் தன்மையே உயிர்க்கு மேலான இலக்கணமாகும்.[165]

மூவகை உயிர்கள்

உயிர்கள் எண்ணிறந்தன.[166] அவை முத்திறத்தில் அடங்கும். நிலைபெற்றவர் (நித்யர்), வீடுற்றவர் (முக்தர்), கட்டுற்றவர் (பத்தர்) என்பவை அம்முப்பிரிவுகளாகும். "பத்தரும், முக்தரும், நித்யருமான த்ரிவித சேதநரும்" என்பது நஞ்சீயர் உரை.[167]

நிலைபெற்றவர் (நித்யர்)

இவர்கள் பிறவி என்பதே இல்லாதவர்கள். உலகியல் வெக்காயம் தட்டாதவர்கள்.[168] தொழுகையே பொழுது போக்காக இருப்பவர்கள்.[169] இறைத்தொண்டில் தலைவராக விளங்குபவர்கள்; தழைத்த அறிவும் இறையன்பும் (பக்தி) உடையவர்கள்.[170] திருநாட்டில் பெருமானோடு என்றும் உறைபவர்கள். இறைநுகர்ச்சி மாறினால் முடியும்படியான இயல்பினர். இவர்களுக்கு என்றும் வயது இருபத்தைந்தேயாகும்.[171]

வீடுற்றவர் (முக்தர்)

இவர்கள் ஒரு காலத்தில் குற்றமுடையவராய் இருந்து பின்னர் விடுபட்டவர்கள். அதாவது உலகியற் சேறு தோய்ந்து

---

160. பெ.தி1.1.1.
161. பெ.தி.9.7.6.
162. 3.7.8-36.
163. 5.1.6-24.
164. தி.மா.13.
165. பாவை, 9-6.
166. திருவா.4.
167. 8.1.1-9.
168. தி.வி.16; 9.3.4-24,36.
169. நா.தி.4.1.
170. நான்.தி.89.
171. தி.நெ.தா.23; மு.தி.73.

கழுவினவர்கள்.[172] பின்னர், வைகுந்தத்தில் உறைபவர்கள். பிறவாத நிலைபெற்றவரைப் போல இவர்களும் மேலுள்ள காலமெல்லாம் பெருமானின் ஒப்பற்ற உருவத்தினையே எப்பொழுதும் நுகர்ந்த வண்ணம் இருப்பவர்கள்.[173] இவர்கள் திரள்திரளாக இறைநுகர்ச்சி பண்ணி அதற்குப் போக்குவீடாக இசைப்பா (ஸாமகானம்) இசைத்துக் களிப்பவர்கள்.[174]

கட்டுற்றவர் (பத்தர்)

பிறவியில் கட்டுண்டு உழல்பவர் கட்டுற்றவராவர். இவர்கள் இவ்வுலகில் பிறந்து இம்மையில் நல்வினை தீவினை வடிவத்தில் வினைகளை ஈட்டியும், மறுமையில் துறக்கம், நரகம் ஆகிய வற்றிலே அவற்றிற்குரிய பயன்களை நுகர்ந்தும் போக்குவரவு பண்ணித் திரிவோராவர்.[175] (துறக்கம் அளவுக்குட்பட்ட இன்பத்தையுடையதாகவும், நரகம் கலப்பற்ற துன்பம் நிறைந்த தாகவும் குறிக்கப்படுகின்றன.)[176]

இன்பத்திற்கும் உயிர் இறையடிமை என்னும் உணர்ச்சிக்கும் எதிர்த்தலையான[177] இவ்வுலகில் பிறந்து கட்டுநிலையிலிருப் போர் ஐம்பொறிகளுக்குக் குடிமக்களாய்[178] இருப்பவர்கள். உழக்காலே அளப்பது போலச் சிலவற்றை மட்டும் பற்றக் கூடிய இந்திரியங்களாலே உலக இன்பத்தை நுகர்வதே பணியாய்ச் செல்பவர்கள்.[179] இறைவனைக் காணாக் கண்ணராய் (விமுக ராய்)[180] இருப்பவர்கள். இவர்களுக்கு உலகத்தொடர்பு, தம்மை யும் இறைவனையும் குறித்துக் குறையறிவினையும் இறை நுகர்ச்சியில் குறைவினையும் விளைக்கின்றது.[181] அத்தொடர் பால் திரிபுணர்ச்சியினை (விபரீதஜ்ஞாநம்) யுடையவராய், இறைவனை விடுத்துப் பிற பயன்களை நாடுகின்றனர்.[182] உடலையே உயிராகக் கருதி அதன்மீது பற்றுக் கொள்கின்றனர். இவர்களுக்கு அறிவுத்தெளிவு பிறந்தால் அதுலே நோயாகத் தோன்றும்.[183]

172. நா.தி.8.9.
173. தி ச.வி.17,24.
174. தி.மா.14,32.
175. தி.மா.0.
176. 2.8.10-36.
177. 8.1.9-24.
178. தி.மா.13.
179. 4.9.10-24.
180. தி.ச.வி.84.
181. தி.ச.வி.102.
182. தி.ச.வி.45.
183. தி.ச.வி.97.

பேற்றியல்

மனிதனால் விரும்பப்படுவது பேறு எனப்படும். ''புருஷன் அர்த்திக்கக் (விரும்பக்) கொடுக்குமதிறே புருஷார்த்தமாவது'' என்று இதனை வேறு வகையில் இறைவனோடு சார்த்தி விளக்கு கிறது ஈடு.[184] இறைவழிபாட்டின் பயனாக அமையும் பேறுகள் மூன்று. அவை பொருட்பேறு, உயிர்ப்பேறு, இறைப்பேறு என்பவையாகும்.[185]

பொருட்பேறு

பொருள்கள் நிலையற்றவை; எப்பொழுதும் விகாரப் பாட்டுக்கு இருப்பிடமாய் இருப்பவை; மிகவும் தண்ணியவை; அறிவும் தகுதியும் அற்றவை. அவை இன்பம் பயப்பனவுமல்ல[186] மாறாக, அவற்றால் வரும் இன்பம் அறிவு நீக்கத்திற்குக் காரண மாகவும், துயரம் நிறைந்ததாகவும் உள்ளது.[187] அழிவினை விளைப்பதும் ஆகும்.[188]

இத்தகு பொருட் பேற்றினை விழைவோர் 'பொருள் விரும்பி' (ஐச்வர் யார்த்தி) என்று குறிக்கப் பெறுகின்றனர். அவர்கள் 'இழந்த பொருள் விரும்பி', 'புதிய பொருள் விரும்பி' என்று இருவகைப்படுவர். இதனை ''ஆர்த்தன் என்றும் அர்த்தார்த்தி என்றும் ஐச்வர்ய புருஷார்த்தம் இரண்டு முகமாயிறே இருப்பது'' என்னும் திருப்பல்லாண்டு உரையால் அறியலாம்.[189]

மற்ற இரு பேறுகளை நோக்கும்போது இது புன்மை யானதாக (அல்பம்) இருப்பதாகும்.[190]

உயிர்ப்பேறு

தன் உயிரினையே (ஆன்மாவினையே) நுகரும் நுகர்ச்சி உயிர்ப்பேறு (கைவல்யம்) எனப்படும். இப்பேற்றினால் துன்பநீக்கம் (துக்க நிவ்ருத்தி) உண்டாகிறது.[191] இதனால் கிடைக்கும் இன்பம் அளவுபட்டது.[192] இது மண்ணக மக்களால் அறிய முடியாததாய், பொருள் தரும் இன்பத்தைக் காட்டில்

---

184. 4.9.0-36.
185. தி.ச.வி.2.
186. க.நு.சி.5, அழகு.
187. 6.9.9-6.
188. பாவை, 12-6.
189. தி.பல்.5.
190. மு.தி.71.
191. பாவை, 25-3.
192. திருவா.2.

பெருத்தும் இறைநுகர்ச்சியால் கிட்டும் இன்பத்தைப் பற்ற மிகப் புல்லியதாகவும் இருப்பதாகும்.[193] இப்பேற்றில் இழிந்தோர் இதிலிருந்து மீள்வதில்லை. அவர்களுக்கு இறைநுகர்ச்சி என்றும் கிட்டாமற் போகின்றது. இதனால் இதனைப் பெருங்கேடாகக் கருதுவர்.[194] 'கைவல்யரூப மஹாநர்த்தத்திலும் புகாமே'[195] என்று பிள்ளான் இதனைக் குறித்தல் காணலாம். இப்பேற்றினை நுகரும் இடம், நான்முகன் முதலானோர் உலகத்திற்கு மேலே திருநாட்டிற்கு வெளியே இருப்பதாகச் சொல்லப்படுகின்றது.[196]

இப்பேற்றினை விரும்புவோர் 'உயிர்விரும்பி' (கேவலர்) என்று குறிக்கப்பெறுவர். "அவனையே (இறைவனையே) உபாய மாகப் பற்றித் தூறு மண்டின சரீரத்தை அறுத்துக்கொள்ளும் அடியாருண்டு—கேவலர்" என்று இவர்களைக் குறித்து விளக்கம் தருகிறது ஈட்டுரை.[197]

பொருட்பேறும், உயிர்ப்பேறும் 'யான்' என்னும் செருக்கு, 'எனது' என்னும் பற்று ஆகியவற்றின் ,விளைவுகளாகும்.[198] "சங்காயமாவது (ஆனைப்புல்லானது) பயிர்தன்னிலே யுண்டாய் அறியாதார்க்குப் பயிர்போலே ப்ரதிபாஸித்து (தோற்றி) அச்சங்காயம் வாரிப் பொகடாதபோது நெல் பதர்க்கும்படியா யிருப்பதொன்று; அப்படியே கைவல்யமும்"[199] என்று வரும் குறிப்பு இப்பேற்றின் புன்மையைத் தெரிவிக்கின்றது.

இறைப்பேறு

இறைநுகர்ச்சியே வாழ்ச்சி (பகவதநுபவம் உஜ்ஜீவநம்).[200] இறைவன் பக்கல் பண்ணும் நற்செயல்களே மேலான பேறாகும்.[201] திருமகளோடு கூடியிருக்கும் பெருமானாகிய இரட்டையே (மிதுனமே) அடையத்தக்க பேறு என்கிறார் பெரியவாச்சான் பிள்ளை.[202] மனிதப் பிறவிக்குப் பயன் இறைவனைச் சார்தல் ஆகும் என்கிறது ஈட்டுரை.[203]

மூவகைப் பேறுகளுள், பொருட்பேறு புன்மை நிலையின்மை முதலான குற்றம் உடையதாகையால் தாழ்ந்தது என்றும்,

---

193. 4.9.10-24, 36.
194. தி.பல்.4.
195. 7.5.10-6.
196. பெ.திருவந்.48.
197. 1.5.7-36.
198. தி.பல்.10.
199. 4.2.0-36.
200. 7.1.4-36.
201. தி.பல்.4.
202. தி.ச.வி.118.
203. 3.5.6-36.

உயிர்ப்பேறு, பிறப்பு இறப்பு முதலான ஆறு விகாரப்பாடுகள் அற்றதாய், அளவில்லா இன்ப வடிவாய் இருந்ததேயாகிலும் இறைவனுக்கே உரிய நற்பண்புகள் (கல்யாண குணங்கள்) இன்மையாலே இடைப்பட்டது என்றும், இறைவனும் இறையடியார்களுமே உயர்ந்த பேறுகள் என்றும் நஞ்சீயர் தெரிவிப்பர்.[204]

இவ்வுலகில் இறைநுகர்ச்சி உண்டானாலும் அஃது ஒரு காலத்தில் மட்டுமே கிட்டுவதாகும் (காதாசித்கம்). இவ்வுலக வாழ்வு நீங்கப்பெற்ற பின்பே முழுமையாக இறைவனுக்குத் தொண்டு புரிதல் வாய்க்கும்.[205] அத்தொண்டு இறைவனை அடையும் நெறியினை மேற்கொண்டு பிறப்பொழிந்து அர்ச்சிராதி மார்க்கத்திலே போய்ச் செயற்கை கடந்த (அப்ராக்ருத) திருமேனியைப் பெற்று, நலமந்தமில்லதோர் நாட்டில் நிலை பேறுற்றவருடனும் வீடுற்றவருடனும் கூடிச் செய்யப்படுவதாகும். திருநாட்டை அடைவதிலும் அங்குச் செல்லும் நெறி இன்பம் நிறைந்ததாக இருக்கும் என்பர்.[206]

இறைவனுக்குத் தொண்டு செய்வது பேற்றின் தொடக்கமாகவும், இறையடியார்களுக்குத் தொண்டு செய்வது பேற்றின் எல்லை நிலமாகவும் அமைகின்றன. இறைவனுக்கு அடிமையாய் இருத்தல் என்பது இறையடியார்க்கும் அடிமையாய் இருத்தல் வரை செல்வது என்பது மறைகள் சொல்லும் உட்பொருளாகும் என்பர்.[207] இறைவனைச் சார்ந்து நான்முகன் உலகு தொடக்கமான செல்வங்களைக் கொண்டு மீளலாம்; ஆனால் இறையடியார்களைச் சார்ந்து மீள்வது என்பதில்லை.[208]

இறைவனைத் தவிர ஏனைய பேறுகளை விழைவோரைப் 'பிற பயன் வேண்டுவார்' (ப்ரயோஜநாந்த்ரபரர்) என்றும் இறைவனையே விழைவோரைப் 'பிற பயன் வேண்டாதார்' (அநந்யப்ரயோஜநர்) என்றும் குறித்தல் மரபு.[209]

ஆற்றியல்

பேற்றினை நல்குவது எதுவோ அதுவே ஆறு ஆகும். "யாதொன்று உபேயத்தைத் தரவற்று, அதிறே உபாயம்" என்பர் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்.[210]

---

204. க.நு.சி.0,நஞ்சீயர்.
205. நா.தி.10.2.
206. பாவை, 8.6.
207. க.நு.சி,9, பெரி,
208. 3.7.6-36.
209. தி.பல்.4.
210. பாவை, 12.6.

இறைவனை அடைதற்குரிய வழிகள் பல. அவை செயல்நெறி (கர்மயோகம்), அறிவுநெறி (ஞானயோகம்), அன்புநெறி (பக்தி யோகம்), அடைக்கல நெறி (சரணாகதி) ஆசிரியப்பற்று (ஆசார்யாபிமானம்) என்பவையாகும். இவற்றைப் பற்றிய விளக்கம் நம்பிள்ளையால் 'அகலகில்லேன்' பாசுர உரையில் தரப்பட்டுள்ளது.[211]

செயல்நெறி

செயல்நெறியாவது, உயிரை உள்ளபடி அறியும் அறிவை முதலில் பெற்று, (அதாவது இறைவன் உயிர்; அவனொழிந்த மற்றப் பொருள்களும் உயிர்களும் அவனுக்கு உடல்) தன் சாதிக்கும் தன் நிலைக்கும் தக்கதாய் விதிக்கப்பட்ட செயலை, விளைவில் விருப்பம், 'நாம் செய்கிறோம்' என்னும் எண்ணம், பற்று ஆகியவை இன்றி இறைவனுக்குச் செய்யும் வழிபாடு என்னும் நினைவோடு செய்வதாகும். இப்படிச் செயல் செய்யவே தடையான தீவினை அழிந்து மனம் மலமற்றுத் தன்மை விளக்கம் (சொரூபப்ரகாசம்) உண்டாகும்; அதனால் இறைவனை அறியும் அறிவும், அவனிடத்தில் விருப்பமும் பிறந்து, பின்னர் மேலான அன்பு (பரபக்தி), மேலான அறிவு (பரஜ்ஞாநம்) மிக்க மேலான அன்புகளாக (பரமபக்தி) மாறிப் பேற்றினை நல்கும்.

இந்நெறி செய்தற்கரியது. மந்திரக்குறை (மந்த்ரலோபம்), செய்முறைக்குறை (க்ரியாலோபம்), உரியபொருட்குறை (த்ரவ்ய லோபம்), காலமாறுபாடு (காலபேதம்), தெய்வ வேறுபாடு (தேவதாவ்யத்யயம்) என்பவற்றில் ஒன்று உண்டாயினும் பயனின்றிப் போவதாகும்.[212]

அறிவுநெறி

பொறிகளை அடக்கி நெறிப்படுத்தித் தன்மையை உணர்ந்தால், இறைவனை அறியும் அறிவும் அவனைக் குறித்து அன்பும் பிறக்கும்; அவை பிறக்கவே, மேலான அன்பு, மேலான அறிவு, மிக்க மேலான அன்பு ஆகிய பிறந்து பேற்றினை அடைவிக்கும்.

ஐம்பொறிகளை வருத்திக் கொள்வதாக அமைவது இந்நெறி. "இந்த்ரியோபரதி ரூபமான ஜ்ஞாநயோகம்" என்பர் பெரிய வாச்சான் பிள்ளை.[213]

---

211. 6.10.10-36.
212. தி.மா.25.
213. தி.ச.வி.76.

அன்புநெறி

அன்பு நெறியாவது, செயல், அறிவு இரண்டனையும் இறைவனுக்காக்கி, மேலான அன்பு, மேலான அறிவு, மிக்க மேலான அன்பு ஆகியவற்றை எய்தி, பேற்றினைக் கிட்டுவ தாகும். சுருங்கச் சொல்லின் செயல் அறிவுகளின் துணை கொண்டு வளர்க்கப்பட்ட அன்பால் (ப்ரவ்ருத்தமான பக்தி யாலே) இறைவனை அடைவதாகும்.[214] இதுவே 'சாதனபக்தி', 'உபாய பக்தி' எனப்படும்.

இவ் அன்பு வேறு; அடைக்கல நெறியில் தன்னடையே வரும் அன்பு (பக்தி) வேறு. அது 'சாத்ய பக்தி', 'பல பக்தி' எனப்படும். இதனைக் கீழ்வரும் பெரியவாச்சான் பிள்ளை உரைப்பகுதியால் அறியலாம்.

''பக்தி ப்ரபத்திகள் இரண்டுக்கும் வாசியறுத்தார்களும், விக்ரஹமே உத்தேச்யம் என்னும் இடத்தை வெளியிட்டார்களும் ஆழ்வார்களிறே. இப்பக்திதான் கர்த்தவ்யமாய் ஸாதநபுத்யா பண்ணுகையன்றிக்கே தன்னடையே தவிர ஒண்ணாதாய் வருமது என்றும் விக்ரஹத்துக்கு அவ்வருகு கேட்டமன்று என்றும் அறியும்படி பண்ணினார்கள் இவர்களிறே."[215]

இதனால் வழியாகக் கொள்ளப்பெறும் அன்பு நெறி (பக்தி யோகம்) வேறு என்பதும், வழியாகக் கருதப்பெறாத (பேறாகக் கருதப்பெறும்) அன்புக்கும் (பக்திக்கும்) அடைக்கல நெறிக்கும் (ப்ரபத்திக்கும்) வேற்றுமை இல்லை என்பதும் விளங்குகின்றது.

அடைக்கல நெறி (ப்ரபத்தி)

இறைவனை ஆறாகவும் பேறாகவும் கொண்டு அவன் திருவடிகளில் தஞ்சம் புகுவது அடைக்கல நெறியாகும். "தன் ஆகிஞ்சந்யத்தை (தன்னுடைய வெறுமையை) முன்னிட்டு நீயே உபாயமாக வேணுமென்று அபேக்ஷிக்குமத்தைச் சரணாகதி யாகச் சொல்லாநின்றது" என்னும் பெரியவாச்சான் பிள்ளை உரை இதனைத் தெரிவித்தல் அறியலாம்.[216] இங்கு, "ப்ரார்த்தநாமதியிறே சரணாகதியாகிறது" என்னும் நம் பிள்ளை கூற்றுக் கருதற்குரியது.[217] மற்ற நெறிகளில் ஆறும் பேறும் வெவ்வேறாக உள்ளன. இந்நெறியில் இரண்டும் ஒன்றாக அமைகின்றன.[218]

---

214. தி.ச.வி.77.
215. நா.தி.13.5.
216. பெ.தி.2.6.0.
217. 6.8.1-36.
218. பாவை, 13-6 (6.3.0-36 காண்க).

பிற வழிகளை விடுத்துத் தன்னையே வழியாகப் பற்றினார்க் கல்லது மற்றையார்க்கு அவன் அறியக் கூடியவனல்லன் என்பர்.[219] "அம்மி துணையாக ஆறிழிகையிறே இவனை (இறைவனை) விட்டு உபாயாந்தரத்தைப் (வேறுவழியைப்) பற்றுகை" என்பது நம்பிள்ளை கூற்று.[220] பிற வழிகளை (ஸாத்ய தர்மங்களை) மேற்கொண்டால் பயன்தரும் காலத்தில் அவன் கைபார்த்திருக்க வேண்டும். அவனையே வழியாகக் கொண்டால் வேறொன்றைத் தேட வேண்டுவதில்லை.[221]

"இவன் (மனிதன்) பார்க்கும் உபாயம் (வழி) இவனுக்கும் கழுத்துக்கட்டியாம். அவன் காட்டும் உபாயம் அவனுக்கும் காற்கட்டாம். இதிறே உபாயத்தில் அடிப்பாடு" என்று மற்ற நெறிகளிலும் இறைவன் காட்டும் நெறியின் மேன்மை துலக்கப் படுகிறது.[222]

இந்நெறிக்கென்று புதிதாக எத்தூய்மையினையும் தேட வேண்டா. இறைவன் உறவொழியத் தனக்கொரு தூய்மை தேடுவது தூய்மையற்றவனாம் முயற்சியாகும். இறைவன் தொடர்பைச் சிந்திப்பதொழிய வேறு தூய்மையில்லை. வீடணன் கடல்கடந்து வருங்கால் ஒரு முழுக்கிட்டுவந்து இராமபிரான் திருவடிகளைப் பற்றவில்லை; அருச்சுனன் போர்க்களத்தின் நடுவே நீராடி நின்று சரமசுலோகம் கேட்கவில்லை; திரௌபதி யும் நீராடிப் பின்னர் அடைக்கலம் புகுந்தாளல்லள். ஆகையால் இந்நெறிக்கு ஒரு தூய்மையும் வேண்டா; தூய்மையின்மையை ஈட்டவும் வேண்டா நின்ற நிலையே அமையும்.[223]

இவ்வடைக்கல நெறியில் எக்கட்டுப்பாடும் இல்லையெனினும், அடைக்கலம் தருவோன், அடைக்கலம் புகுவோன் ஆகிய இருவரும் சில இலக்கணங்களை யுடையவராய் இருத்தல் இன்றி யமையாதது. அடைக்கலம் தருவோன் 'சரண்யன்' என்றும், அடைக்கலம் புகுவோன் 'சரணாகதன்' என்றும் குறிக்கப் பெறுவர். இவர்களுள் அடைக்கலம் தருவோன் எல்லையற்ற இன்பனுமாய், உரியவனுமாய், பகையினை அழிப்பவனுமாய், எல்லோர்க்கும் எளியவனுமாய் இருத்தல் வேண்டும் என்பதும் அடைக்கலப் புகுவோன், வேறு புகலின்மை (அநந்யகதித்வம்), பேற்றில் விருப்பம், தன்மை விளக்கம் (ஸ்வருபப்ரகாசம்) ஆகியன

---

219. தி.மா.22.
220. 2.7.3-36.
221. தி.மா.6.
222. 6.3.3-36.
223. பாவை, 5-6.

உடையவனுமாய் இருத்தல் வேண்டும் என்பதும் இலக்கண மாகும்.[224] மேலும் இறைவனை நெறியாகக் கொள்ளுங்கால் வேறு நெறிகளோடு தொடர்பு கூடாது. இறைநெறி வேறு நெறியினைப் பற்றுவதைப் பொறாத இயல்பினதாகும்.[225]

இந்நெறி மேற்கொண்டார் இறைவனது காத்தற்றன்மையை யும், தனது அடிமைத்தன்மையையும், அவனைத் தான் அடைய முடியாதவாறு தகையும் பகையின் கனத்தையும் உணர்ந்து வாளா இருத்தற்குரியர். அவர்களுக்குப் பேற்றினை அடைவதில் காலக்கழிவு நேரிடக் காரணமில்லை. எனினும் பேறு பிற்படுகிறது. அதனால், அதனை விரைந்து பெறவேண்டும் என்னும் துடிப்பாலே பதறுவர். அப்பதற்றம் இல்லாது போயின் அவர்கள் அறிவற்ற வராய் ஒழிவர். ஆதலால் அவர்கள் துடிப்போடிருத்தல் பொருத்தமேயாகும். அவர் தம் செயற் கூட்டம் (க்ரியாகலாபம்) தொண்டிலும், அறிவு தனது தன்மை இறைவன் தன்மை ஆகிய வற்றிலும் (ஸ்வரூபத்திலும்), இறையன்பு பேற்றின் சுவையிலும் ஈடுபட்டிருக்கும் என்பர்.[226]

அன்புநெறி (பக்தி) அந்தணர், அரசர், வணிகர்களென்னும் மூக்குலத்தோர்க்கு உரியது என்றும், அடைக்கல நெறி எல்லோர்க்கும் உரியது என்றும் கூறுகிறது ஈடு.[227]

எந்நெறியினை மேற்கொண்டாலும் இறைவனே பயன்தரும் வழியாய் அமைகின்றான். பிறபயன் விழைவோர்க்குப் பிற பயனைத் தருபவனாகவும் தன்னையே பற்றினார்க்கு நேரே வழியாகவும் அமைகிறான் (அவ்யவஹிதோபாயமாம்). இதுவே வேறுபாடு.[228]

ஆசிரியப் பற்று

மேற்கூறிய நான்கு வழிகளையும் மேற்கொள்ள ஆற்றலற்ற வனாய் இருப்பவனுக்கு ஆசிரியன் திருவடிகளே தஞ்சமாகும்.

ஆசிரியன் இறைவனைப் பெறுவதற்குத் துணையாய் நிற்கிறான். அவன் முதலில் அறியாதனவற்றை அறிவிக்கிறான். பின்னர் இறைவன் குணங்களிலே ஈடுபட்டு அவற்றைத் துய்க்கும் போது உசாத்துணை யாகின்றான். மேலும், இறைவனைக் கிட்டுகைக்குச் சேர்த்து வைப்போனாகவும் (புருஷகாரபூதனா

---

224. 6.10.10-36.
225. தி.நெ.தா.10; பெ.தி. 2.6.0.
226. பாவை, 10-3,6.
227. 10.4.0-36.
228. 10.4.10-24,36.

கவும்) பேற்றுநிலையில் தொண்டினை வளர்ப்பவனாகவும் (ஸாத்யவிவ்ருத்தி) அமைகின்றான். இவ்வகையால் எல்லாம் ஆசிரியன் கொள்ளத்தக்கவன் ஆகிறான்.[229] இதனாலேயே "ஆசார்யாபிமானமே உத்தாரகம்" என்று ஆசிரியப் பற்றினைப் போற்றுகிறது ஸ்ரீவசனபூஷணம்.[230]

சந்தி (புருஷகாரம்)

இறைவனை அடைய அவன் திருவடிகளைப் பற்றும்போது யாரேனும் ஒருவரை முன்னிட்டுக் கொண்டு பற்றல் வேண்டும் என்பது வைணவர் கொள்கை. கட்டற்ற இறைவனோடு தவறிழைத்த அடியவனை இடைநின்று கூட்டுவிப்போர் 'சந்தி செய்வோர்' (புருஷகாரம் செய்வோர்) என்று குறிக்கப்பெறுவர். சிவன் மார்க்கண்டேயனுக்கும்,[231] சீதை இலக்குவனுக்கும்[232] சந்தி செய்விப்போராக அமைந்தனர் என்னும் குறிப்பு உரையில் காணப்படுகின்றது. நப்பின்னைப் பிராட்டி சந்தி செய்விப் போளாகக் குறிக்கப்பட்டுள்ளாள்.[233] திருமகள், மண்மகள், ஆய்மகள் மூவரும் சந்தி செய்விப்போராக விளங்குவதனை, முறையே 'எவர் குற்றம் செய்யாதவர்' என்பாரும், 'குற்றத்தை உணருகிறதென்? பொறுக்குமித்தனையன்றோ?' என்பாரும், முதலிலே குற்றங் காணாதபடி தன் இனிமையை முன்னிடுவாரும் அங்கே உண்டென்பார்கள் என்றும் வரும் உரைப்பகுதி தெரிவிக்கின்றது.[234]

இவ்வாறு பலர் சந்தி செய்விப்போராகத் தெரிவிக்கப்படினும் திருமகளே அச்சிறப்பினை இயல்பாக உடையவள் என்று போற்றப் பெறுகிறாள்.

பிராட்டியை முன்னிட்டுக்கொண்டு பெருமாளைப் பற்றியவர் பேறு பெறுவர் என்பதும், அவளை விடுத்துப் பெருமாளைப் பற்றுவோர் இகழ்ச்சிக்கு ஆளாவர் என்பதும் இராமாயணத்தைக் கொண்டு நிறுவப்படுகின்றன. சீதையை முன்னிட்டுக் காகமும், அவள் அணிகலன்களை முன்னாகக் கொண்டு சுக்கிரீவனும் பெருமானை அடைந்து பேறு பெற்றனர். அனுமன் முன்பே இராமனுக்கு அடிமை புக்காலும், தன்மைக்குத் தகுந்த பயன் பெற்றது, இலங்கை சென்று பிராட்டியைப் பற்றிய பின்பேயாகும்.

---

229. க.நு.சி.11, நம்பிள்ளை, பெரி.
230. ஸ்ரீவசன பூஷணம் சூத்திரம், 250.
231. 7.5.7-24.
232. 6.10.0-24.
233. 1.7.11-36.
234. 8.3.1-36.

சந்தி செய்விப்பவளான பிராட்டியைப் பேரவைத்து உண்ணவந்த சூர்ப்பணகை துறையறியாமல் துன்புற்றாள்; பிராட்டியை முறை தவறிப் பற்றிய இராவணன் முடிந்து போனான். இருவரையும் சேரப் பற்றிய வீடணன் அல்லல் தீர்ந்து வாழ்ந்து போனான்' ஆதலால் பெருமானுடைய அருளை அதற்கு அடியான பிராட்டியை முன்னிட்டுப் பெறுதலே பெருஞ்சிறப்பும் தக்கதும் ஆகும்.[235] பிராட்டியோடு கூடிய பெருமானே பற்றுதற்கும் இன்ப நுகர்ச்சிக்கும் உரியவனாவான் என்பதனை, "ஆச்ரயண வேளை யோடு போக வேளையோடு வாசியற ஒரு மிதுநமாக ஆச்ரய மாயிறே இருப்பது" என்னும் தொடர் நன்கு விளக்குதல் காணலாம்.[236]

பகையியல்

இறைவனை அடைய விடாமல் மனிதனைத் தகைவனவற்றைப் பகை (விரோதி) என்பர். அவை இயற்பகை (ஸ்வரூப விரோதி), சார்புப் பகை (ஆச்ரயண விரோதி), நெறிப்பகை (ஸாதந விரோதி), பேற்றுப் பகை (ப்ராப்ய விரோதி), துய்ப்புப் பகை (போக விரோதி) என்று ஐவகைப்படும். "என்னுடைய ஸ்வரூப விரோதியையும், ஆச்ரயண விரோதியையும், உபாய விரோதியை யும், உபேய விரோதியையும், போக விரோதியையும் போக்கி, ஸ்வரூபாநுரூபமான கைங்கர்யத்தைக் கொண்டது..." என்னும் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் உரைப்பகுதி[237] இவ் ஐந்தினையும் சுட்டிச் செல்வது காணலாம். இவரே திருப்பாவை உரையில் இவற்றை நான்காகச் சுட்டிச் செல்வது கருதத்தக்கது. "ஸ்வரூப விரோதியும் ஸாதந விரோதியும், ப்ராப்தி விரோதியும், ப்ராப்ய விரோதியுமென்று நாலு வகை யாயிறே விரோதிகளிருப்பது" என்பது அவரது கூற்று.[238]

இயற்பகை (ஸ்வரூப விரோதி)

உடம்பினை உயிராகக் கொள்வதும், இயற்கையிலேயே இறைவனுக்கு அடிமைப்பட்ட உயிரினைத் தன்வழிப்பட்டதாக நினைப்பதும் இயல்புக்குப் பகையாகும்.[239] "'ம:' என்றிருக்கை யாய்த்து ஸ்வரூப விரோதி" என்பது மணவாள மாமுனிகள் கூற்று.[240] உயிரினைத் தன்வழிப்பட்டதாக நினைத்தல் 'உயிர்க்

---

235. பாவை, 17-6.
236. தி.நெ.தா.14.
237. அம.5, அழகு.
238. பாவை, 29-6.
239. தி.பல்.11.
240. பெரி.தி.4.3.8.

களவு' (ஆத்மாபஹாரம்) ஆகும்.[241] இறைவனின் தலைமைத் தன்மை பற்றிய அறிவு இன்மையும் (பகவத் பரத்வஜ்ஞானம் இல்லாமையும்), தன்னைத் தனக்குரியவனாக நினைத்தலும் (ஸ்வஸ்வாதந்தர்ய ப்ரதிபத்தியும்) உலக வாழ்வுக்கு (ஸம்ஸாரத் துக்கு) விதைகளாகக் கருதப்படுகின்றன.[242]

சார்புப்பகை (ஆச்ரயண விரோதி)

பிற தேவர்களைத் திருமாலைக் காட்டிலும் மேலான இறைவனாக - பரம்பொருளாகக் - கருதுவதும், இறைவழி பாட்டிற்குப் பயன் இறைவனை அடைதலை யொழிந்த பிற என்றிருத்தலுமாகும்.[243] பெருமானிடத்தில் அவனைத் தவிர வேறு பயனை விரும்புவது கற்புடைய பெண்ணொருத்தி கணவன் பக்கல் பரத்தமையை (விபசாரத்தை) விரும்புவது போன்றது என்பர்.[244]

நெறிப்பகை (ஸாதந விரோதி)

செயல், அறிவு, இறையன்பு (கர்ம ஞான பக்திகள்) ஆகிய வற்றை நெறியாகக்கொள்வதும்,[245] இறைவனையே நெறியாகப் பற்றினும் தான் பற்றும் பற்று வழியென்னும் நினைப்போடு பற்றுவதும் குற்றமாகும்.[246] இவ்விரண்டும் முறையே பிணத்தைத் தொடுவது போலவும் (சவஸ்ப்ருஷ்டம் போலேயும்) இழிந்த தனைத் தொடுவது போலவும் (நீசஸ்பர்சம் போலேயும்) ஆகும் என்பர்.[247]

பேற்றுப்பகை (ப்ராப்ய விரோதி)

பேற்று நிலையில், பொருள் உயிர் நுகர்ச்சிகளை (ஐச்வர்ய ஆத்மாநுபவங்களை) விரும்புவதும், இறைவனுக்குச் செய்யும் தொண்டு தன் இன்பத்திற்காக எனக் கருதுவதும் பகைகளாக அமைகின்றன. இவ்விரண்டும் முறையே நச்சுச் சோறு போலவும் (விஷ போஜநம்), எச்சிற்சோறு போலவும் (உச்சிஷ்டாசநம்) அழுக்குடையனவாகக் கருதப்படுகின்றன.[248] இறைவனையும் மற்ற இழிந்த பொருள்களையும் ஒக்க உகத்தல் அமுதத்தினையும்

---

241. க.நு.சி.5, அழகு.
242. 4.10.0-24.
243. தி.பல்.11.
244. தி.பல்.11.
245. தி.பல்.11; பாவை, 29-6.
246. பாவை, 29-6.
247. பாவை, 29-6.
248. பாவை, 29-6.

நஞ்சினையும் ஒக்க விரும்புவது போன்றதாகும் என்பர்.[249] இப்பகையற்ற பேற்றினை, "உலகில் இருவராய்க் கலவாநின்றால் இருவர்க்கும் உண்டாகும் இன்பச்சுவை ஆண்டான் அடிமைகள் பரிமாற்றத்திலும் உண்டு; ஆனால், ஆண்டவனுக்கு இனியதாய், அவ்வழியாலே தனக்கு இனியதாய் இருத்தலே அடிமை துய்க்கும் இன்பச் சுவையில் காணப்படும் வேறுபாடு" என்று ஈடு விளக்கு கின்றது.[250]

துய்ப்புப் பகை (போக விரோதி)

இவ்வுலகத் தொடர்பு (ப்ரக்ருதி ஸம்பந்தம்) துய்ப்புப் பகை யாகும். இதனைப் "போக விரோதியான ப்ரக்ருதி ஸம்பந்தத்தை அறுத்து, உன் திருவடிகளிலே அழைத்தருள வேணும்"[251] என்று வருவது கொண்டு அறியலாம்.

இவ்வுரைகளில் பெரும்பாலும் பொதுநிலையில் பகைகளாக இருப்பவை யாவை என்று கூறப்பட்டிருக்கின்றனவே தவிர, அவை வகைப்படுத்திக் கூறப்படவில்லை.[252]

முடிபுகள்

வைணவ உரைகள் தத்துவங்களையும், சமய உண்மைகளை யும் விளக்கும் அரிய கருவிகளாக அமைந்துள்ளன. இவ்வுரை யாசிரியர்கள் தமும்பேறிய சமயப்பற்றும், பழுத்த தத்துவ சமயப் புலமையும் மிக்கவராயினும் தொட்ட தொட்ட இடமெல்லாம் அவற்றையே கூறிச் செல்லாமல் வாய்க்குமிடங்களில் அளவாகக் கூறியுள்ள சிறப்பு எண்ணி மகிழ்தற்குரியதாகும்.

---

249. 2.7.8-36.
250. 3.9.1-36.
251. 5.1.4-24.
252. 1.10.6-36; 2.7.3-36; 4.2.0-36; தி.பல்.11.

முடிவுரை

தமிழிலக்கியத்தில் ஒரு தனிப் பகுதியாக வைணவ உரைகள் திகழ்கின்றன. வைணவ உலகம் முதல் நூல்களை நிகர்த்த சிறப்பினவாக இவ்வுரைகளையும் போற்றிக் கொண்டாடு கின்றது. கற்பனை நயமும் திட்ப நுட்ப ஒட்பங்களும் நிறைந்த இவ்வுரைகள் ஒரு சுவைப் பெட்டகம் எனலாம்.

இவ்வுரைகளைப் பற்றிய ஆய்வினால் சில முடிபுகள் கிடைக் கின்றன. அவை வருமாறு :

1) வைணவ உரைகளின் செழுமைக்கு வித்திட்ட உரை முன்னோடிகள் ஆசாரியர்களே ஆவர். இவ்வுரையாசிரியர் களைப் பற்றிய செய்திகள் பல இவ்வுரைகளில் விரவிக் கிடக் கின்றன. இச்சிறப்புப் பிற தமிழ் உரைகளில் காணப் பெறாதது.

2) திவ்வியப் பிரபந்தங்களைத் தொகுத்த ஆசாரியராகிய நாதமுனிகள் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பெரும்பகுதியிலும் பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர் என்னும் மு. இராகவஐயங்கார் கருத்தே வலுவுடையதாகும்.

3) நாதமுனிகளும் அவருக்குப் பின்னே வந்த ஆளவந்தாரும் 'பெரிய முதலியார்' என்று போற்றப் பெற்றனர்.

4) இராமானுசர் தமிழ்ப் புலமை மிக்கவர். அவரது திவ்வியப் பிரபந்த ஈடுபாடு ஆழமானது. அவர் தம் நெடிய வாழ்வில் திவ்வியப் பிரபந்தங்களுக்கு உரை எழுதாமற் சென்றமைக்குத் தலைவராகிய தாம் எழுதினால் அது வரம்பு கட்டியது போன்று அமைந்து புதிய சிந்தனைகள் பிறக்க இடைச் சுவராகிவிடும் என்று எண்ணிய அச்சமே காரணமாகும்.

5) எம்பார், ஆண்டான், அருளாளப் பெருமாள் ஆகிய ஆசாரியப் பெருமக்கள் சிறிய வடிவத்தராய் இருந்தனர்.

6) இவ்வுரைகளின் செழுமைக்குத் தமிழ்ப் புலவர்கள் சிலரும் துணைபுரிந்துள்ளனர்.

7) இவ்வுரைகாரர்கள் திவ்வியப் பிரபந்த விளக்கச் சொற் பொழிவாளர்களாகவும் இருந்தனர்.

8) பேரறிவும் பெரும்புகழும் நிறைந்த பட்டர் குறை வாழ்வினர் அல்லர். அவர் குறைவாழ்வினர் என்று குறிக்கப் படும் நிலை எவ்வாறு தோன்றியிருக்கலாம் என்பது ஒருவாறு விளங்குகிறது.

9) பெரியவாச்சான்பிள்ளை, ஆச்சான்பிள்ளை இருவரும் வேறானவர் என்னும் அறிஞர் அண்ணங்கராசார்யர் கருத்துப் பொருத்தமானதாகத் தெரிகின்றது.

10) பன்னீராயிரப்படி உரையாசிரியர் வாதிகேசரி அழகிய மணவாள சியர் தமிழ் அறிவு மிக்கவர். அவரே முதன்முதலில் திருவாய் மொழி யாப்புப் பற்றிச் சிந்தித்தவர். அவரைப் பெரிய போதத்'தினராக உபதேச ரத்தின மாலை கூறுவது. முற்றிலும் சரியானதேயாகும்.

11) திருக்குருகைப்பிரான் பிள்ளான் உரையில் எம்பெரு மானாரின் கத்யத் தொடர்கள் விரவியுள்ளன.

12) வடமொழி-தமிழ்மொழி மறைகளை இணைத்தல், வடமொழிப் போக்கில் சொற்றொடர்களைப் பகுத்துக்காட்டல், கற்பனை நயம்பட உரைவகுத்தல், உரையாடற் போக்கில் உரை அமைத்தல், பொருள் விளங்கும் சொற்களுக்கு அவற்றின் பொருளை மூலத்திலேயே கண்டு கொள்ளுமாறு செய்து அவற்றிற்கு நேரான பொருள் கூறாமல் தேவையான வேறு செய்திகளை உரைத்துச் செல்லல், அன்மைநிலை புணர்த்திப் பொருள் விளக்கம் தருதல், சொல் தகுதி காட்டல், பெயர் குறிக்காது 'பொருள்' என்னும் கருத்துப்படும் சொற்களைச் சுட்டாக அமைத்தல், அடுக்கிவரும் அடைகளுக்கு விளக்கம் தருதல், உரைக்கு உரை தருதல், தொடரமைப்புக்கு விளக்கம் கூறுதல், எத்தனை வகைகளில் பொருள் விளக்கம் செய்ய முடியுமோ அத்தனை வகைகளிலும் பொருள் விளக்கம் செய்தல், மதிப்பிடு செய்தல், வடமொழி மேற்கோள்களை விளக்குதல், இதிகாசங்களை இணைத்து எழுதுதல், சுவைக் கூற்றுகள் அமைத்து எழுதுதல் ஆகியவை இவ்வுரைகளின் சிறப்புப் போக்கு களாகும்.

13) இவ்வுரைகளில் காணப்படும் சுவைக் கூற்றுகளும் உவமைகளும் சிறப்பானவை.

14) இவ்வுரைகள் தனியொருவரின் முயற்சியாக அமையாமல் கூட்டு முயற்சியாக அமைந்துள்ளன.

15) இவ்வுரைகளின் மணிப்பிரவாள நடை பிற நூல்களில் காணப்பெறும் மணிப்பிரவாளம் போன்றதன்று. இது பல்வேறு கூறுகள் அமைந்த ஒரு புதுமையான கலவை நடை. இதனை உருவாக்கிக் கொண்டவர்களும் இவர்களே ஆவர்.

16) புதிய பொருள்களில் சில சொற்கள் உரையாசிரியர் களால் பயன்படுத்தப்பட்டுள்ளன. 'பாடு'விகுதி கொண்ட தொழிற்பெயர்கள் பல இவர்களால் படைத்துக் கொள்ளப் பட்டுள்ளன. அரிய தமிழ்ச் சொற்கள் பலவற்றை இவ்வுரைகளில் காணலாம்.

17) இவ்வுரைகளில் காணப்படும் செறிவுத் தொடர்களும் மரபு தொடர்களும் தமிழுக்குக் கிடைத்த புதிய செல்வமாகும்.

18) பேச்சு வழக்குகளில் சகரமாதல், தகரமாதல், றகரமாதல் ஆகியவை பற்றிப் புதிய செய்திகள் கிடைக்கின்றன. நகரமாதல், மகரமாதல், வகரமாதல், ழகரமாதல், ளகரமாதல் ஆகிய கொள்கைகள் புதிதாக இவ்வுரைச் செய்திகளைக் கொண்டு உருவாக்கப் பெற்றுள்ளன.

19) தமிழ்ச் சொற்களோடு 'திரு' என்பதும், வடசொற் களோடு 'திவ்ய' என்பதும், ஆள்கள் பெயர்களோடு 'ஸ்ரீ' என்பதும் பெரும்பாலும் வழங்கப் படுகின்றன.

20) சமய மரபு வழக்குகள் யாவை என்பதும், இராமாயண பாரதப் பாத்திரங்களை வைணவர்கள் குறிக்கும் முறை யாது என்பதும் தெரிய வருகின்றன.

21) 'ஒட்டை' என்பது பேச்சு வழக்கினின்றும் இவர்கள் உருவாக்கிக் கொண்ட புதிய ஆறாம் வேற்றுமைச் சொல்லுரு பாகும்.

22) 'கின்று' இடைநிலையினைப் பயன்படுத்த வேண்டிய இடங்களில் 'கிறு' இடைநிலையினைப் பயன்படுத்தியுள்ளனர். வினையாலணையும் பெயர்கள், வினைமுற்றுகள், வினையெச்சங் கள் ஆகியவற்றில் புதிய அமைப்புகள் காணப்படுகின்றன. இவற்றைக் குறித்து மொழிநூலார் மேலும் ஆராய்தற்கு இடமிருக்கிறது.

23) இவர்கள் வடமொழி வினைச் சொற்களை அப்படியே பயன்படுத்தவில்லை யென்றாலும் வடமொழிப் பகுதிகளோடு தமிழ் ஈறுகளைச் சேர்த்துப் பல சொற்களை ஆண்டுள்ளனர் என்பது கருதத்தக்கது.

24) இவர்கள் தனித் தமிழில் செய்திகளைச் சொல்ல வல்லவர் என்பதும், சமய மரபு வடசொற்களுக்குத் தக்க தமிழ்ச் சொற்கள் பலவற்றைப் படைத்துள்ளனர் என்பதும், வடமொழி யறிவு நிறைந்த குடும்பத்தில் பிறந்த இவர்கள் அம்மொழியில் கொண்ட பற்றினாலும், தம் இயல்புக்குச் சேரவும் இம் மணிப்பிரவாள நடையினை மேற்கொண்டனர் என்பதும் சில இடங்களில் தவிர்க்க இயலாது தமிழ் இலக்கியங்களை மேற்கோள் காட்டிய போதிலும், திருமால் புகழ்பேசும் தமிழ் நூல்களைத் தவிரப் பிறவற்றை மதிப்பார்களா என்பது ஐயத்திற்குரியதே என்பதும் ஆழ்ந்து நோக்கும்போது புலனாகின்றன.

25) இவர்கள் உருவக நடை இருபதாம் நூற்றாண்டின் புதுக்கவிதைக் கவிஞர்களையும் வியப்பில் ஆழ்த்தவல்லது.

26) ஒரிரு பழமொழிகளின் உண்மை வடிவம் உரைகளை ஒப்பு நோக்கும்போது கிடைக்கின்றது.

27) குணமாலைப் பாடியுடையார் காங்கேயர் தெற்கே படையெடுத்துச் சென்றுள்ளார் என்பதும், மூன்றாங் குலோத்துங்க சோழன் அரசியல் தலைவர்களுள் ஒருவன் யாதவ ராயன் என்பதும் புதிய வரலாற்றுச் செய்திகளாகும்.

28) அக்காலத்தில் தீண்டாமைக் கொடுமை உச்ச நிலையில் இருந்தமை புலனாகின்றது.

29) உழவு, மருத்துவம் பற்றி அரிய குறிப்புகள் சில உரை களில் கிடைக்கின்றன.

30) இராமானுசர் நிலைநாட்டிய உடலுயிர்க் கொள்கை வடமொழி மறைகளில் காணப்படும் முரண்பாடுகளை இயைபு படுத்திக் காட்டுவதற்கே யன்றித் திவ்வியப் பிரபந்த பாசுரங்கள் சிலவற்றிற்கு முரண்பாடின்றிப் பொருள் காண்பதற்கும் துணையாய் அமைந்தது.

வைணவ உரைகள் பற்றி மேலும் ஆய்வதற்கு வாய்ப்புகள் நிறைய உள்ளன. ஒவ்வோர் உரை பற்றியும் தனி ஆய்வு, வைணவ உரைகளில் சுவைக் கூற்று, வைணவ உரைகளில் உவமைகள், வைணவ உரைகளில் கற்பனையும் அணிநலமும், மொழிநூற் பார்வையில் வைணவ உரைகள், வைணவ உரைகளும் பிற தமிழ் உரைகளும் ஆகிய தலைப்புகள் இனிவரும் ஆய்வுகளுக்கு நிலைக் களமாகலாம்.

★

பின்னிணைப்புகள்

1. சிறந்த உவமைகளின் தொகுப்பு

அரச வாழ்க்கை

புதுக்கோமுற்றாரைக் கண்டால் நடுங்குமா போலே - தி.வி.13. ராஜாக்கள் கறுப்புடுத்துப் புறப்பட்டால் அந்தரங்கர் அபேக்ஷிததசையிலே முகங்காட்டுகைக்காகப் பிரியத் திரிவர்கள். அது போலே - 1.8.9-36. இன்ன மண்டபத்தே இருந்து நினைப்பிட்டான் என்றால் பின்னை அவன் தன்னாலும் தவிர்க்க ஒண்ணாதாய் இருக்குமா போலே - தி.மா.1. அராஜகமான தேசத்திலே ஆனையைக் கண்ணைக் கட்டிவிட்டால் ஆனை எடுத்தவன் ராஜா ஆமா போலே - தி.வி.1. எல்லா மண்டலங் களும் தங்களுக்கே ஆகவேணும் என்று இருக்கும் ராஜாக்கள் முற்படத் தங்களுக்கு ப்ரத்யாஸந்நரான வன்னியரை அழியச் செய்யுமா போலே - அம.8, அழகு. ராஜாக்கள் உறுபூசலாய்க் கொலையிலே பரந்து தங்களுடைய சதுரங்க பலத்தையும் சேர்த்துக் கொண்டு அணிஅணியாகச் சிலர் மேலே ஏறுமா போலே - அம.9, அழகு. ஓலைப் புறத்தில் செல்லாத தேசத்திலே எடுத்து விடும் ராஜாக்களைப் போலே - தி.மா.0. ராஜாக்கள் வெற்றிலை விலக்குதல், பால் குடியோம் என்னுதல் செய்வார் கள், 'இன்ன கோட்டை அழித்தாலன்றி' என்று திரிவாரைப் போலே - தி.வி.44. வர்ஷா காலம் ராஜாக்கள் படைவீடு விட்டுப் புறப்படாதாற் போலே - பாவை, 23-3. ராஜாக்கள் அந்த:புரத்தில் ஒரு கட்டில் நின்றும் மற்றைக் கட்டு ஏறப் போகா நிற்க நடுவே அந்தரங்கர் முகங்காட்டித் தம் கார்யங்கொண்டு போமா போலே - 1.9.10-36,24. ராஜாக்களுக்கு அபிமதமான த்ரவ்யங்களைப் பரிசாரகரானவர்கள் கட்டி இலச்சினையிட்டுக் கொண்டு திரியுமா போலே - பெரி.தி.2.2.11. ராஜாக்களுக்கு போக்ய த்ரவியங்கள் குறைவற்று இருக்குமா போலே - பெ.தி.1.2.5. நன்கு என்னுடலம் கைவிடான் - செருக்கர் நீசஸ்த்ரீ கள் காற்கடையிலே துவளுமாபோலே - 10.7.4-24. ஸார்வ

பௌமரான ராஜாக்கள் போகப் பள்ளிகள் வந்து புகுருமா போலே - தி.வி.12. அகம்படியர் கிளர்ந்தால் அரசனாலும் அடக்கப் போகாது இறே அது போலே - பாவை, 4-3. அராஜகமாய்க் (அரசின்றி) கிடந்த காலம் குறும்பு செய்தாரை ராஜகீயம் ஆனவாறே (அரசு கிட்டியவாறே) ராஜாவை அண்டைகொண்டு சிறையிலே வைக்குமா போலே - தி.மா.1. "தேசாந்தரகதன் ஆன ராஜா ஸ்வதேசத்திலே புகுமாபோலே - 10 9.3-36. நெடுநாள் ராஜ்யம் பண்ணினாரைப் போலே அடிப்பட்டிருக்கும் ஆயிற்று - பெ தி. 1.2.8. ராஜாக்களுக்குச் சிலர் ஊட்டியிட்டுச் சில காவற் பன்றி வளர்த்து வைக்குமா போலே - அம.8, அழகு. ராஜாக்கள் முனிந்தால் அவன் பரிகரமும் எதிரி ஆமா போலே - தி.வி.28. ஒளிமிக்க நீலப்பூவின் சின்ன நறும் தாதை ராஜாக்கள் வளையம் வைக்குமா போலே - பெ.மடல், கண்ணி, 31. காளமேகத்தை - ராஜாக்கள் போம் போது முன்னே மேகர் நீர் விடுமா போலே - 10.1.1-36. ராஜாக்கள் மஹிஷிகளுக்கு விபூதிகளையும் தங்களையும் அவர்கள் அதீனமாக்கி வைப்பாரைப் போலே - 10.6.1-24. ராஜாக்கள் ஒருகால் கண்டு சிரித்து 'அழகிது' என்று போகைக்காக மாநாவி சமைப்பாரைப் போலே - 10.9.4-36. ராஜா பாணிச்சியைத் தனக்கு மஹிஷியாக்கி வைத்தால் நிவாரகர் இல்லாதாற் போலே - தி.நெ.தா.10. ராஜ நிவேசங்களில் கூனர் குறளரைப் போலே - மு.தி.53. ஸார்வபௌமனான ராஜகுமாரன் தன் மஹிஷி கையிலே அகப்பட்டு ஒரு மாலையாலே கட்டுண்டு அதுக்கு ஒரு ப்ரதிக்ரியை பண்ண மாட்டாதே இருக்குமா போலே - க.நு.சி.1, நம்பிள்ளை. ராஜபுத்ரன் தலையிலே முடியை வைக்குமா போலே - பெரி.தி.4.9.3. சிறைக் கூடத்தில் இருந்த ராஜகுமாரன் தலையிலே அபிஷேகத்தை வைத்து, பின்பு சிறையை வெட்டி விட்டாப் போலே - தி.ச.வி.46. ராஜகுமாரன் அபிஷேகம் என்றவாறே க்ஷயவ்யாதிகளைப் போகக நினைக்குமா போலே - தி.வி.1. ராஜபுத்ரன் போகா நின்றால் ராஜஸம்பந்தம் உடையார்க்கு எல்லாம் அங்கீகரிக்க வேண்டுமா போலே - 10.9.1-36. ராஜபுத்ரர்கள் கையிற் கடைச் செறிகுத் தோற்பாரைப் போலே - தி.வி.12. ராஜகுமாரன் புழுகு நெய்யிலே பூவைத் தோய்த்துச் சூடுமா போலே - தி.வி.40. ராஜபுத்ரர்களைப் போலே வாயில் மதுவோடே வண்டுகள் கணை படுப்ப என்றபடி - பாவை, 3-6. முலை சரிந்தாரைப் பாராத ராஜகுமாரனைப் போலே - பாவை, 11-6. ராஜபுத்ரனுக்கு "பூந்தோட்டம் அழியா நின்றது" என்பாரைப் போலே - 10.3.1-24. சில ராஜபுத்ரர் துடைகுத்த விட்டு உறங்குமா போலே பெ.தி.1,2,4.

வ்ருத்த ஸாமந்தரைக் கண்ட ராஜாக்களைப் போலே - 10.6.1-36. வ்ருத்த மந்த்ரிகள் ராஜபுத்ரர்களை வைத்து நடத்துமா போலே - பெ.தி.1.2.6. வ்ருத்த மந்த்ரிகள் கீழே பாலராஜாவானவன் வர்த்திக்குமா போலே - பெரி.தி.3.6.2. அந்தரங்கர்க்குக் கிட்ட மாளிகை சமைக்குமாப் போலே - மு.தி.33.

ஊராட்சி

அருளென்று - ஒன்று கெட்ட அன்றாகப் பாடி காப்பாரை வளைப்பாரைப் போலே - இ.தி.99. உலகித்யாதி - கூறு செய்த ஊரிலே கையும் கைத்தளையுமாய்த் திரிவாரைப் போலே - பெ.தி.1.5.8. க்ராமணிகளைப் போலே ஆயிற்று தேவர்களும்; ப்ரஹ்மஹத்யை சொல்லிப் பழியிடுவாரும் தலையை அறுப்பாரும், தலை அறுப்புண்பாருமாயிறே இருப்பது - பெ.தி.1.2.6.

பயிர்த்தொழில்

இருவராய் வந்தார் என் முன்னே நின்றார் என்று கமர் பிளந்த நிலத்திலே ஒரு பாட்டம் மழை விழுந்தாற் போலே - தி.நெ.தா.21, பட்டர். "கடிந ஸ்தலத்திலே வர்ஷித்தால் காடிந்யம் அடங்க நெகிழ்ச்சிக்கு உறுப்பாமா போலே - தி.மா.17. அவளோட்டை நித்யஸம்ச்லேஷத்தாலே நீர் பாய்ந்த பயிர்போலே செவ்வி பெற்ற - 10.4.2-36. மறுநீர் பாய்ந்தாற் போலே குளிர்ந்தது - பாவை, 6-6. பாழிலே பாய்கிற நீரைப் பயிரிலே வெட்டி விட்டாப் போலே - தி.மா.16. வெள்ளத்தைக் கள்ளமடையாலே பள்ளத்தே விடுமா போலே அம.1, பெரி. விரகாலே நீரை மேட்டில் ஏற்றுமா போலே - பாவை, 20-6. ஒரு நீர்ச் சாவி போலே கிடக்கிற இத்திரள் உஜ்ஜீவிக்கும்படி வர்ஷியாய் - பாவை, 14-6. கோடை ஒடின பயிரிலே ஒரு பாட்டம் மழை வர்ஷியாதோ என்னுமா போலே - பாவை, 22-6.

பண்டுபோல் அன்றிக்கே கருவடைந்த பயிர்போலே - பாவை 4-3. நெல்லுக்குக் களை போலே - தி.மா. 7. தான் உண்டாக்கின பயிருக்குக் களை பறிப்பானும் தானேயானாற் போலே - திருவெழு. அடி, 2, 3. பழம்புனங்களிலே விதைக்க வேண்டாதே

உதறி முளைக்குமா போலே - நான். தி. 23. கர்ஷகன் உவர்த் தரையை உவர் கழிய நீர்நிறுத்துமா போலே - திருவா. 4. க்ருஷிகர் விரையை நீரிலே சேர்க்குமா போலே - பாவை, 6-6. கர்ஷகனானவன் பயிர்த்தலையிலே குடில்கட்டி நோக்குமா போலே - பெ தி. 1.2.1. வேரிலே வெக்கை தட்டினால் கொழுந்து முற்பட வாடுமா போலே - பெரி.தி. 2.3.3. இரண்டு மரம் கூடநின்றால் ஒன்றை வெட்ட நினைத்தவன் ஒரு மரத்திலே கொத்திப் பெருங் காயத்தை இட அது பட்டு நிற்குமா போலே - தி.மா. 38.

வெள்ளம்

மந்தமாய் பரிமளத்தை உடைத்தான தென்றல் ஸஞ்சரிக்கக் கிண்ணகத்தை எதிரிட ஒண்ணாதாற் போலே - பெ.மடல், கண்ணி, 21. கிண்ணகம் எடுத்தால் நடுவுள்ள அணைகளை முறித்துக்கொண்டு வருமா போலே - தி.மா. 36. கிண்ணகத்தில் ஆறு எங்கும் ஒக்கப் பரந்து வாராநிற்க நீருக்கு ஓரிடத்திலே நோக்காமாப் போலே - மு.தி. 1. கிண்ணகத்தை அணைசெய் தாற்போலே-பாவை, 18-3. கிண்ணகத்தில் இழிய அஞ்சிக் கரையிலே உலாவுவாரைப் போலே - பெ.தி. 3.1.1. வையம் - பெரிய வெள்ளத்திலே ஒரு கழல் மிதக்குமா போலே - மு.தி.1. கிண்ணகத்திலே புக்கு முழுகுவாரைப் போலே - தி.கு.தா.6. கிண்ணகத்தில் இழிவார் கைகோத்துக்கொண்டு இழிய ஆள்திரள் பார்த்திருப்பாரைப் போலே - பெ.தி. 3.1.1. கிணணகத்தில் இழிவார் திரள்திரளாக இழியுமா போலே - தி.மா.14. கிண்ணகத்தில் இழிவார் மிதப்புக்கொண்டு இழியுமா போலே - திருவா. 0.

பஞ்சம்

க்ஷாம காலத்தில் ப்ரஜைகள் 'சோறு சோறு' என்னுமா போலே - தி.வி.69. க்ஷாம காலத்தில் பஹுப்ரஜனானவன் தன் பசிக்கு ஆற்ற மாட்டாதே ப்ரஜைகள் பசிக்கு ஆற்றமாட்டாதே, அவற்றின் வாயிற் சோற்றைத் தான் பறித்து ஜீவிப்பது, தன் வாயிற் சோற்றை அவை பறித்து ஜீவிப்பதாய் 'என் பசிக்கு என் செய்வேன்? என் பிரஜைகளின் பசிக்கு என் செய்வேன்? என்னுமா போலே - 3.8.0-36. க்ஷாம காலத்தில் ப்ரஜையை விற்றுண்ணும் தமப்பனைப் போலன்றியே தன்னை அழிய மாறியும் என்னை நோக்கக் கடவ பிதாவாய் 6.3.9-36. க்ஷாம காலத்தில்

ப்ரஜைகள் 'சோறு சோறு' என்றால் 'வாய் வாய்' என்பாரைப் போலே - பெ.தி. 2.7.4.

வழிப்பறி முதலிய திருட்டுகள்

வழிபறிக்காரர் அழைக்குமா போலே - தி.வி.51. நிவாரகர் இல்லாத தேசத்திலே வழியடிப்பாரைப் போலே - பெ.தி. 8.2.9. வழி பறிக்கும் இடத்தே தப்பிப் போனவன் கிழிச்சீரையை அவிழ்த்துப் பார்த்து இது தப்பப் பெற்றோமே என்று உகப்பானைப் போலே - பெ.திருவந். 25. வழியடிக்காரரைத் தண்ணீர் வேண்டுமா போலே - தி.வி.40. வழிபறிப்பாரை 'உடன் பிறந்நீர்! நூறு பிராயம் புகுவீர்' என்னுமா போலே - தி.வி. 16. தார்மிகராய் இருப்பார் வைத்த தண்ணீர்ப் பந்தலிலே வழியடிக் காரர் ஒதுங்குமா போலே - பெ.தி. 9.4.1. எங்கேனும் வழிபறி யுண்டாலும் ராஜாவின் வாசலிலே கூப்பிடுமா போலே - பாவை, 22-6. கொன்று கிழிச்சீரை அறுத்துக் கொடு போவாரைப் போலே - பெ.தி 9.3.1. வாயிலே சீரையைத் துறுத்துக் கொல்லு வாரைப் போலே - 9.9.1-36. தன்னை விச்வஸித்து உடனே கிடந்தவன் முடியவிழ்த்தவனைப் போலே - திருவா. 5. தன்னை விச்வஸித்து அருகே கிடந்தவனை மடிதடவினவனைப் போலே - திருவா.6.

ஆறு குளம் முதலான நீர்நிலைகள்

ஆறு நீர்வர முன்னே சினையாறு படுமா போலே - பெ.தி. 2.7.8. நிரவதிக ஸம்பத்தானது ஆற்றுவாயில் நீர் மேன்மேல் நெடுகுமா போலே - பெ.தி. 4.6.1. ஆற்றுப் பெருக்கு போலே ஏறிவாரா நின்றுள்ள - பெ.தி. 6.8.9. ஆற்றுப் பெருக்கில் ருஜீஷாம்சம் ஓரிடத்திலே திரளுமா போலே - பெ.தி. 6.4.1. ஆறுகளும் கால்வாய்களும் குளங்களும் நிறைந்து ஸமுத்ரத்திலும் குறைவற்றுப் புகுமோபாதி - தி.வி. 2. ஆறுகள் குளங்கள் நிரம்பினால் அதிக ஜலத்துக்குப் போக்கு விடுகைக்குப் பல வாய்த்தலைகள் உண்டாமா போலே - பெ.தி. 1.2.6. ஆற்றுப் பெருக்கிலே அருகு கரைகள் உடைந்தால் நோக்குகிறவர்கள் கைவிட்டுக் கடக்க நின்று கூப்பிடுமா போலே - தி.மா. 19. ஆற்றிலே அழுந்துவார் ஆழங்காலிலே இளைப்பாறத் தேடுமா போலே - அம.1, பெரி. திருக்கமலபாதம் - பெருக்காற்றிலே இழிவார் தெப்பங்கொண்டு இழியுமா போலே - அம. 1, அழகு. பிராட்டி அருள் மறுத்தாலும் மாறாதேயிறே இருப்பது ஆழ்வான்

அருள், மடு அருகில் ஊற்றுப் போலே - தி.வி. 33. பெருக் காற்றிலே இழியமாட்டாமல் கரையிலே நின்று ஸஞ்சரிப்பாரைப் போலே - பெரி.தி. 2.2.7. இவ்விடம் பரப்புத் துறை இவ்விடம் மடு என்று நிலவர் எல்லை குறிக்குமா போலே - 10.7.1-36. ஆழங்காலிலே இழிந்து அமிழுமவர்கள் அவ்விடத்திலே கொண்டைக்கோல் நாட்டுமா போலே - 10.7.1-24. நீரை அடைக்கப் புக்கால் ஓரிடம் அடைக்க ஓரிடம் கோழைப் படுமாப் போலே - மு.தி.4. தண்ணீர் குடிக்கக் கல்லின ஏரியிலே அமிழ்ந்திச் சாவாரைப் போலே - பாவை, 10-3.

தாய் சேய் இயல்புகள்

பசியாலும் தாஹத்தாலும் தளர்ந்து தாயையும் காணப் பெறாத ஸ்தநந்தய ப்ரஜை ஆர்த்தியின் மிகுதியாலே கூப்பிடுமா போலே - 10.10.0-9. சிறு ப்ரஜைகள் புரோவர்த்தி பதார்த்தங் களை எடுத்து வாயில் இடுமா போலே - அம. 9, பெரி. ஸாஹஸிகரான ப்ரஜைகள் வழியே போய் வழியே வரவேணும் என்று தீர்த்தத்தை மேலே தெளிப்பாரைப் போலே - நான். தி.9. என்றால் கெடுமாமிடர் - தாய் பேர் சொல்ல க்லேசம் போமாப் போலே - மு.தி.77. மகனித்யாதி - பிள்ளையாக எடுத்து; தாயார் ஒசழக்காக எடுக்குமாப் போலே - இ.தி. 29. ப்ரஜையை மடியில் வைத்திருக்குந் தாயைப் போலே-திருவா. 1. மாதா ப்ரஜைகளுக்கு முலைகொடுத்து அவற்றின் முகமலர்த்தி காண்கைக்குப் பாங்காகச் சாயுமா போலே - தி.மா. 19. தான் நமஸ்கரித்துக் காட்டி ப்ரஜையை நமஸ்கரிப்பிப்பாரைப்போலே - இ.தி.94. அதிப்ரவ்ருத்தனான ப்ரஜையை விலங்கிட்டு வைப்பாரைப் போலே - 10.10.1-24. ஸுதனை வார்த்தையைக் கற்பித்து அவன் சொல்லக் கேட்டு இவன் இனியன் ஆமா போலே - 10.7.5-36. பஹுபுத்ரவான் ஆனவன் விகலகரணன் ஆன புத்ரன் பக்கலிலே போரவத்ஸலனாய் இருக்குமா போலே - அம. 8, அழகு. புத்ரர்களை ப்ரஹ்ம ரதம் பண்ணும் ஸமயத் திலே மாதாபிதாக்கள் காண ஆதரித்து வருமாபோலே - தி.பல்.0. இப் ப்ரஜையைப் பெற்று வாழ்ந்தேன் என்பாரைப் போலே - பெ.தி. 1.1.2. சிறு ப்ரஜைகளைக் கையிலும் காலிலும் விலங்கிட்டு ரக்ஷிக்கும் மாதா பிதாக்களைப் போலே - 10.10.1-36. ப்ரஜை பால் குடித்தால் தாய் உடம்பு நிறம் பெறுமாப் போலே - இ.தி.94. முலைக் கடுப்புத் தீரத் தரையிலே பீச்சு வாரைப் போலே - தி.மா. 10. உறங்குகிற ப்ரஜையைக் கட்டிக் கொண்டு கிடக்கும் தாயைப் போலே - தி.மா. 35. உறங்குகிற

ப்ரஜையை எழுப்பி ஊட்டும் தாயைப் போலே - பெ.தி. 2.6.1. சவலை ப்ரஜைக்குச் சோறும் நீரும் முடிந்து கொண்டு திரியும் மாதாவைப் போலே - தி.மா.25. வ்யாதிக்ரஸ்தமான ப்ரஜைகள் வ்யாதி தலைசாய்ந்து சோறு சோறு என்று கூப்பிடப் புக்கால் த்வநிதானே தாய்க்கு உகப்பாமா போலே - தி.மா.36. ப்ரஜை தாய் பேரைச் சொல்லுமோபாதி அமையும் என்கைக்காக - 10.5.1 - 36. சூரனான புத்ரனைக் கண்டால் பெற்ற தாய் இவன் மதியாதே யுத்தத்திலே புகும் என் வருகிறதோ என்று பயப்படுமா போலே - தி.பல். 1. ப்ரஜை தீம்பிலே கைவளர்ந்தால் மாற்றைக் கொண்டு வாய் வாய் என்பாரைப்போலே - 10.6.1 - 36. தேசாந்தரம் போன ப்ரஜை வந்தால் தாய் முகங் குளிர்ந்திருக்குமா போலே - 10.9.10-24. ப்ரஜை விழுந்த கிணற்றிலே ஒக்க விழுந்து எடுக்கும் தாயைப் போலே - பெ.தி.1.9.1. தன் புத்ரன் விருபனாய் இருக்கச் செய்தேயும் அல்லாதவர்களுடைய புத்ராதிகளிற் காட்டிலும் ரூபவானாய்த் தோற்றுமிறே ப்ரேமத்தாலே - பெ.தி. 3.1.0.

உபாத்யாயன் கையில் கசை கண்டு சிறு ப்ரஜைகள் காலிலே விழுமா போலே - தி.மா. 11. ஒரு மலை ஒருத்தர்க்குப் பாத்தம் போராதபடி பெருமிடுக்கராய் இருக்கச் செய்தேயும் உபாத்யாயன் கசை போல - தி.மா. 27.

மருத்துவம்

நோவு மிக்கதனையும் நாலைந்து குடிநீரெழக் குடிக்குமாப் போலே - பாவை, 5-6. பால்குடித்து வ்யாதி போக்குமா போலே - பாவை, 5-6. பால் குடிக்க நோய் தீருமா போலே - பெ.தி. 5.8.10. சேர்ப்பால் போக ரூபமாகப் பருகுமவனுக்குத் தன்னடையே பித்தம் போமாப் போலே - பாவை, 5-3.

ரஸாயநஸேவை பண்ணினாரைப் போலே - தி.நெ.தா.16. அவர்களோட்டை ஸஹவாஸத்தாலே வந்த க்லேசம் தீரக் கர்ப்பூர நிகரத்தை வாயிலே இடுவாரைப் போலே - தி.மா.14. கோடையிலே நோவுபட்டவர்கள் சந்தநபங்கத்திலே கை வைத்துக்கொண்டு கிடக்குமா போலே - பெ.தி.3.5.8. பித்தோபஹதர் சந்தநபங்கத்தினின்றும் கை வாங்க மாட்டாதாப்போலே, 10.6.9-36. ஸர்பதஷ்டனை நெற்றியில் கொத்திப் பார்த்தால் பசை இல்லையாகில் ம்ருதன் என்று மீளுமோபாதி - தி.மா.15.

பெண்ணையீர்த்த நெடுவேய்கள் படுமுத்தம் - ஆஸந்நப்ரஸவை களான கர்ப்பிணிகளை மயிரைப் பிடித்திழுத்தால் அதுவே ஹேதுவாக ப்ரஸவிக்குமா போலே-தி.நெ.தா.6. ஜ்வரஸந்நிபதர் ஒருகால் நாக்கு நனைக்க அமையும் என்னுமா போலே - பெ. தி.4.9.1. கழலை கரப்பான் போலே - தி.நெ.தா. 23. ப்ரகிருதி வாசியறிந்து பழையனாய்ப் பரிஹரிக்கும் வைத்யனை வ்யாதி க்ரஸ்தர் பற்றுமாப் போலே - நான்.தி. 22. பசல்கள் அலையா மைக்கு ஔஷதமிட்டு வைப்பாரைப் போலே - சி.மடல், கண்ணி, 29. ஸ்தநந்தய ப்ரஜைக்காகக் குடிநீர் குடிக்கும் தாயைப் போலே- பெ.தி. 7.1.5. சிலரை வசீகரிக்க நினைத்தவர்கள் கையிலே மருந்து கொண்டு திரியுமா போலே - 1.8.9-36.

மக்கள் வாழ்க்கை

யாஜ்ஞிக ஸந்தாநத்துக்கு த்ரிபுருஷ விச்சித்தியாலே அப்ராஹ்மண்யம் சொல்லுமா போலே - தி.பல். 6. பெரிய திருநாளிலும் ஸந்தியாவந்தனம் முட்டாமல் நடத்துவாரைப் போலே - க.நு.சி.2, அழகு. ப்ராஹ்மணர் ஐச்வர்யம் மிக்கால் யாகாதிகளைப் பண்ணுமா போலேயும் - தி.நெ.தா. 16. ப்ராஹ் மணர் பிச்சேறினாலும் ஒத்துச் சொல்லுமா போலே - பெ.தி. 3.6.9. ப்ராஹ்மணர்க்கு ஒத்தும் பாணர்க்குப் பாட்டும் போலே - பெ.மடல், கண்ணி, 41.

பறைச்சேரி, பறைச்சேரி என்பாரைப் போலே - பாவை, 12-6. பறைச்சேரியில் அடி இடுமாபோலே - பெ.திருவந்.79. கள்ளர், பள்ளர், வலையர் முதலானோர்க்குப் பிராணிகளை அலைக்கையும் பயப்படுத்துகையும் கொல்லுகையும் ஐந்மஸித்த மாய் வருமா போலே - பெரி.தி.4.2.1.

ஏலக்குழம்பு ஏலக்குழம்பு என்பாரைப் போலே - தி.வி. 32° மரக்கலம் ஏற்றுமவன் மீண்டு வருமளவும் ஜீவநம் ஏற்றிக்கொண்டு போமா போலே - பாவை, 7-6. முத்துப்பட்ட துறையைக் காவ லிடுமவன் அசல் துறையையும் காவலிடுமா போலே - தி.பல். 10.

இடைச்சி ஒப்பித்துத் தயிர் கடையுமா போலே - பெ.தி 3.8.7. குளித்துப் பூச்சூட இருப்பாரைப் போலே - 10.3.5- 6. கலம்பகன் மாலை சூடுவாரைப் போலே - அம. 9. அழகு. தனிப்பூச் சூடுவாரைப் போலே - அம. 9, அழகு. கண்கள் இளநீர்க் குழம்பிட்டாப்போலே-பெரி.தி. 1.5.8. சுவடர் பூச்சூடும் போது புழுகிலே தோய்த்துச் சூடுமா போலே -

தி.பல்.9. புழுகு நெய் ஏறிட்டுக் கொண்டு வருவாரைப் போலே தி.நெ.தா.21.

சிந்துக் காடுவாரைப் போலே - அம.4, அழகு. கூத்துக் கண்டு சிரிப்பாரைப் போலே - பாவை, 24-6. ஆனைக்குப்பு ஆடுவாரைப் போலே - 10.7.10-36.

மாஸோபவாஸி சோற்றை விரும்புமா போலே பெரி.தி. 5.3.7. மாஸோபவாஸிகளுக்குப் பால்குழம்பு கொடுப்பாரைப் போலே - தி.நெ.தா.21.

பாடுவார்க்குக் காவணம் இட்டுக் கொடுப்பாரைப் போலே - பெ.தி. 3.8.1. இருந்த கிழிச்சீரையோடே ரத்நத்தைக் கொடுப் பாரைப் போலே - தி.மா.10.

பிடிதோறும் நெய் வார்ப்பாரைப் போலே - தி.நெ.தா.13. கதிர்பொறுக்கி ஜீவிப்பாரைப் போலே - அம.1.பெரி. பசித்தவர் கள் 'ஸீமானே, என் பசியைப் போக்க வேணும்' என்னுமாப் போலே - தி.மா.36. பார்த்த பார்த்த இடமெங்கும் விளைந்து கிடவாநிற்க உஞ்சவ்ருத்தி பண்ணி ஜீவிப்பாரைப் போலே - பாவை, 13-6. ஆன் விடை புள்ளூர்தி - கைக்கொளாண்டிகளைப் போலே - மு.தி.5. கலியர் சோற்றை வர்ணிக்குமா போலே - பாவை, 18-6. தாம்புகழப் புக்கவாறே பசியர் 'உண்ண' என்று இலையகலப் படுக்குமா போலே - பெ.திருவந்.2. கலியர் 'கல அரிசிச் சோறு உண்ண வேணும்' என்னுமாப் போலே - பெ.தி. 5.1.5.

பெருவிடாயர் உடம்பிலும் முகத்திலும் நீரை ஏறிட்டுக் கொள்ளுமா போலே - தி.கு.தா.1. விடாய்த்தார் ஹஸ்த முத்ரை யாலே தண்ணீர் வேண்டுமாபோலே - தி.நெ.தா.12, விடாய்த்தவன் தடாகத்தை நீக்கி உள்ளே முழுகுமா போலே - அம.5, பெரி.

படுக்கைக் கீழே மஹாநிதி கிடக்கப் புறங்கால் வீங்கிச் சாவாரைப் போலே - 10.6.2-36. மலையை அண்டை கொண்டு ஜீவிப்பாரைப் போலே - பாவை, 19-3. மலையாளர் ஒரு மாஸத்துக்கு ஒருகாலே உண்ணவும் வல்லவர்களாய் ஒரு மாஸம் பட்டினி விடவும் வல்லவர்களாய் இருக்குமா போலே - தி.நெ.தா. 13. இன்னதனை த்ரவ்யத்துக்கு அரசு செய்வாரைக் கிடைக்கும் என்னும் வன்னியரைப் போலே - பெ.திருவந்.51.

மதுபாந மத்தரைப் போலே - மு.தி. 19. அபிமத விஷயத்தோடே கலக்கைக்காக அவர்கள் உகக்கும்படியே ஒப்பிப்பாரைப் போலே - பெ தி. 2.6.3. காமுகரானவர்கள் உகந்த விஷயத்தினுடைய கண்வட்டம் விட்டுப் போக மாட்டாதாப் போலே - மு.தி.86. அபிமத விஷயம் இருந்த விடத்தே தண்ணீர் என்று கொண்டு புகுவாரைப் போலே - தி.வி.22. காமுகனுக்கு அங்கநாபரிஷ்வங்கம் போலே - பெ.தி. 1.9.2. காந்தன் ஸந்நிதியிலே காமிநி அழுக்குக் கழற்றுமா போலே - தி.வி.1. காமிநிக்குக் காந்தனுடைய தேஹமும் தேஹ குணமுமேயாய் வாய்வெருவுமா போலே - பெ.தி. 11.7.5. நவோடையான ஸ்த்ரீக்கு பர்த்தாவினுடைய கரஸ்பர்சம் உண்டானால் வேர்ப்பது விடுவது ஆமா போலே-பெ.தி. 9.3.1. அவர்கள் கட்டின கட்டு அபிமத விஷயத்தில் ஸம்ச்லேஷஜிஹ்நம் போலே - பெ.திருவந்.18. நாயகன் கலந்து பிரிந்து போம்போது பார்த்து நிற்குமா போலே - பெ.தி. 9.4.6. தாலி கட்டாத ஸ்த்ரீகள் போலே யாய்த்து - தி.மா. 32. பர்த்தாவின் அஸந்நிதியிலே குளிக்கு இறாய்க்கும் பார்வையைப் போலே - பாவை, 2-6. கர்ப்பிணிகள் சுரமேறுமாப் போலே - பாவை, 4-6. கர்ப்பிணிகள் பிள்ளைக்கு நோவு வராதபடி மெள்ள எழுந்திருக்குமா போலே - பாவை, 6-6. கர்ப்பகேதத்தாலே முக்குவாரைப் போலே - பெ.தி.1.2.10.

புதிசாக வைதவ்யம் வந்தவர்கள் ஆள்கிளம்புவதற்கு முன்னே மனிதர் முகத்திலே விழியாமே போமா போலே - தி.வி. 24. புதிசாகப் பர்த்தாவை இழந்தாளொரு ஸ்த்ரீ தன்னுடைய ஸ்தநந்தய ப்ரஜையையும் எடுத்துக்கொண்டு கூப்பிடுமா போலே - தி.வி. 35.

முள் பாய்ந்தால் 'அம்மே' என்னுமா போலே - பெ.தி. 4.6.1. விழுவார் 'அம்மே' என்று விழுமா போலே - தி.நெ.தா. 16. ஆனையைக் கண்டார் 'ஆனை ஆனை' என்னுமா போலே - திருவா. 1.

தலைக்கடையையும் புழைக்கடையையும் அடைத்துக் கிழிச்சீரையை அவிழ்த்துப் பார்ப்பாரைப் போலே - தி.நெ.தா. 37. கோட்சொல்லி ப்ரஸித்தராமாப் போலே - மு.தி.28. நஞ்சூட்டின ஆயுதம் போலே - சி. மடல், கண்ணி, 56. கடன் தனிசுடையார் பணயம் எடுப்பாரைப் போலே - பெ.தி. 8.2.6. வறுநாற்றத்தைக் காட்டிச் சில பதார்த்தங்களைத் தப்பாதபடி அகப்படுத்துமா போலே - 10.7.10-36. பர்வத பார்ச்வத்தைப் பற்றி ஜீவிப்பாரைப் போலே - பாவை, 19-6. உவர்நீரை முகத்திலே ஏறிட்டுக்

கொண்டால் அது கண்விழிக்க ஒண்ணாதபடி கரிக்குமா போலே - தி.மா. 31. ஓர் ஊருக்குப் போம்போது நீர்ச் சாய்வையும் நிழற் சாய்வையும் பற்றிப் போவாரைப் போலே - தி.நெ.தா.6. செந் தெங்குக்கு முள் கட்டினாப் போலே - 10.2.1-36. தண்ணீர்ப் பந்தலில் சேர்ந்து, குளிர்ந்த தண்ணீர் விடாயர்க்கு அரிது ஆமா போலே - 9.9.6-36. கொடியும் தோரணமும் நட்டுத் தண்ணீர்ப் பந்தலையும் கடையையும் கட்டுமா போலே - பாவை, 16-6.

ஆசாரியர்கள் பற்றிய செய்திகள்

எம்பெருமானாருடைய ஸ்த்திதி கமந சயநாதிகளை நாம் கொண்டாடுமா போலேயும், ஆளவந்தார் நடையை ராஜா கொண்டாடினாப் போலேயும் - 5.2.4-36. ஆளவந்தார்க்குப் பச்சையிட்ட மணக்கால் நம்பியையும் போலே - 6.8.1-36. இரந்து சொல்லுகைக்கு மணக்கால் நம்பியோடொப்பர் - 9.3.5-36. நம்குடி என்னாதே 'தன்குடி' என்கிறாளாயிற்று 'எம்பெரு மானார் தர்சநம்' என்னுமா போலே - பெ.தி.2.7.6. எம்பெரு மானாரைப்போலே நூறாண்டு ஸ்ரீவைஷ்ண ஸ்ரீயோடே யிருந்து - 5.1.11-36. கார்ய வாய்ப்புப் பெருத்து எம்பார் திருமேனி போலே வடிவு சிறுத்திராநின்றனவாயிற்று - பெ.தி. 3.6.2. நன்மையால் மிக்க நான்மறையாளர்கள் - கூரத்தாழ்வானும் ஆண்டாளும் பிராட்டியும் போல்வார்'' - க.நு.சி.4, நஞ்சீயர். ச்ருதி ஸ்ம்ருதீதிஹாஸ புராணாதிகளில் நிலைநின்றவர்களாய் வேத தாத்பர்யம் கைப்பட்டவர்கள்; அவர்கள் ஆகிறார் கூரத்தாழ்வான் போல்வாரிறே - தி.மா.7. பட்டர் 'அழகிய மணவாளப் பெருமாள்' என்றால் திருநாமம் நிறம் பெறுமா போலேயும், சோமாசியாண்டான் 'எம்பெருமானார்' என்றால் திருநாமம் நிறம் பெறுமா போலேயும், அநந்தாழ்வான் 'திருவேங்கட முடையான்' என்றால் திருநாமம் நிறம் பெறுமா போலேயும் - 6.5.7-36. பிள்ளை திருநறையூரரையரைப்போலே ஸத்வ ப்ரசுரனாய் இருந்தானாகில் அவன் நிந்தையே நோயாக முடிந்து போவது - தி.மா.8. நம் சிறியாத்தானைப் போலே ஆந்ரு சம்ஸ்ய ப்ரதாநராய் ஆய்த்துப் போருவது - பாவை, 1-3.

இறைவனைப் பற்றிய செய்திகள்

பாற்கடலைக் கடைந்து பிராட்டியைப் பெற்றாற் போலே - பாவை, 30-6. ப்ரளயங்கொண்ட பூமியை எடுத்தாற் போலே - திருவெழு. அடி, 22. ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு வந்து தோற்றி யருளினாப் போலே - 5.8.4-6. மஹாபலி பக்கலிலே

தன்னுடைமை பெறுகைக்கு அர்த்தித்வம் தோற்றும்படி அர்த்தி யாய் நின்றாற் போலே - மு.தி. 62. தமோரூபமான ஹிரண்ய னைக் கிழித்துப் பொகட்டாப் போலே - அம. 9, அழகு. முமுக்ஷுக்களின் துர்க்கதி பண்டு பரோபதேசம் பண்ணுகைக்கு ப்ரஹ்லாதன் நிதர்சநம் ஆமா போலே - க.நு.சி.0, அழகு.

இதிகாச உவமைகள்

பாரதம்

தர்மபுத்ரன் நரகதர்சநம் பண்ணினவோபாதி - மு.தி. 65. அர்ஜுநனுக்கு திவ்ய சக்ஷுஸ்ஸைக் கொடுத்து வைச்வரூப்யத்தைக் காட்டி அநுபவித்தாப் போலே - அம. 0, அழகு. அர்ஜுநனுக்குப் பரபக்ஷத்தினுடைய கழுத்துத் தோற்றினாப் போலே - பெ தி. 8.1 3. விச்வரூபம் கண்ட அர்ஜுநனைப் போலே - 6.9.0-12. சரதல்பத்திலே கிடந்த ஸ்ரீபீஷ்மரைக்கொண்டு நாட்டுக்குச் சிறிது வெளிச் சிறப்பைப் பண்ணிக்கொடுத்தாற் போலே - திருவா. 0. கர்ணன் விட்ட ஸர்ப்ப சிரஸ்ஸுப் போலே - தி.மா. 40. அங்ஙனன்றியே பகதத்தன் விட்ட சக்தியை மார்பிலே ஏற்றாப் போலே - தி.மா. 40. காண்டாவநம் வெந்தாப் போலே - பெரி.தி. 5.4.2.

இராமாயணம்

பால்யம் தொடங்கிப் பெருமாளை ஒழியத் தரிக்க மாட்டாத இளைய பெருமாளைப் போலே - பெரி.தி. 3.1.1. ஸ்ரீபரசு ராமாழ்வானை வென்று, பெருமாள் அவன் கையில் வில்லை வாங்கினாற் போலே - பாவை, 10-6. பெருமாளைக் கைப்பிடித்தபின் பிராட்டி ஸ்ரீமிதிலையை நினையாதாற்போலே தி.வி. 50. ஸ்ரீபரதாழ்வான் என் தலையில் சுமை வாங்கினா லல்லது எழுந்திரேன் என்று கிடந்தாப் போலே - அம.0, அழகு. ஸ்ரீகுகப்பெருமாள் இராவெல்லாம் உணர்ந்து நோக்கினாற் போலே - பெ.தி. 1.10.10. ஸ்ரீதண்டகாரண்யத்தில் ருஷிகள் ராக்ஷஸர்கள் தின்ற சரீரத்தைக் காட்டினாற் போலே - தி.நெ. தா. 9. பெருமாள் திருவடிகளிலே விழுந்த காகம் போலே - பாவை, 21-6. ஸ்ரீபர்ணசாலையில் நின்றும் இளையபெருமாள் போக ராவணன் புகுந்தாற் போலவும் - தி.வி.12. கோரமான யுத்தத்திலே தம்மை அழிய மாறின பெரியவுடையாரைப் போலே - அம. 5, அழகு. மஹாராஜர் பெருமாளை அண்டை கொண்டு வாலியை அறைகூவினாற் போலே - தி.வி. 27.

பெருமாள் வர்ஷாகாலம் மால்யவானிலே எழுந்தருளி இருந்தாற் போலே - பாவை, 23-3. திருவடி பிராட்டியைத் தேடுகிற தசையில் சந்த்ரோதயம் உதவினாற் போலே - தி.நெ.தா. 21. இலங்கை வேவித்து - திருவடி வாலின் நெருப்பாலே சுடுவித்து நெருப்புங் காற்றுங் கூடினாற் போலே - தி.கு.தா. 15. பிராட்டியைக் கண்ட ப்ரீதிக்குப் போக்குவீடாக மதுவநம் அழிக்கிற பலத்திலே எல்லா முதலிகளுக்கும் அந்வயம் உண்டானாப் போலே - தி.மா. 1. கடலுக்குத் தொடுத்த அம்பை மருகாந்தாரத்திலே விட்டாற்போலே - தி.மா.40. முதலிகள் லங்கையை எனக்கு எனக்கு என்னுமா போலே - தி.மா. 4. ஸம்ச்லேஷத்துக்கு இடைச்சுவரான ராவணனை அழியச் செய்தாப் போலே - தி.ச.வி. 57. பெருமாள் மீண்டு எழுந்தருளின அளவிலே இந்த்ரன் வரக்காட்டின ஹாரத்தைப் பிராட்டியும் தாமும் இருந்து திருவடிக்குப் பூட்டினாப் போலே - தி.பல்.8.

பாகவதம்

தேவகியாரைப் போலே - தி.வி. 37. யசோதைப் பிராட்டி மடியிலே சாய்ந்தாற் போலே - தி.மா. 23. இடைச்சேரியிலே வந்து பிறந்து எளியன் ஆனாப் போலே - பாவை, 30-6. அக்ரூர மாலாகாராதிகளுக்கு ஸௌந்தர்ய ஸௌசில்யாதி குணாவிஷ்காரத்தாலே அநுபவிப்பித்தாப் போலே - அம. 0, அழகுக்குப்ஜை ஆதரித்துச் சாத்தின சாந்து போலே - தி.பல். 8. யசோதைப் பிராட்டி முலையிலே அணையுமா போலே.5.3.3-9. கண்டாகர்ணனைப் போலே தங்களுடைய ஜாத்யுசிதமாக ஜீவிக்குமத்தை ஸமர்ப்பித்து - பெரி.தி. 4.2.9. பண்டொருநாள் இனிய குழலை வாயிலே வைத்துத் திருவாய்ப்பாடியில், உள்ளாரை வசீகரித்தாப் போலே - மூ.தி. 89. பிரிவாற்றாமையால் வந்த பாவனையாலே க்ருஷ்ணாநுகாரம் பண்ணின கோபிமாரைப் போலே - 5.6.0-12. சிசுபாலாதிகளைப் போலே- தி.வி. 68. கம்ஸன் படை வீட்டில் எல்லாம் ப்ரதிகூலமாய் இருக்குமா போலே - பாவை, 16-3.

சமயக் கருத்து

ஸர்வேச்வரன் ஸ்ரீவைகுண்டத்தைக் கலவிருக்கையாகக் கொண்டு வீற்றிருந்தாப் போலே - அம.3, பெரி. நித்யஸூரிகளுக்குத் தன்படிகளெல்லாம் அநுபவிக்கலாம்படி கொடுத்துக் கொண்டிருக்குமா போலே - பெ.தி.3.1.3. பரமபதத்தில்

நின்றும் ஸ்ரீமதுரையிலே தங்கித் திருவாய்ப்பாடிக்கு வந்தாப் போலே - அம.1, பெரி. அவதாரங்கள் போலே தீர்த்தம் ப்ரஸாதியாதே - பெ.தி.4.7.3. ஈச்வரன் ஒருவனுமே ஸர்வாத்மாக்களுக்கும் நியமநாதிகளைப் பண்ணுமாப் போலே - பாவை, 11-3. ஈச்வரனிற் காட்டில் பிராட்டி அஸிதேக்ஷணை என்னும் ஏற்றத்தை உடையளானாற் போலே - பெ.தி.3.7.9. ஸ்ரீகௌஸ்துபம் போலே உகப்பான வஸ்து - தி.மா.26. கந்தல் கழிந்தால் பின்னைத் திருத்துழாயோபாதி கௌஸ்துபத்தோபாதி ஸ்ப்ருஹணீயமாய் ஆயிற்று வஸ்து ஸ்வபாவம் இருப்பது - பெ.தி. 3.6.2. ஸூரிகள் வடிவுபோலே அப்ராக்ருதமான வடிவை உடையளாய் - 4.4.2-12. நித்யரும் முக்தரும் என்றும் பஞ்சவிம்சதிவார்ஷிகராய் இருக்குமா போலே - பெ.தி.10.1.1. குயில்களானவை முக்தர் ஸாமகாநம் பண்ணுமா போலே கூவ - பெ.தி.7.8.4.

கோயிலில் வர்த்தநம் போலே - பாவை, 2-3. பெரிய திருமண்டபத்திலே சேர பாண்டியனிலே நாய்ச்சிமாரோடே கூட இருந்து நினைப்பிட்டது என்றால் தப்பாதாற் போலே - பாவை, 23-6. நம்பெருமாள் ஆறுகால் சிவிகையை ஸாதரமாகப் பார்த்து ஏறியருளுமா போலே - திருவா. 1. நம்பெருமாளுக்குச் சேர சுந்தர பாண்டியன் தம்பிரான் பதக்கம் போலே - தி.மா.5. பெரிய திருநாளில் ஸர்வதோதிக்கமாக வந்தேறுமா போலே - பாவை, 21-6. பெரிய திருநாளுக்குப் பின்பு கார்யம் செய்கிறோம் என்னுமா போலே - தி.நெ.தா.3. பெரிய திருநாளில் போலே உலாவி - பெ.மடல், கண்ணி, 18. பெரிய திருநாளிலே சிறைப்பட்டிருப்பாரைப் போலே - சி. மடல், கண்ணி, 37. நம்பெருமாள் திருநாள் என்று ஒரு பேரையிட்டு ஸ்ரீவைஷ்ணவர்களைத் திரட்டிக் காணுமா போலே - பாவை, 27-3. இராத்திருநாள் ஸேவித்தார் கண் போலே - பாவை, 1-6.

திருவேங்கட யாத்ரை போலே - பாவை, 8-3. திருவாய்மொழி பாடாநின்றால் செல்வர் எழுந்தருளுகையும் அஸஹ்யம் ஆமா போலே - பாவை, 15-3. பகவத் ப்ராப்திக்கு ப்ரபத்தி போலே - பெ.தி.7.3.10. ஸம்ஸாரம் அநித்யம் து:க்கம் என்று அத்தைவிட்டு விரஜையைச் சென்று பற்றுவாரைப் போலே - பெ.தி.4.10.5. பருவம் நிரம்பின ஸ்த்ரீகளையும் புருஷர்களையுங் கண்டால் தேவதாந்தர பஜநம் பண்ணினாரையும், தந்தாமுக்காக நினைத்திருப்பாரையும் போலே - பாவை, 1-3. ப்ரஹ்மப்ராப்தி பலமாய் கைங்கர்யம் ஆநுஷங்கிகம் ஆனாற் போலே - மு.தி.19.

திருமந்த்ரத்தினுடைய அர்த்தத்தை அநுஸந்தித்தால் அது ஸ்வரூபமாய் இருக்குமா போலே - பெ.தி.1.1.2.

உயிரினங்கள்

பதார்த்த தர்சநத்துக்காக ஏற்றின விளக்கிலே விட்டில் புக்கு முடிந்து போமாபோலே - பாவை, 10-6. புழுக்குறித்தது எழுத்தாமா போலே - பெ.தி.2.5.8. தேன்கூட்டை ஈ மொய்த்துக் கொள்ளுமா போலே - தி.மா.4. சாதகம் வர்ஷதாரையை ஆசைப் படுமா போலே - பாவை, 22-3. தடாகங்களிலே சீத காலத்திலே புக்கு நீர்க்காக்கை போலே - பெ.மடல், கண்ணி,14. புரோடாசத்தை நாய் தின்றாற் போலே - பெ.தி.2.3.4. புறப் படும்போது விநயத்தோடு புறப்பட்டு, வேட்டை நாய்கள் ஓடி மேல் விழுமா போலே - அம.2,பெரி. அன்றீன்ற கன்றுக்குத் தாய் இரங்குமா போலே - தி.மா.4. குழக்கன்றுகள் செருக்காலே துள்ளுமா போலே - பெ.தி.3.2.7. மதித்த ஆனைகளைக் தண்ணீரிலே செறுக்குமாப்போலே - மு.தி.47. புலி கிடந்த தூறு என்றால் மிருகங்கள் எல்லாம் காடு பாய்ந்து போமா போலே - அம.7, அழகு. முழஞ்சிலே ஸிம்ஹங் கிடந்தது என்னுமா போலே - அம.4,பெரி.

இயற்கை

தென்றலும் சிறுதுளியும் போலே - தி.வி.15. நிலா தென்றல் சந்தநம் தண்ணீர் போலே பரார்த்தமாய் ஆய்த்து இருப்பது - பெ.தி.4.9.2. மேகத்திலே மின்னினாற் போலே - பெ.தி.3.1.2. இருளிலே சந்த்ரோதயம் போலே - சி. மடல், கண்ணி, 23. தலை களைப் பனம்பழங்களைக் காற்று உதிர்க்குமா போலே - அம. 4, அழகு. ஆடிக்காற்றில் பூளைபோலே - அம.6,பெரி. பனிப்பட்டுச் சாய்ந்த மூங்கில் போலே - பாவை, 3-3. வெள்ளரிப்பழம் விரிந்தாற் போலே - தி.நெ.தா.13. காட்டுத் தீயிலே அகப் பட்டாரைப் போலே - 10.10.0-36.

2. அணிகளில் அடங்கும் செய்திகள்

ஒரு வெள்ளைக் கடலிலே ஒரு கருங்கடல் சாய்ந்தாற் போலே இருக்கிறபடி - பெ.திருவந். 34.

ஒரு கடலைத் தேக்கி வைத்தாற் போலே - மு.தி. 24.

கடலுக்கெதிரே ஒரு கடல் கிடந்தாற் போலே - 2.6.9-36.

திரைபோடு திரை பொரா நின்றுள்ள கடல் கோஷிக்கப் புக்கவாறே எதிரே ஒரு கடல் ஸ்பர்த்தித்துக் கூப்பிடுமா போலே தானும் ஒக்கக் கூப்பிடா நிற்கும்-பெ.தி. 2.7.3.

ஒரு கடலை ஒருகடல் நின்று கடைந்தாற் போலே இருக்கை - இ.தி. 30.

மலையையிட்டு மலையை நெரித்தாப் போலே - அம. 7, அழகு

மலைநடந்தாற் போலே - மு.தி. 38.

மலையும் மலையுந் தாக்கினாற் போலே - திருவா. 2.

அத்தசையிலே இரண்டு சந்த்ரனுதித்தாற் போலேகாண் திருமகரக் குழைகள் இருந்தபடி - தி.நெ.தா. 21.

அநேகமாயிரம் ஆதித்யர்கள் சேர உதித்தாப் போலே இருந்துள்ள புகரையுடைய திருவாழியைக்கொண்டு அந்த ஆதித்யனை மறைத்தவன் - பெ.தி. 5.7.8.

காட்டிலே முளைத்தாப் போலே இருக்கிற கல்வழியே போய் - பெ.தி. 11.5.1.

நீரிலே நெருப்பு எழுந்தாற் போலே - பாவை, 12-6.

சில நினைத்தாயாகிலும் வாயாலே நெருப்பைச் சொரிந்தாற் போலே - பாவை, 16-6.

இருள்தானொரு வடிவுகொண்டாப் போலே கறுத்த நிறத்தையும்-பெரி.தி. 2.8.6.

ஜங்கமமான மதிள் போலே தி.வி. 30.

நீல ரத்நங்கள் உடைய ஒளிகள் திரண்டாற் போல் - 6.6.3-6.

இந்தளத்திலே தாமரை பூத்தாற் போலே - தி.நெ.தா. 21, பட்டர்.

புஷ்பத்தில் பரிமளத்தை வடித்து வகுத்தாற் போலே - 10.10. 6-36.

பரிமளத்தை வகுத்தாற் போலே இருக்கிற வண்டுகள் - பெ.தி. 1.3.3.

நண்டை விழுங்கின நாரையானது விழுங்கினதின் கனத் தாலே மலை பேர்ந்தாப் போலே - நான். தி. 49.

வாயாலே திருநாமம் சொல்லுகைக்கு ஆகாதாரில்லை. மாத்ரு காதுகனுக்கும் கைசலித்தால் அம்மே என்ன ப்ராப்தி உண்டாயிறே இருப்பது - தி.மா. 1.

நம்பினேன் மடவாரையும் - ரத்நாபஹாரம் பண்ண அஞ்சா தவன் விறகும் வைக்கோலும் களவு காண அஞ்சுமோ? - க.நு.சி. 5, நம்பிள்ளை.

ப்ரஜை கிணற்றிலே விழுந்தால் காதுங் கண்டவாளியும் காலுந் தலையும் வடிவுமிருக்கும்படி காண் - திருவெழு .அடி, 13.

மாதா பிதாக்களை அநுவர்த்திக்கைக்கு இச்சையே யிறே வேண்டுவது - தி.பல். 4.

கிணற்றிலே விழுகிற ப்ரஜையை வாங்காத தாயைத் தானே தள்ளினாள் என்னக் கடவதிறே - பெ.தி. 11.8.5.

பால் கைக்கும். புளிக்கும் என்னிலன்றோ பிணங்க வேண்டுவது; அதுதான் வேண்டா என்பாரைச் செய்யலாவது இல்லையே - தி.மா. 2.

3. தமிழ் இலக்கிய இலக்கண மேற்கோள்கள்

குறுந்தொகை

1) ஊருண் கேணி - *1.4.4-24,36. 2)* நிலத்தினும் பெரிதே - *10.3.2-36.*

திருக்குறள்

1) புல்லிக் கிடந்தேன் *(1187) - 1.4.4-24, 36. 2)* தானம் தவமிரண்டும் *(19) - 2.1. 5-36. 3)* அனிச்சமும் *(1120) - 4.8.2-36. 4)* அலர்எழில் ஆருயிர் *(1141) - 5.3.1-24, 36; 6.7.9-36; 7.3.10-36.* (உரைகளில் 'அலர் எழ' என்னும் பாடம் காணப்படுகின்றது. துறையும் வேறாகக் குறிக்கப்பட்டுள்ளது). *5)* நிறைநீர நீரவர் கேண்மை*(782) - 5.4.5-36. 6)* ஊடலுணர் தல் புணர்தலிவை *(1109) - 6.1.5-36. 7)* வேட்ட பொழுதில் அவை அவை *(1105) - 6.7.1-36. 8)* காணுங்காற் காணேன் *(1286) - 6.7.6-36. 9)* தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் *(1191) - 9.1.8-36. 10)* தாம்வீழ்வார் மென்றோள் *(1103) - 10.3.2-36. 11)* செவிக்குணவில்லாத போது *(412)* - பெரி.தி. *3.6.7. 12)* அமிழ்தினும் ஆற்ற இனிதே *(64)* - பெரு.தி. *7.6. 13)* மக்கள் மெய்தீண்டல் *(65)* - பெரு.தி. *7.6. 14)* யானோக் குங்காலை *(1094)* - தி.வி. *65. 15)* காலையரும்பி *(1227)* - பெ.தி. *9.5.3.*

கம்பராமாயணம்

1) செந்தி யுண்டு தேக்கிட்டதே எனக் கடவதிறே - *2.1.3-36.*

"இன்று புன்தொழில் குரங்குதன் வாலினால் இலங்கை
நின்று வெந்து, மாநீறு எழுகின்றது; நெருப்புத்
தின்று தேக்கிடுகின்றது; தேவர்கள் சிரிப்பார்;
நன்று! நன்று! போர்வலி என இராவணன் நக்கான்"

என்பது கம்பராமாயணம், இலங்கை எரியூட்டு படலம், *46.*

2) கருணையென்னும் கடல் கருங்கடலை நோக்கிக் கிடந்ததே என்றானிறே - 5.10.6-36. கருணையங்கடல் துயின்ற வன் கருங்கடல் நோக்கி என்னும் படியிறே - 6.9.3-36.

"கருணை அம் கடல் கிடந்தனன் கருங்கடல் நோக்கி,
வருண மந்திரம் எண்ணினன் விதிமுறை வணங்கி"

என்பது கம்பராமாயணம், வருணனை வழிவேண்டு படலம், 5.

3) பித்தர் சொல்லிற்றும் பேதையர் சொல்லிற்றும்
பத்தர் சொல்லிற்றும் பன்னப் பெறுவரோ - பாவை, 28-6.

இது கம்பராமாயணம், பாயிரம், 8. 'சொல்லிற்றும்' என்பதற்கு மாறாகச் 'சொன்னவும்'என்பதும் 'பெறுவரே' என்பதற்கு மாறாகப் 'பெறுபவோ' என்பதும் பாடமாக உள்ளன.

4) ஈக்கள் வண்டொடு மொய்ப்ப என்று ஆற்று வரவுகளிலே சொல்லுவர்கள் ஆயிற்றுத் தமிழர் - பெ.தி.1.1.10.

''ஈக்கள் வண்டொடு மொய்ப்ப, வரம்புஇகந்து
ஊக்கமே மிகுந்து உள்தெளிவு இன்றியே,
தேக்கு எறிந்து வருதலின் - தீம்புனல்-
வாக்கு தேன்நுகர் மாக்களை மானுமே''

என்பது கம்பராமாயணம், ஆற்றுப்படலம், 10.

நாலடியார்

நடுவண தெய்த இருதலையும் எய்தும் என்று தமிழர் சொல்லுகிறபடியே சொல்லுகிறாரன்று - சி. மடல், கண்ணி, 4.

''வடுஇலா வையத்து, மன்னிய மூன்றில்,
நடுவணது எய்த, இருதலையும் எய்தும்,
நடுவணது எய்தாதான், எய்தும், உலைப்பெய்து,
அடுவது போலும் துயர்''

என்பது நாலடிவார், அறப்பால், அதிகாரம் 12, பாட்டு, 4.

பழமொழி நானூறு

1) திநாள் திருவுடையாருக் கில்லை - 4.3.4-36. (பாட்டு 84). 2) நெடும்பகை தற்செய்யத் தானே கெடும் என்னுமா போலே - 10.7.4-36. (பாட்டு 83)

தொல்காப்பியம் அகத்திணையியல் நச்சினார்க்கினியர் உரை மேற்கோள் பாடல்

"கடலன்ன காமத்த ராகிலும் மாதர்
மடலூரார் மற்றையார் மேல்" சி. மடல் 0; பெ. மடல்.

தொல்காப்பிய உரையில் 'மாதர் மடலூரார் மற்றையார் மேல்' என்பதற்கு மாறாக, "பெண்டிர் மடலூரார் மைந்தர் மேல்" என்பது காணப்படுகின்றது. (தொல். நச்சினார்க்கினியர், அகத்திணையுரை, நூற்பா 35).

யாப்பருங்கல விருத்தி மேற்கோள் பாடல்

தளவேழ் முறுவல் - நப்பின்னைப் பிராட்டியுடைய தந்த பங்க்தியைக் கண்டவாறே முல்லையரும்பு ஸ்ம்ருதி விஷயமாகை நெஞ்சிலே...'பல்லுக்குத் தோற்ற பனிமுல்லை' என்னக் கடவதிறே - 1.5.1-36.

"பல்லுக்குத் தோற்ற பனிமுல்லை பைங்கிளிகள்
சொல்லுக்குத் தோற்றின்னந் தோற்றிலவால் - நெல்லுக்கு
நூறோஒநூ றென்பாள் நுடங்கிடைக்கும் மென்முலைக்கும்
மாறோமா லன்றளந்த மண்."

முத்தொள்ளாயிரம்

குடத்தில் விளக்கே போல் கொம்பனார் காமம் புறப்படா, புறப்படில் ஆபுகு மாலையணிமலை மேல்பிடியே போல நாடறியக் கவ்வை தரும் - பெ.தி.8.1.1.

"குடத்து விளக்கேபோல் கொம்பன்னார் காமம்
புறப்படா; பூந்தார் வழுதி - புறப்படில்
ஆபுகு மாலை அணிமலைமேல் தீயேபோல்
நாடறி கவ்வை தரும்"

என்பது முத்தொள்ளாயிரம். இது சில மாற்றத்தோடு உரையில் இடம் பெற்றுள்ளது.

தொல்காப்பியம்

1) உருவுட்கு என்று உரிச்சொல்லு - 7.2.6-36. இது, 'உருவுட் காகும்' தொல். சொல். 300ஆம் நூற்பாவை யொட்டியது. 2) தடவும் கயவும் நளியும் பெருமை - 8.9.9-24. தொல். சொல். 320ஆம் நூற்பா இது. 3) கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள என்னக் கடவதிறே - பெரி. தி. 4.8.3. கறுப்பும் சிவப்பும் வெகுளிப்பு - தி.வி. 62. சிவப்பும் கறுப்பும் சினம் - தி.வி. 62. 'கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள' என்பது தொல். உரி. 76.

4. நிகண்டு மேற்கோள்

தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களிலே மட்டுமன்றி நிகண்டுகளில் அக, புற இலக்கணச் செய்திகள், சொல்லிலக்கணச் செய்திகள் முதலானவை இடம் பெற்றுள்ளன. திவாகரன் என்று பெயர் சுட்டி ஒரு நூற்பாவைக் குறிப்பிடுகிறார் மணவாள மாமுனிகள். அதுகொண்டு இவர்கள் நிகண்டுப் பயிற்சி புலனாகின்றது. நூற்பாக்கள் முற்றிலும் திவாகரத்தை யொட்டியமையாமல் கருத்துகள் சொல்நடை மாற்றத்தோடு காணப்படுகின்றன. ஒரு வேளை இவர்கள் காட்டும் நூற்பாக்கள் இவர்கள் காலத்தில் வழக்கிலிருந்த நிகண்டுகளில் இடம்பெற்றனவாகலாம். நிகண்டு நூற்பாக்களாகத் தோன்றுவன கீழே தொகுத்துத் தரப்படுகின்றன:

1. பாயலும் பள்ளியும் பாழியும் படுக்கை - 2.2.6-36.

2. சூரு மணங்குந் தெய்வப் பெண்பெயர் - 4.6.7-24,36.
   சூரு மணங்குந் தெய்வப்பெண் - மு.தி.3. இவற்றோடு 'அணங்குஞ் சூரும் தெய்வப் பெண் பொதுப் பெயர்' என்னும் திவாகர நிகண்டுப் பகுதி ஒப்பிடத்தக்கது.

3. கழுது பேயும் பரணும் என்றானிறே - 4.6.7-36.

4. உலக மென்பது உயர்ந்தோர் மாட்டு - 6.3.8-36; தி.வி.11.
   உலக மென்பது உயர்ந்தோ ராகையாலே - 6.4.2-36.
   உலக மென்பது உயர்ந்தோர் மாட்டிறே - 6.9.7-36.
   உலக மென்பது உயர்ந்தோரை யிறே - 10.9.2-36.
   இவற்றோடு 'உலக மென்ப துயர்ந்தோர் மாட்டே' என்னும் திவாகரம் ஒப்புநோக்குதற்குரியது.

5. குழல் கூழை ஓதி யிறே - 6.2.2-36.

6. ஐம்பால் கூந்தல் குழல் - 6.6.3-36.

7. குஞ்சியுங் கொண்டையுங் குடுமியும் - தி.நெ.தா.21.

8. நெறிமென் கூந்தல் குழையல் - தி.நெ. தா.21.

9. குஞ்சி குழல், ஓதி - தி.நெ.தா.21.

10. மயங்கல் கூடலும் கலவியும் - 6.10.8-36.

11. மீளியென்று வலிக்கும் எமனுக்கும் பாலைநிலத்தில் தலைமகனுக்கும் பெயராகச் சொல்லுவர்கள் - 7.6.8-36.

12. கண்கால் புறம் அகம் என்கையாலே புறம் என்ற சொல் இடத்துக்கு வாசகமிறே - பெரி.தி.1.8.1.

13. தழை தொங்கல் சாபலம் பிச்சம் குளிரி பீலிக் குஞ்ச மாகும் ...சொன்னானிறே திவாகரன் - பெரி.தி.3.4.1.

14. எல்லேயு மேடியும் தோழியின் முன்னிலைப் பேர் - பெரி.தி. 3.4.4.

15. அறவோர் அருந்தவத்தோர் ஐயர் என்று பண்டித வாசகங் கள் - தி.வி.84.

16. ஊதையும் கூதையும் குளிர் பனிக்காற்று - பெ.தி.9.5.2.

17. காமஞ் சாரா வெறிய திளமை காட்சி மகிழ்த னலம் பாராட்டு - தி.வி.5.

18. மதியுடம் படுத்தல் தோழிக் குரித்து - தி.வி.10.

19. ஓதல் காவல் பூசல் பரத்தை மாட்டு - தி.வி.11.

20. மாதரென்று காதலாய் சிநேகத்தை உடையவன் என்னுதல் - 4.2 6-36. 'மாதர் காதல்' (தொல். உரியியல் 32) 'மாதர் காதல்...விருப்பின் பொருட் கட்டுரையே' (திவாகரம் ப. 177) ஒப்புநோக்கற் குரியன.

5. மேற்கோளாக எடுத்து விளக்கப்பெறும் பாசுரங்கள்

உரை வரையும் பாசுரம்	மேற்கோளாக எடுத்து விளக்கப்பெறும் பாசுரம்
திருவாய்மொழி	
மனமக மலமற 1.1.2-36.	கடிசேர் நாற்ற 8.8.2.
பொருமா நீள்படை 1.10.1-36.	இடங்கை வலம்புரி இ.தி. 71.
மணியை வானவர் 1.10.11-36.	நம்பியைத் தென்குறுங்குடி 1.10.9.
விட்டிலங்கு செஞ்சோதி 2.7.5-36.	உண்பது சொல்லில் நா.தி.7.8.
தீர்த்தன் உலகளந்த 2.8.6-36.	குறைகொண்டு நான்.தி. 9.
எங்குமுளன் கண்ணன் 2.8.9-36.	பள்ளியில் ஓதி பெ.தி. 2.3.8.
சாதுசனத்தை 3 5.5-36.	மானிடர் பெ.தி. 11.7.9.
செய்ய தாமரை 3 6.0.	தமருகந்த மு.தி. 44.
பயிலும் சுடரொளி 3.7.1-36.	பண்டு இவரை பெ.தி. 8.1.9.
பரிவின்றி 3.10.4-36.	சடையான் பெ.தி. 5.1.7.
மைய கண்ணாள் 4.5.2-36.	நாட்டினாய் என்னை பெ.தி. 8.10.9.
இது காண்மின் 4.6.3-36.	கெண்டையொண்கணும் பெ.தி. 11.1.9.
வரிவளையால் 4.8.8-36.	பூங்கொள் நா.தி.9.9.

பெய்யும் பூங்குழல்
5.10.3-35.
கள்ள வேடத்தை
5.10.4-36.
நின்றவாறும்
5.10.6-36.
ஊரும் நாடும்
6.7.2-36.
ஆழியெழ
7.4.1-36.
சூழல்கள் சிந்திக்கில்
7.5.5-36.
இன்னுயிர்க்கு
7.7.4-36.
இன்கவிபாடும்
7.9.6-36.
எடுத்த பேராளன்
8.1.3-36.
கூத்தன் கோவலன்
10.1.6-24,36.
உந்தமடிகள்
பெ.தி.10.5.8.
நலந்திகழ் சடையான்
பெரி.தி.4.7.2.
தொண்டெல்லாம்
பெ.தி.8.2.8.
காலை எழுந்திருந்து
நா.தி.9.8.
இடங்கை வலம்புரி
இ.தி.71.
மானமிலாப் பன்றி
நா.தி.11-8.
தருமமறியா
நா.தி.14.6.
பெருகுமதவேழம்
இ.தி.75.
தறியார்ந்த
பெ.தி.2.10.6.
ஆடல்பாடலவை மாறினர்
பெரி.தி.3.6.4.

பெரியாழ்வார் திருமொழி

பலபல நாழஞ்சொல்லி
பெரி.தி.4.3.5.
பாண்டவர்
பெரி.தி.4.3.6.
ஆமையின்
பெரி.தி.4.4.5.
நளிர்ந்த சிலன்
பெரி.தி.4.4.8.
சென்னியோங்கு
பெரி.தி.5.4.4.
கேட்பார்செவிசுடு
7.5.3.
அந்தகன் சிறுவன்
பெ.தி.2.3.5.
மிண்டர் பாய்ந்துண்ணும்
தி.மா.14.
புவியும் இருவிசும்பும்
பெ.திருவந்.75.
ஊரவர் கவ்வை
5.3.4.

திருப்பாவை

மார்கழித்திங்கள்
பாவை 1-6.
ஓங்கி
பாவை 3-6.
ஆற்றில் இருந்து
பெரி.தி.2.10.1.
சிறுவிரல்கள்
பெரி.தி.3.6.8.

ஆழி
பாவை 4-6.

ஆழி
பாவை 4-6.

ஆழி
பாவை 4-6.

ஏற்றகலங்கள்
பாவை 21-6.

ஒருத்தி
பாவை 25-6.

திறம்பேன்மின்
நான்.தி.68.

மாறுசெய்த
தி.ச.வி.116.

ஒக்கும் அம்மான்
8.5.8.

கழியாரும்
பெ.தி.6.9.2.

மருவுநின் திருநெற்றி
பெரு.தி.7.5.

நாச்சியார் திருமொழி

வெள்ளை விளிசங்கு
நா.தி.5.2.

தந்தையும்
நா.தி.12.3.

காசின் ஒளியில்
பெ.தி.4.9.4.

தூவலம்புரி
பெரி.தி.3.6.1.

திருமாலை

பச்சை மாமலை
தி.மா.2.

குன்றாடு கொழுமுகில்
பெரி.தி.4.8.9.

அமலனாதிபிரான்

உவந்த உள்ளத்தனாய்
அம.2.அழகு.

கொடியார் மாட
8.3.5.

கண்ணிநுண் சிறுத்தாம்பு

கண்ணிநுண்
க.நு.சி.1,அழகு.

கண்ணிநுண்
க.நு.சி.1. அழகு.

எட்டினோடு
தி.ச.வி.83.

முழுதும்வெண்ணெய்
பெரு.தி.7.8.

முதல் திருவந்தாதி

தோற்றுவாய்
மு.தி.0.

நின்று நிலமங்கை
மு.தி.21.

நீயும் திருமகளும்
மு.தி.86.

சேரால்பிறந்து
பெ.திருவந்.16.

திருவிருத்தம்

மடநெஞ்சம் தி.வி.46.	பள்ளியில் ஓதி வந்த பெ.தி.2.3.8.
வாராயின தி.வி.53.	என்னிவைதான் பெ.மடல், கண்ணி, 88-91.

திருவாசிரியம்

மாமுதல் அடிப்போது திருவா.5.	குறைகொண்டு நான்.தி.9.
,,	சதுமுகன் கையில் பெரி.தி.4.7.3.
நளிர்மதிச் சடையனும் திருவா. 7.	பாலன் தனது உருவாய் மு.தி.69.

சிறிய திருமடல்

வேரா விதிர்விதிரா சி.மடல்,கண்ணி 21.	கண்டு வணங்கினார் நான்.தி.78.
கையதுவும் சி.மடல், கண்ணி, 22-23.	உண்பது சொல்லில் நா.தி.7.8.

திருஎழுகூற்றிருக்கை

ஒருமுறை இருசுடர்மீதினில்... அட்டனை. அடி 3-6.	அடைந்த அருவினை மு.தி.59.

இடங்கை வலம்புரி இ.தி. 71 என்பது திருவாய்மொழியில் ஈரிடங்களிலும் (1.10.1-36; 7.4.1-36), குறைகொண்டு நான்.தி. 9 என்பது திருவாய்மொழியில் ஓரிடத்தும் (2.8.6-36) திருவாசிரியத்தில் ஓரிடத்துமாக (திருவா. 5) ஈரிடங்களிலும், உண்பது சொல்லில் நா.தி. 7.8 என்பது திருவாய்மொழியில் ஓரிடத்தும் (2.7.5-36) திருவிருத்தத்தில் ஓரிடத்துமாக (தி.வி. 46) ஈரிடத்தும் எடுத்து விளக்கஞ் செய்யப்பட்டுள்ளனவாதலின் அவற்றை உரையாசிரியர்கள் சிறப்பான பாசுரங்களாகக் கருதினர் என்று துணியலாம்.

6. சுவைக் கூற்றுகள் (ரசோக்திகள்)

சொல்வதனை அழகுறச் சொல்வது ஒரு தனித்திறன். வைணவ உரைகாரர்கள் நயமாகவும் இருபொருள் தரும் வகையிலும் சொற்களைக் கையாண்டு தொடர்களை அமைத்துள்ளனர். அவற்றுள் சிறப்பான அறுபது இங்குத் தொகுத்துத் தரப்படுகின்றன.

1. இவரை (நம்மாழ்வாரை) குணத்தையிட்டாயிற்று வணங்குவித்தது. குணம் - பண்பு; கயிறு. குணத்தை (கயிற்றை) யிட்டிறே (வில்லை) வணங்குவிப்பது என்றபடி. *1.1.1-36.*

2. அடியிலே தொழாமையால் வந்த ஸங்கோசம் தீரும்படி அடியிலே தொழுது உஜ்ஜீவியென்கிறார். அடியிலே - முன்னது தொடக்கத்திலே; பின்னது திருவடியிலே. இது சொற்பொருட் பின்வருநிலையணியாக அமைந்துள்ளது. *1.1.1-36.*

3. 'இவற்றுக்குப் (பறவைகளுக்குப்) பக்ஷபாத உண்டாம் இருந்ததாகையாலே கடுகப் போய் நங்கார்யம் செய்யவற்று என்று கமநஸாதநமான பக்ஷபாதமே பற்றாசாக, ராவண மாயையால் வரும் அதிசங்கையுமில்லாமையாலே கண்ணாலே கண்டவற்றையெல்லாம் தூதுவிடுகிறாள். பக்ஷபாத முண்டாயிருந்த தாகையாலே - அன்புடையனவாய் இருந்தனவாகையாலே; சிறகுகளை உடையனவாய் இருந்தனவாகையாலே. *1.4.0-36.*

4. இளையபெருமாளுடைய திருவுள்ளத்தில் சிவிட்குத் தாரையையிட்டு ஆற்ற வேண்டிற்றுக் காணும். சிவிட்கு - வெம்மை; கோபம். தாரை - தைலதாரை (எண்ணெய் ஒழுக்கு); வாலியின் மனைவி தாரை. *1.4.3-36.*

5. தமக்குப் பொய்சொல்ல ஒரு வாயுண்டானால் தம் பரிகரத்துக்கு அஞ்சு வாயுண்டு. அவனுக்குப் பள்ளித் தோழமை பலித்தபடி. பள்ளி - படுக்கைபள்ளிக்கூடம். *2.1.6-36.*

6. 'பெருமாளாகிற ஆதித்யோதயத்துக்கு அருணோதயம் எனலாம்படியிருந்தான்; ஆகையாலிறே லங்கை நாலு மதிளுக்கு

நடுவு 'ஹரிஹரி' என்றபடியே யிருக்கிறது. ஹரிஹரி - குரங்கு குரங்கு என்னும் கூப்பாடு; அருணன் தோன்றும்போது 'ஹரிஹரி' என்னும் செயல். 2.4.1-76.

7. (தலைவியின்பால்) பொன்னும் முத்தும் விளையும் படியிறேக்ருஷி (பயிர்த்தொழில்) பண்ணிற்று. பொன் - பொன்னாகிய உலோகம்; பசலை. முத்து - முத்தாகிய மணி; கண்ணீர்த் துளி. 2.4.10-36.

8. வதார்ஹமான காகத்துக்கு விட்ட அம்புக்குட்படக் கண்ணழிவு பண்ணுமவரிறே கண்ணழிவு - காலக்கழிவு; கண்ணையழித்தல். 2.7.6-36.

9. (நரசிங்கமாய்த்) தோற்றினபோது, பொசுங்கின பன்றி போலே உருகினானாயிற்றுப் பொன்னனாகையாலே. இரணியன் என்பதற்குப் பொன்னன் என்பது பொருள் என்பதனையுட் கொண்டு எழுதப்பட்ட சுவைக் கூற்று இது. 2.8.9-36.

10. உத்க்ரமணதசை (இறக்கும் நிலை) பார்த்திருப்பர் காணும் கோழைப் பையலார் வந்து மிடறு பிடிக்க. கோழைப் பையலார் - சளி; வீரமற்றவர். 2.9.3-36.

11. வானார் சோதியையும் நீலாழிச் சோதியையும் வ்யாவர்த்திக்கிறது; வானார் சோதி பகல்விளக்குப் பட்டிருக்கும்; நீலாழிச் சோதி கடல்கொண்டு கிடக்கும்; வேங்கடத்து எழில் கொள் சோதி குன்றத்து இட்ட விளக்காயிருக்கும்; வேங்கடம் மேய விளக்கிறே. இதில் மூன்று சோதிகளுக்கும் இடையேயுள்ள வேறுபாடு சுவைக் கூற்றாகச் சொல்லப்பட்டுள்ளது. 3.3.1-36.

12. ஆனையின் காலில் விலங்கையிறே வெட்டிவிட்டது; கொடியவாய் விலங்கிறே. காலில் விலங்கு - காலில் கிடந்த தளை; காலைப் பற்றிக் கிடந்த முதலையாகிய விலங்கு. 3.5.1-36.

13. பல படிகளாலும் இவர்களை நாம் ரக்ஷிக்க வேணும் என்று அவன் அவதரித்தால் ஒருபடியாலும் திருந்தாதபடியிறே இவர்கள்படி யிருப்பது. படிகள் - வகைகள்; திருமேனிகள். ஒருபடி - ஒருவகை வழி; ஒரு திருமேனி. படி - தன்மை. இரட்டுற மொழிதலாகவும் சொற்பொருட் பின்வருநிலை யணியாகவும் அமைந்த சுவைக்கூற்று இது. 3.5.5-36.

14. ஆதி ராஜ்ய ஸூசகமாய் உபய விபூதிக்கும் கவித்த முடியிறே...அல்லாதார் முடிகளைப் பொய்ம்முடியாக்கும்படி தலையான முடியிறே. உபய விபூதிக்கும் ஒருமுடியிலே கட்டுண்ணும்படி கவித்த முடியிறே. பொய்ம்முடியாக்கும் - இல்லாததற்கு ஒப்பாக ஆக்கும்; சப்பரையான முடியாக்கும். தலையான முடி - தலையிலே இருக்கிற முடி; மேலான முடி. ஒரு முடியிலே - ஒரு கட்டிலே; ஒரு திருமுடியிலே (கிரீடத்திலே). 3.8.1-36.

15. வாய் வந்தபடி சொல்லவும், கைவந்தபடி செய்யவு மிறே இவர் ஆசைப்படுகிறது. வாய்வந்தபடி - வாய் பெற்ற தற்குப் பயனாகும்படி; வாய்க்கு வந்தபடி. கைவந்தபடி - கை பெற்றதற்குப் பயனாகும்படி; கைபோன போக்கின்படி. 3.8.4.

16. 'கரபாதையிறே இவனை இப்படிக் கலங்கப் பண்ணிற்று' என்று அடுத்தேறாக வந்த கரத்தைக் கழித்து ப்ராப்த கரத்திலே நிறுத்தினவனே!...வாணனுடைய கைப்பற்றையுங் கழித்து இறையிலியாக்கின உன்னை எந்நாள் வந்து கிட்டுவன்? என்கிறார். கரம் - கை; கப்பம். அடுத்தேறாக - அதிகமாக; அடுத்தடுத்து ஏறினதாக. இறையிலி இறைவனில்லாதவன்; வரியற்ற நிலம். 3.8.9-36.

17. அவளைப் நப்பின்னையை பெறுகைக்கு ஹேதுவாகை யாலே, அவற்றின் எருதுகளின் கொம்போடே பொருததும் இக் கொம்போடே சேர்ந்தாப் போலே போகரூப மாயிருக்கிறபடி. கொம்பு - எருதுகளின் கொம்பு; நப்பின்னைப் பிராட்டி. 4.2.5-36.

18. அவைதான் (எருதுகள்) தலையான ஆயுதத்தோடே யிறே நிற்கிறது. தலையான ஆயுதம் - மேலான ஆயுதம்; தலையாகிய ஆயுதம். 4.3.1-36.

19. இவருடைய நம்மாழ்வாருடைய பா, நல்ல நூலாகை யாலே வான்பட்டாடையாயிற்றுக் காணும். 'நல்ல நூலாக வேணும்' என்று அடியிலே நோற்று நூற்றவரிறே. பா-செய்யுள்; நூலின் சேர்க்கை. நூல்-புத்தகம்; இழை. நூற்றல்-நூல் நூற்றல்; புத்தகம் எழுதுதல். 4.3.2-36.

20. 'தீநாள் திருவுடையாருக்கில்லை' என்கிறபடியே, இவ் அபாயங்களில் இவன் பெருமான் தப்பிற்று அவள் (திருமகள்) நெஞ்சோடே கடாக்ஷிக்கையிறே. நெஞ்சோடே-உளமார; நெஞ்சில். 4.3.4-36.

21. வாயு புத்ரனைத் தழுவுகை நாயகனுக்கும் நாயகிக்கும் பணியிறே விச்லேஷத்தில். வாயுபுத்ரன்-நெருப்பு; அனுமன். 4.4.3-36.

22. வாயது கையதாக அநுபவிக்கிறவனே! இது சங்கினைக் குறித்த கூற்று. வாயது கையதாக-வாயிலும் கையிலுமாக இருத்தல்; வாய்ச்சுவையைத் தன்னதாகத் துய்த்தல். 4.5.9-36.

23. இவ் அறிவு பிறக்கைக்கு அவனிட்ட பச்சை இருக்கிறபடி. பச்சை-திருத்துழாய் மாலை; காணிக்கை. 4.7.7-36.

24. பையலுடைய (இரணியனுடைய) அகலமெல்லாம் திருவுகிருக்கு அரை வயிறாம்படி யாயிற்றே; ஒருவன் கைபார்த்திருப்பார் அநேகருண்டானால் அவர்களிலே சிலவர் இவனோடே கைசெய்து, அவனுக்குள்ள உடலையும் தாங்கள் கண்டபடியழித்து, நீக்கியுள்ள உடலையும் கூறிட்டுத் தாங்களே கொண்டுவிட்டால், மற்றுள்ளார் கதகதென்னச் சொல்ல வேண்டாவிறே. இவர்கள் தாம் நுனியாடிகளிறே. கைபார்த் திருப்பார்-ஒருவனுக்குப் பயப்பட்டிருப்பார், கையிலே இருப்பார். கைசெய்து-துணைசெய்து; கையிலேயிருந்து. உடல்-செல்வம்; உடம்பு. கதகதென்ன-கோபிக்க; ஒளிர. நுனியாடி கள்-கையின் முன்னிடத்தில் இருப்பவர்கள்; படையின் முன்னிடத் தில் இருப்பவர்கள். 4.8.7-36.

25. அந்தப்புரத்திலுள்ளார் 'எங்கள் வாய்புகு சோற்றைப் பறித்து ஜீவியா நின்றான்' என்று முறையிட்டால், அவன் வாய்விடாச் சாதியென்னலாம்படியிறே இருப்பது. வாய்விடாச் சாதி-வாய் திறந்து பேசமாட்டாதவன்; வாயை விடாமல் இருப்பவன். 4.8.8-36.

26. பலபடியாலும் அடிமை செய்யப் பெறுவர். அவன் விரும்பினபடி இது என்று அறியாதேயிறே இவர்தாம் வேண்டா என்கிறது. பலபடி-பல உடல்கள்; பல வகைகள்; விரும்பினபடி விரும்பினவகை; விரும்பின திருமேனி. 4.8.11-36.

27. மெய்யனாய்க் கெட்டேன் என்கிறார். மெய்யனாய்-உடலையுடையவனாய்; சத்தியத்தை யுடையவன். 5.1.4-36.

28. காடடங்கக் கோலஞ் செய்தான். கோலம் - அழகு; வராகம். 5.1.10-36.

29. அவர் (இராமபிரான்) வம்சத்துக்குக் கொத்தை யாங்காண். வம்சம்-குலம்; வில். (வம்சம்-மூங்கில்; அஃது ஆகுபெயராய் வில்லைக் குறித்தது). 5.4.7-36.

30. அநந்தமுகமான காவலிறே. அநந்தமுகமான-அநந்த னாகிய பாம்பினாலான; பலவகையான. 5.9.4-36.

31. இவன் கால்நெடுக நெடுக, ப்ரதிகூலருடலும் மாண்டது; அநுகூலருடலும் மாண்டது. உடல்-உடம்பு; உற்பத்தி; செல்வம். மாண்டது-இறந்தது; மாட்சிமைப்பட்டது. 5.10.1-36.

32. ஸ்நேஹமின்றிக்கே யொழிந்தால் இன்னாரென்று உண்டோ கல்லும் தடியும் கொள்ளுகைக்கு. ஸ்நேஹம்-நட்பு, நெய். 5.10.3-36.

33. அவனுடைய (சிவனுடைய) சேஷத்வத்துக்கும் இவனு டைய திருமாலுடைய சேஷித்வத்துக்கும் ப்ரமாணம் ஒரு வெள்ளமென்கிறார் காணும். ஒரு வெள்ளம்-கங்கைநீர்; பல. 5.10.4-36.

34. விடியாத ஊ ரி லே யென்னைவைத்து, விடியுமூரிலே-யிருக்கிறவன். நயமாகச் சொல்லப்பட்ட சுவைக்கூற்று இது. 6.1.9-24.

35. கழுத்துக்கு மேலே ஒன்றைச் சொல்லுகிறிகோள் இத்தனையன்றோ! அது கிடக்கிடுங்கோள். கழுத்துக்கு மேலே ஒன்றைச் சொல்லல்-கழுத்துக்கு மேலே உள்ள வாய், கண் ஆகிய உறுப்புகளில் ஒன்றைச் சொல்லல்; மனத்தொடு படாமல் ஒன்றைச் சொல்லல். 6.2.3-36.

36. அவனிரந்து மண்பெற்றான், இவளுகந்து பொன் பெற்றாள். உகப்பாலே பெறுமது உரை பெற்றிருக்குமே. உரை-மாற்று; கொண்டாட்டம் (பாராட்டு). 6.6.1-36.

37. இளையபெருமாள் கிஷ்கிந்தா த்வாரத்திலே சென்று குணகீர்த்தனம் பண்ணின பின்பிறே படை திரட்டிற்று. குணகீர்த்தனம் பண்ணல்-குணங்களைச் சொல்லிப் புகழுதல்; வில்லின் நாணொலியை எழுப்புதல். 6.8.3-36.

38. அவர்களுக்கு (நாணக் கருங்குழல் தோழியர்க்கு) ஒரு பழி சொல்லுமா போலே சொல்லுகிறாள், அவர்கள் தலையான நறுநாற்றத்துடனே வந்து நிற்கையாலே. மயிர்பட மாந்தும் படியிறே இவள்படி. தலையான-தலையிலே உண்டான; சிறந்ததான. மயிர்பட மாந்துகை-இவர்களுடைய கருங்குழல் அவனுடைய கருங்குழலை நினைப்பூட்டுவதாய் இருத்தலின்,

அதனால் துன்புறுதல்; கவரிமான் மயிர்நீப்பின் உடனே இறக்கும் என்பது தொனிப்பொருள். 7.3.2-36.

39. நாயகனுக்கு அடியாரிறே வென்று கொடுப்பார். அடியார்-திருவடிகள்; தொண்டர்கள். 7.4.1-36.

40. கைக்கடங்கினத்தையுங் கொண்டு மடிச்சரக்கையுங் கொண்டு போனான். கைக்கடங்கினது-வளை. மடிச்சரக்கு-புடவை. 9-7.7-36.

41. செங்கனிவாய் எங்கள் ஆயர் தேவே-இவர்களும் வாய்க்கரையிலே அழுந்துகிறார்கள். வாய்க்கரை-உதடு. வாய்க்கால் ஒரம். 10.3.10-36.

42. அணிமிகு தாமரைக் கையை அந்தோ அடிச்சியோம் தலைமிசை நீயணியாய் - நாநீர் வருகைக்கு இவர்களுடைய முந்திரிகைப் பழம் இருக்கிறபடி. தாமரைக் கையைத் திராட்சைப் பழமாகச் சொல்லும் சுவைக்கூற்று இது. 10.3.5-36.

43. மந்தரம் கடலைக் கலக்கினாப் போலே காணும் இந்த மந்தரை கலக்கினபடி. நயமாகச் சொல்லப்பட்ட சுவைக்கூற்று. பெரி.தி. 3.10.3.

44. சஸ்த்ரத்தாலும் சாஸ்த்ரத்தாலுமிறே ப்ரதிபக்ஷ நிரஸநம் பண்ணுவது. சஸ்த்ரம் - வாள்; சாஸ்த்ரம் - சாத்திர மாகிய நூல். பெரி.தி. 4.9.10.

45. நம்மோபாதி ஜகத்தை ஈரக்கையாலே தடவி நோக்க வல்லன் (மழைக்கண்ணன்). ஈரக்கை-நீரையுடைய கை; அருள் - பாவை, 4-3.

46. கொங்கை கிளர்ந்து - இவளுக்கு நெஞ்சடையாய் இருக்குமே இவை. நெஞ்சடை-இடையூறு; மார்பை அடைத்தல். நா.தி.5.7.

47. விபவம் உண்டான அன்று தொடங்கிப் போகத்திலே அந்வயித்தவரிறே பெரியாழ்வார். விபவம்-அவதாரம்; செல்வம். நா.தி.8.10.

48. பாய்கிற போதே காளியன் தலைகாலாகப் பாய்ந் தான். தலைகாலாக-தலையின்மேல் காலாக; தலைகீழாக. நா.தி. 12.5.

49. வாலியைக் கொன்று ஆலி தன்னைத் துணையாகக் கொள்ளப் பெற்றதே! எதுகைத்தொடை அமைந்த சுவைக்கூற்று இது. பெரு.தி.8.7.

50. ஹம்ஸ பரமஹம்ஸர் பிரியாதே இருக்கிற தேசம். சொல்விளையாட்டாக அமைந்த சுவைக் கூற்று இது. தி.கு.தா.14.

51. இன்னங் குடிகொண்டு உண்ண இருக்கிறீர்களோ என்று ஆசிலே கைவைக்கப்பார்க்கிறாள். ஆசிலே-பாடுவதிலே; ஆயுதத்திலே. தி.நெ.தா.17.

52. இப்பெண்பிள்ளை ஆற்றிலே கெடுத்துக் குளத்திலே தேடுகிறாள்; இதுவன்றோ நிறைவழிந்தார் நிற்குமாறு. ஆற்றில்-திருவரங்கத்தில். குளத்தில்-நீர்மலையில். தி.நெ.தா.18.

53. எய்கை வம்ச தர்மமாய் இருக்கிறபடி. வம்சதர்மம்-வில்லின் இயல்பு; குலத்தின் இயல்பு. தி.நெ.தா.21.

54. குணத்தோடு கூடிய பொருளுக்குக் குணத்தோடு கூடிய பொருளிறே துணையாய் இருப்பது என்கிறாளாகவுமாம். குணம்-பண்பு; வில்லின் நாண். தி.நெ.தா. 21, பட்டர்.

55. இவன் (கண்ணன்) தன்னுடைய வாயை முலையிலே வைக்க ஸ்வரூபாபத்தியைப் பெற்றாள் அவள் (பூதனை). ஸ்வரூபாபத்தி-தாய் வடிவு போய்ப் பேய்வடிவானாள்; வீடு பெற்றாள். மு.தி.18.

56. முகம் பழகின வில்லுக் காணும் இவனை நலிகிறது. முகம் பழகின-முகத்திலே உண்டான; நன்கு பழக்கமுடைய. தி.வி.75.

57. ஒரு கொம்புக்காக இரண்டு கொம்பின் நடுவே விழுந்தான். ஒரு கொம்பு-நப்பின்னை; இருகொம்பு-காளையின் இரு கோடு. பெ.தி.1.2.3.

வ்யங்க்யம்

58. அவன் கால்காண மூப்புப் பிறப்பிறப்புப் பிணி என்கிற இவையெல்லாம் நசிக்கும். இவ்வேப்பங்குடி நீராயிற்று(க்) குடிக்கச் சொல்லுகிறது, விரோதி போகைக்கு. வேப்பங்குடி நீராகத் திருவடிகளைச் சொல்வது வ்யங்க்யம். 3.3.9-36.

59. பெய்வளைக் கைகளைக் கூப்பி.கையில் ப்ரஹ்மாஸ்த்ரம் இருக்கப்படும் பாடே இது. வளையைப் ப்ரஹ்மாஸ்த்ரம் என்பது வ்யங்க்யம். 4.4.2-36.

60. இவள் கார்யந் தளிரும் முறியுமாய்ச் செல்லுகிறது. தளிரும் முறியுமாய் என்று திங்கினைக் குறிப்பது வ்யங்க்யம். தி.வி. 83.

7. பாட வேறுபாடு

வைணவ உரையாசிரியர் காலத்திலேயே சில பாட வேறுபாடுகள் நிலவியுள்ளன. அவற்றைச் சில இடங்களில் எடுத்துக் காட்டியுள்ளனர். சில இடங்களில் உரையமைப்பு அவர்கள் கொண்ட பாடம் யாது என்பதனைத் தெரிவிக்கின்றது. இவ்விருவகையாலும் அறியப்படும் பாட வேறுபாடுகள் இங்குத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

திருவாய்மொழி

1) விடுசெய்ம்மினே - விடுஇசைமினே. 1.2.1-12,24.

2) மதுவார் தண்ணந் துழாயான் - வதுவார் தண்ணந்துழாயான். 1.6.2-36.

3) விராய் மலர்த்துழாய் வேய்ந்த முடியன் - விராய் மலர்த் துழாய் ஏய்ந்த முடியன். 1.7.6-24.

4) அந்தாம வாழ்முடி - அந்தாம வாண்முடி. 2.5.1-24,36. வாணமுடி (வாள்முடி) என்பதே பன்னீராயிரப்படி கொண்ட பாடம்.

5) பாமருவி நிற்கத் தந்த பான்மையே வள்ளலே - "பான்மையேய் - அத்தை ஸ்வபாவமாக வுடையவன் என்னுதல்" 2.6.3-24. "பான்மையேய்ந்த வள்ளலே யென்று சொல்லுகிறாராகவுமாம்" (36) என்பதால் பான்மையேய் என்னும் பாடமும் உள்ளது ஈட்டுரையால் சுட்டப்படுதல் அறியலாம். ஒன்பதினாயிரப்படி "நன்மை பண்ணுகை ஸ்வபாவமாக உடையவனாய் இருக்கிற வள்ளல்" என்று உரை கூறுவதனால் இதனையே பாடமாகக் கொண்டுள்ளது தேற்றம். பன்னீராயிரப்படி இதனையே பாடமாகக் கொண்டுள்ளது.

6) வானேயேத்தும் என் வானவரேறே - அவ்வானவரேறே என்பது பன்னீராயிரப்படி கொண்ட பாடம். 24,36 எம் வானவரேறே என்றே கொண்டுள்ளன. 6,9 என்ன பாடங் கொண்டன என்பது உரையால் புலப்படவில்லை. 2.9.9.

7) தேறேல் என்னை உன் பொன்னடிச் சேர்த்து ஒல்லை - தேறேன் என்பதனையும் 9,24,36 மற்றொரு பாடமாகக் குறிக்கின்றன. 6-இன் உரையால் தேறேன் என்பதே அவர் கொண்ட பாடம் எனத் தெரிகின்றது. 12ல் தேறேல் என்பதே பாடம். 2.9.10.

8) கோகு கட்டுண்டுழலாதார் - கோகு கொட்டு என்றும் பாடம். 3.5.4-12.

9) சுணங்கையெறிந்து - துணங்கை எறிந்து 24இல் உள்ள பாடம். சுணங்கை யெறிந்து என்பதனைப் பாடமாகக் கொண்டு துணங்கை எறிந்து என்பதனைப் பாடவேறுபாடாக 36 குறிக்கிறது. 4.6.7.

10) எங்காரேறு - என் காரேறு என்று மற்றொரு பாடம் 36இல் குறிக்கப்படுகின்றது. 5.4.4.

11) இந்நின்ற நீளாவி - நின்றவென் நீளாவி என்பதனைப் பாடமாகக் கொண்டு மற்றொரு பாடமாக இந்நின்ற நீளாவி என்பதனைக் குறிக்கிறது. 5.4.6-12.

12) தேன்கொள்சோலை - தேங்கொள்சோலை என்றும் பாடம் என்கிறது. 5.5.4-12.

13) ஏந்துபெருஞ் செல்வத்தராய் - ஏய்ந்த பெருஞ் செல்வத்தராய் என்று பிறிதொரு பாடத்தையும் காட்டுகிறது. 5.6.11-12.

14) பகர்க்கதிர் மணிமாடம் - பகற்கதிர் என்பது பிறிதொரு பாடமாக 24,36இல் காட்டப்படுகின்றது. 5.7 8.

15) எரியே பவளக் குன்றே - எரியேய்ந்த பவளக் குன்று என்று 9,24,36 உரை கூறுவதனை நோக்கும்போது எரியேய் பவளக்குன்று என்பதே பாடமாகத் தோன்றுகிறது. 5.8.7.

16) அருள்செய்தொருநாள் - அருள் செய் யொருநாள் என்பது 12 கொண்ட பாடம். அருள்செய்து என்பதனை மற்றொரு பாடமாக அது குறிக்கிறது. 24,36 ஆகியவற்றில் அருள்செய்து என்பதே பாடம். 6.8.8

17) எந்நாளே - எந்நாளேம். 6.10.6-12.

18) முகில்வண்ணா தகுவதோ - முகில்வண்ணா தகவிதோ என்பது பிறிதொரு பாடம். 7.2.2-36.

19) வெள்ளச் சுகம் - வெள்ளைச் சுகம் என்பது பிறிதொரு பாடம். 7.3.1-36.

20) உசாச்செல்ல - உசாய்ச்செல்ல என்பது பிறிதொரு பாடம். 7.5.7-9.

21) பின்னும் நீதுயக்கா - பின்னும் நீ துயக்காய் என்பது 6,9,12,24 ஆகியவற்றில் பாடம். பின்னும் நீ துயக்கா என்பது 36இல் மட்டும் காணப்படும் பாடம். 7.8.6.

22) பெரும்புகழார் இனையர் - பெரும்புகழார் எனையர் என்பது பிறிதொரு பாடமாக 9,24,36 ஆகியவற்றில் காட்டப் படுகின்றது. 8.4.9.

23) விரவார் இசை - விரைவார் இசை. 9இல் பிறிதொரு பாடமாக விரவார் என்பதும், 24,36 ஆகியவற்றில் விரைவார் இசை என்பதும் காட்டப்படுகின்றன. விரவார் என்பதனை மட்டுமே 12 பாடமாகக் கொண்டுள்ளது. 8.9.9.

24) பண்புடை வண்டொடு - பண்புரை வண்டொடு என்பது 9,12,24,36 ஆகியவற்றில் பிறிதொரு பாடமாகக் காட்ட பட்டுளது. 9.5.9.

பெரியாழ்வார் திருமொழி

25) ஆணொப்பார் இவன் நேரில்லை - ஆணொப்பான் இவன் நேரில்லை. பெரி.தி. 1.1.3.

26) விண்ட முல்லை - விண்டின் முல்லை. பெரி.தி.1.1.5.

27) காள நன்மேகம் - கார்நன்மேகம். பெரி.தி.1.5.2.

28) நஞ்சம துண்டவனே - நஞ்சமுதுண்டவனே. பெரி.தி.1.5.4.

29) முண்டத்துக் காற்றா - உண்டத்துக் காற்றா. பெரி.தி.1.8.9.

30) கண்பல பெய்த - கண்பல பெய்து. பெரி.தி.1.9.5.

31) புளியட்டி - புழுகட்டி. பெரி.தி.2.5.8.

32) மின்னலங்காரற்கு - மின்னிலங்காரற்கு. பெரி.தி.2.6.9.

33) மறைந்து வராய் - மறைந்துவரா. பெரி.தி.2.8.1.

34) ஆலம் - ஆரம். பெரி.தி.3.3.1.

35) பாற்கடல் வண்ணா - பார்க்கடல் வண்ணா பெரி.தி.3.3.6.

36) ஓரிலையம் - ஓரிலயம். பெரி.தி.3.4.8.

37) குரவிற்கொடி முல்லைகள் - குரவக்கொடி முல்லைகள். பெரி.தி.3.5.11.

38) கழுவேற்றுவித்த-கழுகேற்றுவித்த. பெரி.தி-4.3.7.

39) அங்குன்னை நானொன்றும் நினைக்க மாட்டேன் - அங்கேதும் நானுன்னை நினைக்க மாட்டேன். பெரி.தி.4.10.8.

40) எம்மானே - அம்மானே. பெரி.தி.4.10.9.

நாச்சியார் திருமொழி

41) ஆரம் பெருகுவானம் - ஆரப்பருகும் வானம். நா.தி. 14.7.

பெருமாள் திருமொழி

42) கொண்டானையல்லால் அறியா - கொண்டானை யல்லதறியா என்பது உரையில் கொள்ளப்பட்டுள்ள பாடம். பெரு.தி.52.

திருச்சந்த விருத்தம்

43) தீயோர் வாயுவைந்தமைந்து காத்து -ஓர்வாயுமைந்து மைந்து காற்று. தி.ச.வி.6.

44) மருப்பொசிந்து உருத்தமா - மருப்பொசித்து உருத்துமா. தி.ச.வி.48.

திருமாலை

45) கவளமால் யானை - களவமால்யானை. தி.மா.45.

திருநெடுந்தாண்டகம்

46) பாருருவி - பாருருவில். தி.நெ.தா.2.

முதல் திருவந்தாதி

47) பொருதுடைவு கண்டான் - பொருது இடைவு கண்டான். மு.தி,1.8.

இரண்டாம் திருவந்தாதி

48) காரணங்கள் தாமுடையார் - தாரணங்கள் தாமுடையார். இ.தி.20.

49) தண்கோட்டு மாமலர் - தண்தோட்டு மாமலர். இ.தி.22.

50) கதி மிகுத்து - கதிர் மிகுத்து. இ.தி.27.

51) பிறப்பொன்றும் நேரார் - பிறப்பென்றும் நேரார். உரையை நோக்கின் என்றும் என்பதே சரியான பாடமாகத் தோற்றுகிறது. இ.தி.42.

52) மற்றல்லால் - மற்றெல்லாம். இ.தி.47.

53) மூத்தீ மறையாவான் - முத்திமறையாவான். இ.தி.96.

மூன்றாந் திருவந்தாதி

54) தெரியுங்கால் - திரியுங்கால். மூ.தி.55.

55) அங்கறகிடரின்றி - அங்கக்கிடரின்றி. மூ.தி.65.

56) தீங்கழல் - தீங்கழை. மூ.தி.72.

நான்முகன் திருவந்தாதி

57) கொண்டுழல்வீர் - கொன்றுழல்வீர். நான்.தி.13.

திருவிருத்தம்

58) அந்தோ வந்துலாகின்றதே - அன்றோ வந்துலாகின்றதே. இஃது உரையால் தெரியும் பாடம். தி.வி.74.

திருவாசிரியம்

59) சிறிதுடன் மயங்க - சிறிதுடல் மயங்க. திருவா.7.

பெரிய திருமொழி

60) பெரும்பதம் திரிந்து - பெரும்பதம் தெரிந்து பெ.தி.1.1.1.

61) நீள்விசும்பூடிரிய - நீள் விசும்பு ஊடு எரிய. பெ.தி.1.7.5.

62) விசும்பிடைச் சோரு மாமுகில் - சேரும் மாமுகில், பெ தி.1 8.7.

63) ஏத்திக் காண்கிலார் - ஏத்திக் காண்கிலா. பெ.தி.2.1.9.

64) சங்கம் எடுத்து - அடுத்து. பெ.தி.2.4.4.

65) நாண்மலர்மேல் - நாண்மலர் தூய். பெ.தி.2.4.10.

66) நீண்டவத்தைக் கருமுகிலை - நீண்டவத்தக் கருமுகிலை. பெரி. தி.2.5.2.

67) விடைவெல்கொடி - விடவெல்கொடி, விறல்வெல்கொடி. பெ.தி.2.9.6.

68) இம்மை - இன்மை. பெ.தி.3.5.3.

69) பனைக்கை வேழம் - பணைக்கை வேழம். பெ.தி.4.5.1.

70) முற்றும் புகுந்து - முற்றம் புகுந்து. பெ.தி.4.5.1.

71) இடும்பை தீர - இடும்பை கூர. பெ.தி.4.5.2.

72) மன்னிய இடும்பை - வவ்விய இடும்பை. பெ தி.4.5.2.

73) செயவென்று உணர்ந்த - செயவென்று உணர்ந்து. பெ.தி.4.10.7.

74) என்மகளை - என் பொன்மகளை. பெ.தி.5.5.9.

75) மல்லார்குடமாடி - மல்லாகுடமாடி. பெ தி.6.3.9.

76) கண்டிறைஞ்சி - கண்டுருகி. பெ.தி.7.4.8. உரையால் உருகி என்னும் பாடமும் உண்டு என்பது தெரிகிறது. மூலத்தில் உருகி என்று இருந்தாலும் இறைஞ்சி என்பதே உரை முதன்மையாகக் கொண்ட பாடமாகும்.

77) எழுகடலும் - எழுசுடரும். பெ.தி.8.3.7. உரையால் எழுசுடர் என்னும் பாடமும் உண்டு என்பது தெரிகின்றது. மூலத்தில் எழுசுடரும் என்று இருந்தாலும் எழுகடல் என்பதே உரை முதன்மையாகக் கொண்ட பாடமாகும்.

78) பெருமை பேசி - பெருமை பேச. பெ தி.9.5.4.

79) அணித்தொத்தை - மணித்தொத்தை. பெ.தி.10.1.8.

80) பெற்ற மாளிகை - பெற்ற மாளியை. பெ.தி.10.1.10. உரைகொண்ட முதற்பாடம் பெற்ற மாளிகை. பெற்ற மாளியை என்பது பாடவேறுபாடாகக் குறிக்கப்பட்டுள்ளது. மூலத்தில் பெற்ற மாளியை என்றே உள்ளது.

81) அரவிந்தம் அடிகள் மாயவனே - அடிகளரவிந்த மாயவனே. பெ.தி.10.5.1.

8. மரபு வழக்குகளும் செறிவுத் தொடர்களும்

(Idioms and phrases)

மரபு வழக்குகள்

அச்சில்லாக் காசு - முத்திரை இல்லாத காசு; செல்லாத காசு. முத்திரையில்லாக் காசு போலப் பயனற்றது என்பது குறிப்பு. எனக்கு வாழ் முதலாகிய பெருமானே! உன்னைப் பெற்று வைத்து இனி ஓர் அச்சில்லாக் காசாய்ப் போனால் போகட்டும் என்று உன்னை விட்டுவிடுவேனோ? என்கிறார் நம்மாழ்வார். 10.10.8-24,36.

அஞ்சாறு குளிக்கு நிற்றல் - சில காலம் வரை இருத்தல். பெருமான் ஒருமுறை அணைத்துவிட்டால் அவன் மார்பிலிருந்து தங்கள் மேற்படும் கோயிற் சாந்தின் மணம் அஞ்சாறு குளிக்கு நிற்கும் என்கின்றனர் பாவை நோற்கும் மகளிர். பாவை, 10-3.

அஞ்சினான் புகலிடமாய் இருப்பவன் - இக்கட்டில் காப்பவன். இராவணன் அரக்கர்களுக்கெல்லாம் வழியடித்துப் புக்கு ஒதுங்கலாம்படி அஞ்சினான் புகலிடமாய் இருந்தான். பெ.தி.5.1.4.

அடிக்கழஞ்சு பெற்றுச் செல்லல் - ஓர் அடிநிலம் ஒரு கழஞ்சு தங்கத்திற்குச் சமமாக இருத்தல்; மேன்மை பெற்றுச் செல்லல் மிகச் சிறந்ததாய் அமைதல் என்பது குறிப்பு. இறைத் தொண்டில் அடிக்கழஞ்சு பெற்றுச் செல்லக் கடவ காலத்தை வீணாகப் போக்கினேன். பெ.தி.1.6.2. திருவரங்கத்தில் வாழ்வது அடிக்கழஞ்சு பெற்றுச் செல்லாநிற்கும். தி.மா.3.

அடுதவளம் தடைப்படுதல் - அடு கவளம் தடைப்படுதல் என்பதன் சிதைவாகத் தோன்றுகிறது. ஈட்டில் இதனை யடுத்து 'அவன் ஸ்வாதந்தர்யம் தலையெடுத்ததோ

தன்னூணை இழக்கிறான்' என வருதல் காண்க. அடப்பட்ட சோறு தடைப்படுதல் என்பது நேர்ப்பொருள். பக்குவமாக இருக்கும் அருள் தடைப்படுதல் என்பது குறிப்பு. பெருமானுக்குச் சுவாதந்தரியம் தலையெடுத்ததாகில் நப்பின்னைப் பிராட்டியின் அருள் தடைப்படும்போலே காணும் என்று அஞ்சுகிறாராம் நம்மாழ்வார். இதனை அவன் ஸ்வாதந்தர்யம் தலையெடுத்ததாகில் அடுகுவளம் தடைப்படும்போலே காணும் என்று குறிக்கிறது ஈடு. 10.4.3-36.

அந்தப்புர விருத்தாந்தம் - முக்கியமான ரகசியங்கள். தீர்ந்த அடியவர் தம்மை அர்ச்சிராதி நெறியிலே திருநாட்டுக்குக் கொண்டுபோதல் தொடக்கமான இறைவனுடைய அந்தப்புர விருத்தாந்தங்களைப் பிதற்றுவோரது புகழைக் கூறுபவர்களே எம்மை உய்யக் கொள்கின்ற நம்பர் என்கிறார் நம்மாழ்வார். 3.3.3-36.

அம்மான்பொடி - கள்வர் குழந்தைகளைக் கவருவதற்காக அவர்கள் மேலே அம்மான் என்று சொல்லி ஒருவகைப் பொடியைத் தூவினால் அந்தப் பிள்ளைகள் அவர்கள் பின்னே 'அம்மான்', 'அம்மான்' என்று சொல்லிக்கொண்டு போவார்கள்; அந்தப் பொடி என்பது நேர்ப்பொருள். மயக்கும் பொருள், கவரும் அழகு என்பவை குறிப்பு. இறைவனுடைய அழகு, சீலம் முதலியன அடியாரை மயக்கும் அம்மான் பொடிகளாகும். 3.3.3-36; இறைவன் முகம் அம்மான் பொடி என்பது பலரும் அறிந்ததொன்று. பாவை, 9-6.

அமணக் கூத்தடித்தல் - வெட்கமற்ற செயல். உயிர்கள் முன்னைய நிலை, நடுவில் நிற்கிற நிலை, மேல் போக்கடி ஆகிய அறியும் இறைவன் முன்பே இருந்து நெஞ்சமே, அமணக் கூத்தடியாதே கொள்ளாய்-பெ.தி.11.8.2. பெருமானே, நீ உடனிருக்கவோ நான் இவ் அமணக் கூத்தெல்லாம் அடித்தேன் என்கிறார் தொண்டரடிப் பொடியாழ்வார். தி.மா.34.

அறுகாதப் பயணம்போதல் - நெடுந்தூரம் செல்லல். பெருமான் அறுகாதப் பயணம் போய்ப் பரமபதத்திலே காணவிராமல் திருமெய்ய மலையில் வந்து அணியன் ஆனான். பெ.தி.11.7.5.

ஆட்டத்து வெளியிலே யானைக் காலிலே துகையுண்ணல் - அரசர்க்குரிய வையாளி வெளியிலே யானைக் காலிலே சிற்றரசர்கள் துகையுண்ணல் என்பது பொருள்.

அபிமானம் அற்றுத் தொழுதல் என்பது குறிப்பு. பெருமான் திருவடி திருத்தோளில் ஏறிப் புறப்படுங்கால், சிவன் முதலான வானவர் ஆட்டத்து வெளியிலே யானைக் காலிலே துகையுண்ணா நிற்பர்கள். 2.2.10-36.

ஆலத்தி வழிக்க வேண்டும்படியான* - பார்வைக் குற்றம் கழிக்க வேண்டும்படியான பொருள். மிக்க அழகுடைய பொருள் என்றபடி கண்டார்க்கு ஆலத்தி வழிக்க வேண்டும்படியான தலைமகளின் கண்கள் இரவும் பகலும் கண்ணீர் சிந்தின. 2.4.10-24.

ஆளிட்டு அந்தி தொழுதல் - தான் சந்தியாவந்தனம் செய்ய முடியாதபோது தனக்காக மற்றொருவரை அமைத்துத் தொழுதல். தனக்காகப் பிறரை அமைத்தல் என்றபடி, திருமால், அடியவர்களை ஆளிட்டு அந்தி தொழாதே தானேயோடி அவர்கள் துன்பங்களைத் தீர்ப்பவன். நான்.தி. 88.

ஆனைக்காலிட்டுத் துகைப்பித்தல் - பெரிதும் வருத்துதல். நாட்டுக்கு அரசனேயாகிலும் அந்தப்புரத்தை (தன் தேவியரை) ஆனைக் காலிட்டுத் துகைப்பித்துச் சேர்ந்து இன்பந்துய்த்தல் ஒண்ணாது. 6.2.0-36.

ஆனைக்குக் குதிரை வைத்தல்* - யானையின் வேகத்தைச் சோதிப்பவர்கள், குதிரையை முன்நடத்தி யானையைப்பின் நடத்துவார்கள்; யானையும் துதிக்கையாலே குதிரையைத் தொடும்படி நெருங்கிச் சென்று பின்னையும் தொட மாட்டாதே ஒழியும். அதுபோலப் பிடிகொடுப்பது போல இருந்து பிடிகொடாது மேம்பட்டிருத்தல் என்றபடி. திருமால் கலவியில் திருமகளுக்கு ஆனைக்குக் குதிரை வைக்கவல்ல அறிவு மேம்பாட்டை உடையவன். 1.1.1-36; 3.10.8-24; 5.5.8-36; பெ.தி. 5.5.8; 7.6.8.

ஆனைத்தாளாயிருக்கை - சன்னலாக இருக்கை; காணும் வாயிலாக இருத்தல். பெருமானின் பங்கயக் கண்கள் அக வாயில் தண்ணளிக்கு ஆனைத்தாளாய் அமைந்திருக்கின்றன. 3.7.1-24.

ஆனைத்தொழில்கள் - மனித முயற்சிக்கு அப்பாற்பட்ட அருஞ் செயல்கள். பிரமன் முதலானோர் மேற்கொண்ட செயல் களை அவர்கள் வழியாலே நடத்தியும், தான் மேற்கொண்ட

செயல்களைத் தானே நடத்தியும் வருகையாலே அவனுடைய ஆனைத் தொழில்கள் எங்கும் காணக்கூடியனவாய் இருக்கும். 2.8.3-36. பெருமான் வராகமாய்த் தோன்றி எப்பொருளும் அசையாதவாறு பூமியை எடுத்துப் பெரிய ஆனைத்தொழில் செய்தான். 7.4.3-36. பெ.திருவந். 42.

இடக்கை வலக்கை வாசியறியாதவர்கள் - இடக்கையின் செயலும் வலக்கையின் செயலும் அறியாதவர்கள் என்பது நேரடிப் பொருள்; அறிவொன்றுமில்லாதவர் என்பது குறிப்பு. கண்ணன், ஐந்து லட்சம் குடியில் இடக்கை வலக்கை அறியாத இடைச்சிகள் கையெடுத்துக் கூப்பிடும்படி வெண்ணெயை அமுது செய்தான். பெ.தி. 4.10.1.

இடு சிவப்பு - மருதாணி முதலியவை இடுவதால் வரும் சிவப்பு என்பது நேர்ப்பொருள். செயற்கை என்பது குறிப்பு. இடைப் பெண்கள், பெருமானை நோக்கி 'இப்போது மேன்மை உனக்கு இடுசிவப்பு, பரிவே (வாத்சல்யமே) இயல்பு என்று உன்னைக் கண்டவாறே நிலையிட்டோம்' என்கிறார்கள். பாவை, 26-6.

இடைச்சுவர்* - இடையில் தடையாக இருக்கும் சுவர்; தடை. இராமபிரான் பிராட்டியை அடைவதற்கு இடைச்சுவரான வில்லை முறித்தான். தி.நெ.தா. 13.

இரண்டடியாக இடுதல் - எளிதாகத் திரிவிக்கிரமன் இரண்டடியால் மூவுலகினையும் அளந்தான்; எளிதாகச் செய்தல். இராமபிரான், இராவணனை நின்ற இடத்திலே நின்று பூவலர்ந்தாற் போலே இரண்டடியாக இடமாட்டாது கொடிய காட்டில் பரற்கற்கள் பாய நடந்து சென்று அழித்தான். பாவை, 24-6.

இராமடம் ஊட்டுவாரைப் போலே - தன் கண் எதிரே வாராது கண்டபடி திரியும் தம் மக்களை அவர்கள் அறியாதவாறு இரவில் மடத்தில் உணவு அருந்தும்படி செய்யும் தாய்மார் போலே, யார் என்று அறியாவண்ணம் மறைந்திருந்து உதவி செய்தல். இறைவன் திருப்பெயர் இராமடம் ஊட்டுவாரைப் போலே முகம் தோற்றாதே நின்று உதவுகிறது. அதனை அறியாத மனிதன் தானே செய்துகொண்டானாக நம்புகிறான். தி.மா. 1.

இருவிலங்காகக் கிடத்தல் - பெரிய விலங்கு போல வழியின் குறுக்கே மறைத்துக் கிடத்தல். பெண்கள் இங்கிருந்தால் தானே மிறுக்குகள் செய்வான் என்று சோலையைவிட்டு ஒருவர் ஒருவராகப் போகத் தொடங்கியபோது பெருமான் ஒற்றையடிப்பாதையில் இருவிலங்காகக் கி ட ந் தா ன். 6.2.8-36.

இலையகலப்படுத்தல் - இலையை விரித்துவைத்துச் சோற்றிற்குக் காத்திருத்தல். பெருவிருப்போடு எதிர்நோக்கியிருத்தல் என்பதுகுறிப்பு. இராமபிரானோடு தனியே இன்பம் நுகரலாம் என்று இலையகலப் படுத்திக்கொண்டு வந்த பிராட்டியைப் பிரிந்து அவன் பத்துத் திங்கள் இருந்தான். 6.10.10-36.

இவரைப் பாடுவித்த முக்கோட்டை - முக்கோட்டை என்பது மலைநாட்டிலுள்ளதோர் அம்பிகையின் தலம். அதனை நினைத்தால் கவிஞர்களுக்குக் கவிதை ஊற்றெடுக்கும் என்பது பண்டைய நம்பிக்கை. திருமாலிருஞ்சோலைமலை நம்மாழ்வாரைப் பாடுவித்த முக்கோட்டை ஆகும். 10.7.5-36.

இவருடைய ஸ்ரீமைத்ரேய பகவான் - ஸ்ரீபராசரர், மைத்ரேயர் மேலும் மேலும் வினாக்களைக் கேட்டதனால் தத்துவங்களை விரிவாகக் கூறினார். மைத்ரேயர் போலத் தூண்டுகோலாக இருப்பதனை ஸ்ரீமைத்ரேய பகவான் என்பர். நம்மாழ்வார் அவா மேலிட்டால் திருவாய்மொழி ஆயிரம் பாடினார். நம்மாழ்வாருடைய ஸ்ரீமைத்ரேய பகவான் அவா என்பர். 10.10.11-36.

உச்சிவீடு விடாதே* - வேலை செய்வோர் உச்சி வேளையில் வேலையை விடுத்து ஒய்வு கொள்வர்; அவ்விடுப்பும் கொள்ளாமல் என்பது நேர்ப்பொருள்; இடைவிடாமல் என்பது குறிப்பு. திருவேங்கடத்தாயன் திருவடிகளைப் போற்றினால் இதற்கு முன்பு உச்சிவீடும் விடாதே சென்ற பிறப்பு இறப்புகள் இனி ஓயும் 3.3.9-24, 36. தென்திருப்பேரெயில், திருநாள் உச்சி வீடு விடாதே செல்லும் ஊர். 7.3.3-24.

உதிரக் கூறை காட்டல் - அடிபட்டவன் குருதிக்கறை படிந்த ஆடையைக் காட்டுவது போலே தன் துயரநிலையினைக் காட்டல். நம்மாழ்வார் பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா

வொழுக்கும் அழுக்குடம்பும் என்று இறைவனுக்குத் தம் உதிரக் கூறையைக் காட்டுகிறார். தி.வி.1.

உரிகூறை கொள்ளல் - நிறையை அழித்தல். பெருமான் தன் பரிவால் குதறிச் சிவந்த கண்ணாலே தன்னை உரிகூறை கொண்டான் என்கிறாள் பராங்குசநாயகி. 5.3.2-24.

உழுதுபால் - குழம்புப்பால் என்பது நேரடிப்பொருள். அந்தப் பால்போல் சுவை மிக்கதாய் இனிமை நிறைந்ததாய் இருக்கும் பொருள் என்பது குறிப்பு. பெருமான் நோக்காலே படுகுலையடிக்கிலும் விடமுடியாதவாறு உழுதுபாலாக அவனது தோள் இருக்கின்றது. பாவை, 4-6.

உன்மத்தங்காய் தின்னப்பண்ணல் - மயங்கச் செய்தல். நம்மாழ்வார் தாம் உறுவது அறியாதபடி சிற்றின்பப் பொருள்களைக் காட்டித் தம்மை இறைவன் உன்மத்தங்காய் தின்னப் பண்ணினான் என்கிறார். 7.1.4-36.

ஊட்டியாக நெரித்தல் - கழுத்தோடு நெரித்தல். மாடுகளின் கழுத்தை ஊட்டி என்று குறிப்பது நாட்டுப்புறப் பேச்சு. உணவாகக் கருதி நெரித்தல், இன்பமாக நெரித்தல் என்றும் பொருள்படும். கண்ணன் நப்பின்னையோடு அணைகைக்குத் தடையாகையாலே எருதுகள் ஏழையும் ஊட்டியாக நெரித்தான். பெ.தி.1.2.3.

ஊமத்தங்காய் - மயங்கச் செய்யும் பொருள். தலைமகன் தலைமகளாகிய இருவரும் இருவர்க்கும் ஊமத்தங்காயானால் தெளிய விரகில்லை. 6.7.0-36.

எட்டாப்பூ - கிட்டுதற்கு அரிய பொருள். எல்லார்க்கும் எளியனாய் இருக்கும் இறைவன் எனக்கு மட்டும் எட்டாப் பூவாய் இருக்கிறான். தி.நெ.தா.29.

எட்டுப்புரியும் கட்டல் - விதையினைக் கோட்டை கட்டுவோர் எட்டுப்புரி கட்டுவார்கள். பொதிந்து வைத்தல் என்பது குறிப்புப் பொருள். தொண்டரடிப் பொடியாழ்வார் பொய்களையெல்லாம் எட்டுப் புரிகட்டித் தாம் வைத்ததாகச் சொல்லுகிறார். தி.மா.33.

எட்டுமிரண்டும் அறியாதவர் - ஒன்றுமறியாதவர். ஆயர் சிறுமியர் கண்ணன்பால் எட்டுமிரண்டும் அறியாத தங்கள் பருவத்தினைப் பார்க்குமாறு வேண்டினர். பாவை, 16-6.

எத்தனை குளிக்கு நிற்கும் - எவ்வளவு காலத்திற்கு நிற்கும். குருகூர்ச் சடகோபனை மதுரகவி மேவிநிற்றல் எத்தனை குளிக்கு நிற்குமென்று வினவினால், காலமெல்லாம் நிற்கும் என்கிறார். க.நு.சி.2, நஞ்சீயர்.

எத்திறம் என்னப் பண்ணல் - நம்மாழ்வார் கண்ணன் வெண்ணெய் களவு கண்ட செயலை நினைத்து எத்திறம் என்று மோகித்தார், அதனையொட்டி 'எத்திறம்' என்பதனை மயங்க வைப்பதனையும் வியப்படையச் செய்வதனையும் குறிக்கப் பயன்படுத்துகின்றனர். இறைவன் சீர் முற்றறிவினரையும் 'எத்திறம்' என்னப் பண்ணும் தன்மையுடையது. பாவை, 27-3. தலைமகள் தலைமகன் பேச்சினைக் கேட்டு எத்திறம் என்கிறாள். தி.வி.15. இவருடைய எத்திறம் இருக்கிறபடி. க.நு.சி.1, நஞ்சீயர்; அம.1.பெரி; பாவை, 5-3.

எதிரம்பு கோத்தல் - பகைத்தல். இறைவன் உலகில் இராமன் தொடக்கமான அவதாரங்களை மேற்கொண்டு வந்தபோது இராவணன் முதலானோர் எதிரம்பு கோத்து நின்றனர். தி.மா.0.

எருது கெடுத்தார்க்கும் ஏழே கடுக்காய் - எதிர்பாராமல் பயன் தருதல். எருதினை இழந்தவன் அதனைக் கண்டுபிடித்தற்கு வழி என்ன? என்று ஒருவனைக் கேட்க, அவன் விளையாட்டாக "ஏழு கடுக்காய் சாப்பிடு" என்றான். அவனும் மெய்யென்று அதனைத் தின்று குளக்கரையிலே இருக்க, அங்கே எதிர் பாராமல் எருதும் வந்தது. அதனை அவன் ஓட்டிக் கொண்டு வீட்டிற்கு வந்தவாறே, ஒரு மலடி "என் மலடுநீங்க வழிசொல்" என்றாள். அவன் "நான் அறியேன் எனக்குச் சொன்னவனைக் கேள்" என்றான். அவளும் அங்கே போய்க் கேட்க, அவனும் "ஈனாப் பெண்டிர்க்கும் ஏழே கடுக்காய்" என்றான். அவளும் கடுக்காய் உண்ண அவள் வயிற்றில் இருந்த அழுக்குகள் நீங்கிக் கருவுற்றாள். இதனை ஒட்டி வந்த மரபுதொடர் இது. விடணன்தனது சரணாகதி இராமலக்குவரிடம் பயன் தந்தது கொண்டு எருது கெடுத்தார்க்கும் ஏழே கடுக்காய் என்னும் கணக்கில் பெருமாளுக்குக் கடலைச் சரணம்புக அடுக்கும் என்றான். தி.வி.42.

எல்லாக் குளிக்கும் நிற்கும் - காலமெல்லாம் நிற்கும். தொண்டரடிப்பொடியாழ்வார் இறைவனை வணங்கும் தனது தன்மை எல்லாக் குளிக்கும் நிற்கும் என்கிறார். தி.மா.35.

எலி எலும்பர் - புல்லிய ஆற்றலுடையவர். எலி எலும்பரான நாம் நம்முடைய செயலால் பாவத்தைப் போக்குவது அரிது. பெ.திருவந். 31.

எழுதிக் கொள்ளல்* - அடிமையாக் கொள்ளல். கண்ணன் நம்மாழ்வாரைத் தன் வடிவழகாலே எழுதிக்கொண்டான். 2.5.5.36.

ஏறிப் பாயாத மேடு - பரவாத இடம். சக்கரவர்த்தி திருமகனார் ஆண்பிள்ளைத்தனம் ஏறிப்பாயாத மேடு இல்லை. பெ.தி.2.8.2.

ஒருகலத்தில் உண்டு எதிர்த்தல் - மிகவும் ஒன்றுபட்டு எதிர்த்தல். பகைவர்கள் எல்லோரும் ஒரு கலத்தில் உண்டு எதிர்த்தாலும் விரல் நுனியாலே அழிக்கும் ஆற்றல் பெற்றவன் கண்ணபிரான். தி.பல்.1.

ஒரு குடநீரோடே போகும் உறவு - எளிதில் ஒழித்துக்கொள்ளக் கூடிய தொடர்பு. ஆய்ச்சியர்கள் தங்களுக்கும் கண்ணனுக்கு மிடையே உள்ள உறவு ஒரு குடநீரொடே போகும் உறவன்று என்றார்கள். பாவை, 28-3,6.

ஒரு குலையில் காய் - ஒரு கூட்டத்தில் உறுப்பினர். திருமங்கை யாழ்வார் சம்சாரிகளில் ஒருவரான தம்மை நாமும் ஒரு குலையில் காயன்றோ? என்று எண்ணி ஐயுற்றுத் தாம்படுத்த படுக்கையைத் தடவிப் பார்த்தார். பெ.தி.2.6.1.

ஒரு பயணம் எடுத்துவிடல் - ஒரு பயண தூரம் கடந்து வருதல். ஒரு நிலை கடந்து வருதல் என்பது குறிப்பு. திருநாட்டில் வீற்றிருக்கும் பெருமான் ஒரு பயணம் எடுத்துவிட்டுக் கேசவனாக அவதரித்தான். 1.5.6.36.

ஒரு மஹாபாரதம் - மகாபாரதம் என்னும் இதிகாசம் பல சுலோகங்கள் கொண்டது. மிகுதி, பல என்பது குறிப்புப் பொருள். யான் செய்த தீவினைகள் சில அல்ல; ஒரு மகாபாரதம். 6.1.9-24;36. பெருமான் செங்கனிவாயின் அழகு பேசத் தொடங்கின், ஒரு மஹாபாரதத்துக்கு வரும். 7.3.8-24.

ஒரு மார்வெழுத்தாக்கிக் கொள்ளல் - அடிமைப்பட்டவர்கள் தம்மை அடிமையாகக் கொண்டவன் பெயரை மார்பில் எழுதிக் கொள்வர்; அடிமையாக்கிக் கொள்ளல் என்றபடி.

பெருமாளும் இளையபெருமாளும் தம் குணத்தாலே நாட்டையெல்லாம் ஒரு மார்வெழுக்தாக்கிக் கொண்டிருந்தார்கள். 5.10.0-36.

ஒருவர் கூறை எழுவர் உடுக்கும்படி - கலங்கும்படி. இராமன், மதிளையுடைத்தான இலங்கை ஒருவர் கூறை எழுவருடுக்கும்படி கைக்கெட்டிற்றோர் அம்பை விட்டான். பெ.தி. 4.3.6.

ஒரு விழுந்தான் கிடக்கை - புகழற்ற பொருள். கைகேயி அயோத்தியில் பிறந்தவளாகில் பெருமாளுக்குத் தீங்கு செய்திருக்கமாட்டாள். அவள் எங்கோ பிறந்த ஒரு விழுந்தான் கிடக்கை. 7.5.1-36.

ஒவ்வோக் குழியிடாதே இருத்தல் - ஒ, ஓ என்று மணலில் குழி குழியாக எழுதி, அதில் பிள்ளைகள் விரலால் எழுதப் பழகுவது ஒவ்வோக் குழியிடல். அடியெடுத்து வையாத நிலை என்பது குறிப்பு. இறைவனைப் பற்றி ஒவ்வோக் குழியிடாதே இருப்போர்கள் உலகில் பலராவர். 5.6.2-36.

ஓட்டையோடத்தோடே ஒழுகல் ஓடம் - ஓட்டையோடம் பெரிய துளையுள்ளது. ஒழுகலோடம் சிறுதுளையுடையது. இரண்டும் பயனற்றவை என்பது குறிப்பு. திருவிண்ணகர்ச் சேர்ந்த பிரானைத் தவிரப் பிற தெய்வங்கள் ஓட்டையோடத் தோடே ஒழுகல் ஓடமாய்க் கழுத்துக்கட்டியாய் இருப்பவை யாகும். 6.3.7-24.

ஓலக்க வார்த்தை - அவையில் கூறும் போலியாக (டம்பமாக)ச் சொல்லும் வார்த்தை, உறுதியற்ற பேச்சு. நெஞ்சே! இராம பிரானைப் பரம்பொருள் என்று அறிந்து அவனை வணங்கு என்று யான் சொல்வதை ஓலக்க வார்த்தையாகக் கருதாமல் திண்ணமாக எண்ணுவாயாக என்கிறார் நம்மாழ்வார். 2.7.10-36.

ஓலைப்புறத்தே கேட்டுப்போதல் - நூல்களால் அறிதல். பெருமான், நாராயணன் என்னும் சொல்லின் பொருளை நாராயணாநுவாகமாகிற ஓலைப்புறத்தே கேட்டுப் போகாதே கண்ணாலே கண்டு அனுபவிக்கலாம்படி வாமனனாய் அவதரித்தான். தி.நெ.தா.5.

கடலோசையாதல் - பொருளற்ற ஒலியாதல். இராமன் இருடிகளுக்குப் பண்ணிய உறுதிமொழி கடலோசையாகாமல் அதனைச் செய்து தலைக்கட்டுகையில் எண்ணங்கொண்டான். தி.நெ.தா.21.

கடலோடல் - கடல் கடந்து செல்லல். தொல்லைப்பட்டு நெடுந் தொலைவு செல்லல் என்பது குறிப்பு. இன்துணையான சேவலின் காற்சிவப்பு, பேடை பக்கத்து வயலை விடுத்துக் கடலோட வேண்டும் என்றாலும் அதனைச் செய்யலாம்படியான அழகுடன் விளங்கியது. பெ.தி.9.6.3.

கண்ணில் மணல் தூவினபடி - கண்ணிலே மணலைத் தூவுதல்; ஏமாற்றியபடி. பெருமான் எப்போதும் தன்னைப் பார்த்துக் கொண்டே இருக்கும் விண்ணோர் கண்ணில் மணல் தூவிக் கண்ணனாய் வந்து பிறந்து வெண்ணெய் திருடி உண்டான். தி.வி. 21; 5.3.5-36.

கண்ணிலே வெண்ணெயிட்டுக்கொண்டு நோக்குதல் - விழிப்போடு நன்கு நோக்குதல். இறைவன் மூவுலகினையும் படைத்துத் தாயைப் போலக் கண்ணிலே வெண்ணெயிட்டுக் கொண்டு நோக்குகிறான். 7.6.1-36.

கதிர்பொறுக்குதல்* - தேடிச் சேகரித்தல். ஏழைகள் அறுவடைக்குப் பின் வயலில் சிந்திக் கிடக்கும் கதிர்களைப் பொறுக்கிச் சேர்ப்பர். அதுபோலத் தேடிச் சேகரித்தல். கதிர் பெருக்க - பெ.தி.8.1.6, கதிர் பெறுக்கி. பெரி.தி.4.8.9, பாவை, 24-6 ஆகியன கதிர்பொறுக்கி என்பதன் சிதைவு. பெருமான், தானே விழைந்து காட்டக் கண்ட அனுபவத்திற்குப் பிரமன் முதலியோர் கதிர்பொறுக்கிக் கண்ட அனுபவம் ஈடாகாது. நான். தி.82.

கதே ஜலே ஸேது பந்தமாதல் - சென்ற வெள்ளத்திற்கு அணை கட்டுதல். அதுபோலக் கடந்த நிகழ்ச்சி குறித்து வருந்துதல். பின்னர் கதே ஜலே ஸேது பந்தமாகாமே, நான் வாழும் போதே அவன் இருக்கும் திருப்பேரெயிற்கு என்னை அழைத்துச் செல்லுங்கள் என்கிறாள் தலைமகள். 7.3.5-36.

கப்படங் கட்டிக்கொண்டு செல்லல் - அழுக்குத் துணி கட்டிச் செல்லல்; அதாவது இரத்தல். தேவர்கள் திருமாலிடம்

கப்படங் கட்டிக்கொண்டு சென்று தம்குறைகளைச் சொல்ல அவன் கண்ணனாய் வந்து அவதரித்தான். 6.4.5-36.

கருமாரி பாய்தல் - காஞ்சி மாநகரத்தின் நடுவே குளத்திலே நட்டிருக்கும் இரண்டு வயிரக்குச்சு நடுவே உயரே இருந்து குதிக்கை, அரிய செயல் செய்தல். நப்பின்னைப் பிராட்டியின் அழகினையும் இனிமையினையும் நோக்கும்போது கருமாரி பாய்ந்தாலும் தகும் என்னும் எண்ணம் தோன்றும். 5.10.2-36.

கரைப் புரட்சி - மிகுதி. பெரியாழ்வாருக்கு மன அனுபவத்தினுடைய கரைப் புரட்சியாலே இராம கிருட்டின அவதாரங்களை நன்றாகக் கண்டதாகவே தோற்றுகிறது. பெரி.தி. 4.1.0.

கரைமரம் சேர்தல் - மரக்கலத்தைக் கரை சேர்த்தல். உய்வித்தல் என்பது குறிப்பு. பெருமான் மனிதனைக் கரைமரஞ் சேர்த்தற்காகத் தன் அருளினால் உடல் முதலான உறுப்புகளை அவனுக்குத் தருகின்றான். க.நு.சி. 0, அழகு.

கழுத்துக்கட்டியாதல் - தடையாதல். பெருமானைத் தவிர ஏனைய தெய்வங்கள் கழுத்துக்கட்டிகளாதலால் அவனே பற்றத் தகுந்தவன். நான்.தி.8.

கறுப்புடுத்துப் புறப்படல் - மாறுவேடமிட்டு மறைவாகச்செல்லல். அக்காலத்தில் அரசர்கள் தங்கள் காதலியரைச் சந்திக்கக் கறுப்புடுத்துச் சென்றனர். தி.நெ.தா.23.

காட்டிலெரி(றி)த்த நிலாவாய்ப் போதல் - வீணாதல். திருத்தாயார் தலைவியின் கண்ணநீர் காட்டில் எரி(றி)த்த நிலாவாய்ப் போக நீ வெறுக்கலாகாது என்று பெருமானிடம் கூறுகிறாள். 2.4.10-24.

காணவந்த சோழர் - இதற்கு அரசுரிமை காரணமாகத் தம் நாட்டில் எங்காவது நடக்கும் வைஷ்ணவர்களின் வழிபாட்டுக் கோஷ்டியைக் காண வந்த சோழர் என்று பொருள் காண்பார் வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமி. (ஸுதர்சனர் பதில், முதல் சதகம், 53 ஆம் வினாவின் விடை) நாடகத்தில் காதல் விளையாட்டுக்களைக் காண வந்த சோழ அரசன் என்று பொருள் காண்பர் புத்தூர் எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார். இத்தொடர் தி.வி.6,

பெ.தி.3.1.9, பெரி.தி.4.9.10, க.நு.சி.11, நஞ்சீயர் உரைகளிலும் வந்துள்ளது. ஸர்வேச்வரன் காண வந்த சோழரைப் போலே இருக்க எதிரிகளை முடிக்கும் ஆற்றல் உடையது கருடன் - திருவிருத்த உரை. பாரதப் போரானது காண வந்த சோழர்க்கும் தங்களை நோக்குகைக்குக் கையிலே ஓர் ஆயுதம் பிடித்துக்கொண்டு நிற்க வேண்டும்படி அச்சத்தைத் தோற்றுவிப்பதாக இருந்தது - பெரிய திருமொழி உரை. அசுர அரக்கர்களோடு பெருமான் போரிடும் இடத்தில் அந்தப் போரைப் பெரிய திருவடி தானே நடத்தப் பெருமான் காண வந்த சோழரைப் போல அதனைக் கண்டுகொண்டு அவன் தோளிலே இருப்பான் - பெரியாழ்வார் திருமொழி மணவாள மாமுனிகள் உரை. இவற்றின் அடிக்குறிப்புகளில் போரைக் காணவந்த சோழர் என்னும் விளக்கம் காணப்படுகிறது.

கண்ணி நுண் சிறுத்தாம்பு 'உரையில் நஞ்சீயர், மதுரகவிகள் காண வந்த சோழரைப் போல இருக்க அவருடைய அன்பே பாசுரங்களை அருளிச் செய்தது என்கிறார். இதில் போர்க்களமோ நாடகமோ இடம் பெறவில்லை.

இவ்விளக்கங்கள் அனைத்தையும் ஒப்பு நோக்கும்போது காண வந்த சோழர் என்பதற்குப் போர்க்களத்தையோ நாடகத்தையோ காண வந்த என்று பொருள்கொள்வதைக் காட்டிலும் மரியாதை நிமித்தம் காண்பதற்கு விருந்தினராக வந்த என்று பொருள்கொள்வது சிறப்பு. "உங்களைக் காண வந்தேன்" என்று பேச்சு வழக்கிலும் வருவது கருதற்குரியது. காண்பதற்கு வந்தவர் நிகழ்ச்சியில் பங்கு பெறாமல் வறிதே ஒதுங்கி நிற்றல் போல நிற்பது என்பது பொருளாகும்.

காதக்குதிரை கட்டி வருதல் - ஓடிவருதல். பெருமான் பெரியாழ்வார் நெஞ்சத்தில் தங்குவதற்குத் திருப்பாற்கடலைவிட்டுக் காதக்குதிரை கட்டி வந்தான். பெரி.தி. 5.4.9.

கார்த்திகைக்கு ஒரு பொய் சொல்லல் - எப்போதோ ஒருமுறை பொய்கூறல். நாட்டார் கார்த்திகைக்கு ஒரு பொய் சொல்ல வேண்டினால் அவர்களும் தன்பக்கல் வந்து கேட்டுப்போம்படி பொய்யெல்லாம் பொதிந்துகொண்ட போழ்க்கனாகத் தாம் இருந்ததாகக் கூறுகிறார் தொண்டரடிப்பொடியாழ்வார். தி.மா.33.

காலன்கொண்டு மோதிரமிடுமாபோலே - கால புருஷ தானம் வாங்கி அந்தத் தங்கத்தைக்கொண்டு மோதிரமிடுவது. இயல்புக்கு மாறாக வருவது என்பது குறிப்பு. திருமங்கை மன்னன் காலன்கொண்டு மோதிரமிடுமா போலன்றிக்கே தம் தன்மைக்குத் தகுந்த பேற்றினை இறைவன் தரவேண்டு மென்று விண்ணப்பிக்கிறார். பெ.தி.5.8.6.

கிடந்தானைக் கண்டேறுமாபோலே - (கிடந்த ஆனை கண்டு ஏறுமாபோலே) சூர்ப்பணகை போலே கிடந்தானை கண்டேறாமல், முறையோடு நம்மாழ்வாரைப் பற்றி அவர் விரும்பிய காரணத்தால் பெருமானை விரும்புகிறார் மதுர கவிகள். க.நு.சி.3, நம்பிள்ளை.

கிழங்கெடுத்தல்* - அடியோடு அழித்தல். இராவணவனைக் கிழங் கெடுத்த சிறப்பு இராமனைச் சாரும். பெ.தி.6.3.5.

கிழிக்குறை - நிறைந்திராமல் குறைந்திருக்கிற பணப்பை; இங்கு நிறைவின்மையைக் குறிக்கும். இராமனுக்குப் பரதனோடும் சத்துருக்கனனோடும் கூடப் பெறாத கிழிக்குறையாலே, கூட நிற்கிற இளையபெருமாளோடும் கூடியிருப்பதாய்த் தோற்ற வில்லை. 2.4.0-36.

கீழ்வயிற்றுக் கழலை அறுக்க வருதல் -'கீழ்வயிற்றில் எழுந்த கட்டியைப் போன்று துன்புறுத்த வருதல். பரத்துவாச முனிவர், கைகேயியின் மகனான தான் கீழ்வயிற்றுக் கழலை அறுக்க வந்துள்ளதாக நினைக்கிறார் என்று பரதன் எண்ணி னான். 1.1.3-36.

கீழ்விழியாலே பார்த்தல் - ஆசை தோன்றப் பார்த்துப் போதல். பெருமாள் காட்டிற்குப் புறப்பட்டபோது நாட்டின்மீது விருப்பத்தால் கீழ்விழியாலே பார்த்துப் போனார் என்று கூறுவது தவறுடைத்தாகும். தி.வி.51.

கீழோலையிடல் - மறைவாக ஒத்துழைத்தல். பரதன், கைகேயி பண்ணின குற்றத்திற்கு நாமும் கீழோலையிட்டோம் என்று நாட்டார் நினைத்திருப்பதொன்றுண்டு. அக்குற்றம் நம்பால் இல்லை என்று அறிவிக்க வேண்டும் என்று விழைந்தான். 6.7.3-36.

குசை தாங்குதல் - வேகத்தில் செல்லும் குதிரையைக் கடிவாளத்தை இழுத்துப் பிடித்து நிறுத்துவது போல

நிறுத்தல். திரிவிக்கிரமன் தனது திருவடிகளைப் பூமியை அளக்கப் பயன்படுத்திக் குசை தாங்கின அருமையினைத் திருமங்கை மன்னன் கொண்டாடுகிறார். தி.நெ.தா.21. பெருமான் தன் பாத பங்கயத்தை நிமிர்த்தது போல அதனைப் பூமியளவிலே குசை தாங்கினபடியும் வியப்புக் குரியது. 9.2.2-24.

குடநீர் வழிந்து போகை - நீங்குதல், வழிதல். உலூபி என்பவள் தன்னுடைய இயற்கைப் பண்புகளான நாற்குணங்களும் குடநீர் வழிந்து போக, அருச்சுனனை மணந்து தனது நகரம் அடைந்து இன்பமாக வாழ்ந்தாள். பெ.மடல்.கண்ணி, 57.

குடநீர் வார்க்கும்படி - தொண்டு செய்யும்படி. நப்பின்னைப் பிராட்டி புருவம் நெறித்த இடத்திலே குடநீர் வார்க்கும்படி அவள் நினைவே தன் நினைவாக இருப்பவன் கண்ணன். பாவை, 19-6.

குதறியிருத்தல் - கலங்கிச் சிவந்திருத்தல். பெருமான் கண்கள் செல்வத்தாலும் குதறி இருந்தன. பாவை, 1-3.

குமர் இருந்து போதல் - பயனின்றிக் கழிதல். பெருமான் தலைமகளின் வடிவழகிலே துவக்குண்டு அவள் உயிர்க்குணத் தளவும் செல்லமாட்டாதவன் ஆயினான். அதனால் அவளுடைய உயிர்க்குணங்கள் குமர் இருந்து போயின. 2.8.1-36.

குமர் கிடந்து போதல் - குமரியாய் மூத்து அனுபவிக்கத் தகுதி யில்லாதே கழிதல். தலைமகளின் கண்ணில் பெருமானும் அவனுடைய உடைமைகளும் ஒரு மூலையிலே அடங்கிக் கிடக்க, அவள் கண்ணின் ஏனைய பரப்பும் பருவமும் குமர் கிடந்து போயின. 6.7.10-36.

குமிழி நீர் உண்ணல் - அமிழ்ந்து போதல். தலைமகளின் பேச்சு, அவனுடைய ஆபரண அழகிற் போன்று திருப்புலியூர்ச் சோலையிலும் அவ்வூரிலும் குமிழி நீர் உண்டாளாய் இருத்தலைக் காட்டியது. 8.9.2-36.

குராலாயம் ஏறி ஓடி இருத்தல் - மங்கலான நிறமாக இருத்தல். பிரம உருத்திரர்கள் மயிர்போலே குராலாயம் ஏறி ஓடி இருக்கையன்றிக்கே பெருமான் திருக்குழல் கண்டவர்

கண்களிலே அஞ்சனம் எழுதினாற்போலே இருக்கிறது. தி.நெ.தா. 21, பட்டர்.

குருகுலவாஸம் பண்ணல் - கற்றல். திருமால் தன் எளிமைப் பண்பினைத் திருமகளிடம் குருகுல வாஸம் பண்ணிப் பெற்றான். பாவை, 9-3.

குளப்படியாய் இருத்தல் - சிறிதாய் இருத்தல். பெருமானின் அன்புக்கு முன்னே தங்கள் அன்பு குளப்படியாய் இருத்தலை இடைப்பெண்கள் உணர்ந்தனர். பாவை, 26-6.

குறங்கு குத்த உறங்குதல் - சிறு குழந்தைகளின் தொடையில் தட்ட அவை சுகமாக உறங்கத் தொடங்குகின்றன. அது போலச் சுகமாக அமைய என்பது குறிப்பு. பாவைப் பெண்கள் உறங்கும் ஒருத்தியை நோக்கி, "எங்கள் பாட்டுக் குறங்கு குத்த உறங்குகிறாயோ?" என்று வினவுகின்றனர். பாவை, 7-3.

குறைக்கொள்ளி - எரிந்த கட்டை. இடைப்பெண்கள் விரகந்தின்ற குறைக்கொள்ளியான தங்கள் உடலைக் கண்டு கண்ணன் புண்படும்படி அவனிருந்த இடம் சென்று காட்டுவோம் என்றனர். பாவை, 8-3.

குனியக் குறுணி பற்றுங் காலம்* - எளிதில் பெரும்பயன் கிட்டும் காலம். தலைமகள், "பெருமான் அவதரித்து எல்லோர்க்கும் எளியனாய்க் குடக் கூத்தாடின காலம் குனியக் குறுணி பற்றுங் காலம்; அக்காலத்தில் அவனை நாடாது வாளா இருந்தேனே" என்று வருந்துகிறாள். சி.மடல், கண்ணி, 57.

கூட்டுப்படையாகக் கொள்ளல் - துணையாகக் கொள்ளல். பெருமான், திருத்துழாயைத் தனக்குக் கூட்டுப்படையாகக் கொண்டு தன்னை நலிவிக்கிறான் என்று தலைவி கவல்கின்றாள். தி.வி. 51.

கூட்டெழுத்து - சேர்த்து எழுதப்பட்ட எழுத்து. அதனைப் படிப்பது அரிது. அதுபோல எளிதில் உணர முடியாதது என்பது குறிப்பு. இடைப்பெண்களை நோக்கிக் கண்ணன் "நீங்கள் என்பால் அன்புடையவர்கள் என்கிறீர்கள். யான் அறிவேனோ அக் கூட்டெழுத்தை?" என்கிறான். நா.தி.1.7.

கூடு கட்டல் - உள்ளே அடைத்து வைத்தல். அருச்சுனன் கண்ணனிடம் கட்டுக் கடங்காக் காற்றைப் பிடித்துக் கூடுகட்டி

னாலும் தன் நெஞ்சைப் பிடித்துத் தடுத்து நிறுத்த முடியாது என்றான். பெ.தி. 1.1.4.

கைக்குறியாப்பை வாங்குதல் - அகப்பையாலே கடன் வாங்குதல்; ஒரு பொருளைக் கடன் வாங்குகிறவர்கள், "கைக்குறியாக (கையளவாக)த் தாருங்கள்; அகப்பைக் குறியாய்த் தாருங்கள்" என்பர்; இங்குக் கடன்வாங்குதல் என்பது பொருள். இறைவன் அருள் என்னும் குணத்தினைக் கைக்குறியாப்பை வாங்குவது திருச்சக்கரத்தினிடமிருந்தே யாகும். 1.4.6-36.

கைப்பறி பறிக்கை - மரத்திலுள்ள பழம் முதலியவற்றைத் துறட்டியின் துணையின்றிக் கையாலே முடிந்த அளவு எட்டிப் பறித்தல்; தானே முயன்று அறிதல் என்பது குறிப்பு. பந்தோடு என்னும் பெரிய திருமொழியைக் கைப்பறி பறிக்கையன்றிக்கே ஆசாரியர்களிடம் கற்றவர்கள் திருநாட்டில் இன்பம் நுகர்வர். பெ. தி.5.5.10.

கையோலை செய்து கொடுத்தல் - அறுதியிட்டுக் கொடுத்தல். பேற்றினை அறுதியிடுகிற சமயத்தில் திருமுகத்தைப் பார்க்கில் உறுதி குலையும் என்று நம்மாழ்வார் கவிழ்ந்திருந்து கையோலை செய்து கொடுக்கிறார். 2.9.4-36.

கைவழி மண் - குயவன் கையில் உள்ள மண் அவன் விருப்பப்படி குடமாகவும் சட்டியாகவும் மாறுதல் போலத் தலைவன் விருப்பப்படி நடத்தல். அரக்கர்கள், இராவணனுக்குக் கைவழிமண்ணான அடியவர்களாய் அவன் சொன்னதைச் செய்துவந்தார்கள். க.நு.சி.4, அழகு.

கொண்டைக்கோல் நாட்டுதல் - மடுக்களில் பள்ளங்களுக்கு அடையாளமாகக் கொண்டைக்கோல் நாட்டுதல் வழக்கம்; இங்கு அடையாள மிடுதல் என்பது பொருள். திருமங்கை மன்னன் தம் பாட்டில் வாமனனுடைய வெற்றியில் தமக்குண்டான மிகுந்த விருப்பத்தால் அளக்கும் இடத்திற்குக் கொண்டைக்கோல் நாட்டுகிறார். தி.நெ.தா.5.

கொண்டை மேலே காற்றடிக்கத் திரியப்பெறுதல் - சுகமாக இருத்தல். இறைவனைப் பற்றியவர் உலகில் எக்கவலையுமின்றிக் கொண்டை மேலே காற்றடிக்கத் திரிவர். தி.வி.23.

கொம்பது பருத்தியாக அங்காடி பாரித்தல் - செடியிலே பருத்தி இருக்கும்போதே புடைவையானதாகக் கருதி விற்கக்

கடைபரப்ப நினைத்தல். ஒன்றைக் குறித்து அதிகமாகக் கருதுதல் என்பது குறிப்பு. பெருமான் கொம்பது பருத்தியாக அங்காடி பாரித்துத் தீவினையாராகிய தம் நெஞ்சில் பரமபதத்தைக் காற்கடை கொண்டுவந்து தங்கினான் என்கிறார் நம்மாழ்வார். 9.7.5-36.

கொள்கொம்பு மூடுதல் - இதற்கு, "கொள்கொம்பானது நட்டுக் கொண்டிருக்குமாபோலே, வணங்காதிருக்கையாய் 'நநமேயம்' என்றிருக்கையைச் சொல்லுகிறது" என்பது அப்பு அரும்பதம். இது சரியன்று. கொள்கொம்பு - சுள்ளிக்கால்; பற்றுக்கொம்பு. மூடுதல் - சூழ்ந்து மறைத்து நிற்றல். கொடியைச் சுற்றி அது படர்தற்கு ஊன்றப்படும் கொம்பு மறையுமாறு கொடி தழைத்து மறைத்தல் என்பதே பொருள். "மிகும் தேவும் - தன்னோடே விகல்பிக்கலாம்படி கொள்கொப்பு மூடப் படர்ந்த தேவ ஜாதியையும்" (2.2.5-24)மிகுதல் என்று பொருள் காட்டுவது காண்க. இலங்கை, அரண்கள் மிகுந்து கொள்கொம்பு மூடிக் கிடந்ததால் அதனை அருகே தங்கி வெற்றிகொள்ளக் கருதித் திருப்பிரிதியை இடமாகக் கொண்டான். பெ.தி.1.2.2.

கோல் விழுக்காட்டாலே - தற்செயலாக. பெருமான் பிராட்டி முகத்தைப் பார்த்துப் புன்முறுவல் செய்ய அது கோல் விழுக்காட்டாலே இன்ப விளையாட்டாக முடிந்தது. 3.10.7-36.

கோற்கீழ்க் கன்றாய் நடக்கை - அடக்கமாய் நடக்கை. கண்ணன் நந்தகோபன்முன் கோற்கீழ்க் கன்றாய் நிற்பான். பாவை, 1-6.

சமிதை பாதி சாவித்திரி பாதியாக - (ஸமிதை பாதி ஸாவித்ரீ பாதியாக என்பது உரையில் காணப்படும் வடிவம்). உபாகர்மாவின் பிற்றைநாள் பிரம்மசாரிகள் காயத்திரி மந்திரத்தை ஆயிரத்தெட்டுத் தடவை சொல்லி ஆயிரத்தெட்டுப் பலாசமரத்தின் சுள்ளிகளை நெருப்பில் ஓமம் செய்தல். (சமிதை - பலாசமரத்தின் சுள்ளிகள்; சாவித்திரி - காயத்திரி மந்திரம். 2.7.1-36. புருஷோத்தம நாயடு அடிக்குறிப்பு). அரை குறையாக என்பது குறிப்புப் பொருள். சமிதை பாதி சாவித்திரி பாதியன்றிக்கே நாராயணனுடைய அருளாலே தம்மைச் சேர்ந்தார் கீழும் மேலும் உள்ள ஏழ்ஏழ்

பிறப்புகளிலும் இறைவனுக்குத் தமரானார் என்று நம்மாழ்வார் கூறுகிறார். 2.7.1-36.

சரக்குக் கட்டிப் புறப்பட்டு நிற்றல் - தயாராக இருத்தல். பெருமான் ஆழ்வாருக்கு முன்னே சரக்குக் கட்டிப் புறப்பட்டு நின்று 'ஆழ்வீர் வாரீரோ வாரீரோ' என்று பதறாநின்றான். 10.6.3-36.

சிங்க விளக்கெரித்துக் கொல்லல் - தலையிலே சாணியை வைத்து விளக்கு ஏற்றுதல்; வாலிலே பந்தம் கட்டி எரித்தல். கொடுமையாகத் தண்டித்துக் கொல்லல் என்பது குறிப்பு. பிராட்டி இராவணனிடம் 'உன்னைச் சிங்க விளக்கெரித்துக் கொல்லாதே நற்கொலையாகக் கொல்லும்போதும் நீ இராமபிரானைப் பற்றவேண்டும் என்பதனை அறிவாய் என்றாள். 8.1.1-36.

சிறு விரலாதல் - முதலில் நிற்றல். திருமங்கை மன்னன் பாவிகளை எண்ணத் தொடங்கும்போது தாம் சிறு விரலானதாகக் கூறுகிறார். தி.கு.தா.14.

சினையாறுபடுதல் - பொசிதல். இறைவன் திருக்குழலில் ஒரு வாடல் மாலையைக் கொண்டு வந்து வைத்தாலும் அது செவ்வி பெற்று மது நிரம்பிச் சினையாறுபட்டு வார்ந்து வெள்ளமாய்ப் பெருகும். 1.6.2-36.

சுழியாறுபடுகை - 1. ஆறு சுழித்துச் செல்வதுபோல் சுழித்துச் செல்லுகை. பெருமான் அழகாலும் சீலத்தாலும் காஞ்சிபுரம் முழுவதும் நிரம்பிச் சுழியாறுபடும்படி திருவூரகத்திலே நின்றருளினான். தி.நெ.தா.8. 2. ஆழ்ந்து போதல். பூதத்தாழ்வார் கிருட்டினனாய் வந்த திருத்தோற்றத்தில் சுழியாறுபடுகிறார். இ.தி.29.

செங்கற் சீரை கட்டல் - துறவுக் கோலம் பூணல். தலைமகள் செங்கற் சீரை கட்டிக் கூப்பிட்டாகிலும் பெறவேண்டும்படி பெருமான் வடிவழகும் படுக்கையும் இருந்தன. தி.வி.62.

செங்கொடு குட்டைகள் - செவ்வையாகக் கொடுக்கிற நாழி என்பது நேர்ப்பொருள்; தாம் கொண்ட கொள்கை விடாதவர்கள். "சொரூப ஞானம் பிறந்து தரும்பு நறுக்கலாகாது என்றிருக்கும் செங்கொடுகுட்டைகளுக்கு என் நிலைமை சொல்வேனோ? யாருக்குச் சொல்வேன்?" என்கிறாள் தலைமகள். 9.9.6-36.

செடி சீய்த்தல் - வழியில் தடையாக உள்ள செடிகளை அழித்தல். தடைகளைப் போக்கி, இடையூறுகளைப் போக்கி என்பது குறிப்பு. பெருமான், உலக மக்களில் தாழ்ந்தவனான தம்மோடு கலப்பதற்குச் செடிசீய்த்து வந்து தம்மைத் தனக்காக்கிக் கொண்டான் என்கிறார் நம்மாழ்வார். 2.3.1-24.

செப்பேடாக வருதல் - அடையாளமாக, சான்றாக வருதல். பெருமான், ஆபத்தே செப்பேடாக அடியார்பால் வந்து உதவும் இயல்பினன். 2.4.1-36.

செருப்புக் குத்தக் கற்றவோபாதி - பயனற்றது. இறைவனை யொழியக் கற்ற பிறவெல்லாம் செருப்புக் குத்தக் கற்ற வோபாதி ஆகும். 1.1.0-36.

செருப்பு வைத்துத் திருவடி தொழப்புகுதல் - மனத்தை ஓரிடத்தில் வைத்து வேறோர் இடத்தில் வேறொரு வேலை செய்தல். ஆழ்வாரை அனுபவிக்கும்போது, செருப்பு வைத்துத் திருவடி தொழப் புக்காற் போலே ஆக வொண்ணாதென்று உலகத்தைப் பாதுகாத்தற்கு வேண்டும் செயலனைத்தும் செய்து முடித்து வேறொன்றில் கருத்தில்லாதவனாய் அனுபவித்துப் போகமாட்டாதே இருந்தானாம். 2.6.2-36.

செல்வப்பிள்ளைத்தனம் அடித்தல் - செருக்கடித்தல். தலைமகள் பூவையை நோக்கி, "நான் என் துன்பநிலையைப் பெருமானிடம் சென்று சொல் என்ற போதெல்லாம் நீ செல்வப்பிள்ளைத்தனம் அடித்துக்கொண்டிருந்தாய்; இன்று நான் தளர்ந்தேன். இனி உன்னை வளர்ப்பாரை நாடிச்செல்" என்கிறாள். 1.4.8-9.

செவிப்பறை பறைதல் - (ரகசியமாக) மறைவாகச் சொல்லல். வேத முதல்வனைப் பாடி வீதிகள்தோறும் துள்ளாதார் முற்றறிவினர் முன்னிலையில் எதனைச் செவிப்பறை பறைந்து நிற்பர்? அவர்கள் மனிதர்கள் ஆவரோ? என்கிறார் நம்மாழ்வார். 3.5.5-36.

சோலை பார்ப்பாரைப் போலே பார்த்தல் - ஒவ்வொன்றாகக் கூர்ந்து பார்க்காமல் பொதுவாகப் பார்த்தல். பொதுப் பார்வை. நாச்சியார், தம்மைப் பெருமான் சோலை பார்ப்பாரைப் போலே பார்க்கையல்லாமல் சிறப்பாக

நோக்கும்வண்ணம் செய்யுமாறு செய்திடக் காமனை வேண்டுகிறார். நா.தி.1.6.

'தண்ணீர்' என்னும்படி - கொடுமையற்றவன் என்னும்படி. பெருமான், அசுரர்களுக்கு 'அந்தகன் தண்ணீர்' என்னும்படி கொடிய கூற்றுவனாக விளங்குகிறான். 6.3.8-24, 36.

'தண்ணீர் தண்ணீர்' என்னும்படி இருத்தல் - நீரின் இனிமையாலே மேலும் மேலும் தண்ணீர் வேண்டுவாரைப் போலே மிகுந்த விருப்பத்தோடு இருத்தல். பெருமான் மார்பு, அங்கேயே உறையும் திருமகளையும் 'தண்ணீர் தண்ணீர்' என்னும்படி செய்யுமளவுக்கு விரும்பத்தக்கதாய் உள்ளது. பெ.மடல், கண்ணி, 91.

தண்ணீர்த் துரும்பான* - தண்ணீரில் கிடக்கும் துரும்பு அதனைப் பருகத் தடையாய் இருக்கிறது. அதுபோல ஒன்றற்குத் தடையாய் அமைந்திருத்தலைத் தண்ணீர்த் துரும்பு என்பது குறிக்கும். சில இடங்களில் துரும்பு என்பதற்குப் பதில் துறும்பு என்பது காணப்படுகிறது. மதுரகவிகள்மேல் தமது அருளைப் பொழியத் தண்ணீர்த் துரும்பாய் இருந்த அவருடைய பண்டை வல்வினைகளை நம்மாழ்வார் தம் பார்வையாலேயே பாறவடித்தார். க.நு.சி. 9, அழகு.

தண்ணீர்ப்பந்தல் வைத்தல்* - நெடுஞ்சாலையில் தண்ணீர்ப் பந்தல் பேருதவியாகக் கருதப்பட்டது. அதனையொட்டி இங்கு உதவுதல் என்னும் பொருளைக் குறிக்கிறது. நம்மாழ்வார் அருளிச்செய்த நூல்கள் உலகத்திற்குத் தண்ணீர்ப் பந்தலாயின. 6.9.0-36.

தண்ணீர் வார்த்தல் - போற்றுதல். ஊடிநின்ற பெண்களைத் தன் அழகாலே வெல்லமுடியுமா என்று எண்ணிப் பார்த்த பெருமான் அங்கு அழகுக்குத் தண்ணீர் வார்ப்பாரில்லை என்று உணர்ந்தான். 6.2.0-36.

தலைக்கட்டுகை* - நிறைவு செய்கை; செய்து முடித்தல். பெருமானைக் குறித்து மறைகள் சொன்னதைத் திருப்பிச் சொல்வது தவிரத் தம்மால் ஒன்றும் பேசித் தலைக்கட்டவொண்ணாது என்கிறார் தொண்டரடிப்பொடியாழ்வார். தி மா. 22.

தலைச்சாவி வெட்டல் - பயிர்கள் மதர்த்தால் தலைப்பகுதியைக் கழித்துவிடுவர். அதனையொட்டிக் குறைத்தல் என்னும் பொருளில் பயன்படுத்தப்படுகிறது. பெருமான் குடக் கூத்தாடி இடையர்க்குண்டான செருக்குக்குத் தலைச் சாவி வெட்டினான். தி.வி. 38.

தலைநீர்ப்பாட்டிலே அநுபவித்தல் - ஆற்றின் முதல் மடை தலைநீர்ப்பாடு ஆகும். பெரிய பிராட்டியார், பூமிப் பிராட்டியார் தொடக்கமானோர் பெருமானது திருமேனி யழகு வெள்ளத்தைத் தலைநீர்ப்பாட்டிலே அனுபவிக் கிறார்கள். தி.நெ.தா. 18.

தளர்ந்தார் தாவளம்* - தாவளம் என்பது தங்குமிடம். தளர்ந் தார்க்குத் தஞ்சமாக இருப்பது என்பது பொருள். பெருமான் பார்இடந்த செயல் அவன் தளர்ந்தார் தாவளம் என்பது காட்டுகின்றது. பெ.திருவந். 7.

திறை கொள்ளல் - கப்பம் கொள்ளல். பேரரசன் சிற்றரசனிடம் அவன் தனக்குக் கீழ்ப்பட்டிருத்தலைப் புலப்படுத்தக் கப்பம் வாங்குவான். அடிமைகொள்ளல் என்பது பொருள். பெருமானின் நெஞ்சைப் பிராட்டி தன் வடிவழகாலும் பண்பாலும் திறைகொள்ளுகிறாள். பெரி.தி. 2.3.3.

தீர்த்தம் ப்ரஸாதித்தல் - ஒரு காலத்தில் இருந்து பின் இல்லாது போதல். பெருமான் அவதாரங்கள் போலே தீர்த்தம் ப்ரஸாதியாதே நிலையாகத் தங்கியுள்ள இடம் திருமாலிருஞ் சோலைமலை. 2.10.1-36.

துடை குத்தல் - தொடையைத் தட்டுதல், அஃதாவது இதமாகப் பிடித்துவிடுதல். அரசகுமாரர்கள் துடைகுத்தவிட்டு உறங்கு வார்கள். பெ.தி. 1.2.3.

துருப்புக் கூடாக - தூற்றாப்பொலி; இனியார் இன்னார் என்று பகுத்துக் காணாத; கலந்த கட்டியாக. தலைமகள் துருப்புக்கூடாகத் தொலைவில்லி மங்கலத்தை உகந்து நின்றாள். 6.5.1-36. திருப்பாணாழ்வார் தமது நூலை மகாபாரதம் போலே பரந்து துருப்புக் கூடாயிருத்தல் செய்யாதே பத்துப்பாட்டாய்ச் சுருக்கமாக அருளிச் செய்துள்ளார். அம.0.

தென்றலும் சிறுதுளியும் பட்டாற் போலே - சுகமாக தென்றலும் சாரலும் இன்பம் தருவன. அப்படி இன்பமாக என்பது பொருள். சிவபிரான் திருமால் திருநாமங்களை உமை சொல்ல அவற்றைத் தென்றலும் சிறுதுளியும் பட்டாற் போலே கேட்டுக் கொண்டிருந்தான். சி.மடல், கண்ணி, 21.

தொடை தட்டல் - கேட்குமாறு வற்புறுத்தல். இடைப்பெண்கள் எங்கள் பேற்றினை அழித்தோ நீ உன் பேற்றினைப் பெறப் பார்ப்பது என்று அடியை விட்டுத் தொடையைத் தட்டுகிறார்கள். பாவை, 29-6.

தோள்தீண்டியான * - இணையான, நிகரான, நெருக்கமாக, காலம் கலிக்குத் தோள்தீண்டியான துவாபரயுகம். பாவை, 16-3. இறப்புத் தோள்தீண்டியாக வந்து நிற்குங் காலத்தில் மனிதர்கள் எதனையும் செய்யும் ஆற்றலற்றவர் களாகிறார்கள். தி.மா. 6.

தோள்படி கொள்ளல் - ஒருவர் தோளைப் படியாகக் கொண்டு மேலே செல்லல்; மேலே செல்லல் என்பது பொருள். நம்மாழ்வார், 'உயர்வற உயர்நலம் உடையவன்' என்று கூறி, அதற்கு மேலாக ஓர் உதவியைச் சொல்ல நினைத்துக் கீழ்நின்ற நிலையை அமைத்து மேலே தோள்படி கொள்கிறார். 1.1.1-36.

தோள் மாறல் - மாறிக்கொள்ளல். பிறப்புத் தொடரிலே (ஜந்ம பரம்பரைகளிலே) தோள்மாறி என்றும் மண்ணுலக வாழ்வின ராய்ப் போந்த ஆழ்வாரை ஈறில் இன்பத்தில் மூழ்குமாறு இறைவன் அருள்நோக்கம் புரிந்தான். 1.1.0-36.

நடுவில் பெருங்குடி - நடுவே அதிகாரத்தோடு இருத்தல். பிறர்க்கு ஈயாது பொருள் திரட்டியவன் உயிரோடு போராடிக் கொண்டிருக்கும்போது அவன் மனைவியர் "இவனும் இதொரு நடுவிற் பெருங்குடியுமென்? இவன் இறந்து செல்வம் அனைத்தையும் நாமே பயன்படுத்தும்படி நடக்காதா?" என்று எண்ணுவர். 8.8.8-36.

நமஸ்காரம் - வணங்கி விடைகொடுத்தல். திருமகள் சந்தி செய்விப்பவளாகும்போது அவளது இன்பநுகர்ச்சி நீங்குவ தில்லை. அப்போது இன்பநுகர்ச்சிக்கு நமஸ்காரம் இட்டா ளல்லள். பெரி.தி. 4.9.2.

நரிப்பூணூலிடல் - நரிப்பூணூல் இட்டுக்கொள்ளல்; ஏமாற்ற முயலுதல். பெருமான் திரிவிக்கிரமனாக வளருகைக்குக் குறளனாய் நரிப்பூணூலிட்டு வந்தான். பாவை, 3-6.

நாய்க்கிட என்றிருத்தல் - புறக்கணித்திருத்தல். தலைமகள், வழிபடும் நிலையில் அமைந்த இறைவடிவத்தில் பிறக்கும் துய்ப்பொழிய மற்றப் பிறப்புகளால் (அவதாரங்களால்) பிறக்கும் நுகர்ச்சியை நாய்க்கிடுங்கள் என்றிருக்கிறாள். பெ.தி. 8.2.6.

நாயகக் கல்லான - பெருமை சேர்க்கும் முதன்மையான. உலகிற்குத் திருவில்லிபுத்தூர் நாயகக் கல்லாக இலங்குகிறது. பாவை, 30-6.

நாலு பத்தோலை மறுத்தல் - சில கட்டளைகளை மறுத்தல். கூற்றுவன் தான் இடும் நாலு பத்தோலை மறுத்தற்குரிய தானாலும் வைணவர்களிடம் எளிய கோலத்தராய் வணங்கிச் செல்லவேண்டுமென்பதனை மட்டும் மீறக்கூடாது என்று தன் பணியாளர்களிடம் தெரிவிக்கிறான். நான். தி. 68.

நாலு பயணம் உள்ளே எடுத்துவிடுதல் - சில நாள் பயணம் மேற்கொள்ளல். இராமபிரான் கடலின்மேல் அணைகட்டி நாலு பயணம் எடுத்துவிட்டால் சீதையை அடையலாம். ஆனால் போன காலத்தை மீட்க முடியாதே என்று வருந்தினான். பெ.தி. 9.3.4.

நித்யாக்நிஹோத்ரமாகாமல் - ஒவ்வொரு நாளும் தீவேள்வி நடைபெற்றாலும் நாள்முழுவதும் நடைபெறுவதில்லை. சிறிது பொழுதே நடைபெறும். ஆகவே தொடர்ந்து ஒவ்வொரு நாளும் செய்தாலும் இடைவெளி நேரிடுகிறது. அதுபோல இடைவெளியில்லாமல் என்பது பொருள். நாம், நித்யாக்நிஹோத்ரமாகாமல் ஓவாது இறைவனுக்குப் பல்லாண்டு பாடித் தொழவேண்டும். திருவா. 4.

நிலத்தைக் கீறியிருத்தல் - வருந்திக் கொண்டிருத்தல். பாண்டவர் ஐவரும் சூதில் திரௌபதியை இழந்து தங்கள் பொறையாலே நிலத்தைக் கீறியிருந்தார்கள். பெரி.தி.4.3.6.

நிழல்மரமாய் இருத்தல் - பாதுகாப்பவனாய் இருத்தல். இராமன் தண்டகாரணியத்தில் வாழ்ந்த இருடிகளுக்கு நிழல்மரமாய் இருந்தான். பெ.தி.11.5.1.

நிழலாம்படி - நன்மையாகும்படி. நம்மாழ்வார் தமக்குக் கிடைத்த பேறு உலகில் உறையும் மக்களுக்கும் நிழலாம்படி அமைந்தது என்கிறார். 5.1.1-24

நிழலும் அடிதாறுமாயிருத்தல் - நிழலாகவும் தஞ்சமாகவும் இருத்தல். அடிதாறு என்பது திருவடியினைக் குறிக்கும். இங்கு அது தஞ்சமாக இருத்தலைக் குறிப்பால் புலப்படுத்துகின்றது. பெருமான் நம்மாழ்வாருக்கு நிழலும் அடிதாறுமான ஸ்ரீவைஷ்ணவர்களைக் காட்டிக் கொடுத்தான். 3.8.0-36.

நீச்சு நீராதல் - தரைகாண வொண்ணாமை. கண்ணபெருமானின் விசுவரூபம் அருச்சுனனுக்கு நீச்சு நீராய்ப் போயிற்று. 3.10-1-36.

நீராட்டிக் கொடுத்தல் - தாரை வார்த்துக் கொடுத்தல்; மண முடித்தல் என்பது பொருள். இடையர்கள் கண்ணனைக் கண்டவுடன் நப்பின்னையைக் கடுக நீராட்டிக் கொடாதே நடுவே எருதுகளை நிறுத்தினார்கள். தி.வி.21.

நூறு குளிக்கு நிற்கும் - நெடுங்காலம் நிற்கும். பெண்கள், கண்ணன் தங்களை ஒருமுறை அணைத்துவிட்டால் அது நூறு குளிக்கு நிற்கும் என்கிறார்கள். பாவை, 10-6.

நெஞ்சு பறைகொட்டல் - உள்ளம் நடுங்குதல், நமன் தன் தூதுவர்களிடம் திருமாலைத் தவிரப் பிற தெய்வம் எதனையும் வணங்காதவர்களிடம் நடந்து கொள்ளும் முறையினை வெளியில் தெரிந்தால் என்ன ஆகுமோ என்று நெஞ்சு பறை கொட்டக் காதோடு காதாகக் கூறினான். நான்.தி.68.

நெடுங்கை நீட்டாக இருத்தல் - தொலைவில் விலகி இருத்தல். பெருமான் தம்மைப் பணி கொள்வதாகச் சொல்லி நெடுங்கை நீட்டாக இருக்காமல் நெஞ்சகத்தே வந்து நிலையாகத் தங்க வேண்டும் என்பது நம்மாழ்வார் வேட்கையாகும். 2.9.4-36.

நெல்லிலே வைத்துத் தெறிக்க வேண்டுவது - துன்புறுத்த வேண்டுவது; தண்டிக்க வேண்டுவது. 'நெல்வாயிலே

வைத்துத் தெறிக்க வேண்டுவது' என்பது இதன் பிறிதொரு வடிவம். மு.தி.79. ஆராய்ந்து பார்த்தால், இறைவனது உடைமையைத் தன்னதாகக் கருதி இறைவனுக்கு வழங்கிய மாவலியை நெல்லிலே வைத்துத் தெறிக்க வேண்டும் என்பது விளங்கும். பெ.தி.11.3.1.

'நெற்காய்க்கும் மரமேது' என்றிருப்பாரைப் போலே - முற்றிலும் அறியாதவர். புண்ணில் தோன்றும் கிருமிகள் 'நெற்காய்க்கும் மரமேது' என்றிருப்பாரைப் போலே அப்புண்ணைத் தவிரப் பிறிதொன்றனை அறியாதனவாய் வாழும். தி.வி.48.

பக்கக் குதிரை யேறிப் போதல் - இணையாகச் செல்லல். திருமால் திருமங்கையாழ்வார்க்குப் பக்கக் குதிரையேறிப் போக முடியுமோ? அவன் கையில் உள்ள சக்கரம் அழகுக்காக அமைந்திருக்க, அவர் கையில் உள்ள வேல் பகையை அழிப்ப தாலே கறைகழுவ நேரம் இன்றிக்கேயன்றோ இருக்கிறது. பெ.தி.3.6.10.

பட்டங்கட்டுகை - புகழ் சேர்க்கை. கண்ணன், நாட்டார் புகழ்ச்சி யாலே பெற்ற வயிற்றுக்குப் பட்டங் கட்டினான். பாவை, 5-3.

பட்டினி கொள்ளல் - வருத்துதல். தலைமகள் தோழியரை நோக்கிப் புன்முறுவல் பூக்காதே அவர்களைப் பட்டினி கொண்டாள். பெ.தி.2.7.2.

பட்டினி விட்ட கண் - காணாமல் ஏங்கின கண். நம்மாழ்வார், காணாமல் பட்டினி விட்ட தம் கண்கள் பட்டினி தீரும்படி கண்டு மகிழும்வண்ணம் வந்தருளுமாறு பெருமானை வேண்டுகிறார். 4.7.8-36.

பட்டைப் பொதிசோறு கட்டல் - முயற்சி செய்தல். கண்ணன் திருவிளையாடல்களைத் துய்த்த தமக்குத் திருநாட்டை அடைந்து அவ்இன்பத்தைத் துய்த்தற்குப் பட்டைப் பொதி சோறு கட்டவேண்டும்படி குறைவு ஏதுமில்லை என்கிறார் நம்மாழ்வார். 6.4.1-36.

பதின்கால் பட்டைப் பொதிசோறு அவிழ்த்தல் - பலபடி (பலமுறை) இளைப்பாறுதல். தொலைவில்லி மங்கலத்துப் பெருமான்மீது காதல்கொண்ட தலைமகள் ஒருகால் 'அரவிந்த லோசந'

என்னும்போது, நடுவே பதின்கால் பட்டைப் பொதிசோறு அவிழ்க்க வேண்டும்படியான தளர்ச்சியை அடைந்தாள். 6.5.8-36.

படுக்கையில் வார்த்தை - படுக்கையறையில் மனைவியை மகிழ்விப்பதற்காகச் சொல்லப்பட்டு நிறைவேற்றப்படாத பேச்சு. பாவை நோற்கும் பெண்டிர், பெருமானிடம் அவன் தரும் உறுதி மொழிகள் படுக்கையில் வார்த்தையாகப் போகாமல் மணி மண்டபத்தின் வார்த்தையாக வேண்டும் என்கின்றனர். பாவை, 23-3.

பத்து இருபது பட்டினி கொளல் - ஏங்கச் செய்தல். நாயகனைப் பத்து இருபது பட்டினி கொள்ள வல்லளன்றிக்கே பேதைப் பருவத்தினளாய்த் தன் பெண் இருப்பவள் என்கிறாள் திருத்தாயார். பெ.தி.8.2.9.

பத்துப்புக்கு(ப்)பத்து மீள வல்லராயிருக்கை - ஒரு நாளே பதின் காதவழி போய்ப் பதின்காதவழி மீளவல்லராய் இருக்கை. பாலைவனத்தில் இருக்கும் வேடர்கள் பிறரை நலித்தற் கென்றால் பத்துப் புக்கு(ப்)பத்து மீளவல்லராயிருப்பர். தி.வி.37.

பத்தொன்பதாம் பாஷை - புரியாதது. உறங்கும் பெண்ணை எழுப்பும் பெண்களில் ஒருத்தி தனக்கு அவளது பேருறக்கம் பத்தொன்பதாம் பாஷையாய் இருப்பதாகக் கூறுகிறாள். பாவை, 12-6.

பதர் கூட்டிக் கழித்தல் - சிறப்பற்ற பொருளைச் சிறப்புள்ள வற்றோடு சேர்த்துப் பின்னர்ப் பிரித்தல். பிற தேவர்களைத் திருமாலோடு சேர்த்துப் பேசித் திருமால் உயர்வைச் சொல்வது பதர் கூட்டிக் கழிப்பதாகும். 7.5.1-36.

பருத்தி பட்ட பன்னிரண்டும் படல்* - பருத்தியைக் கொட்டை வாங்கி, பன்னி, சுருட்டி, நூலாக்கியும், பாவோடி, நெய்து, மடித்து, விற்றுப் பொகடும்படியும், தோய்த்து, உலர்த்தி, உடுத்து, கிழித்து விடும்படியும், மனிதர்க்கு உரியதாக்குவர். பருத்தியைப் போலப் பல மாற்றங்கள் பெறுவது என்பது பொருள். பெருமான் தன் கையிலே பருத்திபட்ட பன்னிரண்டும் பட்ட பூமியை மாவலியிடம் இரந்தான். பெ.தி. 1.8.5.

பல்லிலே பட்டுத் தெறித்தல் - நெருக்கமாக வந்தும் கிட்டாது போதல் குறளனாய் வந்த பிறப்புச் சில காலத்திற்கு முன்னரே நிகழ்ந்தமையால் அது தன் பல்லிலே பட்டுத் தெறித்தது என்கிறாள் தலைமகள். பெ.தி.9.4.2.

பலகைப் புறத்தே பகட்டல் - பலகைக்குப் பின்னாலே இருந்து பகட்டுதல்; அதாவது மறைவிடத்திலிருந்து மிரட்டுதல். தலைமகள் தான் மடலெடுக்கப் போவதாகப் பலகைப் புறத்தே பகட்டுகிறாள். பெ.மடல்,0.

பழங்கிணறு கண்வாருதல்* - பழைய கிணற்றை ஊற்றுக்கண் கிளம்பத் தூர்வை வாருதல்; செம்மைப்படுத்துதல். பாழுங் கிணறு கண் வாருதல் என்றும் (1.10.5-24.) வருகிறது. நம்மாழ்வார் பெருமான் தமக்குப் பண்டுசெய்த உதவிகளை யெல்லாம் பேசுவது பழங்கிணறு கண் வாருதல் என்று சொல்லி, அவன் தன்னையே தமக்குத் தந்த சிறப்பினைக் கொண்டாடுகிறார். 8.1.2-24.

பள்ளமடை - இயல்பு. ஆண் ஆணைக் கண்டு விரும்புவதைக் காட்டிலும் பெண் ஆணைக்கண்டு விரும்புவது பள்ளமடை யாகும். பாவை, 0-3.

பாடுவித்த முக்கோட்டை - நினைத்தால் கவிதை ஊற்றெடுக்கும் இடம். திருக்கண்ணபுரம் திருமங்கை மன்னனைப் பாடுவித்த முக்கோட்டையாகும். பெ.தி.8.10.9.

பாலிலே யுண்டு பனியிலே கிடத்தல் - பயமின்றி நலமாய் இருத்தல். காலமும் நல்வடிக்காலமாய், ஊரும் அயோத்தி யாய் அமைந்ததால் தசரதனுடைய பிள்ளைகள் பாலிலே யுண்டு பனியிலே கிடந்தார்கள். பாவை,16-6.

பாலும் சோறுமிட்டு வளர்த்தல் - போற்றி வளர்த்தல். ஆயமகளிர் தங்களைப் புண்ணியத்திற்குப் பாலும் சோறுமிட்டு வளர்த்த பேறு மிக்கவர்களென்று கண்ணனிடம் சொல்லிக் கொள் கின்றனர். பாவை, 28-6.

பாழுங்கிணறு கண்வாருதல் - பழங்கிணறு கண்வாருதல் காண்க. 1.10.5.

பிரதம சிலை - (ப்ரதம சிலை என்பது உரையிற் காணப்படும் வடிவம். அஸ்திவாரக்கல். அடிப்படையாய் இருப்பது என்பது குறிப்புப்பொருள். நன்மைகளுக்கெல்லாம் பிரதம சிலையாய் இருப்பது சத்தியமாகும். தி.மா. 33.

பிரிகதிர்ப்படாதபடி - விலகிச் செல்லாதபடி; தப்பிப் போகாதபடி. இது பிறிகதிர்ப்படாதபடி என்றும் பல இடங்களில் வருகின்றது. பெருமான் எல்லா உயிர்களையும் பிரிகதிர்ப் படாமல் திருவயிற்றிலே வைத்துக்காத்தான். 9.1.1-24,36.

பின்னாடு மேய்த்தல் - அடியார் இட்டவழக்காய் இருத்தல். (பின்னாடு மேய்க்கை - ஆச்ரித பரதந்த்ரனாகை என்பது அடிக்குறிப்பு). இராமபிரான் வீடணனுக்கேயன்றிப் பிறர்க் கும் பின்னாடு மேய்க்கவென்றால் உகப்பவனாக இருந்தான். பெ.தி.11.8.8.

புதியது உண்டறியாதிருத்தல்* - சிறிதுகூட அனுபவித்து அறியா திருத்தல். இராமன் தந்தைக்குச் செய்ய வேண்டிய குற்றேவல்களைச் செய்து, பின்பு பிராட்டியோடு இன்பந் துய்க்கத் தொடங்குங்கால் முன்னைய நாள்களில் காமச்சுவை புதிதுண்டறியாதவர் போன்றிருந்தவர் இப்போது அதனைத் தவிரப் பிறிதொன்றனை அறியாதவர் போலும் என்று எண்ணுமாறு மேம்பட்டு நின்றாராம். 7.10.1-36.

புதைத்துப் பார்த்தல் - நீரை யடக்கிக் கொண்டு இருத்தல்; வஞ்சித்தல். மழைக் கடவுளிடம், புதைத்துப் பார்க்காமல் பொழிந்து வளம் பெருக்கவேண்டும் என்கின்றனர் பாவை நோற்கும் பெண்கள். பாவை, 4-3.

புதைத்து விடுதல் - அடக்கிக்கொள்ளுதல்; வஞ்சித்தல். பெருமானைப் போலே புதைத்து விடுதலன்றிக்கே தீயவர் களுக்கும் நன்மொழி கூறத் தலைப்பட்டாள் பிராட்டி பாவை, 4-6.

புறங்கால் வீங்கிச் சாதல் - பல இடங்களில் தேடி நடந்து நடந்து கால்வீங்கி மிகுந்த துன்பம் அடைதல். படுக்கையின் கீழே பெருநிதி கிடக்கப் புறங்கால்வீங்கிச் சாவாரைப் போலே நாராயணன் இருக்க அவனை நண்ணாமல் இம் மண்டிலத்தார் இன்னலுறுகின்றனர். 10.6.2-.36

புறப்பூச்சாக - மேலோட்டமாக. கள்ள மனத்தர் புறப்பூச்சாகச் சில பொய்களைக் கூறி இறைவனையும் ஏமாற்ற முயல்வர். 5.1.3-9.

பூண் கட்டல்* - பலப்படுத்தல். பிரமன் தொடக்கமானோர் தந்த வரங்களாலே பூண்கட்டின இரணியனது மார்பைச் சிங்கப்பிரான் இடந்தான். சி.மடல், கண்ணி, 43.

பெரிய திருநாளாய்ச் செல்லல் - திருவரங்கத்தில் நடைபெறும் சிறப்பான விழா பெரிய திருநாள். கொண்டாட்டமாய்ச் செல்லல் என்பது குறிப்புப் பொருள். திருமங்கை மன்னன், தம் அகவாய் பெரிய திருநாளாய்ச் செல்லும்படி பெருமான் வந்து தங்கினான் என்கிறார். தி.நெ.தா.8.

பேராறு மண்டல் - ஆறுபோலப் பெருகியோடல். பெரிய பெருமாள் திருவுள்ளத்தில் திருப்பாணாழ்வார்மேல் அன்பு பேராறு மண்டத் தன் திருவடிகளை அவருக்குக் கொடுத் தான். அம. 10, அழகு.

பொதிசோறு கட்டுதல் - ஏற்பாடுகள் செய்தல். எல்லா உறவாக வும் உள்ள பெருமானைக் காண்பதற்காகப் பரமபதம் செல்வதற்குப் பொதிசோறு கட்ட வேண்டாதே அவன் திருஎவ்வுளில் வந்து சாய்ந்தருளியுள்ளான். பெ.தி.2.2.4.

பொரிபுறந் தடவுதல்* - குறைகளை மறைத்து நன்மையை ஏறிட்டுப் பேசுதல். தலைமகள், "பொரிபுறந்தடவி இறைவனைப் பேணிப் போந்தது போதும். இனி அவன் உண்மைத் தன்மையைச் சொல்லிப் போருங்கோள்" என்று அன்னங்களிடம் கூறுகிறாள். 9.7.10-36.

போம்பழியெல்லாம் அமணன் தலையோடே - திருடன் ஒருவன் பிராமணன் வீட்டில் கன்னமிட்டான். சுவர் ஈரமாயிருந்தமை யால் அதில் சிக்கி இறந்தான். திருடனுடைய உறவினர் பிராமணனிடம் இழப்புக்கு ஈடுதர வேண்டும் என்றனர். வழக்குக்குத் தீர்வு காண அரசனை நாடினர். அவ்வரசனோ அறிவற்றவன். அவன் பிராமணனை நோக்கிப் "பிராமணா! நீ ஈரச்சுவர் வைக்கையாலே அவன் இறந்தான்; ஆகையால் நீ பழி கொடுக்க வேண்டும்" என்றான். பிராமணன் "எனக்குத் தெரியாது. சுவர் வைத்த கூலியாளைக் கேட்கவேண்டும்" என்றான். அவனை அழைத்து "நீயன்றோ ஈரச்சுவர் வைத்தாய், நீ பழிகொடுக்க வேண்டும்"

என்றான் அரசன். அதற்கு அவன் "தண்ணீர் விடுகிறவன் அதிகமாக ஊற்றிவிட்டான். நான் என்ன செய்வேன்?" என்று குற்றம் தன்மேல் இன்மையைத் தெரிவித்தான். அவனை அழைத்துக் கேட்க, "குயவன் பெரும்பானையைத் தந்தான். அதனால் தண்ணீர் அதிகமாகப் போயிற்று" என்றான். குயவனை அழைத்துக் கேட்க, அவன் "என்னால் வந்ததன்று; ஒரு விலைமகள் நான் பானை செய்யும்போது அங்கும் இங்கும் திரிந்து கொண்டிருந்தாள். அவளைப் பார்க்கிற பராக்கிலே பானை பெருத்தது" என்றான். அவளை அழைத்துக் கேட்டபோது அவள் "வண்ணான் புடவை தாராமையால் போக வரத் திரிந்தேன்" என்றாள். அவனை வரச்சொல்லி வினவியபோது அவன் "என்னாலன்று, துறையில் கல்லில் ஓர் அமணன் வந்திருந்தான். அவன் போக விட்டுத் தப்ப வேண்டியதாயிற்று" என்றான். அந்த அமணனைத் தேடிப்பிடித்துக்கொண்டு வந்தனர். அரசன் அவனை நோக்கி "நீ யன்றோ இத்தனையும் செய்தாய்? நீ பழி கொடுக்கவேண்டும்" என்ன, அவன் பேசாதவனாகையாலே வாய்மூடி இருந்தான். அவன் மௌனத்தைக் குற்றத்தை ஒப்புக்கொண்டதற்கு அடையாளமாகக் கருதி அரசன் தலையை அரிந்தான் என்பது கதை. தவறு செய்யாதவனைக் குற்றவாளியாகச் சொல்வது என்பது குறிப்புப் பொருள். போம்பழியெல்லாம் அமணன் தலையோடே என்பது போன்று தீம்பெல்லாம் சேர்வது கண்ணனிடமே யாகும். 1.5. 5-36.

போர்சுட்டுப் பொரி கொறிக்கை - நெற்கதிர்ப்போரை வழியல்லா வழியில் கொளுத்தி, அதில் வெந்த நெற்பொரிகளைக் கொறித்தல். மேலான பொருளையழித்துச் சிறிய பொருளைப் பெறுதல் என்பது குறிப்புப்பொருள். மடல் எடுத்துப் பெருமானைப் பெறுவது போர்சுட்டுப் பொரி கொறிக்கையாகும். பெ.மடல், 0.

மடல் எடுக்கும்படியான - தாங்கள் பெறுவதற்குத் துடிக்கும் படியான. மடல் எடுத்தல் என்பது தமிழ்நெறிப்படி தலைமகளைப் பெறுவதற்குத் தலைமகன் மேற்கொள்ளும் அரிய முயற்சி. அதனைப்போல முயன்று பெறத்துடிக்கும் படியான. வீரர்கள் மடல் எடுக்கும்படியான ஆண் பிள்ளைத்தனம் உடையவர் சக்கரவர்த்தித் திருமகன். பெ.தி. 2.8.2

மடிகோலுதல் - பொருள் வேண்டுதல். பாவை நோன்பு நோற்கும் பெண்டிர் தாங்கள் இறைவன் திருப்பெயரைப் பாடுவது பாடி மடிகோலும் நோக்கத்தோடன்று என்றும், தாங்கள் பாடுவதே பயனாகக் கருதுகிறவர்கள் என்றும் தெரிவிக்கின்றனர். பாவை, 3-6.

மடிபிடித்து வருதல் - அடியொற்றி வருதல். கண்ணன் இடைப் பெண்கள் மடிபிடித்து அவர்கள் நீராடும் துறைக்குச் சென்றான். நா.தி. 3.0.

மடி மாங்காயிட்டு விஷயீகரித்தல் - மடியில் மாங்காயைப் போட்டு "ஏது உன்மடியில் மாங்காய்?" என்று வினவி அதன் அடியாக ஒருவனைத் தன் வழிப்படுத்தல் என்பது நேர்ப்பொருள். காரணத்தை ஏறிட்டு ஏற்றுக் கொள்ளல் என்பது குறிப்பு. தன்னைப் பாராமுகமாய் இருப்பாரையுங் கூட மடிமாங் காயிட்டு ஏற்றருளும் பெருமான் அவனை யொழியச் செல்லாத தம்மை ஏற்றருளாதவனாய் இருக்கிறான் என்று வருந்துகிறார் திருமங்கையாழ்வார். தி.நெ.தா. 9.

மடைமாற்றல் - திருப்பிவிடுதல். சிற்றின்பப் பொருளில் மடை மாற்ற வொண்ணாத இறையன்போடு இறைவனைப் பெற ஏங்கி நின்றவர் நம்மாழ்வாராவர். தி.வி. 64.

மண்ணுண்ணும்படி* - தோற்கும்படி. பெருமான் பகைவர்கள் மண்ணுண்ணும்படியான படைகளை யுடையவன். 7.2.6 - 36.

மண்பற்றைக் கழித்தல் - தரமற்றதை நீக்குதல். பெருமான், மண்பற்றைக் கழித்த ஒளியை உடம்பாகக் கொண்டு திகழ்கிறான். 3.1.5-24.

மணிமண்டபத்தின் வார்த்தை - அரசவையில் கூறும் சொற்கள். நிறைவேற்றப்படும் சொற்கள் என்பது குறிப்பு. கண்ணன் கூறும் சொற்கள் படுக்கை வார்த்தையாய்ப் போகாமே மணி மண்டபத்தின் வார்த்தையாக வேண்டும் என்கின்றனர் பாவைப் பெண்டிர். பாவை, 23-3.

மயிர்க்கத்தியாய் இருத்தல் - மயிரை நறுக்கும் கத்தியாய் இருத்தல்; கொடுமையானதாக இருத்தல் என்றபடி. பரத்தையர் தங்கள் உள்ளம் மயிர்க்கத்தியாய் இருக்கப் புறத்தே அன்புடையார்போல் பழகுவர். தி.மா.16.

மலடாய்ப் போதல் - பயனின்றிக் கழிதல். திருமங்கையாழ்வாரின் 'பார்மன்னு' திருமொழியைக் கற்றார் திருமகள் அருளால் பெருஞ்செல்வம் பெற்று அதனை மலடாய்ப் போகாமே இறையடியார்க்கு உரியதாக்குவராம். பெ.தி.2.9.10.

மலையாளர் வளைப்பு - மலையாளர் (மலையில் வாழ்வோர்) ஒருவனிடம் ஒன்றை வாங்க நினைத்தால் வாங்கியன்றிப் போகாதவாறு வளைத்துக் கொள்வர். அப்படிச் சூழ்ந்து நிற்பது மலையாளர் வளைப்பு எனப்படும். ஆய்ச்சியர்கள் கண்ணனிடம் நாழிகை முப்பது சென்றாலும் மலையாளர் வளைப்புப் போலே ஓரடி பேராமல் நிற்போம் என்றார்கள். 10.3.3-36.

மஹாபாரதப்பரப்பு - விரிவான செய்தி. ஓர் ஆய்ச்சி கண்ணனோடு இராக்காலத்தில் ஊடி உரைத்த மஹாபாரதப் பரப்பைத் திருமங்கை மன்னன் 'காதில் கடிப்பிட்டு' திருமொழியில் எடுத்துக்கூறுகிறார். பெ.தி.10.8.10.

மஹாபாரதம் நடவாநிற்றல் - போராட்டம் நடத்தல். கண்ணனுக்கும் நப்பின்னைக்குமிடையே ஊடலால் எடுப்பும் சாய்ப்புமாக மஹாபாரதம் நடவாநிற்க, அவனுடைய உடல் தொடர்பால் அவளுடைய கூந்தற்பூக்கள் மலர்ந்தன. பாவை, 19-6.

மாம்பழம் உண்ணிபோலே - மாம்பழம் உண்ணி என்பது ஒரு புழுவின் பெயர். ஆனால் அதற்கும் மாம்பழத்திற்கும் தொடர்பே இல்லை. அதுபோலே பெயரளவில் அமைந்து ஒரு தொடர்பும் இல்லாதது என்பது பொருள். தலைமகள் தன் தோழியரை நோக்கி "நீங்கள் எல்லீரும் மாம்பழம் உண்ணிபோலே எனக்குத் தோழியராக அமைந்துள்ளீர்" என்கிறாள். 9.9.5-36.

மார்விலே கைவைத்துறங்கும்படி - அச்சமின்றி இருக்கும்படி. பெருமான் தன்னை நம்பியவர்களை மார்விலே கைவைத்துறங்கும்படி பண்ணுகிறான். இ.தி.61.

மார்வெழுத்தாக்கிக் கொண்டிருத்தல் - அடிமைகள் தங்கள் மார்பில் தங்கள் ஆண்டான் பெயரை எழுதிக்கொள்வது வழக்கம். அடிமையாக்கிக் கொள்ளல் என்பது பொருள். இராமனும் இலக்குவனும் தம் குணத்தாலே நாட்டையெல்லாம் மார்வெழுத்தாக்கிக் கொண்டார்கள். பெரி.தி.1.1.0.

மாலையிட்டு மார்வுந் தோளும் பார்த்தல் - கவலையிற்றி இருத்தல். இந்திரன் முதலான தேவர்கள் தம் பகைவர்களைத் திருமால் அழித்து அருள் புரிந்ததனால் பகைவர்களைப் பற்றிய அச்சமின்றி மாலையிட்டு மார்வுந் தோளும் பார்த்துச் செருக்குடன் அரசாண்டனர். பெரி.தி.4.7.4.

முகஞ்சிதறப் புடைத்தல் - அழித்தல். தன் உயிரைத் தானே நுகர்ந்துகிடக்கும் கைவல்ய முத்தியை முகஞ்சிதறப் புடைத்து இறைத் தொண்டினைப் பெறவேண்டின் சாரும்போதே எம்பெருமானுக்கே அடிமையாகக் கருதிச் சாரவேண்டும். 1.2.5-24.

முகந்தெழு பானை - ஏற்றச்சால் என்பது நேர்ப் பொருள். கொள்ளக் கொள்ளக் குறையாதது என்பது குறிப்பு. 'கடல்ஞாலம்' என்னும் திருவாய்மொழியைக் கற்றோர் முகந்தெழு பானையான செல்வம் பெறுவராம். 5.6.11-36.

முத்துலையிட்டுக் கொண்டு நலித்தல் - நீர் ஏறா மேட்டிலே நீரேற்றும்போது, ஒரு குழி கல்லி ஏற்றமிட்டு அதிலே இறைத்து அப்பாலே ஏற்றமிட்டு அப்பாலொரு குழி கல்லி அதிலே இறைப்பர். அதுபோல ஒன்றைச் சொல்லி அதுக்கு மேலே ஒன்றைச் சொல்லி நலித்தல் என்பது பொருள். தலைமகள், தாயானவள் தன்னை முத்துலையிட்டுக் கொண்டு நலிவிப்பதாகத் தோழியிடம் வருத்தத்தோடு தெரிவிக்கிறாள். தி.வி.71.

முதல் விரலாய் இருப்பது - எண்ணும்போது முதலில் நிற்றல். திருவாழி பகையை அழித்தற்கு உறுப்பாய் இருத்தலேயன்றி, அணிகளுக்கும் அழகுக்கும் முதல் விரலாகவும் அமைந் துள்ளது. பெ.தி.8.1.1.

முழங்கைத் தண்ணீர் வேண்டாமை * - ஒருவன் தண்ணீர் குடித்தால் மற்றொருவன் அவன் முழங்கையிலே ஒழுகுகிற தண்ணீரைக் குடித்தல் முழங்கைத் தண்ணீர் குடித்தலாகும். அது வேண்டாமை என்றபடி. பிறரால் வரும் உதவி வேண்டா என்பது குறிப்புப் பொருள். திருநெடுந்தாண்டகம் கற்றவர், தாங்களே தங்கள் வினையின் முதலை இறைவன் முழங்கைத் தண்ணீர் வேண்டாதே போக்க வல்லவராவர். தி.நெ.தா.30.

முழுக்காயாக - திரளாக, முற்றுமாக. பெருமானது சக்கரப் படை வாய்கரையிலேயிருந்து தன்னோசையாலே எதிரிகளை முழுக்காயாக அவியப் பண்ணும். பெரி.தி.4.1.2.

முள்மேலிருப்பு - பொருந்தாத, ஒட்டாத இருப்பு. பெருமான் வைகுந்தத்தில் இருப்பதனை முள்மேலிருப்பாகக் கொண்டு திருக்கோட்டியூரில் வந்து அன்போடே உறைகிறான். பெரி.தி.4.4.8.

மேட்டுநிலமான * - இசைவற்றதான, அரிதான. இவ்வுலக வாழ்வு இறைநுகர்ச்சிக்கு மேட்டு நிலமாகும். 1.1.0-36.

மேட்டுமடை * - இசைவற்றது. இவ்வுலகம் இறையனுபவத்திற்கு மேட்டுமடையாய் இருப்பதாகும். 1.6.11-24.

மேலெழுத்திடல் * - அங்கீகரித்தல்; ஏற்றுக்கொள்ளல். இராமனது வீரம், இராவணன் முதலான பகைவர்களும் மேலெழுத்திடும் படியான சிறப்பினை யுடையதாகும். பாவை, 13-6.

ராஜகுலம் - அரசனை நிகர்த்த மேன்மை. ''காவலில் புலனை வைத்து'' என்னும் திருமாலைப்பாடல் திருநாமம் கற்றா ருடைய ராஜகுலப் பெருமையைச் சொல்லுகிறது. தி.மா.1.

வடுக விடுநகமிடல் - வடுகன் கட்டும் கிட்டிக்கோல், வடுக விடுநகம் எனப்படும். அதனை இடுதல் என்பது பொருள். அகப்படுத்தி நகர முடியாதவாறு செய்தல் என்பது குறிப்பு. இறைவன்தான் அறிவிக்கக் கேளாதாரைத் தன் வடிவழகாலே வடுக விடுநகமிட்டுத் தனதாக்கிக் கொள்வான் என்பதற்கு அழகிய குறளனாய் வந்தமையே சான்றாகும். 4.8.6-36.

வயிர வுருக்கு - ''வயிரம் போலே கடிநம்'' என்பது பார்த்தஸாரதி அய்யங்கார் தந்துள்ள பொருள். இது பொருத்தமாகத் தோன்றவில்லை. வயிரம் என்பதற்குத் திண்மை என்று பொருள் இருப்பதால் திண்மையை நெகிழச் செய்வது என்று பொருள் கொள்ளல் சிறப்பு. கண்ணன் வடிவழகு வயிரவுருக்காக இருப்பதாகும். 9.9.1-24, 36. கண்ணன் தன் வயிரவுருக்கான செங்கனிவாய் முறுவலாலே ஆய்ச்சியர் களைத் தோற்பித்தான். 10.3.11-36.

வயிறு பிடித்தல் * - கலங்குதல்; அஞ்சுதல். நம்மாழ்வார் ''அப்பால் சாய்ந்த மருதமரம் அவன்மேலே சாய்ந்ததாகில் என்படக் கடவேன்!'' என்று கண்ணன் மருதிடைப் போய நிகழ்ச்சிக்கு வயிறு பிடிக்கிறார். 3.8.10-24.

'வரில் பொகடேன், கெடில் தேடேன்' என்றிருக்கை - அக்கறை யின்றி இருத்தல்; ஆறியிருத்தல். திருமழிசைப்பிரான், உகந்தருளின நிலங்களிலே தமக்காகப் பெருமான் வந்து தங்கியிருக்கத் தாம் 'வரில் பொகடேன், கெடில் தேடேன்' என்றிருத்தல் தகுமோ என்று வினவுகிறார். நா.தி.34.

வவ்வால் நாற்றியாக - வவ்வால் தொங்குவதுபோலத் தலைகீழாக வளைந்து விழுதல். வயல்களிலே கதிர்கள் வவ்வால் நாற்றி யாக வளைந்து விழுந்தன. நா.தி.11-6.

வழிப்போக்கர் வார்த்தை - அறியாதவர் பேச்சு. பெருமான் தன்னை மனிதனாகக் கருதுங்கள் என்று சொல்ல, அவன் சொல்லைக் கேட்காமல் 'நாராயணன் பரதெய்வம்' (பவாந் நாராயணோ தேவ:) என்னும் வழிப்போக்கர் வார்த்தையன்றோ பற்றிக்கொண்டோம் என்று தலைவி தோழியிடம் கூறுகிறாள். தி.நெ.தா.21, பட்டர்.

வாய்புகு சோறாய் இருத்தல் - நுகரத்தக்கதாய் இருத்தல். தலை மகளின் கோவைச் செவ்வாய் பெருமானுக்கு வாய்புகு சோறாய் இருத்தலினாலே அதனை அவள் மேலும் சிவக்கு மாறு திருத்தினாள். பெரி.தி. 3.7.8.

வாய்(ப்)புகு நீரும் அருநிலையாய் இருத்தல் - வாயில் நீர் புகுந்து அமிழும்படியாய் ஆழமாக இருத்தல்; தாங்க முடியாததாக இருத்தல் என்பது குறிப்புப் பொருள். தலைமகள் தலைமகனோடு கலக்கும்போது வாய்(ப்) புகுநீரும் அருநிலையாய் ஆறியிருக்க மாட்டாது மெலி வதும், பிரிந்தால் பிரிவாற்ற மாட்டாது மெலிவதுமாகத் துன்புற்றாள். அருநிலையாய் என்று வருவது அருநிலையு மாய் என்று இருத்தல் வேண்டும். தி.வி.16.

வாய்புகு நீராகை - நீச்சல் தெரியாதவன் நீர்நிலையின் ஆழங் காலில் சிக்கினால் வாயில் நீர்புகுந்து திக்குமுக்காடுவான். அதனையொட்டித் திக்குமுக்காடுவதைக் குறிக்கும். தலைமகள் கிளிளை நோக்கிப் பெருமானைக் கண்டு தன் காதலைச் சொல்லி அவனையும் தங்களோடு அழைத்துவந்து வாய்புகு நீராகாதவாறு கிளிகள் மட்டும் முதலில் வந்து அவன் வருகையைத் தெரிவிக்க வேண்டும் என்கிறாள். 6.8.2-24, 36.

வாலைக் குழைத்து நிற்றல் - நயந்து நிற்றல். பெண்கள் பயன் பெறும் வேளையில் தன்பால் வாலைக்குழைத்து நின்று 'கோவிந்தா' என்று போற்றுவதாகக் கண்ணன் கூறினான். பாவை, 28-6.

விசைக்கொம்பு - பிடித்துவிட்ட கொம்பு. அஃதாவது நான்கு பேராய்ப் பிடித்து வளைத்தபோது தாழ்ந்து, விட்டவாறே எட்டாதிருக்கை. அடைய முடியாத உயரத்தில் இருப்பது என்பது பொருள். நம்மாழ்வார், "இறைவன் விசைக் கொம்பு; நம்மால் அவனை அடையமுடியாது" என்று பின் வாங்குவோர்க்கு அவன் அடியார்க்கு எளியனாய் இருத்தலை எடுத்துக்கூறுகிறார். 3.6.0-36.

வியாசபதம் செலுத்தல் - (வ்யாசபதம் என்பது உரையில் காணும் வடிவம்) அதிகாரிகளாய் இருத்தல். திருமோகூரில் வேதத் திற்கு வியாசபதம் செலுத்தும் மறைவாணர்கள் வாழ்ந்தனர். 10.1.2-36.

விழுந்து தரிக்கும் பூமியான - அடிப்படையான; ஆதாரமான. நம்மாழ்வார் பெருமானை நோக்கி, "பெருமானே, விழுந்து தரிக்கும் பூமியான நீயும் விட்டுவிட்டால் ஐம்பொறிகளும் என்னைப் பெரிதும் வருத்துமே, என் செய்வேன்?" என்கிறார். 7.1.6-36.

விளை நீரடைத்துக் கொள்ளல்* - வயலுக்குத் தேவையான அளவு நீரைக்கட்டல் என்பது நேர்ப்பொருள். தேவையானவற்றை முன்பே நிறைத்துக்கொள்ளல் என்பது குறிப்புப்பொருள். இலங்கையில் தன்னைக் கண்ட அனுமனிடம் சீதை, "பிள்ளாய், இன்று இங்ஙனே வெறுந்தறையாய் இருக்கிற நான், எங்கள் மாமனார் மாளிகையிலே பன்னிரண்டாண்டு ஒருபடிப்பட இராம குணங்களை விளைநீரடைத்துக் கொண்டேன்காண்!" என்றாள். 9.6.0-36.

விளைநீராம்படி - பயிருக்கு நீர்போலே உறுதுணையாய் அமைதல். பெருமானை விளைநீராம்படி பெரிய பிராட்டி ஏத்துகைக்குத் துணையாய் இருப்பவள் கலைமகள் ஆவாள். பெ.தி.2.10.6.

வெள்ளக்கேடாதல் - மிகுந்த வெள்ளப்பெருக்குக் கேட்டை விளைக்கிறது; மிகுதியால் விளையும் கேடு என்பது பொருள். உயிர் இறைநுகர்ச்சிப் பெருக்கால் வெள்ளக் கேடாகாத

படியிட்ட கரையே உடல் என்பர் பெரியவாச்சான்பிள்ளை. பெரி.தி.5.4.4.

வெள்ளக்கேடும் வறட்கேடுமாதல் - மிக்கும் குறைந்தும் அழிதல். கண்ணீர் மிகுதியாலும், அன்பின்மையாலும் திருந்திய பின்னாளோடு திருந்தாத முன்னாளோடு வேற்றுமை யின்றித் தொண்டரடிப்பொடி யாழ்வார் இறைவனைக் கண்டு மகிழ முடியவில்லை. அவருக்கு அவை முறையே வெள்ளக்கேடும் வறட்கேடுமாயின. தி.மா.18.

வெள்ளங்கோத்தல்* - புகுதல். தமக்குத் தலைவராய் இருக்கும் இறையடியார் மாட்டு இறைவன் பண்ணின அருள் தம்மளவும் வர வெள்ளங்கோத்தது என்கிறார் நம்மாழ்வார். 10.6.1-36.

வெற்றிலைச் செருக்கு - சிற்றின்பச் செருக்கு. தசரதன், வெற்றி லைச் செருக்காலே பரதனுக்கு அரசு தந்தேன் என்றான். 3.6.8-36.

வெற்றிலை பெறப் பார்த்தல் - பயன்பெறக் கருதுதல். தொண்டரடிப்பொடியாழ்வார், ஒரு காலைக்கு வெற்றிலை பெறப் பார்த்துச் செய்யாமல் செய்வதே பயனாகக் கருதித் தீய செயல்களைத் தாம் செய்து போந்ததாகத் தம்மைத் தாழ்த்திக் கூறிக் கொள்கிறார். தி.மா.30.

வெற்றிலையிட்டருளல் - விடைகொடுத்தல். பணக்காரன் ஒருவனைக் கொல்ல நினைத்தால், "அதனைச் செய்கிறோம்; எங்களுக்கு வெற்றிலையிட்டருளுங்கள்" என்பார் அவன்பால் உண்டு. 4.1.2-36.

வெறுந்தரை* - ஒன்றுமில்லாத இடம். வெறுந்தறை என்றும் வருகின்றது. தலைமகள் தலைமகனைப் பிரிந்து வெறுந்தரை யாய் இருக்கும் தனக்குத் தூதாகச் செல்லுமாறு பறவைகளை வேண்டுகிறாள். 1.4.8-24.

வெறும்புறத்தில் ஆலத்தி வழிக்க வேண்டும்படி யிருத்தல் - எந்த ஒப்பனையும் இல்லாதபோதே மிக்க அழகோடு இருத்தல். பெருமான் வெறும்புறத்திலே ஆலத்தி வழிக்க வேண்டுங் கையிலே படைகளைத் தரித்தான். 1.8 9-36.

வெறும் மறை(ரை) - மான் என்னும் விலங்கு. அஃது அறிவற்றது. எனவே அறிவற்ற பொருள் என்றபடி. இறைவன் அழகை விடுத்து அமுதம் கிடைப்பது எப்போது என்று காத்திருந்த தேவர்கள் வெறும் மறை போலும்! 1.6.6-36.

வேர்ப்பற்றான - முக்கியமான; நெஞ்சம். உலகிற்கு வேர்ப் பற்றான கண்ணனைக் கொல்ல அசோதை போலத் தன்னை அழகுபடுத்திக்கொண்டு பூதனை என்னும் அரக்கி வந்தாள். 1.5.9-36.

வேர் பற்றுகை - ஊன்றி நிற்றல். திருமால் திருப்பெயர் தவிரப் பிறவெல்லாம் உலக வாழ்வில் வேர் பற்றுகைக்கு உறுப்பாய் இருப்பனவாகும். பெ.தி.1.1.10.

வேர்விழுதல் - நன்கு பதிதல். பெருமான் திருக்கையில் திருவாழி வேர்விழுந்திருக்கிறது. பெ.திருவந்.86. நம்பியுடைய திருமேனியில் அழகுவெள்ளம் என்நெஞ்சில் வேர்விழுந்தது என்கிறாள் தலைவி. 5.5.7-36.

வேரோடு அலம்பிப் போகட வேண்டும்படியான - கடுமையான. கிராமணிகள் ஒருவரை ஒருவர் வேரோடு அலம்பிப் போகட வேண்டும்படியான பகைமையோடு இருந்தனர். 4.10.7-36.

செறிவுத் தொடர்கள்

அஃகமுண்ண வருதல் - சிறந்த உணவு உண்ண வருதல். நித்திய சூரிகள் பெருமானிடம் ஏற்று அஃகமுண்ணத் திருமலைக்கு வருகிறார்கள். தி.நெ.தா.6.

அகஞ்சுரிப்படுதல் - குறைதல். இறைவனைப் பிரிந்த காலத்திலும் அகஞ்சுரிப்படாத அழகுகள் தலைமகளின் அழகுகளாகும். 4.6.5-24. விதுரர் முதலானோர் அன்பினை அகஞ்சுரிப்படுத்தி முகங்காட்டுகைக்காகக் கண்ணபிரான் குசத்தலத்திலே தங்கிப் பிற்றைநாள் அத்தினாபுரத்திற்கு எழுந்தருளினான். 8.6.0-36.

அகப்பட்ட துறை - ஈடுபட்ட இடம். காதலி அகப்பட்ட துறை காதலனின் வடிவழகாகும். 7.2.3-36.

அசல் பிளந்தேறிடுகை - 1. பிறர் மேல் ஏறிடுதல். பெருமான், கடலுக்குத் தொடுத்த அம்பை மருகாந்தாரத்திலே விட்டாற்போலே தன் அடியார் செய்த அருவினைப் பயனை அவர் துய்க்காவண்ணம் அசல் பிளந்தேறிடுமாறு செய்வான். தி.மா. 40. 2. பிளந்து அயல் வீசுகை. பெருமான் பகைவர்களை அசல் பிளந்தேறிட்டு அகக்கூட்டம் மட்டுமன்றிக்கே புறக்கூட்டமுமாம்படி பண்ணினான். பெரி.தி. 5.4.8.

அசலிட்டுக் கேட்டல் - பிறர் சொல்லக் கேட்டல். பெருமான் பிரிவால் தலைமகள் கண்ணும் கண்ணீருமாய் இருந்த இருப்பைத் தான் நேரேகாணப் பெற்றானில்லை; அசலிட்டுக் கேட்கப் பெற்றான். அஃதாவது தோழி சொல்லக் கேட்டறிந்தான். தி.வி. 2.

அடைமதிள் படுத்தல் - முற்றுகையிடுதல். பகைவர் வந்து ஊரை அடைமதிள் படுத்த வெல்லுகை குற்றமாகும். பாவை, 11-6.

அடைவுபடச் சொல்லல் - முறையாகச் சொல்லல். ஆயிரம் திருப்பெயர்களையும் அடைவுபடச் சொல்லி, அவற்றிற்குரிய தன்னை நினைப்பவர்களுக்குத் துன்பமின்றி அருளுகிறான் பிரிதியில் உறையும் பெருமான். பெ.தி. 1.2.9.

அண்டை கொள்ளல் - துணை கொள்ளல். வாலிக்கு அஞ்சிச் சுரங்கிடந்த சுக்கிரீவன் பெருமாளை அண்டை கொண்ட பலத்தாலே கிட்கிந்தை வாயிலிலே சென்று அவனை நோக்கி அறைகூவினான். தி.மா. 1.

அணாவாய்த்து இருத்தல் - 1. செய்வது அறியாது இருத்தல். நம்மாழ்வாருக்கு இறைவன் திருவுளகளந்தருளின சில குணத்தைக் காட்டிக் கொடுக்க அதனை நினைந்து அகலமாட்டாதே, அணுகவுமாட்டாதே, நடுவே நின்று அணாவாய்த்துக் காலங் கழிக்கிறார். 1.5.3. 2. போது போக்குதல். பெண்கள்பால் நேயம் மிக்கார், பெண்களின் கருநெடுங்கண் நோக்கத்தில் துவக்குண்டு காலிலே விழுந்து பின்னை அவர்கள் தங்களை விட்டு அவர்களுடைய பேச்சு நடையாடும் இடத்திலே அணாவாய்த்துத் திரிவர். பெ.தி. 1.6.2.

'அது அது' என்னும்படி - விரும்பும்படி இருத்தல். தலைமகள் கண்கள் யோகியர்க்கும் 'அது அது' என்னும்படி

அழகோடு மிளிர்ந்தன. தி.வி.66. வீணையிசை கேட்டார்க்கு 'அது அது' என்று கிடக்கும்படி இனிமை மிக்கதாய் இருந்தது. தி.நெ.தா. 15.

அம்பறுத்து எய்ய வேண்டும்படி - அம்பினைப் பயன்படுத்த வேண்டும்படியான என்பது நேர்ப்பொருள். கடுமையான என்பது குறிப்பு. வணிகர் இருவர்க்கும் ஒரு பந்தலில் இடம் போதாமையால் அம்பறுத்து எய்யவேண்டும்படி விவாதம் உண்டாயிற்று. 1.2.7-36.

அமணானைப்பட்டுத் திரிதல் - மதம்பட்டுத் திரிதல்; காமத்தோடு திரிதல். பிடியை இழந்ததொரு களிறு தன் ஆற்றாமையாலே அமணானைப்பட்டுத் திரியுமாபோலே, தலைமகளையும் தோழியையும் இழிந்து தலைமகன் தன் ஆற்றாமையோடே திரிகிறான். தி.வி. 15.

அமுது செய்தல் - உண்ணல். கண்ணன் வெண்ணெயை இளமைத் தன்மையாலே திருக்கைகள் உள்ள அளவும் கலந்து அமுது செய்தான். 1.8.5-36.

அருள் பாடிடல் - அழைத்தல். பெருமாள் மகாராசரையிட்டு வீடணனை அருள்பாடிட்டார். அம. 0, அழகு.

அரைகுலையத் தலைகுலைய - அரையாடையும் தலைமுடியும் அலைய என்பது நேர்ப்பொருள். வேகமாக என்பது குறிப்பு. பெருமான் முதலையிடமிருந்து யானையைக் காப்பாற்ற மிக்க வெள்ளத்தை உடைத்தான மடுவிலே அரைகுலையத் தலைகுலைய வந்து விழுந்தான். திருவெழு. அடி, 11.

அரையாறுபடுதல் - குறைதல். நம்மாழ்வாருடைய எல்லையற்ற அன்பு அரையாறுபட்டு அடங்குவதற்காக இறைவன் சற்றுப் பேர நின்றான். 4.4.0-24.

அரை வயிறாம்படி - பற்றாதபடி. குறைவாக. அழகு அரை வயிறாயிருக்கையன்றிக்கே விஞ்சித் தலைக்கு மேலே போகிறது. தி.நெ.தா. 21. பெருமான் பேற்றில் முதலடி யாகையாலே அரைவயிறாகப் பேசி, நம்மாழ்வார் முடிந்த அடியாகையாலே நிறைந்தவராகப் பேசுகிறார் மதுரகவி. க.நு.சி.1, நஞ்சீயர்.

அலகலகாக - ஒன்றோடொன்று கூடாமல் இருத்தல். கண்ணனது குழல்சுருண்டு வெடித்து அலகலகாய் இருந்தது. 3.6.5-12.

அழிய மாறல் - முற்றிலும் அழித்துக்கொள்ளல். பெருமான் பூமியைத் தன்பேறாகத் தன்னை அழியமாறி எடுத்தான். 1.7.6-9.

அளாய் குளாயாய்ப் போருவது - களிப்பது: அளாவிக் குலாவிப் போவது என்பதன் சிதைவாகத் தோன்றுகிறது. உலகில் குழந்தையும் குட்டியுமாய் அ ளா ய் குளாயாய்ப் போருவதான கடைமுறை வாழ்க்கையும் பிற தெய்வங் களைப் பற்றினால் கெடும். 9.1.9-36.

அறவிலை செய்து தருதல் - எல்லா உரிமையும் கொடுத்து விற்றல். கண்ணன் தனக்கு இசையாதவர்களை இசையும்படி யும், இசைந்தவர்களை அறவிலை செய்து தரும்படியும் இள ஆய்ச்சியர்களை நோக்குவான். க.நு.சி.1, அழகு.

அறவைத்தனப் படாதபடி - திக்கற்ற நிலைக்கு ஆளாகாதபடி. உலகிற்கு ஆபரணமான அரங்கத்தில் பெருமாள் கிடக்கும் கிடை மக்கள் அறவைத்தனப் படாதபடி இருத்தற்கே யாகும். அம. 10, அழகு.

அறாட்டுப் பறாட்டாயிருக்கை - அரைகுறையாய் இருக்கை. ஆராட்டுப்பிராட்டு 3.7.3-36. உலக இன்பம் ஒருவர்க்கும் பற்றாமல் அறாட்டுப் பறாட்டாயிருக்கையாலே இங்குத் தனித்து நுகர்வர்; திருநாட்டில் நுகர்ந்தாலும் ஆள் தேட்டமாயிருக்கையாலே இனமாக நுகர்வர். தி.வி. 23.

அன்னலுந் துன்னலுமாக - அன்னல் வெயிலென்றும் துன்னல் சிறு திவலை என்றும் பொருள்படும். முறையின்றிக் கலந்த கலவையாக என்பது குறிப்புப் பொருள். குப்பையும் கூளமு மாக என்பது போன்றது. கண்ணன், புகையும் நெருப்பும் கலந்து அ ன் ன லு ந் துன்னலுமாய் இருக்கும் மேகம் போலன்றிக்கே முழுதும் நீருண்ட மேகம் போன்று திகழ் பவன். தி.வி. 2.

அஹமஹமிகயா விரும்புமிடம் - எங்களுடையதென்று பற்றுக் கொண்டு விரும்புமிடம். திருவேங்கடம் மேலான தேவர் களான நித்தியசூரிகள் அஹமஹமிகயா விரும்புமிடமாகும். மு.தி. 38.

ஆடல் கொடுத்தல் - ஈடுகொடுத்தல், சமாளித்தல். தலைமகனைப் பிரிந்த தலைமகளைத் தென்றல் தொடக்கமான பொருள்கள் துன்புறுத்த அவற்றுக்கு ஆடல்கொடுத்துப் பொருள்களைக் கண்டு போதுபோக்கவொண்ணாதபடி எங்கும் இருள்மூடியது. பெ.தி. 8.5.0.

ஆழங்காற்படுகை - ஈடுபடுகை. பெருமான், அகப்பட்டாரை மீளாதபடி ஆழங்காற்படுத்தும் வடிவழகை யுடையவன். 3.3.3-36.

ஆழிமுறையாய்ச் செல்லல் - 1. முறையின்றிச் செல்லல். திருவரங்கம் செல்லுவதில் உண்டான ஆர்வமிகுதியால் திருக்குடந்தைக்குப் பின்பு சொல்ல வேண்டிய திருப்பேரையை முற்படச் சொல்லுகிறாள் தலைவி. தடையற்றால் ஆழிமுழையாய்ச் செல்லத் தட்டில்லையன்றோ? தி.நெ.தா. 19. பெருமாள் அரக்கரை ஆழிமுழையாகத் தறித்துக் குருதி வெள்ளத்தே மிதக்கவிட்டுப் பிராட்டியைப் பிடித்துக் கொண்டு தம் சேவகத்தை மூதலித்துக் காட்டியருளினார். தி.நெ.தா. 21. 2. ஆரவாரமாய்ச் சொல்லல். சிற்றூர் வாழ்க்கை கதிர் அறுப்பது, கிடாவிடுவதுமாய் ஆழிமுழையாய்ச் செல்லுகின்றது. தி.நெ.தா.20.

ஆளத்தி வைத்தல் - முரலுதல். வண்டுகள் மதுவைக் குடிக்க, அம் மது அவற்றை இருந்தவிடத்தே இருக்கவொட்டாமையாலும், தாம் வாய்விடமாட்டாமையாலும் ஆளத்தி வையாநின்றன. தி.மா. 14.

ஆறல் பீறலாய் இருப்பது - பயனற்றதாய் இருப்பது. வாணன் தன்னோடொக்க ஆறல்பீறலாய் இருப்பதொரு தெய்வத்தைப் பற்றித் தோள்வலி கொண்டாடி இருந்தான். 7.4.8-36.

இட்டவழக்கு - கட்டளையிட்டபடி நடப்பது. இறை நுகர்ச்சிக்குத் தடைகளான செவி முதலிய பொறிகளும் அவன் இட்ட வழக்காம்படி அவனுக்கு உடல்போன்று உரிமையாய் அடிமைப்பட்டன. 1.9.9-36.

இட்டீடு கொள்கை - சொல்லாடல். வார்த்தையிட்டு வார்த்தை கொள்ளுகை என்பது பொருள். கண்ணன் இளம்பெண்களோடே இட்டீடு கொண்டு விளையாடுகையாலே அவனால் ஈடுபட்டபெண்கள் யசோதை பக்கல் வந்து அவன் செய்த தீம்புகளைச் சொல்லி முறையிட்டனர். பெரி.தி.2.10.0,

இட்டுப் பிறத்தல் - உரிமையாகப் பிறத்தல். பெருமானின் வடிவழகைத் துய்க்க இட்டுப்பிறந்தவர்கள் நித்தியசூரிகள் 1.10.9-36.

இடக்கை புரி முறுக்குதல் - மாறுபட்ட செயலைச் செய்தல். பெருமான் தன்னை வெறுந்தரையாக்கிப் பிரிந்து சென்று முடிக்க நினைத்ததாகவும் தானும் வாழ்ந்திட எண்ணி இடக்கைப்புரி முறுக்குகை தவிர்ந்து முடிகையிலே துணிந்த தாகவும் சொல்கிறாள் பராங்குசநாயகி. 9.5.10-36.

இடுக்கிக்கொண்டு வருதல் - தூண்டிக்கொண்டு வருதல். பெருமான் யானையின் துயர் துடைக்கத் திருவடியின் வேகம் பற்றாமல் அவனையும் இடுக்கிக்கொண்டு மடுவின் கரையில் வந்து விழுந்தான். 3.1.9-36.

இருகால் மட்டுச் சென்று கேள்வி கொள்ளல் - திரும்பவும் சென்று கேட்டறிதல். மாயோனிகளான இருடிகள் தொடக்க மானோர் தங்கள் கடமைகளைச் பெருமானிடம் இருகால் மட்டுச் சென்று கேள்வி கொள்ள வேண்டாதபடி கற்றிருப்பர். 1.5.3-36.

இருந்ததே குடியாக - எல்லோரும். மனிதர் இருந்ததே குடியாகப் பாவங்களைக் கூடு பூரித்தனர். 2.2.2-36. இருந்ததே குடி யாகத் தொழப்படுபவர் அன்றி மூவரே தொழப்படுபவர். மு.தி.15.

இருபுடை மெய்க்காட்டாகை - இரு குழுவிலும் இடம்பெறுதல். பெருமானுடைய படைகளுக்குப் படைப்பிரிவிலும் ஆபரணப் பிரிவிலும் இருபுடை மெய்க்காட்டாகையாலே திருமகரக் குழைபோலத் திருவில்லும் ஆபரணமாகத் தரித்து வந்தான். தி.நெ.தா.21, பட்டர்.

இளகிப் பதித்திருத்தல் - இளமைத் தன்மை பெருகுதல். ஊட்ட மருந்து உண்டவரைப் போலே கன்றுகளைக் காத்த பின்பு கண்ணன் வடிவு இளகிப் பதித்திருந்தது. தி.நெ.தா.16.

இளமணற்பாய்தல் - இரங்கிய மனத்தை யுடையராதல். நம்மாழ்வார் கண்ணன் வெண்ணெய் களவுசெய்த காரணத் தால் நகரத்தில் உண்டான பரபரப்பில் அகப்பட்டு இளமணல் பாய்ந்து மயங்கினார். 1.3.0-36.

ஈரக்கையாலே தடவுதல் - பரிவுகாட்டுதல். இராமபிரான் அயோத்தியில் பதினோராயிரமாண்டு எழுந்தருளியிருந்து மக்களை ஈரக்கையாலே தடவிக் காத்தான். 7.5.2-36.

ஈரரசு தவிருகை - இரட்டையாட்சி தவிர்தல்; தனக்குத் தானும் இறைவனும் தலைவனாய் இருக்கும் நிலை தவிர்தல். இறைவனை வணங்குகையாவது ஈரரசு தவிருகை; அதாவது அவன் நினைவிலே செல்லுகை எனலாம். 10.6.1-24,36.

உகந்தருளின நிலம் - திருக்கோயில். இறைவன், உகந்தருளின நிலங்களிலே வந்து நிற்கிறது நம்மைத் திருநாட்டுக்குக் கொண்டு போகைக்காக வாகும். 10.6.1-36.

உண்டது உருக்காட்டாது இருத்தல் - உணவின் நலன் உடலில் தெரியாதிருத்தல். அனுபவிப்பது ஓர் அனுபவமாகத் தோன்றாது இருத்தல். இவ்வுலகிலிருந்து அனுபவிக்கின்ற அனுபவம் உண்டது உருக்காட்டாதபடியாய் இருக்கிறது. 3.3.1-36.

உண்டறுத்தல் - உண்டு தீர்த்தல்; அனுபவித்து முடித்தல்; சீரணித்தல். தாழ்ந்த பொருள்களையும் உண்டறுக்க மாட்டாது உலகியலில் சிக்குண்டிருக்கும் சேதனனுக்குப் பெருமான் தன்னையே பொருளாகக் காட்டித் தந்தான். 1.7.2-36. பெருமான், அடியவரின் ஓர் அஞ்சலியைக்கூட உண்டறுக்க மாட்டாத தன்மையினன். அம.1, அழகு.

உணர்ந்தருளல் - விழித்து எழுதல். தாயான பிராட்டியின் மார்பினைச் சயந்தன் காக உருவெடுத்துத் தீண்ட அவ்வளவில் பெருமாள் உணர்ந்தருளி அவன் மேலே ஓர் அம்பினை ஏவினார். பெரி.தி.3.10.6.

உதறிப்படுத்தல் - படுக்கையை உதறிப்படுத்தால் குற்ற மற்றதாமாறு போலே குற்றமின்றி விளங்குகை. ப்ரகாசிப்பிக்கை என்பது பெ.தி.7.6.9 இன் அடிக்குறிப்பு. என் அடிமைத்தன்மையையும் உன் தலைமைத்தன்மையையும் உதறிப்படுத்த பின்பு ''இறைவா, உனக்குப் போக்கிடம் இனி எவ்விடத்திலே?'' என்று இறைவனை நோக்கி வினவுகிறார் பெரியாழ்வார். பெரி.தி.5.4.6.

உரித்து வைத்தல்-தெளிவாக விளக்குதல். 'உளனாகவே எண்ணி' என்னும் பாசுரத்தின் முற்பகுதியில் மானுடத்தின் தன்மையை உரித்து வைத்துள்ளார் நம்மாழ்வார். 3.9.2-36.

ஊமைக் கூறனாகப் பட்டவெல்லாம் படுகை - பேசாமல் பட்ட துன்பங்களெல்லாம் படுகை. திருமால் பாற்கடல் கடைந்த போது அது ஊமைக்கூறனாகப் பட்டதெல்லாம் தங்கள் கையிலே இவன்படும்படி செய்யவல்லர் ஆவதே! என்கிறார்கள் மின்னிடை மடவார். 6.2.3-36.

ஊற்று மாறாமை - எடுக்க எடுக்கக் குறையாமை. பெருமாட்டியால் வந்த செல்வம் ஊற்றுமாறாததாய் இருந்தது. பாவை, 3-6.

எட்டுக் கதிரும் விட்டெரிக்கிற பெரிய மதிப்பு - விளங்குகின்ற பெரிய மதிப்பு. பிற தெய்வங்கள் எட்டுக்கதிரும் விட்டெரிக்கிற பெரிய மதிப்புடையவர்களானாலும் இராவணனை இராமனிடமிருந்து காப்பாற்றுவது அரிதாகப் போயிற்று. அம. 5, அழகு.

எடுத்துக் கைநீட்டுதல் - தொண்டு புரிதல். நித்திய சூரிகளுக்குப் பெருமானும் பிராட்டியும் சேர்ந்த சேர்த்தியிலே எடுத்துக் கைநீட்டுகையே வாழ்க்கையாய் இருக்கின்றது. தி ச.வி. 103.

எடுத்து விடுகை - படையெடுத்தல். அரசர்கள் பகைவர்மாட்டுக் கொண்ட பகையினையும் மறந்து எடுத்து விடுகையும் தவிர்ந்து அரண்மனை திரும்புமாறு மாரிக்காலம் அமைகின்றது. பாவை, 23-6.

எதிர்சூழல் புக்குத் திரிதல்* - எதிரே உள்ள பொருள்களில் கரந்து தங்கியிருத்தல். இறைவன் ஆழ்வாரைச் சேர்வதற்காக எதிர்சூழல் புக்குத் திரிந்தான். 1.7.7-36.

எதிர்போந்ததாய் இருத்தல் - விளக்கம் இல்லாததாக இருத்தல். கண்ணன பாரதப் போரிலே நின்று அருச்சுனனை நோக்கித் தான் சொன்னது அவனுக்குத் தொங்கிற்றோ? எதிரே போந்ததோ? என்று வினவ அவன் 'நிலைபெற்றேன்' என்றான். 7.5 11-36.

எல்லை நடந்து மீட்டுக்கொள்ளல் - அளந்து மீட்டல். மகாபலி போல்வார் கவர்ந்துகொண்ட தன்னுடைய பூமியைப் பெருமான் எல்லை நடந்து மீட்டான். 2.8.7-36.

எழவிருத்தல் - சற்றே அதிகமாகத் தங்குதல். பிற உலக இன்பங்களைக் காட்டிலும், அறவழியில் சென்றவர், நான்கு நாள் எழவிருந்து எழுந்திருக்கலாம்படியான சிம்மாசனத்தின் மேலே இருந்து இந்திரலோகத்தில் இன்பம் துய்ப்பர். பெ.மடல், கண்ணி, 21.

எழுத்து வாங்குதல் - தலைவனின் பெயரை மார்பில் எழுதிக் கொண்டு அடிமை என்று காட்டுதல். அடிமையாதல் என்பது பொருள். திருமால் அமரர்கள் எழுத்து வாங்கும்படியாகத் தோளும் தோள்மாலையுமாய் ஒரு கடல் ஒரு கடலை நின்று கடையுமா போலே பாற்கடலைக் கடைந்தான். 1.3.11-36.

ஒத்து(ப்)பதஞ் செய்தது - நெகிழ்ந்தது. நரசிங்கத்தினுடைய சீற்றங் கண்டவாறே இரணியன் மார்வம் ஒத்துப்பதஞ் செய்தது. 2.6.6-24.

ஒரு(க்)காற் சொன்னாற்போலே ஒன்பதின்காற் சொல்லல் - பலகாற் சொல்லல். கண்ணன், ஒரு(க்) காற் சொன்னாற் போலே ஒன்பதின்காற் சொன்ன பறையை இற்றைக்குக் கொள்ளுங்கோள் என்று பெண்களுக்குக் கொடுக்கும்படி பறையை எடுத்துக்கொண்டு வாருங்கோள் என்றான். பாவை, 29-6.

ஒருகோவையாய் இருத்தல் - ஒன்றாக இருத்தல். பெரியாழ்வாரின் 'வாராரும்' திருமொழியைப் பாடவல்லார் திருநாட்டில் நித்திய சூரிகளோடு ஒருகோவையாய் இருக்கப் பெறுவர். பெரி.தி.3.10.10.

ஒருசிறாங்கை இடுதல் - ஒரு சிறிது இடுதல். தொண்டரடிப் பொடியாழ்வார், கடல்நிறக் கடவுளைக் கண்டு வைத்தும் குறியழியாதே இருப்பவர்களை நோக்கி "உங்கள் வன்மையிலே எனக்கும் ஒரு சிறாங்கை இடவல்லீர்களோ" என்று வினவுகிறார். தி.மா.19.

ஒருநாடாக - பெருங்கூட்டமாக. பெருமான், தான் அருளாத அன்று வாழ்க்கையின்றிக்கே இருக்கும் நித்திய சூரிகளை ஒரு நாடாக உடையவன். 1.1.1-36.

ஒருநிரையாக - ஒரே மாதிரியாக, ஒன்றாக. கண்ணன் ஒரு நிரையாய்ச் சேர்ந்து நின்ற மருதுகளினை ஊடறுத்துச் சென்றான். 6.10.5-36.

ஒருநீர்க்கோப்பாக - ஒரே வெள்ளமாக. நாடு முற்றிலும் ஒரு நீர்க்கோப்பாக மழை பெய்தது. பாவை, 23-6.

ஒருநீராகக் கலத்தல் - இரண்டறக் கலத்தல். பெருமான் தன்னுடனே ஒரு நீராகக் கலந்தவர்களுக்கு ஒப்பற்ற அமுதமாய் இருப்பான். 1.6.5-36.

ஒருபோகியாக்குதல் - ஒன்றாகத் திரட்டுதல். காலத்தை எல்லாம் ஒரு போகியாக்கி, உணரத் தொடங்கினாலும் இறைவனுடைய அக, புறக் குணங்களை உணர இயலாது. மு.தி.68.

ஒருமடைப்படுகை - ஒருவழிப்படுகை. நம்மாழ்வார் இறைவனுடைய செயல்களை நினைத்துப் பார்த்துத் தம் உள்ளம் ஒருமடைப்பட உடைகுலைப்படுகிறார். 6.3.6-36.

ஒருமிடறாக - ஒரே மாதிரி; இசைந்து; ஒன்றுபட்டு. தேவர்களும் இருடிகளும் ஒருமிடறு செய்து ஏத்தும் தேவதேவன் திருமாலிருஞ்சோலையை விரும்பி வந்து படுகாடு கிடக்கிறான். 10.7.7-36.

ஒருமுகமாக - (ஒருமுகஞ்செய்து) ஒன்று கூடியதாக. தலைமகள் பெருமானுடைய திருமுகத்தில் அழகுகள் ஒருமுகமாய் வந்து தன்னை நலிவிக்கின்றன என்கிறாள். 7.7.8-24, 36.

ஒழிஞ்சான் முட்டாய் இருப்பது - ஒன்றுக்கும் தகுதியின்றிக்கே இருப்பது. யசோதை கண்ணனை ஒழிஞ்சான் முட்டாய் இருக்கும் ஒரு கயிற்றையிட்டே கட்டுவது வழக்கமாய் இருந்தது. க.நு.சி. 1, அழகு.

ஒட வைத்தல் - முடிவு செய்தல், விளக்குதல். இறைவனுக்காக இருக்கும் இருப்பே தமக்கு வேண்டும் என்னும் தம் விருப்பத்தினை நம்மாழ்வார் 'தனக்கேயாக எனைக் கொள்ளுமீதே' என்பதில் ஒட வைத்துள்ளார். 1.1.0-இரண்டாம் ச்ரிய:பதி.

ஒம் அறைதல் - இசைதல். கண்ணன் நோன்பினை முன்னின்று நடத்துவதற்கு இசைந்த பின்பு இடையர்கள் எல்லோரும் "பெண்கள் நோற்பார்கள்; கண்ணன் வேண்டும் உதவி புரிவான்" என்று ஒம் அறைந்து சென்றார்கள். பாவை, 0-3.

கட்டடங்க - முற்றிலும். இராமன், முனிவர்களின் அச்சம் தீர அவர்களுடைய பகைவர்களைக் கட்டடங்கக் கொன்று அவர் தம் துணைவனாக நின்றான். தி.நெ.தா.21.

கட்டணமாய்க் கிடத்தல் - அகலாது கிடத்தல். மருத்துவர்வாசலில் நோயாளிகள் கட்டணமாய்க் கிடப்பதுபோலே, நந்தகோபர் வாசலில் கிருட்டினனால் புண்பட்ட பெண்கள் கட்டண மாய்க் கிடந்தார்கள். பாவை, 1-6.

கடக்க இருத்தல் - விலகி இருத்தல். பெருமான் படைத்தல் தொடக்கமான செயல்களைப் பிரமன் முதலியோரைச் செய்யுமாறு பணித்துத் தான் கடக்க இருப்பான். பெ.தி.1.7.1.

கடுநடையிட்டுச் செல்லல் - விரைந்து செல்லல். கண்ணன், ஆநிரைகளின் மேல் ஒரு துளி விழுவதற்கு முன்பு அவற்றுக்கு இடர்வாராதபடியாகக் கடுநடையிட்டுச் சென்று கோவர்த் தனத்தை எடுத்தான். பெ.தி.1.8.3.

கடைக்கூட்டாதல் - நடத்துபவனாதல்; முடித்துத் தருபவனாதல். நோன்புக்குக் கண்ணன் கடைக்கூட்டாக அமைவான் என்று ஆயமகளிர் மகிழ்ந்திருந்தனர். பாவை, 0-3.

கண்செறியிட்டாற் போலே - மூடினாற் போலே. பெருமான், கடலைக் கண்செறியிட்டாற்போலே பெரிய மந்தர மலையை யிட்டு அமுதங் கிளருமளவும் தானே கடைந்தான். தி.கு.தா.3.

கண்ணாஞ் சுழலையிடல்* - கண் சுழலுதல், அதாவது மயங்கு தல். தலைமகன் பிரிவாற்றாமல் கண்ணாஞ் சுழலை யிடுகிறவர்கள் அவன் வந்தபோது அவளிடம் என்ன கூறுவார் கள் என்று சொல்வது அரிது. 6.2.8-36.

கண்பிசைதல் - அழுதல். இந்திரன் மகாபலிபக்கலில் அரசை இழந்து திருமாலிடம் சென்று கண்பிசைய அவன் குறளனாய் வந்து அதனை மீட்டுக் கொடுத்தான். திருவா.5.

கண்வளர்ந்தருளல்* - உறங்குதல். பெருமான் சில திவ்விய தேசங்களில் கிடந்து கண்வளர்ந்தருளுகிறான். 8.3.5-36.

கதகதெனல் - கோபித்தல், ஒலியெழுப்பல். ஒருவனுடைய வேலைக்காரர்களில் எல்லோரும் விரும்பும் ஒரு செயலைச்

சிலர் மட்டும் செய்து பயன்பெற்றால் மற்றவர் கதக தென்னச் சொல்ல வேண்டுமோ? 4.8.7-36.

கமர் பிளந்த நெஞ்சு - ஏக்கத்தால் வறண்ட நெஞ்சம். கண்ண னிடம் ஆயமகளிர் அவனைப் பிரிந்து கமர் பிளந்த தங்கள் நெஞ்சங்கள் வவ்வலிடும்படி மகிழச் செய்யவேண்டும் என்கிறார்கள். பாவை, 27-6.

கரம்பறுக்க வேண்டாமை - இடர் களைய வேண்டாமை. திருநாட்டில் கரம்பறுக்க வேண்டாமையாலே பெருமானது இருப்பு மட்டுமே அமையும்; பாதுகாப்புத் தேவைப்படுவது உலகத்திற்கே யாகையால் இங்கே பொருந்தி வாழ்வது இன்றியமையாதது. 4.10.2-24.

கலந்த கட்டியாக - கலப்படமாக. இருடிகள், காமம் முதலிய பேறு களைக் கலந்த கட்டியாக அறிவுறுத்தி உள்ளனர். க.நு.சி.0, அழகு.

கவிழ்தலையிடல் - தலையைத் தொங்கவிட்டுக் கொண்டிருத்தல்; நாணத்தைக் குறித்தபடி. நெடுவெள்ளம் தேவர் குடியிருப்பை யும் சென்று மூட, அவர்கள் தாம் பாதுகாப்பாளராக இருந்த எல்லை கழிந்தது என்று கவிழ்தலை யிட்டார்கள். பெ.தி.11.4.1. சிற்றின்ப நுகர்ச்சி கண்டார்க்குக் கவிழ் தலையிட வேண்டும்படியாய்த் தாழ்ந்ததாக உள்ளது. பெ.தி.4.1.8.

கழகமிடல் - கூடுதல். பாவைப் பெண்டிர் கிருட்டினனும் தாங்களும் கழகமிடும் குறியிடங்களை அடைந்தார்கள். பாவை, 13-3.

காட்டிக் கொடுத்தல் - ஒப்படைத்தல். அரக்கியர் கையில் சீதை யைக் காட்டிக் கொடுத்து இராவணன் தான் பேர நின்றான். 9.9.6-36.

காடு கைக்கலாவது - சொல்பவனுக்கே வாய் கைக்கும்படி சொல்வது. நாம் புறம்பே நின்று பலவற்றைக் காடு கைக்க லாவது உண்டு. ஆனால் பெருமானது புகழைச் சொல்லி வாழ்வடைதல் தவிர வேறு வழியில்லை என்பதே திரளச் சொல்லலாவது. 9.1.6-24, 36.

காடுபட்டுக் கிடத்தல் - மண்டிக்கிடத்தல். இறைவன் குணங்களுள் ஏதேனும் ஒன்று பயனின்றிக் காடுபட்டுக் கிடக்குமா என்று வினவினால், எல்லாக் குணங்களும் ஒருசேரக் கொள்ளத் தக்கனவாகவே இருக்கும். யாதொன்றும். பயனின்றிக் கிடக்காது. 1.1.1-36.

காணாக் கண்ணிடல் - பொருட்படுத்தாது விடல். இறைவன், தன்னை ஒருகால் நினைத்து ஒருகால் மறந்த என் நிலையினைக் காணாக்கண்ணிட்டு என்னை ஆட்கொண்டானோ என வினவில், தன்னை நினைத்தற்கும் தகுதியற்ற அறிவில்லாப் பொருள்போன்றிருந்த என்னை ஆட்கொண்டான் என்கிறார் நம்மாழ்வார். 7.9.9-36.

கால்கட்டல் - திருவடிகளைப் பற்றித் தடுத்து நிறுத்தல். பெருமானைக் கால்கட்டி நிற்றலே உடல்தொடக்கினைப் போக்கிக் கொள்ளற்கு வழியாகும். பெ.தி.11.8.10.

கால்தாழ்ந்திருத்தல் - ஆழ்ந்திருத்தல். மற்றப் பொருள்களில் கால்தாழ்ந்திருந்த என்னைப் பெருமான் தன் திருவடிகளைத் தொழுமாறு செய்தான். 7.8.5-36.

கால்நடை தருதல் - நடத்தல். தலைமகள், தன் பக்கல் நாயகன்பால் கால்நடை தந்து போக வல்லார் இல்லாமையால் வண்டினைத் தூதாகச் செல்ல வேண்டுகிறாள். பெ.தி.3.6.0.

கால்நடையாடும் போது - நடக்கும் ஆற்றலிருக்கும்போது. திருமழிசைப்பிரான் உலகினரை நோக்கி, "உங்களுக்குக் கால்நடையாடும்போதே திருமலைக்குச் சென்று பெருமானைப் பற்றுங்கள்" என்று அறிவுரை கூறுகிறார். நான்.தி.44.

கால்பிடித்தல் - கெஞ்சுதல். (காலைப் பிடித்தல் என்றும் வருகிறது). தலைமகள், பெருமான் தனக்கு அருள்செய்ய மறுத்தக்கால் வந்து தன்னை முடித்து விடவேண்டுமென்று வாடைக்காற்றைக் கால்பிடித்து வேண்டுகிறாள். 1.4.9-36.

கால்வாங்குதல் - பிரிந்து போதல், நகர்தல். பெருமான், ஆழ்வார் நினைவினை அறிதற்காகக் கால்வாங்கப் புக, ஆழ்வார் "இனி எங்குப் போவாய்?" என்கிறார். 2.6.9-36.

காற்கட்டல் * - தடுத்தல், தாரை வாலியைக் காற்கட்டச் செய்தேயும், அவன் இழிவு பொறுக்க மாட்டாமல் புறப் பட்டுச்சென்று சுக்கிரீவனோடு போரிடத் தொடங்கினான். 10.6.5-36.

காற்கடைகொள்ளல் * - புறக்கணித்தல்; ஒதுக்கல். பெருமான் நான்கு உலகங்களுக்கும் ஏற்றவாறு வெவ்வேறு நிறத்தோடு அவதரித்தபொழுதும் உலகத்தவர் அவனைச் சார்ந்து உய்வடையாமல் காற்கடை கொண்டனர். தி.ச.வி.44.

காறுகாறென்னல் - இகழ்தல். யசோதை கண்ணனைப் பெற்ற குற்றமொழிய, ஊரிலுள்ளார் காறுகாறென்னும்படியாகத் தான் எக்குற்றமும் செய்யவில்லை என்கிறாள். பெரி.தி.3.1.7.

கிழிச்சீரை பெருகவேணுமென்றல் - செல்வம் பெருகவேண்டும் என்றல். செல்வனைக் கண்டால் உலகினர் "உனக்கு இன்னும் கிழிச்சீரை பெருக வேணும்" என்று போற்றி செய்வர். 9.1.3-36.

குட்டமிட்டு அழிக்கை - குழிதோண்டி (அகழ்ந்து) அழித்தல். பெருமான் நரசிங்கமாய்த் தோன்றி இறுமாப்புக் கிடந்த இரணியன் மார்வைக் குட்டமிட்டு அழித்தான். 10.6.4-24.

குட்டிக்கொலையாக அறுத்தல் - கருவில் குழவியும் அழியும்படி யாக அறுத்தல். இராமபிரான் அரக்கர்களை மறுகிளையறும் படி குட்டிக்கொலையாக அறுத்துப்போட்டான். பெரி.தி. 4.2.1.

குடல் மறுகும்படியாக - கலங்கும்படியாக. அரசர்கள் அனைவரும் அருச்சுனனுக்குக் கண்ணன் துணைபுரிவதைக் கண்டு தம்மால் அவனை வெல்ல முடியாதென்று குடல் மறுகும்படியான அச்சங்கொண்டனர். பெரி.தி.4.2.7.

குடி கிடக்கைக்காக - வாழ்வதற்காக. தன் உடைமையான உலகம் குடி கிடக்கைக்காகப் பெருமாள் அரக்கர்களை அழித்தான். பெ.தி.7.3.1.

குடிபோதல் - நீங்குதல். தலைமகள், பெருமானுடைய மென்மை யும் அன்பும் போனாலும் அருள் குடிபோக வேணுமோ என்று வினவுகிறாள். 9.7.9-24.

குடிமை செய்தல் - அடிமை வேலை செய்தல். திருமங்கை மன்னன், "பெருமானே நீ என் பொருட்டுத் திருவிண்ணகரில் மேவியிருக்கும்போது யான் பிறருக்குக் குடிமை செய்து திரிவேனோ?" என்கிறார். பெ.தி.6.2.8.

குடியுந் தடியுமாக இருத்தல் - வசதியோடு சுகமாக இருத்தல். மனிதர்களைப் பார்த்து வீடுபேற்றில் விருப்பின்றி உலகத்தில் குடியுந் தடியுமாக இருக்க விழைந்தால் இறைவனை நோக்காமல் தங்கள் தங்களை நோக்கிச் செல்லுங்கள் என்கிறார் நம்மாழ்வார். தி.வி.6.

குடிவாங்க வேண்டும்படி - வெறுமையாகும்படி, ஆளில்லாது ஆகும்படி, யாதொன்றும் இல்லாதபடி. பெருமாள் கிடந்த கிடை, இலங்கை குடிவாங்க வேண்டும்படியாக அமைந் திருந்தது. 2.8.7-36. பெரிய ஊர்கள் குடிவாங்கினாற் போலே. பெ.தி.2.7.5.

குடிவாழ்ந்திருத்தல் - தங்கள் வீடுகளில் சுகமாக இருத்தல். யசோதையிடம் அண்டைவீட்டுப் பெண்கள் கண்ணனைத் தீம்பு செய்யாதவாறு அவள் அழைத்துக் கொள்ளவில்லை என்றால் அவன் தங்களைக் குடி வாழ்ந்திருக்க வொட்டான் என்று முறையிட்டார்கள். பெரி.தி.2.9.3.

குத்துண்ணும்படி இருத்தல் - தோற்பிக்கும்படி இருத்தல். தலைமகளின் பேச்சு, இனிய இராமாயணத்தினையும் குத்துண்ணும்படி இருந்தது. 6.5.3-24.

குந்தியடியிட்டு நிற்றல் - பற்றுக் கொண்டு நிற்றல். பெருமான், ஆழ்வார் மாய யாக்கை வழியாக நுழைந்து குந்தியடியிட்டு நிற்கிறான். 10.7.3-36.

குழைச்சரக்கு - வலுவற்ற பொருள். திருநாட்டிலுள்ளார் தன்னைக் குழைச்சரக்காக நினைத்து அஞ்சி நோக்கும்படி யான பருவத்தையுடையவன் வைகுந்தக் குட்டன். பெரி.தி.3.6.3.

குறியழியாதே இருத்தல் - சிறிதும் பாதிக்கப்படாமல் இருத்தல். பெருமாள், இராவணன் குறியழியாதே இருக்கும்போதே அவன் தம்பி வீடணனுக்கு முடி சூட்டுவித்தான். தி.ச.வி.91.

குறுவிழி கொள்ளல் - கண்ணைச் சிறிது திறந்து கொண்டிருத்தல். வெண்ணெயுண்ட கண்ணன் படுக்கையில் கிடந்தவாறே குறுவிழிகொண்டு வந்தார் போனார் நிழலாட்டம் பார்த்துக் கொண்டிருந்தான். பெரி.தி.2.5.4. யமனால் துன்புறுத்தப் பட்டுக் கிடப்பவன், தன்னால் விரும்பப்பட்டவளை அழைக் கிறார்களோ என்று எண்ணிக் குறுவிழி கொண்டு கிடக் கிறான். பெ.தி.1.6.4.

குன்னாங்குருச்சியாக - மறைவாக. இடைப்பெண்கள் கண்ணனி டம் தங்கள் விழைவுகளைக் குன்னாங்குருச்சியாகக் கேட் டருள ஒண்ணாது, பேரோலக்கமாக இருந்து கேட்டருள வேண்டும் என்று நினைவுபடுத்துகிறார்கள். பாவை, 23-6.

கூடுகட்டி நிற்கும் இடம் - உறையுமிடம். தேவதேவன் அருள் செய்ய மறத்தாலும் அவன் கையிலுள்ள சக்கரம் உறுதியாக அருள்புரியும். ஏனெனில் அஃது அருள்கூடுகட்டி நிற்குமிடம். 1.4.6-36.

கூடு பூரித்தல் * - நிறைத்துக்கொள்ளல். மனிதன் இங்கு இருக்கும் நாளில் செய்யும் செயல் மறுமைக்கும் வறுமையைக் கூடு பூரித்து வைக்கிறது. தி.மா.6.

கேள்வி கொள்ளுதல் - விருப்பத்தைக் கேட்டறிதல். சத்துருக் கனன் தாய் தந்தையரையும் அண்ணனான பெருமாளையும் கேள்வி கொள்ளாதே பரதனையொழியச் செல்ல மாட்டாமை யால் அவனோடு கேகய நாடு சென்றான். க.நு.சி. 0,பெரி.

கைகழிதல் - எல்லை கடந்து போதல், விலகிப் போதல். நம்மாழ்வார் பெருமானை நோக்கிச் "சிற்றின்ப ஈடுபாட்டில் கைகழிந்து போன நான் உன் திருவடிகளைக் கிட்டுவது என்று?" என்கிறார். 3.2.6-36.

கைசெய்தல் - அணிவகுத்தல். அரசனின்றிக் கிடந்த நாட்டை வன்னியரடையத் தங்களிலே கைசெய்து கீழோலை விட்டு நான்கு வாசலையும் வந்து பற்றினர். பெ.தி.9.5.1.

கைத்தொடராய்ச் செய்தல் - நேரடியாக. அடியார்தம் பகைவர் களை அழியச் செய்யுமிடத்துக் கைத்தொடராய்ச் செய்யாத அன்று பெருமானது சீற்றம் மாறாது. தி.மா.28.

கைதொடனாய் இருத்தல் - உதவியாய் இருத்தல், கையிலேயே இருத்தல். கிருட்டினாவதாரத்தில் பெருமானுக்குச் சங்கும் சக்கரமும் கைதொடனாய் இருக்கின்றன. பெரி.தி.2.1.1.

கைதொடுமானமாய் இருத்தல் - உதவியாய் இருத்தல். பெருமானது மகிழ்ச்சிக்குக் கைதொடுமானமாகையே அடியவனுக்கு வாழ்ச்சியாகும். தி.மா.45.

கைபுகுதல் - அணித்தே இருத்தல், அடையத்தக்கதாய் இருத்தல். கண்ணன், பிரமன் தொடக்கமானவர்களுடைய அறிவுக்கும் எட்டாதவனாய் இருந்தபோதிலும் இடைச்சிக்கும் வேடனுக்கும் கைபுகுந்து இருந்தான். பெ.தி.1.1.1.

கையடியுண்ணல் - ஈடுபடுதல், சிக்கிக் கிடத்தல், அயோத்தியில் உள்ளார் இராமகுணங்களிலே கையடியுண்டு மற்றொன்று அறியாது இருந்தனர். நா.தி.13-10.

கையடைப்பாக்கல் - சூழ்ந்து நிற்குமாறு செய்தல். "பெருமானே, இவ் ஆன்மாவை முடிக்க வல்ல இந்திரியங்களைக் கையடைப்பாக்கி நீயே காப்பாளன் என்னும் எண்ணத்தை நெகிழ்ப்பவன் போலே நின்றாய். இனி எனக்கு யார் துணையாவார்?" என்கிறார் நம்மாழ்வார். 7.1.2-36.

கையெடா நிற்றல் - வணக்கம் புரிதல். கிருட்டினன் என்றால் கையெடுப்பாரில்லை. நம்மாழ்வாருடைய ஊரின் பேரைக் கேட்டவுடன் ஊரே கையெடா நின்றது. க.நு.சி.8, அழகு.

கைவந்தபடி - அறிந்தபடி. ஆழ்வார்கள் தம் கைவந்தபடி பாடினாரல்லர்; இறையருளை முதலாகக்கொண்டே கவி பாடினர். க.நு.சி.8, நம்பிள்ளை. இறைவனாகிய பொருள் எனக்கு அழகியதாகக் கைவந்தது. நான்.தி. 96.

கைவந்தார்படி - அறிந்தார் தன்மை. "நின்னலால் இலேன்காண்" என்று கூறுவதன்றோ இறைவனைக் குறித்துக் கைவந்தார் படியாக இருக்கின்றது. 4.9.2-24.

கைவளர்ந்து போதல் - பழகிப்போதல். மதுரகவிகள் விரும்பத்தகாதவற்றிலும் தீமைகளிலும் கைவளர்ந்து போந்ததம்மை நம்மாழ்வார் திருத்தி ஆட்கொண்டார் என்கிறார். க.நு.சி. 4, அழகு.

கைவாங்குகை - மீளுதல், பின்வாங்குதல், சோர்தல். தேவர்களும் அசுரர்களும் கடலைக் கடைய வென்று தொடங்கிக் கைவாங்கினார்கள். சி.மடல், கண்ணி, 27.

கோட்சொல்லிக் கொடுத்தல்* - காட்டிக் கொடுத்தல். சிறுபுலியூர்ச் சலசயனம் என்னும் திவ்விய தேசத்தின் திருவீதிகள் அவ்விடத்தின் செல்வச் செழிப்பினைக் கோட்சொல்லித் தாராநின்றன. பெ.தி.7.9.10.

கோட்புக்குப் பலித்தல் - மரங்கள் பயன்கொள்ளும் பருவத்தனவாய்ப் பழுத்தல். இறைவன், அக்காரமென்னும் மரம் கோட்புக்குப் பலித்தாற்போல் இலங்குகிறான். 2.9.8-24.

கோடியெடுக்கிறேன் எனல் - பல சான்று காட்டுகிறேன் எனல். தலைமகள், பெருமான் தகவுடையன் அல்லன் என்பதற்குக் கோடியெடுக்கிறேன் என்கிறாள். 10.3.1-36.

கோல் தேனாக அனுபவித்தல் - மிக்க இன்பமாக அனுபவித்தல். திருமங்கையாழ்வார், பெரிய பெருமாளையும் அல்லாத திருப்பதிகளைப் போல, 'கண்டியூர் அரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லை' என்று கோல்தேனாக அனுபவித்தார். அம. 0, அழகு.

சாண் சந்தை - சிறு நினைப்பு. இறைவன் ஒருவன் உளன் என்னும் இச் சாண் சந்தையும் நெஞ்சில்படவில்லை. பெ.தி.1.6.6.

சாமானியன் என்று இடும் ஈடெல்லாம் இடுதல் - செய்யும் துன்பமெல்லாம் செய்தல். அழகர் திருமலையில் சாமானியர் என்றும், சோழியர் என்றும் இருபிரிவினர் இருந்தனர். அவர்களுக்குள் பகைமையுண்டாய்ச் சோழியரெல்லாம் சாமானியரைக் கண்டால் அடிக்க வேண்டுமென்று இரவில் கூடியிருந்தனர். அப்பொழுது சோழியருள் ஒருவன் வர அவனை ஆளறியாமல் அடிக்க, அவன் ''நான் சோழியன்; ஏன் அடிக்கிறீர்கள்'' என்றான். அவர்கள் சாமானியன் என்று கருதிவிட்டோம் என்றனர். அப்படியானால் ''இன்னுங் குத்துங்கள்'' என்று அவன்பக்கல் வெறுப்பாலே தன் நோவு தோற்றாமல் சொன்னான். யசோதை கண்ணனை ''ஒரு பெண்ணைக் களவு கண்டான்'', ''வெண்ணெயைக் களவு கண்டான்'' ''உரை முலையடியே நடத்தினான்' என்று கட்டுவாள் அவன் ''சாமானியன் என்று இடுமீடெல்லாம் இடுங்கோள்' என்றிருந்தான். தன்னைக் கள்ளனென்று கட்டிவைத்தால் அதனை விரும்பி ஏற்றான் என்றபடி. க.நு.சி.1, பெரி.

சாலப் பணியுண்டாய் இருத்தல் - அரிய செயலாய் இருத்தல்; தொல்லை மிக்கதாய் இருத்தல். புறச் சமயங்களாகிற விலக்கடிகளில் வீழாது தப்புவது சாலப் பணியுண்டாய் இருப்பதொன்றாகும். பெ.தி.9.7.0.

சிக்கெனப் பிடித்தல் - உறுதியாகப் பிடித்தல். தலைமகளை, நெஞ்சைச் சிக்கெனப் பிடித்துக்கொண்டு தரித்துக்கொண் டிருக்குமாறு தோழிமார் தொடக்கமானோர் வேண்டினர். 7.3.2-9.

சிமிழ்த்துக்கொண்டு வருதல் - அணிந்துகொண்டு வருதல். பெருமான் ஒரு சிவப்பு நிற ஆடையினைச் சிமிழ்த்துக்கொண்டு தலைமகளின் வீட்டு வாயிலில் வந்து நின்றான். பெ.தி. 10.8.2.

சிவீலென்று இருத்தல் - பொறாமையோடு இருத்தல். கண்ணன், அருச்சுனனை நோக்கி 'நம்முடைய அக, புறப்பண்புகளையும் உடைமைகளையும் சொன்னவிடத்தில் நீ சிவீல் என்று இருந்திலை; உன்னையொத்த அதிகாரியைக் கண்டிலோம்" என்றான். 3.5.6-36.

சிழகிச் சிழகி யழுதல் - விக்கி விக்கி யழுதல். "நெஞ்சே, காலமெல்லாம் இருந்து சிழகிச் சிழகி யழுதலால் என்ன பயனுண்டு? மெய்ஞ்ஞானச் சோதிக் கண்ணனை அடைய முடியுமா?" என்று வினவுகிறார் நம்மாழ்வார். 3.2.7-36.

சிறிமுறிப்படி செல்லல் - ஆணைப்படி செல்லல். கோவை வாயாள் திருவாய்மொழி வல்லார், பரமபதம் தங்கள் சிறுமுறிப்படி செல்லுமாறு ஆள்வர். 4.3.11-36.

சிறுமுறி மறுக்கும்படி - கட்டளை மறுக்கும்படி. இயமன், தனக்குப் பரிவரானவர்களுக்குத் தன்னுடைய நாலைந்து சிறிமுறி மறுக்கும்படி அவர்களுக்குத் தரம்செய்து கொடுத்தான். பாவை, 4-6.

சிறியத்தைப் பெரியது நலியாதபடி - முறைமையோடு. பெருமாள், தம் வில்லாற்றலால் இராவணன் முதலிய அரக்கர்களை அழித்துச் சிறியத்தைப் பெரியது நலியாதபடி நாட்டை ஆண்டார். தி.நெ.தா. 7.

சினை கொள்ளுகை - செழித்திருக்கை. திருவாலித் திருநகரி சினைகொண்ட வயலையுடையதாய்த் திகழ்கிறது. பெ.தி. 2.9.10.

சீறுபாறு என்று போருகை - சினமுறுகை. சூர்ப்பணகை சீதா பிராட்டேயோடே சீறுபாறென்று வந்தாள். சி. மடல், கண்ணி. 39.

சுமையெடுக்கத் தொடங்கல் - வருத்தத் தொடங்கல். மனதிற்கு அடங்கி நடக்க வேண்டிய ஐம்பொறிகள் கலிகாலக் கொடுமையால் மனத்தைச் சுமையெடுக்கத் தொடங்கின. பெ. தி. 1.6.8.

செம்பால் பாய்ந்து நிற்றல் - மிக்கு நிற்றல். தொட்டாய் குருதி பொசியும்படி, மென்மை மிக்கிருத்தல். (செம்பால் - குருதி) ஆலிலைமேல் கண்வளரும் பிள்ளைப் பெருமானுக்குக் இருட்டினனும் முரணித்திருக்கும்படி இளமைத் தன்மை செம்பால் பாய்ந்து நின்றது. அம. 9, பெரி, அழகு.

செவி சீப்பாய்ந்து கிடத்தல் - ஈடுபட்டுக் கிடத்தல்; வாய்புலற்றிக் கிடத்தல். காமனைப் பயந்த காளை தன் வாழ்விடமாகக் கொண்டது திருவனந்தபுரமாகும் என்று அறிவுடையார் அடங்கச் செவி சிப்பாய்ந்து கிடப்பார்கள். 10.2.8-36.

சேர விழுதல் - வந்து பொருந்துதல்; பொருத்தமாக அமைதல். மங்களச் செயல் செய்வார்க்கு விதிக்கிற விதியும் இவர் களுக்குக் கோல் விழுக்காட்டிலே சேரவிழுந்தது. பாவை, 1-3.

சொப்பனச்சொல்லல் - நன்றாகச் சொல்லல். "அன்னையே, நாம் கற்பித்த திருநாமங்களையும் சொப்பனச் சொல்ல மாட்டாதவள் இன்று நான் சொல்லினும் திருத்தொலை வில்லிமங்கலம் என்பது ஒழிய மற்றொன்றும் கேளாதவளாய் இருக்கிறாள்" என்று தோழி தாயிடம் கூறினாள். 6.5.7-36.

தகர விழுகை - தகரும்படி விழுதல். மிக உயரத்தில் ஏறினால் அது தகர விழுகைக்கு உறுப்பாகும். 4.6.0-24.

தங்கு வேட்டையாக - புறப்பட்டுச் சென்று தங்கியிருத்தல். ஆழ்வார்மீது மிகுந்த விடாயனாய்ப் பெருமான் அவரைக் கொண்டு போகைக்குத் திருவாட்டாற்றில் தங்கு வேட்டை யாக வந்து நின்றான். 10.6.0-36.

தட்டித் திரிதல் - கிடைக்கப் பெறாது திரிதல்; தேடித் திரிதல்; இடறித் திரிதல். பெரியாழ்வார் காக்கையை நோக்கிப் பிண்டத் திரளை உண்ண வேண்டிக் கிட்டுமிடம் தட்டித் திரியாமல் கண்ணன் குழலை வாரிவிட வருமாறு வேண்டுகிறார். பெரி.தி.2.5.6. "ஈச்வராபிமாநியாய் ஒருத்தனாய்த் திரிந்தவன் வாசல்தோறும் இடறித் திரிவதே!" என்று திருவுள்ளத்திலே புண்பட்டான் ஸர்வேச்வரன் மு.தி.46.

தடுக்கின் கீழே இருந்து கேட்டல் - பக்கத்தில் நாடிச்சென்று கேட்டல். பாவையர் கண்ணனை நோக்கி "அடியவர் பிழை செய்தால் பொறுப்பது பெரியார் கடன் என்பதனை ஐயர் தடுக்கின் கீழேயிருந்து கேட்டறியாயோ" என்று வினவுகின்றனர். பாவை, 28-3.

தரைகாணல் - எல்லை காணல். இறைவன் பண்புகளுள் மேன்மையினும் நீர்மை தரைகாண வொண்ணாததாய் இருக்கிறது. 1.3.1-36.

தரைப்படுதல் - தோற்றுப் போதல், வீழ்தல். தறைப்படுதல் என்றும் காணப்படுகின்றது. 7.3.3-36; 10.3.8-24,36. பெருமான், பகைவர்கள் தரைப்படும்படியான சங்கு சக்கரம் முதலான படைகளைக் கையில் பரிவாலே தாங்கியுள்ளான். தி.ச.வி.97.

தலைமண்டையிடல்* - மிகுதல். பாட்டுக் கேட்போர், பாட்டு ஈடுபடுத்தினவாறே 'பாவியேன்' என்னுமாறு போல, நம்மாழ்வார் அடியார்க்கு அடிமைப்பட்ட இன்பம் தலைமண்டையிடத் தம்மைக் 'கொடுவினையேன்' என்று கூறிக் கொள்கிறார். 8.10.1-36.

தறைக்கிடை கிடத்தல் - கீழே விழுந்து கிடத்தல். தாயார், பெருமானை நோக்கி "என்மகள் தறைக்கிடை கிடக்க நீ பாம்பணையில் படுத்திருத்தல் பொருந்துமோ?" என்கிறாள். 7.2.6-36.

தாளங் கொண்டறிதல் - வெண்கலத்தின் ஒலி ஒருகாலுக்கு ஒருகால் ஓய்ந்து வருதல்போல் ஒருகாலுக்கு ஒருகால் குரல் ஓய்ந்து வருதல் என்பது பொருள். தலைமகளின் துயரமிகுதியைத் தாளங்கொண்டு அறியலாம். 2.4.1-36.

திரிய விடுவித்தல் - வந்த வழியே திரும்பிச் செல்ல விடுதல். திருமங்கையாழ்வார், திருக்குறுங்குடிப் பெருமானைப்பற்றித் தம்மை வருத்திய ஐம்பொறிகளைத் திரிய விடுவித்ததாகத் தெரிவிக்கிறார். பெ.தி.1.6.8.

திருக்காப்புக் கொள்ளல் - மூடிக்கொள்ளல். நம்மாழ்வார் திருவாசலைத் திருக்காப்புக்கொண்டு தனிமையில் பெருமானிடம் தன் விருப்பங்களை விண்ணப்பம் செய்கிறார். 9.2.0-36.

திருச்செவி சாத்தலாம்படி யிருக்கை - கேட்கத்தக்கதாய் இருத்தல். நம்மாழ்வார் விண்ணோர் பெருமானைத் திருச்செவி சாத்தலாம்படியிருக்கும் இசைமாலைகளால் ஏத்தியதாகக் கூறுகிறார். 4.5.6-24,36.

திருநாட்டுக்கு எழுந்தருளல் - வைகுந்தத்துக்குச் செல்லல்; உலக வாழ்வு நீத்தல். திருநாட்டுக்கு நடத்தல் என்றும் குறிக்கப் படுகிறது. 4.6.2-36. பெரிய நம்பி, ஆழ்வான் மடியில் சாய்ந்தவாறே திருநாட்டுக்கு எழுந்தருளினார். 3.5.7-36.

திருநாளெழுந்தருளுவித்தல் - பலப்பல சொல்லிக் கொண்டாடுதல். உருத்திரனைத் திருமங்கையாழ்வார் "குலவரையன் மடப்பாவை யிடப்பால் கொண்டான்" என்று அடைமொழிகள் தந்து திருநாளெழுந்தருளுவிக்கிறார். தி.நெ.தா.9.

திருப்பல்லாண்டு பாடுதல் - வாழ்த்துக் கூறுதல். பெருமான் பள்ளியறையிலிருந்து அரியணை அளவும் நடந்து வருதல் கண்ட பாவை நோன்பு நோற்கும் பெண்கள் அவனது நடையழகுக்குத் திருப்பல்லாண்டு பாடினர். பாவை, 24-3.

திருப்பள்ளியுணர்தல்* - விழித்தெழுதல். நம்மாழ்வார், திருப்புளிங்குடியில் கண்வளரும பெருமானை நோக்கி, அவன் திருப்பள்ளியுணர்ந்து பிராட்டியோடேகூட இருந்தருள வேணடும் என்று தம் விழைவினைத் தெரிவிக்கிறார். 9.2.0-9.

திருமஞ்சனம் பண்ணல் - நீராடல். ஆசாரியனை அவன் சிறப்பு நோக்கித் "திருமஞ்சனம் பண்ணியருள வேணும்" என்று சொல்வது வைணவ மரபு. பெரி.தி.4.4.7.

திருவுள்ளம் பற்றல் - எண்ணுவது. இராமபிரான், அனுமனுடைய அறிவு ஆற்றல்களைக் கண்டு அவனே சீதையைத் தேடிக் கண்டறிய வல்லான் என்று திருவுள்ளம் பற்றினார். பெரி.தி.4.1.0.

துகைக்க வொண்ணாமை - சொல்ல வொண்ணாமை. பிராட்டி நாவாலே துகைக்க வொண்ணாத பேரழகுடையவள். 10.10.6-24.

துடைநடுங்குதல் - அஞ்சுதல். துரியோதனன் தன் அவையில் இருந்தார் அனைவரும் கண்ணபிரானைக் கண்ட அளவில் எழுந்து வணங்குவது கண்டு தானும் துடைநடுங்கி எழ முயன்று கருவுதலாலே எழாது அமர்ந்திருந்தான். பெரி.தி.1.8.4.

துணுக்குத் துணுக்கு என்னல் - அஞ்சுதல். திருமகள், பெருமான் மார்பில் இம்மார்பிலிருப்புக்கு ஏதேனும் இழவு வரில் செய்வதென் என்று துணுக்குத் துணுக்கென்று ஆயிற்று உறைகின்றாள். பெ.தி.2.7.1.

தும்பு கூட்டல் - திரட்டல். மேலான இறைமைக் குணங்களும் பிறந்து படைத்த குணங்களுமெல்லாம்கூடத் தும்புகூட்டினால் இராமபிரான் தசரதனுக்கு ஒப்பாவான் என்பர். பாவை, 17-6.

துரும்பெழுந்தாடல் - கிளர்ந்திருத்தல். அறிவில் குறைய நின்றாரும் மகிழ்ச்சிக்குப் போக்குவிட்டுத் துரும்பெழுந் தாடும்படி பண்ணும் உகந்தருளின நிலம் திருப்பிரிதி ஆகும். பெ.தி.1.2.1.

துள்ளித் தூரியிருக்கை - சுருண்டு மென்மையாயிருக்கை. தலை மகன் நறுங்குஞ்சி துள்ளித் தூரியாய் இருந்தது. தி.நெ.தா.21,பட்டர்.

தூர்வை யெடுத்தல் - போக்குதல். கண்ணன் திருத்துழாயிலே சென்ற தலைமகள் நெஞ்சம் அவனாலும் தூர்வையெடுக்க வொண்ணாத பசலைநோயினை அவளுக்குத் தந்துவிட்டது. தி.வி.12.

தூறு மண்டுதல் - மிகப்பலவாக நிறைதல். இறைவன் தம் நெஞ்சில் புகுந்து நீங்காதிருத்தலால், தன்னோடு தொடர்

புடையாரும் தூறு மண்டின நோய்களெல்லாம் துரந்து மண்ணுலக வாழ்வில் சேர்வது மாறினர் என்கிறார் நம்மாழ்வார். 2.6.7-36.

தொங்கும்படி - தங்கும்படி, நிற்கும்படி. மதுரகவியாழ்வார் வேதத்தின் உட்பொருளைத் தம் நெஞ்சில் தொங்கும்படிக் கோக நம்மாழ்வார் விரகிட்டுப் பாடி நிறுத்தினார் என்கிறார். க.நு.சி.9, அழகு.

தொட்டுத் தருதல் - போக்கித் தருதல். அனுமன், வானர வீரர் களைப் பார்த்து "நீங்கள் வேண்டுமளவு மதுவினைக் குடியுங்கள். ததிமுகன் முதலியோரால் ஏதும் தொல்லை யின்றி யான் தொட்டுத் தருகிறேன்" என்கிறான். பெ.தி. 11.5.1.

தொடை கொள்ளலாம்படி இருத்தல் - அறியலாம்படி இருத்தல். கலவியால் வந்த புகர் அடங்கலும் வடிவிலே தொடை கொள்ளலாம்படி வண்டு விளங்கியது. பெ.தி. 3.6.1.

தொத்தம்பாக விடுதல் - அம்புக்காயத்தோடு தப்பிச் செல்ல விடுதல். பெருமாள், மானுருவில் வந்த மாரீசனை முன்பு போலே தொத்தம்பாக விடாதே முடித்தார். தி.கு.தா. 16.

தோல்புரையே போதல் - மேலோடு போதல். தலைமகளின் பார்வையம்புகள் தோல்புரையே போவதன்றிக்கே தலை மகனின் உயிரிலே தைத்தன. தி.வி. 75.

நக்கரைந்து கிடத்தல் - அழிந்து கிடத்தல். கம்சன் கண்ண பெருமான் திருவடிப்பட்ட அளவில் நக்கரைந்து கிடந்தான். மலையில் மோதினால் மோதிய பொருளே நக்கரைந்து போகும்; மலைக்கு அழிவில்லை. தி.நெ.தா. 7.

நடைச்சக்ரவத்துப் பிடிக்கும்படி - நடைக்குச் சக்கரவர்த்தி வந்தான் என்று விருது பிடிக்கும்படி. யமுனையாற்றங் கரையில் கண்ணனைக் காணாத இடைப்பெண்கள் அவனைப் போல ஒரு பெண்ணை அமைத்து விளையாடினார்கள். கண்ணனாக நடித்த பெண், "நான் நடக்கிறேன்; நீ நடைச் சக்ரவத்துப் பிடித்துக்காண்" என்று பிறிதொரு பெண்ணை நோக்கிக் கூறினாள். பெ.தி. 8.2.6.

நரம்பில்லாதது - முற்றாதது. தலைமகளின் நகில்கள் நரம்பில்லாதவை. தி.நெ.தா. 17.

நல்லுயிரான - சாரமான. பெருமான் கடலைக் கடைந்து நல்லுயிரான அமுதத்தை வாங்கியருளினான். பெ.தி. 3.9.1.

நற்றரிக்க இருத்தல் - நன்கு இருத்தல். திருமகள் கேள்வன் பெரிய திருவடி முதுகிலே நற்றரிக்க இருந்து அவனை நடத்துகிறான். தி.நெ.தா. 6.

நறுகு முறுகு எனல் - பொறாமைப்படுதல். சிசுபாலன் தொடக்கமானோர் நறுகு முறுகு என்றால் அவர்கள் கண்ணுக்குத் தோற்றாதபடி மறைந்துநின்று நோக்கும் கருணையாளன் பெருமானாவான். 6.9.5-36.

நனுங்கிக் கொண்டு வருதல் - மெள்ளப் பாடிக்கொண்டு வருதல். பெருமான், பெண் பிறந்தாரடைய மயங்கும்படியாக இரவில் பண்ணை நனுங்கிக்கொண்டு வந்து இல்லம் புகுந்தார். பெ.தி. 10.8.3.

நாக்கு நீட்டல் - ஆசைப்படல். நெஞ்சம் கண்டதிலெல்லாம் நாக்கு நீட்டித் திரிந்தது. தி.வி. 44.

நாக்கு வளைக்கை - பழித்தல். பெண்கள்பால் ஒருவன் செய்யும் தாழ்ச்சி பயனின்றிக் கழிதலோடு பிறர் நாக்கு வளைக்கைக்கும் மேல் நரகம் செல்வதற்கும் உடலாகின்றது. 2.10.2-24. ஐம்புல இன்பங்களை நாக்கு வளைக்கலாம்படி ஆபரண அழகையுடையவன் பெருமான். மூ.தி. 79.

நாநீர் வரும்படியான வார்த்தை - விரும்பும்படியான வார்த்தைகள். இராமபிரான் இலக்குவன் கைகேயியைப் பழித்துரைத்த போது, அவ்வாறு பேசக்கூடாது என்று கூறி நாநீர்வரும்படியான வார்த்தை சொல்லும்படி வேண்டினான். 9.1.4-36.

நாப்புரளாதபடியான - சொல்லக் கூசும்படியான. தலைமகள் அயல்பெண்கள் நாப்புரளாதபடியான பழிகளைத் தூற்றத் தான் மடலேறப் போவதாகச் சொல்கிறாள். 5.3.10-36.

நிறக்கேடு - பெருமைக்குறைவு. நம்மாழ்வார் இறைவனைத் தாம் கிட்டுகை அவனுக்கு நிறக்கேடு என்று நினைத்தார்; ஆனால் இறைவனோ அவரைக் கூடி ஒளி மிக்கவனாய் விளங்கினான். 3.6.7-36.

நிறம் பெறும்படி - சிறப்புறும்படி; பொலிவு பெறும்படி. கண்ண பெருமான், எருதுகளின் சீற்றத்தையும் தனது மென்மையையும் பார்த்துக் கூசாமல் மேல்விழுந்து அடர்த்துத் தன் இளமைத் தன்மை நிறம்பெறும்படி நின்றான். தி.ச.வி. 42.

நெஞ்சுளுக்கும்படியாக - நெஞ்சு குலையும்படியாக. கண்ணன் தேரை நடத்தும் திறமை தூரியன் பக்கத்தைச் சார்ந்த அரசர்கள் தாம் பிழைக்கமுடியாது என்று நெஞ்சுளுக்கும் படியாக இருந்தது. பெரி.தி. 1.9.4.

பகட்டித் திரிதல் - அழகுகாட்டித் திரிதல். மன்மதன் தன் வடிவாலே நாட்டை அடையப் பகட்டித் திரிகிறான். பெ.தி. 1.1.3.

பகட்டித் துவக்குதல் - மயக்குதல். விலைமகளிர், "சிற்றின்பம் துன்பம் பயக்கும்" என்று எண்ணவொட்டாதவாறு தம் பருவத்தையிட்டுப் பகட்டித் துவக்குவர். பெ.தி. 1.1.1.

பசலுங் குட்டியுமாய் - குழந்தையுங் குட்டியுமாய். இவ்வுலகில் பசலுங் குட்டியுமாய் வாழும் வாழ்க்கையும்கூடத் திருமாலை வழிபடாவிட்டால் அழிந்துபோகும் என்பது நம்மாழ்வார் கருத்து. 9.1.9-36.

பசுகு பசுகு என்றிருத்தல் - பசுமையாக இருத்தல். திருவரங்க நாதன் திருக்கழுத்து, கமுகக் கன்றின் கழுத்துப் போலே பசுகு பசுகென்று இருக்கின்றது. அம. 6, அழகு.

பட்டி புகுதல் - கண்ட இடத்தில் திரிதல். பட்டி போதல் என்றும் வருகின்றது. இந்திரியங்கள் சிற்றின்பப் பொருள்களில் பட்டி புகாதபடி நியமித்தல் அரிய செயலாகும். 4.7.9-24.

பட்டோலை எழுதச் சொல்லல் - ஏட்டில் எழுதச்சொல்லல். நம்மாழ்வார் திருவாய்மொழி அருளிச் செய்கிறபோது தம்மைப் பட்டோலை எழுதச் சொன்னார் என்கிறார் மதுரகவிகள். க.நு.சி. 4, அழகு.

படவடித்தல் - துன்புறுத்தல். வெறும்புறத்திலே படவடிக்கவல்ல கையிலே பெருமான் அழகு நிறைந்த சுரியையுடைய சங்கினையும், பகையினை அழிக்கும் சக்கரத்தினையும் தாங்கினான். அம. 7,பெரி.

படிவிடல் - வாழ்வு நல்கிடல். நித்திய சூரிகளுக்குப் படிவிடும் வடிவத்தைப் பெருமான் மதுரகவியாழ்வாருக்குக் கொடு வந்து காட்டினான். க.நு.சி. 3, அழகு.

படுகாடு கிடத்தல்* - வீழ்ந்து கிடத்தல். விண்ணோர், திருநாட்டின் மேன்மையையும் திருமலையில் நிற்கிற நீர்மை யையும் ஒரு போகியாகத் துய்த்துக்கொண்டு விடாதே வேங்கடத்தில் படுகாடு கிடக்கிறார்கள். 1.8.3-24.

படுகுலையடித்தல் - படுகொலையடித்தல் என்றும் வருகின்றது. 9.6.0-36. பெரிதும் வருத்துதல் என்பது பொருள். பெருமான் நோக்காதே படுகுலையடிக்கிலும் விடப் போகாத அழகிய தோள்களை உடையவன். பாவை, 4-6. கிருட்டினன் பெண் களைப் படுகுலையடிப்பவன். பாவை, 12-3.

படைக்குறி காணல் - சேனைச் சோதனை காணல். சக்கரவர்த்தி திருமகன், இராவணனை அழித்துப் படைக்குறி காணு மளவில் வானரங்களில் சிலரைக் காணாதொழிய இந்திர னைக் கொண்டு அவர்களைப் பெற்றுக் கூட்டிக்கொண்டு போனான். 3 6.8-36.

படையற்றனவாதல் - வலிமையற்றனவாதல். நம்மாழ்வார் தமக்கு உறுப்பாய் அமைந்து தம்மைப் பகைத்த ஐம்பொறி களும் இறைவனிடத்தில் படையற்றன என்கிறார். 2.7.9-36.

படையறுத்துக் கொள்கை - தன்வயமாக்கிக் கொள்ளல். தலைமகள் தன்னால் தூதுவிடப்பட்ட தன் நெஞ்சைத், தலைமகன் படையறுத்துக் கொள்கைக்காகக் கொண்டாடி னான் என்றும் அதனால் அது மயங்கி அவன் வழிநின்று தன்னை மறந்துவிட்டது என்றும் கூறுகின்றாள். தி.வி. 30.

பண்செய்து ஏறுதல் - வாகனத்தை அலங்கரித்தல். யானையின் துயரக்குரல் கேட்ட பெருமான் பெரிய திருவடியைப் (கருடனை) பண்செய்து ஏறப்பெறாதே வெறும்புறத்தே மேற்கொண்டு விரைந்து மடுவின் கரைக்கு வந்தான். 6,2.0-36.

பணிபோரும்படியான* - மற்றவற்றில் கருத்தின்றி ஈடுபட்டிருக்கும் படியான. திருமகள், திருமாலுக்குத் தன்னோடே பணிபோரும்படியான இன்பத்தையுடையவள். பெ.தி.2.6.2. இவ்வுலக மக்கள் ஐம்புல இன்பங்களில் விழைவுடையவராய் அவற்றோடே பணிபோந்திருப்பார்கள். 10.6. 0-36.

பணிமாறல் - படைத்தல். யானை, பூவின் செவ்வியழியாதபடி இறைவன் திருவடிகளிலே பணிமாற வேண்டுமென்று இடர்ப்பட, அதுபட்ட துயரை அவன் களைந்து காத்தான். பெ.தி.2.3.0.

பணியுடைத்தாதல் - தொல்லையுடைத்தாதல்; அரிய செயலாதல். திருநாட்டில் பேற்றினைத் துய்க்கும் நிலையினைக் கொடுக்கவல்லவனுக்கு இவ்வுலகில் தன்னையொழியச் செல்லாமை விளைக்கை பணியுடைத்தன்றிறே. 7.5. 1-36.

பத்தும்பத்தாக* - முழுமையாக. பெருமாள் பத்தும்பத்தாக அம்பால் எதிர்த்துப் பிராட்டியினுடைய கலவிப்பகையைப் போக்கினார். திருவெழு.அடி, 6.

பத்தெட்டுத் திருமுகம் மறுக்கப்பெறல் - சிலமுறை இசைவு மறுக்கப்பெறல். நந்தகோபனது கோயிற்காப்போன் பெண்களிடம் தான் கண்ணனால் பத்தெட்டுத் திருமுகம் மறுக்கப் பட்டுள்ளதாகக் கூறி அவர்களை உள்ளே விட முதலில் மறுக்கிறான். பாவை, 16-6.

பதண் பதண் எனல் - தவிர்த்தல். கைப்பட்ட மாணிக்கத்தைக் கடலிலே பொகட்டோம் என்று பதண்பதண் என்றான். பெரி.தி.4.9.6.

பயலான பேச்சு - குறிப்பான பேச்சு. தலைமகள், சுனையாடல் என்றும் புனலாடல் என்றும் கலவிக்குப் பேராகையாலே தோழியைப் பார்த்து 'அணியரங்கமாடுதுமோ தோழீ' என்று பயலான பேச்சாலே கேட்டாள். தி.நெ.தா. 21,பட்டர்.

பரப்பு மாறப் பூத்தல் - எங்குமொக்கப் பூத்தல். பொய்கையின் பரப்பு மாறத் தாமரை பூத்துக்கிடந்தது. பெரி.தி.3.8.1.

பரகு பரகு எனல் - பரபரப்பு. நம்மாழ்வார், தம்மையே பெருமானுக்காக்கி அதனால் தம் திருவுள்ளத்தில் பரகுபரகு கெட்டதாகத் தெரிவிக்கிறார். 4.3.3-24.

பருப்பருத்தன சில - முதன்மையான சில. பெண்கள் கண்ணனிடம் தமக்கு வேண்டியவற்றுள் பருப்பருத்தன சிலவற்றைச் சொல்லி மற்றவற்றை நீயே அறிவாய் என்கின்றனர். பாவை, 27-3, 6.

பல்காட்டல் - இரத்தல். தலைமகள் புள்ளினங்களிடம் முகில் வண்ணன்பால் தன் நிலையை உரைக்குமாறு பல்காட்டு கிறாள். 6.8.1-36.

பல் பன்னிரண்டுங் காட்டல்* - கெஞ்சுதல். பெண் வண்டின் ஊடலைத் தீர்க்க ஆண்வண்டு எல்லா முறைகளையும் பின்பற்றிப் பல் பன்னிரண்டுங் காட்டினவிடத்திலும் அதனால் இயலாமற்போக மாதவிப் பந்தலில் சென்று அதனை வரவழைக்க இசைமுரலத் தொடங்கிற்று. பெ.தி. 3.1.2.

பலகை பலகையாக - பல பெருங் கூறுகளாக. பிரிவுத் துயரத்தால் முன்பே இற்றிருக்கும் உடம்பைத் தென்றற்காற்றுப் பலகை பலகையாக ஈராநின்றது. 9.9.1-36.

பழங்கதை சொல்லல் - பழைய செய்தி சொல்லல். பெருமான் தன்னைச் சார்ந்தவர்க்கு விரைந்தருள் செய்வான் என்பது பழங்கதை சொல்வதாகும் என்றும் அவன் தானே வந்து தம் நெஞ்சில் புகுந்தான் என்றும் திருமங்கையாழ்வார் தெரிவிக் கிறார். பெ.தி.5.2.1.

பாசுரமிட்டுப் பேசல்* - சொற்கொண்டு கூறல். இறைவன் பண்புகள் பாசுரமிட்டுப் பேசி முடிக்க வொண்ணாத சிறப் புடையனவாகும். 1.3.9-24.

பாடோடிக் கிடத்தல் - திரும்ப மாட்டாதே ஒரு பக்கமாகவே படுத்துக்கிடக்கை; செயலற்றுக் கிடத்தல். நம்மாழ்வார் நெஞ்சம் 'நெடியானே' என்னும் சொல்லிலேயே ஈடுபட்டு எல்லாவற்றையும் மறந்து பாடோடிக் கிடக்கிறது. 3.8.1-36. தலைமகள் தான் பாடோடிக் கிடப்பதாகக் கூறித் தங்கள் வாழ்வைத் தாங்களே பார்த்துக் கொள்ளுமாறு வண்டுகளிடம் தெரிவிக்கிறாள். 6 8.4-36.

பாத்தம் போராத விஷயம் - பயனற்ற பொருள். திருமாலுக்குக் கௌத்துவமணி போல விரும்பத் தக்காதாயிருக்கும் உயிர், பாத்தம் போராத விஷயங்களைப் பற்றிச் சண்டையிட்டுப் பிறவியுள் பிணங்குவது வருந்தற்குரியதாகும். தி.மா.4.

பாத்தம் போரும்படியான விஷயம் - பயனுள்ள பொருள்; தக்க பொருள். திருமங்கையாழ்வார் புலவர்களை நோக்கிப் ''புலவர்களே, உங்கள் அறிவுக்கும் சொல்லுடைமைக்கும் பாத்தம் போரும்படியான விஷயம் குடந்தையில் எழுந்தருளி யிருக்கும் ஆராவமுதனே யாவான்'' என்கிறார். பெ.தி.1.1.7.

பாலி பாய்தல் - பிரிந்து செல்லல். திருமால் தன் அருள் நோக்கத்தைத் தான் வெள்ளத்தினின்றும் மீட்டப் பூமிப் பிராட்டி பக்கலிலும் பாலிபாயாதபடி உயிர்கள்மேல் ஒருங்க வைத்தான். தி.வி.44.

பாழ் தீரப்புகுதல் - வெற்றிடமின்றிப் புகுதல்; குறைவற நிறையப் புகுந்தல். பெருமான் தன்நெஞ்சில் பாழ்தீரப் புகுந்தான் என்கிறார் நம்மாழ்வார். 10.8.1-24.

பாற வடித்தல் - அழித்தல். நம்மாழ்வாரின் பார்வை மதுரகவி யாழ்வாரின் பழவினைகளைப் பாற வடித்தது. க.நு.சி.9, அழகு.

பாறிப் பாறிப் போம்படியாக - சிதறிச் சிதறிப் போதல். அசுரர் கூட்டத்தைப் பாறிப்பாறி நீறெழுந்து போம்படியாகச் செய்யும் கருடனைத் திருமால் தனக்கு வாகனமாகக் கொண்டுள்ளான். 2.6.8-36.

பிசுகிச் சுழிதல் - மெல்லச் சுற்றி வருதல். தலைமகள், பெருமானது வாகனமாகிய கருடன் உகந்தார் வாழும் வண்ணம் வாராமல் பிசுகிச் சுழிவதாகக் குறை கூறுகிறாள். 1.4.6-36.

பிசுகு நாறாதே இருத்தல் - பசை ஒட்டிக் கொள்ளாதிருத்தல். இறைவனாகிய கரும்பு கைதொட்டால் பிசுகு நாறாதே இருக்கும் இனிமையான பொருளாகும். தி.மா.17.

புடைபடுத்தல் - விரிவுபடுத்தல். கலவியாலும் பிரிவாலும் பெருமான் ஆழ்வாரது நெஞ்சைப் புடைபடுத்தித்

திருநாட்டைப் போலப் பரப்புடைத்தாம்படி பெருக்கினான். 5.3.4-36.

புதைத்து வார்ப்பது - சிறிய அளவினதாய்ப் பிறரறியாதவாறு ஒளித்து வருவது. இறைவன் அடியாக வரும் சிறப்புப் புதைத்து வார்ப்பது அன்று; மிக்குப் பெருகுவதாகும். பெரி.தி. 5.4.1.

புறவீடு விட்டிருத்தல் - பிறிதோர் இடத்தில் இருத்தல். பெருமாள், திருவரங்கப் பெருமாளரையர் திருமாளிகையிலே புறவீடு விட்டிருக்குங்கால் உடையவர் ஆழ்வானைச் சென்று கண்டு அவருடைய கவலையை வினவினார். பெரி.தி.4.4.7.

புறவெள்ளமிட்டபடி - வெளியில் மிகுதியாகப் தோன்றியபடி. சீதை, அரக்கர்களோடு போரிட்டு ஒரு தீங்குமின்றி மீண்ட இராமனுடைய வடிவழகை முழுக்கக் கண்டு திருவுள்ளத்திற் பிறந்த களிப்புப் புறவெள்ளமிட நின்றாள். தி.நெ.தா. 21,பட்டர்.

புஸ்தகம் பார்த்தறிதல் - படித்தறிதல். திருக்கண்ணபுரத்து மறையாளர் புஸ்தகம் பார்த்தறிந்தவரல்லர்; கேள்வி வாயிலாகவே கற்றவர்களாவர். பெ.தி.8.1.8.

பெரிய பணி - அருஞ்செயல். பூமியைப் பாதுகாத்த பெருமானுக்குத் தம்மைக் காத்தல் பெரிய பணியன்று என்கிறார் திருமங்கையாழ்வார். பெ.தி.5.3.5.

பெருநிலை நிற்றல் - ஒரு சார்பாய் நிற்றல்; துணையாய் நிற்றல். கண்ணபெருமான் பகலை இரவாக்குகைக்குப் பெருநிலை நிற்கும் கருவியாய் அமைந்தது திருவாழியாகும். 3.7.2-36.

பெருமிடறு செய்து கூப்பிடுதல் - உரத்த குரலில் கூப்பிடுதல். தொண்டரடிப்பொடியாழ்வார் பேற்றில் கொண்ட துடிப்பாலே பெரிய பெருமாள் கண்வளர்ந்தருள அரிதாம்படி கேட்டாரெல்லாம் நீராம்படி பெருமிடறு செய்து கூப்பிடுகிறார். தி.மா.36.

பொதியெடுத்தல் - ஆட்சி செய்தல். நம்மாழ்வார் ஆசைமிக்க தம் நெஞ்சை ஐம்பொறிகளும் பொதியெடுக்கத் தொடங்கின என்கிறார். 8.7 2-36.

போக்குவிடுதல்* - வழியமைத்தல். கண்ணன் தயிரையுண்டு மகிழ்ச்சி கொண்டு அம்மகிழ்ச்சிக்குப் போக்கு வீடாகக் குடக் கூத்தாடினான். பெ.தி.5.10.1.

போது செய்வது - குறைவது. போது செய்யாத வரபலத்தையுடைய அரக்கர்கோனாகிய இராவணனைப் பெருமாள் வென்றார். தி.நெ.தா.29.

போரப் பொலிய* - சிறப்பாக. கண்ணன் எளிதாகச் சகடனை உதைத்து அழித்த செயலை நம்மாழ்வார் போரப் பொலியச் சொல்லுகிறார். 6.4.4-36.

மசக்குப் பரலிடலாம்படி - நிகரென்று ஐயுறும்படி. சிவனும் பிரமனும் இந்திரனும் திருமாலொடு மசக்குப் பரலிடலாம்படி இருக்கின்றனர். 3.1.7-36.

மல்கட்டாகக் கட்டல் - திமிறிச் செல்லாதபடி கட்டல். கண்ணன் நப்பின்னைப் பிராட்டியை மல்கட்டாகக் கட்டிக்கொண்டு போய்ப் படுக்கையில் விழவிட்டான். பாவை,19-6.

மறுகிளையுண்டாகாதபடி - மீண்டும் தோன்றாதபடி; மறுகிளையறும்படி. பெருமான், நரகபுரம் சென்று திருவாழியாலே அங்கிருந்தவர்களை மறுகிளையுண்டாகாதபடி அறுத்துப் பொகட்டான். பெரி.தி.2.5.6.

மறுநனையும்படியான - குடைந்தாடும்படியான, தோய்ந்து திளைக்கும்படியான. நம்மாழ்வார் இறைவன் பண்புகளில் மறுநனைந்து, களிப்புமிக்கு, உள்ள நோய்களையெல்லாம் விரட்டியதாகச் சொல்லுகிறார். 2.6.4-36.

மறுநாக்கெடுத்தல் - மீண்டும் பேசவொண்ணாதபடி. கண்ணன் தன்னைக் குறைகூறிய ஒரு தாயினிடம் மறுநாக்கெடுக்கவொண்ணாதபடி சில சொற்கள் கூறினான். பெரி.தி. 2.9.10.

மறுநாக்குக் கொடுத்தல் - மீண்டும் பேசுதல். கண்ணன் இளவாய்ச்சியர்க்கு மறுநாக்குக் கொடுக்கவொண்ணாதபடி வேறொருவர்க்குந் தெரியாதே அவர்கள் கண்ணுள்ளே படும்படியாக விடவே பண்ணி நோக்கி அடிமை கொண்டான், 1.7.5-9.

மறுபாடுருவும்படியாக* - ஆழமாக மறுபுறத்தில் ஊடுருவும் படியாக. மற்றொரு பக்கம்வரை செல்லுபடியாக என்பது நேர்ப்பொருள்; முற்றிலும் என்பது குறிப்புப் பொருள். பெருமாள் மராமரங்கள் ஏழும் மறுபாடுருவும்படியாக அம்பினைச் செலுத்தினார். 2.6.9-36. நெஞ்சம் கோட் பட்டாயே - நெஞ்சு பறியுண்டாயாகாதே? தோற்புரை யன்றிக்கே மறுபாடுருவ நோவு பட்டாயாகாதே. 2.1.1-24. நம்மாழ்வார் வேதங்களும்கூடச் சொல்லமுடியாது என்று மீண்ட தன்னைக் குறித்து மறுபாடுருவ ஏத்தி மகிழும் பேற்றினை இறைவன் தமக்கு வழங்கினான் என்கிறார். 2.6.3-36. தலைமகள் மாற்று இல்லையென்று மீளும்படி மறுபாடுருவக் கொண்ட நோய்க்கு இறைவன் திருவடிகளை வாழ்த்தலே அருமருந்தாகும் என்கிறாள் தோழி. 4.6.3-24.

மறுமுட்டுப் பெறாதபடி* - பிறிதோர் ஊன்றுகோலில்லாதபடி; பிறிதோர் சார்பு இல்லாதபடி. பரகால நாயகி இறைவன் தன்னை மறுமுட்டுப் பெறாதபடி தனக்கு அடிமையாக்கிக் கொண்டான் என்கிறாள். பெ.மடல்,கண்ணி, 133.

மறுவலிடாதபடி - மீண்டும் வாராதபடி. பாற்கடற் பரமனை வாழ்த்தினால் தீவினைகள் மறுவலிடாதபடி முற்றிலும் அழியும். தி.ச.வி.74.

மின்மினி பறவா நிற்றல்* - கண்கள் வெறித்துப் போதல். அரவின் அணைமிசைப் பள்ளிகொண்டுள்ள அரங்கனின் அலையெறி யும் அழகு, கண்டார் கண்களை மின்மினி பறக்கச் செய் கின்றது. அம.7, அழகு.

முகம் காட்டுதல் - தோன்றுதல். போரிடும்போது தன்னைப் பேணாமல் போரிட்ட பெருமாளுக்கு அது முடிந்தவாறே மன்னன் மகனாய்ச் செல்லப் பிள்ளையாய் வளர்ந்த மென்மை வந்து முகங்காட்டிற்று. பெ.தி.1.2.1.

முகங்காட்டுவித்துக் கொள்ளல் - வரவழைத்தல். தன் தன்மையை அழித்துக் கொண்டேனும் பெருமானை முகங்காட்டுவித்துக் கொள்ளவேண்டும் என்னும் துடிப்பு உடையவளானாள் பரகால நாயகி. சி.மடல்,0.

முகங்கொடுக்கை - காட்சி தருதல்; அருள்புரிதல். இறைவன் தாழ்ந்தார்க்கு முகம் கொடுக்கைக்காக இடைக்குலத்தில் வந்து பிறந்தான். தி.ச.வி.9-.

முகம் பழகின - உடனிருந்து பழகின. நெடுங்காலம் முகம்பழகிய உடம்பை விட்டுப்போய் வீடு பெற்றார்கள். பெ.மடல், கண்ணி,37.

முட்டச் சொல்லுதல் - முற்றிலும் சொல்லுதல். திருநாமத்தை முட்டச் சொல்லமாட்டாள் என்று நினைத்திருந்தபோது தலைமகள் அதனை வருத்தமறச் சொன்னாள். 6.5.4-36.

முட்டுப் பொறுத்தல் - ஈடுகொடுத்தல். சிவன், பிரமன் ஆகியோரோடு ஒக்கச் சொல்லலாம்படி முட்டுப் பொறுத்து நிற்கிறான் இந்திரன் என்பர். 7.6.7-24, 36.

முலைவரவு தாழ்த்தல் - குழந்தைக்குப் பால் கொடுக்கக் கால தாமதம் ஆதல். கண்ணன் முலைவரவு தாழ்க்கச் சீறி நிமிர்த்த திருவடிகளாலே சகடத்தை முறிய உதைத்தான். பெரி.தி.3.8.6.

முழுமிடறு செய்து கூப்பிடல் - உரத்த குரலில் கூப்பிடல். தலைமகள் பெருமானை முழுமிடறு செய்து கூப்பிட்டு மயங்கித் தரைப்பட்டாள். தி.நெ.தா.17.

முழுமிடறு செய்தல் - மிடறு நிறையக் குடித்து நுகர்தல். நம்மாழ்வார் இறைவன் குணங்களை முழுமிடறு செய்து துய்த்துக் களித்தார். 2.3.9-36.

முறியக் கடிக்கும் - சுரீர் என்று கடிக்கும். கட்டெறும்பு முறியக் கடிக்கும். பெரி.தி.2.4.2.

முறுகு கொளுந்துகை - உறுதியாதல். பிறர் யாது சொன்னாலும் மீளாத முறுகு கொளுந்தின இறையன்பினையுடையவர்களைத் தீவினைகள் யாது செய்யும்? தி.வி.88.

முறை முதுகு தேய்த்தல் - ஒருவர்க்கொருவர் உதவிக்கொள்ளல். தம்மையும் தம்முடைமையையும் நமக்காக்கின திருப்பாணாழ்வாருக்கு நம்மையும் நம்முடைமையையும் அவர்க்காக்கின் முறை முதுகு தேய்த்தோமாவோம் என்று இறைவன் கருதி எல்லாம் செய்தும் தான் ஒன்றும் செய்யாதவனாக இருந்தானாம். அம.5,அழகு.

முன்கை மிடுக்கு - வலிமை. முன்கை மிடுக்காலே தோற்றினபடி திரிந்த அரக்கர்களை இராமன் மெலிவித்தான். பெ.தி. 2.5.7.

முன்னோட்டுக் கொள்ளல் - முதலில் கொள்ளல். "காலை வெய்யோற்கு முன்னோட்டுக் கொடுத்த கங்குல் குறும்பர்" தி.வி.94. நம்மாழ்வார் அவதாரங்களை முன்வோட்டுக் கொண்டு, கிருட்டினாவதாரத்தில் இழிந்து வெண்ணெய் களவு கண்ட நிகழ்ச்சியில் ஈடுபட்டார். 1.3.0-36.

மூக்குப் புதைத்தல் - காற்றினை அடக்கி. வழிபாடு செய்தல் (தவம்செய்தல்). மண்ணுலகில் யாரேனும் மூக்குப் புதைத் தால் தன் இன்பத்திற்கு இடர் வந்ததாகக் கருதி அவனது தவத்தைக் கலைக்க முயல்பவன் இந்திரனாவான். 6.4.1-36.

மூலையடியே நடத்தல் * - இது மூலையடியே திரிதல் என்றும் வருகிறது. பெ.தி.1.6.3; 4.9.5-24; 7.7.4-36; பாவை, 17-6. விருப்பப்படியே நடத்தல் என்பது பொருள். விருப்பப்படி திரிதல். நந்தகோபர் மூலையடியே திரியும் பிள்ளை ஒருவனைப் பெற்றார். 7-7.4-36.

மூலையடியே வளருகை - கண்டபடி வளருகை. கண்ணன் வெண்ணெயையும் பெண்களையும் களவுகண்டு மூலையடியே வளர்ந்தான். மு.தி.21. பெரிய பெருமாளைக் கண்டால் யசோதைப் பிராட்டி வைத்த வெண்ணெயைக் களவுகண்டு அமுதுசெய்து மூலையடியே திரிந்து வளர்ந்த செருக்குத் தோற்றும். தி.மா.32.

மூலையடியே போம்படி - பாழாய்ப் போம்படி. பெருமாள் இலங்கையை மூலையடியே போம்படி பண்ணினான். தி.பல்.3.

மெய்க்காட்டுக் கொள்ளல் - ஆள்களை நேரில்கண்டு எண்ணிப் பார்த்தல். இந்திரன், சனியும் புதனும் தேவர்களை மெய்க்காட்டுக்கொண்டு அவர்களின் மிகுதி குறைகளை ஆராய்வான். 3.6.4-24. கண்ணன் தம்மை மெய்க்காட்டுக் கொள்ளும் குறியிடங்கள் ஏறப் பெண்கள் போனார்கள். பாவை, 13-6.

மேல்விழுதல் - விரும்புதல். அரசகுமரன் தன் செருக்காலே வேட்டைக்குத் துணைபுரியும் என்னும் எண்ணத்தால் நாயினை மேல் விழுதல் புரிவான். பெ.தி.1.9.1.

மொசுகு மொசுகு என்றிருத்தல் - மெத்தென்று இருத்தல். சங்கின் ஒலிபோல் பெருமானது குரல் மொசுகு மொசுகு என்றிருக்கும் என்பர். அம.6, அழகு.

வகாதது வகுத்தல் - கிடையாதது கிடைத்தல். நம்மாழ்வார் தம் நெஞ்சை நோக்கி, "பெற்ற பேற்றின் கனத்தை நினைத்து வகாதது வகுத்ததென்று திமிர்த்திருக்கிறாயோ? அன்றி இதனை நுகர்கின்றாயோ?" என்று வினவுகிறார். 10.6.2-36.

வரை முறுகலான - கடினமான. வரைமுதலான ஸ்ரீகீதை சொன்னவன் கண்ணன். க.நு.சி.8, அழகு.

வழிப்பகையாய் இருத்தல் - குலப்பகையாய் இருத்தல்; "பார்த்த விடம் எங்கும் பகை"யாய் இருத்தல் என்பது அரும்பதம். பிராட்டிக்கு அன்றில், கடல் முதலான பொருள்கள் வழிப்பகையாய் இருந்தன. தி.வி.35

வாங்கிப் பொகடல் - கழற்றி எறிதல். இரணியனுக்கு அஞ்சித் தேவர்கள் தம் முடியும் வாங்கிப் பொகட்டு மானிடராய் வேற்றுருக்கொண்டு திரிந்தனர். பெ.தி.1.2.4.

வாய்க்க அடியிடுதல் - பொருத்தமாக ஆடுதல். கூத்தாடுமவர்கள் வாய்க்க அடியிட்டால் அவையினர் தம் முகமலர்ச்சியாலே கொண்டாடுவர். பெ.தி.1.5.9.

வாய்பாறி(க்கொண்டு) வருதல் - அரற்றிக்கொண்டு வருதல். பகைவனாய் வாய்பாறி ஊரையழிக்க வந்த கேசியை எளிமையாக இருகூறாகப் பிளந்து அழித்தான் கண்ணன். தி.ச.வி.37.

வாய்மாளப் பண்ணல் - வாயடைக்கப் பண்ணல். மாவலியைக் குறளனாய் வந்த பெருமான் தன் வடிவழகாலும், பேச்சழகாலும் வாய்மாளப் பண்ணினான். 3.8.9-36.

வாய்வாய் எனல் * - பேசாதே என்று பணித்தல். தங்களுக்கு மாற்றம் தரக்கோரிய பெண்களுக்குப் பதில்கூறக் கண்ணன் முயன்ற போது நப்பின்னை தன் கண்ணாலே "வாய்வாய்' என்று வாயை நெரித்தாள். பாவை, 19-3,6.

வாய்விடுதல் - வெளிப்படையாகச் சொல்லுதல். திருமந்திரத்தில் குறிப்பாகச் சுட்டப்பெறும் திருமகள் தொடர்பினை "உலகமுண்ட" திருவாய்மொழியில் வாய்விடுகிறார். 6.10.0-36.

வாயிலே இட்டு நீட்டுகை - சொல்லியனுப்புதல். தலைமகள், தலைமகனுடைய இயல்பினை ஓராளின் வாயிலே இட்டு நீட்டுகை யன்றிக்கே அவனே நேரில் சொல்லக் கேட்டறிந்த தாகக் கூறுகிறாள். பெ.தி. 9.3.4.

வாரிப்பிடியாகப் பிடித்தல் - தப்பிப் போகாதவாறு சிக்கெனப் பிடித்தல். இறைவன் மண்ணுலகில் தோன்றித் தன் வடிவழகாலும் எளிமை முதலான பண்புகளாலும் எல்லோரையும் கவர்ந்து வாரிப் பிடியாகப் பிடித்துக் கொண்டு போகும் ஆற்றலுடையவன் ஆவான். பாவை, 0-3.

விலை செல்லல் - எடுபடுதல். பெருமானிடம் ஊடிநிற்கும் மடவார், அவனை நோக்கி அவன் பொய்யிலே பழகின தங்கள்பக்கல் அவனது பொய் விலை செல்லாது என்று கூறினர். 6.2.3-24.

விளாக்குலை கொள்ளல் * - சூழ்ந்து கொள்ளல்; உள்ளடக்கிக் கொள்ளல். பெருமான் திருவடிகளில் ஒன்றே பூமிப் பரப்படங்கலும் போய் விளாக்குலைகொண்டது. க.நு.சி. 8,நம்பிள்ளை. விள்ாக்கொலை கொள்ளல் என்றும் சில இடங்களில் வருகின்றது. தி.நெ.தா.24; தி.வி.58;59; பெ.திருவந்.2; பெ.தி.9.3.2.

வீசிவில்லிட்டெழுப்புதல் - வலிந்து எழுப்புதல். படுக்கை வாய்ப் பாலே வீசி வில்லிட்டெழுப்பினாலும் எழுந்திராதபடி பெருமான் படுத்துக்கிடக்கிறான். தி.நெ.தா.12.

வெள்ளமிடல் - பெருகுதல். தலைவிக்குக் கண்ணீர் வெள்ளமிடா நின்றது. 4.4.2-36.

வெளிநாடு காண உமிழ்தல் - வெளியே உமிழ்தல். பெருமான் ஊழிவெள்ளம் கொள்ளாதபடி பூமியை எடுத்து வயிற்றிலே வைத்துப் பின்பு வெளிநாடு காண உமிழ்ந்தான். 9.3.2-36.

9. பழமொழிகள்

அம்மிதுணையாக ஆறிழிகை - 2.7.3-6. அம்மியைக் கட்டிக் கொண்டு ஆற்றில் இழிவாரைப் போலே - பெ.தி.1.1.8.

ஆடி அமுது செய் - பாவை, 27-6. ஆயிரக் காதம் பறப்பதன் குட்டி ஐந்நூறு காதம் சிறகடிக் கொள்ளும் - 1.10.1-36. ஆற்றிலே கெடுத்துக் குளத்திலே (தேடுகிறாள்) தேடுதல் - தி.நெ.தா.18. ஆனை தன் பலம் அறியாதாப் போலே - பெரி.தி.5.3.6. ஆனைக்கும் தனக்குத் தக்க வாதமிறே-2.2.2-36. ஆனைப் பிணங்களைக் குதிரை சுமக்கவற்றோ - 8.4.10-24. ஆனைப் பண்ணைக் குதிரை சுமக்கவற்றோ - நா.தி.8.3. இஞ்சிப் பயிரில் தழைக் கூறு கொள்வாரைப் போலே - 1.7.10-24.

உண்டார் மேனி கண்டால் தெரியுமிறே - பெரி.தி.4.4.2. உண்டி உடல் காட்டும் - 5.10.6-36. உண்ணப் புக்கு வாயை மறைப்பாரைப் போலே - தி.வி.15. உண்ணாப் பிள்ளையைத் தாய் அறியும் - பெரி.தி.2.2.1. உப்பறியா முழை - பெரி.தி.3.7.4. உழக்காலே கடலை முகக்க ஒண்ணாதாப் போலே - 3.10.10-36. ஊண் அடங்க வீண் அடங்கும் - நா.தி.12.9.

எருது கெடுத்தார்க்கும் ஏழே கடுக்காய் - தி.வி.42. ஏற்றி வைத்து ஏணி வாங்கி (வாங்குதல் போலே) - பாவை, 2-6.

ஒருவனைப் பிடிக்கை சுட்டி ஒருரை வளைப்பாரைப் போலே - 6.3.1-24. ஒருவனை அகப்படுத்த நினைத்தார் ஊரை வளையுமா போலே - 6.3.1-36. ஒட்டை ஓடத்தோடே ஒழுகல் ஓடம் - 3.7.0-36. ஓலை பாதி தூது பாதி - தி.வி. 29.

கடல் வெதும்பினால் விளாவ நீரில்லை - 2.2.0-36. கடலிலே வர்ஷித்தாற்போலே - தி.நெ. தா.20. கண்ணாலப் பெண்டாட்டிக்கு உண்ண அவஸரமில்லை என்னுமா போலே 3.2.8-36. சரணம் தப்பினால் மரணம் - பெ. மடல், கண்ணி, 19. கரணம் பிழைக்கில் மரணம் - தி.மா. 25. கரதலாமலகம் போலே

(உள்ளங்கை நெல்லிக்கனி) - 6.9.11-9. கரும்பு தின்னக்கூலி போலே - 1.6.8-24, 36. கரும்புதின்னக் கூலி கொடுப்பாரைப் போலே - 9.1.8-24,36. கள்ளரச்சம் காடு கொள்ளாது - 4.10.2-36. குளப்படியிலே கடலை மடுத்தாற் போலே - 4.5.5-24. கைப்பட்ட வஸ்துவைக் கடலிலே பொகட்டாற் போலே - தி.நெ.தா. 21. காட்டில் எறித்த நிலா(ப் போலே) - 3.10.8-24, 36; 4.5.2-24; 7.2.7-36; தி.ச.வி. 0. கான வித்யைக்கு தும்புரு நாரதர் - பெரி.தி. 3.6.5. கோமுகவ்யாக்ரம் (பசுத்தோல் போர்த்த புலி) - தி.வி. 27.

தாமே விழுந்தாரைத் தடிகொண்டு அடிக்குமோபாதி - 3.6.0-36. தீநாள் திருவுடையாருக்கு இல்லை - 4.3.4-36. (இது பழமொழி நானூற்றில் வருவது). நீர்மேலெழுத்து தி.மா. 42. நெற்செய்யப் புல் தேயுமா போலே - 5.2.4-36. பைதல் கைசு; நோய் முக்கைசு (பையலொரு சிறாங்கை; நோய் மூன்று சிறாங்கை) - தி.வி. 96. போம்பழியெல்லாம் அமணன் தலையோடே - 1.5.5-36. மறக்குடி அறம் செய்யக் கெடும் - 5.3.4-36. முழங்கால் தகரமூக்கிலே ஈரச்சீலை கட்டுமா போலே - 4.6.10-36. முள்ளாலே முள்ளைக் களையுமா போலே - பெரி.தி. 2.5.4. மூலையிற் கிடந்ததை முற்றத்திலே விட்டோம் (விட்டாற் போலே) - தி.வி. 99.

வாத்ஸல்யத்தாலே செய்ததுக்கு வழக்குப் பேசக் கடவோமோ - தி.நெ.தா. 14. வாளேறு காணத் தேளேறு மாயுமா போலே - 3.9.0-36. வேலியே பயிரை அழித்தால் வேலிதான் நோக்குமித்தனை ஒழியப் பயிராலே நோக்கிக் கொள்ளப்போமோ? (இதில் 'வேலியே பயிரை மேய்ந்தாற் போலே' என்னும் பழமொழி உள்ளோட்டமாக அமைந்திருத்தல் காணலாம்) - தி.நெ.தா. 11.

10. அருந்தமிழ்ச் சொற்களின் அகரவரிசை

அஃகம் - 1. உயர்ந்த பொருள். அஃகம் உண்ண இங்கே வருகையாலே. தி.நெ.தா.6. 2. உயர்ந்த தானிய வகை. நாட்டுக்கு இட்ட அஃகம் அந்தப் புரத்திற்கு அரிதாவதே? பெ.தி. 9.4.9.

அகஞ்சுரிகை - குன்றுகை. செய்த பாபம் அகஞ்சுரிப்பட்ட அளவிலே விட்டடிக்கவும் கூடுமிறே. பெ.தி.6.2.7.

அகம் - 1. உள்ளே. அகத்துக்குள்ளேயிருந்து - 5.3.4-36; 2. வீடு. நம் அகமொன்றும் பிழைக்கும் என்று. பெ.திருவந்.58.

அகப்படை - சொந்தமாக வைத்துக்கொள்ளும் படை. (personal Security) அருநிலங்களில் வழிபோவார் 'அகப்படை' என்று மிடுக்கராய் இருப்பாரைக் கூட்டிக்கொண்டு தம் கைப் பொருளை அவர்கள் கையில் கொடுத்து அமர்ந்த நிலத்திலே சென்றவாறே வாங்கிக்கொள்ளுவாரைப் போலே. 10.1.0-36.

அகப்பாடு - 1. அகப்படுதல். அகப்பாட்டை அறிந்திருந்தோமாகில் வாராது ஒழியலாயிற்று. 6.3.1-24. 2. சிக்குண்டிருத்தல். ஆசார்ய உபதேசத்தாலே வகுத்த விஷயத்தில் பனியிருங் குழல்களைக் கண்ணாலே காணாநிற்க, நெஞ்சு ஸ்த்ரீகள் பக்கலிலே ஆம்படியிறே அதில் அகப்பாடு இருப்பது. தி.மா. 33.

அகம்படி - உள்ளே. வானிளவரசு என்கிறபடியே அகம்படி வைத்த அரசாய் இருக்கும். 5.8.2-36.

அகம்படியர் - அணுக்கமான வேலைக்காரர். அவ்வவர்க்கு உரிய அகம்படியர் ஆனவர்கள். பாவை, 4-3.

அகலம் - பரந்த நோக்கம். எங்கள் மாமியார் தன் நெஞ்சில் உண்டான அகலத்தாலே, லோகத்துக்காக ரக்ஷகனாக வல்லான் ஒரு பிள்ளை பெறவேணும் என்று நோன்பு நோற்றுப் பெற்றார். 5.3.7-36.

அகவாய்* - 1. உட்புறம். அகவாய் சிவந்து புறங்கரியதாய். 2.9.1-9. 2. மனம். தமப்பனாரைக் கொண்டான் என்று அகவாய் பணைக்கும். பாவை, 25-6.

அங்கமணி - சீர்வரிசை. அங்கமணி செய்யலாவது ஏது என்று விசாரித்துக் கொண்டு. தி.மா. 37.

அங்காத்தல் - வாய் பிளத்தல். அங்காந்த வாயும் மோறாந்த முகமும். பெரி தி.4.8.8.

அங்காடி - கடைத்தெரு. அங்காடிப் பண்டங்கிடீர் எனக்கு அரிதாயிற்று. தி.நெ.தா.16.

அங்குத்தை - அங்குள்ள. அங்குத்தை ஸர்ப்பங்கள். பெ.தி. 1.2.8.

அச்சுத்தாலி - அச்சடித்த காசு கோத்த தாலி. அச்சுத்தாலியும் ஆமைத்தாலியும். பாவை, 7-6.

அசங்குதல் - அசைதல். அசங்காதே கிடக்கிறபடி. பாவை, 2-6.

அசல்* - அயல். இங்கே அசல் காக்க இருக்கிறவள். 6.7.2-36. அசலகம். பாவை, 15-3; அசலார். நான்.தி.51; அசலானேன். தி.மா.31; அசலிட்டு. 6.5.1-36.

அசலாள் - அயலாள். விருப்புக்கு அசலாளாய். 6.1.3-24.

அசலிட்டுக் கேட்டல் - பிறர் சொல்லக் கேட்டல். இவ் இருப்பை இவனுங் காணப்பெற்றது இல்லை, அசலிட்டுக் கேட்கும் இத்தனையிறே. தி.வி.2.

அசலூர் - வெளியூர். அசலூர்களிலே போய். பெரி.தி.3.1.9.

அசறு பாய்தல் - தண்ணீர் கசிதல்; புறவெள்ளமிடுதல். அசும்பு ஒழுக - அசறு பாய. பெரி.தி.5.4.8.

அசிர்ப்பு - அயிர்ப்பு. அசிர்ப்புப் பிறக்க இருப்போம் அல்லோம். பாவை, 0-3.

அசுக் காட்டல் - கேலி செய்தல். பசுக்கள் அசுக்காட்டும் ஆர்ஜவம். பாவை, 28-3.

அட்டாலை - கோட்டை மதிளின் மேலுள்ள மண்டபம்; மேல் தளம். அதின்மேலே மதிளும் அட்டாலையுமாய் இருக்கை. தி.நெ.தா.20.

அடக்கம் - அடங்கியிருத்தல். க்ருஷ்ணன் விரும்பாத அடக்கத்தால் ஒரு கார்யமில்லை. 4.8.3-12.

அடங்க* - எல்லாம். அடங்க பகவத் ப்ரஸாத லப்தம் என் கைக்காக. 1.1.0-36.

அடர்த்தல் - நெருக்குதல். அடர்த்து வார்த்தை 6.2.4-12.

அடி* - 1. தொடக்கம். அடியிலே நீர் அபேக்ஷித்தபடியே. 1.7.4 -36. 2. காரணம். இந்த்ரன் அடியாக மழையாய் வந்த ஆபத்து. தி.மா.36.

அடிக்கழிவு - முறை கேடான செயல்; தரக்குறைவான செயல். எங்கள் குழமணன்கொண்டு அடிக்கழிவு செய்தால் உனக்கு என்ன ப்ரயோஜநம் உண்டோ? 6.2.6-9.

அடிக்கொள்ளல் - முற்படுதல். வண்டினுடைய திரள்களானவை பாடுகைக்கு அடிக்கொண்டு, "தென, தென" என்று ஆளத்தி வையா நிற்கும் அரங்கமே. பெரி.தி. 4.8.6.

அடிச்சி - அடியவள். இடைச்சிகளுக்கு அடிச்சிகளாய்ப் போரு கிறவர்களும். பெரி.தி.2.9.8.

அடிச்சேரி - அடியார் வாழுமிடம்; சிற்றூர். அடிச்சேரியிலே வந்து புகுவதே. 6.7.1-36.

அடிப்பட்டிருத்தல் - வேர் வீழ்த்திருத்தல். நெடுநாள் ராஜ்யம் பண்ணினாரைப் போலே அடிப்பட்டிருக்கும் ஆயிற்று இருளும். பெ.தி. 1.2.8.

அடிப்பாடர் - உறுதியுடையவர். ஒர் அடிப் பாடர் அல்லீரே! பரப்பர்அன்றோ நீர். 6.2.6-24.

அடிப்பாடு - 1. வழி. நிலத்திலே தோய்ந்த மஹா மேகங் களானவை போன அடிப்பாடு ஆர்த்திருக்கும் ஆயிற்று. பெ.தி.1.9.4. 2. வரலாறு. உகந்தருளின நிலங்களுடைய அடிப்பாடு சொல்லுகிறது. தி.நெ.தா.6. 3. உறுதி நிலை. இதிறே உபாயத்தில் அடிப்பாடு. 6.3.3-36.

அடிமண்டி - அடியில் உள்ள பொருள். சேறு, அடிமண்டியோடே கலங்கி. 2.4.0-24.

அடிமைச் சுவடு- அடிமையாய் இருத்தலின் சுவை. உம்முடைய திருவடிகளில் அடிமைச் சுவட்டை அறிவித்து போகட்டீர். பெ.தி.4.9.7.

அடியர் - அடியவர். இடையர்க்கு அடியராய்ப் போருகிற. பெரி.தி.2.9.8.

அடியாட்டி - வேலைக்காரி. கூனியாகிற அடியாட்டியானவள் திருவபிஷேக மஹோத்ஸவத்துக்கு அழிவான துர் உக்தி களைச் சொல்ல. பெரி.தி.4.8.4.

அடுக்குரு - திருவாராதனத்தில் இடம்பெறும் ஒரு பொருள். உடைவாளும் அடுக்குருவும் எடுத்தல். பாவை, 29-6.

அடுகு வளம் - உணவு. அடுகவளம் என்பதன் சிதைவு. அடுகுவளம் தடையான பின்பு கேட்க என்று விடுகையிறே. பாவை, 29-6.

அடுத்தேறு - அதிகம். அடுத்தேறாக வந்த கரத்தை. 3.8.9-36.

அடுப்படைக்கல் - அடுப்பாக அமைக்கும் கல். ப்ரஹ்மாதிகளைக் கண்டால் அடுப்படைக் கல்லாக நினைத்திருக்கும் அத்தனை. மு.தி.64.

அடை - கையடை என்பதன் முதற்குறை. பாதுகாத்தற்காகக் கொண்ட பொருள். அடைகொண்டு பாழ்போக்குவான் ஒருவன் அன்றே. 5.10.5-36.

அடைகொளல் - தடுத்தல். க்ருஷ்ணன் வந்து நோக்கப்புக நீ ஒரு க்ஷத்ரியாதமன் அடைகொடு பாழ்போக்கினாய். பெ.தி. 5.8.8.

அடைத்த - உரிய. இந்த்ரியத்துக்கு அடைத்த திருநாமம் சொல்லி. பெ.தி.1.3.9. அடைத்த காலம் - உரிய காலம். தனக்கு அடைத்த காலத்திலே அலர்ந்த தாமரைப் பூப்போலே இருக்கிற. பெரி.தி.1.7.9.

அடைப்புண்ணல் - உள்ளடங்கல். வருமவற்றிலும் அடைப்புண்ணு மிறே வர்த்தமாநம். 1.1.4-36.

அடைய - 1. முற்றிலும். ஆத்மாத்மீயங்கள் அடைய. 5.3.5-36. 2. எல்லா இடங்களிலும். அச்சோலை அடைய மதுபாநம் பண்ணிக் களித்துப் பாடுகிற வண்டுகள். பெ.தி.1.2.6.

அடைவு* - 1. தொடர்பு. அடைவு இல்லாத இஹலோகத்திலே. 6.2.7-24. 2. முறைமை. அடைவுகெட ஒப்பித்து. 3.0.0-24

அண்ணர் - மூத்த சகோதரர். அண்ணர்க்கும் நமக்கும். பெரி.தி 1.8.4. அண்ணர் உடம்புக்கும் நம் உடம்புக்கும். தி.வி.21.

அண்ணிமை - நெருக்கம். அண்ணிமை சொல்லுகிறது. பெ.தி. 7.5.7.

அண்ணிய - நெருங்கிய. அண்ணிய உறவாக. 5.4.7-36.

அண்ணியர் - நெருங்கியவர். இவ்வர்த்தத்துக்கு அண்ணியர். 9.1.7-24.

அண்ணியார் - நெருக்கமானவர். அண்ணியாரைப் போலே வர்த்தித்து. பெ.தி.6.2.1.

அணியன் - அருகிலிருப்பவன். சந்த்ரன் அணியனாய் இருக்கை யாலே. நான்.தி.46.

அணுக்கன் - குடை. அணுக்கன் இடவேணும். 4.6.2-36.

அணுகோலக்கம் - அணுகு ஒலக்கம்; கூட்டம். திரள இருந்து அணுகோலக்கமாக இருக்குமவர்களைப் போலே. பாவை, 22-3.

அணுமை - அணிமை என்பதன் சிதைவு. அவர் கையும் வில்லும் கண்டு போந்த நாள் அணுமையாலே. பெ.தி.4.6.3.

அத்தலை* - அவ்விடம். அத்தலையில். 4.5.8-24.

அத்தவாளம் - மயிற்றோகை விரித்தாற் போலே பின்னே சாத்தும் ஆடை. ஆலவட்டக் காற்றிலே அத்தவாளம் தலை மேலே பறக்க. பாவை, 24-6.

அத்தவாளத்தலை - ஆடையின் முந்தானை. இவளை அத்தவாளத் தலையாலே மறைத்துக்கொண்டு...கொண்டு போக. பெரி.தி.3.8.0. அப்படியே தானே வந்து அத்தவாளத்தலையாலே மறைத்துக்கொண்டு போக. பெ.தி.3.7.0.

அதிர்த்தி - அதிர்ச்சி என்பதன் சிதைவு. படத்தை உடைத்தாய்க் கோபத்தாலே விஸ்த்ருதமான அதின்தலைமேலே அதிர்த்தி யாலே விஷத்தைக் கக்கும்படி கிளரக் குதித்து. பெரி.தி. 2.10.3.

அப்பர் - வழிபாட்டுக்கு உரியவர். அவனை அப்பராகச் சேமம் சாத்தி வைத்து வென்றான் இவனே கிடீர் என்கிறார். பெ.தி.2.10.8.

அமர்ந்த நிலம் - அச்சமில்லாத பொருந்திய நிலப்பகுதி....தம் கைப்பொருளை, அவர்கள் கையிலே கொடுத்து அமர்ந்த நிலத்திலே சென்றவாறே வாங்கிக் கொள்ளுவாரைப் போலே. 10.1 0-36.

அமுதுசெய்தல் - உண்ணல். அமுதுசெய்து கைவாங்கின. தி.மா.41.

அமுதுபடி - உணவு. அமுதுபடிகளும் சேர்த்து பாத்ரஸ்த்தமாக்கி வைத்தேன். பெரி.தி.3.3.9. அமுதுபடியாகச் சொல்லிற்று. 1.6.1-24.

அய்யர் - தந்தை. நம் அய்யரை ஒப்பார் உண்டோ? பெ.தி.1.2.6.

அய்யன் பாழி - அய்யன்பாழியில் ஆனை போர்க்கு உரித்தாமன்றாயிற்று அவ்வோ தேவதா மாத்ரங்களுக்கு பலப்ரதாந சக்தி உள்ளது. 1.1.5-36.

அரட்டு - மிடுக்கு. புலி அரட்டோடே நடந்ததோ. தி.நெ.தா.21.

அரண் - பெருமுயற்சி; ஏற்பாடு. முசல்வேட்டைக்கு அரணைப் பண்ணினாப்போலே என்னை முடிக்கைக்கு இத்தனை பாரிப்பு வேணுமோ? 9.5.0-9.

அரணிய - செறிவான; வலிவான. அரணிய கவியைப் பாடாநின்றான். 7.9.6-9.

அரணிமை - செம்மை. அரணிமையை உடையவனே என்றுமாம் பாவை, 20-3.

அரதி - 1. பிரிவுத்துன்பம். அரதியாலே படுகிற படு. 2.4.1-36. 2. பிரிவுத்துன்பம் உடையவள். நான் அரதியாய் அவன் இருந்த ஊரை நோக்கிப் போகத் தேடுவது. தி.நெ.தா.21.

அரிகண்டம் - கழுத்தில் போடப்படும் இருப்புத்தளை. அரிகண்டம் இட்டாப்போலே அவன் சாத்துகிற ஆபரணத்தைப் பூட்டினிகோள். 4.6.2-36.

அரித்தல் - தேடுதல். பெருமாள் பிராட்டியைப் பிரிந்து கடலும் மலையும் அரித்துக்கொண்டு வாராநிற்கச் செய்தே. 1.4.3-36.

அருக்குதல் - நெருக்குதல். க்ருஷ்ணனை அருக்கினால் உன்னையும் அருக்க வேணுமோ. பாவை, 10-6.

அருகு - பக்கம். இரண்டு அருகும் தேங்கிப் போரும்படி நடுவே அணைகட்டி. பெரி.தி.1.6.8.

அருகிருப்பு - அருகில் இருத்தல். அருகிருப்பை உடையரான. பெரி.தி.2.7.9.

அருங்குலை - இடியும்கரை. வெறும்புறத்திலும் அருங்குலைக் கீழ் விளை நிலம்போலே நோக்க அரிதான இடை நுடங்கும்படி யாகவும். 9.9.3-36.

அருமந்த - உயரிய. அர்ஹமான அருமந்த வஸ்து கிடீர் இது. தி.மா.27.

அருமை - தொல்லை. ஸ்திதியில் உண்டான அருமையாலே இருக்க ஒருப்படும். பெ.தி.1.3.1.

அருமைப்படல் - தொல்லைப்படல். அருமைப்பட வேணுமோ? 10.2.6-36.

அலகலகாக - ஒன்றோடொன்று கூடாததாக. சுருண்டு வெடித்து அலகலகாய்க் கருகின குழலையுடையனாய். 3.6.5-12.

அலசுதல் - வருந்துதல். உன் திருவுடம்பு அசைய-ஸௌகுமாரமான திருமேனி அலசும்படி. 9.2.3-36.

அலமருதல் - தடுமாறுதல். அலமந்து திரியப்பண்ணுதி. 4.9.9-9.

அலமாப்பு - தடுமாற்றம். அவன்படுகிற அலமாப்பைக் கண்டு. 6.2.1-36.

அலற்றுதல் - முறையிடும் போக்கில் பேசுதல்; புலம்பல். தாம் அலற்றுகிறபடியை. 4.2.0-6.

அலைகொடுக்கை - கூடலுக்கு இடம் கொடுத்தல். நாட்டார் இரவு உறங்குவர்கள். ப்ரணயிநி யௌவநம் குடிபுகுந்தால் இராமாறு நாயகனுக்கு அலைகொடுக்கையாலே உறக்கம் இல்லை. 7.2.1-36.

அலைச்சல் - தொல்லை. தோள்வலியாலும் நமக்கோர் அலைச்சல் இல்லை பெரி.தி.4.3.3.

அலைவலை* - பன்னிப் பேசுவோர்; பகுஜல்பர்கள். திருவேங்கடமுடையான் அலைவலையாகாதே! என்கிறாரிறே. பெ.தி.5.8.9.

அலைவாய் - கடல். கடல் எக்கலில் நுண் மணலில் பலர்-அலைவாயில் எக்கலில் நுண்ணிய மணலிற்காட்டில் அநேகர். 4.1.4-36.

அவ்வருகு* - அதற்கு மேலாக. அவ்வருகாக நினைத்திருக்கை யாலே. 1.3.1-24.

அவ்வோ* - அவ் அவ்; அந்த அந்த. அவ்வோ பதார்த்தங்களுக்கு. 2.2.8-36.

அவிழ்ச்சி - சோர்வு. சோர்வு பார்த்து என்பதற்கு "அவிழ்ச்சி பார்த்து" என்று உரை கூறப்பட்டுள்ளது. பெரி.தி.2.2.5.

அழகோலக்கம் - அழகு தோன்ற அவையில் வீற்றிருத்தல் அழகோலக்கங் கொடுத்துக் கொண்டிருக்கிற. 1.1.0-24.

அழற்றி* - சீற்றம். அவர்கள் முன்னே தன் அழற்றி எல்லாம் தோற்றும்படி. பெரி.தி. 2.1.5.

அழன்று - கோபித்து. நான் சொன்னால் அழன்று அத்தைக் கொள்ளாய். பெ.திருவந். 12.

அழிஞ்சுக்காடு - பாலைநிலம். பெருவிடாயனானவன் அழிஞ்சுக் காடு ஏறப்போக மாட்டானே?. 6.2.0-36.

அழிப்பாளன் - உருக்குபவன்; தட்டான். அழிப்பாளனானவன் 'ஆபரணாதிகள்' என்று பாராதே உருக்கி அழிக்குமாபோலே காணும் இவனும் உருக்கி அழித்தபடி. 5.8.1-36.

அழிய மாறுதல் - முற்றிலும் மாறுதல். திவ்ய விக்ரஹத்தை அழிய மாறிவந்து தோற்றின. தி.ச.வி.24.

அழுக்கறுதி - தூய்மை. "தூய்மை - அழுக்கறுதி". 5.4.7-12.

அழுகுசிறை - கொடிய சிறை. ராஜபுத்ரன் அழுகுசிறையிலே கிடந்தால். 1.2.1-36.

அளவிலி - அறிவு இல்லாதவன். அளவிலிகளாகவுமாம். 4.9.9-36.

அளவு - அறிவு; திறமை. அளவு எல்லாங் கொண்டு. 7.8.10-36. தந்தாமுடைய அளவுகளுக்கீடாக இவளுடைய குணங்களைச் சொல்லி. பெரி.தி.3.8.4.

அளவுடையார் * - அறிவுடையார். காண்கைக்கு அளவுடையார் இல்லை. 2.8.8-9.

அளவுபடை - சிறியபடை. அளவுபடைக்குப் பெரும்படை தோற்பது வஞ்சநத்தாலேயிறே. 2.4 7-36.

அளற்றுப்பொடி - காவிப்பொடி. அளற்றுப் பொடியிலே புடைவையைப் புரட்டி. பாவை, 14-3,6.

அளாவன் - கலப்புடையது. ரஜோகுண ப்ரசுரராய் இருப்பாரும் தமோகுண ப்ரசுரராய் இருப்பாரும் அளாவனான

ஸத்வத்தை உடையராய் இருப்பாருமாயிறே இருப்பது. அப்படியே குணாநுகுணமாகப் பிறந்த ஜ்ஞாநமும், 1.1.5-36.

அற * - 1. முற்றிலும். அற உலர்ந்து. 4.7.5-9. 2. மிகவும். இவன் அறக் கைவிஞ்சினான் என்று கரத்தைக் கழித்து விட்டான். 4.8.9-36.

அறவன் - அறநெஞ்சினன். நீ செய்ததுக்கு ஒரு ப்ரத்யுபகாரம் பண்ணலாமோ? வெறும் அறவனாகையாலே செய்தாய் அத்தனை. 6.8.1-36.

அறவிலை - எல்லா உரிமையோடும் விற்றல். அறவிலை செய்து கொடுத்தல். 1.3.1-36.

அறவை - அநாதை. அறவையுமாய் இருப்பான் ஒருவனை. 3.5.7-36.

அறவைச்சிறை - கொடுஞ்சிறை. ஸம்ஸாரமாகிற அறவைச்சிறை வெட்டிவிடப் பெறுவர்கள் என்கிறார். 1.3.11-36.

அறிவிலி - அறிவில்லாதவன். இன்றியே அறிவிலியான. 4.7.1-12.

அறுகாழி * - மோதிரம். போகத்துக்கு ஏகாந்தமான அழகை உடைய அறுகாழி என்னுதல். மு.தி.93.

அறுதி - 1. நிச்சயம். புகுருகை அறுதி என்று. 5.4.11-12. 2. முடிவு. துணியும்படியும் அறுதியாகக் கேட்டு. 9.7.3-36.

அறுமான் - கொசுகு. அத்திக்காயில் அறுமான் போலே. 1.9.5-36.

அன்னல் - புகை. அன்னலும் துன்னலுமாய்த் திரண்டமேகத்தை. 8.5.4-36.

அனந்தல் - சோம்பல். அனந்தலிலே திருவடிகளை நிமிர்த்தான். 6.9.4-36.

அனுக்கம் - நடுக்கம். கீண்டு பொகடுகையால் வந்த அனுக்கம் தீர. தி.பல்.6.

அனுங்காமை - நடுங்காமை. பிள்ளைகள் அனுங்காமைக்காக. பெரி.தி.1.2.13.

ஆக்கர்- உண்டாக்கப்பட்டவர். ஆக்கரான தேவர்கள். 7.5.2-36.

ஆக்கன் * - 1. படைக்கப்பட்டவன். ஆக்கனான ப்ரஹ்மா கிட்டுகை. 3.1.8-12. 2. செய்யப்பட்டது. பாகவிசேஷத்தாலே ஆக்கனாய் வந்த ஸாரஸ்யமல்ல. தி.மா.17. 3. மட்டமானது. ஆக்கனாய் இருப்பது ஒன்றை. தி.பல்.8.

ஆகமுதலி - திருமேனி அலங்காரத்தில் முதன்மையாக இருப்பது. ஆகமுதலியாக விட்ட திருத்துழாய் மாலையையும் ஆதிராஜ்ய ஸூசகமான மணிமுடியையும் உடையவன். மூ.தி.50.

ஆச்சி - தாய். நம்மை ஆச்சி பலகாலுஞ் சொல்லும். பாவை, 26-6.

ஆசு - ஆயுதத்தின்பிடி. ஆசிலே வைத்த கையும் நீயுமாய். 7.1.2-36. ஆசைப்பாடு - ஆசைப்படுதல். நாக்கு நீளுகையாவது ஆசைப்பாட்டுக்கு ஸூசகம். 4.7.6-12.

ஆட்டை - ஆண்டு. ஆட்டைக்கு ஒருகால் இது பூக்கக் கடவதாய். பெ.தி.9.8.3.

ஆண் பிள்ளைத்தனம் - வீரம். திருமங்கையாழ்வார் மதிக்கும்படியான ஆண் பிள்ளைத்தனமிறே அவரதும். பெ.தி.2.9.3.

ஆணாறு - மேற்கு நோக்கிப் பாயும் ஆறு. ஆணாறு பெண்ணாறுகள் ஒன்று இன்றிக்கே தேடுவதாய்... 4.4.0-36.

ஆமம் - உணவு செறிக்காத நிலை. 'ஆமத்திற் சோறு பாதகம்' என்னும் அத்தாலே நிதாநஜ்ஞரான பிஷக்குகள் போஜந நிரோதம் பண்ணுமாபோலே. 1.4.0-36.

ஆமைத்தாலி - முளைத்தாலி. அச்சுதாலியும் ஆமைத்தாலியும். பாவை, 7-6.

ஆய்ச்சி - தாய். வீட்டில் ஆய்ச்சிக்கும் ஐயருக்கும் பரதந்த்ரராக வேணும். 6.1.4-36.

ஆயவெள்ளம் - தோழியர் கூட்டம். ஆயவெள்ளம் எல்லாம் திரண்டது. 5.3.6-36.

ஆயன் - இடையன். ஆயனுடைய ஸர்வஸமாச்ரயணீயதைக்கு ஸ்மாரகமாய் இருக்கிறபடி. தி.நெ.தா.8.

ஆர்ப்பரவம் - அரவாரம். ப்ரீதியாலே ஆர்ப்பரவம் செய்தவன். பெரி.தி.4.9.8.

ஆராட்சி - ஆராய்ச்சி என்பதன் சிதைவு. ஆராட்சி தோற்றச் செய்யும். பெ.தி.10.8.1.

ஆலத்தி - மஞ்சள் நீர். வெறும் புறத்திலே ஆலத்தி வழிக்க வேண்டியிருக்க அவ்வழகுக்கு மேலே வேலைப்பிடித்த அழகு. பாவை, 24-6.

ஆலவட்டம் - விசிறி. ஆலவட்டக் காற்றிலே அத்தவாளந் தலைமேலே பறக்க, பாவை, 24-6.

ஆவாலம் - ஆரவாரம். ஆவலம் என்பதன் சிதைவு. சாணூர முஷ்டிகரை நிரஸித்து ஆவாலங் கொட்டி. பெ.தி.3.3.2.

ஆவிக்கை - கொட்டாவி கொள்ளுகை. ஆவிக்கையாவது பசியாலே கொட்டாவி கொள்கையாகவும் ஆம். பெ.தி. 1.2.8.

ஆழங்கால் - பள்ளம். ஸௌந்தர்யமாகிற ஆழங்கால் தானே மேடாய்த் தரித்து நின்று. பெரி.தி.3.7.0.

ஆழமோழை - பள்ளம்மேடாக, நிறைவாக. மடு. இங்குச் சுழிபட்டோடும் பெருவெள்ளத்தைக் குறிக்கிறது. பெரிய திருநாளில் சிறைப்பட்டிருப்பாரைப் போலே வெண்ணெயும் பெண்களும் ஆழமோழையாய்ச் செல்லுகிற அமளியிலே நாம் புகுந்திருப்பதே என்று இருந்தான். சி. மடல், கண்ணி, 37.

ஆளத்தி* - முரலுதல். வண்டுகளானவை ஆளத்தி வைக்க. பெ.தி.5.10.4.

ஆளியக்கம் - ஆள் இயக்கம், மக்கள் நடமாட்டம். அசோக வநிகாப்ரதேசத்திலே சில ஆளியக்கத்தைக் கண்டு அங்கே சென்று. பெரி.தி. 3.10.0.

ஆற்றாமை - தாங்க முடியாத நிலை. ஆற்றாமையைக்கண்டு. 1.1.0-36.

ஆற்றுத்தலை - ஆற்றின் தொடக்கம். ஆற்றுத் தலையிலே. பெ.தி.6.9.6.

ஆற்றுவரவு - ஆற்றுவெள்ளம், ரத்நாதிகளைக் கொழித்துக் கொடுவருகிற ஆற்றுவரவோடு கிருஷ்ணன் இடைப் பெண் களுடைய துகில்களையும் வளைகளையும் வாரிக்கொடு வருகிற வரவோடு வாசியற. பெ.தி. 6.6.8.

ஆறாடி வருதல் - விழா நிறைவுக்கு உறுப்பானவற்றைச் சிந்தித் தல்.சிசுபாலன் லஜ்ஜாவிஷ்டனாய் அண்ணாந்திருக்கும்படி யாக ஆறாடி வருகிறஸமயத்திலே. பெரி.தி.4.1.5.

ஆனை - யானை. ஆனைக்குத் தோற்றாற் போலேயும். 3.2.5-36.

ஆனைக்குப்பு* - சதுரங்கம். ஆனைக்குப்பு ஆடுவாரைப் போலே. பெ.தி. 6.2.7.

ஆனைத்தாள் - சாளரம்; பெரியவாயில். ஜ்ஞாநம் ப்ரத்யக்ஷிக்கைக்கு ஆனைத்தாளான மநஸ்ஸாலே. இ.தி.67.

இசங்குதல் - இயங்குதல். இசங்க மாட்டாமையில்லையிறே 6.10.10 . 36. ஸ்ரீப்ருந்தாவநத்துக்கு வழிஇசங்கும்படி பெண்களுக்கு வன்னியம் அறுத்துக் கொடுத்தபடி. 5.10.2-36.

இசலி* - இகலி என்பதன் சிதைவு. மாறுபட்டு. இசலி வளருகிற செந்நெலும். 6.5.6 36.

இசித்தல்* - இழுத்தல் என்பதன் சிதைவு. தம்முடைய திருவுள்ளத்தை அந்தக் கழுத்தினின்றும் தன் பக்கலிலே வர இசித்து. அம.7, அழகு.

இசைவு - அனுமதி. இத்தலையில் இசைவு கிடையாமையிறே. பெ.தி.1.10-9.

இசையாமை - உடன்படாமை. இதுக்கு இசையாமை தோற்ற இருக்க. பெரி.தி.4.8.4.

இட்ட வழக்கு* - சொற்படி அமைவது; ஸ்வாதீநம். இப்பத்தும் வல்லார் இட்ட வழக்காய் இருக்கும் திருநாடு என்கிறார். 6.7.11-36.

இட்டளம்* - குறுகிய இடம்; குறுக்கம். இட்டளத்தில் பெரு வெள்ளம். தி.பல்.7; பரமபதத்தில் இட்டளமும் தீர்ந்தது. 3.8.2-36.

இட்டிறை - எதிர்ப்பையிடுகை என்பது அரும்பதம் தரும்பொருள். தந்த பொருள் எனலாம். கவிபாட்டு இட்டிறையாயிறே இருப்பது. 3.9·4-24.

இட்டீடு - வார்த்தையிட்டு வார்த்தை கொள்கை. இட்டீடு கொள்ளுகைக்குப் பற்றாசு இல்லாதபடி. 8.2.6-36.

இட்டுப் பிறத்தல் - ஒன்றற்கு என்றே பிறத்தல். கைங்கர்ய ஸாம்ராஜ்யத்துக்கு இட்டுப்பிறந்து. 2.3.1-36.

இடுசிவப்பு - செயற்கையழகு. ஓர் ஆபரணத்தால் இடுசிவப் பன்றிக்கே ஸ்வாபாவிக ஸௌந்தர்யம் உடையோமும் நாம் அல்லமோ?. அம.7. அழகு.

இடைச்சரி - தோள்வளை திருக்கைக்குச் சாத்துமவை என்றால் அநேகம். அவைதன்னிலே 'இடைச்சரி, கடைச்சரி' என்று அநேகமாய் இருக்குமிறே. 2.5.6-36.

இடைச்செறி - துணை மோதிரம். ராஜபுத்ரர்கள் கையிலே இடைச்செறி கடைச்செறிக்குத் தோற்பாரைப் போலே 6.1.1-24.

இடையாட்டம்* - 1. நிலை. சில மகன்றில்களைக் குறித்து என்னிடையாட்டம் அவனுக்கு அறிவிக்கிறிகளோ? அல்லிகளோ? என்கிறாள். 11.4.4-24. 2. திறத்தில்; இடத்தில். இவ்விடையாட்டத்தில் 1.3.4-36.

இணைச்சீரை - மாற்றுடையும் மேலாடையும். 'ஒருகூறை' என்றும் 'அரைக்கு உடுப்பது' என்றும் சொல்லுகையாலே, அரைக்கு உடுக்கும் சீரைக்கு இணைச்சீரை வேறே தேடவேணும் என்கை. பெரி.தி. 4.6.2.

இதள் - இதழ் என்பதன் சிதைவு. இதள் விள்ங்காநின்றுள்ள தாமரை போலே. பெ.தி.7.5.6.

இந்தளம் - அடுப்பு. ஆகாசந்தானே இந்தளமாக எரிய என்றபடி. பெ.தி. 1.7.5.

இயக்கம் - நடமாட்டம். சில ஆள் இயக்கத்தைக் கண்டு அங்கே சென்று. பெ.தி.3.10.0.

இயல் - இசை கலவாத பாட்டு. இயலை நல்லிசையாலேபாடியாடி. 2.6.6-9.

இயல் அருளிச்செய்தல் - பாட்டைப் படித்தல். இப்பாட்டு இயல் அருளிச்செய்யும்போது. பெ.தி.11.8.6.

இயற்றி* - 1. ஆற்றல்; தகுதி. தன் இயற்றியெல்லாங் கொண்டு. 4.9.3-24, 36. 2. சிறப்பு. நாலுவகைப்பட்ட வேதம், பஞ்ச மஹாயஜ்ஞம், மற்றும் ச்ரவணத்தாலே அறிய வேண்டியவற்றாலும் வந்த இயற்றியை ஸ்வபாவமாக வுடையராய். பெ.தி.7.8.1.

இரட்டை - துப்பட்டி. ராஜாக்களுக்கு இரட்டை பிடித்து. தி.பல்.9.

இரத்தல் - பிச்சை எடுத்தல். காண்கைக்காக இரக்கிறார். தி.மா.7.

இரப்பாளன் - பிச்சை எடுப்பவன். ச்ரிய: பதியான தன்னை இரப்பாளன் ஆக்கினானிறே. 4.7.2-36.

இராப்படை - இரவுப் போர்ப்படை. கண்ணுக்கு விஷயமாய் இறாய்க்க ஒண்ணாதபடி இராப்படை ஏறுவாரைப் போலே உடம்பிலே படக் காண்கிற இத்தனை. 9.9.1-24.

இராமாறு - இரவுதோறும். பிரணயிநி இராமாறு நாயகனுக்கு அலை கொடுக்கையாலே உறக்கமில்லை. 7.2.1-36.

இருகரையர் - ஆழ்வார்கள் இருகரையர். அம.0, பெரி.

இருகரையன் - இரண்டிடத்திலும் தொடர்புடையவன். அது செய்யுமிடத்தில் இருகரையன் ஆகையன்றிக்கே. 1.2.4-36.

இருட்சி - இருள். போக்யதையாலும் இருட்சியாலும் புக்கார் மிகவும் மதிமயங்கும்படியான திருச்சோலை. 2.10.3-9.

இருதலைத்தல் - இரண்டுபட்டிருத்தல். இருதலைத்த நெஞ் சின்றியே. 9.8.3-24.

இருபுரி - இரண்டு முறுக்குடைய கயிறு. திருநகரியில் ஆழ்வார் ஆணையும் பொலிந்து நின்ற பிரான் ஆணையும் இருபுரியாய் ஆய்த்துச் செல்வது. க.நு.சி.10, பெரி.

இல்லி - சில்லி. கருப்பஞ்சாற்றுக் குடம் இல்லி திறந்தால் பொசிந்து புறப்படுமாபோலே. பெரி.தி.1.7.4.

இலக்கை - மாத ஊதியம், லட்சியம். கைமேலே இலக்கை பெறாதார்க்கு அன்றாடப் படிவிட வேணுமிறே, படிவிடாத போது அரை க்ஷணம் நில்லார்களிறே அவர்கள். 4.8.7-36.

இலைக்குழல் - இலையால் செய்த ஊதுகுழல். வயிரமும் உருக்கும் காணும் வாயில் குழலோசை. இலைக்குழல் என்று நிர்ப்பந்திக் கிறாரும் உண்டு. பெ.தி.2.7.8.

இலைத்தொடை - துழாய்மாலை. பிடித்து மோந்த இலைத் தொடையும் தானுமாய் இருக்கிறபடி. 2.6.10-24.

இவ்வருகு - 1. கீழ். இவ்வருகான என்னளவும் வர. 2.3.1-24. 2. இப்பால். அதுக்கு இவ்வருகே ஒரு பயணம் எடுத்து விட்டபடி. 1.5.6-36.

இவ்வோ - இவ்இவ். இவ்வோ இடங்கள் உனக்கு வாஸஸ்தாந மாய் இருக்க. பெ.தி.3.5.8.

இழவு - 1. நஷ்டம். நாள் இழவல்லது பொருள் இழவில்லையிறே தி.வி.89. 2. வருத்தம். இன்னாதான இழவுதீர. 6.4.0-24. 3. இறப்பு. பெரியவுடையார் இழவு பலிக்கையாலும். 4.9.1-36. இழவாளன் - நஷ்டப்பட்டவன். தான் இழவாள னாய்கொண்டு. 1.7.10-6.

இழிச்சம் - இழிவு. எத்தனை இழிச்சம் சொன்னார்களேயாகிலும். பாவை, 20-6.

இழிச்சல் - இறக்குதல். பருக்கை தட்டுமாகில் மிடற்றுக்குக்கீழ் இழிச்ச மாட்டாது ஆயிற்று. பெ.தி.1.2.5.

இழிஞ்சுதல் - இறங்குதல் என்பதன் கொச்சை. மேல்நிலங்களில் நின்று தடுமாறாதே வந்து இழிஞ்சுகிற. பாவை, 10-6.

இழிதல் - இறங்குதல். ஆழ இழிந்து. 5.4.1-36. இழிந்தவர்கள் - இறங்கியவர்கள். அநுபவத்திலே இழிந்தவர்களுக்கும். தி.ச.வி.93.

இழுகின - இறங்கின. ஒருத்தர் இழுகின இடத்திலே. பெரி.தி. 3.2.2.

இழையீடு - பொல்லாங்கு; குற்றம். இதினுடைய இழையீடு கவிழ்ந்து பார்க்க அமையுமே இதினுடைய அகவாயை; தன்னடையே விரக்தி பிறக்கும். 10.2.5-36.

இளங்காலிகள் - இளம்பிள்ளைகள். இளங்காலிகளான இடையர் திரண்ட திரளில். பெரி.தி. 3.6.7.

இளவணி - காலாட்படை. தூசியேறினவர்கள் போரப் புக்க வாறே, நின்ற இளவணி கலங்கி மேலே நடக்குமாப் போலே. 7.4.1-36.

இளிகண்ணன் - பீளைக்கண்ணன். இளிகண்ணனை புண்டரீ காக்ஷன் என்றும் இப்புடைகளிலே ஆயிற்றுக் கவிபாடுவது. 3.9.0-36.

இளிம்பு* - திறமையின்மை. இதர விஷயங்களைப் பற்றுகை இளிம்பு. 2.10.1-24. இளிம்பர் - திறமையில்லாதவர். இளிம்பராயிருப்பார் அகப்படுகைக்காகச் செய்தாய் இத்தனை. 6.2.1-24. இளிம்பன் - திறமையற்றவன். முக மெங்கும் (தயிரைத்) தடவிக்கொள்ளுகிற இளிம்பனுக்கு நான் இளிம்புபட்டேன். பெ.தி.8.3.5.

இளைய பெருமாள் - இலக்குவன். சேஷபூதனும் தன்னுடைய ஸர்வ வ்யாபாரங்களையும் சேஷிக்கு உறுப்பாக்கி வைக்கக் கடவனிறே, இளைய பெருமாளைப்போலே. பெ.தி.1.2.6.

இற்றை - இன்று. ஸ்ருஷ்டிகாலம் தொடங்கி இற்றையளவும். 4.1.6-24.

இறட்டிக் கொள்ளுதல் - அப்பிக்கொள்ளுதல். முகத்திலே இறட்டிக்கொள்ளுதல். தி.மா.36.

இறட்டு - வீசி. அர்ஜுநனும் தானுமாய் யமுநாதீரத்திலே பூப்பந்து இறட்டு விளையாடாநிற்க. பெ.தி.6.8.7.

இறாஞ்சிக்கொள்ளுதல் - கவர்தல். மஹாபலி போல்வார் இறாஞ்சிக்கொள்ள. 2.8.7-36.

இறாய்க்க* - பின்வாங்க. என்று இறாய்க்க அவரும் விடாதே. அம.1, அழகு. இறாய்த்த - பின்வாங்கிய. இறாய்த்த அர்ஜுநனை. தி.ச.வி.89. இறாய்த்தவர் - பின்வாங்கியவர். இறாய்த்தவர்களுக்கு. தி.மா.0. இறாயாத - பின்வாங்காத. சேற்றுக்கும் இறாயாத வடிவைக்கொண்ட. 1.9.2.36. இறாயாமை - பின்வாங்காமை. சேவடி தானே இருந்த இடத்தே வந்தால், இறாயாமையே வேண்டுவது. மு.தி.48.

இறுக்குவாதம் - அசைய முடியாமற் செய்யும் வாதநோய். பகவத் விஷயம் கேட்டால் இறுக்கு வாதம் வலித்து அவிக்ருதராய் இருப்பார்கள். 3.5.2-24.

இறுமாந்திருத்தல் - செருக்கோடிருத்தல். புதுத்தண்டன் கண்டு இறுமாந்து விளைவது அறியாதே. மு.தி.45.

இறை - கப்பம். அவனுக்கு இறையிறுக்கும் ஊராவது. பாவை, 16-6.

இறையிலி * - வரியில்லா நிலம். பிறர்க்கின்றித் தனக்கேயாகத் தந்த நுகர்ச்சி; அநந்ய போக்யத்வம். தமக்கு அவ்வழகை இறையிலியாக்கின உபகாரத்தைக் கொண்டாடுகிறார். தி வி.43.

இன்னாதாகை * - வெறுத்தல். இவர் திருவுள்ளம் இப்போது இங்ஙனே கொடிதாய்த்து ஆகாதே என்று இன்னாதாகிறார் தி.மா.37.

இன்னாப்பு * - வெறுப்பு. இன்னாப்பாலே 'என்ன பாவம்' என்கிறார். 2.2.2-36.

ஈடு - 1. கவசம். உடம்புக்கு ஈடு இடாதே. 8.1.4-24; இ.தி.15. 2. தக்கவை. நீங்கள் கருதுகிறவை ஈடல்ல, பரிஹாரமுமல்ல. 4.6.0-6. 3. இடுவது. அஃதாவது செய்வது (உதை முதலியன) சாமானியன் என்று இடும் ஈடெல்லாம் இட அமையும். பெ.தி.5.9.8.

ஈடுபடுதல் - வருந்துதல். ஸ்ரீகஜேந்திராழ்வான் முதலையாலே ஈடுபட்டு ப்ரதிக்ரியை பண்ணமாட்டாத அளவிலே. பெ.தி. 1.8.5.

ஈண்டு - விரைந்து. ஈண்டு கவளக் கடாக்களிறு அட்ட பிரான். 4.6.5-6.

ஈண்டென* - விரைவாக. அத்தை ஈண்டெனத் தந்தருள வேணும். 2.9.0-9.

ஈத்தொற்றி - மேற்கட்டி; விதானம். ஆகாசம்போலே என்ற போது கட்டின ஈத்தொற்றி இருக்கிறபடி. பெ.மடல், கண்ணி, 3.

ஈரங்கொல்லி - வண்ணான். ஈரங்கொல்லி நம்திறத்தில் பண்ணின குற்றம், 5.10.6-36.

ஈரச்சீரை - ஈரத்துணி. ஈரச்சீரை கட்டுமாபோலே. 4.6.10-36.

ஈரப்பாடு - அருள். நெஞ்சில் ஈரப்பாடு ஆய்த்து பலசேஷம் ஆவது. க.நு.சி.8, அழகு.

ஈரம் - அன்பு. நெஞ்சில் ஈரமே பார்ப்பது. பாவை, 5-6.

ஈனுதல் - தருதல். வலம்புரியையும் முத்தையும் ஈனாநிற்கும் ஆயிற்று. பெ.தி.3.4.8.

உக்கக்கால் - விசிறிக் காற்று. உக்கக்காலுக்கு உளையக் கடவ உன் உடம்பே நெருப்பாக வேகிறாய் ஆகாதே. 2.1.9-36.

உகந்தருளின இடம் - திவ்விய தேசங்கள். உகந்தருளின இடத்தை நீள்கடல் வண்ணனான இடத்துக்கு விபூதி என்று நினையாதே. 3.6.9-9. உகந்தருளின நிலங்களிலே. 5.9.0-24.

உகப்புதி - உகப்பாய். அவ் இருப்பிலும் பசுமேய்க்க என்றால் உகப்புதி என்றுமாம். 10.3.10-24. உகப்புதோம். நாங்கள் மிகவும் உகப்புதோம். 10.3.9-24.

உகவாதார் - பகைவர். உகவாதாரை அழியச் செய்வுதி. பெ.தி.10.5.8.

உகவை * உகப்பு. கோஷ்ட்டியிலும் உவகை தலைமண்டை யிட்டு. 6.2.0-36.

உகளித்தல் - எழுதல். பருவத்தால் இளையதாய் இருந்துள்ள வாளைகளானவை, செருக்காலே உகளித்து நீருக்குள்ளே முதுகுதோற்றும்படி கிடக்கிற ஆமையின் முதுகிலே சென்று குதித்து. பெரி.தி. 4.4.5.

உசாத்துணை* - பேச்சுத்துணை. உசாத்துணையாவார். 2.3.0-36.

உடல்* - 1. இடம். அழகுக்கு உடலாய் இருக்கிறபடி. 9.7.9-36. 2. காரணம். நீர்மைக்கும் மேன்மைக்கும் உடலாய் இருக்கும். 2.8.3-36. 3. கருவி. பரபக்ஷ ப்ரதிக்ஷேபத்துக்கு உடலாக ந்யாய மீமாம்ஸைகளும் அதிகரித்து. பெ.தி.5.8.7.

உடன்கேடு - கூடக்கெடுவது. ஜந்மங்கள்தோறும் உடன்கேடாய் போந்த தாகையாலே. தி.ச.வி. 115. உடன்கேடன் - சேர்ந்து கெடுபவன். தானும்பட்டு உடன்கேடனாய் நின்று நோக்கும் என்கிறது. 1.1.3-36. உடன்கேடர் - உடன் கேடராகவும் இவை எங்கே தேடிக்கொண்டார்கள். 4.9.2-24.

உடன்பாடை - உடன்படுபவள். உடன்பாடையாகவும் நினைத் திலள். 6.7.9-12.

உடன்வந்தி - உடன்வருவது; சகஜம். சக - உடன்; ஜம் - தோன்றி யது, வந்தது. உடன்வந்தியான அதிமாத்ரமான காத லாலே. 4.7.11-36.

உடைகுலைப்படல் - சிதிலமாதல். உடைகுலைப்பட்டுக் கண்ண நீராலே. 6.7.3-36.

உடோ - டேய் என்னும் விளி. உடோ! வாராய்! வீரர்கள் வர்த்திக்கும் வழியல்ல காண் நீ செய்தது. பெ.தி.2 6.4.

உண்டறுத்தல் - சீரணித்தல். ஒரஞ்சலியையும் உண்டறுக்க மாட்டாத உன்னை. பாவை,29-3.

உணர்த்தி* - 1. உணர்ச்சி. உணர்த்தியுண்டானால். 4.6.10-36. 2. விழிப்பு. உங்கள் உணர்த்தி விடிந்தமைக்கு அடையாளம் அன்று. பாவை, 6-3.

உந்தாமுடைய - உம்முடைய. உந்தாமுடைய ஸத்தை பெற்றுப் போக வேண்டியிருக்கில். 4.10.9-36.

உப்புச்சாறு* - அமுதம். உப்புச்சாறு அமையும் என்று இருப்பார்க்கும். பெ.தி.2.6.1.

உயர்த்தி* - உமர்வு. பிறர் உயர்த்தி கண்டால் பொறுக்க வேண்டாவோ. 6.2.0-36.

உயரம் - உயர்வு. தனக்கு உயரம் சொல்லிலும் அவளைச் சொல்லித் தன்னைச் சொல்லவேண்டும்படி. சி.மடல், கண்ணி,38.

உயலிடம் - உய்யுமிடம். இவள் உயலிடம்பெற்று. 4.4.3-12.

உயிர்க்குலை - உயிர்க்கொலை என்பதன் சிதைவு. சிறிது சிறிதாக ஈருதல். சித்திரவரை செய்தல் என்பது பொருள். நற்கொலையாகாதே உயிர்க்குலையாக்கி நலியாநின்றது. பெ.தி. 11.1.2. அம்பு நற்சொலையாகக் கொல்லும்; குணம் உயிர்க் கொலையாகக் கொல்லும். பாவை, 21-6.

உரப்பு - அழுத்தம். இனி என்கிற உரப்பு எத்தைப்பற்றி. 1.7.8-36.

உரவியர் - வலிமையுடையோர். எத்தனையேனும் முன்கை உரவியராய் இருப்பார் இழிய வேணுமாய்த்து(ப்) பசுக் கறக்கப் புகும்போது. பாவை, 3-3.

உரிகூறை - ஆடையற்ற நிலை; அம்மணம். என்னை உரிகூறை கொண்டு போனான். 5.3.2-36. உரிசூறை என்பது 24இல் உள்ள சொல். ஆடையினைக் கொள்ளை கொள்ளல் என்பதே இரண்டுக்கும் பொருளாகும்.

உரிதல் - கழற்றிக்கொள்ளல். ப்ராண விச்லேஷபர்யந்தமாக்கிப் போந்தேன்; புடைவை உரிந்து விட்டிலேன். பெ.தி.1.6.6.

உரு - பாடஞ்சொல்லல். சீயர் உருத்தோறும் அருளிச்செய்வர். 4.3 11-24.

உருக்கி - நீர்ப்பிண்டமாக்கி. பரிவுதோன்ற உருக்கிக் கொடுத்தபடி. 1.9.5-24.

உருமாய்ந்து கிடத்தல் - உருவின்றிக் கிடத்தல். இது உருமாய்ந்து கிடந்த காலத்திலே. தி.மா. 36.

உருவ - 1. நெடிது. இக்குடிக்கு உருவநின்ற பழியை விளைக்குமவள் இவளென்று. 5.5.6-36. 2. முற்றிலும். அகர்மவச்யனுமாகையாலே உருவ நினைத்தபடியே இருக்குமிறே அவன். 10.5.10-36.

உருவெளிப்பாடு - மாயத்தோற்றம். உருவெளிப்பாட்டாலே. 4.4.10-9.

உரோசுதல் - உறிஞ்சுதல். மூக்காலே உரோசியிருந்து முலையை அமுது செய்யாய். பெரி.தி.2.2.3.

உவர்க்குழி - சாக்கடை. கங்கையாடப் போமவனுக்கு நடுவே ஒரு உவர்க்குழியிலே முழுகிப் போக வேண்டுமோ? பெ.தி. 1.1.1.

உவாத்து - பயிற்றுவிப்பவர்...பொறைக்கு உவாத்தாய் இருக்கும் ஒருத்தி. 8.1.1-24.

உழக்கோல் - *1.* தாற்றுக்கோல். மிகைத்தானாகில் உழக்கோல் கொண்டு தகர்க்கிறோம் என்றிருப்பர். பாவை, 18-6.

உழவுகோல் - சாட்டை. உழவுகோலும் கையுமாய் நின்று தேரை நடத்துகிற ஸாமர்த்யத்தாலே. பெரி.தி.1.2.7.

உழைத்தல் - துன்பப்படுதல். ஒரு தேச விசேஷத்திலே போய் யமனுடைய தண்டலிலே உழைக்குமது கிடக்கச் செய்தே கர்ப்பத்திலே புக்குப்படும் கலேசத்துக்கு அவதியில்லையாய்த் திருப்பது. பெ.தி.6.2.3.

உள்மானம் - உட்பகுதி. உள்மானம் புறமானம் ஒழிய நித்யராய் இருப்பார் ஒருவரும் இல்லை. தி.ச.வி.66.

உள்வாய் - உட்பகுதி. அதுக்குப் பரபாகமாய் உள்வாயிலே கிடக்கிற. தி.நெ.தா.3.

உள்ளடங்காமை - உள்ளே தங்கியிருக்க மாட்டாமை. நினைத்துச் சிதிலனாய் அது உள்ளடங்காமையாலே. 1.5.1-9.

உளவுகோல் - மாக்கோல். உளவுகோலைக் கொண்டு. 2.3.2-9.

உளுக்காந்தல் - உள்ளே உலர்ந்து போதல். கொம்புகளைப் பறித்தவாறே யுளுக்காந்தது. 8.4.1-36.

உளைமயிர் - பிடரி மயிர். அந்த உளைமயிர்களிலே ஒதுங்கிக் கிடந்த ப்ரஹ்மாதிகள். பெ.தி.1.4.1.

உறாவுதல் - வருந்துதல்; வாடுதல். அநாதிகாலம் அடிமை இழந்து உறாவி இல்லாதார் கணக்காய் இருக்கிற. 1.1.1-9. பதினாலாண்டு பிரிந்து உறாவிக்கிடந்த திருவயோத்யை யிலும். பெரி.தி.4.9.1.

உறுக்கி - அதட்டி. அவள் உறுக்கி உண்ணச்சொன்னாற் போலே. மு.தி.34.

உறுதிப்பாடு - திண்மை (அத்யவஸாயம்). பேற்றில் உறுதிப்பாடு இருந்தபடி என்கை. க.நு.சி.2, பெரி.

உறுப்புத் தோல் - மான்தோல். உறுப்புத்தோலும் வெண்ணெய் பூசின உடம்புமான யஜமாந வேஷத்தோடே நின்ற நிலை காண...4.8.4-36.

உறுபூசல் - பெரும்பூசல். முன்பு தூசியேறின பேர்க்கு உரமாக நின்ற பேரணி உறுபூசலானவாறே திரள அமுக்குமா போலே. 9.9.2-36.

உறைக்கப் பிடித்தல் - இறுகப் பிடித்தல். என் கையை உறைக்கப் பிடித்துக் கொண்டு. பெரி.தி.2.3.12.

உறைப்பு* - ஊற்றம். சேஷித்வ உறைப்புத் தோற்ற இருக் கிறவனை. 2.5.8-36.

ஊட்டி* - 1. கழுத்து. ருஷபங்கள் ஏழையும் ஊட்டியாக ஒருகாலே தழுவி. 1.5.1-36. 2. உணவு. வரபலபுஜபலம் ஊட்டியாக வளர்ந்த சரீரமானது. 2.6.6-24.

ஊட்டுப் பன்றி - உணவிட்டு வளர்த்த பன்றி. ஊட்டுப்பன்றி போலே நிணம் கொழுக்கும்படி போஷக பதார்த்தங்களை ஜீவித்து உடம்பை வளர்த்துக்கொண்டு திரிகையாலே ரக்தமும் கொழுப்புடைத்தாய் அழகிதாய் இருக்குமிறே. பெரி.தி.4.7.8.

ஊமைக் கூறன் - பேச முடியாதவன். ஊமைக் கூறனாகப் பட்ட தெல்லாம் படுகையிறே. 6.2.3-36.

ஊர்ப்பகை - ஊரிலுள்ள எல்லோரும் பகை. ஊர்ப்பகையாய்த்து. 10.3.3-36.

ஊர்ப்பூசல் - ஊர்வம்பு. ஊர்ப்பூசல் விளைக்கும் நீ போசக் கடவையோ? 10.3.7-24.

ஊர்ப்பொது - ஊராருக்குப் பொதுவானது. ஊர்ப்பொதுவை உன்னாலே உண்டறுக்கலாமோ. பாவை, 19-6.

ஊற்றங்கோல் - ஊன்றுகோல். ஓர் ஊற்றங்கோல் காண்கிறிலர். 7.9.2-36.

ஊற்றம் - உறைப்பு. ஊற்றம் போராமையோ. 5.4.3-36.

ஊற்று - தோன்றுமிடம். அந்த ஸௌலப்யத்துக்கு ஊற்றான ஜகத்ஸ்ரஷ்ட்ருத்வத்தையும். 3.6.0-12.

ஊற்றுவாய் - பிறப்பிடம். ரஸிகத்துவத்துக்கு ஊற்றுவாய் சொல்லுகிறது. 1.9.1-36.

எஃகுதல் - 1. பயிலுதல். இவற்றைப் பன்னினவர்கள் எஃகிக்கரை கண்டிருக்குமவர்கள். 7.10.3-36. 2. சுகிர்வது. அத்தை எஃகுவது, அதில் வெளிறான அம்சத்தைக் கழித்து அத்தைக் கொழுவிதாகச் சுருட்டுவது. 7.7.9-24.

எங்குத்தான் - எங்கு உற்றான் என்பதன் சிதைவு. விளைத்தவன் எங்குத்தான். 5.3.3-36.

எட்டம் - நீளம். எட்டம் போராதிருக்கை. க.நு.சி.1, பெரி.

எடுப்பு - 1. மிகுதி. குணங்களினுடைய எடுப்புக்கண்டு. பாவை, 27-6. 2. பேரின்பம். இப்படி வெறுந்தரையாய் இருக்கிற இடத்திலே காண் அன்று நாம் எடுப்பு எடுத்தது. பெ.தி. 2.7.7. 3. புதையல். முன்பு ரிக்தனாய் (வறியனாய்)ப் போந்தவன் கனக்க ஜீவிக்கப் புக்கவாறே, 'இவன் எடுப்பு எடுத்தான்' என்பர்களிறே. 8.1.3-24.

எண்மை - எளிமை. எண்மையையுடைய வாமநனாய். பெ.தி, 4.10.7.

எத்தனைவர் - எத்தனைபேர். உன்னைத் துவக்கவல்லார் எத்தனைவர் கிடக்கிறது. 10.3.8-36.

எதிர் - நிகர். இவர்கள் அடங்கலும் நமக்கு எதிரோ என்று இருக்கும் கம்ஸனுடைய மிடுக்கு அழிய. பாவை, 11-6.

எதிர்செறித்தல் - எதிர்நின்று பார்த்தல்; எதிர்த்து நிற்றல். எதிர்செறிக்க மாட்டாமல் கவிழ்தலையிட்டு நின்றார்கள். பெரி.தி.3.6.1.

எதிர்த்தட்டு* - மாறானது. அதுக்கு எதிர்த்தட்டாக இத்தையே நினைத்து. தி.கு.தா.14.

எதிர்த்தலை - எதிர்ப்பக்கம். அவன் தன்னளவும் பாராதே எதிர்த்தலையையும் பாராதே. தி.ச.வி.71.

எதிரிட்டுக்கொள்ளல் - பகைத்துக்கொள்ளல். அவனை எதிரிட்டுக் கொண்டு வாங்குகை அன்றிக்கே அவன் ஏறட்டுக்கொண் டிருக்கிற ஔதார்யத்துக்கு அநுருபமாக வாங்கினான். பெ.தி.1.2.9.

எல்லாத்தையும் - எல்லாவற்றையும் என்பதன் சிதைவு. எல்லாரும் உன்னை உணரும்படி எல்லாத்தையும் உண்டாக்கினாய். தி.தி.48.

எல்லைச் சதிரி - திறமையின் எல்லையாக இருப்பவள். எல்லைச் சதிரியான சிந்தயந்தி. 1.4.3-9.

எளிவரவு* - இழிவு. நீங்கள் படும் எளிவரவே இது 4.6.7-24.

எறட்டல்* - 1. ஏற்றுதல். இவன் தலையிலே எறட்டுக் கைவிடக் கடவதோ. 10.4.10-36. அத்தை எறட்டுக்கொண்டு. 10.7.1-36. பாதகனானவன் ஸ்வபலத்தாலே எறட்டுக் கொண்டபடியாலே. 9.8.7-24. உபாயத்தை எறட்டுக் கொண்டு. 10.8.0-36. ஒரு ஸாதநத்தை எறட்டுக்கொண்டு. 10.10.0-24, 36. 2. மேலே வீசுதல். புடவையை முடித்து எறட்டுக் கூத்தாடினான். 10.9.4-36. கவரி எறட்டும். பெ.தி 8.8.9. இச்சொல் ஏறட்டு என்பதன் குறுக்கம்.

என்கிறத்தில் - என்பதில். குற்றேவல் என்கிறத்திலே. பாவை, 29-6.

என்றத்தால் - என்றதனால். ஆச்ரிதவிரோதிகளை அறப்பெற்றோமிறே என்றத்தாலே உகந்தான் ஆயிற்று. 4.8.10-36.

என்றிய* - எதற்கு. வாய்ச் சொல்லாலே தண்ணீர்ப்பந்தல் வைக்கலாய் இருக்க என்றிய இழக்கிறாய். பாவை, 16-6; 4.10.4-36; 7.9.2-36.

என்னது - எனது. என்னது என்று இருக்கை தவிர்ந்து. க.நு.சி. 5, பெரி. நான் என்னது என்று. 1.2.3-36.

என்னம்புது - என்ன. இதென்னம்புது, நமக்கு சிசுபாலன் மைத்துனன் அன்றோ என்றான். பாவை, 28-1.

என்னாய் - என்வாய். என்னாய் முடியப் புகுகிறது என்று அறிகிறிலேன். தி.வி.24.

என்னுங்காட்டில் - என்று சொன்ன அளவில். திருமாலிருஞ் சோலைமலை என்றேன்; என்னுங்காட்டில் அத்யந்த நிரபேக்ஷனாய் இருக்கிற தான் பிராட்டியோடே கூட வந்து. 10.8.1-9.

என்னென்பின - என்னவென்ன. அபூர்வ பதார்த்தங்களைக் கண்டால் இவை என்னென்பின என்று அவை விஷயமாக இவனை வார்த்தைகள் கேட்டு. பெரி.தி.3.8 10.

ஏத்தம் - உயர்வு. ஏற்றம் என்பதன் சிதைவு. அந்த ரஸ்யதையில் உண்டான ஏத்தம் போலே ஐச்வர்ய ஸூசகமாய், அழகிதான திருத்துழாயையுடைய ஸர்வேச்வரனை. பெ.தி, 10.1.3.

ஏத்தாளிகள் - திருப்பள்ளியெழுச்சி பாடுபவர்கள். மாளிகையிலே ஏத்தாளிகள் வம்சாவளி சொல்லக் கேட்டு எழுந்திருக்கு மவர்கள். பாவை, 7-6.

ஏலக்கோலல் - முன்கூட்டியே எண்ணல். மேல் ஒரு காலம் ப்ரளயம் வரும் என்று ஏலக்கோலி ப்ரளயம் வந்தாலும் இங்குண்டோ என்று இளைத்துக் காட்டலாம்படி வைக்கும். 2.8.7-36.

ஏற்றஃகம் - பெருஞ்சிறப்பு. இதுக்குமேலே ஓர் ஏற்றஃகம் உண்டாகப் போனாளோ? 6.7.5-36.

ஏற்றம் - 1. உயர்வு. ஜ்ஞாநேந்த்ரியங்களுக்கும் அறிவுக்கும் வாய்த்தலையான ஏற்றம் உண்டாகில். 2.7.10-24. 2. பெருமை. சில குணத்தில் ஏற்றம். 6.10.6-24. 3. மிகுதி. பூமியில் வர்த்திக்கும் பதார்த்தங்களிலும் ஏற்றம் உண்டிறே கடலில் வர்த்திக்குமவை; அவற்றுக்கு எல்லாம் வேண்டுமிடம் போந்திருக்கும். பெ.தி.1.10.1.

ஏற்றிலக்கை - (ஏறு + இலக்கை) மிகுந்த சம்பளம். ஏற்றிலக்கை பெற்று உண்கிற மிடுக்கையுடையரான துர்யோதநன் பரிகரம் தேர்க்காலிலே நெரித்த ஓசை. பலகரமான த்ரவ்யங்களை மிகவும் புஜித்து மிடுக்கரானவர் என்னும் இருபத்து நாலாயிரப்படி உரையினை நோக்கும்போது இதற்கு வலிமை தரும்பொருள் என்பது பொருளோ என்று எண்ணச் செய்கிறது. 7.4.5-36.

ஏற - அதிகமாக; கூட. மநுஷ்யாதிகளிற் காட்டில் சிலநாள் ஏற இருக்கிற இத்தைக்கொண்டு. 10.2.6-24.

ஏறப்போதல் - நோக்கிச் சொல்லல். ஸ்ரீவைகுண்டத்து ஏறப் போய். 10.2.11-36.

ஏறவருகை - நோக்கி வருதல். பகவத் ஸந்நிதியேற வருகையும் பாவை, 29-6.

ஏறிட்டுக்கொள்ளல் - ஏற்றிக்கொள்ளல். ஆச்ரயத்தில் இல்லாது ஒன்றை ஏறிட்டுக் கொண்டாய்த்து வந்தது. தி.மா.28.

ஏறுதல் - முன்னேறிச் செல்லல். இராப்படை ஏறுவாரைப் போலே. 9.9.1.24.

ஏன்றுகொள்ளல் - ஏறிட்டுக்கொள்ளல். நான் போய் ரக்ஷிக்‌றேன் என்று ஏன்றுகொண்டு ப்ராஹ்மணனையுங் கூட்டிக் கொண்டு போய்க் காத்துக்கொண்டு நிற்கச் செய்தே. பெரி.தி. 4.8 2.

ஐசுகைசு - புன்மையான. ஐசுகைசான இருள்கொழுந்துகளை உடைத்தான ஸந்த்யையானது. தி.வி.69.

ஐயம் - சந்தேகம். இயற்கையிலே ஐயமாதல். தி.வி.75.

ஐயர்* - தந்தை. ஐயரையும் ஆய்ச்சியையும் அநுவர்த்தித்துப் பெருமாள் காடேற எழுந்தருள நின்றார். 3.9.9-36.

ஒக்க - உடன். ஈச்வரன் வளருகிறபோது ஒக்க வளரா நின்றுள்ள. 1.10.1-24.

ஒக்கலை - இடை. என்னுடைய ஒக்கலையில் இருப்புக்கு ஆசைப் பட்டு ஓடிவந்து. பெரி.தி.1,8.1.

ஒசிதல் - வழிதல். நிரம்பின நீர் புறம்பு ஒசியாமல் அம்ருதம்படும் படி உள்ளுடையவும் கடைந்த ஸர்வேச்வரன். நான்.தி.49.

ஒட்டு* - உறவு; தொடர்பு. தமக்கு ஒட்டறச் சொல்லுகிறார். 4.10.2-36.

ஒட்டுதல் - இசைதல். போக ஒட்டுவாரோ? க.நு.சி. 6,பெரி.

ஒட்டு விடுதல் - பிரித்து எடுத்தல். பூமிப்பரப்பு அடங்க அண்ட பித்தியோடே புக்குச் சேர்ந்தத்தை ஒட்டு விடுவித்து எடுத்த. பெ.தி.8.1.4.

ஒடியெறிதல் - 1. வீழ்த்தல். தன் கண்ணாலே அவனை ஒடி யெறிந்து நமக்காக்கித் தருமவளிறே. 9.8.2-24.

ஒடுக்குமாடு - கவர்ந்த செல்வம். இங்கே வந்து கொண்டு போன நாணும் நிறையுமான ஒடுக்குமாட்டைப் பாரித்துக்கொண்டு. 5.3.9-36.

ஒப்பிக்குமவர் - அலங்காரம் செய்வோர். அத்தை யழித்து ஒப்பிக்குமவர் அஸந்நிதியாலே ஒப்பனை அழிந்தாள் 2.1.6-36.

ஒப்பித்தல் - அலங்கரித்தல். ஹிரண்யனுடைய மார்பைப் பிளந்து குடல் மாலையை ஒப்பித்த அநந்தரம். பெ.தி.1.2.4.

ஒருக்கடுத்தல் - ஒருக்கடித்தல்; ஒருபக்கம் செல்லல். வாத விகாரத்தாலே வாயானது ஒருக்கடுத்து வலிக்க. பெ.தி. 4.5.9.

ஒருக்குதல் - சேர்த்தல். செந்நெல் தலையாய், அத்தை வரம் பிலே ஒருக்கி அரிகிறவர்கள் என்னுதல். பெ.தி.3.5.4.

ஒருங்க - ஒருபடிப்பட, பொருந்த. ஒருங்க - ஒருபடிப்பட. 5.8.8-24.

ஒருங்கவிடுதல் - ஒருசேரவிடுதல். அவற்றை ஒருங்கவிட்டு. தி.நெ.தா.17.

ஒருச்சரித்தல் - ஒருபக்கம் சாய்த்தல், சிறிது திறத்தல். எம்பார் கதவை ஒருச்சரித்து. 10.8.3-36.

ஒருத்தர் - ஒருவர். ஒருத்தரை ஒருத்தர் அறியாமல் கொடுக்கிற் செய்வது என். பெரி.தி.4.5.3.

ஒருதலை - 1. ஒரு பக்கம். ஒருதலை களிக்க, ஒருதலை துடிக்க. 6.1.4-36; 2. நிச்சயம். ஆச்ரிதர் ஒருதலையானால். தி.மா.28.

ஒருதலைத்தல் - ஒருமித்தல். மணியும் மந்த்ரமும் ஔஷதமும் நாட்டுக்கு வெவ்வேறிறே. இங்கு எல்லாம் ஒருதலைத்த விஷயம். பெரி.தி.5.3.6.

ஒருப்பாடு - முயற்சி; செயல். என்னுடைய மகளுடைய ஒருப்பாடுகள். 5.6.9-9.

ஒருபடிப்படுதல் - ஒரே விதமாக இருத்தல். ஸம்ச்லேஷவிச்லேஷங்களில் ஒருபடிப்பட்டிருக்குமவனை. 6.8.4-36.

ஒருவக் கிடத்தல் - தனிக்கிடந்து வருந்தல். என்னுடைய ப்ராப்தி ப்ரதிபந்தமேயோ இங்ஙனே ஒருவக்கிடந்து போவது என்னா நின்றாள். பெ.தி.8.1.2.

ஒருவிசை - ஒரு தடவை. ஒரு விசை பதினோராயிரமாண்டு இருந்தோம். 3.2.5-36.

ஒரோ* - ஒவ்வொரு. ஒரோ இடங்களிலேயிருந்தும், ஒரோ இடங்களிலே நின்றும். 5.2.4- 36.

ஒலியல் - மேலாடை. நாலிரண்டு ஒலியல்கொண்டு பரிமாற வேண்டும்படியாயிற்று கண்ணநீர் வெள்ளமிடும்படி. தி.வி. 99.

ஒலியன் - பூமாலை அல்லது ஆடை. ஒலியன் பணி மாறுதல், சாமரம் இரட்டுதல் அடைக்காய் திருத்தல்...தொடக்கமானவை. பாவை, 29-6.

ஒழுக்கு - தொடர்ச்சி. ஒழுக்கறாமல் நடக்கையாலே. க.நு.சி. 8, அழகு.

ஒழுகு - கணக்கு. நாடு பிடித்தார்க்கு ஒழுகைக் காட்டி(க்) குட்டமும் திடரும் மணலும் மடையுமாக எழுதி வெறும் பாழாக்கிக் காட்டுவாரைப் போலே. தி.மா.4.

ஒறுவாதல் - குறையுடையதாதல். தன் கார்யம் ஒறுவாமன்றோ. 1.4.5-24.

ஒன்பதின்கால் - ஒன்பதுமுறை. ஒருகால் புக்காப் போலே ஒன்பதின்கால் புகுந்து திரிந்தான். அம.6, அழகு.

ஒக்கம்* - உயரம். ஒக்கத்தையுடைத்தாய்ச் சோலை செய்து நின்ற குருந்தை முறிந்ததும். 6.4.6-36.

ஒக்கி வைத்தல் - ஆக்கி வைத்தல். தன்னை எனக்காக ஒக்கி வைத்த க்ருஷ்ணனுக்கு. 6.7 9-36.

ஒசழக்கு* - 1. எளிதாக (லகுவாக). தாய்மார் பிள்ளைகளை ஒசழக்காக எடுக்குமா போலே. 1.9.5-24. 2. தளர்த்தியாக. ஒசழக்காக மயிரை விரித்துப் பொகட்டபடியென்? என்று அதிலே வித்தனாயிருக்கும். தி.மா.33.

ஒத்து - 1. வேதம். ப்ராஹ்மணரைப் போலே ஒத்துச் சொல்லித் திரியும். பாவை, 11-6. 2. அத்தியாயம். கீதை பதினெட்டோத்திலும் நெறியெல்லாம் எடுத்து உரைக்க. அம.9, அழகு. அர்ஜுநனுக்குப் பதினெட்டு ஒத்திலும். பெ.தி. 1.1.4.

ஓம் - சரி; ஆம். ஓம், அது செய்கிறேன். 6.2.1-36.

ஓய்ஞ்சு - ஓய்ந்து என்பதன் சிதைவு. வெண்கல த்வநி போலே ஓய்ஞ்சு செல்லா நின்றது. 7.2.4-24.

ஓரம் - ஒரு பக்க அன்பு. ஆச்ரிதர் பக்கல் நீ பண்ணியிருக்கும் ஓரங்களை வெளியிட்டும். 5.10.1-24.

ஓலக்கம் * - அவை. ஓலக்கத்திலே சொன்னான். 3.10.4-24.

ஓலைப்புறம் - 1. ஏடு. இதுதான் ஓலைப்புறத்திலே கேட்டுப் போமித்தனை. தி.மா.3. 2. ஓலையில் எழுதிய கட்டளை. ஓலைப் புறத்தில் செல்லாத தேசத்திலே எடுத்துவிடும் ராஜாக்களைப் போலே. தி.மா.0.

ஓவுதல் - 1. நீங்குதல். வந்திடாய் என்கிற இதுதானும் ஓவிற்று. 7.2.4-24. 2. அறுதல். ஸ்ரீகஜேந்த்ராழ்வான் வ்யாபாரம் ஓவுந்தனையும் பார்த்து. பெ.தி.1.8.5.

கசம் - கயம்; குளம். அராக்கசமான சுனைகளிலே. 6.10.2-12.

கட்டக் குடியன் - தொல்லைப்படுகின்ற குடும்பி. அத்தைப் பொறுத்து ஆச்ரயித்தாலும் கட்டக் குடியன், அப்ராப்த ஸ்தலம். நான்.தி.53.

கட்டடங்க * - முற்றிலும். ஆகையாலே கட்டடங்க விடுங்கோள் என்கிறார். 1.2.1-36.

கட்டளை * - 1. ஒழுங்கு. கட்டளைப்பட்டு லக்ஷணோபேதமாய் இனிதான கவிகளை. 7.9.5-36. 2. முறைமை. இவன் ஆடின கட்டளை. பெரி.தி.2.7.6. 3. எல்லை. கழுத்தே கட்டளையாக நீரைப் பருகி வருகிற மேகங்கள். பெ.தி.2.1.10. 4. பணியழகு; அதாவது வேலைப்பாடு. கட்டளைப்பட்டு "நான்மாடக்கூடல்" என்னும் பேரையுடைத்தாய் இருக்கும் மதுரைக்கு நிர்வாஹகனாய். பெரி.தி.4.2.7.

கட்டுக் குலைதல் - சிதைதல். கற்பும் மடமும் கட்டுக் குலையா நின்றாள். 2.4.3-1?.

கட்டுக்கொலைதல் - கட்டுக்குலைதல் என்பதன் சிதைவு. சரீரம் கட்டுக் கொலைந்து தளர்ந்து. பெரி.தி.3.6.6;3.6.1.

கடக்கிடல் - கணக்கிடல். கறியமுதும் நெய்யமுதுமென்று கடக்கிட்டு. தி.வி.99.

கடகம் - பரிசை; கேடயம். அந்த சரவர்ஷத்தைத் தகைகைக்குக் கடகம் கோத்துப் பிடிக்குமவன் போலே. பெரி.தி.3.5.8.

கடகு - (ரக்ஷகம்) காப்பு. கடகு - ரக்ஷகம் என்பது பெ.தி.2.8.3 இன் அடிக்குறிப்பு.

கடமை - வரி. செய்த பயிருக்குக் கடமை இறுக்குமா போலே. 5.2.9-36.

கடவது - உரியது; தக்கது. இவையிரண்டும் ஜ்ஞாநம் பிறந்தார்க்குப் பேற்றளவும் அநுவர்த்திக்கக் கடவதாய் இருக்கும். 7.9.10-24. ஆழக் கடவ கல்லைக்கொண்டு நீரிலே அணைகட்டினவன். நான்.தி.77.

கடவார் - உரியவர். அதுக்குக் கடவாரைக் கேளிகோள். 2.6.8-36.

கடிப்பித்தல் - நீக்குதல். துர்க்கடங்களேயாகிலும் கடிப்பிக்க வல்லவன் திருவடிகளை. 10.1.1-9.

கடுக * - விரைவாக. கடுகக் கால்வாங்கிப் போகப் பாராதே கிடாய். 10.6.5-36.

கடுப்பு - விரைவு. மலையை எடுத்த கடுப்பைச் சொல்லிற்று. 7.4.10-9.

கடுமை - வேகம். ஹிரண்யனுடலைப் பிளந்துகொடு புறப்பட்ட போதைக் கடுமை. 7.6.11-36.

கடைச்செறி - ஒருவகை மோதிரம். ராஜபுத்ரர்கள் கையிற் கடைச்செறிக்குத் தோற்பாரைப் போலே. தி.வி.12.

கடையா - கொடிய பசு. கடையாவும் சுழிகோலும் கையிலே பிடித்த கண்ணிக்கயிறும்...பாவை, 28-6.

கடையீடு - கடையனான கணக்கனது ஓலை. திருமுகம் மறுத்தவன் கடையீட்டுக்குக் கேட்கப் புகுகிறானோ? 1.4.4-36.

கண்காட்டி - ஆட்சியாளன்; நிர்வாஹகன். தேவர்கள் தங்களுக்குக் கண்காட்டியான ப்ரஹ்மாவோடே சென்று ஆச்ரயிக்கும்படி. பெ.தி.1.2.8.

கண்குழிவு - வருத்தம். பிறர் கண்குழிவு காணமாட்டாத துர்ப்பலைகாண். 6.10.10-36.

கண்செறியிடல் - மறைத்தல். ஆகாசத்தைத் கண்செறியிட்டாற் போலே யிருக்கை. 5.9.1-36. பொய்கையைக் கண்செறியிட்ட தாமரை போலே. 9.2.3-36.

கண்டகர் - பகைவர். நலிகிற ராவணாதி கண்டகரை 7.5.2-36.

கண்டசர்க்கரை - கற்கண்டு. சேர்ப்பாலும் கண்ட சர்க்கரையும் சேர்ந்தாப்போலே ஒன்றுக் கொன்று ரஸாவஹமாய்ச் சேர்ந்து. பெரி.தி.4.8.8.

கண்ணநீர் * - கண்ணீர். கண்ண நீர் தாங்கி வாழ்ந்திடுக. 2.1.5-36.

கண்ணழிவு * - 1. குறைவு. ஏதேனும் கண்ணழிவுண்டோ. 1.7.6-36. கண்ணழிவற்ற அழகையும் குணங்களையும் அனுபவித்தார். திருவா.1. 2. தாமதம். இவள் படியையும் பார்த்து அவன் படியையும் பார்த்தால் பேற்றுக்குக் கண்ணழிவில்லையாய் இருந்தது. தி.வி.33.

கண்ணறையன் - அருளற்றவன். கண்ணறையனாய் இரா நின்றாய் என்னுதல். 7.2.4.

கண்ணிக்கயிறு - குறுகிய கயிறு. கண்ணிக்கயிறும், கற்றுத்தூளி யாலே தூஸரிதமான திருக்குழலும். பாவை, 28-6.

கண்ணெச்சில் - பார்வைக்குற்றம். நரஸிம்ஹத்தினுடைய அழகைக் கண்டு கண்ணெச்சில் படுவார் இல்லை என்னு மத்தைப் பற்ற. பெ.தி.1.7.4,

கண்முகப்பு - கண்முன்பு. கண்முகப்பே...தி.மா.11.

கண்வட்டம் * - கண்முன்பு. நீயுங்கூட என் கண்வட்டத்திலே உலாவித் திரிய வேணும் என்கிறாள். 10.3.8-9.

கண்வளர்தல் - உறங்குதல். கண்வளர்ந்தருளினவனே. 5.8.4-12.

கணக்கு - மைத்துனமை முறை. கணக்காலே அம்பாலே பூசல் செய்யலாம் ஜந்மமன்றே. அஜ்ஜாதிக் கடைத்த வெற்றியைக் கொண்டானாயிற்று. பெ.தி.2.2.4.

கணயம் - கோட்டை. கணயத்துக்குள்ளே இருக்கிற நாமோ அஞ்சுவோம். தி.நெ தா.21,பட்டர்.

கணிசம் - எண்ணம், நோக்கம். கணிசம் அவ்வளவல்லாமை யாலே. 7.4.1-36.

கணிசிக்கை * - சிந்திக்கை. விரஹச்ரமஹரமான மார்வு தன்னைக் கணிசிக்கை. பெ.மடல், கண்ணி,74.

கணையம் - கோட்டை. கணையத்துக்குள்ளே இருப்பார். 5.4.7-36.

கதிரில்லி - நுண்துளை. கதிரில்லி போலே இருக்கிற பாஹ்யேந்த்ரியங்களாலே. நா.தி. 62.

கப்படம் - அழுக்குத்துணி. கழுத்திலும் கப்படங் கட்டி. 6.10.8-36.

கப்புக்கால் - பக்க பலமாகத் தரப்படும் ஊன்றுகோல். இரண்டு அருகும் கப்புக்கால் கொடுக்க வேண்டும்படியிறே இருப்பது. பெ.தி. 1.3.2.

கமர் - வெப்பம். கமர் பிளந்த இடத்தே ஒரு பாட்டம் மழை விழுந்தாப் போலே இருக்கை. 3.7.4-36.

கரைச்சல் - அச்சம். கரைச்சல்கெட்டு மார்பிலே கைவைத்து உறங்கப் புக்கார். தி.ப. 1.

கரைதல் - வருந்துதல். நீ ஒன்றுக்கும் கரையாதே, உன் ஸர்வ பரத்தையும் என் தலையிலே ஸமர்ப்பித்து நிர்ப்பரனாயிரு. நா.தி. 11-10.

கருவூலம் - திருவாபரணங்களிட்டு வைக்கும் அறை; ஸ்ரீபண்டாரம் என்றபடி. பழைய நெஞ்சைத் திருத்தின அளவு அன்றிக்கே, கருவூலத்திலே ஒரு நெஞ்சைத் தந்தாய். 2.7.7-36.

கலசப்பானை - நீர்கொண்டு வரும் சொம்பு. கலசப்பானை எடுப்பார்க்குக் கூச வேணுமோ? தி.நெ.தா 3.

கலசல் - கலத்தல். உன்னை உபாயாந்தரங்கள் கலசமாமே நெஞ்சிலே விளங்கும்படியாக அத்யவஸித்து. தி.மா. 40. நடுநடுவே கலசிக்கோத்த. பெரி.தி. 1.3.2.

கலம்பகன்* - பல்வேறு பூக்களால் ஆகிய மாலை. கலம்பகனல்லது தனிப்பூச்சூட்டப் பொறாத குழலைப் புஷ்பங்கொண்டு அலங்கரிக்கிறிலள். பெ.தி. 2.7.2.

கலவி* - கூட்டம். இப்படியுள்ள கலவியாலே என்னை அடிமை கொண்டவனே. 2.6.8-9.

கலவிருக்கை* - பொருந்தியிருக்கும் நிலையான இடம். ஸ்ரீவைகுண்டத்தைக் கலவிருக்கையாக உடையவன். 1.5.4-36.

கலிக்கட்டு - குஞ்சி என்பது அடிக்குறிப்பு. திரண்ட கட்டு எனல் தகும். இவள் குழலை வாரியெடுத்துப் பிடித்துக் கலிக்கட்டாகக் கட்ட என்று புக்கால் அதுக்குப் பிடி கொடாது. பெ.தி. 8.2.9.

கலித்தனம் - பசியனாகை. அடிமையில் கலித்தனமிருக்கிறபடி. பெ.தி. 9.3.8.

கலியர்* - பசியர். கலியர் சோற்றை வர்ணிக்குமா போலே. பாவை, 18-6.

கவட்டித்தல் - தாவுதல். தாவி - கவட்டித்து. 6.5.3-12.

கவிபாட்டுண்கிறவன் - கவியால் பாடப்படுபவன். கவி பாடுகிறவனுக்கும் கவிபாட்டுண்கிறவனுக்கும், கவிக்கும் குற்றமாகிற ஏதமில்லாதபடியிருக்கிற ஆயிரத்தில். 1.6.11-9.

கழகம் - 1. ஓலக்கம். திருக்குரவைக்கு முற்சாமமாகப் பெண்களோடே கழகமிருந்த இருப்பாதல். 5.10.6-36. 2. கூடியிருத்தல். அப்ஸரஸ்ஸுக்களோடே கழகமிருந்து. 6.4.1-36.

கழஞ்சு - ஒரு நிறுத்தல் அளவை. கழஞ்சு பொன்னுண்டு என்று அறிந்து. இ.தி. 33.

கழனிக்கட்டளை - வயல்ஒழுங்கு. அழகிய கழனிக்கட்டளையும் கண்டநுபவிக்க வேண்டும்படி நிரதிசய போக்யமாய் இருந்துள்ள தேசம். பெரி.தி. 4.4.9.

கழனிமிண்டர் - நன்றி கொன்ற பாவிகள். பாகவதர் அருகே கழனிமிண்டர்இருந்தால் அஸஹ்யமாய் இருக்குமா போலே. சி.மடல், கண்ணி, 33.

கழிப்பன் - கழிக்கப்படுவது. புருஷார்த்தத்தைப் பற்றக் கழிப்பன் ஆகிறது. 8.10.3-36.

கழிய - மிகவும். தீரக்கழிய அபராதம் பண்ணின பின்பு. பெரி.தி. 3.10.0.

கள்ளன் - திருடன். விடில் கள்ளனாகையாலே ஓடிப்போம். க.நு.சி. 1, நஞ்சீயர். கள்ளர் - திருடர். கள்ளர்பட்டது படுவதே. பாவை, 25-6.

களிப்பு - மிகுதி. 'ஈச்வரன் ஒருவன் உளன்' என்று அவனுடைய ஸத்பாவத்தை இசையாது ஒழிகைக்கு ஹேது உடம்பு தடித்து ருதிரக் களிப்பாலே ஆயிற்று. பெ.தி. 1.2.4.

களிறு - ஆண்யானை. பிடியை இழந்ததொரு களிறு தன் ஆற்றாமையாலே அமணானைப்பட்டுத் திரியுமா போலே. தி.வி. 15.

கறியமுது - சமைக்கப்பட்ட காய்கறி. கறியமுதும் நெய்யமுதும் என்று கடக்கிட்டு. தி.வி. 99.

கறைச்சீரை - அழுக்குக்கந்தை. குப்பை கிளறினால் உள் மறைந்து கிடக்கிற கறைச்சீரை முதலாயுள்ளவையிறே வெளிப்படுவது. 3.9.5-36.

கனக்க - மிகவும். கனக்க நோவுபட்டு. பெரி.தி. 3.9.5.

கனவிது - கனமானது. கனவிதான காதுப்பணியை உடைய. பெரி.தி. 1.2.12.

கனவியது - கனமானது. மோக்ஷத்தைப் பெறுகைக்கு அடியாய் இருப்பதொரு கனவியதொன்று சேதநன் தலையில் கிடக்க வற்றோ? 7.2.2-24.

காக்கைப்பொன் - பொம்மைமீது ஒட்டும் பளபளப்பான தாள். ஒருவன் ஒரு குழமணனைப் பண்ணி அதின் கழுத்திலே காக்கைப் பொன்னைத் தொற்றி. 3.1.10-36.

காட்டழைப்பு - முகங்காட்டுவதற்காகச் செய்யும் அழைப்பு. அத்தேவதைகளை ஆச்ரயிக்கைக்காகப் பண்ணும் வ்யாபார மாகிற காட்டழைப்பும் அவன் நெகிழ்ந்தபோது ஒழியும்- முடியும். நான்.தி. 38.

காடிச்சால் மூலை - வடகிழக்குத்திசை. எம்பெருமானார் காடிச்சால் மூலையில் தேவதையை ஆச்ரயித்தாராகில் அதுவே எங்களுக்கு ஆச்ரயணீய வஸ்து. க.நு.சி. 1,பெரி.

காணியாளல் - நிலத்தை ஆளுதல். அவ்வூரிலே சென்று காணி யாள வேண்டும்படியான. தி.மா. 29.

காதுப்பணி - காதணி. இவர்களுடைய காதுப்பணியும் செவிப் பூவும் பட்ட விமர்த்தத்தாலே. பாவை, 27-6.

காரியப்பாடு - செயல். ஒரு காரியப்பாடு இல்லாமையாலே நாலுபாடும் பேருகிறபடி. பாவை, 23-3.

காருகால் - இந்தளம்; நெருப்பு. காருகாலிலே கருமுகை பூத்தாற் போல. பெ.தி. 3.6.7.

கால்கடியர் - ஆற்றலுள்ளவர். இப்பங்களத்தை விட்டுக் கால் கடியரானவர்கள் ஏத்தப் புக்கால் எல்லை காணப் போமோ? 3.1.7-36.

கால்காணித் தெய்வம் - வேறு சிறு தெய்வம். அவனையொழியப் புறம்பே கால்காணித் தெய்வம் உடையோமோ நாம்? திருவா. 7.

கால்பிடித்தல் - வேண்டுதல். எல்லோரையும் ஒக்கல் கால் பிடிக்கிறார். 3.9.1-24.

கால்வாங்குதல் - மீளுதல். பொய்யிலே வ்யவஸிதராய் நின்ற நிலையில் நின்று கால்வாங்கிய நாம். தி.மா. 15.

காவணம் - பந்தல். பாடுவார்க்குக் காவணமிட்டுக் கொடுப் பாரைப் போலே. பெ.தி.3.8.1.

காற்கடை - காலடி. அப்ராப்த விஷயங்களின் காற்கடையிலே. பெரி.தி. 5.4.7.

காற்ற - 1. மீட்க. இரும்புண்ட நீரானது காற்றவொண் ணாதாப் போலே. 10.10.5-24. காற்றப் போகாத நஞ்சானவனை. 2.3.6-24. 2. தணிக்க. நம்முடைய பாபங் களுக்குக் காற்ற ஒண்ணாத நஞ்சு. பெ.தி. 1.1.10.

கிட்டம் - உலோகத்துண்டு. அருகில் என்று பொருள்படும் பேச்சு வழக்காகக் கொள்ளலாம். இரண்டு கிட்டம் தன்னிலே சேரக் கிடக்க அதிலே யொன்று பொன்னாயிருக்குமா போலே. 5.1.0-36. இதன் எதிர்ப்பதம் எட்டம் (நீளம்).

கிடக்கிடும் - கிடக்கட்டும். அது கிடக்கிடும் உன் மகள்தான் இவ் ஈடுபாடுகள் தானே பொறுக்கக்ஷமையோ என்ன; இவற்றுக்கு இளைக்குமவளோ இவள் என்கிறாள். பெ.தி.8.2.7.

கிடங்கு - வெற்றிலைக் கொடிக்கால்; நீர்நிலை. படர்ந்த இலைகளை யுடைத்தான தெங்குகள் கிடங்கின் கரையிலே நிற்கும். பெ.தி.5.2.8. குறிப்புரையில் வெற்றிலைக் கொடிக்கால் என்று பொருள் காணப்பட்டாலும் பாட்டினை நோக்கும்போது நீர்நிலை என்பதே சரியான பொருளாகத் தோன்றுகிறது.

கிடை - கிடத்தல்; அதாவது படுத்திருத்தல். ஆர்த்த ரக்ஷணத்துக் காகவிறே இக்கிடை. பாவை,3-6. 2. வேதம் ஓதுமிடம். ஒரு கிடையிலே பல பிள்ளைகள் ஓதா நின்றால். பாவை, 10-6.

கிடைப்பாடு - கிடக்கை. நாயகன் பக்கலிலே அபிலாஷை சென்ற அளவிலே நெஞ்சில் கிடைப்பாடுஞ் சொல்லுகைக்கும் அவனைக் கிட்டுவிக்கைக்கும் துணையானாய். தி.நெ.தா. 21, பட்டர்.

கிடையழகு - கிடக்கும் அழகு. தன் கிடையழகைக்காட்டி ரக்ஷித்தான். அம. 9, அழகு.

கிண்ணகம்* - வெள்ளம். கிண்ணகம் பெருகாநின்றால் ஆறுகளும் கால்வாய்களுங் குளங்களும் நிறைந்து ஸமுத்ரத்திலுங் குறைவற்றுப் புகுமோபாதி. தி.வி.2.

கிலாம் - ஊடற் காலத்துக் கோபம். பாட்டுத்தோறும் கிலாம் தோற்றச் சொல்லுகிறாள் என்று பட்டர் அருளிச் செய்யும்படி. 6.1.1-36.

கிலாய்க்கை* - வெறுத்தல். தனிமையைப் பார்த்துக் கிலாய்க்கையும்...ஆத்ம தர்மமிறே. தி.நெ.தா.9.

கிழாயார் - பெரிய மனிதர். கிழாயார் படுகிறது இதுவானால் நான் உன்னை அறிகை என்று ஒரு பொருள் உண்டோ? திருவெழு. அடி, 21.

கிழார் கிழார் - மிகப் பெரியவர். எத்தனையேனும் கிழார் கிழார்க்கும் அதுவல்லது வலிய புகலில்லை. 6.3.7-36.

கிழிச்சீரை - பணம் வைத்திருக்கும் துணிமுடிப்பு. முன்பு தோற்றினவற்றைப் பறித்துக்கொண்டு பின்பிறே கிழிச்சீரை யறுத்துக் கொள்வது. 5.3.2-36.

கிளப்பம்* - கிளர்ச்சி. திரைக்கிளப்பத்தை யுடைத்தான கடலில். பெரி.தி.1.3.6.

கிளர்த்தி* - கிளர்ச்சி. தாயும் தகப்பனுஞ் சேரவிருக்க ஸம்வதியாதபடியிறே அவனுடைய கிளர்த்தி. 2.4.10-24.

கிளவி - பேச்சு. நலம் பாராட்டு என்பதொரு கிளவியாய் அவளைக் கொண்டாடுகிறான். தி.வி.55.

கிளற்றி - கிளர்ச்சி. பெரிய கிளற்றியோடே. பெ.தி.10.6.3.

கிற்றல் - சாதித்தல்; வற்புறுத்திச் சொல்லல். நீ கிற்ற நினைத்த இன்மை காட்ட வொண்ணாதாப் போலே. 1.1.9-9.

கினிய - விழுங்க; கபளீகரிக்க. ஒரு மேருவைக் கினிய ஒரு மேகம். 3.10.1-24. ஒரு மேருவைக் கினிய காளமேகம் படிந்தாற்(ர்) போலே. 3.8.1-36. கினிய என்பது குனிய என்பதன் பிழை பட்ட வடிவம் என்று தோற்றுகிறது.

கீசகம் - தலைக்கட்டு. கர்ணன் விட்ட ஸர்ப்பசிரஸ்ஸூப்போலே கீசகத்தோடே போக்குமென்னுதல். தி.மா.40.

கீண்ட - கிழித்த. கேசியை நெடிக்கோரையைக் கீண்டாற்போலே கீண்டு. மு.தி.27.

கீர்த்தித்தல் - பரக்கச் சொல்லல். தம்முடைய வ்ருத்திஇருந்தபடி அடையக் கீர்த்தித்தாரிறே முன்பே. பெ தி.1.6.9.

கீழாண்டைச்சிகை - பழங்கணக்குகளிலே இருக்கிற பாக்கி. கீழாண்டைச் சிகையாயிற்றுக் கணக்கிடுகிறது. 1.4.7-24.

கீழுற்றை - கீழ் உள்ளது. இது மேலுற்றைக்கிட்ட மர்யாதையோ! கீழுற்றைக்கும் ஏதேனுமுண்டோ. 5.7.3-36.

கீழோலை - மறைமுகமாக அனுப்பும் ஓலை (ரகசிய ஓலை). அராஜகமான தேசத்தில் வன்னியர் அடையத் தங்களிலே கைசெய்து கீழோலைவிட்டு நாலுவாசலையும் வந்து பற்றுமா போலே. பெ.தி.9.5.1.

குச்சி - திறவுகோல் துவாரம். மேகமானது மின்னாகிற கை விளக்கைக் கொண்டு குச்சிவழியே புக்குத் திருவாராதநம் பண்ண இருக்கின்ற ஆச்சர்யபூதனை. பெ.மடல், கண்ணி, 124.

குசவன் - குயவன். குசவனையும் புறமடக்கியையும் போலே. திருவா.7.

குசாண்டு - மிறுக்கு. சேதநனுடைய நன்மை தீமைகளைக் கணக்கிட்டுப் படிவைக்கும் குசாண்டுள்ள ஈச்வரகோஷ்டி. பாவை, 4-3.

குஞ்சித்தல் - மடங்குதல். நடந்த போதைக் குஞ்சித்த திருவடி களில் வீரக் கழலுக்கும் அகவாயில் சிவப்பையுங் கண்டு காப்பிடுகிறார்கள். பாவை, 24-6.

குட்டம் - குழி. துர்மாநம் கிடந்த இடத்தைக் குட்டமிட்டு இடந் தான் காணும். 10.6.4-36.

குடல்துடக்கு* - உடல் தொடர்பு. குடல் துடக்கையுடையவனே. 4.9.2-36.

குடல்தொடக்கு - உடல்தொடர்பு. இழவுபேறு தம்மதாம்படி யான குடல்தொடக்கு உண்டாயிருக்க, குற்றத்தைக் கணக்கு இட்டது அமையாதோ. 1.4.7-24.

குடிக்காடு - ஊர். ஐந்து குடிக்காடு அமையும். 8.5.8-36.

குடிநீர் - கஷாயம். நோவு மிக்கதனையும் நாலைந்து குடிநீரெழக் குடிக்குமாப்போலே. பாவை, 5-6.

குணாலையிடல் - கூத்தாடுதல். ஒரு கோவையாகக் கூடிக் குணாலையிட்டுத் திரியுங்கோள். பெரி.தி.4.6.9.

குணுங்குநாற்றம் - முடைநாற்றம். இன்றும் அகப்பட அந்தக் குணுங்குநாற்றம் வாயிலே தோன்றும்படியிறே பெரிய பெருமாள் கண்வளர்ந்தருளுவது. அம.10, அழகு.

குதறல் - அதிகமாதல். வ்யாமோஹத்தாலே குதறிச் சிவந்த கண்களை உடையவனே. தி.மா.35.

குதை - முயற்சி, சீற்றம். குதை மாறுகிறிலன். 5.1.10-36. சீறா எரியும் - இவை முடிந்துபோகச் செய்தேயும் கொண்ட குதை மாறாதே, இரை பெறாப் பாம்புபோலே ஜ்வலியாநிற்கும். 6.10.2-36.

குந்தாலி - மண்வெட்டி. அதன் (கங்கையின்) கரையிலே குந்தாலி கொண்டு கிணறு கல்லித் தன் விடாய்க்கு உதவ நாக்கு நனைக்க இருக்குமா போலே. 4.10.1-36.

குந்தியடியிடல் - உட்கார்ந்து அடியிடல். சேதந த்வாரா குந்தியடியிட்டு நிற்குமவனிறே அவன். 10.7.3-36.

குமிழ்த்தல் - முகுளித்தல்; குமிழிபோலே ஆதல். இரண்டு கடைவாயையும் குவித்து ஊதுகிறபோது சிவந்த திருப்பவள மானது அகவாயில் உண்டான வாயுவினுடைய பூரிப்பாலே குமிழ்க்க. பெரி.தி.3.6.8.

குருச்சி - ஊர். குறிச்சி என்பதன் சிதைவு. சேதநரிலே ஒரு குருச்சியில் பிறவாதார் இல்லையிறே. தி.மா.29.

குருவிந்தக்கல் - காவிக்கல். குருவிந்தக்கல்லை மாணிக்கமென்று நினைத்திருந்தால் ரத்நமாகாதிறே. இ.தி.44.

குலைசெய்தல் - கரைகட்டல். காவேரி... பெருவெள்ளமாக நீரைக் கொண்டு வந்து சிலர்க்குக் குலைசெய்து தகைய வொண்ணாதபடி ஸர்வோதிக்கமாகப் பாயாநிற்கும். தி.மா.24.

குவால் * - மிகுதி. இத்தையே குவாலாகக் கொண்டு. 2.7.3-36

குழமணன் - மரப்பாச்சி. ஒரு குழமணனைப் பண்ணி. 7.5.4-36 எங்கள் குழமணன் கொண்டு அடிக்கழிவு செய்தால்... 6.2.6 - 9.

குழைச்சரக்கு * - குழையென்று பையாய், பையில் சரக்குப் போலே ரக்ஷ்யம் (பாதுகாக்கப்படுவது) என்றபடி என்பது பெ.தி.1.5.1 அடிக்குறிப்பு. ஆற்றலற்ற பொருள். பெரிய திருவடியும் குழைச்சரக்காம்படிகாண் போன கடுமை இருக்கிறபடி. தி.நெ.தா.23. நீ ரக்ஷகையாக, நாங்கள் உனக்குக் குழைச்சரக்கானபடி அழகிதாயிருக்கிறது. பாவை, 10-3.

குழைசரக்கு - மென்மையான பாதுகாக்கப்பட வேண்டிய பொருள். குழை சரக்கு அறுத்துக்கொண்டு போனபடி. 6.7.0-36.

குளப்படி - மாட்டின் குளம்புபட்ட அடிச்சுவடு. குளப்படியிலே கடலை மடுத்தாற்போலே. 6.2.6-36.

குளித்தல் - மூழ்குதல். இலக்கான ஆனையிலேபட்டு உள்ளே குளித்தது என்கிறான். தி.வி.22.

குளிர்த்தி * - குளிர்ச்சி. அக்குளிர்த்திக்கு அடியான உள்ளில் வாசத் தடம் இருக்கிறபடி. 9.7.3-36.

குளிரடியுண்ணல் - குளிரால் வருந்துதல். அவர்கள் குளிரடி யுண்கிற தசையிலே ரக்ஷித்தவன். 3.3 8-24.

குறந்திடல் - வார்த்தல். புண்ணிலே புளியைக் குறந்திட்டால் கரிக்குமா போலே. பெரி.தி.2.9.1.

குறள்கயிறு - குறுகிய கயிறு. இவன் அகப்பட்ட அப்போதாக ஒரு நெடுங்கயிறு தேடப்போகாதே, பல பிணைகளையுடைய குறள்கயிற்றாலே. பெரி.தி.11.5.5.

குறளர் - குறுகிய வடிவினர். கூனர் குறளர் ஸஞ்சரிக்குமா போலே. தி.நெ.தா.6.

குறிச்சி - ஊர். இருக்கைக்கு ஒரு குறிச்சியுங் கொடோம். 6.6.4-36.

குறியழிதல் - வேறுபாடு உறுதல். குறியழியாத முலை படைத்தவர்கள். சி.மடல், கண்ணி, 13.

குறுணி - ஒரு மரக்கால் குனியக் குறுணி பற்றுங் காலமெல்லாம் வ்யர்த்தமே இருந்தேன். பெ.திருவந்.82.

குறுந்தெரு - சிறுதெரு. குறுந்தெருவோடு நெடுந்தெருவோடு வாசியறச் செங்கழுநீரின் பரிமளம் பரக்கிறபடி. 9.6.1-24.

குறை - செய்யவேண்டுவது. நீர் கிட்டி அநுபவிக்கும் அதுவே குறையாக நாம் வந்திருந்தோமே? பெ.தி.1.7.0.

குன்றிச்சூடு - குன்றிமணியின் உச்சி. சிறு ப்ரஜை 'குன்றிச்சூடு' என்று நெருப்பிலே கைவைக்குமாபோலே. 9.1.3-36.

கூட்டரவு * - கூட்டம், கலப்பு. இனி விச்லேஷவ்யஸநம் பிறவாத கூட்டரவாக வேணும். பாவை, 27-6.

கூடு - உடம்பு. இவளைக் கூட்டோடே கொடுத்து. 4.9.3-36.

கூர்க்கப்பார்த்தல் - கூர்ந்து பார்த்தல். தன்னைக் கூர்க்கப் பார்த்துக்கொண்டு நின்றவர்களை ஸம்போதிக்கிறாள். சி. மடல், கண்ணி, 25.

கூரியன் - கடியன். தன் செயலிலே நோக்காக இருப்பவன். கடியன் - கூரியன். 5.3.5-36.

கூழ்ப்பு - ஐயம். கூழ்ப்பை அறுத்துத்தந்த உபகாரத்தை உண்டறுக்கப் போமோ? தி.நெ.தா.2.

கூழைக்காது - நீட்சியில்லாத காது. 'கூழைக்காது சுணைக்காது' என்றாப் போலே சொல்லிச் சிரியாதபடியாக. பெரி.தி. 2.3.10.

கூறுசெய்வார் - மணியக்காரர். ராஜாக்கள் ஊர்தோறும் கூறு செய்வார்களை வைக்குமா போலே. 5.2.8-36.

கூறை - புத்தாடை. பின்னை கூறையுடுக்கையிறே அடைவு. பாவை, 27-6.

கூறைப்பை - ஆடை வைக்கும் பை. தானே கூறைப்பையும் சுமந்துகொண்டு. 4.1.2-36.

கூறையுடை - புடைவை. ஆருடைய கூறையுடை கண்டு உகக்கக் கடவ நெஞ்சு இதிலே அகப்பட்டது. அம. 2,அழகு.

கெடுவாய் * - வார்த்தைப்பாடு. கெடுவாய், அவ்வடிவு ஹேய ப்ரத்யநீகங் காண். 5.3.1-36.

கெடுவிகாள் - கெட்டுப்போகிறவர்களே! கெடுவிகாள். 1 3.7-36.

கேவலர் - கைவல்யப் பேற்றை விழைபவர். ஆத்மலாபத்துக்காக உபாஸிக்கிற கேவலர் வந்து தோற்ற. 8.3.2-36.

கேழ்வி - கேள்வி என்பதன் சிதைவு. கேழ்வியாலே அநுஸந்திக்கப் படுவதான. பெ.தி.2.5.9.

கைக்கூட்டம் - அணிவகுப்பு. கைக்கொண்டு - உடன்வந்திபோலே; கைக்கூட்டம் இட்டாப்போலே என்னவுமாம். கைக்கூட்டம் இட்டாப்போலே என்றது அணிவகுத்தாப் போலே என்றபடி என்பது அடிக்குறிப்பு. பெரி.தி.5.2.1.

கைக்கூட்டன் * - கூட்டாளி; உடன் சேர்ந்து இருப்பவன். ராஜபுத்ரனோடு வினையுண்ட கைக்கூட்டனுக்கும் பால்திரளை இடக்கடவதுகாண். திருவெழு. அடி, 13.

கைக்கூலி * - கைமேல் கூலி; கைக்கூலி கொடுத்துக்கொள்ள வேண்டும் நோய். தி.வி.53.

கைகழிதல் - 1. எல்லைகடந்து போதல். ஸம்ஸாரத்தில் கைகழிந்த ஆழ்வாரை. தி.மா.0. 2. நெடுத்தொலைவு விலகிச்செல்லல். கை நீட்டி எடுத்தாலும் எட்டாதபடி கைகழியப்போனேன். பெ.தி.1.1.1.

கைசெய்தல் - ஒன்று கூடுதல். அராஜக தேசத்தில் வன்னியர் அடையத் தங்களிலே கைசெய்து கீழோலை விட்டு நாலு வாசலையும் வந்து பற்றுமா போலே. பெ.தி.9.5.1.

கைத்தளை - கைவிலங்கு. கூறுசெய்த ஊரிலே கையும் கைத்தளையுமாய்த் திரிவாரைப் போலே. பெ.தி.1.5.8.

கைதவம் - பொய். ஆழ்வார் ப்ரபாவம் சொன்ன அது கைதவமன்று. க.நு.சி.10,அழகு.

கைதொடன் - 1. அருகில் இருப்பவன். ஆச்ரிதர் கைதொடனான என்னையுங் கண்டுகந்து நிற்கிறவனை. பெ.மடல், கண்ணி, 123. 2. தன்கையாலேசெய்பவன். "அத்தனையோ இன்னும் செய்தது உண்டோ?" என்ன, "கைதொடனாய்க் கொண்டு கொன்றே போந்தேன்" என்கிறார். பெ.தி.1.6.6.

கைதொடுமானம் - உதவி. இவன் ஸத்தை பெறுகையாவது - அவன் ப்ரீதிக்குக் கைதொடுமானமாகை. தி.மா.45.

கைப்பற்று -முயற்சி. இது தான்தோன்றியான கைப்பற்று அடியாக வந்தது ஒன்றல்ல. 9.4.9-36.

கைப்பாணி - மணியாசகம்; மெழுகும் பலகை. கைப்பாணியிட்டு மெழுக்கு வாசியிலே ப்ரமிக்கும்படி பண்ணின. 5.1.5-36.

கைப்புடை - திண்ணைப்பக்கம். ப்ரஸாதத்தைச் சூடிக் கைப்புடையிலே கிடப்பாரைப்போலே. 2.7.5-36.

கைம்முதல் - கைப்பொருள். கைம்முதல் அற்ற காலைக்கு ரக்ஷகனாவான் ஒருவன் வேணும் என்று. 9.1.4-36.

கையடைப்பு - அடக்கமானது; வசமானது; கட்டுப்பட்டது. நெஞ்சும் இவள் தனக்குக் கையடைப்பாகையாலே. 2.4.3-36.

கையிலான் - ஆற்றலற்றவன். தன்னுடைய ரக்ஷகத்வம் இழந்து கையிலான். பெ.தி.2.5.8.

கைவந்திருக்கை - நன்கு பயின்றிருக்கை. கைவந்திருக்கையாகிற. 1.3.3-6.

கைவாங்குதல் - சோர்தல். கடலைக்கடையப்புக்கு தேவஜாதி இளைத்துக் கைவாங்கின அளவிலே. 3.8.1-36.

கைவாரம் - கையழகைக் காட்டிக் கவர்தல்; வாரம் என்பதற்குக் குத்தகை என்பது நேரான பொருள். என்னை நோக்கிச் சில கைவாரங் கொள்ளத் துடங்கினார். தி.நெ.தா.21,பட்டர்.

கொட்டகம் - சிற்றில். சிறுசோற்றையும் கொட்டகத்தையும் அழித்திட்டு. பெ.தி. 2.8.2.

கொட்டில் - இல்லம். தன் கொட்டில் ஏறப் போனானிறே ராவணன். பாவை,21-6.

கொடுக்கு - முன்தானை. கொடுக்கும் கொய்சகமும் வைத்துடுக்கலாம்படியான அளவையுடைத்தாய். திருவா.1.

கொடுவைப்பசு - பொல்லாத பசு. கொடுவைப் பசுக்களை நியமித்துக் கறக்கைக்காக வீசுகோலைக் கையிலே கொண்டு திரியுமவர். 4.8.4-36.

கொண்டக்கோல் - கொண்டைக்கோல் என்பதன் சிதைவு. அர்ச்சாவதாரத்துக்குக் கொண்டக்கோல் நாட்டின தேசமிறே திருமலை. பெ.தி.8.2.6.

கொண்டாட்டம் - பாராட்டு. இவன் கொண்டாட்டத்தை 4.1.5-9.

கொண்டி - கொள்ளையடிக்கப்பட்ட பொருள். கொண்டி யோடே பிடித்துக்கொண்டு. பெ.தி.2.10.6.

கொண்டிதிரிதல் - பட்டிமேய்தல். கொண்டிதிரியும் பசுப்போலே. பெ.தி.1.6.2.

கொண்டைக்கோல் - 1. மேலே முடிச்சுப் பெற்ற கொம்பு. 2. ஆழத்தை அளத்தற்கு நீரில் நடும் கொம்பு. ருஷிகள் கொண்டைக்கோல் கொண்டு ஆடுகை தவிர்ந்து மயில்கள் ஆடப்புக்கன. அம.4,பெரி. ஆழங்காலிலே இழிந்து அமிழ்ந்துவார் அவ்விடத்தே கொண்டைக்கோல் நாட்டுமா போலே. 10.7.1-36.

கொத்து - இனம். ஒரு கொத்துக்கு ஒருவரைக் கொண்டு வருகை. 3.10.1-36.

கொத்தை* - குறை. கொற்றை என்பதன் பேச்சுவடிவம். உங்கள் அளவில் போமதல்ல. உங்கள் ஸந்தாநத்துக்கும் கொத்தை. 4.6.8-36.

கொதுகுலம் - மகிழ்ச்சி. பள்ளியோதும் பருவத்தில் ஏதேனும் சொல்லிலும் கொதுகுலமாயிறே இருப்பது. தி.வி.46.

கொல்லை - வரம்பழிந்தவள். அடியிலே இவள் கையில் மடலைக் கொடுத்துக் கொல்லையாக்கிப் புறப்படவிட்ட அந்நறையூரர் கார்யமே நன்றாய்த் தலைக்கட்டிற்றிறே என்கிறாள். பெ.தி. 8.2.2.

கொலைக்க - குலைக்க என்பதன் சிதைவு. நிற்கிற நிலையை ஒருவரால் கொலைக்க வொண்ணாதபடி. பெ.தி 5.6.2.

கொழுகொம்பு - தாங்கும்கொம்பு. பர்த்தாவாகிற கொழு கொம்பை யொழிய ஜீவியாமையும். பாவை,11-3.

கொள்கலம் - பாத்திரம். கல்யாண குணங்கள் சேருகைக்குக் கொள்கலமாய். 1.6.4-6.

கொள்கொடை - கொடுத்தல், கொள்ளல். அவ்வூரில் உள்ளா ரோடே ஒரு கொள்கொடையால் வரும் ஸம்பந்தமாதல். தி.மா.29.

கொளுந்துதல் - 1. ஊட்டுதல். நாற்றம் கொளுந்தினபடி. தி.ப.8. 2. பற்றுதல். பெருநெருப்புக் கொளுந்தி வெந்திட்டால், பெரி.தி.5.4.2.

கொற்றை - குறை. நம்முடைய ஜ்ஞாந வ்ருத்தஜந்மங்களி னுடைய கொற்றை பார்க்க வேண்டாவோ. மூ.தி. 78.

கொறுக்கோல் - கன்றுகளின் முகத்தில் கட்டும் கோல். முன்னணைக்கன்று பசுக்களோடே போனால் முலையுண்ணா மைக்குக் கொறுக்கோலென்று அதின் மூஞ்சியிலே கட்டி விடுவர்கள். 4.8.4-36.

கோகுள் இலை - ஒருவகைச் செடியின் இலை. கோகுள் இலை யைக் கொண்டு கடலைவற்ற இறைப்பதாக நினைப்பாளே. 7.2.1-36.

கோட்பாடு - கொள்கை; உத்யோகம் (முயற்சி) என்பது பெரிய திருமொழிக் குறிப்புரை. இவை எனக்குப் போராதென்று தான் கொண்ட கோட்பாடு மாறாதே ரக்ஷ்யமளவுபட்டு ரக்ஷகத்வமே விஞ்சியிருக்கிறவன். பெ.தி.2.4.6.

கோட்புகுதல் - புதிதாகத் தோன்றுதல்; மலர்தல். வெறும் புறத்திலே ஆலத்தி வழிக்க வேண்டும்படி இருக்கிற நீ, அதுக்குமேலே கண்களும் கோட் புக்கால் பொறுக்கப் போமோ. 5.10.3-36.

கோடரம் - மரச்செறிவு. கோடரத்தில் பற்றின அக்நி போலே. 2.1.10-24.

கோடாலம் - ஓர் ஆபரணம். திருவடிகளிலே கிடந்து ஆரவாரிக்கிற கழல்கள் சதங்கைகளும் குளிர்முத்தின் கோடாலமுமாய் நிற்கிற உபாயவேஷம். பாவை,28-6.

கோடித்தல் - அலங்கரித்தல். பெருமாளுடைய திருவபிஷேகத் துக்குத் திருப்படை வீடெல்லாம் கோடித்துக் கிடக்கிறபடி யையும். பெ.தி.4.8.4.

கோத்தல் - பாய்தல். வயல்கள் அளவும் வர வெள்ளம் கோத்த படியாலே. பெ.தி.3.4.7.

கோது - சாரமற்ற பகுதி. அம்மாலையில் பரிமளம் இங்கும் கோது அங்குமாகப் பண்ணவேணும். 10.3.5-36.

கோப்பு - கட்டு. கர்மாநுகுணமாக நலியக் கடவ நரகம் கோப்புக் குலைந்தது. 5.2.1-9.

கோமுற்றவர் - அரசர். கோமுற்றவர் தண்டிக்குமிடத்தில் தலை யைச் சிரைக்கிறது அபிமானத்தைப் போக்குகிறபடியாய்த்து. தி.மா.38. மணியகாரர் என்பது பெ.தி. குறிப்புரை. கோமுற்றவர் படுக்கைப் பற்றிலே நலியக் கோலுமா போலே. பெ.தி.6.2.7.

கோயிலாழ்வார் - கோயிலாகிய ஆழ்வார். நம்பெருமாள், கோயிலாழ்வாரில் நின்றும் புறப்பட்டருளி. பாவை. 23-6.

கோயிற் கட்டணம்* - பள்ளியறை. பெரிய பிராட்டியாருக்குக் கோயிற் கட்டணமாயிருக்கிற ஏற்றத்தையும். அம.5, அழகு.

கோயிற்சாந்து* - ஒப்பற்ற சாந்து, அரசற்குரிய சாந்து. இப்படி ஸர்வத்தையுமுடையவனாய்த் தான் போகத்தில் அந்யபரனாய்க் கோயிற்சாந்து பூசி நித்ய விபூதியிலேயிருக்குமோ? 1 1.3-36.

கோல்விழுக்காடு - த ற் செ ய ல். கோல்விழுக்காட்டாலே பரிஹாரமாயிருக்கையிறே ஸாத்விக புராண லக்ஷணம். 4.10.5-24.

கோலுதல் - திட்டமிடுதல். தாம் உள்ளபடியே பேசுவாராகக் கோலி. 2.5.11-24. 2. திட்டம்; சூழ்ச்சி. கம்ஸன் கோலின கோலுதலை அவன் தன்னோடே போம்படி பண்ணி அவனை முடித்து. பெ.தி.5.7.5.

கோவை* - 1. ஒத்தது. இருளோடு ஒரு கோவையான நிறம். 5.4.2-36. 2. வரிசை. நித்யஸூரிகளோடு ஒரு கோவையாய்ச் சென்று கிட்டி. 10.2.6-36.

கோள்வாய் - புதுப்புண். அவன்வந்து கலந்து பிரிந்த கோள்வாய் பொறுக்க அரிதாயிருக்கும். 6.2.0-36.

கோற்குத்து - கோல் அளவு நிலம். ''பந்துக்களுக்கு ஒரு கோற்குத்துங்கொடேன்'' என்று அவன் சொன்ன வார்த்தைக்கும் வாசியறியாத கோஷ்டியிலேயிறே போய்ப் புக்கது. 7.5.0-36.

சக்கரவர்த்தித் திருமகன் - இராமன். சக்கரவர்த்தித் திருமகன் முனிந்தால். பெ.தி.1.2.2.

சங்காயம் - ஆனைப்புல் மூன்றுகளையும் பறித்துச் சங்காயமும் வாரின பயிர் சதசாகமாகப் பணைத்துப் பலிக்குமா போலே. 4.2.0-36.

சட்டைப்புரை - சட்டைப் பை. ஒரு உபாதியாலே தம்மை வந்து கிட்டினாருடைய ஆத்ம வஸ்துவை அபஹரித்துச் சட்டைப் புரைக்குள்ளே இட்டுக்கொள்வர் என்று தோற்றியிருக்கும். தி.மா.24.

சடக்கு* - விரைவு. பிரித்துச் சடக்கெனக் கொடுபோகையாலே. 1.4.1-9.

சதுகை - கூளம். நீரையும் சதுகையும் மண்ணையுங் கூட்டித் துகைத்து(க்) கடசராவாதி கார்யங்களாக நிர்மிக்குமா போலே. பெ.தி.3.6.3.

சதுரன் - விரகன். சதுரனானேன் என்கிறார். சு.நு.சி.5, நஞ்சீயர்.

சம்பு - ஒருவகைக்கொடி. சம்பறுத்தார்கைக்குப் போக வேணுமோ? 4.6.9-36.

சமைகை - இசைகை. நான் சமைகையாலே. 10.8.2-36.

சரக்கு - பண்டம். சரக்குப் பிடித்துக்கொண்டுவந்து ஒரு பந்த லிலே தங்குவது. 1.2.7-36.

சலகு - முத்துச்சிப்பி. சலகில் கிடந்து முத்துக்கும் பொன்னுக்கும் அழுக்கேறின நாள் அறிவாரில்லை. 5.1.5-36.

சளைத்தல் - தளர்தல். பிரிவுக்குச் சளைத்துத் தூதுவிட. 6.8.1-36.

சறாம்புகை - தன்னைப்பேணாமை. சறை என்று சறாம்புகை யாய், அல்லாத இடையர் விஷ்வயநஸங்க்ரமணங்களுக்கு உடம்பிருக்கத் தலைகுளித்தல், உடம்பிலே துளிநீரேறிட்டுக் கொள்ளுதல் செய்வர்களாகில். 4.8.4-36.

சறைமணி - இடையர் அரையிற் கட்டும் மணி. சறைகை மணி என்று ஒரு மணி உண்டாயிற்று, இடையர் அரையிலே கோத்துக்கட்டி முன்னே போகாநின்றால் அந்த த்வநி வழியே பசுக்களெல்லாம் ஓடிவரும்படியாய் இருப்பது ஒன்று. 4.8.4-36.

சாடி - துணி. ரத்நங்களை எல்லாம் சாடியிலே பதித்துக் காட்டுமா போலே தன்னழகு தெரியாதார்க்குத் திருவனந் தாழ்வான் மேலே சாய்ந்து காட்டினபடி. அம. 7, அழகு.

சாணரைப்புல் - ஒருவகைப் புல். சாணரைப்புல்லாய்ப் பசுகு பசுகு என்று அறுக்க அறுக்கத் தொலையாதே கிடந்தாற் போலே. தி.வி.1.

சாத்து - கூட்டம். திருவனந்தபுரத்துக்குச் சாத்தாகப் போகா நிற்கச் செய்தே. 8.10.11-36.

சாத்துப்படி - சாத்துவதற்குரிய சந்தனம் போன்ற பொருள். காவேரியானது, ஆதரத்தோடே வந்து, தான் கொண்டு வந்த சாத்துப்படியையும் பெரிய பெருமாளுக்கு ஸமர்பித்துத் திருவடிகளைத் தொழாநிற்கும். பெரி.தி.4.8.7.

சாமந்தன் - அரசன். ஏழைக்கும் பேதைக்குமன்றோ சாமந்தனார் பத்திரம் கட்டிற்று. தி.மா.11.

சாமாதல் - உண்ணுதல். சாமாயிற்று என்றதுக்கும் புஜிக்குமென்று கருத்து என்பது பெரிய திருமொழிக் குறிப்புரை. வேம்புக்கு இட்டுப் பிறந்த புழுவானது கரும்பைக் காணச் சாமாயிற்று. பெ.தி.11.8.7.

சாய் கரகம் - நீர்வார்க்கும் கரகம். விடாயர் இருந்த இடத்தே சாய் கரகம் போலே உயர வைத்துக் கொண்டுவந்து காட்டும் பரிகரம் உடையவனே என்னா நின்றாள். 2.4.4-36.

சாரிகை - வையாளி. திருவடி திருத்தோளிலே ஏறி அங்குள்ளார்க்கு உஜ்ஜீவமாகச் சாரிகை வந்து காட்டுமாப் போலே. 7.3.1-36.

சால் - பானை. ஓர் ஊசி நிற்கிறதாகவும், அதின்மேலே கலசம் இருக்கிறதாகவும், அதின்மேலே சால் இருக்கிறதாகவும். 1.1.3-36.

சால* - மிகவும். சாலப்பணியாயிருக்கும். 6.1.7-36.

சாவி - வீணான பயிர். விளை நிலங்களைக்காட்டில் ஏரிக்கட்டே விஞ்சியிருக்குமாயிற்று; இல்லையாகில் சாவி போமிறே. 3.9.2-36.

சிகல் - குறைவு, கேடு. அபிநிவிஷ்டனானால் சிகலுண்டோ என்னில். 9.6.4-6.

சிகை - வட்டி. பின்பு இவனிட்ட காசு தன்னையடையத் தன் பேரிலே செலவு எழுதிச் சிகைக்கடிப்பிக்கும். 4.9.6-36.

சிங்கவிளக்கு எரித்தல் - தலையிலே சாணத்தை வைத்து விளக்கேற்றுதல். சிறை கட்டுதல், சிங்கவிளக்கு எரித்தல் செய்யில் செய்வதென்? 1.4.1-36.

சிந்து - பாட்டு. சிந்துக்காடுவாரைப் போலே. அம.4, அழகு.

சிமிழ்த்துக்கொள்ளல் - சுற்றிக்கொள்ளல். முற்பட உடுத்ததுக்கு ஈடுபடாமையாலே அதுக்குமேலே ஒரு சிவப்பு நிறப் புடவையைச் சிமிழ்த்துக்கொண்டு வந்தானாயிற்று. பெ.தி. 10.8.2.

சிலவர்* - சிலர். அவர்கள் சிலவர் நாள் நடையாடாத, தேசத்திலே வார்த்திக்கிறவர்கள் காணும். 5.8.6-36.

சிலவை - சில, அநுபவித்தாலல்லது நசியேனென்று கொண்டு சிலவை நிற்றல்; ப்ராப்தங்காண் என்று சிலவை நிற்றல் செய்யவற்றோ. பெ.தி.7.3.8.

சிலுகிடல் - குற்றங்கூறல், சண்டையிடல். உன் மேலே சிலுகிட்டுப் பிணங்க. பெரி.தி.2.2.3: சிலுகிடாதே கொள்ளுங்கோள் என்கிறாள். பாவை, 3-6.

சிலுகு - குற்றம். ஒருத்தி வந்து தன் மகன் குறைகளைச் சொல்லப் புக்கவாறே 'இதுவுமொரு சிலுகோ' என்று தாயான யசோதைப் பிராட்டி குபிதையாக. பெரி.தி.2.9.10.

சிலுகுவாரிகள் - சில்லைவாய்ப் பெண்கள். சிலுகுவாரிகளான நம் சேரியில் உள்ளாரும் அயற்சேரியரான அந்ய ஸ்த்ரீகளும். 6.7.4.

சிவிகையார் - பல்லக்குச் சுமப்பவர். சிவிகையார் சொல்லும் வார்த்தையை விண்ணப்பம் செய்ய. மு.தி.80.

சிவிட்கு* - சீற்றம். திருவுள்ளத்தில் சிவிட்குத் தாரையையிட்டு ஆற்றவேண்டிற்றுக் காணும். 1.4.3-36.

சிவீல் - சீற்றம். என்னுடைய பாசுரம் கேட்டால் தேவர் திருவுள்ளத்துக்கு(ச்) சிவீல் என்ன வேண்டும்படியாயிருக்கும். பெ.தி.6.2.7.

சிழகிச் சிழகி அழுதல் - பொருமி அழுதல். காலமெல்லாம் நான் இருந்து சிழகிச் சிழகி அழுதால் என்ன ப்ரயோஜநம் உண்டு? 3.2.7-36.

சிளைத்தல் - இளைத்தல். பிரிவுக்குச் சிளையாத இது (ஆவி) இனி முடியப் புகுகிறதோ என்றிருக்கிறாள். 5.4.1-36.

சிற்றடிப்பாடு - சிறிய நடைபாதை. அச்சத்தாலே வழியான இடம் கிடக்க, சிற்றடிப்பாடே நுழைந்து போம்படியாகப் பண்ணும். பெரி.தி.4.2.8.

சிறாங்கை - கையளவு. பரமபதம் ஒரு சிறாங்கை என்னும்படி உபயவிபூதியும் ஒதுங்கலாம்படி பெருமையை உடைத்தான ஊர். க.நு.சி.3,அழகு.

சிறாம்புதல் - குறுகுதல், கூசுதல். இந்திரன் கண்ணிர்கண்டு சிறாம்பினபடியும். பாவை, 3-6.

சிறாய் - ஓடம். ஒரு சிறாயை விச்வஸித்து. 3.6.8-36.

சிறுக்கன்* - சிறுவன். சிறுக்கனுடைய விரோதி போகப் பெற்றது என்று உகந்தபடி. 4.8.7-24.

சிறுகால் - விடியற்காலம். கன்றுகள் மேய்க்கத் தகுதியான பருவத்தை ப்ராப்தனான இவனை(ச்) சிறுகாலே ஊட்டி ஒருப்படுத்தி, கன்றுகள் மேய்க்கும்படி போகவிட்டு. பெரி.தி.3.2.0.

சிறுபேர் - செல்வப்பெயர். குன்றத்துச் சீயர் எம்பெருமானார் ஸ்ரீபாதத்திலே புக, அவருடைய சிறுபேரைச் சொல்லி 'சிங்கப்பிரான்' இன்று அயநங்கிடாய் என்ன. 1.2.9-36.

சிறுமுறி - சீட்டு. நாயன்றே! பரமபதமென் சிறுமுறிப்படி யழியும். தி.வி.44.

சின்னம் - காசு. நாலு சின்னம் கைப்பட்டவாறே 'நமக்கு இனி உள்ளதனையும் ஜீவிக்கைக்கு ஒரு குறையில்லை' என்று நினைத்திருக்கச் செய்தே அத்தையிழந்து கிலேசப்பட்டும் கூப்பிடும்படியும். 4.9.2-36.

சீர்மை* - சிறந்த தன்மை. இப்படி அவயவ சோபையும் ஆபரண சோபையுமான சீர்மைக்குக் காத்தூட்டும்படியான பரிகர பலமில்லையோ வென்ன. தி.நெ.தா.21, பட்டர்.

சீரியது - சிறப்பானது. ஆத்மாவுக்கு அத்தோடொத்த சீரியது இல்லை. 1.2.3-24.

சீரை - ஆடை. தலைகளில் கறையையுடைத்தாய் இருப்பதொரு சீரை கிடைக்குமென்றும். பெரி.தி.4.6 1; வழியில் நின்று சீரை யுரிந்ததுக்கு பலம். பெ.தி.4.5.5.

சுடுதடி - தீ வட்டி. சுடுதடி போலே இவற்றையடைய அழித்துக் கொண்டு நிற்கிற ருத்ரனுமாம். 2.8.3-36.

சுணை - நாணம். அவன் சுணையுடையவன். 8.2.8-36.

சுணைக்கேடன் - நாணமற்றவன். தானும் ஒக்க மடலெடுப் பானொரு சுணைக்கேடனாகையாலும் மடல் இவ்விஷயத்தில் பலியாது என்று பார்த்து நோற்கிறார்கள். பாவை, 0-3.

சும்மாடு - சுமை தாங்கும் தலைப்பாகை. கருமுகை மாலை தேடுவார் சூடவிறே தேடுவது? சும்மாட்டைக் கொள்ள அல்லவிறே. 2.4.2-36.

சுரவன்பாக்கு - உயர்ந்த பாக்கு. ஆச்சான் திருவாலிநாடு தாஸர் நல்லன சில சுரவன் பாக்குகளை(ப்) பட்டருக்குக் கொடுவந்து கொடுத்தாராய். 10.2.2-36.

சுருக்கடிக்க உண்டாதல் - அடிக்கடி இருத்தல். இந்த உருவு வெளிப்பாடு 'எங்ஙனேயோ'விலும் சுருக்கடிக்கவுண்டு. 7.7.0-24.

சுவடு* - 1. அடையாளம். ஹிரண்யனுடைய மார்வை முற்காலத்திலே பிளந்து பொகட்டவனுடைய் அச்சுவடு தோன்றும்படி இருக்கிற. பெரி.தி.1.2.5; 2. அடித்தடம். பசுக்களுக்குச் சுவடு படாத புல்லும் தண்ணீரும் உண்டாம்படியாகவும் தலைகீழாகக் கவித்த மலை. பெரி.தி.3.5.6. 3. சுவை. தாஸ்ய பரிமளத்திற் சுவடறியாதவனாய். 9.8.4-36.

சுவடர் - சுவைஞர்; ரசிகர். சுவடர் பூச்சூடும் போது புழுகிலே தோய்த்துச் சூடுமா போலே. தி.பல்.9.

சுவைப்பாடு - சுவை. இனிமையால் நினைக்கிறது சுவைப் பாட்டை. பெ.தி.1.2.10.

சுளைப்பிடாம் - கம்பளி என்பது குறிப்புரை. அப்பொருள் சரியாகத் தோன்றவில்லை; பிழைபட்ட சொல்லாக இருக்கலாம். இவன் ஆண்ட பரிகரமடங்கலும் வினைக்கு உடலாயிற்றதில்லை; எடுத்தெடுத்துக் குலைக்கிறபோது சுளைப் பிடாமிட்டு அமுக்குகைக்கு உடலாமித்தனை. பெ.தி.8.1.1.

சூடு - தானிய அரிக்கட்டு. பழைய பையலைப் போலே வரம்பிலும் வாய்க்காலிலும் சூடுபொகடாதேகொள் என்னுமதுவேயடியாக. சி. மடல், கண்ணி, 60.

சூழ்பு - சூழ்ச்சி. ஆயுதம் எடுக்கவொட்டோம். என்கையாலே சூழ்பாலே அழித்தான். 6.4.10-24.

சூழியம் - கொண்டை. நாயகன் பேணிச் சூழியஞ் சுற்றினால் இவள் வினை கேட்டாலே குலைத்தால் அதுக்கவன் கால் பிடிக்கும் அளவல்ல. தி.வி.60.

சூள் - தீப்பந்தம். சூளிலே கொளுத்திக் கையிலே கொடுபோகிற நெருப்பொளியிலே. மு.தி.40.

செங்கற்சீரை - காவியாடை. செங்கற்சீரை கட்டி வளைக்கலாம் படியிறே. 6.10.10-36.

செடி - அழுக்கு. அந்தச் செடி நீங்கக் குளிப்பாட்டும் க்ரமத்திலே பெரி.தி.2.4.0,

செண்டேறுதல் - சாரிகை புறப்படுதல். அழகு செண்டேறுகிறபடி. 7.3.1-36.

செதுகை - புதரும் கூளமும். செதுகையிட்டுப் புகைக்க அமையும் 1.6.1-36.

செந்தலித்திருக்கை - மகிழ்ந்திருக்கை. ஸம்ச்லேஷத்தாலே செந் தலித்து நினைத்த இடத்திலே. 1.4.1-9.

செந்தலிப்பு - மகிழ்ச்சி. அவனுடைய செந்தலிப்பேயிறே அத் தேசத்துக்குச் செந்தலிப்பு. தி.நெ.தா.12.

செந்தெங்கு - செவ்விளநீர். செந்தெங்குக்கு முட்கட்டினாப் போலே. 10.2.1-36.

செப்பு - செப்பம். ஸகல லோக ரக்ஷணம் பண்ணுகிற எங்கள் நிதியைச் செப்போடே நோக்குகிறவனன்றோ. பாவை, 16-6.

செப்பேடு - தாமிரசாசனம். ஆர்த்தியே செப்பேடாக இனி ஒரு க்ஷணமும் தாழாதே இப்போதே வரவேணுமென்று ஆசைப் படா நின்றேன். 4.7.5-24.

செம்பளித்தல்* - மூடுதல். செம்பிளித்தல், செம்புளித்தல் என்றும் வருகிறது. போக்கற்றவாறே என் கண்ணைச் செம்பளித்தேன். அம 1.பெரி. கண்ணைச் செம்பிளித்து வந்து கலந்தான். 2.5.8-36. அக்கண் தன்னையுஞ் செம்புளித் தா ளுள்ளோடு புறம்போடு வாசியற விண்டிருக்கும். திருவா.1.

செம்பாட்டுத் தரை - செம்மண் நிலம். செம்பாட்டுத் தரையிலே மலையருவி விழுந்தாப் போலே ருதிரம்வந்து கொழிக்க. பெரு.தி. 10-2.

செம்பாதி - சரிபாதி. அதிலே செம்பாதி கடிக்கூறாகப் பாழாய் நித்திரையிலே கழியும். தி.மா. 3.

செம்பால் - குருதி. அத்யந்தம் செம்பால் பாய்கிற பருவத்தை யுடைய பாலனாய். பெ.தி. 2.2.5. (செம்பால்-தொட்டால் ரக்தம் பொசிகை என்பது அரும்பதம்.)

செம்முதல் - அடைத்தல். வாசல் செம்மினால் வாயும் செம்ம வேணுமோ. பாவை, 10-3.

செய்கால் - பயிர்நிலம். தரிசு கிடந்த தரையைச் செய்காலாம்படி திருத்துவாரைப் போலே. 2.7.4-36.

செய்தி - செயல். தன் செய்தித் தாழ்வைக் சொல்லி நோவு படுகிறாள். பெரி.தி. 2.3.7.

செய்திப்பாடு - செயல். செய்திப்பாட்டை உடைத்தான. 6.7.9-12.

செய்வுத்தை - செய்வதை. செய்வுத்தை யெல்லாஞ் செய்து சீறியருளாதே என்ன அமையுமாகாதேதான். பாவை, 28-6

செய்வுற்றை - செய்யுமவற்றை. உகவாதார் பக்கலில் செய்வுற்றை நம்பக்கல் செய்யான். 10.4.5-36.

செயல்மாட்சி - செயலற்ற நிலை. பயஸ்த்தாநத்திலே பயநிவ்ருத்தியுள்ள இடத்திற்போலே நிற்கும்படியாயிற்றுச் செயல் மாட்சி. 7.10.8-36.

செயலறுதி* - செயலற்ற நிலை. அன்னே - செயலறுதியாலே சொல்லும் சொல். 4.4.1-9. தன் செயலறுதியாலே தெய்வங்காள் என்று கூப்பிடுகிறாள். 6.7.10-6.

செருக்கடித்திருத்தல் - கர்வத்தோடிருத்தல். முன்பே என் தசையை அறிவியென்னச் செருக்கடித்திருந்தாய். 1.4.8-36.

செருக்கன் - செருக்கினையுடையவன். வில்லை வளைத்த செருக்கன். பெ.தி. 1.4.8.

செருந்து - கொழுந்து. அந்தச் சோலைதான் தளிரும் முறியும் செருந்துமாய் நிற்கையாலே கீழேயொரு பொய்கையும் உண்டென்று தோற்றிற்று. பெ.தி. 5.8.3.

செல்லாமை* - ஆற்றாமை. தன் செல்லாமையைப் பாராதே சேஷியுடைய ஹ்ருதயத்தைப் பார்த்து. க.நு.சி. 0,பெரி.

செல்வக் கிடப்பு* - செல்வமிகுதி. ஸார்வபௌமனான ராஜ புத்ரன் க்ஷாமகாலத்திலே அல்ப த்ரவ்யத்துக்குத் தன்னை எழுதிக் கொடுத்தால் பின்னை தன் செல்வக்கிடப்புக் காட்டி மீட்கவொண்ணதாப் போலே. 1.3.1-36.

செல்வு* - செல்வம். திருவுக்குந் திருவாகிய செல்வு. பாவை, 30-6.

செலுவு - கீழ்வயிறு. ப்ரளயந் தன்னைத் தன் செலுவிலே அடக்கவற்றான மத்ஸ்யமாயும். பெ.தி. 5.4.8.

செவ்வி* - அழகு. செவ்விக்கு ஆலத்தி வழிக்க வேண்டும்படி யாயிற்று இருக்கிறது. 4.6.1-36.

செவ்வித் திருத்துழாய் - சிறந்த துளசி. செவ்வித் திருத்துழாய் மாலையையுடையனாய் இருந்துள்ள ஸர்வேச்வரன். பெ.திருவந். 51.

செவ்விப்பூ* - நல்ல மலர். மிகவும் பரிமளத்தையுடைய செவ்விப் பூவாகக் கொண்டு நம்பியுடைய திருவழகை முட்டக் காண்கைக்கீடான ப்ரபாவத்தையுடைய ஆழ்வார். 5.5.11-9.

செவ்வே - நன்றாக. அது உனக்குச் செய்யலாவது செவ்வே பரிமாறும் அவர்களோடு காண். 10.5.5-36.

செவ்வை - நன்று செவ்வையாய்த் தோற்றும். 9.6.5-36.

செவ்வைக்கேடு* - நேர்மையின்மை. அவன் செவ்வைக்கேட்டுக்கு ஈடாகத் தானும் செவ்வைக் கேடனாய் கொண்டபடி. 4.8.6-36.

செவ்வைப்பாடு - நேர்மை. முன்பு ரக்ஷகம் என்று சொன்ன மலை தன்னையே யெடுத்து ரக்ஷித்த செவ்வைப்பாட்டைச் சொல்லுகிறது. பெரி.தி. 3.5.6.

செவ்வைப்பூசல்* - அறப்போர். செவ்வைப் பூசலிலேயிறே அவன் நோவுபடுவது. தி.நெ.தா. 11. சக்ரவர்த்தித் திருமகன் செவ்வைப் பூசலாலே ராக்ஷஸரை அழியச் செய்தாப்போலே. தி.ச.வி. 32.

செவிப்பாடு - செவிக்கு இனிதாக இருத்தல். செவிப்பாடுடைத் தாக ஆளத்தி வையாநிற்கும். பெ.தி. 3.1.1.

செவியேறு - செவியில் விழுந்த வார்த்தை. அவனுக்குத் தோழி சொல்லச் செவியேறு கேட்டுச் சொல்லுகிறாள். 10.3.7-36.

செவிலி - வளர்ப்புத்தாய். செவிலி. தொடக்கமானாரைப் பார்த்து. 4.6.0-12.

செறியிடல் - மறைத்தல். அப்பரப்படங்கலும் கண்செறியிட்டாற் போலே பெருத்திருக்கிற மலராகிற ஆஸநத்திலே. திருவெழு. அடி, 1.

செறுத்தல் - நெருக்குதல். அதாவது இடம் கொடுக்கும்படி பண்ணுதல். கடலைச் செறுத்துப் படைவீடு செய்ததாகை யாலே திரைபொரு கடலாலே சூழப்பட்டிப்பதாய், திண்ணிய தான மதிளையுடைத்தாயிருக்கிற ஸ்ரீமத்த்வாரகைக்கு ராஜா வானவன். பெரி.தி.4.7.8.

செறுப்பு - சிறுமை. வானிளவரசு என்கிறபடியே அகம்படி வைத்த அரசாயிருக்கும் அங்கு, அச்செறுப்புத் தீர ஸ்வைரம் ஸஞ்சரிக்கப் போந்த இடமிறே இது. 5.8.2-36.

சேக்கள் - காளைகள். பிரிந்திருப்பார்க்கு மற்றும் பாதகமான சேக்கள். தி.வி.87.

சேர்க்கைப் பல்லி - ஒரே இடத்தில் சொல்லும் பல்லி; நிலைப்பல்லி. இவர்க்காகில் இது சேர்க்கைப்பல்லி போலே பணியன்றோ என்றிருக்க ஒண்ணாது. 4.9.3-36.

சேர்த்தி * - சேர்க்கை; தொடர்பு; பொருத்தம். இவ்விரண்டுக்கும் அடி இவளுடைய சேர்த்தியிறே. 1.3.1-36. பகவத் ஸமாச்ரயணம் பண்ணுகைக்கும் வினை கிடைக்கைக்கும் அக்நிநாஸிஞ்சேத் போலே என்ன சேர்த்தியுண்டு? 1.3.8-36. அக்கையும் வில்லும் சேர்ந்த சேர்த்தியும் தர்சநீயதையும் அநுபவிக்கிறார் ஆயிற்று இவர். பெ.தி.1.2.1.

சேர்த்தியழகு - பொருத்தமான அழகு. சேர்த்தியழகை யுடைத்தான திருவடிகளை ஆச்ரயிக்க. பெ.தி.1.4.1.

சேர்ப்பால் - குழம்புப்பால்; சுண்டக்காய்ச்சிய பால். சேர்ப்பால் போகரூபமாகப் பருகுமவனுக்குத் தன்னடையே பித்தம் போமாப் போலே. பாவை, 5-3. குறளாய் - சேர்ப்பால் போலே போக்யதை மிக்கிருக்கிறபடி. 2.3.3-24.

சேராச்சேர்த்தி - 1. அரிய சேர்க்கை. சேராச் சேர்த்தியாய் 7.1.7-12. 2. பொருந்தாத சேர்க்கை. சேராச் சேர்த்தியாய் இருக்குமோ என்னில், இரண்டுருவும், இசைந்து ஒன்றாய் இருக்கும். மூ.தி.63.

சேவகப் பாடு - வீரம். அத்தால் உங்கள் பக்கல் பிறந்த சீற்றம் வேணுமாகில் முந்துற முன்னம் சேவகப்பாடு சொல்லாதே கொள்ளுங்கோள். பெ.தி.10.3.7.

சொட்டை - வாள். சொட்டையை யுருவிப் பிடித்துக்கொண்டு. 7.4.1-36.

சொப்பன - நன்றாக. சொப்பனக் குடியேறுவதற்கு முன்னே. பெ.தி 6.8.7.

சொல்லுடைமை - சொற்செல்வம்; பல சொற்களைப் பயன் படுத்தும் ஆற்றல். சொல்லுடைமைக்கு உங்களிற் காட்டில் இல்லை. பெ.தி.1.1.7.

சொலவு * - சொல். சொலவு நினைவோடே கூடியிறே இருப்பது. 4.9.1-24,36.

சொற்றாழ்வி - சோறாள்வி என்பதன் சிதைவு. சமையற்காரன். ஆண்பிள்ளைச் சொற்றாழ்வியை ஆசைப்பட்டவனை. மு.தி.63.

சோறாள்வி - சமையற்காரன். இனி ஆண்பிள்ளைச் சோறாள்வியை ஸ்த்ரீ என்று துடர்ந்து திரிவாரைப் போலே. பெ.தி.2.6.1.

தக்கோர்மை * - நன்மை, தகுதி. இப்பிரளயங் கொண்ட பூமிக்கு என்ன தக்கோர்மையுண்டாய் நீ செய்தது. 5.7.4-36. பந்துக்கள் ஜீவிக்கவேணும், எங்களுக்கும் ஐந்து குடிக்காடு அமையும் என்னும் தக்கோர்மையுடைய ஐவர். 8.5.8-36.

தகணேறல் * - தழும்பேறல். இரப்பிலே தகணேறினபடி. 1.4.3-24.

தகைவு - தடை. பசுக்களுக்கும் இடையர் இடைச்சிகளுக்கும் புறம்பு போக்கறும்படி தகைவைப் பண்ண. பெரி.தி.3.5.2.

தசைந்திருத்தல் - பெருத்திருத்தல். அன்றிக்கே, கச்சாலே அடக்கி ஆளவேண்டுபடி பரிணதமாய்த் தசைந்திருக்குமவை இப்போது...சோஷித்திருக்கிறபடியைப் பற்றச் சொல்லு கிறானாதல். பெரி.தி.3.10.4.

தட்டி - சிறை. ராஜகுமாரன் தட்டியிலிருந்த போது ப்ரதிகூலித்த வர்கள். தி.வி.27.

தட்டித் திரிதல் - 1. தடுமாறித் திரிதல். பகலெல்லாம் தட்டித் திரிந்து அஸ்தமன வேளையிலே யாய்த்து ஜீவிப்பது. தி.மா.5. 2. நாடிச்செல்லல். இன்னும் எத்தனை திருப்பதிகள் தட்டித் திரியக்கடவேன். 5.8.10-24.

தட்டு - தடை. எனக்குக் காணத் தட்டு என்? தி.வி.84.

தடவற் பொய் - விளையாட்டுப் பொய். ஒரு தடவற்பொய்க் காக நரக தர்சநம் பண்ணுமளவாய் நின்றவனையிறே இப்படி உபதேசிக்கிறது. 6.7.10-36.

தடவியது - அகன்றது. ஆமைத்தாலியைத் தடவியதான கழுத்திலே பூண்டு. பெரி.தி.2.6.1.

தடா - தவலை. தடாக்களோடும் அடுப்பிலே ஏற்றிவைத்து. பெரி.தி.2.9.5.

தண்டல் - தண்டனை. எமன் தண்டல். 2.6.7-36.

தண்டை - 1. தடை. இத்தனை தண்டையுடைய உடல் உருகச் சொல்ல வேணுமோ. பெரி.தி.5.4.4. 2. வால். ஒரு புலி

வந்து தோன்றி அந்தப் பசுவையுங் கொன்று...இவன் முன்னே வந்து தண்டையை முறுக்கியிட்டிருந்ததாய். தி.வி.72.

தண்ணளி * - அருள். அகவாயில் தண்ணளி தோற்றும்படி வாத்ஸல்யத்தாலே குதறிச் சிவந்த தாமரை போன்ற திருக்கண்களாலே. 5.3.2-36.

தண்ணிது - கடைப்பட்டது. தண்ணிதான முறைமையாலே வாழக்கடவ. 9.1.9-36.

தண்ணிமை - தாழ்வு. முன்பொலா இராவணன் என்னுமித்தனை போக்கி அவன் தண்ணிமைக்கு ஒருபாசுரமில்லையிறே. பாவை, 3-3.

தண்ணிய - தாழ்ந்த. தண்ணிய நெஞ்சு. 5.2.7-24,36.

தண்ணியர் - தாழ்ந்தவர். இப்படி(த்) தண்ணியராக நினைத்திருக்கிற. 1.5.0-36.

தண்ணியவை - தாழ்ந்தவை. தண்ணியவையெல்லாம் 5.2.6-36.

தண்ணியார் - தாழ்ந்தவர். எத்தனை யேனும் தண்ணியார்க்கும் முகங்கொடுத்து நிற்கிற இந்நீர்மையை. அம.3,பெரி.

தண்மை * - தாழ்வு. என் தண்மையைப்பாராதே. 2.5.8-36.

தந்தாமுக்கு - தங்கள் தங்களுக்கு. பிறர் தந்தாமுக்கு நன்மை தேடிவரும் இத்தனை யல்லது இவனுக்கு நன்மை தேடார்கள். பெரி.தி.5.1.9.

தமப்பன் * - தந்தை. தமப்பனாரைக் காணப் புகுந்த அளவிலே. பெரி.தி.3.9.4.

தமயன் - தமையன். உங்கள் தமயனாருகந்த பிராட்டியோபாதி என்னையும் நினையுங்கிடீரென்கிறார். நான்.தி.47.

தமிழர் - தமிழ் நூல் மட்டுமே கற்றவர். சொல்லுவார்களாயிற்றுத் தமிழர். பெ.தி.1.1.10.

தரவு - அனுமதி, சீட்டு. தரவு வேணுமாகில் 4.9.0-36.

தரிசு - கரம்புநிலம். தரிசுகிடந்த தரையைச் செய்காலாம்படி திருத்துவாரைப் போலே. 2.7.4-36.

தரைக்கிடை - தரையில் கிடத்தல். இத்தரைக்கிடை கிடந்தும். 4.8.0-36.

தலக்கு - 1. நாணம். தலக்கற்றுச் சொல்லும்படியான. 10.10.0-36. 2. உறவு; தாய்க்கிழடங்காதபடி தலக்கறுக்கும் விஷயத்தோடே கலந்து வந்தென்கை. பெரி.தி.3.6.2.

தலை - பக்கம். இரண்டு தலைக்கும். 5.3.8-36.

தலைக்கட்டுகை* - முடித்தல். நீ என் காரியஞ் செய்து தலைக்கட்டு மித்தனை போக்கி நான் என் கார்யம் செய்து தலைக்கட்டுகை என்றொரு பொருளுண்டோ? திருவெழு.0.

தலைக்காவல் - முதற்காவல். தலைக்காவலாக வைத்த இந்த்ரன் தான் பாதகனாக, நோக்கினபடி சொல்லுகிறது. பெ.தி.7.6.4.

தலைச்சாவி வெட்டுதல் - 1. பயிர் மதாளித்துப் போனால் நுனிகளை வெட்டுதல் .தைர்ய பங்கம் பிறந்து செருக்குக்குத் தலைச்சாவி வெட்டி ஆடினபடியிறே. 2.7.4-36. 2. குறைதல். கலந்த போதைச் செவ்வி விரஹத்திலும் தலைச்சாவி வெட்டப் போகிறதில்லை காணும். 9.5.7-36.

தலைசாய்தல் - நீங்குதல். வ்யாதி க்ரஸ்தமான ப்ரஜைகள் வ்யாதி தலை சாய்ந்து சோறு சோறென்று கூப்பிடப்புக்கால் த்வநிதானே தாய்க்கு உகப்பாமா போலே. தி·மா.36.

தலைசீய்ப்பு - 1. துன்பம். இனி எத்தைச் செய்வோமென்கிற தலை சீப்போடே காலம் போக்குமித்தனை. க.நு.சி.10, அழகு. புண்பட்டுத் தலைசீய்க்கும் விஷயத்தை. 4.1.3-36. 2. கலக்கமுறுதல். தம்முடைய பூர்வ விருத்தத்தையும் பெற்ற பேற்றின் கநத்தையும் அநுஸந்தித்துத் தலைசீ(ய்)க் கிறார். தி.கு.தா.1.

தலைத்தரம் - மேலானது. புரவார்ந்திருக்கையாவது தலைத்தரப் பெருக்காய் இருக்கை. 8.9.9-36.

தலைதுலுக்கு - 1. தலையசைத்தல். பிராட்டியோட்டை ஸம்பந்தமும் ஒரு தலைதுலுக்கு மாத்ரமாய், அவன்றான் ப்ரஜைகள் பக்கலிருக்கும் இருப்பைச் சொல்லுகிறது. பெ.தி.6.3.2. 2. இசைதல். அவன் செய்கிறோம் என்று தலைதுலுக்கினால் 10.1.0-36.

தலைநீர்ப்பாடு - தொடக்கம்; முதல் மடை. இத்தால் நித்யஸூரி கள் அளவும் அன்றிக்கே தலைநீர்ப்பாட்டிலே அநுபவிக்கும் பிராட்டியும் இவ் ஆச்ரித பக்ஷபாதத்துக்குத் தோற்றிருக்கும் படியைச் சொல்லிற்றாய்த்து. தி.ச.வி.24.

தலைமடுத்தல் - மூழ்குதல். இதர புருஷார்த்தத்திலே ப்ரவணராய்த் தலைமடாதே. 2.10.9-9.

தலையாடி - 1. கரும்பின் தோகை; தலைப்பகுதியில் ஆடிக் கொண்டிருப்பதால் அப்படிப் பெயரிட்டனர் போலும். கண் குறகின கரும்பினுடைய கழையுண்டு - தலையாடி. அத்தைத் தின்று. பெ.தி.3.8.6. 2. செய்யுளின் முற்பகுதி. அவன் 'என்னையே பற்று' என்று சொன்னதில், தலையாடியிலே 'ஸகல விரோதிகளையும் நானே போக்கி என்னைத் தருவன்' என்று சொன்னத்தைத் தெளிந்திருக்குமவர்கள். 7.5.10-36.

தவ - சிறிது (உரிச்சொல்). தவதவ நாறுகிறபடி. 10.10.6-36.

தழும்பேறல் - தகணேறல். இரப்பிலே தழும்பேறினபடி. 4.10.10-36.

தள்ளம்பாறல் - தவறுதல்; தடுமாறுதல். திருவடிகள் ஊன்றி நடக்கும் பருவமன்றிக்கே நடக்கிற தசையாகையாலே தள்ளம்பாறி நடக்கும் நடை. பெரி.தி.1.7.1.

தளப்பம் - கவலை. எம்பெருமானோடே ஸம்பந்தமுடைய இவளுக்கு நான் கரைய வேணுமோ என்று தளப்பமற்றாள். சி.மடல், கண்ணி, 54.

தளம் - உப்பரிகை. மங்களவாத்ய கோஷங்களையுமெல்லாங் கண்டு ஸஹிக்க மாட்டாதே தளத்தினின்றும் இறங்கிவந்து கைகேயியை பர்த்ஸித்து...துருக்திகளைச் சொன்னாளிறே. பெரி.தி.4.8.4.

தளர்த்தி* - தளர்ச்சி. தளர்த்தியின் மிகுதியாலே. 4.4.2-36.

தளர்தல் - நோவுபடுதல். உள்ளே கிடந்து தளர வொண்ணாது. என்று உமிழ்ந்து. பெ.தி 5.10.3.

தளிகை - உண்கலம். அமுதுசெய்து கைவாங்கின தளிகை மாற்றினால் ப்ரஸாதம் போஜ்யம். தி.பல்.9.

தளும்புதல் - கலங்குதல். இக்குடிக்குத் தீங்கு வரப்பொறாத லோகத்தில் அநுகூல ஜநமானது தளும்பிற்றென்கிறாள். பெரி.தி.3.7.5.

தற்பு - வலிமை. விரஹம் தின்று பண்டே தற்பு அற்ற. 9.5.7-36.

தறை - தரை. தரையிலே படரவிடுவதே. 7.2.7-36.

தன்னடை* - தானாக. தன்னடையே நிரஸ்தராவர்களிறே. 1.1.1-36.

தன்னரசு நாடு - தன்னுடைய ஆட்சியில் உள்ள நாடு. இது தன்னரசு நாடாய். 1.2.9-36.

தன்னுடைச் சோதி - பரமபதம். தன்னுடைச் சோதியேற எழுந்தருளுகிற போதும். 6.2.0-36.

தன்னேற்றம் - தனக்குரிய உயர்வு. தன்னேற்றம் உண்டிறே. 6.2.0-36.

தனிக்கிடை - தனியே படுத்திருத்தல். தனிக்கிடை கிடக்க வல்லள் அல்லையே நீ. பாவை, 13-3.

தனிசு - கடன். தன்பேர் சொன்னவளுக்குத் திருவுள்ளத்திலே தனிசு பட்டிருக்குமா போலே. பெ.திருவந்.53. தனிசு இறுக்கக் கடவன். 3.3.6-36.

தனிமாலை - ஒப்பற்ற மாலை. துளசி மாலையைக் குறிக்கும். ரக்ஷணத்துக்கு உறுப்பாகத் தனிமாலையிட்டுக் கொண்டிருக் கிறவன். பெ.தி.10.10.1.

தாய்த்தலைத் தென்றல் - அழுக்குப்படாத முதலேயுண்டான தென்றல். அதாவது புறம்பே சிலர்க்கு உடம்பு கொடுத்துச் சுணங்கழியாதே தாய்த்தலைத் தென்றலாய் இருக்கை. 1.4.7-36.

தாரை - பூந்தாரை. தாரையும் குளிர்த்தியையும் உடைய திருத்துழாயின். 10.1.2-24, 36.

தாவளம் - தங்குமிடம். தளர்ந்தார் தாவளம் ஆயிற்று. 4.6.4-36.

தாழ்ச்சி - தாழ்வு. தங்கள் தாழ்ச்சி தோற்றத் தறையிலேயிருந்து. 10.9.10-24.

திடர் - மேடு. பொன்னியானது திடர்களையெடுத்துப் பொகட்டுப் பூக்களைப் பரப்பா நின்றுள்ள திருநாங்கூர். பெ.தி.4.4.3.

திணுங்குதல் - பொங்கிப் படிந்திருத்தல். நெய் திணுங்கினாப் போலே அகவாயில் தண்ணளியினுடைய செறிவெல்லாம் வடிவிலே காணலாம்படியிருக்கை. தி.மா.2.

திமிர்த்திருத்தல் - 1. உணர்ச்சியற்றிருத்தல். மரம் போலே திமிர்ந்திருந்தாலும் ஆவது உண்டோ? தி.வி.4. 2. அக்கறை யின்றி இருத்தல். அது (திருவுள்ளம்) தம் த்வரைக்கு அநு ரூபமாக மேல்விழாதே திமிர்ந்திருந்தது. பெ.தி. 1.3.0.

திமிறுதல் - கட்டுமீறிச் செல்லல். பெருங்காற்றைத் தாம்பிட்டுப் பிடிக்கலாம். என் மநஸ்ஸை ஒரு அளவாக்கப் போகிற தில்லை என்னும் படியிறே மநஸ்ஸினுடைய சஞ்சலத்வமும் திமிறும்படியான மிடுக்கும். அம.10, அழகு.

தியங்குதல் - மதிமயங்குதல். யமபடரானவர்கள் பிடிப்பதற்கு முன்னே தியங்க எற்றி வந்து பிடிக்கும்போது. 4.10.3.

திரள் - கூட்டம். ஏகாந்தத்தில் அநுபவத்தைத் திரளிலே வெளி யிடுவாரைப் போலே. பெ.தி.5.8.9.

திரிய* - மீண்டும். திரிய ப்ரளயம்வர. 3.1.10-36.

திரியட்டும்* - மறுபடியும். ஆரை என் கண்களாலே காண்கிறது என்று அகன்றும், திரியட்டும் தம்முடைய அயோக்யதையைச் சொல்லுகிறார். பெ.திருவந்.14.

திரியவிட்டு வைத்தல் - ஏறிட்டு எழுதி வைத்தல். உன் க்ஷேத்ரத் தையும் என் பேரிலே திரியவிட்டு வை. 4.9.6-36.

திரியவும்* - மீளவும். திரியவும் க்ருஷ்ணாவதாரமே பின்னாட் டிற்று. பெ.தி.2.2.4.

திருக்குற்றுடைவாள் - அரையில் வைத்திருக்கும் சிறிய கத்தி. அவளுடைய மூக்கை கூரிய திருக்குற்றுடை வாளை வாங்கிப் போக்கினான். பெ.தி.1.5.5.

திருநாடு - வைகுந்தம். இத்திருநாமத்தைச் சொன்ன அநந்தரத் திலே திருநாட்டுக்குப் போனான். பெ.தி.4.4.1.

திருநாள் - விழா. திருநாளிலே கொடுபுகுவார் உண்டோ. 6.5.2-9.

திருப்பரியட்டம் - மேலாடை. திருப்பரியட்டத்தலையாலே. பெ.தி.2.10.3. இது திருப்பரிவட்டம் எனவும் வருகிறது. ஸ்ரீகோபிமார் கரையிலே திருப்பரிவட்டங்களையிட்டு வைத்து. 3.5.1-36.

திருப்பல்லாண்டு - மங்களங்கள் உண்டாக வேண்டும் என்று வாழ்த்தல். இத்திருவாய்மொழி கற்றாரை, மதிமுக மடந்தையர் விரும்பித் திருப்பல்லாண்டு பாடி ச்லாகிப்பர் களென்கிறார். 7.6.11-36.

திருப்பவளம் - சிவந்த வாய். தயிரையும் வெண்ணெயையும் ஒக்க அமுது செய்த திருப்பவளத்தை உடையவன். பெ.தி. 1.5.6.

திருமலை - திருவேங்கடம். இப்பாஷை நடையாடும் இடத்துக்கு எல்லையாய் இருக்குமிறே திருமலை. பெ.தி.1.2.0.

திருமுளைத் திருநாள் - விழாத் தொடக்கத்திற்காகத் தானியங் களை ஊற வைக்கும் நாள், திருமுளைத் திருநாளில். 7.10.4-36.

திருமுன் காணிக்கை - அடியுறை. தான் திரட்டின பல பதார்த் தங்களையும் என்னுடைய நாதனானவனுக்குத் திருமுன் காணிக்கையென்று இத்தை ஸமர்ப்பிக்கையிலுண்டான த்வரையாலே மிகவும் விரைந்து வாராநிற்பதாய், தன் பக்கல் அவகாஹித்தாருடைய ஸகல ச்ரமங்களும் மாறும்படி குளிர்நீ திருப்பதான திருச்சிலம்பாற்றையுடைய திருமாலிருஞ் சோலையாகிற அதுவே - விமலன் மலை. பெரி.தி.4.3.9.

திருவடி - அனுமன். அஸ்ப்ருஷ்ட ஸம்ஸார கந்தரான திருவடி. பெ.தி.1.2.2.

திருவடிநிலை - காலணி. ஸ்ரீபரதாழ்வான் முடிசூடாமையாலும் திருவடிநிலை கொடுத்துப் போருகையாலும். பெரி.தி. 3.9.8.

திருவநந்தாழ்வான் - ஆதிசேடன். அஸ்ப்ருஷ்ட ஸம்ஸார கந்தரான திருவடி, திருவநந்தாழ்வான். பெ.தி.1.2.2.

திருவாட்டி - பணக்காரி. ஒரு திருவாட்டி பிள்ளை பெறும்படியே என்கிறாள். பாவை, 2-6.

திருவிடையாட்டம் - 1. திருமகளுக்குத் தரப்பட்ட கொடை. இவனுடம்பு தேவதாநமும் திருவிடையாட்டமுமாயிறே யிருப்பது. பெரி.தி.4.4.8. 2. செல்வம். திருவிடையாட்டத் திலே இழிய அமையும் ஐச்வர்யம் என்பது அடிக்குறிப்பு. பெ.தி.1.1.1. 3. நாராயணன். நாராயணா - ப்ரணவமாதல் நமஸ்ஸாதல், சதுர்த்தியாதல் கூட்டாமையாலே திருவிடை யாட்டத்திலே இழிய அமையும். பெ.தி.1.1.1.

திறலிய - திரண்ட. திறலிய தோள்கள். 3.9.7-12.

திறை - கப்பம். உன்னுடை நெஞ்சைத் திறைகொள்ளும் பிராட்டிக்கு வல்லபனானவனே. பெரி.தி.2.3.3.

தீரக்கழிய - முற்றிலும் அதிகமாக. பெருமாள் திருவுள்ளத்திலே தீரக்கழிய அபராதத்தைப்பண்ண. அம.6, அழகு. தீரக்கழிய அபராதம் பண்ணின பின்பு இனி ஓரஞ்சலி நேராமற் போகாது என்றானிறே. 1.1.5-36.

தீற்றல் - தீனியாகத் தருதல். மதகரமான த்ரவ்யங்களைத் தீற்றிப் பிச்சேற்றி. பெரி.தி.4.2.5.

துடக்கம் - தொடக்கம். நாற்றந் துடக்கமானவற்றை. 2.6.5-24.

துடக்கு - சம்பந்தம். ப்ரஜைகளை எல்லாம் விஸ்த்ருதமாக்கின காரணத்வ ப்ரயுக்தமான குடல்துடக்கை உடையவனே. குடல்துடக்கு - சரீர சம்பந்தம் என்பது அடிக்குறிப்பு. பெ.திருவந்.18.

துடர்த்தி - தொடர்ச்சி. பின்துடர்த்தியறக் கொன்று பறிக்கும். பெ.தி.1.9.3.

துடர்ந்து - தொடர்ந்து. பிரியில் தரியாதே பின்னே துடர்ந்து கூப்பிட. பெ.மடல், கண்ணி, 47.

துடை - காலின் மேற்பகுதியாகிய தொடை. சில ராஜபுத்ரர் துடை குத்தவிட்டு உறங்குமாப் போலே. பெ.தி.1.2.3.

துடைப்பற்று - தொடைப் பகுதி. சேலையைக் கடுக்கித் திருவரையையுந் துடைப்பற்றையும் ஒருகால் காட்டியருள வேணும் என்றார். தி.வி.44.

துப்புரவு - திறமை. ஸர்வேச்வரனைக் கேள்வி கொள்ள வேண்டாதபடி துப்புரவுடையனாகையாலே பூர்ணனான சதுர்முகனைப் படைத்தவன். 1.5.3-36.

துரால் - கலந்திருத்தல்; தேவையற்ற கலப்பு. தழையும் தண்டும் கொம்பும் கொடியுமாய்த் துராலாயிராதே, வெறும் பூவேயா யிருக்கை. 6.7.6-36.

துருப்புக் கூடு - தூற்றாப் பொதி. துருப்புக்கூடாக அவ்வூரை யன்றோ இவள் உகந்தது. 6.5.1-36.

துருவி நிலைகுத்துகை - தேடியறிந்து குத்துகை. நாமிருந்த இடந்துருவி நிலைகுத்தவல்ல நெஞ்சையுடையவனன்றோ? 2.4.1-36.

துலுக்குதல் - அசைத்தல். அவன் 'செய்கிறோம்' என்று தலை துலுக்கினால், அது பெற்றதாய் மேல் நடக்கலாம்படியாய் இருக்குமிறே கார்யம். 10.1.0-36.

துலைதல் - முற்றிலும் நனைதல். பசுக்களும் இடையரும் வர்ஷத்திலே துலையப் புக. பெ.தி.10.10.3.

துவக்குண்ணல் - மயங்குதல். நோக்கிலும் ஸ்மிதத்திலும் துவக்குண்டு. 2.9.4-24.

துவக்குதல் - மயக்குதல். தன்னுடைய போக்யதையாலே துவக்கி ஆச்ரிதர் குற்றம் நெஞ்சில்படாதபடி பண்ணுமவள். பெ.தி. 2.6.2.

துவக்குமவர் - மயக்குபவர். பருவத்தை இட்டுப் பகட்டித் துவக்கு மவர்கள். பெ.தி.1.1.1.

துவட்சி* - 1. தளர்ச்சி. துவளுகிற துவட்சி பொறுக்க மாட்டாமையாலே. பாவை, 10-6. 2. சோர்வு. ஸம்ச்லே ஷத்தாலே வந்த துவட்சி. பாவை, 20-3.

துழாவுதல் - தேடுதல். பிரிந்து துழாவுகிற ஸமயத்திலே. 6.8.1-36.

துறுத்தல் - சூட்டுதல். மண்ணாயினும் கொண்டு வீசுமினே என்னுமளவும்போய், அது கடக்க நின்று வீசுமளவும் போராதே, அது தன்னையேகொண்டு வந்து குழலிலே நிரம்பத் துறுக்க வேண்டும்படியாயிற்று, தசை முடுகினபடி. தி.வி.81.

துறை* - இடம். திருவடி தோற்ற துறையிலே இவரும் தோற்றது. 2.2.5-36.

துறோட்டி - அங்குசம். துறோட்டியிட்டுக் கொத்துகையாலே புண்ணாயிருத்தல். பெ.தி.3.8.3.

துன்னல் - சிறு திவலை. அன்னலும் துன்னலுமாய். 8.5.4-36.

தூசி* - படையின் முன்னணி. தூசியேறின பேர்க்கு உரமாக நின்ற பேரணி உறுபூசலானவாறே திரள அமுக்குமா போலே. 9.9.2-36.

தூர் - பாவம். உன்னுடைய ஸகல தூருக்கும் நானே கடவேன். நீ சோகிக்க வேண்டா. நான்.தி.71.

தெகுடாடுதல் - தடுமாறுதல். இப்பாட்டில் அவ்வுபகாரத்துக்கு ப்ரத்யுபகாரம் தேடிக் காணாமையாலே தெகுடாடுகிறார். க.நு சி.10, அழகு.

தெண்மை - தெளிவு. நான் கொண்டல்லது போகேன். புக்க காரியம் தலைக்கட்டாதே மீளுவனோ என்னும் தெண்மையையுடைய வாமநனாய். பெ.தி.4.10.7.

தெருவுபாடு - தெருப்பகுதி. அதாவது வீட்டின் முன்பகுதி. புத்தகங்களை அகவாய் பெருச்சாளி அறுத்துக் கிடக்கத் தெருவுபாட்டை நூலும் துரும்பும் வைத்து அலங்கரிக்குமா போலே. தி.மா.6.

தெற்குத் திருமலை - திருமாலிருஞ்சோலை மலை. க்ஷத்ரியர்கள் என்னது என்னது என்று அபிமாநிக்கும்படியிருக்கிற தெற்குத் திருமலையும். பெ.மடல், கண்ணி, 6.

தெற்றுதல் - கட்டுதல். அது வெள்ளிபோலே இருக்கையாலே அத்தை ஆபரணமாகத் தெற்றிப் பூண்பர்களிறே இடையர். பெரி.தி.2.6.1.

தேக்கிட்டார் - எதிர்த்து வருமளவு உண்டவர்கள். தேக்கிட்டார்க்குச் சோறிடுகை யன்றிக்கே. தி.நெ.தா.1, பட்டர்.

தேக்கிடுதல் - நிறைவடைதல். அணியரங்கன் என்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணா என்று இவ்வளவிலே தேக்கிட்டு விடுவர்கள் இங்குள்ளார். 9.4.1-36.

தேட்டம்* - விருப்பம். இப்போது இருப்புத் தேட்டமானாற்போலே அப்போது முடிவு தேட்டமாமிறே. 1.4.9-24.

தேவர்* - தங்கள் முன்னிலையில் உள்ளவரைத் தேவர் என்று குறித்தல். தேவர் திருவுள்ளத்திலோடுகிறதென்? 10.7.0-36. தேவர் சீற வேண்டும்படியாய் இருக்கும். பெ.தி.6.2.7. தேவர் திருவடிகளுக்கு அடிமையானேன். பெ.தி.7.4.6.

தேவர்கள் - அமரர்கள். தேவர்கள் பார்த்துக் கிடக்கத் திருமார்பிலே ஏறினாள். மூ.தி.16.

தேவாரம் - வழிபடுகடவுள். இவர் தேவாரமான பெரிய பெருமாளையல்லது பர வ்யூஹ விபவங்களை அறியாதபடியும். அம. 0, பெரி. அழகு உம்முடைய தேவாரமோ. 6.8.10-36.

தேவை - 1. கட்டளை. தேவையிடாதார் எழுந்தருளினார். 3.6.8-36. 2. கடமை. நம்மைப் போலே தேவைக்குப் பரகுபரகென்று வருகையன்றிக்கே...பெ.தி. 2.6.6.

தைச்சு - தைத்து என்பதன் கொச்சை. சரீரமானது அம்பு தைச்சு பூமியிலே புரளும்படியாக. பெ.தி. 1.4.1.

தொக்கு - 1. மேல்தோல். தொக்குக் கழிந்த சுளைபோலே. 10.7.5-36. 2. உறவு. இவ்வடிவும் பவ்யதையுமாயிற்று புறம்புள்ளாரோட்டைத் தொக்கை யறுத்ததும், அபரிச்சிந்நமான காதலை விளைத்ததும். 5.3.4-24.

தொங்குகை* - தங்குகை; நிற்பது. கையில் ஒரு வளையும் தொங்காது என்னுமிடம் தோற்றுகிறது. பெரி.தி. 3.4.8.

தொடர் - ஈயம். உருக்குவதற்கு உறுப்பான மண்ணாலாகிய பாத்திரம். மாத்ரு போஜனத்தில் அந்தர்பூதங்களான க்ரூர த்ரவ்யங்களாலே தொடரிலிட்ட ஈயம்போலே துடியா நிற்கும். தி.மா.0.

தொடர்த்தி - தொடர்ச்சி. பின் தொடர்த்தியறும்படி கொன்று. 4.9.6-12.

தொடை - 1. பாடல். இசையோடே கூடியிருந்துள்ள தொடைகளான. பெரி.தி. 1.5.11. தமிழ்த்தொடை ஆயிரத்திலும். 8.9.11-36. 2. துடை. தொடைகுத்த. பெ.தி. 11.4.2.

தொற்று* - 1. தொடர்பு. பாஹ்ய விஷயங்களில் தொற்றற்று. 7.9.11-24. 2. பற்று. ஆதுமோர் பற்றிலாத - ஏதேனும் ஒரு தொற்று இல்லாத. 3.4.10-24.

தோயல் - உறவு. அவன் ஸ்வரூபகுண விபூதியித்தனையும் இவள் தோயல் வாசியிறே யென்னுதல். பெரி.தி. 4.9.2.

தோள்தீண்டி - 1. ஒப்பு. வெள்ளியேய்ந்த மதிள் என்றது தனக்கு ஸ்மாரகமாய், நலிந்த சந்த்ரனுக்கும் கடலுக்கும் தோள் தீண்டியாயிறே யிருப்பது. பெ.தி. 8.2.7. 2. சார்ந்துள்ளது. கடற்கரையோடு தோள்தீண்டியான க்ருஹோபவநத்திலே சென்று. 2.1.0-9.

தோள்மாறல் - ஒரு தோளை விட்டு மற்றொரு தோளுக்கு மாறுவது. பல்லக்குச் சுமப்போர் ஒரு தோள் நொந்தவாறே மற்றொரு தோளிலே மாற்றிக்கொள்வது போல. ஜந்ம பரம்பரைகளிலே தோள்மாறி நித்ய ஸம்ஸாரியாய்ப் போந்த இவரை. 1.0.0. முதல் ச்ரிய : பதி.

தோள்வந்தி - தோள்வளைகள். அத்தோள்கள் தோறும் தோள் வந்தியை யுடையராய் இரா நின்றார். பெ.தி. 9.2.3.

தோற்புரை* - மேலாக. தோற்புரையிலே போகையன்றிக்கே உயிர் நிலையிலே நின்று நலியாநின்றது. 5.5.5-24.

தோற்றரவு* - தோற்றம். நரஸிம்ஹத்தினுடைய தோற்றரவிலே ஒத்துப் பதம்செய்து. 4.8.7-24.

நகடு - சோகை. மண்தின்று வந்த நகடு போலன்றிறே குணாதிக விஷயத்தைப் பிரிந்தால் இருக்கும்படி. 6.2.0-36.

நகழ்ந்து - நகர்ந்து என்பதன் சிதைவு. மேகங்களானவை கடலிலே போய்ப்புக்கு முத்தையடைய வாரிக்கொண்டு நகழ்ந்து நகழ்ந்து நடக்கமாட்டாதே. பெ.தி. 3.8.4.

நச்சுதல் - விரும்புதல். த்ருஷ்ட ப்ரயோஜநங்களை நச்சி. பெரி.தி. 4.6.0.

நசை - விருப்பம். ப்ரஹ்ம ருத்ராதிகள் பக்கல் நசையறுத்து. 1.3.7-24.

நடுவிலாய்ச்சி - நடுத்தாய். கைகேயி இப்படிச் சுட்டப்பெறு கிறாள். நடுவிலாய்ச்சிக்கு ப்ரியமில்லாமையாலே போந்தோம். 10.8.6-36.

நடையாடல் - வழங்கிவருதல். இப்பாஷை நடையாடி சிஷ்ட ப்ரசுரமான தேசங்களெங்கும். 1.0.0-36, முதல் ச்ரிய:பதி.

நத்தம் - ஊர். ஒரு நத்தமில்லாதான் ஒருவனையோ நான் பற்றிற்று. 5.8.10-36.

நம்பி மூத்தபிரான் - பலராமன். அண்ணன் என்பது நேரடிச் சொற்பொருள். நம்பி மூத்தபிரானையும் ஒழியத் தனியே திரியாநிற்றி. 10.3.10-36.

நம்மது - நமது. நெடுநாள் நம்மது என்றிருந்து. 2.3.4-36.

நல்தரிக்கவிருத்தல் - நன்றாக இருத்தல். திருவடி தோளிலே நல்தரிக்க விருத்தல். தி.பல்.7.

நல்லடிக்காலம் - நன்மைக்கு இடமளிக்கும் காலம். த்ரேதாயுக மாகையாலே காலமும் நல்லடிக்காலம். பாவை, 16-6.

நல்விரகு - நல்வழி. அநாயாஸேந பெறலாவதொரு நல்விரகைப் பெற்று. 2.3.8-24.

நலுக்கம் - வருத்தம். கர்ப்பிணிகளான ஸ்த்ரீகள் தங்களுடைய ஆதரத்தால், ஸ்திதி கமந சயநாதிகளால் கர்ப்பத்திலிருக்கிற பிள்ளைகளுக்கு நலுக்கம் வாராதபடி பேணிக்கொண்டிரே திரிவது. பெரி.தி.3.2.8.

நற்கொலை - சித்திரவதையின்றி ஒரே முறையில் கொல்லுவது. அம்பு நற்கொலையாகக் கொல்லும். பாவை, 21-6. நற்கொலையாகாதே உயிர்க்குலை யாக்கி நலியாநின்றது. பெ.தி.11.1.2.

நற்றரித்தல் - நன்கு தங்குதல். இப்போதாயிற்று வளையம் செவ்வி பெற்றதும் முடிநற்றரித்ததும் திருக்கண்கள் விகஸித மாயிற்றதும். 2.6.11-36,

நற்றாய் - ஈன்ற தாய். நற்றாயானவள். 5.6.10.12.

நறுவட்டாணித்தனம் - நல்ல கெட்டிக்காரத்தனம்; வாக் ஸாமர்த்தியம். நாழ் என்று தரமுடைமை. அத்தாலேற்றத்தைச் சொல்லுகிறது. அதாகிறது-நறுவட்டாணித்தனம். தி.வி. 71. நாம் நறுவட்டாணித்தனத்தை மிகவுடையோம். பெ.திருவந்.10.

நாகு - பசு. நாகின் மேலே பித்தேறின விடை.பெ.மடல்,கண்ணி, 92.

நாச்சிமார் - தேவிமார். நாச்சிமார் திருமுலைத் தடத்தாலே. 2.6.2-36.

நாயன் - தலைவன். திருத்துழாய் மாலையையுடைய என் நாயனை. 2.6.3-24. வீர ரஸத்தில் ப்ரதாநனான என் நாயன். பெ.தி. 1.4.1.

நாயனார் - தலைவர். திருவட்டாற்றில் நாயனார். 10.6.10-24, 36.

நாயிறு - ஞாயிறு. அழகியதாய் அத்விதியமான நாயிறு. 4.4.2-24.

நாலு - நான்கு. நாலு கண்ணாலே. 5.3.7-36.

நாலுதல் - தொங்குதல். நாலும்படி கட்டின. பெரி.தி.1.4.1.

நாலுபாடு - நான்கு பக்கம். ஒரு காரியப்பாடு இல்லாமையாலே நாலுபாடும் போருகிறபடி. பாவை, 23-3.

நாவீறு - சொல்லாற்றல். நாவீறுடைய எனக்கு. 6.4.9-9.

நாளோட்டம் - காலப்போக்கு. பிறந்ததொன்று நாளோட்டத்திலே அறியார்களோ? என்ன. 6.2.7-24.

நாற்றம் - வாசனை. நாற்றந் துடக்கமானவற்றை. 2.6.5-24.

நாற்றுதல் - கவிழ்த்தல். தலைகளை மிகவும் நாற்றிக்கொண்டு. பெரி.தி.3.6.8.

நிமிதல் - நெளிதல். நிமியும் வாயும், கண்களும் இருக்கிறபடி. 9.9.3-36.

நியமங்கள் - சாஸ்த்ரங்களில் சொல்கிற அருந்தேவைகளெல்லாம் கிடக்க, கிட்டலாவதொரு விரகு பெறுவதே! 10.8.3-24.

நிரப்பம் - நிறை. நிறை என்பதற்கு நிரப்பம் என்று பொருள் எழுதப்பட்டுள்ளது. 5.3.3-12.

நிலக்கிடை - தரையில் கிடத்தல். ஒரு கொம்பிலே சேர்க்க வேண்டியிருக்க நிலக்கிடை கிடக்கிறபடி. தி.வி.9.

நிலம் - 1. கூடியது. தமக்கு நிலமாய்ப் பேசுகிறாரே இவர். 1.1.1-36. ஒருவர்க்கும் அறிய நிலமோ. 1.1.8-36. 2. மாடி. பல நிலங்களையுடைத்தாகையாலே அலங்க்ருதமான மாடங்கள். 5.9.4-36.

நிலமிதி - நிலத்தின் தொடர்பு. திருமலையின் நிலமிதியாலே வளரா நின்றுள்ள. 2.10.1-24.

நிலவர் - உரியவர். இதுக்கு நிலவரான நித்தியஸூரிகள். 2.3.0-36.

நிலவறை - பூமிக்கடியிலுள்ள அறை. நிலவறைகளிலேயிறே வளர்ந்தது. பாவை, 25-6.

நிலவன் - 1. வல்லவன். க்ஷத்ரியன் பருவம் நிரம்புவதற்கு முன்னே யுத்தத்தில் நிலவன் ஆமா போலேயும். பாவை, 11-6. 2.நிலத்திற்குரியவன். நிலவனுக்கும் ஸஞ்சரிக்க ஒண்ணாத படியாய்த்துக் காட்டின் வெம்மை இருக்கிறபடி. பெரி.தி. 4.2.8. அடிக்குறிப்பில் நிலவன் என்பதற்குக் காட்டின் வெப்பத்தையும் குளிரையும் தாங்கிக்கொள்ளும் தரித்திரன் என்று பொருள் கொள்ளப்பட்டுள்ளது. அஃது அவ்வளவு பொருத்தமாகத் தோன்றவில்லை.

நிலையழகு - நிற்கும் அழகு. நிலையார நின்றான் என்று நிலையழகிலே துவக்குண்பார்க்குத் திருமலையில் நின்றருளியும். தி.ச.வி.60.

நிலையாள் - நிலைத்துள்ள ஆள். உன் திருவடிக் கீழே பரிகைக்கு நிலையாளாக என்னைக் கொள்வது என்று? என்று அவன் தன்னைக் கேட்கிறார். 8.3.8-36.

நிழலிடல் - தெரிதல். உள்ளுள்ளவையெல்லாம் புறம்பே நிழலிட்டபடி. அம.10. பெரி.

நிறக்கேடு - பெருமைக் குறைவு. தண்ணியரோடு கலந்துவரும் நிறக்கேட்டில். 1.4.6-24.

நிறப்பாடு - வண்ணம். தன் நிறப்பாட்டாலே ஸ்ரீதண்டகாரண்யத்தை மயிற்கழுத்துச் சாயலாக்கா நின்றது என்றானிறே ஸ்ரீவால்மீகி பகவானும். தி.நெ.தா.21, பட்டர்.

நிறம்பெறல் - சிறப்புப் பெறல். நிறம்பெற்றபடி. 2.5.7-12.

நீஞ்சப்புகுதல் - நீந்தப்புகுதல் என்பதன் கொச்சை. நீஞ்சப்புக்குத் தெப்பத்தை இழந்தேன் என்னுமா போலே. அம.7, பெரி. ப்ரளயங்களை நீஞ்சிக் கரைகண்டாற் போலே. தி.வி.48.

நீர்க்களிப்பு - நீர்ப்பசை; நீர்க்களிப்பை அறுத்துக் கொடுக்கும். 7.8.2-36.

நீர்ச்சாவி - நீர் இன்றிக் காய்ந்த பயிர். ஒரு நீர்ச்சாவியாய் வாடினபடி. 2.7.0-36.

நீர்த்தாழ்வு - பள்ளம். நீர்த்தாழ்வுகளிலே இரையெடுத்துத் திரியா நிற்கும் பகம். பெரி.தி.2.5.4.

நீர்ப்புழு - நீரில் உள்ள புல்லிய மீன்போன்ற உயிர்; முதலை. க்ஷுத்ரமா யிருப்பதொரு நீர்ப்புழு பக்ஷ்யமாகக்கொண்டு, அத்தாலே வீற்றிருந்தேழுலகும் தனிக்கோல் செல்ல இருப்பாரைப் போலே பூர்ணம் மந்யமாநமாய் இருப்பதொரு நீர்ப்புழுவை இலக்காகக் கிடீர் வந்தது. தி.மா.28.

நீர்மை - 1. தன்மை. ஆச்ரித ஸம்ரக்ஷணம் பண்ணும் நீர்மைகளை அநுஸந்தித்து. 2.4.0-9. 2. எளிமை. நீர்மைக்கு எல்லையான திருமலை ஆச்ரயணீய ஸ்த்தலம். 6.6.11-36.

நுணி - நுனி என்பதன் தவறான வடிவம். மூங்கிலானது மலை முழஞ்சிலே வைத்த தேன் கூட்டளவும் வர வளர்ந்து தன்னுடைய நுணியாலே அதினுடைய வாயைக் கிழிக்க. பெ.தி.9.8.5.

நுணுக்குதல் - பாடுதல். திருநாமத்தைச் சொல்லி அதுதன்னை வீணையிலே யேறிட்டு நுணுக்கினாள். தி.நெ.தா.15.

நுழுந்தல் - செருகுதல். திருக்குழலைக் குலைத்து நுழுந்த. 10.1.1-36. கிண்ணகத்தில் இழிவாரைப் போலே மயிரைப் புகுந்துமுடித்து நுழுந்தி, வலியுடைத்தான கச்சையிட்டுக் கட்டி. பெ.தி.10.8.2.

நெஞ்சாறல் - மனக்கலக்கம்; இழவு. புறம்பே ஒருவனுக்கு ஒருவன் விருந்திடும்போது நெடுநாள் பச்சைதேடி விருந்திட்டால் 'இவன் உண்டு என்ன குறைசொல்லப் புகுகிறானோ?' என்று நெஞ்சாறலோடே தலைக்கட்ட வேண்டிவரும். 1.6.1-36. அவ் இழவு தீர்ந்தேன் - நெஞ்சாறல் கெட்டேன். பெரி.தி. 5.4.8.

நெஞ்சுளுக்குப்படுதல் - நோவுபடுதல். நீர் இங்ஙனே கிடந்து நெஞ்சுளுக்குப் படாநிற்கிறதென்னென்ன. பெரி.தி.3.5.4.

நெடுகுகை - நீளுதல். ராத்திரி நெடுகுகையன்றிக்கே ராத்ர்யவயவயங்கள்தான் நெடிதாகை. 2.1.2-24.

நெடுந்தெரு - பெரியதெரு. நெடுந்தெருவோடு வாசியற. 6.9.1-36.

நெடும்பாடு - பெருங்குறை விலையில்லாத ரத்நங்களாலே செய்த ஏகாவலியிலே ஒரு ரத்நம் குறைந்தாலும் நெடும்பாடாய் இருக்குமிறே. பாவை, 30-6.

நெடுவாசி - பெரும் வேற்றுமை. ப்ரபந்தாந்தரங்களிற் காட்டில் இப்ரபந்தத்துக்கு நெடுவாசியுண்டு. தி.மா.0.

நெய்யாடல் - எண்ணெய் தேய்த்துக் குளித்தல். அந்த ப்ரீதிக்குப் போக்கு விட்டு நெய்யாடல் போற்றிக்கொண்டு திரியுமாப் போலே. பாவை, 4-3.

நெற்றி - 1. முயற்சி. நெற்றி பெருத்துப் பலமொன்றும் இன்றிக்கே இருக்குமென்னுமது - இளிம்பிறே. 9.1.4-36. 2. போர்த்தலை. முனை முகத்து - பூசல் நெற்றியிலே. பெ.தி.4.6.4.

நென்னேற்று - நேற்று முதல்நாள். அடியாய் இருப்ப தொன்று நென்னேற்று இல்லை. 10.6.3-24.

நேர்கொடு நேர் - நேருக்கு நேர். ப்ரஹ்ம ஸ்ருஷ்டி போலே ஸங்கல்பத்தாலே செய்கையன்றிக்கே நேர்கொடு நேரே பூசலிலே நின்று அழியச் செய்தாய். திருவெழு. அடி, 5-6.

நேர்த்தரவு - செல்லும் சீட்டு; அபராதத்துக்கு நேர்த்தரவு கொடுக்கும் முறுவலிறே. தி.நெ.தா.18.

நேர்த்தி - முயற்சி. இப்படி நேர்த்தியற்றிருக்குமாகில் பலமும் அளவு பட்டிருக்குமோ? 4.6.4-36.

நேர்தரவு - செல்லும் சீட்டு; அதாவது நேரில்தரும் ஆணை. தம்பொறையாகிற நேர்தரவைக் காட்டுங்கோள். 1.4.7-36.

நேர்ப்பம் - நேர்த்தி. மரக்கலம் அலசாதபடி கடைந்த நேர்ப்பம் சொல்லுகிறது. பாவை, 30-6.

நேர்பாடு - வாய்ப்பு. திருநாட்டிலே வேறொருவர் அபிமானிக்கக் கடவரின்றிக்கே எல்லாரும் உங்கள் அபிமானத்திலே அடங்கும்படியாகப் பெரிய பிராட்டியாரும் நீயுமே வர்த்திக்கக் கடவதாகக் கண்டு வைத்த நேர்பாட்டைக் கண்டு திருவடிகளை அடையவும் பெற்றேன். 4.9.10-9.

இத்தோடொக்கும் நேர்பாடு மற்றிலை நெஞ்சே. பெ.திருவந்.40.

நேரிய - அழகிய. நேரிய இடையையுடையளாவது. பெ.தி.1.2.3.

நொய்ப்பம் - திறமை. பர்வதத்தை மத்தாகக் கொண்டு அத்தை வாஸுகியையிட்டுச் சுற்றிவைத்த நொய்ப்பம் எல்லார்க்கும் கடையலாம்படி இருக்கை. 7.1.7-36.

நொழுந்தி - அமுக்கி. சேற்றிலே தலையை நொழுந்திப் பட்டுப் போகா நிற்பர் சிலர். 1.3.0-36.

நோக்காடு - நோவு. உன் தலையிலே நோக்காடு உண்டாமென்று அப்போது செய்யாமல் விட்டுவைத்த என்னுடை குற்றமே யன்றோ. பெரி.தி.2.3.10.

நோக்குதல் - பாதுகாத்தல். எங்களால் நோக்கலாம் எல்லை கழிந்தது. பெ தி.2.7.2. இப்ரஜையை (தைவத்திடமிருந்து) நோக்கித் தரவேணும். பெ.தி.5.8.8.

நோவாட்டி - துன்பப்படுபவள். படுகிற துஃக்கத்தை உங்களுக்குச் சொல்ல வேண்டாதபடி நோவாட்டியான நான் இப்போது இது சொல்லும்படி அறிகிறிலேன். 8.2.2-36.

நோவு - துன்பம். தம்மைப் பிரிந்து நோவுபடுகிற இற்றைக்கு மேற்பட்ட ஆற்றாமையில்லையிறே எனக்கு. 9.7.9-36.

நோவுபாடு - துன்பம். வேழத்தரந்தையை - எளியராயிருப்பர் நோவுபட்டாற் போலன்றிறே இதினுடைய நோவுபாடு. திருவெழு. அடி,12.

பகலமுது - பகல் உணவு. பெருமாளுக்குப் பகலமுது லங்கையில் வடக்கு வாசலில் விடுவித்ததாயிருக்கும். உங்களுக்கு த்வரை யற்றிருந்ததீ என்னும் ஆய்த்து. தி.மா.27.

பகலிருக்கை - பகலில் தங்குமிடம். உகந்தருளின நிலங்களெல் லாம் பகலிருக்கை என்னும்படி ஆச்ரித ரக்ஷணத்துக்கு ஏகாந்த மான இடமென்று நித்யவாஸம் பண்ணுகிற ஸ்த்தலமான திருவரங்கம் திருப்பதியில். பெரி.தி.4.8.0.

பகைத்தொடை - பரபாகம்; எதிர்த்தட்டான பொருள்களின் சேர்த்தி. நல்ல நிறத்தை உடைத்தான மாணிக்கங்களை யும் அப்படியிருந்துள்ள மரகதங்களையும் பகைத்தொடை யாகக் கொண்டு ஒழுங்குபட அழுத்தி. பெரி.தி.4.4.3.

பகைப்பு - வெறுப்பு. மேகங்களினுடைய பகைப்பையும் திருவாய்ப் பாடியிலுள்ளார் எளிமையையுங் கண்டு. பெரி.தி.4.7.6.

பகையர் - பகைவர். இப்பேச்சைக் கேட்டால் பகையரும் இரங்க வேண்டும்படியிருக்கை. 5.8.11-24.

பங்களம் - 1. பதர்க்கூட்டம்; பயனற்றது. அர்ஜுநனுக்குத் தன்னைக் கொடுத்து, துர்யோதநனுக்குப் பங்களத்தைக் கொடுத்துவிட்டானிறே. 1.3.1-36. 2. கூட்டுப்படை. சேர்க்குமவள் ஒருத்தியுமேயாக அல்லாத பங்களம் அடங்கலும் 'நமக்கு நிலமன்று' என்று கைவாங்கிற்று. 7.3.3-36.

பச்சிறச்சி - பச்சை இறைச்சி என்பதன் சிதைவு. புதிய புலால் என்பது பொருள். பச்சிறச்சி தின்னும். பெ.தி.10.3.4.

பச்சை - காணிக்கை. இப்படி ஆழ்வார் உம்மை விஷயீகரிக்கைக்கு நீரிட்ட பச்சை என்னென்னில், ஸத்துக்களும் கைவிடும்படி தண்ணியனானேன் என்கிறார். க.நு.சி.4, நஞ்சீயர்.

பசல் - பயல். பசல்களோடும். பெ.தி.8.8.6.

பசலைக்கலம் - சுடப்படாத மட்கலம்; பசலைக்கலம் போலே உடையும்படி கண்டவன். மு.தி.18.

பசலைத்தனம் - அறியாத் தன்மை. பசலைத்தனத்தில் செய்த செயல் என்று விடலாம் அது. பாவை, 24-6.

பசளைக்கலம் - சுடப்படாத மட்கலம். மயிரைப்பிடித்துக் கீழே விழவிட்டு மேலே பாய்ந்து பசளைக்கலம் போலே உடைத்தான். 8.4.1-36.

பசுங்கலம் - பச்சைப் பானை. பசுங்கலம் உடைந்தாப் போலே. பெரி.தி.4.2.6.

பசுங்கூட்டு - செழுமையான கலவை. வடிவழகும் மேன்மையும் நீர்மையும் ஒரு பசுங்கூட்டாயிறே பரத்வமிருப்பது. தி.மா.:.

பசுத்த - 1. பசுமையான. பசுத்த கமலத்தினுடைய குளிர்ந்த மாலை. பாவை, 30-6. 2. பச்சை. சிவந்த நிறத்தையும் பசுத்த நிறத்தையும் உடைத்தான அவையிரண்டோடும் (நாரணன் திருவடி திருத்துழாய் ஆகிய இரண்டோடும்) கலந்து ஆகாசத்தில் நின்றும் பூமியிலே இழிந்து ப்ரவஹிக்கிற ஜலத்தாலே. பெரி.தி.4.7.2.

பசும்பொய் - முழுப்பொய். பச்சை பசும்பொய்கள் - மெய்கலவாத புதுப் பொய்களை. 3.9.7-12.

பசை - 1. ஈரம். ஆத்மாவை உள்ளுள்ள பசையெல்லாம் அறும்படி உலர்த்த. 2.1.9-9. 2. பயன். வழக்குப் பேசினால் பசையுண்டோ. 3.3.3-36; உருவமே மருவிலும் பசை போரும். பெ.தி.1.1.3.

பட்டணம் - நகரம். என்ன பட்டணத்தே புக்கான். பெ.மடல், கண்ணி, 137.

பட்டோலை - பதிவேடு. என்பின்னே வந்து பட்டோலை எழுதிக் கொள்ளுங்கள். சி.மடல், கண்ணி, 75.

பட அடித்தல் - துன்புறுத்தல். லோகத்தை யெல்லாம் பட அடித்துக் கிடந்து கூப்பிடும்படி யிறே இவன் செய்து திரிவது. பெரி.தி. 4.8.5.

படாம் - போர்வை, துணி. பச்சைப் படாத்தையிட்டு முட்டாக் கிட்டு நின்றான். 4.4.4-36.

படி - 1. தன்மை; தன் படிகளைக் காட்டக் கண்டு. 4.5.5-24. 2. வகை. இப்படிகளாலே அடிமையே புருஷார்த்த மென்னு மிடத்தை நிர்ணயித்து. 1.0.0. இரண்டாம் ச்ரீய:பதி. 3. உருவம். உடம்பினுடைய படியில். பெ.தி.2.5.3. 4. கூலி, அரிசிப்படி. கைமேலே இலக்கை பெறாதார்க்கு அன்றாடப் படிவிடவேணுமிறே. 4.8.7-36.

படிக்கம் - 1. திருவாராதனத்தில் திருவபிஷேக நீர் சேர்த்து வைக்கும் ஒரு பாத்திரம். படிக்கம் வைத்தல். பாவை, 29-6. 2. எச்சில் துப்பும் பாத்திரம். ஸர்வேச்வரனும் பிராட்டியுமாய்த் திரையை வளைத்துக் கொண்டிருந்தாலும் படிக்கம் குத்துவிளக்குப்போலே அவ்வளவிலும் நின்று அந்தரங்கமான வ்ருத்திகளைச் செய்யவேணும். 3.3.1-36.

படிகாப்பார் - தலையாரி. பாடிகாப்பார் எனவும் வருகிறது. ஒன்று கெட்டவாறே படிகாப்பாரைப் பிடிக்குமாபோலே. 10.1.4-36.

படிமா - எடுத்துக்காட்டு. நம்மோடு ஸஜாதியர்பக்கல் பரிமாறின தன்றோ நமக்குப் படிமா, 10.4.5-36.

படியாணி - ஆணிப்பொன். படிச்சோதி - படியாணியான ஒளி என்னவுமாம். 3.1.1-36.

படுக்கைப் பற்று - 1. சீதனம். தன் படுக்கைப் பற்றான பூமியை 4.5.10-36. 2. அந்தப்புரம். படுக்கைப் பற்றிலே செல்லாதே கொள். பாவை, 4-3.

படுக்கை வாய்ப்பு - படுத்தற்கு நல்ல இடம் கிடைத்தல். படுக்கை வாய்ப்பாலே கிடந்து உறங்க. பெ.தி.3.5.7.

படுகுலைப்படுதல் - குலையிலே பட்டுவிழுதல். பொறுக்க மாட்டாமே படுகுலைப்பட்டார் போலே. 3.3.1-36.

படுகொலையடித்தல் - அடாவடித்தனமாக நடத்தல். படுகொலை யடித்தவனைத் தப்ப ஒரு தார்மிகன் கீழே ஒதுங்க நினைப் பாரைப் போலே. 9.6.0-36.

படுபாடர் - பிடிவாதக்காரர். சொல்லலாம், ஆகாது என்று அறியாதே சொல்லு சொல்லு என்று அலைக்கிற படுபாட ரான உங்களுக்கு நான் எதைச் சொல்லுவது. 5.6.4-36.

படை - அஸ்திவாரம், கடைக்கால். பகவத் விஷயத்தில் இட்ட படை கற்படையிறே. 3.8.5-36.

படைக்குறி - படைகளை எண்ணிச் சரிபார்த்தல். ராவணவதம் பண்ணிப் படைக்குறி காணாநிற்கிற அளவிலே முதலிகளிலே சிலரைக் காணா தொழிய. 3.6.8-36.

படைவீடு - நகரம். படைவீட்டிலே இருக்குமது சுகம். 2.10.7-36?

பண்ணறையன் - பண்பற்றவன். பண்ணறையனாகையாலே நிர்லஜ்ஜனாய் வந்து கொடுநின்றேன். தி.மா.33.

பண்ணை - முறை. நாலிரண்டு பண்ணை வலித்தாலும் மெல் காதுவில். பெ.தி.2.8.3.

பண்பு - அழகு. பரிவட்டப் பண்பிலே. பெ.தி.9.1.10.

பணயம் - ஈட்டுப்பொருள். தனிசுடையார் பணயமெடுப்பாரைப் போலே. பெ.தி.8.2.6.

பணி - 1. தொல்லை. செயல் முடிக்கையிற் பணியுண்டோ. 9.5.1-24. லபித்தாவாகை பெரும் பணியிறே. பெ.தி. 3.5.4. 2. உறுதி. இப்படி ப்ராக்ருத விஷயங்களின் பேரிட்டால் இம்மையில் நீங்கள் ஆசைப்படுகிற க்ஷுத்ர ப்ரயோஜநங்கள் தானும் ஸித்திப்பது பணியில்லை. பெரி.தி. 4.6.0.

பணிக்கொட்டில் - பானை செய்யும் இடம். த்ரௌபதியை மீட்டுக்கொண்டு போகிறபோது தங்கின பணிக்கொட்டிலிலே சென்று முகங்காட்டிக் கூடக் கதறியும் துணையானாப் போலேயும். 9.1.2-24.

பணித்தல் - சொல்லுதல். திருமாலையாண்டான் பணிக்கும்படி. 2.3.3-36.

பணிதி - பேச்சு. ஸ்நிக்த்தமான பணிதியாலும், வடிவில் பசுமையாலும் வாயில் பழுப்பாலும் நாயகனுக்கு ஸ்மாரகமாய் எலும்பை இழைக்கிற கிளியென்னுதல். 1.4.7-36.

பணிப்புடவை - விளிம்பில் வேலைப்பாடுடைய புடவை. காம்பு துகிலவை கீறி - பணிப்புடவைகளானவற்றையும் கிழித்து. பெரி.தி.2.7.3.

பணிப்பூ - வழிபாட்டுக்குரிய மலர். பணிப்பூவிட்டுத் திரிவர்களாயிற்று தேவர்கள் முன்பு. பெ.தி.1.4.1.

பணிமாறல் - படைத்தல். தூவுதல். செவ்விப்பூவைத் திருவடிகளிலே பணிமாற நினையுங்கோள். 10.5.10.9,24. நல்ல புனலொடு மலர்கள் தூவி - நல்ல புனலோடே கூடின மலர்களை ப்ரேமபரவசராய்க்கொண்டு பணிமாறி. 10.2.5.

பணை - கிளை. ஏற்கவே பணையோடு பணைபாயும். பெரி.தி. 3.5.9.

பணைத்தல் - கிளைத்தல். கற்பகச் சோலை போலே இருக்கிறது அநேகம் ஆயிரமாய்ப் பணைத்த திருத்தோள்கள். திருவா.5.

பதம் - இடம். எங்கள் பதத்தைக் கைக்கொள்ளவேணுமென்று. 10.9.9-9.

பதிக்கிடை - அருகில் இருத்தல். பரமபதத்தில் இருக்கில் அஸத்கல்பராவர்கள், அந்தர்யாமியாய் முகந்தோற்றாதே நின்று இரண்டு தலையையும் நோக்கித் தெளிவு பிறந்து, அம்மே என்றால் ஏன் என்கைக்கு, பதிக்கிடை கிடக்கிறபடி. பாவை, 25-6.

பதிப்படை - அருகில் உள்ள வாகனம். பெரிய திருவடியைப் பதிப்படையாக வைத்து வந்து புகுந்து கலந்து, இத்தலையகப்பட்டவாறே அவன் கடுமை போராதென்று அசேதநமான தேரை நடத்துமாபோலே பெரிய த்வரையோடே பெரிய திருவடியை நடத்துகிற க்ருத்ரிமனே! தி.நெ.தா.23.

பதிபடை - அவ்வவ் இடங்களில் கிடந்த படை. பதிபடை கிடந்த மல்லர். பெ.தி.2.5.5.

பயர்த்தல் - வெளுத்தல். உடம்பு வெளுத்துப் பயர்த்து. பெ.தி. 7.3.5.

பயலி - பாலனது செயலையுடையவன். நான் முதலியாகிலும் ஆகிறேன்; பயலியாகிலும் ஆகிறேன். 6.2.6-36.

பயலைமை - பசலைத்தன்மை. விரஹஸஹமல்லாத முலைகள் பயலைமை பூக்க. பெ.தி.3.6.5.

பரப்பறுதல் - சுருக்கமாதல். பரப்பற ஏழு பாட்டாலே. 1.1.0-36.

பரப்பன் - செல்வப் பரப்பையுடையவன்; அதாவது பெருஞ் செல்வன். இத்திருவாய்மொழியில் வாராமைக்கு அடி பரப்பனாகை என்று பார்த்தாள். 6.8.0-36. இதில் தன் ஐச்வர்யப் பரப்பாலே மறந்திருந்தான் அத்தனை என்று இருபத்துநாலாயிரப்படியில் வருதல் காண்க. 6.8.0-24.

பரம்புதல் - பரவி. இவை பரம்பி. பெ.தி.3.5.5. ஆதித்ய கிரணங் கள் புகுந்து பரம்பாது பகலாயே இருக்கிற மலை முலைஞ்சு களிலே. பெ.தி.1.2.8.

பரமபதம் - வைகுந்தம். இட்ட வழக்கு பரமபதம் என்கிறார். 10.8.11-36.

பரவைவழக்கம் - செவிவழிச்செய்தி. இவ்வார்த்தைதான், ஸ்ரீநந்தகோபர் வஸுதேவர் பக்கலிலே கேட்டு வந்து சொன்னாராதல், ஸ்ரீமதுரையில் பரவை வழக்கமிங்கே வந்து பிறந்ததாதல். பெரி.தி.2.8.6.

பராக்கு - வேறொன்றில் கருத்தோடு இருத்தல். பராக்குக்கு ஸம்பாவனையுள்ள ஓலக்கத்திலே சொல்லாதே கொள்ளுங் கோள். 6.8.10-36.

பரிகணித்தல் - கணக்கிடுதல். பக்திமான்களில் பரிகணிக்கப் படாதே இருக்கிற எனக்கும் அயத்நஸித்தப் போக்யமே. 2.3.5-9.

பரிசை - இலாபம், ஊதியம். பரிசையாசைப்பட்டு முதலை இழப் பாரைப்போலே. பெ.தி.9.4.7.

பரிமாற்றம் - அனுபவம். அவர்களோடு பரிமாறுமா போலே ஒரு வழியால் வந்த ரஸத்தைத் தந்து விடுகிறிலன். 1.9.3-36. உடனுறவு. அல்லாதவற்றோடு பரிமாறும் அத்தை ஜநநி பக்கலிலேயும் பரிமாறத்தேடும். பெ.தி.1.1.5.

பரியட்ட வாய்ப்பு - அரையாடையின் பொருத்தம். பரிவட்டம் என்றும் வழங்குகிறது. பரியட்ட வாய்ப்பை அநுபவிக்கும் இதுக்கு மேற்பட மற்றொன்றில் போக ஒட்டாது ஆயிற்று இதில் அழகு. பெ.தி.1.2.5.

பரிவட்டம் - அரையாடை, நல்ல பரிவட்டத்தை உடைத்தான அகன்ற நிதம்ப ப்ரதேசத்தையுடைய தோழீ. 5.3.7-36.

பரிவர் - அன்புடையவர். இப்படி ப்ரளயார்ணவத்திலே பரிவ ரொருவரின்றிக்கே தனியே கண்வளர்ந்தருளுகிறவன். தி.ச.வி.22.

பரிவன் - அன்புடையவன். எல்லார்க்கும் பரிவனானவன். 1.5.3-9.

பருக்கை - கோது. அதில் பருக்கை தட்டாதபடி அதின் வாயிலே பிழியுமாயிற்று. பெ.தி.1.2.5.

பல்லி பற்றல் - கிளைத்தல். கண்தோறும் பல்லி பற்றுமாயிற்று வெற்றிலைக் கொடி. பெ.தி.3.1.9.

பலகணி - காலதர், ஜன்னல். பெண்கள் பலகணி வழியே நுழைந்து பார்ப்பாரும் நிற்பாரும். பெரி.தி.3.4.0.

பலகை - கேடயம். வாளும் பலகையும் பொகட்டு. பெ.மடல், கண்ணி, 74.

பலிசை - வட்டி. முதலில்லாதார் பலிசை இழக்குமித்தனை யன்றோ. 1.4.2-36.

பழம்புணர்ப்பு - 1. பழையநூல். பழம்புணர்ப்பான வேத மென்னுதல். 5.9.3-24. 2. வேதம். வேத ஒலியும் - அவன் நெஞ்சொழிந்து பழம்புணர்ப்புக் கேளா நின்றான் காணும். 7.3.1-36.

பழு - படி. ஆகையிறே ஒரு பழு ஏறப்பெற்றது. 10.6.5-36.

பழுது - தவறு. தர்மாதர்மங்கள் எல்லாமறிந்து, ராஜ்யத்தில் ஒருவர் ஒரு பழுதும் செய்யாதபடி நோக்கிக் கொண்டு போந்தவனாகையாலே. பெரி.தி.3.10.3.

பழுப்பு - சிவப்பு. கோவைக் கனிவாயில் பழுப்பிலும். பாவை, 29-6.

பழையவர் - முன்னோர். என்று பழையவர்கள் நிர்வாஹம். தி.வி.24.

பள்ளநாலி - பள்ளமடை. நீருக்குப் பள்ளநாலியான கோயில். தி.மா. 20.

பள்ளியந்துலாம் - தண்டிகை; பல்லக்கு. அந்த:புரக் கட்டிலிலே தெருவிலே பள்ளியந்துலாத்திலே ஏறி. பெ.தி. 8.1.8.

பற்றாசு* - 1. அடி, காரணம். அதுவே பற்றாசாக எனக்கு முகம் தந்து. க.நு.சி. 4, அழகு. ஆந்ருசம்ஸ்யம் பற்றாசாகத் தூதுவிடுகிறாள். 6.8.0-36. 2. பற்றுக்கோடு. எனக்குப் பற்றாசு ஆனார் இருக்க. பெ.தி. 8.1.5.

பாங்கு - உகப்பு (பவ்யம்) தன்னை அவர்களுக்குப் பாங்காக நியமித்து, அவர்களோடே பரிமாறுமென்று. 1.8.0-24.

பாசுரம் - பேச்சு; வார்த்தை. என்றாய்த்து அவர்கள் பாசுரம். 10.9.9-36.

பாஞ்சு - பாய்ந்து என்பதன் சிதைவு. மேய்ந்து என்பது பொருள். ஏறப்பாஞ்சு. பெ.தி. 10.7.12.

பாட்டம் - மழையளவு. ஒருபாட்டம் மழை விழுந்தாற் போலே. பெ.தி. 2.7.8.

பாட்டுண்கிறவன் - பாடப்படுபவன். கர்த்தாவுக்கும் கவிக்கும் பாட்டுண்கிறவனுக்கும் உள்ள மூன்று குற்றத்தையுஞ் சொல்லுகிறது. 1.6.11-24.

பாடாற்றல் - வருத்தம் தாங்குதல்; சகித்துக்கொள்ளல். ஸ்நேஹியுமான அவள் கையாலே கட்டுண்டது பாடாற்றலாமிறே. சி. மடல், கண்ணி, 37.

பாடிகாப்போர் - தலையாரி. பாடிகாப்பாரே களவு காணுமா போலே. 5.3.3-36.

பாடு - பக்கம். என்பாடு வருகைக்காக. 10.4.4-9.

பாத்தம் - தகுதி. து:க்காநுபவத்துக்குப் பாத்தமில்லாத என் மகளைச் சொன்ன இப்படியே பிச்சேறப் பண்ணினான். 4.4.4-9.

பாரித்தல் - பெரிதும் விழைதல். வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம் என்று பாரித்து, பாரித்தபடியே பாகவத சேஷத்வ பர்யந்தமாக வாசிகமாக அடிமை செய்து தலைக்கட்டுகிறார். 1.0.0. இரண்டாம் ச்ரிய:பதி.

பாரிப்பு - மிகுந்த விழைவு; மனோரதம். ஸர்வேச்வரனுடைய பாரிப்புக்கு அவதி என்னோ? 10.7.3-24.

பாலிபாய்தல் - பிரிந்து போதல். பலர் பக்கலிலே பாலிபாயக் கடவதான ஸ்நேஹத்தை. 1.4.4-36.

பாழ்ந்தாறு - படுகுழி. என்னுடைய தண்மையாகிற பாழ்ந்தாறு நிரம்பும்படியான பூர்த்தியை உடையவர் என்னும் அத்தனை. க.நு.சி. 4, பெரி.

பாழி - 1. இழியும் இடம். உணர்ந்தாராகில் தம்முடைய பாழியான க்ருஷ்ணாவதாரத்திலே மண்டுமித்தனை. தி.வி. 21. 2. இயற்கை. இந்தக் க்ரித்ரிம பக்தியானது பண்டே உன் பாழியிறே, இங்கும் அது தன்னையே முடிய நடத்தினாய் அத்தனையிறே. தி.மா. 24.

பாற அடித்தல் - சிதற அடித்தல். அஸுரவர்க்கங்களைப் பறக்க அடித்தாப் போலே, இந்த்ரிய வச்யதையையும் பாற வடித்துத் தரவல்லையே? 7.1.10-24.

பிச்சர் - பைத்தியக்காரர். பிச்சராய் இரா நின்றார்கள். பெ.தி. 7.1.8.

பிச்சன் - பித்தன். பிள்ளை அவற்றைச் சொன்ன சொல் தன் அளவிலே பர்யவஸிக்கும்படி நிற்கிற பெரும்பிச்சன். பெ.தி. 3.6.3.

பிச்சு - பித்து. பிச்சேற பண்ணுமவள் பேச்சும் அஸஹ்யமாம். பாவை, 2-6.

பிசுகுதல் - 1. கலைதல். ஸம்ச்லேஷத்தாலே பிசகின திருத்துழாய் மாலையைச் சூடிக்கொண்டு. பெரி.தி. 3.7.5. 2. தயங்கு தல். மத்த கஜம்போலே பிசகி நின்று உலாவா நின்றது. அம. 4, அழகு. 3. வருந்துதல். இவனைக் கொல்லில் ருக்மிணிப் பிராட்டி மநஸ்ஸு பிசகும் என்று. பெரி.தி. 3.9.3.

பிசல் - தசை. பிடரியிற் பிசல் பெருகும்படி. 3.5.7-12.

பிடாகை - வயல். இதுவாயிற்று ஊரும் பிடாகையுமிருக்கும்படி. பெ.தி. 3.9.5.

பிடாம் - போர்வை. படாம் என்பதன் திரிபு. பிடாத்தை விழவிட்டு வடிவழகைக் காட்டினான்; திருத்திரை எடுத்தாப் போலே கூப்பிட்டேன், அது கவியாயிற்று. 7.9.1-24.

பிடார் - வன்மை, உயர்வு. கங்கையை ஜடைமேலே அடக்கினேன் என்னும் பிடாரைக் கொண்டு ஸர்வேச்வரனைக் காண லாமோ? தி.மா. 44.

பிணந்தின்னி - பேய். பிணந்தின்னியையும் அகப்பட ஆழங்கால் படுத்தும் பருவம் இவளை விடுமோ? தி.நெ.தா. 16.

பிணையல் - முடிச்சு. பல பிணையலை உடைத்தாயிருக்கை. க.நு.சி. 1, நம்பிள்ளை.

பிரட்டு - மாறான செய்தி. இந்த ஸந்யாஸி பிரட்டுப் பாடத் தொடங்கினார். 6.2.2-36.

பிராட்டி - 1. தேவி. பிராட்டியோடே கூடவந்து ஒரு பிராட்டி தசையை ப்ராப்தராய். பெ.தி. 3.6.0 2. சீதை. இராவணன் பிராட்டி பக்கல். 3.6.0-36.

பிள்ளு - பிள்ளைத்தன்மை. தன் பிள்ளழியாமே எதிரிகளை முடிக்கும்படி. தி.வி. 14.

பிள்ளைப்பணிகள் - 1. குழந்தைக்குரிய விளையாட்டுப் பொருள்கள். தேவதாவர்க்கம் க்ருஷ்ணன் திருவவதரித்தபோதே தொடங்கித் தொட்டில்கள் தொடக்கமான பிள்ளைப் பணிகள் வரவிட்டு. பாவை, 20-6. 2. குழந்தைக்குரிய அணிகலன்கள். பிள்ளை தலைகாயாமல் தப்புகைக்கு எண்ணெய் பெறலாம், பிள்ளைப்பணிகளானவை பெற்றுப் பூட்டலாம் என்றாய்த்து - பிறர் பேரிடுகையில் இழிகிறது. பெரி.தி. 4.6.3.

பிற்காலித்தல் - பின்வாங்கிச் செல்லல். நரஸிம்ஹமும் பிற்காலிக்க வேண்டும்படியிருக்கை. பெ.மடல், கண்ணி, 101.

பிற்கூழை - பின்வரிசை. அவன்தான் முற்கொழுந்திலே வாராதே பிற்கூழையிலே நிற்குமாய்த்து, நடுவுபடும் அலமாப்புக் காண்கைக்காக. 9.9.0-36.

பிற்பாடர் - பின்வந்தவர். பிற்பாடர்க்கு உதவும்படி. 5.9.3-36.

பிற்பாடு - தாமதம். பிற்பாட்டுக்கு நொந்து ஆனைக்கு உதவ வந்து. 1.5.0-36.

பிறகுவாளி - பின்புறம் சாத்தும் ஆபரணம். பெருமாள் புக்கு அருளினால் பின்னும் முன்னும் நின்று வைத்த அனைத்தையும் பின்பு பிறகுவாளியையும் கண்டேத்துகையிலே துணிந்தேன். இ.தி.65.

பிற்பாடை - பின்னால் வந்தவள். பிற்பாடையாம்படி. 5.3.7-36.

பிறங்குதல் - மாறுபட்டு நிற்றல். எம்பெருமான் ஸந்நிஹிதனாய் இருக்கச் செய்தே பிறங்கி ஆழ்வார் தாம்பட்ட துக்கம் படவேண்டா என்கிறார். 6.2.11-9.

பிறவிப்பாடு - பிறப்பு. பிறவிப்பாடும் பின்தொடருமிறே. 10.3.4-36.

பின்புத்தை - 1. பின்பு. தனக்கேயாக என்ற பின்புத்தை எனக்கே யிறே. 2.9.4-36. 2. பின்பக்கம். பின்புத்தைக்கு எட்டம் போராமையாலே. 4.1.5-24.

பின்னாட்டுகை* - பின்னும் தொடர்கை. தாம் அநுபவித்த திருப் பவளத்தின் வைலக்ஷண்யம் பின்னாட்டுகையாலே அந்தத் திருவதரத்தை உடைத்தான திருமுகத்தைப் பிரித்துச் சொல் கிறார். அம.8, அழகு.

பீங்கான் - மட்பாண்டம். மஹாப்ருதிவி ஒரு பீங்கானுக்கு உட்பட்ட சந்தந பங்கம் பட்டது படா நின்றது. 7.2.1-36.

பீட்கன்று - அன்று ஈனப்பட்ட கன்று. பீட் கன்றுபோலே படுக்கையோடே கொடு போந்தபடி. பெ.மடல், கண்ணி,63.

பீறல் - கிழிதல். இட்ட சட்டை பீறும்படியாய் இருக்கை. 6.6.4-24

புகர்* - ஒளி. பஞ்சசக்தி மயமான புகரைச் சொல்லுகிறது. 1.1.1-36.

புகர்த்த - ஒளிபெற்ற. அவனும் அவளுமாய்க் கலந்து புகர்த்த வடிவு எங்கே பெற்றிகோள். தி.வி.32. பொன்போலே புகர்த்துக் கறுத்து மேகம் போலேயிருக்கிற திருமேனியுடைய க்ருஷ்ணனே. தி.ச.வி.103.

புகடு - போடு. என் கையிலே புகட்டுவை. 9.1.2-24.

புகலறுதி - புகலின்மை (அநந்யகதி). திறந்த வாசல் எல்லாம் நுழைந்தாலும் நம்மைக் கொள்வார் இல்லாத புகலறுதியை உடையோம். தி.மா.28.

புகுகிறார் - போகிறார். இரங்காதவரோ கேட்டு இரங்கப் புகுகிறார் என்னுமத்தாலே. 1.4.4-36.

புகுருதல் - புகுதல். புகுரப் பார்த்தார் உண்டாகில். 5.2.5-36. வெளிநிலத்திலும் சிலர் புகுராதபடி பண்ண வல்லனாயிற்று. பெ.தி.1.2.2.

புகுதி - புகுவது. அவளுக்கு வழிப்போக்கோடு, ஊரில் புகுதி யோடு, அவன் தன்னைக் காணுமத்தோடு வாசியற எல்லாம் உத்தேச்யமாய் இருக்குமிறே. 6.7.6-36.

புடரி - பிடர் என்பதன் கொச்சை. நரகவாஸம் கர்ப்பவாஸம் முதலானவை புடரியைப் பிடித்துக்கொண்டு நிற்க, கேவலம் தேஹபோஷணபரராய் இருக்குமவர்கள். தி.மா.14.

புடவை - ஆடை. நல்ல புடவைகளையும். பெ.தி.10.8.1.

புடை - 1. தன்மை, வகை. இப்புடைகளிலே பலவற்றையும் சொல்லி. பெரி.தி.2.9.0. குவளை மேகம் என்றாப் போலே. இன்னும் இப்புடைகளிலே சொல்லப்படுகிற வடிவை. பெ.தி. 4.7.1. 2. கூன், புடைப்பு. புடையுடைமையாலே கூனியாய் 4.5.9-12.

புடைவை* - ஆடை. புடைவையை முடிந்து எறட்டுக் கூத்தாடினான். 10.9.4-36.

புண்ணறை - புண்பட்ட இடங்கள். புண்ணறைகளைக் காட்டும் இத்தனை. பெ.தி.9.5.8.

புண்பாடு - வருத்தம். ஸ்ரீபரதாழ்வான் ராஜ்யத்துக்கு நிமித்த பூதனானேன் என்றத்தாலே ஒரு புண்பாடும். 5.8.0-36.

புணர்ப்பு - பாட்டு; வேத கோஷத்தைக் கேட்டவாறே, நாயகன் பேர் வைத்துப் புணர்த்த புணர்ப்புக் கேட்டாப்போலே காணும் அஸஹ்யமாய் இருக்கிறபடி. 5.9.3-36.

புத்தகம் - புதிய வீடு. புத்தகங்களை அகவாய் பெருச்சாளி அறுத்துக் கிடக்கத் தெருவுபாட்டை நூலும் துரும்பும் வைத்து அலங்கரிக்குமா போலே. தி.மா.6.

புதிசு - புதிது என்பதன் கொச்சை. புதிசாய் இருக்கிற மதிளையுடைய. பெ.தி.2.8.10.

புதுக்கணித்தல்* - அழகுபெறல். இவரைப் பெற்ற பின்பு புதுக்கணித்த தென்னுதல். 1.5.10-36.

புதுக்கணிப்பு - புத்தழகு. அத்தாலே வடிவில் பிறந்த புதுக்கணிப்பு. தி.கு.தா.9.

புதுக்கோமுற்றவன் - புதிய அரசன். வேறேயொரு படைவிடும் ஒரு புதுக்கோமுற்றவனும் இடவேணும். பெ.தி.1.6.6.

புதுத்தண்டன் - புதிய வணக்கம். புதுத்தண்டன் கண்டு இறுமாந்து விளைவது அறியாதே வரம் கொடுத்தபடி. மு.தி.45.

புரணி - சாரமற்றது. சோலையின் போக்யதை புரணி என்னும்படியாய்த்து ஊரில் போக்யதை இருப்பது. தி.மா.17.

புரவர் - தலையாரி. ஈச்வரனுக்குப் புரவர் போலே இவ் ஆத்மாக்கள் செய்யும் கர்வங்களை ஆராய்க் கடவரான சந்த்ராதித்யர்கள். மு.தி.75.

புரித்தல் - திருப்புதல். அதின்வாயிலே கையையிட்டுப் புரித்தான். பெ.தி.2.10.7.

புரிந்துபார்த்தல் - விரும்பிப் பார்த்தல். கூடப் போருமித்தனை என்று பின்தொடர, புரிந்துபார்த்து, 'ஆய்ச்சி, நீர் என்னைப் பின்தொடருகிற இடம் தர்மஹாநி கிடீர்' என்று முகத்தைப் பார்த்து ஒரு வார்த்தை அருளிச்செய்ய. 9.3.0-36.

புரிப்பு - கோணமான வளைப்பு. புரிப்புடைத்தான மதிள் என்னுதல். பெ.தி. 2.7.6.

புரை - 1. வேற்றுமை. அவதாரந்தன்னில் புரையில்லை. 1.3.0-36. பரார்த்தமாகத் தாழ நின்றோம் என்று தன் பக்கலிலும் புரையின்றிக்கே இருக்கை. 1.3.2-24,36. 2. இடம். இருட்டுப் புரைகளிலும். 4.1.1-36.

புரைதல் - முளைத்தல். முலை புரைகிற இத்தனை. பெ.தி.8.2.9.

புரையறுகை - வேற்றுமையின்றி இருத்தல். அதாவது ஒத்திருத்தல். ஸஜாதீய பாவத்தில் புரையறுகையும். தி.ச.வி.82.

புரையறுதி - வேற்றுமையின்மை; அதாவது ஒத்திருத்தல். முன்பு நின்ற நிலையில் புரையறுதி தோற்றுகைக்காகவிறே. பெரி.தி 4.1.2.

புறணி - புறக்கணிக்கத்தக்க சிறுமையுடையது. தம்முடைய அர்த்தித்வாதிகள் புறணியாய் இருக்கிறபடியை. 8.7.0-9.

புறத்தொழில் - வெளித்தொழில். புறத்தொழிலைக் கொள்ளுவோம். 1.6.5-24.

புறமடக்கி - பானையைத் தட்டும் கட்டை. இவர்கள் இருவரும் இரண்டு கார்யத்துக்குக் கடவராய் அதிகாரிகளாயிறே இருப்பது, குசவனையும் புறமடக்கியையும் போலே. திருவா.7.

புறவாய் - வெளிப்பகுதி. அகவாயும் இருண்டு புறவாயும் இருண்டு இருக்க. 6.7.7-36.

புறவீடு - மற்றொருவர் இடம்; பரஸ்த்தாநம். பெருமாள் திருவுள்ளமாய், ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் திருமாளிகையிலே புறவீடுவிட்டிருக்கிற அளவிலே. பெரி.தி. 4.4.7.

பூசல் - சண்டை; போர். போன இடமெங்கும் பூசல் விளைக்கு மவனிறே. 10.3.7-36.

பூசல்களரி - போர்க்களம். பூசல்களரியில் தேர்த்தட்டில் வார்த்தை போலேயும். பாவை, 23-6.

பூசல்தலை - போர்க்களம். பெருமாள், ராவணன் பூசல்தலையில் நிராயுதனாய் நின்றபடியைக் கண்டு கொல்லாதே, 'இன்றுபோய் நாளை வா' என்றாரிறே. பெரி.தி.4.5.8.

பூண்கட்டுகை - வலிவூட்டுகை. ஸம்ஸாரத்தைப் பூண்கட்டுகையிறே. 10.8.2-36.

பூண்டு - செடி. ஸ்ரீப்ருந்தாவநத்தில் எழும் பூண்டுகளும். 10.3.9-24.

பூணித்தல் - உறுதிமொழி பூணுதல். எனக்குத் தருவானாக என்னோடே பூணித்து. 10.8.5-24.

பூரித்தல் - நிறைத்தல். திருமஞ்சநத்தைக் கடாரத்திலே பூரித்து வைத்தேன். பெரி.தி.2.3.3.

பெண்டாட்டி* - பெண். கூனி சாந்துகொண்டுபோகாநிற்க, 'ஏடீ, சாந்து கொண்டுவா' என்ன, பெண்டாட்டியாகையாலே மறுக்க மாட்டாதே...தண்ணிய சாந்தைக் கொடுக்க. தி.வி. 21.

பெண்பிள்ளை - பெண். கூந்தலையுடைய பெண்பிள்ளை. 6.6.3-9.

பெண்பெண்டுகள் - சிறுமியும் மணமான பெண்டுகளுமாகியவர்கள். பெண்-சிறுமி; பெண்டு-மனைவி. பெண்பெண்டுகளும் நோக்கலாம்படி ஆயிற்று ஊர் அரண். பெ.தி.1.2.2.

பெரியகிழாயர் - பெரியவர். அபரிச்சேத்யம் என்று அறியில் அறியலாம், பெரியகிழாயர். மு.தி.56.

பெரிய திருநாள் - திருவரங்கத்தில் நடைபெறும் சிறப்பான திருவிழா. இரண்டருகு உள்ளாரும் மலைக்கப் பெரிய திருநாளில் போலே உலாவித் திரியலாயிருக்க. பெ.மடல், கண்ணி, 18.

பெரிய திருவடி - கருடன். பெரிய திருவடி தோளில் இருப்பை மாறி என் தோளிலே இராநின்றான். 1.9.6-24.

பெரிய பிராட்டியார் - திருமகள். பெரிய பிராட்டியார் பக்கல் போலே என்பக்கல் அத்யந்தாபிநிவிஷ்டனாய். 10.10.6-36.

பெரிய பெருமாள் - திருவரங்கப் பெருமான். பெரிய பெருமாள் திருவடிகளில் இவர் புகும்போதும். 4.6.10-36.

பெரிய முதலியார் - பெரிய தலைவர். பெரிய முதலியார் வார்த்தை. 6.2.2-36.

பெருங்குடியாட்டம் - கிராமண்யம்; ஊராட்சி. நடுவில் பெருங்குடி யாட்டமும் என்னென்பதுதான்? 3.5.6-36.

பெருந்திருப்பாவாடை - வே த ம். பெருந்திருப்பாவாடையிலே மண்டுகிறார். பெரி.தி.5.1.6.

பெருநிலைநிற்றல் - சான்றாக நிற்றல்; உதவியாக இருத்தல். பெருநிலை நிற்பதறியப் பெற்றிலோம். 6.2.8-36; அதுக்குப் பெருநிலை நின்ற. 6.2.5-24.

பெருநேர்த்தி - பெருமுயற்சி. இழிந்த துறையில் பெருநேர்த்தி பட்டாலும் ஒரு பயனில்லை. 4.6.4-24.

பெரும்பாரிப்பு - பெரும் விழைவு. பெரும்பாரிப்பை உடையை யாய். 6.10.1-9.

பெருமாள் - இராமன். பெருமாள் காடேறப் போனார். பெரி.தி. 3.9.5.

பெருமிடுக்கன் - மிகுந்த வலிவுடையவன். பெருமிடுக்கனான ராவணனை. 2.3.11-24.

பெருவிடாய் - மிக்க விழைவு. பெருவிடாயையுடைய ஆழ்வார் சொல். 3.8.11-24.

பெருவிரகன் - மிகுந்த திறமையுடையவன். பெருவிரகனான ஸர்வேச்வரன். 4.8.6-36.

பெறாப் பேறு - அரிய பாக்கியம். இது என்ன பெறாப் பேறு. 1.9.6-36.

பெருவிலையன் - மிகுந்த மதிப்புடையது. குளிர்ந்து பெருவிலைய னான ரத்நம் போலே. 1.10.1-24.

பேகணித்தல் - கலங்குதல். தாமரைப்பூப் போலே இருக்கிற கண்கள் அச்சத்தினாலே நீர்மல்கும்படி 'அடிபடுகிறது' என்று பேகணித்து நின்ற நிலையும். 5.10.3-9.

பேச்சாட்டுத்துணை - பேச்சுத்துணை. பேச்சாட்டுத் துணை யாகச் செல்ல. 7.5.7-9.

பேய்த்தேர் - கானல்நீர். பேய்த்தேரையும் வெயிலையும். 4.1.2-36.

பேரணி - பெரிய படை. முன்பு தூசியேறின பேர்க்கு உரமாக நின்ற பேரணி உறுபூசலானவாறே திரள அமுக்குமாபோலே. 9.9.2-36.

பேரளவு* - பேரறிவு. பேரளவுடையரான சக்ரவர்த்தி திருமகனும் 1.4.0-24.

பேரவிருத்தல் - பிரிந்திருத்தல். அபிமத விஷயங்களோடு கலந்த போது அவற்றை நினைத்து, பேரவிருந்த போது அவற்றை மறந்திருப்பர்கள். 5.3.3-36.

பேரோலக்கம் - பெரிய அவை. திருநாவாயிலே பேரோலக்கமாக இருக்க. 9.8.3-36.

பேறு* - லாபம். பேறு இழவு அறியும் நீங்களும் செய்யுமதோ. 3.9.5-36.

பையல்* - பயல். இராவணன் துரியோதனன் போன்றோரை இழிவுதோன்றப் பையல் என்று குறிப்பர். பையல் தானும் ஸ்த்ரீகளுமாய் இருக்கிற இருப்பை. 2.9.10-36.

பையாத்தல் - பயந்தோன்ற நிற்றல். நெய் களவு போயிற்று என்றாள். அவ்வளவிலே பையாக்க விழிக்கத் தொடங்கினான். 5.10.3-36.

பையாப்பு - அச்சக்குறி. வெண்ணெய் களவு போயிற்று என்ற மாத்ரத்திலே இவன் முகத்தில் பையாப்பைக் கண்டு தாயார் சீறி. மூ.தி.91.

பொகடுகை - போடுதல்; விழுதல். உன் திருவடிகளிலே நான் பொகட்டு. 5.8.10-36. என்னைப் பொகட்டுப் போனான். 9.7.7-36.

பொகடு சரக்கு - கழிக்கப்படும் பொருள். இப்பொகடு சரக்கைக் கொள்வாரில்லையிறே. 8.7.6-24.

பொசிதல் - பாய்தல். அவ் அநுபவ ஜநித ப்ரீதியானது புறம் பொசியாதபடி அடக்கிப் போந்தோம். பாவை, 8-3.

பொடிதல் - கோபித்தல். பொடிய விரகுண்டோ? பாவை, 28-3.
பொடிவார் - கோபிப்பார். நிஷேதிப்பாரும் பொடிவாருமாக. 7.3.0-9.

பொத்தல் - செய்தல்; நிகழ்த்தல். நெய்யாடல் பொத்தப் பெற்றது இல்லை. பாவை, 25-6.

பொய்த்தரவு - பொய்யோலை; கவிபாடினால் தான் தருவது ஒன்று இல்லாமையால், நூறு கற்றையாதல் ஒரு பொய்த் தரவாதல் ஆயிற்று எழுதுவது. 3.9.0-36.

பொல்லாங்கு - தீங்கு. நீயுமான இடத்திலே பொல்லாங்குகள் விளையும். 10.3.9-36.

பொல்லாநிலம் - சுடுகாடு. உங்களைப் பொல்லா நிலத்திலே இடுவதற்கு முன்னம். தி.பல். 4.

பொளிதல் - சிதைவாகப் போதல். கண்ட இடமெல்லாம் பொளிந்து உபயோகார்ஹம் இன்றிக்கே போகட்டுக் கிடந்தது ஒன்றை எடுக்கும். 4.1.1-24.

பொளிந்த பாண்டம் - சிதைந்த பாண்டம். பொலிந்த பாண்டங் களைக் கொண்டு. 4.1.1-9.

பொற்களரி - பொன்பணி செய்யும் இடம். கரியும் முத்தும் நெருப்பும் பொன்னுமாயப் பொற்களரி போலேயாயிற்று வயலடைய இருப்பது. பெ.தி. 2.10.3.

பொற்கென்று தோற்றல் - பொன்மயமாகத் தோற்றல். மாடங் கள் ஓங்கி உயர்ந்து பொற்கென்று தோற்றிற்று. க.நு.சி. 5, அழகு.

பொறி - பொறிக்கப்பட்ட எழுத்து. உங்கள் தலையோட்டில் பொறி. பெ.தி. 11.5.1.

போக்கடி - 1. போக்கிடம். என் தசையைக் கண்டு இதுக்கு ஒரு போக்கடி பாராதே. 1.4.4-36. 2. கழுவாய். அநர்த்தத் துக்குப் போக்கடி சொல்லாய். 3.2.1-36.

போக்குவீடு - வெளிச்செல்லும் வழி. அவ் அநுபவத்துக்குப் போக்குவீடாக...என்கிறபடியே பாடி விஸ்த்ருதராகை யாகிற ஸம்பத்தைப் பெறவேண்டியிருப்பீர். 1.6.1-24.

போகடுகை - போடுதல். ஆஸுர ப்ரக்ருதிகளின் மேலே போகடும்படியான சுத்தியை உடையவனே. 2.6.1-36.

போச்சுது - போயிற்று என்பதன் கொச்சை. பரிச்சேதிக்கப் போச்சுது இல்லை என்றபடி. சி.மடல், கண்ணி, 11.

போட்கன் - உள்ளீடற்றது. அவன் பக்கலுள்ளது போட்கனாக வுமாம். 1.5.0-36. போட்கனாய் இருக்கிற ஆபர்ண விஷயங்களை. க.நு.சி. 4, நம்பிள்ளை.

போது - பொழுது; காலம். அறப் போதோடே புறப்பட்டு வரும்படியன்றோ எங்கள் திவரை இருந்தபடி. பாவை, 29-6.

போது செய்தல் - தோன்றுதல். மிடற்றைச் சொல்லாதே, நரம்பைச் சொல்லிற்று - கர்மத்தாலே போது செய்யாதது ஆகையாலே. 2.3.7-24.

போதுபோக்கு - காலக்கழிவு (காலக்ஷேபம்). போதுபோக்கு கைக்கு. பெ.தி. 4.7.2.

போய்த்து - போயிற்று என்பதன் கொச்சை. என் பிராண னோடே போய்த்திறே. 9.5.8-36.

போர - 1. வர. ஓர் இருப்பைக் குலைந்து போரக் கடவையான பின்பு. 10.3.10-24. நீயும் என்வழியே போரப் பார். 10.6.1-24. 2. மிகவும். நீர் நம்மைப் போர இன்னாதாகா நின்றீர். 4.7.7-36. 3. ஆக. திருவுகிருக்கு இரைபோர வளர்ந்த மார்வு. பெ.மடல், கண்ணி, 102.

போராதிருக்கை* - போதாதிருக்கை. எட்டம் போராதிருக்கை. க.நு.சி.1, பெரி.

போராது* - 1. போதாது என்பதன் கொச்சை. எட்டுத்திக்கும் சூழ இடம் போராது. மூ.தி. 90. 2. பொருந்ாது. ஆத்ம குணங்களுக்குப் போராது. பெ.தி. 11.2.9. 3. நீங்கமாட்டாது நெஞ்சத்துப்போராது நிற்கும் பெருமாளை. 3.8.7-36.

போராய் - வாராய். இங்ஙனே போராய். 2.8.1-36.

போரு - வா. ஸ்ரீபாதத்திலே ஆச்ரயிக்கப் போரு. 2.3.2-36.

போரும்* - 1. போதும் என்பதன் கொச்சை. உஜ்ஜீவநத்துக்குப் போரும் மின்னும்படி இருக்கிற பத்துப்பாட்டையும். பெரி.தி. 3.8.10. 2. ஆகும். அத்தசையில் சாபலத்தோபாதி போரும் இப்போதை விரக்தியும். 9.9.3-24.

போருவார் - செல்வோர். ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணி என்றும் இதுவே யாத்ரையாய்ப் போருவார் பெறும் பேற்றைப் பெற்றேன் என்கிறார். பெ.தி. 1.1.9.

போழ்க்கன் - உள்ளீடற்றது. இவ்வார்த்தை போழ்க்கனாய் இருக்கையன்றிக்கே. ப்ராப்தி ஸமயத்திலும்...போக ஸாம்யத்தையும்...தேஹ ஸாம்யத்தையும் கொடுத்திறே வைப்பது. பெ.தி. 5.8.1.

பையாக்க - அச்சம் தோன்ற நெய்களவு போயிற்று என்றாள். அவ்வளவிலே பையாக்க விழிக்கத் தொடங்கினான். 5.10.3-36.

மச்சம் - அடையாளம்; தட்டார் வெட்டி வைக்கும் பொன். நாட்டுக்கு மச்சமாகப் பெண்பிள்ளை பெற்ற பாக்யவான். பெ.மடல், கண்ணி, 65. தேவதாந்தரபஜநம் பண்ணு வார்க்கு பலமிது என்னுமிடத்துக்கு மச்சமாகவும். தி.பல்.7.

மட்டம் - குறைவு. தன் நிலத்தில் நின்றபோது மணம் மட்டமாய், திருக்குழலிலே ஏறினவாறே இரட்டிற்றாயிற்று இருப்பது. பெ.தி. 8.4.9.

மட்டு - மட்டம்; அளவு. தான் அரைமட்டு நீரிலே இழிந்து பின்னே கையைக் கட்டிக் குனிந்து நின்று தண்ணீர் பருகக் காட்டும் ஆய்த்து. நா.தி. 14.1.

மடக்கோலை - திருமுகம். பாண்டவர்கள் தூதுவிடுகிறபோது கட்டிவிட்ட மடக்கோலை இன்றும் நம் பக்கலிலே அன்றோ கிடக்கிறது. அம. 6, அழகு.

மடிச்சரக்கு - புடவை. கைக்கடங்கினத்தையும் (வளையல்) கொண்டு மடிச்சரக்கையும் கொண்டு போனான். 9.7.7-36.

மடிதடவுதல் - திருடுதல். உடனே கிடந்தவனை மடிதடவினான். 7.9.1-36.

மண்டுதல் - ஈடுபடுதல். இதர விஷயத்திலே மண்டின என் மநஸ்ஸிலே. பெரி.தி. 5.4.8.

மண்ணீடு - மண்ணுக்குச் சமம். இதடைய மண்ணீடாய்க் கழிந்தது ஆயிற்று. பெ.தி. 2.7.6.

மண்பாடு - மண்ணின் தொடர்பு. மண்பாட்டாலே ராமபக்தி உண்டாமா போலே. 4.9.11-24.

மணவாட்டுப் பிள்ளை - மணப்பெண். மணவாட்டுப்பிள்ளை யாக நினைத்துத் தான் செய்யக் கடவ சீர்மைகள் செய் யுமோ. பெரி.தி. 3.8.5.

மணாட்டி - மணவாட்டி. யமன் தலையிலும் அவன் மணாட்டி தலையிலும் அடியிட்டு ஸஞ்சரியா நின்றோம். தி.மா. 1.

மதிப்பன் - 1. மதிப்பு. பெரிய மதிப்பனைக் கண்டு வைத்து. 6.8.4-24. 2. பெருமையுடையவன். எதிரிகள் கூசிப் போம்படி மதிப்பனாய் இருப்பான் ஒருவனைப் பற்ற வேணுமிறே. 10.1.10-36.

மதிப்பர் - பெருமையுடையவர். ஸ்வர்க்கத்திலே மதிப்பராக. 7.4.5-24.

மதில் - கோட்டைச்சுவர். மதிலையும் துகளாகச் செற்று. 6.1.10-24.

மதிள் - கோட்டைச்சுவர். மதிளையுடைத்தாய். 4.10.4-24.

மயிர்க்கத்தி - முடியை மழிக்கும் கூரிய கத்தி. அகவாய் மயிர்க் கத்தியாய் இருக்கச் செய்தேயும். 9.1.5-36

மயிர்ப்பாடு - முடிபெற்றிருத்தல். பாவநத்வத்துக்கும் மயிர்ப்பாடு உண்டாய்த்தே. தி.மா.23.

மருபூமி - நீரும் நிழலும் அற்ற நிலம். மருபூமியான ஸம்ஸாரத் திலே. 5.5.11-24,36.

மருவுதல் - சேர்தல். வலம்செய்து மருவுங்கள். 2.10.7-6.

மலக்குதல் - அழித்தல். இவளுடைய அவயவங்கள் அவனையுங் கூட மலக்கவல்ல போலே காணும். தி.வி.67.

மலக்குண்கை - கடையப்படுகை. கண்ணன் கையால் மலக்குண்கை யாலேயிறே சுரந்தது. பாவை, 30-6.

மலடுநிற்றல் - பிள்ளையின்றி இருத்தல். சக்ரவர்த்தி நெடுநாள் மலடுநின்று பிள்ளை பெற்றவனாகையாலே...பெ.தி.1.2.6.

மறம் - கோபம். பெண்கள் நெஞ்சில் மறம் மாறும்படி. 6.4.2-24.

மறித்தல் - புறம்பு செல்லாது தடுத்து நிறுத்தல். அறியாதார் பசுக்களை மறிக்க ஊதினான் என்று இருப்பார்கள். 6.2.2-36.

மறு - அடையாளம். பிறையில் மறுவோபாதி ஆய்த்துத் திருவெயிற்றில் கிடந்த பூமி. 10.10.7-24.

மறுகுதல் - அஞ்சுதல். ராஜ லோகம் அடைய இவனுடைய பக்ஷபாதம் இருந்தபடியால் நாம் இவனை வெல்லுகை என்று ஒன்று உண்டோ? என்று குடல் மறுகிற்று ஆய்த்து. 10.6.4-36.

மறுதலைத்தல் - மாறுபடுதல். இவர்களை நலிய வேணும் என்று திருவடியோடே மறுதலைத்து. க.நு.சி.4,அழகு.

மறுநனைதல் - நன்கு நனைதல். கமர் பிளந்த இடமெங்கும் மறுநனையும்படி. 9.4 7-24.

மறுபாடு - மறுபக்கம். தோற்புரையன்றியே மறுபாடுருவ வேர்ப் பற்றிலே நோவுபட்டாயாகாதே. 2.1.1-36.

மறுமாற்றம் - பதில். ஒரு மறுமாற்றம் கேட்டுச் சொல்ல வேணும். 1.4.5-24.

மறுவலிடுகை - மீண்டும் உண்டாதல். ஸம்ஸாரத்தை மறுவலிடாத படி நிச்சேஷமாக்கி. 7.5.10-9. மீள்கின்றதில்லை - இனி மறு வலிடுகிறது இல்லை. 10.4.3-24.

மன்னி - கன்னி. பிற்றை நாள் மன்னியைக் கொண்டுவந்து நீர்வார்த்தார்கள். 5.5.7-36.

மனிச்சர் - மனிதர். மனிச்சர் நோவறிந்து கார்யஞ் செய்யும் இடத்தில். பாவை, 18-6.

மனிச்சன் - மனிதன். அறப்பெரிய மனிச்சன் கிடீர் நான். அம.8, அழகு.

மனிச்சி - 1. மனிதப் பெண். பூதனை மனிச்சியாய் வஞ்சித் தாளன்றே. பெ.திருவந்.14.2. மனிதத்தன்மை அவதரித்து மனிச்சு ஏறிட்டுக் கொண்டு. 4.5.7-24.

மனிசர் - மனிதர். மனிசரையும் பொய் என்றிறே காலனையும் உடனே படைத்தது. பெரி.தி.5.4.4.

மனைதல் - படைத்தல். வனைதல் என்பதன் சிதைவு. உன்னாலே மனையப்பட்ட ப்ரஹ்மா. 3.1.10-36.

மனையடைவு - படைப்பினை எண்ணும் முறைமை. சேஷசேஷிபாவ ஸம்பந்தம் ஒண்டொடியாள் திருமகளும் நீயும் என்கிறபடியே அடைவுபட்டிறே அங்கிருப்பது; இங்கு மனையடைவே 'யானே என்றனதே' என்று அடைவு கெட்டிருக்கும். பெரி.தி.4.4.8.

மாணிக்கப்படி - இரத்தினம் பதிக்கப்பெற்ற மேலாடை. மாணிக்கப்படி சாத்தி. 4.4.3-24,36.

மாந்துதல் - தளர்தல். அது பொறாமல் மாந்தும்படியான ஸ்த்ரீத்வத்தை உடையவள் என்கை. பெரி.தி.3.7.6.

மாம்பழவுண்ணி - மாம்பழத்தோடு தொடர்பில்லாத ஒரு புழு. மாம்பழவுண்ணிபோலே பேரைச் சுமந்து காணவேணும் என்று கூப்பிடா நின்றேன். 1.5.7-24.

மார்வு - மார்பு என்பதன் சிதைவு. ஹிரண்யனுடைய மார்வைப் பிளந்த. 10.6.4-9. மார்பு என்பதும் அருகிக் காணப்படு கிறது, திருமார்பில் முல்லை மாலையாலே. 10.3.5-9.

மாலை - வரிசை. அவன் வடிவுக்குப் போலியான மேகமாலையைக் கண்டு. 9.5.7-36.

மாளிகைச் சாந்து - உயர்ந்த சாந்து. மாளிகைச் சாந்தை மறைக்கப் போமோ. பாவை, 10-6.

மாற்று - மாற்று மருந்து. தீரா மாற்றாலே நெஞ்சைப் புண்படுத்து வைக்கும். 9.5.8-36.

மாறாட்டி - சக்களத்தி. உன் மாறாட்டி மகன் அபிஷேகம் செய்யத் தேடுகிறான். பெரி.தி.4.8.4.

மானாவிச் சோலை - வானம் பார்த்த சோலை. தானே வளர்வதும் அழிவதுமாய் உள்ள சோலை. வானம்பார்த்த நிலத்தை மானாவாரி நிலம் என்பது போலும் வழக்கு இது. மானாவிச்சோலை போலே ஆவது அழிவதான இது போனால் என் செய்யவேணும் என்று இருக்கிறாயாகில், அவ் விபூதியும் அழியுங்கிடாய். 6.9.1-36.

மிகை - எல்லை மீறிய செயல்; அதாவது கொடுமை. பிரீத்த மிகையை உடையவன். 4.8.5-24.

மிகைத்தல் - செருக்கடைதல். இலக்குப் பெற்றால் மிகைக்கும் அத்தனையிறே. 6.1.11-36.

மிடற்றோசை - குரல். உன்கம்பீரமான மிடற்றோசை. பாவை, 19-6.

மிடறு - கழுத்து. மிடற்றுக்குக் கீழ் இழியப் பெற்றோமோ? மு.தி.24.

மிடறு தின்னல் - தொண்டை அரித்தல். மிடறுதின்றால் சொறிய ஒண்ணாதாப்போலே. பெ.தி.1.1.5.

மிடா - அண்டா. காச்சுகைக்காக மிடாக்களோடும். பெரி.தி. 2.9.5.

மிடி - 1. வருத்தம். தன் நிலத்திலே மிடியற வளருகை. பெரி.தி. 3.3.9. 2. வறுமை. உங்கள் மிடி தீர்க்கவல்லர் என்றோ அத்ருஷ்டத்துக்குத்தான் உறுப்பாவர் என்றோ ஏதுக்காகப் பிறர் பேரிட்டீர். பெரி.தி.4.6.3.

மிடுக்கர் - ஆற்றல் வாய்ந்தவர். மிடுக்கரான ராஜாக்களை 6.2.10-36.

மிடுக்கன் - ஆற்றல் வாய்ந்தவன். தரித்துக்கொண்டு நின்ற மிடுக்கனை. பெரி.தி.1.1.8.

மிடுக்கு - ஆற்றல். தோள்மிடுக்கு அறுத்த. 2.4.2-12.

மிதி - மிதித்தல். இவனுக்கு இவ் ஔதார்யம் உண்டாயிற்றது திருமலையின் மிதியாலே. 2.7.11-9.

மிதியடி - காலணி. மிதியடியாம்படி ஸ்ரீசடகோபனாக்கி 5.8.9-24.

மிறுக்கு - தொல்லை; இடர்ப்பாடு. இப்படி மிறுக்குக்கள் எல்லாம் பட்டது. 6.2.0-36. என்னால் பாசுரமிட்டுச் சொல்லப்புகில் மிகவும் மிறுக்குடைத்து. 2.5.10-24.

மிறுங்கியோடுதல் - இசையாமல் திமிரிக்கொண்டு ஓடுதல். அவனுக்குத் திருக்குழல் வாருவதாக உத்யோகித்து அவன் மிறுங்கியோடாமல் இசைந்து நிற்கைக்காக. பெரி.தி.2.5.0.

மினுக்கம்* - ஒளி, மேன்மை, சிறப்பு. கிடையழகால் வந்த மினுக்கம் தோற்றும் படியாக. பெரி.தி.4.9.5. க்ருஷ்ண னுடைய மினுக்கம் பொறாதவர்கள். பாவை, 11-6.

மினுங்குதல் - ஒளிர்தல். மாற்று மினுங்கின. க.நு.சி.5, அழகு.

முக்குதல் - தின்னுதல். மண்ணை முக்கவோ. 2.7.10-36.

முக்குணுக்கிடல் - பணிவு தோன்ற வளைந்து நிற்றல். இளைய பெருமாள் தலைமேல் வைத்த கையும், முக்குணுக்கிட்ட உடம்புமாய் பெருமாள் கண்படும்படி நின்றாரிறே. பெ.தி. 8.2.5.

முகப்பு - 1. முதன்மை. இவள் முகப்பாகத் தன்னுடைய க்ருஹ க்ருத்யமெல்லாம் நடத்தியென்கை. பெரி.தி.3.8.7. 2. முதலில், அஃதாவது தொடக்கத்தில். முகப்பிலே ஒன்றாய் முடிவிலே ஒன்றான செயல்கள் செய்கிறதில்லை. 9.6.3-24.

முகம் - காரணம். இவர்கள்தான் வழி தப்பிப்போய் அநர்த்தப் படுகிற முகம் ஏதோ. 3.6.0-36.

முகமலர்த்தி - முகமலர்ச்சி. அதாவது மகிழ்ச்சி. ஆழ்வாருடைய முக மலர்த்திக்காகவும். க.நு.சி 1, பெரி.

முகவணைக்கல் - முகப்புக்கல். முகவணைக்கல் ஏற்றுவாரைப் போலே. சி. மடல், கண்ணி, 31.

முசல் - முயல். முசல் வேட்டைக்கு. 9.5.0-9.

முசிக்கை - 1. கசங்குகை. உடுத்து முசித்து. பாவை, 27-6. 2. துன்பப்படுகை. கொடுத்துக் கொள்ளுதல், கொடுக்க முசித்தல் செய்கையாகிற குற்றம் இல்லாத கொடையை உடையவன். பெரி.தி. 1.3.5. 3. அஞ்சுதல். வெளியிலே வேளாளராய்த் திரியில் தலையிலே முடியை வைப்பார்கள் என்று ராஜ்யம் பண்ணுகைக்கு முசித்து அந்தரங்கமான ஓலக்கத்திலே ஸேவிக்கிறபடி. பாவை, 22-6. 4. தளர்தல். மூவாது ஒழிகையாவது முசியாது ஒழிகை. 2.8.5-24. 5. படிகை. திருவரையிலே முசிக்கையாலும். தி.பல்.9. 6. வாடுதல். வெறி கமழும்காம்பேய் மென் தோளி-பிள்ளை முசியாமைக் கென்னுதல். மு.தி. 22.

முசிப்பு - வெறுப்பு. அத்யந்த விஸத்ருசங்களை ஒக்குமோ என்று சொல்ல வேண்டின முசிப்பாலே அந்தோ என்கிறார். 6.9.10-9.

முசிவு - 1. குலைவு. திருவரையிற் சாத்தின பரிவட்டத்துக்கு மேலே முசிவற விரித்து. பெரி. தி.3.4.2.2. கசங்குதல். செருக்கராய் இருக்கும் ராஜபுத்ரர்கள் முசிந்த படுக்கையைக் காற்கடைகொண்டு செவ்விப் படுக்கையிலே சென்று ஏறுமா போலே. பெ.தி 3.6.1.

முசுகுவால் - கோலங்கூலம்; வாலுள்ள குரங்கு. முசுகுவால் எடுத்தாற் போலே. 3.1.7-36.

முசுமுசுப்பு - அக்கறை. அவள் சீராட்டி வளர்த்த முசுமுசுப்பு எல்லாம் திருநிறத்திலே தோன்றும்படி இருக்கும் ஆயிற்று. பெ.தி.1.2.12.

முட்ட - 1. முற்றிலும். முட்ட உணர்ந்தவர் பேரழகை உடையவனுடைய குணங்களை அன்றிக்கே கற்பரோ? 7.5.8-9. 2. வரை. தன்னைக் காண வேண்டியிருப்பார்க்குத் திருநாடு முட்டப் போக வேண்டாதபடி அணித்தாகத் திருமலையிலே வந்து நின்றருளினபடியை. 9.3.8-9.

முட்டாக்கிடல்* - மூடிக்கொள்ளல். திருமலையை முட்டாக்கிடப் பூத்துக் கிடக்கும் அத்தனை. 2.10.10-24.

முட்டு - தடை. சிலநாள் சென்றவாறே. முட்டுப்படக் கடவது அன்றிக்கே. 3.10.3-36.

முட்டுக்கோட்டை - வழிதெரியாக் கோட்டை. இம்முட்டுக் கோட்டையிலே அகப்பட்டேன் என்று இருக்கிற என்னை. 4.9.8-24.

முடுகுதல் - விரைதல். தம்மைத் திருநாட்டுக்குக் கொடுபோக முடுகுகிறமையை அநுஸந்தித்து. 10.5.0-9.

முடை - நாற்றம். திருமேனி எங்கும் வெண்ணெய் முடையாயிறே இருப்பது. பெரி.தி.2.4.1.

முத்தக்காசு - கோரைக் கிழங்கு. ஸ்ரீவராக கல்பத்திலே முத்தக் காசை அமுது செய்விக்கச் சொல்லிற்று. பாவை, 5-6.

முத்திறம் - ஆடு, மாடு, எருமை ஆகிய மூன்று மந்தைகள். ஸ்ரீநந்த கோபருக்கு முத்திறம் உண்டே. பாவை, 8-3.

முத்தூட்டு - முற்றூட்டு என்பதன் சிதைவு. முத்தூட்டு ஆக்கினவனை. பெ.தி.7.3.3.

முதல் - அடி; காரணம். ராவண பவநத்திலே இருந்தவளோடே சேரவர்த்தியாநின்றான் என்று சொன்னதிறே, இரண்டாம் பிரிவுக்கு முதல். 7.5.2-24.

முதன்மை - தலைமை; ஆட்சி. முதன்மை செய்த ஊரிலே புடைவையை ஒதுக்கிக்கொடு திரிவதில் அங்கு நின்றும் சடக்கெனக் கால்வாங்குகை அன்றோ அழகு. பெ.திருவந். 30.

முதலி - 1. நாயகன். திருவாசல் காக்கும் முதலியை எழுப்புகிறார்கள். பாவை, 16-6. 2. நம்பி. வாமனநம்பீ என்பதற்குக் கொடுங்கோளால் நிலங்கொண்ட வாமநனான முதலியானவனே என்று உரை கூறப்பட்டுள்ளது. பெரி.தி.2.3.8.

முதவுதல் - மேலாகத் தங்குதல். பருத்து மேல் முதவாதே அமுந்தும் என்று அஞ்சுகிறார். க.நு.சி.1, நஞ்சீயர்.

முதலிகள்* - முதன்மையானவர்கள்; அதாவது சமயச் சான்றோர்கள். எம்பார் கோஷ்டியிலே இவ் ஆத்மாவுக்கு ப்ரதம குரு ஆர் என்று பிறந்ததாய், இருந்த முதலிகளில் சிலர் 'ஆசார்யனன்றோ' என்றார்கள். 2.3.2-36.

முதலியார் - 1. முதன்மையானவர். முதலியாராய் வர்த்தித்த நம் பாபத்தினார்...சிதைந்த முகமாய்த் திரியும் அத்தனையிறே. பெ.திருவந். 69. 2. மேற்சாதியினருள் ஒரு பிரிவு. அவஸ்துவாய்ப் போந்தான் ஒருவன் ஜீவிக்கப் புக்கவாறே, பிள்ளை, முதலியார் என்பர்கள். 4.9.3-24. 3. தந்தையார். ஸ்ரீநந்தகோபர்க்கு ஆயிற்று அஞ்சுவது. அத்தாலே அவனுக்கு அச்சமுறுத்துகைக்காக யசோதைப் பிராட்டி சொல்லும் பாசுரம் ஆயிற்று. உங்கள் முதலியார் சிறுவர்கிடீர். பெ.தி. 10.4.8.

முரடு - வன்மை. முரட்டு மல்லரோடே பொருகிறபடி கண்டால். பெ.திருவந்.41.

முரலுதல் - இசைத்தல். வண்டுகள் தேனைப் பருகி முரலாநின்ற திருக்குழலை உடையளாகையாலே. திருவெழு. அடி, 31.

முரி - அணை. முரிக்குக் கிழக்கு என்னிலும் இவர் நாவீறுதான் இங்ஙனல்லது இராமையாலே யாதல். பெ.தி.5.8.5.

முருடு* - வன்மை. ஹிரண்யனுடைய முருட்டு நெஞ்சை. 10.6.4-36. ஹிரண்யனுடைய முருட்டுடலை அநாயாஸேந கிழித்தான். 10.6.10-36.

முருடர் - கொடியவர். முருடரான ராவணாதிகளை. 2.7.10-36.

முலைச்சுவடு - தாய்ப்பாற் சுவை. இவன் முலைச்சுவடு. அறியாமையாலே போனபடி. 6.4.5-36.

முலைவரவு - தாய்ப் பாலூட்டல். முலைவரவு தாழ்த்துக் திருவடி களை நிமிர்த்த மாத்ரத்திலே. 6.4.4-24.

முழஞ்சு - குகை. முழஞ்சிலே ஸிம்ஹங் கிடந்தது என்னுமா போலே. அம.4, பெரி.

முழிமுழித்தல் - விழிவிழித்தல் என்பதன் கொச்சை. நாச்சியார் முழிமுழிக்க ஒண்ணாதாப் போலே. பாவை, 4-6.

முழுக்காட்டல் - குளிக்கச் செய்தல். எங்களையும் அவனையுங் கூட முழுக்காட்ட வேணும். பாவை, 20-3.

முழுத்தல் - மூழ்கடித்தல். துதிக்கையை முழுத்தச் செய்தேயும் பூவுக்கு ஒரு வாட்டம் வாராதபடி எடுத்துப் பிடித்துக் கொண்டு நின்றது ஆயிற்று. 3.5.1-36.

முற்கூறு - முற்பகுதி. இப்பாட்டின் முற்கூற்றிலே. க.நு.சி. 6, அழகு.

முற்கொழுந்து - முன்வரிசை. பசுக்களின் முற்கொழுந்து வந்து தலைவைக்கச் செய்தே அவன்தன்னை வரக்காணாவிட்டால் ஆற்றப் போகாதிறே. அதாவது அவன்தான் முற்கொழுந் திலே வாராதே பிற்கூழையிலே நிற்கும் ஆய்த்து, நடுவுபடும் அலமாப்புக் காண்கைக்காக. 9.9.0-36.

முற்கோலி வருதல் - முந்திக்கொண்டு வருதல். கீழே தனித்தனியும் திரளவும் பாதகமானவை ஒன்றுக்கு ஒன்று முற்கோலி வந்து மேல் விழுந்து நலியாநின்றன என்கிறாள். 9.9.8-9.

முற்பாடர் - முன்னே வந்தவர்; நாம் முற்பாடராகப் பெற்றிலோம் என்று ஆசைப்படுகிறபடி. சி.மடல், கண்ணி, 42.

முற்பாடன்* - முன்னே வந்தவன். தான் முற்பாடனாய் அத்தைத் தவிர்ப்பிக்கைக்காக. தி.ச.வி.89.

முற்பாடு - முதலில். முற்பாடாக அது கண்ணிலே தோற்றிற்றாக வுமாம். தி.நெ.தா.21, பட்டர்.

முற்றூசி - படையின் முன்னணி. பாணயுத்தத்திலே ப்ரதாந முற்றூசியிலே வந்தான் இவனிறே. தி.நெ.தா.7.

முற்றூட்டு* - முழு அனுபவம். அப்புகரை எனக்கு முற்றூட்டாக்கித் தந்தவனை. 1.7.3-24. அவ் அழகை எனக்கு முற்றூட்டாகத் தந்தவனே. 3.2.8-24.

முறி - துண்டு. குளிர்ந்த வாடையை இரு முறியாக வெட்டி இனி வளையைக் காப்பவர் ஆர். தி.வி.13.

முறுக்கம் - உறுதிப்பாடு. எல்லாமவனே என்று இருக்கையாலே, கூறை சோறு இவை வேண்டுவது இல்லை என்றார் தமப்பனார்; இவள், அவரினும் உள்புக்கு இடைச்சியான முறுக்கத்தாலே நெய் உண்ணோம் பால் உண்ணோம் என்கிறாள். பாவை, 2-6.

முறுகடி - முதிர்ச்சி. விச்லேஷ வ்யஸநத்தினுடைய முறுகடியாலே அத்யந்தம் அவஸந்நையாய். 7.2.0-9.

முறுகல்தனம் - முறைகெட்ட செயல் செய்யும் தன்மை. முறுகல் தனத்தில் அவன் என்னைக் கொண்டு நடத்த. பாவை, 28-6.

முறை - முறைமை; மரியாதை. விஷயாந்தர ப்ராவண்யத்தையும் போக்கி விடுகையன்றியே நெஞ்சிலே புகுந்து முறை உணர்த்தினவனை. தி.நெ.தா.14. நீ 'சேஷி' நான் 'சேஷபூதன்' என்னும் முறையிலே நிற்கப் போமோ? இ.தி.56.

முன்கை மிடுக்கர் - வலிய கையையுடைய முருடர்; அதாவது எடுத்ததும் கைநீட்டித் தாக்குபவர். முன்கை மிடுக்கரான அஸுரர்கள் கம்ஸ ப்ரேரிதராய் ஸஞ்சரிக்கிற காட்டிலே; 10.3.10-36.

முன்கையுரவியர் - வலிய கையினையுடையவர். அதாவது எடுத்ததும் கைநீட்டித் தாக்குபவர். ஜந்மமே தண்ணியர்; அநேகர். முன்கையுரவியர். 10.3.10-24.

முன்புத்தை* - முன்னையது. முன்புத்தை வாடை போல் அன்றிக்கே. 1.4.9-24.

மூக்கல் - முதுமையடைதல். இத்தனை கழிய மூக்கலாம் ஆகாதே. பெ.தி.1.3.7.

மூக்கறைச்சி - மூக்கறுபட்டவள்; சூர்ப்பணகை. உன்னைத் தனித்து உகப்பாள் மூக்கறைச்சியன்றோ? 10.3.9-36.

மூட்டுதல் - செலுத்துதல். விஷயங்களிலே மநஸ்ஸை வலிய மூட்டிப் போந்தேன். பெ.தி.1.1.8.

மூட்டுவாய் - பொருத்து. ஸ்ருஷ்டி காலத்தில் மூட்டுவாய் அறியுமவனிறே. 1.5.5-24.

மூதலித்தல்* - நிறுவுதல். பண்டு திருவுலகளந்தருளின திருவடிகள் என்று மூதலிக்கலாம்படி செவ்வித் தாமரைப்பூப் போலே இராநின்றது. பெ.மடல், கண்ணி, 5.

மூரிநிமிர்தல் - திமிர் போம்படி நிமிர்தல். சாடி - அவன் மூரி நிமிர்ந்தான். இவர்க்குக் குவாலாய் இருக்கிறபடி. மு.தி.23.

மூலையடி - மூலைப்புறம். முன்னடி தோற்றாதே மூலையடியே வர்த்தித்த செருக்கை அழித்து. பெ.தி.10.9.6.

மெய்க்காட்டுக் கொளல் - இருத்தலை எண்ணிக்கொளல். ருத்ரன் ப்ராஹ்மணரைப் போலே ஓத்துச் சொல்லித் திரியும் ப்ரஹ்மா அப்ஸரஸ்ஸுக்களை மெய்க்காட்டுக் கொள்ளும் இந்த்ரன்...இவர்கள் அடங்கலும் நமக்கு எதிரோ என்றிருக்கும் கம்ஸனுடைய. பாவை, 11-6.

மெய் - சத்தியம்; உடல். மெய்யான குடல் துடக்கிறே. 4.9.2-36.

மெய்ப்பாடு* - உண்மை நிலை. இடையனாய்ப் பிறந்த மெய்ப்பாடு 1.8.8-36.

மெல்குதல் - இளகுதல்; தளர்தல். நாலிரண்டு பண்ணை (முறை) வலித்தாலும் மெல்காத வில். பெ.தி.2.8.3.

மெழுக்கு - பூச்சு. கைப்பாணியிட்டு மெழுக்கு வாசியிலே ப்ரமிக்கும்படி பண்ணின இத்தனை ஒழிய. 5.1.5-36.

மெள்ள - மெல்ல. மெள்ள இவனருகு நின்றும் எழுந்திருந்து விடப்போம். பெரி.தி.4.5.6.

மெனக்கிடல் - பேச்சு வழக்குச் சொல். ஒன்றை நோக்காகக் கொண்டு முயலுதல். பரமகாருணிகரான பெரியவாச்சான் பிள்ளை மெனக்கிட்ட ஸ்ரீ வைஷ்ணவருக்காக ஸாதித்தருளின வ்யாக்யாநம். திருவெழு. 0.

மேகர் - வழியினை ஆராய்பவர். ராஜாக்கள் போம்போது முன்னே மேகர் நீர்விடுமாபோலே. 10.1.1-36.

மேய்ச்சற்றலை - மேயும் இடம். கன்றுகளுக்கு மேய்ச்சற்றலை பார்க்கை. பெரி.தி.3.3.4.

மேல்விரி - படுக்கையின்மேல் பரப்பும் விரிப்பு. திருப்பாற்கடலிலே நீர் உறுத்தாதபடி திருவநந்தாழ்வானைப் படுக்கையாகக் கொண்டு, அதிலே நாநாவர்ணமாய் இருப்பது ஒரு மேல்விரியை விரித்தாப்போலே அவன் வாய்ந்தருள, மேலெழுந்தருளி இருக்கும் ஆயிற்றுப் பிராட்டி. 7.6.6-36.

மேலுற்றை - மேலுள்ளதற்கு. இது மேலுற்றைக்கு இட்ட மர்யாதையோ; கீழுற்றைக்கும் ஏதேனும் உண்டோ. 5.7.3-36.

மேற்சாத்து - மேலாடை. பசுமேய்த்து வரும்போது திருவரைக்குத் தகுதியாக முன்பு சாத்தின பரியட்டத்துடனே சாத்துகைக்குத் தகுதியான மேற்சாத்தையும். பெரி.தி.3.4.3.

மேன்மை - உயர்வு; பரத்வம். இன்னம் மேன்மை தரை காணலாம். 1.3.1-36; மேன்மைக்கு எல்லையான பரமபதம் அநுபவ ஸ்த்தாநம். 6.6.11-36.

மேனாணித்திருக்கை* - செருக்குடன் இருத்தல். ருஷபம் போலே மேனாணித்து இருக்கிற இருப்பு. 2.5.7-36.

மேனாணிப்பு - செருக்கு, பெருமிதம் அத்தால் வந்த மேனாணிப் பாலே செருக்கி இருக்கிறவனை. தி.கு.தா.2. மேனாணிப்புத் தோற்ற நின்றபடி. 9.9.1-36.

மைத்தல் - இருண்டிருத்தல், கறுத்திருத்தல். பரமபதத்திலே ஸ்வரூபம் மைத்துப் போலே இருப்பது. நா.தி.1.3.

மைதிலி - சீதை. மைதிலி, உன்னை அறிந்தாயே நம்மை அறிந்தாயே, கலக்கிற தேசம் அறிந்தாயே என்றாரிறே பெருமாள். 2.6.0-36.

மொசுமொசுப்பு - அக்கறை; செருக்கும் முசுமுசுப்பு என்று குறிக்கப்படுகிறது. யசோதைப் பிராட்டி பிள்ளைமனம் கன்றாமல் தீம்பிலே கைவளரும்படி வளர்த்த மொசு மொசுப்பு எல்லாம் தோற்றியிருக்கும். தி.மா.18.

மொட்டித்தல் - இதழ்குவிதல்; கூம்புதல். ஆம்பல் மொட்டிக்கும் படி போது விடிந்தது. பாவை, 14-3.

மொண்டெழு பானை - ஏற்றப் பானை "கொள், கொள்" என்று மொண்டெழு பானை போலே கிளர்ந்து வருகிற நிரவதிக ஸம்பத்தானது. 4.9.4-36.

மொறாந்த - சொரசொரப்பான. நரஸிம்ஹத்தினுடைய மொறாந்த முகமும். அம.8, பெரி.

மோக்க - நுகர. புதுப்பூ மோக்க வேணும். பெரி.தி.3.9.3.

மோடு - வயிறு. ஊண் மல்கி மோடு பருத்து இருக்கிறபடி. அம.8, அழகு.

மோழை - மடு. வெண்ணெயும் பெண்களும் ஆழமோழையாய்ச் செல்லுகிற அமளியிலே நாம் புகுந்து இருப்பதே என்று இருந்தான். சி மடல், கண்ணி, 37.

வக்குரித்தல் - கெடுதல். இவற்றினுடைய நலிவு வாயால் சொல்லில் வாய் வக்குரிக்கும் படியாய் இருக்கையாலே சொல்லாது ஒழிந்ததாதல். 9.9.2-36.

வகுப்பழகு - அமைப்பழகு. வகுப்பழகையுடைய. 5.9.7-12.

வங்கு - வளை; பொந்து. சங்குகள், தான் கிடக்கிற வங்கு களினுடைய வாசலிலே முத்துக்களை ஈன்றன. பெ.தி.3.4.2. வங்குகளிலே நிறைந்துள்ள தேனிலே தோய்த்து. பெ.தி. 1.2.5.

வட்டக்கிடை - வட்டமாக இருத்தல். மண்டபங்களிலும் நாற்சந்தி களிலும் வட்டக்கிடை ஓதா நிற்பர்கள். பெ.தி.2.10.5.

வட்டணித்தல் - வட்டமாய் இருத்தல். வட்டணித்துப் பெருத்த கண்களையும். பெரி.தி.3.5.1.

வடக்குத் திருமலை - திருவேங்கடம். ஸம்ஸாரிகளும் வந்து ஆச்ரயிக்கலாம்படி இருக்கிற மேன்மையில் ஏற்றத்தையுடைய வடக்குத் திருமலையும். பெ. மடல், கண்ணி, 6.

வடிம்பு - தடி. அசேதநமான ரதத்தோபாதி வடிம்பாலே தாக்கி நடத்த வேணும் ஆயிற்று. 1.4.6-36.

வடிம்பிடுகை * - 1. வற்புறுத்தல், தூண்டுகை. அவ்வவ காலந் தோறும் மாம்வத, மாம்வத என்று வடிம்பிட்டு அடிமை செய்தாப் போலே. 9.2·3-36. 2. மயக்குதல். தன்னை வடிம்பிடும் பருவத்தில் தோற்றுச் சொல்லுகிறாள்' தி.நெ.தா. 16. 3. தோற்றுதல். கலந்த போதை அங்குத்தை போக்யதை இப்போது கூட நெஞ்சிலே வடிம்பிடுகிறபடி. பெ.தி.9.3.1. 4. வற்புறுத்தல். என்னை இங்கு வைக்கிறது என் என்று வடிம்பிட்டுக் கேட்க. 7.9.0-36. 5. தொடர்ந்து வருதல். உன் திருவடிகளை வடிம்பிட்டு ஆச்ரயிக்கக்ஷமன் ஆயிற்றிலேன். பெ.தி.1.9.5.

வடிவழகு - சௌந்தர்யம், தோற்றப் பொலிவு. உம்முடைய வடிவழகையும் சீலத்தையும் காட்டித் தேவரீர் பண்ணின க்ருஷி பலித்த பலமன்றோ என்கிறார். தி.ச.வி.119.

வந்தேறி * - வந்து சேர்ந்தது ஆகந்துகம். ஈச்வரத்வம் வந்தேறி யென்னும்படி ஸங்கஸ்வபாவன்காணென்கிறார். 1.2.6-24.

வம்பு - புதுமை. க்ருஷ்ணனோடே பழகிச் சேர்த்தியா யிருக்கிற உனக்குப் பொய் சொல்லுகை வம்போ. பாவை, 14-6.

வயிரவுருக்கு - வயிரம் (வஜ்ரம்) போன்ற கடினமானவற்றையும் உருக்கும் வலிமையுடைய பொருள். அந்த ஸௌந்தர்யமும் ஔதார்யமும் சீலமும் வயிரவுருக்கு ஆயிற்று, அபலைகள் படுமத்தை வன்னெஞ்சரையும் படுத்தவற்று ஆயிற்று. 5.3 6-36. வயிரமும் உருக்குங்காணும் வாயில் குழலோசை. பெ.தி.2.7.8. கடிநஸ்தலத்திலே வர்ஷித்தால் காடிந்யமடங்க நெகிழ்ச்சிக்கு உறுப்பாமாபோலே, விஷயாந்தரத்திலே மநஸ்ஸு அதிகடிநமானாலும் சிதலமாம்படி வயிரவுருக் காயிறே பகவத் ப்ரபாவம் இருப்பது. தி.மா.17.

வயிறுதாரித்தனம் - பெருந்தீனிக்காரனாய் இருக்கும் தன்மை. முற்றத்தான்-வயிறு தாரித்தனம். பெ. மடல், கண்ணி, 141.

வரவு - வருகை. அற்றை (யானைக்கு உதவின அற்றை) வரவு தமக்கு உதவினாற் போலே இருக்கிறது ஆய்த்து இவர்க்கு. தி.மா.28.

வரிசை - பெருமை. தன்னோடு ஒத்த வரிசையைக் கொடுப்பான் ஒருவனை. பெ.தி.2.5.8.

வரிசையறுத்தல் - பெருமை குறைத்தல். தன் பெருமையாலே அவன் இவளுக்கு ரூபகுண தோஷங்களைச் சொல்லி வரிசை யறுத்து ஆண்டிடுமோ. பெரி.தி.3.8.0.

வரை - எல்லை. வரையிடாத குண பூர்த்தியை உடையவர். க.நு.சி.6,அழகு.

வரைதல் - 1. மணத்தல். தன்னுடைமையைத் தான் கொண்டு போம்போது வரைந்து வெளிப்படக் கொண்டு போகலாய் இருக்க, இப்படி(க்) களவிலே கொண்டுபோனது. பெரி.தி. 3.8.2. 2. வரம்பு கட்டுதல். ரக்ஷ்ய வர்க்கத்தில் வரையாதே ரக்ஷிக்குமவன். பெ.தி.1.3.4.

வல்லடிக்காரர் - வலிந்து கொள்ளையடிப்பவர். வல்லடிக் காரர்க்கு விளக்கு ஏற்றிக் காட்டுமா போலே. 9.5.3-36.

வல்லாண்மை - பலம்; சக்தி. துர்மாநத்தையுடைய ராவண னுடைய வல்லாண்மையுடைய சரீரத்தை வில்லாலே வேண்டோம் என்ற என்னாயன். பெ.தி.6.10.4.

வல்லி - கால்விலங்கு. வல்லியை முறித்துக் கையிற்கொண்ட. ஆனை. இ.தி.13.

வலவருகு - வலப்பக்கம். திருவாழியை வலவருகே உடையவன். பெ.தி.1.5.3.

வவ்வல் - நடுக்கம். அதனால் வந்த வவ்வலை ஆற்றும் ஆதித்யனும். பெ.தி.4.5.7.

வவ்வலிடுதல் - குளிர்தல். மிக வெப்பதும் செய்யாது, மிக வவ்வலிடுவதுஞ் செய்யாது, நரகம் ஆகிற பெருநெருப்பையும் விலக்கவற்று. தி.வி 58.

வழக்கன் * - மட்டமானது; பலர்க்கும் வழங்குவதற்கு உரியது. வழக்கனான சாந்து என்னவுமாம். தி.பல்.8.

வழியடிக்காரர் - வழிபறிக்காரர். வழியடிக்காரரைத் தண்ணீர் வேண்டுமாபோலே. தி.வி.40.

வழுமூட்சி - குற்றத்தின் மறைவு. அதாவது மேற்பூச்சினால் குற்றத்தை மூடி மறைத்தல். அகவாயைப் பார்த்தால் காக்கை நோக்கும்படியாய் இருக்க, தோலின் கைப்பாணிப் புறத்தால் வந்த வழு மூட்சியைப் பார்த்து ஸ்ப்ருஹை பண்ணும்படியிறே பண்ணிவைத்தது. 5.1.5-24.

வளர்த்தல் - உறங்கவைத்தல். இரண்டு சகடத்தை இரண்டருகும் இழுத்து நடுவே தொட்டிலையிட்டு வளர்த்திப் போனாள் தாயார். 5.3.3-36.

வளர்த்தி - வளர்த்து. பத த்ரயாத்மகமான திருமந்த்ரத்தில் ப்ரதம பதம் ஆகையாலே இத்தோடே கூடி மேலிரண்டு பதத்தையுங் கூட்டி மூன்று பதமாக வளர்த்தி. பெரி.தி.4.7.10. 2. வளர்ச்சி. முலையினுடைய வளர்த்தியாலே நெருங்கி நொந்திருக்கிற இடை. பெரி.தி.3.8.5.

வளர்த்துக்கொள்ளி - செவிலித்தாய். வளர்த்துக் கொள்ளியான தாயைப் போலன்றியே பத்துமாஸம் வயிற்றிலே வைத்து நோக்கிப் பெற்ற தாயாய். 6.3.9-36.

வளையம் - முடியில் வட்டமாகச் சுற்றியணியும் மாலை. பிராட்டி பிரிந்திருக்கிலிறே வைத்த வளையம் சருகாவது. 3.1.6-36.

வளைப்பிடல் - சூழ்ந்து தடுத்து நிறுத்தல். இவன் எல்லாம் செய்தாலும் அவன் 'அல்லேன்' என்றவாறு ஸ்வதந்த்ரனை வளைப்பிட ஒண்ணாது. பாவை, 25-6

வற்று - வல்லது. பரிச்சேதிக்கவற்றோ என்கை. 2.8.8-24. சொல்லக்கூட வற்றே. 5 9.10-9.

வறள் - வற்றுதல். கடலை வறளாகப் பருகையாலே. பெரி.தி. 1.5.2.

வறமுறுகல் - கடினமானது, கருகிப்போனது. அவன் முற்சந்தை யிடப் பின்னே நான் சொன்னேன். தான் சொன்னானாகில் ஸ்ரீகீதையோபாதி வறமுறுகலாய்ப் போமிறே. 7.9.2-36.

வன்னியம் - குறும்பு, பகை. வழியில் உண்டான வன்னியம் அறுத்துக் கொடுத்தபடியைச் சொல்லுகிறது. தி.நெ.தா.13. ஸ்ரீவிபீஷ்ணாழ்வானுக்கு வன்னியம் அறுத்து ராஜ்யத்தைக் கொடுத்து. தி.மா.19.

வன்னியம் செய்தல் - சிற்றரசர்களாய் இருந்துகொண்டு அரசாட்சி செய்தல். ப்ரஹ்மாதிகளுக்கு போக ஸ்த்தாநமாய் ஈச்வரோஹம் என்று வன்னியம் செய்கிற தேசமாய் அத்விதீய மான வைலக்ஷண்யத்தை உடைத்தான அண்டமாகிற அரணினின்றும் புறப்படவிட்டு. 4.9.8-24.

வாசி - வேற்றுமை. ஸ்திரீ நபும்ஸகங்களோடு புருஷர்களோடு வாசியில்லை என்று தோற்றுகைக்காக. 2.5.10-9.

வாய்க்கரை - கரைவாய்; அதாவது கரையோரம். என் பெண் ஈடுபட்டுச் சொல்லுகிற வார்த்தைகளை வாய்க்கரையிலே நிற்கிற நான் எத்தைச் சொல்லுவது. 5.6.7-24.

வாய்கரை - வெளிப்புறம். இவன்றான் அவிவேகி யாகையாலே அகவாய் ஆராய மாட்டாதே வாய்கரையிலே அழுந்தி நோவுபடா நிற்கும். தி.மா.16. 2. கரையோரம். ஸமுத்ரத்திலே போய்ப் புகவேணும். அதிலும் வாய்கரையிலே ஆகவொண்ணாது நடுவே சென்று இழிய வேணும். பாவை, 4-3. வாய்கரையர் - மேலெழுந்த அறிவுடையவர். வாய்கரையர் நினைக்கவும் நிலமன்று என்கை. தி.மா.40.

வாய்த்தலை - 1. வாய்க்கால். பெருவெள்ளத்துக்குப் பல வாய்த்தலைகள் போலே. 2.6.5-36. 2. பிறப்பிடம். அல்லேன் என்கைக்கு வாய்த்தலையான நெஞ்சிலே வந்து புகுந்தான் ஆயிற்று. பெ.தி.3.5.1. 3. தோன்றுமிடம். ஜ்ஞாநேந்த்ரியங்களுக்கும் அறிவுக்கும் வாய்த்தலையான ஏற்றம். 2.7.10-36. நினைவுக்கு வாய்த்தலையிலே இருக்கிறவன் அறியானோ? 7.10.10-24.

வாய்புலத்தல் - வாய்விட்டுப் புலம்புதல். அவன் படிகளை அநுஸந்தித்து வாய்புலத்துகிறாள் ஒரு பிராட்டி தசையை அநுஸந்தித்து திருத்தாயார் பாசுரமாகச் செல்லுகிறது. பெ.தி.4.8.0.

வாய்மை - வாய்ச்சொல். வாய்மை - வாகிந்த்ரிய வ்யாபாரம். அதாகிறது வசநம். பெ.தி.5.8.7.

வார்த்தைப்பாடு - பேசப்படுவது. உஷைக்குப் பிதாவான வார்த்தைப் பாட்டாலுள்ள புகழையுடையவன் என்னுதல். 4.8.9-36. 2. பேச்சழகு. சக்ரவர்த்தித் திருமகன் வாய்புலத்தும்படியான வார்த்தைப்பாடு உடையவளிறே. தி.ச.வி.91. 3. புகழ். உஷையினுடைய பிதா என்னும் வார்த்தைப் பாட்டை உடையவன் என்னுதல். 4.8.9-24. விஷ்ணுராத்மா என்கிறபடியே ஆத்மதயா நின்று சென்று வார்த்தைப்பாட்டை அவனுக்கு ஆக்கினான். 7.6.7-24.

வாரம் - கூலி. இரண்டு தலை வாரமும் தம்மது. பெ.மடல், கண்ணி,116.

வாரிப்பிடி - மீளாதபிடி. ஒரு கோபாலர் அபிமாநத்தாலே மழைக்கு ஒதுங்கினால் வாரிப்பிடியாக அகப்படுமிறே. பாவை, 28-6.

வாழ்ச்சி - வாழ்வு. உன்னுடைய வாழ்ச்சிக்கு நான் கால்பிடிக்க வேண்டுகிறது என்? 10.4.8-36.

விசைப்பு - நட்புரிமை; மிடுக்கு. அர்த்தம் அதாயி இருக்கச் செய்தே விசைப்புக் கிடந்தபடி காணும். பெ.தி.2.3.6.

விடக்கு - பிணம். ஒரு விடக்கைப் பற்றி இரண்டு பதார்த்தம் விவாதம் பண்ணுமாபோலே. தி.மா.4.

விடர் - காமுகர். விடருடைய செயலைச் செய்து என்னுதல். 1.7.5-36.

விடாய் - வேட்கை. தன்னை அநுபவிக்கைக்கு ஈடான விடாயைப் பிறப்பித்துத் தன்னை அநுபவிப்பிக்கிறான். 1.9.0-36.

விடிதல் - நிகழ்தல். கீழ் இவர் அஞ்சினாப் போலே விடிந்தது. 1.10.7-36.

விடிவோறே - விடிவோரை என்பதன் சிதைவு. (ஓரை - நேரம்) விடியும் நேரம். அவைமேய்க்கப் போம் காலமான விடிவோறே 'மீள வரும் அளவும் உனக்குத் தாரகமாக வேணும்' என்று ஊட்டி அவற்றின் பின்னே போகவிட்டேன். பெரி.தி.3.3.2. உபாஸிப்பர்கள் என்றும் சொல்லப்படுகிறவர்கள் விடிவோறே ஒருக்கால் ஸமாராதநம் பண்ணி அல்லாதபோது பேசாதே இருப்பார்களோ? பாவை, 14-6.

விடுகாது - தோடு கழற்றிவைக்கப்பட்ட காது. விடுகாதாய்க் கிடந்தாலும் தோடிட்ட காது என்று தெரியுமாபோலே. 10.1.1-24.

விடுநகம் - கிட்டிக்கோல், விலங்கு. நலிவுபடுத்தி விடுநகங் கட்டுவாரை 'நெகிழக் கட்டினாய்' என்று உறுக்கிக் கட்டுவிப்பாரைப் போலே. 7.1.1-36.

விடுநாண் - சங்கிலி. திருக்கழுத்திற் சாத்தின விடுநாணாவது திருவுந்தியளவும் தாழ. பெரி.தி.2.10.1.

விண்டார் - பகைவர். விண்டாரை ஆயிற்று வெல்ல வல்லது. பெ.தி.2.6.4.

விம்முதல் - பெரிதாதல். ஆகாசாவகாசம் வெளி அடையும்படி விம்ம வளர்ந்தவன். பெ.தி.1.1.4.

விரகு - வழி (உபாயம்). திருத்தும் விரகு எங்ஙனே என்று பார்த்தருளி. 1.2.0-24. அஸுரரை முடிக்கும் விரகுகளே. 9.3.6-9.

விரகன் - வல்லவன். விரகனான ஸர்வேச்வரன். 4.8.6-9.

விரைத்தல் - விதைத்தல் என்பதன் கொச்சை. தினை விரைக்கைக் காக வெட்டி எடுத்த வேய்ங்கழைபோய் விண்ணைத் திறக்கும் திருமலை. மூ.தி.89.

விலக்கடி* - 1. புறநெறி. இவர்கள் ஸம்ஸாரத்துக்கு விலக்கடி தேடிக்கொண்டு போகிறபடி எங்ஙனேயோ? 1.2.8-36. பலாந்தரத்தில் போம் விலக்கடிகளைத் தள்ளி. 1.3.5-36. 2. ஒதுக்குதற்குரியவை (நிஷேதங்கள்). விலக்கடிகளில் போகாமே, ப்ராப்தமுமாய் போக்யமுமான உன் திருவடி களிலே வந்து கிட்டுவது ஒரு ப்ரகாரம். 4.9.1-36. 3. தடை கள். (ப்ரதிபந்தகங்கள்). அதுக்கு மேலே நீ பல விலக்கடி களையும் உண்டாக்கி வைத்தாய். 3.1.4-36. அதுக்கு மேலே விலக்கடிகளும் உண்டாயிற்று. 3.1.4-24.

விலங்கப் பார்த்தல் - சுற்றிலும் பார்த்தல். திருநாமம் செவிப் பட்டவாறே விலங்கப்பார்ப்பது மேலே பார்ப்பது கீழே பார்ப்பது ஆனாள். 2.4.1-36.

விலையோலை - விற்பனைப் பத்திரம். அடிமை விலையோலை எழுதும்போதும். தி.பல்.3.

விழுக்காடு - 1. விழுகை. 'ஜிதந்தே' என்று விழும் திருவடிகள், அவ்விழுக்காட்டுக்குத் தோற்று அவன்தான் 'ஜிதந்தே' என்று அணைக்கும் கை. 3.1.2-24. இவன்மேல் விழுக்காடும் அவர்கள் இறாய்ப்பும் தோற்றுகிறது. தி.நெ.தா.5. 2. தெய் வாதீனமாக. கோல் விழுக்காட்டிலே பரிஹாரமாயிருக்கை யன்றிக்கே ஒரு வ்யக்தியை நிர்த்தேசித்து அதுக்கு உத்கர்ஷத் தைப் பண்ணித்தர வேணும் என்று சொன்னவனும். 4.10.5-36. 3. தற்செயல். படைவீட்டிலிருந்தால் பலரும் உண்டாகையாலே விழுக்காட்டோபாதியிறே ஸித்திப்பது. க.நு.சி.0,பெரி. 4. விளைவு. கொடுமை செய்யும் இத்யாதி-விழுக்காடு அறியாதே வந்து கிட்டில் செய்வது என்னென்னில் தடவரை இத்யாதி-திருவாழியையிட்டுத் தோளைக் கழித்தல், ஓர் அம்பாலே தலையை உருட்டுதல் செய்யும் அத்தனை. 10.2.1-36. 5. பொருள். இந்தப் பதங்களுக்கு அர்த்தபேதம் இல்லையோ என்னில் ப்ரவ்ருத்தி நிமித்த பேதத்தாலே வரும் விசேஷம் உண்டானாலும் விழுக் காட்டில் ஆத்ம ஸ்பர்சியாய்த் தலைக்கட்டுகையாலே பர்யாயம் ஆகிறது. தி.பல்.1. 6. தன்மை. பாஹ்ய ஸமயங்களானாலும் விழுக்காட்டில் அவற்றோடு ஒத்திருக் கிற மற்றுள்ள குத்ருஷ்டிகளாலும். 4.10.9-9.

விளக்குப் பிணம் - இருட்டு. விளக்குப் பிணம் போலே காண ஒண்ணாதபடி. 5.7.4-36. துர்யோதநாதி ராஜாக்கள் விளக்குப் பிணம் போலே அவிந்து போகப் பண்ணி. பெரி.தி. 4.7.8.

விற்பிடி மாணிக்கம் - 1. ஒளியுடைய மாணிக்கம். தன் கைக் கடங்காத விற்பிடி மாணிக்கத்தைப் பெற்றவன். தி.பல்.0. 2. இராமன். தேவகி புத்ரரத்நமும் அது தன்னிலும் விற்பிடி மாணிக்கமும் விலை செல்லும் தேசம், க.நு.சி.2, அழகு.

வினை - போர். இவன் ஆண்ட பரிகரம் அடங்கலும் வினைக்கு உடலாயிற்றது இல்லை. பெ.தி.8 1.1.

வினைத்தலை - போர் முகம். வினைத்தலையில் படையறுத்துக் கொள்வாரைப் போலே. 7.3.4-24.

வீசம் - குறைந்த மதிப்புள்ள நாணயம். கையில் வீசமும் போய் இவனோட்டை ஸம்பந்தம் நமக்கு அவத்யாஹம் என்று தோற்றும்படி வௌவநமும் போனவாறே...தொற்று அறச் சொல்லி பிணங்கா நிற்பர்கள். பெ.தி.1.3.7.

வீரப்பாடு* - வீரம். வீரப்பாட்டை ஆபரணமாக உடையராய். பெரி.தி.4.6.10. விரோதி மிகுந்தாலும் வெந்து விழப் பண்ணும் வீரப்பாட்டையும் அநுஸந்தித்து. 2.4.0-12.

வீறு* - பெருமை. பெரிய திருவடி மேலே ஏறி உன்னுடைய ஸர்வைச்வர்யத்தாலே வரும் வீறு தோற்றும்படி இருந் தவனே. 2.6.8-9.

வெக்காயம்* - 1. வெப்பம். ஸம்ஸார வெக்காயம் எல்லார்க்கும் ஒத்திருக்கையாலே. 1.2.1-36. 2. ஆற்றாமை. ஆற்றாமை யோடே முதலானாய் என்றார். அந்த வெக்காயத்தோடே ஆண்பெண்ணாய், அது தன்னிலும் தம் வாயாலே கூப்பிடு கைக்கு யோக்யதை இல்லாதபடி மோஹங்கதையாய் வேற்று வாயாலே கூப்பிடும்படியாய்ச் செல்லுகிறதுமேல். தி.நெ.தா.11.

வெக்கை - அனல், வெப்பம். வேரிலே வெக்கை தட்டினால் கொழுந்து முற்பட வாடுமா போலே. பெரி.தி.2.2.3.

வெச்சாப்பு - சிறிது வெம்மை. கண்டுதி சமிக்கும்படி வெச்சாப் போடே காதுகளிலே திரியை இடுவன் என்ற இடத்திலும் அவன் இசையாமையாலே. பெரி.தி.2.3.3.

வெஞ்சோறு - சுடுசோறு. தயிரும் பழஞ்சோறும், பாலும் வெஞ்சோறும் அவ்வவ காலங்களிலே தந்து திருநாமங் களைக் கற்பித்த அதுக்கு ப்ரத்யுபகாரம் பண்ணினிகோள். 9.5.8-36.

வெட்டித்தல் - கோபித்தல். தாம் என்னை இத்தனை போது படுத்தின சிறுமையாலே வெட்டித்து உபேக்ஷித்து இருக் கிறேனோ. தி.நெ.தா.21, பட்டர்.

வெட்டிது - வன்மையானது; கடுமையானது. ஒன்றும் கொடுப்ப தில்லை என்று வெட்டிதாக வார்த்தை சொல்ல. பெரி.தி. 2.6.5.

வெட்டிய - வன்மையான. கடுங்கால் மாரி இத்யாதி - வெட்டிய காற்றை யுடைத்தான மாரியானது. பெ.தி.6.10.8.

வெட்டிமை - கொடுமை. நங்கையீர் என்று உறவற்ற சொல்லாலே வெட்டிமை எல்லாஞ் சொல்லவில்லை என்னுமிடம் நாங்கள் இன்றாக அறிகிறோமோ. பாவை, 15-3.

வெட்டியகோள் - பலாத்காரம். கொடுங்கோளால் வெட்டிய கோளாலே யென்றபடி. 4.8.6-36.

வெட்டிய சொல் - கொடிய சொல். கொடுமையை உடையளான கைகேயி வாயில் இந்த வெட்டிய சொல்லைக் கேட்டு. பெரி.தி.4.8.4.

வெட்டியன் - கொடியவன். கம்ஸன் வெட்டியன். பாவை, 16-6. அறவெட்டியனான கபந்தன். தி.ச.வி.104.

வெடிவிளக்கு - விடிவிளக்கு என்பதன் சிதைவு. வெடி விளக்கெரித்துக் கொண்டிருந்து. பெ.தி.8.1.1.

வெங்நெஞ்சி - கொடிய நெஞ்சினள். வெந்நெஞ்சியான. பெ.தி. 11.4.9.

வெருவுதல்* - அஞ்சுதல். ஐச்வர்யம் கண்டு வெருவாதே சிலத்தை அநுஸந்தி என்கிறார். மு.தி.29.

வெள்ளம் - பல. நாம் உதவ எங்கே கண்டீர் என்ன ஒரு வெள்ள மன்றோ, என்று உதாஹரணம் காட்டுகிறார். 4.9.1-36.

வெள்ளாட்டி - வேலைக்காரி. பின்னை வெள்ளாட்டியை இட்டுப் பரிபவிப்பர்கள்; அதுக்கும் போகானே. 9.1.5-36.

வெள்ளோசை - பொருளற்ற ஓசை. வெள்ளோசையாய்க் கழியுண்பது இல்லை. 5.9.6-36.

வெளிச் சிறப்பு* - அறிவுத் தெளிவு; நீ பண்ணித் தந்த வெளிச் சிறப்பாலே த்ருப்தன் ஆகிறிலேன். 6.9.2-36. கண்ணழிவு அற்ற வெளிச் சிறப்பு உடையார்க்கு இங்ஙனேயிறே இருப்பது 5.9.1-36.

வெளிச் செறிப்பு* - 1. அறிவுத் தெளிவு. வேதம் போலன்றியே, அவன் காட்டின வெளிச் செறிப்பாலே அவனைக் கண்ட நான் அறிந்தேன். சி.மடல், கண்ணி. 24. 2. உணர்வு. கீழ் பொய்யில் வ்யவஸிதராய் நின்ற நிலையில் நின்று கால் வாங்கிய நாம் உஜ்ஜீவிக்கும் ப்ரகாரம் ஏதோ என்னும் வெளிச்செறுப்பை உடையவர்களுக்கு. தி.மா.15.

வெளிச் செறித்தல் - விளங்குதல். அநாத்யஜ்ஞாநாந்தகாரம் நீங்கி பகவத் விஷயம் வெளிச்செறித்த காலத்திலே. பாவை, 28-3.

வெளிச் செறிப்பிக்கை - விளக்குகை. உன்னுடைய நிரவதிக தேஜஸ்ஸாலே வெளிச்செறிப்பிக்கைக்காகவும் உன்னுடைய அழகு காண்கைக்காகவும் நீயே வந்து திற. பாவை, 7-3.

வெளியது - தாழ்ந்தது. இவருக்கு வெளியதாய்க் கழிகிறதிறே க.நு.சி.1, பெரி.

வெளிறு - தாழ்ந்தது. அவர் உத்தேச்யமாகப் பற்றுகிற. விஷயமிறே இவருக்கு இப்போது வெளிறாய்க் கழியுண்கிறது. க.நு.சி.1, நம்பிள்ளை.

வெறியோடல் - வெறுமையாக இருத்தல்; வெற்றிடமாகத் தோன்றல். இவள் போகையாலே தன் திருமாளிகை எல்லாம் அழகு அழிந்து வெறியோடிற்று என்றும். பெரி.தி.3.8.0.

வெறுந்தரை - எல்லாவற்றையும் இழந்த ஒன்றுமற்ற நிலை. அந்நோக்குக்கு இலக்காய், இன்று வெறுந்தரையான என் தூதாய். 1.4.2-24.

வெறும்புறம்* - 1. வெற்றுடம்பு. ஆரை மதித்து உடம்புக்கிடிட்டு வருவது என்று வெறும்புறத்திலே வந்து நலியாநின்றது. 9.9.2-24. 2. அடையின்றித் தனியாகச் சொல்லல். வெறும் புறத்திலே தென்றல் என்ன அமையும், மல்லிகை கமழ் தென்றல் என்ன வேண்டா. 9.9.2-36.

வெறுமன் - விண். நீ நெடுநாள் பச்சையிட்டு ஆச்ரயித்தாய்; அவ் ஆச்ரயணம் வெறுமன் போயிற்றதாக ஒண்ணாது என்று அவனை அழைத்து. 4.10.8-36.

வெறுமை - ஒன்றுமற்ற நிலை (ஆகிஞ்சந்யம்). தம்முடைய வெறுமையைச் சொல்லி. பெ.தி.1.10.1. தங்கள் வெறுமையை முன்னிடும் அத்தனை. 10.1.4-36.

வெறுவியர் - ஒன்றுமில்லாதவர். வெறுவியருமாய் இருக்கிற ஸ்ரீஸுக்ரீவ மஹாராஜர். 9.1.2-9.

வேண்டப்பாடு* - பெருமை; சிறப்பு. வேண்டற்பாடு என்பதன் கொச்சை. நீ நினைத்ததை முடித்துக்கொண்ட வேண்டப் பாடும். 5.10.9-9. இத்தலையைத் தோற்பித்த வேண்டப்பாடு தோற்றும்படி. 6.1.5-36. முக்யமும் - வேண்டப்பாடும். 5.10.9-36.

வேண்டற்பாடு* - பெருமை; இன்றியமையாமை. உன் வேண்டற் பாடு தோற்றும்படி. 5.7.1-9. 2. விரும்பப்படுதல். க்ருஷ்ணனாலே வேண்டற்பாடுடையாள் ஒருத்தியை எழுப்பு கிறார்கள். பாவை, 8-3.

வேணும்* - வேண்டும் என்பதன் கொச்சை. இங்குத்தைக்குக் கிஞ்சித்கரித்தோமாக வேணும். 1.7.1-36.

வேதுகொள்ளல் - காய்ச்சி ஒற்றல். வேது கொண்டாள். 3.5.4-36.

வேப்பங் குடிநீர் - மருந்து நீர். இவ்வேப்பங்குடி நீரையன்றோ நான் உன்னைக் குடிக்கச் சொல்லுகிறது. 1.10.4-24.

வேர்ப்பற்று* - 1. வேர் உள்ள இடம். அதாவது அடிப்பகுதி. மலையினுடைய வேர்ப்பற்றிலே உறும்படியாக. பெரி.தி 3.5.4. 2. ஆதாரம். தனித்தனியே சொல்லில் ஒருவரல்லால் ஒருவர் பிழைக்கிலுமாம் என்று வேர்ப்பற்றிலே நலிய. மு.தி.93.

வேர்ப்பு - வேர்வை. வேர்ப்பு மணத்தோடே கூடின கூறை. பாவை, 27-6.

வேர் விழுதல் - ஆழப்பதிதல். நம்பியுடைய அழகு வெள்ளம் என்னுடைய நெஞ்சிலே வேர்விழுந்தது என்கிறாள். 5.5.6-36.

வேழ்க்கை - வேட்கை. களவிலே வேழ்க்கையுடையனாய், அபிநிவிஷ்டனாய் என்னவுமாம். 1.5.1-36.

வைப்பன் - கடைசியில் பயன்படுத்துதற்காக வைக்கப்பட்டது. இவ்வளவிலும் பலிக்கக் காணாமையாலே, வைப்பனாக வைத்த ப்ரஹ்மாஸ்த்ரம் வாய்மடிந்தது கிடீர் என்று கூப்பிடுகிறார். 7.1.0-36.

★

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
40	15	கோன்ற	தோன்ற
113	13	பேதைமையை	பேதைமை
136	12	யஜூர்	யஜுர்
231	30	9.7.6-37.	9.7.6-36.
243	31	த்ரிவிருத்காரணம்	த்ரிவிதகாரணம்
256	36-37	பெரி.தி. 4.9.9.	பெரி.தி. 4.9.10.
275	36	2.4.1-36.	2.4.0-36.
336	5	2.6.9-36.	6.9.3-12.
368	2	மார்வெழுக்தாக்கி	மார்வெழுத்தாக்கி

வைணவ உரைவளம்

தெ. ஞானசுந்தரம்

வைணவ உரைகள் தமிழ் இலக்கியத்தின் ஒரு தனிப் பகுதி. இவை வெறும் சொற்பொருள் தரும் உரைகள் அல்ல; பெரிய கருத்துக் களஞ்சியம்; அரிய வரலாற்றுச் சுரங்கம்; இனிய சுவைப் பெட்டகம். இவற்றில் கால் தாழ்ந்தார் புறம்பே கைகழிய விரகு இல்லை. ஆழ்வார் கள் பெற்றெடுத்த பாசுரங்களைக் கொஞ்சித் தாலாட்டி மையெழுதி ஒப்பனை செய்து வளர்த்தவர்கள் வைணவ உரையாசிரியர்கள். இப்பெருமக்கள் வரைந்த உரைகள் இலக்கியச் சுவடர்க்கு வைத்த தண்ணீர்ப் பந்தல்கள். இவற்றில் முன்னைய வைணவ முதலிகளின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் அங்கங்கே ஒளிர்கின்றன; இருமொழி வல்லாரின் புலமை வீச்சும் அறிவுத் திறனும் இறை யன்பும் வெள்ளமிட்டுச் சுழித்தோடுகின்றன; புதிய கலவை மொழி நடையாடுகிறது; காலம் தன் அடிச்சுவட் டைக் கல்வெட்டாய்ப் பதித்துள்ளது: தத்துவம் அளவாய்ப் பொதிந்துள்ளது, முல்லைப் பூவில் மணம் போலே. இவற்றையெல்லாம் ஆராய்ந்து விளக்குவதே இந்நூல். இவ்வுரைச் சுரங்கத்தில் அகழ்ந்தெடுத்த பெருவிலைய னான தமிழ்ச் சொற்கள், மரபு வழக்குகள், செறிவுத் தொடர்கள் முதலியவை பின்னிணைப்புகளாகத் தரப் பட்டுள்ளன. காண வந்த சோழர், குழைச் சரக்கு, கொள்கொம்பு மூடுதல், பக்கக் குதிரை போதல், வயிர வுருக்கு போன்ற வழக்குகளுக்கு ஆழ்ந்து பொருள் காணப்பட்டுள்ளது. இந்நூல் சோலை பார்ப்பவரைப் போலன்றி ஊன்றி நோக்குவார்க்கு நல்விருந்து.

விலை 75-00

விற்பனை உரிமை

தாயம்மை பதிப்பகம்